www.tntextbooks.in

தமிழ்நாடு அரசு

# பத்தாம் வகுப்பு

# சமூக அறிவியல்

தமிழ்நாடு அரசு விலையில்லாப் பாடநூல் வழங்கும் திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்டது

## பள்ளிக் கல்வித்துறை

தீண்டாமை மனிதநேயமற்ற செயலும் பெருங்குற்றமும் ஆகும்

00_Front_Page_TM.indd 1 11-04-2020 13:47:38

www.tntextbooks.in


**தமிழ்நாடு அரசு**

**முதல் பதிப்பு - *2019***

**திருத்திய பதிப்பு - *2020***

(புதிய பாடத்திட்டத்தின் கீழ்
வெளியிடப்பட்ட நூல்)


**விற்பனைக்கு அன்று**


## பாடநூல் உருவாக்கமும் தொகுப்பும்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி
மற்றும் பயிற்சி நிறுவனம்


© SCERT 2019


## நூல் அச்சாக்கம்

தமிழ்நாடு பாடநூல் மற்றும்
கல்வியியல் பணிகள் கழகம்

www.textbooksonline.tn.nic.in




00_Front_Page_TM.indd 2 11-04-2020 13:47:38

www.tntextbooks.in

## புத்தகத்தை பயன்படுத்தும் முறை

**கற்றலின் நோக்கங்கள்**

பாடத்தின் நோக்க எல்லை குறிக்கப்படுகிறது.

**அறிமுகம்**

பாடத்தில் பேசப்படும் துறைசார்ந்த செய்தி அறிமுகப்படுத்தப்படுகிறது.

**விரைவுக் குறியீடு**

மாணவர்களின் கூடுதல் புரிதலுக்காக அனிமேஷன் காட்சிகளை வழங்குகிறது.

**உங்களுக்குத் தெரியுமா?**

மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் பாடத்துடன் தொடர்புடைய கூடுதல் தகவல்களை பெட்டிச் செய்தியாக வழங்குகிறது.

**விளக்கப்படம்**

கடினமான கருத்துகளை எளிதாக்கும் நோக்கத்துடன் செய்திகளைப் படங்கள் வாயிலாக விளக்குகிறது.

**செயல்பாடுகள்**

மாணவர்கள் தனியாக அல்லது குழுவாகச் சில செயல்பாடுகளில் ஈடுபட்டு கற்க உதவுகிறது.

**பாடச்சுருக்கம்**

முக்கியமான கருத்துகள் மாணவர்களின் மனதில் பதியும் வண்ணம் ஒன்று அல்லது இரண்டு வரிகளில் நினைவுறுத்துகிறது.

**பயிற்சி**

மாணவர்கள் தாங்களே பயில்வதற்கும் மதிப்பீடு செய்வதற்கும் உதவுகிறது.

**கலைச்சொற்கள்**

முக்கியச் சொற்களையும் தொழிநுட்பச் சொல்லாடல்களையும் பாடத்தின் முடிவில் விளக்குகிறது.

**விரிவான தகவல்களுக்கு**

மாணவர்கள் பாடநூலைத் தாண்டியும் பயில்வதற்குத் தொடர்புடைய நூல்களின் பட்டியலையும் இணையதளச் சான்றுகளையும் அளிக்கிறது.

**இணையச் செயல்பாடு**

கற்றல் செயல்பாடுகளுக்காக மின்னணு ஊடகச் சான்றுகளை பயன்படுத்தி புரிதலை மேம்படுத்துகிறது.



00_Front_Page_TM.indd 3 11-04-2020 13:47:39

# பாடப்பொருள் அட்டவணை

| அலகு | பொருளடக்கம் | பக்க எண் | மாதம் |
|---|---|---|---|
| | **வரலாறு** | | |
| 1 | முதல் உலகப்போரின் வெடிப்பும் அதன் பின்விளைவுகளும் | 01 | ஜூன் |
| 2 | இரு உலகப்போர்களுக்கு இடையில் உலகம் | 18 | ஜூலை |
| 3 | இரண்டாம் உலகப்போர் | 31 | ஜூலை |
| 4 | இரண்டாம் உலகப்போருக்குப் பிந்தைய உலகம் | 44 | ஆகஸ்ட் |
| 5 | 19ஆம் நூற்றாண்டில் சமூக, சமய சீர்திருத்த இயக்கங்கள் | 58 | ஆகஸ்ட் & செப்டம்பர் |
| 6 | ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக தமிழகத்தில் நிகழ்ந்த தொடக்ககால கிளர்ச்சிகள் | 68 | அக்டோபர் |
| 7 | காலனியத்துக்கு எதிரான இயக்கங்களும் தேசியத்தின் தோற்றமும் | 80 | அக்டோபர் |
| 8 | தேசியம்: காந்திய காலகட்டம் | 95 | நவம்பர் |
| 9 | தமிழ்நாட்டில் விடுதலைப் போராட்டம் | 113 | நவம்பர் |
| 10 | தமிழ்நாட்டில் சமூக மாற்றங்கள் | 124 | நவம்பர் & டிசம்பர் |
| | **புவியியல்** | | |
| 1 | இந்தியா – அமைவிடம், நிலத்தோற்றம் மற்றும் வடிகாலமைப்பு | 138 | ஜூன் |
| 2 | இந்தியா – காலநிலை மற்றும் இயற்கைத் தாவரங்கள் | 153 | ஜூன் |
| 3 | இந்தியா – வேளாண்மை | 163 | ஜூலை |
| 4 | இந்தியா – வளங்கள் மற்றும் தொழிலகங்கள் | 179 | ஆகஸ்ட் |
| 5 | இந்தியா – மக்கள் தொகை, போக்குவரத்து, தகவல் தொடர்பு மற்றும் வணிகம் | 196 | ஆகஸ்ட் |
| 6 | தமிழ்நாடு – இயற்கைப் பிரிவுகள் | 212 | அக்டோபர் |
| 7 | தமிழ்நாடு – மானுடப் புவியியல் | 232 | நவம்பர் |

www.tntextbooks.in

## குடிமையியல்


| | | | |
|---|---|---|---|
| 1 | இந்திய அரசியலமைப்பு | 253 | ஜூன் |
| 2 | நடுவண் அரசு | 263 | ஜூலை |
| 3 | மாநில அரசு | 275 | ஆகஸ்ட் |
| 4 | இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை | 285 | அக்டோபர் |
| 5 | இந்தியாவின் சர்வதேச உறவுகள் | 294 | நவம்பர் |


## பொருளியல்


| | | | |
|---|---|---|---|
| 1 | மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் அதன் வளர்ச்சி: ஓர் அறிமுகம் | 309 | ஜூன் |
| 2 | உலகமயமாதல் மற்றும் வர்த்தகம் | 321 | ஜூலை |
| 3 | உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து | 330 | ஆகஸ்ட் |
| 4 | அரசாங்கமும் வரிகளும் | 340 | அக்டோபர் |
| 5 | தமிழ்நாட்டில் தொழில்துறை தொகுப்புகள் | 348 | நவம்பர் |


6T935Z

மின்நூல்

Z15TS2

மதிப்பீடு

B373_10_SOCIAL_TM

இணைய வளங்கள்

2020 QR GUIDE

**பாடநூலில் உள்ள விரைவுக் குறியீட்டைப் (QR Code) பயன்படுத்துவோம்! எப்படி?**

- உங்கள் திறன் பேசியில் கூகுள் playstore கொண்டு DIKSHA செயலியை பதிவிறக்கம் செய்து நிறுவிக்கொள்க.
- செயலியை திறந்தவுடன், ஸ்கேன் செய்யும் பொத்தானை அழுத்தி பாடநூலில் உள்ள விரைவு குறியீடுகளை ஸ்கேன் செய்யவும்.
- திரையில் தோன்றும் கேமராவை பாடநூலின் QR Code அருகில் கொண்டு செல்லவும்.
- ஸ்கேன் செய்வதன் மூலம். அந்த QR Code உடன் இணைக்கப்பட்டுள்ள மின் பாட பகுதிகளை பயன்படுத்தலாம்.

**குறிப்பு:** இணையச்செயல்பாடுகள் மற்றும் இணைய வளங்களுக்கான QR code களை Scan செய்ய DIKSHA அல்லாத ஏதேனும் ஓர் QR code Scanner ஐ பயன்படுத்தவும்.



00_Front_Page_TM.indd 5 11-04-2020 13:47:39

www.tntextbooks.in

# வரலாறு

# அலகு – 1

# முதல் உலகப்போரின் வெடிப்பும் அதன் பின்விளைவுகளும்




## கற்றலின் நோக்கங்கள்

**கீழ்க்காண்பனவற்றோடு அறிமுகமாதல்**

- ஐரோப்பிய வல்லரசுகளிடையே பகைமையும் மோதல்களும் ஏற்படுவதற்கு இட்டுச் சென்ற காலனியாதிக்கப் போட்டி
- கிழக்கு ஆசியாவில் ஜப்பான் அதிக வலிமை மிகுந்த நாடாகவும் ஆக்கிரமிப்பு செய்யும் தன்மை கொண்ட நாடாகவும் மேலெழுதல்
- காலனியாதிக்கம் ஆப்பிரிக்காவின் மீது தாக்கத்தை ஏற்படுத்துதல்
- முதல் உலகப்போருக்கான காரணங்கள், போரின் போக்கு, விளைவுகள்
- வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையும் அதன் சரத்துக்களும்
- ரஷ்யப் புரட்சிக்கான காரணங்களும் அதன் போக்கும் விளைவுகளும்
- பன்னாட்டுச் சங்கம் உருவாக்கப்படுதலும் அதன் செயல்பாடுகளும் தோல்வியும்

S7SPCG

## அறிமுகம்

உலக வரலாற்றில் கி.பி. (பொ.ஆ.) 1914ஆம் ஆண்டு ஒரு திருப்பு முனையாகும். 1789ஆம் ஆண்டில் தொடங்கிய அரசியல் சமூக செயல்பாடுகள், 1914இல் வெடித்த முதல் உலகப்போரில் உச்சத்தை அடைந்து இருபதாம் நூற்றாண்டினுடைய போக்கையே தீர்மானித்தன. ஆகையால் வரலாற்றாசிரியர்கள் இதனை, நீண்ட பத்தொன்பதாம் நூற்றாண்டு என அழைத்தனர். இப்போரே ஒட்டுமொத்த உலகின் செல்வாதாரங்களின் மீது தொடுக்கப்பட்ட முதல் தொழிற்சாலைகள் சார்ந்த போராகும். மேலும் இப்போர் குடிமக்களின் பெரும்பகுதியினரைப் பாதித்தப் போராகும். இப்போரால் உலக அரசியல் வரைபடம் மீண்டும் வரையப்பட்டது. போரின் முடிவில் மூன்று பேரரசுகள் சிதறுண்டு கிடந்தன. அவை ஜெர்மனி, ஆஸ்திரிய–ஹங்கேரி, உதுமானியப் பேரரசு ஆகியனவாகும். இப்போரின் மிகப்பெரும் விளைவு ரஷ்யப் புரட்சியாகும். அது உலக வரலாற்றில் தனித்துவம் பெற்றதும், அது போன்ற புரட்சிகளில் முதலாவதும் ஆகும். முதன்முறையாக உலக நாடுகள் பன்னாட்டுச் சங்கத்தின் மூலமாக உலக அமைதியை ஏற்படுத்த முயன்றன. இப்பாடத்தில் நாம், முதல் உலகப்போர் வெடிப்பதற்கு இட்டுச்சென்ற சூழல்கள் குறித்தும், ரஷ்யப் புரட்சி, பன்னாட்டுச் சங்கம் எனப்பட்ட பன்னாட்டு அமைதி நிறுவனம் உருவாக்கப்பட்டது குறித்தும் அதன் விளைவுகள் பற்றியும் விவாதிப்போம்.

## 1.1 காலனிகளுக்கான போட்டி

### முதலாளித்துவ நாடுகளின் சந்தைகளுக்கான போட்டி

முதலாளித்துவம் சார்ந்த தொழில்களின் நோக்கம் மிகை உற்பத்தி செய்வதாகும். இவ்வாறு உற்பத்தி செய்யப்பட்ட உபரிச் செல்வம் மென்மேலும் தொழிற்சாலைகள் அமைக்கவும் இருப்புப்பாதை அமைக்கவும் நீராவிக்கப்பல்கள் கட்டவும் அல்லது இவை போன்ற பிறவற்றிற்கும் பயன்படுத்தப்பட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தகவல்பரிமாற்றம், போக்குவரத்து ஆகிய துறைகளில் ஏற்பட்ட புரட்சியானது ஆப்பிரிக்காவிலும் ஏனைய பகுதிகளிலும் ஐரோப்பிய விரிவாக்கம் அரங்கேறத் துணைபுரிந்தன.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் கருத்தைக் கவரும் ஒரு அம்சம் யாதெனில் ஐரோப்பா, மேலாதிக்க சக்தியாக உருப்பெற்றதும் ஆசியாவும் ஆப்பிரிக்காவும் காலனிகளாக்கப்பட்டு சுரண்டப்பட்டதுமாகும்.

ஐரோப்பிய நாடுகளிடையே இங்கிலாந்து ஒப்புயர்வற்ற இடத்தை வகித்ததோடு உலக முதலாளித்துவத்துக்குத் தலைமையாகவும் விளங்கியது. சந்தை, கச்சாப்பொருள் ஆகியவற்றுக்கான தேவைகள் வளர்ந்து கொண்டேயிருந்ததால் சுரண்டுவதற்காகத் தங்கள் பேரரசை விரிவாக்கம் செய்ய முதலாளித்துவ நாடுகள் உலகத்தைச் சுற்றிப் போட்டியில் இறங்கின.

### முற்றுரிமை முதலாளித்துவத்தின் எழுச்சி

1870ஆம் ஆண்டிற்குப் பின்னர் சுதந்திரப்போட்டி முதலாளித்துவமானது முற்றுரிமைகளின் முதலாளித்துவமாக மாறியது. ஏகாதிபத்தியத்தின் ஒரு முக்கியப் பண்புக்கூறான தொழில், நிதி ஆகிய இரண்டும் அணிசேர்ந்து சந்தைகளில் தங்களின் பொருள்கள் மற்றும் மூலதனத்திற்கான லாபத்தைத் தேடுமென்பது பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தெளிவாக உணரப்பட்டது. சுதந்திரவணிகம் எனும் பழையக் கோட்பாடு சரிந்து வீழ்ந்தது. அமெரிக்காவில் கூட்டு நிறுவனங்களும் ஜெர்மனியில் வணிகக் கூட்டிணைப்புகளும் உருவாயின.

> கூட்டு நிறுவனம் என்பது பொருள்களை உற்பத்தி செய்து விநியோகத்தில் ஈடுபட்டிருக்கும் ஒரு தொழில்சார் நிறுவனமாகும். தனக்கு நன்மை பயக்கும் விதத்தில் பொருள்களின் விநியோகம், விலை ஆகியவற்றின் மீது அந்நிறுவனம் அதிகக் கட்டுப்பாட்டினைக் கொண்டிருக்கும்.

### ஏகாதிபத்தியமும் அதன் முக்கியப் பண்புக்கூறுகளும்

முதலாளித்துவம் தவிர்க்க இயலாமல் ஏகாதிபத்தியத்திற்கு இட்டுச் செல்கிறது. முதலாளித்துவத்தின் உச்சகட்டமே ஏகாதிபத்தியம் என லெனின் கூறுகிறார். மிகப்பெருமளவிலான உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களுக்குச் சந்தைகள் மட்டுமல்லாமல் பெருமளவிலான கச்சாப்பொருள்களும் தேவைப்பட்டன. ஏகாதிபத்தியம் என்பது காலனிகளைப்பற்றியது மட்டுமல்ல, அது ஒரு முழுமையான முறையாக இராணுவமயமாக்கத்திற்கும் முழுமையான போருக்கும் இட்டுச்சென்றது.

## 1.2 வல்லரசுகளின் போட்டி

### ஐரோப்பா

பத்தொன்பதாம் நூற்றாண்டில், ஐரோப்பிய சக்திகள் உலகின் ஏனைய பெரிய, சிறிய நாடுகளைக் காலனியப்படுத்தி, தங்களின் நலனுக்காக அவற்றைச் சுரண்டின. 1880 காலப்பகுதியில் பெரும்பாலான ஆசிய நாடுகள் காலனிமயமாக்கப் பட்டுவிட்டன. ஆப்பிரிக்கா மட்டுமே விடுபட்டிருந்தது. 1881–1914ஆம் ஆண்டுகளுக்கு இடையே ஆப்பிரிக்காவும் கைப்பற்றப்பட்டு, பிரிக்கப்பட்டு, காலனிகளாக ஆக்கப்பட்டது. ஐரோப்பாவில் 1870ஆம் ஆண்டிற்குப் பின்னர் இங்கிலாந்து, பிரான்ஸ், பெல்ஜியம், இத்தாலி, ஜெர்மனி ஆகிய நாடுகள் காலனியாதிக்கப் போட்டியில் கலந்துகொண்டன.

### வல்லரசுகளுக்கு இடையிலான மோதல்கள்


தொழில்வளர்ச்சியில் முதன்மை இடத்தை வகித்தாலும் பரந்துவிரிந்த பேரரசைக் கட்டுப்படுத்தினாலும் இங்கிலாந்திற்கு மனநிறைவு ஏற்படவில்லை. இங்கிலாந்து ஜெர்மனியோடும் அமெரிக்காவோடும் போட்டியிட வேண்டியிருந்தது. ஏனெனில் அந்நாடுகள் விலைமலிவானப் பண்டங்களை உற்பத்தி செய்து அதன்மூலம் இங்கிலாந்தின் சந்தையையும் கைப்பற்றின. நாடுகளுக்கிடையிலான இப்போட்டி, ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் ஐரோப்பாவிலும் வல்லரசுகளுக்கிடையே அடிக்கடி மோதல்கள் ஏற்படக்காரணமாயிற்று.

### ஆசியா: ஜப்பானின் எழுச்சி

ஆசியாவில், ஜப்பான் இக்காலப்பகுதியில் (மெய்ஜி சகாப்தம் 1867–1912), மேற்கத்திய நாடுகளைப் பின்பற்றிப் பலதுறைகளில் அவற்றுக்கு நிகராக மாறியது. ஜப்பான் தொழில்துறையில் சிறந்த நாடாகவும் அதேசமயத்தில் ஒரு ஏகாதிபத்திய சக்தியாகவும் ஆகியது. ஆட்சியாளர்கள் நிலமானியமுறை சிந்தனைகளைக் கொண்டிருந்தாலும் ஜப்பான் மேலைநாட்டுக் கல்வியையும் இயந்திரத் தொழில்நுட்பத்தையும் ஏற்றுக்கொண்டது. நவீன இராணுவம், கப்பற்படை ஆகியவற்றுடன் தொழில்துறையில் முன்னேறிய நாடாக ஜப்பான் மேலெழுந்தது. 1894இல் ஜப்பான் சீனாவின் மீது வலுக்கட்டாயமாக ஒரு போரை மேற்கொண்டது. இச்சீன–ஜப்பானியப் போரில் (1894–1895) சீனாவைச் சிறியநாடான ஜப்பான் தோற்கடித்தது உலகை வியக்கவைத்தது. தொடர்ந்து ரஷ்யா, ஜெர்மனி, பிரான்ஸ் ஆகிய வல்லரசுகளின் எச்சரிக்கையை மீறி ஜப்பான் லியோடங் தீபகற்பத்தை ஆர்தர் துறைமுகத்துடன் சேர்த்து இணைத்துக்கொண்டது. இந்நடவடிக்கை மூலம் கிழக்கு ஆசியாவில் தானே வலிமை மிகுந்த அரசு என ஜப்பான் மெய்ப்பித்தது.

ஐரோப்பிய அரசுகள் கொடுத்த அதிகமான அழுத்தத்தின் காரணமாக ஜப்பான் ஆர்தர் துறைமுகத்தின் மீதான தனது கோரிக்கையை விட்டுக்கொடுத்தது. இச்சூழலை தனக்குச் சாதகமாகப்

www.tntextbooks.in






10th_History_Unit_1_TM.indd 3 24-03-2020 12:28:48

பயன்படுத்திய ரஷ்யா பெரும்படையொன்றை மஞ்சூரியாவுக்குள் அனுப்பியது. 1902இல் இங்கிலாந்துடன் உடன்பாடு ஒன்றை மேற்கொண்ட ஜப்பான், ரஷ்யா தனது படைகளை மஞ்சூரியாவிலிருந்து திரும்ப அழைத்துக்கொள்ளக் கோரியது. ரஷ்யா ஜப்பானைக் குறைத்து மதிப்பிட்டது. இரு நாடுகளுக்குமிடையே 1904இல் போர் தொடங்கியது. இந்த ரஷ்ய ஜப்பானியப் போரில் ரஷ்யாவைத் தோற்கடித்த ஜப்பான், அமெரிக்கா மேற்கொண்ட சமரச முயற்சியின் விளைவாக ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு ஆர்தர் துறைமுகத்தை மீண்டும் பெற்றது. இப்போருக்குப் பின் ஜப்பான் வல்லரசுகளின் கூட்டணியில் நுழைந்தது.

### ஜப்பானின் முரட்டு அரச தந்திரமும் விவேகமும்

1905க்குப் பின்வந்த ஆண்டுகளில் கொரியாவின் உள்நாட்டு, அயல்நாட்டுக் கொள்கைகளை ஜப்பான் கட்டுப்படுத்தியது. ஜப்பானியத் தூதரக உயர் அதிகாரி கொல்லப்பட்டதைக் காரணமாகக் கொண்டு 1910இல் கொரியாவை ஜப்பான் இணைத்துக்கொண்டது. 1912இல் மஞ்சு அரசவம்சம் வீழ்ச்சியுற்றதைத் தொடர்ந்து சீனாவில் நிலவிய குழப்பம் மறுபடியும் விரிவாக்கத்திற்கான வாய்ப்பை ஜப்பானுக்கு அளித்தது. சீனாவில் ஷான்டுங் பகுதியின் மீது ஜெர்மனி கொண்டிருக்கும் உரிமைகள் தனக்கு மாற்றி வழங்கப்படவேண்டும், என்ற கோரிக்கையை முன்வைத்தது. இவ்வலிய அரசியல் விவேகம் ஜப்பான் சீனாவோடும் ஐரோப்பிய நாடுகளோடும் பகையை மூட்டிவிட்டது. ஆனால் ஜப்பானை எதிர்க்கும் நிலையில் யாரும் இல்லை.

### காலனிகள் அமைக்கப்படுதலும், அதன் விளைவுகளும்

1876இல் ஆப்பிரிக்காவின் பத்து சதவீதப் பகுதிகள் மட்டுமே ஐரோப்பாவின் ஆட்சியின் கீழிருந்தன. 1900இல் ஒட்டுமொத்த ஆப்பிரிக்காவும் காலனியாக ஆக்கப்பட்டிருந்தது. இங்கிலாந்து, பிரான்ஸ், பெல்ஜியம் ஆகிய நாடுகள் கண்டத்தை தங்களுக்குள்ளே பகிர்ந்துகொண்டன. ஒரு சில இடங்கள் ஜெர்மனிக்கும் இத்தாலிக்கும் விட்டுத்தரப்பட்டன. இங்கிலாந்து, பிரான்ஸ், ரஷ்யா, ஜெர்மனி ஆகியன சீனாவில் தங்களுக்கென 'செல்வாக்கு மண்டலங்களை' (Spheres of Influence) நிறுவின. ஜப்பான் கொரியாவையும் தைவானையும் தன்வசப்படுத்திக் கொண்டது. இந்தோ–சீனாவை பிரான்ஸ் கைப்பற்றிக் கொண்டது. ஸ்பெயினிடமிருந்து பிலிப்பைன்ஸை அமெரிக்கா பெற்றுக்கொண்டது. இங்கிலாந்தும் ரஷ்யாவும் ஈரானைப் பிரித்துக்கொள்ளச் சம்மதித்தன.

ஆப்பிரிக்காவில் காலனிகளை நிறுவ ஐரோப்பியர் மேற்கொண்ட தொடக்ககால முயற்சிகள் ரத்தக் களரியான போர்களில் முடிந்தன. அல்ஜீரியாவையும் செனகலையும் கைப்பற்ற பிரான்ஸ் ஒரு நெடிய, கடுமையான போரைச் செய்யவேண்டியதாயிற்று. இங்கிலாந்து 1879இல் ஜூலுக்களாலும் 1884இல் சூடான் படைகளாலும் தோற்கடிக்கப்பட்டது. இத்தாலியப்படை 1896ஆம் ஆண்டு அடோவா போர்க்களத்தில் எத்தியோப்பியப் படைகளிடம் பெருத்த சேதத்துடன் கூடிய தோல்வியைச் சந்தித்து இருந்தபோதிலும் ஐரோப்பியப் படைகளே இறுதியில் வெற்றி பெற்றன.

## 1.3 முதல் உலகப்போருக்கான காரணங்களும் போக்கும் விளைவுகளும்

**(அ) காரணங்கள்**

### ஐரோப்பிய நாடுகளின் அணி சேர்க்கைகளும் எதிர் அணி சேர்க்கைகளும்

1900இல் ஐரோப்பிய வல்லரசுகளில் ஐந்து அரசுகள், இரண்டு ஆயுதமேந்திய முகாம்களாகப் பிரிந்தன. ஒரு முகாம் மையநாடுகளான ஜெர்மனி, ஆஸ்திரிய–ஹங்கேரி, இத்தாலி ஆகியவற்றைக் கொண்டிருந்தது. பிஸ்மார்க்கின் வழிகாட்டுதலில் அவை 1882இல் மூவர் உடன்படிக்கையை மேற்கொண்டன. இதன்படி ஜெர்மனியும் ஆஸ்திரியாவும் பரஸ்பரம் உதவிகள் செய்துகொள்ளும். மற்றொரு முகாமில் பிரான்சும் ரஷ்யாவும் அங்கம் வகித்தன. 1894இல் மேற்கொண்ட உடன்படிக்கையின்படி இவ்விரு நாடுகளில் ஏதாவதொன்று ஜெர்மனியால் தாக்கப்படும்பட்சத்தில் பரஸ்பரம் துணைநிற்கும் என உறுதிசெய்யப்பட்டது. இப்படியாக இங்கிலாந்து தனிமைப்படுத்தப்பட்டது. தன்னுடைய தனித்திருத்தலிலிருந்து வெளிவரும் பொருட்டு இங்கிலாந்து இருமுறை ஜெர்மனியை அணுகித் தோல்வி கண்டது. ரஷ்யாவின் மீதான ஜப்பானின் பகைமை அதிகமானபோது பிரான்ஸ் ரஷ்யாவின் நட்புநாடாக இருந்ததால் ஜப்பான் இங்கிலாந்துடன் இணைய விரும்பியது (1902). ஆங்கிலோ–ஜப்பான் உடன்படிக்கை பிரான்சை இங்கிலாந்தோடு உடன்படிக்கை செய்துகொள்ளத் தூண்டியது. அதன் மூலம் மொராக்கோ, எகிப்து ஆகிய காலனிகள் தொடர்பான பிரச்சனைகளைத் தீர்த்துக்கொள்ள விரும்பியது. இதன் விளைவாக 1904இல் இருநாடுகளிடையே நட்புறவு ஒப்பந்தம் ஏற்பட்டது. மொராக்கோவில் பிரான்ஸ் சுதந்திரமாகச் செயல்பட அனுமதிக்கப்படும் பட்சத்தில் எகிப்தை இங்கிலாந்து கைப்பற்றியதை அங்கீகரிக்க பிரான்ஸ் உடன்பட்டது. இதனைத் தொடர்ந்து பாரசீகம்,



10th_History_Unit_1_TM.indd 4 24-03-2020 12:28:48

ஆப்கானிஸ்தான், திபெத் தொடர்பாக ரஷ்யாவுடன் இங்கிலாந்து ஒப்பந்தம் மேற்கொண்டது. இவ்வாறு இங்கிலாந்து, பிரான்ஸ், ரஷ்யா ஆகிய மூவரைக் கொண்ட மூவர் கூட்டு உருவாக்கப்பட்டது.

### வன்முறை சார்ந்த தேசியம்

தேசப்பற்றின் வளர்ச்சியோடு "எனது நாடு சரியோ தவறோ நான் அதை ஆதரிப்பேன்" என்ற மனப்பாங்கும் வளர்ந்தது. ஒரு நாட்டின் மீதான பற்று மற்றொரு நாட்டை வெறுக்கும் தேவையை ஏற்படுத்தியது. இங்கிலாந்தின் ஆரவாரமான நாட்டுப்பற்று (jingoism), பிரான்சின் அதி தீவிரப்பற்று (chauvinism), ஜெர்மனியின் வெறிகொண்ட நாட்டுப்பற்று (kultur) ஆகிய அனைத்தும் தீவிர தேசியமாக போர்வெடிப்பதற்கு தீர்மானமாக பங்காற்றியது.

### ஜெர்மன் பேரரசின் ஆக்கிரமிப்பு மனப்பாங்கு


கெய்சர் வில்லியம் II

ஜெர்மன் பேரரசரான இரண்டாம் கெய்சர் வில்லியம் ஜெர்மனியே உலகத்தின் தலைவன் எனப் பிரகடனம் செய்தார். ஜெர்மனியின் கப்பற்படை விரிவுபடுத்தப்பட்டது. 1805இல் டிரபால்கர் போரில் நெப்போலியனின் தோல்வியைத்தொடர்ந்துகடல் இங்கிலாந்தின் தனியுரிமை எனக்கருதப்பட்டு வந்தது. இந்நிலையில் ஜெர்மனியின் ஆக்கிரமிப்பு இயல்பு கொண்ட அரசியல் விவேகத்தையும், விரைவாகக் கட்டப்படும் அதன் கப்பற்படை தளங்களையும் கண்ணுற்ற இங்கிலாந்து, ஜெர்மன் கப்பற்படை தனக்கு எதிரானதே என முடிவு செய்தது. ஆகவே இங்கிலாந்தும் கப்பற்படை விரிவாக்கப் போட்டியில் இறங்கவே இரு நாடுகளுக்குமிடையிலான பதற்றம் மேலும் அதிகரித்தது.

### பிரான்ஸ் ஜெர்மனியோடு கொண்ட பகை

பிரான்சும் ஜெர்மனியும் பழைய பகைவர்களாவர். 1871இல் ஜெர்மனியால் தோற்கடிக்கப்பட்ட பிரான்ஸ் அல்சேஸ், லொரைன் பகுதிகளை ஜெர்மனியிடம் இழக்க நேரிட்டது குறித்த கசப்பான நினைவுகளை பிரெஞ்சு மக்கள் ஜெர்மனியின் மீது கொண்டிருந்தனர். மொராக்கோ விவகாரத்தில் ஜெர்மனியின் தலையீடு இக்கசப்புணர்வை மேலும் அதிகரித்தது. மொராக்கோவில் பிரான்சின் நலன்கள் சார்ந்து, இங்கிலாந்து பிரான்சோடு மேற்கொண்ட ஒப்பந்தத்தை ஜெர்மனி எதிர்த்தது. எனவே ஜெர்மன் பேரரசர் இரண்டாம் கெய்சர் வில்லியம் மொராக்கோ சுல்தானின் சுதந்திரத்தை அங்கீகரித்ததோடு மொராக்கோவின் எதிர்காலம் குறித்து முடிவு செய்யப் பன்னாட்டு மாநாடு ஒன்றைக் கூட்டும்படி கோரினார்.

### பால்கன் பகுதியில் ஏகாதிபத்திய அரசியல் அதிகாரத்திற்கான வாய்ப்பு

1908இல் துருக்கியில் ஒரு வலுவான, நவீனஅரசை உருவாக்கும் முயற்சியாக இளம்துருக்கியர் புரட்சி நடைபெற்றது. இது ஆஸ்திரியாவுக்கும் ரஷ்யாவிற்கும் பால்கன் பகுதிகளில் தங்கள் நடவடிக்கைகளை மீண்டும் தொடங்கும் வாய்ப்பினை வழங்கியது. இது தொடர்பாக ஆஸ்திரியாவும் ரஷ்யாவும் சந்தித்துப் பேசின. அதன்படி பாஸ்னியா, ஹெர்சகோவினா ஆகிய இரண்டையும் ஆஸ்திரியா இணைத்துக்கொள்வதென்றும், ரஷ்யா தனது போர்க்கப்பல்களைச் சுதந்திரமாக டார்டனெல்ஸ், போஸ்பொரஸ் துறைமுகங்கள் வழியாக மத்தியதரைக்கடல் பகுதிக்குள் கொண்டு செல்லலாமென்றும் ஒப்பந்தமாயிற்று. இதனைத்தொடர்ந்து பாஸ்னியாவையும் ஹெர்சகோவினாவையும் தான் இணைத்துக் கொண்டதாக ஆஸ்திரியா அறிவித்தது. ஆஸ்திரியாவின் இவ்வறிவிப்பு செர்பியாவில் தீவிரமான எதிர்ப்பைத் தூண்டியது. இதன் தொடர்பில் ஜெர்மனி ஆஸ்திரியாவிற்கு உறுதியான ஆதரவை நல்கியது. மேலும் ஆஸ்திரியா செர்பியாவின் மீது படையெடுக்கும்போது அதன் விளைவாக செர்பியாவிற்கு ரஷ்யா உதவுமானால் ஆஸ்திரியாவிற்கு ஆதரவாக நான் களமிறங்குவேன் என அறிவிக்கும் அளவிற்கு ஜெர்மனி சென்றது. ஆஸ்திரியாவிற்கும் செர்பியாவிற்குமான இப்பகை 1914இல் போர் வெடிக்கக் காரணமாயிற்று.

### பால்கன் போர்கள்

பதினெட்டாம் நூற்றாண்டின் முதல்பாதியில் தென்மேற்கு ஐரோப்பாவில் துருக்கி வலிமை வாய்ந்த நாடாகத் திகழ்ந்தது. அதன் பேரரசு பால்கனிலும், ஹங்கேரியின் குறுக்காகப் போலந்து வரையிலும் பரவியிருந்தது. துருக்கியப் பேரரசு பால்கன் பகுதிகளில் பல துருக்கியர் அல்லாத மக்களையும் கொண்டிருந்தது. பால்கன் பகுதியைச் சேர்ந்த துருக்கியரும் துருக்கியர் அல்லாத பல்வேறு தேசிய இனங்களைச் சேர்ந்த மக்களும் பயங்கரமான படுகொலைகளிலும் அட்டூழியங்களிலும் ஈடுபட்டனர். ஆர்மீனிய இனப்படுகொலைகள் இதற்கு ஒரு பயங்கரமான எடுத்துக்காட்டு ஆகும்.

பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பாதியில் துருக்கியப் பேரரசின் உறுதியற்ற அரசியல் பொருளாதாரச் சூழலைச் சாதகமாகக் கொண்டு



10th_History_Unit_1_TM.indd 5 24-03-2020 12:28:48




கிரீசும் அதனைத் தொடர்ந்து ஏனைய நாடுகளும் ஒன்றன் பின் ஒன்றாகத் தங்களைத் துருக்கியின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவித்துக் கொண்டன. மாசிடோனியா பல்வேறு இனங்களைச் சேர்ந்த மக்களைக் கொண்டிருந்தது. எனவே மாசிடோனியாவைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதில் கிரீஸ், செர்பியா, பல்கேரியா பின்னர் மாண்டி நீக்ரோ ஆகிய நாடுகளிடையே போட்டிகள் நிலவின. 1912ஆம் ஆண்டு மார்ச் திங்களில் அவை பால்கன் கழகம் எனும் அமைப்பை உருவாக்கின. இக்கழகம் முதல் பால்கன் போரில் (1912–1913) துருக்கியப் படைகளைத் தாக்கித் தோற்கடித்தன. தொடர்ந்து, கைப்பற்றிய பகுதிகளைப் பிரித்துக்கொள்வதில் பிரச்சனை எழுந்தது. 1913 மே திங்களில் கையெழுத்தான இலண்டன் உடன்படிக்கையின்படி அல்பேனியா எனும் புதிய நாடு உருவாக்கப்பட்டது. மாசிடோனியாவை ஏனைய பால்கன் நாடுகள் தங்களுக்குள் பகிர்ந்து கொண்டன. துருக்கி, கான்ஸ்டாண்டிநோபிளைச் சுற்றியுள்ள பகுதிகளை மட்டும் கொண்ட அரசாகச் சுருக்கப்பட்டது.

இருந்தபோதிலும் மாசிடோனியாவைப் பிரித்தளித்ததில் செர்பியாவையும் கிரீஸையும் பல்கேரியா தாக்கியது. ஆனால் பல்கேரியா எளிதாகத் தோற்கடிக்கப்பட்டது. 1913 ஆகஸ்டு திங்களில் கையெழுத்திடப்பட்ட புகாரெஸ்ட் உடன்படிக்கையோடு இரண்டாம் பால்கன் போர் முடிவடைந்தது.

### உடனடிக் காரணம்

பால்கனில் நடைபெற்ற இந்நிகழ்வுகளின் உச்சகட்டம் பாஸ்னியாவிலுள்ள செராஜிவோ என்னுமிடத்தில் அரங்கேறியது. 1914 ஜூன் 28ஆம் நாள் ஆஸ்திரியப் பேரரசரின் மகனும் வாரிசுமான பிரான்ஸ் பெர்டினாண்டு, பிரின்ஸப் என்ற பாஸ்னிய செர்பியனால் கொலை செய்யப்பட்டார். ஆஸ்திரியா இதனை செர்பியாவைக் கைப்பற்றுவதற்கான வாய்ப்பாக எண்ணியது. செர்பியாவிற்கு ஆதரவாகத் தலையிட ரஷ்யா படைகளைத் திரட்டுகிறது என்னும் வதந்தியால் ஜெர்மனி முதல் தாக்குதலைத் தானே தொடுப்பது என முடிவு செய்தது. ஆகஸ்டு திங்கள் முதல்நாள் ஜெர்மனி ரஷ்யாவிற்கு எதிராகப் போர்அறிவிப்பு செய்தது. ஜெர்மனிக்கும் பிரான்சுக்குமிடையே சச்சரவுகள் ஏதும் இல்லாவிட்டாலும், பிரான்சுக்கும் ரஷ்யாவுக்குமிடையே ஏற்கெனவே கூட்டணி இருந்ததால் ஜெர்மனி, பிரான்ஸ், ரஷ்யா ஆகிய இரு நாடுகளுக்கும் எதிராகப் போர்செய்யத் திட்டமிட்டது. மேலும் இச்சூழலைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளவும் ஜெர்மனி விரும்பியது. பெல்ஜியத்தின் நடுநிலைமையை மதியாது அதனை ஜெர்மனி தாக்கவே இப்போரில் இங்கிலாந்து பங்கேற்பது கட்டாயமாயிற்று.

### (ஆ) போரின் போக்கு

### இரண்டு போரிடும் முகாம்கள்

#### மைய நாடுகள்

போரிடும் நாடுகள் இரண்டு அணிகளாகப் பிரிந்திருந்தன. மைய நாடுகள் அணியில் ஜெர்மனி, ஆஸ்திரியா, ஹங்கேரி, துருக்கி, பல்கேரியா ஆகிய நாடுகள் அங்கம் வகித்தன. தொடக்கத்தில் ஜெர்மனியோடும் ஆஸ்திரியாவோடும் அணிவகுத்திருந்த இத்தாலி பின்னர் விலகியது. டிரன்டினோ நகர் வடகிழக்கு இத்தாலியில் அமைந்திருந்தது. ஆனால் ஆஸ்திரிய–ஹங்கேரி அரசின் ஆளுகைக்குட்பட்டிருந்த, இத்தாலிய மக்கள் அதிகம் வாழும் டிரன்டினோ எனும் நகரை மீட்க இத்தாலி மேற்கொண்ட முயற்சியை ஜெர்மனி ஆதரிக்கவில்லை என்பதே இத்தாலியின் விலகலுக்குக் காரணமாகும். அதனால் போர் வெடித்தபோது இத்தாலி நடுநிலைமை வகித்தது. ஆனால் வடகிழக்கிலுள்ள பகுதியைப் பெறவேண்டும் எனும் நோக்கத்தில் போரில் கலந்துகொள்ள முடிவுசெய்தது. 1915 ஏப்ரலில் பிரான்ஸ், இங்கிலாந்து, இத்தாலி ஆகியவற்றிக்கிடையே லண்டனில் ரகசிய ஒப்பந்தமொன்று கையெழுத்தாயிற்று. அதன்படி போருக்குப் பின்னர் தான் விரும்பிய பகுதி தனக்கு வழங்கப்படும் என்பதன் அடிப்படையில் இத்தாலி மையநாடுகளுக்கு எதிராகப் போரில் பங்கேற்க இசைந்தது.

#### நேசநாடுகள்

மையநாடுகளை எதிர்த்த நேசநாடுகள் ரஷ்யா, பிரான்ஸ், பிரிட்டன், இத்தாலி, அமெரிக்கா, பெல்ஜியம் ருமேனியா, செர்பியா, கிரீஸ் ஆகிய ஒன்பது நாடுகளாகும். ருமேனியாவும் கிரீஸும் முறையே 1916, 1917 ஆகிய ஆண்டுகளில் மைய நாடுகளுக்கு எதிராகப் போர் அறிவிப்புச்செய்தன. ஆனால் அவை



10th_History_Unit_1_TM.indd 6 24-03-2020 12:28:49

இப்போரில் சிறிதளவே பங்கேற்றன. பெரும்பாலான அமெரிக்கர்கள் தங்கள் நாடு நடுநிலைவகிக்க வேண்டுமென விரும்பியதால் அமெரிக்கா முதல் மூன்று ஆண்டுகளுக்கு நேசநாடுகளுக்குத் தார்மீக ஆதரவை நல்கியதோடு இங்கிலாந்திற்கும் பிரான்சுக்கும் பெருமளவில் பொருளுதவி வழங்கியது.

### சாரின் தோல்வியுற்ற அமைதி முயற்சிகள்

ரஷ்யப் பேரரசர் இரண்டாம் நிக்கோலஸ் நாடுகளனைத்தும் கூடிப்பேசி உலக அமைதிக்கான சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டுமென ஆலோசனை வழங்கினார். அவருடைய அழைப்பிற்கிணங்க 1899, 1907 ஆகிய ஆண்டுகளில் ஹாலந்து நாட்டின் தி ஹேக் நகரில் இரண்டு அமைதி மாநாடுகள் கூட்டப்பட்டன. ஆனால் எந்த விளைவும் ஏற்படவில்லை.

### மேற்கு அல்லது பிரெஞ்சு முனைப் போர்

பெல்ஜியம் மக்களின் எதிர்ப்பை ஜெர்மனி தகர்த்தெறிந்தது. நேசநாடுகளின் அணியில் போர் செய்யவேண்டிய சுமை பிரெஞ்சுப்படைகளின் தோள்களின்மேல் விழுந்தது. ஒரு மாதத்திற்குள் ஏறத்தாழ பாரீஸ்நகர் வீழ்ந்துவிடும் நிலை ஏற்பட்டது.

### டானென்பர்க், மார்ன் போர்கள்

இதேசமயத்தில் ரஷ்யப் படைகள் கிழக்குப் பிரஷ்யாவின் மீது படையெடுத்தன. டானென்பர்க் போரில் ரஷ்யா பேரிழப்புகளைச் சந்தித்தது. இருந்தபோதிலும் மார்ன்போரில் (1914 செப்டம்பர் தொடக்கத்தில்) பிரெஞ்சுப்படைகள் ஜெர்மானியரை வெற்றிபெற்றன. இப்படியாகப் பாரிஸ் காப்பாற்றப்பட்டது. மார்ன் போரானது பதுங்குக் குழிப்போரின் தொடக்கமாகும்.

**பதுங்குக் குழிப்போர்**

போர்வீரர்களால் தோண்டப்படும் பதுங்குக் குழிகள் எதிரிகளின் சுடுதலில் இருந்து தங்களைக் காத்துக்கொண்டு பாதுகாப்பாக நிற்க உதவின. பிரதானப் பதுங்குக் குழிகள் ஒன்றோடொன்றும் பின்புறமுள்ள குழிகளோடும் இணைக்கப்பட்டிருக்கும். அவற்றின் வழியாக உணவு, ஆயுதங்கள், கடிதங்கள், ஆணைகள் ஆகியவை வந்துசேரும். புதிய வீரர்களும் வந்து சேர்வர்.





டானென்பர்க் போர்

### வெர்டன் போர்

1916ஆம் ஆண்டு பிப்ரவரிக்கும் ஜூலைக்குமிடையே ஜெர்மானியர் பிரான்சின் முக்கியக் கோட்டையான வெர்டனைத் தாக்கினர். ஐந்துமாத காலம் நடைபெற்ற வெர்டன் போரில் இரண்டு மில்லியன் வீரர்கள் பங்கெடுத்தனர். அவர்களில் சரிபாதிவீரர்கள் கொல்லப்பட்டனர். ஜெர்மானியருக்கு எதிரான இங்கிலாந்தின் தாக்குதல் சோம்மி நதிக்கரை அருகே நடைபெற்றது. நான்குமாத காலம் நடைபெற்ற போரின் முதல்நாளில் இங்கிலாந்து 20,000 வீரர்களை இழந்தது. இருந்தபோதிலும் வெர்டன்போர் முதல் உலகப்போரில் நேசநாடுகளே வெற்றி பெறும் என்பதைத் தீர்மானித்தது.

### கிழக்குமுனை அல்லது ரஷ்யமுனைப்போர்

கிழக்கு முனையில் ரஷ்யப் படைகள் ஆஸ்திரியப் படைகளை மீண்டும் மீண்டும் தோற்கடித்தன. அதே சமயம் ரஷ்யப் படைகள் ஜெர்மன் படைகளால் தோற்கடிக்கப்பட்டன. ரஷ்ய இராணுவம் மோசமாகப் பயிற்றுவிக்கப்பட்டிருந்ததாலும் போதுமான போர்த்தளவாட முன்னேற்பாடுகள் இல்லாமலிருந்ததாலும் பெருமளவு இழப்பைச் சந்தித்தது. 1917இல் சார் மன்னருடைய ஆட்சி மாபெரும் அக்டோபர் புரட்சியின் மூலமாகத் தூக்கி வீசப்பட்டது. ரஷ்யாவிற்கு அமைதி தேவைப்பட்டதால் ஜெர்மனியோடு 1918 மார்ச் 3ஆம் நாள் பிரெஸ்ட்–லிடோவஸ்க் உடன்படிக்கையில் கையெழுத்திட்டுப் போரிலிருந்து விலகியது.

### சிறிய போர் அரங்குகள்

### மத்திய கிழக்கு

மைய நாடுகளுடன் சேர்ந்து துருக்கி போரிட்டது. தொடக்கத்தில் வெற்றிகளைப் பெற்றாலும், நேசநாடுகள் பின்னடைவுகளைச்

(குறிப்பாக மெசபடோமியா, காலிபோலி ஆகிய இடங்களில்) சந்தித்தாலும் இறுதியில் துருக்கி தோற்கடிக்கப்பட்டது. துருக்கியர் சூயஸ் கால்வாயைத் தாக்க முயன்றனர். ஆனால் அது முறியடிக்கப்பட்டு துரத்தப்பட்டனர். இங்கிலாந்து முதலில் ஈராக்கிலும் பின்னர் பாலஸ்தீனத்திலும் சிரியாவிலும் துருக்கியப் படைகளுடன் போரிட்டது.

### தூரக்கிழக்கு

சீனா நேசநாடுகள் அணியில் சேர்ந்திருந்தது. ஷான்டுங் மாகாணத்தில் சீனாவிற்கு ஜெர்மனி வழங்கிய கியாச்சவ் பகுதியை ஜப்பான் கைப்பற்றிக்கொண்டது. தூரக் கிழக்குப் பகுதியில் வேறு போர்களில்லை. இச்சூழலைத் தனக்குப் பயனுள்ளதாக மாற்றிய ஜப்பான் சீனாவைக் கட்டாயப்படுத்தியும் அச்சுறுத்தியும் அதிகப் பயனளிக்கக்கூடிய சலுகைகளையும் உரிமைகளையும் பெற்றுக்கொண்டது.

### பால்கன் பகுதி

ஆஸ்திரியா–ஜெர்மானியப் படைகள் பல்கேரியாவின் ஒருங்கிணைப்போடு செர்பியாவை முற்றிலுமாக நசுக்கின. செர்பியா ஜெர்மனியின் ஆட்சியின்கீழ் வந்தது. போரின் போக்கைக் கண்காணித்த ருமேனியா 1916 ஆகஸ்டில் நேசநாடுகள் அணியில் இணைந்தது. ஆனால் ருமேனியாவும் ஆஸ்திரியா–ஜெர்மன் படைகளால் கைப்பற்றப்பட்டது.

### ஆப்பிரிக்காவில் ஜெர்மன் காலனிகளின் நிலை

கிழக்கு மற்றும் மேற்கு ஆப்பிரிக்காவிலிருந்த ஜெர்மன் காலனிகளும் நேசநாடுகளால் தாக்கப்பட்டன. இக்காலனிகளனைத்தும் ஜெர்மனியிலிருந்து தொலைதூரத்தில் இருந்ததாலும் அவற்றால் உடனடியாக எவ்வித உதவியையும் பெறமுடியாமல் போனதாலும் நேசநாடுகளிடம் சரணடையும் நிலை ஏற்பட்டது.

### ஆஸ்திரியத் தாக்குதலை எதிர்கொள்ள முடியாத இத்தாலி

இத்தாலி 1916 மே திங்களில் நேசநாடுகள் அணியில் இணைந்தது. ஆஸ்திரியாவை எதிர்த்துப் போரிட்ட இத்தாலியர் தொடர்ந்து தங்கள் எதிர்ப்பை நீட்டித்தனர். ஆனால் ஆஸ்திரியாவிற்கு உதவியாக ஜெர்மானியர் களமிறங்கியபோது இத்தாலி நிலைகுலைந்தது.

### மையநாடுகள் வெற்றி பெற்ற இடங்கள்

மையநாடுகள் வெற்றிகரமாக பெல்ஜியத்தையும் பிரான்சின் வடகிழக்குப் பகுதியையும், போலந்து, செர்பியா, ருமேனியா ஆகியவற்றையும் கைப்பற்றின.

போரின் மையமானது மேற்கு முனையிலும் கடல்களிலும் நிலை கொண்டிருந்தது. கடல்களில் நேசநாடுகளே ஒப்புயர்வற்ற இடத்தை வகித்தன. கடல் பயணப்பாதைகளை நேசநாடுகள் கட்டுப்படுத்தியதால் மைய நாடுகளுக்குச் செல்லவேண்டிய உணவு, ஏனைய பொருள்கள் ஆகியவற்றை அவர்களால் தடுத்துநிறுத்த முடிந்தது. இதனால் ஜெர்மனியிலும் ஆஸ்திரியாவிலும் பெண்களும் குழந்தைகளும் பட்டினியாலும் வறுமையினாலும் துயருற்றனர். ஜெர்மனி இங்கிலாந்தின்மீது வான்வழித் தாக்குதலை மேற்கொண்டது. லண்டன் மீதும், தொழிற்சாலைகள் அமைந்திருந்த பகுதிகளின்மீதும் குண்டுகள் வீசப்பட்டன. பின்னர் பொதுமக்களை இலக்காகக் கொண்டு குண்டுகள் வீசப்பட்டன. ஜெர்மனி விஷவாயுவை அறிமுகம் செய்தது. பின்னர் இரு தரப்பினருமே அவ்வாயுதத்தைப் பயன்படுத்தலாயினர்.

### கடற்போர்களும் போரில் அமெரிக்கா பங்கேற்றலும்

1916இல் வடகடலில் கடற்போர் (ஜூட்லேண்டு போர்) நடைபெற்றது. இங்கிலாந்து இப்போரில் வெற்றிபெற்றது. இதன் பின்னர் ஜெர்மானியர் தங்களின் நீர்மூழ்கிப்போரைத் தொடங்கினர். அவை நேசநாடுகளின் கப்பல்களுக்கு இடையூறு செய்தன. புகழ்பெற்ற எம்டன் கப்பல் சென்னைமீது குண்டுகளை வீசியது. தங்கள் கப்பல்களின் போக்குவரத்தை இடைமறித்துத் தடை செய்த நடவடிக்கைகளுக்கு எதிர்நடவடிக்கையாக 1917 ஜனவரி திங்களில் நடுநிலை நாடுகளின் கப்பல்களையும் மூழ்கடிக்கப்போவதாக ஜெர்மனி அறிவித்தது. லூசிடானியா என்னும் அமெரிக்கக்கப்பல் ஜெர்மனியால் தாக்கப்பட்டு மூழ்கடிக்கப்பட்டது. இதன் விளைவாகப் அதில் பயணித்த பல அமெரிக்கர்கள் உயிரிழந்தனர். அதனால் அமெரிக்காவில் பெருங்கோபமும் சீற்றமும் ஏற்பட்டது. குடியரசுத்தலைவர் உட்ரோ வில்சன் ஜெர்மனிக்கு எதிராக 1917 ஏப்ரல் திங்களில் போர்ப்பிரகடனம் செய்தார். மாபெரும் பொருளாதார பலத்தோடு அமெரிக்கா போரில் இறங்கியது. அது



**லூசிடானியா கப்பல் மூழ்குதல்**



10th_History_Unit_1_TM.indd 8 24-03-2020 12:28:49

www.tntextbooks.in

நேசநாடுகளின் வெற்றியை முன்னரே எழுதப்பட்ட முடிவுரையாக்கிற்று.

**(இ) போர்நிறுத்தமும் வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையும்**


சிறப்பான முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் எதிர்த்து நிற்க இயலாத நிலையில் ஜெர்மனி இறுதியில் 1918 நவம்பரில் சரணடைந்தது. போர் நிறுத்தம் நவம்பர் 11 முதல் நடைமுறைக்கு வந்தது. ஜெர்மானிய அரசர் கெய்சர் இரண்டாம் வில்லியம் பதவி விலகியதைத் தொடர்ந்து ஜெர்மனியில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடியின் காரணமாக ஜெர்மனி கடுமையான நிபந்தனைகளை ஒத்துக்கொள்ளும் கட்டாயம் ஏற்பட்டது.

### பாரிஸ் அமைதி மாநாடு

பாரிஸ் அமைதி மாநாடு, போர்நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தான இரண்டு மாதங்களுக்குப் பின்னர் 1919 ஜனவரி திங்களில் தொடங்கியது. உட்ரோ வில்சன் (அமெரிக்க அதிபர்), லாயிட் ஜார்ஜ் (இங்கிலாந்துப் பிரதமர்), கிளமென்சோ (பிரான்சின் பிரதமர்) ஆகிய மூவரும் கலந்தாய்வில் முக்கியப் பங்குவகித்தனர்.



**செய்தித்தாள் அறிக்கை**



**பாரிஸ் அமைதி மாநாடு**

மற்றுமொரு போரைச் சந்திக்க நேரிடும் என்ற அச்சத்தில் ஜெர்மனிய அரசு உடன்படிக்கையை ஒத்துக்கொள்ளும்படி நிர்ப்பந்திக்கப்பட்டது. 1919 ஜூன் 28ஆம் நாள் அமைதி உடன்படிக்கை வெர்செய்ல்ஸ் கண்ணாடி மாளிகையில் கையெழுத்திடப்பட்டது.

### உடன்படிக்கையின் சரத்துக்கள்

1. போரைத் தொடங்கிய குற்றத்தைச் செய்தது ஜெர்மனி என்பதால் போர் இழப்புகளுக்கு ஜெர்மனி இழப்பீடு வழங்கவேண்டும். எனவும் மைய நாடுகள் அனைத்தும் போர் இழப்பீட்டுத்தொகையை வழங்கவும் வலியுறுத்தப்பட்டன.
2. ஜெர்மன் படை 1,00,000 வீரர்களை மட்டுமே கொண்டதாக அளவில் சுருக்கப்பட்டது. சிறிய கப்பற்படையொன்றை மட்டுமே வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டது.
3. ஆஸ்திரியா, ஜெர்மனி ஆகிய இரண்டின் ஒருங்கிணைப்பு தடைசெய்யப்பட்டது.
4. ஜெர்மனியின் அனைத்துக் காலனிகளும் பன்னாட்டுச் சங்கத்தின் பாதுகாப்பு நாடுகளாக ஆக்கப்பட்டன.
5. ரஷ்யாவுடன் செய்துகொள்ளப்பட்ட பிரெஸ்ட்–லிடோவஸ்க் உடன்படிக்கையையும் பல்கேரியாவுடன் மேற்கொள்ளப்பட்ட புகாரெஸ்ட் உடன்படிக்கையையும் திரும்பப் பெற்றுக்கொள்ள ஜெர்மனி வற்புறுத்தப்பட்டது.
6. அல்சேஸ்–லொரைன் பகுதிகள் பிரான்சுக்குத் திருப்பித் தரப்பட்டன.
7. முன்னர் ரஷ்யாவின் பகுதிகளாக இருந்த பின்லாந்து, எஸ்தோனியா, லாட்வியா, லிதுவேனியா ஆகியன சுதந்திரநாடுகளாகச் செயல்பட அனுமதிக்கப்பட்டது.
8. வடக்கு ஷ்லெஸ்விக் டென்மார்க்கிற்கும் சிறிய மாவட்டங்கள் பெல்ஜியத்திற்கும் வழங்கப்பட்டன.
9. போலந்து மீண்டும் உருவாக்கப்பட்டது.
10. நேசநாடுகளின் ஆக்கிரமிப்பின்கீழ் ரைன்லாந்து இருக்கும் என்றும், ரைன்நதியின் கிழக்குக்கரைப் பகுதி படை நீக்கம் செய்யப்பட்டப் பகுதியாக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

அமெரிக்க குடியரசுத் தலைவர் உட்ரோ வில்சன் தனது பதினான்கு அம்சத் திட்டத்தை நேசநாடுகள் பின்பற்றுவதற்காக முன்வைத்தார். அவற்றில் மிகமுக்கியமானதாக அவர் கோடிட்டுக்காட்டியது "மிகப்பெரும் நாடுகள் சிறிய நாடுகள் எனும் பேதமில்லாமல் அனைத்து நாடுகளின் அரசியல் சுதந்திரத்திற்கும் அந்நாடுகளின் நிலப்பரப்பின் ஒருமைப்பாட்டிற்கும் எல்லைகளின் உறுதிப்பாட்டிற்கும் பரஸ்பரம் உத்தரவாதம் அளிக்கக்கூடிய நாடுகளைக் கொண்ட பொதுஅமைப்பை உருவாக்க வேண்டும்" என்பதாகும்.

நேசநாடுகள் ஆஸ்திரியா, ஹங்கேரி, பல்கேரியா, துருக்கி ஆகிய நாடுகளுடன் தனித்தனியாக உடன்படிக்கைகளில் கையெழுத்திட்டன. துருக்கியோடு மேற்கொள்ளப்பட்ட செவ்ரஸ் உடன்படிக்கையைச் சுல்தான் ஏற்றுக்கொண்டாலும் அது முஸ்தபா கமால் பாட்சாவும் அவரைப் பின்பற்றுவோரும் எதிர்த்ததால் தோற்றுப்போனது.



10th_History_Unit_1_TM.indd 9 24-03-2020 12:28:49

### முதல் உலகப்போரின் விளைவுகள்

முதல் உலகப்போர், ஐரோப்பிய சமூக மற்றும் அரசியல் ஆகியவற்றின் மீது ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது. கட்டாய இராணுவசேவை மூலமாகவும், வான்வழித்தாக்குதல்கள் மூலமாகவும் கடந்தகாலங்களைக் காட்டிலும் அதிகமான மக்களைப் போரில் பங்கேற்கச் செய்து அதிகமான பாதிப்புகளையும் ஏற்படுத்தியது. நான்கு ஆண்டுகளில் 8 மில்லியன் மக்கள் மாண்டனர். அதைப் போன்று இரண்டு மடங்கு மக்கள் காயமடைந்தனர். பலர் வாழ்நாள் முழுவதும் செயல்பட இயலாதவர்கள் ஆயினர். இதனைத் தொடர்ந்து 1918இல் இன்ஃப்ளுயன்ஸா (influenza) நோயில் பல மில்லியன் மக்கள் மாண்டனர். இதன்விளைவாக அனைத்து நாடுகளிலும் ஆண் பெண் எண்ணிக்கையில் சமநிலை குலைந்து ஆண்களுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டது. போர்வீரர்கள் பொதுமக்களைக் காட்டிலும் உயரிய நிலையில் வைக்கப்பட்டனர்.

முதல் உலகப் போரும் அதன் பின்விளைவுகளும் வரலாற்றில் அனைத்தையும் புரட்டிப்போட்ட காலமாக அமைந்தது. அவையனைத்திலும் கருத்தைக் கவர்வதாக அமைந்தது U.S.S.R அல்லது ஐக்கிய சோசலிஸ்ட் சோவியத் குடியரசுகள் என்றழைக்கப்பட்ட சோவியத் ரஷ்யாவின் எழுச்சியும் அதன் ஒருங்கிணைப்புமாகும். கடன்பட்ட ஒரு நாடாகப் போரில் நுழைந்த அமெரிக்கா போருக்குப் பின்னர் உலகத்திற்கே கடன் கொடுக்கும் நாடாக மேலெழுந்தது.

இக்காலகட்டத்தின் மற்றொரு முதன்மையான நிகழ்வு காலனிநாடுகளின் முழுமையான விழிப்புணர்வும், விடுதலை பெறுவதற்காக அவை மேற்கொண்ட தீவிர முயற்சிகளுமாகும்.

துருக்கி மீண்டும் ஒரு நாடாக மறுபிறவி எடுப்பதற்கு முஸ்தபா கமால் பாட்சா முக்கிய பங்கு வகித்தார். கமால் பாட்சா அந்நாட்டிற்கு விடுதலையை மட்டும் பெற்றுத்தரவில்லை. அவர் துருக்கியை நவீனமயமாக்கி அதை எதிர்மறையான அங்கீகாரத்திலிருந்தும் மாற்றியமைத்தார்.

### இந்தியாவின் மீதான தாக்கம்

முதல் உலகப்போர் இந்தியாவின்மீது குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியது. ஐரோப்பா, ஆப்பிரிக்கா, மேற்கு ஆசியா ஆகிய பகுதிகளில் போர்ப்பணி செய்வதற்காக ஆங்கிலேயர் இந்தியர்களைக் கொண்ட பெரும்படையைத் திரட்டினர். போர் முடிந்த பின்னர் இவ்வீரர்கள் புதிய சிந்தனைகளோடு தாயகம் திரும்பினர். அச்சிந்தனைகள் இந்திய சமூகத்தின்மீது தாக்கத்தை ஏற்படுத்தின. போர் செலவுக்காக இந்தியா 230 மில்லியன் பவுண்டுகளை ரொக்கமாகவும், 125 மில்லியன் பவுண்டுகளைக் கடனாகவும் வழங்கியது. மேலும் 250 மில்லியன் பவுண்டுகள் மதிப்புள்ள போர்முனைக்குத் தேவையான பொருள்களையும் இந்தியா அனுப்பிவைத்தது. இதன் விளைவாக இந்தியாவில் பெருமளவிலான பொருளாதார இன்னல்கள் ஏற்பட்டன. உணவுதானியப் பற்றாக்குறையால் கலவரங்கள் ஏற்பட்டு ஏழைமக்கள் கடைகளைக் கொள்ளையடித்தனர். போர் முடிவடையுந் தருவாயில் உலகம் முழுதும் பரவிய விஷக்காய்ச்சலால் இந்தியாவும் பெருந்துயருக்குள்ளானது.

போர்நிலைமைகள் இந்திய அரசியலில் தன்னாட்சி இயக்கம் உதயமாக வழிகோலியது. பிளவுபட்டிருந்த காங்கிரஸ் இயக்கம் போரின்போது மீண்டும் இணைந்தது.

இங்கிலாந்து இந்தியாவின் விசுவாசத்தைப் பாராட்டிப் பரிசளிக்கும் என்ற நம்பிக்கையோடு இந்தியர்களும் இந்தியாவும் இப்போரில் செயலூக்கத்துடன் பங்கேற்றனர். ஆனால் ஏமாற்றமே காத்திருந்தது. இவ்வாறு முதல் உலகப்போர் இந்தியச் சமூகம், பொருளாதாரம், அரசியல் ஆகியவற்றின்மேல் பல தாக்கங்களை ஏற்படுத்தியது.

## 1.4 ரஷ்யப்புரட்சியும் அதன் தாக்கமும்

**அறிமுகம்**

6THY7M

முதல் உலகப்போரின் மாபெரும் விளைவு உலக வரலாற்றில் தனித்தன்மை கொண்ட ரஷ்யப் புரட்சியாகும். முதல் உலகப் போரின் காரணமாக ஏற்பட்ட பேரிழப்புகளும் பெருந்துயரங்களும் ரஷ்யாவில் நிலவிய மோசமான சமூக, அரசியல், பொருளாதார நிலைகளை அவற்றின் உச்சத்திற்கு இட்டுச்சென்றன. 1917இல் மார்ச் திங்களில் ஒன்று, நவம்பரில் மற்றொன்று என இரண்டு புரட்சிகள் நடைபெற்றன. சார் மன்னர் பதவிவிலகியதைத் தொடர்ந்து ஆட்சிப் பொறுப்பேற்ற பூர்ஷ்வாக்கள் போரைத் தொடர விரும்பினர். ஆனால் மக்கள் அதற்கு எதிராக இருந்தனர். எனவே அவர்களின் தலைவர் லெனின் வழிகாட்டுதலின்படி இரண்டாவது மாபெரும் புரட்சி மேற்கொண்டனர். ஆட்சியைக் கைப்பற்றிய லெனின் ரஷ்யாவில் கம்யூனிச அரசை நிறுவினார்.



10th_History_Unit_1_TM.indd 10 24-03-2020 12:28:50

www.tntextbooks.in

### புரட்சிக்கான காரணங்கள்

#### சமூகக்காரணம்

ரஷ்யாவில் மகா பீட்டரும், இரண்டாம் கேதரினும் சமூக நிலைமையை மாற்றாமல் ஐரோப்பிய மயமாக்கலை மேற்கொண்டனர். ரஷ்ய விவசாயிகள் நிலக்கிழார்களுக்குச் சொந்தமான நிலங்களில் பண்ணை அடிமைகளாகக் கட்டுண்டு கிடந்தனர். கிரிமியப்போரில் ரஷ்யா தோல்வியடைந்த பின்னர் சில சீர்திருத்தங்கள் அறிமுகம் செய்யப்பட்டன. 1861இல் சார் இரண்டாம் அலெக்ஸாண்டர் பண்ணை அடிமை முறையை ஒழித்து அவர்களை மீட்டார். ஆனால் அவர்கள் வாழ்வதற்குப் போதுமான நிலங்கள் வழங்கப்படவில்லை. இந்த விவசாயிகளே புரட்சியின் வெடிமருந்துக் கிடங்காயினர். நாடு தொழில்மயம் ஆனதின் விளைவாகத் தொழிலாளர்களின் எண்ணிக்கையும் பெருகியிருந்தது. அவர்கள் மிகக் குறைவான ஊதியம் பெற்றதால் மனக்குறையுடன் இருந்தனர்.

#### புரட்சிவாதிகளின் பங்கு

இதே சமயத்தில் அறிவுஜீவிகளிடையே புரட்சிகரக் கருத்துக்கள் பரவியதும் அவர்களை சார் மன்னர் ஒடுக்கியதும், சமதர்மக் கொள்கையின்பால் பற்றுக் கொண்ட மாணவர்கள் தங்கள் கருத்துக்களை விவசாயிகளிடையே பரப்புரை செய்ய வைத்தது. விரைவில் மார்க்ஸிய சித்தாந்தத்தின் அடிப்படையில் புதிய கருத்துக்கள் வடிவம் கொண்டன. மேலும் சோசலிச ஜனநாயக தொழிலாளர் கட்சியும் உருவானது.

#### சார் மன்னரின் எதேச்சதிகாரம்

ரோமனோவ் வம்சத்தைச் சேர்ந்த சார் இரண்டாம் நிக்கோலஸ் அரசு நிர்வாகத்தில் குறைவான அனுபவமே கொண்டிருந்தார். அவருடைய மனைவி சாரினா அலெக்ஸாண்டிரா ஆதிக்க மனோபாவம் கொண்ட ஆளுமையாக இருந்ததால் நிக்கோலஸ் அவ்வம்மையாரின் செல்வாக்கிற்கு உட்பட்டிருந்தார்.



**சார் இரண்டாம் நிக்கோலஸ்**

காலனிகளைக் கைப்பற்றும் போட்டியில் விடுபட்டு போய்விடக்கூடாது என்பதற்காக மஞ்சூரியாவில் ரஷ்யாவின் விரிவாக்கத்தை ஊக்குவித்தார். இது 1904இல் ஜப்பானோடு போரிடத் தூண்டியது. இந்தப் போரில் ரஷ்யா அடைந்த தோல்வி வேலை நிறுத்தங்களுக்கும், கலகங்களுக்கும் இட்டுச்சென்றது. சார் எதிர்ப்பு மேலும் வளர்ந்தது. 1905 ஜனவரி 22ஆம் நாளன்று கபான் எனும் பாதிரியார் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் பங்கேற்ற பேரணியைப் புனிதபீட்டர்ஸ்பர்க் நகரிலுள்ள அரசரின் குளிர்கால அரண்மனையை நோக்கி நடத்திச்சென்றார். மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட தேசியச் சட்டமன்றம், வேளாண், தொழில் துறைகளில் சீர்திருத்தங்கள் என்பவையே அவர்களின் கோரிக்கைகளாய் இருந்தன. ஆனால் காவல்துறையும், இராணுவமும் துப்பாக்கிச்சூடு நடத்தியது. நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். பல்லாயிரக்கணக்கானோர் காயமடைந்தனர். 'குருதிஞாயிறு' என்றழைக்கப்பட்ட இந்நாளில் நடந்த நிகழ்வுகள் வேலை நிறுத்தம், கலகம், வன்முறை ஆகியவற்றிற்கு இட்டுச்சென்றது. சார் நிக்கோலஸ் ஒரு அரசியல்அமைப்பை வழங்கி, டூமா எனும் நாடாளுமன்றத்தை நிறுவும் கட்டாயத்திற்குள்ளானார். ஆனால் இடதுசாரிக் கட்சிகளுக்கு இது மனநிறைவு அளிப்பதாயில்லை. அவர்கள் தொழிலாளர்களின் பிரதிநிதிகள் அடங்கிய சோவியத் (குழு) எனும் அமைப்பை பீட்டஸ்பர்க்கில் நிறுவினர். டிராட்ஸ்கி அதன் தலைவர் ஆவார்.

#### சார் மன்னருக்கு எதிர்ப்பு, டூமா கலைக்கப்படுதல்

முதல் உலகப்போர் வெடித்ததுடன் ரஷ்யா பிரான்ஸ், இங்கிலாந்து ஆகிய நாடுகளுடன் அணி சேர்ந்ததால் ரஷ்ய முடியாட்சி தற்காலிகமாக வலுப்பெற்றது. சாரை (Tsar) மாற்றும் நோக்கமுடன் அரண்மனைப்புரட்சியொன்றுநடைபெறப்போவதாக வதந்தி பரவியதால் நிக்கோலஸ் தன்னைப் படைகளின் தலைமைத் தளபதியாக அறிவித்துக் கொண்டார். 1916ஆம் ஆண்டு முடிவடைவதற்குச் சில நாட்களுக்கு முன்னர் சார்மன்னர், பேரரசி ஆகியோரிடம் செல்வாக்குமிக்க அதிகாரம் கொண்ட ரஸ்புட்டின் என்பவர், சார் மன்னரின் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரால் கொலை செய்யப்பட்டார். பீட்டர்ஸ்பர்க் நகரத்தின் சோவியத் உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டனர். சார் மன்னரின் நோக்கங்களை எப்போதெல்லாம் டூமா எதிர்த்ததோ அப்போதெல்லாம் டூமா கலைக்கப்பட்டுப் புதிய தேர்தல்கள் நடத்தப்பட்டன. அரசின் கொள்கைகளில் மாற்றமேதுமில்லாமல் 1917 புரட்சியுடன் நான்காவது டூமா முடிவுக்கு வந்தது.

#### பொதுமக்களின் எழுச்சிகள்

இந்நிலையில் நூற்பாலைகளில் பணியாற்றிய பெண்களிடையே (அவர்களின் கணவர்கள் படைகளில் பணியாற்றினர்) ரொட்டிக்கு ஏற்பட்ட பெருந்தட்டுப்பாடு அவர்களை வேலைநிறுத்தம்



10th_History_Unit_1_TM.indd 11 24-03-2020 12:28:50

செய்யக் கட்டாயப்படுத்தியது. ரஷ்யப்பேரரசின் தலைநகரான பெட்ரோகிரேடில் தொழிற்சாலைகள் அதிகமிருந்த பகுதிகள் வழியாக அவர்கள் ஊர்வலம் சென்றனர். பெருமளவிலான பெண்உழைப்பாளர்கள் போர்க்குணத்துடன் "உழைப்போர்க்கு ரொட்டி" எனக் கோரிக்கை முழக்கமிட்டனர். தொழிற்கூடங்களில் பணியாற்றும் தொழிலாளர்களை நோக்கிக் கையசைத்த அவர்கள், "வெளியே வாருங்கள்" "வேலையை நிறுத்துங்கள்" எனக் கூற நகரின் 4,00,000 தொழிலாளர்கள் அடுத்த நாளே (பிப்ரவரி 24) போராட்டத்தில் இணைந்தனர்.



1917ஆம் ஆண்டுப் புரட்சி

### சார் பதவிவிலகல்

வேலைநிறுத்தத்தை உடைப்பதற்கு அரசு தனது துருப்புகளைப் பயன்படுத்தியது. ஆனால் வேலைநிறுத்தத்தின் நான்காம்நாள் பாசறைகளில் இராணுவவீரர்களின் கலகங்கள் வெடித்தன. சார் தொலைதூரத்தில் தலைமைத்தளபதியாக தனது இராணுவத்தை வழிநடத்திக் கொண்டிருந்தார். அவருடைய ஆணை நகரத்தில் ஒலிபரப்பப்படவில்லை. அப்பணியைச் செய்ய அங்கு யாருமில்லை. இதன்பின்னர் சார் பெட்ரோகிரேடு திரும்ப முயற்சித்தார். இருப்புப்பாதை ஊழியர்கள் அவர் பயணம்செய்த புகைவண்டியை வரும்வழியில் நிறுத்திவிட்டனர். இத்தகைய நிகழ்வுகளால் திகைத்துப்போன சில தளபதிகளும் பெட்ரோகிரேடிலிருந்த சில தலைவர்களும் சாரைப் பதவிவிலகுமாறு கெஞ்சிக்கேட்டனர். மக்களின் பேரெழுச்சிகளுக்கு சிறிது காலத்திற்குப்பின் மார்ச் 15இல் சார் இரண்டாம் நிக்கோலஸ் பதவி விலகினார்.

ரஷ்யப் புரட்சி நடந்து சார் மன்னன் வீழ்ச்சியுற்றபோது நம் தேசியக்கவி பாரதியார் எழுதிய உணர்ச்சிமிக்க கவிதை:

புதிய ரஷ்யா

மாகாளி பராசக்தி உருசியநாட்
டினர்கடைக்கண் வைத்தா ளங்கே
ஆகாவென் றெழுந்ததுபார் யுகப்புரட்சி;
கொடுங்கோலன் அலறி வீழ்ந்தான்;
வாகான தோள்புடைத்தார் வானமரர்;
பேய்களெலாம் வருந்திக் கண்ணீர்
போகாமற் கண்புகைந்து மடிந்தனவாம்;
வையகத்தீர், புதுமை காணீர்!

### தற்காலிக அரசு

அரசு நிர்வாகப்பணிகளை மேற்கொள்ள ஒன்றுக்கொன்று இணையான இரண்டு அமைப்புகள் இருந்தன. ஒன்று பழைய டூமா அமைப்பின், உடைமை வர்க்கத்தைச் சேர்ந்த பூர்ஷ்வா அரசியல்வாதிகளைக்கொண்ட அமைப்பு. மற்றொன்று தொழிலாளர்களின் பிரதிநிதிகள் அங்கம்வகித்தக் குழு அல்லது சோவியத். சோவியத் அமைப்புகளின் ஒப்புதலோடு டூமாவால் ஒரு தற்காலிகஅரசை நிறுவ முடிந்தது. சோவியத்துகளில் மென்ஷ்விக்குகள் ஆதிக்கம்செலுத்த, சிறுபான்மையினராக இருந்த போல்ஷ்விக்குகள் அச்சமுற்றவர்களாகவும் முடிவெடுக்க முடியாதவர்களாகவும் இருந்தனர். லெனினின் வருகையால் இச்சூழல் மாறியது.

### தற்காலிக அரசின் தோல்வி

புரட்சி வெடித்தபோது லெனின் சுவிட்சர்லாந்தில் இருந்தார். புரட்சி தொடர்ந்து நடைபெற வேண்டுமென அவர் விரும்பினார். "அனைத்து அதிகாரங்களும் சோவியத்திற்கே" என்ற அவரது முழக்கம் தொழிலாளர்களையும் தலைவர்களையும் கவர்ந்தது. போர்க்காலத்தில் ஏற்பட்டிருந்த பற்றாக்குறைகளால் பெருந்துயரங்களுக்கு உள்ளாகியிருந்த மக்கள் "ரொட்டி, அமைதி, நிலம்" எனும் முழக்கத்தால் கவரப்பட்டனர். ஆனால் தற்காலிகஅரசு இரண்டு முக்கியத் தவறுகளைச் செய்தது. ஒன்று நிலங்களின் மறுவிநியோகம் குறித்த கோரிக்கையின்மீது எடுக்கப்பட வேண்டிய முடிவைத் தள்ளிவைத்தது. மற்றொன்று போரைத்தொடர்வதென எடுக்கப்பட்ட முடிவு. ஏமாற்றமடைந்த விவசாய இராணுவவீரர்கள் தங்கள் பொறுப்புகளைக் கைவிட்டு நிலஅபகரிப்பில் ஈடுபடலாயினர். இந்நிகழ்வு பெட்ரோகிரேடில் போல்ஷ்விக்குகளின் தலைமையில் நடைபெற்ற எழுச்சியை மேலும் தீவிரப்படுத்தியது. அரசு 'பிரவ்தா' வை தடை செய்து போல்ஷ்விக்குகளைக் கைதுசெய்தது. டிராட்ஸ்கியும் கைதுசெய்யப்பட்டார்.

### லெனின் தலைமையில் போல்ஷ்விக் கட்சி ஆட்சியைக் கைப்பற்றுதல்

அக்டோபர் திங்களில், லெனின் போல்ஷ்விக் கட்சியின் மத்தியக்குழுவை உடனடிப் புரட்சி குறித்து முடிவுசெய்யக் கேட்டுக்கொண்டார். டிராட்ஸ்கி ஒரு விரிவானதிட்டத்தைத் தயாரித்தார்.



10th_History_Unit_1_TM.indd 12 24-03-2020 12:28:50

www.tntextbooks.in


லெனின்

1870இல் மத்திய வோல்கா பகுதி அருகே கற்றறிந்த பெற்றோர்க்கு லெனின் பிறந்தார். கார்ல்மார்க்ஸின் சிந்தனைகளால் கவரப்பட்ட அவர், விடுதலைக்கான வழி, பெருந்திரளான மக்களின் போராட்டமே என நம்பினார். பெரும்பாலானோரின் (போல்ஷின்ஸ்ட்வோ) ஆதரவைப் பெற்ற லெனினும் அவரது ஆதரவாளர்களும் போல்ஷ்விக் கட்சி என்று அறியப்பட்டனர். இவருக்கு எதிரான சிறுபான்மையினர் (மென்ஷின்ஸ்ட்வோ) மென்ஷ்விக்குகள் என்றும் அழைக்கப்பட்டனர்.

நவம்பர் 7இல் முக்கியமான அரசுக்கட்டங்கள், குளிர்கால அரண்மனை, பிரதமமந்திரியின் தலைமை அலுவலகங்கள் ஆகியவை அனைத்தும் ஆயுதமேந்திய ஆலைத்தொழிலாளர்களாலும், புரட்சிப்படையினராலும் கைப்பற்றப்பட்டன. 1917 நவம்பர் 8இல் ரஷ்யாவில் புதிய கம்யூனிஸ்ட்அரசு ஆட்சிப் பொறுப்பேற்றது. போல்ஷ்விக் கட்சிக்கு ரஷ்யக் கம்யூனிஸ்ட் கட்சி எனப்புதுப் பெயரிடப்பட்டது.

### புரட்சியின் விளைவுகள்

ரஷ்யக் கம்யூனிஸ்ட் கட்சியால் குறுகிய காலத்தில் ரஷ்யாவில் எழுத்தறிவின்மையையும் வறுமையையும் ஒழிக்க முடிந்தது. ரஷ்யாவின் தொழில்துறையும் வேளாண்மையும் உன்னதமான வளர்ச்சியைப் பெற்றன. வாக்குரிமை முதலாகப் பெண்களுக்கு சமஉரிமைகள் வழங்கப்பட்டன. தொழிற்சாலைகளும் வங்கிகளும் தேசியமயமாக்கப்பட்டன. நிலம் சமுதாயத்தின் சொத்தாக அறிவிக்கப்பட்டது. ஏழை விவசாயிகளுக்கு நிலங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. போரிலிருந்து விலகாமலிருந்ததே தற்காலிக அரசின் வீழ்ச்சிக்கு முக்கியக்காரணமென,லெனின்நினைத்தார்.எனவே அவர் உடனடியாக அமைதிக்கான முயற்சிகளை மேற்கொண்டார். மையநாடுகளின் கடுமையான நிபந்தனைகள் குறித்துக் கவலைகொள்ளாமல், புதிய அரசை உருவாக்குவதில் கவனம் செலுத்துவதற்காக அவர் போரிலிருந்து விலகினார். 1918இல் பிரெஸ்ட்–லிடோவஸ்க் உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டது.

### ரஷ்யப்புரட்சியின் உலகளாவியத் தாக்கத்தின் விளைவுகள்

ரஷ்யப்புரட்சி உலக மக்களின் கற்பனையைத் தூண்டியது. பல நாடுகளில் கம்யூனிஸ்ட் கட்சிகள் உருவாக்கப்பட்டன. ரஷ்ய கம்யூனிஸ்ட் அரசு காலனி நாடுகளை விடுதலைக்காக போராட ஊக்குவித்து அவர்களுக்கு முழுமையாக ஆதரவையும் நல்கியது. நிலச்சீர்திருத்தம், சமூகநலன், தொழிலாளர் உரிமைகள், பாலின சமத்துவம் போன்ற இன்றியமையாதவை குறித்த விவாதங்கள் உலகஅளவில் நடைபெறத் தொடங்கின.

பிரவ்தா என்பது ஒரு ரஷ்யமொழிச் சொல். அதன் பொருள் "உண்மை" என்பதாகும். இது 1918 முதல் 1991 வரை சோவியத்யூனியனின் கம்யூனிஸக் கட்சியினுடைய அதிகாரபூர்வ நாளேடாகும்.

## 1.5 பன்னாட்டுச் சங்கம்

### அமைப்பும் உறுப்புகளும்

பன்னாட்டுச் சங்கத்திற்கான கூட்டு ஒப்பந்த ஆவணம் பாரிஸ் அமைதி மாநாட்டில் தயார் செய்யப்பட்டு முதல் உலகப்போருக்குப்பின் மேற்கொள்ளப்பட்ட ஒவ்வொரு உடன்படிக்கையிலும் சேர்க்கப்பட்டது. சவால்கள் நிறைந்த இப்பணி குடியரசுத்தலைவர் உட்ரோவில்சன் கொடுத்த அழுத்தத்தால் நிறைவேறியது. இவ்வமைப்புக்கான அரசியல் அமைப்பு விதிகளை உருவாக்குவதில் இங்கிலாந்து, அமெரிக்கா ஆகியநாடுகளின் ஆலோசனைகள் மேலோங்கியிருந்தன.

1920இல் துவக்கப்பட்ட இச்சங்கம் ஐந்து உறுப்புகளைக் கொண்டிருந்தது. அவை பொதுச்சபை, செயற்குழு, செயலகம், பன்னாட்டு நீதிமன்றம், பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பு என்பனவாகும். ஒவ்வொரு உறுப்புநாடும் பொதுச்சபையில் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டது. செயற்குழுவே முடிவுகளைச் செயல்படுத்தும் அமைப்பாகும். பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி, ஜப்பான், அமெரிக்கா ஆகிய நாடுகளே தொடக்கத்தில் இச்சபையின் நிரந்தர உறுப்பினர்கள் என அறிவிக்கப்பட்டது. ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒரு வாக்கு அளிக்கும் உரிமை உண்டு. மேலும் அனைத்து முடிவுகளும் ஒருமனதாகத் தீர்மானிக்கப்படவேண்டும் என்பதால் சிறு நாடுகளும் மறுப்பாணை அதிகாரத்தைப் (Veto Power) பெற்றிருந்தன.

பன்னாட்டுச் சங்கத்தின் செயலகம் ஜெனீவாவில் அமைந்து இருந்தது. அதன் முதல் பொதுச்செயலாளர் பிரிட்டனைச் சேர்ந்த சர் எரிக் டிரம்மாண்ட் ஆவார். செயலகப் பணியாளர்களைப் பொதுச்செயலாளர் செயற்குழுவின் ஆலோசனையின்படி பணியமர்த்துவார். பன்னாட்டு நீதிமன்றமானது தி ஹேக் நகரில் அமைக்கப்பட்டது. இந்நீதிமன்றம் பதினைந்து நீதிபதிகளைக் கொண்டிருந்தது. பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பு, ஒரு செயலகத்தையும் அதன் பொது



10th_History_Unit_1_TM.indd 13 24-03-2020 12:28:50

மாநாட்டில் ஒவ்வொரு உறுப்பு நாட்டிலிருந்தும் நான்கு உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

### பன்னாட்டுச் சங்கத்தின் குறிக்கோள்கள்

பன்னாட்டுச் சங்கத்தின் இரண்டு குறிக்கோள்களில் ஒன்று போர்களைத்தவிர்த்து உலகில் அமைதியை நிலைநாட்டுவது. மற்றொன்று சமூகப் பொருளாதார விசயங்களில் பன்னாட்டு ஒத்துழைப்பை மேம்படுத்துவது என்பனவாகும். பன்னாட்டுச் சங்கம் நடுவராகவும், சமாதானம் செய்பவராகவும் இருந்து அதன் மூலம் பிரச்சனைகளைத் தொடக்கத்திலேயே தீர்த்துவைக்க விரும்பியது. நடுவர் தீர்ப்பையும் மீறி போர்கள் வெடித்தால் போருக்குக் காரணமான நாட்டின்மீது சங்கம் முதலில் பொருளாதாரத் தடைகளையும் பின்னர் இராணுவ ரீதியிலானத் தடைகளையும் விதிக்கவேண்டும்.

அமெரிக்கா (சங்கத்தில் உறுப்பினராகாத நாடு), ஜெர்மனி (தோல்வியுற்ற நாடு), ரஷ்யா ஆகிய மூன்று வல்லரசுகள் இவ்வமைப்பில் அங்கம் வகிக்காததால், இக்குறிக்கோள்களை எட்டுவதில் சிரமங்கள் மேலும் அதிகரித்தன. ஜெர்மனியும் ரஷ்யாவும் முறையே 1926, 1934 ஆகிய ஆண்டுகளில் சங்கத்தில் சேர்ந்தன. 1933இல் ஜெர்மனி விலகியது. 1939இல் ரஷ்யா வெளியேற்றப்பட்டது.

### சங்கத்தின் செயல்பாடுகள்

1920–1925 ஆகிய ஆண்டுகளிடையே பன்னாட்டுச் சங்கம் பல சிக்கல்களைத் தீர்த்துவைக்க அழைக்கப்பட்டது. மூன்று பிரச்சனைகளைத் தீர்த்துவைப்பதில் சங்கம் வெற்றிபெற்றது. 1920இல் பின்லாந்தின் மேற்குக்கடற்கரைக்கும் சுவீடனின் கிழக்குக்கடற்கரைக்கும் இடையில் அமைந்திருந்த ஆலேண்டு தீவுகள் யாருக்குச் சொந்தம் என்பதில் பின்லாந்திற்கும் சுவீடனுக்குமிடையே பிரச்சனை ஏற்பட்டது. பன்னாட்டுச் சங்கம் அத்தீவுகள் பின்லாந்திற்கே உரியது எனத் தீர்ப்பளித்தது. அடுத்த ஆண்டில் போலந்திற்கும் ஜெர்மனிக்குமிடையே மேலை சைலேஷியா பகுதியில் எல்லைப்பிரச்சனை ஏற்பட்டு, பிரச்சனையைத் தீர்த்துவைக்கச் சங்கம் அழைக்கப்பட்டபோது அப்பிரச்சனையைச் சங்கம் வெற்றிகரமாகத் தீர்த்துவைத்தது. 1925இல் மூன்றாவது பிரச்சனை கிரீஸ், பல்கேரியா நாடுகளிடையே ஏற்பட்டதாகும். கிரீஸ் பல்கேரியாவின் மீது படையெடுத்தபோது பன்னாட்டுச் சங்கம் போர் நிறுத்தம் செய்ய உத்தரவிட்டது. விசாரணைக்குப்பின் சங்கம் கிரீஸின் மீது குற்றஞ்சாட்டி, கிரீஸ் போர் இழப்பீடு வழங்கவேண்டுமெனத் தீர்மானித்தது. ஆகவே 1925இல் லொக்கர்னோ உடன்படிக்கை கையெழுத்தாகின்றவரை பன்னாட்டுச் சங்கம் வெற்றிகரமாகவே செயலாற்றியது. லொக்கார்னோ உடன்படிக்கையின்படி ஜெர்மனி, பிரான்ஸ், பெல்ஜியம், இங்கிலாந்து, இத்தாலி ஆகிய நாடுகள் மேற்கு ஐரோப்பாவில் பரஸ்பரம் அமைதிக்கு உத்தரவாதமளித்தன. இதன்பின்னர் ஜெர்மனி பன்னாட்டுச் சங்கத்தில் இணைந்தது. பாதுகாப்புக்குழுவிலும் நிரந்தர இடமளிக்கப்பட்டது. இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் அமெரிக்காவும் ரஷ்யாவும் சங்கத்தினுடைய அரசியல் அல்லாத நடவடிக்கைகளில் பங்கேற்கத் தொடங்கின.

### கட்டுப்பாடு மீறல்

ஐரோப்பிய சக்திகள் எதிர்கொண்ட பெரும் பிரச்சனைகளிலொன்று எவ்வாறு ஆயுதக் குறைப்பை சாத்தியமாக்குவது என்பதாகும். 1925இல் சங்கத்தின் பாதுகாப்புக் குழுவானது ஏற்பாடு செய்த ஆயுதக்குறைப்புப் பிரச்சனை தொடர்பான மாநாடு, 1932 பிப்ரவரியில்தான் கூடியது. இம்மாநாட்டில் பிரான்சுக்கு நிகராகத் தானும் ஆயுதங்களை வைத்துக்கொள்ள ஜெர்மனி அனுமதி கோரியபோது அது மறுக்கப்பட்டது. அக்டோபர் திங்களில் ஹிட்லர் ஜெர்மனியை மாநாட்டிலிருந்தும் பன்னாட்டுச் சங்கத்திலிருந்தும் விலக்கிக்கொண்டார்.

1931இல் ஜப்பான் மஞ்சூரியாவைத் தாக்கியது. சங்கம் ஜப்பானைக் கண்டனம் செய்யவே ஜெர்மனியின் நடவடிக்கையைப் பின்பற்றி ஜப்பானும் சங்கத்திலிருந்து வெளியேறியது. இத்தாலி எத்தியோப்பியாவைத் தாக்கிய விசயத்தில் சங்கம் இத்தாலிக்கு எதிராகத் தடைகளை விதித்தது. தடைகள் நடைமுறைக்கு வந்தபோது, அதை எதிர்த்து இத்தாலி 1937இல் விலகியது. இதன்பின்னர் ஏற்பட்ட ரைன்லாந்து, ஆஸ்திரியா, செக்கோஸ்லோவாக்கியா, போலந்து ஆகிய பிரச்சனைகளில் சங்கம் தலையிடாமல் நடைபெற்ற நிகழ்வுகளுக்கு மௌன சாட்சியாய் விளங்கியது. 1939 டிசம்பர் திங்கள் பின்லாந்தைத் தாக்கியதற்காக ரஷ்யாவை வெளியேற்றியதே சங்கத்தின் இறுதியான உறுதியான நடவடிக்கையாகும். சங்கத்தின் பொதுச்சபை அதன்பின்னர் கூட்டப்படவில்லை. இறுதியாக 1946இல் பன்னாட்டுச் சங்கம் கலைக்கப்பட்டது.

### தோல்விக்கானக் காரணங்கள்

பன்னாட்டுச் சங்கம் முதல் உலகப்போரில் வெற்றிபெற்ற நாடுகளின் அமைப்பாகவே காணப்பட்டது.

சங்கத்திற்கென்று இராணுவம் இல்லை என்பதால் தான் எடுத்த முடிவுகளை நடைமுறைப்படுத்த அதனால் இயலவில்லை.



10th_History_Unit_1_TM.indd 14 24-03-2020 12:28:50

www.tntextbooks.in

அமைதிக்கான இவ்வமைப்பை உருவாக்கியவர்கள் தேசியவாதத்தின் உள்ளார்ந்த ஆற்றலை உணர்ந்திருக்கவில்லை. 'கூட்டுப்பாதுகாப்பு' எனும் கோட்பாட்டை நடைமுறையில் செயல்படுத்தவே முடியவில்லை. சர்வாதிகாரிகளால் தலைமையேற்கப்பட்ட இத்தாலி, ஜப்பான், ஜெர்மனி ஆகிய நாடுகள் சங்கத்தின் ஆணைகளுக்குக் கட்டுப்பட மறுத்தபோது, இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகள் மட்டுமே உறுதியாகச் செயல்படும் நிலையிலிருந்தன.

## பாடச்சுருக்கம்

- முதலாளித்துவ நாடுகளின் வளர்ந்துகொண்டேயிருந்த, கச்சாப்பொருட்களுக்கும் சந்தைக்குமானத் தேவைகள் எவ்வாறு காலனியாதிக்கப் போட்டிக்கு இட்டுச்சென்றதென்பதும் அதன் விளைவாக ஐரோப்பிய வல்லரசுகளிடையே ஏற்பட்ட மோதல்களும் விவாதிக்கப்பட்டுள்ளன.
- ஆசியாவில் ஜப்பான் ஒரு ஏகாதிபத்திய சக்தியாக எழுச்சி பெற்றது கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது.
- ஐரோப்பா இரு போர்முகாம்களாகப் பிரிந்ததும் அதன் விளைவாக ஏற்பட்ட அணி சேர்க்கைகளும், எதிரணி சேர்க்கைகளும் விவரிக்கப்பட்டுள்ளன.
- முதல் உலகப்போர் வெடிப்பதற்குக் காரணங்களான வன்முறை வடிவங்களிலான தேசியம், ஜெர்மனியின் ஆக்கிரமிப்பு மனப்பான்மை, அல்சேஸ், லொரைன் பகுதிகளை இழந்ததனால் பிரான்சுக்கு ஜெர்மனியோடு ஏற்பட்டப் பகைமை, பால்கன் பகுதியில் ஏற்பட்ட அதிகாரஅரசியல் போன்றவை விளக்கப்பட்டுள்ளன.
- நீர்மூழ்கிக்கப்பல் போரினை ஜெர்மன் தொடுத்ததைத் தொடர்ந்து போரில் அமெரிக்கா பங்கேற்றதும், நேசநாடுகள் பெற்ற இறுதி வெற்றியும் சுருக்கமாக விளக்கப்பட்டுள்ளன.
- பாரிஸ் அமைதிமாநாடும், வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் சரத்துக்களும் பகுத்தாய்வு செய்யப்பட்டுள்ளன.
- முதல் உலகப்போரின் பின்விளைவுகள், குறிப்பாக ரஷ்யப்புரட்சி, அதற்கான காரணங்கள், போக்கு, விளைவுகள் ஆகியவை விரிவாக விவரிக்கப்பட்டுள்ளன.
- உலகஅமைதிக்காக உருவாக்கப்பட்ட முதல் அமைப்பான பன்னாட்டுச் சங்கமும் போர்களைத் தடுப்பதிலும் அமைதியை மேம்படுத்தியதிலும் அது வகித்தப் பங்கும் விமர்சன பூர்வமாக ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

## A-Z கலைச்சொற்கள்

| | | |
|---|---|---|
| முற்றுரிமை | **Monopoly** | exclusive possession or control |
| பேரழிவு | **Devastating** | highly destructive or damage |
| கண்மூடித்தனமான நாட்டுப்பற்று | **Jingoism** | blind patriotism, especially in the pursuit of aggressive foreign policy |
| அதிதீவிரப்பற்று | **Chauvinism** | extreme patriotism |
| ஜெர்மானியக் கலாச்சாரத்தை மிக உயர்வாக நினைப்பது | **Kultur** | thinking highly of German civilization and culture |
| எதிரியை விரட்டிஅடித்தல் | **Repulse** | drive back |
| மூழ்கடி | **Torpedo** | attack or sink (a ship) with a torpedo |
| முதலாளித்துவம் | **Bourgeois** | characteristic of the middle class, typically with reference to its perceived materialistic values or conventional attitudes |
| அறிவுஜீவிகள், நுண்ணறிவாளர்கள் | **Intelligentsia** | intellectuals or highly educated people as a group, especially when regarded as possessing culture and political influence |



10th_History_Unit_1_TM.indd 15 24-03-2020 12:28:50

www.tntextbooks.in

## பயிற்சி

KEYC16

### I சரியான விடையைத் தேர்வு செய்யவும்

1. முதல் உலகப்போரின் இறுதியில் நிலைகுலைந்து போன மூன்று பெரும் பேரரசுகள் யாவை?
   அ) ஜெர்மனி, ஆஸ்திரிய–ஹங்கேரி, உதுமானியர்
   ஆ) ஜெர்மனி, ஆஸ்திரிய– ஹங்கேரி, ரஷ்யா
   இ) ஸ்பெயின், போர்ச்சுகல், இத்தாலி
   ஈ) ஜெர்மனி, ஆஸ்திரிய–ஹங்கேரி, இத்தாலி
2. பத்தொன்பதாம் நூற்றாண்டு முடிவடையுந் தருவாயில் கிழக்கு ஆசியாவில் உதயமான வலிமைவாய்ந்த நாடு எது?
   அ) சீனா ஆ) ஜப்பான்
   இ) கொரியா ஈ) மங்கோலியா
3. "ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்ச கட்டம்" எனக் கூறியவர் யார்?
   அ) லெனின் ஆ) மார்க்ஸ்
   இ) சன் யாட் சென் ஈ) மா சே துங்
4. மார்ன் போர் எதற்காக நினைவு கூறப்படுகிறது?
   அ) ஆகாயப் போர்முறை
   ஆ) பதுங்குக் குழிப்போர்முறை
   இ) நீர்மூழ்கிக் கப்பல் போர்முறை
   ஈ) கடற்படைப் போர்முறை
5. பன்னாட்டுச் சங்கத்தின் முதல் பொதுச்செயலாளர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
   அ) பிரிட்டன் ஆ) பிரான்ஸ்
   இ) டச்சு ஈ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்
6. பின்லாந்தைத் தாக்கியதற்காக பன்னாட்டுச் சங்கத்திலிருந்து வெளியேற்றப்பட்ட நாடு எது?
   அ) ஜெர்மனி ஆ) ரஷ்யா
   இ) இத்தாலி ஈ) பிரான்ஸ்

### II கோடிட்ட இடங்களை நிரப்புக

1. ______________ஆம் ஆண்டில் ஜப்பான் சீனாவுடன் வலுக்கட்டாயமாகப் போரிட்டது.
2. 1913ஆம் ஆண்டு மே மாதம் கையெழுத்திடப்பட்ட __________ உடன்படிக்கையின்படி அல்பேனியா எனும் புதியநாடு உருவாக்கப்பட்டது.
3. ______________ ஆண்டில் ஜப்பான் இங்கிலாந்துடன் நட்பினை ஒப்பந்தம் செய்து கொண்டது.
4. பால்கனில் ______________ நாடு பல்வகை இனமக்களைக் கொண்டிருந்தது.
5. டானென்பர்க் போரில் ______________ பேரிழப்புகளுக்கு உள்ளானது.
6. பாரிஸ் அமைதி மாநாட்டில் பிரதிநிதியாகப் பங்கேற்ற பிரான்ஸின் பிரதமர் ______________ ஆவார்.
7. ______________ஆம் ஆண்டில் லொக்கர்னோ உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டது.

### III சரியான கூற்றைத் தேர்வுசெய்யவும்

1. i) துருக்கியப் பேரரசு, பால்கனில் துருக்கியரல்லாத பல இனமக்களைக் கொண்டிருந்தது.
   ii) துருக்கி மையநாடுகள் பக்கம் நின்று போரிட்டது.
   iii) பிரிட்டன் துருக்கியைத் தாக்கி கான்ஸ்டாண்டிநோபிளைக் கைப்பற்றியது.
   iv) சூயஸ் கால்வாயைத் தாக்க துருக்கி மேற்கொண்ட முயற்சி முறியடிக்கப்பட்டது.
   அ) i), ii) ஆகியன சரி ஆ) i), iii) ஆகியன சரி
   இ) iv) சரி ஈ) i), ii), iv) ஆகியன சரி
2. **கூற்று:** ஜெர்மனியும் அமெரிக்காவும் மலிவான தொழிற்சாலைப் பொருள்களை உற்பத்தி செய்து இங்கிலாந்தின் சந்தையைக் கைப்பற்றின.
   **காரணம்:** இருநாடுகளும் தங்கள் தொழிற்சாலைகளுக்குத் தேவையான மூலப்பொருள்களை உற்பத்தி செய்தன.
   அ) கூற்று, காரணம் ஆகிய இரண்டும் சரி.
   ஆ) கூற்று சரி, ஆனால் காரணம் கூற்றுக்கான விளக்கம் அல்ல.
   இ) கூற்று, காரணம் ஆகிய இரண்டும் தவறு
   ஈ) காரணம் சரி, ஆனால் கூற்று தவறு.
3. **கூற்று:** ஆப்பிரிக்காவில் குடியேற்றங்களை ஏற்படுத்துவதற்காக ஐரோப்பிய நாடுகள் மேற்கொண்ட முதற்கட்ட முயற்சிகள் ரத்தக்களரியான போர்களில் முடிந்தன.
   **காரணம் :** சொந்தநாட்டு மக்களிடமிருந்து கடுமையான எதிர்ப்பு இருந்தது.
   அ) காரணம், கூற்று ஆகிய இரண்டும் சரி.
   ஆ) கூற்று சரி, ஆனால் காரணம் கூற்றுக்கான விளக்கம் அல்ல.
   இ) கூற்று, காரணம் இரண்டுமே தவறு.
   ஈ) காரணம் சரி ஆனால் கூற்று தவறு.



10th_History_Unit_1_TM.indd 16 24-03-2020 12:28:50

## IV பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| 1. | பிரெஸ்ட்–லிடோவஸ்க் உடன்படிக்கை | – | வெர்செய்ல்ஸ் |
| 2. | ஜிங்கோயிசம் | – | துருக்கி |
| 3. | கமால் பாட்சா | – | ரஷ்யாவும் ஜெர்மனியும் |
| 4. | எம்டன் | – | இங்கிலாந்து |
| 5. | கண்ணாடி மாளிகை | – | சென்னை |

## V சுருக்கமாக விடையளிக்கவும்

1. சீன – ஜப்பானியப் போரின் முக்கியத்துவத்தை நீ எவ்வாறு மதிப்பீடு செய்வாய்?
2. மூவர் கூட்டு நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
3. ஐரோப்பிய போர்க்குணம் வாய்ந்த தேசியவாதத்தின் மூன்றுவடிவங்கள் எவை?
4. பதுங்குக் குழிப்போர்முறை குறித்து நீங்கள் அறிந்ததென்ன?
5. முஸ்தபா கமால் பாட்சா வகித்தப் பாத்திரமென்ன?
6. பன்னாட்டுச் சங்கத்தின் தோல்விக்கான ஏதேனும் இரண்டு காரணங்களைப் பட்டியலிடுக.

## VI பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடையளிக்கவும்

1. முதல் உலகப்போருக்கான முக்கியக் காரணங்களை விவாதி.
2. ஜெர்மனியுடன் தொடர்புடைய வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் சரத்துக்களை கோடிட்டுக்காட்டுக.
3. லெனின் தலைமையிலான ரஷ்யப் புரட்சியின்போக்கினை விளக்குக.
4. பன்னாட்டுச் சங்கத்தின் பணிகளை மதிப்பிடுக.

## VII செயல்பாடுகள்

1. முதல் உலகப்போரில் ஈடுபட்ட நாடுகளின் தலைநகரங்களையும் போர்க்களங்களையும் வரைபடத்தில் குறிப்பதற்கு மாணவர்களுக்குப் பயிற்சி அளித்தல்.

## VIII வரைபடப் பணி

உலகவரைபடத்தில் பின்வரும் நாடுகளைக் குறிக்கவும்.

| | | | |
|---|---|---|---|
| 1. | கிரேட் பிரிட்டன் | 2. | ஜெர்மனி |
| 3. | பிரான்ஸ் | 4. | இத்தாலி |
| 5. | மொராக்கோ | 6. | துருக்கி |
| 7. | செர்பியா | 8. | பாஸ்னியா |
| 9. | கிரீஸ் | 10 | ஆஸ்திரிய–ஹங்கேரி |
| 11. | பல்கேரியா | 12. | ருமேனியா |

## மேற்கோள் நூல்கள்


1. R.D. Cormvell, *World History in the Twentieth Century*, London: Longman, 1972
2. David Thomson, *Europe since Napoleon*, Harmondsworth: Penguin, 1990
3. Eric Hobsbawm, *The Age of extremes*, 1914 – 1991, London: Abacus, 1994.
4. Hew Strachan, *The Oxford Illustrated History of the First World War*. Oxford: Oxford University Press, 2014).


## இணையச் செயல்பாடு

### முதல் உலகப்போரின் வெடிப்பும் அதன் பின்விளைவுகளும்

**செயல்முறை**

- கீழ்காணும் உரலி / விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தி இச்செயல்பாட்டிற்கான இணையப் பக்கத்திற்குச் செல்லவும்.
- மேலே கொடுக்கப்பட்டுள்ள 'Learn' சென்று 'Interactive Timeline' யை தேர்ந்தெடுக்கவும்.
- கீழே கொடுக்கப்பட்டுள்ள Timeline ஐ நகர்த்தி நிகழ்வுகளைக் காணலாம்.

**உரலி:** https://www.theworldwar.org/

B373_10_SOCIAL_TM



10th_History_Unit_1_TM.indd 17 24-03-2020 12:28:51

# அலகு – 2

# இரு உலகப்போர்களுக்கு இடையில் உலகம்



## கற்றலின் நோக்கங்கள்

**கீழ்க்காண்பனவற்றோடு அறிமுகமாதல்**

- முதல் உலகப்போருக்குப் பிந்தைய நிகழ்வுகள் பொருளாதாரப் பெருமந்தத்திற்கு இட்டுச் சென்றது.
- தோல்வியடைந்த நாடுகளின் மீது திணிக்கப்பட்ட, நீதிக்குப்புறம்பான வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் சரத்துக்கள். இத்தாலியில் முசோலினியின் தலைமையிலும், ஜெர்மனியில் ஹிட்லரின் தலைமையிலும் பாசிச அரசுகள் எழுச்சி பெறுதல்
- காலனிகளாக்கப்பட்ட உலகில் காலனிய எதிர்ப்புப் போராட்டங்களும், காலனிய நீக்கச் செயல்பாடுகளும், ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பகுதிகளாக தென்கிழக்காசியாவில் இந்தோ–பிரான்சும், தெற்காசியாவில் இந்தியாவும்
- ஆப்பிரிக்காவில் ஐரோப்பியக்காலனிகள் உருவாக்கப்படுதல். அவ்வகையில் தென்னாப்பிரிக்காவில் இங்கிலாந்து காலனிகளை ஏற்படுத்துதல்
- தென் அமெரிக்காவில் விடுதலைப்போராட்டங்களும் அரசியல் வளர்ச்சிகளும்

S82KE4

## அறிமுகம்

முதல் உலகப்போர் ஐரோப்பிய ஏகாதிபத்தியத்தை அடித்தளமாகக் கொண்ட உலக முதலாளித்துவ முறையைத் தகர்த்தது. இப்போரினால் ஐரோப்பிய நாடுகள் அரசியல்ரீதியாகவும் நிதிசார்ந்த வகையிலும் கவலைக்குரிய அளவிற்குத் தளர்வடைந்து வலிமை குன்றின. தொழிலாளர்களுக்கும், அரசைக் கட்டுப்படுத்திய ஆளும் வர்க்கங்களுக்கும் இடையிலான முரண்பாடுகளும் தீவிரமடைந்தன. இதன் விளைவாக இத்தாலியிலும், ஜெர்மனியிலும் பாசிசம் எழுச்சி பெற்றது. போரினால் காலனியாதிக்க சக்திகள் வலிமைகுன்றியதால் காலனிய எதிர்ப்பியக்கங்கள் தீவிரமடைந்தன.

இதற்கு முந்தைய பாடத்தில் நாம் கண்டவாறு மேலை உலகில் நிலவிய சிக்கல்கள் முதல் உலகப்போர் வெடிப்பதற்கு இட்டுச்சென்றது. தற்போது நாம் முதல் உலகப்போர் முடிந்த பின்னர் ஏற்பட்ட சமூக அரசியல் வளர்ச்சிகளை நோக்கி கவனத்தைத் திருப்புவோம்.

## 2 1 பொருளாதாரப் பெருமந்தம்

### முதல் உலகப்போருக்குப் பின்னர் ஏற்பட்ட வளர்ச்சிப்போக்குகள்

முதல் உலகப்போரானது போர்க்காலப் பெரும்வளர்ச்சி முடிவற்றுத் தொடரும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் சில குறிப்பிட்ட தொழில்களின் விரிவாக்கத்திற்கு வழிகோலியது. இருந்த போதிலும் போர் ஒரு முடிவுக்கு வந்தபோது, போர்த்தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக உருவாகி வளர்ந்த சில தொழில்கள் கைவிடப்பட வேண்டியவைகளாக அல்லது மாற்றி அமைக்கப்பட வேண்டியவைகளாயின. வெர்செய்ல்ஸ் உடன்படிக்கை ஏற்படுத்திய அரசியல்சிக்கல்கள், நிலைமையை மேலும் மோசமாக்கியது. பொருளாதார தேசியவாதம் எனும் புதியஅலை 'பாதுகாப்பு' அல்லது 'சுங்கத் தடைகள்', இறக்குமதியாகும் பொருள்களின் மீது வரிசுமத்துவது எனும் பெயர்களில் தன்னை வெளிப்படுத்திக்கொண்டு, உலகவர்த்தகத்தைப் பாதித்தது. போர் ஒவ்வொரு ஐரோப்பிய நாட்டின் மீதும் பெரும் கடன்சுமையை ஏற்றியது.

### அமெரிக்காவில் பங்குச்சந்தையின் வீழ்ச்சி

முதல் பெரும்வீழ்ச்சி 1929 அக்டோபர் 24இல் அரங்கேறியது. அன்றைய தினம் நியூயார்க் நகரப் பங்குச்சந்தையில் பங்குகளின் விலைகள் செங்குத்தாய் சரிந்தன. நம்பிக்கை இழந்த முதலீட்டாளர்களும், வாடிக்கையாளர்களும் ஏனைய மக்களும் பங்குகளை விற்கத்துவங்கினர். இருப்பில் இருந்தனவற்றையும் விற்றுத்தீர்க்கத் தலைப்பட்டனர். ஆனால் அதனை வாங்குவதற்கு யாருமில்லை. இப்பெருவீழ்ச்சியும் முதலீட்டில் ஏற்பட்ட சரிவும் அமெரிக்க வங்கிகளின் தோல்விக்கு வழிவகுத்தன. அமெரிக்க முதலீட்டாளர்கள் வெளிநாடுகளில் செய்திருந்த தங்கள் முதலீடுகளைத் திரும்பப்பெறும் கட்டாயத்திற்கு உள்ளாயினர்.

### பன்னாட்டுச் செலாவணி முறையில் ஏற்பட்ட சீர்குலைவு

இங்கிலாந்தில் செலவுகளைச் சுருக்குதல், வரிகளை உயர்த்துதல் போன்ற அவசரகால நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டபோதும் நிலைமைகளில் முன்னேற்றம் ஏற்படவில்லை. எனவே இங்கிலாந்து தங்கநாணய ஏற்பளவு (Gold Standard) முறையைக் கைவிட முடிவுசெய்தது. உடனடியாக ஏனைய பல நாடுகளும் தங்கநாணய ஏற்புமுறையை விட்டு விலகின. பெருங்கேட்டினை ஏற்படுத்தவல்ல இச்சூழலுக்கு எதிர்நடவடிக்கை மேற்கொள்ளவும், உள்நாட்டுச்சந்தையைப் பாதுகாக்கும் பொருட்டு ஒவ்வொரு நாடும் ஒரு பாதுகாப்புக் கொள்கையை மேற்கொண்டதோடு, பணத்தின் மதிப்பையும் குறைத்தன. பணமதிப்புக் குறைப்பால் கடன்கொடுப்போர், கடன்கொடுப்பதை நிறுத்தினர். இதனால் உலகஅளவில் கடன்வழங்குதல், வாங்குதல் நடவடிக்கையில் பெருஞ்சுணக்கம் ஏற்பட்டது. இவ்வாறு தங்களின் பொருளாதார நலன்களைப் பாதுகாப்பதற்காகப் பல்வேறு நாடுகள் மேற்கொண்ட தற்காப்பு நடவடிக்கைகள் முன்னெப்போதுமில்லாத அளவில் உலகப்பொருளாதாரச் செயல்பாடுகளை சரிவுக்கு இட்டுச்சென்றது. இதனுடைய விளைவு ஆழமானதாகவும் நீண்டகாலம் நீடித்திருப்பதாகவும் அமைந்ததால் வரலாற்று அறிஞர்களும் பொருளாதார மேதைகளும் இதனைப் பெருமந்தம் என அழைக்கலாயினர்.

> தங்கமதிப்பீட்டு அளவு என்பது ஒரு நாணயமுறை. இதில் ஒரு நாட்டினுடைய நாணயம் அல்லது காகிதப்பணம் தங்கத்தோடு நேரடித் தொடர்புடைய ஒரு மதிப்பினைப் பெற்றிருக்கும்.

### அரசியலில் ஏற்படுத்திய அதிர்வுகள்

பெருமந்தம் பல நாடுகளின் அரசியல் நிலைமைகளை மாற்றியமைத்தது. இங்கிலாந்தில் 1931இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் தொழிலாளர் கட்சி தோற்கடிக்கப்பட்டது. அமெரிக்காவில் பெருமந்தத்திற்கு முந்தைய பெரும்வளர்ச்சிக்குத் தானேகாரணம் என மார்தட்டிய குடியரசுக்கட்சி பெருமந்தத்திற்குப் பின்னர் இருபது ஆண்டுகளில் நடைபெற்ற அனைத்துத் தேர்தல்களிலும் மக்களால் ஒதுக்கப்பட்டது.

## 2.2 பாசிசத்தின், நாசிசத்தின் எழுச்சி

### (அ) இத்தாலியில் போரின் தாக்கம்

மேற்கு ஐரோப்பாவில் பழைய ஆட்சி அதிகாரத்திற்கு எதிராகத் திரும்பிய நாடுகளுள் முதல்நாடு இத்தாலியாகும். முதல் உலகப்போரில் இத்தாலியின் முதன்மையான சவாலான பணி ஆஸ்திரியர்களை தெற்குமுனையில் நிறுத்திவைப்பதாகும். அதேசமயத்தில் ஆங்கிலேயர், பிரெஞ்சுக்காரர், அமெரிக்கர் ஆகியோர் பிளாண்டர்ஸ் போரில் ஜெர்மானியரை இக்கட்டாகச் சிக்கவைத்து பணியவைக்கவேண்டும் என்று எண்ணினர். போரில் பங்குகொண்டதால் ஏற்பட்ட பணச்செலவோ மிகப்பெரிது. மேலும் போருக்குப்பின்னர், போரின் ஆதாயங்கள் பகிரப்பட்டபோது இத்தாலி தான் எதிர்பார்த்ததைக்காட்டிலும் குறைவாகவே பெற்றது. சோசலிஸ்டுகளின் ஆஸ்திரிய ஆதரவு கத்தோலிக்கர்களின் ஆதரவைப் பெறாத இப்போரில் இத்தாலி பேரிழப்புகளைச் சந்தித்தது. வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் மூலமாக இத்தாலிக்கு மிகச்சிறிய பகுதிகளே கிடைத்ததால் தேசியவாதிகளும் மகிழ்வற்றே இருந்தனர். போரினால் ஏற்பட்ட பணவீக்கத்தைத் தொடர்ந்து பொருள்களின் விலைகள் உயர்ந்தன. எதிர்ப்புகளும், வேலைநிறுத்தங்களும் அடிக்கடி நடைபெற்றன. வெர்செய்ல்ஸில் ஏற்பட்ட அவமானத்திற்கு அப்போதைய இத்தாலியின் ஆட்சியர்களே பொறுப்பு என மக்கள் கருதினர்.

### முசோலினியின் எழுச்சி

வெர்செய்ல்ஸ் உடன்படிக்கைக்குப் பின்னர், நடைபெற்றத் தேர்தலில் போல்ஷ்விசத்தை (சோவியத் கம்யூனிசம்) பின்பற்றுவதாகத் தங்களை அறிவித்துக்கொண்ட இத்தாலிய சோசலிஸ்டுகள் 1919 நவம்பரில் நடைபெற்ற தேர்தலில் மூன்றில் ஒரு பங்கு இடத்தைக் கைப்பற்றினர். இரும்பு வேலை செய்பவரின் மகனான முசோலினி, தொடக்கப்பள்ளி ஆசிரியருக்கான தகுதியைப் பெற்றவர், சோசலிசச் சிந்தனைகளுடன் பத்திரிக்கையாளர் ஆனார். ஆற்றல் மிக்க பேச்சாளரான முசோலினி



10th_History_Unit_2_TM.indd 19 11-04-2020 11:31:43

முதல் உலகப்போரில் இத்தாலி கலந்து கொள்வதற்கு எதிர்ப்பு தெரிவித்த சோசலிஸ்டுகளிடமிருந்து பிரிந்துசெல்வதற்கும், வன்முறையைப் பயன்படுத்துவதற்கும் ஆதரவளிக்கத் தொடங்கினார். 1919இல் பாசிசக்கட்சி தொடங்கப்பட்டபோது முசோலினி உடனடியாக அதில் உறுப்பினரானார். பாசிஸ்டுகள் அதிகாரம், வலிமை, ஒழுக்கம் ஆகியவற்றை முன்னிலைப்படுத்தியதால், தொழிலதிபர்கள், தேசியவாதிகள், முன்னாள் ராணுவத்தினர், நடுத்தரவர்க்கத்தினர், மனநிறைவற்ற இளைஞர்கள் ஆகியோரின் ஆதரவைப்பெற்றனர். பாசிஸ்டுகள் சுதந்திரமாக வன்முறையைக் கைக்கொண்டனர். 1922 அக்டோபரில் ஒரு நீண்ட அமைச்சரவைச் சிக்கலின் போது முசோலினி பாசிஸ்டுகளின் மாபெரும் அணிவகுப்பு ஒன்றை ரோமாபுரியை நோக்கி நடத்தினார். முசோலினியின் வலிமையைக் கண்டு வியந்துபோன அரசர் மூன்றாம் விக்டர் இம்மானுவேல், முசோலினியை ஆட்சியமைக்க வரவேற்றார். மக்களாட்சிக் கட்சியின் ஒருங்கிணைக்க முடியாத தன்மையும் உறுதியுடன் செயல்பட முடியாத இயலாமையும் முசோலினியின் வெற்றிக்கு உதவின.

> பாசிஸம் என்பது தீவிர ஆதிக்க மனப்பான்மை கொண்ட அதிதீவிர தேசியவாதத்தின் ஓர் வடிவமாகும். சர்வாதிகார வல்லமையும் எதிர்ப்பை வன்முறை கொண்டு அடக்குவதும் சமூகத்தையும், பொருளாதாரத்தையும் வலுவான மத்திய அதிகாரத்தின் கீழ் வைத்திருப்பதும் இதன் பண்புகளாகும். இது இருபதாம் நூற்றாண்டின் தொடக்கப்பகுதியில் ஐரோப்பாவில் முக்கியத்துவம் பெற்றது.

### முசோலினியின் கீழ் பாசிஸ்டுகள்



முசோலினி

இத்தாலியில் 1924 தேர்தலில் வாக்காளர்கள் அச்சுறுத்தப்பட்ட பின்னர் பாசிஸ்டுகளுக்கு ஆதரவாக 65 விழுக்காடு வாக்குகள் பதிவாகியிருந்தன. சோசலிஸ்டுகளின் தலைவரான மாட்டியோட்டி தேர்தல், விதிமுறைகளுக்கு உட்பட்டுநடைபெறவில்லை எனக் கேள்வி எழுப்பியதால் கொலை செய்யப்பட்டார். இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் பொருட்டு எதிர்கட்சியினர் பாராளுமன்றத்தைப் புறக்கணித்தனர். இதன் விளைவாக முசோலினி எதிர்க்கட்சிகளைத் தடைசெய்து பத்திரிகைகளைத் தணிக்கைக்கு உட்படுத்தினார். எதிர்க்கட்சித் தலைவர்கள் கொல்லப்பட்டனர் அல்லது சிறைவைக்கப்பட்டனர். 1926இல் இரண்டாம் டியூஸ் (தலைவர்) எனும் பட்டத்தைச் சூட்டிக்கொண்ட முசோலினி சட்டங்களை இயற்றும் அதிகாரத்துடன் சர்வாதிகாரியானார். வேலைநிறுத்தங்களையும், ஆலைமூடல்களையும் தடைசெய்து சட்டங்கள் இயற்றினார். தொழிற்சங்கங்களும் தொழிற்சாலை முதலாளிகளும் இடம்பெறும் கழகங்கள் உருவாக்கப்பட்டன. 1938இல் பாராளுமன்றம் ஒழிக்கப்பட்டு அதற்கு மாற்றாகப் பாசிஸ்டுக்கட்சியின் மற்றும் கழகங்களின் பிரதிநிதிகளைக் கொண்ட அமைப்பொன்று உருவாக்கப்பட்டது. இவ்வேறுபாடு பொருளாதாரத்தின் மீதான முசோலினியின் சர்வாதிகாரக் கட்டுப்பாட்டுக்கு துணைநின்றதுடன், நிர்வாகம் மற்றும் ஆயுதப்படைகளின் தலைவராக மற்ற பிற அதிகாரத்தைச் செயல்படுத்தவும் அவருக்கு உதவியது.

### போப்பாண்டவருடன் முசோலினி ஒப்பந்தம் செய்தல்

பாசிஸ்ட் கட்சிக்கென ஒரு மரியாதையைப் பெறுவதற்காக, வாட்டிகன் நகரத்தை ஒரு சுதந்திர அரசாக அங்கீகரிப்பதின் மூலம், ரோமன் கத்தோலிக்கத் திருச்சபையின் ஆதரவைப் பெறுவதில் முசோலினி வெற்றிபெற்றார். இதற்குக் கைமாறாக திருச்சபை இத்தாலிய அரசை அங்கீகரித்தது. ரோமன் கத்தோலிக்கச் சமயம் இத்தாலியின் மதமாக அங்கீகரிக்கப்பட்டது. மேலும் பள்ளிகளில் மதபோதனைகள் செய்வதற்கு ஆணையிடப்பட்டது. மேற்சொல்லப்பட்டவற்றை சரத்துக்களாகக் கொண்ட லேட்டரன் உடன்படிக்கை 1929இல் கையெழுத்தாயிற்று.

### பெருமந்தத்தின் போது இத்தாலி

பொருளாதாரப் பெருமந்தக் காலத்தின் போது பெருமளவு விளம்பரம் செய்யப்பட்ட பொதுத்துறைப் பணிகளான புதிய பாலங்கள், சாலைகள், கால்வாய்கள், மருத்துவமனைகள், பள்ளிகள் ஆகியவை வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு தீர்வு சொல்லவில்லை. 1935இல் பன்னாட்டுச் சங்கம் முற்றிலுமாகச் செயலிழந்த பின்னர், முசோலினி ஒரு பொருளாதாரப் பேரரசை நிறுவும் பொருட்டு எத்தியோப்பியாவின் மீது படையெடுத்தார். அவருடைய படையெடுப்புப் பொருளாதாரப் பிரச்சனைகளிலிருந்து மக்களின் கவனத்தைத் திசைதிருப்பப் பயன்பட்டது.

### (ஆ) முதல் உலகப் போருக்குப்பின் ஜெர்மனி

1918 முதல் 1933 முடிய ஜெர்மனி ஒரு குடியரசாக இருந்தது. இதனைத் தொடர்ந்து ஜெர்மனியில் பாசிஸம் வெற்றி பெற்றதற்கான



10th_History_Unit_2_TM.indd 20 11-04-2020 11:31:44

காரணங்கள் பலவாகும். 1871 முதல் 1914 வரையிலான காலப்பகுதியில் ஜெர்மனி அரசியல், பொருளாதார, பண்பாட்டுச் சாதனைகளில் தலைச் சுற்றவைக்குமளவிலான உச்சத்தை எட்டியது. ஜெர்மனியின் பல்கலைக்கழகங்களும், அதன் அறிவியலும், தத்துவமும், இசையும் உலகம் முழுவதிலும் நன்கறியப்பட்டிருந்தன. தொழிற்சாலை உற்பத்தி சார்ந்த பல துறைகளில் ஜெர்மனியானது இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகளைக் காட்டிலும் சிறந்து விளங்கிக் காணப்பட்டது.

ஜெர்மனியின் தோல்வியும் முதல் உலகப்போரின் இறுதியில் பட்ட அவமானமும் நாட்டுப்பற்றுகொண்ட ஜெர்மனியின் மக்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது. பெருமந்தம் மேலும் அவர்களது ஏமாற்றத்தை அதிகமாக்கி அவர்களைக் குடியரசுக்கட்சியின் அரசுக்கெதிராய்த் திருப்பியது.

### ஜெர்மானிய பாசிசத்தின் தோற்றம்

ஜெர்மனியில் பாசிசத்தின் தோற்றம் 1919லிருந்து தொடங்குகிறது. 1919ஆம் ஆண்டில், ஏழு நபர்களைக் கொண்ட ஒரு குழுவானது, மியூனிச் நகரில் சந்தித்து தேசிய சோசலிஸ்ட் ஜெர்மன் உழைப்பாளர் கட்சி சுருக்கமாக நாசி (Nazi) கட்சியை நிறுவியது. ஹிட்லரும் அவர்களுள் ஒருவராக இருந்தார். முதல் உலகப்போரின் போது பவேரியாவின் படையில் பணியாற்றினார். அவரின் ஆற்றல் மிக்க உரை வீரர்களைத் தட்டி எழுப்பியது. 1923இல் பவேரியாவில் அதிகாரத்தைக் கைப்பற்ற அவர் முயற்சியை மேற்கொண்டார். மியூனிச் நகரில் முன்கூட்டியே திட்டமிடப்படாமல் அவர் மேற்கொண்ட தேசியப்புரட்சி அவரைச் சிறையில் தள்ளியது. சிறையில் இருந்தபோது தனது அரசியல் சிந்தனைகளை உள்ளடக்கிய சுயசரிதை நூலான மெயின் காம்ப் (Mein kampf – எனது போராட்டம்) எனும் நூலை எழுதினார். 1932இல் நடைபெற்ற குடியரசுத்தலைவர் தேர்தலில் கம்யூனிஸ்டுகள் 6,000,000 வாக்குகளைப் பெற்றனர். முதலாளிகள், சொத்து உரிமையாளர்கள் நாசிசத்தை ஆதரிக்க தொடங்கினர். இவ்வாய்ப்பைப் பயன்படுத்தி ஹிட்லர் தவறான வழியில் அதிகாரத்தைக் கைப்பற்றினார்.

> சமூக ஜனநாயகக்கட்சியானது ஜெர்மன் பொதுத்தொழிலாளர் கழகம் என்ற பெயரில் 1863 மே 23இல் லிப்சிக் நகரத்தில் நிறுவப்பட்டது. அதனை நிறுவியவர் பெர்டினன்ட் லாஸ்ஸல்லி என்பவராவார். 19ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியைச் சேர்ந்த ஜெர்மானிய மேட்டுக் குடியினர் ஒரு சோசலிசக்கட்சியின் இருப்பையே புதிதாக ஒன்றிணைக்கப்பட்ட ரெய்க்கின் (குடியரசு) பாதுகாப்புக்கும் உறுதிப்பாட்டிற்கும் ஒரு அச்சுறுத்தலாகக் கருதினர். எனவே பிஸ்மார்க் 1878 முதல் 1890 வரை இக்கட்சியைத் தடைசெய்திருந்தார்.
>
> 1945இல் ஹிட்லரின் மூன்றாவது ரெய்க்கின் (குடியரசின்) வீழ்ச்சியைத் தொடர்ந்து இக்கட்சி புத்தெழுச்சி பெற்றது. ஹிட்லரை எதிர்த்த கட்சி என்ற பெயருடன் வெய்மர் காலத்திலிருந்து செயல்படும் ஒரேகட்சி இதுவேயாகும்.



**ஹிட்லர்**

### ஹிட்லரின் நாசிச அரசு

கம்யூனிஸ்டுகள் சமூக ஜனநாயகக்கட்சியுடன் (Social Democratic Party) கூட்டணி வைக்க மறுத்ததால் ஜெர்மனியில் குடியரசுஆட்சி கவிழ்ந்தது. அதன்விளைவாகத் தொழிலதிபர்களும் வங்கியாளர்களும் குடியாட்சிக் கட்சியினரும் ஹிட்லரைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ளமுடியும் என்ற நம்பிக்கையில் 1933இல் ஹிட்லரை சான்சிலராக (முக்கிய அமைச்சர்) பதவியில் அமர்த்தும்படி குடியரசுத் தலைவர் வான் ஹிண்டன்பர்க் என்பாரை வற்புறுத்தினர். மூன்றாவது ரெய்க் (குடியரசு) என்றழைக்கப்பட்ட ஹிட்லரின் நாசிஅரசு முதல் உலகப்போருக்குப் பின்னர் ஜெர்மனியில் நிறுவப்பட்டிருந்த பாராளுமன்ற ஜனநாயக அரசை முடிவுக்குக் கொண்டுவந்தது.

ஹிட்லர் வெய்மர் குடியரசின் கொடிக்குப் பதிலாக ஸ்வஸ்திக் சின்னம் (卐) பொறிக்கப்பட்ட தேசிய சோசலிசக்கட்சியின் கொடியை அறிமுகம்செய்தார். ஜெர்மனி மிகவும் மையப்படுத்தப்பட்ட நாடாக மாற்றப்பட்டது. நாசிச கட்சியைத்தவிர பிறகட்சிகள் அனைத்தும் சட்டத்திற்குப் புறம்பானவை என்று அறிவிக்கப்பட்டன. பழுப்புநிறச் சட்டை அணிந்த போர்வீரர்கள், முழங்கால்களுக்கு மேல்வரும் காலணிகள் அணிந்த புயல்படையினர் ஆகியோரின் எண்ணிக்கை அதிகப்படுத்தப்பட்டது. ஹிட்லர் இளைஞர் அணியும், தொழிலாளர் அமைப்பும் நிறுவப்பட்டன. தொழிற்சங்கங்கள் ஒழிக்கப்பட்டன. அவற்றின் தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். அனைத்துத் தொழிலாளர்களும் ஜெர்மன் தொழிலாளர் அமைப்பில் சேருவதற்கு வற்புறுத்தப்பட்டனர்.

வேலைநிறுத்தங்கள் சட்டத்திற்குப் புறம்பானவை என அறிவிக்கப்பட்டன. தொழிலாளர்களின் ஊதியத்தை அரசே நிர்ணயித்தது. பத்திரிக்கைகள், அரங்குகள், திரைப்படங்கள், வானொலி, கல்வி ஆகிய அனைத்தும் அரசின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டன.

நாசி கட்சியின் பரப்புரைகளுக்கு ஜோசப் கோயபெல்ஸ் தலைமையேற்றார். இவர் திட்டமிடப்பட்ட பரப்புரைகளின் மூலம் பொதுமக்களின் கருத்துக்களை நாசிகளுக்கு ஆதரவாக மாற்றினார். கெஸ்டபோ எனும் ரகசியக் காவல்படை மற்றும் ஹிட்லரின் தேர்ந்தெடுக்கப்பட்ட மெய்க்காப்பாளர்களை ஹைன்ரிச் ஹிம்லர் என்பவர் நிர்வகித்தார்.

### நாசி கட்சியின் யூதக்கொள்கை

ஹிட்லருடைய அரசு ஒடுக்குமுறை நடவடிக்கைகளைப் பின்பற்றியதோடு யூதஇன மக்களுக்கு எதிராக ஒடுக்குமுறைக் கொள்கையைப் பின்பற்றியது. யூதர்கள் அரசுப்பணிகளிலிருந்து நீக்கப்பட்டனர். பல்கலைக் கழகங்களிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.அவர்களுக்குக்குடியுரிமையும் மறுக்கப்பட்டது. யூதர்களின் வணிகங்கள் நிறுத்தப்பட்டன. அவர்களின் நிறுவனங்கள் தாக்கப்பட்டன. இரண்டாவது உலகப்போர் வெடித்த பின்னர், மின்கம்பி வேலிகளால் சூழப்பெற்ற கண்காணிப்புக் கோபுரங்களுடன் கூடிய சித்ரவதை முகாம்கள் அமைக்கப்பெற்று அவற்றில் யூதர்கள் சிறை வைக்கப்பட்டனர். உயிர் வாழ்வதற்குத் தேவையான அளவைக் காட்டிலும் குறைவாகவே உணவு வழங்கப்பட்ட அவர்கள் கட்டாய உழைப்புக்கு உட்படுத்தப்பட்டார்கள். பின்னர் அவர்கள் பூண்டோடு அழிக்கப்படுவதற்கான முகாம்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு தொழிற்சாலை சார்ந்த முறைகளில் (விஷவாயு அறைகள்) கொல்லப்பட்டனர். இப்படுகொலை நாசிக்களால் 'இறுதித் தீர்வு' (Final Solution) என்றழைக்கப்பட்டது.

### வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் சரத்துக்களை ஹிட்லர் எதிர்த்தல்

1934ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் ஹிண்டென்பர்க் இயற்கை எய்தவே, சான்சிலராக இருந்த ஹிட்லர் குடியரசுத்தலைவராகவும் ராணுவத்தின் தலைமைத் தளபதியாகவும் பொறுப்பேற்றார். ஹிட்லருடைய அயலுறவுக் கொள்கையானது ஜெர்மனியின் படைபலத்தை முன்பிருந்ததைப் போலவே பெருக்குவது, ஜெர்மனி வலுவிழந்து போவதற்குக் காரணமாயிருந்த வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் சரத்துக்களை ஏற்காமல் மீறுவது என்பதை நோக்கமாகக் கொண்டிருந்தது.

## 2.3 ஆசியாவில் காலனிய எதிர்ப்பியக்கங்களும், காலனிய நீக்கச் செயல்பாடுகளும்


### (அ) பிரெஞ்சு இந்தோ–சீனா

### காலனிய எதிர்ப்புணர்வின் எழுச்சி

1887இல் பிரான்சால் கைப்பற்றப்பட்டதிலிருந்து இந்தோ–சீனா (இன்றைய கம்போடியா, லாவோஸ், வியட்நாம்) தனது எதிர்ப்பைக்காட்டி வந்தது. இந்தோ–சீனர்கள் பிரெஞ்சு மொழியும் பண்பாடும் தங்கள் மீது திணிக்கப்படுவதை எதிர்த்தபோதும் புரட்சி பற்றிய சிந்தனைகளை பிரெஞ்சுக்காரர்களிடமிருந்து கற்றுக்கொண்டனர். முதல் உலகப்போரின் போது ஒரு லட்சம் இந்தோ–சீனர்கள் பிரான்சில் போரிட்டனர். போரின்போது பிரெஞ்சுக்காரர்கள் எவ்வாறு போரிட்டனர், எவ்வாறு துன்புற்றனர் என்பது குறித்த நேரடிஅனுபவ அறிவோடு திரும்பினர். மேலும் சீனத் தலைநிலப்பகுதியிலிருந்து பரவிய கம்யூனிசச் சிந்தனைகளும் தாக்கத்தை ஏற்படுத்தியதிலிருந்து இந்தோ–சீனாவின் கணிசமான செல்வம் காலனியாதிக்க சக்திக்கே பயன்படுவதை பலர் உணர்ந்தனர்.

> காலனிய நீக்கம் என்பது காலனியாதிக்க சக்திகள் காலனிகள் மீது கொண்டுள்ள நிறுவனம் மற்றும் சட்டம் சார்ந்த கட்டுப்பாடுகளைச் சொந்த தேசிய அரசுகளிடம் வழங்குவதாகும்.

### வியட் மின் கட்சியின் உதயம்


ஹோ சி மின்

இந்தோ–சீனாவில் இருந்த அரசியல் கட்சிகளில் வியட்நாம் தேசியக் கட்சியே முக்கியமானது. 1927இல் உருவாக்கப்பட்ட இக்கட்சி மக்கள் தொகையில் பணக்காரர்களையும் நடுத்தரப்பிரிவு மக்களையும் கொண்டிருந்தது. 1929இல் வியட்நாம் வீரர்கள் இராணுவப்புரட்சி செய்தனர். பிரெஞ்சு கவர்னர் ஜெனரலைக் கொலைசெய்வதற்கான முயற்சியும் தோல்வி அடைந்தது. இதனைத் தொடர்ந்து கம்யூனிஸ்ட்களின் தலைமையில் மிகப்பெரும் விவசாயிகளின் புரட்சியும் நடைபெற்றது. இப்புரட்சி ஒடுக்கப்பட்டதைத் தொடர்ந்து 'வெள்ளை பயங்கரவாதம் (White Terror)' என்பது அரங்கேறியது. புரட்சியாளர்கள் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்டனர்.



10th_History_Unit_2_TM.indd 22 11-04-2020 11:31:44

ஹோ சி மின் 1890இல் டோங்கிங்கில் பிறந்தார். தனது 21 ஆவது வயதில் அவர் ஐரோப்பா சென்றார். லண்டன் உணவுவிடுதியொன்றில் சமையல்கலைஞராய்ப் பணியாற்றியபின் அவர் பாரிஸ் சென்றார். பாரிஸ் அமைதி மாநாட்டில் வியட்நாமின் சுதந்திரத்திற்காக ஆதரவு திரட்டினார். தினசரிகளில் அவர் எழுதிய கட்டுரைகளும் குறிப்பாக "விசாரணையில் பிரெஞ்சு காலனியாதிக்கம்" எனும் சிற்றேடு அவரை நன்கறியப்பட்ட வியட்நாமிய தேசியவாதி ஆக்கியது. 1921இல் ஹோ சி மின் பிரெஞ்சு கம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்கியவர்களில் ஒருவராக இருந்தார். இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் அவர் மாஸ்கோ சென்று புரட்சியின் நுட்பங்களைக் கற்றார். 1925இல் 'புரட்சிகர இளைஞர் இயக்கம்' எனும் அமைப்பை நிறுவினார்.

வெள்ளை பயங்கரவாதத்திற்குப் பின்னர் ஹோ சி மின் மாஸ்கோ சென்றார். 1930களை மாஸ்கோவிலும் சீனாவிலும் கழித்தார். இரண்டாவது உலகப்போரின் தொடக்கத்தில் பிரான்ஸ் ஜெர்மனியால் 1940இல் தோற்கடிக்கப்பட்டது. ஹோ சி மின்னும் அவருடைய தோழர்களும் இச்சூழலைப் பயன்படுத்தி வியட்நாமின் விடுதலையை முன்னெடுத்தனர். 1941 ஜனவரி திங்கள் எல்லையைக் கடந்து வியட்நாம் வந்த அவர்கள் 'வியட்நாம் விடுதலை சங்கம்' அல்லது வியட்மின் எனும் அமைப்பை நிறுவினர். இது தனித்தன்மை வாய்ந்த வியட்நாமிய தேசியத்திற்குப் புதிய அழுத்தத்தைக் கொடுத்தது.

### (ஆ) இந்தியாவில் காலனியாதிக்க நீக்கம்

#### மாகாணங்களில் இரட்டையாட்சி

இந்தியாவில் காலனிய நீக்கச்செயல்பாடானது இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், 1905இல் சுதேசி இயக்கத்தோடுத் துவங்கியது. முதல் உலகப்போரானது விரைவான அரசியல் பொருளாதார மாற்றங்களை ஏற்படுத்தியது. 1919இல் இந்திய அரசுச்சட்டம் இரட்டையாட்சி முறையை அறிமுகம் செய்தது. அச்சட்டம் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட மாகாண சட்டசபைகளுக்கும் மாற்று அதிகாரங்களின் பட்டியலின் கீழ்வரும் சிலதுறைகளை இந்திய அமைச்சர்களே நிர்வகிக்கவும் வழிவகை செய்தது. இந்திய தேசிய காங்கிரஸ் இரட்டையாட்சி தொடர்பான ஏற்பாடுகளை மறுத்ததோடு சட்டசபைகளைப் புறக்கணிக்க முடிவு செய்தது.

#### இந்தியாவைத் தொழில்மயமாக்குவதில் நடவடிக்கைக் குறைபாடுகள்

சர்க்கரை, சிமெண்ட், சில வேதியியல் பொருள்களுக்கு எதிர்மறையான பாகுபாட்டு மனப்பான்மையோடு வழங்கப்பட்ட பாதுகாப்பைத் தவிர காலனியப் பொருளாதாரக் கொள்கையில் மாற்றமேதுமில்லை. ஆனால் உள்நாட்டுத் தொழில்களைப் பொறுத்தமட்டில் தொழில்நுட்பம் சார்ந்த அறிவுரைகளும், கல்வியும் வழங்குதல் புதிய துறைகள் தொடர்பாக முன்னோடித் தொழில் கூடங்களை அரசு தொடங்குதல் போன்ற வடிவங்களில் மட்டுமே அரசு உதவிகள் செய்தது. ஆனால் ஆங்கிலேய நிறுவனங்கள் அரசின் தலையீட்டை எதிர்த்ததால் வெகுவிரைவில் இக்கொள்கையும் கைவிடப்பட்டது.

#### பொருளாதாரப் பெருமந்தத்தின் போது இந்தியா

1929ஆம் ஆண்டுப் பொருளாதாரப் பெருமந்தம் ஆங்கிலேயேவணிகவர்த்தகநடவடிக்கைகளுக்குப் பெரும்சேதத்தை உண்டாக்கும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இங்கிலாந்து பெருமந்தத்தின் தீயவிளைவுகளைத் தனது காலனிய நாடுகளின் தோள்களுக்கு மாற்றியது. இங்கிலாந்திற்கும் ஆங்கிலப் பேரரசின் உறுப்பு நாடுகளுக்கும் 1932இல் நடைபெற்ற ஒட்டாவா பொருளாதார உச்சி மாநாட்டில் இருதரப்பு ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின. இம்மாநாட்டில் பங்கேற்றநாடுகள் (இந்தியா உட்பட) ஏனைய நாட்டு பொருள்களைக் காட்டிலும் இங்கிலாந்து பொருள்களுக்கு முன்னுரிமை வழங்க ஒத்துக்கொண்டன.

வரவுசெலவுக் கணக்குகளைச் சமன்படுத்தும் கொள்கையைப் பின்பற்ற இந்தியா கட்டாயப்படுத்தப்பட்டது. பெருமந்த காலத்தில் அந்நியநாட்டுச் செலாவணிகளை பெறும்பொருட்டு ஆங்கிலேய–இந்திய அரசு சுங்கவரிகளை அதிகரித்தது. நெருக்கடியான நேரங்களில் இங்கிலாந்திற்குத் தேவைப்பட்ட தங்கம் இந்தியாவிலிருந்து ஏற்றுமதியானது. இந்தியக் காகிதப் பணத்தின் மதிப்பைக் கூட்டியதன் மூலம் ஆங்கிலேயர்கள் இறக்குமதியை மலிவாக்கினர். இந்தியஅரசு பின்பற்றிய அந்நியச் செலாவணி மாற்றுக்கொள்கை காலனிஅரசுக்கும் மக்களுக்குமிடையே பதற்றமான நிலையை ஏற்படுத்தியதோடு ஆங்கில அரசுக்கு எதிரான அரசியல் போராட்டங்களைத் தீவிரப்படுத்தியது.

#### இந்திய வேளாண்மையின் மீது பெருமந்தம் ஏற்படுத்தியத் தாக்கம்

பொருளாதாரப் பெருமந்தம் இந்திய வேளாண்மைக்கும் உள்நாட்டு உற்பத்தித் தொழில்களுக்கும் மரணஅடியைக் கொடுத்தது. எடுத்துக்காட்டாக வேளாண் உற்பத்திப் பொருள்களின் விலை பாதியாகக் குறைந்தது.



10th_History_Unit_2_TM.indd 23 11-04-2020 11:31:44

ஆனால் விவசாயி, நிலத்திற்குக் கொடுக்க வேண்டிய குத்தகைத் தொகையில் மாற்றமேதுமில்லை. விவசாய விளைபொருள்களின் விலையைப் பொறுத்தமட்டிலும் அரசுக்கு விவசாயிகள் செலுத்த வேண்டிய பணம் இரண்டு மடங்காகிற்று. விலைவாசியில் ஏற்பட்ட மிகப்பெரும் வீழ்ச்சி இந்திய தேசியவாதிகளை உள்நாட்டுப் பொருளாதாரத்தைப் பாதுகாக்கும் கோரிக்கையை வைக்கத் தூண்டியது. 1930களில் இந்திய தேசிய காங்கிரஸ் ஒரு போராடும் குணம் மிக்க மாபெரும் மக்கள் இயக்கமாக எழுச்சி பெற்றது.

### 1935ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டம்

ஆங்கிலேயர்களுக்கு இந்திய தேசியவாதிகளைச் சமாதானம் செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதன் வெளிப்பாடே 1935 இந்திய அரசுச் சட்டம். இச்சட்டம் உள்ளாட்சி அரசு நிறுவனங்களுக்கு அதிக அதிகாரம் வழங்கியதோடு நேரடித் தேர்தலையும் அறிமுகம் செய்தது. இச்சட்டத்தின் அடிப்படையில் 1937ஆம் ஆண்டு நடத்தப்பட்ட தேர்தல்களில் பெரும்பாலான மாகாணங்களில் அகில இந்திய தேசிய காங்கிரஸ் அதிர்வை ஏற்படுத்தும் வெற்றியைப் பெற்றது. இருந்தபோதிலும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட காங்கிரஸ் அமைச்சரவைகளை கலந்தாலோசிக்காமல் ஆங்கில அரசு இந்தியாவை இரண்டாம் உலகப்போரில் ஈடுபடுத்தியதால் காங்கிரஸ் அமைச்சரவை ராஜினாமா செய்யும் கட்டாயத்திற்கு உள்ளாக்கப்பட்டது.

## 2.4 ஆப்பிரிக்காவில் காலனிய எதிர்ப்பியக்கங்கள்

### ஆப்பிரிக்காவில் குடியேற்றங்கள்

ஆப்பிரிக்காவின் கடற்கரைப்பகுதிகளில் பதினாறாம் நூற்றாண்டில் இடஆய்வு மேற்கொள்ளப்பட்டு ஒருசில ஐரோப்பியக் குடியேற்றங்களும் உருவாயின. ஆனால் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதி கால் நூற்றாண்டு வரையிலும் ஆப்பிரிக்காவின் உட்பகுதிகள் வெளியுலகத்துக்குத் தெரியாமலேயே இருந்தது. 1875க்குப் பின்னர் ஐரோப்பியர்களின் காலனிகள் இங்கு உருவாயின. 1884–1885 ஆண்டுகளில் நடைபெற்ற பெர்லின் காலனிய மாநாட்டில் காலனியாதிக்க சக்திகள் ஆப்பிரிக்காவைத் தங்கள் செல்வாக்கு மண்டலங்களாகப் பிரித்துக்கொள்ளலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது. ஆனால் ஆங்கிலேயருக்கும் தென்னாப்பிரிக்க போயர்களுக்கும் இடையே நடைபெற்றப் போர் இத்தீர்மானத்திற்கு எதிரான செயலாகும்.

### போயர் போர்கள்

இங்கிலாந்தின் காலனிகளான நேட்டால், கேப்காலனி ஆகிய இரண்டிற்கும் சுதந்திர போயர் நாடுகளான டிரான்ஸ்வால் மற்றும் ஆரஞ்சு சுதந்திரஅரசு ஆகியவற்றுக்கிடையே நீண்ட காலமாக நட்புறவு நிலவவில்லை. 1886இல் டிரான்ஸ்வால் பகுதியில் தங்கம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து பெரும் எண்ணிக்கையில் ஆங்கிலேயச் சுரங்கத்தொழில் சார்ந்தோர் ஜோகன்னெஸ்பர்க்கிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் குடியேறினர். இவர்களை வெறுத்த போயர்கள் இவர்களை யுட்லேண்டர்ஸ் (Uitlanders–அயலவர்) என்றே குறிப்பிட்டனர். குடியேறியவர் மீது அதிகவரிகளை விதித்த போயர்கள், அவர்களுக்கு அரசியல் உரிமைகளையும் மறுத்தனர். யுட்லேண்டர்ஸின் அரசியல்உரிமைகள் குறித்த பேச்சுவார்த்தைகளில் உடன்பாடுகளேதும் ஏற்படவில்லை. எனவே தென்னாப்பிரிக்காவில் யார் அதிகாரம் மிகுந்தவர்கள்? போயர்களா? அல்லது ஆங்கிலேயர்களா? எனும் கேள்வியெழுந்தது. ஆங்கிலேயர்களால் தாக்கப்படுவோம் என்ற அச்சத்தில் போயர்கள் ஆயுதம் தரித்தனர். ஆங்கிலேயர்களைத் தாக்குவதெனவும் முடிவு செய்தனர்.

1899இல் தொடங்கிய போயர் போர்கள் 1902 வரை மூன்றாண்டுகள் தொடர்ந்தன. போரின் தொடக்கத்தில் போயர்கள் வெற்றிபெற்றனர். ஆனால் 1900இல் முதற்பாதியில் புதிதாக தருவிக்கப்பட்ட ஆங்கிலப்படைகளால் போயர்கள் தோற்கடிக்கப்பட்டு பிரிட்டோரியா கைப்பற்றப்பட்டது. ஆங்கிலேயர் போர் முடிந்துவிட்டது எனக்கருதினர். ஆனால் போயர்கள் கொரில்லாப்போரைக் கைக்கொண்டனர். இது இரண்டு ஆண்டுகளுக்கு நீடித்தது. இதற்கு பதிலடி கொடுக்கும் முகமாக ஆங்கிலேயர் வயல்களையும் பயிர்களையும் நாசம் செய்தனர். போயர் பெண்களையும்



போயர் போர்


www.tntextbooks.in

குழந்தைகளையும் பாசறைகளில் சிறைவைத்தனர். உணவு, மருத்துவப் பற்றாக்குறையின் காரணமாகவும் சுகாதார வசதிகளின்மையாலும் 26,000 போயர் மக்கள் மாண்டனர். இரண்டு போயர் நாடுகளையும் ஆங்கிலேயர் இணைத்துக்கொண்டனர். ஆனால் நாளடைவில் சுயாட்சி வழங்கப்படுமென போயர்களுக்கு வாக்குறுதி வழங்கப்பட்டது. 1907இல் டிரான்ஸ்வால், ஆரஞ்சு சுதந்திர அரசு ஆகிய இருநாடுகளுக்கும் முழுமையான பொறுப்பாட்சி வழங்கப்பட்டது. பின்னர் இந்நான்கும் ஓர் ஒன்றியமாக உருவானது. மேலும் 1909இல் இங்கிலாந்துப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தென்னாப்பிரிக்கச் சட்டம் கேப் டவுனில் ஒன்றியப் பாராளுமன்றத்தை அமைத்துக் கொடுத்தது. 1910ஆம் ஆண்டு தென்னாப்பிரிக்க ஒன்றியம் (Union of South Africa) உதயமானது.

தென்னாப்பிரிக்காவில் குடியேறிய டச்சுக் குடியேறிகளின் வம்சாவளியினரே ஆப்பிரிக்கநேர்கள் என்றும் அழைக்கப்பட்ட போயர்கள் ஆவர். இவர்களது மொழி ஆப்பிரிக்கான்ஸ்.

### தென்னாப்பிரிக்காவில் தேசிய அரசியல்

தென்னாப்பிரிக்காவில் இருமுக்கிய அரசியல்கட்சிகள் செயல்பட்டன. அவை பெரும்பாலும் ஆங்கிலேயர்களைக் கொண்ட யூனியனிஸ்ட் கட்சி மற்றும் ஆப்பிரிக்க நேர்கள் என்றழைக்கப்பட்ட போயர்களைப் பெரும்பான்மையாகக் கொண்டிருந்த தென்ஆப்பிரிக்கக் கட்சி. முதல் பிரதமமந்திரியான போதா, தென்ஆப்பிரிக்கக் கட்சியைச் சேர்ந்தவர் ஆங்கிலேயருடன் ஒத்துழைத்து ஆட்சியை நடத்தினார். ஆனால் தென்னாப்பிரிக்கக் கட்சியைச் சேர்ந்த போராடும் குணமிக்க ஒருபிரிவினர் ஹெர்சாக் என்பவரின் தலைமையின் கீழ் தேசியக்கட்சி எனும் கட்சியைத் தொடங்கினர். 1920ஆம் ஆண்டுத் தேர்தலில் தேசியக் கட்சி நாற்பத்து நான்கு இடங்களைக் கைப்பற்றியது. தென்னாப்பிரிக்கக் கட்சி ஸ்மட்ஸ் என்பாரின் தலைமையில் நாற்பத்தொன்று இடங்களில் வெற்றி பெற்றது. இத்தருவாயில் ஆங்கிலேயர் அதிகமிருந்த யூனியனிஸ்ட் கட்சி தென்னாப்பிரிக்கக் கட்சியுடன் இணைந்தது. இதனால் போர்க்குணம் கொண்ட ஆப்பிரிக்கநேர்களின் கட்டுப்பாட்டிலிருந்த தேசியக்கட்சியைக் காட்டிலும் ஸ்மட்ஸ் பெரும்பான்மை பெற்றார்.



**ஸ்மட்ஸ்**

**தென்னாப்பிரிக்காவில் இனஒதுக்கல்:**

இனஒதுக்கல் என்பதன் பொருள் தனிமைப்படுத்துதல் அல்லது ஒதுக்கிவைத்தல் என்பதாகும். இது 1947இல் தேசியவாதக் கட்சியின் கொள்கையாயிற்று. 1950 முதல் வரிசையாகப் பல சட்டங்கள் நடைமுறைக்கு வந்தன. ஒட்டுமொத்த நாடும் பல்வேறு இடங்களுக்கான தனித்தனிப் பகுதிகளாக பிரிக்கப்பட்டன. வெள்ளை இனத்தவருக்கும் வெள்ளையரல்லாத இனத்தவருக்கும் இடையில் திருமணங்கள் தடைசெய்யப்பட்டன. ஏறத்தாழ அனைத்துப் பள்ளிகளும் அரசின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்டன. இதன்மூலம் வெள்ளையருக்கு வழங்கப்படும் கல்வியில் இருந்து மாறுபட்ட கல்வியை ஏனைய ஆப்பிரிக்கர்களுக்கும் நடைமுறைப்படுத்தப்பட்டது. பல்கலைக்கழகக் கல்வியும் பிரித்து வைக்கப்பட்டது. தென்னாப்பிரிக்காவில் வெள்ளை கறுப்பின மக்களுக்கிடையிலான அரசியல் சமத்துவம் என்பது மக்கள் தொகையில் மூன்றில் இரண்டு பங்காக இருக்கும் கறுப்பின மக்களின் ஆட்சியைக் குறிக்கும் உண்மையின் அடிப்படையிலேயே இனஒதுக்கல் உருவானது. நெல்சன் மண்டேலா அரசியல் வானில் பிரகாசிக்கத் தொடங்கிப் பொதுமக்களின் பேராதரவைப் பெற்றபோது ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சித் தடைசெய்யப்பட்டு நெல்சன் மண்டேலா சிறை வைக்கப்பட்டார். உலக அளவிலான எதிர்ப்பலைகள் தென் ஆப்பிரிக்காவில் இனவாத ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவர உதவியது. 1990இல் ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் மீதான தடை விலக்கிக் கொள்ளப்பட்டு மண்டேலா 27 ஆண்டுகளுக்குப் பின் விடுதலை செய்யப்பட்டார். இதனைத் தொடர்ந்து நடைபெற்ற தேர்தலில் ஆப்பிரிக்க மக்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது. தேர்தலில் ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் வெற்றிபெற்று மண்டேலா தென்னாப்பிரிக்காவின் முதல் கறுப்பினக் குடியரசுத் தலைவரானார். இனஒதுக்கல் கொள்கை ஒரு முடிவுக்கு வந்தாலும் ஆப்பிரிக்காவின் பொருளாதார மண்டல முழு ஆதிக்கமும் வெள்ளை இனத்தவரிடமே உள்ளது.



**நெல்சன் மண்டேலா**

DLL7KK



10th_History_Unit_2_TM.indd 25 11-04-2020 11:31:44

www.tntextbooks.in

### கறுப்பின மக்களுக்கு எதிரான இனக்கொள்கை

ஆப்பிரிக்கநேர்கள் கறுப்பின மக்களுக்கும் சிறுபான்மை இந்தியர்களுக்கும் எதிராக கடுமையான இனக்கொள்கையைப் பின்பற்றினர். கறுப்பின மக்களின் குடியிருப்புகளை நகரங்களின் சில குறிப்பிட்ட பகுதிகளுக்குள்ளாக கட்டுப்படுத்துவதற்காக 1923இல் ஒரு சட்டம் இயற்றப்பட்டது. ஏற்கனவே 1913இல் இயற்றப்பட்ட சட்டம் வெள்ளை மற்றும் கறுப்பின விவசாயிகளைப் பிரித்து வைத்தது. இதனால் நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் கறுப்பின மக்களால் நிலங்களை வாங்குவது முடியாமலேயே போனது. 1924ஆம் ஆண்டுத் தேர்தலில் வெள்ளையினச் சுரங்கத் தொழிலாளர்களை அதிகம் கொண்ட தொழிலாளர் இயக்கத்தின் ஆதரவுடன் தேசியக்கட்சி வெற்றி பெற்றது. 1924இல் இயற்றப்பட்ட சட்டம் கறுப்பின மக்களை வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவதிலிருந்தும் தொழிற்சங்கத்தில் சேருவதில் இருந்தும் தடுத்தது. மாநிலத்தில் கறுப்பின மக்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டது. இவ்வாறு மண்ணின் மைந்தர்களான கறுப்பினமக்கள் அனைத்து உரிமைகளும் மறுக்கப்பட்டு அவர்கள் அரசியல், பொருளாதாரம், சமூகம் ஆகிய அனைத்துத் தளங்களிலும் துன்புற்றனர்.

## 2.5 தென் அமெரிக்காவில் அரசியல் வளர்ச்சிப் போக்குகள்

### மாயர்களும் அஸ்டெக்குகளும்

ஐரோப்பியர்கள் அமெரிக்காவைக் கண்டுபிடிப்பதற்கு முன்னர் மத்திய அமெரிக்காவில் மெக்சிகோ, தென் அமெரிக்காவில் பெரு ஆகிய பகுதிகளில் மூன்று நாகரிகங்களின் மையங்கள் இருந்துள்ளன. மாயா, இன்கா, அஸ்டெக் நாகரிகங்கள் எனப்படும் இவை மிகவும் முன்னேறிய நாகரிகங்களாக இருந்துள்ளன. இந்நாகரிகங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் பலநாடுகள் இருந்தன. சிறந்த நிர்வாகக் கட்டமைப்புடன் வலிமைமிக்க அரசாங்கங்களை அவை கொண்டிருந்தன. 11ஆம் நூற்றாண்டில் பெரிய நகரங்கள் இணைந்து மாயாபன் எனும் அமைப்பாக உருவானது (அமெரிக்க மண்ணின் மைந்தர்களின் மாயா நாகரிகமையம்). இவ்வமைப்பு நூற்றுக்கும் மேற்பட்ட ஆண்டுகள் செயல்பட்டது. பன்னிரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் மாயாபன் அழிக்கப்பட்டாலும் ஏனையநகரங்கள் தொடர்ந்து இருந்தன. பதினான்காம் நூற்றாண்டில் மெக்சிகோவிலிருந்து வந்த அஸ்டெக்குகள் மாயா நாட்டைக் கைப்பற்றி டெனோச்டிட்லான் எனும் தலைநகரை நிறுவினர். ஏறத்தாழ இருநூறு ஆண்டுகள் அஸ்டெக்குகள் தங்கள் பேரரசை ஆட்சி செய்தனர்.

### ஐரோப்பியக் காலனியாதிக்கமும் அதன் தாக்கமும்

பதினாறாம் நூற்றாண்டில் (1519 தருவாயில்) அஸ்டெக்குகள் தங்கள் அதிகாரத்தின் உச்சத்தில் இருந்தபோது ஹெர்னன் கோர்டஸ் எனும் ஸ்பானியரின் தலைமையில் வந்த விரல்விட்டு எண்ணக்கூடிய துணிச்சல்மிக்க வீரர்களின் முன்னர் மொத்தப் பேரரசும் நிலைகுலைந்தது. கோர்டஸின் படையெடுப்புடன் ஒட்டுமொத்த மெக்சிகன் நாகரிகமும் சீர்குலைந்தது. அத்துடன் பெருமைவாய்ந்த நகரமான டெனோச்டிட்லானும் அந்நாகரிகத்திற்கான சுவடுகளேதுமின்றி அழிந்துபோனது. இது உலகின் மிக மோசமான இனப்படுகொலைகளுள் ஒன்றாகும். மற்றொரு புகழ்பெற்ற படையெடுப்பாளர் பிரான்சிஸ்கோ பிசாரோ எனும் ஸ்பானியராவார். இவர் இன்கா பேரரசின் மீது படையெடுத்துக் கைப்பற்றினார். இன்கா பெயரிலேயே சில ஆண்டுகள் ஆட்சிபுரிய முயன்ற பிசாரோ அளவிடற்கரிய செல்வங்களைக் கைப்பற்றினார். பின்னர் ஸ்பானியர்கள் பெருவை தங்கள் பகுதிகளில் ஒன்றாய் மாற்றினர்.


பிசாரோ

பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அரசியல், சுதந்திரம், நிர்வாக சுயாட்சி, பொருளாதாரத்தில் சுயாதிபத்திய உரிமை (சுயமாக முடிவெடுக்கும் உரிமை) ஆகிய கோரிக்கைகள் லத்தீன் அமெரிக்கா முழுவதும் பரவியது. ஹைதி நாட்டின் அடிமைகள், காலனியமக்கள் ஆகியோர்க்கும் ஆங்கிலேய, பிரெஞ்சு காலனி ஆதிக்க சக்திகளின் படைகளுக்குமிடையே கொடூரமான போர்கள் நடைபெற்றன. 1791–1804 காலப்பகுதிகளில் தௌசெயிண்ட் லூவெர்தூரி என்பவரின் தலைமையில் நடைபெற்ற இப்போராட்டங்கள் பிரான்சின் காலனியாதிக்கக் கட்டுப்பாட்டிலிருந்து ஹைதி மக்கள் விடுதலை பெறுவதில் முடிந்தது. இவ்வாறு அடிமை முறையையும் பிரான்சின் காலனியர் கட்டுப்பாடுகளையும் தூக்கியெறிந்த முதல் கரீபிய நாடாக ஹைதி உருவெடுத்தது.

### ஸ்பெயின், போர்த்துகல் மீதான நெப்போலியப் படையெடுப்பின் தாக்கம்

அமெரிக்க, பிரெஞ்சுப் புரட்சிகள் லத்தீன் அமெரிக்கர்களுக்கு ஊக்கமளித்தன. 1808இல் நெப்போலியன் ஸ்பெயின், போர்த்துகல் ஆகிய நாடுகளின்மீது படையெடுத்தது தென்அமெரிக்காவில் விடுதலைப்போராட்டச் செயல்பாடுகளை விரைவுபடுத்தின. விடுதலை வீரர்,



10th_History_Unit_2_TM.indd 26 11-04-2020 11:31:45



சைமன் பொலிவர்



முதலாம் பெட்ரோ

'தளை தகர்ப்பாளர்' என அறியப்பட்டிருந்த சைமன் பொலிவர் என்பவரின் தலைமையில் ஏற்கனவே விடுதலை உணர்வு வளர்ந்து கொண்டிருந்தது. போர்த்துகலை நெப்போலியன் கைப்பற்றியபோது போர்த்துகீசிய அரச குடும்பம் லிஸ்பன் நகரைவிட்டு தப்பியோடியதால் போர்த்துகலின் காலனியாக இருந்த பிரேசில் சுதந்திர நாடானது. போர்த்துகல் அரியணைக்கான தனது உரிமையைத்துறந்த முதலாம் பெட்ரோ, பிரேசிலின் சுதந்திரத்தைப் பிரகடனம் செய்தார்.

### மன்றோவின் கோட்பாடு

1815இல் நெப்போலியன் வீழ்ச்சியுற்றபோது விடுதலைப் போராட்டங்கள் மேலும் தீவிரமடைந்தது. ஆனால் இச்சமயத்தில் அமெரிக்கக் குடியரசுத்தலைவர் மன்றோ தனது புகழ்பெற்ற மன்றோ கோட்பாட்டை முன்வைத்தார். அமெரிக்காவின் எந்த பகுதியிலும் அது வடக்கோ தெற்கோ ஐரோப்பியர்கள் தலையிட்டால் அது அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கெதிரான போராகக் கருதப்படும் என அறிவித்தார். இப்பயமுறுத்தல் ஐரோப்பியர்களை அச்சங்கொள்ள வைத்து அவர்களை தென்அமெரிக்க விவகாரங்களிலிருந்து விலகியிருக்கச் செய்தது. 1830வாக்கில் ஒட்டு மொத்த தென்அமெரிக்காவும் ஐரோப்பிய மேலாதிக்கத்திலிருந்து விடுதலை பெற்றன. இவ்வாறு ஐரோப்பிய நாடுகளிடமிருந்து அமெரிக்கா, தென்அமெரிக்கக் குடியரசுகளைக் காப்பாற்றியது. ஆனால் காப்பாற்றிய அமெரிக்காவிடமிருந்து, தென் அமெரிக்காவைக் காப்பாற்ற யாருமில்லை.

### லத்தீன் அமெரிக்க தேசியவாதிகளிடையே ஒற்றுமையின்மை

லத்தீன் அமெரிக்க தேசியவாதிகள் ஸ்பெயின், போர்த்துகல் ஆகியவற்றுக்கு எதிராக மட்டும் போர் செய்யவில்லை. தங்களுக்கிடையேயும் மோதிக்கொண்டனர். 1821இல் மத்திய அமெரிக்கா மெக்சிகோவிடம் இருந்து பிரிந்தது. பின்னர் (1839) மத்திய அமெரிக்காவே ஐந்து குடியரசுகளாகப் (கோஸ்டாரிக்கா, எல் சால்வடார், கவுதமாலா, ஹோண்டுராஸ், நிகராகுவா) பிரிந்தது. 1828இல் உருகுவே பிரேசிலிடமிருந்துப் பிரிந்தது. 1830இல் பொலிவரால் உருவாக்கப்பட்ட கிரான் கொலம்பியாவிலிருந்து வெனிசூலாவும், ஈக்வடாரும் பிரிந்தன.




லத்தீன் அமெரிக்கா



10th_History_Unit_2_TM.indd 27 11-04-2020 11:31:45

### அமெரிக்காவின் ஏகாதிபத்திய ஆர்வம்

இருபதாம் நூற்றாண்டு தொடக்கத்தில், 1898இல் ஸ்பானியர்களைத் தோற்கடித்த அமெரிக்கா கியூபாவையும் போர்ட்டோ ரிக்கோவையும் கைப்பற்றிக்கொண்டது.1898முதல்1902வரைகியூபா அமெரிக்காவின் இராணுவ ஆட்சியின் கீழிருந்தது. இறுதியில் அமெரிக்கர்கள் கியூபாவை விட்டு வெளியேறிய போது கியூபாவில் கப்பற்படைத்தளம் ஒன்றை மட்டும் தங்கள் வசம் வைத்துக்கொண்டனர். 1904இல் ரூஸ்வெல்ட், மன்றோ கோட்பாட்டில் ஒரு திருத்தத்தைக் கொண்டுவந்தார். இத்திருத்தம் ஒழுங்கைப் பராமரிப்பதற்காக இலத்தீன் அமெரிக்கா விவகாரங்களில் தலையிட அமெரிக்காவிற்கு அனுமதி வழங்கும் வகையில் மேற்கொள்ளப்பட்டது. இத்திருத்தம் கொண்டு வரப்பட்ட பின்னர் அமெரிக்கா அரசியல்ரீதியாக மட்டுமல்லாமல் பொருளாதாரரீதியாகவும் மேம்பட்ட செல்வாக்குப் பெற்ற நாடானது.

### தென் அமெரிக்காவில் பெருமந்தம்

பொருளாதாரப் பெருமந்தத்தால் உருவான சூழ்நிலையில் சிலரின் அல்லது சில குடும்பங்களின் ஆட்சியால் பல உறுதியான குழுக்களின் எதிர்பார்ப்புகளை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. மெக்சிகோவில் அதிருப்திக் குழுக்கள், நடுத்தரவர்க்க அறிவுஜீவிகள், வேளாண் சமூகங்கள் ஆகியோரை உள்ளடக்கிய வன்முறை சார்ந்த சமூக எதிர்ப்புகள் அரங்கேறின. வேறு இடங்களில் தேர்தல் சீர்திருத்தங்கள் புதிய சமூக குழுக்கள் வாக்குப்பெட்டிகள் வழியாக அரசியல் அதிகாரத்தைப் பெற உதவிசெய்தன.

இலத்தீன் அமெரிக்கா, அமெரிக்காவின் தலையீட்டை எதிர்த்ததோடு, டாலர் ஏகாதிபத்தியத்தை விரும்பவில்லை. 1933க்குப் பின்னர் அமெரிக்காவின் கொள்கையில் மாற்றத்தை ஏற்படுத்தியது. பிராங்க்ளின் ரூஸ்வெல்ட் தன்னுடைய 'நல்ல அண்டை வீட்டுக்காரன்' கொள்கையில், அமெரிக்கா வேறு எந்த நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களிலும் தலையிடாது என்று கூறியதோடு லத்தீன் அமெரிக்க நாடுகளுக்குப் பொருளாதார தொழில்நுட்ப உதவிகளைச் செய்யவும் ஒத்துக்கொண்டார்.


**தியோடர் ரூஸ்வெல்ட்**

டாலர் ஏகாதிபத்தியம்: இச்சொல் தொலைதூர நாடுகளுக்குப் பொருளாதார உதவிசெய்வதன் மூலம் அவற்றின் மீது ஆதிக்கம் செலுத்தவும், தக்கவைத்துக் கொள்ளவும், அமெரிக்கா பின்பற்றியக் கொள்கையை விளக்குவதற்குப் பயன்படுத்தப்படுவதாகும்.

### பாடச்சுருக்கம்

- முதல் உலகப்போர் முடிந்ததிலிருந்து காலனிய எதிர்ப்புப் போராட்டங்கள் தீவிரமடையத் தொடங்கின.
- தோல்வியடைந்த நாடுகளுக்கு எதிராகப் பாரிஸ் அமைதி மாநாட்டில் எடுக்கப்பட்ட கடுமையான முடிவுகள், நடைபெற்றுக்கொண்டிருந்த ஆட்சிகளை நிலைகுலையச் செய்ததோடு அந்நாடுகளில் குறிப்பாக இத்தாலியிலும், ஜெர்மனியிலும் பாசிசசக்திகள் எழுச்சி பெறுவதற்கான சூழலையும் உருவாக்கின.
- 1929இல் அமெரிக்காவில் தோன்றியப் பொருளாதாரப் பெருமந்தம், பின்னர் உலகத்தின் அனைத்து முதலாளித்துவ நாடுகளையும் பாதித்து அரசியலிலும் சமூகத்திலும் மாற்றங்களை ஏற்படுத்தியது.
- இந்தியாவில் இரு போர்களுக்கு இடையிலான காலப்பகுதியில் காலனி நீக்கச் செயல்பாடு.
- மன்றோ கொள்கை லத்தீன் அமெரிக்காவில் ஐரோப்பிய சக்திகள் காலனிகள் ஏற்படுத்துவதைத் தடுத்து அதன்மூலம் அவை முன்னதாகவே இறையாண்மைத் தகுதியைப் பெறுவதை உறுதிப்படுத்தியது. பின்னர் இதையே லத்தின் அமெரிக்கர்கள் தங்கள் நாட்டு விவகாரங்களில் தலையிடவும் செல்வாதாரங்களைச் சுரண்டவும் அமெரிக்கா போட்ட வேடம் எனக் கருதினர்.



10th_History_Unit_2_TM.indd 28 11-04-2020 11:31:45

## கலைச்சொற்கள்

| | | |
|---|---|---|
| ஒற்றுமை உணர்வு, பொதுக் காரியத்திற்கான ஆதரவு | **Solidarity** | a bond of unity, support for a common cause |
| விலைவீழ்ச்சி, சரிவு | **Slump** | a sudden severe or prolonged fall in the price |
| திவால், கடன் தீர்க்க முடியா நிலை | **Bankruptcy** | insolvency, financial ruin |
| பணமதிப்புக் குறைதல் | **Devaluation** | a decrease in the value of a country's currency |
| மிரட்டல், அச்சுறுத்தல் | **Intimidation** | threat, the act of making fearful |
| வலுப்படுத்தினர் | **Bolstered** | strengthened |
| மனத்தளர்ச்சி அடைதல், நம்பிக்கை இழத்தல் | **Demoralized** | having lost confidence or hope, disheartened |
| கெட்டிக்காரத்தனமாய் அல்லது சூழ்ச்சியாய் கையாளு | **Manipulate** | control or influence a person or situation cleverly, unfairly to achieve a specific purpose |
| செல்லாதாக்கல், ரத்துசெய்தல் | **Annulling** | declaring invalid or null and void |

## பயிற்சி

KEPFYI

### I சரியான விடையைத் தேர்வு செய்யவும்

1. இத்தாலி யாருடன் லேட்டரன் உடன்படிக்கையைச் செய்து கொண்டது?
   அ) ஜெர்மனி ஆ) ரஷ்யா
   இ) போப் ஈ) ஸ்பெயின்

2. யாருடைய ஆக்கிரமிப்போ மெக்சிகோ நாகரிகம் நிலைகுலைந்து போயிற்று?
   அ) ஹெர்மன் கோர்ட்ஸ்
   ஆ) பிரான்சிஸ்கோ பிசாரோ
   இ) தௌசெயின்ட் லாவெர்ட்யூர்
   ஈ) முதலாம் பெட்ரோ

3. பெரு நாட்டை யார் தங்களுடைய பகுதிகளில் ஒன்றாக ஆக்கிக்கொண்டனர்?
   அ) ஆங்கிலேயர் ஆ) ஸ்பானியர்
   இ) ரஷ்யர் ஈ) பிரெஞ்சுக்காரர்

4. லத்தீன் அமெரிக்காவுடன் 'அண்டை நாட்டுடன் நட்புறவு' எனும் கொள்கையைக் கடைப்பிடித்த அமெரிக்கக் குடியரசுத்தலைவர் யார்?
   அ) ரூஸ்வெல்ட் ஆ) ட்ரூமன்
   இ) உட்ரோவில்சன் ஈ) ஐசனோவர்

5. உலகத்தின் எந்தப்பகுதி டாலர் அரசியல் ஏகாதிபத்தியத்தை விரும்பவில்லை?
   அ) ஐரோப்பா ஆ) லத்தீன் அமெரிக்கா
   இ) இந்தியா ஈ) சீனா

### II கோடிட்ட இடங்களை நிரப்புக

1. சமூக ஜனநாயகக் கட்சியை நிறுவியவர் ____________.
2. நாசிச கட்சியின் பிரச்சாரங்களுக்குத் தலைமையேற்றவர் ____________.
3. வியட்நாம் தேசியவாதிகள் கட்சி ____________ இல் நிறுவப்பட்டது.
4. நாசிச ஜெர்மனியின் ரகசியக் காவல்படை ____________ என அழைக்கப்பட்டது.
5. தென்னாப்பிரிக்க ஒன்றியம் ____________ ஆம் ஆண்டு மே மாதம் உருவானது.
6. ஆப்ரிக்க தேசியக் காங்கிரஸ் தலைவரான நெல்சன் மண்டேலா ____________ ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்.
7. போயர்கள் ____________ என்றும் அழைக்கப்பட்டனர்.

### III சரியான கூற்றைத் தேர்வு செய்க

1. i) முதல் உலகப்போரின்போது ஆஸ்திரியாவை தெற்கு முனைப் போரில் தொடர்ந்து முனைப்புடன் ஈடுபட வைப்பதே இத்தாலியின் முக்கியக்கடமையாக இருந்தது.
   ii) இத்தாலியைக் காட்டிலும் நீண்ட காலங்கழித்தே ஜெர்மனி பாசிசத்தைக் கைக்கொண்டது.
   iii) அமெரிக்காவில் மிகப்பெரும் பங்குச் சந்தை வீழ்ச்சி 1929ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 24ஆம் நாளில் ஏற்பட்டது.
   iv) ஆப்பிரிக்க தேசிய காங்கிரசின் மீதானத் தடை 1966இல் விலக்கிக் கொள்ளப்பட்டது.



10th_History_Unit_2_TM.indd 29 11-04-2020 11:31:45

அ) i), ii) ஆகியவை சரி
ஆ) iii) சரி
இ) iii), iv) ஆகியவை சரி
ஈ) i), ii), iii) ஆகியவை சரி

2. **கூற்று:** தற்காப்புப் பொருளாதாரக் கொள்கையை முன்னிறுத்தியப் பொருளாதார தேசியம் எனும் புதிய அலையால் உலக வணிகம் பாதிக்கப்பட்டது.
**காரணம்:** அமெரிக்கா, கடன்பட்ட நாடுகளுக்குப் பொருளாதார உதவி செய்ய விருப்பமில்லாமல் இருந்ததனால் இந்நிலை உண்டானது.
அ) கூற்று, காரணம் இரண்டுமே சரி
ஆ) கூற்று சரி, ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல
இ) கூற்று, காரணம் ஆகிய இரண்டுமே தவறு
ஈ) காரணம் சரி ஆனால் கூற்றுக்குப் பொருந்தவில்லை.

3. **கூற்று:** 1884–85இல் நடைபெற்ற பெர்லின் காலனிய மாநாடு காலனியாதிக்க சக்திகள் ஆப்பரிக்காவைத் தங்களின் செல்வாக்கு மண்டலங்களாகப் பிரித்துக் கொள்ளலாம் எனத் தீர்மானித்தது.
**காரணம்:** ஆங்கிலேயருக்கும், போயர்களுக்கும் தென்னாப்பிரிக்காவில் நடைபெற்ற போர் இத்தீர்மானத்திற்கு எதிர்ப்பானதாகும்.
அ) கூற்று, காரணம் இரண்டுமே சரி
ஆ) கூற்று சரி ஆனால் காரணம் சரியான விளக்கமல்ல.
இ) கூற்று காரணம் ஆகிய இரண்டுமே தவறு
ஈ) கூற்று தவறு ஆனால் காரணம் கூற்றுடன் பொருந்தவில்லை.

## IV பொருத்துக

| | | |
|---|---|---|
| 1. டிரான்ஸ்வால் | – | ஜெர்மனி |
| 2. டோங்கிங் | – | ஹிட்லர் |
| 3. ஹின்டன்பர்க் | – | இத்தாலி |
| 4. மூன்றாம் ரெய்க் | – | தங்கம் |
| 5. மாட்டியோட்டி | – | கொரில்லா நடவடிக்கைகள் |

## V சுருக்கமாக விடையளிக்கவும்

1. இந்தோ–சீனாவில் நடைபெற்ற 'வெள்ளை பயங்கரம்' குறித்து நீங்கள் அறிந்ததென்ன?
2. ஒட்டாவா பொருளாதார உச்சி மாநாட்டின் முக்கியத்துவம் குறித்து விவாதிக்கவும்.
3. முசோலினியின் ரோமாபுரி நோக்கிய அணிவகுப்பின் விளைவுகள் யாவை?
4. 1884–85இல் நடைபெற்ற பெர்லின் காலனிய மாநாட்டின் சாரத்தைக் குறிப்பிடுக.
5. பொருளாதாரப் பெருமந்தம் இந்திய வேளாண்மையின் மீது எத்தகையத் தாக்கத்தை ஏற்படுத்தியது?
6. "டாலர் ஏகாதிபத்தியம்" – தெளிவுபட விளக்குக.

## VI விரிவான விடையளிக்கவும்

1. ஜெர்மனியில் ஹிட்லரின் எழுச்சிக்கு இட்டுச்சென்ற சூழ்நிலைகளைக் கண்டறியவும்.
2. உலகப் போர்களுக்கிடைப்பட்ட காலத்தில் (1919–39) இந்தியாவில் காலனிய நீக்கச் செயல்பாடுகள் எவ்வாறு நடைபெற்றன என்பதனைக் குறித்து வரிசையாக விவரிக்க முயற்சி செய்யவும்.
3. தென் ஆப்பிரிக்க தேசிய அரசியலின் எழுச்சி, வளர்ச்சி குறித்து விவரிக்கவும்.

## VII செயல்பாடுகள்

1. 1929ஆம் ஆண்டு அமெரிக்காவில் ஏற்பட்ட பங்குச்சந்தையின் வீழ்ச்சி எவ்வாறு அமெரிக்காவின் ஒவ்வொரு துறையையும் ஒவ்வொரு மக்கள் பிரிவினரையும் பாதித்தது என்பதைக் குறித்து ஒவ்வொரு மாணவரையும் ஒரு ஒப்படைப்பு எழுதக் கூறலாம்.
2. வியட்நாம் போர் குறித்து ஒரு குழுச் செயல்பாட்டு முறை விரும்பத்தக்கதாகும். வியட்நாம் மீது அமெரிக்காவின் வான்வெளித் தாக்குதல்கள் வியட்நாம் மக்களின் வீரம் செறிந்த எதிர்த்தாக்குதல் ஆகியவற்றைச் சித்தரிக்கும் படங்களைச் சேகரித்து ஒரு செருகேடு (album) தயார் செய்யலாம்.

## மேற்கோள் நூல்கள்


1. Richard Overy (ed.) *Complete History of the World* (London: HarperCollins, 2007)
2. Chris Harman, *A People's History of the World* (New Delhi: Orient Longman, 2007).
3. R.D. Cornwell, *World History in the Twentieth Century* (London: Longman, 1972).
4. E.H. Gombrich, *A Little History of the World* (London: Yale University Press, 2008).
5. Jawaharlal Nehru, *Glimpses of World History* (New Delhi: Penguin Books, 2004).

# அலகு – 3

# இரண்டாம் உலகப்போர்



## கற்றலின் நோக்கங்கள்

**கீழ்க்காண்பனவற்றோடு அறிமுகமாதல்**

- முதல் உலப்போருக்குப் பிந்தைய அரசியல், பொருளாதார வளர்ச்சிகளை அறிமுகப்படுத்திக்கொள்ளுதல். அவையே இறுதியில் இரண்டாம் உலகப்போருக்கு இட்டுச்சென்றதை அறிந்துகொள்ளுதல்
- பொதுவாகப் போரின் போக்கைப் புரிந்துகொள்ளுதல். குறிப்பாகப் போரின் திருப்புமுனைகளாய் அமைந்த முக்கிய நிகழ்வுகளை அறிந்துகொள்ளுதல்
- இரண்டாம் உலகப் போரின் விளைவுகளை அறிந்துகொள்ளுதல்
- பேரழிவு (Holocaust) என்பதையும், நாசிச ஜெர்மனியில் யூதர்கள் பெரும் எண்ணிக்கையில் கொல்லப்பட்டதையும் புரிந்துகொள்ளுதல்
- இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் ஒரு புதிய பன்னாட்டு அமைப்பு முறையை உருவாக்குவதற்காக அமைக்கப்பட்ட பன்னாட்டு நிறுவனங்கள் குறித்த அறிவைப் பெறுதல்

3U3UZ1

## அறிமுகம்

இருபதாம் நூற்றாண்டின் முதல் பாதி இவ்வுலகை நிலைகுலையச் செய்து, பெரும்சேதங்களை ஏற்படுத்திய இரண்டு மாபெரும் போர்களைச் சந்தித்தது. முதல் உலகப்போர் 1914இல் தொடங்கி 1918வரையும் இரண்டாம் உலகப்போர் 1939இல் தொடங்கி 1945வரையும் நடைபெற்றது. உலகம் ஏற்கனவே பல போர்களைச் சந்தித்திருந்தாலும் இவ்விரு போர்கள் மட்டுமே உலகப்போர்கள் எனக் குறிப்பிடப்படுகின்றன. ஏனெனில் இவ்விரு போர்களிலும் மோதல்கள் நடைபெற்ற பகுதிகள் பரந்துவிரிந்ததாக இருந்தன. மேலும் இப்போர்களினால் உயிரிழந்த ஆயுதம் ஏந்திப் போரிட்டோர், பொதுமக்கள் ஆகியோரின் இறப்பு எண்ணிக்கை மிக அதிகமாக இருந்தது. மேலும் இவ்விரு போர்களும் ஐரோப்பிய, ஆசிய, ஆப்பிரிக்கக் கண்டங்களில் பல முனைகளில் நடைபெற்றன.

இவ்விரு போர்களிலும் பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா, அமெரிக்கா ஆகிய நேச, நட்பு நாடுகளின் கூட்டுப்படைகள் ஜெர்மனியின் தலைமையிலான மைய, அச்சு நாடுகளுக்கு எதிராகப் போரிட்டன. இரண்டாம் உலகப்போரில் ஜெர்மனியின் நட்பு நாடுகளாக இத்தாலி மற்றும் ஜப்பான் விளங்கின.

## 3.1 இரண்டாம் உலகப் போருக்கான காரணங்கள், போரின் போக்கு, விளைவுகள்

### (அ) காரணங்கள்

முதலாம் உலகப்போர், மாபெரும் போர் என்றும் அனைத்துப் போர்களையும் முடித்துவைக்கும் போர் எனவும் குறிப்பிடப்பட்டது. பகைநாடுகளில், குறிப்பாக நேச நாடுகள் மீண்டும் ஒரு நீண்ட மோதலுக்கான எண்ணத்தைக் கொண்டிருக்கவில்லை, இதுவே முதல் உலகப் போருக்குப் பின் இந்நாடுகளின் செயல்பாடுகளை இயக்கும் சக்தியாய்த் திகழ்ந்தது. எழுச்சி பெற்ற ஜெர்மனி மேற்கொண்ட ஆக்கிரமிப்பு இராணுவ நடவடிக்கைகளும், ஜப்பானின் விரைவான வளர்ச்சியுமே இரண்டாம் உலகப்போருக்கான உடனடி மற்றும் அடிப்படைக் காரணங்களாகும்.

### ஜெர்மனியும், வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையும் 1919

1919 ஜூனில் கையெழுத்தான வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையோடு முதல் உலகப்போர் முடிவுற்றது.



10th_History_Unit_3_TM.indd 31 11-04-2020 11:33:24

அதன் சரத்துக்களில் மூன்று அம்சங்கள் ஜெர்மனி மக்களிடையே பெரும் அதிருப்தியை ஏற்படுத்தின. (i) ஜெர்மனி தனது மேற்கு, வடக்கு, கிழக்கு ஆகிய எல்லைகளில் பல பகுதிகளை விட்டுத்தரக் கட்டாயப்படுத்தப்பட்டது. (ii) ஜெர்மனி ஆயுதக்குறைப்புக்கு உள்ளாக்கப்பட்டு மிகக் குறைந்த அளவிலான படைகளை மட்டுமே வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டது. (iii) போரினால் நேச நாடுகளுக்கு ஏற்பட்ட இராணுவ வீரர்கள் மற்றும் பொதுமக்களின் உயிர் இழப்பிற்காக ஜெர்மனி இழப்பீடு வழங்க வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது.

### பன்னாட்டுச் சங்கத்தின் தோல்வி

அமெரிக்க அதிபர் உட்ரோ வில்சனின் முயற்சியால் பன்னாட்டுச் சங்கம் உருவானது என்பதை பாடம் 1 ல் பார்த்தோம். இச்சங்கம் நாடுகளிடையே பிரச்சனை ஏற்படும்போது நடுவராக இருந்து பிரச்சனைகளைத் தீர்க்கும் என்றும் இராணுவ ஆக்கிரமிப்பை மேற்கொள்ளும் நாடுகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் எனவும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அமெரிக்கா இவ்வமைப்பில் உறுப்புநாடாகச் சேரவில்லை. ஏனெனில் போருக்குப்பின்னர் அமெரிக்காவின் பொதுவான மனோநிலை மரபான தனித்திருக்கும் கொள்கைக்கு ஆதரவாக இருந்தது. ஏனைய நேசநாடுகளும் தலையிடாக்கொள்கை மனநிலையில் உறுதியாக இருந்தன. இதன் விளைவாக பன்னாட்டுச் சங்கம் ஒரு பயனற்ற பன்னாட்டுச் சங்கமாக இருந்தது.

### முதல் உலகப்போருக்குப் பின் ஏற்பட்ட சிக்கலும், ஜெர்மனியும்

மேற்குறிப்பிட்டவாறு வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் முக்கியமான மூன்று சரத்துக்கள், குறிப்பாக போர் இழப்பீடு தொடர்பான சரத்து ஜெர்மனியில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தின. முதல் உலகப்போருக்குப் பின் பத்தாண்டுகளில் பலநாடுகள் எதிர்கொண்ட பிரச்சனைகள் இத்தாலி (முசோலினி), ஜெர்மனி (ஹிட்லர்), ஸ்பெயின் (பிராங்கோ) ஆகிய நாடுகளில் தீவிர வலதுசாரி சர்வாதிகார ஆட்சி எழுச்சி பெறுவதற்கு இட்டுச் சென்றன.

முதல் உலகப்போருக்குப் பின்னர் ஜெர்மனி பெருமளவிலான வேலையில்லாத் திண்டாட்டத்தையும் கடுமையான பணவீக்கத்தையும் அனுபவிக்க நேர்ந்தது. மேலும் அதனுடைய காகிதச் செலாவணி முழுமையாக மதிப்பிழந்தது. சாதாரண மக்கள் ரொட்டி வாங்குவதற்காக வண்டிநிறைய பணத்தை எடுத்துச்செல்வது போன்ற பல படங்கள் 1920களில் வெளியாயின. பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளுக்குப் பின்னர் ஜெர்மனி வழங்கவேண்டிய போர் இழப்பீட்டுத் தொகை குறைக்கப்பட்டாலும் மேற்சொல்லப்பட்ட துயரங்களுக்கு ஜெர்மனியின் மீது கட்டாயமாகச் சுமத்தப்பட்ட போர் இழப்பீடே காரணம் எனக் குற்றம் சாட்டப்பட்டது.

### அடால்ப் ஹிட்லரின் எழுச்சி

ஜெர்மனி பெருமளவு அவமானப் படுத்தப்பட்டதாக நிலவிய கருத்தைப் பயன்படுத்தி, தனது வல்லமை மிக்க சொற்பொழிவாற்றும் திறமையாலும் உணர்ச்சிமிக்கப் பேச்சுக்களாலும் ஜெர்மனியை அதன் இராணுவப் புகழ்மிக்க முந்தைய காலத்திற்கு மீண்டும் அழைத்துச் செல்வதாக அடால்ப் ஹிட்லர் மக்களைத் தன்பக்கம் ஈர்த்தார். தேசிய சமதர்மவாதிகள் கட்சியை நிறுவினர். இது நாசிக் கட்சி என்று அழைக்கப்பட்டது. இரண்டு அடிப்படைக் கருத்துகளை அடித்தளமாகக் கொண்டு ஹிட்லர் ஆதரவைத் திரட்டினார். ஒன்று ஜெர்மனியரே சுத்தமான ஆரிய 'இனத்தவர்' எனும் இனஉயர்வு மனப்பாங்கு மற்றொன்று மிக ஆழமான யூத வெறுப்பு. 1933இல் ஆட்சிக்கு வந்த அவர் 1945வரை ஜெர்மனியை ஆட்சி செய்தார்.

வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் சரத்துக்களுக்கு நேரெதிராக ஹிட்லர் ஜெர்மனியின் இராணுவத்தையும் ஆயுதங்களையும் அதிகரிக்க துவங்கினார். ஆயுதப் படைகளுக்கான ஆள்சேர்ப்பு, அரசாங்கத்தின் செலவில் நிறுவப்பட்ட, இராணுவத்திற்குத் தேவைப்படும் ஆயுதங்களையும் ஏனைய இயந்திரங்களையும் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் நிறுவப்படுதல் போன்றவற்றால் ஜெர்மனியின் பொருளாதாரம் புத்துயிர் பெற்றதோடு, வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்சனையும் தீர்த்து வைக்கப்பட்டது.

எழுச்சிமிக்க முசோலினியின் எத்தியோப்பியப் படையெடுப்பினால் இத்தாலியுடன் கொண்டிருந்த உறவினை பிரிட்டனும் பிரான்சும் முறித்துக்கொண்ட அதேவேளையில் ஜெர்மனியும் இத்தாலியும் நட்புகொண்டன. ஹிட்லர் படைநீக்கம் செய்யப்பட்ட மண்டலமாகக் கருதப்பட்ட ரைன்லாந்தின்மீது 1936இல் படையெடுத்தார். இத்தாலியும் ஜெர்மனியும் இணைந்து ரோம்–பெர்லின் உடன்படிக்கையை ஏற்படுத்தின. பின்னர் இதில் ஜப்பான் இணைந்தவுடன் ரோம்–பெர்லின்–டோக்கியோ அச்சு உடன்படிக்கை உருவானது. 1938இல் ஹிட்லர் ஆஸ்திரியா, செக்கோஸ்லோவாக்கியா ஆகிய நாடுகளைத் தாக்கிக் கைப்பற்றினார். செக்கோஸ்லோவாக்கியாவின் ஒரு பகுதியான சூடட்டன்லாந்தில் ஜெர்மன் மொழி பேசும் மக்கள் வாழ்ந்து வந்தனர். ஜெர்மன் மொழி பேசும் மக்கள் வாழ்கின்ற பகுதிகள் அனைத்தும் ஒரே நாடாக இணைக்கப்பட வேண்டும் என ஹிட்லர் உரிமை கோரினார்.



10th_History_Unit_3_TM.indd 32 11-04-2020 11:33:24


இரண்டாம் உலகப்போர்
அச்சு நாடுகளும், நேச நாடுகளும்
ஆர்க்டிக் கடல்
வ
மே
கி
தெ
ஐக்கிய மாநிலங்கள்
கனடா
சான் பிரான்சிஸ்கோ
ஐக்கிய மாநிலங்கள்
வட பசிபிக் கடல்
ஹவாய் தீவுகள்
வடக்கு அட்லாண்டிக் கடல்
இங்கிலாந்து
நார்வே
டென்மார்க்
போலந்து
மாஸ்கோ
நெதர்லாந்து
ஜெர்மனி
பெல்ஜியம்
ஹங்கேரி
பிரான்ஸ்
ருமேனியா
பல்கேரியா
இத்தாலி
கிரீஸ்
ரஷ்யா
சீனா
ஜப்பான்
பிரேசில்
தென் பசிபிக் கடல்
தெற்கு அட்லாண்டிக் கடல்
இந்திய பெருங்கடல்
ஆஸ்திரேலியா
நியூசிலாந்து
விளக்கப்படம்
அச்சு நாடுகள்
நேச நாடுகள்
தெற்கு கடல்
அண்டார்டிக் கடல்
அளவையில் இல்லை

### நேசநாடுகளும் தலையிடாக் கொள்கையும்

இதே சமயத்தில் இத்தாலியும் ஜப்பானும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டன. இத்தாலி 1935இல் எத்தியோப்பியா மீதும், 1939இல் அல்பேனியா மீதும் படையெடுத்தது. எத்தியோப்பியப் பேரரசர் ஹெய்லி செலாஸ்ஸி பன்னாட்டுச் சங்கத்திடம் முறையிட்டார். ஆனால் அவருக்கு எவ்வித உதவியும் கிடைக்கவில்லை. கிழக்குப் பகுதிகளில் ஜப்பான் இராணுவ விரிவாக்க நடவடிக்கைகளை மேற்கொண்டது. 1931இல் ஜப்பான் மஞ்சூரியாவின் மீது படையெடுத்தது. 1937இல் சீனாவைத் தாக்கி பெய்ஜிங்கை முற்றுகையிட்டது. இந்நடவடிக்கைகளை எல்லாம் நேசநாடுகளால் கண்டுகொள்ளாமல் இருந்தன. பன்னாட்டுச் சங்கத்தால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள இயலவில்லை.

இவ்வாறு ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகியவை இராணுவரீதியான நடவடிக்கைகளை மேற்கொண்டபோதும் பிரிட்டனும் பிரான்சும் எதிலும் தலையிடாமலேயே இருந்தன. பிரிட்டனின் பொது மனநிலை மற்றுமொரு போரைத் தொடங்குவதற்கு ஆதரவாக இல்லை. பிரிட்டனின் பிரதமர்கள் பால்டுவின், சேம்பர்லின் ஆகியோரும் அதிகாரபூர்வமாக தங்களின் நலன்சாரா பகுதிகளில் நடைபெறும் நிகழ்வுகளில் தலையிடுவது நியாயமற்றது என நினைத்தனர். அமெரிக்காவோ வெளியுலகை பற்றிச் சற்றேனும் அக்கறை கொள்ளாமல் பொருளாதாரப் பெருமந்தத்தின் பின்னர் தனது பொருளாதாரத்தை மீட்டு எடுப்பதில் மட்டும் கவனத்தைச் செலுத்தியது.

### மியூனிச் உடன்படிக்கை

சோவியத் ரஷ்யாவும் மேற்கத்திய நாடுகளும் ஒன்றின்மீது மற்றொன்று அவநம்பிக்கை கொண்டிருந்தன. 1938இல் பிரிட்டன் பிரதமர் சேம்பர்லின் ஜெர்மனியோடு மியூனிச் உடன்படிக்கையை மேற்கொண்டார். இது செக்கோஸ்லோவாக்கியாவின் மீது படையெடுத்து அதன் ஜெர்மன் மொழி பேசும் பகுதியான சூடட்டன்லாந்தை ஜெர்மனி இணைத்துக்கொண்டதை ஏற்றுக்கொள்வதாக அமைந்தது. இருந்தபோதிலும் 1939இல் சோவியத் யூனியன் ஜெர்மனியுடன் ஒருவர்மீது மற்றொருவர் படையெடுப்பதில்லை என ஒப்பந்தம் செய்துகொண்டது. நேசநாடுகளின் செயலற்ற இத்தன்மையும் படைகளைப் பெருக்கிக் கொள்வதில் அவை காட்டிய தயக்கமும் இரண்டாம் உலகப்போருக்குக் காரணங்களாக அமைந்தன.



மியூனிச் உடன்படிக்கை

வேறு எந்த ஒரு நாட்டையும் தான் தாக்கப்போவதில்லை என ஹிட்லர் மியூனிச் உடன்படிக்கையில் உறுதியளித்திருந்தாலும் அது உடனடியாக மீறப்பட்டது. 1939இல் ஹிட்லர் செக்கோஸ்லோவாக்கியாவின் மீது படையெடுத்தார். அடுத்து போலந்து தாக்கப்பட்டது. இதுவே ஜெர்மனிக்கு எதிராக பிரிட்டனும் பிரான்சும் போர்ப்பிரகடனம் செய்வதற்கு இட்டுச்சென்ற இறுதிநடவடிக்கைகளாக அமைந்தன. பிரிட்டன் பிரதமர் சேம்பர்லின் 1940இல் பதவிவிலகினார். ஹிட்லரைப் பற்றியும் அவருடைய இராணுவ நோக்கங்களைப் பற்றியும் எப்போதும் எச்சரித்து வந்த வின்ஸ்டன் சர்ச்சில் பிரதமரானார்.

## (ஆ) இரண்டாம் உலகப்போரின் போக்கு

### போரின் தன்மை

இரண்டாம் உலகப்போர் ஐரோப்பா, ஆசியா, பசிபிக் எனும் இருவேறு முனைகளில் நடைபெற்றது. ஐரோப்பாவில் நேசநாடுகள் ஜெர்மனிக்கும் இத்தாலிக்கும் எதிராகப் போரிட்டன. ஆசிய பசிபிக் பகுதிகளில் நேசநாடுகள் ஜப்பானுக்கு எதிராக போர் செய்தன.

இரண்டாம் உலகப்போர் நவீனப் போராகும். டாங்குகள், போர்க்கப்பல்கள், விமானம் தாங்கிக் கப்பல்கள், நீர்மூழ்கிகள், போர்விமானங்கள், குண்டுவீசும் விமானங்கள், கனரக இராணுவ தளவாடங்களைக் கொண்டு போர்கள் நடத்தப்பட்டன. இவையனைத்தையும் உற்பத்தி செய்வதற்குப் பெருமளவிலான வளங்கள் தேவைப்பட்டன. இராணுவ உபகரணங்களை நவீனப்படுத்துவதற்கு தேவையான கச்சாப்பொருள்கள், உற்பத்தித்திறன், தொழிற்நுட்பம் ஆகியவையும் தேவைப்பட்டன. பின்னர் நினைத்து வருந்தும் அளவிற்கு பெரும் பொருட்செலவை ஏற்படுத்திய, நீண்ட காலப் போராக இப்போர் அமைந்தது.



மின்னல் வேக தாக்குதல் (பிளிட்ஸ்கிரிக்)

### போரின் தொடக்கம்

பிரிட்டனும் பிரான்சும் 1939 செப்டம்பரில் ஜெர்மனியின் மீது



10th_History_Unit_3_TM.indd 34 11-04-2020 11:33:25

www.tntextbooks.in

போர்ப் பிரகடனம் செய்தன. இத்தாலி 1940 ஜூனில் ஜெர்மனியோடு சேர்ந்தது. 1940 செப்டம்பரில் ஜப்பான் அச்சு நாடுகளுடன் கை கோர்த்தது.

போர் அறிவிப்பு செய்யப்பட்டவுடன் சிறிய அளவிலான செயல்பாடுகளே காணப்பட்டன. பிரிட்டன் ஏற்கெனவே தனது இராணுவ வலிமையை அதிகரிக்கத் தொடங்கிவிட்டது. இளைஞர்கள் அனைவரும் கட்டாய இராணுவச் சேவைக்கு அழைக்கப்பட்டனர். போரின் தொடக்க ஆண்டுகள் ஜெர்மன் படையினரின் பிரமிக்கவைக்கும் வெற்றியாண்டுகளாகத் திகழ்ந்தன. டென்மார்க், நார்வே பின்னர் பிரான்ஸ் ஆகிய நாடுகளை ஜெர்மானிய ராணுவம் கைப்பற்றியது. 1941இல் ரஷ்யாவின் எல்லை வரையிலான ஐரோப்பாவின் முக்கியநிலப் பகுதிகள் அனைத்தும் அச்சு நாடுகளின் கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டுவரப்பட்டன. திடீரென, மிக வலுவான நாடுகளைத் தாக்கிக் கைப்பற்ற ஜெர்மானியப் படைகள் பிளிட்ஸ்கிரிக் எனும் மின்னல் வேகத்தாக்குதல் (lightning strike, ஜெர்மன் மொழியில் Blitzkrieg) போர்த்தந்திரத்தைக் கடைப்பிடித்தன.

ஐரோப்பிய நாடுகளின் கப்பற்படைகளில் 'தி பிரிட்டிஷ் ராயல் நேவி' என்றழைக்கப்பட்ட பிரிட்டனின் கப்பற்படையே தொடர்ந்து மிக வலுவானதாகத் திகழ்ந்தது. கடல்வழித் தாக்குதல் நடத்தி பிரிட்டனை கைப்பற்றுவது இயலாது என்பதை அது உறுதிப்படுத்தியது. இருந்தபோதிலும் பிரிட்டன் தனது பேரரசின் ஏனைய பகுதிகளில் இருந்தும், அமெரிக்காவிலிருந்தும் கடல்வழியாக இறக்குமதி செய்யப்படும் உணவுப்பண்டங்கள், கச்சாப் பொருள்கள், தொழிற்சாலை உற்பத்திப் பொருள்கள் ஆகியவற்றையே பெரிதும் சார்ந்திருந்தது. இதனைத் தாக்குவதற்காக ஜெர்மனி நீர்மூழ்கிக் கப்பற்படையை அனுப்பிப் பெரும்சேதத்தை ஏற்படுத்தியது. குறிப்பாக அட்லாண்டிக் பெருங்கடலில் பிரிட்டனுக்குத் தேவையானப் பொருள்களை ஏற்றிவரும் பயணியர் கப்பல்களை அவை மூழ்கடித்தன.



**பிரிட்டிஷ் ராயல் கப்பற்படை**

### முக்கிய நிகழ்வுகள்

**டன்கிர்க்** – 1940 மே மாதத்தில் சுமார் 3 லட்சம் பிரிட்டன், பிரான்சு நாடுகளின் கூட்டுப்படை வீரர்களுக்கு டன்கிர்க் நகரின் கடற்கரைப் பகுதிக்குப் பின்வாங்கும் கட்டாயம் ஏற்பட்டது. பெருமளவிலான தனது வீரர்களை பிரிட்டன் டன்கிர்க்கில் இழந்திருந்தால் மீண்டும் இது போன்றதொரு படையை அணிதிரட்டுவது பிரிட்டனுக்கு இடர்ப்பாடு மிகுந்ததாக இருந்திருக்கும்.

**பிரிட்டன் போர்** – 1940 ஜூலையில் பிரிட்டனின் மீது ஜெர்மனி படையெடுக்கும் எனும் அச்சம் ஏற்பட்டது. நீண்ட நெடிய ஆகாய விமானக் குண்டுத் தாக்குதல்களின் மூலம் தனது திட்டங்களை ஏற்றுக்கொள்ளுமாறு பிரிட்டனை வற்புறுத்த ஹிட்லர் விரும்பினார். ஜெர்மனியின் விமானப்படைகள் குறிப்பிட்ட இலக்குகளை, மிகக் குறிப்பாகத் துறைமுகங்கள், விமானத்தளங்கள், தொழிற்சாலைகள் ஆகியவற்றைத் தாக்கத் தொடங்கின. 1940 செப்டம்பரில் லண்டன் நகரம் இரக்கமற்ற குண்டுவீச்சுக்கு இலக்கானது. இந்நடவடிக்கை மின்னல் (Blitz) என்றழைக்கப்பட்டது. 1940 அக்டோபரில் லண்டன் மற்றும் ஏனைய தொழில் நகரங்களின் மீது இரவு நேரத்தில் குண்டு வீச்சுத் தாக்குதல் தொடங்கிற்று. ஆனால் இது தோல்வியில் முடிந்தது. ஜெர்மனியின் போர் விமானங்கள் சற்று தொலைவில் வரும்போதே அவற்றைக் கண்டறியும் திறன்பெற்ற, புதிதாகக் கண்டறியப்பட்ட, மிக ரகசியமாக வைக்கப்பட்டிருந்த கண்டறி கருவியெனும் ரேடாரைப் பயன்படுத்தி பிரிட்டனின் ராயல் ஏர்போர்ஸ் போர்விமானங்கள் (சிடுமூஞ்சிகள், சூறாவளிகள் எனப் பெயரிடப்பட்டவை) ஜெர்மனியின் குண்டுவீச்சு விமானங்களைத் தாக்கிப் பேரிழப்பை விளைவித்தன. விமானத் தாக்குதல்கள் 1940 அக்டோபர் மாதத்தோடு நின்று போனது. விமானப்போரில் ஏற்பட்ட இத்தோல்வியால் பிரிட்டனின் மீது படையெடுக்கும் திட்டத்தை ஜெர்மனி கைவிட்டது.



**சூறாவளிகள் (Hurricanes)**
**இராயல் விமானப் படை**



**சிடுமூஞ்சிகள் (Spitfires)**
**இராயல் விமானப் படை**

### கடன் குத்தகைத் திட்டம் (1941–1945)

அமெரிக்கக் குடியரசுத்தலைவர் ரூஸ்வெல்ட், தனிமைப்பட்டிருத்தல் கொள்கையிலிருந்து மாற வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தார். ஆனால் ஐரோப்பியப் போர்களில் நேரடியாகத் தலையிடுவது சாத்தியமில்லாமல் இருந்தது. எனவே 1941 மார்ச்சில் கடன் குத்தகை திட்டத்தைத் (Lend lease) தொடங்கினார். அதன்படி 'கடன்' எனும்



10th_History_Unit_3_TM.indd 35 11-04-2020 11:33:25

www.tntextbooks.in

பெயரில் ஆயுதம், உணவுப் பண்டம், இராணுவத் தளவாடம், ஏனைய பொருள்கள் பிரிட்டனுக்கு அனுப்பி வைக்கப்படும். அவை பயன்படுத்திய பின்னர் திருப்பிக் கொடுக்கப்பட்டுவிடும். இத்திட்டம் மிகப்பெருமளவிற்கு பிரிட்டனின் வளங்களைப் பெருக்கியது. 1941–1945 இடைப்பட்ட ஆண்டுகளில் இத்திட்டத்தின் கீழ் பெறப்பட்ட உதவியின் மதிப்பு 46.5 பில்லியன் டாலராகும்.

### ரஷ்யப் படையெடுப்பு (1941–1942)

1941 ஜுனில் ஜெர்மனி படைகள் ரஷ்யாவின் மீது படையெடுத்தன. ஜெர்மனி மக்களைக் குடியேற்றுவதற்குத் தேவையான முக்கிய நிலப் பகுதிகளைப் பெறுதல், கம்யூனிச ஆட்சியை ஒழிப்பது ரஷ்யாவின் இயற்கை வளங்களைக் குறிப்பாக எண்ணெய் வளங்களைக் கைப்பற்றுவது போன்ற நீண்டகால நோக்கங்களுடன் இப்படையெடுப்பு மேற்கொள்ளப்பட்டது. ஜெர்மன் படைகளின் தாக்குதல் தந்திரமான "மின்னல் வேகத் தாக்குதல்" தொடக்கத்தில் வெற்றிகளை நல்கியது. மிக விரைவில் ரஷ்யாவிற்குள் 1000 மைல்கள் வரை ஜெர்மனி படைகள் ஊடுருவின. பின்னர் ஜெர்மன் படைகள் மாஸ்கோவை நோக்கி முன்னேறின. ஆனால் இறுதியில் சோவியத் படைகளின் வலுவான எதிர்ப்பு, ரஷ்யாவின் கடுமையான குளிர் ஆகிய காரணங்களால் ஜெர்மனி படை தோல்வியுற்றது.

### ஸ்டாலின்கிரேடு போர் (1942 ஜுலை 17 முதல் 1943 பிப்ரவரி 2 வரை)

1942 ஆகஸ்ட்டில் ஜெர்மானியர் ஸ்டாலின்கிரேடு நகரைத் தாக்கினர். வோல்கா நதிக்கரையில், 30 மைல் (50 கி.மீ) பரப்பளவில் அமைந்திருந்த ஸ்டாலின்கிரேடு ஆயுதங்களையும் டிராக்டர்களையும் உற்பத்தி செய்யும் முக்கியத் தொழில் நகரமாகும். அந்நகரைக் கைப்பற்றிவிட்டால் தெற்கு ரஷ்யாவுடனான சோவியத்தின் போக்குவரத்துத் தொடர்புகள் துண்டிக்கப்பட்டுவிடும். மேலும் காகஸஸ் பகுதிகளிலுள்ள எண்ணெய் வயல்களைச் சென்றடைவதற்கு ஜெர்மன் படைகளுக்கு ஸ்டாலின் கிரேடு வசதியாக இருக்கும். மேலும் சோவியத்தின் தலைவர் ஸ்டாலினின் பெயரைத்தாங்கிய இந்நகரைக் கைப்பற்றுதல் ஹிட்லரின் தனிப்பட்ட வெற்றியாகவும் அவரது பிரச்சாரத்திற்குக் கிடைத்த வெற்றியாகவும் கருதப்படும். ஜெர்மனியின் போர்த் திட்டமிடல் வல்லுநர்கள் 'ஃபால் புளு' (Operation Blue) எனும் திட்டத்தின்படி இந்நகரைக் கைப்பற்றிவிடலாம் என நம்பினர். 1942 ஜுன் 28இல் ஜெர்மனி படைகள் குறிப்பிடத் தகுந்த வெற்றிகளோடு போர் நடவடிக்கைகளைத் தொடங்கின.

ஜெர்மன் படைகள் கைப்பற்றிய பகுதிகளில் வாழ்ந்த ரஷ்ய மக்கள் மோசமான பணியிட, வாழ்க்கைச் சூழல்களால் மட்டுமே துன்பங்களை அனுபவிக்கவில்லை. அவர்கள் ஜெர்மன் படைகளாலும் மிகவும் மோசமாகவும் நடத்தப்பட்டனர். போரின்போது 15 மில்லியன் பொதுமக்கள் உயிரிழந்தனர். 10 மில்லியன் படை வீரர்களும் பலியாயினர். மொத்தத்தில் ரஷ்யாவின் மக்கள்தொகையில் பத்தில் ஒரு பகுதியினர் மரணத்தைத் தழுவினர். இருந்த போதிலும் ரஷ்ய மக்கள், ஸ்டாலினுக்கு எதிராகப் புரட்சி ஏற்படும் என்ற ஹிட்லரின் நம்பிக்கைக்கு நேர்மாறாக சோவியத் அரசுக்கு ஆதரவாக இருந்தனர்.

### எல் அலாமெய்ன் போர் (1942)

போரின் தொடக்க ஆண்டுகளில் ஜெனரல் ரோம்மெல் தலைமையிலான ஜெர்மன் படைகள் வட ஆப்பிரிக்காவை விரைந்து கைப்பற்றுவதில் வியத்தகு வெற்றிகளைப் பெற்றன. எகிப்து மட்டுமே இங்கிலாந்தின் கைவசமிருந்தது. ஜெனரல் மாண்ட்கோமரியின் தலைமையிலான நேசநாட்டுப் படைகள் எதிர்த்தாக்குதல் நடத்தி வட ஆப்பிரிக்காவில் எல் அலாமெய்ன் என்ற இடத்தில் ஜெர்மனி, இத்தாலியப் படைகளைத் தோற்கடித்தன. பாலைவனத்தின் வழியாகத் துரத்தப்பட்ட ஜெர்மனி படைகள் வட ஆப்பிரிக்காவிலிருந்து வெளியேற்றப்பட்டன. இதனால் இத்தாலியின் மீது படையெடுப்பதற்கு வசதியான தளம் நேச நாடுகளுக்குக் கிடைத்தது.

### இத்தாலி சரணடைதல் (1943)

இத்தாலியில் முசோலினியின் சர்வாதிகார ஆட்சி தூக்கியெறியப்பட்டது. புதிய இத்தாலி அரசு 1943இல் நேச நாடுகளிடம் சரணடைந்தது. இருந்தபோதிலும் ஜெர்மனி வடக்கே ஒரு பொம்மை அரசை நிறுவி அதில் முசோலினியை அமரவைத்தது. 1945 ஏப்ரலில், முசோலினி இத்தாலியக் கிளர்ச்சியாளர்களால் கொல்லப்பட்டார்.

### ஹிட்லரின் முடிவு

ஜெனரல் ஐசனோவரின் தலைமையிலான நேசநாட்டுப் படைகள் பிரான்ஸ் நாட்டின் நார்மண்டியின் மீது படையெடுத்தன. ஜெர்மானியப் படைகள் மெதுவாகப் பின்னுக்குத் தள்ளப்பட்டன. ஆனால் ஜெர்மனி படைகள் தொடர்ந்து எதிர்த்துப் போரிட்டதால் போர் ஓராண்டுக்கும் மேலாக நீடித்து இறுதியில் 1945 மே மாதத்தில் முடிவுற்றது. ஹிட்லர் 1945 ஏப்ரலில் தற்கொலை செய்துகொண்டார்.

1944 இலிருந்து ரஷ்யப் படைகள் கிழக்குப்புறத்தில் ஜெர்மனியைத் தாக்கி கிழக்கு ஐரோப்பாவின் பெரும்பகுதியையும், போலந்தையும் கைப்பற்றியது. 1945இல் பெர்லின் நகரின் சில பகுதிகளையும் ரஷ்யப்படைகள் கைப்பற்றின. இதனால் போருக்குப் பின்னர் ஜெர்மனி இருபிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது.



10th_History_Unit_3_TM.indd 36 11-04-2020 11:33:25

### ஆசியா– பசிபிக் பகுதிகளில் நடைபெற்ற போர்

ஹிட்லரைப் போலவே ஜப்பானும் பேரரசுக் கனவில் இருந்தது. 1931இல் ஜப்பானியப் படைகள் மஞ்சூரியா மீது படையெடுத்தன. சீனா இதுகுறித்து பன்னாட்டுச் சங்கத்தில் முறையிட்டது. இந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கை பிரிட்டன் அல்லது அமெரிக்காவின் கவனத்தை ஈர்க்கவில்லை. 1937இல் ஜப்பான் சீனாவின் மீது படையெடுத்து அதன் பாரம்பரியமிக்கத் தலைநகரான பெய்ஜிங் நகரை (பீகிங்) முற்றுகையிட்டது. ஷாங்காயைச் சுற்றியிருந்தப் பகுதிகளும் அப்பகுதியின் தலைநகரான நான்சிங் (நான்கிங்) நகரமும் அவ்வாண்டின் இறுதியில் கைப்பற்றப்பட்டன. இதனைத் தொடர்ந்து வரலாறு காணாத மனித படுகொலையை ஜப்பான் நான்கிங்கில் அரங்கேற்றியது. விளையாட்டு போல் பொதுமக்கள் மொத்தமாகக் கொல்லப்பட்டனர். பெண்கள், குழந்தைகள் முதல் வயது முதிர்ந்தோர் வரை பல்வேறு சித்தரவதைக்கு உள்ளாக்கப்பட்டு கொல்லப்பட்டனர். குவாங்சூவும் (கேன்டன்) சீனாவின் வேறுபல பகுதிகளும் ஆக்கிரமிக்கப்பட்டன. சியாங்–கே–ஷேக்கின் தலைமையிலான சீனப்படைகள் மேற்கேயிருந்த மலைப் பகுதிகளுக்குப் பின்வாங்கி அங்கிருந்தபடியே ஜப்பானியருக்கு எதிரானப் போரைத் தொடர்ந்தனர்.

### முத்துத் துறைமுகம் (Pearl Harbour) (1941)

1941 டிசம்பரில் ஹவாயிலுள்ள அமெரிக்கக் கப்பற்படைத் தளமான முத்துத் துறைமுகத்தின் மீது ஜப்பானிய விமானப்படைகள் முன்னறிவிப்பின்றி பெரும்தாக்குதலைத் தொடுத்தன. அமெரிக்காவின் பசிபிக் கப்பற்படையை முடக்கிவிட்டால் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் மீது படையெடுக்கும்போது எதிர்ப்பேதும் இருக்காது என ஜப்பான் நினைத்ததே இதற்குக் காரணமாகும். இத்தாக்குதலில் பல போர்க்கப்பல்களும் போர்விமானங்களும் அழிக்கப்பட்டன. அமெரிக்க வீரர்கள் பலர் கொல்லப்பட்டனர். இதனைத் தொடர்ந்து அமெரிக்கா ஜப்பான் மீது போர்ப் பிரகடனம் செய்தது. சீனாவும் பிரிட்டனும் அமெரிக்காவுடன் இணைந்தன. இதனால் ஆசிய பசிபிக் போரும் ஐரோப்பியப் போரும் ஒன்றிணைந்து ஒரு பொதுக் காரணத்திற்கான போராக மாறியது. மிக முக்கியமாக இத்தாக்குதல் பெருமளவிலான வளங்களைக் கொண்டிருந்த அமெரிக்க நாட்டை நேசநாடுகளின் அணியில் இப்போரில் பங்கேற்க வைத்தது.



முத்துத் துறைமுகம் தாக்கப்படுதல்

### தென்கிழக்கு ஆசியாவில் ஜப்பானின் ஆக்கிரமிப்புகள்

தென்கிழக்கு ஆசிய நாடுகள் அனைத்திலும் தனது பேரரசை விரிவாக்கவேண்டுமென்ற தனது திட்டத்தில் ஜப்பான் குறிப்பிடத்தக்க வெற்றிகளைப் பெற்றது. குவாம், பிலிப்பைன்ஸ், ஹாங்காங், சிங்கப்பூர், மலேயா, டச்சு கிழக்கிந்தியா (இந்தோனேசியா), பர்மா ஆகிய அனைத்தும் ஜப்பானிடம் வீழ்ந்தன.

### மிட்வே போரும் க்வாடல்கெனால் போரும் (1942)



க்வாடல்கெனால் போர்

மிட்வே போரில் அமெரிக்கக் கப்பற்படை ஜப்பானின் கப்பற்படையைத் தோற்கடித்தது. இது போரின் போக்கை நேசநாடுகளுக்குச் சாதகமாக மாற்றியது. சாலமோன் தீவுகளிலுள்ள க்வாடல்கெனால் போரில் காலாட்படையும் கப்பற்படையும் இணைந்து தாக்குதலை மேற்கொண்டன. இப்போர் பல மாதங்கள் நீடித்தது. இவ்விரு போர்களுமே ஜப்பானுக்குப் படுதோல்விகளாய் அமைந்தன.

இதன் பின்னர் அமெரிக்கப் படைகள் பிலிப்பைன்ஸை மீட்டது. படிப்படியாக ஜப்பானியர் தாங்கள் கைப்பற்றிய பகுதிகளிலிருந்து வெளியேற்றப்பட்டனர். 1944இல் இந்தியாவின் வடகிழக்குப் பகுதி மீது படையெடுக்க முயன்ற ஜப்பானியரை இந்தியப் படைகளும் ஆங்கிலேயப் படைகளும் இணைந்து எதிர்கொண்டு பின்னுக்குத் தள்ளினர். பின்னர் சீனப் படைகளோடு சேர்ந்து ஜப்பானியரை பர்மாவை விட்டு வெளியேற்றினர். மலேயாவையும் சிங்கப்பூரையும் விடுவித்தனர்.


### ஹிரோஷிமா, நாகசாகி (ஆகஸ்ட் 1945)

இதனிடையே நவீன அறிவியல் வளர்ச்சியைப் பயன்படுத்தி ரகசியத் திட்டத்தின் மூலம் அமெரிக்கா அணுகுண்டுகளைத் தயாரித்திருந்தது. வழக்கமான வெடிமருந்து குண்டைக் காட்டிலும் பெருமளவிலான சக்தி கொண்டனவாக இக்குண்டுகள் விளங்கின. ஜப்பானியப் படைத்தளபதிகள் சரணடைய மறுத்தபோது அமெரிக்கா ஜப்பானின்

W1ZLL3

www.tntextbooks.in

ஹிரோஷிமா நகர்மீது ஒரு அணுகுண்டை வீசியது. இதன் பின்னரும் ஜப்பானியர் சரணடைய மறுத்ததால் மற்றொரு அணுகுண்டு நாகசாகியின் மீது வீசப்பட்டது. இறுதியாக ஜப்பான் ஆகஸ்ட் 15, 1945இல் தங்களது சரணடைதலை அறிவித்தபின், செப்டம்பர் 2, 1945இல் முறையாகக் கையெழுத்திட்டதும் இரண்டாம் உலகப்போர் ஓர் முடிவுக்கு வந்தது.




**(இ) போரின் விளைவுகள்**

**உலகம் இரு அணிகளாகப் பிரிதல்:** இரண்டாவது உலகப்போர் உலகில் அடிப்படையானதும் முக்கியமானதுமான பல மாற்றங்களை ஏற்படுத்தியது. வல்லரசுகள் தலைமையிலான அணிகளைக் கொண்ட உலகம் இரு துருவங்களானது. ஒரு அணி கம்யூனிச எதிர்ப்புக் கருத்துக்களைக் கொண்ட அமெரிக்காவால் தலைமையேற்கப்பட்டது. மற்றொரு அணிக்கு சோவியத் யூனியன் தலைமை தாங்கியது. கம்யூனிச நாடுகள், கம்யூனிசமல்லாத நாடுகள் என ஐரோப்பா இரண்டாகப் பிரிக்கப்பட்டது.

**அணு ஆயுதப் பரவல்:** அமெரிக்க ஐக்கிய நாடுகளும் சோவியத் யூனியனும் அணுஆயுதங்களை அதிகரிக்கும் போட்டியில் இறங்கி, ஆயுதங்களைப் பெருக்கிக் குவித்தன. பல நாடுகளில் இராணுவத்திற்கான செலவினங்கள் உச்சத்தை எட்டின.

**பன்னாட்டு முகமைகள்:** பல பன்னாட்டு முகமைகள் குறிப்பாக ஐக்கிய நாடுகள் சபை, உலக வங்கி, பன்னாட்டு நிதியம் (International Monetary Fund) போன்ற அமைப்புகள் உருவாக்கப்பட்டன.

காலனி நீக்கச் செயல்பாட்டின் அடிப்படையில் காலனியாதிக்கச் சக்திகள் தங்களது காலனிகளுக்கு விடுதலை வழங்கவேண்டிய கட்டாயத்திற்குள்ளாயினர். அதில் இந்தியா முதலாவதாய் சுதந்திரம் பெற்றது.

## 3.2 பேரழிவும் பின்விளைவும்

ஹிட்லர் ஆட்சிப்பொறுப்பேற்ற பின்னர் யூதர்கள் பலவழிகளில் கொடுமைப்படுத்தப்பட்டனர். அவர்களுக்கான சமூக உரிமைகள் மறுக்கப்பட்டன. அவர்களின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டன. அவர்கள் 'கெட்டோக்கள்' எனப்படும் ஒதுக்குப்புறமான பகுதிகளில் வாழ வற்புறுத்தப்பட்டனர். இவற்றைத் தொடர்ந்து நாசிகள் யூதர்களை முற்றிலுமாகக் கொன்று குவிப்பதற்காக 'இறுதித் தீர்வு' எனும் கருத்தை முன்வைத்தனர்.

இரண்டாவது உலகப் போரின்போது ஜெர்மானியர்களால் ஆறு மில்லியன் யூத மக்கள் கொல்லப்பட்ட இனஅழிப்பை விளக்குவதற்கு பேரழிவுப்படுகொலை (Holocaust) என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. ஹிட்லர் மற்றும் நாசிகளுடைய அரசியல் நிகழ்ச்சி நிரலின் முக்கிய அம்சங்களின் ஒன்று யூதர்களை அழிப்பதாகும். ஜெர்மனியில் சாதாரணமாகவும் சொல்லப்போனால் ஐரோப்பா முழுவதும் ஏற்கனவே நிலவிவந்த யூத எதிர்ப்பு உணர்வுகளை ஹிட்லர் பயன்படுத்திக் கொண்டார். யூதர்கள் ஐரோப்பா முழுவதிலும் சிதறிக்கிடந்தனர். அவர்களில் பலர் வணிகத்துறையிலும் கலைகளிலும் தொழிற்துறைகளிலும் புகழ்பெற்று விளங்கினர். வட்டித்தொழில் யூதர்களிடையே முக்கிய வணிக நடவடிக்கையாக இருந்தது. இது அவர்களுக்கு எதிரான வெறுப்பை மேலும் வலுவடையச் செய்தது. ஷேக்ஸ்பியரின் வெனிஸ் நகர வணிகர் (Merchant of Venice) எனும் நாடகம் மக்களிடையே யூதர்களின் மீதிருந்த வெறுப்பையும் அவநம்பிக்கையையும் படம் பிடித்துக் காட்டியது.

### மனிதஉரிமைப் பிரகடனம்

இத்தகையப் பேரழிவு நடைபெற்றபின், ஐக்கிய நாடுகள் சபை தன்னுடைய மனிதஉரிமை சாசனத்தில் இனம், பால், மொழி, மதம் ஆகிய வேறுபாடுகளின்றி அடிப்படைச் சுதந்திரமும் மனித உரிமைகளும் உலகளாவிய முறையில் கடைபிடிக்கப்படுவதை ஊக்குவிக்கப்போவதாக உறுதிமொழி மேற்கொண்டது. உலகளாவிய முறையில் மனித உரிமைகளைக் காப்பதற்காக ஐக்கிய நாடுகள் சபை மேற்கொண்ட முயற்சிகளின் விளைவாக மனித உரிமைகள் ஆணையம் உருவாக்கப்பட்டது. இவ்வமைப்பால் உருவாக்கப்பட்ட குழு ஒன்றுக்கு மறைந்த குடியரசுத் தலைவர் பிராங்கிளின் ரூஸ்வெல்ட்டின் மனைவியார் எலினார் ரூஸ்வெல்ட் தலைமை வகித்தார். ஆணையக் குழுவில் உறுப்பினர்களாக


10th_History_Unit_3_TM.indd 38 11-04-2020 11:33:25

சார்லஸ் மாலிக் (லெபனான்), P.C.சாங் (தேசியவாத சீனா), ஜான் ஹம்ப்ரி (கனடா), ரெனே காசின் (பிரான்ஸ்) ஆகியோர் இருந்தனர். மனித உரிமைகளின் உலகளாவிய பிரகடனம் 30 கட்டுரைகளில் அடிப்படை மனித உரிமைகளை முன் வைக்கிறது. 1948 டிசம்பர் 10இல் ஐ.நா.சபை இந்த வரலாற்று சாசனத்தை ஏற்றுக் கொண்டது. இந்த நாள் (டிசம்பர் 10) உலகம் முழுவதும் மனித உரிமைகள் தினமாக கொண்டாடப்படுகிறது. இப்பிரகடனத்தைப் பின்பற்றி 1948இல் தொடங்கி சுமார் 90 நாடுகளின் அரசியல் அமைப்புகளில் மனித உரிமைகள் தொடர்பான சரத்துக்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளதாக நியூயார்க்கிலுள்ள 'பிராங்கிளின் எலினார் ரூஸ்வெல்ட்' நிறுவனம் கூறுகிறது.

### இஸ்ரேல் நாட்டின் பிறப்பு

மேற்சொல்லப்பட்ட பேரழிவின் முக்கிய விளைவு யூத இன மக்களுக்கென இஸ்ரேல் எனும் நாடு உருவாக்கப்பட்டதாகும். வரலாற்று ரீதியாக, ரோமர்கள் காலத்திலிருந்து இதுவே இவர்களின் தாயகமாகும்.

## 3.3 புதிய பன்னாட்டு ஒழுங்கமைவு

1941இல் சுதந்திரமான அனைத்து உலக நாடுகளிடையே நிரந்தரமான அமைதியைப் பேணத் தேவைப்படும் பன்னாட்டு ஒத்துழைப்பு குறித்து அமெரிக்க ஐக்கிய நாடுகளும் பிரிட்டனும் தீவிர கவனம் செலுத்தத் தொடங்கின. பன்னாட்டுப் பொருளாதாரம், நிதி ஆகியவற்றின் நிலைத்த தன்மையும் முக்கிய நோக்கங்களாக இருந்தன. இப்பொது நோக்கங்களுக்கு, உலகத்தின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் இணைந்து செயல்படும் பன்னாட்டு அமைப்பு தேவைப்பட்டது. இம்முயற்சியின் இறுதியாக ஐக்கிய நாடுகள் சபை, உலக வங்கி, பன்னாட்டு நிதி அமைப்பு போன்றவையும் அனைத்து நாடுகள், சமூகங்கள் ஆகியவற்றின் முக்கிய அடிப்படை அம்சங்கள் குறித்து நடவடிக்கை மேற்கொள்ள, அவற்றின் துணை அமைப்புகளும் நிறுவப்பட்டன.

### ஐக்கிய நாடுகள் சபை


ஐ.நா. இலச்சினை

ஐக்கிய நாடுகள் சபை நிறுவப்படுவதற்கான முதல் முயற்சியை அமெரிக்க ஐக்கிய நாடுகளும்பிரிட்டனும்1941இல் அட்லாண்டிக் சாசனத்தின் வழியே வெளியிட்டன. ஐக்கிய நாடுகள் சபையின் பிரகடனம் 1942இல் புத்தாண்டு தினத்தன்று, அச்சு நாடுகளுக்கு எதிராக (ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான்) போர் செய்துவந்த 26 நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஐக்கிய நாடுகள் சபையின் சாசனத்தில் 1945ஆம் ஆண்டு, ஜூன் 26ஆம் நாள் 51 நாடுகள் கையெழுத்திட்டன. இந்தியா அப்போது சுதந்திர நாடாக இல்லையென்பதால் சாசனத்தில் கையெழுத்திடவில்லை. தற்போது ஐக்கிய நாடுகள் சபை 193 உறுப்பு நாடுகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு நாடும் சிறியதோ அல்லது பெரியதோ, ஐக்கிய நாடுகள் சபையில் சமமான வாக்குகளை பெற்றுள்ளது.

"ஐக்கிய நாடுகள் சபையின் மக்களாகிய நாங்கள் எதிர்கால சந்ததியினரை போரின் துயரங்களிலிருந்துக் காப்போம் என உறுதி கூறுகிறோம். அது நம்முடைய வாழ்நாளில் இருமுறை மனிதகுலத்திற்குச் சொல்லமுடியாத துயரங்களைக் கொண்டுவந்துள்ளது. மேலும் அடிப்படை மனித உரிமைகள், மனிதப்பண்புகளைப் பெற்றுள்ள தனிநபர்களின் கண்ணியம், மதிப்பு, ஆணுக்கும் பெண்ணுக்கும், சிறிய நாட்டிற்கும் பெரிய நாட்டிற்கும் சம உரிமை ஆகியவற்றின் மீதான நம்பிக்கையை மீண்டும் உறுதி செய்வோம்".... – **ஐக்கிய நாடுகள் சபையின் முகவுரையிலிருந்து**

### பொதுச்சபையும் பாதுகாப்பு அவையும்


ஐ.நா. தலைமையகம் நியூயார்க்

ஐக்கிய நாடுகள் சபை ஏறத்தாழ ஏனைய அரசுகளைப் போலவே, அரசுக்குரிய சட்டமியற்றுதல், நிர்வகித்தல், நீதித்துறை போன்றவற்றிற்கு நிகரான அமைப்புகளோடு செயல்படுகிறது. பொதுச்சபை எனும் அமைப்பில் ஒவ்வொரு நாடும் பிரதிநிதித்துவப் படுத்தப்படுகின்றன. ஆண்டுக்கொருமுறை கூடும் இவ்வமைப்பில் நாடுகளின் நலன்சார்ந்த அம்சங்களும் முரண்பாடுகளுக்கான காரணங்களும் விவாதிக்கப்படுகின்றன. பாதுகாப்பு சபையானது பதினைந்து உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. அமெரிக்க ஐக்கிய நாடுகள், பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா, சீனா ஆகிய நாடுகள் இச்சபையின் நிரந்தர உறுப்பினர்களாவர். ஏனைய பத்து உறுப்பினர்கள் சுழற்சி முறையில் தேர்ந்தெடுக்கப்படுவர். இவ்விரு சபைகளுமே ஒரு சட்டமன்றத்தைப் போலச் செயல்படுகின்றன. ஒவ்வொரு நிரந்தர உறுப்பினருக்கும் மறுப்பாணை அதிகாரம் (Veto power) உண்டு. எடுக்கும் எந்த முடிவையும் இதன் மூலம் தடுத்துவிடலாம். இவ்வதிகாரம் வல்லரசுகளால் குறிப்பாக அமெரிக்காவாலும் ரஷ்யாவாலும் முக்கிய முடிவுகளைத்

தடுப்பதற்காகப் பயன்படுத்தப்படுகின்றது. மிக முக்கியமான அம்சங்களும் முரண்பாடுகளும் பாதுகாப்பு சபையில் விவாதிக்கப்படுகின்றன.

### நிர்வாக அமைப்பு

ஐக்கிய நாடுகள் சபையின் செயல்பாட்டு அங்கமாகத் திகழ்வது செயலகம் ஆகும். இதன் பொதுச் செயலாளர் பொதுச்சபையில், பாதுகாப்புச்சபையின் பரிந்துரையின்படி தேர்ந்தெடுக்கப்படுகிறார். பொதுச் செயலாளர் தனது காபினெட் உறுப்பினர்கள், ஏனைய அதிகாரிகள் ஆகியோரின் துணையோடு ஐக்கிய நாடுகள் சபையை நடத்துகிறார். பன்னாட்டு நீதிமன்றம் ஐக்கிய நாடுகள் சபையின் நீதி நிர்வாகக் கிளையாகும். இது நெதர்லாந்திலுள்ள தி ஹேக்கில் அமைந்துள்ளது. பொருளாதார மற்றும் சமூக மன்றம் (Economic and Social Council–ECOSOC) ஐக்கிய நாடுகள் சபையின் ஐந்தாவது அங்கமாகும். ஐக்கிய நாடுகள் சபை மேற்கொள்ளும் அனைத்துப் பொருளாதாரச் சமூகப் பணிகளை ஒருங்கிணைப்பது இவ்வமைப்பின் பணியாகும். உலகின் பல்வேறு பகுதிகளில் வட்டாரங்களின் வளர்ச்சிக்காக (ஆசியா பசிபிக், மேற்கு ஆசியா, ஐரோப்பா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்கா) பல வட்டார பொருளாதார ஆணையங்கள் செயல்படுகின்றன. அவைப் பொருளாதார மற்றும் சமூக மன்றத்தின் (ECOSOC) துணையமைப்புகளாகும். மிக வெற்றிகரமாகச் செயல்படும் இவற்றுக்கு பொருளாதார வல்லுநரான குன்னார் மிர்தால் போன்றோர் தலைமை ஏற்றிருக்கின்றனர்.

### ஐ.நாவின் இதர முக்கியத் துணைஅமைப்புகள்

ஐ.நாவின் துணை அமைப்புகள் உலகில் மிகவும் அக்கறை செலுத்தப்படவேண்டிய துறைகளான உணவு, சுகாதாரம், கல்வி, பண்பாடு ஆகியக் களங்களில் செயல்படுகின்றன. அவை உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (Food and Agricultural Organisation – FAO), உலக சுகாதார நிறுவனம் (World Health Organisation –WHO), ஐ.நா. கல்வி, அறிவியல் மற்றும் பண்பாட்டு அமைப்பு (UN Educational Scientific and Cultural Organisation – UNESCO) என்பனவாகும். இவை தவிர்த்து வேறுசில சிறப்பு நிறுவனங்கள் உறுப்புநாடுகளின் நிதிஉதவியுடன் செயல்படுகின்றன. அவற்றில் நன்கு அறியப்பட்ட இரண்டு அமைப்புகளில் முதலாவது ஐ.நா. குழந்தைகள் நிதி நிறுவனம் (United Nations Children's Fund–UNICEF). இது உலகம் முழுவதிலும் குழந்தைகளின் உடல் ஆரோக்கியத்தையும் ஏனைய நலன்களையும் முன்னெடுக்கப் பணிசெய்கிறது. மற்றொன்று ஐ.நா.வளர்ச்சி திட்டம் (United Nations Development Plan –UNDP). இது வளர்ச்சித் திட்டங்களில் கவனம் செலுத்துகிறது.

### ஐ.நா.வின் செயல்பாடுகள்

கடந்த பல பத்தாண்டுகளில் உலகம் எதிர்கொண்ட, மாறிவரும் பிரச்சனைகளுக்கு ஏற்றவாறு ஐக்கிய நாடுகள் சபை தனது செயல்பாடுகளை விரிவாக்கம் செய்துள்ளது. 1960களில் காலனியாதிக்க நீக்கம் முக்கியப் பிரச்சனையாகும். மனித உரிமைகள், அகதிகள் பிரச்சனை, பருவகாலமாற்றம், பாலினச் சமத்துவம் ஆகியன தற்போது ஐக்கிய நாடுகள் சபையின் செயல்பாட்டு வளையத்தினுள் உள்ளன. மிகச்சிறப்பாகக் கட்டாயம் குறிப்பிடப்பட வேண்டியது ஐ.நாவின் அமைதிப்படை. உலகம் முழுவதிலும் மோதல்கள் அரங்கேறியப் பல்வேறு பகுதிகளில் அப்படை பணி செய்துள்ளது. அதன் முக்கியப் பகுதியாக உள்ள இந்திய இராணுவம் உலகின் பல்வேறு பகுதிகளில் பணியமர்த்தப்பட்டுள்ளது.

### உலக வங்கி

"பிரெட்டன் உட்ஸ் இரட்டையர்கள்" எனக் குறிக்கப்படும் உலக வங்கி, பன்னாட்டு நிதி அமைப்பு ஆகிய இரண்டும் 1944இல் நடைபெற்ற பிரெட்டன் உட்ஸ் மாநாட்டிற்குப் பின் 1945இல் நிறுவப்பட்டன. இவ்விரு நிறுவனங்களும் அமெரிக்காவில் வாஷிங்டன் நகரில் அமைந்துள்ளன. இரண்டுமே சம எண்ணிக்கையிலான உறுப்பினர்களைக் கொண்டுள்ளன. ஏனெனில் ஒரு நாடு பன்னாட்டு நிதிஅமைப்பில் உறுப்பினர் ஆகாமல் உலகவங்கியில் உறுப்பினராக முடியாது.



**பிரெட்டன் உட்ஸ் மாநாடு**

உலக வங்கியின் இரு முக்கிய அங்கங்கள் புனரமைப்பு மற்றும் வளர்ச்சிக்கானப் பன்னாட்டு வங்கி (International Bank for Reconstruction and Development – IBRD), மற்றொன்று பன்னாட்டு வளர்ச்சி முகமை (International Development Agency – IDA) ஆகும். இவையிரண்டுமே உலகவங்கி என்ற பெயரிலேயே குறிப்பிடப்படுகிறது. தொடக்க ஆண்டுகளில் IBRDயின் பணியானது போரினால் சீர்குலைந்துபோன ஐரோப்பிய நாடுகளில் புனரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்ட மார்ஷல் திட்டத்திற்கு நிதி வழங்குவதாய் அமைந்தது. பின்னர் இதன் செயல்பாடுகள் ஏழை நாடுகளின் பொருளாதார வளர்ச்சியை



10th_History_Unit_3_TM.indd 40 11-04-2020 11:33:26

மேம்படுத்துவது, பல்வேறு நாடுகளின் வளர்ச்சித் திட்டங்களுக்கு கடன் வழங்குவது என விரிவடைந்தது. மேலும் பன்னாட்டு வளர்ச்சி முகமை வளர்ச்சிப் பணிகளுக்குத் தேவைப்படும் நிதியை அரசுகளுக்குக் கடனாக வழங்கியது. மிகக் குறைந்த வட்டிக்கு 50 ஆண்டு கால அளவிற்கு வழங்கப்பட்ட இக்கடன்கள் "மென் கடன்கள்" (Soft Loans) என்றழைக்கப்பட்டன. பன்னாட்டு நிதி வாரியம் (International Finance Corporation–IFC) எனும் மற்றொரு அமைப்பு வளரும் நாடுகளிலுள்ள தனியார் நிறுவனங்களுடன் செயல்படுகிறது.

அண்மைக்காலங்களில் இவ்வங்கி ஆயிரமாண்டு வளர்ச்சி இலக்குகளை அடையும் சாதனைக்கான ஊக்குவிப்பை வழங்கிவருகிறது. மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துதல், கல்லாமையை இல்லாமலாக்குவது, பெண்களை வலிமையுள்ளவர்களாக ஆக்குதல், தாய் சேய் நல மேம்பாடு, சூழலியல் மேம்பாடு, எய்ட்ஸ் ஒழிப்பு ஆகியவையே இதன் வளர்ச்சி இலக்குகளாகும்.

### பன்னாட்டு நிதியமைப்பு (International Monetary Fund – IMF)

பன்னாட்டு நிதியமைப்பானது அடிப்படையில் ஹேரி டேக்ஸ்டர் ஒயிட், ஜான் மேனார்டு கெய்ன்ஸ் எனும் புகழ்பெற்றப் பொருளாதார நிபுணர்களின் மூளையில் உதித்த குழந்தையாகும். இவ்வமைப்பு 1945இல் 29 உறுப்புநாடுகளைக் கொண்டு முறையாக தொடங்கப்பெற்றது. தற்போது 189 நாடுகள் உறுப்புநாடுகளாக உள்ளன. இதனுடைய அடிப்படை நோக்கம் உலகம் முழுவதிலும் நிதி மற்றும் வளர்ச்சியின் நிலைத்த தன்மையை உறுதிப்படுத்துவதாகும். இதனுடைய முக்கிய நிகழ்ச்சிநிரல் பன்னாட்டளவில் நிதி சார்ந்த ஒத்துழைப்பை மேம்படுத்துவது, பன்னாட்டு வணிகத்தையும் நாணயச் செலாவணியையும் உறுதியாக வைத்திருத்தல் ஆகியவையாகும். இவ்வமைப்பு பணம் செலுத்துவதில் சமநிலைப் பிரச்சனைகளை (ஏனெனில் இந்நாடுகளால் தங்கள் இறக்குமதிகளுக்கு பணம் செலுத்த முடிவதில்லை) சந்திக்கும் நாடுகளுக்குக் கடன் வழங்கும். ஆனால் கடன் வாங்கும் நாடுகள் மீது இவ்வமைப்பு வரவு செலவுத்திட்டங்களைச் சுருக்குதல், செலவுகளைச் சுருக்குதல் போன்ற கடுமையான நிபந்தனைகளைச் சுமத்துகிறது. இந்நடவடிக்கைகள் பெரும்பாலும் வளரும் நாடுகளால் விரும்பப்படுவதில்லை. ஏனெனில் மக்களுக்கு மானியம் வழங்கும் பல்வேறு திட்டங்களைக் கைவிட வேண்டிய சூழல் உருவாகிறது.

> பன்னாட்டு நிதியமைப்பின் (IMF) நோக்கங்கள்: உலக அளவில் நிதி சார்ந்த ஒத்துழைப்பைப் பேணுவது, நிதி நிலையை உறுதியானதாக வைத்திருத்தல், பன்னாட்டு வணிகத்திற்கு வசதிகள் ஏற்படுத்திக் கொடுப்பது, வேலை வாய்ப்பினைப் பெருக்குவது, நீடித்தப் பொருளாதார வளர்ச்சி, உலகம் முழுவதிலும் வறுமையை ஒழிப்பது என்பனவாகும்.

## 3.4 போருக்குப்பின் ஐரோப்பாவில் மக்கள் நல அரசுகள்

மக்கள் நலஅரசு (Welfare State) எனும் சொற்றொடர், அரசாங்கமே மக்களின் சமூகப் பொருளாதார நலன்களுக்குப் பொறுப்பு என்ற கோட்பாட்டைக்,குறிப்பதாகும்.இவ்வாறுமக்களுக்குப் பாதுகாப்பு வழங்குவது, சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பது என்பதோடு இல்லாமல் அரசாங்கத்தின் பொறுப்பை மேலும் விரிவுபடுத்துவதாகும்.

1942இல் பிரிட்டன் பொதுவாக பெவரிட்ஜ் அறிக்கை (Beveridge Report) என்றழைக்கப்பட்ட அறிக்கையை வெளியிட்டது. அவ்வறிக்கையில், பொது நலனுக்குப் பெருந்தடைகளாக உள்ள வறுமை, நோய் ஆகியவற்றை வெற்றிகொள்ள, பொதுமக்களுக்கு அதிக வருமானத்தை அளிப்பது, உடல் நலப்பாதுகாப்பு, கல்வி, வீட்டுவசதி, வேலைவாய்ப்பு ஆகியவற்றை வழங்கும் பல திட்டங்கள் தொகுப்பாக இடம் பெற்றிருந்தன.

போருக்குப் பின்னர் பிரிட்டனில் தொழிலாளர் கட்சி ஆட்சியமைத்தது. "தொட்டிலிலிருந்து கல்லறை வரை" மக்களைக் கவனித்துக்கொள்ளும் திட்டங்களை மேற்கொள்ளப்போவதாக அவ்வரசு உறுதியளித்தது. மக்களுக்கு விரிவான அளவில் தேசிய நலச் சேவையின் மூலம் இலவச மருத்துவ வசதி, முதியோர்க்கு ஓய்வூதியம், வேலையற்றோர்க்கு உதவித்தொகை போன்ற நிதியுதவிகள் குழந்தை நல சேவைகள், குடும்பநலச்சேவைகள் ஆகியவற்றை வழங்குவதற்காகப் பல சட்டங்கள் இயற்றப்பட்டன. அனைவருக்குமான இலவசப் பள்ளிக் கல்வி என்பதற்கு மேலாக இவையனைத்தும் அளிக்கப்பட்டன.

இத்திட்டங்களின் பலன்கள் முதியோர் ஓய்வூதியம், வேலையற்றோர்க்கான உதவித்தொகை ஆகியவற்றைப் பொறுத்த அளவில் பணப் பரிமாற்றத்தின் மூலமாகவும் ஏனைய நலன்கள், இலவசச் சேவைகள் மூலமாகவும் மக்களைச் சென்றடைந்தன. இவற்றிற்கு மேலாக இந்நாடுகளில் பொருளாதார ஏற்றதாழ்வுகளை குறைப்பதற்காக முற்போக்கு வரிவிதித்தலின் மூலம் அதிகமாக வருமானம் ஈட்டுவோர் மீது அதிகவரி விதிக்கப்பட்டது.



10th_History_Unit_3_TM.indd 41 11-04-2020 11:33:26

## பாடச்சுருக்கம்

- இரண்டாம் உலகப்போர் 1939 முதல் 1945 வரை நடைபெற்றது. ஐரோப்பா, ஆப்பிரிக்கா, ஆசியா பசிபிக் என ஏறத்தாழ உலகின் அனைத்துப் பகுதிகளிலும் இப்போர் நடைபெற்றது. தொடக்கத்தில் பிரிட்டன், பிரான்சு, பின்னர் சோவியத் யூனியன், அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஆகியோரைக் கொண்ட நேசநாடுகள் அணி அச்சு நாடுகளான ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகியவற்றிற்கு எதிராகப் போரிட்டன.
- தொடக்கத்தில் ஐரோப்பாவில் ஜெர்மனியும் கிழக்குப்பகுதிகளில் ஜப்பானும் பல வெற்றிகளைப் பெற்றன. இருந்தபோதிலும் அமெரிக்கா தனது மாபெரும் வளங்களுடன் நேசநாடுகள் அணியில் சேர்ந்த பின்னர் ஜெர்மனி, ஜப்பான் ஆகிய இரு நாடுகளும் பல நீண்ட சண்டைக்குப் பின்னர் தோற்கடிக்கப்பட்டன.
- போருக்குப் பிந்தைய உலகம், அமெரிக்க ஐக்கிய நாடுகள், ஐக்கிய சோவியத் சோசலிஸக் குடியரசுகள் என்றழைக்கப்பட்ட இரு வல்லரசுகளின் எழுச்சியைக் கண்ணுற்றது. இரு நாடுகளும் ஆயுதப்பெருக்கக் குறிப்பாக, அணு ஆயுதப் பெருக்கப் போட்டிகளில் ஈடுபட்டன.

## A-Z கலைச்சொற்கள்

| | | |
|---|---|---|
| பேரழிவு | **Devastation / havoc** | total destruction |
| போர் நாட்டம் | **Belligerent** | one eager to fight / aggressive |
| மீண்டெழுகிற | **Resurgent** | rising again |
| இழப்பீடுகள் | **Reparations** | compensation exacted from a defeated nation by the victors |
| போர்த்தளவாடங்கள் | **Armaments** | weapons |
| கட்டாய இராணுவ சேவைக்கு அழைக்கப்பட்ட | **Conscripted** | compulsory military service |
| வதைத்துக் கொல்லுதல் | **Slaughter** | kill a large number of people indiscriminately |
| பல்கிப் பெருகுதல் | **Proliferation** | a rapid increase |
| குடிசைத்தொகுதி | **Ghettos** | slums |
| மறுப்பாணை / எதிர்வாக்கு | **Veto** | a vote that blocks a decision / negative vote |
| வரம்பு / எல்லை | **Ambit** | range |
| மீளாத்துயரம் | **Scourge** | eternal suffering |
| கடுமையான | **Stringent** | tough |

## பயிற்சி

### I சரியான விடையைத் தேர்வு செய்யவும்

HFJ8SJ

1. ஜப்பான் சரணடைவதாக எப்போது முறைப்படி கையெழுத்திட்டது?
   அ) செப்டம்பர் 2, 1945 ஆ) அக்டோபர் 2, 1945
   இ) ஆகஸ்டு 15, 1945 ஈ) அக்டோபர் 12, 1945
2. பன்னாட்டுச் சங்கம் உருவாக்கப்படுவதில் முன்முயற்சி எடுத்தவர் யார்?
   அ) ரூஸ்வெல்ட் ஆ) சேம்பெர்லின்
   இ) உட்ரோ வில்சன் ஈ) பால்டுவின்
3. ஜப்பானியக் கப்பற்படை அமெரிக்க கப்பற்படையால் எங்கே தோற்கடிக்கப்பட்டது?
   அ) க்வாடல்கெனால் போர்
   ஆ) மிட்வே போர்
   இ) லெனின்கிரேடு போர்
   ஈ) எல் அலாமெய்ன்போர்
4. அமெரிக்கா தனது முதல் அணுகுண்டை எங்கே வீசியது?
   அ) கவாசாகி ஆ) இன்னோசிமா
   இ) ஹிரோஷிமா ஈ) நாகசாகி
5. ஹிட்லர் எவரை மிகவும் கொடுமைப் படுத்தினார்?
   அ) ரஷ்யர்கள் ஆ) அரேபியர்கள்
   இ) துருக்கியர்கள் ஈ) யூதர்கள்



10th_History_Unit_3_TM.indd 42 11-04-2020 11:33:26

6. ஜெர்மனியோடு மியூனிச் உடன்படிக்கையில் கையெழுத்திட்ட பிரிட்டன் பிரதமர் யார்?
அ) சேம்பர்லின் ஆ) வின்ஸ்டன் சர்ச்சில்
இ) லாயிட் ஜார்ஜ் ஈ) ஸ்டேன்லி பால்டுவின்
7. எப்போது ஐக்கிய நாடுகள் சபையின் பட்டய சாசனம் கையெழுத்தானது?
அ) ஜுன் 26, 1942 ஆ) ஜுன் 26, 1945
இ) ஜனவரி 1, 1942 ஈ) ஜனவரி 1, 1945

## II கோடிட்ட இடங்களை நிரப்புக

1. இராணுவ நீக்கம் செய்யப்பட்ட ________ பகுதியை ஹிட்லர் தாக்கினார்.
2. இத்தாலி, ஜெர்மனி, ஜப்பான் ஆகியவற்றிக்கிடையேயான ஒப்பந்தம் ________ என அழைக்கப்பட்டது.
3. ________ கடன் குத்தகைத் திட்டத்தைத் தொடக்கி வைத்தார்.
4. 1940இல் ராஜினாமா செய்த பிரிட்டன் பிரதமர் ________ ஆவார்.
5. ________ என்பது தொலைவிலிருந்தே எதிரிகளின் போர் விமானங்களைக் கண்டுபிடிப்பதற்கான ஒரு கருவி.

## III பொருத்துக

1. பிளிட்ஸ்கிரிக் – ரூஸ்வெல்ட்
2. ராயல் கப்பற்படை – ஸ்டாலின் கிரேடு
3. கடன் குத்தகை – சாலமோன் தீவு
4. வோல்கா – பிரிட்டன்
5. க்வாடல்கெனால் – மின்னல் வேகத்தாக்குதல்

## IV சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்

1. **கூற்று:** குடியரசுத்தலைவர் ரூஸ்வெல்ட் அமெரிக்கா தனது தனித்திருக்கும் கொள்கையை மாற்றியமைக்க வேண்டும் என்பதை உணர்ந்தார்.
**காரணம்:** அவர் 1941இல் கடன் குத்தகைத் திட்டத்தை தொடங்கினார்.
அ) கூற்றும் காரணமும் சரி.
ஆ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு.
இ) காரணம் கூற்று ஆகிய இரண்டுமே தவறானவை.
ஈ) காரணம் சரி ஆனால் அது கூற்றுடன் பொருந்தவில்லை.

## V சுருக்கமாக விடையளிக்கவும்

1. முதல் உலகப்போருக்குப் பிந்தைய உலகத்தின் மூன்று முக்கிய சர்வாதிகாரிகள் யாவர்?
2. ஹிட்லர் ஜெர்மனி மக்களின் ஆதரவை எவ்வாறு பெற்றார்?
3. முத்துத் துறைமுக நிகழ்வை விவரி.
4. பெவரிட்ஜ் அறிக்கை குறித்து நீ அறிந்தது என்ன?
5. பிரெட்டன் உட்ஸ் இரட்டையர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
6. பன்னாட்டு நிதியமைப்பின் (IMF) நோக்கங்கள் யாவை?

## VI விரிவான விடையளிக்கவும்

1. இரண்டாம் உலகப்போரின் விளைவுகளை ஆய்வு செய்க
2. ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்பு, செயல்பாடுகளை ஆய்வு செய்க.

## VII மாணவர்களின் செயல்பாடுகள்

1. உலக வரைபடத்தில் அச்சு நாடுகள், நேசநாடுகள், இரண்டாம் உலகப்போரின் முக்கிய போர்க்களங்கள் ஆகியவற்றைக் குறிக்கவும்.

## VIII வரைபடப் பணி

உலக வரைபடத்தில் கீழக்கண்டவற்றைக் குறிக்கவும்

1. அச்சு நாடுகள் 2. நேச நாடுகள்
3. ஹிரோஷிமா, நாகசாகி, ஹவாய் தீவு, மாஸ்கோ, சான் பிரான்சிஸ்கோ

## மேற்கோள் நூல்கள்

1. R.D. Cornwell, *World History in the Twentieth Century*, London: Longman, 1972.
2. C.V. Narasimhan, *The United Nations - An Inside View*, New Delhi: Vikas, 1988.
3. *Encyclopaedia Britannica*, vol. 23 (1962 edition).

## இணையச் செயல்பாடு

### இரண்டாம் உலகப்போர்

**செயல்முறை**

- கீழ்காணும் உரலி / விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தி இச்செயல்பாட்டிற்கான இணையப் பக்கத்திற்குச் செல்லவும்.
- திரையில் தோன்றும் வரைபடத்தில் 'Enter' பொத்தானைச் சொடுக்கவும்.
- கீழே உள்ள நேரத்திலிருந்து உதாரணமாக (Ex.1939) தேர்ந்தெடுக்கவும், பின்பு இரண்டாம் உலகப்போரில் நடந்த நிகழ்வுகளினைப் பற்றி விளக்கமாக தெரிந்துகொள்ள திரையில் தோன்றும் வரைபடத்தில் எதேனும் ஒரு இடத்தினை தேர்ந்தெடுக்கவும்.

**உரலி:** https://www.abmc.gov/sites/default/files/interactive/interactive_files/WW2/

B373_10_SOCIAL_TM



10th_History_Unit_3_TM.indd 43 11-04-2020 11:33:26

# அலகு – 4

# இரண்டாம் உலகப்போருக்குப் பிந்தைய உலகம்




## கற்றலின் நோக்கங்கள்

**கீழ்க்காண்பனவற்றோடு அறிமுகமாதல்**

- சீனாவின் பொதுவுடைமைப் புரட்சி
- பனிப்போரும் அணிசேரா இயக்கமும்
- கொரியப் போரும் கியூபாவின் ஏவுகணைச் சிக்கலும்
- இஸ்ரேலியப் போரும் வியட்நாம் போரும்
- ஐரோப்பியப் பொருளாதாரக் குழுமம் மற்றும் ஐரோப்பிய ஒருங்கிணைப்பு
- பெர்லின் சுவர் வீழ்ச்சியும் பனிப்போர் யுகமுடிவும்

AMFZEL

## அறிமுகம்

இரண்டாம் உலகப்போருக்குப் பின் ஒரு புதியகாலம் உருவாகியது. இக்காலம் ஐரோப்பிய காலனியப் பேரரசின் வீழ்ச்சியையும் ஆசிய–ஆப்பிரிக்க காலனிய ஆட்சிக்குட்பட்ட நாடுகளின் சுதந்திரத்தையும் துவக்கமாகக் கொண்டிருந்தது. முதலாம் உலகப்போர் ரஷ்யாவில் ஒரு பொதுவுடைமைப் புரட்சியை ஏற்படுத்தியதென்றால் இரண்டாம் உலகப்போர் சீனாவில் ஒரு கம்யூனிசப் புரட்சி ஏற்படக் காரணமாக இருந்தது. அமெரிக்க ஐக்கிய நாடும் ஐக்கிய சோஷலிச சோவியத் குடியரசு நாடும் வல்லரசுகளாக உருவானதோடு அவை எதிரெதிர் இருதுருவங்களாய் பிரிந்து நின்றன. இப்பின்னணியில் உருவான பனிப்போரானது கொரியா, கியூபா, வியட்நாம், மேற்கு ஆசியா போன்ற பகுதிகளில் கடும் மோதல்களுக்கு இட்டுச்சென்றது.

போரினால் பாதிக்கப்பட்ட ஐரோப்பாவின் மறுசீரமைப்பை முன்னிறுத்திய மார்ஷல் திட்டத்தின் மூலமாக அமெரிக்க ஐக்கிய நாடு ஐரோப்பாவின் நம்பிக்கையை வென்றது. சோவியத் ரஷ்யாவோ ஆசிய–ஆப்பிரிக்க நாடுகளின் விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவளித்து அதன் மூலமாக அந்நாடுகளின் நல்லெண்ணத்தைப் பெற்றது.

அணிசேரா நாடுகளின் அமைப்பு இரு வல்லரசுகளுக்கிடையே ஏற்பட்ட முரண்பாட்டைக் கட்டுக்குள்வைக்க ஓரளவு பங்காற்றியது. அமெரிக்கக் கட்டுப்பாட்டிற்குள்ளிருந்து வெளிவரும் பொருட்டு ஐரோப்பிய நாடுகள் ஒரு குழுமத்தை இயக்கவடிவில் முன்னெடுத்துச் சென்றன. இதுவே ஐரோப்பியப் பொதுச்சந்தை என்று மாற்றங் கொண்டு இப்போதுள்ள ஐக்கிய ஐரோப்பாவாக உருப்பெற்றது. பெர்லின் சுவர் உடைக்கப்பட்டதோடு பனிப்போர் காலம் முடிவுக்கு வந்தது.

## 4.1 சீனப்புரட்சி

### (அ) போருக்கு முன்பான சீனா

நீண்ட வரலாற்றைக் கொண்ட சீன நாகரிகம் ஐரோப்பாவைவிட மேம்பட்டதாகும். ஆனால் பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைசியில் அதன் வளர்ச்சி தேங்கியது. அதன் அரசர்களான மஞ்சுக்கள் சீனாவை ஏறக்குறைய 1650 ஆண்டுகள் ஆட்சி புரிந்திருந்தனர். ஆட்சியதிகாரமானது அறிவுமிக்க அதிகாரிகளாக கருதப்பட்ட மாண்டரின்கள் எனும் நிலவுடைமையாளர் வசம் இருந்தது. சாதாரண விவசாயிகள் அதிகமான வரிவிதிப்பினாலும் மிதமிஞ்சிய குத்தகை வசூலிப்பாலும் குறைந்த நிலம் கொண்டவர்களாக விளங்கியதாலும் கடுமையான பாதிப்புகளுக்குட்பட்டு வறுமையின் பிடியில் சிக்கித் தவித்தனர். சில இருப்புப்பாதைப் பணிகளும் பொறியியல் நிபுணத்துவம் கொண்ட சில பணிகளும் நடைபெற்றிருந்தாலும் தொழிற்சாலைகள் போதிய அளவில் உருவாகவில்லை.

www.tntextbooks.in

அரசியல் – பொருளாதார அதிருப்தி பல இடங்களில் விவசாயிகளை எழுச்சியடையச் செய்தது. தைபிங் கலகம் (1850–64) இங்கு ஒரு முக்கிய எழுச்சியாகும். முறையே 1832லும் 1848லும் நடந்த அபினிப்போர்களில் தோல்வியைச் சந்தித்த சீனா முதன்முறையாக மேற்கத்திய ஏகாதிபத்திய சக்திகளுக்கு தன் துறைமுகங்களைத் திறந்துவிட்டது. இம்முடிவினால் பொருளாதாரச் சுரண்டலும் சீனமக்கள் மேலும் வறுமைக்குத் தள்ளப்பட்டதும் நடந்தேறியது.

ஐரோப்பியர்களின் வருகை வெளிநாட்டினர் மீது கடும்வெறுப்பு ஏற்படக் காரணமாக இருந்தது. இவற்றோடு போரில் ஏற்பட்ட தோல்வி மேற்கத்திய கல்வியறிவு பெற்ற அறிஞர்களிடம் சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்த கோரிக்கை வைக்கத் தூண்டியது. மேற்கத்திய கல்வியறிவு பெற்ற அறிவுஜீவிகளின் வழிகாட்டுதலினால் சிறுவயதினரான பேரரசர் 1898இல் நூறுநாட்கள் சீர்திருத்தம் என்ற பெயரில் வரிசையாக சில சீர்திருத்தங்களைத் துவக்கினார். இச்சீர்திருத்தங்கள் பழமைவாதிகளிடமிருந்தும் அரசரின் பாதுகாவலராகத் திகழ்ந்த பேரரசியான சூ சி யிடமிருந்து கடும் எதிர்ப்பினைக் கிளப்பின. பேரரசியார் பேரரசரை சிறையில் தள்ளியதோடு சீர்திருத்தங்களைப் புறந்தள்ளினார்.

### (ஆ) 1911ஆம் ஆண்டு சீனப்புரட்சி

மஞ்சு வம்சத்தின் சிதைவு 1908ஆம் ஆண்டு பேரரசின் பாதுகாவலராயிருந்த பேரரசியார் தாவேகரின் மரணத்தோடுத் துவங்கியது. புதிய பேரரசர் இரண்டு வயதே நிரம்பியவர் என்ற நிலையில் மாகாண ஆளுநர்கள் சுதந்திரமாகச் செயல்படலாயினர். உள்ளூர் இராணுவக் கிளர்ச்சி 1911ஆம் ஆண்டு அக்டோபரில் ஏற்பட்டு அதன் பாதிப்பு பலமட்டங்களில் பரவியது. மாகாண ஆளுநர்கள் மஞ்சு அரசின் பிரதிநிதித்துவங்களை உதறித் தங்கள் சுதந்திரத்தைப் பிரகடனப்படுத்தலாயினர். இக்காலக் கட்டத்தில் நடுத்தர வர்க்கத்திலிருந்து சில தலைவர்கள் உருவாகியிருந்தனர். அவர்களில் டாக்டர் சன் யாட் சென்னும் ஒருவர். சீனாவில் ஏற்பட்ட எழுச்சியைப் பற்றி அமெரிக்க நாளிதழ்களின் மூலமாக அறிந்து கொண்ட டாக்டர் சன் யாட் சென் ஷாங்காய் நகரை வந்தடையந்ததும் அங்கே அவர் சீனக் குடியரசின் தற்காலிக குடியரசுத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

### இ) யுவான் ஷி–கேயும் அதன் பின்னரும்

யுவான் ஷி கேயின் கீழ் சீனா நான்கு வருடம் ஒருமைப்பாட்டுடன் விளங்கியது. 1916ஆம் ஆண்டு அவரது மரணத்திற்குப்பின் அடுத்தப் பனிரெண்டு ஆண்டுகளுக்கு ஒரு குடியரசுத் தலைவர் நியமிக்கப்பட்டிருந்தாலும் அவ்வரசு பெயரளவில் மட்டுமே நடுவண் தன்மையைக் கொண்டிருந்தது.



யுவான் ஷி–கே

### ஈ) சீனப் பொதுவுடைமைக் கட்சி

புரட்சிக்கும் அதோடு இணைந்து சீனப் பழமைவாதிகளின் வீழ்ச்சிக்கும் பின்னர் கன்பூசியசின் சிந்தனைகள் புறந்தள்ளப்பட்டு



**டாக்டர் சன் யாட் சென் (1866–1925)**

ஒரு ஏழ்மையான குடும்பத்தில் காண்டன் நகரத்தின் அருகே பிறந்த டாக்டர் சன்யாட் சென், நவீன சீனாவின் தந்தை, ஒரு கிறித்தவப் பள்ளியில் கல்வி பெற்றதோடு கிறித்தவராகவும் மாறினார். ஹாங்காங் நகரில் மருத்துவப் பயிற்சி பெற்றார். அரசியலில் ஆர்வம் கொண்டிருந்த அவர் 1895இல் மஞ்சுக்களுக்கு எதிரான கிளர்ச்சியில் ஈடுபட்டார். அவர் 1905ஆம் ஆண்டு டோக்கியோவில் ஒரு அரசியல் கட்சியைத் துவக்கினார். அதுவே 1912இல் கோமிங்டாங் என்றும் தேசிய மக்கள் கட்சி என்றும் உருவெடுத்தது. தேசியம், ஜனநாயகம், மக்களின் வாழ்க்கை முறை ஆகிய மூன்று கூறுகளைக் கொண்ட அவர்தம் கொள்கை சோஷியலிசச் சிந்தனையையே உச்சமாகக் கருத்தில் கொண்டது.



**மா சே –துங் ( 1893 – 1976)**

தென்கிழக்குச் சீனாவில் உள்ள ஹுனான் நகரில் மா சே–துங் பிறந்தார். அவரது தந்தையார் செல்வச்செழிப்பான விவசாயிகளில் ஒருவர் என்பதோடு மஞ்சுக்களின் ஆட்சியை ஆதரித்தவராவார். வாசிப்பதில் மிகுந்த ஆர்வங்கொண்ட மா சே–துங் தன் திறமையால் சாங்ஸியாவிலிருந்த இளையோர் கல்லூரியில் இடம்பிடித்தார். அதே ஆண்டு (1911) சீனாவில் புரட்சி வெடித்தது. புரட்சிப்படை ஒன்றை உருவாக்கிய போதும் விரைவில் அதிலிருந்து விலகி சாங்ஸியாவிலிருந்த ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் சேர்ந்தார். பின்னர் ஹுனான் நகரை மையமாகக் கொண்டு தனது அரசியல் வாழ்க்கையைத் துவங்கிய அவர் ஒரு முழு பொதுவுடைமைவாதியாக மாறினார்.



10th_History_Unit_4_TM.indd 45 11-04-2020 11:35:14

1917இல் ஏற்பட்ட ரஷ்யப் புரட்சியோடு மார்க்ஸ், லெனின் போன்றவர்களின் சிந்தனை வலுப்பெற்றது. மார்க்ஸியத்தை கற்கும் விதமாக 1918இல் பீகிங் பல்கலைக்கழகத்தில் ஒரு அமைப்பு உருவாக்கப்பட்டது. இவ்வமைப்பால் நடத்தப்பட்டக் கூட்டங்களில் கலந்துகொண்டவருள் மா சே–துங்கும் ஒருவர் ஆவார்.



சூ–யென்–லாய்

### கோமிங்டாங்கும் ஷியாங் கே–ஷேக்கும்

சன் யாட் சென் இறந்தபின் கோமிங்டாங்கின் தலைவராக ஷியாங்கே–ஷேக்கும், பொதுவுடைமைக்கட்சியின் தலைவர்களாக சூ–யென்–லாயும் மா சே–துங்கும் விளங்கினர். பொதுவுடைமைவாதத்தின் தீவிர விமர்சகரான ஷியாங் தனது கட்சிக்குள்ளிருந்த பொதுவுடைமைவாதிகளை முக்கிய பொறுப்புகளிலிருந்து விடுவித்தார். பொதுவுடைமைவாதிகளின் செல்வாக்கோ பெருகத் தொடங்கி அவர்கள் தொழிலாளர்களையும் விவசாயிகளையும் தங்கள் இராணுவத்தில் பெருமளவில் சேர்க்கும் நிலை ஏற்பட்டது. மேலும் வெற்றிகரமாக அவர் 1928ஆம் ஆண்டு பீகிங்நகரைக் கைப்பற்றினார். மீண்டும் சீனாவில் ஒரு நடுவண் அரசு உருவானது.



ஷியாங் கே – ஷேக்

### விவசாயிகளை வழிநடத்திய மாவோ

கோமிங்டாங்கின் கட்டுப்பாடு நகரங்களின் மீது கடுமையாக இருந்ததை மாவோ (**மா சே –துங்**) உணர்ந்தார். அதனால் அவர் விவசாயிகளை ஒருங்கிணைக்க முயற்சி செய்தார். மாவோவின்தலைமையில்சிலநூறுகம்யூனிஸ்டுகள் காடுகள் சூழ்ந்த மலைப்பகுதிகளில் ஏழு ஆண்டுகள் பதுங்கியிருந்தனர். கோமிங்டாங்கால் அக்காட்டு மலைப்பகுதியில் நுழைய முடியாத அதேவேளையில் மாவோவின் படை பெருகிக்கொண்டே சென்றது. இவர்களை அழித்தொழிக்கும் முயற்சியின் போது ஷியாங் கே–ஷேக் ஜப்பானிடமிருந்தும் வேறு சில போர்ப்படைத் தளபதிகளிடமிருந்தும் அச்சுறுத்தலை எதிர்கொள்ள வேண்டியிருந்ததால் அவரது வேகம் குறைந்தது.

### 1934இல் நீண்ட பயணம்

ஷியாங் கே–ஷேக் பொதுவுடைமை வாதிகளைச் சுற்றி முற்றுகையிடும் விதமாக ஆங்காங்கே பல பாதுகாக்கப்பட்ட அரண்களை அமைத்திருந்தார். மாவோவும் ஹுனான் பகுதியை விட்டு அகன்று பாதுகாப்பான ஒரு பகுதிக்குச் செல்ல நினைத்தார். ஏறத்தாழ 1933ஆம் ஆண்டு வாக்கில் சீன பொதுவுடைமை கட்சியின் மீதான முழுக் கட்டுப்பாடும் மாவோ வசம் வந்து சேர்ந்தது. ஒரு நீண்ட பயணத்தை முன்னெடுத்து 100,000 பொதுவுடைமை இராணுவத்தினர் 1934இல் கிளம்பினர். அப்பயணம் ஒரு சகாப்தமாக மாறியது. இவ்வாறு கிளம்பிய 1,00,000 பேரில் வெறும் 20,000 பேர் மட்டும் 1935இன் பிற்பகுதியில் 6,000 மைல்களைக் கடந்து வடக்கு ஷேனிப் பகுதியை சென்றடைந்தனர். மேற்கொண்டு அவர்களோடு மற்ற பொதுவுடைமைவாதப் படைகளும் சேர்ந்து கொண்டன. 1937ஆம் ஆண்டில் ஏறக்குறைய ஒரு கோடி மக்களின் தலைவராக மாவோ அங்கீகரிக்கப்பட்டார்.



**மாவோவின் நீண்ட பயணம்**

### ஜப்பானிய ஆக்கிரமிப்பு

வடபுறசீனப் பகுதிகளை தொடர்ச்சியாக ஆக்கிரமித்து வந்த ஜப்பான் மஞ்சூரியாவைத் தனது இராணுவத் தளமாகப் பயன்படுத்தியது. மாவோ ஜப்பானுக்கு எதிராக போரிட ஷியாங் கே–ஷேக் தேவை என்றும் அவர் கோமிங்டாங் மீது சிறிது காலத்திற்காவது கட்டுப்பாடு கொண்டிருப்பது அவசியம் என்றும் நினைத்தார். இத்தகைய நெறிப்படுத்தப்பட்ட சிந்தனையால் பொதுவுடைமைவாதிகளின் மீதானத் தாக்குதல் சிறிது சிறிதாகக் குறைக்கப்பட்டது.

### பொதுவுடைமைவாதிகளின் வெற்றி

ஜப்பான் சரணடைவதாக அறிவித்த 1945இல் பொதுவுடைமைவாதிகளும் கோமிங்டாங் கட்சியினரும் போட்டி போட்டுக் கொண்டு ஜப்பானின் பகுதிகளை ஆக்கிரமிக்கலாயினர். இப்போட்டியில் கோமிங்டாங்கே வெற்றி பெற்றது. ஜப்பானிய நகரங்களும் இருப்புப்பாதைப் போக்குவரத்தும் அதன் கட்டுப்பாட்டுக்குள் வந்தன. அமெரிக்க ஐக்கிய நாடு இராணுவரீதியாக உதவியதால் ஷியாங் கே–ஷேக்கின் படைகள் பீகிங்கை சுற்றியமைந்திருந்த பகுதிகளைத் தங்களின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

www.tntextbooks.in

அமெரிக்க ஐக்கிய நாட்டின் அமோக ஆதரவால் கோமிங்டாங் அரசு நிர்வாகத்தையும், துறைமுகங்களையும் தகவல் தொடர்பையும் தன்வசப்படுத்திக் கொண்டது. ஆனால் பெரும்பான்மையாக விவசாயிகளை உள்ளடக்கியப் போர்வீரர்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யாததால் அவர்களின் அதிருப்தியையும் சம்பாதித்தது. நடுத்தர வர்க்கத்தின் ஆதரவைப் பெற மாவோ கடுமையாக முயற்சித்தார். அதனால் கம்யூனிஸ்டுகள் மக்களாட்சியைத்தான் விரும்புவதாகவும் சர்வாதிகார ஆட்சியை அல்ல என்றும், சுரண்டலை முடிவுக்கு கொண்டுவரவே முனைவதாகவும் முழுமையான சமத்துவத்தை நிறுவ அல்ல என்றும் பிரகடனப்படுத்தினார்.

### தேசிய மக்கள் காங்கிரஸ்

தென் சீனாவில் சச்சரவுகள் முடிவை வந்தடையும் முன்பே செப்டம்பர் 1949இல் மக்கள் அரசியல் கலந்தாய்வு மாநாடு பீகிங் நகரில் கூடியது. பொதுவுடைமைக் கட்சியிலிருந்தும் பிற இடதுசாரி அமைப்புகளில் இருந்தும் 650 பிரதிநிதிகள் கலந்து கொண்ட இம்மாநாடு நடுவண் ஆட்சிக்குழுவைத் தேர்ந்தெடுத்து அதற்கு மா சே துங்கை தலைவராக நியமித்தது. இக்குழு ஐந்தாண்டுகளுக்குச் சீனாவை ஆட்சி செய்தது.

மா சே துங்கின் (மாவோ) தலைமையில் உருவான சீன மக்கள் குடியரசு ஆட்சியின் செயல்பாடுகள் உலகையே திரும்பிப் பார்க்க வைத்தது. உலகின் இரு பெரும் பொதுவுடைமை சக்திகளாய் சோவியத் ரஷ்யாவும் சீன மக்கள் குடியரசும் உருவெடுத்தன.

### ஐ.நா. சபையில் உறுப்பினராக மறுக்கப்படல்

அமெரிக்க ஐக்கிய நாடு ஏறத்தாழ இருபது ஆண்டுகளுக்கு மேலாக சீன மக்கள் குடியரசை அங்கீகரிக்க மறுத்ததால் ஐ.நா. சபையில் உறுப்பினராக தாமதமானது.

## 4.2 பனிப்போர்: அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கும் சோவியத் ஐக்கியத்திற்கும் இடையே ஏற்பட்ட எதிர்ப்பு

### 1. பொதுவுடைமையைக் கட்டுக்குள் வைக்க ட்ரூமெனின் வரையறை


ட்ரூமென்

கிழக்கு ஐரோப்பாவில் நாசிக்கள் கட்டுப்பாட்டுக்குள் இருந்து விடுவிக்கப்பட்ட நாடுகளில், சோவியத் இராணுவத்தால் 1948 முதல் பொதுவுடைமை அரசுகள் ஏற்படுத்தப்பட்டது. அமெரிக்க ஐக்கிய நாட்டின் குடியரசுத் தலைவரான ட்ரூமென் பொதுவுடைமையை கட்டுக்குள் வைக்க ஒரு வரைவை முன் மொழிந்தார். சோவியத் நாடோ கிழக்கு ஐரோப்பா மட்டுமல்லாமல் உலகம் முழுதும் பொதுவுடைமைக் கருத்தைப் பரப்ப தீர்மானமாக இருந்தது.

> **பனிப்போர்:** இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கும் சோவியத் நாட்டிற்கும் இந்நாடுகளின் நட்பு நாடுகளுக்குமிடையே மூண்ட விரோதம், பரபரப்பையே பனிப்போர் என்கின்றனர். அவை நேரடியாக ஆயுதங்களைக் கொண்டு தாக்குதல் நடத்தவில்லை மாறாக அவர்கள் அரசியல் பொருளாதார சிந்தனைத் தளங்களைத் தேர்வு செய்துகொண்டனர்.

### 2. மார்ஷல் திட்டம்

மேற்கு ஐரோப்பிய நாடுகளை தன் செல்வாக்கினுள் வைத்துக் கொள்ள அமெரிக்க ஐக்கிய நாடு மார்ஷல் திட்டத்தை உருவாக்கியது. இத்திட்டம் இரண்டாம் உலகப்போரின் பாதிப்புகளில் இருந்து மீண்டு வருவதற்காக அமெரிக்க டாலர்களைப் பயன்படுத்திக் கொள்ள வழிவகை செய்தது.


மார்ஷல்

இரண்டாம் உலகப் போருக்கு பிறகு ஏற்பட்ட வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம், இடம் பெயர்வு போன்ற பிரச்சனைகளே மேற்கு ஐரோப்பாவிற்குள் பொதுவுடைமைக் கருத்து வளரக் காரணமாய் அமையும் என்று அமெரிக்க ஐக்கிய நாடு கருதியது. அமெரிக்க ஐக்கிய நாட்டின் செயலர் ஜார்ஜ் சி.மார்ஷல் ஐரோப்பாவின் சுய முன்னேற்ற முயற்சிக்குத் தம் நாடு பணஉதவி செய்யுமென்று அறிவித்தார். பதினாறு நாடுகள் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்தன. நிர்வாக மற்றும் தொழில்நுட்ப உதவிகளும் அமெரிக்க ஐக்கியப் பொருளாதார ஒத்துழைப்பு நிர்வாகத்தின் கீழ் வழங்கப்பட்டன. நிதியுதவி வழங்கும் மார்ஷலின் திட்டமானது 1951இல் முடிவுக்கு வந்தது.

## 4.3 இராணுவ ஒப்பந்தங்களின் உருவாக்கம்

### (அ) நேட்டோ (NATO)

அமெரிக்க ஐக்கிய நாடும் அதன் ஐரோப்பியத் தோழமை நாடுகளும் சேர்ந்து வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பை 1949இல் ஏற்படுத்தி சோவியத் நாட்டின் ஆக்கிரமிப்புப் போக்கை ஐரோப்பாவிற்குள்



10th_History_Unit_4_TM.indd 47 11-04-2020 11:35:15

தடைசெய்ய முற்பட்டன. இவ்வொப்பந்தம் வடக்கு அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவின் நாடுகளுக்கிடையே ஏற்படுத்தப்பட்ட இராணுவக் கூட்டுஒப்பந்தமாகும். இதன் முக்கிய உறுப்பு நாடுகள் கனடா, பெல்ஜியம், டென்மார்க், பிரான்ஸ், ஐஸ்லாந்து, இத்தாலி, லக்ஸம்பர்க், நெதர்லாந்து, நார்வே, போர்த்துகல் மற்றும் இங்கிலாந்து ஆகியன. பின்னர் 1952இல் துருக்கியும் கிரீசும் இவ்வொப்பந்தத்தில் இணைந்து கொண்டன. ஜெர்மனி 1955ஆம் ஆண்டு இவ்வொப்பந்தத்தில் இணைந்தது. நேட்டோ ஒப்பந்தத்தின் முக்கிய அம்சமானது வடக்கு அட்லாண்டிக் பகுதியில் அமைதியையும் பாதுகாப்பையும் உறுதி செய்வதாகும்.

### (ஆ) சீட்டோ (SEATO) அல்லது மணிலா ஒப்பந்தம்

தென்கிழக்கு ஆசிய ஒப்பந்த அமைவு என்பது தென்கிழக்கு ஆசிய நாடுகளின் கூட்டுப் பாதுகாப்பை முன்னிறுத்தியதாகும். மணிலா ஒப்பந்தம் (1954), அமெரிக்க ஐக்கிய நாடு, பிரான்ஸ், இங்கிலாந்து, நியூஸிலாந்து, ஆஸ்திரேலியா, பிலிப்பைன்ஸ், தாய்லாந்து மற்றும் பாகிஸ்தான் போன்ற நாடுகளால் கையெழுத்திடப்பட்டது. இவ்வொப்பந்தத்தின் உறுப்புநாடுகள் இப்பகுதியில் பொதுவுடைமைச் சிந்தனை பரவுவதையும் அக்கொள்கை செல்வாக்குப் பெறுவதையும் தடுப்பதற்காக ஏற்படுத்தப்பட்டது. ஆனால் நேட்டோ கூட்டமைப்பில் இருந்தது போன்று நிரந்தரப் படைகளையோ, ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டையோ சீட்டோ கொண்டிருக்கவில்லை.

### (இ) வார்சா ஒப்பந்தம்

நேட்டோவிற்கு எதிராக சோவியத் நாடு தன் ஆதரவு நாடுகளைக் கொண்டு உருவாக்கியதே வார்சா ஒப்பந்தமாகும். ஐரோப்பாவை சேர்ந்த எட்டு முக்கிய நாடுகளான அல்பேனியா, பல்கேரியா, ஹங்கேரி, செக்கோஸ்லோவியா, கிழக்கு ஜெர்மனி, போலந்து, ருமேனியா, ரஷ்யா ஆகியவை டிசம்பர் 1954இல் மாஸ்கோவில் கூடி ஒரு கலந்துரையாடலை நடத்தின. இவை மீண்டும் மே 14, 1955இல் கூடி ஓர் ஒப்பந்தத்தை ஏற்படுத்தின. இதுவே 'வார்சா உடன்படிக்கை' என்று அழைக்கப்படுகிறது. இந்நாடுகள் மாஸ்கோவைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு கூட்டு இராணுவ முகமையை நிறுவின. 1991இல் வார்சா ஒப்பந்தத்தை சோவியத்தின் பிளவு முடிவுக்குக் கொண்டு வந்தது.

### (ஈ) சென்டோ (CENTO) அல்லது பாக்தாத் ஒப்பந்தம்

துருக்கி, ஈராக், பிரிட்டன், பாகிஸ்தான், ஈரான் ஆகிய நாடுகள் 1955இல் ஏற்படுத்திய ஒப்பந்தமே பாக்தாத் ஒப்பந்தம் என்றழைக்கப்படுகிறது. அமெரிக்க ஐக்கிய நாடு இவ்வுடன்படிக்கையில் 1958இல் இணைந்ததோடு, இவ்வொப்பந்தம் 'மத்திய உடன்படிக்கை அமைப்பு' என்று அறியப்பட்டது. இவ்வொப்பந்தம் அமைதியையும் பாதுகாப்பையும் விரும்பும் அனைத்து அரபு நாடுகளுக்கும் திறந்தே இருப்பதாக அறிவிக்கப்பட்டதெனினும் இவ்வொப்பந்தம் 1979இல் கலைக்கப்பட்டது.

## 4.4 கொரியப்போர்

கொரியப்போர் பனிப்போரை மேலும் சூடுபிடிக்க வைத்தது. கொரிய நாடு வடக்கு தெற்கு என இருபிரிவுகளாக 1945இல் பிரிக்கப்பட்டபின் உருவான இருநாடுகளும் மறு ஒருங்கிணைப்பை வலியுறுத்தினாலும் அவ்வாறு ஒருங்கிணைத்த பின் உருவாகக்கூடிய நாட்டிற்குத் தாமே சட்டப்பூர்வமாக ஆளும் உரிமைபெற்றவர் என்று வாதிட்டன. வடகொரிய அதிபரான இரண்டாம் கிம் (கொரிய மக்கள் குடியரசு) தென்பகுதி எதிரியாகக் கருதிய சிங்மென் ரீ–க்கு (கொரியக் குடியரசு) ஒரு வாய்ப்புக்கிடைக்கும் முன்பே செயல்பட முடிவெடுத்தார். ஸ்டாலினின் பின்புலத்தில், ஜூன் 1950இல் அவர் படையெடுப்பைத் துவக்கினார். கிம்மும் ஸ்டாலினும் இப்பிரச்சனையில் அமெரிக்க நாடு தலையிடும் என்று எதிர்பார்க்கவில்லை. இப்போர் மூன்று ஆண்டுகள் வரை நீடித்தது இப்போரால் ஏற்பட்ட மனித உயிரிழப்பு எண்ணிக்கையில் அளவிட முடியாததாய் இருந்தது. இதனால் கொரிய மக்களுக்கு எந்த லாபமும் ஏற்படவில்லை.

### மூன்றாம் உலக நாடுகள்

அமெரிக்க ஐக்கிய நாட்டின் தலைமையில் கூடிய முதலாளித்துவ நாடுகள் உலக அரசியலில் முதலாம் உலக நாடுகள் என்றும் சோவியத் நாட்டின் தலைமையில் கூடிய பொதுவுடைமை நாடுகள் இரண்டாம் உலக நாடுகள் என்றும் அழைக்கப்பட்டன. இவ்விரு பிரிவிலும் சேராமல் வெளியிலிருந்த நாடுகள் மூன்றாம் உலக நாடுகள் என்று அழைக்கப்பட்டன.

## 4.5 அணிசேரா இயக்கம்

இரண்டாம் உலகப்போருக்குப் பின் ஏற்பட்ட காலனியாதிக்க வெளியேற்றத்தின் பின்னணியில் அணிசேரா இயக்கம் உருப்பெற்றது. புதிதாக அரசியல் சுதந்திரம் பெற்ற ஆசிய, ஆப்பிரிக்க நாடுகள் 1955இல் பாண்டுங்கில் (இந்தோனேசியா) கூடி இரு வல்லரசுகளின் அணிகளிலும் சேரக்கூடாது என்பதைத் தீவிரமாக வலியுறுத்தின. மேலும் அவை காலனிய ஆதிக்கமும் ஏகாதிபத்தியமும் எவ்வடிவம் எடுத்தாலும் அதை எதிர்த்து நிற்பது என்று முடிவு செய்தன.

அணிசேரா இயக்கம் 1961இல் டிட்டோ (யுகோஸ்லோவியா), நாசர் (எகிப்து), நேரு (இந்தியா), நுக்ருமா (கானா), சுகர்ணோ (இந்தோனேசியா)



10th_History_Unit_4_TM.indd 48 11-04-2020 11:35:15

ஆகிய தலைவர்களை முன்னிறுத்தி பெல்கிரேடில் ஒரு மாநாட்டைக் கூட்டியது. பெல்கிரேட் மாநாட்டில் வெளியிடப்பட்ட அறிக்கை அதன் அடிப்படைக் கொள்கைகளாகக் கூறுவதாவது: அமைதியோடு இணைந்திருத்தல், அமைதியையும் பாதுகாப்பையும் முன்னிறுத்தப் பாடுபடல், எந்த அணியோடும் இராணுவக் கூட்டுறவுக் கொள்ளாமல் இருத்தல், எந்த வல்லரசுக்கும் தத்தம் நாட்டிற்குள் இராணுவ நிலைகள் ஏற்படுத்த அனுமதி வழங்காமல் இருத்தல் போன்றவையே ஆகும். சோவியத்தின் வீழ்ச்சிக்குப் பிறகு அணிசேரா இயக்கத்தின் தேவை மங்கியது.



**முதலாவது உச்சிமாநாடு, பெல்கிரேடு**

## 4.6 கியூபாவின் புரட்சி



பிடல் காஸ்ட்ரோவும்

அமெரிக்க ஐக்கிய நாடு மத்திய அமெரிக்காவிலும் (ஹோண்டுரஸ், எல் சல்வதோ, நிகரகுவா, பனாமா, க்வாத்தமாலா) கரீபியப் பகுதியிலும் (கியூபா, டோமினியக் குடியரசு, ஹைதி) கிழக்கு ஆசியாவிலும் (பிலிப்பைன்ஸ், தென் கொரியா, தெற்கு வியட்நாம், தாய்லாந்து) தனக்கு துணைக் கோள்களாகச் சுற்றிச் செயல்படும் நாடுகளைக் கொண்டிருந்தது. இந்நாடுகள் இராணுவ அதிகாரிகளாலும் பெரும் நிலச்சுவான்தாரர்களாலும் சில சூழ்நிலைகளில் பெருமுதலாளிகளாலும் ஆட்சி செய்யப்பட்டு வந்தன.

காஸ்ட்ரோ பதவியேற்ற பின் கியூபாவிலிருந்த அமெரிக்க ஐக்கிய நாட்டிற்குச் சொந்தமான எண்ணெய்ச் சுத்திகரிப்பு நிலையங்கள் ரஷ்யாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட எண்ணெய்களைச் சுத்திகரிக்க மறுத்தன. ஆகவே காஸ்ட்ரோ எண்ணெய் ஆலைகளை தேசியமயமாக்கினார். அதற்குப் பதிலடியாக அமெரிக்க ஐக்கிய நாடு அதுவரை கியூபாவிலிருந்து மொத்தமாக சர்க்கரைக் கொள்முதல் செய்து வந்ததை நிறுத்திக் கொண்டது. காஸ்ட்ரோ நாட்டிலிருந்த அமெரிக்க ஐக்கிய நாட்டின் சர்க்கரை ஆலைகளை தேசியமயமாக்கியதன் மூலம் மின்சார விநியோகத்திலும் தொலைபேசி வசதிகள் ஏற்படுத்துவதிலும் அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கிருந்த ஏகபோக உரிமையை முடிவுக்குக் கொண்டு வந்தார். இதனால் அமெரிக்கப் பொருளாதாரத்திற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டது.

### கியூபாவின் ஏவுகணைச் சிக்கல்

கியூபாவிலிருந்து வெளியேற்றப்பட்டிருந்த மக்களைக் கொண்ட ஒரு படையை பிக்ஸ் வளைகுடாவில் ஏப்ரல் 1961இல் இறக்கிய அதே வேளையில் காஸ்ட்ரோவின் ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கோடு அதன் விமான தளங்களை அமெரிக்க ஐக்கிய நாடுகள் குண்டு வீசித் தாக்கியது. அமெரிக்காவின் போர்க் கப்பல்கள் கியூபாவைச் சுற்றிவளைத்தன. சோவியத்நாடு கியூபாவில் அணுசக்தியோடு இணைக்கப்பட்ட ஏவுகணைகளை இரகசியமாக நிறுவப்போவதாய் கென்னடி தலைமையிலான அமெரிக்க அரசிற்கு உளவுத்துறை தகவல் கொடுத்தது. இறுதியாக சோவியத்நாட்டின் குடியரசுத்தலைவர் குருசேவ் ஏவுகணைகளைத் திரும்பப்பெற உறுதியளித்ததால் பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

மேற்கொண்டு இருதரப்பினரும் ஒரு உடன்படிக்கையை ஏற்படுத்த முன்வந்தனர். அதன்படி அமெரிக்கநாடு கியூபா மீது எப்போதும் போர்தொடுப்பதில்லை என்ற நிலைப்பாட்டை உறுதி செய்ததால் சோவியத் நாடு ஏவுகணைகளைக் கியூபாவிலிருந்து அகற்றியது.

## 4.7 அரபு–இஸ்ரேல் போர்

வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் (1919) மூலம் 'துருக்கிய அரபுப் பேரரசை' உருவாக்க நிர்ப்பந்திக்கப்பட்டது. பிரான்ஸ் நாடு சிரியாவையும் லெபனானையும் ஒருங்கிணைக்கவும் பிரிட்டன் நாடு ஈராக், பாலஸ்தீன், ஜோர்டான் ஆகிய நாடுகளை ஒருங்கிணைக்கவும் ஏற்பாடானது. முதலாம் உலகப்போருக்குப்பின் சுதந்திரத்தை எதிர்பார்த்த அரேபியர்கள் இவ்வேற்பாட்டால் அதிர்ச்சியடைந்தனர். சீயோனிய இயக்கத் தலைவர்களுக்கு பிரிட்டன் நாடு பாலஸ்தீனத்தின் பகுதிகளை யூதக்குடியிருப்புகளுக்கு வழங்க உறுதியளித்தது. யூதர்கள் அரேபியரின் எந்த ஒரு கிளர்ச்சியையும் பிரிட்டனுடன் சேர்ந்து ஒடுக்க உறுதியளித்தனர். வசதியான அரேபியரிடம் நிலங்களை விலைபேசிப் பெற்றுக்கொண்ட யூதர்கள் அங்கே பல தலைமுறைகளாக வேளாண்மை செய்து வந்தவர்களை விரட்டியதால் அரேபியர்களின் வெறுப்புணர்ச்சியும் எதிர்ப்பும் மிகுந்தது.

1945 அக்டோபர் கடைசியில் யூதத் திரைமறைவு அமைப்புகளான இர்கூன் ஸ்வாய் லூமி (சீயோனியத் துணை இராணுவ அமைப்பு) ஸ்டென் காங்கும் (சீயோனிய பயங்கரவாத அமைப்பு) தொடர்ச்சியாக பயங்கரவாதத் தாக்குதல்களை பெருமளவில் தொடுத்தன. இருப்புப்பாதைகள், பாலங்கள், விமானத்தளங்கள், அரசு அலுவலகங்கள் போன்றவை வெடிவைத்துத் தகர்க்கப்பட்டன. பிரிட்டிஷ் அரசு பிரச்சனையை ஐ.நா. சபைக்கு எடுத்துச் சென்று தீர்வு கோரியது. ஐ.நா. சபையும் அதற்கு உடன்பட்டு பிரிவினைக்குச் சம்மதித்தது. பிரிட்டன் தனது துருப்புகளை விலக்கிக்கொள்ள முடிவு செய்த போது அங்கு மீண்டும் சண்டை மூண்டது.

பிரிட்டிஷ் நாட்டின் யோசனையை வல்லரசுகள் ஆதரித்ததால் ஐ.நா. சபையும் அதற்கு உடன்பட்டு பாலஸ்தீனத்தை யூத நாடாகவும் அரேபிய நாடாகவும் (29 நவம்பர் 1947) இரு பிரிவுகளாகப் பிரித்தது. இதனால் யூதர்களுக்கும் அரேபியர்களுக்கும் பாலஸ்தீனத்தில் உடனடியாக சண்டை மூண்டது.

**சீயோனிய இயக்கம் :** யூதர்களின் பூர்வீகப்பகுதியான பாலஸ்தீனத்தில் 1900இல் ஆயிரம் யூதர்களே குடியிருந்தனர். இவ்வினத்தின் பதினைந்து மில்லியன் மக்கள் ஐரோப்பாவிலும் வடக்கு அமெரிக்காவிலும் பரவிக்கிடந்தனர் (இதுவே 'புலம்பெயர்' சமூகம் என்று குறிக்கப்படுகிறது). வியன்னாவில் பத்திரிகையாளராக இருந்த தோடோர் ஹெர்சல் யூத நாடு என்ற பெயரில் 1896ஆம் ஆண்டு ஒரு துண்டுப்பிரசுரத்தை வெளியிட்டார். அதற்கு அடுத்த ஆண்டு (1897) உலக சீயோனிய அமைப்பு உருவாக்கப்பட்டது.

இஸ்ரேலியர்கள் ஜெருசலேமுக்குச் செல்லும் முக்கிய சாலையைக் கைப்பற்றிய பின் அதை மீட்க அரேபியர்கள் மேற்கொண்டப் பல முயற்சிகளையும் வெற்றிகரமாக முறியடித்தனர். இஸ்ரேலுடன் அரபு நாடுகள் தனித்தனியாக 1947 பிப்ரவரி முதல் ஜூன் வரை ஏற்படுத்திக் கொண்ட அமைதி உடன்படிக்கைகளின் கீழ் இஸ்ரேலுக்கும் அதன் பக்கத்து நாடுகளுக்குமிடையே தற்காலிகமான எல்லை நிர்ணயம் செய்யப்பட்டது. இஸ்ரேலைப் பொறுத்தவரை இக்காலகட்டத்தில் நிகழ்ந்த போர்கள் யாவும் அதன் சுதந்திரவேட்கையின் வெளிப்பாடாகவும் சுதந்திரப் போராகவுமே நினைவு கொள்ளப்பட்டது. அரேபியர்களைப் பொறுத்தமட்டில் பலரும் இப்போர்களினால் அகதிகளாக இடம்பெயர வேண்டியிருந்ததால் அது நக்பா (பேரழிவு) என்று கருதப்பட்டது. அரேபியர்களின் எதிர்ப்பை மீறி இஸ்ரேலுக்கு உடனடியாக ஐ.நா. சபையின் உறுப்பினர் அந்தஸ்து வழங்கப்பட்டது.

### சூயஸ் கால்வாய் சிக்கல் (1956)

எகிப்தில் 1952இல் நிகழ்ந்த ஓர் இராணுவக் கிளர்ச்சியின் மூலமாக கர்னல் நாசர் குடியரசுத்தலைவராக ஆக்கப்பட்டார். அவர் 1956ஆம் ஆண்டில் சூயஸ் கால்வாயை தேசியமயமாக்கினார். இது பிரிட்டிஷாரின் நல்லெண்ணெத்திற்கு விரோதமாகத் தெரிந்தது. இராஜதந்திரப் பிரயோகங்கள் பலனளிக்காத நிலையில் பிரிட்டனும் பிரான்சும் இணைந்து இராணுவ பலத்தைப் பயன்படுத்த முடிவுசெய்தன. இச்சூழலில் தனக்கு ஒரு வாய்ப்பு இருப்பதாகக் கருதிய இஸ்ரேல் தனது கப்பல் போக்குவரத்திற்கு வசதியாக அக்கபா வளைகுடாவை திறந்துவிட்டதோடு அதன் மூலம் எகிப்தின் எல்லை மீறிய செயல்களுக்கு முற்றுப்புள்ளி வைத்தது. இஸ்ரேலியப் படைகள் அக்டோபர் 29இல் எகிப்து மீது படையெடுத்தன. இவ்வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள நினைத்த பிரிட்டன் தனது படைகளைக் கால்வாயைக் காப்பாற்றும் வகையில் நிறுத்தி வைக்க அனுமதி கோரியது. இதற்கு எகிப்து மறுத்ததால் அக்டோபர் 31இல் பிரிட்டனும் பிரான்சும் இணைந்து அந்நாட்டின் விமானத்தளங்கள் மீதும் இன்னபிற முக்கியத்தளங்கள் மீதும் சூயஸ்கால்வாய்ப் பகுதியிலும் குண்டுவீசின. எனினும் உலக நாடுகளின் வற்புறுத்தலின்பேரில் நவம்பர் 6ஆம் தேதி பிரான்சும் பிரிட்டனும் தங்கள் எதிர்ப்பை நிறுத்திக்கொண்டன. இந்தியாவை பிரதிநிதித்துவப்படுத்தி நேரு இப்பிரச்சனைக்கு முடிவுகட்ட சீரிய பங்காற்றினார்.



**சூயஸ் கால்வாய் சிக்கல்**

### அரபு – இஸ்ரேல் போர் (1967)

பாலஸ்தீனிய விடுதலை அமைப்பு உருவானது முதல் சிரியா, லெபனான், ஜோர்டான் ஆகிய நாடுகளில் பதுங்கியிருந்த பாலஸ்தீனிய கொரில்லாப்படைகள் இஸ்ரேலைத் தாக்கிவந்தன. இஸ்ரேல் பதிலடி கொடுத்து வந்தது. ஜோர்டானின் மேற்குக்கரையில் அமைந்திருந்த அல்–சமூ என்ற கிராமத்தின் மீது நவம்பர் 1966இல் இஸ்ரேல் விமானத் தாக்குதல் நடத்தி 18 பேர் உயிரிழக்கவும் 54 பேர் காயங்கள் அடையும்படியும் செய்தது. சிரியாவுடன் ஏப்ரல் 1967இல் நடந்த வான்வெளித்



10th_History_Unit_4_TM.indd 50 11-04-2020 11:35:15

www.tntextbooks.in

தாக்குதலில் ஆறு சிறிய மிக் ரகப் போர் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. சிரியாவுக்கு தார்மீக ஆதரவு கொடுக்க விழைந்த நாசர் சினாய் மலையில் எகிப்தியப் படைகளை கொண்டு வந்து நிறுத்தியதோடு மே 18இல் ஐ.நா. சபை அங்கு நிறுத்தி வைத்திருந்த படைகளை அப்புறப்படுத்தக் கோரினார். மேலும் மே 22இல் அக்கபா வளைகுடாவை வளைத்து அங்கு இஸ்ரேலியக் கப்பல்கள் நுழைய முடியாதபடி செய்தார். ஜோர்டானின் மன்னர் ஹுசைன் எகிப்தோடு பரஸ்பர இராணுவ ஒப்பந்தங்களை ஏற்படுத்திக் கொண்டார். இதன்படி ஜோர்டானியப் படைகள் எகிப்தின் கட்டளைக்கு அடிபணியச் சம்மதித்தன. சிறிதுகாலத்தில் ஈராக்கும் இக்கூட்டணியில் இணைந்தது.

**பாலஸ்தீனிய விடுதலை அமைப்பு**

இஸ்ரேல் என்ற தேசம் 1948இல் உருவாவதற்கு முன் பாலஸ்தீனில் வாழ்ந்த அரேபியர்களுக்கும் அவர்கள் வம்சாவளியினருக்குமாக உருவாக்கப்பட்ட ஒரு பரந்த அமைப்பு இதுவாகும். இரகசியமாக செயல்பட்டுவந்த எதிர்ப்பு இயக்கங்கள் தங்களை ஒருங்கிணைக்க 1964இல் உருவாக்கப்பட்ட அமைப்பாகும். இவ்வமைப்பின் முக்கிய தலைவர் யாசர் அராபத் ஆவார்.

### இஸ்ரேலின் தாக்குதல்

அரபு நாடுகளை நாசர் ஒன்றிணைக்க மேற்கொண்ட முயற்சியைத் தொடர்ந்து ஜூன் 5ஆம் தேதி இஸ்ரேல் எதிர்பாராத தாக்குதல் ஒன்றைத் தொடுத்து எகிப்தின் 90 சதவீத விமானப்படையை தரைமட்டமாக்கியது. இதுபோன்றே நிகழ்ந்த மற்றொரு தாக்குதலில் சிரியாவின் விமானப்படையும் கடும் பாதிப்புக்கு உள்ளாகியிருந்தது. மூன்றே நாட்களில் இஸ்ரேலியர்கள் காஸா பகுதியையும் சூயஸ் கால்வாயின் கிழக்குப்புறம் அமைந்த சினாய் தீபகற்பத்தின் முழுமையையும் கைப்பற்றிப் பெரும் வெற்றியைக் குவித்தனர்.



**யாசர் அராபத் (1924–2004)**

யாசர் அராபத் பாலஸ்தீன விடுதலை அமைப்பின் செயற்குழுவிற்கு 1969இல் தலைமையேற்று 2004இல் அவர் இறக்கும் வரை அப்பொறுப்பில் வீற்றிருந்தார். செப்டம்பர் 1970இல் அவர் அனைத்துப் பாலஸ்தீன அரபு கொரில்லாப்படைகளுக்கும் முதன்மைத் தளபதியாகவும் நியமிக்கப்பட்டிருந்தார். ஒரு தலைப்பாகையுடனும் மறைவாக அவர் வைத்திருந்த துப்பாக்கியும் ஆலிவ் மரக்கிளையின் பகுதியும் அவர்தம் இராணுவச்சீருடையும் காண்போர் மனதில் பாலஸ்தீனப் பிரச்சனையின் தீவிரத்தை நினைவூட்டுவதாக அமைந்தது. அவர் 2 ஏப்ரல் 1989 அன்று பாலஸ்தீன விடுதலை அமைப்பின் நடுவண்குழுவால் பாலஸ்தீன தேசத்தின் முதல் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

### அரபுஇஸ்ரேல் போர் (1973)

தங்களின் படைகளை ஒரே கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் நோக்கோடு எகிப்தின் அதிபர் அன்வர் சாதத்தும் சிரியாவின் அதிபர் ஹபீஸ் அல்–ஆஸாத்தும் ஜனவரி 1973இல் ஒரு இரகசிய ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டனர். சாதத் சினாய் மலையை விட்டு இஸ்ரேல் விலகினால் தாம் அமைதி உடன்படிக்கைக்குத் தயாராய் இருப்பதாகத் தெரிவித்தார். இதற்கு இஸ்ரேல் இணங்கவில்லை. ஆகவே எகிப்தும் சிரியாவும் யோம் கிப்பூர் சமய விடுமுறையன்று (6 அக்டோபர் 1973) ஒரு எதிர்பாராத திடீர் தாக்குதலை இஸ்ரேல் மீது தொடுத்தனர். இத்தாக்குதலில் இஸ்ரேல் கடும்பின்னடைவைச் சந்தித்தபோதும் அதனால் அரபுப் படைகளை புறந்தள்ள முடிந்தது. இப்போரினால் அரேபியர்களும் எந்தலாபமும் பெறமுடியவில்லை. இப்பிரச்சனையில் நடுவராகச் செயல்படும் போர்வையில் அமெரிக்க ஐக்கிய நாடு தனது ஆதிக்கத்தை அரபு நாடுகள் மீதும் அங்கே அமையப்பெற்ற எண்ணெய்க் கிணறுகள் மீதும் நிறுவியது.



**அதிபர் அன்வர் சாதத், அதிபர் ஹபீஸ் அல்–ஆஸாத்**

## 4.8 வியட்நாம் போர்

இரண்டாம் உலகப்போரின் முடிவில் வியட்மின் என்ற அமைப்பு வியட்நாமின் வடக்குப் பாதியைத் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தது. வியட்மின் ஹோ சி மின் தலைமையில் ஹனோய் நகரில் ஒரு அரசை உருவாக்கியது. இவ்வியட்மின் அரசு தென்பாதி வியட்நாமை வேகமாக ஆக்கிரமித்தது. எனினும் போட்ஸ்டாம் நகரில் கூடிய நேசநாடுகள் ஜப்பானிடமிருந்து மீட்கப்பட்ட இந்தோ–சீனப்பகுதியின் தெற்குப்பகுதியை பிரிட்டிஷாரும் வடக்குப்பகுதியை சீனாவுமாக பிரித்துக் கொள்வது என முடிவு செய்தன. ஹோ சி மின்னின் கட்டுப்பாடு



10th_History_Unit_4_TM.indd 51 11-04-2020 11:35:15

உறுதியாக இருந்ததால் வியட் மின்னையும் பிரெஞ்சுப்படைகளையும் மோதிக்கொள்ளும்படி செய்துவிட்டு சீனப்படைகளும் பிரிட்டிஷ்படைகளும் 1946இன் தொடக்கத்தில் பின்வாங்கின. இரு அரசுகளும் (பிரெஞ்சு மற்றும் வியட்மின்) ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கையின் அடிப்படையில் வடக்கு வியட்நாம் ஒரு விடுதலைபெற்ற நாடாக இந்தோ–சீனக் கூட்டாட்சியில் பங்கெடுப்பது என்று முடிவானது.

1949இல் மக்களின் ஆதரவைப்பெற எண்ணிய பிரெஞ்சு அரசு வியட்நாம், லாவோஸ், கம்போடியா ஆகிய நாடுகளை ஒரு பிரெஞ்சு கூட்டாட்சியினுள் கொண்டு வந்து அவற்றை சுதந்திரநாடாக அறிவித்து அந்நாடுகளின் வெளியுறவுத்துறையையும் இராணுவத்தையும் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ளப் போவதாய் கூறியது.

அமெரிக்காவிடமிருந்து உதவித்தொகையை பிரெஞ்சு பெற்றபோது வியட்மின்னுக்கு சீனப் பொதுவுடைமை அரசு உதவி செய்தது. இறுதியில் பிரெஞ்சுப்படைகள் போரில் தோற்கடிக்கப்பட்டது. பின் கொரியாவில் 1954இல் கூடிய ஜெனீவா மாநாட்டில் வியட்நாம் ஒரு சுதந்திர நாடாகக் கொள்ளப்பட்டாலும் தற்காலிகமாக வியட்மின் வடக்கு வியட்நாமையும் பாவோடாய் தலைமையிலான அரசு தெற்கு வியட்நாமையும் ஆட்சி செய்வது என்று முடிவுசெய்யப்பட்டது. கம்போடியாவும் லாவோஸும் சுதந்திரம்பெற்ற நாடுகளானது.

ஹோ சி மின்னை குடியரசுத்தலைவராக ஏற்று 16மில்லியன் என்ற அளவில் மக்கள்தொகை கொண்ட வடக்கு வியட்நாம் ஒரு பொதுவுடைமைவாத நாடாக மாறியது. ஏறக்குறைய அதேபோன்ற பரப்பளவும் மக்கள்தொகையும் கொண்ட தெற்கு வியட்நாமிற்கு தீவிர ரோமன் கத்தோலிக்கரான நிகோ டின் டியம் அதிபரானார்.

தென்வியட்நாமில் அரசின் நிலைமை அமெரிக்க நாட்டின் பொருளாதார மற்றும் பிற உதவிகளைச் சார்ந்தே அமைந்தது. அதன் டணாங் கப்பல் தளத்தில் 1965இல் வந்திறங்கத் துவங்கிய மாலுமிகளைச் சேர்த்து ஒரே மாதத்தில் 33,500 துருப்புகள் என்ற அளவில் உயர்ந்தது. அவ்வாண்டின் கடைசியில் இவ்வெண்ணிக்கை உயர்ந்து 2,10,000 என்றானது. விடுதலை இயக்கங்களை அழித்தொழிக்கும் நோக்கோடு இரவு பகலாக அமெரிக்கா இரு வியட்நாம்கள் மீதும் குண்டுவீசியது. கொரில்லா போர் முறையில் பயிற்றுவிக்கப்பட்ட வடவியட்நாமின் அமெரிக்கப் படைகள் நோய்தொற்று விளைவிக்கும் ஆயுதங்களைப் பயன்படுத்தினார்கள். நப்பாம் ஏஜண்ட் ஆரெஞ்ச் (காடுகளை அழிக்கக்கூடிய) போன்ற தீமூட்டும் ஆயுதங்களைப் பயன்படுத்தியது. பெரும் பரப்பில் நிலம் அழிக்கப்பட்டதோடு ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். அமெரிக்கப்படைகளும் சேதங்களைச் சந்தித்தது.



வடக்கு வியட்நாமில் அமெரிக்கா குண்டுவீச்சு

போர் 1975இன் துவக்கத்தில் முக்கிய கட்டத்தை எட்டியது. வடக்கு வியட்நாமின் இராணுவமும் தெற்கு வியட்நாமின் தேசிய விடுதலை முன்னணியும் எல்லைகள் கடந்து அமெரிக்க ஆதரவு பெற்றத் தென் வியட்நாமின் படைகளை நாசம் செய்தனர். மொத்த அமெரிக்கப் படைகளும் 30 ஏப்ரல் 1975இல் வெளியேறியதால் தென் வியட்நாமின் சைகோன் நகரம் விடுதலை பெற்றது. வடக்கு வியட்நாமும் தெற்கு வியட்நாமும் 1976இல் ஒரேதேசமாக ஒன்றிணைக்கப்பட்டது. மிகப் பெருந்தலைவராக மக்களின் முன் உருவெடுத்த ஹோ சி மின்னின் நினைவாக சைகோன் நகரம் ஹோ சி மின் நகரம் என்று பெயர் மாற்றப்பட்டது.



ஹோ சி மின்
(சைகோன் நகரம்)

ஒரு ஒருங்கிணைந்த சுதந்திர தேசமாக வியட்நாம் உருவானது ஒரு அரிய வரலாற்று நிகழ்வாகும். ஒரு சிறு நாடு தனது விடுதலையையும் ஒருங்கிணைவையும் உலகின் மிகப்பெரிய சக்தியின் ஆயுதந்தாங்கிய எதிர்ப்பையும் மீறி அடைந்திருந்தது. சோஷலிஸ நாடுகளின் உதவியும் அரசியல் பூர்வமாக பல ஆசிய – ஆப்பிரிக்க நாடுகள் கொடுத்த ஆதரவும் உலகெங்கிலும் பரவிக்கிடந்த பல்வேறு இனமக்கள் தார்மீக உணர்வோடு பக்கபலமாக நின்றதுமே இந்த வெற்றியை அடையக் காரணமாக அமைந்தது.

## 4.9 ஐரோப்பிய ஐக்கியத்தை நோக்கி

### (அ) ஐரோப்பியக் குழுமம்

இரண்டாம் உலகப்போருக்குப் பின்வந்த காலத்தில் எடுக்க முயன்ற முடிவுகளில்



10th_History_Unit_4_TM.indd 52
11-04-2020 11:35:15

முக்கியமானது மேற்கு ஐரோப்பிய நாடுகளை ஒருங்கிணைக்க நினைத்ததேயாகும். அதன்மூலம் (1) ஐரோப்பியர்களுக்கிடையே மூண்ட போர்களைத் தவிர்க்கவும் அதிலும் குறிப்பாக பிரான்சுக்கும் ஜெர்மனிக்கும் ஏற்பட்டுக் கொண்டிருந்த பகைமையை ஒடுக்கவும், (2) ஒருங்கிணைந்த ஐரோப்பாவைக் கொண்டு சோவியத் நாட்டின் அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளவும், (3) அமெரிக்க ஐக்கிய நாட்டின் படைகளுக்கும் சோவியத் நாட்டின் படைகளுக்கும்சமமாகஒருபடைபலத்தைநிறுவவும், (4) கண்டங்களிடையே அல்லது கண்டங்களில் பொருளாதார மற்றும் இராணுவவளங்களையும் திறன்களையும் முழுதாகப் பயன்படுத்தவும் முடியும் என்று கருதப்பட்டது. பத்துநாடுகள் லண்டனில் மே 1949இல் கூடி ஐரோப்பியசமூகத்தை உருவாக்க கையொப்பமிட்டன. ஸ்ட்ராஸ்பர்க் நகரை தலைமையகமாகக் கொண்ட ஐரோப்பிய சமூகத்தில் உறுப்புநாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்களைக் கொண்ட ஒரு குழுவும் வெளிநாடுகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரைக்கொண்ட கலந்தாய்வு சபையும் அமையப்பெற்றன.

### (ஆ) ஐரோப்பிய நிலக்கரி மற்றும் எஃகு சமூகம்

ஐரோப்பியப் பாதுகாப்பு சமூகமும் ஐரோப்பிய நிலக்கரி மற்றும் எஃகு சமூகமும் துவங்கப்பட்டன. ஐரோப்பிய நிலக்கரி மற்றும் எஃகு சமூகத்தைச் சேர்ந்த ஆறு நாடுகள் (பிரான்ஸ், மேற்கு ஜெர்மனி, இத்தாலி, பெல்ஜியம், ஹாலந்து, லக்ஸம்பர்க்) கூடி ரோம் ஒப்பந்தத்தை ஏற்படுத்தியதோடு அதன் மூலம் ஐரோப்பியப் பொருளாதார சமூகம் அல்லது ஐரோப்பியப் பொதுச்சந்தையை பிரெஸெல்ஸ் நகரைத் தலைமையகமாகக் கொண்டு ஏற்படுத்தின.

### (இ) ஐரோப்பியப் பொருளாதார சமூகம்

இச்சமூகம் பண்டங்கள், சேவைகள், முதலீடு, தொழிலாளர்கள் போன்றவற்றின் நகர்வை எல்லைகள் கொண்டு நிறுத்துவதை மாற்றியது. சந்தைப்போட்டியைக் கட்டுக்குள் கொண்டுவர முயன்றபோது கொள்கைகளையும் தனியார் ஒப்பந்தங்களையும் புறக்கணித்தது. பொதுவான விவசாயக் கொள்கையையும் பொதுவான வெளிநாட்டு வணிகத்தையும் இவ்வமைப்பு உருவாக்கியது. ஐரோப்பிய பொதுச்சந்தை என்பது ஒரு வெற்றிகரமான முயற்சியாகும்.

### (ஈ) ஒற்றை ஐரோப்பியச் சட்டம்

ஒற்றை ஐரோப்பியச் சட்டம் 1 ஜூலை 1987இல் நடைமுறைக்கு வந்தது. அது ஐரோப்பியப் பொருளாதார சமூகத்தின் எல்லைகளை விரிவாக்கி அதற்கு சட்டவடிவம் கொடுத்தது. மேலும் அது உறுப்புநாடுகளை வெளியுறவுக் கொள்கையில் அதிகமான ஒத்துழைப்பை நாடியது. இச்சட்டம் உறுப்பு நாடுகளின் மக்கள் தொகையின் அடிப்படையில் அவற்றிற்கான ஓட்டுகளின் எண்ணிக்கையை நிர்ணயித்தது. ஒரு சட்ட நிறைவேற்றத்திற்கு மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களின் ஆதரவு தேவை என நிலை நிறுத்தப்பட்டது.

### (உ) ஐரோப்பிய ஒன்றியம்

1992 பிப்ரவரி 7இல் கையெழுத்திடப்பட்ட மாஸ்டிரிக்ட் (நெதர்லாந்து) ஒப்பந்தம், ஐரோப்பிய ஒன்றியத்தை ஏற்படுத்தியது. பொதுவான நிதிக் கொள்கையும் நாடுகள் வழங்கிய பணத்தை மீறிய பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பணமும் (யூரோ) முதலில் நடைமுறைப்படுத்தப்பட்டு பின்னர் அவற்றை நிர்வகிக்கும் பொதுநிறுவனங்களும் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. தற்போது ஐரோப்பிய ஒன்றியத்தில் 28 உறுப்பு நாடுகள் உள்ளன. பிரெஸெல்ஸ் (பெல்ஜியம்) நகரைத் தலைமையகமாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றது.

## 4.10 பெர்லின்சுவர் வீழ்ச்சியும் பனிப்போர் கால முடிவும்

ஜெர்மானிய மேற்கு (ஜெர்மானியக் கூட்டுக் குடியரசு), ஜெர்மானிய கிழக்குப் (ஜெர்மானிய ஜனநாயகக் குடியரசு) பிரிவுகள் வேறுபட்ட வாழ்க்கைத்தரத்தில் எதிரொலித்தன. மார்ஷல் திட்டத்தின் துணையால் மேற்கு பெர்லினின் பொருளாதாரம் செழித்தோங்கியது. அதற்கு மாறாக கிழக்கு பெர்லினின் பொருளாதார வளர்ச்சியில் ரஷ்யா போதிய அக்கறை கொண்டிருக்கவில்லை. மேலும் கிழக்கு பெர்லினில் மக்களாட்சியோ சுதந்திரமோ இல்லாததால் மக்களுக்குப் பெரும்சிரமம் இருந்தது. இதனால் கிழக்கு பெர்லின் மக்கள் மேற்கு பெர்லினுக்கு அதிக அளவில் இடம்பெயரத் தொடங்கினர். மேற்கு பெர்லினிலோ ரஷ்யா தன்மீது எந்தநேரத்திலும் படையெடுத்து வரக்கூடும் என்ற அச்சம் நிலவியது. இச்சூழலில் 1961இல் கிழக்கு ஜெர்மனி ஒரு சுவரை எழுப்பி கிழக்கு பெர்லின் மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளுக்கும் மேற்கு பெர்லினுக்கும் இருந்த தொடர்பை நிறுத்தியது. காவல் கோபுரங்கள் எழுப்பப்பட்டு பயங்கர ஆயுதங்களின் துணையோடு கடுமையானக் கண்காணிப்புப் பணியின் மூலம் கிழக்கிலிருந்து மக்கள் நுழைவது தவிர்க்கப்பட்டு வந்தது. ரஷ்யாவின் கட்டுப்பாடு 1980களின் நடுவில் வலுவிழக்கத் துவங்கிய

3UCR1N

நிலையில் இச்சுவரின் இருபுறமும் 9 நவம்பர் 1989இல் கூடிய மக்கள்கூட்டம் அதை தகர்க்கத் துவங்கியது. ஜெர்மனி 3 அக்டோபர் 1990 அன்று முறையாக இணைக்கப்பட்டது. பெர்லின் சுவர் ஒரு கட்டுமானத்தடை என்பதைத் தாண்டிய ஒரு விஷயமாகும் அது முதலாளித்துவத்திற்கும் பொதுவுடைமைக்கும் இடையே இருந்தப் பிளவை அடையாளப்படுத்தக்கூடிய ஒன்று. பெர்லின் சுவரின் வீழ்ச்சியைத் தொடர்ந்து 26 டிசம்பர் 1991இல் சோவியத் நாடும் வீழ்ந்து பனிப்போர் காலத்தை முடிவுக்கு கொண்டு வந்தது.



**பெர்லின்சுவர் தகர்ப்பு**

மேற்கு ஜெர்மனியின் வேந்தராக (Chancellor) 1982 முதல் 1990 வரை பொறுப்புவகித்த ஹெல்மட் கோல் கிழக்கு ஜெர்மனியையும், மேற்கு ஜெர்மனியையும் 1990இல் இணைக்கப் பெரும் பங்காற்றினார், அதன் மூலம் நாற்பத்தைந்து ஆண்டுகளுக்குப் பின் ஒன்றுபட்ட ஜெர்மனியின் வேந்தரானார். அவர் பிரெஞ்சு குடியரசுத்தலைவரான மிட்டரண்டோடு இணைந்து மாஸ்ட்ரிக்ட் ஒப்பந்தத்தை உருவாக்கி அதன் மூலமாக ஒருங்கிணைந்த ஐரோப்பாவிற்கும் (European Union), யூரோ பண உருவாக்கத்திற்கும் வித்திட்டார்.

### சோவியத் நாட்டின் பிளவு

உலக அரசியலில் 1970களிலும், 1980களின் முற்பகுதியிலும், சோவியத் நாடு மிகுந்த செல்வாக்கோடுத் திகழ்ந்தது. எனினும், அதன் பொருளாதாரம் நலிவடையவும், முதலாம் உலக நாடுகளுக்கு ஈடுகொடுக்கமுடியாமலும் தேங்கியது. அந்நாட்டின்அதிபராகமிக்கேல்கோர்பசேவ்1985ஆம் ஆண்டு பதவியேற்றார். இச்சூழலில் கோர்பசேவ் வெளிப்படைத்தன்மை (Glasnost) பற்றியும், சீர்திருத்தம் (Perestroika) பற்றியும் பேசலானார். ஆனால் அவரது சீர்திருத்த முயற்சிகளுக்கு ஆளும் பொதுவுடைமை கட்சியினரிடமிருந்து எதிர்ப்புக் கிளம்பியதோடு அதற்குத் தேவையான வளங்கள் சோவியத் நாட்டில் இல்லாதநிலையும் இருந்தது. உள்நாட்டு உற்பத்தியில் மூன்றில் ஒரு பங்கு 1980களின் நடுவில் இராணுவத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டது. அமெரிக்க ஐக்கிய நாட்டின் அதிபரான ரீகனின் விண்வெளிப் போர்த்திட்டத்திற்கு ஈடுசெய்ய சோவியத் நாட்டிற்கு அதிக அளவு நிதித்தேவை ஏற்பட்டது. ராணுவச் செலவினங்களின் அதிகரிப்பு நாட்டின் பொருளாதாரத்தை மேற்கொண்டு சிரமத்தில் ஆழ்த்தியது.

ஆனால் சீர்திருத்தங்களை முன்னெடுத்துக் கொண்டிருந்த நிலையிலும், வலுவிழந்தப் பொருளாதார சூழலிலும் கோர்பசேவால் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியவில்லை. 'செர்னோபில் பேரழிவு' என்று அறியப்படும் உக்ரைனில் 1988இல் நிகழ்ந்த அணுக்கசிவும், அதனால் ஏற்பட்டக் கடும்பாதிப்பும் ஒரு பேரிடியாக விழுந்தது. பழமைவாத சக்திகளின் துணைகொண்டு 1989லும், 1991லும் நிலைமையை சமாளித்துத் தன் நிலையை வலுப்படுத்த கோர்பசேவ் முயன்றார். ஆனால் ஒவ்வொரு முறையும் சுரங்கத்தொழிலாளர்களின் வேலைநிறுத்தப் போராட்டத்தாலும், அதனால் நாட்டில் எற்பட்ட ஆற்றல் பற்றாக்குறையாலும் நெருக்கடியைச் சந்தித்தார்.

சோவியத் நாட்டின் அரவணைப்பில் இருந்த கிழக்கு ஐரோப்பியப் பொதுவுடைமை நாடுகளும் மிகக்கடுமையானப் பொருளாதார மற்றும் சமூக நெருக்கடியை எதிர் கொண்டன. இந்நாடுகளின் மீது சோவியத் கொண்டிருந்த கட்டுப்பாட்டைத் தளர்த்த கோர்பசேவ் முடிவெடுத்தபோது அங்கே சுதந்திர வேட்கையும் ஜனநாயகத்தை நோக்கிய நகர்வும் வேகமெடுக்கலாயின. தொழிலாளர்களின் தொடர் போராட்டம் பொதுவுடைமை ஆட்சியை முதலில் போலந்திலும், அதன்பின் ஹங்கேரியிலும் அசைக்கத்துவங்கின. 1989இல் அலைகடல் போல்

பெரிஸ்ட்ரோய்கா (மறுகட்டமைப்பு) என்பது மிக்கேல் கோர்பசேவால் சோவியத் நாட்டின் பொருளாதாரத்தையும், அரசியல் அமைப்பையும் மறுசீரமைப்பிற்கு உட்படுத்த 1980களின் கடைசியில் அறிமுகப்படுத்தப்பட்ட ஒன்றாகும். வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளின் முன்னேற்றத்திற்கு சோவியத்தின் பொருளாதாரம் ஈடுகொடுக்கும்படி அதற்குப் புத்துணர்வு ஊட்ட வெளிப்படைத்தன்மை (Glasnost) கொள்கையோடு அறிமுகப்படுத்தபட்டதே பெரிஸ்ட்ரோய்கா ஆகும்.

வெளிப்படைத்தன்மை என்ற கொள்கை மிக்கேல் கோர்பசேவால் பெரிஸ்ட்ரோய்காவோடு அறிமுகப்படுத்தப்பட்ட வெளிப்படையான ஒரு கருத்தியல் கொள்கையாகும். வெளிப்படைத்தன்மை எழுத்தாளர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளைத் தளர்த்தி அரசையும், அரசியலையும் விமர்சிக்க உரிமை வழங்கியது.



10th_History_Unit_4_TM.indd 54 11-04-2020 11:35:16

எல்சின் ஆரம்ப காலத்தில் கோர்பசேவின் நண்பராகவே இருந்தார். மாஸ்கோ நகரின் மேயராக இருந்த அவர் அரசியல் மற்றும் பொருளாதாரச் சுதந்திரத்தை ஆதரித்ததின் மூலமாகப் பெரும்புகழ் பெற்றார். சோவியத் பாராளுமன்றத்திற்கு 1989இல் ஜனநாயக முறைப்படி கோர்பசேவ் நடத்திய தேர்தலில் மாஸ்கோ தொகுதியில் போட்டியிட்ட அவர் பெரும் வெற்றி பெற்று அதிகாரத்திற்குத் திரும்பினார். அதற்கு அடுத்த ஆண்டு கோர்பசேவின் எதிர்ப்பையும் மீறி அவர் ரஷ்யாவின் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ரஷ்யக்குடியரசின் தன்னாட்சியை வலியுறுத்திய அவர், பாராளுமன்றத்திற்கு கட்டுப்படாத முழு நிர்வாகப் பொறுப்பை கைகொள்ளும் அதிபர் முறையை முன்வைத்தார்.


எல்சின்


கோர்பசேவ்

பரவிய எழுச்சிகள் கிழக்கு ஜெர்மனியின் பெர்லின் சுவர் தகர்த்தெறியப்படக் காரணமாக விளங்கின. அதைத் தொடர்ந்து செக்கோஸ்லோவகியாவிலும், பல்கேரியாவிலும் நடந்து கொண்டிருந்த ஆட்சிகள் சரிந்தன. ருமேனியாவின் நிக்கோலா சௌசெஸ்கு, உணர்வாளர்களின் மீது துப்பாக்கியால் சுட்டதையடுத்து (டிசம்பர் 1989) அவர் தம் இராணுவத் தளபதிகளே அவரைச் சுட்டு வீழ்த்த உத்தரவிட்டனர். துப்பாக்கிச்சூடு சம்பந்தமான தொலைக்காட்சிப் பதிவுகளும், பெர்லின் சுவரின் வீழ்ச்சியும் பொதுவுடைமை உலகம் நொறுக்கப்படத் தூண்டியது. ஆறேமாதங்களில் பாதி ஐரோப்பாவின் அரசியல் வரைபடம் பெரும்மாற்றத்திற்கு உட்படுத்தப்பட்டிருந்தது.

கோர்பசேவ் ஒரு அழுத்தமான நடவடிக்கையை இடையூறு புரிவோர் மீது 1991இல் கைக்கொள்ள முயன்றபோது மாஸ்கோ நகரையே பிரமிக்க வைத்த இரண்டாவது தொழிலாளர் எழுச்சி ஒரு பெரும் சவாலாக உருவெடுத்தது. அவரது அரசிலிருந்த பழமைவாத சக்திகள் அவரையும்மீறி கடும் நடவடிக்கைகளைக் கைகொள்ள முயன்றன. கோர்பசேவை வீட்டுக்காவலில் வைத்த அந்த சக்திகள் துருப்புகளின் துணையோடு மாஸ்கோவில் ஒரு கிளர்ச்சியை ஏற்படுத்தின. ஆனால் மற்றப் படைப்பிரிவினரின் ஆதரவைப்பெற முடியாமல் போனதால் முடிவில் மேற்கத்திய நாடுகளின் பின்புலத்தோடு போரிஸ் எல்சின் என்ற சீர்திருத்தவாதி ஆட்சியைக் கைப்பற்றினார்.

இடைப்பட்டகாலத்தில் மூன்று பால்டிக் நாடுகள் சோவியத் ஐக்கியத்தை விட்டுவிலகிச் சென்றிருந்தன. எஸ்டோனியா, லாட்வியா, லிதுவேனியா ஆகியவை ஐக்கிய நாடுகள் சபையில் சுதந்திர உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டன. மேலும் நவம்பர் 1991இல் 11 குடியரசுகள் (உக்ரைன், ஜார்ஜியா, பெலாரஸ், அர்மீனியா, அசர்பைஜான், கசகஸ்தான், கிர்கிஸ்தான், மால்டோவா, துர்க்மெனிஸ்தான், தஜிகிஸ்தான், உஸ்பெகிஸ்தான்) சோவியத் ஐக்கியத்தில் இருந்து பிரிவதாக அறிவித்தன. அதற்கு மாற்றாக சுதந்திர நாடுகளாக ஒரு பொதுநல அமைப்பின் கீழ் (common wealth) வீற்றிருப்பதை இந்நாடுகள் விரும்பின. கோர்பசேவ் 25 டிசம்பர் 1991இல் தனது ராஜினாமாவை அறிவித்தார். பெயரளவில் ஆறு நாட்களுக்கு சோவியத் ஐக்கியம் நீடித்தாலும் அது 1991 டிசம்பர் 31 அன்று நள்ளிரவில் முழுமையாகக் கலைக்கப்பட்டது. இறுதியில் சோவியத் ஐக்கியமே இல்லாமல் போனது.

## பாடச்சுருக்கம்

- சீனாவின் வரலாறு 1911இல் ஏற்பட்ட புரட்சிக்குப்பின் நிகழ்ந்தவற்றில் துவங்கி இரண்டாம் உலகப்போருக்குப்பின் அதுஒரு பொதுவுடைமை அரசாக மாறியதுவரை கூறப்பட்டுள்ளது.
- அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கும் சோவியத் நாட்டிற்குமிடையே உருவான பகைமை, உலகை இரு இராணுவப்பிரிவுகளாகப் பிரித்ததையும் வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்புப் பற்றியும் வார்சா ஒப்பந்தம் பற்றியும் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.
- கொரியப் போர், கியூபாவின் ஏவுகணைச் சிக்கல், அரபு–இஸ்ரேல் போர், வியட்நாம் போர் போன்றவற்றைப் பனிப்போர் பின்புலத்தில் படம்பிடித்துக் காட்டப்பட்டுள்ளது.
- மூன்றாம் உலக நாடுகளின் கருத்தியலாக வெளிப்பட்ட அணிசேராஇயக்கம் பற்றி விவரிக்கப்பட்டுள்ளது.
- அமெரிக்க ஐக்கிய நாட்டிலிருந்து விலகி ஐரோப்பியக் குழுவை ஏற்படுத்தி அதன் நீட்சியாகவே பின்னர் ஐரோப்பியப் பொதுச் சந்தையும் ஐரோப்பிய இணைவும் ஏற்பட்டது தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.



10th_History_Unit_4_TM.indd 55 11-04-2020 11:35:16

## கலைச்சொற்கள்

| | | |
|---|---|---|
| பகையுணர்வு கொண்ட | **Antagonistic** | acting against or indicating |
| நழுவுதல் | **Wriggle out** | to avoid doing something |
| வளர்ச்சி, உயர்வு | **Ascension** | the act of rising to an important position or a higher level, a movement upward |
| அதிருப்தி | **Disillusioned** | disappointed on finding out something is not as good as hoped |
| விலகியிருத்தல், ஒதுங்கியிருத்தல் | **Abstaining** | restrain oneself from doing something |
| வெறுப்புணர்ச்சி, கசப்புணர்வு | **Embitter** | cause to feel bitter – to make hateful |
| திறனற்றதாக்குதல், முடமாக்குதல் | **Incapacitated** | lacking in or deprived of strength or power |
| நுண்ணுயிரியல் ஆயுதங்கள் | **Bacteriological weapons** | the use of harmful bacteria as a weapon |

## பயிற்சி

P8WD85

### I சரியான விடையைத் தெரிவு செய்க

1. எந்த அமெரிக்கக் குடியரசுத்தலைவர் பொதுவுடைமைக் கொள்கையைக் கட்டுக்குள் அடக்க ஒரு கொள்கை வரைவை முன்வைத்தார்?
   அ) உட்ரோ வில்சன்
   ஆ) ட்ரூமென்
   இ) தியோடர் ரூஸ்வெல்ட்
   ஈ) பிராங்க்ளின் ரூஸ்வெல்ட்
2. சீனாவில் மக்கள் அரசியல் கலந்தாய்வு மாநாடு எப்போது நடைபெற்றது?
   அ) செப்டம்பர் 1959 ஆ) செப்டம்பர் 1949
   இ) செப்டம்பர் 1954 ஈ) செப்டம்பர் 1944
3. அமெரிக்க ஐக்கிய நாடும் அதன் ஐரோப்பிய நேச நாடுகளும் சேர்ந்து சோவியத் நாட்டின் ஆக்கிரமிப்பைத் தவிர்க்க ஏற்படுத்திய அமைப்பின் பெயர் ________ ஆகும்.
   அ) சீட்டோ ஆ) நேட்டோ
   இ) சென்டோ ஈ) வார்சா ஒப்பந்தம்
4. பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் செயற்குழுவிற்கு 1969இல் தலைவராகப் பதவியேற்றவர் யார்?
   அ) ஹபீஸ் அல் –ஆஸாத் ஆ) யாசர் அராபத்
   இ) நாசர் ஈ) சதாம் உசேன்
5. வடக்கு மற்றும் தெற்கு வியட்நாம் எந்த ஆண்டு ஒன்று சேர்க்கப்பட்டது?
   அ) 1975 ஆ) 1976 இ) 1973 ஈ) 1974
6. எந்த ஆண்டு வார்சா ஒப்பந்தம் கலைக்கப்பட்டது?
   அ) 1979 ஆ) 1989 இ) 1990 ஈ) 1991

### II கோடிட்ட இடங்களை நிரப்புக

1. நவீன சீனாவின் தந்தை என்று அழைக்கப்படுபவர் ________ ஆவார்.
2. 1918இல் ________ பல்கலைகழகத்தில் மார்க்ஸியக் கோட்பாட்டை அறியும் அமைப்பு நிறுவப்பட்டது.
3. டாக்டர் சன் யாட் சென்னின் மறைவுக்குப் பின்னர் கோமிங்டாங் கட்சியின் தலைவராக இருந்தவர் ________ ஆவார்.
4. அமைதியையும் பாதுகாப்பையும் விரும்பிய அரபுநாடுகளுக்கு திறந்தே இருந்த ஒப்பந்தம் ________ ஆகும்.
5. துருக்கிய அரபுப்பேரரசை ஏற்படுத்தும் நோக்கைக் கொண்டிருந்த ஒப்பந்தம் ________ ஆகும்.
6. ஜெர்மனி நேட்டோவில் ________ஆம் ஆண்டு இணைந்தது.
7. ஐரோப்பியக் குழுமத்தின் தலைமையகம் ________ நகரில் அமைந்துள்ளது.
8. ஐரோப்பிய இணைவை உறுதி செய்ய 7 பிப்ரவரி 1992இல் கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தம் ________ ஆகும்.

### III சரியான வாக்கியம்/வாக்கியங்களைத் தெரிவு செய்க

1. i) கற்றறிந்த சிறுபான்மையினரின் தாக்கத்தில் சீனாவின் (1898) இளம் பேரரசர் துவக்கிய

www.tntextbooks.in

சீர்திருத்தங்கள் நூறு நாள் சீர்திருத்தம் என்று அறியப்படுகிறது.

ii) கோமிங்டாங் கட்சி தொழிலாளர்களையும் விவசாயிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தியது.

iii) மஞ்சூரியா மீதும் ஷாண்டுங் மீதும் ஜப்பான் பொருளாதாரக் கட்டுப்பாட்டை விதிக்க யுவான் ஷி–கே உடன்பட்டதால் தேசியவாதிகள் பார்வையில் அவர் செல்வாக்கு இழந்தார்.

iv) சோவியத் நாடு இருபது ஆண்டு காலத்திற்கும் மேலாக சீன மக்கள் குடியரசை அங்கீகரிக்க மறுத்தது.

அ) i) மற்றும் ii) சரி ஆ) ii) மற்றும் iii) சரி

இ) i) மற்றும் iii) சரி ஈ) i) மற்றும் iv) சரி

2 i) கிழக்கு ஐரோப்பாவில் 1948இல் சோவியத்நாடு நிறுவிய இடதுசாரி அரசுகளை சோவியத் இராணுவம் விடுதலை செய்தது.

ii) வடக்கு அட்லாண்டிக் பகுதியில் அமைதியையும் பாதுகாப்பையும் உறுதி செய்யவே நேட்டோ உருவாக்கப்பட்டது.

iii) சீட்டோவின் உறுப்பு நாடுகள் அப்பகுதியில் மக்களாட்சி பரவுவதைத் தடுக்கும் நோக்கோடு செயல்பட்டார்கள்.

iv) ஜப்பானுக்கெதிராக பிரிட்டன் அணுகுண்டைப் பயன்படுத்தியதின் மூலம் அது ரஷ்யாவுக்கு தன்னுடைய அழிக்கும் திறனை எடுத்துக்காட்ட விரும்பியது.

அ) ii), iii) மற்றும் iv) சரி ஆ) i) மற்றும் ii) சரி

இ) iii) மற்றும் iv) சரி ஈ) i), ii) மற்றும் iii) சரி

3. **கூற்று:** அமெரிக்காவின் மார்ஷல் திட்டம் போரில் பாதிக்கப்பட்ட ஐரோப்பிய நாடுகளின் மறுநிர்மாணத்திற்காக முன்வைக்கப்பட்டது.

**காரணம்:** அமெரிக்க நாடு அத்திட்டத்தின் மூலம் மேற்கு ஐரோப்பிய நாடுகளைத் தன் செல்வாக்கின் கீழ் கொண்டுவர நினைத்தது.

அ) கூற்றும் காரணமும் இரண்டுமே சரி. ஆனால் காரணம், கூற்றிற்கான சரியான விளக்கமல்ல

ஆ) கூற்றும் காரணமும் தவறானவை

இ) கூற்றும் காரணமும் சரி. காரணம், கூற்றைச் சரியாக விளக்குகிறது

ஈ) கூற்று தவறு ஆனால் காரணம் சரி

## IV பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| 1. | டாக்டர் சன் யாட் சென் | – | தெற்கு வியட்நாம் |
| 2. | சிங்மென் ரீ | – | கோமிங்டாங் |
| 3. | அன்வர் சாதத் | – | கொரியா |
| 4. | ஹோ சி மின் | – | எகிப்து |
| 5. | நிகோ டின் டியம் | – | வடக்கு வியட்நாம் |

## V கீழ்க்கண்ட வினாக்களுக்கு சுருக்கமாக விடை தருக .

1. சீனாவில் 1911ஆம் ஆண்டில் நடந்த புரட்சிக்கு ஏதேனும் மூன்றுகாரணிகளைக் குறிப்பிடுக.
2. மாவோவின் நீண்ட பயணம் பற்றிக் குறிப்பு வரைக.
3. பாக்தாத் உடன்படிக்கை பற்றி அறிந்ததை எழுதுக.
4. மார்ஷல் திட்டம் என்றால் என்ன?
5. மூன்றாம் உலக நாடுகள் பற்றி ஒரு குறிப்பு வரைக.
6. கியூபாவின் ஏவுகணைச் சிக்கல் எவ்வாறு செயலிழக்கச் செய்யப்பட்டது?

## VI விரிவான விடை தருக.

1. சீனாவை ஒரு பொதுவுடைமை நாடாக்க மா சே துங்கின் பங்களிப்பை அளவிடுக.
2. ஐரோப்பியக்குழுமம் எவ்வாறு ஐரோப்பிய இணைவானது என்ற வரலாற்றை எடுத்தியம்புக.

## VII செயல்பாடு

1. வகுப்பை இருபிரிவுகளாகப் பிரிக்கவும். ஒரு பிரிவை அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஆதரவாளர்களாகவும் மற்றொரு பிரிவை சோவியத் நாட்டின் ஆதரவாளர்களாகவும் கொண்டு பனிப்போர் அரசியலை விளக்க விவாதமேடையமைக்க.
2. பேரழிவு, மக்கள் இறப்புப் போன்ற கருக்களைக் கொண்டு மொத்த வகுப்பையும் பயன்படுத்தி கொரியப்போர், அரபு–இஸ்ரேல் போர், வியட்நாம்போர் போன்றவற்றின் படங்களைச் சேகரித்து ஒரு படத்தொகுப்பை உருவாக்கலாம்.

## மேற்கோள் நூல்கள்


1. R.D. Cornvell, *World History in the Twentieth Century* (London: Longman, 1972)
2. Richard Overy, *Complete History of the World* (London: Harper Collins, 2006)
3. Chris Harman, *A People's History of the World* (London: Orient Longman, 2007)


## இணையதள வளங்கள்

1. https://www.brittanica.com



10th_History_Unit_4_TM.indd 57 11-04-2020 11:35:16

# அலகு – 5

# 19ஆம் நூற்றாண்டில் சமூக, சமய சீர்திருத்த இயக்கங்கள்



## கற்றலின் நோக்கங்கள்

**கீழ்க் காண்பனவற்றோடு அறிமுகமாதல்**

HFT4U7

- 19ஆம் நூற்றாண்டு பிரிட்டிஷ் இந்தியாவில் புதிய விழிப்புணர்ச்சியை உருவாக்கியதில் மேற்கத்தியச் சிந்தனைகள் மற்றும் கிறித்தவ மதத்தின் செல்வாக்கு
- சமுதாய மற்றும் சமயத்துறைகளில் ஏற்பட்ட போட்டிகள், உடன்கட்டை ஏறுதல் (சதி), அடிமைமுறை, தீண்டாமை, குழந்தைத்திருமணம் போன்ற பழக்கங்களுக்கு எதிர்ப்பு
- உருவவழிபாடு, சடங்குகள், மூடநம்பிக்கைகள் ஆகியனவற்றிற்கு எதிர்ப்பு
- இந்தியா புத்துயிர் பெற்றதில் பிரம்ம சமாஜம், ஆரிய சமாஜம், இராமகிருஷ்ணா மிஷன், பிரம்மஞானசபை, அலிகார் இயக்கம் ஆகியவற்றின் பங்களிப்பு
- பார்சிகள், சீக்கியர்கள் ஆகிய சமூகங்களில் விழிப்புணர்வை ஏற்படுத்தியதில் முக்கிய ஆளுமைகளின் பங்கு
- ஜோதிபா பூலேயின் சமூகஇயக்கமும், கேரளா, தமிழ்நாட்டில் தோன்றிய சீர்திருத்த இயக்கங்களும்

## அறிமுகம்

எழுத்தர்களை உருவாக்கும் நோக்கில் அறிமுகம் செய்யப்பட்ட ஆங்கிலக் கல்வி ஒரு புதிய ஆங்கிலக் கல்வி பயின்ற நடுத்தரவர்க்கத்தை உருவாக்கியது. இவ்வர்க்கம் மேற்கத்தியக் கருத்துக்களின், சிந்தனைகளின் தாக்கங்களுக்குள்ளானது. கல்வியறிவு பெற்ற இந்நடுத்தர வர்க்கம் எண்ணிக்கையில் சிறிதாக இருந்தாலும் அரசியலிலும், சீர்திருத்த இயக்கங்களிலும் தலைமைவகிக்கத் தொடங்கியது. இருந்தபோதிலும் இந்தியச் சீர்திருத்தவாதிகள் தங்களுடையப் பழைய கருத்துக்களையும் பழக்கவழக்கங்களையும் விமர்சனபூர்வமான ஆய்வுக்கு உட்படுத்தப் பெரிதும் தயங்கினர். அதற்குப்பதிலாக அவர்கள் இந்தியப் பண்பாட்டிற்கும் மேலைப் பண்பாடுகளுக்குமிடையே இணக்கத்தை ஏற்படுத்த முயன்றனர். இருந்தபோதிலும் அவர்களுடைய கருத்துகளும் செயல்பாடுகளும் உடன்கட்டை ஏறுதல் (சதி), பெண் சிசுக்கொலை, குழந்தைத் திருமணம் போன்ற அனைத்து வகையான கண்மூடித்தனமான மதநம்பிக்கைகள் மற்றும் சமூகத்தீமைகளை கட்டுப்படுத்த உதவியது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் சமயம் சார்ந்த சீர்திருத்த இயக்கங்களை இரண்டாக வகைப்படுத்தலாம். பிரம்ம சமாஜம், பிரார்த்தனை சமாஜம், அலிகார் இயக்கம் போன்ற சீர்திருத்த இயக்கங்கள் ஒருவகை, ஆரியசமாஜம், இராமகிருஷ்ணா மிஷன், தியோபந்த் இயக்கம் போன்ற சமயப் புத்தெழுச்சி மீட்டெடுப்பு இயக்கங்கள் மற்றொருவகை. இவைகளைத்தவிர ஒடுக்குமுறைப்பாங்குடைய சமூகக்கட்டமைப்பை எதிர்க்கும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. புனேயில் ஜோதிபா பூலே, கேரளாவில் நாராயணகுரு, அய்யங்காளி, தமிழகத்தில் இராமலிங்க அடிகள், அயோத்திதாசர் ஆகியோர் இவ்வகைப்பட்டோராவர்.

## 5.1 வங்காளத்தில் தொடக்கக் கால சீர்திருத்த இயக்கங்கள்

**(அ) இராஜா ராம்மோகன் ராயும், பிரம்ம சமாஜமும்**

இராஜா ராம்மோகன் ராய் (1772–1833) மேலைநாட்டுக் கருத்துக்களால் கவரப்பட்டு, சீர்திருத்தப்பணிகளை முன்னெடுத்த தொடக்ககாலச் சீர்திருத்த வாதிகளில் ஒருவராவார். பெரும் அறிஞரான அவர், தனது தாய்மொழியான வங்காள மொழியில்



10th_History_Unit_5_TM.indd 58 24-03-2020 12:30:37

புலமை பெற்றிருந்ததோடு சமஸ்கிருதம், அரபி, பாரசீகம், ஆங்கிலம் ஆகிய மொழிகளிலும் புலமை பெற்றிருந்தார். இராஜா ராம்மோகன் ராய் பொருளற்ற சமயச்சடங்குகளையும், கேடுகளை விளைவிக்கும் சமூக மரபுகளையும் எதிர்த்தார். இருந்த போதிலும் கடந்த காலத்துடனான தொடர்பை அவர் பாதுகாக்க விரும்பினார். தன்னுடைய சமய, தத்துவ சமூகப்பார்வையில் அவர் ஒருகடவுள் கோட்பாடு, உருவவழிபாடு எதிர்ப்பு போன்ற கருத்துக்களின் தாக்கத்தைப் பெற்றிருந்தார். உபநிடதங்களுக்குத் தான்கொடுத்த விளக்கங்களின் அடிப்படையில் இந்துக்களின். மறைநூல்கள் அனைத்தும் ஒருகடவுள் கோட்பாட்டை அல்லது ஒரு கடவுளை வணங்குவதை உபதேசிப்பதாகக் கூறினார்.



இராஜா ராம்மோகன் ராய்


சமூகத்தில் நிலவிவரும் உடன்கட்டை ஏறுதல் (சதி), குழந்தைத் திருமணம், பலதார மணம் போன்ற மரபு சார்ந்த பழக்கங்கள் குறித்து பெரிதும் கவலை கொண்ட அவர், அவற்றிற்கு எதிராகச் சட்டங்கள் இயற்றும்படி ஆங்கில அரசாங்கத்திற்கு விண்ணப்பித்தார். விதவைப்பெண்கள் மறுமணம் செய்துகொள்ள உரிமை உடையவர்கள் எனும் கருத்தை முன்வைத்தார். பலதார மணத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டுமென்றார். மக்களைப் பகுத்தறிவோடும், பரிவோடும், மனிதப் பண்போடும் இருக்கும்படி வேண்டுகோள் விடுத்தார். 1829இல் தலைமை ஆளுநர் வில்லியம் பெண்டிங் 'சதி' எனும் உடன்கட்டையேறும் பழக்கத்தை ஒழித்துச் சட்டம் இயற்றியதில் இராஜா ராம்மோகன் ராய் முக்கிய பங்கு வகித்தார்.

ராம்மோகன் ராய் பெண்ணடிமைத்தனத்தைக் கண்டனம் செய்தார். ஆண்கள் பெண்களை கீழானவர்களாக நடத்தும் அன்றைய கால நடைமுறையை எதிர்த்தார். பெண்களுக்குக் கல்வி வழங்கப்படவேண்டும் எனும் கருத்தை வலுவாக முன்வைத்தார். பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் ஆங்கிலக்கல்வியும் மேலை நாட்டு அறிவியலும் அறிமுகம் செய்யப்படுவதை முழுமையாக ஆதரித்தார்.

இராஜா ராம்மோகன் ராய் 1828இல் பிரம்ம சமாஜத்தை நிறுவி ஆகஸ்டு 20ஆம் நாள் கல்கத்தாவில் ஒரு கோவிலை நிறுவினார். அக்கோவிலில் திருவுருவச் சிலைகள் எதுவும் வைக்கப்படவில்லை. இங்கு எந்த ஒரு மதத்தையும் ஏளனமாகவோ, அவமானமாகவோ பேசக்கூடாது அல்லது மறைமுகமாகக் குறிப்பிடப்படலாகாது என எழுதிவைத்தார். பிரம்ம சமாஜம் உருவவழிபாட்டை தவிர்த்ததோடு பொருளற்ற சமயச் சடங்குகளையும் சம்பிரதாயங்களையும் எதிர்த்தது. இருந்தபோதிலும் தொடக்கம் முதலாக பிரம்ம சமாஜத்தின் கருத்துக்கள் கற்றறிந்த மேதைகள், கல்வியறிவு பெற்ற வங்காளிகள் என்ற அளவில் மட்டுமே செயல்பட்டது. சமூகத்தின் கீழ்த்தட்டு மக்களைத் தன்பால் ஈர்ப்பதில் சமாஜம் தோல்வியடைந்தாலும், நவீன வங்காளப் பண்பாட்டு மற்றும் நடுத்தர வர்க்கத்தின் மீதான அதனுடைய தாக்கம் மிகவும் போற்றுதலுக்குரியதாகும்.

**(ஆ) மகரிஷி தேவேந்திரநாத் தாகூர்**

இராஜா ராம்மோகன் ராய் 1833இல் இயற்கையெய்திய பின்னர் அவர் விட்டுச்சென்றப் பணிகளை, கவிஞர் இரவீந்திரநாத் தாகூரின் தந்தையரான தேவேந்திரநாத் தாகூர் (1817–1905) தொடர்ந்தார். அவர் நம்பிக்கை பற்றிய நான்கு கொள்கைக்கூறுகளை முன்வைத்தார்.



தேவேந்திரநாத் தாகூர்

1. தொடக்கத்தில் எதுவுமில்லை, எல்லாம் வல்ல ஒரு கடவுள் மட்டுமே உள்ளார். அவரே இவ்வுலகத்தைப் படைத்தார்.
2. அவர் ஒருவரே உண்மையின், எல்லையற்ற ஞானத்தின், நற்பண்பின், சக்தியின் கடவுளாவார். அவரே நிலையானவர், எங்கும் நிறைந்திருப்பவர், அவருக்கிணையாருமில்லை.
3. நம்முடைய வீடுபேறு, இப்பிறவியிலும் அடுத்தபிறவியிலும் அவரை நம்புவரையும் அவரை வணங்குவதையும் சார்ந்துள்ளது.
4. அவரை நம்புவதென்பது, அவரை நேசிப்பதிலும் அவர் விருப்பத்தைச் செயல்படுத்துவதிலும் அடங்கியுள்ளது.

**(இ) கேசவ் சந்திர சென்னும் இந்தியாவின் பிரம்ம சமாஜமும்**

தேவேந்திரநாத் மிதவாதச் சீர்திருத்தவாதியாவார். ஆனால் சமாஜத்தில் அவருடன் பணியாற்றிய இளையவர்கள் விரைவான மாற்றங்களையே விரும்பினர். அவர்களுள் மிக முக்கியமானவரான கேசவ் சந்திரசென்(1838–84),1857இல் சபையில் இணைந்தார். 1866இல் பிரம்மசமாஜத்தின் உறுப்பினர்களிடையே பிளவு ஏற்பட்டதால் கேசவ் சந்திர சென் சமாஜத்திலிருந்து விலகி புதிய அமைப்பான



கேசவ் சந்திர சென்



10th_History_Unit_5_TM.indd 59 24-03-2020 12:30:37

www.tntextbooks.in

"இந்திய பிரம்ம சமாஜத்தை" உருவாக்கினார். இதன்பின்னர் தேவேந்திரநாத் தாகூரின் அமைப்பு 'ஆதி பிரம்ம சமாஜம்' என அழைக்கப்படலாயிற்று. குழந்தைத் திருமணத்தை சமாஜம் கண்டனம் செய்திருந்தபோதும் அதற்குமாறாக கேசவ் சந்திர சென் தனது பதினான்குவயது மகளை இந்திய இளவரசன் ஒருவருக்குத் திருமணம் செய்து கொடுத்தபோது, குழந்தைத் திருமணத்தை எதிர்த்தோர் இந்திய பிரம்ம சமாஜத்திலிருந்து விலகி 'சாதாரண சமாஜ்' எனும் அமைப்பை நிறுவினர்.

**(ஈ) ஈஸ்வர் சந்திர வித்யாசாகர்**



**ஈஸ்வர் சந்திர வித்யாசாகர்**

வங்காளத்தைச் சேர்ந்த மற்றொரு முதன்மையான சீர்திருத்தவாதி ஈஸ்வர் சந்திர வித்யாசாகர் (1820–1891) ஆவார். இராஜா ராம்மோகன் ராயும் மற்றவர்களும் சமூகத்தைத் திருத்துவதற்கு மேலைநாட்டுப் பகுத்தறிவுச் சிந்தனைகளின் துணையை நாடியபோது வித்யாசாகர் இந்து மறை நூல்களே முற்போக்கானவை என வாதிட்டார். விதவைகளை எரிப்பதும் விதவை மறுமணத்தைத் தடைசெய்வதும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்பதற்கு மறை நூல்களிலிருந்தே சான்றுகளை முன்வைத்தார். அவர் தனது கருத்துக்களுக்கு ஆதரவான வாதங்களைக் கொண்ட சிறுநூல்களை வெளியிட்டார். அவர் நவீன வங்காள உரைநடையின் முன்னோடியாவார். பெண்கல்வியை மேம்படுத்துவதில் முக்கியப்பங்காற்றிய அவர் பெண்களுக்கான பள்ளிகள் நிறுவப்பட உதவிகள் செய்தார். இந்து சமூகத்தில் குழந்தைப் பருவத்திலேயே விதவைகளான சிறுமிகளின் வாழ்வை மேம்படுத்துவதற்காகவே தனது முழுவாழ்வையும் அர்ப்பணித்தார். பண்டித ஈஸ்வர் சந்திர வித்யாசாகர் தலைமையேற்ற இயக்கத்தின் விளைவாய் 1856இல் மறுமண சீர்திருத்தச் சட்டம் (விதவைகள் மறுமணச் சட்டம்) இயற்றப்பட்டது.

1860இல் முதன்முறையாக திருமண வயதுச் சட்டம் இயற்றப்பட்டது. அப்பெருமை ஈஸ்வர் சந்திர வித்யாசாகரையேச் சாரும். திருமணத்திற்கான வயது பத்து என்று நிர்ணயம் செய்யப்பட்டது. அது 1891இல் பன்னிரெண்டாகவும், 1925இல் பதிமூன்றாகவும் உயர்த்தப்பட்டது. ஆனால் கவலைக்குரிய விதத்தில் திருமண வயது ஒப்புதல் கமிட்டி (1929) கூறியபடி இச்சட்டம் காகிதத்தில் மட்டுமேயிருந்தது. நீதிபதிகளும், வழக்கறிஞர்களும் ஒருசில படித்த மனிதர்களுமே அதனைப்பற்றிய அறிவைப் பெற்றிருந்தனர்.

இச்சட்டம் குழந்தை விதவைகளின் நிலையை மேம்படுத்துவதையும் நிரந்தரமாக விதவையாய் இருக்கவேண்டிய ஆபத்திலிருந்து அவர்களைக் காப்பாற்றுவதையும் நோக்கமாகக் கொண்டிருந்தது.

**(உ) பிரார்த்தனை சமாஜம்**

மகாராஷ்டிரப் பகுதியானது சீர்திருத்த நடவடிக்கைகளுக்கு ஆதரவு கிடைக்கப்பெற்ற மற்றொரு பகுதியாகும். பிரம்ம சமாஜத்துக்கிணையாக பம்பாயில் 1867இல் நிறுவப்பட்ட அமைப்பே பிரார்த்தனை சமாஜம். இதனை நிறுவியவர் ஆத்மராம் பாண்டுரங் (1825–1898) ஆவார். இந்த சமாஜத்தின் இரண்டு மேன்மைமிக்க உறுப்பினர்கள் R.C. பண்டர்கர், நீதிபதி மகாதேவ் கோவிந்த் ரானடே ஆகிய இருவருமாவர். இவ்விருவரும் சாதிமறுப்பு, சமபந்தி, சாதிமறுப்புத் திருமணம், விதவை மறுமணம், பெண்கள் மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களின் முன்னேற்றம் போன்ற நடவடிக்கைகளுக்காகத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்களாவர். மகாதேவ் கோவிந்த் ரானடே (1842–1901) விதவை மறுமணச் சங்கம் (1861), புனே சர்வஜனிக் சபா (1870), தக்காணக் கல்விக்கழகம் (1884) ஆகிய அமைப்புகளை நிறுவினார்.



ஆத்மராம் பாண்டுரங்



M.G. ரானடே

## 5.2 இந்து புத்தெழுச்சி இயக்கம்

**(அ) சுவாமி தயானந்த சரஸ்வதி மற்றும் ஆரியசமாஜம், 1875**



**சுவாமி தயானந்த சரஸ்வதி**

பஞ்சாபில், ஆரியசமாஜம் சீர்திருத்த இயக்கங்களுக்குத் தலைமையேற்றது. இது 1875இல் நிறுவப்பட்டது, இவ்வமைப்பை நிறுவியவர் மேலைகங்கைச்சமவெளியில் அலைந்துதிரிந்து கொண்டிருந்த சுவாமி தயானந்த சரஸ்வதி (1824–83) ஆவார். சுவாமி தயானந்தர் பின்னர் தனது கருத்துகளைப் போதிப்பதற்காகப் பஞ்சாபில் தங்கினார். அவருடைய நூலான 'சத்யார்த்தபிரகாஷ்'



10th_History_Unit_5_TM.indd 60 24-03-2020 12:30:38

பெரும்பாலோரால் படிக்கப்பட்டது. குழந்தைத் திருமணம், விதவை மறுமணத்திற்கு மறுப்பு போன்ற பழக்கங்களும் அயல்நாடு சென்றால் தீட்டு என்று சொல்லப்படுதலும் மறைநூல்களால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என அறிவித்தார். அவர் முன்வைத்த நேர்மறையான கொள்கைகள் கட்டுப்பாடான ஒருகடவுள் வழிபாடு, உருவ வழிபாட்டை நிராகரித்தல், பிராமணர் மேலாதிக்கம் செலுத்தும் சடங்குகள், சமூகநடைமுறைகள் ஆகியவற்றை மறுத்தல் என்பனவாகும். ஆரியசமாஜம் இந்துமதத்திலிருந்த மூடநம்பிக்கைகளை மறுத்தது. அதனுடைய முழக்கம் 'வேதங்களுக்குத் திரும்புவோம்' என்பதாகும்.

ஆரியசமாஜம் பிரிட்டிஷ் இந்தியாவில் நடைபெற்றுக் கொண்டிருந்த மதமாற்ற நடவடிக்கைகளை நிறுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டது. அதன் முக்கியக் குறிக்கோள் 'எதிர்மத மாற்றம் என்பதாகும்.' ஏற்கனவே இஸ்லாமுக்கும் கிறித்தவ மதத்திற்கும் மாறிய இந்துக்களை மீண்டும் இந்துக்களாக மாற்ற 'சுத்தி (Suddhi)' எனும் சுத்திகரிப்புச் சடங்கை சமாஜம் வகுத்துக்கொடுத்தது.

ஆரியசமாஜம் சமூக சீர்திருத்தக்களத்திலும் கல்வியைப்பரப்பும் பணியிலும் முக்கிய சாதனைகள் புரிந்தது. சமாஜம் பல தயானந்தா ஆங்கில–வேதப் பள்ளிகளையும் கல்லூரிகளையும் உருவாக்கியது.

### (ஆ) இராமகிருஷ்ண பரமஹம்சர்

கல்கத்தாவுக்கு அருகேயிருந்த தட்சிணேசுவரம் என்னும் ஊரைச்சார்ந்த எளிய அர்ச்சகரான இராமகிருஷ்ண பரமஹம்சர் (1836–1886) பஜனைப்பாடல்களை மனமுருகிப் பாடுவதைப்போன்ற வழிமுறைகள் மூலம் பேரின்ப நிலையை அடைந்து அந்நிலையில் ஆன்மரீதியாக கடவுளோடு ஒன்றிணைவதற்கு முக்கியத்துவம் கொடுத்தார். புனிதத்தாயான கடவுள் காளியின் தீவிர பக்தரான அவர் அக்கடவுளின் திருவிளையாடல்கள் முடிவற்றவை என அறிவித்தார். அவருடைய கருத்தின்படி அனைத்து மதங்களும் உலகளாவிய, எல்லோருக்குமான மூலக்கூறுகளைக் கொண்டுள்ளன. அவற்றைப் பின்பற்றினால் அவை வீடுபேற்றுக்கு இட்டுச்செல்லும். 'ஜீவன்' என்பதே 'சிவன்' எனவும் அவர் கூறினார் (வாழ்கின்ற அனைத்து உயிர்களும் இறைவனே). மனிதர்களுக்குச் செய்யப்படும் சேவையே கடவுளுக்குச் செய்யப்படும் சேவையாகும் என்றார்.



இராமகிருஷ்ண பரமஹம்சர்



இராமகிருஷ்ணா மிஷன் பேலூர் மடம்

### இராமகிருஷ்ணா மிஷன்

இராமகிருஷ்ணருடைய முதன்மையான சாதனையே, பிரம்மசமாஜம் போன்ற சீர்திருத்த அமைப்புகள் முன்வைத்தப் பகுத்தறிவுக் கருத்துகளின்பால் அதிருப்தியுற்ற கல்வியறிவு பெற்ற இளைஞர்களைத் தன்பால் ஈர்த்ததுதான். 1886இல் அவர் இயற்கை எய்திய பின்னர் அவருடைய சீடர்கள் தங்களை ஒரு மதம்சார்ந்த சமூகமாக அமைத்துக்கொண்டு இராமகிருஷ்ணரையும் அவரின் போதனைகளையும் இந்தியாவிலும் உலகின் ஏனைய பகுதிகளிலும் பரப்பும் பெரும்பணியை மேற்கொண்டனர். இப்பெரும்பணியின் பின்புலமாய் இருந்தவர் சுவாமி விவேகானந்தர். கிறித்தவசமயப் பரப்பு நிறுவனங்களின் நிர்வாகக் கட்டமைப்பைப் பின்பற்றி விவேகானந்தர் இராமகிருஷ்ணா மிஷனை நிறுவினார். இராமகிருஷ்ணா மிஷன் சமயச் செயல்பாடுகளோடு மட்டும் தனதுப்பணிகளை நிறுத்திக்கொள்ளவில்லை. மக்களுக்குக் கல்வியறிவு வழங்குவது, மருத்துவ உதவி, இயற்கைச் சீற்றங்களின்போது நிவாரணப்பணிகளை மேற்கொள்வது போன்ற சமூகப்பணிகளிலும் செயலூக்கத்துடன் ஈடுபட்டது.

### (இ) சுவாமி விவேகானந்தர்

பின்னாளில் சுவாமி விவேகானந்தர் என்றழைக்கப்பட்ட நரேந்திரநாத் தத்தா (1863–1902) இராமகிருஷ்ண பரமஹம்சருடைய முதன்மைச்சீடராவார். படித்த இளைஞரான அவர் இராமகிருஷ்ணரின் கருத்துகளால் கவரப்பட்டார். மரபுசார்ந்த தத்துவ நிலைப்பாடுகளில் மனநிறைவு பெறாத அவர், நடைமுறை வேதாந்தமான மனிதகுலத்திற்குத் தொண்டுசெய்தல் எனும் கோட்பாட்டைப் பரிந்துரைத்தார். மதத்தோடு தொடர்புடையது எனும் ஒரே காரணத்திற்காக அனைத்து நிறுவனங்களையும் பாதுகாக்கும் மனப்பாங்கினை அவர் கண்டனம் செய்தார். பண்பாட்டுத் தேசியத்திற்கு முக்கியத்துவம் கொடுத்த அவர் இந்து சமூகத்திற்குப் புத்துயிரளிக்க இந்திய இளைஞர்களுக்கு அறைகூவல் விடுத்தார். அவருடைய சிந்தனைகள், பொருள் உற்பத்தியில் மேலைநாடுகள் செய்திருந்த சாதனைகளைக் கண்டு தாழ்வுமனப்பான்மை கொண்டிருந்த இந்தியர்களுக்கு



சுவாமி விவேகானந்தர்



10th_History_Unit_5_TM.indd 61 24-03-2020 12:30:38

தன்னம்பிக்கையூட்டுவதாய் அமைந்தது. 1893இல் சிக்காகோவில் நடைபெற்ற உலக சமய மாநாட்டில் இந்து சமயம் பற்றியும் பக்திமார்க்கத் தத்துவம் குறித்தும் அவராற்றிய சொற்பொழிவுகள் அவருக்குப் பெரும்புகழ் சேர்த்தது. இந்து சமயச்சடங்குகளில் கலந்துகொள்ளக்கூடாதென ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த ஒடுக்கப்பட்ட மக்களும் அதுபோன்ற சடங்குகளில் கலந்துகொள்ளக் கட்டாயம் அனுமதிக்கப்படவேண்டும் என்றார். விவேகானந்தரின் செயலாக்கமிக்க கருத்துகள் மேற்கத்தியக் கல்வி பயின்ற வங்காள இளைஞர்களிடையே அரசியல் மாற்றங்களுக்கான நாட்டத்தை ஏற்படுத்தியது. வங்கப்பிரிவினையைத் தொடர்ந்து நடைபெற்ற சுதேசி இயக்கத்தின் போது இளைஞர்களில் பலர் விவேகானந்தரால் ஊக்கம் பெற்றனர்.

### (ஈ) பிரம்மஞான சபை

மேடம் H.P. பிளாவட்ஸ்கி (1831–1891) மற்றும் கர்னல் H.S. ஆல்காட் (1832–1907) ஆகியோரால் பிரம்மஞானசபை 1875இல் அமெரிக்காவில் நிறுவப்பட்டது. இவ்வமைப்புப் பின்னர் 1886இல் இந்தியாவில் சென்னை அடையாறுக்கு மாற்றப்பட்டது.

பிரம்மஞானசபை இந்து செவ்வியல் நூல்களைக் குறிப்பாக உபநிடதங்கள், பகவத்கீதை ஆகியவற்றைப் படிப்பதற்கு உற்சாகமூட்டியது. இந்தியாவில் பௌத்தம் புத்துயிர் பெறுவதில் பிரம்மஞானசபை முக்கியப் பங்காற்றியது. இந்து மறைநூல்களின் மீது மேலைநாட்டவர் காட்டிய ஆர்வம், படித்த இந்தியர்களிடையே தங்கள் பாரம்பரியம், பண்பாடு குறித்த அளப்பரியப் பெருமிதத்தை ஏற்படுத்தியது.

### அன்னிபெசன்ட்டின் பங்களிப்பு

ஆல்காட்டின் மறைவுக்குப் பின்னர் இவ்வமைப்பின் தலைவராக அன்னிபெசன்ட் (1847–1933) தேர்ந்தெடுக்கப்பட்டதைத் தொடர்ந்து இவ்வியக்கம் மேலும் செல்வாக்குப் பெற்றது. இந்திய தேசிய அரசியலில் முக்கியத்துவம் பெற்ற அவர் தன்னாட்சி இயக்கச் சங்கத்தை அமைத்து அயர்லாந்திற்கு வழங்கப்பட்டதைப் போல இந்தியாவிற்கும் தன்னாட்சி வழங்கப்பட வேண்டுமென்று கோரிக்கை வைத்தார். அன்னிபெசன்ட் பிரம்மஞானக் கருத்துக்களைத் தன்னுடைய நியூ இந்தியா (New India), காமன்வீல் (Commonweal) எனும் செய்தித்தாள்களின் மூலம் பரப்பினார்.



அன்னிபெசன்ட்

## 5.3 சாதி எதிர்ப்பு இயக்கங்கள்

### (அ) ஜோதிபா பூலே

ஜோதிபா கோவிந்தராவ் பூலே 1827இல் மகாராஷ்டிராவில் பிறந்தார். அவர் 1852ஆம் ஆண்டு ஒடுக்கப்பட்டோருக்கான முதல் பள்ளியை புனேயில் திறந்தார். சத்தியசோதக் சமாஜ் (உண்மையை நாடுவோர் சங்கம், Truth Seekers Society) எனும் அமைப்பை, பிராமணரல்லாத மக்களும் சுயமரியாதையோடும், குறிக்கோளோடும் வாழத் தூண்டுவதற்காய் நிறுவினார். பூலே குழந்தைத் திருமணத்தை எதிர்த்தார். விதவை மறுமணத்தை ஆதரித்தார். ஜோதிபாவும் அவருடைய மனைவி சாவித்திரிபாயும் ஒடுக்கப்பட்ட மக்களின், பெண்களின் முன்னேற்றத்திற்காகத் தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்தனர். ஜோதிபா பெற்றோரில்லா குழந்தைகளுக்கென்று விடுதிகளையும் விதவைகளுக்கென காப்பகங்களையும் உருவாக்கினார். அவர் எழுதிய நூலான 'குலாம்கிரி' (அடிமைத்தனம்) அவருடையப் பெரும்பாலான தீவிரக்கருத்துக்களைச் சுருக்கிக் கூறுகிறது.



ஜோதிபா பூலே மற்றும் சாவித்திரி பாய்

### (ஆ) நாராயண குரு

கேரளாவில் ஏழைப்பெற்றோர்க்கு மகனாகப் பிறந்த நாராயண குரு (1854–1928) மலையாளம், சமஸ்கிருதம், தமிழ் ஆகிய மொழிகளில் அறிஞராகவும் கவிஞராகவும் திகழ்ந்தார். பயங்கரமான சாதிக் கொடுமைகளையும், ஒடுக்கப்பட்ட மக்கள்படும் துயரங்களையும் கண்டு மனம்வெதும்பிய அவர் அம்மக்களின் மேம்பாட்டிற்காகத் தனது வாழ்க்கை முழுவதையும் அர்ப்பணித்தார். அவர்களின் மேம்பாட்டிற்குப் பணியாற்றுவதற்காக ஸ்ரீ நாராயண தர்ம பரிபாலன யோகம் எனும் அமைப்பை உருவாக்கினார். அருவிபுரம் எனும் ஊரில் ஒரு பெரிய கோவிலைக்கட்டிய அவர் அதை அனைவருக்கும்




நாராயண குரு



10th_History_Unit_5_TM.indd 62 24-03-2020 12:30:38

அர்ப்பணித்தார். குமாரன் ஆசான், டாக்டர் பால்பு போன்ற சிந்தனையாளர்களும் எழுத்தாளர்களும் இவருடைய சிந்தனைகளால் தூண்டப்பெற்று இயக்கத்தை முன்னெடுத்துச் சென்றனர்.

**(இ) அய்யன்காளி**

அய்யன்காளி 1863இல் திருவனந்தபுரத்தல் உள்ள வெங்கனூரில் பிறந்தார். அப்போது அப்பகுதி திருவிதாங்கூர் அரசரின் ஆட்சிப்பகுதியாகும். குழந்தையாய் இருக்கும்போதே அவர் சந்தித்த சாதியப்பாகுபாடு அவரை சாதி எதிர்ப்பியக்கத்தின் தலைவராக மாற்றியது. பின்னர் அவர் பொது இடங்களுக்குச் செல்லுதல், பள்ளிகளில் கல்வி கற்க இடம்பெறுதல் போன்ற அடிப்படை உரிமைகளுக்காகப் போராடினார்.



**அய்யன்காளி**

ஸ்ரீநாராயணகுருவால் ஊக்கம்பெற்ற அய்யன்காளி 1907இல் சாது ஜன பரிபாலன சங்கம் (ஏழை மக்கள் பாதுகாப்புச் சங்கம் – Association for the protection of the Poor) எனும் அமைப்பை நிறுவினார்.

## 5.4 இஸ்லாமிய சீர்திருத்தங்கள்

1857ஆம் ஆண்டுப் பெரும்புரட்சி ஒடுக்கப்பட்ட பின்னர் இந்திய முஸ்லீம்கள் மேற்கத்தியப் பண்பாட்டைச் சந்தேகக் கண்கொண்டு பார்த்தனர். மேற்கத்தியக் கல்வி, பண்பாடு, மேற்கத்திய சிந்தனைகள் ஆகியவை தங்கள் மதத்திற்கு ஆபத்தாய் அமையுமோ என அச்சமூகம் அஞ்சியது. ஆகையால் முஸ்லீம்களில் ஒரு சிறிய பிரிவினரே மேற்கத்தியக் கல்விபயில முன்வந்தனர்.

### சர் சையத் அகமத்கான்

டெல்லியில் உயர்குடி முஸ்லீம் குடும்பத்தில் பிறந்த சையத் அகமத்கான் படிப்பறிவின்மையே குறிப்பாக, நவீன கல்வியறிவின்மையே இஸ்லாமியர்களுக்குப் பெருந்தீங்கு விளைவித்து, அவர்களைக் கீழ்நிலையில் வைத்துவிட்டது எனக்கருதினார். மேலைநாட்டு அறிவியலையும், அரசுப்பணிகளையும் ஏற்றுக்கொள்ளும்படி அவர் இஸ்லாமியர்களை வற்புறுத்தினார். அறிவியல்கழகமொன்றை நிறுவிய அவர் ஆங்கிலநூல்களைக் குறிப்பாக அறிவியல் நூல்களை உருதுமொழியில் மொழியாக்கம் செய்தார்.



**சர் சையத் அகமத்கான்**

மேலெழுந்துவரும் தேசியஇயக்கத்தில் இணைவதைக் காட்டிலும் ஆங்கிலஅரசுடன் நல்லுறவு மேற்கொண்டால் இஸ்லாமியர் நலன்கள் பேணப்படும் என அவர் நம்பினார். எனவே அவர் இஸ்லாமியருக்கு ஆங்கிலக்கல்வியைப் பயிலும்படியும் அதில் கவனம் செலுத்தும்படியும் அறிவுரை கூறினார்.

### அலிகார் இயக்கம்

சர் சையத் அகமத்கான் 1875ஆம் ஆண்டு அலிகார் நகரில் அலிகார் முகமதிய ஆங்கிலோ–ஓரியண்டல் கல்லூரியை (Aligarh Mohammedan Anglo–Oriental College) நிறுவினார். 'அலிகார் இயக்கம்' எனப்பட்ட அவரது இயக்கம் இக்கல்லூரியை மையப்படுத்தி நடைபெற்றதால் அப்பெயரைப் பெற்றது. இந்தியமுஸ்லீம்களின் கல்விவரலாற்றில் இக்கல்லூரி ஒரு மைல் கல்லாகும். 1920இல் இக்கல்லூரி தரம் உயர்த்தப்பட்டு பல்கலைக்கழகமானது.

### தியோபந்த் இயக்கம்

தியோபந்த் இயக்கம் ஒரு மீட்பியக்கமாகும். இவ்வியக்கம் பழமைவாத முஸ்லீம் உலேமாக்களால், தொடங்கப்பெற்றது. இவ்வுலேமாக்கள் முகமது குவாசிம் நானோதவி (1832–1880), ரஷித் அகமத் கங்கோத்ரி (1826–1905) ஆகியோரின் தலைமையில் 1866இல் உத்தரப்பிரதேசத்தில் சகரன்பூரில் ஒரு பள்ளியை நிறுவினர். இப்பள்ளியின் பாடத்திட்டம் ஆங்கிலக்கல்வியையும் மேலைநாட்டுப் பண்பாட்டையும் புறக்கணித்தது. இப்பள்ளியில் உண்மையான இஸ்லாமியமதம் கற்றுத்தரப்பட்டது. இதன் நோக்கம் இஸ்லாமிய சமூகத்தின் ஒழுக்கத்தையும் மதத்தையும் மீட்டெடுப்பதாய் அமைந்தது.

மௌலானா முகமத்–உல்–ஹசன் தியோபந்தின் புதிய தலைவரானார். அவரின் தலைமையில் இயங்கிய ஜமைத்–உல்–உலேமா (இறையியலாளர்களின் அவை) ஹசனுடைய கருத்துக்களான, இந்திய ஒற்றுமை எனும் ஒட்டுமொத்தச் சூழலில் முஸ்லீம்களின் அரசியல், சமய உரிமைகளின் பாதுகாப்பு என்பது குறித்த உறுதியான வடிவத்தை முன்வைத்தது.

## 5.5 பார்சி சீர்திருத்த இயக்கம்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் பார்சி சீர்திருத்த இயக்கம் பம்பாயில் தொடங்கப்பட்டது. 1851இல் பர்துன்ஜி நௌரோஜி என்பார் "ரஹ்னுமாய் மஜ்தயாஸ்னன் சபா" (பார்சிகளின் சீர்திருத்தச் சங்கம்) எனும் அமைப்பை ஏற்படுத்தினார். ராஸ்ட் கோப்தார் (உண்மை விளம்பி) என்பதே அதன் தாரகமந்திரமாக இருந்தது. பெர்ரம்ஜி மல்பாரி என்பார் குழந்தைத் திருமணப் பழக்கத்திற்கு எதிரான சட்டம்



10th_History_Unit_5_TM.indd 63 24-03-2020 12:30:38

இயற்றப்பட வேண்டுமென இயக்கம் நடத்தினார். இச்சமூகம் பெரோசா மேத்தா, தீன்சா வாச்சா போன்ற சிறந்த தலைவர்களை உருவாக்கியது. அவர்கள் தொடக்ககால காங்கிரசில் முக்கியப் பங்குபணியாற்றினர்.

## 5.6 சீக்கியர் சீர்திருத்த இயக்கம் (நிரங்கரிகள், நாம்தாரிகள்)

பஞ்சாப் சீக்கியச் சமூகத்திலும் சீர்திருத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. நிரங்கரி இயக்கத்தின் நிறுவனரான பாபா தயாள்தாஸ் நிரங்கரி (உருவமற்ற) இறைவனை வழிபட வேண்டுமென வலியுறுத்தினார். சிலைவழிபாடு, சிலைவழிபாட்டோடு தொடர்புடைய சடங்குகள் ஆகியவற்றை மறுத்தல், குருநானக்கின் தலைமையையும் ஆதிகிரந்தத்தையும் மதித்தல் ஆகியன அவருடைய போதனைகளின் சாரமாக விளங்கின. மது அருந்துவதையும், மாமிசம் உண்பதையும் கைவிடும்படி வலியுறுத்திக் கூறினார்.

பாபாராம் சிங் என்பவரால் தொடங்கப் பெற்ற நாம்தாரி இயக்கம் சீக்கியரிடையே நடைபெற்ற மற்றுமொரு சமூக, சமயச் சீர்திருத்த இயக்கமாகும். நாம்தாரி இயக்கம் சீக்கியர்களின் அடையாளங்களை (கிர்பான் – வாளைத் தவிர) அணிய வற்புறுத்தியது. வாளுக்குப் பதிலாகத் தனது சீடர்களை லத்தியை வைத்துக் கொள்ளும்படி ராம்சிங் கூறினார். இவ்வியக்கம் ஆணும் பெண்ணும் சமம் எனக் கருதியது. விதவை மறுமணத்தை ஆதரித்தது. வரதட்சணை முறையையும் குழந்தைத் திருமணத்தையும் தடைசெய்தது.

ஆரியசமாஜம், கிறித்தவ சமயப்பரப்பு நிறுவனங்கள் ஆகியவற்றின் செல்வாக்கு வளர்ந்து கொண்டிருந்த ஒரு சூழலில் சிங்சபா எனும் அமைப்பு அமிர்தசரசில் நிறுவப்பட்டது. சீக்கியமதத்தின் புனிதத்தை மீட்டெடுப்பதே சபாவின் முக்கியக் குறிக்கோளாக அமைந்தது. ஆங்கிலேயரின் ஆதரவுடன் அமிர்தரஸில் சீக்கியர்களுக்கென கால்சா கல்லூரி உருவாக்கப்பட்டது. சிங்சபாவே அகாலி இயக்கத்தின் முன்னோடி அமைப்பாகும்.

## 5.7 தமிழ்நாட்டின் சமூக சீர்திருத்தவாதிகள்

### (அ) இராமலிங்க சுவாமிகள்

W29HMQ

வள்ளலார் எனப் பிரபலமாக அறியப்பட்ட, இராமலிங்க சுவாமிகள் அல்லது இராமலிங்க அடிகள் (1823 – 1874) சிதம்பரத்திற்கு அருகேயுள்ள மருதூர் எனும் கிராமத்தில் பிறந்தார். தந்தையாரின் மறைவுக்குப்பின்னர் அவரது குடும்பம் சென்னையிலிருந்த அவருடைய சகோதரரின் இல்லத்திற்குக் குடிபெயர்ந்தது. முறையான கல்வியை அவர் பெற்றிராவிட்டாலும் அளப்பரியப் புலமையைப் பெற்றிருந்தார். உயிர்களிடையே நம்பிக்கை, இரக்கம் எனும் பிணைப்புகள் இருக்கவேண்டுமென்றார். "துயரப்படும் உயிரினங்களைப் பார்த்து இரக்கம் கொள்ளாதவர்கள் கல் நெஞ்சக்காரர்கள், அவர்களின் ஞானம் மேகங்களால் மூடப்பட்டிருக்கும்" எனும் கருத்தினை முன்வைத்தார். அவர் தன்னுடைய அன்பையும் இரக்கத்தையும் செடிகொடிகள் உட்பட அனைத்து உயிரினங்களிடமும் காட்டினார். இதை அவர் ஜீவகாருண்யம் என்றார். 1865இல் சமரச வேத சன்மார்க்க சங்கம் எனும் அமைப்பை நிறுவினார். பின்னர் அது சமரசசுத்த சன்மார்க்க சத்ய சங்கம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. 1866இல் தென்னிந்தியாவில் ஏற்பட்ட கொடிய பஞ்சத்தைக் கணக்கில் கொண்டு 1867இல் சாதி எல்லைகளைத் தாண்டி அனைத்து மக்களுக்குமான இலவச உணவகத்தை வடலூரில் நிறுவினார். அவர் இயற்றிய ஏராளமான பாடல்கள் திருவருட்பா என்ற தலைப்பில் தொகுக்கப்பட்டன.



இராமலிங்க சுவாமிகள்



வடலூர் சத்ய ஞான சபா

நாட்டில் நிலவிய பசிக்கும் வறுமைக்கும் இராமலிங்கர் சாட்சியாய் இருந்தார். "பசியினால் இளைத்துப்போன, மிகவும் சோர்வுற்ற ஏழைமக்கள் ஒவ்வொரு வீட்டிற்கும் செல்லுவதை நான் பார்த்தேன். இருந்தும் அவர்களின் பசி போக்கப்படவில்லை என் இதயம் கடுமையாக வேதனைப்படுகிறது. கடுமையான நோயினால் வேதனைப்படுபவர்களை எனக்கு முன்பாகப் பார்க்கிறேன். எனது இதயம் நடுங்குகிறது. ஏழைகளாகவும் இணையில்லா நன்மதிப்பையும் களைப்படைந்த இதயத்தையும் கொண்டுள்ள அம்மக்களை நான் பார்க்கிறேன், நான் பலவீனம் அடைகிறேன்."

### ஆ) அயோத்தி தாசர்

பண்டிதர் அயோத்தி தாசர் (1845–1914) ஒரு தீவிரத் தமிழ்அறிஞரும் சித்தமருத்துவரும்



10th_History_Unit_5_TM.indd 64 24-03-2020 12:30:38

www.tntextbooks.in

பத்திரிக்கையாளரும் சமூக அரசியல் செயல்பாட்டாளரும் ஆவார். சென்னையில் பிறந்த அவர் தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம், பாலி ஆகிய மொழிகளில் புலமை பெற்றவர். சரளமாகப் பேசக் கூடியவர். சமூகநீதிக்காக இயக்கம் நடத்திய அவர், சாதியத்தின் கொடிய பிடியிலிருந்து ஒடுக்கப்பட்டோர் விடுதலைபெறப் பாடுபட்டார். சாதிகளற்ற அடையாளத்தை நிறுவமுயன்ற அவர் சாதிய மேலாதிக்கத்திற்கும் தீண்டாமைக்கும் எதிராகக் கண்டனக்குரல் எழுப்பினார். கல்வியை வலிமை பெறுவதற்கான கருவியாகக் கருதிய அவர் தமிழகத்தில் ஒடுக்கப்பட்டோருக்கென பல பள்ளிகள் உருவாக்கப்படுவதற்கு உந்துசக்தியாகத் திகழ்ந்தார்.



**அயோத்தி தாசர்**

ஒடுக்கப்பட்டோரின் கோவில்நுழைவுக்கு ஆதரவாகக் குரல் எழுப்புவதற்காகப் பண்டிதர் அயோத்திதாசர் அத்வைதானந்தா சபா எனும் அமைப்பை நிறுவினார். 1882இல் அயோத்தி தாசரும் ஜான் ரத்தினம் என்பவரும் "திராவிடர்க் கழகம்" எனும் அமைப்பை நிறுவினர். மேலும் 1885இல் "திராவிட பாண்டியன்" எனும் இதழையும் தொடங்கினார். "திராவிட மகாஜனசபை" என்ற அமைப்பை 1891இல் நிறுவிய அவர் அவ்வமைப்பின் முதல் மாநாட்டை நீலகிரியில் நடத்தினார்.

பிரம்மஞான சபையை நிறுவியவர்களில் ஒருவரான கர்னல் H.S. ஆல்காட் ஏற்படுத்தியத் தாக்கத்தின் விளைவாக 1898இல் இலங்கை சென்ற அவர் அங்கே பௌத்தத்தைத் தழுவினார். அதே ஆண்டில் பௌத்தமதத்தின் வழியே பகுத்தறிவின் அடிப்படையிலான சமயத்தத்துவத்தைக் கட்டமைப்பதற்காக "சாக்கிய பௌத்த சங்கம்" எனும் அமைப்பை சென்னையில் நிறுவினார்.

1907இல் "ஒரு பைசா தமிழன்" என்ற பெயரில் ஒரு வாராந்திரப் பத்திரிக்கையைத் தொடங்கி அதை 1914இல் அவர் காலமாகும் வரையிலும் தொடர்ந்து வெளியிட்டார்.

## பாடச்சுருக்கம்

- இராஜா ராம்மோகன் ராயால், பிரம்மசமாஜம் நிறுவப்பெற்றதும், அவருடைய இறப்பிற்குப் பின்னர் சமாஜத்தின் செயல்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதில் மகரிஷி தேவேந்திரநாத் தாகூரும் கேசவ் சந்திர சென்னும் வகித்த பங்கு குறித்தும் விவாதிக்கப்பட்டுள்ளது.
- M.G. ரானடேயின் பங்களிப்பும், அவர் இணைந்து செயல்பட்ட பிரார்த்தனை சமாஜத்தின் பங்களிப்பும் ஆய்வு செய்யப்பட்டுள்ளது.
- சுவாமி தயானந்த சரஸ்வதியின் ஆதரவில், இந்துமதத்தைச் சீர்திருத்த ஆரிய சமாஜம் மேற்கொண்ட முயற்சிகளும், மதம் மாறியவர்களை மீண்டும் இந்து மதத்திற்குள் கொண்டு வருவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன.
- தீவிர சீர்திருத்தவாதியான ஈஸ்வர் சந்திர வித்யாசாகர் குறித்தும், பெண்களின் மேம்பாட்டிற்கான அவரின் முயற்சிகளும் விளக்கப்பட்டுள்ளன.
- இந்துமதத்தை மாற்றியமைப்பதில் இராமகிருஷ்ண பரமஹம்சர், அவருடைய சீடர் விவேகானந்தர் ஆகியோரின் பங்கு விவரிக்கப்பட்டுள்ளது.
- மகாராஷ்டிராவில் ஜோதிபா பூலே ஒடுக்கப்பட்ட, உரிமை மறுக்கப்பட்ட மக்கள் பகுதியினர்க்குச் சமூகநீதியைப் பெற்றுத்தர மேற்கொண்டப் பணிகள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.

## A-Z கலைச்சொற்கள்

| | | |
|---|---|---|
| சொல்லப்படும் | **Alleged** | stated but not proved |
| பரவசமான | **Ecstatic** | in a state of extreme happiness |
| அதிகப் பரிமாணமுள்ள | **Voluminous** | bulky |
| வலியுறுத்துதல் | **Reiterated** | repeat a statement for emphasis |
| உருவ வழிபாடு | **Idolatry** | the practice of worshipping idols |
| சிறு நூல் | **Tract** | a small booklet |
| திருவெளிப்பாடு | **Revelation** | disclosure |



10th_History_Unit_5_TM.indd 65 24-03-2020 12:30:39

## பயிற்சி

### I சரியான விடையைத் தேர்வு செய்யவும்

ZUXMT2

1. எந்த ஆண்டில் உடன்கட்டை ஏறுதல் (சதி) ஒழிக்கப்பட்டது?
   அ) 1827 ஆ) 1829 இ) 1826 ஈ) 1927
2. தயானந்த சரஸ்வதியால் நிறுவப்பெற்ற சமாஜத்தின் பெயர் யாது?
   அ) ஆரிய சமாஜம்
   ஆ) பிரம்ம சமாஜம்
   இ) பிரார்த்தனை சமாஜம்
   ஈ) ஆதி பிரம்ம சமாஜம்
3. யாருடைய பணியும் இயக்கமும், 1856ஆம் ஆண்டு விதவை மறுமண சீர்திருத்தச் சட்டம் இயற்றப்படுவதற்கு வழிகோலியது?
   அ) ஈஸ்வர் சந்திர வித்யாசாகர்
   ஆ) இராஜா ராம்மோகன் ராய்
   இ) அன்னிபெசன்ட்
   ஈ) ஜோதிபா பூலே
4. 'ராஸ்ட் கோப்தார்' யாருடைய முழக்கம்?
   அ) பார்சி இயக்கம்
   ஆ) அலிகார் இயக்கம்
   இ) இராமகிருஷ்ணர்
   ஈ) திராவிட மகாஜன சபை
5. நாம்தாரி இயக்கத்தை உருவாக்கியவர் யார்?
   அ) பாபா தயாள் தாஸ் ஆ)பாபா ராம்சிங்
   இ) குருநானக் இ) ஜோதிபா பூலே
6. விதவை மறுமணச் சங்கத்தை ஏற்படுத்தியவர் யார்?
   அ) M.G. ரானடே
   ஆ) தேவேந்திரநாத் தாகூர்
   இ) ஜோதிபா பூலே
   ஈ) அய்யன்காளி
7. 'சத்யார்த்தபிரகாஷ்' எனும் நூலின் ஆசிரியர் யார்?
   அ) தயானந்த சரஸ்வதி
   ஆ) அயோத்தி தாசர்
   இ) அன்னிபெசன்ட்
   ஈ) சுவாமி சாரதாநந்தா

### II கோடிட்ட இடங்களை நிரப்புக

1. ____________ சமரச வேத சன்மார்க்க சங்கத்தை நிறுவினார்.
2. புனே சர்வஜனிக் சபாவை நிறுவியவர் ____________
3. குலாம்கிரி நூலை எழுதியவர் ____________.
4. இராமகிருஷ்ணா மிஷன் ____________ ஆல் நிறுவப்பட்டது.
5. ____________ அகாலி இயக்கத்தின் முன்னோடியாகும்.
6. 'ஒரு பைசா தமிழன்' பத்திரிகையைத் துவக்கியவர் ____________ ஆவார்.

### III சரியான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும்

1. i) இராஜா ராம்மோகன் ராய் ஒரு கடவுள் கோட்பாட்டை போதித்தார்.
   ii) அவர் உருவ வழிபாட்டை ஆதரித்தார்.
   iii) சமூகத் தீமைகளைக் கண்டனம் செய்வதை எதிர்த்து அவர் சிற்றேடுகளை வெளியிட்டார்.
   iv) இராஜா ராம்மோகன் ராய் கவர்னர் வில்லியம் பெண்டிங்கால் ஆதரிக்கப்பட்டார்.
   அ) i) சரி ஆ) i) , ii) ஆகியன சரி
   இ) i), ii), iii) ஆகியன சரி ஈ) i), iii) ஆகியன சரி
2. i) பிரார்த்தனை சமாஜம் டாக்டர் ஆத்மாராம் பாண்டுரங்கால் நிறுவப்பெற்றது.
   ii) இந்த சமாஜம் அனைத்துச் சாதியினரும் பங்கேற்கும் சமபந்திகளையும் சாதிக்கலப்புத் திருமணங்களையும் ஊக்குவித்தது.
   iii) ஜோதிபாபூலே ஆண்களின் மேம்பாட்டிற்காகப் பணியாற்றினார்.
   iv) பிரார்த்தனை சமாஜம் பஞ்சாபைப் பிறப்பிடமாகக் கொண்டது.
   அ) i ) சரி ஆ) ii) சரி
   இ) i), ii) ஆகியன சரி ஈ) iii), iv) ஆகியன சரி
3. i) இராமகிருஷ்ணா மிஷன் கல்வி, உடல் நலம், பேரிடர்களின்போது நிவாரணப் பணி செய்தல் போன்ற சமூகப்பணிகளில் செயலூக்கத்துடன் ஈடுபட்டது.
   ii) பேரின்பநிலை எய்தும் பழக்கங்களின் மூலம் ஆன்ம ரீதியாக இறைவனோடு இணைவதை இராமகிருஷ்ணர் வலியுறுத்தினார்.
   iii) இராமகிருஷ்ணர் இராமகிருஷ்ணாமிஷனை ஏற்படுத்தினார்.
   iv) இராமகிருஷ்ணர் வங்கப்பிரிவினையை எதிர்த்தார்.
   அ) i) சரி ஆ) i) மற்றும் ii) சரி
   இ) iii) சரி ஈ) i), iii) மற்றும் iv) சரி



10th_History_Unit_5_TM.indd 66 24-03-2020 12:30:39

4. **கூற்று:** ஜோதிபா பூலே ஆதரவற்றோருக்கான விடுதிகளையும், விதவைகளுக்கான விடுதிகளையும் திறந்தார்.
**காரணம்:** ஜோதிபா பூலே குழந்தைத் திருமணத்தை எதிர்த்தார். விதவை மறுமணத்தை ஆதரித்தார்.
அ) கூற்று சரி. ஆனால் காரணம் கூற்றுக்குப் பொருத்தமானதாக இல்லை.
ஆ) கூற்று சரி. காரணம் கூற்றுக்குப் பொருத்தமானதாக உள்ளது.
இ) இரண்டுமே தவறு.
ஈ) காரணம் சரி. ஆனால் கூற்று பொருத்தமற்றதாக உள்ளது.

## IV பொருத்துக

| | | |
|---|---|---|
| 1. | ஒரு பைசா தமிழன் | – விதவை மறுமண சீர்திருத்தச் சட்டம் |
| 2. | திருவருட்பா | – நிரங்கரி இயக்கம் |
| 3. | பாபா தயாள்தாஸ் | – ஆதி பிரம்மசமாஜம் |
| 4. | ஈஸ்வர் சந்திர வித்யாசாகர் | – பத்திரிக்கை |
| 5. | தேவேந்திரநாத் | – ஜீவகாருண்யப் பாடல்கள் |

## V கீழ்க்காணும் வினாக்களுக்கு சுருக்கமாக விடையளிக்கவும்

1. மகரிஷி தேவேந்திரநாத் தாகூர் முன்வைத்த நம்பிக்கையின் நான்கு கூறுகளைக் குறிப்பிடுக.
2. சமூகச் சீர்திருத்தங்களுக்கு மகாதேவ் ரானடேயின் பங்களிப்பைக் குறிப்பிடுக.
3. இராமலிங்க சுவாமிகளின் சீர்திருத்தங்கள் குறித்து சிறுகுறிப்பு வரைக.
4. பிரம்ம சமாஜத்தால் ஒழிக்கப்பட்ட சமூகத்தீமைகள் யாவை?
5. ஏழைகள் மற்றும் அடித்தட்டு மக்களின் நலன்களுக்காக ஜோதிபா பூலே ஆற்றிய பணிகளைக் கோடிட்டுக் காட்டுக.

## VI விரிவாக விடையளிக்கவும்

1. 19ஆம் நூற்றாண்டில் சீர்திருத்த இயக்கங்கள் நடைபெறுவதற்கு இட்டுச் சென்ற சூழ்நிலைகளை விவாதிக்கவும்.
2. இந்தியச் சமூகத்தின் புத்தெழுச்சிக்கு இராமகிருஷ்ண பரமஹம்சரும் விவேகானந்தரும் ஆற்றிய தொண்டினைத் திறனாய்வு செய்க.
3. பெண்களின் மேம்பாட்டிற்கு 19ஆம் நூற்றாண்டு சீர்திருத்தவாதிகள் ஆற்றிய பணிகள் குறித்து ஒரு கட்டுரை வரைக.

## VII செயல்பாடு

1. பத்தொன்பதாம் நூற்றாண்டு சீர்திருத்தவாதிகள் அவர்களின் சீர்திருத்தங்கள் குறித்து மாணவர்கள் நடித்துக் காண்பித்தல்.
2. 19ஆம் நூற்றாண்டில் நிலவிய சமூகத் தீமைகள் இன்று நிலவும் சமூகத் தீமைகள் குறித்து பட்டிமன்றம் நடத்துதல்.

## மேற்கோள் நூல்கள்


1. Kenneth W. Jones, *Socio-Religious Reform Movement in British India*, New Edition, Cambridge University Press, 2006.
2. Manickam, S., "Depressed Class Movement in South India," in Manikumar K.A. (ed.), *History and Society*, Tirunelveli, 1996.
3. V. Geetha and S.V. Rajathurai, *Towards a Non-Brahmin Millennium from Iyothee Thass to Periyar*, Calcutta, 1998.


## இணையதள வளங்கள்

1. https://www.deccanherald.com.
2. http://en.wikipedia.org/wiki/ timesofindia.com

## இணையச் செயல்பாடு

### 19ஆம் நூற்றாண்டில் சமூக, சமய சீர்திருத்த இயக்கங்கள்

**செயல்முறை**

- கீழ்காணும் உரலி / விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தி இச்செயல்பாட்டிற்கான இணையப் பக்கத்திற்குச் செல்லவும்.
- தேடு பொறியில் 'History of Modern India' என தட்டச்சு செய்யவும்.
- காலக்கோடு நிகழ்வுகளை துல்லியமான விளக்கத்துடன் தெரிந்துகொள்ளலாம்

**உரலி:** https://www.timetoast.com/categories

B373_10_SOCIAL_TM



10th_History_Unit_5_TM.indd 67 24-03-2020 12:30:39

# அலகு – 6

# ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக தமிழகத்தில் நிகழ்ந்த தொடக்ககால கிளர்ச்சிகள்



## கற்றலின் நோக்கங்கள்

MYBT46

**கீழ்க் காண்பனவற்றோடு அறிமுகமாதல்**

- பாளையக்காரர் அமைப்பும், ஆங்கிலேயர்களுக்கு எதிரான பாளையக்காரர்களின் புரட்சியும்
- வேலுநாச்சியார், பூலித்தேவர், கட்டபொம்மன், மருது சகோதரர்கள் போன்றோரின் ஆங்கிலேய எதிர்ப்புக் கிளர்ச்சிகள்
- தென்னிந்தியாவில் ஆங்கிலேயரின் அடக்குமுறைக்கு பதிலடியாக அமைந்த வேலூர் புரட்சி

## அறிமுகம்

பிரெஞ்சுப் படைகளையும், அதோடு தோழமை கொண்டிருந்த இந்திய ஆட்சியாளர்களையும் மூன்று கர்நாடகப் போர்களில் தோற்கடித்திருந்த கிழக்கிந்திய கம்பெனி தனது அதிகாரத்தையும், செல்வாக்கையும் விரிவாக்கி ஒருங்கிணைக்கத் தொடங்கியது. எனினும் உள்ளூர் ஆட்சியாளர்களும் நிலக்கிழார்களும் இதனை எதிர்த்தனர். நாடுபிடிக்கும் அவர்களின் நோக்கத்திற்கு முதல் எதிர்வினை திருநெல்வேலிப் பகுதியின் நெற்கட்டும்செவலில் ஆட்சிபுரிந்து வந்த பூலித்தேவரிடமிருந்து வெளிப்பட்டது. இதைத்தொடர்ந்து வேலுநாச்சியார், வீரபாண்டிய கட்டபொம்மன், மருது சகோதரர்கள், தீரன் சின்னமலை போன்ற தமிழகத்தின் பிற பகுதிகளை ஆட்சிபுரிந்து வந்தோரும் எதிர்த்தனர். பாளையக்காரர் போர் என அறியப்படும் இது 1806இல் நிகழ்ந்த வேலூர் புரட்சிக்கு இட்டுச் சென்றது. தமிழ்நாட்டில் பிரிட்டிஷாருக்கு எதிராகத் தோன்றிய இத்தொடக்ககால எதிர்ப்புப் பற்றி இப்பாடத்தில் காணலாம்.

## 6.1 ஆங்கிலேயருக்கு எதிரான மண்டல சக்திகளின் எதிர்ப்பு

### (அ) பாளையங்களும் பாளையக்காரர்களும்

பாளையம் என்ற சொல் ஒரு பகுதியையோ, ஒரு இராணுவ முகாமையோ அல்லது ஒரு சிற்றரசையோ குறிப்பதாகும். பாளையக்காரர்கள் (இவர்களை ஆங்கிலேயர்கள் 'போலிகார்' (Poligar) என்று குறிப்பிட்டனர்) என்ற தமிழ்ச்சொல் இறையாண்மை கொண்ட ஒரு பேரரசுக்குக் கப்பம்கட்டும் குறுநில அரசைக் குறிக்கிறது. இவ்வமைப்பின் கீழ் தனிநபர் ஒருவர் ஆற்றிய சீரிய இராணுவ சேவைக்காக அவரின் கட்டுப்பாட்டின்கீழ் பாளையம் கொடுக்கப்பட்டது. வாரங்கல்லை சார்ந்த பிரதாபருத்ரனின் ஆட்சிக்காலத்தில் காகதீய அரசில் இப்பாளையக்காரர் முறை நடைமுறைப்படுத்தப்பட்டது. மதுரை நாயக்கராக 1529இல் பதவியேற்ற விஸ்வநாத நாயக்கர் அவர்தம் அமைச்சரான அரியநாதரின் உதவியோடு தமிழகத்தில் இம்முறையை அறிமுகப்படுத்தினார். பரம்பரை பரம்பரையாக 72 பாளையக்காரர்கள் இருந்திருக்கக்கூடும்.

பாளையக்காரர்களால் வரிவசூலிப்பதிலும், நிலப்பகுதிகளை நிர்வகிப்பதிலும், வழக்குகளை விசாரிப்பதிலும், சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பதிலும் தன்னிச்சையாகச் செயல்பட முடிந்தது. அவர்களது காவல் காக்கும் கடமை படிக்காவல் என்றும் அரசுக்காவல் என்றும் அழைக்கப்பட்டது. பல்வேறு சந்தர்ப்பங்களில் நாயக்க ஆட்சியாளர்கள் தங்கள் அதிகாரத்தைத் தக்கவைத்துக்கொள்ள பாளையக்காரர்கள் உதவிபுரிந்தனர். பாளையக்காரர்களுக்கும், அரசர்களுக்கும் இடையேயான தனிப்பட்ட உறவு மற்றும் புரிதல் மதுரை நாயக்கர்களால்



10th_History_Unit_6_TM.indd 68 24-03-2020 12:31:04

இம்முறை நிறுவப்பட்டதிலிருந்து இருநூறு ஆண்டுகளுக்கும் மேலாக அதாவது ஆங்கிலேயர் இந்நிலப்பகுதிகளைத் தங்கள் வசம் கொண்டு வரும்வரை நீடித்திருந்தது.

### கிழக்கு மற்றும் மேற்குப் பாளையங்கள்

நாயக்க மன்னர்களால் உருவாக்கப்பட்ட 72 பாளையங்களுள் கிழக்கு மற்றும் மேற்கு என்ற இரு தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்த பாளையங்களே முக்கியத்துவம் பெற்றவையாகக் கருதப்பட்டன. கிழக்கில் அமையப்பெற்ற பாளையங்கள் சாத்தூர், நாகலாபுரம், எட்டையபுரம் மற்றும் பாஞ்சாலங்குறிச்சி ஆகியனவும் மேற்கில் அமையப்பெற்ற முக்கியமான பாளையங்கள் ஊத்துமலை, தலைவன்கோட்டை, நடுவக்குறிச்சி, சிங்கம்பட்டி, சேத்தூர் ஆகியனவாகும்.

## 6.2 பாளையக்காரர்களின் புரட்சி 1755–1801

### அ) பூலித்தேவரின் புரட்சி (1755–1767)

கர்னல் ஹெரான் தலைமையிலான கம்பெனியின் படை ஒன்றை அழைத்துக் கொண்டு மார்ச் 1755இல் மாபூஸ்கான் (ஆற்காட்டு நவாபின் சகோதரர்) திருநெல்வேலிக்குச் சென்றார். மதுரை எளிதில் அவர்களது கையில் வீழ்ந்தது. அதன்பின் தொடர்ந்து கம்பெனிக்குக் கீழ்ப்படிய மறுத்துவந்த பூலித்தேவரை அடக்க கர்னல் ஹெரான் பணிக்கப்பட்டார். மேற்குப் பகுதியில் இருந்த பாளையக்காரர்களிடம் பூலித்தேவர் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தார். பீரங்கிகளின் தேவையும் துணைக்கலப்பொருட்கள் மற்றும் படைவீரர்களின் ஊதியம் உள்ளிட்ட காரணங்களினால் ஹெரான் தனது திட்டத்தைக் கைவிட்டு மதுரைக்கு பின்வாங்கினார். கம்பெனி நிர்வாகம் அவரைத் திரும்ப அழைத்ததோடு நிரந்தரப் பணிநீக்கம் செய்தும் உத்தரவிட்டது.


பூலித்தேவர்

### பிரிட்டிஷ் எதிர்ப்பாளர்களின் கூட்டமைப்பும், நட்புக் கூட்டணியும்

நவாப் சந்தாசாகிப்பின் முகவர்களாக செயல்பட்டு வந்த மியானா, முடிமையா, நபீகான் கட்டாக் எனும் மூன்று பத்தாணிய அதிகாரிகள் மதுரை மற்றும் திருநெல்வேலிப் பகுதிகளில் பொறுப்புவகித்தனர். அவர்கள் ஆற்காட்டு நவாபான முகமது அலிக்கு எதிராக மேற்கு பாளையக்காரர்களுக்கு ஆதரவளித்தனர். அவர்களோடு பூலித்தேவர் நெருக்கமான நட்புறவை ஏற்படுத்திக்கொண்டிருந்தார். மேலும் பூலித்தேவர் ஆங்கிலேயர்களுக்கு எதிராகப் போரிட பாளையக்காரர்களின் கூட்டமைப்பு ஒன்றையும் ஏற்படுத்தினார். சிவகிரிப் பாளையக்காரர் நீங்கலாகப் பிற மறவர் பாளையங்கள் யாவும் அவரை ஆதரித்தன. எட்டையபுரமும் பாஞ்சாலங்குறிச்சியும் கூட இக்கூட்டமைப்பில் இணையவில்லை. மேலும் ஆங்கிலேயர்கள் இராமநாதபுரம் மற்றும் புதுக்கோட்டை மன்னர்களின் ஆதரவைப் பெற்றனர். பூலித்தேவர் மைசூரின் ஹைதர் அலி மற்றும் பிரெஞ்சுக்காரர்களது ஆதரவினைப் பெற முயன்றார். ஏற்கனவே மராத்தியர்களோடு கடுமையான மோதலில் ஈடுப்பட்டிருந்த ஹைதர் அலியால் பூலித்தேவருக்கு உதவ இயலவில்லை.

### களக்காடு போர்

நவாப் கூடுதல் படைகளை மாபூஸ்கானுக்கு அனுப்பி திருநெல்வேலிக்குச் செல்லும் படையை பலப்படுத்தினார். மேலும் கம்பெனியின் 1000 சிப்பாய்களோடு நவாபால் அனுப்பப்பட்ட 600க்கும் மேற்பட்ட படை வீரர்களையும் மாபூஸ்கான் பெற்றார். மேலும் அவருக்கு கர்நாடகப் பகுதியிலிருந்த குதிரைப் படை மற்றும் காலாட்படையின் ஆதரவும் இருந்தது. மாபூஸ்கான் களக்காடு பகுதியில் தனது படைகளை நிலைநிறுத்தும் முன்பாக திருவிதாங்கூரின் 2000 வீரர்கள் பூலித்தேவரின் படைகளோடு இணைந்தனர். களக்காட்டில் நடைபெற்றப் போரில் மாபூஸ்கானின் படைகள் தோற்கடிக்கப்பட்டன.

### யூசுப்கானும், பூலித்தேவரும்

பூலித்தேவர் தலைமையில் ஒருங்கிணைக்கப்பட்ட பாளையக்காரர்கள் எதிர்ப்பு திருநெல்வேலிப் பகுதியில் ஆங்கிலேயர் நேரடியாகத் தலையிடுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது. திருவிதாங்கூர் மன்னரின் ஆதரவோடு 1756 முதல் 1763 வரையிலான காலத்தில் பூலித்தேவர் தலைமையிலான திருநெல்வேலி பாளையக்காரர்கள் நவாபின் அதிகாரத்தை எதிர்ப்பதையே முழு நோக்கமாகக் கொண்டிருந்தனர். கம்பெனியாரால் அனுப்பப்பட்ட யூசுப்கான் (கான்சாகிப் என்றும் தமது மதமாற்றத்திற்கு முன்பு மருதநாயகம் என்றும் அழைக்கப்பட்டவர்), திருச்சிராப்பள்ளியில் இருந்து தான் எதிர்பார்த்த பெரும்பீரங்கிகள் மற்றும் வெடிபொருட்கள் வந்துசேரும் வரை பூலித்தேவர் மீது தாக்குதல் தொடுக்க அவர் ஆயத்தமாகவில்லை. பிரெஞ்சுப் படைகளோடு ஒருபுறமும், ஹைதர் அலி மற்றும் மராத்தியரோடு மறுபுறமும்



10th_History_Unit_6_TM.indd 69 24-03-2020 12:31:04

ஆங்கிலேயர் போரில் ஈடுபட்டுக் கொண்டிருந்ததால் பீரங்கிப்படைகள் செப்டம்பர் 1760இல் தான் வந்து சேர்ந்தன. யூசுப்கான் நெற்கட்டும்செவலில் கோட்டையை முற்றுகையிடுவதற்காக நடத்திய இத்தாக்குதல் இரண்டு மாதங்கள் நீடித்தது. 1761 மே 16இல் பூலித்தேவரின் மூன்று முக்கியக் கோட்டைகள் (நெற்கட்டும்செவல், வாசுதேவநல்லூர் மற்றும் பனையூர்) யூசுப்கானின் கட்டுப்பாட்டிற்குள் வந்தன.

இதற்கிடையே பாண்டிச்சேரியைக் கைப்பற்றிய ஆங்கிலேயர்கள் பிரெஞ்சுக்காரர்களின் முக்கியத்துவத்தை முழுவதுமாக குறைத்திருந்தனர். இதன் விளைவாக பிரெஞ்சுக்காரர்களின் உதவி கிடைக்காது என்றுணர்ந்த பாளையக்காரர்களின் ஒற்றுமை உடையத்துவங்கியது. இதையடுத்து திருவிதாங்கூர், சேத்தூர், ஊத்துமலை மற்றும் சுரண்டை ஆகிய பகுதிகள் எதிரணியினருக்கு தங்கள் ஆதரவை அளிக்கத் தொடங்கின. கம்பெனியின் நிர்வாகத்திற்கு முறையான தகவல் அளிக்காமல் பாளையக்காரர்களோடு பேச்சுவார்த்தை நடத்திய யூசுப்கான் மீது நம்பிக்கை துரோகக் குற்றம் சுமத்தப்பட்டு 1764இல் தூக்கிலிடப்பட்டார்.

### பூலித்தேவரின் வீழ்ச்சி

கான்சாகிப் காலமானதைத் தொடர்ந்து, நாடிழந்த நிலையில் சுற்றிவந்த பூலித்தேவர் திரும்பிவந்து 1764இல் நெற்கட்டும்செவலை மீண்டும் கைப்பற்றினார். எனினும் 1767இல் கேப்டன் கேம்ப்பெல் என்பவரால் தோற்கடிக்கப்பட்டார். தப்பிச்சென்ற அவர் நாடிழந்த நிலையிலேயே காலமானார்.

**ஒண்டிவீரன் :** ஒண்டிவீரன் பூலித்தேவரின் படைப் பிரிவுகளில் ஒன்றனுக்குத் தலைமையேற்றிருந்தார். பூலித்தேவரோடு இணைந்து போரிட்ட அவர் கம்பெனிப் படைகளுக்கு பெரும் சேதங்களை ஏற்படுத்தினார். செவிவழிச் செய்தியின்படி ஒரு போரில் அவரது கை துண்டிக்கப்பட்டதாகவும், அதனால் பூலித்தேவர் பெரிதும் வருந்தியதாகவும் தெரிகிறது. ஆனால் ஒண்டிவீரன், எதிரியின் கோட்டையில் தான் நுழைந்து பல தலைகளைக் கொய்தமைக்காகத் தமக்கு கிடைத்தப் பரிசு என்று கூறியுள்ளார்.

### (ஆ) வேலுநாச்சியார் (1730–1796)

இராமநாதபுரத்தின் அரசர் செல்லமுத்து சேதுபதிக்கு 1730இல் அரசகுடும்பத்தின் ஒரே பெண் வாரிசாக வேலுநாச்சியார் பிறந்தார். மன்னருக்கு ஆண் வாரிசு இல்லை. அரச குடும்பத்தால் வளரி, சிலம்பம் போன்ற தற்காப்புக் கலைகளிலும், போர்க் கருவிகளைக் கையாளுவதற்கும் பயிற்சி அளிக்கப்பட்டு வளர்க்கப்பட்டார். மேலும் அவர் ஆங்கிலம், பிரெஞ்சு, உருது போன்ற மொழிகளில் வல்லமை பெற்றிருந்ததோடு குதிரையேற்றத்திலும், வில்வித்தையிலும் திறமையானவராக விளங்கினார்.


**வேலுநாச்சியார்**

தனது 16வது வயதில் வேலுநாச்சியார் சிவகங்கை மன்னரான முத்துவடுகநாதரை மணந்து வெள்ளச்சி நாச்சியார் என்ற பெண்மகவையும் பெற்றெடுத்தார். 1772இல் ஆற்காட்டு நவாபும் லெப்டினன்ட் கர்னல் பான் ஜோர் தலைமையிலான கம்பெனி படைகளும் இணைந்து காளையார்கோவில் அரண்மனையைத் தாக்கினர். இதனால் மூண்ட போரில் முத்துவடுகநாதர் கொல்லப்பட்டார். தனது மகளோடு தப்பிச்சென்ற வேலுநாச்சியார் கோபால நாயக்கரின் பாதுகாப்பில் திண்டுக்கல் அருகே உள்ள விருப்பாட்சியில் எட்டு ஆண்டுகள் வாழ்ந்தார்.

மறைந்துவாழ்ந்த காலத்தில் வேலுநாச்சியார் ஒரு படைப்பிரிவை உருவாக்கியதோடு கோபால நாயக்கர் மட்டுமல்லாமல் ஹைதர் அலியோடும் கூட்டணியை ஏற்படுத்திக்கொண்டார். வேலுநாச்சியாரின் சார்பில் ஹைதர் அலிக்கு, தளவாய் (இராணுவத் தலைவர்) தாண்டவராயனார் எழுதிய கடிதத்தில் ஆங்கிலேயரைத் தோற்கடிக்கும் பொருட்டு 5000 காலாட்படைகளும், 5000 குதிரைப் படைகளும் அனுப்பும்படி அவரிடம் கோரினார். வேலுநாச்சியார் உருது மொழியில் தனக்கு கிழக்கிந்திய கம்பெனியோடு இருந்த பிணக்குகளை கடிதத்தில் விவரித்திருந்தார்.

**விருப்பாட்சியின் பாளையக்காரரான கோபால நாயக்கர் :** கோபால நாயக்கரைத் தலைவராகக் கொண்ட திண்டுக்கல் கூட்டமைப்பில் (Dindigul League) மணப்பாறையின் லெட்சுமி நாயக்கரும், தேவதானப்பட்டியின் பூஜை நாயக்கரும் இடம் பெற்றிருந்தனர். தனது நட்பை வெளிப்படுத்தும் விதமாக ஒரு நல்லுறவுக் குழுவை அனுப்பிவைத்த திப்பு சுல்தானால் கோபால நாயக்கர் ஈர்க்கப்பட்டார். கோயம்புத்தூரை மையமாகக்கொண்டு பிரிட்டிஷாரை எதிர்த்த அவர், பின்னாட்களில் கட்டபொம்மனின் சகோதரரான ஊமைத்துரையோடு இணைந்தார். அவர் உள்ளூர் விவசாயிகளின் ஆதரவுடன் ஆனைமலையில் கடும் போர் புரிந்தார். ஆயினும் பிரிட்டிஷ் படைகளால் அவர் 1801இல் வெற்றிகொள்ளப்பட்டார்.



10th_History_Unit_6_TM.indd 70 24-03-2020 12:31:04

மேலும் தான் ஆங்கிலேயரோடு மோதுவதில் தீவிரமாக இருப்பதைத் தெளிவுபடுத்தினார். அவரது மனவுறுதியைப் பார்த்து வியந்த ஹைதர் அலி தனது திண்டுக்கல் கோட்டை படைத்தலைவரான சையதிடம் அவருக்கு வேண்டிய இராணுவ உதவிகளை வழங்குமாறு ஆணையிட்டார்.


வேலுநாச்சியார் பிரிட்டிஷாரின் ஆயுதங்கள் குவிக்கப்பட்டிருக்கும் இடத்தை அறிந்துகொள்ள உளவாளிகளை நியமித்தார். கோபால நாயக்கர் மற்றும் ஹைதர் அலியின் இராணுவ உதவியோடு அவர் சிவகங்கையை மீண்டும் கைப்பற்றினார். மருது சகோதரர்களின் உதவியினால் அவர் அரசியாக முடிசூட்டிக்கொண்டார். இந்திய நாட்டில் பிரிட்டிஷ் காலனியாதிக்க அதிகாரத்தை எதிர்த்த முதல் பெண் ஆட்சியாளர் அல்லது அரசி என்ற பெருமை அவருக்கே உரித்தானதாகும்.

வேலுநாச்சியாரின் நம்பிக்கைக்குரிய தோழியாகத் திகழ்ந்த குயிலி, உடையாள் என்ற பெண்களின் படைப்பிரிவைத் தலைமையேற்று வழிநடத்தினார். உடையாள் என்பது குயிலி பற்றி உளவு கூறமறுத்ததால் கொல்லப்பட்ட மேய்த்தல் தொழில்புரிந்த பெண்ணின் பெயராகும். குயிலி தனக்குத்தானே நெருப்புவைத்துக்கொண்டு (1780) அப்படியே சென்று பிரிட்டிஷாரின் ஆயுதக்கிடங்கிலிருந்த அனைத்துத் தளவாடங்களையும் அழித்தார்.


**குயிலி**

### (இ) வீரபாண்டிய கட்டபொம்மனின் கலகம் 1790–1799

தனது தந்தையாரான ஜெகவீரபாண்டிய கட்டபொம்மனின் இறப்பிற்குப் பின் பாஞ்சாலங்குறிச்சியின் பாளையக்காரராக தனது முப்பதாவது வயதில் வீரபாண்டிய கட்டபொம்மன் பொறுப்பேற்றார். கம்பெனி நிர்வாகிகளான ஜேம்ஸ் லண்டன் மற்றும் காலின் ஜாக்சன் என்போர் இவரை அமைதியை விரும்பும் மனம் கொண்டவராகவே கருதினர். எனினும் தொடர்ந்து நடந்த சம்பவங்கள் கட்டபொம்மனுக்கும், கிழக்கிந்திய கம்பெனிக்கும் மோதல்போக்கை ஏற்படுத்தின. 1781இல் கம்பெனியாருடன் நவாப் ஏற்படுத்திக்கொண்ட உடன்படிக்கையின்படி, மைசூரின் திப்பு சுல்தானுடன் ஆற்காட்டு நவாப் போர்புரிந்து கொண்டிருந்தபோது, கர்நாடகப்பகுதியில் வரி மேலாண்மையும், நிர்வாகமும் கம்பெனியின் முழுக்கட்டுப்பாட்டின் கீழ் செல்லும்நிலை ஏற்பட்டது. வசூலிக்கப்பட்ட வரியில் ஆறில் ஒரு பங்கு நவாபிற்கும் அவர் குடும்ப பராமரிப்பிற்கும் என ஒதுக்கப்பட்டது. இவ்வாறு பாஞ்சாலங்குறிச்சியிடமிருந்து வரி வசூலிக்கும் உரிமையை கம்பெனி பெற்றிருந்தது. அனைத்துப் பாளையங்களிலிருந்தும் வரிகளை வசூலிக்க கம்பெனி அதன் ஆட்சியர்களை நியமித்தது. ஆட்சியர்கள் பாளையக்கரார்களை அவமானப்படுத்தியதோடு வரிகளை வசூலிக்க படையினைப் பயன்படுத்தினர். இதுவே கட்டபொம்மனுக்கும் ஆங்கிலேயருக்கும் இடையே பெரும் பகை ஏற்பட அடிப்படையானது.


**கட்டபொம்மன்**

#### ஜாக்சனோடு ஏற்பட்ட மோதல்

கட்டபொம்மனிடமிருந்து வசூலிக்க வேண்டிய நிலவரி நிலுவையானது 1798ஆம் ஆண்டு வாக்கில் 3310 பகோடாக்களாக இருந்தது. இவற்றை வசூலிப்பதற்காக ஜாக்சன் என்ற கர்வமுள்ள ஆட்சியர் இராணுவத்தை அனுப்ப முனைந்தபோது மதராஸ் அரசாங்கம் அதற்கு அனுமதியளிக்க மறுத்தது. 1798 ஆகஸ்ட் 18இல் இராமநாதபுரத்தில் வந்து தன்னைச் சந்திக்குமாறு கட்டபொம்மனுக்கு அவர் ஆணை பிறப்பித்தார். ஆனால் கட்டபொம்மன் மேற்கொண்ட முயற்சி பலனளிக்காததோடு குற்றாலம் மற்றும் ஸ்ரீவில்லிப்புத்தூர் ஆகிய இடங்களிலும் ஜாக்சன் அவரைச் சந்திக்க மறுத்தார். இறுதியாக 1798 செப்டம்பர் 19 அன்று அனுமதியளித்ததன்பேரில் கட்டபொம்மன் இராமநாதபுரத்தில் ஜாக்சனைச் சந்தித்தார். ஆணவத்தின் மொத்த உருவமாகத் திகழ்ந்த ஜாக்சனின் முன்பு கட்டபொம்மன் மூன்று மணி நேரம் நிற்க வைக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. ஆபத்தை உணர்ந்த கட்டபொம்மன் தனது அமைச்சரான சிவசுப்ரமணியனாருடன் தப்பிச்செல்ல முயன்றார். உடனடியாக ஊமைத்துரை தனது ஆட்களோடு கோட்டைக்குள் நுழைந்து கட்டபொம்மன் தப்ப உதவினார். இராமநாதபுரம் கோட்டை வாசலில் நடந்த மோதலில் லெப்டினென்ட் கிளார்க் உள்ளிட்ட சிலர் கொல்லப்பட்டனர். சிவசுப்ரமணியனார் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டார்.

G68JQ8

#### மதராஸ் ஆட்சிக்குழுவின் முன்பாக ஆஜராதல்

பாஞ்சாலங்குறிச்சிக்குத் திரும்பிய கட்டபொம்மன் ஆட்சியர் ஜாக்சன் தன்னை எவ்வாறெல்லாம் அவமானப்படுத்தினார் என்பதை

மதராஸ் ஆட்சிக்குழுவிற்குத் தெரியப்படுத்தினார். அக்குழு வில்லியம் ப்ரௌன், வில்லியம் ஓரம், ஜான் காஸாமேஜர் ஆகியோர் அடங்கிய குழுவின் முன்பாக ஆஜராகும்படி கட்டபொம்மனைப் பணித்தது. இதற்கிடையே சிவசுப்ரமணியனாரை சிறையிலிருந்து விடுவித்தும், கலெக்டர் ஜாக்ஸனைப் பணி இடைநீக்கம் செய்தும் ஆளுநர் எட்வர்ட் கிளைவ் உத்தரவிட்டார். குழுவின் முன்பாக 1798 டிசம்பர் 15 அன்று கட்டபொம்மன் ஆஜராகி இராமநாதபுரத்தில் நிகழ்ந்தவற்றை விளக்கினார். கட்டபொம்மன் குற்றவாளி அல்ல என்று குழு முடிவுசெய்தது. ஜாக்சன் நிரந்தரப் பணிநீக்கம் செய்யப்பட்டு அவரது இடத்தில் புதிய ஆட்சியராக S.R. லூஷிங்டன் என்பவர் நியமிக்கப்பட்டார். கட்டபொம்மனும் நிலுவைத் தொகையில் 1080 பகோடாக்கள் நீங்கலாக பிற நிலுவைத் தொகையினைச் செலுத்தியிருந்தார்.

### கட்டபொம்மனும் பாளையக்காரர்களின் கூட்டமைப்பும்

இதற்கிடையே, திண்டுக்கல்லின் கோபால நாயக்கர், ஆனைமலையின் யதுல் நாயக்கர் போன்ற அருகாமையிலிருந்த பாளையங்களை உள்ளடக்கிய தென்னிந்தியக் கூட்டமைப்பை சிவகங்கையின் மருதுபாண்டியர் ஏற்படுத்தினார். மருதுபாண்டியர் அதன் தலைவராகச் செயல்பட்டார். திருச்சிராப்பள்ளி அறிக்கை தயாரிக்கப்பட்டது. இக்கூட்டமைப்பு கட்டபொம்மனின் ஆர்வத்தைத் தூண்டியது. மருது சகோதரர்களை கட்டபொம்மன் சந்திப்பதை ஆட்சியர் லூஷிங்டன் தடுக்க முயன்றார். ஆனால் மருது சகோதரர்களும், கட்டபொம்மனும் இணைந்து ஆங்கிலேயரை எதிர்ப்பது என்று முடிவெடுத்தார்கள். கட்டபொம்மன் தனது செல்வாக்கைப் பயன்படுத்தி சிவகிரி பாளையக்காரரைத் தங்களோடு இணைக்க முயன்றார், அவர் அதற்கு மறுத்தார். அதனால் சிவகிரியை நோக்கி கட்டபொம்மன் முன்னேறினார். ஆனால் சிவகிரி பாளையத்தினர் கம்பெனிக்குக் கப்பம் கட்டிவந்தனர். அதனால் கட்டபொம்மனின் சிவகிரி நோக்கியப் படைநகர்வை தங்களுக்கு விடப்பட்ட சவாலாகவே கம்பெனியார் கருதினர். கம்பெனி தனது படைகளை திருநெல்வேலி நோக்கிச் செல்ல உத்தரவிட்டது.

### பாஞ்சாலங்குறிச்சி முற்றுகை

மே 1799இல் மதராஸில் இருந்த வெல்லெஸ்லி பிரபு திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் மற்றும் மதுரை ஆகிய பகுதிகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த படைகளை திருநெல்வேலி நோக்கிச் செல்ல உத்தரவிட்டார். படைகளுக்கு மேஜர் பானெர்மென் தலைமையேற்றார். திருவிதாங்கூர் படைகளும் பிரிட்டிஷ் படைகளோடு இணைந்தன. கட்டபொம்மனைச் சரணடையக் கோரிய நிபந்தனையொன்று 1799 செப்டம்பர் 1 அன்று வழங்கப்பட்டது. கட்டபொம்மனின் பிடிகொடுக்காத பதிலால் மேஜர் பானெர்மென் கோட்டையைத் தாக்கினார். பானெர்மென் செப்டம்பர் 5 அன்று முழுப் படைகளையும் பாஞ்சாலங்குறிச்சியில் கொண்டுவந்து நிறுத்தினார். அவர்கள் கோட்டையின் அனைத்துத் தொடர்புகளையும் துண்டித்தனர். பானெர்மென் இராமலிங்கரை தூதனுப்பி கட்டபொம்மனைச் சரணடையுமாறு கேட்டுக்கொண்டார். கட்டபொம்மன் மறுத்தார். கோட்டையின் இரகசியங்கள் அனைத்தையும் இராமலிங்கர் சேகரித்தார். அவரது அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு பானெர்மென் தாக்குதல் உத்திகளை வடிவமைத்தார். கள்ளர்பட்டியில் நடைபெற்ற மோதலில் சிவசுப்ரமணியனார் கைது செய்யப்பட்டார்.



பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டை

### கட்டபொம்மன் தூக்கிலிடப்படல்

கட்டபொம்மன் புதுக்கோட்டைக்கு தப்பிச் சென்றார். பிரிட்டிஷார் அவரது தலைக்கு ஒரு வெகுமதியை நிர்ணயித்தனர். எட்டையபுரம் மற்றும் புதுக்கோட்டை அரசர்களால் துரோகமிழைக்கப்பட்ட கட்டபொம்மன் இறுதியில் பிடிபட்டார். சிவசுப்ரமணியனார் நாகலாபுரத்தில் செப்டம்பர் 13 அன்று தூக்கிலிடப்பட்டார். பானெர்மென் விசாரணை என்ற பெயரில் ஒரு கேலிக்கூத்தை பாளையக்காரர்களின் முன்பாக அக்டோபர் 16 அன்று அரங்கேற்றினார். விசாரணையின் போது கட்டபொம்மன் தன்மீது சுமத்தப்பட்ட அனைத்துக் குற்றச்சாட்டுகளையும் ஏற்றுக்கொண்டார். திருநெல்வேலிக்கு மிக அருகேயுள்ள கயத்தாறின் பழையகோட்டைக்கு முன்பாக இருந்த புளியமரத்தில் சகப் பாளையக்காரர்களின் முன்னிலையில் கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்டார். இவ்வாறு போற்றுதலுக்குரியவராகத் திகழ்ந்த பாஞ்சாலங்குறிச்சியின் பாளையக்காரர் கட்டபொம்மனின் வாழ்க்கை முடிவுற்றது.



10th_History_Unit_6_TM.indd 72 24-03-2020 12:31:05

அவர் மீது புனையப்பட்ட நாட்டுப்புறப்பாடல்கள் பலவும் அவரது நினைவை மக்களிடையே உயிர்ப்புடன் தக்கவைத்துக் கொள்ள உதவுகின்றன.

### (ஈ) மருது சகோதரர்கள்

பெரிய மருது என்ற வெள்ள மருது (1748–1801) மற்றும் அவரது தம்பியான சின்ன மருது (1753–1801) ஆகிய இருவரும் சிவகங்கையின் முத்துவடுகநாதரின் திறமையான படைத் தளபதிகளாவர். காளையார்கோவில் போரில் முத்துவடுகநாதர் இறந்தபின் வேலுநாச்சியாருக்கு அரசுரிமையை மீட்டுக்கொடுக்க மருது சகோதரர்கள் அரும்பாடுபட்டனர். பதினெட்டாம் நூற்றாண்டின் கடைசி ஆண்டுகளில் மருது சகோதரர்கள் பிரிட்டிஷாரை எதிர்க்கத் திட்டமிட்டனர். கட்டபொம்மனின் இறப்பிற்குப் பின்னர் அவரது சகோதரர் ஊமைத்துரையோடு இணைந்து பணியாற்றினர். அவர்கள் நவாபுக்குச் சொந்தமான களஞ்சியங்களைக் கொள்ளையிட்டதோடு கம்பெனியின் படைகளுக்குப் பெரும்சேதத்தையும், அழிவையும் ஏற்படுத்தினர்.



மருது சகோதரர்கள்

### மருது சகோதரர்களின் கலகம் (1800–1801)

கட்டபொம்மனின் கலகம் 1799இல் ஒடுக்கப்பட்டபோதும், 1800இல் மீண்டும் கலகம் வெடித்தது. பிரிட்டிஷாரின் குறிப்புகளில் இது இரண்டாவது பாளையக்காரர் போர் என்று குறிப்பிடப்படுகிறது. இப்போரானது சிவகங்கையின் மருது பாண்டியர், திண்டுக்கல்லின் கோபால நாயக்கர், மலபாரின் கேரள வர்மா, மைசூரின் கிருஷ்ணப்பா மற்றும் தூண்டாஜி ஆகியோர் அடங்கிய கூட்டமைப்பால் வழிநடத்தப்பட்டது. விருப்பாட்சியில் ஏப்ரல் 1800இல் சந்தித்த அவர்கள் கம்பெனியாருக்கு எதிராகக் கிளர்ந்தெழ முடிவெடுத்தார்கள். கோயம்புத்தூரில் ஜூன் 1800இல் ஏற்பட்ட எழுச்சி அதிவேகமாக இராமநாதபுரத்திற்கும், மதுரைக்கும் பரவியது. நிலைமையைப் புரிந்துகொண்ட கம்பெனியார் மைசூரின் கிருஷ்ணப்பா மீதும், மலபாரின் கேரளவர்மா மீதும் இன்ன பிறர் மீதும் போர் தொடுக்கப்போவதாக அறிவித்தார்கள். கோயம்புத்தூர், சத்தியமங்கலம் மற்றும் தாராபுரம் ஆகிய பகுதிகளின் பாளையக்காரர்கள் பிடிக்கப்பட்டு தூக்கிலிடப்பட்டார்கள்.

கட்டபொம்மனின் சகோதரர்களான ஊமைத்துரையும், செவத்தையாவும் பிப்ரவரி 1801இல் பாளையங்கோட்டைச் சிறையிலிருந்து தப்பி கமுதியில் பதுங்கியிருப்பதை அறிந்த சின்ன மருது அவர்களைத் தமது தலைமையிடமான சிறுவயலுக்கு அழைத்துச் சென்றார். பாஞ்சாலங்குறிச்சி கோட்டை மிக குறைந்த காலத்தில் மீண்டும் கட்டி முடிக்கப்பட்டது. காலின் மெக்காலே தலைமையிலான பிரிட்டிஷ் படைகள் ஏப்ரலில் மீண்டும் கோட்டையை முற்றுகையிட்டதால் அவர்கள் மருது சகோதரர்களிடம் சிவகங்கையில் அடைக்கலம் கோரினர். தப்பியோடியவர்களை (ஊமைத்துரையும், செவத்தையாவும்) ஒப்படைக்கும்படி மருது சகோதரர்கள் வலியுறுத்தப்பட்டனர். ஆனால் அவர்கள் மறுத்துவிட்டார்கள். இதையடுத்து கர்னல் அக்னியூவும், கர்னல் இன்னஸும் சிவகங்கையை நோக்கி படைநடத்திச் சென்றனர். மருது சகோதரர்கள் ஜூன் 1801இல் நாட்டின் விடுதலையை முன்னிறுத்திய ஒரு பிரகடனத்தை வெளியிட்டனர் இதுவே 'திருச்சிராப்பள்ளி பேரறிக்கை' என்றழைக்கப்படுகிறது.

### 1801ஆம் ஆண்டு பேரறிக்கை (திருச்சிராப்பள்ளி பேரறிக்கை)

பிரிட்டிஷாருக்கு எதிராக மண்டல, சாதி, சமய, இன வேறுபாடுகளைக் கடந்து நிற்பதற்காக முதலில் விடுக்கப்பட்ட அறைகூவலே 1801ஆம் ஆண்டின் பேரறிக்கை ஆகும். இப்பேரறிக்கை திருச்சியில் அமையப்பெற்ற நவாபின் கோட்டையின் முன்சுவரிலும், ஸ்ரீரங்கம் கோவிலின் சுற்றுச் சுவரிலும் ஒட்டப்பட்டது. ஆங்கிலேயருக்கு எதிராகச் செயல்பட விழைந்த தமிழகப் பாளையக்காரர்கள் பலரும் ஒன்று திரண்டனர். சின்ன மருது ஏறத்தாழ 20,000 ஆட்களை ஆங்கிலேயர்களுக்கு எதிராகத் திரட்டினார். வங்காளம், சிலோன், மலேயா ஆகிய இடங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பிரிட்டிஷ் படைகள் விரைந்து வந்தன. புதுக்கோட்டை, எட்டையபுரம் மற்றும் தஞ்சாவூரின் அரசர்கள் பிரிட்டிஷாருடன் கைகோர்த்தார்கள். ஆங்கிலேயரின் பிரித்தாளும் கொள்கை என்ற



10th_History_Unit_6_TM.indd 73 24-03-2020 12:31:05

உத்தி விரைவில் பாளையக்காரர்களின் படைகளில் பிரிவினையை ஏற்படுத்தியது.

### சிவகங்கையின் வீழ்ச்சி

ஆங்கிலேயர்கள் மே 1801இல் தஞ்சாவூரிலும் திருச்சியிலும் இருந்த கலகக்காரர்களைத் தாக்கினார்கள். கலகக்காரர்கள் பிரான்மலையிலும், காளையார் கோவிலிலும் தஞ்சம் புகுந்தனர். அவர்கள் பிரிட்டிஷ் படைகளால் மீண்டும் தோற்கடிக்கப்பட்டனர். இறுதியாக வலுவான இராணுவமும், சிறப்பான தலைமையும் கொண்ட ஆங்கிலேய கம்பெனியே விஞ்சி நின்றது. கலகம் தோற்றதால் 1801இல் சிவகங்கை இணைக்கப்பட்டது. இராமநாதபுரத்தின் அருகே அமைந்த திருப்பத்தூர் கோட்டையில் 1801 அக்டோபர் 24 அன்று மருது சகோதரர்கள் தூக்கிலிடப்பட்டனர். ஊமைத்துரையும், செவத்தையாவும் பிடிக்கப்பட்டு 1801 நவம்பர் 16இல் பாஞ்சாலங்குறிச்சியில் தலை துண்டிக்கப்பட்டனர். கலகக்காரர்களில் 73 பேர் பிடிக்கப்பட்டு மலேயாவின் பினாங்கிற்கு நாடு கடத்தப்பட்டார்கள். பாளையக்காரர்கள் வீழ்ச்சியடைந்தாலும் அவர்களது வீரமும், தியாகமும் எதிர்காலச் சந்ததிகளை ஈர்ப்பதாக அமைந்தது. இதனால் மருது சகோதரர்களின் கலகம் 'தென்னிந்தியப் புரட்சி' என்று அழைக்கப்படுவதோடு தமிழக வரலாற்றில் தனித்துவம் பெற்றதாகவும் கருதப்படுகிறது.

### கர்நாடக உடன்படிக்கை, 1801

1799 மற்றும் 1800–1801ஆம் ஆண்டு பாளையக்காரர்களின் கலகம் அடக்கப்பட்டதன் விளைவு தமிழகத்திலிருந்த அனைத்து உள்ளூர் குடித்தலைமையினரின் எண்ணங்களையும் நீர்த்துப்போகச்செய்தது. 1801 ஜூலை 31இல் ஏற்பட்ட கர்நாடக உடன்படிக்கையின் விதிகளின்படி, பிரிட்டிஷார் நேரடியாக தமிழகத்தின்மீது தங்கள் கட்டுப்பாட்டை ஏற்படுத்தியதோடு பாளையக்காரர் முறையும் முடிவுக்கு வந்ததுடன் அனைத்துக் கோட்டைகளும் இடிக்கப்பட்டு அவர்களது படைகளும் கலைக்கப்பட்டன.

### (உ) தீரன் சின்னமலை (1756 –1805)

தீர்த்தகிரி என்று அழைக்கப்பட்ட தீரன் 1756இல் பிறந்தார். அவர் சிலம்பு, வில்வித்தை, குதிரையேற்றம் மட்டுமல்லாமல் நவீன போர் முறைகளையும் கற்றுத் தேர்ந்தார். கொங்குப்பகுதியில் குடும்ப மற்றும் நிலப்பிரச்சனைகளுக்குத் தீர்வு வழங்குதல் போன்ற செயல்களில் ஈடுபட்டுவந்தார்.



**தீரன் சின்னமலை**

அப்பகுதி மைசூர் சுல்தானின் கட்டுப்பாட்டில் இருந்தது, திப்புவின் திவான் முகம்மது அலி என்பவரால் வரி வசூலிக்கப்பட்டது. ஒரு முறை திவான் வசூலிக்கப்பட்ட வரிப்பணத்தோடு மைசூருக்குத் திரும்பிக்கொண்டிருந்த போது, தீர்த்தகிரி அவரை வழிமறித்து வரிப்பணம் முழுவதையும் பறித்துக்கொண்டார். இவர் முகம்மது அலியிடம் சிவமலைக்கும், சென்னிமலைக்கு இடையே இருந்த 'சின்னமலையே' வரிப்பணத்தைப் பிடுங்கிக்கொண்டதாக சுல்தானுக்குப் போய்ச் சொல் என்று அறிவுறுத்தினார். அதன் பிறகே 'தீரன் சின்னமலை' என்று அவர் அழைக்கப்படலானார். அவமதிப்புக்குள்ளான திவான் சின்னமலையைத் தாக்க படை அனுப்பினார். இருபடைகளும் நொய்யல் ஆற்றங்கரையில் மோதிக்கொண்டன. அதில் சின்னமலையே வெற்றிபெற்றார்.

திப்புவின் இறப்பிற்குப் பிறகு ஒரு கோட்டையை எழுப்பிய தீரன் சின்னமலை அவ்விடத்தைவிட்டு வெளியேறாமல் ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடினார். எனவே அவ்விடம் 'ஓடாநிலை' என்றழைக்கப்படுகிறது. அவர் பிடிபடாமலிருப்பதற்காக கொரில்லாப் போர் முறைகளைக் கையாண்டார். இறுதியாக அவரையும் அவர் சகோதரர்களையும் கைது செய்த ஆங்கிலேயர்கள் அவர்களை சங்ககிரியில் சிறைவைத்தனர். ஆங்கிலேய ஆட்சியை ஏற்க வற்புறுத்தப்பட்டபோது அவர்கள் அதற்கு இணங்க மறுத்தனர். அதனால் 1805 ஜூலை 31 அன்று சங்ககிரி கோட்டையின் உச்சியில் அவர்கள் தூக்கிலிடப்பட்டனர்.

## 6.3 வேலூர் புரட்சி 1806

தென்தமிழகத்தின் பாளையக்காரர்கள் அனைவரையும் ஒடுக்குவதற்கு முன்பாகவே கிழக்கிந்திய கம்பெனி 1792இல் திப்புவோடு ஏற்பட்ட போரின் முடிவில் சேலம் மற்றும் திண்டுக்கல் வருவாய் மாவட்டங்களைப் பெற்றுக்கொண்டது. 1799இல் நடந்த ஆங்கிலேய–மைசூர் போரின் முடிவில் கோயம்புத்தூர் இணைக்கப்பட்டது. 1798ஆம் ஆண்டு தஞ்சாவூரின் அரசர் அப்பகுதியின் இறையாண்மை உரிமையை ஆங்கிலேயருக்கு விட்டுக்கொடுத்து அதே ஆண்டு கப்பம்கட்டும் நிலைக்கும் தள்ளப்பட்டார். கட்டபொம்மன் எதிர்ப்பு (1799), மருது சகோதரர்களின் எதிர்ப்பு (1801) ஆகியவற்றை ஒடுக்கியப் பின்பு, பிரிட்டிஷார் ஆற்காட்டு நவாபை விசுவாசமற்றவர் என்று குற்றம்சுமத்தி அவர்மீது கட்டாயப்படுத்தி ஒரு ஒப்பந்தத்தைத் திணித்தனர். 1801இல் ஏற்பட்ட இவ்வொப்பந்தத்தின்படி, ஆற்காட்டு நவாப் வட ஆற்காடு, தென் ஆற்காடு, திருச்சிராப்பள்ளி, மதுரை



10th_History_Unit_6_TM.indd 74 24-03-2020 12:31:05

www.tntextbooks.in

மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களை அவற்றை நிர்வகிக்கும் அதிகாரத்தோடு ஒப்படைத்துவிட வேண்டும் என்றானது.

### (அ) இந்திய வீரர்களின் மனக்குறை

ஆனாலும் எதிர்ப்பு அடங்கிவிடவில்லை. வெளியேற்றப்பட்ட சிற்றரசர்களும், நிலச்சுவான்தார்களும் கம்பெனி அரசுக்கு எதிராக எதிர்காலத் திட்டம் குறித்து நிதானமாக சிந்தித்துக்கொண்டே இருந்தார்கள். இதன் விளைவாக வெளிப்பட்டதே 1806ஆம் ஆண்டு வேலூர் புரட்சியாகும். புரட்சியின் இறுதி நிகழ்வு அந்நிய ஆட்சியை தூக்கி எறிவதை நோக்கமாகக் கொண்டிருந்தது. பிரிட்டிஷாரின் இராணுவத்தில் சிப்பாயாகப் பணியாற்றியவர்களுக்கு குறைவான ஊதியமே வழங்கப்பட்டது. பதவி உயர்வுக்கான வாய்ப்புகள் குறைவாகவே இருப்பது ஆகியவற்றை நினைத்து கடுமையான கோபத்துடனே பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். தங்களின் சமூக மற்றும் சமய நம்பிக்கைகளுக்கு ஆங்கிலேய அதிகாரிகள் குறைவான மதிப்பளித்ததும், மேலும் அவர்களின் கோபத்தை வலுப்படுத்தியது. விவசாயப் பின்னணிகொண்ட வீரர்களின் வேளாண் சிக்கலும் அவர்களை மேலும் சிரமப்படுத்தியது. சோதனை அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்பட்ட நிலக்குத்தகை முறையில் ஒரு நிலையற்றதன்மைக் காணப்பட்டதாலும் 1805இல் பஞ்சம் ஏற்பட்டதாலும் பல சிப்பாய்களின் குடும்பங்கள் கடும் பொருளாதார நெருக்கடியைச் சந்தித்தன. திப்புவின் மகன்களும் அவர்தம் குடும்பத்தினரும் வேலூர் கோட்டையில் சிறைவைக்கப்பட்ட வேளையில் தங்கள் அதிருப்தியை வெளிப்படுத்தும் அந்த வாய்ப்பு கூடிவந்தது. புரட்சி ஏற்படுவதற்கான இயக்க சக்தியாக தலைமைத்தளபதி (Commander–in–Chief) சர் ஜான் கிரடாக் வெளியிட்ட புதிய இராணுவ விதிமுறை அமைந்தது.

புதிய விதிமுறைகளின்படி, இந்திய வீரர்கள் சீருடையிலிருக்கும்போது சாதி அடையாளங்களையோ, காதணிகளையோ அணியக்கூடாது என்று கேட்டுக்கொள்ளப்பட்டனர். அவர்கள்தாடையைமுழுமையாகச்சவரம்செய்யவும் மீசையை ஒரே பாணியில் வைத்துக்கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டார்கள். புதிய வகை தலைப்பாகை எரிகிற தீயில் எண்ணெய் சேர்ப்பது போலானது. மிகவும் ஆட்சேபனைக்குரிய செயலாகக் கருதப்பட்டது. தலைப்பாகையில் வைக்கப்படும் விலங்கு தோலினால் ஆன இலட்சினையாகும். புதிய தலைப்பாகையை அணிவதில் தங்களுக்கு உடன்பாடில்லை என்று இந்திய சிப்பாய்கள் போதுமான முன்னெச்சரிக்கை விடுத்தனர். ஆனால் கம்பெனி நிர்வாகம் அதனை கவனத்தில் கொள்ளவில்லை.

### (ஆ) புரட்சி வெடித்தல்

1806 ஜூலை 10 அன்று அதிகாலையிலேயே முதல் மற்றும் இருபத்தி மூன்றாம் படைப்பிரிவுகளின் இந்திய சிப்பாய்கள் துப்பாக்கிகளின் முழக்கத்தோடு புரட்சியில் இறங்கினர். கோட்டைக் காவற்படையின் உயர் பொறுப்புவகித்த கர்னல் பேன்கோர்ட் என்பவர்தான் முதல் பலியானார். அடுத்ததாக இருபத்தி மூன்றாம் படைப்பிரிவைச் சேர்ந்த கர்னல் மீக்காரஸ் கொல்லப்பட்டார். கோட்டையைக் கடந்து சென்றுகொண்டிருந்த மேஜர் ஆர்ம்ஸ்ட்ராங் துப்பாக்கிகளின் முழக்கத்தைக் கேட்டார். சூழலை விசாரித்தறிய முற்பட்ட அவரது உடல் தோட்டாக்களால் துளைக்கப்பட்டது. ஏறத்தாழ பனிரெண்டுக்கும் அதிகமான அதிகாரிகள் அடுத்த ஒரு மணிநேரத்துக்குள் கொல்லப்பட்டார்கள். அவர்களில் லெப்டினென்ட் எல்லியும், லெப்டினென்ட் பாப்ஹாமும் பிரிட்டிஷ் மன்னரின் படைப்பிரிவைச் (Battalion) சேர்ந்தவர்களாவர்.

### ஜில்லஸ்பியின் கொடுங்கோன்மை

கோட்டைக்கு வெளியேயிருந்த மேஜர் கூட்ஸ் ஆற்காட்டின் குதிரைப்படைத் தளபதியாக இருந்த கர்னல் ஜில்லஸ்பிக்கு தகவல் கொடுத்தார். கேப்டன் யங்கின் தலைமையிலான குதிரைப் படைப்பிரிவுடன் காலை 9 மணியளவில் கர்னல் ஜில்லஸ்பி கோட்டையை வந்தடைந்தார். இதற்கிடையே புரட்சிக்காரர்கள் திப்புவின் மூத்த மகனான ஃபதே ஹைதரை புதிய மன்னராகப் பிரகடனம் செய்து மைசூர் சுல்தானின் புலி கொடியை கோட்டையில் ஏற்றியிருந்தனர். போர்விதிமுறைகள் எதையும் பொருட்படுத்தாத ஜில்லஸ்பி வீரர்களின் புரட்சியை வன்மையாக ஒடுக்கினார். நேரில் கண்ட ஒருவரின் வாக்குமூலப்படி, கோட்டையில் மட்டும் எண்ணூறு வீரர்கள் பிணமாகக் கிடந்ததாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. திருச்சிராப்பள்ளியிலும், வேலூரிலும் அறுநூறு வீரர்கள் விசாரணையை எதிர்நோக்கி சிறையிலடைக்கப்பட்டார்கள்.

### இ) புரட்சியின் பின்விளைவுகள்

நீதிமன்ற விசாரணைக்குப்பின் குற்றவாளிகள் என்று நிரூபிக்கப்பட்ட ஆறு நபர்கள் பீரங்கியில் கட்டியநிலையில் சுடப்பட்டும், ஐந்து நபர்கள் துப்பாக்கியால் சுடப்பட்டும், எட்டு நபர்கள் தூக்கிலிடப்பட்டும் கொல்லப்பட்டார்கள். திப்புவின் மகன்களை கல்கத்தாவுக்கு அனுப்ப உத்தரவிடப்பட்டது. கலவரத்தை அடக்குவதில் ஈடுபட்ட அதிகாரிகளுக்குப் பரிசுத்தொகையும் பதவிஉயர்வும் வழங்கப்பட்டது.



10th_History_Unit_6_TM.indd 75 24-03-2020 12:31:05






10th_History_Unit_6_TM.indd 76 24-03-2020 12:31:05

கர்னல் ஜில்லஸ்பிக்கு 7,000 பகோடாக்கள் வெகுமதியாக அளிக்கப்பட்டது. எனினும் தலைமைத் தளபதி ஜான் கிரடாக்கும், உதவித் தளபதி (Adjutant General) அக்னியூவும், ஆளுநர் வில்லியம் பெண்டிங்கும் புரட்சி நடக்கக் காரணமானவர்கள் என்று கருதப்பட்டு அவர்களைப் பணிநீக்கம் செய்ததோடு, அவர்கள் இங்கிலாந்துக்கு திருப்பியழைத்துக் கொள்ளப்பட்டார்கள். புதிய இராணுவ விதிமுறைகள் திரும்பப் பெறப்பட்டது.

### ஈ) புரட்சியைப் பற்றிய மதிப்பீடு

வெளியிலிருந்து உடனடியாக எந்தவொரு உதவியும் கிடைக்காத காரணத்தினாலேயே வேலூர் புரட்சி தோல்வியுற்றது. சமீபகால ஆய்வுகளின் வழியாக நாம் அறிந்துகொள்வது யாதெனில் புரட்சிக்கான ஏற்பாடுகளை 23ஆம் படைப்பிரிவின் 2ஆவது பட்டாளத்தைச் சேர்ந்த சுபேதார்களான ஷேக் ஆடமும், ஷேக் ஹமீதும், ஜமேதாரான ஷேக் ஹுஸைனும், 1ஆம் படைப்பிரிவின் 1ஆம் பட்டாளத்தைச் சேர்ந்த இரு சுபேதார்களும், ஜமேதார் ஷேக் காஸிமும் சிறப்பாகச் செய்திருந்ததாகத் தெரிகிறது. 1857ஆம் ஆண்டு பெரும்கலகத்திற்கான அனைத்து முன்அறிகுறிகளையும், எச்சரிக்கைகளையும் வேலூர் புரட்சி கொண்டிருந்தது. ஒரே வித்தியாசம் என்னவென்றால், கலகத்தைத் தொடர்ந்து எந்த உள்நாட்டுக் கிளர்ச்சியும் ஏற்படவில்லை. 1806ஆம் ஆண்டு புரட்சியானது வேலூர் கோட்டையுடன் முடிந்துவிடவில்லை. பெல்லாரி, வாலாஜாபாத், ஹைதராபாத், பெங்களூரு, நந்திதுர்க்கம், சங்கரிதுர்க்கம் ஆகிய இடங்களிலும் அது எதிரொலித்தது.

## பாடச்சுருக்கம்

- தமிழ்நாட்டினுடைய முக்கியமானப் பாளையக்காரர்களைப் பற்றியும், அவர்கள் கிழக்கிந்திய கம்பெனியின் அதிகாரத்தை எதிர்த்துநின்று ஆற்றிய தீரச்செயல்கள் பற்றியும் விவாதிக்கப்பட்டுள்ளது.
- பூலித்தேவர், வேலுநாச்சியார், வீரபாண்டிய கட்டபொம்மன், ஆகியோரைத் தொடர்ந்து சிவகங்கையின் மருது சகோதரர்கள் மற்றும் தீரன் சின்னமலை ஆகியோர் பிரிட்டிஷாருக்கு எதிராகத் தொடுத்த போர்கள் பற்றியும் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது.
- வேலூர் புரட்சிக்கான காரணங்கள் மற்றும் அது ஜில்லஸ்பியால் எவ்வாறு இரக்கமின்றி ஒடுக்கப்பட்டது என்ற தகவல்கள் விவரிக்கப்பட்டுள்ளன.

## A-Z கலைச்சொற்கள்

| | | |
|---|---|---|
| பிறர் ஆதரவில் இருப்பவர் | **protege** | dependent, a person who receives support from a patron |
| செல்வாக்கை வளர்த்தல், ஆக்கிரமிப்பு செய்தல் | **aggrandisement** | the act of elevating or raising one's wealth, prestige and power |
| பணிய மறுக்கும் | **defiant** | resisting, disobedient |
| அமைதி | **tranquillity** | harmony, peace, free from disturbances |
| வஞ்சித்தல் | **treachery** | disloyalty, betrayal, breach of trust |
| பயமற்ற, துணிவுமிக்க | **audacious** | daring, fearless |
| இறுதி எச்சரிக்கை | **ultimatum** | a final dominating demand |
| கொடை | **bounty** | payment or reward – something given liberally |
| தொப்பியை அணிசெய்யும் குஞ்சம் | **cockade** | an ornament, especially a knot of ribbon worn on the hat |
| கவனம் | **cognisance** | notice, having knowledge of |
| தோற்கடி | **trounce** | crush, defeat |
| சிறைப்படுத்தல் | **interned** | imprisoned |



10th_History_Unit_6_TM.indd 77 24-03-2020 12:31:05

## பயிற்சி

2JS6WP

### I சரியான விடையைத் தேர்வு செய்யவும்

1. கிழக்கிந்திய கம்பெனியின் நாடுபிடிக்கும் ஆசையை எதிர்த்து நின்ற முதல் பாளையக்காரர் யார்?
   அ) மருது சகோதரர்கள்
   ஆ) பூலித்தேவர்
   இ) வேலுநாச்சியார்
   ஈ) வீரபாண்டிய கட்டபொம்மன்
2. சந்தா சாகிப்பின் மூன்று முகவர்களோடும் நெருங்கிய நட்பினை ஏற்படுத்திக் கொண்டவர் யார்?
   அ) வேலுநாச்சியார் ஆ) கட்டபொம்மன்
   இ) பூலித்தேவர் ஈ) ஊமைத்துரை
3. சிவசுப்ரமணியனார் எங்கு தூக்கிலிடப்பட்டார்?
   அ) கயத்தாறு ஆ) நாகலாபுரம்
   இ) விருப்பாட்சி ஈ) பாஞ்சாலங்குறிச்சி
4. திருச்சிராப்பள்ளி சுதந்திரப் பிரகடனத்தை வெளியிட்டவர் யார்?
   அ) மருது சகோதரர்கள்
   ஆ) பூலித்தேவர்
   இ) வீரபாண்டிய கட்டபொம்மன்
   ஈ) கோபால நாயக்கர்
5. வேலூர் புரட்சி எப்போது வெடித்தது?
   அ) 1805 மே 24 ஆ) 1805 ஜூலை 10
   இ) 1806 ஜூலை 10 ஈ) 1806 செப்டம்பர் 10
6. வேலூர் கோட்டையில் புதிய இராணுவ விதிமுறைகளை அறிமுகப்படுத்தக் காரணமாயிருந்த தலைமை தளபதி யார்?
   அ) கர்னல் பேன்கோர்ட்
   ஆ) மேஜர் ஆர்ம்ஸ்ட்ராங்
   இ) சர் ஜான் கிரடாக்
   ஈ) கர்னல் அக்னியூ
7. வேலூர் புரட்சிக்குப் பின் திப்பு சுல்தானின் மகன்கள் எங்கு அனுப்பப்பட்டார்கள்?
   அ) கல்கத்தா ஆ) மும்பை
   இ) டெல்லி ஈ) மைசூர்

### II கோடிட்ட இடங்களை நிரப்புக

1. பாளையக்காரர் முறை தமிழகத்தில் ________ என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டது.
2. வேலுநாச்சியாரும் அவரது மகளும் எட்டாண்டுகளாக ________ பாதுகாப்பில் இருந்தனர்.
3. கட்டபொம்மனை சரணடையக் கோரும் தகவலைத் தெரிவிக்க பானெர்மென் ________ என்பவரை அனுப்பிவைத்தார்.
4. கட்டபொம்மன் ________ என்ற இடத்தில் தூக்கிலிடப்பட்டார்.
5. மருது சகோதரர்களின் புரட்சி பிரிட்டிஷ் குறிப்புகளில் ________ என்று வகைப்படுத்தப்பட்டுள்ளது.
6. ________ என்பவர் புரட்சிக்காரர்களால் வேலூர் கோட்டையின் புதிய சுல்தானாக அறிவிக்கப்பட்டார்.

### III சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்

1. (i) பாளையக்காரர் முறை காகதீயப் பேரரசின் நடைமுறையில் இருந்தது
   (ii) கான் சாகிப்பின் இறப்பிற்குப்பின் பூலித்தேவர் நெற்கட்டும்செவலை 1764இல் மீண்டும் கைப்பற்றினார்.
   (iii) கம்பெனி நிர்வாகத்திற்கு தகவல் அளிக்காமல் பாளையக்காரர்களோடு பேச்சுவார்த்தையில் ஈடுபட்டதால் யூசுப் கான் துரோகிஎன்றுகுற்றம்சுமத்தப்பட்டு1764இல் தூக்கிலிடப்பட்டார்.
   (iv) ஒண்டிவீரன் கட்டபொம்மனின் படைப்பிரிவுகளில் ஒன்றைத் தலைமையேற்று வழிநடத்தினார்.
   அ) (i), (ii) மற்றும் (iv) ஆகியவை சரி
   ஆ) (i), (ii) மற்றும் (iii) ஆகியவை சரி
   இ) (iii) மற்றும் (iv) மட்டும் சரி
   ஈ) (i) மற்றும் (iv) மட்டும் சரி
2. (i) கர்னல் கேம்ப்பெல் தலைமையின் கீழ் ஆங்கிலேயப் படைகள் மாபூஸ்கானின் படைகளோடு இணைந்து சென்றன.
   (ii) காளையார்கோவில் போரில் முத்துவடுகநாதர் கொல்லப்பட்டப் பின் வேலுநாச்சியார் மீண்டும் அரியணையைப் பெறுவதற்கு மருது சகோதரர்கள் துணைபுரிந்தனர்.



10th_History_Unit_6_TM.indd 78 24-03-2020 12:31:05

www.tntextbooks.in

(iii) திண்டுக்கல் கூட்டமைப்புக்கு கோபால நாயக்கர் தலைமையேற்று வழிநடத்தினார்.

(iv) காரன்வாலிஸ் மே 1799இல் கம்பெனிப் படைகளை திருநெல்வேலி நோக்கிச் செல்ல உத்தரவிட்டார்.

அ) (i) மற்றும் (ii) ஆகியவை சரி

ஆ) (ii) மற்றும் (iii) ஆகியவை சரி

இ) (ii), (iii) மற்றும் (iv) ஆகியவை சரி

ஈ) (i) மற்றும் (iv) ஆகியவை சரி

3. **கூற்று**: பூலித்தேவர், ஹைதர் அலி மற்றும் பிரெஞ்சுக்காரர்களின் உதவியைப் பெற முயன்றார்.

**காரணம்**: மராத்தியர்களோடு ஏற்கனவே தொடர் போர்களில் ஈடுபட்டுக் கொண்டிருந்ததால் ஹைதர் அலியால் பூலித்தேவருக்கு உதவ முடியாமல் போனது.

அ) கூற்று மற்றும் காரணம் ஆகியவை சரி எனினும் காரணம், கூற்றைச் சரியாக விளக்கவில்லை.

ஆ) கூற்று மற்றும் காரணம் ஆகிய இரண்டுமே தவறானவை.

இ) கூற்று மற்றும் காரணம் ஆகியவை சரி காரணம், கூற்றைச் சரியாகவே விளக்குகிறது.

ஈ) கூற்று தவறானது காரணம் சரியானது

## IV பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| 1. | தீர்த்தகிரி | – | வேலூர் புரட்சி |
| 2. | கோபால நாயக்கர் | – | இராமலிங்கனார் |
| 3. | பானெர்மென் | – | திண்டுக்கல் |
| 4. | சுபேதார் ஷேக் ஆதம் | – | வேலூர் கோட்டை |
| 5. | கர்னல் பேன்கோர்ட் | – | ஓடாநிலை |

## V சுருக்கமாக விடையளிக்கவும்

1. பாளையக்காரர்களின் கடமைகள் யாவை?
2. கிழக்கு மற்றும் மேற்கில் அமையப்பெற்ற பாளையங்களைக் கண்டறிந்து எழுதுக.
3. களக்காடு போரின் முக்கியத்துவம் யாது?
4. கம்பெனியாருக்கும் கட்டபொம்மனுக்கும் இடையே சர்ச்சை ஏற்படக் காரணமாக விளங்கியது எது?
5. திருச்சிராப்பள்ளி பிரகடனத்தின் (1801) முக்கிய கூறுகளைத் தருக.

## VI விரிவாக விடையளிக்கவும்

1. கிழக்கிந்திய கம்பெனியாரை எதிர்த்து கட்டபொம்மன் நடத்திய வீரதீரப் போர்கள் பற்றி ஒரு கட்டுரை வரைக
2. சிவகங்கையின் துன்பகரமான வீழ்ச்சிக்குக் காரணமானவற்றை ஆய்ந்து அதன் விளைவுகளை எடுத்தியம்புக.
3. வேலூரில் 1806இல் வெடித்த புரட்சியின் கூறுகளை விளக்குக.

## VII செயல்பாடுகள்

1. ஆசிரியர் மாணாக்கர்களை ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராகப் புரட்சியில் ஈடுபட்ட ஆரம்பகால தேசபக்த தலைவர்களின் படங்களை சேகரிக்கச் சொல்லலாம். அவர்களது கற்பனைத்திறனைக் கொண்டு அத்தலைவர்கள் உயிர்நீத்த போர்க்களத்தைப் படமாக வரையச் சொல்லலாம்.
2. மாணவர்கள் ஜாக்சனுக்கும், கட்டபொம்மனுக்குமிடையே நடந்த உரையாடலை நாடக வடிவில் ஆசிரியரின் வழிகாட்டுதலோடு அரங்கேற்றலாம்.

## மேற்கோள் நூல்கள்


1. Burton Stein, *Peasant State and Society in Medieval South India*, New Delhi:Oxford University Press, 1980.
2. P.M. Lalitha, *Palayakararss as Feudatories Under the Nayaks of Madurai*, Chennai: Creative Enterprises, 2015.
3. K. Rajayyan, *South Indian Rebellion, 1800–1801*, Madurai, Ratna Publication, 2000 (Reprint).
4. K.A. Manikumar, *Vellore Revolt 1806* (Chennai: Allied Publishers, 2007).


## மேலும் வாசிக்கத்தக்க நூல்


1. டாக்டர். கே.கே. பிள்ளை, தமிழக வரலாறு – மக்களும் பண்பாடும், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், சென்னை (ஆவணப் பதிப்பு: ஆகஸ்ட் - 2017)




10th_History_Unit_6_TM.indd 79 24-03-2020 12:31:06

www.tntextbooks.in

# அலகு – 7

# காலனியத்துக்கு எதிரான இயக்கங்களும் தேசியத்தின் தோற்றமும்




## கற்றலின் நோக்கங்கள்

URNXIR

**கீழ்க்காண்பனவற்றோடு அறிமுகமாதல்**

- ஆங்கிலேயருக்கு எதிரான பழங்குடியினர் மற்றும் விவசாயிகளின் போராட்டங்களின் தன்மை
- 1857இல் பெரும்கலகம் வெடிப்பதற்கான காரணிகளும் அதனைத் தொடர்ந்து ஆங்கிலேயர் இந்தியாவை ஆளும் தங்கள் அணுகுமுறையில் ஏற்படுத்திக்கொண்ட மாற்றங்களும்
- இந்திய தேசிய காங்கிரஸ் உருவாக்கத்துக்கான காரணிகளும் தொடக்ககால தேசியவாதிகளின் கண்ணோட்டமும்
- 1905இல் வங்கப்பிரிவினைக்கு பின்னாலிருந்த ஆங்கிலேயர்களின் பிரித்தாளும் கொள்கையும் வங்காளத்தில் சுதேசி இயக்கத்தின் தோற்றமும்
- தன்னாட்சி (ஹோம் ரூல்) இயக்கத் தோற்றத்துக்கானப் பின்னணி

## அறிமுகம்

1757 ஜூன் 23இல் நடைபெற்ற பிளாசிப் போரில் வங்காள நவாபான சிராஜ்–உத்–தௌலா ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனியால் தோற்கடிக்கப்பட்டார். ஆங்கிலேயப் படையின் தலைமைத் தளபதியான ராபர்ட் கிளைவ், வங்காளத்தின் நவாப் படைக்கு தலைமையேற்றிருந்தவரும் சிராஜ்–உத்–தௌலாவின் சித்தப்பாவுமான மீர் ஜாபரின் இரகசிய ஆதரவைப் பெற்று, பிளாசிப் போருக்கு வித்திட்டார். சிராஜ்–உத்–தௌலாவின் அடக்குமுறைக் கொள்கைகளால் அவதிப்பட்ட ஜகத் சேத்துகள் (வங்காளத்திலிருந்த வட்டிக்கு பணம் கொடுப்போர்) கிளைவுக்கு உதவினார்கள். வங்காளத்தின் புதிய நவாபாக நியமிக்கப்பட்ட மீர் ஜாபரிடம் இருந்து கிழக்கிந்திய கம்பெனி 2 கோடியே 25 லட்சம் ரூபாயை 1757 மற்றும் 1760–க்கு இடைப்பட்ட காலகட்டத்தில் பெற்றது. இந்தத் தொகை பின்னர் ஆங்கிலேயர்களின் ஜவுளித்துறையை அதிவேகமாக இயந்திரமயமாக்க உதவிய பிரிட்டனின் தொழில் புரட்சிக்கு பயன்படுத்தப்பட்டது. அதே நேரத்தில் இந்தியாவில் தொழில்கள் முடங்கவும் பிரிட்டனில் தயாரிக்கப்பட்ட பொருட்களுக்கான சந்தையை இந்தியாவில் உருவாக்கவும் வழிவகுத்தது. இந்தியா, கிழக்கிந்திய கம்பெனியால் கொள்ளையடிக்கப்படும் செயலானது மேலும் 190 ஆண்டுகளுக்கு நீடித்தது.

இந்திய துணைக் கண்டத்தில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கம் மற்றும் மத்தியிலும் தொடர்ந்து இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக நடந்த பல்வேறு போராட்டங்கள் மற்றும் நிலைப்பாடுகளை விளக்குவதாக இந்தப் பாடம் அமைந்துள்ளது.

## 7.1 விவசாயிகள் மற்றும் பழங்குடியினரின் எதிர்ப்பு

பல்வேறு சமூக–சமய சீர்திருத்த இயக்கங்களில் ஈடுபட்டு மேற்கத்திய நவீன கருத்துகள் மற்றும் பகுத்தறிவுவாதம் ஆகியவை குறித்து இந்தியாவின் நகர்ப்புற உயர்குடி மக்கள் முனைப்பாக இருந்த காலகட்டத்தில் ஊரகப்பகுதிகளில் ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக மிக வலுவுடைய மற்றும் தீவிரமான போக்கு நிலவியது. பாரம்பரியமான உயர்குடி



10th_History_Unit_7_TM.indd 80 24-03-2020 12:31:24

மக்களும் விவசாயிகளும் பழங்குடியின மக்களுடன் இணைந்து கிளர்ச்சி செய்தனர். இந்தியாவிலிருந்து ஆங்கிலேயர்களை வெளியேற்றுவதை அவர்கள் கோராமல் காலனியாதிக்கத்திற்கு முன்னிருந்த நிலையை மீண்டும் நிலைநிறுத்துவதை வலியுறுத்தினார்கள்.

ஆங்கிலேய ஆட்சியில் கிட்டத்தட்ட ஒரு நூறுக்கும் குறையாத எண்ணிக்கையில் விவசாயிகளின் கிளர்ச்சிகள் நடந்தன. அவற்றைக் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம்:

**அ) மறுசீரமைத்தலுக்கான கிளர்ச்சிகள்** – இந்த வகையான போராட்டம் பழைய முறைமைகள் மற்றும் பழைய சமூக உறவுகளை நிலைநிறுத்தும் முயற்சிகள் தொடர்புடையவை ஆகும்.

**ஆ) சமய இயக்கங்கள்** – இத்தகைய இயக்கங்களுக்கு தலைமையேற்ற சமயத்தலைவர்கள் சமயச் சிந்தனைகளின் அடிப்படையில் சமூகத்தை சீரமைப்பதன் மூலம் உள்ளூர் மக்களின் விடுதலைக்காகப் போராடினார்கள்.

**இ) சமூகக் கொள்ளை** – இத்தகைய இயக்கங்களின் தலைவர்கள் ஆங்கிலேயர்களாலும் பாரம்பரிய உயர்குடியினராலும் குற்றவாளிகளாகக் கருதப்பட்டனர். ஆனால் அச்சமூகத்தைச் சார்ந்த மக்கள் அவர்களைத் தங்களுடைய மேம்பாட்டுக்காக உழைத்த நாயகர்களாகவும், சாதனையாளர்களாகவும் கண்டனர்.

**ஈ) மக்களின் கிளர்ச்சி** – பொதுவாக இவை தலைவர்கள் இல்லாமலும் திடீரெனவும் எழுந்த புரட்சி இயக்கங்களாகும்.

### வருவாய் முறையில் மாற்றங்கள்

இந்தியா முழுவதிலும் செயல்பாட்டில் இருந்த முகலாய வருவாய் அமைப்பை கிழக்கிந்திய கம்பெனி மறுசீரமைத்ததையடுத்து விவசாயிகளின் நிதிச்சுமைகள் பெரிதும் அதிகரித்தன. ஆங்கிலேய ஆட்சிக்கு முன் இந்தியாவில் தனிச்சொத்துரிமை பற்றிய எந்த விரிவான திட்டமும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

### நிலத்தைக் கீழ்க்குத்தகைக்கு விடுவது

நிலத்தைக் குத்தகைக்கு விடுவதும் கீழ்க்குத்தகைக்கு (subletting) விடுவதும் விவசாய உறவுகளைப் பெரிதும் சிக்கலாக்கியது. ஜமீன்தாரர் தன்னிடம் இருந்த நிலத்தைப் பெரும்பாலும் தன்னைச் சார்ந்திருந்த நிலப்பிரபுக்களுக்கு கீழ்க்குத்தகைக்கு விட்டார். பதிலுக்கு நிலப்பிரபு, விவசாயிகளிடமிருந்து ஒரு குறிப்பிட்ட தொகையை வசூலித்துக் கொடுப்பார். இதனால் விவசாயிகள் மீதான வரிச்சுமை அதிகரித்தது.

### (அ) விவசாயிகளின் கிளர்ச்சி

19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வெடிக்கத் தொடங்கிய விவசாயிகளின் கிளர்ச்சிகள் இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சி முடிவுக்கு வரும்வரை தொடர்ந்தன.

### ஃபராசி இயக்கம்

ஹாஜி ஷரியத்துல்லா என்பவரால் 1818ஆம் ஆண்டு ஃபராசி இயக்கம் தொடங்கப்பட்டது. 1839இல் ஷரியத்துல்லா மறைந்த பிறகு இந்த கிளர்ச்சிக்கு அவரது மகன் டுடு மியான் தலைமை ஏற்றார். அவர் வரி செலுத்தவேண்டாம் என்று விவசாயிகளை கேட்டுக்கொண்டார். பொதுமக்கள் நிலத்தையும் அனைத்து வளத்தையும் சரிசமமாக அனுபவிக்கவேண்டும் என்ற எளிய கொள்கையில் இந்த அறிவிப்பு பிரபலமடைந்தது. சமத்துவ இயல்பிலான மதம் குறித்து வலியுறுத்திய டுடு மியான், 'நிலம் கடவுளுக்குச் சொந்தமானது' என்று அறிவித்தார். எனவே வாடகை வசூலிப்பது அல்லது வரி விதிப்பது ஆகியன இறைச்சட்டத்துக்கு எதிரானது என்றார். கிராம அமைப்புகளின் கட்டமைப்பு மூலமாக பெரும் எண்ணிக்கையிலான விவசாயிகள் ஒன்றுதிரட்டப்பட்டனர். 1862இல் டுடு மியான் மறைந்தபிறகு 1870களில் நோவா மியான் என்பவரால் இந்த இயக்கம் மீண்டும் உயிர்பெற்றது.



**ஹாஜி ஷரியத்துல்லா**

### பரசத்தில் வஹாபி கிளர்ச்சி

வஹாபி கிளர்ச்சி என்பது ஆங்கிலேய ஆட்சிக்கும் நிலப்பிரபுக்களுக்கும் எதிராக துவங்கப்பட்டதாகும். வங்காளத்தில் பரசத் பகுதியில் 1827 வாக்கில் தோன்றியது. வஹாபி போதனைகளால் பெரிதும் ஆழமாக ஈர்க்கப்பட்டவராக திகழ்ந்த இசுலாமிய மதபோதகர் டிடு மீர் என்பவர் இந்தக் கிளர்ச்சிக்குத் தலைமையேற்றார். ஜமீன்தாரி முறையால் ஒடுக்கப்பட்ட குறிப்பாக இசுலாமிய விவசாயிகள் மத்தியில் அவர் செல்வாக்குமிக்க நபராகத் திகழ்ந்தார்.



**டிடு மீர்**

### (ஆ) பழங்குடியினர் கிளர்ச்சி

காலனி ஆட்சியின் கீழ் இந்திய வரலாற்றில் முதன்முறையாக அரசு வனங்கள் குறித்த நேரடித் தனியுரிமை வேண்டும் என்று கோரியது. வனங்களை வர்த்தகமயமாக்கும் நடவடிக்கைகளுக்கு ஆங்கிலேய ஆட்சியில்

ஊக்கம் கிடைத்ததன் காரணமாகப் பாரம்பரிய பழங்குடியின நடைமுறை தனது கட்டுக்கோப்பை இழந்தது. இதனால் பழங்குடியினப் பகுதிகளில் பழங்குடியினரல்லாதோரான வட்டிக்குப்பணம் கொடுப்போர், வர்த்தகர்கள், நில ஆக்கிரமிப்பாளர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் போன்றோர் ஊடுருவுவதற்கு அது ஊக்கம் தந்தது. இதனால் ஆதிவாசி நிலத்தின் பெரும்பகுதி இழக்கப்பட்டு அவர்கள் தாங்கள் பாரம்பரியமாகக் குடியிருந்து வந்த பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து வாழநேர்ந்தது.

எனவே அமைதியான பழங்குடியினர் வாழ்க்கையில் மாற்றங்களை அறிமுகம் செய்தோர் அல்லது பழங்குடியின மக்களின் அப்பாவித்தனத்தைத் தேவையின்றி தங்களுக்குச் சாதகமாக பயன்படுத்தியோருக்கு எதிரானதொரு பதில் நடவடிக்கையே பழங்குடியினக் கிளர்ச்சியாகும்.

### (i) கோல் கிளர்ச்சி

ஜார்க்கண்ட் மற்றும் ஒடிஷா ஆகிய பகுதிகளிலுள்ள சோட்டா நாக்பூர் மற்றும் சிங்பும் ஆகிய இடங்களில் 1831–32ஆம் ஆண்டுகளில் நடந்த மிகப்பெரிய பழங்குடியின கிளர்ச்சி கோல் கிளர்ச்சியாகும். இது பிந்த்ராய் மற்றும் சிங்ராய் தலைமையில் நடந்தது. சோட்டா நாக்பூர் பகுதியின் அரசர் வருவாய் வசூலிக்கும் பணியை வட்டிக்குப் பணம்கொடுப்போரிடம் குத்தகைக்கு விட்டிருந்தார். அதிக வட்டிக்கு கடன்கொடுத்தல் மற்றும் பழங்குடியினரைக் கட்டாயப்படுத்தி அவர்களின் பகுதிகளிலிருந்து வெளியேற்றுதல் போன்றவை கோல் இனத்தவரிடையே கோபத்தை ஏற்படுத்தியது. வெளியாட்களின் சொத்துக்கள் மீது தாக்குதல்கள் நடத்துதல், கொள்ளையடித்தல், கலவரம் செய்தல் ஆகிய வழிகளில் கோல்களின் தொடக்ககாலப் போராட்டம் மற்றும் எதிர்ப்புகள் அமைந்தன. அதனை அடுத்து வட்டிக்குப் பணம்கொடுப்போர் மற்றும் வர்த்தகர்கள் ஆகியோர் கொல்லப்பட்டனர். மேளங்களை முழங்கியும் அம்புகளை எய்தும் வெளியாட்களை வெளியேறச் செய்யும் எச்சரிக்கைகளை செய்தும் பல வகைகளில் பழங்குடியினத் தலைவர்கள் தங்கள் கிளர்ச்சி பற்றிய செய்தியைப் பரப்பினர். ஆங்கிலேய அரசு பெரிய அளவிலான வன்முறை மூலம் இந்தக் கிளர்ச்சியை அடக்கியது.


### (ii) சாந்தலர்களின் கிளர்ச்சி

இந்தியாவின் கிழக்குப் பகுதிகளில் பரவலாக வாழ்ந்துவந்த சாந்தலர்கள் நிரந்தர குடியிருப்புகளின் கீழ் ஜமீன்களை உருவாக்குவதற்காக தங்கள் பூர்வீக இடத்தை விட்டு இடம்பெயரவேண்டி நிர்ப்பந்திக்கப்பட்டதால் ராஜ்மஹால் மலையைச் சுற்றிலும் இருந்த வனப்பகுதியைவிட்டு கட்டாயப்படுத்தி வெளியேற்றப்பட்டனர். ரயில்வே கட்டுமானப் பணியில் ஈடுபட்டிருந்த ஐரோப்பிய அதிகாரிகள் மற்றும் உள்ளூர் காவலர்களால் அவர்கள் ஒடுக்கப்பட்டனர். வெளியாட்களால் வாழ்விடங்களை விட்டு வெளியேற்றப்பட்ட சாந்தலர்கள் தங்கள் வாழ்வாதாரத்துக்காக வட்டிக்குப்பணம் கொடுப்போரைச் சார்ந்துவாழ நிர்ப்பந்திக்கப்பட்டனர். விரைவில் கடன் மற்றும் பணம்பறித்தல் ஆகிய தீய வலையில் அவர்கள் சிக்கத்தொடங்கினர். மேலும், ஊழல்கறைபடிந்த ஆங்கிலேய நிர்வாகத்தின் கீழ் தங்களின் நியாயமான குறைகளுக்கு நீதி கிடைக்கமுடியாத சூழலில் தாங்கள் புறக்கணிக்கப்பட்டதாக சாந்தலர்கள் உணர்ந்தனர்.

#### வெளிப்பாடு

1854ஆம் ஆண்டு வாக்கில் பல இடங்களில் சமூகக் கொள்ளை நடவடிக்கைகள் பீர் சிங் என்பவரின் தலைமையில் நடந்தன. மகாஜன்கள் மற்றும் வர்த்தகர்களுக்கு எதிராகக் குறிவைத்து இவை நடந்தன.


சித்து


கணு

1855இல் சித்து மற்றும் கணு ஆகிய இரண்டு சாந்தலர் சகோதரர்கள் கிளர்ச்சியைத் தலைமையேற்று நடத்தவேண்டி தங்களுக்கு கடவுளிடமிருந்து தேவசெய்தி கிடைத்ததாக அறிவித்தனர்.

1855ஆம் ஆண்டு ஜுலை மாதத்தில் கிளர்ச்சியானது மகாஜன்கள், ஜமீன்தாரர்கள், ஆங்கிலேய அதிகாரிகள் ஆகியோருக்கு எதிரான வெளிப்படையான கிளர்ச்சியாக உருவெடுத்தது. வில் மற்றும் விஷம் தடவிய அம்புகளை ஏந்தியவாறும், கோடரிகள், கத்திகள் ஆகியவற்றுடனும் ராஜ்மகால் மற்றும் பாகல்பூர் நோக்கி கம்பெனி ஆட்சிக்கு முடிவு கட்டப்போவதாக முழக்கமிட்டபடி பேரணியாகச் சென்றனர். இதனையடுத்து கிராமங்கள் மீது அதிரடி நடவடிக்கை எடுத்த ஆங்கிலேயர் சொத்துக்களைச் சூறையாடினார்கள். இறுதியாக கிளர்ச்சி முழுமையாக ஒடுக்கப்பட்டது. 1855இல் சாந்தலர்கள் வசமிருந்த பகுதிகளை ஒழுங்குமுறைப்படுத்துவது பற்றிய சட்டம் நிறைவேற்றப்பட்டது. சாந்தல் பர்கானா



10th_History_Unit_7_TM.indd 82 24-03-2020 12:31:25

மண்டலம் என்ற தனி மண்டலத்தை உருவாக்கும் வகையில் இந்தச் சட்டம் நிறைவேறியது.

### (இ) முண்டா கிளர்ச்சி

ராஞ்சியில் இக்காலகட்டத்தில் நடைபெற்ற உலுகுலன் கிளர்ச்சி (பெரிய கலகம்) பழங்குடியினக் கிளர்ச்சிகளில் மிக முக்கியமானதாக அறியப்படுகிறது. கூட்டாக நிலத்தை வைத்துக்கொண்டு **"குண்டக்கட்டி"** (கூட்டுச்சொத்து) என்ற முறையில் விவசாயம் செய்வதில் முண்டா மக்கள் பெயர்பெற்றவர்கள். நிலத்துக்கான தனிச்சொத்துரிமையின் அறிமுகமும் வர்த்தகர்கள் மற்றும் வட்டிக்குப்பணம் கொடுப்போரின் ஊடுருவல் ஆகியவற்றின் காரணமாக இந்த நடைமுறை முற்றிலும் சிதைந்தது. தோட்டங்களில் வேலைசெய்ய முண்டா இனமக்கள் கொத்தடிமைகளாக வலுக்கட்டாயமாக பணியில் அமர்த்தப்பட்டனர். 1890 களில் பழங்குடியின மக்களை அவர்கள் வாழும் பகுதிகளிலிருந்து இடம்பெயரச் செய்வது மற்றும் அவர்களைக் கட்டாய உழைப்பிற்கு உட்படுத்துவது ஆகியவற்றை பழங்குடியினத் தலைவர்கள் எதிர்த்தனர்.

பிர்சா முண்டா தம்மை கடவுளின் தூதர் என்று அறிவித்த உடன் இந்த இயக்கத்துக்கு ஊக்கம் கிடைத்தது. தமக்கு இறைத் தொடர்பு இருப்பதாகக் கூறிய பிர்சா குறி சொல்வதின் மூலமாக முண்டா இன மக்களின் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணப்போவதாகவும் மக்களின் அரசை நிறுவப்போவதாகவும் பிர்சா உறுதியளித்தார். பிர்சா முண்டாவின் பிரபலத்தைப் பயன்படுத்தி மேலும் அதிக எண்ணிக்கையில் பிர்சா இன மக்களை இந்த நோக்கத்துக்காக ஒன்றிணைக்க முண்டா தலைவர்கள் முயன்றனர். இரவுக் கூட்டங்கள் பல நடத்தப்பட்டு கிளர்ச்சி ஒன்றுக்கு திட்டமிடப்பட்டது. 1889ஆம் ஆண்டு கிறிஸ்துமஸ் நாளில் அவர்கள் வன்முறையை கையில் எடுத்தனர். கட்டடங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. கிறித்தவ தூதுக்குழுக்கள் மற்றும் கிறித்தவர்களாக மதம் மாறிய முண்டாக்கள் மீது அம்பு எறிந்து தாக்குதல்கள் நடந்தன. அதன் பின் காவல் நிலையங்களும் தாக்கப்பட்டன, அரசு அதிகாரிகளும் தாக்கப்பட்டனர். அடுத்த சில மாதங்களுக்கு இதுபோன்ற தாக்குதல்கள் தொடர்ந்து நடத்தப்பட்டன. இறுதியாக இந்த கிளர்ச்சி முடக்கப்பட்டது. 1900ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் கைது செய்யப்பட்ட பிர்சா முண்டா பின்னர் சிறையில் உயிர்நீத்தார். பழங்குடியினரின் தலைவராக அறியப்பட்ட பிர்சா முண்டா இன்றளவும் பல நாட்டுப்புறப் பாடல்களில் போற்றப்படுகிறார். இந்த முண்டா கிளர்ச்சியை அடுத்து ஆங்கிலேய அரசு பழங்குடியின நிலம் பற்றிய கொள்கையை வகுக்க முனைந்தது. 1908இல் சோட்டா நாக்பூர் குத்தகைச் சட்டம் நிறைவேற்றப்பட்டு பழங்குடியினர் நிலத்தில் பழங்குடியினரல்லாதோர் நுழைவது தடுக்கப்பட்டது.

## 7.2 1857ஆம் ஆண்டின் பெருங்கலகம்

1857ஆம் ஆண்டில் ஆங்கிலேய ஆட்சிக்கு பெரும் சவால் ஏற்பட்டது. தொடக்கத்தில் வங்காள மாகாணத்தில் சிப்பாய் கலகமாக உருவெடுத்த இந்த கலகம் பின்னர் குறிப்பாக விவசாயிகள் உள்ளிட்ட பெரும் எண்ணிக்கையிலான மக்கள் பங்கேற்றதை அடுத்து நாட்டின் இதர பகுதிகளுக்கும் பரவியது. 1857–58ஆம் ஆண்டுகளில் நடந்த நிகழ்வுகள் கீழ்க்கண்ட காரணங்களால் முக்கியத்துவம் பெற்றன:

1. இராணுவ வீரர்களுடன் ஆயுதமேந்திய படைகளும் இணைந்து நடந்த முதல் மாபெரும் புரட்சி இதுவேயாகும்.
2. இருதரப்புகளிலும் தூண்டப்பட்டதால் முன்னெப்பொழுதும் இல்லாத அளவுக்கு கிளர்ச்சியில் வன்முறை வெடித்தது.
3. கிழக்கிந்திய கம்பெனியின் பணியினை புரட்சி முடிவுக்குக் கொண்டுவந்ததுடன் இந்திய துணைக் கண்டத்தை நிர்வகிக்கும் பொறுப்பு ஆங்கில மகாராணியின் நேரடி ஆட்சியின் கீழ் வந்தது.

### (அ) காரணங்கள்

#### 1. ஆங்கிலேய இந்தியாவின் இணைப்புக் கொள்கை

1840 மற்றும் 1850 களில் இரண்டு முக்கியக் கொள்கைகளின் மூலம் அதிக நிலப்பகுதிகள் இணைத்துக் கொள்ளப்பட்டன.

**மேலாதிக்கக் கொள்கை:** ஆங்கிலேயர் தங்களை வானளாவிய அதிகாரங்கள் கொண்ட உயர் அதிகார அமைப்பாக கருதினார்கள். உள்நாட்டு ஆட்சியாளர்கள் திறனற்றவர்கள் என்ற அடிப்படையில் புதிய நிலப்பகுதிகள் இணைக்கப்பட்டன.

**வாரிசு இழப்புக்கொள்கை:** அரசுக்கட்டிலில் அரியணை ஏற நேரடி ஆண்வாரிசு இல்லையெனில் அந்த ஆட்சியாளரது இறப்புக்குப்பின் அந்தப்பகுதி ஆங்கிலேயர்களின் ஆட்சியின் கீழ் கொண்டுவரப்படும். சதாரா, சம்பல்பூர், பஞ்சாபின் சில பகுதிகள், ஜான்சி மற்றும் நாக்பூர் ஆகியன இந்த வாரிசு இழப்புக் கொள்கையின் அடிப்படையில் ஆங்கிலேய ஆட்சியின் கீழ் கொண்டுவரப்பட்டன.

#### 2. இந்திய கலாச்சார உணர்வுகள் பற்றிய தீவிரத்தன்மை இல்லாதது:

1806ஆம் ஆண்டில் வேலூரில் சிப்பாய்கள் சமயக்குறியீடுகளை நெற்றியில் அணிவதற்கும், தாடி



10th_History_Unit_7_TM.indd 83 24-03-2020 12:31:25

www.tntextbooks.in

வைத்துக் கொள்வதற்கும், தடைவிதிக்கப்பட்டதோடு தலைப்பாகைகளுக்கு பதிலான வட்ட வடிவிலான தொப்பிகளை அணியுமாறும் பணிக்கப்பட்டனர். அதனை எதிர்த்து அவர்கள் கிளர்ச்சி செய்தனர். இத்தகைய ஆடைக் கட்டுப்பாடுகள் சிப்பாய்களை கிறித்தவ மதத்துக்கு மாறச் செய்வதற்கான ஒரு முயற்சியாக அவர்கள் அஞ்சினார்கள்.

அதேபோன்று 1824ஆம் ஆண்டு கல்கத்தா அருகே பாரக்பூரில் சிப்பாய்கள் கடல்வழியாக பர்மா செல்ல மறுத்தனர். கடல் கடந்து சென்றால் தங்களது சாதியை இழக்க நேரிடும் என்று அவர்கள் நம்பினார்கள்.

ஊதியம் மற்றும் பதவி உயர்வில் பாரபட்சம் காட்டப்படுவது குறித்தும் சிப்பாய்கள் கவலை அடைந்தனர். ஐரோப்பிய சிப்பாய்களுடன் ஒப்பிடுகையில் இந்திய சிப்பாய்களுக்கு மிகக்குறைந்த அளவில் ஊதியம் வழங்கப்பட்டது. அவர்கள் தரக்குறைவாக நடத்தப்பட்டதோடு மூத்த படையினரால் இனக் குறியிடப்பட்டு அவமதிக்கப்பட்டார்கள்.

## (ஆ) கலகம்

புதிய என்ஃபீல்டு துப்பாக்கிக்கு வழங்கப்பட்ட தோட்டாக்கள் பற்றிய வதந்திகள் புரட்சிக்கு வித்திட்டது. பசு மற்றும் பன்றிக் கொழுப்பில் இருந்து தயாரிக்கப்பட்ட பசை (கிரீஸ்) இத்தகைய புதிய குண்டு பொதியுறையில் (காட்ரிட்ஜ்களில்) பயன்படுத்தப்பட்டதாக சிப்பாய்கள் பெரிதும் சந்தேகம் கொண்டனர். அவற்றை நிரப்பும் முன் அதை வாயால் கடிக்கவேண்டி இருந்தது (இந்துக்களில் பெரும்பான்மையானவர்களுக்கு பசு புனிதம் வாய்ந்ததாகவும், முஸ்லிம்களுக்கு பன்றி இறைச்சி தடை செய்யப்பட்ட உணவாகவும் இருந்தது).

MYKP5T

மார்ச் 29ஆம் தேதி மங்கள் பாண்டே என்ற பெயர் கொண்ட சிப்பாய் தனது ஐரோப்பிய அதிகாரியைத் தாக்கினார். கைது செய்ய உத்தரவிட்டும் அவரது சக சிப்பாய்கள் மங்கள் பாண்டேவை கைது செய்ய மறுத்துவிட்டனர். மங்கள் பாண்டேயும் வேறு பலரும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு தூக்கிலிடப்பட்டனர். இதனால் ஆத்திரம் அதிகரித்து அதனையடுத்து வந்த நாட்களில் கீழ்ப்படிய மறுத்தல் போன்ற பல நிகழ்வுகள் அதிகரித்தன. கலவரம், பொருட்களை தீயிட்டுக் கொளுத்துவது ஆகியன அம்பாலா, லக்னோ, மீரட் ஆகிய இராணுவக் குடியிருப்புப் பகுதிகளில் நிகழ்ந்ததாக தகவல்கள் வெளியாயின.

## இந்துஸ்தானத்தின் மாமன்னராக பகதூர் ஷா அறிவிக்கப்படுதல்



**இரண்டாம் பகதூர் ஷா**


1857 மே மாதம் 11இல் மீரட்டில் இருந்து தில்லி செங்கோட்டை நோக்கி ஒரு குழுவாக சிப்பாய்கள் அணிவகுத்துச் சென்றனர். சிப்பாய்கள் போன்று அதே அளவு ஆர்வமிக்க கூட்டமும் முகலாய மாமன்னர் இரண்டாம் பகதூர் ஷா தங்கள் தலைவராக வேண்டும் என்று கோருவதற்காக அங்கு குழுமியது. பெரும் தயக்கங்களுக்குப் பிறகு இரண்டாம் பகதூர் ஷா இந்துஸ்தானத்தின் (ஷாஹின்ஷா இ–ஹிந்துஸ்தான்) மாமன்னராக பதவியேற்றார். அதனை அடுத்து விரைவாக வடமேற்கு மாகாணம் மற்றும் அயோத்தி பகுதிகளைக் கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றினார்கள். தில்லி வீழ்ச்சி அடைந்தது பற்றிய செய்தி கங்கை நதிப்பள்ளத்தாக்கை எட்டியவுடன், ஜூன் மாதத் தொடக்கம் வரை ஒவ்வொரு இராணுவக் குடியிருப்பு பகுதியிலும் கிளர்ச்சிகள் நடந்தன. வட இந்தியாவில் குறிப்பாக பஞ்சாப் மற்றும் வங்காளத்தைத் தவிர ஆங்கிலேய ஆட்சி காணாமல் போனது.

## உள்நாட்டு கிளர்ச்சி

வட இந்தியாவின் பாதிக்கப்பட்ட கிராம சமூகத்தில் வாழ்ந்த மக்களும் இந்தக் கிளர்ச்சிக்கு சரிசமமாக ஆதரவு தெரிவித்தனர். ஆங்கிலேய இராணுவத்தில் வேலை பார்த்த சிப்பாய்கள் உண்மையில் சீருடையில் இருந்த விவசாயிகள் ஆவர். வருவாய் நிர்வாகம் மறுசீரமைப்பு செய்யப்பட்டதில் அவர்களும் சமமான பாதிப்புகளை அடைந்தனர். சிப்பாய் கலகமும் அதனை அடுத்து இந்தியாவின் பல பகுதிகளில் நடந்த உள்நாட்டு கிளர்ச்சியும் ஊரகப் பகுதிகளுடன் இணைப்பைக் கொண்டவையாகும். வடமேற்கு மாகாணங்கள் மற்றும் அயோத்தியின் பகுதிகளில் இந்த முதலாவது உள்நாட்டு கிளர்ச்சி வெடித்தது. இந்த இரண்டு பகுதிகளில் இருந்துதான் சிப்பாய்கள் முக்கியமாகப் பணியில் சேர்க்கப்பட்டனர். பெரும் எண்ணிக்கையிலான ஜமீன்தாரர்களும் தாலுக்தார்களும் ஆங்கிலேய அரசின் கீழ் பல சலுகைகளை இழந்த காரணத்தால் கிளர்ச்சி நோக்கி ஈர்க்கப்பட்டனர். தாலுக்தார்–விவசாயக் கூட்டணி என்பது தாங்கள் இழந்ததை மீட்கும் ஒரு பொது முயற்சியாகக் கருதப்பட்டது. அதேபோன்று, பல இந்திய மாநிலங்களில் ஆட்சியாளர்கள் பட்டத்தைத் துறக்க நேரிட்டதால் அவர்களால்



10th_History_Unit_7_TM.indd 84 24-03-2020 12:31:25


1857இல் பெருங்கலகம் நடைபெற்ற முக்கிய மையங்கள்
வ
மே
கி
தெ
அம்பாலா
மீரட்
தில்லி
பரெய்லி
ஆக்ரா
லக்னோ
கான்பூர்
குவாலியர்
அலகாபாத்
ஜான்சி
பனாரஸ்
பாரக்பூர்
அரபிக் கடல்
வங்காள விரிகுடா
லட்சத் தீவுகள் (இந்தியா)
அந்தமான் நிக்கோபார் தீவுகள் (இந்தியா)
அளவையில் இல்லை
இந்தியப் பெருங்கடல்

www.tntextbooks.in

ஆதரிக்கப்பட்ட கைவினைக்கலைஞர்களும் சரிசமமாக அவதியுற்றனர். ஆங்கிலேயப் பொருட்களால் இந்திய கைவினைப் பொருட்கள் பாதிக்கப்பட்டு ஆயிரக்கணக்கான நெசவாளர்கள் வேலை இழந்தனர். ஆங்கிலேயர்களுக்கு எதிரான ஒட்டுமொத்த ஆத்திரம் கிளர்ச்சியாக வெடித்தது.

### பிரிட்டிஷாருக்கு எதிராகப் போராடிய முக்கியப் போராட்ட வீரர்கள்

பாதிக்கப்பட்ட அரசர்கள், நவாபுகள், அரசிகள், ஜமீன்தாரர்கள், ஆகியோர் ஆங்கிலேயர்களுக்கு எதிரான தங்கள் ஆத்திரத்தைப் பயன்படுத்திக்கொள்ள இந்தக் கிளர்ச்சி ஒரு மேடையை அமைத்துக் கொடுத்தது. கடைசி பேஷ்வா மன்னரான இரண்டாவது பாஜிராவின் தத்துப்பிள்ளையான நானா சாகிப், கான்பூர் பகுதியில் இந்த கிளர்ச்சிக்குத் தலைமை தாங்கினார். அவருக்கு ஓய்வூதியம் தர கம்பெனி மறுத்துவிட்டது. அதேபோன்று, லக்னோவில் பேகம் ஹஸ்ரத் மகால், பரெய்லியில் கான் பகதூர் ஆகியோர் தத்தமது பகுதிகளில் பொறுப்பை ஏற்றுக்கொண்டனர். ஒருகாலத்தில் இந்தப் பகுதிகள் அவர்களாலோ அல்லது அவர்களுடைய மூதாதையர்களாலோ ஆளப்பட்டவையாகும்.

இந்தக் கிளர்ச்சியின் மற்றொரு முக்கிய தலைவராக ஜான்சியின் ராணி லட்சுமிபாய் திகழ்ந்தார். அவரது விஷயத்தில், வங்காளத்தின் தலைமை ஆளுநரான டல்ஹௌசி பிரபு, லட்சுமிபாயின் கணவர் மறைந்தபிறகு அவரது வாரிசாக ஒரு ஆண்பிள்ளையை தத்து எடுத்துக்கொள்ள அனுமதி தர மறுத்துவிட்டதால் வாரிசு இழப்புக் கொள்கையின் அடிப்படையில் அவரது அரசு ஆங்கிலேய அரசுடன் இணைக்கப்பட்டது. சக்திவாய்ந்த ஆங்கிலேயர்களுக்கு எதிராக போரைத் துவக்கிய ராணி லட்சுமிபாய் தாம் வீழும் வரை ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடினார்.

பகதூர் ஷா ஜாபர், கன்வர் சிங், கான் பகதூர், ராணி லட்சுமிபாய் மற்றும் பலரும், ஆங்கிலேய ஆட்சியை ஏற்கமறுத்த சிப்பாய்களின் வீரதீரத்தால் நிர்ப்பந்திக்கப்பட்ட பலரும் இவர்களில் அடங்குவர்.

### (இ) கிளர்ச்சி அடக்கப்படுதல்


1857ஆம் ஆண்டு ஜூன் மாத தொடக்கத்தில் தில்லி, மீரட், ரோகில்கண்ட், ஆக்ரா, அலகாபாத் மற்றும் பனாரஸ் ஆகிய மண்டலங்களின் படைகள் ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டின்கீழ்கொண்டுவரப்பட்டு கடுமையான இராணுவச்சட்டம் அமல்படுத்தப்பட்டது.

### (ஈ) தோல்விக்கான காரணங்கள்


1857ஆம் ஆண்டு நடந்த கிளர்ச்சி ஒருங்கிணைக்கப்பட்டது மற்றும் திட்டமிடப்பட்டது என்பதை நிரூபிக்க எந்தவித ஆதாரமும் இல்லை. அது தானாக நடந்தது. ஆனால் தில்லி முற்றுகை இடப்பட்ட பிறகு அண்டை மாநிலங்களின் ஆதரவைப்பெற முயற்சி மேற்கொள்ளப்பட்டது. மேலும்ஒருசிலஇந்தியமாநிலங்களைத்தவிர,இந்தக் கிளர்ச்சியில் பங்கேற்க இந்திய இளவரசர்களிடம் பொதுவாக ஆர்வம் குறைந்து காணப்பட்டது. காலனி அரசுக்கு விசுவாசமாக அல்லது ஆங்கிலேய அதிகாரத்தை அறிந்து அச்சப்பட்டு இந்திய அரசர்களும் ஜமீன்தாரர்களும் ஒதுங்கியிருந்தனர். கிளர்ச்சியில் ஈடுபட்டவர்களும் குறைந்த அளவே ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்கள் கிடைத்தோ அல்லது கிடைக்காமலோ இருந்தனர். ஆங்கில அறிவு பெற்ற நடுத்தர வகுப்பும் கிளர்ச்சிக்கு ஆதரவு தெரிவிக்கவில்லை.

மத்திய தலைமை இல்லாததும் கிளர்ச்சி தோல்வியடைய முக்கிய காரணமாக அமைந்தது. தனிநபர்கள், இந்திய அரசர்கள் மற்றும் ஆங்கிலேய அரசுக்கு எதிராக சண்டையிட்ட பல்வேறு சக்திகளை ஒன்றிணைக்கப் பொதுவான செயல்திட்டம் ஏதுமில்லாமல் போனது.

இறுதியில் ஆங்கிலேய ராணுவம் கிளர்ச்சியை கடுமையாக ஒடுக்கியது. ஆயுதங்கள் கிடைக்கப்பெறாமை, அமைப்பாற்றல் இன்மை, ஒழுக்கமின்மை, உதவியாளர்களால் காட்டிக்கொடுக்கப்பட்டது ஆகிய காரணங்களால்



**பொது இடங்களில் புரட்சியாளர்களைத் தூக்கிலிடுதல்**



**புரட்சியில் ஈடுபட்ட சிப்பாய்களை பீரங்கிகளில் கட்டி சுடுதல்**



10th_History_Unit_7_TM.indd 86 24-03-2020 12:31:25

கிளர்ச்சித் தலைவர்கள் தோல்வி அடைந்தனர். 1857ஆம் ஆண்டின் பிற்பகுதியில் தில்லி ஆங்கிலேய துருப்புகளால் கைப்பற்றப்பட்டது. சிறைபிடிக்கப்பட்ட பகதூர் ஷா பர்மாவுக்கு கொண்டு செல்லப்பட்டார்.

### (உ) இந்தியா ஆங்கிலேய அரசுக் காலனியாக மாறுதல்

1858ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இந்திய அரசு சட்டம் பிரிட்டிஷ் நாடாளுமன்றம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, நாடாளுமன்றத்தால் நேரடியாக ஆட்சி அதிகாரம் செலுத்தப்படும் ஆங்கிலேய அரசின் காலனிகளில் ஒன்றாக இந்தியா அறிவிக்கப்பட்டது. அமைச்சரவை உறுப்பினர் ஒருவரிடம் பொறுப்பு வழங்கப்பட்டது, அவர் இந்தியாவுக்கான அரசுச் செயலராக பதவி வகிப்பார்.

### நிர்வாகத்தில் செய்யப்பட்ட மாற்றங்கள்

1857ஆம் ஆண்டுக்குப் பிறகு பிரிட்டிஷ் ஆட்சியும் அதன் கொள்கைகளும் பெரிய அளவில் மாற்றங்களைச் சந்தித்தன. சமூக சீர்திருத்தம் தொடர்பான விஷயத்தில் பிரிட்டிஷ் அரசு எச்சரிக்கை மிகுந்த அணுகுமுறையைக் கையாண்டது. இந்திய மக்களுக்கு விக்டோரியா அரசியார் செய்த அறிவிப்பில், பாரம்பரிய நிறுவனங்கள் மற்றும் மதம் தொடர்பான விஷயங்களில் ஆங்கிலேய அரசு தலையிடாது என்று தெரிவித்தார். அரசுப்பணிகளில் இந்தியர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள் என்றும் உறுதிமொழி கூறப்பட்டது. இந்திய இராணுவத்தின் கட்டமைப்பில் இரண்டு முக்கிய மாற்றங்கள் செய்யப்பட்டன. இந்தியர்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைக்கப்பட்டது. முக்கியமான பதவிகள் மற்றும் பொறுப்புகள் வகிப்பதிலிருந்து இந்தியர்கள் விலக்கி வைக்கப்பட்டனர். காலாட்படையின் கட்டுப்பாட்டை எடுத்துக்கொண்ட ஆங்கிலேயர், அவற்றுக்கு ஆளெடுக்கும் முயற்சியை இதர பகுதிகளுக்கும் 1857ஆம் ஆண்டின் கிளர்ச்சியின்போது ஆங்கிலேயருக்கு விசுவாசமாக இருந்த சமூகங்களுக்கும் மாற்றினார்கள். உதாரணமாக ராஜபுத்திரர்கள், பிராமணர்கள், வடஇந்திய முஸ்லிம்கள் ஆகியோரை விலக்கி வைத்த ஆங்கிலேயர் கூர்க்காக்கள், சீக்கியர்கள், பதான்கள் போன்ற இந்து அல்லாத குழுக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தனர். இவற்றுடன், இந்திய சமூகத்தின் சாதி, மதம், மொழி மற்றும் மண்டலம் ஆகியன சார்ந்த வேறுபாடுகளை ஆங்கிலேயர்கள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டதையடுத்து அது 'பிரித்தாளும் கொள்கை' என்று அறியப்பட்டது.

## 7.3 பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் விவசாயிகளின் கிளர்ச்சிகள்

### (அ) கருநீலச்சாய (இண்டிகோ) கிளர்ச்சி 1859–1860

செயற்கை நீலச்சாயம் உருவாக்கப்படும் முன் இயற்கையான கருநீலச்சாயம் உலகம் முழுவதும் இருந்த ஆடை தயாரிப்பாளர்களால் பெரிதும் மதித்துப் போற்றப்பட்டது. பல ஐரோப்பியர்கள் இண்டிகோ பயிரிட இந்திய விவசாயிகளை பணியில் அமர்த்தினார்கள். பின்னர் அது சாயமாக தொழிற்சாலைகளில் உருவாக்கப்பட்டது. அதன் பிறகு அந்த சாயம் ஐரோப்பாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. விவசாயிகள் இந்தப் பயிரை பயிரிடுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டனர். ஆங்கிலேய முகவர்கள் பயிரிடுவோருக்கு நிலத்துக்கான வாடகை மற்றும் இதர செலவுகளை சமாளிப்பதற்காக, ரொக்கப்பணத்தை முன்பணமாகக் கொடுத்து உதவினர். ஆனால் இந்த முன்பணம் வட்டியுடன் திரும்பச் செலுத்தப்படவேண்டும். உணவு தானியப் பயிர்களுக்குப் பதிலாக இண்டிகோ பயிரைப் பயிரிட விவசாயிகள் வற்புறுத்தப்பட்டனர். பருவத்தின் இறுதியில் இண்டிகோ பயிருக்கு மிகக்குறைந்த விலையையே விவசாயிகளுக்கு ஆங்கிலேய முகவர்கள் கொடுத்தனர். இந்த குறைந்த தொகையைக் கொண்டு தாங்கள் வாங்கிய முன்பணத்தைத் திரும்பச் செலுத்த முடியாது என்பதால் அவர்கள் கடனில் மூழ்கினர். எனினும், லாபம் கிடைக்காத நிலையிலும், மீண்டும் இண்டிகோ பயிரை பயிரிடும் மற்றொரு ஒப்பந்தத்தை மேற்கொள்ளுமாறு விவசாயிகள் மீண்டும் நிர்ப்பந்திக்கப்பட்டனர். விவசாயிகளால் தாங்கள் வாங்கிய கடனை திரும்பச் செலுத்த முடியவே இல்லை. தந்தை வாங்கிய கடன்கள் அவரது மகன் மீதும் சுமத்தப்பட்டன.

இண்டிகோ கிளர்ச்சி 1859ஆம் ஆண்டு தொடங்கியது. இந்தக் கிளர்ச்சி ஒரு வேலைநிறுத்த வடிவில் தொடங்கியது. வங்காளத்தின் நடியா மாவட்டத்தின் ஒரு கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகள் இனி இண்டிகோ பயிரிடப்போவதில்லை என மறுத்து வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். இந்த இயக்கம் இண்டிகோ பயிரிடப்பட்ட வங்காளத்தின் இதர மாவட்டங்களுக்கும் பரவியது. இந்தக் கிளர்ச்சி பின்னர் வன்முறையாக வெடித்தது. இந்து மற்றும் முஸ்லிம் விவசாயிகள் இந்தக் கிளர்ச்சியில் பங்கேற்றனர். குடங்கள் மற்றும் உலோகத்தட்டுக்களை ஆயுதங்களாக ஏந்தியபடி பெண்களும் ஆடவரோடு இந்தப் போராட்டத்தில் பங்கேற்றனர். ஆங்கிலேயப் பண்ணை கொடுமைகள் குறித்து கல்கத்தாவில் வாழ்ந்த



10th_History_Unit_7_TM.indd 87 24-03-2020 12:31:25

அப்போதைய இந்திய பத்திரிக்கையாளர்கள் எழுதினார்கள். நீல் தர்பன் (இண்டிகோவின் கண்ணாடி) என்ற தலைப்பில் ஒரு நாடகத்தை தீனபந்து மித்ரா எழுதினார். இந்தியாவிலும் ஐரோப்பாவிலும் வாழ்ந்த மக்களிடையே இண்டிகோ விவசாயிகள் குறித்த பிரச்சனைகளை கவனத்தில் கொண்டுவர இந்த நாடகம் பயன்பட்டது.

### (ஆ) தக்காண கலவரங்கள் 1875

அதிக அளவிலான வரி விதிப்பு வேளாண்மையைப் பாதித்தது. பஞ்சத்தால் ஏற்படும் உயிரிழப்புகள் அதிகரித்தன. 1875ஆம் ஆண்டு மே மாதத்தில் தக்காணத்தில் வட்டிக்குப் பணம் வழங்குவோருக்கு எதிரான கலவரங்கள் பூனா அருகே உள்ள சூபா என்ற கிராமத்தில் முதன்முதலாக வெடித்ததாகப் பதிவாகியுள்ளது. பூனா மற்றும் அகமதுநகர் ஆகிய பகுதிகளில் சுமார் 30 கிராமங்களில் இதே போன்ற கலவரங்கள் ஏற்பட்டதாகப் பதிவாகியது. குஜராத்தில் வட்டிக்குப் பணம் வழங்குவோரை குறிவைத்துதான் இந்த கலவரங்கள் பெரும்பாலும் அரங்கேறின. ஆங்கிலேய ஆட்சியின் கீழ் விவசாயிகள் நேரடியாக வருவாயை அரசுக்கு செலுத்த நிர்ப்பந்திக்கப்பட்டனர். மேலும் புதிய சட்டப்படி எந்த நிலத்தை அடமானம் வைத்து கடன் வாங்கப்பட்டதோ அந்த நிலத்தை எடுத்துக்கொண்டு ஏலம் விட்டு கடன் தொகையை எடுத்துக்கொள்ள கடன்வழங்கியோருக்கு அனுமதி கிடைத்திருந்தது. இதன் விளைவாக உழும் வர்க்கத்திடமிருந்து நிலம் உழாத வர்க்கத்திடம் கைமாறத் தொடங்கியது. கடன் என்னும் மாய வலையில் சிக்கிய விவசாயிகள் நிலுவைத் தொகையைச் செலுத்த இயலாமல் பயிரிடுதலையும் விவசாயத்தையும் கைவிட வேண்டிய அவல நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

## 7.4 இந்திய தேசிய காங்கிரஸ் நிறுவப்படுதல் (1870–1885)

### (அ) தேசியத்தின் எழுச்சி

19ஆம் நூற்றாண்டின் இரண்டாவது பாதியில் ஆங்கிலக் கல்வி பெற்ற இந்தியர்களின் புதிய சமூக வகுப்பினர் மத்தியில் தேசிய அரசியல் குறித்த விழிப்புணர்வு ஏற்பட்டது. பல்வேறு பிரச்சாரங்கள் மூலமாக தேசம், தேசியம் மற்றும் பல்வேறு மக்களாட்சியின் உயர்ந்த இலட்சியங்கள் பற்றிய கருத்துக்களை அதிக எண்ணிக்கையிலான மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் முக்கிய பணியை இந்திய அறிவாளர்கள் மேற்கொண்டனர். வட்டார மொழி மற்றும் ஆங்கில அச்சு ஊடகங்களின் வளர்ச்சி இது போன்ற கருத்துகளைப் பரப்புவதில் முக்கியப் பங்காற்றியது.


எண்ணிக்கையில் அவர்கள் குறைவாக இருந்தாலும் தேசிய அளவிலான வீச்சைக் கொண்டு அகில இந்தியா முழுதும் தொடர்புகளை உருவாக்கும் திறன் பெற்றிருந்தனர். அவர்கள் வழக்கறிஞர்கள், பத்திரிக்கையாளர்கள், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் அல்லது மருத்துவர்களாக பணியாற்றினார்கள். சென்னைவாசிகள் சங்கம் (1852), கிழக்கிந்திய அமைப்பு (1866), சென்னை மகாஜன சபை (1884), பூனா சர்வஜனிக் சபை (1870), பம்பாய் மாகாண சங்கம் (1885) மற்றும் பல அரசியல் அமைப்புகளைத் தொடங்குவதில் அவர்கள் முனைப்பு காட்டினார்கள்.

### (ஆ) காலனி ஆட்சி பற்றிய பொருளாதார விமர்சனம்

காலனி ஆட்சி பற்றிய பொருளாதார விமர்சனத்தை உருவாக்குவதே தொடக்ககால இந்திய தேசியவாதிகளின் பங்களிப்புகளில் முக்கியமான ஒன்றாக இருந்தது.

தாதாபாய் நௌரோஜி, நீதிபதி ரானடே மற்றும் ரொமேஷ் சந்திர தத் ஆகியோர் காலனி ஆட்சியின் பொருளாதாரம் பற்றிய இந்த விமர்சனத்தைச் செய்வதில் முக்கியப் பங்காற்றினார்கள். இந்தியாவை அரசியல் மற்றும் பொருளாதார ரீதியாக அடக்கி ஆள்வதுதான் பிரிட்டிஷாரின் வளத்துக்கு அடிப்படையானது என்பதை அவர்கள் தெளிவாக உணர்ந்தனர். இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு காலனி ஆதிக்கமே முக்கியத் தடையாக உள்ளதென்று அவர்கள் முடிவு செய்தனர்.

### (இ) குறிக்கோள்கள் மற்றும் வழிமுறைகள்



A.O. ஹியூம்

ஒரு அகில இந்திய அமைப்பை உருவாக்க முனைந்ததன் விளைவாக 1885ஆம் ஆண்டில் இந்திய தேசிய காங்கிரஸ் உருவானது. பம்பாய், மதராஸ், கல்கத்தா ஆகிய மூன்று மாகாணங்களிலும் அரசியல் ரீதியாக தீவிரம் காட்டிய கல்வி அறிவு பெற்ற இந்தியர்களின் குழுக்கள் மேற்கொண்ட முயற்சிகளின் விளைவாக இந்திய தேசிய காங்கிரஸ் அமைப்பை உருவாக்க A.O. ஹியூம் தமது சேவைகளை வழங்கினார். இந்திய தேசிய காங்கிரசின் முதல் (1885) தலைவராக உமேஷ் சந்திர பானர்ஜி இருந்தார்.

1885 டிசம்பர் 28இல் இந்திய தேசிய காங்கிரசின் முதல் அமர்வு (கூட்டம்) நடைபெற்றது. தேசிய ஒற்றுமை குறித்த உணர்வுகளை ஒருங்கிணைப்பதே காங்கிரஸின் ஆரம்பகால முக்கிய குறிக்கோள்களில் ஒன்றாக இருந்தாலும்



10th_History_Unit_7_TM.indd 88 24-03-2020 12:31:25

பிரிட்டனுக்கு விசுவாசமாக நடந்துகொள்ளவும் உறுதி மேற்கொண்டது. பிரிட்டனிடம் மேல்முறையீடுகள் செய்வது, மனுக்களைக் கொடுப்பது, அதிகாரப் பகிர்வு, ஆகியவற்றை ஆங்கிலேய அரசு உருவாக்கிய அரசியல்சாசன கட்டமைப்பிற்குள் செய்வது உள்ளிட்ட வழிமுறைகளை காங்கிரஸ் பின்பற்றியது. கீழ்க்கண்டவை சில முக்கிய கோரிக்கைகள் ஆகும்:

- மாகாண மற்றும் மத்தியஅளவில் சட்டமேலவைகளை உருவாக்குவது.
- சட்டமேலவைகளுக்கு தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது.
- நிர்வாகத்துறையிலிருந்து நீதித்துறையைப் பிரிப்பது.
- இராணுவச்செலவுகளைக் குறைப்பது.
- உள்நாட்டு வரிகளைக் குறைப்பது.
- நீதிபதி மூலமாக விசாரணையை விரிவுசெய்வது.
- ஒரே நேரத்தில் இந்தியாவிலும் இங்கிலாந்திலும் ஆட்சிப்பணித் தேர்வுகளை நடத்துவது.
- காவல்துறை சீர்திருத்தங்கள்.
- வனச்சட்டத்தை மறுபரிசீலனை செய்தல்.
- இந்தியத் தொழிற்சாலைகளின் மேம்பாடு மற்றும் முறையற்ற கட்டணங்கள் மற்றும் கலால்வரிகளைமுடிவுக்குக்கொண்டுவருவது.

### (ஈ) தீவிர தேசியவாதம்

தொடக்ககால இந்திய தேசியவாதிகளின் மிதவாத கோரிக்கைகள் தொடர்பான ஆங்கிலேயர்களின் அணுகுமுறை குறிப்பிடத்தக்க அளவில் மாறவில்லை என்பதால் மித தேசியவாத தலைவர்களின் திட்டங்கள் தோல்விகண்டன. "தீவிர தேசியவாதிகள்" என்று அழைக்கப்பட்ட தலைவர்களின் குழுவால் இவர்கள் விமர்சிக்கப்பட்டனர். மனுக்கள் மற்றும் கோரிக்கைகள் கொடுப்பதை விட, சுய உதவியில் அதிக கவனம் செலுத்தினர்.

## 7.5 வங்கப் பிரிவினை

1905ஆம் ஆண்டின் வங்கப் பிரிவினை மிகவும் அதிருப்தியை ஏற்படுத்திய நிகழ்வாகும். இந்தியா முழுவதும் விரிவான போராட்டங்கள் பரவ இந்தப் பிரிவினை வழிவகுத்ததன் மூலம் இந்திய தேசிய இயக்கத்துக்கு புதிய அத்தியாயத்தை உருவாக்கியது.

இந்துக்கள், முஸ்லிம்கள் இடையே பிளவை உருவாக்கி வங்காளத்தில் ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக நடந்த அரசியல் நடவடிக்கைகளை அடக்க வங்கப்பிரிவினை வகுக்கப்பட்டது.



**கர்சன் பிரபு**

### (அ) இந்து–முஸ்லிம் பிரிவினை

வங்காளிகளின் ஆதிக்கத்தை கட்டுப்படுத்தி தேசியவாத இயக்கத்தை வலுவிழக்கச் செய்வதே வங்கப் பிரிவினைக்கான நோக்கம் என்று வெளிப்படையாக தெரிவிக்கப்பட்டது. வங்காளத்தைப் இரண்டு நிர்வாகப் பிரிவுகளின் கீழ் பிரித்து வைத்ததன் மூலம் வங்காள மொழி பேசும் மக்களை ஒரு மொழிசிறுபான்மையினர் என்ற தகுதிக்கு கர்சன் பிரபு குறைத்துவிட்டார். முகலாயர்களின் ஆட்சிக்காலங்களில் கூட அனுபவிக்காத ஒற்றுமையை முஸ்லிம்கள் கிழக்கு வங்காளம் என்ற புதிய மாகாணத்தில் அனுபவிப்பார்கள் என்று கர்சன் உறுதியளித்தார்.

மத அடிப்படையில் வங்காள மக்களைப் பிரிக்க நினைத்த பிரிவினைச்செயலானது அவர்களைப் பிரிப்பதற்குப் பதிலாக ஒன்றிணைத்தது. வங்காள அடையாளத்தை உணர்வுப் பெருமையுடன் உருவாக்க வட்டார மொழிப் பத்திரிகைகளின் வளர்ச்சி பெரும் பங்காற்றியது.

### (ஆ) பிரிவினைக்கு எதிரான இயக்கம்

வங்கப் பிரிவினையை தடுக்கத் தவறிய மித தேசியவாதத் தலைவர்கள், தங்களுடைய உத்திகள் பற்றி மறு சிந்தனைக்கு நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். ஆர்ப்பாட்டங்களுக்கு புதிய வழிமுறையையும் அவர்கள் தேடத் தொடங்கினார்கள். பிரிட்டிஷ் பொருட்களை புறக்கணிப்பது அவற்றில் ஒரு முறையாகும். எனினும் சுதேசி இயக்கத்தின் கொள்கை வங்கப் பிரிவினையைத் திரும்பப் பெறுவதை உறுதி செய்வதில் இன்னமும் கட்டுப்பட்டிருந்தது. முழுமையான மறைமுக எதிர்ப்பைத் துவங்குவதற்கு பிரச்சாரத்தைப் பயன்படுத்த மித தேசியவாதிகள் ஆதரவாக இல்லை. மற்றொருபுறம் தீவிர தேசியவாதிகள் வங்காளத்தை தாண்டி இந்த இயக்கத்தை விரிவு செய்வதற்கு மிகப்பெரிய அளவில் பொதுமக்கள் போராட்டத்தைத் துவங்க ஆதரவாக இருந்தனர்.

1905 அக்டோபர் 16இல் வங்காளம் அதிகாரபூர்வமாகப் பிரிவினையானபோது அந்தநாள் துக்கநாளாக அறிவிக்கப்பட்டது. ஆயிரக்கணக்கானவர்கள் கங்கை நதியில் புனித நீராடியதோடு வந்தே மாதரம் பாடலை பாடியபடி



10th_History_Unit_7_TM.indd 89 24-03-2020 12:31:25

கல்கத்தாவின் சாலைகளில் அணிவகுத்துச் சென்றார்கள்.

### (இ) வங்காளத்தில் புறக்கணிப்பும் சுதேசி இயக்கமும் (1905–1911)

புறக்கணிப்பும் சுதேசி இயக்கமும் இந்தியாவைத் தற்சார்பு அடையச் செய்யும் விரிவான திட்டத்தின் ஒரு பகுதியாக எப்போதும் ஒன்றுடன் ஒன்று இணைந்தே இருந்தன. வங்காளத்தில் சுதேசி இயக்கத்தின் போது நான்கு முக்கியப் போக்குகள் காணப்பட்டன:

1. மிதவாதப் போக்கு
2. ஆக்கபூர்வ சுதேசி
3. தீவிர தேசியவாதம்
4. புரட்சிகர தேசியவாதம்



சுதேசி இயக்கம்

### ஆக்கபூர்வ சுதேசி

ஆக்கபூர்வ திட்டங்கள் அனைத்தும் பெரும்பாலும் சுய உதவியையே வலியுறுத்தின. ஆங்கிலேய ஆட்சியின் கட்டுப்பாட்டில் சிக்காமல் சுதந்திரமாகச் செயல்படக்கூடிய உள்ளாட்சி அமைப்புகளை மாற்றாக உருவாக்குவது குறித்து அது கவனம் செலுத்தியது. மக்களை சுயமாக வலுவாக்க வேண்டிய அவசியம் குறித்து அது வலியுறுத்தியது. துணிகள், கைத்தறி ஆடைகள், சவக்காரம் (சோப்புகள்), மண்பாண்டங்கள், தீப்பெட்டி, தோல்பொருட்கள் ஆகியன எங்கும் பரவியிருந்த சுதேசி கடைகளில் விற்கப்பட்டன.

### மறைமுக எதிர்ப்பு

1906இல் சுதேசி இயக்கம் மாற்றுப்பாதையில் செல்லத் துவங்கியது. இந்த புதிய திசையில் சுதேசி இயக்கம் நான்கு அம்சங்களைக் கொண்டிருந்தது. அந்நியப் பொருட்களைப் புறக்கணிப்பது; அரசுப்பள்ளிகள், கல்லூரிகளைப் புறக்கணிப்பது, நீதிமன்றங்கள், பட்டங்கள் மற்றும் அரசு சேவைகளை புறக்கணிப்பது; சுதேசி தொழிற்சாலைகளை மேம்படுத்துவது; பொறுத்துக்கொள்ளும் அளவைத் தாண்டி ஆங்கிலேயர்களின் அடக்குமுறை இருக்குமானால் ஆயுதமேந்திய போராட்டத்துக்கு ஆயத்தமாவது என நான்கு அம்சங்கள் பின்பற்றப்பட்டன.

### தீவிர தேசியவாதம்

பஞ்சாபின் லாலா லஜபதி ராய், மகாராஷ்டிராவின் பால கங்காதர திலகர், வங்காளத்தின் பிபின் சந்திர பால், ஆகிய மூன்று முக்கிய தலைவர்களும் சுதேசி காலத்தில் எப்போதும் லால்–பால்–பால் (Lal–Bal–Pal) மூவர் என்று குறிக்கப்பட்டனர். சுதேசி இயக்கத்தின்போது தீவிர தேசியவாதத்தின் இயங்கு தளமாக பஞ்சாப், மகாராஷ்டிரா, வங்காளம் ஆகியன உருவெடுத்தன. தென்னிந்தியாவில் வ.உ. சிதம்பரனார் சுதேசி கப்பல் நிறுவனத்தை தொடங்கியதை அடுத்து தூத்துக்குடி சுதேசி இயக்கத்தின் மிகமுக்கியத் தளமாக விளங்கியது.



லால்–பால்–பால் (Lal–Bal–Pal)

### சுயராஜ்ஜியம் அல்லது அரசியல் சுதந்திரம்

சுயராஜ்ஜியம் அல்லது தன்னாட்சி அடைவதே தீவிரவாதத் தன்மை கொண்ட தலைவர்களின் பொதுக் குறிக்கோள்களில் ஒன்றாக இருந்தன. எனினும் சுயராஜ்ஜியம் என்ற வார்த்தையின் பொருளில் தலைவர்கள் வேறுபட்டனர். திலகரைப் பொறுத்தவரை சுயராஜ்ஜியம் என்பது, முழுமையான தன்னாட்சி மற்றும் அந்நிய ஆட்சியில் இருந்து முழுமையான விடுதலை பெறுவதாக இருந்தது.

## 7.6 தன்னாட்சி (ஹோம் ரூல்) இயக்கம் (1916–18)

லோகமான்ய பாலகங்காதர திலகர், அன்னிபெசன்ட் அம்மையார் ஆகியோர் தலைமையிலான தன்னாட்சி (1916–1918) இயக்கத்தின் போது இந்திய தேசிய இயக்கம் புத்துயிரூட்டப்பட்டு தீவிரப்படுத்தப்பட்டது. முதல் உலகப் போரும், இந்தியா அந்தப் போரில் பங்கேற்றதும் தான் தன்னாட்சி இயக்கத்துக்கான



10th_History_Unit_7_TM.indd 90 24-03-2020 12:31:26

www.tntextbooks.in

பின்னணியாகும். 1914ஆம் ஆண்டில் ஜெர்மனிக்கு எதிராக பிரிட்டன் போர் அறிவித்த நிலையில் மித தேசியவாத மற்றும் தாராளமய தலைமை பிரிட்டிஷாருக்காக ஆதரவைத் தந்தது. அதற்குப் பதில் பிரிட்டிஷ் அரசு போருக்குப் பிறகு தன்னாட்சியை இந்தியாவிற்கு வழங்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. உலகப் போரின் பல அரங்குகளுக்கு இந்தியத் துருப்புகள் அனுப்பப்பட்டன. ஆனால் இந்தக் குறிக்கோள்கள் குறித்து பிரிட்டிஷ் அரசுக்கு எந்தவித உறுதிப்பாடும் இல்லை. இந்தியாவின் தன்னாட்சிக்கு வழிவகுக்கும் காரணத்துக்கு உதவாமல் ஆங்கிலேய அரசு ஏமாற்றியதால் ஆங்கிலேய அரசுக்கு நெருக்கடி தரும் புதிய மக்கள் இயக்கத்துக்கான அழைப்பாக இது உருவெடுத்தது.

### (அ) தன்னாட்சி இயக்கத்தின் குறிக்கோள்கள்

- அரசியலமைப்பு வழிகளைப் பயன்படுத்தி பிரிட்டிஷ் பேரரசிற்குள் தன்னாட்சியை அடைவது.
- தன்னாட்சிப் பகுதி (டொமினியன்) என்ற தகுதியை அடைவது. ஆஸ்திரேலியா, கனடா, தென்னாப்பிரிக்கா மற்றும் நியூசிலாந்து ஆகியவற்றுக்குப் பின்னர் இந்த அரசாட்சி சாராத நிலை வழங்கப்பட்டது.
- அவர்களின் இலக்குகளை அடைய வன்முறையல்லாத அரசியல்சாசன வழிமுறைகளைக் கையாள்வது.

### (ஆ) லக்னோ ஒப்பந்தம் (1916)

தன்னாட்சி இயக்கமும் அதனையடுத்து மித தேசியவாதிகள் மற்றும் தீவிர தேசியவாதிகளின் மறு இணைப்பு காரணமாக முஸ்லிம்களுடன் புதிய பேச்சுகளுக்கான சாத்தியக்கூறு லக்னோ ஒப்பந்தத்தின்போது ஏற்பட்டது. லக்னோ ஒப்பந்தத்தின் (1916) போது காங்கிரஸ் கட்சியும் முஸ்லிம் லீக்கும் இந்தியாவில் விரைவில் தன்னாட்சி வேண்டுமென்பதை ஏற்றுக்கொண்டது. இதற்கு பதிலாக முஸ்லிம்களுக்கு தனித் தொகுதிகளை வழங்கும் திட்டத்தை காங்கிரஸ் தலைமை ஏற்றது.



**லக்னோ ஒப்பந்தம்**

### (இ) பிரிட்டிஷாரின் பதில் நடவடிக்கை

சுயராஜ்ஜியத்துக்கான கோரிக்கையை திலகரும் அன்னிபெசன்ட் அம்மையாரும் எழுப்பியது பிரபலமானதைத் தொடர்ந்து தலைவர்களை தனிமைப்படுத்தி அவர்களின் செயல்பாடுகளை முடக்கும் அதே பழைய திட்டத்தை ஆங்கிலேய அரசு பயன்படுத்தியது.

1919இல் மாண்டேகு–செம்ஸ்ஃபோர்ட் சீர்திருத்தங்களை ஆங்கிலேய அரசு அறிவித்தது. இதன் மூலம் இந்தியா தன்னாட்சி நோக்கி படிப்படியாக முன்னேற உறுதி கூறப்பட்டது. இந்திய தேசியவாதிகள் இடையே இது மிகப்பெரிய ஏமாற்றத்தை ஏற்படுத்தியது. மேலும் ஒரு பேரிடியாக, தன்னிச்சையான கைது மற்றும் கடும் தண்டனைகளுடன் கூடிய ரௌலட் சட்டத்தை அரசு இயற்றியது.

#### பாடச்சுருக்கம்

- பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆங்கிலேய இந்தியாவில் காலனிய அரசியல் மற்றும் பொருளாதார ஆதிக்கத்துக்கு எதிராக விவசாயிகள் மற்றும் பழங்குடியினர் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவது அதிகரித்தது.
- பல்வேறு ஆங்கிலேய எதிர்ப்புப் போக்குகளின் முடிவாக 1857இல் மிகப்பெரிய கிளர்ச்சி ஏற்பட்டது. ஆங்கிலேயர்கள் இந்தியாவை ஆளத் துவங்கியதற்கு முன்பிருந்த பழைய முறைமையை மீண்டும் நிலைநிறுத்தும் நோக்கங்களைக் கொண்ட, நிலப்பிரபுத்துவத் தலைவர்கள் இந்தக் கிளர்ச்சிக்கு தலைமை ஏற்றிருந்தனர்.
- கிளர்ச்சியின் தலைவர்கள் தொலைநோக்குப் பார்வையின்றி உள்ளூர் நோக்கங்களுக்காக கிளர்ச்சியை வழிநடத்தியபோதிலும் கொடுங்கோன்மையான அன்னிய அரசுக்கு சவால்விட்டு எதிர்க்கும் வகையில் ஒரு முற்போக்கான முயற்சியாக அது அமைந்தது.
- சுரண்டல்வாத, அடக்குமுறை சார்ந்த ஆங்கிலேய அரசுக்கு எதிரான பொதுக்கருத்துகளை உருவாக்கிய இந்திய தேசிய இயக்கம், காலனி ஆதிக்கத்துக்கு எதிரான போராட்டங்களில் தங்களையும் ஈடுபடுத்திக்கொள்ள இளைய தலைமுறையினரை ஊக்கப்படுத்தியது.
- தேசிய அரசியலில் பொதுமக்கள் பங்கேற்பதை அதிகரிக்க சுதேசி இயக்கம் உதவியது.



10th_History_Unit_7_TM.indd 91 24-03-2020 12:31:26

## A-Z கலைச்சொற்கள்

| | | |
|---|---|---|
| நினைத்ததை நிறைவேற்ற போடப்பட்ட திட்டம் | **orchestrated** | organized to achieve a desired effect |
| இரகசிய | **clandestine** | secret |
| மீட்கின்ற | **restorative** | re-establishing |
| கீழ்க்குத்தகைக்கு விடுதல், உள் குத்தகைக்கு விடுதல் | **subletting** | property leased by one lessee to another |
| அனைத்து மக்களுக்கும் சமமான | **egalitarian** | equal rights for all people |
| வலுக்கட்டாயமாக | **coercive** | forcible |
| தாக்குதல் மூலம் பணம், பொருள் பறித்தல் | **extortion** | the practice of taking something from an unwilling person by physical force |
| நிறைவில்லாத, திருப்தியற்ற | **disgruntled** | dissatisfied, frustrated |
| மிக மோசமான, படுபாதாளமான | **abysmal** | extremely bad, deep and bottomless |

## பயிற்சி

9D5BCA

### I சரியான விடையைத் தேர்வு செய்யவும்

1. 1818ஆம் ஆண்டு கிழக்கு வங்காளத்தில் ஹாஜி ஷரியத்துல்லா கீழ்க்கண்டவற்றில் எதனைத் தொடங்கினார்?
   அ) வஹாபி கிளர்ச்சி
   ஆ) ஃபராசி இயக்கம்
   இ) பழங்குடியினர் எழுச்சி
   ஈ) கோல் கிளர்ச்சி
2. 'நிலம் கடவுளுக்குச் சொந்தம்' என்று அறிவித்ததுடன் நிலத்தின் மீது வரிவிதிப்பதோ வாடகை வசூலிப்பதோ இறைச் சட்டத்திற்கு எதிரானது என்று கூறியவர் யார்?
   அ) டிடு மீர்　　ஆ) சித்து
   இ) டுடு மியான்　　ஈ) ஷரியத்துல்லா
3. நிரந்தரக் குடியிருப்பின் கீழ் ஜமீன்களை உருவாக்கும் திட்டத்தின்படி தங்கள் சொந்த நிலத்தை விட்டு விரட்டப்பட்டவர்கள் யார்?
   அ) சாந்தலர்கள்　　ஆ) டிடு மீர்
   இ) முண்டா　　ஈ) கோல்
4. கீழ்க்காண்போரில் தீவிர தேசியவாதி யார்?
   அ) தாதாபாய் நௌரோஜி
   ஆ) நீதிபதி கோவிந்த் ரானடே
   இ) பிபின் சந்திர பால்
   ஈ) ரொமேஷ் சந்திரா
5. வங்கப்பிரிவினை எந்த நாளில் நடைமுறைக்கு வந்தது?
   அ) 1905 ஜூன் 19　　ஆ) 1906 ஜூலை 18
   இ) 1907 ஆகஸ்ட் 19　　ஈ) 1905 அக்டோபர் 16
6. சோட்டா நாக்பூர் குத்தகைச் சட்டம் எந்தப் பின்னணியில் நிறைவேற்றப்பட்டது?
   அ) கோல் கிளர்ச்சி
   ஆ) இண்டிகோ கிளர்ச்சி
   இ) முண்டா கிளர்ச்சி
   ஈ) தக்காண கலவரங்கள்
7. 1916ஆம் ஆண்டு ஏப்ரலில் தன்னாட்சி இயக்கத்தை முதலில் தொடங்கியவர் யார்?
   அ) அன்னி பெசன்ட் அம்மையார்
   ஆ) பிபின் சந்திர பால்
   இ) லாலா லஜபதி ராய்
   ஈ) திலகர்
8. நீல் தர்பன் நாடகம் மூலமாக இண்டிகோ பயிரிடும் விவசாயிகளின் இன்னல்கள் குறித்து ஆங்கிலேயரின் கவனத்துக்கு கொண்டு சென்றவர் யார்?
   அ) தீன பந்து மித்ரா
   ஆ) ரொமேஷ் சந்திர தத்
   இ) தாதாபாய் நௌரோஜி
   ஈ) பிர்சா முண்டா

### II கோடிட்ட இடங்களை நிரப்புக

1. மன்னராட்சிக்கும் நிலசுவான்தாரர்களுக்கும் எதிரான ______________ இயக்கம் 1827ஆம் ஆண்டு வாக்கில் தொடங்கப்பட்டது.



10th_History_Unit_7_TM.indd 92 24-03-2020 12:31:26

2. சோட்டாநாக்பூர் பகுதியில் நடந்த மிகப்பெரிய பழங்குடியினர் கிளர்ச்சி ______________
3. ______________ சட்டம் பழங்குடியினரல்லாத மக்களை பழங்குடி நிலத்தில் நுழைய தடைவிதித்தது.
4. சோட்டா நாக்பூர் சட்டம் நிறைவேற்றப்பட்ட ஆண்டு ______________.
5. W.C. பானர்ஜி இந்திய தேசிய காங்கிரஸின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆண்டு ______________.

## III சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்

1. (i) மீர் ஜாபரிடம் இருந்து 2 கோடியே 25 லட்ச ரூபாயை வாங்கிய கிழக்கு இந்திய கம்பெனி அதனை பிரிட்டனில் தொழிற்புரட்சி மேம்பட முதலீடு செய்தது.

   (ii) 1832 – 1831 ஆம் ஆண்டு அரசு அதிகாரிகள் மற்றும் கடன்கொடுப்போருக்கு எதிரான கிளர்ச்சியைக் கோல் மக்கள் ஒருங்கிணைத்தனர்.

   (iii) 1855ஆம் ஆண்டில் சாந்தலர் கிளர்ச்சிக்கு சித்து, கனு ஆகிய இரண்டு சாந்தலர் சகோதரர்கள் தலைமை ஏற்றனர்.

   (iv) 1879ஆம் ஆண்டில் சாந்தலர்கள் வசம் இருந்த பகுதிகளை ஒழுங்குமுறைப்படுத்த ஒரு சட்டம் இயற்றப்பட்டது.

   அ) (i) (ii) மற்றும் (iii) சரியானவை

   ஆ) (ii) மற்றும் (iii) சரியானவை

   இ) (iii) மற்றும் (iv) சரியானவை

   ஈ) (i) மற்றும் (iv) சரியானவை

2. (i) காலனி ஆட்சி பற்றிய பொருளாதார விமர்சனத்தைச் செய்தது ஆரம்பகால இந்திய தேசியவாதிகளின் மிக முக்கியமான பங்களிப்புகளில் ஒன்றாகும்.

   (ii) இந்தியாவில் வறுமை அதிகரிக்க சமய ரீதியிலான சுரண்டலே மிக முதன்மையான காரணம் என்று ஆரம்பகால காங்கிரஸ் தலைவர்கள் தெரிவித்தனர்.

   (iii) சுயராஜ்ஜியம் அல்லது தன்னாட்சியை எட்டுவதே மிததேசியவாத காங்கிரஸ் தலைவர்களின் குறிக்கோள்களில் ஒன்றாக இருந்தது.

   (iv) வங்காளத்தின்ஆதிக்கத்தைகுறைப்பதையும் தேசியவாத இயக்கத்தை வலுவிழக்கச் செய்வதையும் குறிக்கோளாகக் கொண்டு வங்கப் பிரிவினை நடந்தது.

   அ) (i) மற்றும் (iii) சரியானவை

   ஆ) (i), (iii) மற்றும் (iv) சரியானவை

   இ) (ii) மற்றும் (iii) சரியானவை

   ஈ) (iii) மற்றும் (iv) சரியானவை

3. **கூற்று:** இந்திய வரலாற்றில் முதன்முறையாக காலனி ஆட்சியின் கீழ் அரசு வனங்களின் மீது நேரடி தனியுரிமையைக் கோரியது.

   **காரணம்:** இண்டிகோ விவசாயம் செய்யுமாறு விவசாயிகளை நிர்ப்பந்திக்க தொழில் செய்வோர் மிரட்டல் மற்றும் வன்முறையைக் கையாண்டனர்.

   அ) கூற்று மற்றும் காரணம் இரண்டுமே சரி; ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் இல்லை.

   ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டுமே தவறு.

   இ) கூற்று மற்றும் காரணம் இரண்டுமே சரி; அத்துடன் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்.

   ஈ) கூற்று தவறு காரணம் சரி.

4. **கூற்று:** பிரிட்டிஷ் அரசு 1857ஆம் ஆண்டின் கிளர்ச்சியை இரும்புக்கரம் கொண்டு அடக்கியது.

   **காரணம்:** மையப்படுத்தப்பட்ட நிர்வாகம் இல்லாததால் கிளர்ச்சி தோல்வி கண்டது.

   அ) கூற்று மற்றும் காரணம் இரண்டுமே தவறு.

   ஆ) கூற்று தவறு காரணம் சரி.

   இ) கூற்று மற்றும் காரணம் இரண்டுமே சரி. அத்துடன் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்.

   ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டுமே சரி. ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் இல்லை.

## IV பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| 1. | வஹாபி கிளர்ச்சி | – | லக்னோ |
| 2. | முண்டா கிளர்ச்சி | – | பேஷ்வா இரண்டாம் பாஜி ராவ் |
| 3. | பேகம் ஹஸ்ரத் மகால் | – | டிடு மீர் |
| 4. | கன்வர் சிங் | – | ராஞ்சி |
| 5. | நானாசாகிப் | – | பீகார் |

## V சுருக்கமாக விடையளிக்கவும்

1. ஆங்கிலேய இந்தியாவில் விவசாயிகளின் கிளர்ச்சி எவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன?
2. வாரிசு இழப்புக் கொள்கையின் அடிப்படையில் பிரிட்டிஷ் அரசில் இணைத்துக் கொள்ளப்பட்ட பகுதிகளைப் பட்டியலிடவும்.
3. வளங்கள் சுரண்டப்படுவது (செல்வச் சுரண்டல்) பற்றி தங்களின் கருத்து என்ன?

4. தன்னாட்சி (ஹோம் ரூல்) இயக்கத்தின் குறிக்கோள்களை விவரிக்கவும்.

5. லக்னோ ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்களைத் தொகுத்து வழங்கவும்.

## VI விரிவாக விடையளிக்கவும்

1. 1857ஆம் ஆண்டின் கிளர்ச்சிக்கான காரணங்கள் குறித்து விரிவாக ஆராயவும்.
2. 1905ஆம் ஆண்டு நிகழ்ந்த வங்காளப் பிரிவினையின்போது வங்காள மக்கள் எவ்விதம் நடந்துகொண்டனர்?

## VII செயல்பாடுகள்

1. 1858 முதல் 1919ஆம் ஆண்டு வரை ஆங்கிலேய இந்தியாவில் இயற்றப்பட்ட சட்டங்களை அடையாளம் கண்டு, ஒவ்வொன்றைப் பற்றியும் சுருக்கமாக விவரிக்கவும்.
2. இந்திய வரைபடத்தில் 1857ஆம் ஆண்டில் கிளர்ச்சி நடந்த முக்கியஇடங்களைக் குறிக்கவும்.
3. ஆங்கிலேயரின் காலனி ஆட்சிக்கு எதிரான போராட்டங்களில் பங்கேற்ற அனைத்து முன்னணி தலைவர்களின் படங்களை வைத்து ஒரு செருகேடு (ஆல்பம்) உருவாக்கவும்.

## மேற்கோள் நூல்கள்

1. Bipan Chandra, *India's Struggle for Independence* (New Delhi: Penguin, 2000)
2. Sekhar Bandyopadhyay, *From Plassey to Partition and After* (New Delhi: Orient Longman, 2004)
3. Sumit Sarkar, *Modern India (1885-1947)* (New Delhi: Pearson, 2014).

## மேலும் வாசிக்கத்தக்க நூல்

1. R.C. மஜூம்தார், H.C. ராய்சௌத்ரி, K. தத்தா, இந்தியாவின் சிறப்பு வரலாறு (மூன்றாம் பகுதி), தமிழாக்கம்: A. பாண்டுரங்கன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், சென்னை (ஆவணப் பதிப்பு: ஆகஸ்ட் - 2017)

## இணையதள வளங்கள்

https//www.brittanica.com

## இணையச் செயல்பாடு

### காலனியத்துக்கு எதிரான இயக்கங்களும் தேசியத்தின் தோற்றமும்

படி – 1 URL அல்லது QR குறியீட்டினைப் பயன்படுத்தி இச்செயல்பாட்டிற்கான இணையப்பக்கத்திற்கு செல்க

படி – 2 தேடுபொறியில் 'Rebellion of 1857' என தட்டச்சு செய்யவும்

படி – 3 தோன்றும் படத்தொகுப்பினை ஒவ்வொன்றாகத் தேர்ந்தெடுத்து அதற்கான விளக்கத்தை பார்க்கவும்

உரலி:

https://artsandculture.google.com/

B373_10_SOCIAL_TM



10th_History_Unit_7_TM.indd 94 24-03-2020 12:31:26

# அலகு – 8

# தேசியம்: காந்திய காலகட்டம்



## கற்றலின் நோக்கங்கள்

2K22YC

**நாம் கீழ்க்கண்டவைகளைப் பற்றி அறிந்து கொள்ள**

- இந்திய விடுதலைப் போராட்டத்தில் காந்திய காலகட்டம்
- இந்தியாவில் மக்களை ஒன்றிணைக்க அகிம்சை மற்றும் சத்தியாகிரகம் ஆகிய காந்தியக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டு சோதிக்கப்பட்ட காலகட்டம்
- சம்பரான் மற்றும் ரௌலட் சட்டம் ஆகியவற்றுக்கு எதிரான வன்முறையற்ற போராட்டங்கள்
- ஒத்துழையாமை இயக்கம் மற்றும் அதன் வீழ்ச்சி
- தீவிரத்தன்மை கொண்டவர்களும் தீவிர தேசியவாதப் போக்கு உடையவர்களின் தோற்றமும் விடுதலைப் போராட்டத்தில் அவர்கள் ஆற்றிய பங்கும்
- சட்டமறுப்பு இயக்கத்தின் தொடக்கம்
- தனித்தொகுதிகள் குறித்த சர்ச்சை மற்றும் பூனா ஒப்பந்தம் கையெழுத்திடப்படுதல்
- மாகாணங்களில் முதலாவதாக அமைந்த காங்கிரஸ் அமைச்சரவைகள் மற்றும் வெள்ளையனே வெளியேறு இயக்கம் தோன்றுவதற்கான சூழ்நிலைகள்
- இந்தியத் துணைக்கண்டத்தை இந்தியா–பாகிஸ்தான் என இரண்டாகப் பிரிவினை செய்ய வழிவகுத்த வகுப்புவாதம்

## அறிமுகம்

மகாத்மா காந்தி, தென்னாப்பிரிக்காவில் வாழ்ந்த இந்தியர்களின் சமூக உரிமைகளுக்காக சுமார் 20 ஆண்டுகள் போராடிய பிறகு 1915இல் தாயகம் திரும்பினார். இந்திய அரசியலுக்கு புதிய எழுச்சியை அவர் ஏற்படுத்தினார். தென்னாப்பிரிக்காவில் அவர் ஆண்கள், பெண்கள், இளைஞர்கள், முதியோர் என அனைவரும் பின்பற்றத்தக்க 'சத்தியாகிரகம்' என்ற புதிய வழிமுறையை அறிமுகம் செய்தார். அடித்தட்டு வறியவர்களின் மேன்மைக்காக உறுதிபூண்ட அவரால் மக்களின் நல்லெண்ணத்தை எளிதில் பெறமுடிந்தது. இந்திய தேசிய இயக்கத்தை காந்தியடிகள் எவ்வாறு மடைமாற்றம் பெறவைத்தார் என்பதை இந்தப் பாடத்தில் நாம் காண்போம்.

## 8.1 காந்தியடிகளும் மக்கள் தேசியமும்

### (அ) காந்தியடிகள் உருவாகிறார்

குஜராத்தின் போர்பந்தரில் ஒரு வசதியான குடும்பத்தில் 1869 அக்டோபர் 2ஆம் நாள் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி பிறந்தார். அவரது தந்தையார் காபா காந்தி, போர்பந்தரின் திவானாகவும் பின்னர் ராஜ்கோட்டின் திவானாகவும் பொறுப்பு வகித்தார். அவரது தாயார் புத்லிபாயின் தாக்கம் இளையவரான காந்தியின் நடவடிக்கைகளில் பெரிதும் இருந்தது. பதினெட்டு பள்ளிப் (மெட்ரிகுலேசன்) படிப்பை முடித்த காந்தியடிகள் சட்டம் பயில்வதற்காக 1888இல் இங்கிலாந்துக்குக் கடல்பயணம் மேற்கொண்டார். 1891ஆம் ஆண்டு ஜூன் மாதம் வழக்கறிஞர் பட்டம்பெற்ற பின்பு அவர் பிரிட்டிஷாரின் நீதி மற்றும்



10th_History_Unit_8_TM.indd 95 11-04-2020 11:36:18

நியாய முறையில் நம்பிக்கை கொண்டவராக இந்தியாவுக்குத் திரும்பினார்.

இந்தியா திரும்பியவுடன் பம்பாயில் வழக்குரைஞராக பணியாற்ற காந்தியடிகள் மேற்கொண்ட முயற்சி தோல்வியடைந்தது. அந்த காலகட்டத்தில்தான் தென்னாப்பிரிக்காவில் இருந்த குஜராத்தி நிறுவனம் ஒன்று சட்ட உரிமை வழக்குகள் தொடர்பாக காந்தியடிகளின் சேவையை நாடியது. இந்த வாய்ப்பை ஏற்றுக்கொண்ட காந்தியடிகள் 1893 ஏப்ரல் மாதம் தென்னாப்பிரிக்காவுக்குப் புறப்பட்டுச் சென்றார். தென்னாப்பிரிக்காவில்தான் முதன்முறையாக அவர் இனவெறியை எதிர்கொண்டார். டர்பனில் இருந்து பிரிட்டோரியாவுக்கு ரயில்பயணம் மேற்கொண்டபோது பீட்டர்மாரிட்ஸ்பர்க் ரயில் நிலையத்தில் முதல்வகுப்புப் பெட்டியிலிருந்து வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டார். காந்தியடிகள் இதை எதிர்த்துப்போராட உறுதி பூண்டார்.

காந்தியடிகள் டிரான்ஸ்வாலில் உள்ள இந்தியர்களின் கூட்டத்தைக் கூட்டி அவர்கள் தங்களுடைய குறைகளை உறுதியுடன் வெளிப்படுத்தி களைவதற்காக ஒரு அமைப்பை ஏற்படுத்தவேண்டும் என்று அறிவுறுத்தினார். இது போன்ற கூட்டங்களைத் தொடர்ந்து நடத்திய அவர், அந்த நாட்டின் சட்டங்களை மீறும் விதமாக நடந்த அநீதிகள் தொடர்பாக நிர்வாகத்தினருக்கு மனுக்களை அளித்தார். டிரான்ஸ்வாலில் வசித்த இந்தியர்கள் தலை வரியாக 3 பவுண்டுகளை செலுத்த வேண்டியிருந்தது. அவர்களுக்கென குறிக்கப்பட்ட பகுதிகளை விடுத்து வேறு இடங்களில் அவர்கள் நிலத்தை சொந்தமாக வைத்துக்கொள்ள முடியாதநிலை இருந்தது. இரவு 9 மணிக்குப் பிறகு அனுமதியின்றி வெளியிடங்களுக்கு செல்லமுடியாத நிலையும் இருந்தது. இத்தகைய நியாயமற்ற சட்டங்களை எதிர்த்து அவர் போராட்டத்தைத் தொடங்கினார்.

காந்தியடிகளுக்கு டால்ஸ்டாய், ஜான் ரஸ்கின் ஆகியோரின் எழுத்துக்களுடன் அறிமுகம் கிடைத்தது. 'கடவுளின் அரசாங்கம் உன்னில் உள்ளது' (*The Kingdom of God is Within You*) என்ற டால்ஸ்டாயின் புத்தகம், 'அண்டூ திஸ் லாஸ்ட்' (*Unto the Last*) என்ற ஜான் ரஸ்கின் எழுதிய புத்தகம் தாரோவின் 'சட்டமறுப்பு' (*Civil Disobedience*) ஆகிய புத்தகங்களால் காந்தியடிகள் பெரும் தாக்கத்திற்குள்ளானார். ரஸ்கின் அவர்களால் பெரிதும் ஈர்க்கப்பட்ட காந்தியடிகள் ஃபீனிக்ஸ் குடியிருப்பையும் (1905) டால்ஸ்டாய் பண்ணையையும் (1910) நிறுவினார். சமத்துவம், சமூக வாழ்க்கை, செய்யும் தொழில் மீது மரியாதை ஆகிய நற்பண்புகள் இந்தக் குடியிருப்புகளில் ஊக்கப்படுத்தப்பட்டன. சத்தியாகிரகிகளுக்கு இவை பயிற்சிகளங்களாகத் திகழ்ந்தன.

### தென்னாப்பிரிக்காவில் ஒரு செயல்உத்தியாக சத்தியாகிரகம்

காந்தியடிகள் உண்மையின் வடிவமாக சத்தியாகிரகத்தை மேம்படுத்தினார். நியாயமற்ற சட்டங்களுக்கு எதிராக அமைதிப் பேரணிகளை நடத்திய பரப்புரையாளர்கள் எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக தாங்களாகவே முன்வந்து கைதானார்கள். குடியேற்றம் மற்றும் இனவேறுபாடு ஆகிய பிரச்சனைகளுக்காகப் போராட அவர் சத்தியாகிரக சோதனைகளை மேற்கொண்டார். குடிப்பெயர்ந்தோரை பதிவு செய்யும் அலுவலகங்கள் முன் கூட்டங்களும் ஆர்ப்பாட்டங்களும் நடத்தப்பட்டன. காவல்துறையினர் வன்முறையை கட்டவிழ்த்துவிட்டபோதிலும் சத்தியாகிரகிகள் எந்தவித எதிர்ப்பையும் காட்டவில்லை. காந்தியடிகளும் இதர தலைவர்களும் கைதானார்கள். பெரும்பாலும், ஒப்பந்த தொழிலாளர்களாக இருந்து தெருவோர வியாபாரிகளாக மாறிய இந்தியர்கள், காவல்துறையினரின் கடுமையான நடவடிக்கையையும் பொருட்படுத்தாமல் போராட்டத்தைத் தொடர்ந்தனர். இறுதியாக ஒப்பந்த தொழிலாளர்கள் மீது விதிக்கப்பட்ட தலைவரி ஸ்மட்ஸ்–காந்தி ஒப்பந்தத்தின்படி ரத்துசெய்யப்பட்டது.

## 8.2 இந்தியாவில் காந்தியடிகள் நடத்திய தொடக்ககால சத்தியாகிரகங்கள்

முந்தைய இந்திய வருகைகளின்போது காந்தியடிகள் தான் சந்தித்த கோபால கிருஷ்ண கோகலே மீது பெரும் மரியாதை கொண்டு அவரையே தமது அரசியல் குருவாக ஏற்றார். அவரது அறிவுரையின்படி, அரசியலில் ஈடுபடுமுன் நாட்டின் அனைத்துப் பகுதிகளுக்கும் காந்தியடிகள் பயணம் மேற்கொண்டார். இதனால் மக்களின் நிலையை அவர் அறிந்துகொள்ள வழிபிறந்தது. இதுபோன்ற ஒரு பயணத்தின்போதுதான் தமிழகத்தில் தமது வழக்கமான ஆடைகளை விடுத்து சாதாரண வேட்டிக்கு அவர் மாறினார்.

### (அ) சம்பரான் சத்தியாகிரகம்

பீகாரில் உள்ள சம்பரானில் 'தீன் காதியா' முறை பின்பற்றப்பட்டது. இந்த சுரண்டல் முறையில் இந்திய விவசாயிகள் தங்களின் நிலத்தின் இருபதில்



10th_History_Unit_8_TM.indd 96 11-04-2020 11:36:18

www.tntextbooks.in




**சம்பரான் சத்தியாகிரகம்**

மூன்று பங்கு பகுதியில் அவுரி (இண்டிகோ) பயிரிட வேண்டும் என்று ஐரோப்பியப் பண்ணையாளர்கள் அவர்களைக் கட்டாயப்படுத்தினர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைசியில் ஜெர்மானிய செயற்கை சாயங்களால், இண்டிகோ எனப்படும் நீலச்சாயம் சந்தையில் விற்கப்படுவது குறைந்தது. சம்பரானில் இண்டிகோ பயிரிட்ட ஐரோப்பியப் பண்ணையாளர்கள் நீலச்சாயம் பயிரிடும் கடமையிலிருந்து விவசாயிகளை விடுவிக்கும் தேவையை உணர்ந்து அந்த நிலைமையை தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள விரும்பினார்கள். இந்தக் கடமையிலிருந்து விவசாயிகளை விடுவிக்கும்பொருட்டு சட்டத்துக்கு புறம்பான நிலுவைத்தொகைகளை வசூலித்ததோடு வாடகையையும் அதிகரித்தார்கள். எனவே எதிர்ப்பு வெடித்தது. இந்த வகையில் சிரமங்களைச் சந்தித்த சம்பரானைச் சேர்ந்த விவசாயியான ராஜ்குமார் சுக்லா, சம்பரானுக்கு வருகை புரியுமாறு காந்தியடிகளைக் கேட்டுக்கொண்டார். சம்பரானை காந்தியடிகள் சென்று சேர்ந்தவுடன், அங்கிருந்து உடனடியாக வெளியேறுமாறு காவல்துறையினர் அவரைக் கேட்டுக்கொண்டனர். அதற்கு அவர் மறுத்ததையடுத்து வழக்கைச் சந்திக்குமாறு பணிக்கப்பட்டார். இந்தச் செய்தி காட்டுத்தீ போன்று பரவியதை அடுத்து ஆயிரக்கணக்கானோர் அந்த இடத்தில் காந்தியடிகளுக்கு ஆதரவாகக் கூடினர். 'நாடு முதன்முதலாக ஒத்துழையாமை இயக்கச் செயல்முறைப் பாடத்தைக் கற்றுக்கொண்டதாக' காந்தியடிகள் தெரிவித்தார். இந்தியாவின் முதலாவது குடியரசுத்தலைவராக பின்னாளில் பொறுப்பேற்ற இராஜேந்திர பிரசாத்தும் வழக்குரைஞராக தொழில் செய்த பிரஜ்கிஷோர் பிரசாத்தும் காந்தியடிகளுக்குத் துணையாக செயல்பட்டனர். அதன்பிறகு துணைநிலை ஆளுநர் ஒரு குழுவை உருவாக்கினார் காந்தியடிகள் அக்குழுவில் ஒரு உறுப்பினர் ஆனார். இண்டிகோ பண்ணையாளர்கள் விவசாயிகள் மீது நடத்திய அடக்குமுறையை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் 'தீன் காதியா' முறையை ரத்து செய்ய அந்தக் குழு பரிந்துரைத்தது.

சம்பரான் சத்தியாகிரகத்தின் வெற்றியை அடுத்து 1918இல் அகமதாபாத் மில் வேலைநிறுத்தம், 1918இல் கேதா சத்தியாகிரகம் ஆகியன காந்தியடிகளை ஒரு மக்கள் தலைவராக உருவாக்கின. முந்தைய தலைவர்களைப் போலல்லாமல் நாட்டு மக்களை ஒன்றுதிரட்டும் பணியில் காந்தியடிகள் தம் திறமையை வெளிப்படுத்தினார்.

### (ஆ) ரௌலட் சத்தியாகிரகமும் ஜாலியன்வாலா பாக் படுகொலையும்

இந்தியர்களுக்கு உண்மையில் அதிகாரங்களை பரிமாற்றம் செய்யாததால் 1919ஆம் ஆண்டின் இந்திய அரசுச்சட்டம் ஏமாற்றத்தை அளித்தது. மேலும், அரசானது போர்க்காலக் கட்டுப்பாடுகளை நிரந்தரமாக விரிவுபடுத்தி அமல்படுத்தத் தொடங்கியது. பிடி உத்தரவு இல்லாமல் கைது நடவடிக்கை, விசாரணை இல்லாமல் சிறையிலடைப்பது என காவல் துறையினருக்கு அதீத அதிகாரங்களை ரௌலட் சட்டம் வழங்கியது. இந்தச் சட்டத்தை 'கருப்புச் சட்டம்' என்றழைத்த காந்தியடிகள் அதனை எதிர்த்து நாடு தழுவிய சத்தியாகிரகப் போராட்டத்துக்கு 1919 ஏப்ரல் 6இல் அழைப்புவிடுத்தார். இது உண்ணாவிரதமிருத்தல் மற்றும் பிரார்த்தனையுடன் கூடிய ஒரு அகிம்சை போராட்டமாக இருத்தல் வேண்டும். இது நாடு முழுவதும் பரவிய தொடக்ககால காலனிய எதிர்ப்பு போராட்டமாகும். ரௌலட் சட்டத்துக்கு எதிரான போராட்டம் பஞ்சாபில் குறிப்பாக அமிர்தசரஸ் மற்றும் லாகூரில் தீவிரமடைந்தது. காந்தியடிகள் கைது செய்யப்பட்டதுடன் பஞ்சாபிற்குள் நுழையவிடாமலும் தடுக்கப்பட்டார். ஏப்ரல் 9ஆம் நாள் டாக்டர். சைஃபுதீன் கிச்லு, டாக்டர். சத்யபால் என்ற இரண்டு முக்கிய உள்ளூர் தலைவர்கள் போராட்டத்திற்கு தலைமையேற்றதால் அமிர்தசரஸில் கைது செய்யப்பட்டனர்.

#### ஜெனரல் டயரின் கொடுங்கோன்மை

G6HFRV

அமிர்தசரஸில் உள்ள ஜாலியன்வாலா பாக்கில் 1919 ஏப்ரல் 13ஆம் நாள் ஒரு பொதுக்கூட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பைசாகி திருநாளில் (சீக்கியர்களின் அறுவடைத்திருநாள்) இந்தக்கூட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆயிரக்கணக்கான கிராம மக்கள் அங்கு கூடியிருந்தனர். இந்தக்கூட்டம் பற்றி அறிந்தவுடன் அந்த இடத்தை பீரங்கி வண்டி மற்றும் ஆயுதமேந்திய வீரர்களுடன் ஜெனரல் ரெஜினால்டு டயர் சுற்றி வளைத்தார். உயர்ந்த மதில்களுடன் அமைந்த அந்த மைதானத்துக்கு இருந்த ஒரே



10th_History_Unit_8_TM.indd 97
11-04-2020 11:36:18

வாயில் பகுதியை ஆக்ரமித்த ஆயுதமேந்திய வீரர்கள் எந்தவித முன்னெச்சரிக்கையுமின்றி கண்மூடித்தனமாக சுடத்தொடங்கினார்கள். துப்பாக்கிகளில் குண்டுகள் தீரும் வரை தொடர்ந்து 10 மணித்துளிகளுக்கு இந்தத் துப்பாக்கிச்சூடு நிகழ்ந்தது. அதிகாரபூர்வ அரசு தகவல்களின் படி 379 பேர் இந்தத் துப்பாக்கிச்சூட்டில் கொல்லப்பட்டனர்; ஓராயிரத்துக்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர். ஆனால் அதிகாரபூர்வமற்ற தகவல்கள் இந்தத் தாக்குதலில் உயிரிழந்தோர் எண்ணிக்கையை ஓராயிரத்துக்கும் அதிகம் என்று தெரிவித்தது. இந்தச் சம்பவத்துக்குப் பிறகு படைத்துறைச்சட்டம் அறிவிக்கப்பட்டு பஞ்சாப் குறிப்பாக, அமிர்தசரஸ் மக்கள் சவுக்கடி கொடுக்கப்பட்டு தெருக்களில் ஊர்ந்து செல்ல வைக்கப்பட்டனர். இந்தக் கொடுமைகள் இந்தியர்களை கொதித்தெழச்செய்தது. இரபீந்திரநாத் தாகூர் வீரத்திருமகன் (knighthood) என்ற அரசுப் பட்டத்தை திருப்பிக் கொடுத்தார். கெய்சர்–இ–ஹிந்த் பதக்கத்தை காந்தியடிகள் திருப்பிக்கொடுத்தார்.

### (இ) கிலாபத் இயக்கம்

1918இல் முதலாவது உலகப்போர் முடிவுக்கு வந்தது. இசுலாமிய மதத்தலைவர் என உலகம் முழுவதும் போற்றப்பட்ட துருக்கியின் கலிபா கடுமையாக நடத்தப்பட்டார். அவருக்கு ஆதரவாக தோற்றுவிக்கப்பட்ட இயக்கமே கிலாபத் இயக்கம் என்றழைக்கப்பட்டது. மௌலானா முகமது அலி மற்றும் மௌலானா சௌகத் அலி எனும் அலி சகோதரர்கள் தலைமையில் இவ்வியக்கம் நடந்தது. இந்த இயக்கத்துக்கு ஆதரவளித்த காந்தியடிகள் இந்த இயக்கத்தை இந்து முஸ்லீம்களை இணைக்க ஒரு வாய்ப்பாகக் கருதினார். 1919ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தில்லியில் நடைபெற்ற அகில இந்திய கிலாபத் இயக்க மாநாட்டிற்கு அவர் தலைமையேற்றார். அல்லாஹு அக்பர், வந்தே மாதரம், இந்து–முஸ்லீம் வாழ்க ஆகிய மூன்று தேசிய முழக்கங்களை முன்மொழிந்த சௌகத் அலியின் யோசனையை காந்தியடிகள் ஆதரித்தார். 1920 ஜூன் 9இல் அலகாபாத்தில் கூடிய கிலாபத் குழுவின் கூட்டம் காந்தியடிகளின் அகிம்சை மற்றும் ஒத்துழையாமை இயக்கத்தை ஏற்றுக்கொண்டது. ஒத்துழையாமை இயக்கம் 1920 ஆகஸ்டு முதல் நாள் தொடங்கியது.

## 8.3 ஒத்துழையாமை இயக்கமும் அதன் வீழ்ச்சியும்

1920 செப்டம்பர் மாதம் கல்கத்தாவில் நடைபெற்ற சிறப்பு கூட்டத்தில் (அமர்வில்) இந்திய தேசிய காங்கிரஸ் ஒத்துழையாமை இயக்கத்துக்கு அனுமதி வழங்கியது. பின்னர் 1920 டிசம்பர் மாதம் சேலம் C. விஜயராகவாச்சாரியாரின் தலைமையில் நாக்பூரில் நடந்த அமர்வில் இந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஒத்துழையாமை இயக்கத் திட்டத்தின் கூறுகளாவன;

1. பட்டங்கள் மற்றும் மரியாதை நிமித்தமான பதவிகள் அனைத்தையும் திரும்ப ஒப்படைப்பது.
2. அரசின் செயல்பாடுகளில் ஒத்துழைக்காமலிருப்பது.
3. நீதிமன்ற வழக்குகளில் வழக்குரைஞர்கள் ஆஜராகாமல் இருப்பது. நீதிமன்றத்தில் இருந்த வழக்குகளுக்கு தனியார் மத்தியஸ்தம் மூலமாகத் தீர்வு காண்பது.
4. அரசுப் பள்ளிகளை குழந்தைகளும் அவற்றின் பெற்றோர்களும் புறக்கணிப்பது.
5. 1919ஆம் ஆண்டு சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட சட்டப்பேரவைகளை புறக்கணிப்பது.
6. அரசு விருந்து நிகழ்ச்சிகள் மற்றும் இதர அரசு விழாக்களில் பங்கேற்பதில்லை என்ற முடிவு.
7. குடிமைப்பணி (சிவில்) அல்லது இராணுவப் பதவிகளை ஏற்க மறுப்பது.
8. அந்நியப் பொருள்களின் புறக்கணிப்பு மற்றும் உள்ளூர் பொருள்களுக்கு ஊக்கம் தரும் சுதேசி இயக்கத்தின் கொள்கைகளைப் பரப்புவது.

### (அ) வரிகொடா இயக்கம் மற்றும் சௌரி சௌரா சம்பவம்

1922 பிப்ரவரி மாதம் பர்தோலியில் வரிகொடா இயக்க பிரச்சாரத்தை காந்தியடிகள் அறிவித்தார். இந்த இயக்கங்கள் ஒரு தேசியத் தலைவராக காந்தியடிகளின் நற்பெயரைப் பெரிதும் மேம்படுத்தின, குறிப்பாக விவசாயிகள் மத்தியில் ஒரு மாபெரும் தலைவராக அவரது மரியாதையை உயர்த்தின. காந்தியடிகள் நாடுதழுவிய சுற்றுப்பயணத்தை மேற்கொண்டார். அவர் பயணம் மேற்கொண்ட இடங்களில் எல்லாம் அந்நியத் துணிகள் குவிக்கப்பட்டு தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. ஆயிரக்கணக்கானவர்கள் அரசு வேலைகளைத் துறந்தனர், மாணவர்கள் பெரும் எண்ணிக்கையில் தங்கள் கல்வியைக் கைவிட்டனர், பெருமளவிலான வழக்குரைஞர்கள் தங்கள் தொழிலை கைவிட்டனர். ஆங்கிலேயப் பொருள்கள் மற்றும் நிறுவனங்கள் புறக்கணிப்புத் தீவிரமாக நடந்தது. வேல்ஸ் இளவரசரின் இந்தியப் பயணத்தை புறக்கணிப்பது வெற்றிகரமாக நடந்துமுடிந்தது.

1922 பிப்ரவரி 5ஆம் நாள் தற்போதைய உத்தரப்பிரதேசத்தில் உள்ள கோரக்பூர் அருகே சௌரி சௌரா என்ற கிராமத்தில் தேசியவாதிகள் நடத்தியப் பேரணி காவல்துறையினரின்



10th_History_Unit_8_TM.indd 98 11-04-2020 11:36:18

கோபமுட்டும் நடவடிக்கைகளினால் வன்முறையாக மாறியது. தாம் குறைந்த எண்ணிக்கையில் இருப்பதை உணர்ந்த காவல்துறையினர் பாதுகாப்புக்காக தங்களை காவல்நிலையத்துக்குள் அடைத்துக் கொண்டனர். ஆனால் ஆத்திரம்கொண்ட கூட்டத்தினர் 22 காவலருடன் காவல்நிலையத்தை தீயிட்டுக் கொளுத்தினர். இதில் 22 காவலர்களும் உயிரிழந்தனர். காந்தியடிகள் உடனடியாக இயக்கத்தை திரும்பப்பெற்றார்.

### (ஆ) சுயராஜ்ஜியக் கட்சியினர்

இதனிடையே காங்கிரஸ் கட்சி இரண்டாகப் பிளவுபட்டது. அவையாவன, மாற்றத்தை விரும்புவோர்கள் மற்றும் மாற்றத்தை விரும்பாதவர்கள் என இரண்டு பிரிவுகள் ஆகும். மோதிலால் நேரு, சி.ஆர். தாஸ் ஆகியோர் தலைமையிலான காங்கிரசார் தேர்தலில் போட்டியிட்டு சட்டப்பேரவைக்குள் நுழைய வேண்டும் என்று விரும்பினார்கள். சட்டப் பேரவைகளில் பங்கேற்று பணியாற்றுவதன் மூலம் மட்டுமே தேசநலன்கள் மேம்படும் என்றும் இரட்டை ஆட்சியில் பங்கேற்பதன் மூலம்தான் காலனி ஆதிக்க அரசை பாதிப்படைய வைக்க முடியும் என்றும் அவர்கள் வாதிட்டனர். அவர்களே மாற்றத்தை விரும்புவோர்கள் என்று அழைக்கப்பட்டனர். வல்லபாய் பட்டேல், சி. ராஜாஜி உள்ளிட்ட காந்தியடிகளைத் தீவிரமாகப் பின்பற்றிய பலர் மாற்றத்தை விரும்பாதவர்களாக அரசுடன் ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடர விரும்பினார்கள். எதிர்ப்புக்கு இடையே மோதிலால் நேருவும் சி.ஆர். தாஸும் 1923 ஜனவரி முதல் நாள் சுயராஜ்ஜியக் கட்சியை தொடங்கினார்கள். இந்தக் கட்சி பின்னர் காங்கிரஸ் கட்சியின் சிறப்பு அமர்வில் அங்கீகரிக்கப்பட்டது. ஆங்கிலேய இந்தியாவின் பேரரசு (இம்பீரியல்) சட்டப் பேரவை மற்றும் பல்வேறு மாகாண சட்டப்பேரவைகளுக்கு பெரும் எண்ணிக்கையில் சுயராஜ்ஜிய கட்சி உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தேசியவாதக் கருத்துக்களை முன்னெடுத்துச் செல்ல அவர்கள் சட்டப்பேரவையை ஒரு மேடையாகப் பயன்படுத்தினார்கள். வங்காளத்தில் அரசுடன் ஒத்துழைக்க விரும்பாததால் இந்தியர்களுக்கு என மாற்றப்பட்ட துறைகளில் பொறுப்பேற்க அவர்கள் மறுத்துவிட்டனர். காலனி அரசின் உண்மையான இயல்பை அவர்கள் வெளிக்கொணர்ந்தனர். எனினும் 1925இல் அக்கட்சியின் தலைவர் சி.ஆர். தாஸ் மறைந்த பிறகு சுயராஜ்ஜிய கட்சி வீழ்ச்சி காணத் தொடங்கியது.



சி.ஆர். தாஸ்



மோதிலால் நேரு

1919ஆம் ஆண்டின் இந்திய அரசுச் சட்டம் மூலமாக இரட்டை ஆட்சி என்பது அறிமுகம் செய்யப்பட்டது. இதன் மூலம் மாகாண அரசின் அதிகாரங்கள் ஒதுக்கப்பட்ட மற்றும் மாற்றப்பட்ட துறைகள் என இரண்டு வகைகளாகப் பிரிக்கப்பட்டது. நிதி, பாதுகாப்பு, காவல்துறை, நீதித்துறை, நிலவருவாய், மற்றும் நீர்ப்பாசனம் ஆகிய துறைகள் ஆங்கிலேயர்கள் வசம் ஒதுக்கப்பட்டன. மாற்றப்பட்ட துறைகளில் உள்ளாட்சி, கல்வி, பொதுசுகாதாரம், பொதுப்பணி, வேளாண்மை, வனங்கள், மற்றும் மீன்வளத்துறை ஆகியன இந்திய அமைச்சர்களின் கட்டுப்பாட்டின் கீழ் விடப்பட்டன. 1935ஆம் ஆண்டு மாகாண சுயாட்சி அறிமுகம் செய்யப்பட்ட பிறகு இந்த முறை முடிவுக்கு வந்தது.

### (இ) காந்தியடிகளின் ஆக்கப்பூர்வத் திட்டம்

சௌரி சௌரா நிகழ்வுக்குப் பிறகு ஆர்வலர்களும் மக்களும் அகிம்சை போராட்டம் குறித்த பயிற்சியை மேற்கொள்ள வேண்டும் என்று காந்தியடிகள் உணர்ந்தார். அதன் ஒருபகுதியாக காதி இயக்க மேம்பாடு, இந்து–முஸ்லீம் ஒற்றுமை, தீண்டாமை ஒழிப்பு ஆகியவற்றில் அவர் கவனம் செலுத்தினார். "உங்கள் மாவட்டங்களுக்குச் செல்லுங்கள். கதர், இந்து–முஸ்லீம் ஒற்றுமை, தீண்டாமை ஒழிப்பு ஆகியன பற்றிய செய்திகளைப் பரப்புங்கள். இளைஞர்களை ஒன்றுதிரட்டி அவர்களை சுயராஜ்யத்தின் உண்மையான வீரர்களாக உருமாற்றுங்கள்." என்று காந்தியடிகள் காங்கிரசாருக்கு அறிவுறுத்தினார். காங்கிரஸ் உறுப்பினர்கள் கதர் உடுப்பதை அவர் கட்டாயமாக்கினார். அகில இந்திய நெசவாளர் அமைப்பு உருவாக்கப்பட்டது.

### (ஈ) சைமன் குழு புறக்கணிப்பு

1927 நவம்பர் 8ஆம் நாள் இந்திய அரசியல் சாசன சீர்திருத்தங்களுக்கான இந்திய சட்டபூர்வ ஆணையத்தை (Indian Statutory Commission) நியமிப்பதாக ஆங்கிலேய அரசு அறிவித்தது. சர் ஜான் சைமன் தலைமையிலான இந்தக் குழுவில் ஏழு உறுப்பினர்கள் இடம்பெற்றனர். இது 'சைமன் குழு' என்றே அழைக்கப்பட்டது. இந்தியர்கள் எவரும்



10th_History_Unit_8_TM.indd 99 11-04-2020 11:36:18

இடம்பெறாமல் அனைவரும் வெள்ளையர்களாக இந்தக் குழுவில் இடம்பெற்றனர். இந்தியர் ஒருவர் கூட உறுப்பினராக இல்லாத காரணத்தால் இந்தியர்கள் ஆத்திரமும் அவமானமும் அடைந்தனர். தங்கள் அரசியல் சாசனத்தை நிர்ணயிக்க தங்களுக்கு உரிமை இல்லாத நிலைகண்டு கொதித்தனர். காங்கிரஸ் மற்றும் முஸ்லீம் லீக் உள்ளிட்ட அனைத்து இந்திய பிரிவுகளும் இந்த சைமன் குழுவினைப் புறக்கணிப்பது என முடிவு செய்தன. இந்தக் குழு சென்ற இடங்களில் எல்லாம் ஆர்ப்பாட்டங்களும், கருப்புக்கொடி ஏந்தியபடி 'சைமனே திரும்பிப் போ' எனும் முழக்கங்களும் இடம்பெற்றன. போராட்டக்காரர்கள் காவல்துறையினரால் கொடூரமாக தாக்கப்பட்டனர். அவ்வாறு நடந்த ஒரு கடுமையான தாக்குதலில் லாலா லஜபதி ராய் மிக மோசமாக காயமடைந்து பின்னர் சில நாட்களில் உயிரிழந்தார்.





**'சைமனே திரும்பிப் போ' ஆர்ப்பாட்டம்**

### (உ) நேரு அறிக்கை

இந்தியாவில் இருந்த பல்வேறு அரசியல் கட்சிகளை சைமன் குழு புறக்கணிப்பு ஒன்றிணைத்தது. சைமன் குழு முன்மொழிவுகளுக்கு மாற்றாக இந்தியாவுக்கு அரசியல் சாசனம் உருவாக்குவதை குறிக்கோளாகக் கொண்டு 1928இல் அனைத்துக் கட்சி மாநாடு நடைபெற்றது. இந்த கொள்கைகளின் அடிப்படையில் அரசியல் சாசன வரைவுக்காக திட்டம் வகுக்க மோதிலால் நேரு தலைமையிலான கமிட்டி அமைக்கப்பட்டது. அந்தக் கமிட்டியின் அறிக்கை 'நேரு அறிக்கை' என்று அழைக்கப்பட்டது. அதில் பரிந்துரை செய்யப்பட்டவை:

- இந்தியாவுக்கு தன்னாட்சி அந்தஸ்து என்ற டொமினியன் தகுதி.
- மத்திய சட்டப் பேரவை மற்றும் மாகாண சட்டப் பேரவைகளுக்கு கூட்டு மற்றும் கலவையான வாக்காளர் தொகுதிகளுடன் தேர்தல் நடைபெறுவது.
- மத்திய சட்டப் பேரவை மற்றும் முஸ்லீம்கள் சிறுபான்மையினராக உள்ள மாகாண சட்ட பேரவைகளில் முஸ்லீம்களுக்கு இடஒதுக்கீடு அதேபோல் இந்துக்களுக்கு அவர்கள் சிறுபான்மையினராக உள்ள வடமேற்கு எல்லை மாகாணத்தில் இடஒதுக்கீடு.
- பொது வாக்களிப்பு முறையும் அடிப்படை உரிமைகளும் வழங்கப்படுவது.



**ஜின்னா**

மத்திய சட்டப்பேரவையில் இடஒதுக்கீடு வழங்குவது குறித்து ஜின்னா சட்டத்திருத்தத்தைக் கொண்டு வந்தார். மூன்றில் ஒருபங்கு இடங்கள் முஸ்லீம்களுக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்று அவர் கோரினார். அவரை ஆதரித்த தேஜ் பஹதூர் சாப்ரூ இது பெரும் மாற்றத்தைத் தராது என்று வேண்டினார். எனினும், அனைத்துக் கட்சி மாநாட்டில் இவை அனைத்தும் தோல்வி கண்டன. பின்னர், ஜின்னாவின் 14 அம்சங்கள் என்று அழைக்கப்பட்ட தீர்மானத்தை முன்மொழிந்தார். எனினும் அதுவும் நிராகரிக்கப்பட்டது. இந்து–முஸ்லீம் ஒற்றுமையின் தூதராக பாராட்டப்பட்ட ஜின்னா பின்னர் தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டு முஸ்லீம்களுக்கு தனிநாடு என வலியுறுத்த ஆரம்பித்தார்.

## 8.4 முழுமையான சுயராஜ்ஜியத்துக்கான போராட்டம் மற்றும் சட்டமறுப்பு இயக்கத் தொடக்கம்

இதனிடையே டொமினியன் அந்தஸ்து வழங்கப்பட்டது குறித்து திருப்தி அடையாத காங்கிரசார் சிலர், முழுமையான சுதந்திரம் வேண்டி கோரிக்கை வைத்தனர். 1929இல் டிசம்பர் மாதம் லாகூரில் ஜவகர்லால் நேரு தலைமையில் காங்கிரஸ் அமர்வு நடந்தது. அதில் முழுமையான சுதந்திரம் என்பது இலக்காக அறிவிக்கப்பட்டது. வட்டமேசை மாநாட்டை புறக்கணிப்பது என்று முடிவு செய்யப்பட்டதுடன், சட்டமறுப்பு இயக்கத்தை தொடங்கவும் முடிவு செய்யப்பட்டது. 1930 ஜனவரி 26ஆம் நாள் சுதந்திரத் திருநாளாக அறிவிக்கப்பட்டு வரிகொடா இயக்கம் உள்ளிட்ட சட்டமறுப்பு இயக்கம் மூலமாகவும் வன்முறையற்ற முறையில் முழுமையான சுதந்திரத்தை அடைவது குறித்தும் நாடு முழுவதும் உறுதிமொழி ஏற்கப்பட்டது. இந்த இயக்கத்தைத் தொடங்க இந்திய தேசிய காங்கிரஸ் காந்தியடிகளுக்கு அங்கீகாரம் அளித்தது.

### (அ) உப்பு சத்தியாகிரகம்

1930 ஜனவரி 31ஆம் நாளுக்குள் நிறைவேற்ற வேண்டும் என்ற காலக்கெடுவுடன் அரசப்பிரதிநிதி (வைசிராய்) இர்வின் பிரபுவிடம் கோரிக்கைகள் அடங்கிய மனு கொடுக்கப்பட்டது. அவை கீழ்க்கண்டவையாகும்:

- இராணுவம் மற்றும் ஆட்சிப்பணி சேவைகளுக்கான செலவுகளை 50 சதவிகிதம் வரை குறைப்பது.
- முழுமையான புறக்கணிப்பை அறிமுகம் செய்வது.
- அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய்வது.
- நிலவருவாயை 50 சதவிகிதமாக குறைப்பது.
- உப்பு வரியை ரத்துசெய்வது.




**காந்தியடிகளின் தண்டி யாத்திரை**

கோரிக்கை மனுவுக்கு அரசப்பிரதிநிதி பதில் தெரிவிக்காத நிலையில் காந்தியடிகள் சட்டமறுப்பு இயக்கத்தை தொடங்கினார். உப்பு மீதான வரியை ரத்துசெய்ய வேண்டும் என்ற கோரிக்கை ஒரு அறிவுபூர்வமான முடிவாகும். காந்தியடிகள் 1930 மார்ச் மாதம் 12ஆம் நாள் 78 பேர்களுடன் சபர்மதி ஆசிரமத்திலிருந்து தனது புகழ்பெற்ற தண்டி யாத்திரையைத் தொடங்கினார். இந்த யாத்திரையில் நூற்றுக்கணக்கானோர் சேரச்சேர அது நீண்டுகொண்டே போனது. காந்தியடிகள் தனது 61 ஆவது வயதில் 24 நாட்களில் 241 மைல் தொலைவு யாத்திரையாக நடந்து சென்று 1930 ஏப்ரல் 5ஆம் நாள் மாலை தண்டி கடற்கரையை அடைந்தார். அடுத்த நாள் காலை ஒரு கைப்பிடி உப்பைக் கையில் எடுத்து உப்புச்சட்டத்தை மீறினார்.

### மாகாணங்களில் உப்பு சத்தியாகிரகம்

தமிழ்நாட்டில் திருச்சிராப்பள்ளியில் இருந்து வேதாரண்யம் வரை இதேபோன்ற ஒரு யாத்திரையை சி. ராஜாஜி மேற்கொண்டார். கேரளா, ஆந்திரா மற்றும் வங்காளத்திலும் உப்பு சத்தியாகிரக யாத்திரை நடந்தன. வடமேற்கு எல்லை மாகாணத்தில் கான் அப்துல் கஃபார்கான் என்பவர் இந்த இயக்கத்திற்குத் தலைமை ஏற்றார். செஞ்சட்டைகள் என்றழைக்கப்பட்ட 'குடை கிட்மட்கர்' இயக்கத்தை அவர் நடத்தினார்.

காந்தியடிகள் நள்ளிரவில் கைது செய்யப்பட்டு எரவாடா சிறையில் அடைக்கப்பட்டார்.



**ராஜாஜியின் வேதாரண்யம் சத்தியாகிரகம்**

ஜவகர்லால் நேரு, கான் அப்துல் கஃபார் கான் மற்றும் இதர தலைவர்கள் விரைவாக கைதானார்கள். அந்நிய துணிகள் புறக்கணிப்பு, மதுக்கடைகள் முன் ஆர்ப்பாட்டங்கள், வரி கொடா இயக்கம், வனச்சட்டங்களை பின்பற்ற மறுப்பது ஆகியன உள்ளிட்ட பல ஆர்ப்பாட்ட வடிவங்கள் பின்பற்றப்பட்டன. பெண்கள், விவசாயிகள், பழங்குடியினர்,மாணவர்கள்மற்றும்குழந்தைகளும் என சமூகத்தின் அனைத்து பிரிவு மக்களும் நாடு தழுவிய போராட்டத்தில் பங்கேற்றனர். இந்தியா சந்தித்த மக்கள் இயக்கங்களிலேயே இது மிகப் பெரியது.

ஆங்கிலேயர்கள் 1865ஆம் ஆண்டு முதலாவது வனச்சட்டத்தை நிறைவேற்றினார்கள். சுள்ளி எடுப்பது, கால்நடைத் தீவனம் மற்றும் தேன், விதைகள், மருத்துவ மூலிகைகள், கொட்டைகள் ஆகிய சிறிய அளவிலான வன உற்பத்திப் பொருள்களையும் வனப்பகுதிகளில் இருந்து சேகரிக்க இந்தச் சட்டம் வனத்தில் வாழ்வோருக்கு தடைவிதித்தது. 1878ஆம் ஆண்டின் இந்திய வனங்கள் சட்டத்தின் படி வனங்களின் உரிமை அரசிடம் இருந்தது. நன்செய் மற்றும் தரிசு நிலங்களும் வனங்களாக கருதப்பட்டன. பழங்குடியினர் பயன்படுத்திய சுழற்சி முறை விவசாயம் தடைசெய்யப்பட்டது. உள்ளூர் மக்களின் கட்டுப்பாட்டில் இருந்து வனப்பகுதிகளை தள்ளி வைப்பதற்கு பாதிக்கப்பட்ட ஆதிவாசிகளும் தேசியவாதிகளும் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

பழங்குடியினர் நடத்திய தொடர் ஆர்ப்பாட்டங்களுக்கு மிக முக்கிய ஆதாரமாக ராம்பாவில் அல்லூரி சீதாராம ராஜு தலைமையிலான ஆர்ப்பாட்டத்தைக் குறிப்பிடலாம். ராம்பா பகுதி ஆதிவாசிகளின் நலன் காப்பதற்காக ஊழல் அதிகாரிகளுடன் அல்லூரி சீதாராம ராஜு போராடியதால் அவரது உயிரைக் குறிவைத்து ஆங்கிலேய அரசு நடவடிக்கை எடுக்கத் தொடங்கியது. ராம்பா ஆதிவாசிகளின் கிளர்ச்சியை அடக்குவதற்காக (1922–24) மலபார் காவல்துறையின் சிறப்புக்குழு அனுப்பி வைக்கப்பட்டது. வனவாசிகளின் நலனுக்காகப் போராடிய அல்லூரி சீதாராம ராஜு தியாகி ஆனார்.



10th_History_Unit_8_TM.indd 101 11-04-2020 11:36:18

### (ஆ) வட்டமேசை மாநாடு

இந்த இயக்கத்தின் மத்தியில் 1930ஆம் ஆண்டு நவம்பர் மாதம் லண்டனில் முதலாவது வட்ட மேசை மாநாடு நடந்தது. பிரிட்டிஷ் பிரதமர் ராம்சே மெக்டொனால்டு மாகாண சுயாட்சியுடன் கூடிய மத்திய அரசு பற்றிய யோசனையை அறிவித்தார். காங்கிரசின் தலைவர்கள் சிறைகளில் அடைக்கப்பட்டிருந்ததால் இந்த வட்டமேசை மாநாட்டில் காங்கிரஸ் கட்சி கலந்துகொள்ளவில்லை. இந்தப் பிரச்சனை குறித்து எந்தவித முடிவும் எட்டப்படாமலேயே மாநாடு நிறைவடைந்தது.

### (இ) காந்தி–இர்வின் ஒப்பந்தம்

காந்தியடிகளுடன் அரசப்பிரதிநிதி இர்வின் பிரபு பேச்சுவார்த்தைகளை நடத்தியதையடுத்து 1931 மார்ச் 5ஆம் நாள் காந்தி–இர்வின் ஒப்பந்தம் ஏற்பட்டது. வன்முறையில் ஈடுபடாத அனைத்து அரசியல் கைதிகளையும் உடனடியாக விடுதலை செய்வது, கைப்பற்றப்பட்ட நிலத்தைத் திரும்பத் தருவது, பதவி விலகிய அரசு ஊழியர்கள் விஷயத்தில் நீக்குபோக்காக நடந்துகொள்வது ஆகிய கோரிக்கைகளை ஆங்கிலேய அரசு ஏற்றுக்கொண்டது. கடலோர கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தங்கள் பயன்பாட்டுக்காக உப்புக் காய்ச்சவும் வன்முறை இல்லாமல் ஆர்ப்பாட்டங்கள் செய்யவும் இந்த ஒப்பந்தம் வகைசெய்தது. சட்டமறுப்பு இயக்கத்தை ரத்து செய்துவிட்டு இரண்டாவது வட்டமேசை மாநாட்டில் கலந்துகொள்ள காங்கிரஸ் கட்சி ஒப்புக்கொண்டது. 1931 செப்டம்பர் 7ஆம் நாள் நடந்த இரண்டாவது வட்டமேசை மாநாட்டில் காந்தியடிகள் கலந்துகொண்டார். சிறுபான்மையினருக்கு தனித்தொகுதிகள் வழங்குவதை காந்தியடிகள் ஏற்கவில்லை. இதன் விளைவாக, இரண்டாவது வட்டமேசை மாநாடு எந்தவித முடிவும் எட்டப்படாமல் முடிவடைந்தது.



**இரண்டாம் வட்டமேசை மாநாடு**

### (ஈ) சட்டமறுப்பு இயக்கத்திற்கு புத்துயிரூட்டல்

இந்தியா திரும்பிய பிறகு காந்தியடிகள் சட்டமறுப்பு இயக்கத்திற்கு மீண்டும் புத்துயிரூட்டினார். இந்தமுறை அரசு எதிர்ப்பை சமாளிக்க ஆயத்தமாக இருந்தது. படைத்துறைச் சட்டம் அமல்படுத்தப்பட்டு 1932 ஜனவரி 4ஆம் நாள் காந்தியடிகள் கைது செய்யப்பட்டார். விரைவில் அனைத்து காங்கிரஸ் தலைவர்களும் கைது செய்யப்பட்டனர். ஆர்ப்பாட்டங்கள் மற்றும் மறியல் செய்த மக்கள் படைகொண்டு அடக்கப்பட்டனர்.

இதனிடையே, 1932ஆம் ஆண்டு நவம்பர் 17ஆம் நாள் முதல் டிசம்பர் 24ஆம் நாள் வரை மூன்றாவது வட்டமேசை மாநாடு நடத்தப்பட்டது. சட்டமறுப்பு இயக்கத்திற்கு புத்துயிரூட்டியதால் காங்கிரஸ் கட்சி இந்த மாநாட்டில் பங்கேற்கவில்லை.



**சட்டமறுப்பு இயக்கத்துக்கு அழைப்பு**

### (உ) வகுப்புவாரி ஒதுக்கீடு மற்றும் பூனா ஒப்பந்தம்

1932 ஆகஸ்டு 16ஆம் நாள் வகுப்புவாரி ஒதுக்கீட்டை ராம்சே மெக்டொனால்டு அறிவித்தார். முஸ்லீம்கள், சீக்கியர்கள், இந்திய கிறித்தவர்கள், ஆங்கிலோ இந்தியர்கள் மற்றும் பெண்கள் மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களின் தலைவராகிய B.R. அம்பேத்கர், தமது கருத்துப்படி தனித்தொகுதிகள் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு அரசியல் பிரதிநிதித்துவம் மற்றும் அதிகாரத்தை வழங்கும் என்று வாதிட்டார். 1932 செப்டம்பர் 20ஆம் நாள் காந்தியடிகள் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு தனித்தொகுதிகள் ஒதுக்கீட்டிற்கு எதிராக சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கும் போராட்டத்தை தொடங்கினார். மதன் மோகன் மாளவியா, ராஜேந்திர பிரசாத் மற்றும் பல தலைவர்கள் B.R. அம்பேத்கர் மற்றும் M.C. ராஜா மற்றும் இதர ஒடுக்கப்பட்ட வகுப்பினரின் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தினர். தீவிரப் பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு காந்தியடிகள் மற்றும் அம்பேத்கர் இடையே ஒப்பந்தம் ஒன்று எட்டப்பட்டது. இதுவே பூனா ஒப்பந்தம் என்று அழைக்கப்பட்டது.

#### அதன் முக்கிய விதிமுறைகள்:

- தனித்தொகுதிகள் பற்றிய கொள்கைகள் கைவிடப்பட்டன. மாறாக, ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களுக்கு இடஒதுக்கீடு வழங்கும் கூட்டுத்தொகுதிகள் பற்றிய யோசனை ஏற்கப்பட்டது.



10th_History_Unit_8_TM.indd 102 11-04-2020 11:36:18

www.tntextbooks.in

- ஒடுக்கப்பட்ட வகுப்பினருக்கான இடங்கள் 71 லிருந்து 148 ஆக அதிகரிக்கப்பட்டது. மத்திய சட்டப் பேரவையில் 18 சதவிகித இடங்கள் ஒதுக்கப்பட்டன.

### (ஊ) தீண்டாமைக்கு எதிரான பிரச்சாரம்



டாக்டர் B.R. அம்பேத்கர்

அடுத்த சில ஆண்டுகள் தீண்டாமையை ஒழிப்பதற்கு காந்தியடிகள் செலவிட்டார். அம்பேத்கர் உடனான அவரது தொடர்புகள் சாதி அமைப்புகள் பற்றிய காந்தியடிகளின் கருத்துக்களில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. அவர் தமது இருப்பிடத்தை வார்தாவில் இருந்த சத்தியாகிரக ஆசிரமத்துக்கு மாற்றினார். அரிஜனர்களுக்கான பயணம் என்ற நாடுதழுவிய பயணத்தை காந்தியடிகள் மேற்கொண்டார். அரிஜனர் சேவை சங்கத்தை அமைத்து சமூகத்தில் உள்ள பாகுபாடுகளை முழுமையாக அவர் அகற்றுவதற்குப் பணியாற்றத் தொடங்கினார். கல்வி, சுத்தம் மற்றும் சுகாதாரம் ஆகியவற்றை மேம்படுத்தவும் ஒடுக்கப்பட்ட மக்களிடையே மதுப் பழக்கத்தை கைவிடவும் அவர் பணியாற்றினார். கோயில் நுழைவுப் போராட்டம் என்பது இந்தப்பிரச்சாரத்தின் முக்கியமான பகுதியாகும். 1933 ஜனவரி 8ஆம் நாள் 'கோவில் நுழைவு நாள்' என அனுசரிக்கப்பட்டது.


## 8.5 சமதர்மவாத (சோஷியலிஸ்ட்) இயக்கங்களின் தொடக்கங்கள்



M.N. ராய்

1917ஆம் ஆண்டின் ரஷ்யப் புரட்சியால் ஈர்க்கப்பட்ட இந்திய பொதுவுடைமை (கம்யூனிஸ்டு) கட்சி (CPI), 1920 அக்டோபர் மாதம் உஸ்பெகிஸ்தானின் தாஷ்கண்டில் நிறுவப்பட்டது. M.N. ராய், அபானி முகர்ஜி, M.P.T. ஆச்சார்யா ஆகியோர் அதன் நிறுவன உறுப்பினர்களாவர். 1920களில் அடுத்தடுத்து வழக்குகளைத் தொடுத்து கம்யூனிச இயக்கத்தை அடக்குவதற்கு இந்தியாவில் இருந்த ஆங்கிலேய அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டது. மேலும் கம்யூனிசம் தொடர்பான அச்சுறுத்தலை அடக்கும் மற்றொரு முயற்சியாக M.N. ராய், S.A. டாங்கே, முசாஃபர் அஹமது, M. சிங்காரவேலர் ஆகிய தலைவர்கள் கைது செய்யப்பட்டதோடு, 1924ஆம் ஆண்டின் கான்பூர் சதித்திட்ட வழக்கிலும் விசாரிக்கப்பட்டனர்.

### (அ) பொதுவுடைமை (கம்யூனிச) கட்சி நிறுவப்படுதல்




S.A. டாங்கே

தங்கள் கருத்துக்களை பரப்பவும், 'இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சியின் உண்மையான முகத்தை' எடுத்துக்காட்டவும் பொதுவுடைமைவாதிகள் இதனை ஒரு மேடையாகப் பயன்படுத்திக் கொண்டனர். ஒரு கட்சியை ஆரம்பிக்கும் முயற்சியாக 1925ஆம் ஆண்டு கான்பூரில் அகில இந்திய பொதுவுடைமை மாநாடு நடந்தது. அதில் சிங்காரவேலர் தலைமை உரையாற்றினார். இந்திய மண்ணில் இந்திய பொதுவுடைமை கட்சியை ஆரம்பிக்க அது வழியமைத்தது. பல்வேறு முயற்சிகளின் பலனாக 'அகில இந்திய தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் கட்சி' 1928ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

### (ஆ) புரட்சிகர நடவடிக்கைகள்

ஒத்துழையாமை இயக்கத்தை காந்தியடிகள் திடீரென திரும்பப்பெற்றதால் குழப்பமடைந்த இளைஞர்கள் வன்முறையைக் கையில் எடுத்தனர். காலனி ஆட்சியை ஆயுதக்கிளர்ச்சி மூலம் அகற்றும் நோக்கில் 1924இல் இந்துஸ்தான் குடியரசு இராணுவம் (HRA) கான்பூரில் உருவாக்கப்பட்டது. 1925ஆம் ஆண்டு ராம்பிரசாத் பிஸ்மில், அஷ்ஃபாகுல்லா கான் மற்றும் பலர் லக்னோ அருகே காகோரி என்ற கிராமத்தில் அரசுப்பணத்தை கொண்டுச்சென்ற ஒரு இரயில்வண்டியை நிறுத்திக் கொள்ளையடித்தனர். அவர்கள் காகோரி சதி வழக்கில் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டனர். அவர்களில் நான்கு பேருக்கு மரணதண்டனையும் மற்றவர்களுக்கு சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டன.


பகத்சிங் ராஜகுரு சுக்தேவ்

பஞ்சாபில் பகத்சிங், சுக்தேவ், மற்றும் அவர்களது தோழர்கள் இந்துஸ்தான் குடியரசு இராணுவத்தை மீண்டும் அமைத்தனர். பொதுவுடைமை கருத்துக்களால் ஈர்க்கப்பட்டு அந்த அமைப்புக்கு இந்துஸ்தான் சமதர்மவாத குடியரசு அமைப்பு என்று

1928இல் பெயர் மாற்றம் செய்தனர். லாலா லஜ்பதி ராயின் உயிரிழப்புக்குக் காரணமான தடியடியை நடத்திய ஆங்கிலேய காவல்துறை அதிகாரி சாண்டர்ஸ் படுகொலை செய்யப்பட்டார். 1929இல் மத்திய சட்டப் பேரவையில் புகைக்குண்டு ஒன்றை பகத்சிங்கும் B.K. தத்தும் வீசினார்கள். அவர்கள் "இன்குலாப் ஜிந்தாபாத்" "பாட்டாளி வர்க்கம் வாழ்க" ஆகிய முழக்கங்களை எழுப்பினார்கள்.

ராஜகுருவும் பகத்சிங்கும் கைது செய்யப்பட்டு மரணதண்டனை விதிக்கப்பட்டது. பகத்சிங்கின் அசாத்தியமான துணிச்சல் இந்தியா முழுவதும் வாழ்ந்த இளைஞர்களின் கவனத்தை ஈர்த்ததை அடுத்து அவர் இந்தியா முழுவதும் பிரபலம் அடைந்தார்.

1930 ஏப்ரலில் சிட்டகாங் ஆயுதக்கிடங்கு மீதான தாக்குதல் சூர்யா சென் மற்றும் அவரது நண்பர்களால் மேற்கொள்ளப்பட்டது. சிட்டகாங்கில் இருந்த ஆயுதக் கிடங்குகளைக் கைப்பற்றிய அவர்கள் அங்கு புரட்சிகர அரசை நிறுவினார்கள். அரசு நிறுவனங்களைக் குறிவைத்து அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு அவர்கள் தாக்குதல்களை நடத்தினார்கள். 1933ஆம் ஆண்டு கைது செய்யப்பட்ட சூர்யா சென் ஓராண்டுக்குப் பிறகு தூக்கிலிடப்பட்டார்.




**சூர்யா சென்**

### (இ) 1930களில் இடதுசாரி இயக்கங்கள்

உலகம் முழுவதும் நிலவிய பொருளாதார மந்தநிலை உருவாக்கிய பொருளாதார நெருக்கடிகளை அடுத்து, 1930களில் இந்திய பொதுவுடைமை கட்சி வலுப்பெற்றது. பிரிட்டனில் இருந்த மந்தநிலை அதன்கீழ் இருந்த காலனிகளிலும் பாதிப்புக்களை ஏற்படுத்தியது. இந்த பொருளாதார வீழ்ச்சியின் விளைவாக வர்த்தக லாபங்களிலும் வேளாண் பொருள்களின் விலைகளிலும் சரிவு ஏற்பட்டன. ஏற்கனவே சரிந்திருந்த வேளாண் பொருள்களின் ஐம்பது சதவிகித விலை வீழ்ச்சி காரணமாக கட்டாயமாக செய்யப்பட்ட அரசின் நிலவருவாய் வசூல் இருமடங்காக அதிகரித்தது.



**ஜெயப்பிரகாஷ் நாராயண்**



**ஆச்சார்ய நரேந்திரதேவ்**



**மினுமசானி**

புழக்கத்தில் இருந்த பணம் திரும்பபெறப்படுவது, வளர்ச்சிப் பணிகளுக்கான பணியாளர்கள் எண்ணிக்கையும் செலவுகளையும் குறைப்பது ஆகியன அரசின் இதர நடவடிக்கைகளாக இருந்தன.

இந்தச்சூழலில் வருவாய் மற்றும் ஊதியக்குறைபாட்டால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களின் நலன், வேலையில்லாத் திண்டாட்டம் ஆகியவற்றுக்காகப் போராடிய பொதுவுடைமை கட்சி முக்கியத்துவம் பெற்றதையடுத்து 1934ஆம் ஆண்டு அக்கட்சி தடைசெய்யப்பட்டது. தீவிர இடதுசாரி ஆதரவு முதல் தீவிர வலதுசாரி ஆதரவு வரையான அகன்ற அரசியல் சார்பு பெற்ற ஓர் இயக்கமாக சுயராஜ்ஜியம் என்ற குறிக்கோளுடன் காங்கிரஸ் கட்சி வலுவான அமைப்பாக உருவெடுத்தது. 1934ஆம் ஆண்டில் ஜெயப்பிரகாஷ்நாராயண், ஆச்சார்ய நரேந்திரதேவ் மற்றும் மினுமசானி ஆகியோரின் முன்முயற்சியால் காங்கிரஸ் சமதர்ம (சோஷலிஷ) கட்சி உருவானது. தேசியவாதம் தான் சமதர்மத்துக்கான பாதை என்று நம்பிய அவர்கள் அதற்காக காங்கிரசுக்குள் இருந்து உழைக்க விரும்பினார்கள்.

> ஒருசிலர் அதிகாரத்துக்கு வருவதால் உண்மையான சுயராஜ்ஜியம் கிடைத்துவிடாது, ஆனால் தாங்கள் பெற்ற அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தப்படும்போது நிர்வாகத்தினரை எதிர்க்கும் திறனை அனைவரும் பெறச்செய்வதே சுயராஜ்ஜியமாகும்.
>
> **– காந்தியடிகள்**

## 8.6 1935ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தின் கீழ் அமைந்த முதல் காங்கிரஸ் அமைச்சரவைகள்

சட்டமறுப்பு இயக்கத்தின் ஆக்கப்பூர்வ வெளிப்பாடுகளில் 1935ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டமும் ஒன்றாகும். மாகாணங்களுக்கு தன்னாட்சி அதிகாரம், மத்தியில் இரட்டையாட்சி ஆகியன இந்தச்சட்டத்தின் முக்கிய அம்சங்களாகும். அகில இந்திய கூட்டமைப்பு ஏற்பட வேண்டும் என்று இந்த சட்டம் வலியுறுத்துகிறது. அதன்படி, 11 மாகாணங்கள், 6 தலைமை ஆணையரக மாகாணங்கள் மற்றும் இந்தக் கூட்டமைப்பில் சேர விரும்பிய அனைத்து சிற்றரசுகளும் இக்கூட்டமைப்பில் இடம்பெற்றன. மாகாணங்களின் தன்னாட்சிக்கும் இந்த சட்டம் வகைசெய்தது. அனைத்து துறைகளும் இந்திய அமைச்சர்களின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டன. மாகாணங்களில் நடைமுறையில் இருந்து வந்த இரட்டை ஆட்சி மத்திய அரசுக்கும் விரிவாக்கப்பட்டது. வாக்குரிமையானது



10th_History_Unit_8_TM.indd 104 11-04-2020 11:36:19

சொத்தின் அடிப்படையில் நீட்டிக்கப்பட்டதால் மக்கள் தொகையில் பத்து சதவிகித மக்கள் மட்டுமே வாக்களிக்கும் தகுதிபெற்றனர். இந்தச் சட்டத்தின்படி, பர்மா இந்தியாவில் இருந்து பிரிக்கப்பட்டது.

### (அ) காங்கிரஸ் அமைச்சரவைகளும் அவற்றின் பணியும்

1937ஆம் ஆண்டு தேர்தல்கள் அறிவிக்கப்பட்டதுடன் 1935ஆம் ஆண்டின் இந்திய அரசுச் சட்டம் அமல்படுத்தப்பட்டது. சட்டமறுப்பு இயக்கத்தால் காங்கிரஸ் பெரிதும் பலன்பெற்றது. சட்டப்பேரவை புறக்கணிப்பைக் கைவிட்ட காங்கிரஸ் தேர்தல்களில் போட்டியிட்டது. பதினோரு மாகாணங்களில் போட்டியிட்டு ஏழு மாகாணங்களில் காங்கிரஸ் வெற்றிபெற்றது. மதராஸ், பம்பாய், மத்திய மாகாணங்கள், ஒடிசா, பீகார், ஐக்கிய மாகாணங்கள், வடமேற்கு எல்லை மாகாணம், சர் முஹம்மது சாதுல்லா தலைமையிலான அசாம் பள்ளத்தாக்கு முஸ்லீம் கட்சியுடன் இணைந்து கூட்டணி அரசு உட்பட எட்டு மாகாணங்களில் அது ஆட்சி அமைத்தது. காங்கிரஸ் அரசுகள் பிரபலமான அரசுகளாக செயல்பட்டன. மக்களின் தேவைகளை அவை நிறைவேற்றின. அமைச்சர்களின் ஊதியம் மாதம் ஒன்றுக்கு 2 ஆயிரம் ரூபாயில் இருந்து 500 ரூபாயாக குறைக்கப்பட்டது. தேசியவாதிகளுக்கு எதிராக எடுக்கப்பட்ட முந்தைய நடவடிக்கைகள் ரத்துசெய்யப்பட்டன. அரசிடம் அவசரகால அதிகாரங்களை தந்த சட்டங்களை அவர்கள் திரும்பப்பெற்றனர். கம்யூனிஸ்ட் கட்சி தவிர இதர கட்சிகள் மீது விதிக்கப்பட்ட தடைகளை ரத்துசெய்தனர். தேச அளவில் பத்திரிகைகள் மீது விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளை அவர்கள் அகற்றிவிட்டனர். காவல்துறை அதிகாரங்கள் கட்டுப்படுத்தப்பட்டன. அரசியல் பேச்சுக்கள் பற்றி சி.ஐ.டி. சார்பாக அறிக்கை தருவது விலக்கிக் கொள்ளப்பட்டது. விவசாயிகளின் கடன்கள் குறையவும் தொழிலக தொழிலாளர்களின் பணிநிலைமை மேம்படவும் சட்டபூர்வ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. கோயில் நுழைவுச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. கல்வி மற்றும் பொது சுகாதாரத்துக்கு சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டது.

### (ஆ) காங்கிரஸ் அமைச்சரவையின் பதவி விலகல்

1939இல் இரண்டாம் உலகபோர் மூண்டது. காங்கிரஸ் அமைச்சரவைகளை ஆலோசிக்காமல் கூட்டணிப் படைகள் சார்பாக இந்த போரில் இந்தியாவின் காலனி ஆதிக்க அரசு நுழைந்தது. எனவே அதற்கு எதிர்ப்பு தெரிவித்து காங்கிரஸ் அமைச்சரவைகள் பதவி விலகின. ஜின்னா 1940ஆம் ஆண்டு வாக்கில் முஸ்லீம்களுக்கு தனிநாடு வேண்டும் என்று வலியுறுத்தினார்.


### (இ) இரண்டாம் உலக போரின் போது தேசிய இயக்கம், 1939–45


பட்டாபி சீதாராமய்யா

காந்தியடிகளின் வேட்பாளரான பட்டாபி சீதாராமய்யாவை வீழ்த்தி 1939இல் சுபாஷ் சந்திர போஸ் காங்கிரஸ் தலைவரானார். காந்தியடிகள் ஒத்துழைக்க மறுத்ததை அடுத்து, சுபாஷ் சந்திர போஸ் அப்பதவியிலிருந்து விலகி பார்வர்டு பிளாக் கட்சியைத் தொடங்கினார்.

## 8.7 வெள்ளையனே வெளியேறு இயக்கத்துக்கு வழிவகுத்த நடவடிக்கைகள்

### (அ) தனி நபர் சத்தியாகிரகம்


வினோபா பாவே

1940 ஆகஸ்டு மாதம், காங்கிரஸ் இரண்டாம் உலகப்போரின் போது இந்தியர்களின் ஆதரவைப் பெறுவதற்காக அரசப்பிரதிநிதி லின்லித்கோ ஒரு சலுகையை வழங்க முன்வந்தார். எனினும் குறிப்பிடப்படாத எதிர்காலத்தில் தன்னாட்சி (டொமினியன்) தகுதி என்ற சலுகை, காங்கிரசுக்கு ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை. எனவே வரையறைக்கு உட்பட்ட சத்தியாகிரகப் போராட்டத்தை காந்தியடிகள் அறிவித்தார் இதில் ஒருசிலர் மட்டுமே கலந்துகொண்டனர். 1940 அக்டோபர் 17ஆம் நாள் வினோபா பாவே சத்தியாகிரகப் போராட்டத்தை முதன் முதலாக ஆரம்பித்தார். அந்த ஆண்டின் இறுதிவரை சத்தியாகிரகம் தொடர்ந்தது. இந்த காலகட்டத்தில் 25,000க்கும் அதிகமான மக்கள் கைது செய்யப்பட்டனர்.

### (ஆ) கிரிப்ஸ் தூதுக்குழு

1942 மார்ச் 22ஆம் நாள் அமைச்சரவை (காபினட்) அமைச்சர் சர் ஸ்ட்ராஃபோர்டு கிரிப்ஸ் தலைமையில் ஒரு தூதுக்குழுவை பிரிட்டிஷ் அரசு அனுப்பியது. உரிய அதிகாரத்தை உடனடியாக மாற்றித்தர பிரிட்டன் விருப்பப்படாத நிலையில் காங்கிரஸ் மற்றும் கிரிப்ஸ் தூதுக்குழு



10th_History_Unit_8_TM.indd 105 11-04-2020 11:36:19

இடையேயான பேச்சுகள் தோல்வி அடைந்தன. கிரிப்ஸ் தூதுக்குழு கீழ்க்கண்டவற்றை வழங்க முன்வந்தது.

1. போருக்குப் பிறகு தன்னாட்சி (டொமினியன் தகுதி) வழங்குவது.
2. பாகிஸ்தான் உருவாக்க கோரிக்கையை ஏற்கும் விதமாக இந்திய இளவரசர்கள் பிரிட்டிஷாருடன் தனி ஒப்பந்தத்தைக் கையெழுத்திடலாம்.
3. போரின் போது பாதுகாப்புத் துறை பிரிட்டிஷாரின் கட்டுப்பாட்டில் இருப்பது.

காங்கிரஸ், முஸ்லீம் லீக் இரண்டுமே இந்தத் திட்ட அறிக்கையை நிராகரித்து விட்டன. திவாலாகும் வங்கியில் பின் தேதியிட்ட காசோலை என காந்தியடிகள் இந்த திட்டங்களை அழைத்தார்.

### (இ) காந்தியடிகளின் "செய் அல்லது செத்து மடி" முழக்கம்

கிரிப்ஸ் தூதுக்குழுவின் வெளிப்பாடு மிகுந்த ஏமாற்றத்தைக் கொடுத்தது. போர்க்கால பற்றாக்குறைகளினால் விலைகள் பெரிதும் அதிகரித்து அதிருப்தி தீவிரமடைந்தது. பம்பாயில் 1942 ஆகஸ்டு மாதம் 8ஆம் நாள் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி வெள்ளையனே வெளியேறு தீர்மானத்திற்கு வித்திட்டதுடன் இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சிக்கு உடனடியாக முடிவு கட்ட கோரிக்கை வைத்தது. செய் அல்லது செத்து மடி என்ற முழக்கத்தை காந்தியடிகள் வெளியிட்டார். "நாம் நமது முயற்சியின் விளைவாக இந்தியாவுக்கு சுதந்திரம் பெற்றுத் தருவோம், அல்லது நாம் நமது அடிமைத்தனத்தைக் காண உயிருடன் இருக்கமாட்டோம்", என்று காந்தியடிகள் கூறினார். காந்தியடிகளின் தலைமையின் கீழ் அகிம்சையான மக்கள் போராட்டம் தொடங்கப்பட இருந்தது. ஆனால் அடுத்த நாள் காலை அதாவது 9 ஆகஸ்டு 1942 அன்று காந்தியடிகளும் காங்கிரஸ் தலைவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டனர்.

### (ஈ) சமதர்மவாத (சோஷலிச) தலைவர்களின் பங்குபணி

காந்தியடிகள் மற்றும் இதர முக்கிய காங்கிரஸ் தலைவர்கள் சிறையில் அடைபட்டதையடுத்து இந்த இயக்கத்துக்கு சமதர்மவாதிகள் தலைமை தாங்கினார்கள். சிறையில் இருந்து தப்பிய ஜெயபிரகாஷ் நாராயண், ராமாநந்த் மிஷ்ரா ஆகியோர் திரைமறைவு


**அருணா ஆசப் அலி**

வேலைகளில் ஈடுபட்டனர். அருணா ஆசப் அலி போன்ற பெண் தலைவர்கள் முக்கியப் பணி ஆற்றினார்கள். உஷா மேத்தா நிறுவிய காங்கிரஸ் வானொலி திரைமறைவில் இருந்தபடியே 1942 நவம்பர் மாதம் வரை வெற்றிகரமாகச் செயல்பட்டது.

### (உ) மக்களின் வெளிப்பாடு

இந்தியாவின் பல பகுதிகளுக்கும் இந்தச் செய்தி பரவியதை அடுத்து அனைத்து இடங்களிலும் ஆங்காங்கே வன்முறை ஆர்ப்பாட்டங்கள் வெடித்தன. வேலைநிறுத்தங்கள், ஆர்ப்பாட்டங்கள் மறியல் என தாங்கள் அறிந்த வகைகளில் மக்கள் போராட்டங்களை நடத்தினார்கள். இரும்புக் கரம் கொண்டு அரசு இந்த இயக்கத்தைக் கட்டுப்படுத்தியது. அரசுக் கட்டடங்கள், ரயில் நிலையங்கள், தொலைபேசி மற்றும் தந்தி கம்பிகள், மற்றும் பிரிட்டிஷ் அதிகாரத்தின் அடையாளங்களாக நின்ற அனைத்தின் மீதும் மக்கள் தாக்குதல்களை நடத்தினார்கள். மதராஸில் இது முக்கியமாக தீவிரமாகப் பரவியது. சதாரா, ஒரிஸா (தற்போதைய ஒடிசா), பீகார், ஐக்கிய மாகாணங்கள், வங்காளம் ஆகிய இடங்களில் இணை அரசுகள் நிறுவப்பட்டன.

### (எ) சுபாஷ் சந்திர போஸ் மற்றும் இந்திய தேசிய இராணுவம்

JZ6KX7

காங்கிரசை விட்டு விலகிய சுபாஷ் சந்திர போஸ் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டார். பிரிட்டிஷாரின் எதிரிகளோடு கைகோர்த்து பிரிட்டிஷ் அரசுக்கு எதிராக தாக்குதல் நடத்த அவர் விரும்பினார். 1941 மார்ச் மாதம், அவர் தனது இல்லத்தில் இருந்து நாடகத்தனமாக (மாறுவேடமணிந்து) தப்பித்து ஆப்கானிஸ்தான் சென்றடைந்தார். முதலில் அவர் சோவியத் யூனியனின் ஆதரவைப் பெற விரும்பினார். ஆனால் பிரிட்டன் உள்ளிட்ட கூட்டணிப் படைகளுடன் சோவியத் யூனியன் அரசு சேர்ந்ததால் அவர் ஜெர்மனிக்கு சென்றார். 1943 பிப்ரவரி மாதம், நீர்மூழ்கிக் கப்பல் மூலமாக ஜப்பான் சென்ற அவர், இந்திய தேசிய இராணுவத்தின் கட்டுப்பாட்டைக் கையில் எடுத்தார். இந்தியப் போர்க்கைதிகளைக் கொண்டு மலாயா மற்றும் பர்மாவில் இருந்த ஜப்பானியர்களின் ஆதரவோடு இந்திய தேசிய இராணுவத்தை (ஆசாத் ஹிந்த் ஃபாஜ்) ஜெனரல் மோகன் சிங் உருவாக்கினார், அதன்பிறகு இது கேப்டன் லட்சுமி செகல் என்பவரால் நடத்தப்பட்டது. இது காந்தி பிரிகேட், நேரு பிரிகேட், பெண்கள் பிரிவாக ராணி லக்ஷ்மி பாய் பிரிகேட் என மூன்று படையணிகளாக சுபாஷ் சந்திர போஸ் மறுசீரமைத்தார். சுபாஷ் சந்திர போஸ், சிங்கப்பூரில்

சுதந்திர இந்தியாவின் தற்காலிக அரசாங்கத்தை நிறுவினார். 'தில்லிக்கு புறப்படு' (தில்லி சலோ) என்ற முழக்கத்தை சுபாஷ் வெளியிட்டார். ஜப்பானிய படைகளின் ஒரு பகுதியாக இந்திய தேசிய இராணுவம் பணியில் ஈடுபடுத்தப்பட்டது. எனினும் ஜப்பான் தோல்வி அடைந்த பிறகு இந்திய தேசிய இராணுவம் முன்னேறுவது தடைபட்டது. சுபாஷ் சந்திர போஸ் பயணம் செய்த விமானம் விபத்துக்குள்ளானதால் சுதந்திரத்துக்காக போராடிய அவரது தீவிரப்பணிகள் முடிவுக்கு வந்தன.



**சுபாஷ் சந்திர போஸின் இந்திய தேசிய இராணுவம்**

பிரிட்டிஷ் அரசு இந்திய தேசிய இராணுவ அதிகாரிகளை கைது செய்து செங்கோட்டையில் அவர்களை விசாரணைக்காக வைத்தது. தேசியவாத பிரச்சாரத்துக்கு ஒரு மேடையாக இந்த விசாரணை அமைந்தது. காங்கிரஸ் அமைத்த பாதுகாப்புத்துறை கமிட்டி ஜவகர்லால் நேரு, தேஜ் பஹதூர் சாப்ரூ, புலாபாய் தேசாய், ஆசப் அலி ஆகியோரை உள்ளடக்கியதாக இருந்தது. இந்திய தேசிய இராணுவத்தின் அதிகாரிகளுக்கு எதிரான குற்றம் நிரூபிக்கப்பட்டாலும் பொதுமக்கள் அழுத்தம் கொடுத்ததன் காரணமாக அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். இந்திய தேசிய இராணுவத்தின் தாக்குதல்களும் அதனை அடுத்த வழக்கு விசாரணைகளும் இந்தியர்களுக்கு ஊக்கமாக அமைந்தது.

## 8.8 விடுதலையை நோக்கி

### (அ) ராயல் இந்திய கடற்படைக் கிளர்ச்சி

1946ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் பம்பாயில் ராயல் இந்திய கடற்படை மாலுமிகள் கிளர்ச்சி செய்தனர். விரைவில் அங்கிருந்து வேறு நிலையங்களுக்கும் பரவிய இந்த கிளர்ச்சியில் சுமார் 20,000க்கும் மேற்பட்ட மாலுமிகள் ஈடுபட்டனர். இதேபோன்று ஜபல்பூரில் இருந்த இந்திய விமானப்படை, இந்திய சமிக்ஞை (சிக்னல்) படை ஆகியவற்றிலும் வேலைநிறுத்தங்கள் நடந்தன. இவ்வாறு ஆயுதப்படைகளிலும் கூட பிரிட்டிஷாரின் மேலாதிக்க கட்டுப்பாடு இல்லை.


Hindusthan Standard

CALCUTTA—SATURDAY, FEBRUARY 23, 1946

PRICE TWO ANNAS

INDIAN SAILORS IN REVOLT

SIX HOURS BATTLE WITH BRITISH TROOPS

GRAVE TURN IN R. I. N. MEN'S STRIKE IN BOMBAY

TWENTY SHIPS CAPTURED

Govt. Rushing Strong Naval And Air Reinforcements

"CEASE FIRE" ON BOTH SIDES AFTER CONCLUSION OF TRUCE

POLICE OPEN FIRE ON CROWDS

Trouble In Kalbadevi And Girguam Area

FIRING ON STRIKERS AT KARACHI

INDIANS RETALIATE WITH NAVAL GUNS

ONE KILLED AND 14 INJURED IN THE DUEL

ULTIMATUM FOR WITHDRAWAL OF MILITARY

THE BATTLE ENDS

Sit-Down Strike Continues

SARDAR SARDUL SINGH

India Govt. Orders Release

BAN ON FORWARD BLOC AND C.S.P.

**ராயல் இந்திய கடற்படைக் கிளர்ச்சி**

### (ஆ) சுதந்திரம் பற்றிய பேச்சுவார்த்தை: சிம்லா மாநாடு


1945ஆம் ஆண்டு ஜூன் 14ஆம் நாள் வேவல் திட்டம் அறிவிக்கப்பட்டது. இந்ததிட்டம் மூலமாக அரசப்பிரதிநிதியின் செயற்குழுவில் இந்துக்களும் முஸ்லீம்களும் சம எண்ணிக்கையில் இடம்பெற்ற ஓர் இடைக்கால அரசுக்கு வகை செய்யப்பட்டது. போர் தொடர்பான துறை தவிர்த்து அனைத்து இதர துறைகளும் இந்திய அமைச்சர்கள் வசம் கொடுக்கப்பட இருந்தன. எனினும் சிம்லா மாநாட்டில் காங்கிரசும் முஸ்லீம்லீக்கும் ஓர் ஒப்பந்தத்தை எட்டமுடியவில்லை. அனைத்து முஸ்லீம் உறுப்பினர்களும் முஸ்லீம் லீக்கில் இருந்துதான் இடம்பெற வேண்டும் மற்றும் அவர்கள் அனைத்து முக்கிய விஷயங்களிலும் வீட்டோ அதிகாரங்களையும் பெறவேண்டும் என்று ஜின்னா கோரினார். 1946ஆம் ஆண்டு தொடக்கத்தில் நடந்த மாகாணத் தேர்தல்களில் பொதுத்தொகுதிகளில் பெரும்பாலானவையை காங்கிரஸ் வென்றது. முஸ்லீம்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகுதிகளில் முஸ்லீம் லீக் வென்று தனது கோரிக்கைக்கு வலுசேர்த்தது.

### (இ) அமைச்சரவைத் தூதுக்குழு

பிரிட்டனில் தொழிற்கட்சி மிகப்பெரிய வெற்றியை பெற்று கிளெமன்ட் அட்லி பிரதம மந்திரியாகப் பொறுப்பேற்றார். உடனடியாக ஆட்சி மாற்றம் வேண்டும் என்று விரும்பினார். அவர் பெதிக் லாரன்ஸ், சர் ஸ்டாஃபோர்ட் கிரிப்ஸ், A.V. அலெக்ஸாண்டர் ஆகியோர் அடங்கிய அமைச்சர்கள் தூதுக்குழுவை இந்தியாவுக்கு அனுப்பினார். பாகிஸ்தானை தனிநாடாக உருவாக்க வேண்டும் என்ற கோரிக்கையை நிராகரித்த அக்குழுவினர் பாதுகாப்பு, தகவல்



10th_History_Unit_8_TM.indd 107 11-04-2020 11:36:19



இந்திய தேசிய இயக்கம்
(1900 - 1947)
வ
மே
கி
தெ
காஷ்மீர்
லாகூர்
ஜாலியன்வாலா பாக்
(அமிர்தசரஸ்)
மீரட்
தில்லி
லக்னோ
கான்பூர்
கோரக்பூர்
சௌரி சௌரா
சம்பரான்
பாட்னா
அலகாபாத்
ஜான்சி
அசாம்
சபர்மதி ஆசிரமம்
(அகமதாபாத்)
கேதா
பர்தோலி
தண்டி
வங்காளம்
கல்கத்தா
சிட்டகாங்
நாக்பூர்
வார்தா
ஒரிசா
பம்பாய்
பூனா
சதாரா
அரபிக்
கடல்
வங்காள
விரிகுடா
மதராஸ்
வேதாரண்யம்
லட்சத் தீவுகள்
(இந்தியா)
அந்தமான் நிக்கோபார் தீவுகள்
(இந்தியா)
இந்தியப் பெருங்கடல்
அளவையில் இல்லை

தொடர்பு மற்றும் வெளியுறவு ஆகிய துறைகளில் கட்டுப்பாட்டுடன் கூடிய மத்திய அரசை நிறுவ வகைசெய்தது. முஸ்லீம்கள் பெரும்பான்மையாக இல்லாத மாகாணங்கள், வடமேற்கில் முஸ்லீம்கள் பெரும்பான்மையாக உள்ள மாகாணங்கள், மற்றும் வடகிழக்கில் முஸ்லீம்கள் பெரும்பான்மையாக உள்ள மாகாணங்கள் என மூன்றுவகையாக மாகாணங்கள் பிரிக்கப்பட்டன. இந்திய அரசியல் சாசன நிர்ணயமன்றம் தேர்ந்தெடுக்கப்பட்டு அனைத்து சமூகங்களில் இருந்தும் பிரதிநிதித்துவம் கொண்ட இடைக்கால அரசு நிறுவப்பட வேண்டும். இந்த திட்டத்தை காங்கிரசும் முஸ்லீம் லீக்கும் ஏற்றுக்கொண்டன. எனினும் இரண்டு கட்சிகளுமே தங்களுக்கு சாதகமாக இந்த திட்டம் குறித்து விவரித்தன.

### (ஈ) நேரடி நடவடிக்கை நாளுக்கு முஸ்லீம் லீக் அழைப்பு விடுத்தல்

காங்கிரஸ் ஒரு முஸ்லீம் உறுப்பினரை நியமித்ததை அடுத்து காங்கிரஸ் மற்றும் முஸ்லீம் லீக் கட்சிகள் இடையே கருத்து வேறுபாடுகள் நிலவின. தான் மட்டுமே முஸ்லீம்களின் பிரதிநிதியாக இருக்கவேண்டும் என்று வாதிட்ட முஸ்லீம் லீக் தனது ஆதரவை விலக்கிக்கொண்டது. 1946ஆம் ஆண்டு ஆகஸ்டு 16ஆம் நாளை 'நேரடி நடவடிக்கை நாளாக' ஜின்னா அறிவித்தார். ஆர்ப்பாட்டங்களும் கடையடைப்பு போராட்டங்களும் நடந்தது விரைவில் அது இந்து–முஸ்லீம் மோதலாக உருவெடுத்தது. இது வங்காளத்தின் இதர மாவட்டங்களுக்கும் பரவியது. நவகாளி மாவட்டம் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டது.

### (உ) மவுண்ட்பேட்டன் திட்டம்

ஜவகர்லால் நேரு தலைமையில் இடைக்கால அரசு 1946ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் அமைக்கப்பட்டது. சில தயக்கங்களுக்குப் பிறகு முஸ்லீம் லீக் இந்த இடைக்கால அரசில் 1946ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் இணைந்தது. அதன் பிரதிநிதி லியாகத் அலிகான் நிதி உறுப்பினராக ஆக்கப்பட்டார். 1948ஆம் ஆண்டு ஜூன் மாதவாக்கில் அதிகாரமாற்றம் ஏற்படும் என்று 1947ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் கிளெமன்ட் அட்லி அறிவித்தார். இந்த ஆட்சிமாற்றத்தை உறுதி செய்யும் பொறுப்புடன் மவுண்ட்பேட்டன் பிரபு இந்தியாவுக்கு அரசுப் பிரதிநிதியாக அனுப்பப்பட்டார். 1947ஆம் ஆண்டு ஜூன் மாதம் 3ஆம் நாள் மவுண்ட்பேட்டன் திட்டம் அறிவிக்கப்பட்டது. கீழ்க்கண்டவை அதில் கூறப்பட்ட அம்சங்கள்:

- இந்தியா மற்றும் பாகிஸ்தானுக்கு, பிரிட்டனின் தன்னாட்சிப் பகுதி (டொமினியன்) என்ற தகுதியுடன் அதிகாரமாற்றம் நடைபெறும்.
- சிற்றரசுகள் இந்தியா அல்லது பாகிஸ்தானில் சேரவேண்டும்.
- ராட்கிளிஃப் பிரவ்ன் தலைமையில் எல்லைகளை நிர்ணயிக்கும் ஆணையம் அமைக்கப்பட்டு அதிகாரமாற்றத்துக்குப் பிறகு இந்த ஆணையத்தின் முடிவு அறிவிக்கப்படும்.
- பஞ்சாப் மற்றும் வங்காள சட்டப்பேரவைகள் அவைகள் பிரிக்கப்படவேண்டுமா என்பது பற்றி வாக்கெடுப்பு நடத்தும்.

### (ஊ) விடுதலையும் பிரிவினையும்

1947ஆம் ஆண்டு ஜூலை 18ஆம் நாள் பிரிட்டிஷ் நாடாளுமன்றம் இந்திய விடுதலைச் சட்டத்தை இயற்றியதையடுத்து மவுண்பேட்டன் திட்டத்துக்கு செயல்வடிவம் தரப்பட்டது. இந்தியாவின் மீதான ஆங்கில ஏகாதிபத்தியத்தின் இறையாண்மையை இந்தச் சட்டம் ரத்து செய்தது. இந்தியா மற்றும் பாகிஸ்தான் என இரண்டு பகுதிகளாக இந்தியா பிரிக்கப்பட்டது. 1947ஆம் ஆண்டு ஆகஸ்டு 15ஆம் நாள் இந்தியா விடுதலை அடைந்தது.





பிரிவினையை அடுத்து அகதிகளின் வருகை

## பாடச்சுருக்கம்

- காந்தியடிகள்தென்னாப்பிரிக்காவில்உண்மை,அகிம்சை,சத்தியாகிரகம்ஆகியவற்றுடன்மேற்கொண்ட சோதனைகள் மற்றும் அவர் ஒரு மக்கள் தலைவராக உருவெடுத்தது விவரிக்கப்பட்டுள்ளது.
- ஒத்துழையாமை, சட்டமறுப்பு, வெள்ளையனே வெளியேறு ஆகிய இயக்கங்களுக்கான அவரது அழைப்பும் இந்த இயக்கங்கள் 1919ஆம் ஆண்டின் இந்திய அரசுச் சட்டம், 1935ஆம் ஆண்டின் இந்திய அரசுச் சட்டம், 1947ஆம் ஆண்டின் விடுதலைச் சட்டம் ஆகியவற்றுக்கு வழிவகுத்தது குறித்து விவரிக்கப்பட்டுள்ளது.
- சமதர்மவாதத் தலைவர்கள், பொதுவுடைமைத் தலைவர்கள் மற்றும் பகத்சிங், சுபாஷ் சந்திரபோஸ் போன்ற புரட்சிகரத் தலைவர்கள் ஆகியோரின் பங்கு, அவர்களின் செயல்பாடுகளால் ஏற்பட்ட விளைவுகள் ஆகியன விவரிக்கப்பட்டுள்ளன.
- இந்து மகா சபை மற்றும் முஸ்லீம் லீக் ஆகியவை அரசியல் காரணங்களுக்காக மதத்தைப் பயன்படுத்தியதும் பிரிவினைக்கு வழிவகுத்ததும் விவரிக்கப்பட்டுள்ளன.

## A-Z கலைச்சொற்கள்

| | | |
|---|---|---|
| அறப்போர், சத்தியாகிரகம் | **satyagraha** | passive political resistance advocated by Mahatma Gandhi |
| அரசியல் சட்ட விதிகளைப் பின்பற்றுபவர் | **constitutionalist** | adherent of constitutional methods |
| சாதி, கொள்கை போன்றவற்றின் அடிப்படையில் வேறுபாடு காட்டுகிற | **discrimination** | unjust or differential treatment of different categories of people, especially on grounds of caste, creed, etc |
| வற்புறுத்து, நற்செயலுக்கேவு | **exhort** | strongly encourage or urge to do something |
| வகுப்புவாதம் | **communalism** | allegiance to one's own ethnic, religious or caste group rather than to wider society |
| தன்னாட்சியுரிமையுடைய குடியேற்ற நாடு | **dominion** | self-governing territory |
| வாக்காளர் தொகுதி | **electorate** | all the people in a country or area who are entitled to vote in an election |
| கடைசி அறிவிப்பு, இறுதி எச்சரிக்கை | **ultimatum** | a final demand or statement of terms |
| தனிமைப்படுதல் | **alienation** | Isolation |
| கூட்டுச்சதி செய்தல், சதித்திட்டம் | **conspiracy** | a secret plan by a group to do something unlawful or harmful |

## பயிற்சி

### I சரியான விடையைத் தேர்வு செய்யவும்

1. அமிர்தசரஸில் ரௌலட் சட்ட எதிர்ப்புப் போராட்டங்களின் போது கைது செய்யப்பட்டவர் யார்?

   அ) மோதிலால் நேரு  ஆ) சைஃபுதீன் கிச்லு
   இ) முகம்மது அலி  ஈ) ராஜ் குமார் சுக்லா

2. இந்திய தேசிய காங்கிரசின் எந்த அமர்வில் ஒத்துழையாமை இயக்கத்துக்கு அனுமதி வழங்கப்பட்டது?

   அ) பம்பாய்  ஆ) மதராஸ்
   இ) கல்கத்தா  ஈ) நாக்பூர்

3. விடுதலை நாளாக கீழ்க்கண்டவற்றில் எந்த நாள் அறிவிக்கப்பட்டது?

   அ) 1930 ஜனவரி 26  ஆ) 1929 டிசம்பர் 26
   இ) 1946 ஜூன் 16  ஈ) 1947 ஜனவரி 15



10th_History_Unit_8_TM.indd 110 11-04-2020 11:36:20

4. முதலாவது வனங்கள் சட்டம் எந்த ஆண்டில் இயற்றப்பட்டது?

அ) 1858 ஆ) 1911 இ) 1865 ஈ) 1936

5. 1933 ஜனவரி 8 எந்த நாளாக அனுசரிக்கப்பட்டது?

அ) கோவில் நுழைவு நாள்
ஆ) மீட்பு நாள் (டெலிவரன்ஸ் டே)
இ) நேரடி நடவடிக்கை நாள்
ஈ) சுதந்திரப் பெருநாள்

6. மாகாண தன்னாட்சியை அறிமுகம் செய்த சட்டம் எது?

அ) 1858ஆம் ஆண்டு சட்டம்
ஆ) இந்திய கவுன்சில் சட்டம், 1909
இ) இந்திய அரசுச் சட்டம், 1919
ஈ) இந்திய அரசுச் சட்டம், 1935

## II கோடிட்ட இடங்களை நிரப்புக

1. காந்தியடிகளின் அரசியல் குரு ______________ ஆவார்.
2. கிலாபத் இயக்கத்துக்கு ______________ தலைமை ஏற்றார்.
3. 1919ஆம் ஆண்டின் இந்திய அரசுச் சட்டம் மாகாணங்களில் ______________ அறிமுகம் செய்தது.
4. வடமேற்கு எல்லை மாகாணத்தில் சட்டமறுப்பு இயக்கத்தை தலைமையேற்று நடத்தியவர் ______________
5. சிறுபான்மையினர் மற்றும் ஒடுக்கப்பட்ட வகுப்பினருக்கு தனித் தொகுதிகளை வழங்கும் ______________ ஐ ராம்சே மெக்டொனால்டு அறிவித்தார்.
6. ______________ என்பவர் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின்போது காங்கிரஸ் வானொலியை திரைமறைவாக செயல்படுத்தினார்.

## III சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்

1. i) இந்திய பொதுவுடைமை கட்சி 1920ஆம் ஆண்டு தாஷ்கண்டில் தொடங்கப்பட்டது.

(ii) M. சிங்காரவேலர் கான்பூர் சதித்திட்ட வழக்கில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

(iii) ஜெயப்பிரகாஷ் நாராயண், ஆச்சார்ய நரேந்திர தேவ், மினு மசானி ஆகியோர் தலைமையில் காங்கிரஸ் சமதர்ம கட்சி உருவானது.

(iv) வெள்ளையனே வெளியேறு போராட்டத்தில் சமதர்மவாதிகள் பங்கேற்கவில்லை.

அ) (i) மற்றும் (ii) சரியானது
ஆ) (ii) மற்றும் (iii) சரியானது
இ) (iv) சரியானது
ஈ) (i) (ii) மற்றும் (iii) சரியானது

2. **கூற்று:** காங்கிரஸ் முதலாவது வட்டமேசை மாநாட்டில் கலந்துகொண்டது.

**காரணம்:** காங்கிரஸ் இரண்டாவது வட்ட மேசை மாநாட்டில் கலந்துகொள்ள காந்தி–இர்வின் ஒப்பந்தம் வழிவகை செய்தது.

அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரியானது. ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் இல்லை.

ஆ) கூற்று சரியானது ஆனால் காரணம் தவறானது

இ) கூற்று தவறானது ஆனால் காரணம் சரியானது.

ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரியானது மற்றும் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் ஆகும்.

3. **கூற்று:** காங்கிரஸ் அமைச்சரவைகள் 1939ஆம் ஆண்டு பதவி விலகின.

**காரணம்:** காங்கிரஸ் அமைச்சரவைகளை ஆலோசிக்காமல் இந்தியாவின் காலனி ஆதிக்க அரசு போரில் பங்கேற்றது.

அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரியானது. ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் இல்லை.

ஆ) கூற்று சரியானது ஆனால் காரணம் தவறானது

இ) கூற்று மற்றும் காரணம் இரண்டுமே தவறானது.

ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரியானது மற்றும் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் ஆகும்.

## IV பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| 1. | ரௌலட் சட்டம் | – | பட்டங்களைத் திரும்ப ஒப்படைத்தல் |
| 2. | ஒத்துழையாமை இயக்கம் | – | இரட்டை ஆட்சி |
| 3. | 1919ஆம் ஆண்டின் இந்திய அரசு சட்டம் | – | M.N. ராய் |
| 4. | இந்திய பொதுவுடைமை கட்சி | – | நேரடி நடவடிக்கை நாள் |
| 5. | 16 ஆகஸ்ட் 1946 | – | கருப்புச் சட்டம் |

## V சுருக்கமாக விடையளிக்கவும்

1. ஜாலியன்வாலா பாக் படுகொலை பற்றி விவரிக்கவும்.
2. கிலாபத் இயக்கம் பற்றி குறிப்பு வரைக.
3. ஒத்துழையாமை இயக்கத்தை ஏன் காந்தியடிகள் திரும்பப்பெற்றார்?
4. சைமன் குழு புறக்கணிக்கப்பட்டது ஏன்?
5. முழுமையான சுயராஜ்ஜியம் என்றால் என்ன?
6. பகத் சிங் பற்றி குறிப்பு வரைக.
7. பூனா ஒப்பந்தத்தின் கூறுகள் யாவை?

## VI விரிவாக விடையளிக்கவும்

1. காந்தியடிகளை ஒரு மக்கள் தலைவராக உருமாற்றம் செய்ய உதவிய காரணிகள் என்ன என்று ஆராயவும்.
2. காந்திய இயக்கத்தின் ஒரு சிறந்த உதாரணமான சட்டமறுப்பு இயக்கம் குறித்து விரிவாக ஆராயவும்.
3. இந்தியாவின் பிரிவினைக்குப் பின்னால் இருந்த காரணங்களை விவாதிக்கவும்.

## VII செயல்பாடுகள்

1. ஒரு வரை படத்தில் காந்திய இயக்கத்துடன் தொடர்புடைய முக்கிய இடங்களைக் குறிப்பிடுமாறும் அங்கு என்ன நடந்தது என்று ஓரிரு வாக்கியங்கள் எழுதுமாறும் மாணவர்களைக் கேட்டுக் கொள்ளலாம்.
2. மாணவர்கள் குழுக்களாகப் பிரிக்கப்பட்டு காந்தியடிகள், ஜின்னா, B.R. அம்பேத்கர், புரட்சிகர தேசியவாத தலைவர்கள், பொதுவுடைமைவாத தலைவர்கள் ஆகியோரின் கருத்துகள் பற்றி விவாதம் நடத்துமாறு கேட்டுக்கொள்ளலாம்.

## மேற்கோள் நூல்கள்


1. Bipan Chandra, *History of Modern India*, Orient BlackSwan, 2016.
2. Bipan Chandra, Amales Tripathi and Barun De, *Freedom Struggle*, NBT,1993.
3. Bipan Chandra, *et al., India's Struggle for Independence*, Penguin Books, 1989.
4. Sumit Sarkar, *Modern India, 1885–1947,* Pearson, 2014.
5. Sekhar Bandyopadhyay, *From Plassey to Partition*, Orient BlackSwan, 2013.
6. B.R. Nanda, *Mahatma Gandhi: A Biography*, Oxford University Press, 1958.


### மேலும் வாசிக்கத்தக்க நூல்கள்


1. பா.மாணிக்கவேலு, இந்திய தேசிய இயக்கத்தின் வரலாறு, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், சென்னை (ஆவணப் பதிப்பு: ஆகஸ்ட் - 2017).
2. R.C. மஜும்தார், H.C. ராய்சௌத்ரி, K. தத்தா, இந்தியாவின் சிறப்பு வரலாறு (மூன்றாம் பகுதி), தமிழாக்கம்: A. பாண்டுரங்கன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், சென்னை (ஆவணப் பதிப்பு: ஆகஸ்ட் - 2017).


## இணையச் செயல்பாடு

### தேசியம்: காந்திய காலகட்டம்

படி – 1 URL அல்லது QR குறியீட்டினைப் பயன்படுத்தி இச்செயல்பாட்டிற்கான இணையப்பக்கத்திற்கு செல்க

படி – 2 'Chronology/Time line' என்பதை கிளிக் செய்து 'Family tree of Mahatma Gandhi' என்பதை தேர்ந்தெடுக்கவும்

படி – 3 இடது புற மெனுவில் உள்ள Glimpses of Gandhi' கிளிக் செய்யவும்.

உரலி: https://www.mkgandhi.org/main.htm

B373_10_SOCIAL_TM

# அலகு – 9

# தமிழ்நாட்டில் விடுதலைப் போராட்டம்



## கற்றலின் நோக்கங்கள்

**கீழ்க்காண்பனவற்றோடு அறிமுகமாதல்**

- தமிழ்நாட்டில் காலனிய எதிர்ப்புப் போராட்டங்கள்
- கல்வியின் வளர்ச்சிக்கும் ஒடுக்கப்பட்ட மக்களின் மேம்பாட்டிற்கும் கிறித்தவ சமயப்பரப்பு நிறுவனங்களின் பங்களிப்பு
- தமிழ்நாட்டில் காங்கிரசின் அரசியலுக்கு நீதிக்கட்சியின் சவால்
- தமிழ்நாட்டில் காங்கிரசின் போர்க்குணமிக்க வெகு மக்கள் இயக்கங்கள்

JZFGYU

## அறிமுகம்

காலனியாட்சியை எதிர்ப்பதில் தமிழ்நாடு முன்னோடியாகத் திகழ்ந்தது. பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலேயே பாளையக்காரர்கள், தமிழ்நாட்டில் தங்கள் அரசியல் ஆதிக்கத்தை நிறுவமுயன்ற ஆங்கிலேயர்களின் முயற்சிகளை எதிர்த்தனர். பாளையக்காரர்களின் தோல்விக்குப் பின்னரும் கூட 1806இல் வேலூர் கோட்டையில் இந்திய வீரர்களும் அதிகாரிகளும் ஓர் எழுச்சியைத் திட்டமிட்டு நடத்தினர். அப்புரட்சி தென்னிந்தியாவின் பல இராணுவமுகாம்களிலும் எதிரொலித்தது. மேற்கத்திய கல்வி அறிமுகம் மற்றும் இறுதியில் தோன்றிய படித்த இந்திய நடுத்தர வர்க்கத்தின் தோற்றம் ஆகியவை ஆங்கிலேயருக்கு எதிரான போராட்டத்தை அரசமைப்புப் பாதையில் எடுத்துச் சென்றது. தமிழ்நாட்டில் நடைபெற்ற விடுதலைப் போராட்டம் தனித்தன்மை வாய்ந்ததாகும். ஏனெனில் தொடக்கத்திலிருந்தே அது ஆங்கிலேயரிடமிருந்து விடுதலை பெறுவதற்கான போராட்டமாக மட்டுமல்லாமல், தீங்கினை விளைவிக்கும் சாதிமுறை ஏற்படுத்தியிருந்த சமூகத் தடைகளிலிருந்து விடுதலை பெறுவதற்குமான போராட்டமாகவும் அமைந்தது. இப்பாடத்தில் தமிழ்நாட்டில் வெவ்வேறு கருத்தியல்களைப் பின்பற்றிய தேசியவாதிகள் வகித்த பாத்திரத்தை நாம் அறிந்து கொள்வோம்.

## 9.1 தமிழ்நாட்டில் தொடக்ககால தேசிய அதிர்வுகள்

### (அ) சென்னைவாசிகள் சங்கம்

சென்னைவாசிகள் சங்கம் (Madras Native Association–MNA), தென்னிந்தியாவில், தொடங்கப்பெற்ற காலத்தால் முற்பட்ட அமைப்பான இவ்வமைப்பு தனிப்பட்ட குழுக்களின் விருப்பங்களைக் காட்டிலும் பொதுமக்களின் தேவைகளை அனைவருக்கும் தெரிவிப்பதை நோக்கமாகக் கொண்டு உருவானது. இவ்வமைப்பு 1852இல் கஜுலு லட்சுமிநரசு, சீனிவாசனார் மற்றும் அவர்களைச் சேர்ந்தோர்களாலும் நிறுவப் பெற்றது. இவ்வமைப்பில் வணிகர்களே அதிக எண்ணிக்கையில் அங்கம் வகித்தனர். தனது உறுப்பினர்களின் நலன்களை முன்னெடுப்பது, வரிகளைக் குறைக்க கோரிக்கை வைப்பது போன்ற நோக்கங்களை இவ்வமைப்பு உள்ளடக்கி இருந்தது. மேலும் கிறித்தவ சமயப்பரப்பாளர்களின் செயல்பாடுகளுக்கு அரசு ஆதரவளித்ததை எதிர்த்தனர். மக்களின் நிலை அவர்களின் தேவைகள் ஆகியவற்றின் மீது அரசின் கவனத்தைத் திருப்பும் பணியை இவ்வமைப்பு



**கஜுலு லட்சுமிநரசு**

www.tntextbooks.in

மேற்கொண்டது. வருவாய்த்துறை அதிகாரிகளால் விவசாயிகள் சித்திரவதைப்படுத்தப்படுவதற்கு எதிராக இவ்வமைப்பு (MNA) நடத்திய போராட்டம் முக்கியமான பங்களிப்பாகும். இவ்வமைப்பு மேற்கொண்ட முயற்சிகளால் சித்திரவதை ஆணையம் (Torture Commission) நிறுவப்பட்டது. அதன் விளைவாகச் சித்திரவதை முறைகள் மூலம் கட்டாய வரிவசூல் முறையை நியாயப்படுத்திய சித்திரவதைச் சட்டம் (Toture Act) ஒழிக்கப்பட்டது. இருந்தபோதிலும் இவ்வமைப்பு 1862க்குப் பின்னர் செயலிழந்து இல்லாமலானது.

### (ஆ) தேசியவாதப் பத்திரிக்கைகளின் தொடக்கங்கள்: தி இந்து மற்றும் சுதேசமித்திரன்

T. முத்துசாமி என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தின் முதல் இந்திய நீதிபதியாக 1877இல் நியமிக்கப்பட்டது சென்னை மாகாணத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. ஒரு இந்தியர் நீதிபதியாக பணியமர்த்தப்பட்டதை சென்னையைச் சேர்ந்த அனைத்துப் பத்திரிக்கைகளும் விமர்சனம் செய்தன. எதிர்ப்பு தெரிவித்த அனைத்துப் பத்திரிக்கைகளும் ஐரோப்பியர்களால் நடத்தப்படுவதை கல்விகற்ற இளைஞர்கள் உணர்ந்தனர். இது குறித்து இந்தியரின் எண்ணங்களை வெளிப்படுத்த ஒரு செய்திப் பத்திரிக்கை தேவை என்பது உணரப்பட்டது. G. சுப்பிரமணியம், M. வீரராகவாச்சாரி மற்றும் இவர்களின் நண்பர்கள் நால்வர் ஆகியோர் இணைந்து 1878இல் 'தி இந்து' எனும் (The Hindu) செய்திப் பத்திரிக்கையைத் தொடங்கினர். மிக விரைவில் இச்செய்திப் பத்திரிக்கை தேசியப் பிரச்சாரத்திற்கான கருவியானது. G. சுப்பிரமணியம் 1891இல் சுதேசமித்திரன் என்ற பெயரில் தமிழில் ஒரு தேசியப் பருவ இதழையும் தொடங்கினார். 1899இல் அவ்விதழ் நாளிதழாக மாறியது. இந்தியன் பேட்ரியாட் (Indian Patriot) சவுத் இந்தியன் மெயில் (South Indian Mail), மெட்ராஸ் ஸ்டாண்டர்ட் (Madras Standard), தேசாபிமானி, விஜயா, சூர்யோதயம், இந்தியா போன்ற உள்நாட்டுப் பத்திரிக்கைகள் தொடங்கப்படுவதற்கு ஊக்கமளித்தது.


T. முத்துசாமி


G. சுப்பிரமணியம்

### (இ) சென்னை மகாஜன சபை

தென்னிந்தியாவில் தெளிவான தேசிய நோக்கங்களுடன் துவங்கப்பெற்ற தொடக்ககால அமைப்பு சென்னை மகாஜன சபையாகும். 1884 மே 16இல் M. வீரராகவாச்சாரி, P. அனந்தாச்சார்லு, P. ரங்கையா மற்றும் சிலரால் நிறுவப்பட்ட இவ்வமைப்பின் முதல் தலைவராக P. ரங்கையா பொறுப்பேற்றார். இதனுடைய செயலாளராக பொறுப்பேற்ற P. அனந்தாச்சார்லு இதன் செயல்பாடுகளில் பங்காற்றினார். அமைப்பின் உறுப்பினர்கள் குறிப்பிட்ட இடைவெளிகளில் ஒன்று கூடி தனிப்பட்ட விதத்திலும் அறைக்கூட்டங்கள் நடத்தியும் பொதுப்பிரச்சனைகள் குறித்து விவாதித்து தங்கள் கருத்துகளை அரசுக்குத் தெரியப்படுத்தினர். குடிமைப் பணிகளுக்கான தேர்வுகள் இங்கிலாந்திலும் இந்தியாவிலும் ஒரே சமயத்தில் நடத்தப்பட வேண்டும். லண்டனிலுள்ள இந்தியக் கவுன்சிலை மூடுவது, வரிகளைக் குறைப்பது, இராணுவ குடியியல் நிர்வாகச் செலவுகளைக் குறைப்பது ஆகியன இவ்வமைப்பின் கோரிக்கைகளாகும். இவ்வமைப்பின் பல கோரிக்கைகள் பின்னர் 1885இல் உருவாக்கப்பட்ட இந்திய தேசிய காங்கிரசின் கோரிக்கைகளாயின.

### (ஈ) மிதவாதக் கட்டம்

சென்னை மகாஜன சபை போன்ற மாகாண அமைப்புகள் அகிலஇந்திய அளவிலான அமைப்புகள் நிறுவப்படுவதற்கு வழிகோலியது. இந்தியாவின் பல்வேறுபகுதிகளிலிருந்த இந்திய தேசிய காங்கிரஸ் தலைவர்கள் காங்கிரஸ் உருவாக்கப்படுவதற்கு முன்பாக பல கூட்டங்களில் கலந்து கொண்டனர். அவ்வாறான ஒரு கூட்டம் 1884 டிசம்பரில் அடையாறு எனும் இடத்தில் உள்ள பிரம்மஞான சபையில் கூடியது. தாதாபாய் நௌரோஜி, K.T. தெலாங், சுரேந்திரநாத் பானர்ஜி மற்றும் சில முக்கியத் தலைவர்களுடன், சென்னையிலிருந்து G. சுப்பிரமணியம், P. ரங்கையா, P. அனந்தாச்சார்லு போன்றோரும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.


தாதாபாய் நௌரோஜி


கோகலே



10th_History_Unit_9_TM.indd 114 24-03-2020 12:32:27

www.tntextbooks.in

**தமிழ்நாட்டின் முக்கிய தொடக்ககால மிதவாத தேசியவாதிகள்**

தொடக்ககால தேசியவாதிகள் அரசமைப்பு வழிமுறைகளின் மீது நம்பிக்கை கொண்டிருந்தனர். அறைக்கூட்டங்கள் நடத்துவதும் பிரச்சனைகள் குறித்து ஆங்கிலத்தில் கலந்துரையாடுவதும் அவர்களின் செயல்பாடுகளாக இருந்தன.


**V.S. சீனிவாச சாஸ்திரி**


**P.S. சிவசாமி**


**G.A. நடேசன்**

வங்கப் பிரிவினையின் போது திலகரும் ஏனைய தலைவர்களும் பெருவாரியான மக்கள் கலந்து கொண்ட பொதுக்கூட்டங்களை நடத்தியதாலும் மக்களை ஈடுபடச்செய்வதற்காக வட்டாரமொழியைப் பயன்படுத்தியதாலும் தொடக்ககால தேசியவாதிகள் மிதவாதிகளென அழைக்கப்படலாயினர். சென்னையைச் சேர்ந்த புகழ்பெற்ற தமிழ்நாட்டு மிதவாதத் தலைவர்கள் V.S. சீனிவாச சாஸ்திரி, P.S. சிவசாமி, V. கிருஷ்ணசாமி, T.R. வெங்கட்ராமனார், G.A. நடேசன், T.M. மாதவராவ் மற்றும் S. சுப்பிரமணியனார் ஆகியோராவர்.

இந்திய தேசியக் காங்கிரசின் முதற்கூட்டம் 1885இல் பம்பாயில் நடைபெற்றது. மொத்தம் கலந்து கொண்ட 72 பிரதிநிதிகளில் 22 பிரதிநிதிகள் சென்னையைச் சேர்ந்தோராவர்.

இந்திய தேசிய காங்கிரசின் இரண்டாவது மாநாடு 1886இல் கொல்கத்தாவில் தாதாபாய் நௌரோஜியின் தலைமையில் நடைபெற்றது. காங்கிரசின் மூன்றாவது மாநாடு பத்ருதீன் தியாப்ஜியின் தலைமையில் 1887இல் சென்னையில் இன்று ஆயிரம் விளக்கு என்று அழைக்கப்படுகிற மக்கிஸ் தோட்டத்தில் (Makkies Garden) நடைபெற்றது. கலந்து கொண்ட 607 அகில இந்தியப் பிரதிநிதிகள் 362 பிரதிநிதிகள் சென்னை மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர்.


**பத்ருதீன் தியாப்ஜி**


தமிழ்நாடு அன்றைய சென்னை மாகாணத்தின் ஒரு பகுதியாக இருந்தது. சென்னை மாகாணம் என்பது இன்றைய ஆந்திரப் பிரதேசத்தின் பெரும் பகுதிகளையும் (கடற்கரை மாவட்டங்கள் மற்றும் ராயலசீமா) கர்நாடகாவையும் (பெங்களூரு, பெல்லாரி, தெற்கு கனரா) கேரளாவையும் (மலபார்) மற்றும் ஒடிசாவின் (கஞ்சம்) சிலபகுதியையும் உள்ளடக்கியதாக இருந்தது.

## 9.2 சுதேசி இயக்கம்

வங்கப் பிரிவினை (1905) சுதேசி இயக்கத்திற்கு இட்டுச் சென்று விடுதலைப் போராட்டத்தின் போக்கை மாற்றியமைத்தது. இந்தியாவின் பல பகுதிகளில் குறிப்பாக வங்காளம், பஞ்சாப் மற்றும் மகாராஷ்டிரா ஆகிய பகுதிகளில் புகழ்பெற்ற தலைவர்கள் தோன்றினர். கொல்கத்தா காங்கிரசில் மேற்கொள்ளப்பட்ட திட்டத்தின்படி சுதேசி நிறுவனங்களை ஊக்குவித்தல், அந்நியப் பண்டங்களைப் புறக்கணித்தல், தேசியக் கல்வியை முன்னெடுத்தல் ஆகியவற்றை அவர்கள் நடைமுறைப்படுத்தினர்.

### (அ) தமிழ்நாட்டின் எதிர்வினை

வ. உ. சிதம்பரனார், V. சர்க்கரையார், சுப்பிரமணிய பாரதி, சுரேந்திரநாத் ஆரியா ஆகியோர் தமிழ்நாட்டைச் சேர்ந்த சிறந்த தலைவர்களாவர். தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் ஆயிரக்கணக்கில் பொதுமக்கள் கலந்து கொண்ட பொதுக்கூட்டங்கள் நடத்தப்பட்டன. மக்களைத் திரட்டுவதற்கு முதன்முதலாக தமிழ் பயன்படுத்தப்பட்டது. மக்களின் நாட்டுப்பற்று உணர்வுகளைத் தட்டி எழுப்பியதில் சுப்பிரமணிய பாரதியின் தேசபக்திப் பாடல்கள் மிக முக்கியமானவையாகும். சுதேசி கருத்துகளைப் பரப்புரை செய்ய பல இதழ்கள் தோன்றின. சுதேசமித்திரன், இந்தியா ஆகிய இரண்டும் முக்கிய இதழ்களாகும். தீவிர தேசியவாதத் தலைவரான பிபின் சந்திரபால் சென்னையில் சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது ஆற்றிய சொற்பொழிவுகள் இளைஞர்களைக் கவர்ந்தன. சுதேசி இயக்கத்தில் மாணவர்களும் இளைஞர்களும் பெருமளவில் பங்கேற்றனர்.


வ. உ. சிதம்பரனார்



10th_History_Unit_9_TM.indd 115 24-03-2020 12:32:27

### சுதேசி நீராவி கப்பல் நிறுவனம்

சுதேசியைச் செயல்படுத்துவதில் மேற்கொள்ளப்பட்ட துணிகரமான நடவடிக்கைகளில் ஒன்று யாதெனில் தூத்துக்குடியில் வ. உ. சிதம்பரனாரால் தொடங்கப்பட்ட சுதேசி நீராவி கப்பல் நிறுவனம் ஆகும். இவர் காலியா மற்றும் லாவோ எனும் இரு கப்பல்களை விலைக்கு வாங்கி அவற்றை தூத்துக்குடிக்கும் கொழும்புக்குமிடையே ஓட்டினார்.

6DZ46B

### திருநெல்வேலி எழுச்சி

திருநெல்வேலியிலும் தூத்துக்குடியிலும் நூற்பாலைத் தொழிலாளர்களை அணி திரட்டுவதில் வ.உ.சி., சுப்பிரமணிய சிவாவின் தோளோடுதோள் நின்றார். இவர் 1908இல் ஐரோப்பியருக்குச் சொந்தமான கோரல் நூற்பாலையில் நடைபெற்ற வேலை நிறுத்தத்திற்குத் தலைமையேற்றார். இந்நிகழ்வு நடைபெற்ற அதே சமயத்தில் பிபின் சந்திரபால் விடுதலை செய்யப்பட்டார். பிபின் விடுதலை செய்யப்பட்டதைக் கொண்டாடுவதற்காகப் பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்ததற்காக வ.உ.சியும் சிவாவும் கைது செய்யப்பட்டனர். தலைவர்கள் இருவரும் அரச துரோகக் குற்றம் சாட்டப்பட்டு கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டனர். தொடக்கத்தில் வ.உ.சிக்கு கொடுமையான வகையில் இரண்டு ஆயுள் தண்டனைகள் வழங்கப்பட்டன. மக்கள் செல்வாக்கு பெற்ற இவ்விரு தலைவர்களும் கைது செய்யப்பட்ட செய்தி பரவியதில் திருநெல்வேலியில் கலகம் வெடித்தது. காவல்நிலைய, நீதிமன்ற, நகராட்சி அலுவலகக் கட்டடங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. காவலர்கள் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் நான்கு நபர்கள் கொல்லப்பட்டனர். சிறையில் வ.உ.சி கடுமையாக நடத்தப்பட்டதோடு செக்கிழுக்க வைக்கப்பட்டார். சிறைத்தண்டனையைத் தவிர்ப்பதற்காக சுப்பிரமணிய பாரதி பிரெஞ்சுக்காரர்களின் ஆதிக்கத்திலிருந்த பாண்டிச்சேரிக்கு இடம்பெயர்ந்தார். பாரதியின் முன்னுதாரணத்தை அரவிந்தகோஷ், V.V. சுப்பிரமணியனார் போன்ற தேசியவாதிகளும் பின்பற்றினர்.



பிபின் சந்திரபால்




சுப்பிரமணிய பாரதி

### (ஆ) தமிழ்நாட்டில் புரட்சிகர தேசியவாதிகளின் செயல்பாடுகள்

புரட்சிகர தேசியவாதிகளுக்குப் பாண்டிச்சேரி பாதுகாப்பான புகலிடமாயிற்று. தமிழ்நாட்டைச் சேர்ந்த இப்புரட்சிகர தேசியவாதிகள் பலருக்குப் புரட்சிகர நடவடிக்கைகள் குறித்த அறிமுகமும் பயிற்சியும் லண்டனிலிருந்த இந்தியா ஹவுஸ் (India House) என்ற இடத்திலும் பாரிசிலும் வழங்கப்பெற்றது. அவர்களில் முக்கியமானவர்கள் M.P.T. ஆச்சாரியா, V.V. சுப்ரமணியனார் மற்றும் T.S.S. ராஜன் ஆகியோராவர். அவர்கள் புரட்சிகர நூல்களை பாண்டிச்சேரியின் வழியாக சென்னையில் விநியோகம் செய்தனர். புரட்சிவாதச் செய்தித்தாள்களான இந்தியா, விஜயா, சூர்யோதயம் ஆகியன பாண்டிச்சேரியிலிருந்து வெளிவந்தன.



V.V. சுப்பிரமணியனார்



அரவிந்தகோஷ்

#### ஆஷ் கொலை

1904இல் நீலகண்ட பிரம்மச்சாரியும் வேறு சிலரும் பாரத மாதா சங்கம் எனும் ரகசிய அமைப்பை உருவாக்கினர். ஆங்கில அதிகாரிகளைக் கொல்வதன் மூலம் மக்களிடையே நாட்டுப்பற்று உணர்வைத் தூண்டுவதே இவ்வமைப்பின் நோக்கமாகும். செங்கோட்டையைச் சேர்ந்த வாஞ்சிநாதன் இவ்வமைப்பால் உள்ளுணர்வு தூண்டப்பட்டார். அவர் 1911 ஜூன் 17இல் திருநெல்வேலி மாவட்ட ஆட்சியரான ராபர்ட் W.D.E. ஆஷ் என்பவரை மணியாச்சி ரயில் சந்திப்பில் சுட்டுக் கொன்றார். அதன் பின்னர் தன்னைத்தானே சுட்டு கொண்டார்.

### (இ) அன்னிபெசன்ட் அம்மையாரும் தன்னாட்சி இயக்கமும்

தீவிர தேசியவாதிகளும் புரட்சிகர தேசியவாதிகளும் இரும்புக் கரம் கொண்டு அடக்கப்பட்ட நிலையில் மிதவாத தேசியவாதிகள் சில அரசமைப்பு சீர்திருத்தங்கள் செய்யப்படலாம் என நம்பினர். இருந்தபோதிலும் மிண்டோ–மார்லி சீர்திருத்தங்கள் பொறுப்பாட்சியை வழங்கவில்லை என்பதால் அவர்கள் மனச்சோர்வடைந்தனர்.

இவ்வாறு தேசிய இயக்கம் தளர்வுற்று இருந்த நிலையில் பிரம்மஞான சபையின் தலைவரும், அயர்லாந்துப் பெண்மணியுமான அன்னிபெசன்ட் அயர்லாந்தின் தன்னாட்சி

www.tntextbooks.in

அமைப்புகளை அடியொற்றி தன்னாட்சி இயக்கத்தை முன்மொழிந்தார். 1916இல் தன்னாட்சி இயக்கத்தை (Home Rule League) தொடங்கிய அவர் அகில இந்திய அளவில் தன்னாட்சி வழங்கப்பட வேண்டும் எனும் கோரிக்கையை முன்னெடுத்துச் சென்றார். இச்செயல் திட்டத்தில் G.S. அருண்டேல், B.P. வாடியா மற்றும் C.P. ராமசாமி ஆகியோர் அவருக்குத் துணை நின்றனர். இவர்கள் கோரிய தன்னாட்சி ஆங்கில அரசிடம் ஓரளவிற்கான விசுவாசத்தையே கொண்டிருந்ததாக அமைந்தது. தன்னுடைய திட்டத்தை மக்களிடையே கொண்டு செல்வதற்காக அன்னிபெசன்ட் நியூ இந்தியா (New India), காமன் வீல் (Commonweal) எனும் இரண்டு செய்தித்தாள்களைத் தொடங்கினார். "அதிநவீன வசதிகளுடன் கூடிய ரயிலில் அடிமைகளாக இருப்பதைவிட சுதந்திரத்துடன் கூடிய மாட்டு வண்டியே சிறந்தது" என கூறினார். 1910ஆம் ஆண்டு பத்திரிக்கைச் சட்டத்தின்படி அன்னிபெசன்ட் பிணைத் தொகையாக பெருமளவு பணத்தைச் செலுத்தும்படி அறிவுறுத்தப்பட்டார். அன்னி பெசன்ட் 'விடுதலை பெற இந்தியா எப்படித் துயருற்றது' ('*How India wrought for Freedom*'), இந்தியா: ஒரு தேசம் (*India: A Nation*) எனும் இரண்டு புத்தகங்களையும் சுயாட்சி குறித்த துண்டுப்பிரசுரத்தையும் எழுதினார்.


## 9.3 பிராமணர் அல்லாதோர் இயக்கமும் காங்கிரசிற்கு சவாலும்

### (அ) தென்னிந்திய நலவுரிமைச் சங்கம்

பிராமணரல்லாதோர் தங்கள் நலன்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காகத் தங்களை ஒரு அரசியல் அமைப்பாக அணிதிரட்டிக் கொண்டனர். 1912இல் சென்னை திராவிடர் கழகம் (Madras Dravidian Association) உருவாக்கப் பெற்றது. அதன் செயலராக C. நடேசனார் செயலூக்கமிக்க வகையில் பங்காற்றினார். 1916 ஜுன் மாதத்தில் அவர் பிராமணர் அல்லாத மாணவர்களுக்காக 'திராவிடர் சங்க தங்கும் விடுதி'யை நிறுவினார். 1916 நவம்பர் 20இல் P. தியாகராயர், டாக்டர் T.M. நாயர், C. நடேசனார் ஆகியோர் தலைமையில் சுமார் முப்பது பிராமணரல்லாதவர்கள் சென்னை விக்டோரியா பொதுஅரங்கில் கூடினர். பிராமணரல்லாதோர்களின் நலன்களை மேம்படுத்துவதற்காகத் தென்னிந்திய நலவுரிமைச் சங்கம் (South Indian Liberal Federation – SILF) எனும் அமைப்பு உருவாக்கப்பட்டது.

### நீதிக்கட்சி அமைச்சரவை

1920இல் நடத்தப்பட்ட தேர்தல்களைக் காங்கிரஸ் புறக்கணித்தது. சட்டமன்றத்தில் மொத்தமிருந்த 98 இடங்களில் 63இல் நீதிக்கட்சி வெற்றிபெற்றது. நீதிக்கட்சியின் A. சுப்பராயலு முதலாவது முதலமைச்சரானார். 1923இல் நடைபெற்ற தேர்தலுக்குப் பின்னர் நீதிக் கட்சியைச் சேர்ந்த பனகல் அரசர் அமைச்சரவையை அமைத்தார்.


A. சுப்பராயலு


பனகல் அரசர்

### (ஆ) அரசின் அடக்குமுறை நடவடிக்கைகள்: ரௌலட் சட்டம்

ஆங்கில அரசு 1919இல் கொடூரமான குழப்பவாத புரட்சிக் குற்றச் சட்டத்தை இயற்றியது. இச்சட்டத்தைப் பரிந்துரை செய்த குழுவினுடைய தலைவரின் பெயர் சர் சிட்னி ரௌலட் ஆவார். எனவே இச்சட்டம் பரவலாக ரௌலட் சட்டம் என அறியப்பட்டது. இச்சட்டத்தின் கீழ் முறையான நீதித்துறை சார்ந்த விசாரணைகள் இல்லாமலேயே யாரை வேண்டுமானாலும் பயங்கரவாதி எனக் குற்றம்சாட்டி அரசு சிறையில் அடைக்கலாம். இதைக் கண்டு இந்தியர்கள் திகிலடைந்தனர். மக்களின் கோபத்திற்குக் குரல்கொடுத்த காந்தியடிகள், தென்னாப்பிரிக்காவில் தான் பயன்படுத்திய போராட்ட வடிவமான சத்தியாகிரகத்தை மேற்கொண்டார்.

### ரௌலட் சத்தியாகிரகம்

1919 மார்ச் 18இல் மெரினா கடற்கரையில் நடைபெற்ற கூட்டத்தில் காந்தியடிகள் உரையாற்றினார். 1919 ஏப்ரல் 6இல் 'கருப்புச் சட்டத்தை' எதிர்க்கும் நோக்கில் கடையடைப்பும் வேலை நிறுத்தங்களும் நடத்தப்பட்டன. தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. சென்னை நகரின் பல பகுதிகளிலிருந்து தொடங்கிய ஊர்வலங்கள் மெரினா கடற்கரையில் ஒன்றிணைந்து பெரும் மக்கள் கூட்டமானது. அந்நாள் முழுவதும் உண்ணாவிரதமும் பிரார்த்தனைகளும் மேற்கொள்ளப்பட்டன. சென்னை சத்தியாகிரக


S. சத்தியமூர்த்தி



10th_History_Unit_9_TM.indd 117 24-03-2020 12:32:28

**ஜார்ஜ் ஜோசப் :** வழக்கறிஞரும் நன்கு சொற்பொழிவாற்றும் திறன் படைத்தவருமான ஜார்ஜ் ஜோசப் மதுரையில் தன்னாட்சி இயக்கத்தை ஏற்படுத்தியதிலும், அதன் நோக்கத்தை மக்களின் கவனத்திற்குக் கொண்டு சென்றதிலும் முக்கியப் பங்குவகித்தார். செங்கண்ணூரில் (இன்றைய கேரள மாநிலம் ஆலப்புழா மாவட்டம்) பிறந்திருந்தாலும் மதுரையில் வசிப்பதையே விரும்பி மக்களின் வழக்கறிஞராகப் பணி செய்தார். பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு இவர் ஆற்றிய சேவையின் காரணமாக மதுரை மக்கள் இவரை 'ரோசாப்பு துரை' என அன்புடன் அழைத்தனர்.




சபை என்ற அமைப்பும் நிறுவப்பட்டது. ராஜாஜி, கஸ்தூரிரங்கர், S. சத்தியமூர்த்தி, ஜார்ஜ் ஜோசப் ஆகியோர் கூட்டத்தில் உரை நிகழ்த்தினர். தொழிலாளர்களுக்கென தனியாக நடத்தப்பட்ட கூட்டமொன்றில் V. கல்யாணசுந்தரம் (திரு.வி.க), B.P. வாடியா., வ.உ.சி ஆகியோர் உரையாற்றினர். தொழிலாளர்களும், மாணவர்களும், பெண்களும் பெருவாரியான எண்ணிக்கையில் பங்கேற்றதே இவ்வியக்கத்தின் முக்கிய அம்சமாகும்.

### (இ) கிலாபத் இயக்கம்

ஜாலியன்வாலா பாக் படுகொலையைத் தொடர்ந்து அதற்குக் காரணமான ஜெனரல் டயர் அனைத்துக் குற்றச்சாட்டுகளில் இருந்தும் விடுக்கப்பட்டதோடல்லாமல் அவருக்குப் பரிசுகளும் வெகுமதியும் வழங்கப்பட்டன. முதல் உலகப் போருக்குப் பின்னர் துருக்கியின் கலீபா அவமரியாதை செய்யப்பட்டதுடன் அவரது அனைத்து அதிகாரங்களும் பறிக்கப்பட்டன. கலீபா பதவியை மீட்பதற்காக கிலாபத் இயக்கம் தொடங்கப் பெற்றது. பெரும்பாலும் தேசிய இயக்கத்திலிருந்து ஒதுங்கி இருந்த முஸ்லிம்கள் தற்போது பெரும் எண்ணிக்கையில் பங்கேற்கத் தொடங்கினர். தமிழ்நாட்டில் 1920 ஏப்ரல் 17இல் மௌலானா சௌகத் அலி தலைமையேற்ற ஒரு பொதுக்கூட்டத்துடன் கிலாபத் நாள் கடைப்பிடிக்கப்பட்டது. இதைப்போன்ற ஒரு மாநாடு ஈரோட்டிலும் நடத்தப்பட்டது. வாணியம்பாடி, கிலாபத் எழுச்சி நடவடிக்கைகளின் முக்கிய மையமாகத் திகழ்ந்தது.

## 9.4 ஒத்துழையாமை இயக்கம்

ஒத்துழையாமை இயக்கத்தின்போது தமிழ்நாடு செயல்துடிப்புடன் விளங்கியது. C. ராஜாஜியும் ஈ.வெ. ராமசாமியும் (ஈ.வெ. ரா பின்னர் பெரியார் என அழைக்கப்பட்டார்) தலைமையேற்று நடத்தினர். முஸ்லிம் லீக்கின் சென்னைக் கிளையை நிறுவிய யாகுப் ஹசன் என்பாருடன் இராஜாஜி நெருக்கமாகச் செயல்பட்டார். இதன் காரணமாக தமிழ்நாட்டில் ஒத்துழையாமை இயக்கத்தின்போது இந்துக்களும் இஸ்லாமியரும் இணைந்து நெருக்கமாகச் செயல்பட்டனர்.



**யாகுப் ஹசன்**

### (அ) வரிகொடா இயக்கமும் கள்ளுக்கடை மறியல் இயக்கமும்

ஒத்துழையாமை இயக்கத்தின் ஒரு பகுதியாக, பல இடங்களில் விவசாயிகள் வரிகொடுக்க மறுத்தனர். தஞ்சாவூரில் வரிகொடா இயக்கம் ஒன்று நடைபெற்றது. சட்டமன்றங்கள், பள்ளிகள் மற்றும் நீதிமன்றங்கள் ஆகியவை புறக்கணிக்கப்பட்டன. அந்நியப்பொருட்கள் புறக்கணிக்கப்பட்டன. பல பகுதிகளில் தொழிலாளர்களின் வேலை நிறுத்தங்கள் அதிக எண்ணிக்கையில் நடைபெற்றன அவற்றில் பல தேசியத் தலைவர்களால் வழிநடத்தப்பட்டது. தமிழ்நாட்டில் நடைபெற்ற ஒத்துழையாமை இயக்கத்தின் முக்கிய அம்சமாகத் திகழ்ந்தது கள்ளுக்கடைகளுக்கு எதிரான போராட்டங்களே. 1921 நவம்பரில் சட்ட மறுப்பு இயக்கத்தைத் தொடங்குவதென முடிவு செய்யப்பட்டது. ராஜாஜி, சுப்பிரமணிய சாஸ்திரி, ஈ.வெ.ரா ஆகியோர் கைது செய்யப்பட்டனர். 1922 ஜனவரி 13இல் வேல்ஸ் இளவரசரின் வருகை புறக்கணிக்கப்பட்டது. காவல்துறையின் அடக்குமுறையில் இருவர் கொல்லப்பட்டனர் பலர் காயமுற்றனர். 1922இல் சௌரி சௌரா நிகழ்வில் 22 காவலர்கள் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து ஒத்துழையாமை இயக்கம் விலக்கிக் கொள்ளப்பட்டது.

### (ஆ) சுயராஜ்ஜிய கட்சியினர் – நீதிக்கட்சியினர் இடையேயான போட்டி

ஒத்துழையாமை இயக்கம் விலக்கி கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து காங்கிரஸ் "மாற்றத்தை விரும்பாதோர்", "மாற்றத்தை விரும்புவோர்" எனப் பிரிந்தது. மாற்றத்தை விரும்பாதோர் சட்டமன்றப் புறக்கணிப்பைத் தொடர விரும்பினர். மாற்றத்தை விரும்பியோர் தேர்தலில் போட்டியிட்டுச் சட்டமன்றத்தினுள் செல்ல விரும்பினர். ராஜாஜியுடன் காந்தியத்தைத் தீவிரமாகப் பின்பற்றும் வேறு சிலர் இணைந்து சட்டமன்றத்திற்குச் செல்வதை எதிர்த்தனர். கஸ்தூரிரங்கர், M.A. அன்சாரி ஆகியோருடன் சேர்ந்து கொண்ட



10th_History_Unit_9_TM.indd 118 24-03-2020 12:32:28

www.tntextbooks.in

ராஜாஜி சட்டமன்றத்தைப் புறக்கணிப்பது எனும் கருத்தை முன்வைத்தார். இக்கருத்துக்கு ஏற்பட்ட எதிர்ப்பு காங்கிரசுக்குள்ளேயே சித்தரஞ்சன் தாஸ், மோதிலால் நேரு ஆகியோரால் சுயராஜ்ஜியக் கட்சி உருவாக்கப்படுவதற்கு இட்டுச் சென்றது. தமிழ்நாட்டில் S. சீனிவாசனார், S. சத்தியமூர்த்தி ஆகியோர் சுயராஜ்ஜியக் கட்சியினருக்குத் தலைமை ஏற்றனர்.

### (இ) சுப்பராயன் அமைச்சரவை


P. சுப்பராயன்

1926இல் நடைபெற்ற சென்னை மாகாண தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களில் சுயராஜ்ஜியக் கட்சியினர் பெரும்பான்மை இடங்களில் வெற்றி பெற்றனர். இருந்தபோதிலும் காங்கிரசின் கொள்கைக்கு இணங்க ஆட்சிப் பொறுப்பை ஏற்கமறுத்தது. மாறாக அவர்கள் சுயேட்சை வேட்பாளரான P. சுப்பராயனுக்கு அமைச்சரவை அமைக்க உதவினர். 1930இல் நடைபெற்ற தேர்தலில் சுயராஜ்ஜியக் கட்சியினர் போட்டியிடாததால் நீதிக்கட்சி எளிதாக வெற்றி பெற்றது. அக்கட்சி தொடர்ந்து 1937 வரை ஆட்சி செய்தது.

### (ஈ) சைமன் குழுவைப் புறக்கணித்தல்

1919ஆம் ஆண்டுச்சட்டத்தின் செயல்பாடுகளைப் பரிசீலனை செய்து சீர்திருத்தங்களைப் பரிந்துரை செய்ய 1927இல் இந்திய சட்டப்பூர்வ ஆணையம் ஒன்று சர் ஜான் சைமனின் தலைமையில் அமைக்கப் பெற்றது. ஆனால் வெள்ளையர்களை மட்டுமே கொண்டிருந்த இக்குழுவில் ஒரு இந்தியர் கூட இடம்பெறாதது இந்தியர்களுக்கு மிகப்பெரும் மனச்சோர்வை ஏற்படுத்தியது. ஆகையால் காங்கிரஸ் சைமன் குழுவைப் புறக்கணித்தது. சென்னையில் S. சத்தியமூர்த்தி தலைமையில் சைமன் குழு எதிர்ப்பு பிரச்சாரக் குழுவொன்று உருவாக்கப்பட்டது. 1929 பிப்ரவரி 18இல் சைமன் குழு சென்னைக்கு வந்தபோது குழுவுக்கு எதிராகக் கறுப்புக்கொடி காட்டப்பட்டது.

**நீல் சிலை அகற்றும் போராட்டம் (1927)**

ஜேம்ஸ் நீல், மதராஸ் துப்பாக்கி ஏந்திய காலாட்படையைச் சேர்ந்தவர். 1857 பேரெழுச்சியின்போது நடைபெற்ற கான்பூர் படுகொலை என்றழைக்கப்படும் சம்பவத்தில் பல ஆங்கிலப் பெண்களும் குழந்தைகளும் கொல்லப்பட்டனர். இதற்கு வஞ்சம் தீர்க்கும் வகையில் நீல் கொடூரமாக நடந்து கொண்டார், பின்னர் நீல் இந்திய வீரர் ஒருவரால் கொல்லப்பட்டார். சென்னை மௌண்ட்ரோட்டில் ஆங்கிலேயர் அவருக்கு ஒரு சிலை வைத்தனர். இதை, இந்தியர்களின் உணர்வுகளுக்கு இழைக்கப்படும் அவமரியாதை எனக் கருதிய தேசியவாதிகள் சென்னையில் தொடர் போராட்டங்களை மேற்கொண்டனர். 1937இல் ராஜாஜியின் தலைமையில் காங்கிரஸ் ஆட்சி அமைத்திருந்தபோது இச்சிலை அகற்றப்பட்டு சென்னை அருங்காட்சியகத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

## 9.5 சட்ட மறுப்பு இயக்கம்

### (அ) பூரண சுயராஜ்ஜியத்தை நோக்கி

1927இல் இந்திய தேசிய காங்கிரசின் சென்னை மாநாடு முழுமையான சுதந்திரமே தனது இலக்கு என அறிவித்தது. 1929இல் லாகூரில் கூடிய காங்கிரஸ் மாநாட்டில் பூரண சுயராஜ்ஜியம் (முழு சுதந்திரம்) என்பதே இலக்கு எனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேலும் 1930 ஜனவரி 26இல் ராவி நதியின் கரையில் சுதந்திரத்தை அறிவிக்கும் விதமாக ஜவகர்லால் நேரு தேசியக் கொடியை ஏற்றினார்.

### (ஆ) வேதாரண்யம் உப்பு சத்தியாகிரகம்

காந்தியடிகள் முன்வைத்த கோரிக்கைகளை வைஸ்ராய் ஏற்றுக் கொள்ளாததைத் தொடர்ந்து அவர் சட்டமறுப்பு இயக்கத்தைத் தொடங்கினார். ராஜாஜி உப்பு சத்தியாகிரகம் ஒன்றினை ஏற்பாடுசெய்து தலைமையேற்று வேதாரண்யம் நோக்கி அணி வகுத்துச் சென்றார். தாங்களாக முன்வந்த ஆயிரம் தொண்டர்களில் நூறு தொண்டர்கள் மட்டுமே அணிவகுப்புக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 1930 ஏப்ரல் 13இல் திருச்சிராப்பள்ளியிலிருந்து தொடங்கி ஏப்ரல் 28இல் தஞ்சாவூர் மாவட்டத்தின் வேதாரண்யத்தைச் சென்றடைந்தது. இவ்வணிவகுப்புக்கென்றே "கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது, சத்தியத்தின் நித்தியத்தை நம்பும் யாரும் சேருவீர்" எனும் சிறப்புப்பாடலை நாமக்கல் கவிஞர் இராமலிங்கனார் புனைந்திருந்தார். காவல்துறையின் கொடூரமான நடவடிக்கைகளைப் பொருட்படுத்தாமல் அணிவகுத்துச் சென்ற சத்தியாகிரகிகளுக்கு பயணித்த பாதையெங்கும் எழுச்சிமிகு வரவேற்பு அளிக்கப்பட்டது. வேதாரண்யம் சென்றடைந்த பின்னர் இராஜாஜியின் தலைமையில் 12 தொண்டர்கள் உப்புச் சட்டத்தை மீறி உப்பை அள்ளினர். உப்புச் சட்டத்தை மீறியதற்காக இராஜாஜி கைது செய்யப்பட்டார். T.S.S. ராஜன், திருமதி. ருக்மணி லட்சுமிபதி, சர்தார் வேதரத்தினம், C. சாமிநாதர் மற்றும் K. சந்தானம் ஆகியோர்



10th_History_Unit_9_TM.indd 119 24-03-2020 12:32:28

வேதாரண்யம் உப்புச் சத்தியாகிரகத்தில் பங்கேற்ற ஏனைய முக்கியத் தலைவர்களாவர்.



**உப்பு சத்தியாகிரக நினைவு சின்னம் வேதாரண்யம்**

### (இ) தமிழக மாவட்டங்களில் பரவலான போராட்டங்கள்

T. பிரகாசம், K. நாகேஸ்வர ராவ் ஆகியோர் தலைமையில் சத்தியாகிரகிகள் சென்னைக்கு அருகேயுள்ள உதயவனம் என்ற இடத்தில் ஒரு முகாமை அமைத்திருந்தனர். ஆனால் அவர்கள் காவல்துறையால் கைது செய்யப்பட்டனர். இந்நிகழ்வு சென்னையில்கடையடைப்பிற்கு வழிகோலியது. 1930 ஏப்ரல் 27இல் திருவல்லிக்கேணியில் காவல்துறையினருடன் மோதல் ஏற்பட்டது. மூன்று மணி நேரம் நடைபெற்ற இம்மோதலில் மூன்று நபர்கள் உயிரிழந்தனர். இராமேஸ்வரத்தில் உப்பு சத்தியாகிரம் மேற்கொள்ள முயன்ற தொண்டர்கள் கைது செய்யப்பட்டனர். மாகாணம் முழுவதிலும் நூற்பாலைத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். பெண்கள் மிகுந்த ஆர்வத்துடன் பங்கேற்றனர். உப்புச்சட்டங்களை மீறியதற்காக அபராதம் கட்டிய முதல் பெண்மணி ருக்மணி லட்சுமிபதியாவார். இயக்கத்தை நசுக்க காவல்துறை கொடுமையான படையைப் பயன்படுத்தியது. 1932 ஜனவரி 26இல், பரவலாக ஆரியா என அழைக்கப்பட்ட பாஷ்யம் புனித ஜார்ஜ் கோட்டையின் உச்சியில் தேசியக்கொடியை ஏற்றினார்.



**ருக்மணி லட்சுமிபதி**

### திருப்பூர் குமரனின் வீரமரணம்

1932 ஜனவரி 11இல் திருப்பூரில் கொடிகளை ஏந்திய வண்ணம் நாட்டுப்பற்று மிகுந்த பாடல்களைப் பாடிச் சென்ற ஊர்வலத்தினர் காவல்துறையினரால் இரக்கமின்றி அடித்து உதைக்கப்பட்டனர். பரவலாக திருப்பூர் குமரன் என்றழைக்கப்படும் O.K.S.R. குமாரசாமி தேசியக் கொடியை உயர்த்திப் பிடித்தவாறே விழுந்து இறந்தார். ஆகையால் இவர் கொடிகாத்த குமரன் என புகழப்படுகிறார்.



**திருப்பூர் குமரன்**

### ஈ) முதல் காங்கிரஸ் அமைச்சரவை

1937ஆம் ஆண்டு தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்றது. நீதிக்கட்சி படுதோல்வி அடைந்தது. தேர்தல்களில் காங்கிரஸ் பெற்ற வெற்றியானது, மக்களிடையே அது பெற்றிருந்த செல்வாக்கைச் சுட்டிக்காட்டியது.

சென்னையில் இராஜாஜி முதல் காங்கிரஸ் அமைச்சரவையை அமைத்தார். மது விலக்கைப் பரிசோதனை முயற்சியாக சேலத்தில் அறிமுகம் செய்தார். இதன் மூலம் ஏற்படும் வருவாய் இழப்பை ஈடு செய்ய விற்பனை வரியை அறிமுகப்படுத்தினார். தேர்தெடுக்கப்பட்ட இந்திய அமைச்சரவையைக் கலந்தாலோசிக்காமல் ஆங்கில அரசு இந்தியாவை இரண்டாம் உலகப்போரில் ஈடுபடுத்தியதால் காங்கிரஸ் அமைச்சரவை ராஜினாமா செய்தது.




**இராஜாஜி**

### உ) இந்தி எதிர்ப்புப் போராட்டம்

பள்ளிகளில் இந்தி மொழி கட்டாயப்பாடமாக அறிமுகம் செய்யப்பட்டது, இது இராஜாஜியால் மேற்கொள்ளப்பட்ட ஒரு சர்ச்சைக்குரிய நடவடிக்கையாகும். தமிழ்மொழிக்கும் பண்பாட்டிற்கும் தீங்கு விளைவிக்க, ஆரிய வட இந்தியர்களால் சுமத்தப்பட்ட ஏற்பாடாக இது கருதப்பட்டதால் மக்களிடையே பெரும் மனக்கசப்பை ஏற்படுத்தியது. இதற்கு எதிராக ஈ.வெ.ரா மிகப்பெரிய பரப்புரையை மேற்கொண்டார். அவர் இந்தி எதிர்ப்பு மாநாடு ஒன்றினை சேலத்தில் நடத்தினார். உறுதியான செயல்பாட்டிற்கான திட்டத்தை இம்மாநாடு வடிவமைத்தது. இந்தி எதிர்ப்புப் போராட்டத்திற்கு ஒடுக்கப்பட்டோர் கூட்டமைப்பும், முஸ்லிம் லீக்கும் ஆதரவளித்தன. தாளமுத்து மற்றும் நடராஜன் எனும் இரண்டு ஆர்வமிக்க போராட்டக்காரர்கள் சிறையில் மரணமடைந்தனர். திருச்சியிலிருந்து சென்னைக்கு ஊர்வலமொன்று திட்டமிடப்பட்டது. பெரியார் உட்பட 1200 போராட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டனர். காங்கிரஸ் அரசு பதவி விலகியதைத் தொடர்ந்து நிர்வாகத்தைக் கைக்கொண்ட சென்னை மாகாண ஆளுநர் இந்தி கட்டாயப் பாடம் என்பதை நீக்கினார்.



10th_History_Unit_9_TM.indd 120 24-03-2020 12:32:28

## 9.6 வெள்ளையனே வெளியேறு இயக்கம்



காமராஜர்

1942 ஆகஸ்டு 8இல் வெள்ளையனே வெளியேறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு காந்தியடிகள் "செய் அல்லது செத்துமடி" எனும் முழக்கத்தை வழங்கினார். ஒட்டு மொத்த காங்கிரஸ் தலைவர்களும் ஒரே நாள் இரவில் கைது செய்யப்பட்டனர். ஒவ்வொரு ரயில் நிலையத்திலும் காவலர்கள் உள்ளூர் தலைவர்களின் பெயர்ப் பட்டியலை வைத்துக் கொண்டு அவர்கள் ரயிலை விட்டு இறங்கியதும் கைது செய்ததை பம்பாயிலிருந்து ஊர் திரும்பிக் கொண்டிருந்த கு. காமராஜர் கவனித்தார். காவல் துறையினரின் கண்களில்படாமல் அரக்கோணத்திலேயே இறங்கிவிட்டார். பின்னர் அவர் தலைமறைவாகி வெள்ளையனே வெளியேறு இயக்கத்திற்காக மக்களைத் திரட்டும் பணியை மேற்கொண்டார்.

### தீராத மக்கள் இயக்கம்

இவ்வியக்கத்தில் சமூகத்தின் அனைத்துப் பிரிவினரும் பங்கேற்றனர். பக்கிங்காம் மற்றும் கர்நாட்டிக் மில், சென்னை துறைமுகம், சென்னை மாநகராட்சி மற்றும் மின்சார டிராம் போக்குவரத்து போன்ற இடங்களில் பெருமளவிலான தொழிலாளர் போராட்டங்கள் நடைபெற்றன. பெரும் எண்ணிக்கையில் ஆண்களும் பெண்களும் இந்திய தேசிய இராணுவத்தில் (INA) சேர்ந்தனர். வெள்ளையனே வெளியேறு இயக்கம் இரக்கமற்ற முறையில் வன்முறை மூலம் ஒடுக்கப்பட்டது.

ராயல் இந்தியக் கப்பற்படைப் புரட்சியும், இங்கிலாந்தில் புதிதாக ஆட்சிப் பொறுப்பேற்ற தொழிலாளர் கட்சி அரசு தொடங்கிய பேச்சு வார்த்தைகளும் இந்திய விடுதலைக்கு வழிகோலின. சோகம் யாதெனில் நாடு இந்தியா, பாகிஸ்தான் என இரண்டாகப் பிரிக்கப்பட்டதுதான். அது குறித்து எட்டாம் பாடத்தில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

### பாடச்சுருக்கம்

- தமிழ் நாட்டில் தேசியவாதம் வளர்வதற்கு சென்னைவாசிகள் சங்கம், சென்னை மகாஜன சபை, தேசியவாதப் பத்திரிக்கைகள் ஆகியவற்றின் பங்களிப்புகள் விவாதிக்கப்பட்டுள்ளன.
- தமிழ் நாட்டில் நடைபெற்ற இந்திய தேசிய இயக்கத்தின் சுதேசி இயக்க கட்டம் பற்றி குறிப்பாக வ.உ.சி. சுப்பிரமணிய சிவா, சுப்பிரமணிய பாரதி ஆகியோர் வகித்த பாத்திரம் குறித்தும் விவரிக்கப்பட்டுள்ளது.
- ஒத்துழையாமை இயக்கம், காங்கிரசோடு ஈ.வெ.ரா வின் முரண்பாடுகள், தேசிய அளவில் சுயராஜ்ஜியக் கட்சியின் தோற்றம், தமிழ்நாட்டில் சுயமரியாதை இயக்கத்தின் தோற்றம் ஆகியவை கூர்ந்தாராயப்பட்டுள்ளன.
- சைமன் குழுவின் மீதும், வட்டமேஜை மாநாடுகளின் மீதும் ஏற்பட்ட அதிருப்தியின் காரணமாக சட்ட மறுப்பு இயக்கத்தில் தமிழ்நாடு பங்கேற்றது ஆகியவை விளக்கப்பட்டுள்ளன.
- 1935 இந்திய அரசு சட்டத்தின்படி நடைபெற்ற தேர்தல்களும், சென்னையில் ராஜாஜியின் தலைமையில் முதல் காங்கிரஸ் அமைச்சரவை உருவாக்கப்பட்டதும் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

### A-Z கலைச்சொற்கள்

| | | |
|---|---|---|
| மேலாதிக்கம் | **hegemony** | leadership or dominance, especially by one state or social group over others |
| விரும்பத்தகாத, வெறுக்கப்படுகிற | **obnoxious** | extremely unpleasant |
| கருத்து ஒருமைப்பாடு, முழு இசைவு | **consensus** | a general agreement |
| பாசாங்கு, போலிமை | **hypocrisy** | insincerity/two-facedness, dishonesty, lip service |
| ஆட்சிக்கு எதிரான | **seditious** | inciting or causing people to rebel against the authority of a state or monarch |
| பொது ஆர்ப்பாட்ட நிகழ்ச்சி | **demonstration** | a protest meeting or march against something |

| | | |
|---|---|---|
| மறியல் | **picket** | a blockade of a workplace or other venue |
| புறக்கணி | **boycott** | refuse to cooperate with or participate in |
| கொடுமைமிக்க, இரக்கமற்ற | **brutal** | savagely violent |
| நாட்டுப்பற்று | **patriotic** | having devotion to and vigorous support for one's own country |
| அடக்குமுறை | **repression** | action of subduing someone or something with force |

## பயிற்சி

RSIQCS

### I சரியான விடையைத் தேர்வு செய்யவும்

1. சென்னை மகாஜன சபையின் முதல் தலைவர் யார்?
   அ) T.M. நாயர் ஆ) P. ரங்கையா
   இ) G. சுப்பிரமணியம் ஈ) G.A. நடேசன்
2. இந்திய தேசிய காங்கிரசின் மூன்றாவது மாநாடு / அமர்வு எங்கே நடைபெற்றது?
   அ) மெரினா
   ஆ) மைலாப்பூர்
   இ) புனித ஜார்ஜ் கோட்டை
   ஈ) ஆயிரம் விளக்கு
3. "அதிநவீன வசதிகளுடன் கூடிய ரயிலில் அடிமைகளாக இருப்பதைவிட சுதந்திரத்துடன் கூடிய மாட்டு வண்டியே சிறந்தது" எனக் கூறியவர் யார்?
   அ) அன்னிபெசன்ட்
   ஆ) M. வீரராகவாச்சாரி
   இ) B.P. வாடியா
   ஈ) G.S. அருண்டேல்
4. கீழ்க்காண்பவர்களுள் சுயராஜ்ஜியவாதி யார்?
   அ) S. சத்தியமூர்த்தி ஆ) கஸ்தூரிரங்கர்
   இ) P. சுப்பராயன் ஈ) பெரியார் ஈ.வெ.ரா
5. சென்னைக்கருகேயுள்ள உதயவனத்தில் சத்யாகிரக முகாமை அமைத்தவர் யார்?
   அ) K. காமராஜ்
   ஆ) C. இராஜாஜி
   இ) K. சந்தானம்
   ஈ) T. பிரகாசம்
6. இந்தி எதிர்ப்பு மாநாடு எங்கே நடத்தப்பெற்றது?
   அ) ஈரோடு ஆ) சென்னை
   இ) சேலம் ஈ) மதுரை

### II கோடிட்ட இடங்களை நிரப்புக

1. சென்னை உயர் நீதிமன்றத்தில் பணியமர்த்தப்பட்ட முதல் இந்திய நீதிபதி ____________ ஆவார்.
2. ____________ எனும் ரகசிய அமைப்பை நீலகண்ட பிரம்மச்சாரி தொடங்கினார்.
3. சென்னையில் தொழிற்சங்கங்களைத் தொடங்குவதில் முன்னோடியாகத் திகழ்ந்தவர் ____________ ஆவார்.
4. சென்னையில் முதலாவது காங்கிரஸ் அமைச்சரவையை அமைத்தவர் ____________.
5. ____________ முஸ்லிம் லீக்கின் சென்னைக் கிளையை உருவாக்கியவராவார்.
6. 1932 ஜனவரி 26இல் ____________ புனித ஜார்ஜ் கோட்டையின் உச்சியில் தேசியக் கொடியை ஏற்றினார்.

### III சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்

1. (i) சென்னைவாசிகள் சங்கம் 1852இல் நிறுவப்பட்டது.
   (ii) தமிழில் வெளிவந்த தேசியப் பருவ இதழான சுதேசமித்திரன் 1891இல் தொடங்கப்பட்டது.
   (iii) குடிமைப்பணித் தேர்வுகள் இந்தியாவில் மட்டுமே நடத்தப்படவேண்டுமென சென்னை மகாஜன சபை கோரியது.
   (iv) V.S. சீனிவாசனார் ஒரு தீவிர தேசியவாதியாவார்.
   அ) (i) மற்றும் (ii) ஆகியவை சரி
   ஆ) (iii) மட்டும் சரி
   இ) (iv) மட்டும் சரி
   ஈ) அனைத்தும் சரி



10th_History_Unit_9_TM.indd 122 24-03-2020 12:32:29

2. (i) ஒத்துழையாமை இயக்கத்தில் பெரியார் பங்கேற்கவில்லை.

   (ii) முஸ்லிம் லீக்கைச் சேர்ந்த யாகூப் ஹசனுடன் இராஜாஜி நெருக்கமாகப் பணியாற்றினார்.

   (iii) ஒத்துழையாமை இயக்கத்தில் தொழிலாளர்கள் கலந்து கொள்ளவில்லை.

   (iv) தமிழ்நாட்டில் கள்ளுக் கடைகளுக்கு முன்பாக மறியல் செய்யப்படவில்லை.

   அ) (i) மற்றும் (ii) ஆகியவை சரி

   ஆ) (i) மற்றும் (iii) ஆகியவை சரி

   இ) (ii) மட்டும் சரி

   ஈ) (i), (iii) மற்றும் (iv) ஆகியவை சரி

## IV பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| 1. | சென்னைவாசிகள் சங்கம் | – | இந்தி எதிர்ப்புப் போராட்டம் |
| 2. | ஈ.வெ.ரா | – | நீல் சிலையை அகற்றுதல் |
| 3. | S.N. சோமையாஜுலு | – | உப்பு சத்தியாகிரகம் |
| 4. | வேதாரண்யம் | – | சித்திரவதை ஆணையம் |
| 5. | தாளமுத்து | – | வைக்கம் வீரர் |

## V சுருக்கமாக விடையளிக்கவும்

1. மிதவாத தேசியவாதிகளின் பங்களிப்பைப் பட்டியலிடுக.
2. திருநெல்வேலி எழுச்சி பற்றி ஒரு குறிப்பு வரைக.
3. இந்தியாவின் விடுதலைப் போராட்டத்தில் அன்னிபெசன்ட்டின் பங்களிப்பு யாது?

## VI விரிவாக விடையளிக்கவும்

1. தமிழ்நாட்டில் சுதேசி இயக்கம் எவ்வாறு எதிர்கொள்ளப்பட்டது என்பதை விவாதிக்கவும்.
2. தமிழ்நாட்டில் பிராமணரல்லாதோர் இயக்கம் தோன்றி வளர்ந்ததை ஆய்வு செய்க.
3. சட்டமறுப்பு இயக்கத்தில் தமிழ்நாடு வகித்த பாத்திரத்தை விவரி.

## VII செயல்பாடுகள்

1. தமிழ்நாட்டிலுள்ள சுதந்திரப் போராட்டத்துடன் தொடர்புடைய இடங்கள் குறித்து மாணவர்களை ஓரிரு வாக்கியங்கள் எழுதச் சொல்லவும்.
2. **விவாத மேடை:** மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து மித தேசியவாதிகள், தீவிர தேசியவாதிகள், புரட்சிகர தேசியவாதிகள், அன்னிபெசன்ட்டின் ஆதரவாளர்கள், நீதிக்கட்சி, ஆங்கில அரசாங்கம் ஆகியோரின் கருத்துக்கள் குறித்து விவாதிக்கச் செய்யலாம்.

## மேற்கோள் நூல்கள்


1. K. Rajayyan, *Tamil Nadu: A Real History*, Ratna Publications, Trivandrum, 2005.
2. Saroja Sundararajan, *March to Freedom in Madras Presidency, 1916–1947*, Lalitha Publications, Madras, 1989.
3. N. Rajendran, *National Movement in Tamil Nadu, 1905–1914: Agitational Politics and State Coercion*, Oxford University Press, Madras, 1994.
4. A.R. Venkatachalapathy, *Tamil Characters: Personalities, Politics, Culture*, Pan Macmillan, 2018.




10th_History_Unit_9_TM.indd 123 24-03-2020 12:32:29

# அலகு – 10

# தமிழ்நாட்டில் சமூக மாற்றங்கள்



## கற்றலின் நோக்கங்கள்

**கீழ்க்காண்பனவற்றோடு அறிமுகமாதல்**

- நவீனத் தமிழ்நாட்டின் சமூக மாற்றங்கள் குறித்த அறிவினைப் பெறுதல்
- தமிழ்நாட்டின் பல்வேறு சமூக சீர்திருத்த இயக்கங்களை அறிதல்
- சமூக சீர்திருத்தவாதிகளின் கருத்துக்களைப் புரிந்து கொள்ளல்

D73CJ9

## அறிமுகம்

பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பாதியில் ஐரோப்பியர்கள் இந்தியத் துணைக் கண்டத்தின் மீது தங்கள் அரசியல் அதிகாரத்தை நிறுவினர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்தியாவை இணைப்பதில் அக்கறை செலுத்திய அவர்கள் இந்தியச் சமூகத்தை மறு ஒழுங்கமைவு செய்தனர். புதிய வருவாய் திட்டங்கள் உருவாக்கப்பட்டன. ஆங்கிலேயரின் பயன்பாட்டுக் கோட்பாடுகள், கிறித்தவ சமய நெறிகள் ஆகியவற்றின் செல்வாக்கிற்கு உட்பட்டிருந்த அவர்கள், இந்திய மக்களின் மீது தங்களது பண்பாட்டு மேலாதிக்கத்தைத் திணிக்கவும் முயன்றனர்.

இந்நிலை இந்தியர்களிடையே எதிர்விளைவினை ஏற்படுத்தியது. பத்தொன்பதாம் நூற்றாண்டில், நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த கல்வியறிவு பெற்ற இந்தியர்கள் இந்த அவமானத்தை உணர்ந்தனர். இதற்குப் பதிலளிக்கும் வகையில் தங்கள் சமூகப் பண்பாட்டு அடையாளங்களைக் கடந்த காலத்தினுள் தேடினர். இருந்தபோதிலும் காலனிய விவாதங்களில் சில நியாயங்கள் இருப்பதை உணர்ந்த அவர்கள் சீர்திருத்திக் கொள்ளவும் தயாராயினர். இதன் விளைவே நவீன இந்தியாவின் சமய, சமூக சீர்திருத்த இயக்கங்களுக்கு வழிகோலியது. இக்குறிப்பிட்ட வரலாற்று வளர்ச்சி நிகழ்வு "இந்திய மறுமலர்ச்சி" என அடையாளப்படுத்தப்பட்டது.

மறுமலர்ச்சியானது ஒரு கருத்தியல் பண்பாட்டு நிகழ்வாகும். அது நவீனம், பகுத்தறிவு, சமூகத்தின் முற்போக்கான இயக்கம் ஆகியவற்றுடன் நெருக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ளது. திறனாய்வுச் சிந்தனை அதன் வேர்களில் உள்ளது. மனிதநேயம் எனும் இச்சித்தாந்தம், சமூக வாழ்வு மற்றும் அறிவு ஆகிய துறைகளோடு மொழி, இலக்கியம், தத்துவம், இசை, ஓவியம், கட்டடக்கலை போன்ற அனைத்துத் துறைகளிலும் படைப்பாற்றலைத் தூண்டி எழுப்பியது.

## 10.1 தமிழ் மறுமலர்ச்சி

காலனியத்தின் பண்பாட்டு ஆதிக்கமும் மனிதநேயத்தின் எழுச்சியும் இந்தியத் துணைக் கண்டத்தின் சமூகப் – பண்பாட்டு வாழ்வில் பல மாற்றங்களைக் கொண்டு வந்தது. நவீன தமிழ்நாடும் அத்தகைய வரலாற்று மாற்றத்தை அனுபவித்தது. தமிழ் மொழி மற்றும் கலாச்சாரம் அவர்களின் அடையாள கட்டுமானத்தில் குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்டிருந்தன. அச்சு இயந்திரத்தின் அறிமுகமும், திராவிட மொழிகளின் மீது மேற்கொள்ளப்பட்ட மொழியியல் ஆய்வுகளும் மற்றும் பலவும் தமிழ் மறுமலர்ச்சி செயல்பாடுகளுக்கு அடியுரமாய் விளங்கின. அச்சு இயந்திரத்தின் வருகைக்குப் பின்னர் வந்த தொடக்க ஆண்டுகளில் சமயம் சார்ந்த நூல்களை வெளியிடும் முயற்சிகளே பெருமளவில் மேற்கொள்ளப்பட்டன. நாளடைவில் படிப்படியாக நிலைமைகள் மாறின. சமயச்சார்பற்ற

www.tntextbooks.in

எனச் சொல்லத்தகுந்த நூல்களும் வெளியிடுவதற்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.


### அச்சுத் தொழில்நுட்பத்தின் வருகை


சீகன்பால்கு


ஐரோப்பிய மொழிகள், தவிர்த்து அச்சில் ஏறிய மொழிகளில் முதல் மொழி தமிழ் மொழியாகும். மிக முன்னதாக 1578இல் தம்பிரான் வணக்கம் எனும் தமிழ் புத்தகம் கோவாவில் வெளியிடப்பட்டது. 1709இல் முழுமையான அச்சகம் சீகன்பால்கு என்பவரால் தரங்கம்பாடியில் நிறுவப்பட்டது. தொடக்ககால தமிழ் இலக்கிய நூல்களில் ஒன்றான திருக்குறள் 1812இல் வெளியிடப்பட்டது. இதன் விளைவாக இக்காலப் பகுதியில் மிகவும் பழமையான செவ்வியல் தமிழ் இலக்கியங்களை வெளியிடுவதில் தமிழ் அறிஞர்களிடையே புத்தெழுச்சி ஏற்பட்டது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் அறிஞர்களான சி.வை. தாமோதரனார் (1832–1901), உ.வே. சாமிநாதர் (1855–1942) போன்றவர்கள் தமிழ்ச்செவ்வியல் இலக்கியங்களை மீண்டும் கண்டறிவதற்காகத் தங்கள் வாழ்நாள் முழுவதையும் செலவழித்தனர். சி.வை. தாமோதரனார் பனையோலைகளில் கையால் எழுதப் பெற்றிருந்த பல தமிழ் இலக்கண, இலக்கிய நூல்களைப் பதிப்பித்தார். அவர் பதிப்பித்த நூல்களில் தொல்காப்பியம், வீரசோழியம், இறையனார் அகப்பொருள், இலக்கண விளக்கம், கலித்தொகை மற்றும் சூளாமணி ஆகியவை அடங்கும். தமிழறிஞர் மீனாட்சி சுந்தரனாரின் மாணவரான உ.வே. சாமிநாதர் செவ்வியல் தமிழ் இலக்கிய நூல்களான சீவகசிந்தாமணி (1887), பத்துப்பாட்டு (1889), சிலப்பதிகாரம் (1892), புறநானூறு (1894), புறப்பொருள் வெண்பா மாலை (1895), மணிமேகலை (1898), ஐங்குறுநூறு (1903), பதிற்றுப்பத்து (1904) ஆகியவற்றை வெளியிடும் முயற்சிகளை மேற்கொண்டார்.


சி.வை. தாமோதரனார்


உ.வே. சாமிநாதர்

இவ்வாறு பழம்பெரும் நூல்கள் வெளியிடப்பட்டது தமிழ் மக்களிடையே தங்கள் வரலாறுமரபு, மொழி, இலக்கியம் மற்றும் சமயம் ஆகியவை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தியது. நவீனத் தமிழர்கள் தங்களது சமூகப் பண்பாட்டு அடையாளங்களை, பண்டைய தமிழ் செவ்வியல் இலக்கியங்கள் வாயிலாக கண்டறிந்தனர். அவை மொத்தத்தில் சங்க இலக்கியங்கள் என்றழைக்கப்படுகின்றன.


ராபர்ட் கால்டுவெல்

1816இல் புனித ஜார்ஜ் கோட்டையில் கல்லூரியினை நிறுவிய F.W. எல்லிஸ் (1777–1819), தென்னிந்திய மொழிகள் தனிப்பட்ட மொழிக்குடும்பத்தை சார்ந்தவை, அவை இந்தோ–ஆரியக்குடும்ப மொழிகளோடு தொடர்பில்லாதவை எனும் கோட்பாட்டை உருவாக்கினார். ராபர்ட் கால்டுவெல் (1814–1891) திராவிட அல்லது தென்னிந்திய மொழிகளின் ஒப்பீட்டு இலக்கணம் எனத் தலைப்பிடப்பட்ட நூலில் இக்கோட்பாட்டை 1856இல் விரிவுபடுத்தினார். திராவிட மொழிகளுக்கிடையில் நெருக்கமான ஒப்புமை இருப்பதையும் அப்படியான ஒப்புமை சமஸ்கிருதத்துடன் இல்லை என்பதையும் நிறுவினார். மேலும் தமிழின் தொன்மையையும் நிலைநாட்டினார்.


பி. சுந்தரனார்

இக்காலகட்டத்தைச் சேர்ந்த அறிவார்ந்த தமிழர்கள் தமிழ் / திராவிட / சமத்துவம் மற்றும் சமஸ்கிருதம் / ஆரியம் / பிராமணியம் ஆகிய இரண்டுக்குமிடையேயுள்ள அடிப்படை வேறுபாடுகளை அடையாளம் கண்டுகொண்டனர். அவர்கள் தமிழ் மொழியே திராவிடர்களின் மொழியென்றும் தமிழர்கள் பிராமணர்கள் அல்ல என்றும் அவர்களின் சமூக வாழ்வில் சாதிகளில்லை, பாலின வேறுபாடில்லை, சமத்துவம் நிலவியது எனவும் வாதிட்டனர். தமிழ்நாட்டில் திராவிட உணர்வு தோன்றி வளர்வதற்கு தமிழ் மறுமலர்ச்சி பங்களிப்பைச் செய்தது. இச்சிந்தனைகள் பி. சுந்தரனாரால் (1855–1897) எழுதப்பெற்ற மனோன்மணியம் எனும் நாடக நூலில் இடம் பெற்றுள்ள தமிழ்மொழி வாழ்த்துப் பாடலில் மெய்ப்பிக்கப்பட்டுள்ளது.

வள்ளலார் எனப் பிரபலமாக அறியப்பட்ட இராமலிங்க அடிகள் (1823–1874)



10th_History_Unit_10.indd 125 24-03-2020 12:32:48

www.tntextbooks.in



திரு.வி. க.



பாரதிதாசன்

நடைமுறையிலிருந்த இந்து சமய பழமைவாதத்தை கேள்விக்குள்ளாக்கினார். ஆபிரகாம் பண்டிதர் (1859–1919) தமிழ் இசைக்குச் சிறப்புச் செய்ததோடு தமிழ் இசை வரலாறு குறித்து நூல்களையும் வெளியிட்டார். சி.வை. தாமோதரனார், உ.வே. சாமிநாதர், திரு.வி. கல்யாண சுந்தரம் (1883–1953), பரிதிமாற் கலைஞர் (1870–1903), மறைமலையடிகள் (1876–1950), சுப்பிரமணிய பாரதி (1882–1921), ச. வையாபுரி (1891–1956), கவிஞர் பாரதிதாசன் (1891–1964) ஆகியோர் தங்களுக்கே உரித்தான வழிகளில், தங்களின் எழுத்துக்கள் மூலம் தமிழ் இலக்கியத்தின் புத்தெழுச்சிக்குப் பங்களிப்பு செய்தனர். இதே சமயத்தில், பௌத்தத்திற்குப் புத்துயிரளித்த ஒரு தொடக்ககால முன்னோடியான M. சிங்காரவேலர் (1860–1946) காலனிய சக்தியை எதிர்கொள்வதற்காக பொதுவுடமைவாதத்தையும் சமத்துவத்தையும் வளர்த்தார். பண்டிதர் அயோத்திதாசரும் (1845–1914) பெரியார் ஈ.வெ. ராமசாமியும் (1879–1973) சமூகரீதியாக உரிமைகள் மறுக்கப்பட்ட, ஒதுக்கப்பட்ட மக்கள் பிரிவினரின் உரிமைகளுக்காகப் பகுத்தறிவுச் சித்தாந்தத்தை உயர்த்திப் பிடித்தனர்.

### பரிதிமாற் கலைஞர் (வி.கோ. சூரிய நாராயண சாஸ்திரி)

வி.கோ. சூரிய நாராயண சாஸ்திரி (1870–1903) மதுரை அருகே பிறந்தார். சென்னை கிறித்தவக் கல்லூரியில் தமிழ் பேராசிரியராகப் பணியாற்றினார். தமிழின் மீது சமஸ்கிருதம் கொண்டிருந்த செல்வாக்கை அடையாளம் கண்ட தொடக்க காலத் தமிழ் அறிஞர்களில் ஒருவர். அதனால் தனக்கே பரிதிமாற் கலைஞர் என தூய தமிழ்ப் பெயரைச் சூடிக் கொண்டவர். தமிழ் மொழி ஒரு செம்மொழி என்றும், எனவே சென்னைப் பல்கலைக்கழகம் தமிழை ஒரு வட்டாரமொழியென அழைக்கக் கூடாதென முதன்முதலாக வாதாடியவர் அவரே. மேற்கத்திய இலக்கிய மாதிரிகள் மீது இவர் கொண்டிருந்த தாக்கத்தின் விளைவாக 14 வரிச்செய்யுள் வடிவத்தை தமிழுக்கு அறிமுகம் செய்தார். மேலும் இவர் நாவல்களையும் நாடகங்களையும் அதிக எண்ணிக்கையிலான அறிவியல் கட்டுரைகளையும் எழுதினார். ஆனால் வருந்தத்தக்க முறையில் 33 ஆண்டுகளே நிறைவு பெற்றிருந்த அவர் இளம் வயதில் இயற்கை எய்தினார்.




பரிதிமாற் கலைஞர்

### மறைமலை அடிகள்

மறைமலை அடிகள் (1876–1950) தமிழ் மொழியியல் தூய்மைவாதத்தின் தந்தை என்றும் தனித்தமிழ் இயக்கத்தை (தூய தமிழ் இயக்கம்) உருவாக்கியவர் எனவும் கருதப்படுகின்றார். சங்க இலக்கிய நூல்களான பட்டினப்பாலை, முல்லைப்பாட்டு ஆகியவற்றிற்கு விளக்கவுரை எழுதியுள்ளார். அவர் இளைஞராக இருந்த போது சித்தாந்த தீபிகா எனும் பத்திரிகையில் பணிபுரிந்தார். பின்னர் சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் தமிழாசிரியராகப் பல ஆண்டுகள் பணியாற்றினார். பிராமணர் அல்லாதோர் இயக்கத்தின் மீது பற்றுக்கொண்டார். அவருடைய ஆசிரியர்களான பி. சுந்தரனார், சோமசுந்தர நாயகர் ஆகிய இருவரும் அவருடைய வாழ்க்கையில் முக்கியச் செல்வாக்கு செலுத்தியோராவர்.



மறைமலை அடிகள்

### தனித்தமிழ் இயக்கம்

தூய தமிழ் வார்த்தைகளைப் பயன்படுத்துவதையும் சமஸ்கிருதத்தின் செல்வாக்கு தமிழ் மொழியிலிருந்து அகற்றப்படுவதையும் மறைமலை அடிகள் ஊக்குவித்தார். இவ்வியக்கம் தமிழ்ப் பண்பாட்டின் மீது குறிப்பாக தமிழ் மொழி, இலக்கியம் ஆகியவை மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. மறைமலை அடிகளாரின் மகள் நீலாம்பிகை இவ்வியக்கம் உருவாக்கப்பட்டதில் முக்கியப் பங்கு வகித்தார். வேதாச்சலம் என்ற தனது பெயரை அவர் தூய தமிழில் மறைமலை அடிகள் என மாற்றிக்கொண்டார். அவருடைய ஞானசாகரம் எனும் பத்திரிக்கை அறிவுக்கடல் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. அவருடைய சமரச சன்மார்க்க சங்கம் எனும் நிறுவனம் பொது நிலைக் கழகம் என்று பெயரிடப்பட்டது. தமிழ் சொற்களுக்குள் புகுந்துவிட்ட சமஸ்கிருதச் சொற்களுக்கு இணையான பொருள்தரக்கூடிய தமிழ் சொற்களடங்கிய அகராதி ஒன்றை நீலாம்பிகை தொகுத்தார்.



10th_History_Unit_10.indd 126 24-03-2020 12:32:48

## 10.2 திராவிட இயக்கத்தின் எழுச்சி

திராவிட இயக்கம் பிராமண மேலாதிக்கத்திற்கு எதிராகப் பிராமணர் அல்லாதவர்களைப் பாதுகாக்கும் இயக்கமாக உதயமானது. 1909இல் பிராமணர் அல்லாத மாணவர்களுக்கு உதவி செய்வதற்காக மதராஸ் பிராமணரல்லாதோர் சங்கம் என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. 1912இல் டாக்டர் சி. நடேசனார் எனும் மருத்துவர் மதராஸ் ஐக்கிய கழகம் எனும் அமைப்பை உருவாக்கினார் இது பின்னாளில் மதராஸ் திராவிடர் சங்கம் என்று மாறியபின் திராவிடர்களின் மேம்பாட்டிற்கான உதவிகளைச் செய்தது. பிராமணர் அல்லாத பட்டதாரிகளுக்கு உதவுவது அவர்களைக் கற்கவைப்பது ஆகியவற்றோடு அவர்களது குறைபாடுகள் குறித்து விவாதிக்க முறையான கூட்டங்களையும் நடத்தியது. இதே சமயத்தில் நடேசனார் தங்கும் விடுதி வசதியில்லாததால் பிராமணரல்லாத மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டதால் அதைச் சரிசெய்யும் வகையில் திருவல்லிக்கேணியில் (சென்னை) ஜூலை 1916இல் திராவிடர் இல்லம் என்ற பெயரில் ஒரு தங்கும் விடுதியை நிறுவினார். மேலும் பிராமணர் அல்லாத மாணவர்களின் நலன் கருதி இவ்வில்லம் ஒரு இலக்கிய அமைப்பையும் கொண்டிருந்தது.



டாக்டர் சி. நடேசனார்

## 10.3 தென்னிந்திய நல உரிமைச்சங்கம் (நீதிக்கட்சி)




சர் பிட்டி தியாகராயர்




டி.எம். நாயர்

1916 நவம்பர் 20இல் டாக்டர் நடேசனார், சர் பிட்டி தியாகராயர், டி.எம். நாயர் மற்றும் அலமேலுமங்கை தாயாரம்மாள் உட்பட 30 முக்கிய பிராமணர் அல்லாத தலைவர்கள் தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தை (South Indian Liberal Federation) உருவாக்க ஒருங்கிணைந்தனர். இதே சமயம் 1916 டிசம்பரில், விக்டோரியா பொது அரங்கில் நடைபெற்ற கூட்டமொன்றில் பிராமணரல்லாதோர் அறிக்கை வெளியிடப்பட்டது. இவ்வறிக்கை பிராமணரல்லாத சமூகங்களின் கருத்துக்களைத் தெளிவுபடக்கூறியது.

இவ்வமைப்பு தொடங்கி வெளியிட்ட மூன்று செய்தித்தாள்களாவன; கட்சியின் கொள்கைகளைப் பரப்புரை செய்வதற்காகத் தமிழில் திராவிடன், ஆங்கிலத்தில் ஜஸ்டிஸ், தெலுங்கில் ஆந்திர பிரகாசிகா ஆகிய பத்திரிக்கைகளை வெளியிட்டது.

மாகாண அரசுகளில் இரட்டையாட்சி முறையை அறிமுகம் செய்த பின்னர் மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தங்களின் அடிப்படையில் 1920இல் முதல் தேர்தல் நடைபெற்றது. நீதிக்கட்சி தேர்தலில் வெற்றிபெற்று இந்தியாவின் முதல் அமைச்சரவையை சென்னையில் அமைத்தது. A. சுப்பராயலு சென்னை மாகாணத்தின் முதலமைச்சரானார். மேலும் நீதிக்கட்சி 1920–1923 மற்றும் 1923–1926 ஆகிய ஆண்டுகளில் அரசமைத்தது. காங்கிரஸ் கட்சி சட்டமன்றத்தைப் புறக்கணித்த சூழலில் நீதிக்கட்சி 1937இல் தேர்தல் நடைபெறும் வரை ஆட்சி தொடர்ந்து நீடித்தது. 1937 தேர்தல்களில், முதன்முதலாகப் பங்கேற்ற இந்திய தேசிய காங்கிரஸ் நீதிக்கட்சியை படுதோல்வி அடையச் செய்தது.

### திட்டங்களும் செயல்பாடுகளும்

நீதிக்கட்சியே நாட்டில் பிராமணர் அல்லாதவர்களின் மூலாதாரமாய் விளங்கிற்று. நீதிக்கட்சி அரசாங்கம் மக்கள் தொகையில் பெரும்பாலானவர்களுக்கு கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளை விரிவுபடுத்தி அரசியல் தளத்தில் அவர்களுக்கென இடத்தை உருவாக்கியது.

சாதி மறுப்புத் திருமணங்களைக் கட்டுப்படுத்திய சட்டச் சிக்கல்களை நீதிக் கட்சியினர் அகற்றியதோடு பொதுக் கிணறுகளையும் நீர் நிலைகளையும் ஒடுக்கப்பட்ட பிரிவு மக்கள் பயன்படுத்துவதை தடுத்த தடைகளைத் தகர்த்தனர். ஒடுக்கப்பட்ட பிரிவு குழந்தைகள் பொதுப்பள்ளிகளில் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டுமென நீதிக்கட்சியின் அரசு ஆணை பிறப்பித்தது. இச்சமூகக் குழுக்களைச் சேர்ந்த மாணவர்களுக்கென 1923இல் தங்கும் விடுதிகள் உருவாக்கப்பட்டன. நீதிக்கட்சியின் கீழிருந்த சட்டமன்றம்தான் முதன் முதலாக தேர்தல் அரசியலில் பெண்கள் பங்கேற்பதை 1921இல் அங்கீகரித்தது. இத்தீர்மானம் பெண்களுக்கென இடத்தை ஏற்படுத்தியதால் 1926இல் முத்துலட்சுமி அம்மையார் இந்தியாவின் முதல் பெண் சட்டமன்ற உறுப்பினராக முடிந்தது.



முத்துலட்சுமி அம்மையார்

பல்வேறு சமூகங்களுக்கான இட ஒதுக்கீட்டை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக நீதிக்கட்சி வகுப்புவாரி பிரதிநிதித்துவம் தொடர்பான சட்டங்களை இயற்றும் பணிகளை மேற்கொண்டது. சமூக நீதியை நிலைநாட்டுவதின் ஒரு பகுதியாக பல்வேறு சாதிகளையும் சமூகங்களையும் சார்ந்தவர்களுக்கு அரசுப் பணிகளில் சேர்வதற்கு சமமான வாய்ப்புகளை உறுதி செய்யும் பொருட்டு இரண்டு வகுப்புவாரி அரசாணைகள் (1921 செப்டம்பர் 16 மற்றும் 1922 ஆகஸ்ட் 15) இயற்றப்பட்டன. நிர்வாக அதிகாரங்களை அனைத்து சமூகத்தினரும் பங்கிட்டுக் கொள்வதை ஊக்குவிக்கும் வண்ணம், அரசு அதிகாரிகளைத் தேர்வு செய்ய 1924இல் பணியாளர் தேர்வு வாரியத்தை நீதிக்கட்சி அமைத்தது. இம்முறையைப் பின்பற்றி பிரிட்டிஷ் இந்திய அரசு 1929இல் பொதுப் பணியாளர் தேர்வாணையத்தை உருவாக்கியது.

இவைகள் தவிர சமய நிறுவனங்களை சீர்திருத்துவதிலும் நீதிக்கட்சி கவனம் செலுத்தியது. நீதிக்கட்சி 1926இல் இந்து சமய அறநிலையச் சட்டத்தை இயற்றியது. அதன்படி எந்தவொரு தனிநபரும், சாதிவேறுபாடின்றி கோவில்களின் நிர்வாகக் குழுக்களில் உறுப்பினராகவும் கோவிலின் சொத்துக்களை நிர்வகிக்கவும் வழிவகை செய்யப்பட்டது.

## 10.4 சுயமரியாதை இயக்கம்


சுயமரியாதை இயக்கம் (Self Respect Movement) சடங்குகளும் சம்பிரதாயங்களும் இல்லாத சாதிகளற்ற பிறப்பின் அடிப்படையிலான பாகுபாடற்ற ஒரு சமூகத்தை இவ்வியக்கம் ஆதரித்தது. பகுத்தறிவும் சுயமரியாதையும் அனைத்து மனிதர்களின் பிறப்புரிமை எனப் பிரகடனம் செய்த இவ்வியக்கம் சுயாட்சியைக் காட்டிலும் இவை முக்கியமானவை எனும் கருத்தை உயர்த்திப் பிடித்தது. பெண்களின் தாழ்வான நிலைக்கு எழுத்தறிவின்மையே காரணம் என அறிவித்த அவ்வியக்கம் அனைவருக்கும் கட்டாயத் தொடக்கக் கல்வியை வழங்கும் பணிகளை மேற்கொண்டது.

இவ்வியக்கம் பெண் விடுதலை கோருதல், மூடநம்பிக்கைகளை நீக்குதல் மற்றும் பகுத்தறிவை வலியுறுத்துதல் போன்ற கோரிக்கைகளை கோரியது. மேலும் இவ்வியக்கம் சீர்திருத்தத் திருமணம் அல்லது சுயமரியாதைத் திருமணங்களை ஆதரித்தது.

சுயமரியாதை இயக்கம் பிராமணர் அல்லாத இந்துக்களின் நலன்களுக்காக மட்டுமல்லாமல் இஸ்லாமியர்களின் நலனுக்காகவும் போராடியது. இஸ்லாமின் மேன்மை மிகுந்த கோட்பாடுகளான சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றை சுயமரியாதை இயக்கம் பாராட்டியது.

### பெரியார் ஈ.வெ.ரா

பெரியார் ஈ.வெ.ராமசாமி (1879–1973) சுயமரியாதை இயக்கத்தை தோற்றுவித்தவர் ஆவார். இவர் ஈரோட்டை சேர்ந்த செல்வந்தரும் வணிகருமான வெங்கடப்பர், சின்னத்தாயம்மாள் ஆகியோரின் மகனாவார். ஓரளவு முறையான கல்வியைக் கற்றிருந்தாலும் தன் தந்தையால் ஆதரிக்கப்பட்ட அறிஞர்களுடன் விமர்சன விவாதங்களில் ஈடுபடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். இளைஞராக இருந்தபோது ஒருமுறை வீட்டைவிட்டு வெளியேறிய அவர் பல மாதங்கள் வாரணாசியிலும் ஏனைய சமயம் சார்ந்த மையங்களிலும் தங்கியிருந்தார். வைதீக இந்து சமயத்துடன் ஏற்பட்ட நேரடி அனுபவங்கள் இந்து சமயத்தின் மீது அவர் கொண்டிருந்த நம்பிக்கைகளைத் தகர்த்தன. வீடு திரும்பிய அவர் சில காலம் குடும்பத் தொழிலான வணிகத்தை கவனித்து வந்தார். அவருடைய சுயநலமற்ற பொதுச் சேவைகளும், தொலைநோக்குப் பார்வையும் அவரை புகழ்பெற்ற ஆளுமை ஆக்கின. ஈரோட்டின் நகரசபைத் தலைவர் பதவி (1918–1919) உட்பட பல பதவிகளையும் அவர் வகித்தார்.



**பெரியார் ஈ.வெ.ரா**

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக பெரியார் பதவி வகித்தபோது ஒடுக்கப்பட்ட மக்களின் கோவில் நுழைவு உரிமை குறித்த தீர்மானம் ஒன்றை முன்மொழிந்தார். சாதி தர்மம் என்ற பெயரில் ஒடுக்கப்பட்ட பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் கோவிலுக்குள்ளும் அதைச் சுற்றியுள்ள வீதிகளிலும் நுழைவது மறுக்கப்பட்டிருந்தது. இப்படிப்பட்ட நடைமுறையினை வைக்கம் (திருவாங்கூர் சமஸ்தானத்தின் ஒரு சுதேசி அரசு, தற்போதைய கேரள மாநிலத்திலுள்ள ஒரு நகரம்) மக்கள் எதிர்த்தனர். எதிர்ப்பின் தொடக்கக் கட்டங்களில் மதுரையைச் சேர்ந்த ஜார்ஜ் ஜோசப் பெரும்பங்கு வகித்தார். உள்ளூர் தலைவர்கள் கைது செய்யப்பட்ட பின்னர் பெரியார் இந்த இயக்கத்திற்கு தலைமையேற்றதால் சிறையிலடைக்கப்பட்டார். மக்கள் அவரை 'வைக்கம் வீரர்' எனப் பாராட்டினர். இதே சமயத்தில் சேரன்மாதேவி குருகுலப் பள்ளியில், உணவு உண்ணும் அறையில் சாதி அடிப்படையிலான பாகுபாடு நிலவுவதைக் கேள்வியுற்று மனவருத்தமடைந்தார். இக்குருகுலம் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் நிதியுதவியில்

YKVUSD



10th_History_Unit_10.indd 128 24-03-2020 12:32:49

வ.வே. சுப்பிரமணியம் எனும் காங்கிரஸ் தலைவரால் நடத்தப் பெற்றது. இதனைப் பெரியார் கண்டித்து எதிர்த்த பின்னரும், குருகுலத்தில் நடைபெறும் சாதிப்பாகுபாட்டை காங்கிரஸ் தொடர்ந்து ஆதரித்ததால் மனமுடைந்தார்.



தந்தை பெரியார் நினைவகம் (வைக்கம், கேரளா)

பெரியார் 1925இல் சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்கினார். பகுத்தறிவுக் கருத்துகளை மக்களிடையே பரப்புவதில் மக்கள் தொடர்புச் சாதனங்களின் முக்கியத்துவத்தைப் பெரியார் புரிந்து கொண்டார். குடிஅரசு (1925), ரிவோல்ட் (1928), புரட்சி (1933), பகுத்தறிவு (1934), விடுதலை (1935) போன்ற பல செய்தித்தாள்களையும் இதழ்களையும் பெரியார் தொடங்கினார். சுயமரியாதை இயக்கத்தின் அதிகாரபூர்வ செய்தித்தாள் குடிஅரசு ஆகும். ஒவ்வொரு இதழிலும் சமூகம் பிரச்சனைகள் தொடர்பான தனது கருத்துகளைப் பெரியார் வழக்கமான கட்டுரையாக எழுதினார். அவ்வப்போது சித்திரபுத்திரன் எனும் புனைப் பெயரில் கட்டுரைகளை எழுதினார்.

பௌத்த சமய முன்னோடியும், தென்னிந்தியாவின் முதல் பொதுவுடமைவாதியுமான சிங்காரவேலருடன் நெருக்கமான உறவு கொண்டிருந்தார். B.R. அம்பேத்கார் எழுதிய சாதி ஒழிப்பு (Annihilation of caste) எனும் நூலை, அந்நூல் வெளிவந்தவுடன் 1936இல் தமிழில் பதிப்பித்தார். B.R. அம்பேத்கார் அவர்களின் ஒடுக்கப்பட்ட மக்களுக்கான தனித்தேர்தல் தொகுதிக் கோரிக்கையை பெரியாரும் ஆதரித்தார்.

1937இல் இராஜாஜியின் தலைமையிலான அரசின் செயல்பாட்டினை எதிர்க்கும் விதமாக, பள்ளிகளில் இந்தியைக் கட்டாயப் பாடமாக அறிமுகம் செய்ததற்கு எதிராகப் பெரியார் மக்கள் செல்வாக்கு பெற்ற இயக்கத்தை நடத்தினார். இந்தி எதிர்ப்புப் போராட்டமானது (1937–39) தமிழ்நாட்டு அரசியலில் மிக பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இந்தப் போராட்டத்துக்காக பெரியார் சிறையில் அடைக்கப்பட்டார். பெரியார் சிறையில் இருந்தபோதே நீதிக்கட்சியின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். இதன் பின்னர் நீதிக்கட்சி சுயமரியாதை இயக்கத்துடன் இணைந்தது. அதற்கு 1944இல் திராவிடர் கழகம் (திக) எனப் புதுப்பெயர் சூட்டப்பெற்றது.

சென்னை மாநிலத்தின் முதலமைச்சராக இருந்த இராஜாஜி (1952–54) பள்ளிக் குழந்தைகளுக்கு அறிமுகப்படுத்திய தொழில் கல்வி பயிற்சித் திட்டமானது, மாணவர்களுக்கு அவர்களின் தந்தையர்கள் செய்து வந்த தொழில்களில் பயிற்சியளிப்பதாக அமைந்தது. இதை குலக்கல்வித் திட்டம் (சாதியை அடிப்படையாகக் கொண்ட கல்வி முறை) என விமர்சித்த பெரியார் இத்திட்டத்தை முழுமையாக எதிர்த்தார். இதற்கு எதிராக பெரியார் மேற்கொண்ட போராட்டங்கள் இராஜாஜியின் பதவி விலகலுக்கு இட்டுச் சென்றது. கு. காமராஜ் சென்னை மாநிலத்தின் முதலமைச்சரானார். பெரியார் தன்னுடைய தொண்ணூற்று நான்காவது வயதில் (1973) இயற்கை எய்தினார். அவரது உடல் சென்னையில் பெரியார் திடலில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

## பெரியார், ஒரு பெண்ணியவாதி

பெரியார் ஆணாதிக்க சமூகத்தை விமர்சித்தார். குழந்தைத் திருமணத்தையும் தேவதாசி முறையையும் கண்டனம் செய்தார். 1929 முதல் சுயமரியாதை மாநாடுகளில், பெண்களின் மோசமான நிலை குறித்து குரல் கொடுக்கத் தொடங்கியதிலிருந்து, பெண்களுக்கு விவாகரத்து பெறுவதற்கும் சொத்தில் பங்கு பெறுவதற்கும் உரிமை உண்டு என ஆணித்தரமாக வலியுறுத்தினார். "திருமணம் செய்து கொடுப்பது" எனும் வார்த்தைகளை மறுத்த அவர் அவை பெண்களைப் பொருட்களாக நடத்துகின்றன என்றார். அவைகளுக்கு மாற்றாக திருக்குறளில் இருந்து எடுக்கப்பட்ட வாழ்க்கைத் துணை என்ற வார்த்தையைப் பயன்படுத்த வேண்டினார். பெண்ணியம் குறித்து பெரியார் எழுதிய மிக முக்கியமான நூல் பெண் ஏன் அடிமையானாள்? என்பதாகும்.

பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கப்படுவது அவர்களுக்குச் சமூகத்தில் நன்மதிப்பையும், பாதுகாப்பையும் வழங்கும் என பெரியார் நம்பினார்.

1989இல் தமிழக அரசு, மாற்றங்களை விரும்பிய சீர்த்திருத்தவாதிகளின் கனவை நனவாக்கும் வகையில் 1989ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து வாரிசுரிமைச் சீர்திருத்தச் சட்டத்தை அறிமுகம் செய்தது. அச்சட்டம் முன்னோர்களின் சொத்துக்களை உடைமையாகப் பெறுவதில் பெண்களுக்குச் சம உரிமை உண்டென்பதை உறுதிப்படுத்தியது. முன்மாதிரியாக அமைந்த

இந்தச்சட்டம் தேசிய அளவிலும் இது போன்ற சட்டங்கள் இயற்றப்படுவதற்கு அடிப்படையாக அமைந்தது.

### இரட்டைமலை சீனிவாசன்

இரட்டைமலை சீனிவாசன் (1859–1945) 1859ஆம் ஆண்டு காஞ்சிபுரத்தில் பிறந்தார். சாதிப்படிநிலைகளில் ஒடுக்கப்பட்ட மக்களின் சமூக நீதி, சமத்துவம், சமூக உரிமைகள் ஆகியவற்றுக்காகப் போராடினார். அவருடைய தன்னலமற்ற சேவைக்காக ராவ்சாகிப் (1926), ராவ் பகதூர் (1930), திவான் பகதூர் (1936) ஆகிய பட்டங்களால் அவர் சிறப்புச் செய்யப்பட்டார். அவரது சுயசரிதையான ஜீவிய சரித சுருக்கம் 1939இல் வெளியிடப்பட்டது. இந்நூல் முதன்முதலாக எழுதப்பெற்ற சுயசரிதை நூல்களில் ஒன்றாகும்.



**இரட்டைமலை சீனிவாசன்**

தீண்டாமையின் கொடுமைகளை அனுபவித்த இரட்டைமலை சீனிவாசன் உரிமைகள் மறுக்கப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காக உழைத்தார். 1893இல் ஆதிதிராவிட மகாஜன சபை எனும் அமைப்பை உருவாக்கினார். ஒடுக்கப்பட்ட மக்களின் கூட்டமைப்பு மற்றும் சென்னை மாகாண ஒடுக்கப்பட்ட வகுப்பினரின் கூட்டமைப்பு ஆகிய அமைப்புகளின் தலைவராகப் பணியாற்றினார்.

B.R. அம்பேத்காரின் நெருக்கமானவரான அவர், லண்டனில் (1930 மற்றும் 1931) நடைபெற்ற முதல், இரண்டாம் வட்டமேஜை மாநாடுகளில் கலந்து கொண்டு சமூகத்தின் விளிம்புநிலை மக்களின் கருத்துக்களுக்காகக் குரல் கொடுத்தார். 1932இல் செய்துகொள்ளப்பட்ட பூனா ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டவர்களுள் அவரும் ஒருவர்.

### மயிலை சின்னதம்பி ராஜா

மயிலை சின்னதம்பி ராஜா (1883–1943) மக்களால் எம்.சி. ராஜா என அழைக்கப்பட்ட அவர் ஒடுக்கப்பட்ட வகுப்பைச் சேர்ந்த தலைவர்களில் முக்கியமானவர். ஒரு ஆசிரியராகத் தனது பணியைத் தொடங்கிய அவர் பள்ளிகள், கல்லூரிகள் ஆகியவற்றுக்கான பல்வேறு பாடப்புத்தகங்களை எழுதினார். தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தை (நீதிக்கட்சி) உருவாக்கியவர்களில் ஒருவராவார். சென்னை மாகாணத்தில் ஒடுக்கப்பட்ட வகுப்பிலிருந்து சட்டமேலவைக்கு தேர்தெடுக்கப்பட்ட முதல் உறுப்பினராவார் (1920–1926). சென்னை சட்ட சபையில் நீதிக்கட்சியின் துணைத் தலைவராகச் செயல்பட்டார்.




**எம். சி. ராஜா**

1928இல் அகில இந்திய ஒடுக்கப்பட்டோர் சங்கம் எனும் அமைப்பை உருவாக்கி அதன் தலைவராக நீண்டகாலம் பணியாற்றினார்.

## 10.5 தமிழ்நாட்டில் தொழிலாளர் இயக்கங்கள்

இந்தியாவில் தொழில்கள் வளர முதல் உலகப்போர் (1914–1918) உத்வேகம் அளித்தது. போர்க்காலத்தேவைகளை நிறைவு செய்துவந்த இத்தொழிற்சாலைகள் மிக அதிக எண்ணிக்கையில் தொழிலாளர்களைப் பணியில் அமர்த்தியிருந்தன. போர் முடிவடைந்ததால் போர்காலத் தேவைகளும் குறைந்தன. எனவே, அனைத்து தொழிற்சாலைகளிலும் ஆட்குறைப்பு செய்யப்பட்டன. இத்துடன் ஏற்பட்ட விலைவாசிஏற்றமும் தொழிலாளர் இயக்கங்கள் தோன்றுவதற்கு உந்து சக்தியாக அமைந்தன. சென்னை மாகாணத்தில் பி.பி. வாடியா, ம. சிங்காரவேலர், திரு.வி. கல்யாணசுந்தரம் போன்றவர்கள் தொழிலாளர் சங்கங்களை அமைப்பதில் முன்முயற்சி மேற்கொண்டனர். 1918இல் இந்தியாவின் முதல் தொழில் சங்கமான சென்னை தொழிலாளர் சங்கம் (Madras Labour Union) உருவாக்கப்பட்டது.



**உழைப்பாளர் சிலை மெரினா கடற்கரை**

அகில இந்திய தொழிலாளர் சங்கத்தின் முதல் மாநாடு 1920 அக்டோபர் 31இல் பம்பாயில் நடைபெற்றது. பல தீர்மானங்கள் குறித்து பிரதிநிதிகள் விவாதித்தனர். தொழிலாளர்களின் பிரச்சனைகளில் காவல்துறை தலையிடுவதிலிருந்து பாதுகாப்பு, வேலையில்லாதவர்களுக்கென ஒரு பதிவேட்டைப் பராமரித்தல், உணவுப் பண்டங்களின் ஏற்றுமதி மீதான கட்டுப்பாடு, காயமடைந்தோர்க்கு ஈட்டுத்தொகை மற்றும் உடல்நலக் காப்பீடு ஆகியவை இவற்றில் அடங்கும்.

சென்னை மாகாண தொழிலாளர் இயக்க நடவடிக்கைகளில் ஒரு முன்னோடியாகத்



10th_History_Unit_10.indd 130 24-03-2020 12:32:49

திகழ்ந்தவர் ம. சிங்காரவேலர் (1860–1946) ஆவார். சென்னையில் பிறந்த அவர் சென்னைப் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த மாநிலக் கல்லூரியில் பயின்று பட்டம் பெற்றார். இளமைக் காலத்தில் பௌத்தத்தைப் பரிந்துரை செய்தார். அவர் தமிழ், ஆங்கிலம், உருது, இந்தி, ஜெர்மன், பிரெஞ்ச் மற்றும் ரஷ்யன் என பலமொழிகள் அறிந்திருந்ததோடு காரல் மார்க்ஸ், சார்லஸ் டார்வின், ஹெர்பர்ட் ஸ்பென்சர், ஆல்பர்ட் ஐன்ஸ்டின் ஆகியோரின் கருத்துக்களைத் தமிழில் வடித்தவர். 1923இல் முதல் முதலாக மே தின விழாவை ஏற்பாடு செய்தவரும் அவரே. அவர் இந்திய பொதுவுடைமை (கம்யூனிஸ்ட்) கட்சியின் ஆரம்பகால தலைவர்களில் ஒருவராக இருந்தார். தொழிலாளி வர்க்கத்தின் பிரச்சனைகளைப் வெளிப்படுத்துவதற்காக **தொழிலாளன்** (Worker) என்ற பத்திரிக்கையை வெளியிட்டார். பெரியாரோடும் சுயமரியாதை இயக்கத்தோடும் நெருக்கமாக இருந்தார்.



**ம. சிங்காரவேலர்**

## 10.6 இந்திய விடுதலைக்கு முன்பு மொழிப் போராட்டம்

பொதுவாக, மொழி என்பது அடையாளத்தின் வலிமையான குறியீடாகும், மேலும் இது ஒரு சமூகத்தின் பண்பாடு மற்றும் உணர்வுகளுடன் இயைந்து நிற்பது. தமிழ்மொழி பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பாதியிலும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் தனது மேன்மையை மீட்டுப் பெற்றது. மறைமலை அடிகளின் தனித்தமிழ் இயக்கம், பெரியாரின் மொழிச் சீர்திருத்தம் மற்றும் தமிழிசை இயக்கம் ஆகியவை தமிழுக்கு வலுச்சேர்த்தன. திராவிட உணர்வுக்கு இட்டுச் சென்ற தமிழ் மறுமலர்ச்சி நவீனத் தமிழ் மொழியின் வளர்ச்சியிலும் அதன் கலை வடிவங்களுடைய வளர்ச்சியிலும் பெரும் பங்களிப்பைச் செய்தது. ஆகம கோவில்களில் செய்யப்படும் சடங்குகள் தமிழில் செய்யப்படுவதில்லை. இசை நிகழ்ச்சிகளிலும் தமிழ் பாடல்கள் ஓரளவிலான இடத்தையே பெற்றிருந்தன. ஆபிரகாம் பண்டிதர் தமிழ் இசை வரலாற்றை முறையாகக் கற்றாய்ந்து, பழந்தமிழர் இசை முறையை மீட்டுருவாக்கம் செய்ய முயன்றார். 1912இல் தஞ்சாவூர் 'சங்கீத வித்யா மகாஜன சங்கம்' என்ற அமைப்பை ஏற்படுத்தினார். அதுவே தமிழிசை இயக்கத்தின் கருமூலமானது. இசை நிகழ்வுகளில் தமிழில் பாடல்கள் பாடப்படுவதற்கு இவ்வியக்கம் முக்கியத்துவம் வழங்கியது. தமிழிசையின் நிலை குறித்து விவாதிக்க 1943இல் முதல் தமிழிசை மாநாடு நடத்தப்பட்டது.

தமிழ்நாட்டில் வெவ்வேறு காலப்பகுதிகளில் இந்தி கட்டாயமொழியாக நடைமுறைப்படுத்தப்பட்டது தமிழ்மொழிக்கும், பண்பாட்டிற்குமான அச்சுறுத்தலாகவே கருதப்பட்டது. தமிழுக்கு மேலாக இந்தியை அறிமுகம் செய்வது திராவிடர்களுக்கான வேலைவாய்ப்புகளை மறுப்பதாக அமையுமென பெரியார் அறிவித்தார். இந்திமொழி அறிமுகம் செய்யப்பட்டால் தமிழ்மொழி பாதிப்புக்குள்ளாகும் என மறைமலை அடிகள் சுட்டிக் காட்டினார். இந்தி எதிர்ப்பு இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் தங்கள் போராட்டத்தை பிராமணியத்திற்கும் தமிழின் மீதான சமஸ்கிருதத்தின் ஆதிக்கத்திற்கும் எதிரான கருத்தியல் போராகவே கருதினர்.

## 10.7 பெண்கள் இயக்கங்கள்

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், சென்னை மாகாணத்தில் பெண்களை வலிமையுள்ளவர்களாக மாற்றுதல் எனும் நோக்கத்துடன் பல பெண்ணிய இயக்கங்கள் நிறுவப்பெற்றன. அவைகளுள் தமிழ் நாட்டில் உருவான இந்தியப் பெண்கள் சங்கம் (Women's India Association – WIA), அகில இந்தியப் பெண்கள் மாநாடு (All India Women's conference – ALWC) ஆகியவை முக்கியமானவையாகும். இந்தியப் பெண்கள் சங்கம் (WIA) என்பது 1917இல் அன்னிபெசன்ட், டோரதி ஜினராஜதாசா, மார்கரெட் கசின்ஸ் ஆகியோர்களால் சென்னை அடையாறு பகுதியில் தொடங்கப்பெற்றது. இவ்வமைப்பு தனிநபர் சுகாதாரம், திருமணச் சட்டங்கள், வாக்குரிமை, குழந்தை வளர்ப்பு மற்றும் பொது வாழ்வில் பெண்களின் பங்கு ஆகியவை குறித்து பல்வேறு மொழிகளில் துண்டுப்பிரசுரங்களையும் செய்தி மடல்களையும் வெளியிட்டன. இதே சமயத்தில் இந்தியப் பெண்கள் சங்கம், பெண்கல்வி குறித்த பிரச்சனைகளைக் கையாள்வதற்காக 1927இல் அகில இந்திய பெண்கள் மாநாட்டை நிறுவியது. மேலும் அரசு பெண்களின் மேம்பாட்டிற்காகப் பல கொள்கைகளை நடைமுறைப்படுத்த வேண்டுமெனப் பரிந்துரை செய்தது.

பெண்களின் விடுதலை என்பது சுயமரியாதை இயக்கத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும். பெரியாரின் தலைமையிலான சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்தோர், பாலின சமத்துவம் மற்றும் பாலினம் குறித்த சமூகத்தின் உணர்வுகளை மேம்படுத்துதல் ஆகியவற்றுக்காகப் பணியாற்றினர். தங்களுடைய கருத்துகளைப்



10th_History_Unit_10.indd 131 24-03-2020 12:32:49

www.tntextbooks.in

பங்கிட்டு கொள்வதற்கான ஒரு இடத்தை பெண்களுக்கு இவ்வியக்கம் ஏற்படுத்திக் கொடுத்தது. இவ்வியக்கத்தில் தீவிரமாகப் பணியாற்றிய பெண்கள் பலர் இருந்தனர். முத்துலட்சுமி அம்மையார், நாகம்மை, கண்ணம்மா, நீலாவதி, மூவலூர் இராமாமிர்தம், ருக்மணி அம்மாள், அலமேலு மங்கை தாயாரம்மாள், நீலாம்பிகை மற்றும் சிவகாமி சிதம்பரனார் ஆகியோர் அவர்களுள் முக்கியமானவர்கள் ஆவர்.



**மூவலூர் இராமாமிர்தம்**

கடவுளுக்கு இறைப்பணி செய்யும் சேவகர்களாக இளம் பெண்களை இந்து கோவில்களுக்கு அர்ப்பணிக்கும் வழக்கம் இருந்தது அவ்வாறு அர்ப்பணிக்கப்பட்டோர் தேவதாசி என்று அறியப்பட்டனர். கடவுளுக்குச் செய்யப்படும் சேவை எனும் நோக்கில் அமைந்திருந்தாலும் நாளடைவில் இம்முறை பெரும் ஒழுக்கக்கேட்டிற்கும் பெண்களைத் தவறாகப் பயன்படுத்துவதற்கும் இட்டுச்சென்றது. இத்தேவதாசி முறையை ஒழிப்பதற்காகச் சட்டம் இயற்றப்பட வேண்டும் என்பதற்காக நடைபெற்ற இயக்கத்தில் டாக்டர். முத்துலட்சுமி அம்மையார் முதலிடம் வகித்தார். 'மதராஸ் (அர்பணிப்பைத் தடுத்தல்) தேவதாசி சட்டம் 1947' எனும் சட்டம் அரசால் இயற்றப்பட்டது.

1930இல் சென்னை சட்டமன்றத்தில் முத்துலட்சுமி அம்மையார் "சென்னை மாகாணத்தில் இந்து கோவில்களுக்குப் பெண்கள் அர்பணிக்கப்படுவதை தடுப்பது" எனும் மசோதாவை அறிமுகப்படுத்தினார். பின்னர் தேவதாசி ஒழிப்புச் சட்டமாக மாறிய இம் மசோதா, இந்து கோவில் வளாகங்களிலோ அல்லது வேறு வழிபாட்டு இடங்களிலோ "பொட்டுக் கட்டும் சடங்கு" நடத்துவது சட்டத்திற்குப் புறம்பானதாகும் என அறிவித்தது. தேவதாசிகள் திருமணம் செய்து கொள்வதற்கு சட்டபூர்வமான அனுமதியை வழங்கியது. மேலும் தேவதாசி முறைக்கு உதவிசெய்கிற தூண்டிவிடுகிற குற்றத்தை செய்வோர்க்கு குறைந்த பட்சம் ஐந்தாண்டு சிறை தண்டனை என ஆணையிட்டது. இம்மசோதா சட்டமாக மாறுவதற்கு 15 ஆண்டுகள் காத்திருந்தது.

## பாடச்சுருக்கம்

- காலனியத்தின் தலையீட்டினாலும் பகுத்தறிவு இயக்கத்தின் எழுச்சியினாலும் இந்திய அறிவுஜீவிகளிடையே தன்னைத்தானே உள்ளாய்வு செய்து கொள்ளும் உள்முகச் சிந்தனைச் செயல்படுவதை பத்தொன்பதாம் நூற்றாண்டு இந்தியா எதிர்கொண்டது. இது இந்திய மறுமலர்ச்சிக்கு இட்டுச் சென்றது.
- தமிழ்நாட்டில், அச்சுக் கூடங்களின் வளர்ச்சி, பழம்பெரும் சமயச் சார்பற்ற தமிழ் இலக்கியங்கள் வெளியிடப்பட்டு பரவுவதற்கு செயலூக்கியாய் அமைந்தது.
- பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழறிஞர்கள் தமிழ் செவ்வியல் இலக்கியங்களை வெளியிடுவதற்கு அயராது உழைத்தனர்.
- இம்மாற்றம் தமிழ்மொழி, இலக்கியம் ஆகியவற்றுக்கு மட்டும் புத்தூக்கம் அளிக்கவில்லை. நடைமுறையிலிருந்த சாதிப்படிநிலைகளுக்குச் சவாலாக அமைந்தது.
- 1916இல் நிறுவப் பெற்ற நீதிக்கட்சி, சென்னை மாகாணத்தில் இருந்த பிராமணர் அல்லாதவர்களின் பிரச்சனைகளுக்காகக் குரல் கொடுத்தது.
- சுயமரியாதை இயக்கத்தின் முன்னோடியான பெரியார் ஈ.வெ. ராமசாமி, அடிப்படைவாதத்தின் நிறை குறைகளை மதிப்பிட்டார்.
- இறுதியாகத் தமிழ் நாட்டின் பகுத்தறிவுச் சிந்தனைகள் நவீன இந்திய அரசின் ஆக்கபூர்வமான வளர்ச்சிகளுக்கு மாதிரியாய் அமைந்தது.

## A-Z கலைச்சொற்கள்

| | | |
|---|---|---|
| சுவிசேஷர்கள், நற்செய்தியாளர் | **evangelical** | Christian groups that believe that the teaching of the Bible and persuading others to join them is extremely important |
| மேலாதிக்கம் | **hegemony** | leadership or dominance, especially by one country or social group over others |
| எழுச்சி | **resurgence** | renewal, revival |



10th_History_Unit_10.indd 132 24-03-2020 12:32:49

| | | |
|---|---|---|
| மொழியியலாளர்கள் | **linguists** | a person skilled in languages |
| ஒதுக்கப்பட்ட | **marginalised** | a person, group concept treated as insignificant or sidelined |
| எரிச்சலூட்டும் | **irked** | irritated, annoyed |
| ஒழித்துக்கட்டும் | **debunking** | expose the falseness or hollowness of (a myth, idea or belief) |
| படுதோல்வியுறச் செய்தல் | **trounced** | defeat heavily in a contest |
| விமர்சிப்பது | **critiquing** | evaluate in a detailed and analytical way |
| அநீதியான | **iniquitous** | grossly unfair and morally wrong |
| புனைபெயர் | **pseudonym** | a fictitious name, especially one used by an author |
| பெயரிடப்பட்டு | **rechristened** | give a new name to |

## பயிற்சி

D7C8KW

### I சரியான விடையைத் தேர்வு செய்யவும்

1. 1709இல் தரங்கம்பாடியில் ____________ ஒரு முழுமையான அச்சகத்தை நிறுவினார்.
   அ) கால்டுவெல் ஆ) F.W. எல்லிஸ்
   இ) சீகன்பால்கு ஈ) மீனாட்சி சுந்தரனார்
2. 1893இல் ஆதி திராவிட மகாஜன சபையை ____________ நிறுவினார்.
   அ) இரட்டைமலை சீனிவாசன்
   ஆ) B.R. அம்பேத்கார்
   இ) ராஜாஜி
   ஈ) எம்.சி. ராஜா
3. இந்தியாவின் நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட தொழிற்சங்கம் ____________இல் உருவாக்கப்பட்டது.
   அ) 1918 ஆ) 1917 இ) 1916 ஈ) 1914
4. அரசு அதிகாரிகளைத் தேர்வு செய்ய ____________ நீதிக் கட்சியால் நிறுவப் பெற்றது.
   அ) பணியாளர் தேர்வு வாரியம்
   ஆ) பொதுப் பணி ஆணையம்
   இ) மாநிலப் பணியாளர் ஆளெடுப்பு வாரியம்
   ஈ) பணியாளர் தேர்வாணையம்
5. சென்னை மாகாணத்தில், ஒடுக்கப்பட்ட வகுப்பிலிருந்து முதன் முறையாகச் சட்டமேலவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்.
   அ) எம்.சி. ராஜா
   ஆ) இரட்டை மலை சீனிவாசன்
   இ) டி.எம். நாயர்
   ஈ) பி. வரதராஜுலு

### II கோடிட்ட இடங்களை நிரப்புக

1. முதன் முதலாக அச்சேறிய ஐரோப்பிய மொழி அல்லாத மொழி ____________ ஆகும்.
2. புனித ஜார்ஜ் கோட்டைக் கல்லூரியை உருவாக்கியவர் ____________ ஆவார்.
3. ____________ தமிழ் மொழியியல் தூய்மை வாதத்தின் தந்தையெனக் கருதப்படுகிறார்.
4. தேர்தல் அரசியலில் பெண்கள் பங்கேற்பதை முதலில் அங்கீகரித்தது ____________ ஆகும்.
5. சூரியநாராயண சாஸ்திரி எனும் பெயர் ____________ என மாற்றம் பெற்றது.
6. ____________ தமிழ் இசைக்கு முக்கியத்துவம் கொடுத்தார்.
7. இந்தியாவின் முதல் பெண் சட்டமன்ற உறுப்பினர் ____________ ஆவார்.

### III சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்

1. (i) மிக முன்னதாகவே வெளியிடப்பட்ட தமிழ் இலக்கிய நூல்களில் ஒன்றான திருக்குறள் 1812இல் வெளியிடப்பட்டது.
   (ii) பனையோலைகளில் எழுதப்பெற்ற பல்வேறு தமிழ் இலக்கண இலக்கிய கையெழுத்துப் பிரதிகளை மறைமலையடிகள் சேகரித்துத் தொகுத்தார்.
   (iii) இராபர்ட் கால்டுவெல் திராவிட மொழிகளுக்கும் சமஸ்கிருதத்திற்கும் இடையில் இல்லாத ஒப்புமை திராவிட மொழிகளுக்கிடையே நெருக்கமாக நிலவுவதை நிரூபித்தார். தமிழின் தொன்மையையும் நிரூபித்தார்.
   (iv) திரு.வி. கல்யாணசுந்தரம் தொழில் சங்க இயக்கத்தின் தொடக்ககால முன்னோடியாக இருந்தார்.



10th_History_Unit_10.indd 133 24-03-2020 12:32:49

www.tntextbooks.in

அ) (i), (ii) ஆகியன சரி ஆ) (i), (iii) ஆகியன சரி
இ) (iv) சரி ஈ) (ii), (iii) ஆகியன சரி

2. **கூற்று:** சென்னை மாகாணத்தில் 1920 முதல் 1937 வரை நீதிக்கட்சி தொடர்ந்து ஆட்சியில் இருந்தது.

**காரணம்:** இக்காலகட்டத்தில் இரட்டையாட்சிக்கு எதிராக காங்கிரஸ் கட்சி சட்டமன்றத்தைப் புறக்கணித்தது.

அ) காரணம், கூற்று ஆகியவை சரி
ஆ)கூற்று சரி ஆனால் காரணம் கூற்றின் சரியான விளக்கமல்ல
இ) காரணம், கூற்று இரண்டுமே தவறு
ஈ) காரணம் சரி. ஆனால் கூற்றுடன் அது பொருந்தவில்லை.

## IV பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| 1. | திராவிடர் இல்லம் | – | மறைமலையடிகள் |
| 2. | தொழிலாளன் | – | இரட்டைமலை சீனிவாசன் |
| 3. | தனித் தமிழ் இயக்கம் | – | சிங்காரவேலர் |
| 4. | ஜீவிய சரித சுருக்கம் | – | நடேசனார் |

## V சுருக்கமாக விடையளிக்கவும்

1. தமிழ் மறுமலர்ச்சி குறித்து சிறுகுறிப்பு வரைக.
2. தென்னிந்தியமொழிகளுக்காககால்டுவெல்லின் பங்களிப்பினை நன்குப் புலப்படுத்துக.
3. தங்களுடைய எழுத்துக்களின் மூலம் தமிழ் இலக்கியத்தின் புத்துயிர்ப்புக்குப் பங்களிப்புச் செய்த ஆளுமைகளைப் பட்டியலிடவும்.
4. நீதிக்கட்சியால் நிறைவேற்றப்பட்ட இந்துசமய அறநிலைய சட்டத்தின் முக்கியத்துவத்தை விவாதிக்கவும்.
5. தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தால் வெளியிடப்பட்ட செய்தித்தாள்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
6. பெரியாரை ஒரு பெண்ணியவாதியாக மதிப்பிடுக.

## VI விரிவாக விடையளிக்கவும்

1. தமிழ் மறுமலர்ச்சியின் தோற்றம், வளர்ச்சி குறித்து ஒரு கட்டுரை எழுதவும்.
2. நீதிக்கட்சியின் தோற்றத்திற்கான பின்புலத்தை விளக்கி சமூக நீதிக்கான அதன் பங்களிப்பைச் சுட்டிக் காட்டவும்.
3. தமிழ்நாட்டினுடைய சமூக மாற்றங்களுக்கு ஈ.வெ.ரா. பெரியாரின் தீர்மானகரமான பங்களிப்பை மதிப்பீடு செய்யவும்.

## VII செயல்பாடுகள்

1. தொழிலாளர் இயக்கத்தையும், தொழிற்சங்க இயக்கத்தையும் வேறுபடுத்திப் பார்க்க மாணவர்களுக்கு கற்றுக் கொடுக்கலாம். உள்ளூர் அளவிலான தொழில் சங்கங்களின் நடவடிக்கைகள் குறித்து மாணவர்கள் ஒப்படைப்பு ஒன்றைச் செய்யலாம்.
2. உள்ளூர் அளவிலான எழுத்தாளர்கள் அமைப்புகளின்அல்லதுபெண்கள்அமைப்புகளின் செயல்பாடுகளை மாணவர்கள் தொகுக்கலாம்.

## மேற்கோள் நூல்கள்


1. K. Nambi Arooran, *Tamil Renaissance and Dravidian Nationalism 1905–1944*. Madurai: Koodal Publishers, 1980.
2. V. Geetha and S.V. Rajadurai, *Towards a Non-Brahmin Millennium: From Iyothee Thass to Periyar*. Calcutta: Samya, 1998.
3. Robert Hardgrave *The Dravidian Movement*. Bombay: Popular Prakashan, 1965.
4. Eugene F. Irschick, *Politics and Social Conflict in South India*. Berkeley: University of California Press, 1969.
5. Periyar. E.V. Ramasami, *Women Enslaved*. New Delhi: Critical Quest, 2009.
6. *Thoughts of Periyar E.V.R.: Speeches and Writings of Periyar E.V. Ramasamy*. V. Anaimuthu. Comp. Chennai: Periyar E.V. Ramasamy–Nagammai Education and Research Trust, 1974.


## மேலும் வாசிக்கத்தக்க நூல்


1. டாக்டர். கே.கே. பிள்ளை, தமிழக வரலாறு – மக்களும் பண்பாடும், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், சென்னை (ஆவணப் பதிப்பு: ஆகஸ்ட் - 2017)




10th_History_Unit_10.indd 134 24-03-2020 12:32:50

# காலக்கோடு

1 அலகு = 10 ஆண்டுகள்

## இந்திய தேசிய இயக்கத்தின் முக்கிய நிகழ்வுகள் (1900–1947)

1900

1905 – வங்கப்பிரிவினை / சுதேசி இயக்கம்
1906 – சுதேசி நீராவி கப்பல் நிறுவனம் தொடங்கப்பட்டது

1910

1916 – தன்னாட்சி இயக்கம் / லக்னோ ஒப்பந்தம்
1917 – சம்பரான் சத்தியாகிரகம்
1918 – கேதா சத்தியாகிரகம்
1919 – ரௌலட் சட்டம் / ஜாலியன்வாலா பாக் படுகொலை

1920

1920 – கிலாபத் இயக்கம் / ஒத்துழையாமை இயக்கம்
1922 – சௌரி சௌரா சம்பவம்
1923 – சுயராஜ்ஜியக் கட்சியின் தோற்றம்
1927 – சைமன் குழு நியமனம்
1928 – மோதிலால் நேரு அறிக்கை
1929 – லாகூர் காங்கிரஸ் மாநாடு

1930

1930 – உப்பு சத்தியாகிரகம் / முதல் வட்டமேசை மாநாடு
1931 – காந்தி–இர்வின் ஒப்பந்தம் / இரண்டாவது வட்டமேசை மாநாடு
1932 – வகுப்புவாரி பிரதிநிதித்துவம் / பூனா ஒப்பந்தம் / மூன்றாவது வட்டமேசை மாநாடு
1935 – இந்திய அரசு சட்டம்
1937 – மாகாணங்களில் முதலாவது காங்கிரஸ் அமைச்சரவை அமைக்கப்படுதல்

1940

1940 – ஆகஸ்ட் நன்கொடை / தனிநபர் சத்தியாகிரகம்
1942 – கிரிப்ஸ் தூதுக்குழு / வெள்ளையனே வெளியேறு இயக்கம்
1945 – வேவல் திட்டம் / சிம்லா மாநாடு
1946 – ராயல் இந்திய கப்பற்படை புரட்சி / அமைச்சரவை தூதுக்குழு வருகை / இடைக்கால அரசு
1947 – மௌண்ட்பேட்டன் திட்டம் / இந்தியா விடுதலை பெறுதல்

1950

# காலக்கோடு

1 அலகு = 10 ஆண்டுகள்

## உலக வரலாற்றில் முக்கிய நிகழ்வுகள் (1900–1950)

1900

1910

1910 – தென்னாப்பிரிக்க ஒன்றியம் உதயமாதல்

1912 – முதல் பால்கன் போர்

1914 – முதலாம் உலகப் போர் தொடக்கம்

1917 – ரஷ்யப் புரட்சி

1918 – முதல் உலகப் போர் முடிவு

1919 – பாரிஸ் அமைதி மாநாடு / வெர்செய்ல்ஸ் உடன்படிக்கை

1920

1920 – பன்னாட்டு சங்கம் தோற்றம்

1922 – முசோலினியின் ரோமாபுரி அணிவகுப்பு

1927 – வியட்நாம் தேசியக்கட்சி உதயம்

1929 – பொருளாதாரப் பெருமந்தம் / லேட்டரன் உடன்படிக்கை

1930

1933 – ஹிட்லர் ஜெர்மனியின் சான்சிலர் (முக்கிய அமைச்சர்) ஆதல்

1934 – நீண்ட பயணம்

1935 – முசோலினி எத்தியோப்பியாவின் மீது படையெடுத்தது

1938 – மியூனிச் உடன்படிக்கை

1939 – இரண்டாம் உலகப் போர் தொடக்கம்

1940

1940 – பிரிட்டன் போர்

1941 – முத்துத் துறைமுக நிகழ்வு

1942 – ஸ்டாலின்கிரேடு போர்

1945 – இரண்டாம் உலகப் போர் முடிவு / ஐக்கிய நாடுகள் சபை தோற்றம்

1950



10th_History_Unit_10.indd 136 24-03-2020 12:32:50

# புவியியல்

## அலகு – 1

# இந்தியா – அமைவிடம், நிலத்தோற்றம் மற்றும் வடிகாலமைப்பு



### கற்றலின் நோக்கங்கள்

T2UEF4

- புவியில், இந்தியாவின் அமைவிட முக்கியத்துவத்தைப்பற்றி புரிந்துகொள்ளல்
- இந்தியாவின் முக்கிய தனித்துவப் பண்புகளைக் கொண்ட இயற்கையமைப்புப் பிரிவுகளைப் பற்றி அறிந்துகொள்ளல்
- இந்திய பெரும் சமவெளிப் பகுதிகளை ஒப்பிடுதல்
- இந்தியாவின் வடிகாலமைப்பு பற்றி புரிந்துகொள்ளல்
- இமயமலையில் உருவாகும் ஆறுகள் மற்றும் தீபகற்ப ஆறுகளுக்கு இடையேயான வேற்றுமைகளைப் புரிந்துகொள்ளல்

### அறிமுகம்

இந்தியா பரப்பளவில் உலகின் ஏழாவது பெரிய நாடாகவும் ஆசிய கண்டத்தின் இரண்டாவது பெரிய நாடாகவும் உள்ளது. இது ஏனைய ஆசிய பகுதிகளிலிருந்து இமயமலையால் பிரிக்கப்பட்டும் உள்ளது. இந்தியாவின் நிலப்பரப்பு 32,87,263 ச.கி.மீ ஆகும். இது புவியில் மொத்த பரப்பளவில் 2.4 சதவீதமாகும். உலகிலுள்ள பல நாடுகளைவிடவும் இந்தியாவில் உள்ள பல மாநிலங்கள் பரப்பளவில் பெரியவைகளாக உள்ளன.

#### இந்தியாவின் நிலம் மற்றும் நீர் எல்லைகள்

இந்தியா 15,200 கி.மீ நில எல்லைகளைக் கொண்டுள்ளது. வடமேற்கில் பாகிஸ்தான், ஆப்கானிஸ்தானுடனும், வடக்கில் சீனா, நேபாளம், பூடானுடனும், கிழக்கில் வங்காளதேசம் மற்றும் மியான்மர் நாடுகளுடனும் நில எல்லைகளைப் பகிர்ந்து கொள்கிறது.

மேலும் இந்தியா அதிகபட்சமாக வங்காள தேசத்துடன் 4,156 கி.மீ நீளமுள்ள நில எல்லையையும், குறுகிய எல்லையாக ஆப்கானிஸ்தானுடன் 106 கி.மீ நில எல்லையையும் கொண்டுள்ளது.

இந்தியா, தெற்கில் இந்தியப் பெருங்கடலாலும், கிழக்கில் வங்காள விரிகுடாவாலும், மேற்கே அரபிக் கடலாலும் சூழப்பட்டு சுமார் 6,100 கி.மீ நீளமுள்ள நீண்ட கடற்கரைப் பகுதியை மூன்று பக்கங்களில் கொண்டுள்ளது.

இந்திய கடற்கரையின் மொத்த நீளம் மற்றும் தீவுக் கூட்டங்களையும் சேர்த்து 7,516.6 கி.மீ. ஆகும். இந்தியாவையும் இலங்கையையும் பிரிக்கும் குறுகிய ஆழமற்ற கடல் பகுதி பாக்நீர்சந்தி ஆகும்.

#### இந்தியாவும் உலகமும்

இந்தியாவின் அமைவிடம் கிழக்கு மற்றும் மேற்கு ஆசியாவிற்கு மத்தியிலும், ஆசியாவின் தென்பகுதியிலும் அமைந்துள்ளது. இந்தியப் பெருங்கடல் வழிப்பாதை, மேற்கிலுள்ள ஐரோப்பிய நாடுகளையும், கிழக்காசிய நாடுகளையும் இணைத்து இந்தியாவிற்கு அமைவிட முக்கியத்துவத்தை அளிக்கிறது. இந்தியாவின் மேற்கு கடற்கரை மேற்கு ஆசியா, ஆப்பிரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளை இணைக்கும் பாலமாகவும், கிழக்குக் கடற்கரை தென்கிழக்கு மற்றும் கிழக்காசிய நாடுகளுடன் நெருங்கிய வணிகத் தொடர்பு கொள்ளவும் உதவி புரிகிறது.

#### இந்தியா – துணைக்கண்டம்

பாகிஸ்தான், மியான்மர், வங்காளதேசம், நேபாளம், பூடான் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுடன் இணைந்து இந்தியா ஒரு துணைக்கண்டம் என அழைக்கப்படுகிறது.

இயற்கை நிலஅமைப்பு, காலநிலை, இயற்கைத் தாவரம், கனிமங்கள் மற்றும் மனித வளங்கள் போன்றவற்றில் ஒரு கண்டத்தில் காணப்படக்கூடிய வேறுபாடுகளைக் கொண்டுள்ளதால் இந்தியா ஒரு துணைக்கண்டம் என அழைக்கப்படுகிறது.



10th_Geography_Unit_1_TM.indd 138 11-04-2020 11:42:34

www.tntextbooks.in




## 1.1 அமைவிடமும் பரப்பளவும்

இந்தியா 8°4' வட அட்சம் முதல் 37°6' வட அட்சம் வரையிலும் 68°7' கிழக்கு தீர்க்கம் முதல் 97°25' கிழக்கு தீர்க்கம் வரையிலும் பரவியுள்ளது. அட்ச தீர்க்க பரவல்படி இந்தியா முழுமையும் வடகிழக்கு அரைக்கோளத்தில் அமைந்துள்ளது.

இந்தியாவின் தென்கோடி பகுதியான முன்பு பிக்மெலியன் என்று அழைக்கப்பட்ட இந்திரா முனை 6° 45' வட அட்சத்தில் அந்தமான் நிக்கோபர் தீவுக் கூட்டத்தில் அமைந்துள்ளது. இந்திய நிலப்பகுதியின் தென்கோடி குமரி முனையாகும். வடமுனை இந்திரா கோல் எனவும் அழைக்கப்படுகிறது.

இந்தியா, வடக்கே லடாக்கிலுள்ள இந்திராகோல் முதல் தெற்கே கன்னியாகுமரி வரை 3214 கி.மீ நீளத்தையும், மேற்கே குஜாரத்திலுள்ள ரான் ஆப் கட்ச் முதல் கிழக்கே அருணாச்சல பிரதேசம் வரை 2933 கி.மீ நீளத்தையும் கொண்டுள்ளது. 23°30' வட அட்சமான கடகரேகை இந்தியாவின் மையமாக அமைந்து தென்பகுதி வெப்ப மண்டலமாகவும், வடபகுதி மித வெப்ப மண்டலமாகவும், இரு பெரும் பகுதிகளாக பிரிக்கிறது.

இந்தியா 28 மாநிலங்களாகவும் 9 யூனியன் பிரதேசங்களாகவும் நிர்வாக வசதிக்காக பிரிக்கப்பட்டுள்ளது.

### இந்திய திட்ட நேரம்

மேற்கில் உள்ள குஜராத் முதல் கிழக்கில் உள்ள அருணாச்சல பிரதேசதம் வரை இந்தியா ஏறத்தாழ 30 தீர்க்க கோடுகளைக் கொண்டுள்ளது.

இந்தியாவின் கிழக்கிலுள்ள அருணாச்சல பிரதேசத்தில் மேற்கிலுள்ள குஜராத்தைக் காட்டிலும் இரண்டு மணி நேரம் முன்னதாகவே சூரியன் உதயமாகிறது. இந்த நேர வேறுபாட்டை தவிர்ப்பதற்காக, இந்தியாவின் மத்திய தீர்க்கரேகையான 82°30' கிழக்கு தீர்க்கரேகையின் தலநேரம், இந்திய திட்டநேரமாக எடுத்துக்கொள்ளப்படுகிறது. இத்தீர்க்கரேகை மிர்சாபூர் (அலகாபாத்) வழியாக செல்கிறது. இந்திய திட்ட நேரமானது கீரீன்வீச் திட்ட நேரத்தை விட 5 மணி 30 நிமிடம் முன்னதாக உள்ளது.

- மேற்கு – கிழக்கு மற்றும் வடக்கு – தெற்கு பரவல்.
- அதிக மற்றும் குறைந்த பரப்பளவுள்ள மாநிலங்கள்.
- சர்வதேச எல்லைகளைக் கொண்டிராத மாநிலங்கள் ஆகியவற்றை கண்டறிக.



10th_Geography_Unit_1_TM.indd 139 11-04-2020 11:42:34

**உங்களுக்குத் தெரியுமா?**

ஆந்திரப்பிரதேசத்தின் தலைநகரம் அமராவதி நகர் ஆகும். ஆந்திரப்பிரதேச மறு சீரமைப்புச் சட்டத்தின்படி 2024வரை ஹைதராபாத் நகரம் ஆந்திர பிரதேசம் மற்றும் தெலங்கானா மாநிலங்களின் தலைநகரமாக இருக்கும்.

## 1.2 இந்தியாவின் முக்கிய இயற்கையமைப்பு பிரிவுகள்

EGE1LK

இந்தியா வடக்கில் உள்ள கம்பீரமான இமயமலை முகடுகளையும், தெற்கில் அழகான கடற்கரைகளையும் மேற்கில் இந்திய பாலைவனத்தையும் கிழக்கில் புகழ்பெற்ற இயற்கைப் பாரம்பரியத்தையும் கொண்ட சிறந்த புவியியல் தோற்றங்களைக் கொண்ட ஒரு வல்லமை பெற்ற நாடாக அமைந்துள்ளது.

இந்திய நிலப்பகுதி பல மாறுபட்ட இயற்கை நிலத் தோற்றங்களைப் பெற்றுள்ளது. இந்தியாவின் இயற்கை அமைப்பை 6 பெரும் பிரிவுகளாக பிரிக்கலாம்.

1. வடக்கு மலைகள்
2. வட பெரும் சமவெளிகள்
3. தீபகற்ப பீடபூமிகள்
4. கடற்கரைச் சமவெளிகள்
5. தீவுகள்

### வடக்கு மலைகள்

இமயமலைகள் (வடக்கு மலைகள்) உலகின் இளமையான மற்றும் மிக உயரமான மலைத் தொடர்கள் ஆகும். ஏனெனில் இம்மலைகள் சில மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னார்தான் உருவாகியவை. மேலும் புவிமேலோட்டு பேரியக்க விசைகள் காரணமாக புவி மேலோடு மடிக்கப்பட்டு, மடிப்பு மலைகளாக உருவாகின. மேற்கில் சிந்து பள்ளத்தாக்கிலிருந்து கிழக்கே பிரம்மபுத்திரா பள்ளத்தாக்கு வரை சுமார் 2500 கி.மீ நீளத்திற்கு நீண்டு பரவியுள்ளது. இம்மலைகள் காஷ்மீர் பகுதியில் 500 கி.மீ அகலத்துடனும், அருணாச்சலப் பிரதேசத்தில் 200 கி.மீ அகலத்துடனும் வேறுபடுகிறது. பிரபலமான பாமீர் முடிச்சு "உலகின் கூரை" என அழைக்கப்படுகிறது. இது மத்திய ஆசியாவின் உயரமான மலைத் தொடரையும் இமயமலையையும்இணைக்கும்பகுதியாகஉள்ளது. இமயமலை பாமீர் முடிச்சியிலிருந்து கீழ்நோக்கி வில் போன்ற வடிவத்தில் அமைந்துள்ளது.

இமாலயா (Himalaya) என்ற சொல் சமஸ்கிருத மொழியில் "பனிஉறைவிடம்" (Abode of Snow) என அழைக்கப்படுகிறது.

இந்தியாவின் பெரும் அரணாக உள்ள இமயமலையை மூன்று பெரும் உட்பிரிவுகளாக பிரிக்கலாம்.

1. ட்ரான்ஸ் இமயமலைகள் (The Trans Himalayas or Western Himalayas)
2. இமயமலைகள் (Himalayas or Central Himalayas)
3. கிழக்கு இமயமலை / பூர்வாஞ்சல் குன்றுகள் (Eastern Himalayas or Purvanchal Hills)

**உங்களுக்குத் தெரியுமா?**

ஆரவல்லி மலைத்தொடர் இந்தியாவிலேயே மிகப் பழமையான மடிப்பு மலைத் தொடராகும்.



#### 1. ட்ரான்ஸ் இமயமலை (மேற்கு இமயமலைகள்)

இம்மலைகள் ஜம்மு–காஷ்மீர் மற்றும் திபெத் பீடபூமியில் அமைந்துள்ளது. இதன் பரப்பளவு திபெத்தில் அதிகமாக இருப்பதால் இவை "திபெத்தியன் இமயமலை" எனவும் அழைக்கப்படுகிறது. இம்மலைகள் மேற்கு மற்றும் கிழக்கு எல்லைகளில் சுமார் 40 கி.மீ அகலத்துடனும் அதன் மையப்பகுதியில் 225 கி.மீ அகலத்துடன் காணப்படுகிறது. இப்பகுதியில் காணப்படும் பாறை அமைப்புகள் கடலடி உயிரினப் படிமங்களைக் கொண்ட டெர்சியரி கிரானைட் பாறைகளாகும். இப்பாறைகளின் ஒரு பகுதி உருமாறிய பாறைப் படிமங்களாக, இமயமலைத்தொடரின் மைய அச்சாக அமைந்துள்ளது. இங்குள்ள முக்கியமான மலைத்தொடர்கள் சாஸ்கர், லடாக், கைலாஸ் மற்றும் காரகோரம் ஆகும்.

#### 2. இமயமலை

இவை வடக்கு மலைகளின் பெரிய பகுதியாக அமைந்துள்ளது. இது ஒரு இளம் மடிப்பு மலையாகும். வடக்கே இருந்த யுரேசியா (Eurasia) நிலப்பகுதியும், தெற்கே இருந்த கோண்ட்வானா



10th_Geography_Unit_1_TM.indd 140 11-04-2020 11:42:35




நிலப்பகுதியும் (Gondwana Land Mass) ஒன்றை நோக்கி ஒன்று நகர்ந்ததால் ஏற்பட்ட அழுத்தத்தின் காரணமாக இடையிலிருந்த டெத்திஸ் என்ற கடல் மடிக்கப்பட்டு இமயமலை உருவானது. இது பல மலைத்தொடர்களை உள்ளடக்கியது.

இவை மூன்று பிரிவுகளாக பிரிக்கப்படுகிறது.

(i) **உள் இமயமலைகள் / இமாத்ரி**

(ii) **மத்திய இமயமலை / இமாச்சல்**

(iii) **வெளி இமயமலை / சிவாலிக்**



10th_Geography_Unit_1_TM.indd 141 11-04-2020 11:42:35

www.tntextbooks.in




### (i) உள் இமயமலை அல்லது இமாத்ரி (Greater Himalayas/Himadri)

உள் இமயமலை, மத்திய இமயமலைக்கு வடக்கே மிக உயர்ந்து செங்குத்தாக அமைந்துள்ளது. இதன் சராசரி அகலம் 25 கி.மீ மற்றும் சராசரி உயரம் 6000 மீ ஆகும். சிறிய இமயமலை மற்றும் சிவாலிக் குன்றுகளை ஒப்பிடும்போது இப்பகுதி குறைவான மழையைப் பெறுகின்றது.

மற்ற மலைத்தொடர்களை ஒப்பிடும் போது இப்பகுதியில் பௌதீக சிதைவாகவே உள்ளது. இமயமலையில் மிக உயர்ந்த சிகரங்களில் பெரும்பலானவை இம்மலைத்தொடரில் அமைந்துள்ளன. அதில் முக்கியமானவை எவரெஸ்ட் (8848 மீ) மற்றும் கஞ்சன் ஜங்கா (8586 மீ) ஆகும். எவரெஸ்ட் சிகரம் நேபாளத்திலும், கஞ்சன் ஜங்கா சிகரம் நேபாளம் மற்றும் சிக்கிமிற்கு இடையேயும் அமைந்துள்ளது.



10th_Geography_Unit_1_TM.indd 142 11-04-2020 11:42:35

உங்களுக்குத் தெரியுமா?

- இமயமலை பல சிகரங்களின் இருப்பிடமாக உள்ளது.
- உலகிலுள்ள ஏனைய மலைத்தொடர்களைக் காட்டிலும் அதிகமான சிகரங்களைக் கொண்டுள்ளது.
- உலகிலுள்ள 14 உயரமான சிகரங்களில் 9 சிகரங்களை தன்னகத்தே கொண்டுள்ளது.

இது மற்ற மலைத்தொடர்களைவிட தொடர்ச்சியான மலைத்தொடராக அமைந்துள்ளது. இம்மலையில் எப்போதும் நிரந்தரமாக பனிசூழ்ந்து காணப்படுவதால் கங்கோத்திரி, சியாச்சின் போன்ற பனியாறுகள் காணப்படுகின்றன.

**(ii) மத்திய இமயமலைகள் அல்லது இமாச்சல்** (Lesser Himalayas or Himachal)

இது இமய மலையின் மத்திய மலைத் தொடராகும். இதன் சராசரி அகலம் 80 கி.மீ ஆகும். இதன் சராசரி உயரம் 3500 மீ முதல் 4500 மீ வரை வேறுபடுகிறது. வெண்கற்பாறைகள், சுண்ணாம்புப் பாறைகள், மற்றும் மணற்பாறைகள் இத்தொடரில் காணப்படுகின்றன. நகரமயமாக்கல், காடுகள் அழிப்பு மற்றும் மிக அதிக மழைப்பொழிவின் காரணமாக மண்ணரிப்பு ஏற்படுகிறது. இம்மலைத்தொடரில் பீர்பாஞ்சல், தவ்லதார் மற்றும் மகாபாரத் ஆகிய மலைகள் காணப்படுகின்றன. புகழ் பெற்ற கோடை வாழிடங்களான **சிம்லா, முசௌரி, நைனிடால், அல்மோரா, ரானிகட்** மற்றும் **டார்ஜிலிங்** போன்றவை இம்மலைத் தொடரில் அமைந்துள்ளன.

- காரகோரம் கணவாய் (ஜம்மு–காஷ்மீர்), ஜொஷிலா கணவாய், சிப்கிலா கணவாய் (இமாச்சல் பிரதேசம்) பொமிடிலா கணவாய் (அருணாச்சல பிரதேசம்) நாதுலா மற்றும் ஜெலிப்லா கணவாய் (சிக்கிம்) ஆகியன இமயமலையின் முக்கியக் கணவாய்களாகும்.
- பாகிஸ்தானையும், ஆப்கானிஸ்தானையும் இணைக்கும் கைபர் கணவாய் மற்றும் பாகிஸ்தானிலுள்ள போலன் கணவாயும் இந்தியத் துணைக்கண்டத்திலுள்ள முக்கியக் கணவாய்களாகும்.

**(iii) வெளி இமயமலை / சிவாலிக்**

இம்மலைத் தொடரானது ஜம்மு காஷ்மீரில் இருந்து அசாம் வரை பரவிக் காணப்படுகிறது. இத்தொடரின் ஒரு பகுதி ஆறுகளால் உருவாக்கப்பட்ட படிவுகளால் ஆனது. இதன் உயரம் 900 மீட்டரிலிருந்து 1100 மீட்டர் வரை வேறுபடுகிறது. இதன் சராசரி உயரம் 1000 மீ ஆகும்.

இதன் சராசரி அகலமானது மேற்கில் 50 கி.மீ. முதல் கிழக்கில் 10 கி.மீ வரையும் மாறுபடுகிறது. இது மிகவும் தொடர்ச்சியற்ற மலைத் தொடர்களாகும். குறுகலான நீண்ட பள்ளத்தாக்குகள், சிறிய இமயமலைக்கும் வெளிப்புற இமயமலைக்கும் இடையில் காணப்படுகின்றன. இவை கிழக்கு பகுதியில் டூயர்ஸ் (Duars) எனவும் மேற்கு பகுதியில் டூன்கள் (Duns) எனவும் அழைக்கப்படுகிறது. இப்பகுதிகள் குடியிருப்புகளின் வளர்ச்சிக்கு ஏற்றதாக உள்ளது.

**3 பூர்வாஞ்சல் குன்றுகள்**

இவை இமயமலையின் கிழக்கு கிளையாகும். இது வடகிழக்கு மாநிலங்களில் பரவியுள்ளது. பெரும்பாலான குன்றுகள் மியான்மர் மற்றும் இந்திய எல்லைகளுக்கிடையே காணப்படுகின்றன. மற்ற மலைகள் அல்லது குன்றுகள் இந்தியாவின் உட்பகுதிகளில் பரவியுள்ளன. டாப்லா, அபோர், மிஸ்மி, பட்காய்பம், நாகா, மாணிப்பூர், மிக்கீர், காரோ, காசி மற்றும் ஜெயந்தியா குன்றுகள் அனைத்தும் ஒன்றிணைந்து பூர்வாஞ்சல் மலைகள் என்று அழைக்கப்படுகின்றது.

**இமயமலையின் முக்கியத்துவம்**

- தென்மேற்கு பருவக்காற்றைத் தடுத்து வட இந்திய பகுதிக்கு கனமழையைக் கொடுக்கிறது.
- இந்திய துணைக்கண்டத்திற்கு இயற்கை அரணாக அமைந்துள்ளது.
- வற்றாத நதிகளின் பிறப்பிடமாக உள்ளது. (எ.கா) சிந்து, கங்கை, பிரம்மபுத்திரா மற்றும் பிற ஆறுகள்.
- இயற்கை அழகின் காரணமாக வடக்கு மலைகள் சுற்றுலா பயணிகளின் சொர்க்கமாகத் திகழ்கிறது.
- பல கோடைவாழிடங்களும், புனித தலங்களான அமர்நாத், கேதர்நாத், பத்ரிநாத் மற்றும் வைஷ்ணவிதேவி கோயில்களும் இம்மலைத் தொடரில் அமைந்துள்ளன.
- வனப்பொருட்கள் சார்ந்த தொழிலகங்களுக்கு மூலப்பொருட்களை அளிக்கிறது.
- மத்திய ஆசியாவிலிருந்து வீசும் கடும் குளிர்காற்றை தடுத்து இந்தியாவை குளிரிலிருந்து பாதுகாக்கிறது.
- இமயமலை பல்லுயிர் மண்டலத்திற்கு பெயர் பெற்றவை.

## வடபெரும் சமவெளிகள்

வளமான சமவெளிகள், வடக்கு மலைகளின் தென்புறம் பரந்து காணப்படுகிறது. சிந்து, கங்கை பிரம்மபுத்திரா மற்றும் அதன் துணையாறுகளால் உருவாக்கப்பட்ட வண்டல் மண் படிவுகளைக் கொண்ட உலகிலேயே வளமான சமவெளியாக இது உள்ளது. இதன் நீளம் சுமார் 2400 கி.மீ இதன் அகலம் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி 240 கி.மீ

முதல் 320 கி.மீ. வரை காணப்படுகிறது. இது 7 லட்சம் சதுர கிலோ மீட்டர் பரப்பளவிற்கு பரவியுள்ளது.

வட இந்திய பெரும் சமவெளி மேடு பள்ளமற்ற ஒரு சீரான சம பரப்பாக அமைந்துள்ளது. இவை இமயமலை மற்றும் விந்திய மலைகளிலுள்ள ஆறுகளின் படியவைத்தல் செயல்முறைகளால் உருவாக்கப்பட்டுள்ளன. இவ்வாறுகள் மலையடிச் சமவெளிகள் மற்றும் வெள்ளச் சமவெளிகளில் அதிகமான வண்டல் படிவுகளைப் படியவைக்கின்றன. வட பெரும் சமவெளி படிவுகளின் முக்கிய பண்புகள்:

**அ. பாபர் சமவெளி**

இச்சமவெளி இமயமலை ஆறுகளால் படியவைக்கப்பட்ட பெரும் மணல்கள் மற்றும் பலதரப்பட்ட படிவுகளால் ஆனது. இப்படிவுகளில் நுண் துளைகள் அதிகமாக உள்ளதால், இதன் வழியாக ஓடும் சிற்றோடைகள் நீர் உள்வாங்கப்பட்டு மறைந்து விடுகின்றன. இதன் அகலம் மேற்கில் (ஜம்மு) அகன்றும் கிழக்கில் (அஸ்ஸாம்) குறுகியும் 8 கி.மீ முதல் 15 கி.மீ வரை உள்ளது.

**ஆ. தராய் மண்டலம்**

தராய் மண்டலம் அதிகப்படியான ஈரப்பதம் கொண்ட பகுதியாகவும், காடுகள் வளர்வதற்கும் பல்வேறு விதமான வனவிலங்குகள் வாழ்வதற்கும் ஏற்றதாக உள்ளது. இம்மண்டலம் பாபர் பகுதிக்கு தெற்கில் அமைந்துள்ளது. இது சுமார் 15 கி.மீ முதல் 30 கி.மீ வரை அகலம் கொண்டது. இவை கிழக்கு பகுதியில் உள்ள பிரம்மபுத்திரா பள்ளத்தாக்கு பகுதியில் மிக அதிக மழை காரணமாக அகலமாக காணப்படுகிறது. பெரும்பாலான மாநிலங்களில் தராய் காடுகள் வேளாண்மை சாகுபடிக்காக அழிக்கப்பட்டு வருகின்றன.

**இ. பாங்கர் சமவெளி**

பெரும் சமவெளியில் காணப்படும் பாங்கர் என்பது மேட்டு நில வண்டல் படிவுகளைக் கொண்ட நிலத்தோற்றம். இங்குள்ள படிவுகள் யாவும் பழைய வண்டல் மண்ணால் ஆனவை. இவை வெள்ளப்பெருக்கு ஏற்படா உயர்நிலப் பகுதிகளில் அமைந்துள்ளன. இம்மண்ணானது கருமை நிறத்துடன், வளமான இலைமக்குகளைக் கொண்டும், நல்ல வடிகலாமைப்பையும் கொண்டுள்ளதால் இது வேளாண்மைக்கு உகந்ததாக உள்ளது.

**ஈ. காதர் சமவெளி**

ஆறுகளால் கொண்டுவரப்பட்டு படியவைக்கப்படும் புதிய வண்டல் மண் காதர் (அ) பெட் நிலம் (betland) என்று அழைக்கப்படுகிறது. மழைக்காலங்களில் ஒவ்வொரு ஆண்டும் புதிய வண்டல் படிவுகள் படியவைக்கப்படுகின்றன. காதர் மணல், களிமண், சேறு மற்றும் வண்டலைக் கொண்ட வளமிக்கச் சமவெளியாகும்.

**உ. டெல்டா**

கங்கை மற்றும் பிரம்மபுத்திரா ஆறுகளால் முகத்துவாரத்தில் உருவாக்கப்பட்ட வளமான முக்கோண வடிவ நிலப்பகுதியே சுந்தரவன டெல்டா எனப்படுகிறது. இது உலகின் மிகப்பெரிய மற்றும் அதிக வேகத்தில் உருவாகும் டெல்டா ஆகும். இப்பகுதியில் ஆறுகளின் வேகம் குறைவாக இருப்பதால், படிவுகள் படியவைக்கப்படுகின்றன. டெல்டாசமவெளி புதிய வண்டல் படிவுகள், பழைய வண்டல் படிவுகள் மற்றும் சதுப்புநிலங்களைக் கொண்ட ஒரு பகுதியாக உள்ளது. வண்டல் சமவெளியில் உயர் நிலப்பகுதி "சார்ஸ்" (Chars) எனவும் சதுப்பு நிலப்பகுதி "பில்ஸ்" (Bils) எனவும் அழைக்கப்படுகின்றன.

இந்தியாவின் வட இந்திய பெரும் சமவெளியைக் காலநிலை மற்றும் நிலப்பரப்பின் பண்புகளைக் கொண்டு 4 வகையாக பிரிக்கலாம்.

1. **இராஜஸ்தான் சமவெளி:** இராஜஸ்தான் சமவெளி ஆரவல்லி மலைத்தொடருக்கு மேற்கில் ஏறத்தாழ 1,75,000 சதுர கி.மீ பரப்பளவில் பரவியுள்ளது. இச்சமவெளி லூனி மற்றும் மறைந்து போன சரஸ்வதி ஆறுகளின் படிவுகளால் உருவாகியுள்ளது. பல உப்பு ஏரிகள் இராஜஸ்தான் சமவெளியில் காணப்படுகின்றன. ஜெய்பூருக்கு அருகில் உள்ள சாம்பார் ஏரி (அ) புஷ்கர் ஏரி அவற்றுள் குறிப்பிடத்தக்கதாகும்.

   பெரிய இந்திய பாலைவனம், தார் பாலைவனம் என்றும் அழைக்கப்படுகிறது. இது இந்திய துணைக்கண்டத்தின் வடமேற்கு பகுதியில் அமைந்துள்ள மிகப்பெரிய வறண்ட நிலப்பகுதியாக உள்ளது. 2 இலட்சம் ச.கி.மீ. பரப்பளவில் இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் இயற்கை எல்லையாக அமைந்துள்ளது. இது உலகின் 17 வது மிகப்பெரிய பாலைவனமாகும்.

   இப்பாலைவனம் ஆரவல்லி மலைத்தொடருக்கு மேற்கே, இராஜஸ்தான் மாநிலத்தின் மூன்றில் இரண்டு பங்கு நிலப்பரப்பைக் கொண்டுள்ளது. இந்த பாலைவனப் பகுதி மருஸ்தலி என்றும், அரை பாலைவனப்பகுதி (Semi Desert) பாங்கர் என்றும் இரு பகுதிகளாக அழைக்கப்படுகின்றன. இப்பாலைவனப் பகுதியில் பல உப்பு ஏரிகளும் (Dhands), மணல் திட்டுகளும் உள்ளன.

2. **பஞ்சாப் – ஹரியானா சமவெளி:** ஏறத்தாழ 1.75 லட்சம் சதுர கிலோமீட்டர் பரப்பளவைக் கொண்ட பஞ்சாப்–ஹரியானா சமவெளிகள் இந்திய பாலைவனத்தின் வடகிழக்கே அமைந்துள்ளன. இச்சமவெளி சட்லெஜ் பியாஸ் மற்றும் ராவி ஆறுகளினால் ஏற்படும் படிவுகளால் உருவானது.

இச்சமவெளி நீர்பிரி மேடாகவும், கங்கை – யமுனை, யமுனை – சட்லெஜ் ஆற்றிடைச் சமவெளியாகவும் உள்ளது.

3. **கங்கைச் சமவெளி:** கங்கைச் சமவெளி மேற்கிலுள்ள யமுனை ஆற்றிலிருந்து கிழக்கிலுள்ள வங்காளதேசம் வரை சுமார் 3.75 லட்சம் சதுர கிலோ மீட்டர் பரப்பளவைக் கொண்டுள்ளது. கங்கையும் அதன் துணை ஆறுகளான காக்கரா, காண்டக், கோசி, யமுனை, சாம்பல், பெட்வா போன்றவைகளும் அதிக அளவில் வண்டல் படிவுகளைப் படிய வைத்து இந்தியாவின் மிகப்பெரிய சமவெளியை உருவாக்கியுள்ளன. கங்கைச் சமவெளி கிழக்கு மற்றும் தென்கிழக்கு நோக்கி மென் சரிவாக அமைந்துள்ளது.
4. **பிரம்மபுத்திரா சமவெளி:** பிரம்மபுத்திரா சமவெளியின் பெரும்பகுதி அஸ்ஸாமில் அமைந்துள்ளது. பிரம்மபுத்திரா ஆற்றினால் உருவாக்கப்பட்ட ஒரு தாழ்நில சமவெளியாக வடபெரும் சமவெளியின் கிழக்கு பகுதியில் அமைந்துள்ளது. சுமார் 56.275 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் வண்டல் விசிறிகளாகவும், தராய் எனப்படும் சதுப்பு நிலக் காடுகளாகவும் காணப்படுகிறது.

## தீபகற்ப பீடபூமிகள்

தீபகற்ப பீடபூமி வட இந்திய சமவெளிக்கு தெற்கே அமைந்துள்ளது. இது சுமார் 16 லட்சம் சதுர கி.மீ பரப்பளவைக் கொண்டு (இது நாட்டின் மொத்த பரப்பளவில் சுமார் பாதியாகும்) இந்தியாவின் மிகப்பெரிய இயற்கைப் பிரிவாக உள்ளது. தீபகற்ப பீடபூமி தொன்மையான பாறை அமைப்புகளையும், பல குன்றுகளையும் பல்வேறு சிறு பீடபூமிகளையும், ஆற்றுப் பள்ளத்தாக்குகளால் பிளவுபட்டும் காணப்படுகின்றன.

வடமேற்கே ஆரவல்லி மலைத்தொடர், வடக்கு மற்றும் வடகிழக்கே பண்டல்கண்ட் உயர்நிலப்பகுதி, கைமூர், ராஜ்மகால் குன்றுகள், மேற்கே மேற்குத் தொடர்ச்சி மலைகள், கிழக்கே கிழக்குத் தொடர்ச்சி மலைகள் ஆகியன இப்பீடப்பூமியின் எல்லைகளாக அமைந்துள்ளன. இப்பீடப்பூமியின் பெரும்பகுதி கடல் மட்டத்திலிருந்து சுமார் 600 மீ. உயரத்தைக் கொண்டது. ஆனைமலையில் அமைந்துள்ள 2695 மீ உயரமுடைய ஆனைமுடிச்சிகரம் இப்பீடப்பூமியின் உயர்ந்த சிகரமாகும். இப்பீடபூமி மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சரிந்துள்ளது. இது கோண்டுவானா நிலப்பகுதியின் ஒரு பகுதியாகும். ஆற்றின் மூப்பு நிலைக்காரணமாக ஆறுகள், அகலமான மற்றும் ஆழமற்ற பள்ளத்தாக்குகளை உருவாக்கியுள்ளன.

நர்மதை ஆறு தீபகற்ப பீடபூமியை இரு பெரும் பகுதிகளாக பிரிக்கின்றது. இதன் வட பகுதியை மத்திய உயர்நிலங்கள் என்றும், தென் பகுதியை தக்காண பீடபூமி என்றும் அழைப்பர். விந்திய மலைக்கு தென் பகுதியில் பாயும் ஆறுகளான கோதாவரி, காவிரி, மகாநதி, கிருஷ்ணா போன்றவை கிழக்கு நோக்கி பாய்ந்து வங்காள விரிகுடாவில் கலக்கின்றன.

விந்தியமலையின் தென்பகுதியிலுள்ள பிளவு பள்ளத்தாக்குகளின் வழியே நர்மதை மற்றும் தபதி ஆறுகள் மேற்கு நோக்கி பாய்ந்து அரபிக்கடலில் கலக்கின்றன.

### அ. மத்திய உயர் நிலங்கள்

மத்திய உயர் நிலங்கள் நர்மதை ஆற்றிற்கும் வடபெரும் சமவெளிக்கும் இடையே அமைந்துள்ளன. இப்பகுதியின் வடக்கு மற்றும் வடமேற்கு எல்லையில் ஆரவல்லி மலைத்தொடர் அமைந்துள்ளது. இம்மலைத்தொடர் வடமேற்காக குஜராத்திலிருந்து ராஜஸ்தான் வழியாக டெல்லி வரை சுமார் 700 கி.மீ வரை நீண்டுள்ளது. வடக்கில் டெல்லிக்கு அருகில் சராசரியாக சுமார் 400 மீ உயரத்தையும் தென் மேற்கில் 1500 மீ உயரத்தையும் கொண்டுள்ளது. ஆரவல்லி மலைத் தொடரின் மிக உயரமான சிகரம் குருசிகார் (1722 மீ) ஆகும்.

மேற்கு பகுதியிலுள்ள மத்திய உயர்நிலங்கள் மாளவப் பீடபூமி எனப்படுகிறது. இப்பீடபூமி ஆரவல்லி மலைத்தொடருக்கு தென்கிழக்கிலும் விந்திய மலைக்கு வடக்கிலும் அமைந்துள்ளது. சம்பல், பீட்வா, கென் போன்ற ஆறுகள் இப்பீடபூமியில் பாய்ந்து யமுனை ஆற்றுடன் கலக்கின்றன. மாளவப் பீடபூமியின் கிழக்குத் தொடர் பகுதியை பண்டல்கண்ட் என்றும் இதன் தொடர்ச்சியை பாகல்கண்ட் என்றும் அழைப்பர். சோட்டாநாகபுரி பீடபூமி மத்திய உயர் நிலங்களின் வடகிழக்கு பகுதியில் அமைந்துள்ளது. இப்பீடபூமி ஜார்கண்ட் மாநிலத்தின் பெரும் பகுதி, மேற்கு வங்காளம், பீகார், சத்தீஸ்கர் மற்றும் ஒடிசாவின் சில பகுதிகளை உள்ளடக்கியது. இப்பகுதி இரும்புத்தாது மற்றும் நிலக்கரி போன்ற கனிம வளத்திற்கு புகழ் பெற்றது.

### ஆ. தக்காண பீடபூமி

தக்காண பீடபூமி, தீபகற்ப பீடபூமியில் அமைந்துள்ள மிகப்பெரிய இயற்கை அமைப்பைக் கொண்டதாகும். இது தோராயமாக முக்கோண வடிவம் கொண்டது. வடமேற்கு திசையில் விந்திய, சாத்பூரா மலைத் தொடர்களையும் வடக்கில் மகாதேவ், மைக்காலா குன்றுகளையும், வடகிழக்கில் இராஜ்மகால் குன்றுகளையும், மேற்கில் மேற்கு தொடர்ச்சி மலைகளையும், கிழக்கில் கிழக்கு தொடர்ச்சி மலைகளையும் எல்லைகளாகக் கொண்டது. சுமார் 7 லட்சம் சதுர



10th_Geography_Unit_1_TM.indd 145 11-04-2020 11:42:36

கி.மீ பரப்பளவையும் கடல் மட்டத்திலிருந்து 500 மீ முதல் 1000 மீ உயரம் வரையும் அமைந்துள்ளது.

### I. மேற்குத் தொடர்ச்சி மலைகள்

இம்மலைகள் தீபகற்ப பீடபூமியின் மேற்கு விளிம்பு பகுதியில் காணப்படுகிறது. இவை மேற்கு கடற்கரைக்கு இணையாகச் செல்கிறது. இம்மலையின் வடபகுதி சயாத்ரி என்று அழைக்கப்படுகிறது. இதன் உயரமானது வடக்கிலிருந்து தெற்கு நோக்கி செல்லச் செல்ல அதிகரிக்கிறது. ஆனைமலை, ஏலக்காய் மலை மற்றும் பழனிமலை ஆகியவை சந்திக்கும் பகுதியில் ஆனைமுடிச்சிகரம் அமைந்துள்ளது. மலைவாழிடமான கொடைக்கானல் பழனி மலையில் அமைந்துள்ளது.

### II. கிழக்குத் தொடர்ச்சி மலைகள்

கிழக்குத் தொடர்ச்சி மலைகள் தென்மேற்கு பகுதியிலிருந்து வடகிழக்கு நோக்கி நீண்டு தீபகற்ப பீடபூமியின் கிழக்கு விளிம்பு பகுதியில் அமைந்துள்ளது. இம்மலைத்தொடர் பூர்வாதிரி என்றும் அழைக்கப்படுகிறது. கிழக்குத் தொடர்ச்சி மலைகளும், மேற்குத் தொடர்ச்சி மலைகளும், கர்நாடக, தமிழ்நாடு எல்லையிலுள்ள நீலகிரி மலையில் ஒன்றினைகின்றன. மேற்கு தொடர்ச்சி மலைகளைப் போன்று கிழக்குத் தொடர்ச்சி மலைகள் தொடர்ச்சியான மலைகள் அல்ல. மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா, பென்னாறு மற்றும் காவிரி போன்ற ஆறுகளால் அரிக்கப்பட்டு பிளவுபட்ட குன்றுகளாக காட்சியளிக்கின்றன.

## கடற்கரைச் சமவெளிகள்

இந்திய தீபகற்ப பீடபூமி குறுகலான, வேறுபட்ட அகலத்தையுடைய வடக்கு தெற்காக அமைந்துள்ள கடற்கரைகளால் சூழப்பட்டுள்ளது. இக்கடற்கரைச் சமவெளிகள் ஆறுகள், கடல் அலைகள் ஆகியவற்றின் அரித்தல் மற்றும் படிய வைத்தல் செயல்களால் உருவானவை. இந்திய கடற்கரைச் சமவெளிகளை இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

**அ. மேற்கு கடற்கரைச் சமவெளி**

**ஆ. கிழக்கு கடற்கரைச் சமவெளி**

### அ. மேற்கு கடற்கரைச் சமவெளி

மேற்கு கடற்கரைச் சமவெளி மேற்கு தொடர்ச்சி மலைக்கும் அரபிக் கடலுக்கும் இடையே அமைந்துள்ளது. இது வடக்கில் உள்ள ரானா ஆப் கட்ச் முதல் தெற்கில் உள்ள கன்னியாகுமரி வரை நீண்டு, 10 கி.மீ முதல் 80 கி.மீ வரை அகலம் கொண்டதாகவுள்ளது. இச்சமவெளி, மணற்கடற்கரை, கடற்கரை மணல்குன்றுகள், கழிமுகங்கள், காயல்கள், எஞ்சிய குன்றுகள் மற்றும் சரளை மணல் மேடுகள் போன்ற நிலத்தோற்றங்களைக் கொண்டுள்ளது.

மேற்கு கடற்கரையின் வடபகுதி கொங்கணக் கடற்கரை எனவும். மத்திய பகுதி கனரா கடற்கரை எனவும் அழைக்கப்படுகிறது. 20–100 கி.மீ வரை அகலமும், 550 கி.மீ நீளமும் கொண்ட இதன் தென்பகுதி மலபார் கடற்கரை என அழைக்கப்படுகிறது. ஆழமில்லாத பல காயல்கள், உப்பங்கழிகள் மற்றும் டெரிஸ் போன்றவை இக்கடற்கரைப் பகுதியில் காணப்படுகின்றன. வேம்பநாடு ஏரி இப்பகுதியில் உள்ள ஒரு முக்கியமான ஏரியாகும்.

### ஆ. கிழக்கு கடற்கரை சமவெளி

கிழக்கு கடற்கரைச் சமவெளி கிழக்கு தொடர்ச்சி மலைக்கும் வங்காள விரிகுடாவிற்கும் இடையே மேற்கு வங்காளம், ஒடிசா, ஆந்திர பிரதேசம் மற்றும் தமிழ்நாடு வரை நீண்டுள்ளது. இச்சமவெளியானது கிழக்கு நோக்கி பாயும் ஆறுகளால் படிய வைக்கப்பட்ட வண்டல் படிவுகளால் உருவானது. இச்சமவெளி புதிய வண்டல் படிவுகளால் நன்கு வரையறுக்கப்பட்ட கடற்கரையைக் கொண்டது. மகாநதிக்கும் கிருஷ்ணா நதிக்கும் இடைப்பட்டப் பகுதி வடசர்க்கார் எனவும், கிருஷ்ணா மற்றும் காவிரி ஆற்றிற்கு இடைப்பட்டப் பகுதி சோழமண்டல கடற்கரை எனவும் அழைக்கப்படுகிறது. மகாநதி டெல்டாவிற்கு தென்மேற்கே அமைந்துள்ள சிலிகா ஏரி இந்தியாவின் மிகப்பெரிய காயல் ஏரியாகும். கோதாவரி ஆற்றுக்கும் கிருஷ்ணா ஆற்றுக்கும் இடையே கொல்லேறு ஏரி அமைந்துள்ளது. தமிழ்நாடு மற்றும் ஆந்திரப் பிரதேச எல்லையில் பழவேற்காடு (புலிகாட்) ஏரி அமைந்துள்ளது. இவைகள் கிழக்கு கடற்கரைச் சமவெளியில் அமைந்துள்ள முக்கியமான ஏரிகளாகும்.

## தீவுகள்

அந்தமான் நிக்கோபர் தீவுகள் மற்றும் இலட்சத்தீவுகள் என இரண்டு பெரும் தீவுக் கூட்டங்கள் இந்தியாவில் அமைந்துள்ளன. 572 தீவுகளைக் கொண்ட அந்தமான் நிக்கோபர் தீவுகள் வங்காள விரிகுடாவிலும், 27 தீவுக் கூட்டங்களைக் கொண்ட இலட்சத்தீவுகள் அரபிக் கடலிலும் அமைந்துள்ளன. இவற்றில் அந்தமான் நிக்கோபர் தீவுகள் புவி உள் இயக்க விசைகள் மற்றும் எரிமலைகளால் உருவானதாகும். இந்தியாவின் ஒரே செயல்படும் எரிமலை அந்தமான் நிக்கோபர் தீவுக்கூட்டத்தில் உள்ள பாரன் தீவாகும்.



10th_Geography_Unit_1_TM.indd 146 11-04-2020 11:42:36

www.tntextbooks.in

**அ. அந்தமான் நிக்கோபர் தீவுகள்**

இத்தீவுக் கூட்டங்கள் கடலடி மலைத்தொடரின் மேல் பகுதியாக அமைந்துள்ளன. பூமத்திய ரேகைக்கு அருகில் உள்ளதாலும், அதிக ஈரப்பதம், அதிக வெப்பம் கொண்ட காலநிலை நிலவுவதாலும் அடர்ந்த காடுகள் இங்கு காணப்படுகின்றன. இத்தீவின் பரப்பளவு 8,249 ச.கி.மீ ஆகும்.

இத்தீவுக் கூட்டத்தை இரண்டு பிரிவுகளாக பிரிக்கலாம். அவை வட பகுதி தீவுகள், அந்தமான் எனவும் தென் பகுதி தீவுகள், நிக்கோபர் எனவும் அழைக்கப்படுகின்றன.

இத்தீவுக் கூட்டங்கள் நாட்டின் அமைவிட முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. இதன் நிர்வாகத் தலைநகரம் போர்ட் பிளேயர் ஆகும். அந்தமான் தீவுக் கூட்டங்களை நிக்கோபர் தீவுக் கூட்டங்களிலிருந்து 10° கால்வாய் பிரிக்கிறது. நிக்கோபரின் தென்கோடி முனை "இந்திரா முனை" என்று அழைக்கப்படுகிறது.

**ஆ. இலட்சத்தீவுகள்**

இந்தியாவின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள இலட்சத்தீவு முருகைப் பாறைகளால் ஆனது. இத்தீவுகள் சுமார் 32 ச.கி.மீ பரப்பளவைக் கொண்டதாகும். இதன் நிர்வாகத் தலைநகரம் கவரட்டி ஆகும். இலட்சத்தீவுக்கூட்டங்களை 8° கால்வாய் மாலத்தீவிலிருந்து பிரிக்கிறது. இங்கு மனிதர்கள் வசிக்காத பிட் தீவு (Pitt Island) பறவைகள் சரணாலயத்திற்கு பெயர் பெற்றது. இலட்சத் தீவு, மினிக்காய் மற்றும் அமினித் தீவு கூட்டங்கள் 1973ஆம் ஆண்டு முதல் இலட்சத்தீவுகள் என அழைக்கப்படுகிறது.

**இ. மற்ற கடல் தீவுகள்**


இந்தியாவின் இரு பெரும் தீவுக் கூட்டங்களைத் தவிர்த்து பல்வேறு சிறிய தீவுகள், மேற்கு கடற்கரை, கிழக்கு கடற்கரை, கங்கை டெல்டா பகுதி மற்றும் மன்னார் வளைகுடா பகுதிகளில் காணப்படுகின்றன. இவற்றில் பல தீவுகள் மனிதர்கள் வசிப்பதில்லை. இத்தீவுகளை அருகாமையில் உள்ள அந்தந்த மாநிலங்கள் நிர்வாகம் செய்கின்றன.

## 1.3 இந்தியாவின் வடிகாலமைப்பு

வடிகாலமைப்பு என்பது முதன்மையாறுகளும், துணையாறுகளும் ஒருங்கிணைந்து மேற்பரப்பு நீரை கடலிலோ, ஏரிகளிலோ அல்லது நீர் நிலைகளிலோ சேர்க்கும் செயலாகும். முதன்மை ஆறுகளும், துணையாறுகளும் இணைந்து பாயும் பரப்பளவு வடிகால் கொப்பரை என்று அழைக்கப்படுகின்றது. வடிகால் அமைப்பானது ஒரு பிரதேசத்தில் உள்ள நிலவியல் அமைப்பைப் பொறுத்தே அமைகிறது. இந்தியாவின் அமைவிட அடிப்படையில் வடிகாலமைப்பை இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை

(i) **இமயமலையில் தோன்றும் ஆறுகள்**

(ii) **தீபகற்ப இந்திய ஆறுகள்**




### இமயமலையில் தோன்றும் ஆறுகள்

இவ்வாறுகள் வட இந்தியாவில் பாய்கின்றன. வடக்கே உள்ள இமயமலையில் இந்த ஆறுகள் உற்பத்தியாவதால் இமயமலை ஆறுகள் என்று அழைக்கப்படுகின்றன. இவை வற்றாத ஜீவ நதிகள் ஆகும்.

**அ. சிந்து நதி தொகுப்பு**

சிந்து நதி 2850 கி.மீ நீளத்துடன் (இந்தியப் பகுதியில் 709 கி.மீ நீளம் மட்டுமே பாய்கிறது) உலகில் உள்ள நீளமான நதிகளில் ஒன்றாகத் திகழ்கிறது. திபெத் பகுதியில் உள்ள கைலாஷ் மலைத் தொடரின் வடக்கு சரிவில் மானசரோவர் ஏரிக்கு அருகில் 5150 மீ. உயரத்தில் உற்பத்தியாகிறது. இந் நதிபாயும் மொத்த வடிகாலமைப்பு பரப்பான 11,65,500 ச.கி.மீட்டரில் 3,21,289 ச.கி.மீட்டர் பரப்பு இந்தியாவிலுள்ளது. இது லடாக் மற்றும் ஜாஸ்கர் மலைத்தொடர் வழியாக பாய்ந்து குறுகிய மலை இடுக்குகளை உருவாக்குகிறது. ஜம்மு–காஷ்மீர் வழியாக பாய்ந்து பின் தென்புறமாக பாகிஸ்தானின் சில்லார் பகுதியில் நுழைந்து, பின் அரபிக்கடலில் கலக்கிறது. இதன் துணையாறுகள் ஜீலம், சீனாப், ராவி, பியாஸ் மற்றும் சட்லெஜ் ஆகியனவாகும். சிந்துநதியின் மிகப்பெரிய துணையாறு சீனாப் ஆகும்.


**ஆ. கங்கை நதி தொகுப்பு**

கங்கையாற்றின் தொகுப்பு 8,61,404 ச.கி.மீ பரப்பளவில்பாயும் இந்தியாவின் மிகப்பெரிய வடிகால் அமைப்பைக் கொண்டதாகும். கங்கை சமவெளியில் பல நகரங்கள் ஆற்றங்கரையையொட்டியும் அதிக மக்களடர்த்தி கொண்டதாகவும் உள்ளன. கங்கை ஆறு உத்தரகாண்ட் மாநிலத்தில் உள்ள



10th_Geography_Unit_1_TM.indd 147 11-04-2020 11:42:36

www.tntextbooks.in




உத்தர் காசி மாவட்டத்தில் 7010 மீ உயரத்தில் கங்கோத்ரி பனியாற்றிலிருந்து பாகிரதி என்னும் பெயருடன் உற்பத்தியாகிறது.

இந்நதியின் நீளம் சுமார் 2525 கி.மீ ஆகும். வட பகுதியிலிருந்து கோமதி, காக்ரா, கண்டக், கோசி மற்றும் தென் பகுதியிலிருந்து யமுனை, சோன், சாம்பல் போன்ற துணையாறுகள் கங்கையுடன் இணைகின்றன. வங்கதேசத்தில், கங்கை பத்மா என்ற பெயரில் அழைக்கப்படுகிறது. கங்கை மற்றும் பிரம்மபுத்திரா ஆறுகள் சேர்ந்து உலகிலேயே மிகப் பெரிய டெல்டாவை உருவாக்கி பின் வங்காள விரிகுடாவில் கலக்கின்றன.



கங்கை ஆறு – ஹரித்துவார்

**இ. பிரம்மபுத்திரா ஆற்றுத்தொகுப்பு**

திபெத்தில் உள்ள மானசரோவர் ஏரிக்கு கிழக்கே கைலாஷ் மலைத் தொடரில் உள்ள செம்மாயுங்டங் என்ற பனியாற்றில் சுமார் 5150 மீ உயரத்திலிருந்து உற்பத்தியாகிறது. இதன் மொத்த வடிகாலமைப்பான 5,80,000 ச.கி.மீட்டரில் இந்தியாவில் பாயும் பரப்பு 1,94,413 ச.கி.மீ ஆகும். **திபெத் பகுதியில் சாங்போ (தூய்மை) என்ற பெயரில் அழைக்கப்படுகிறது.** இவ்வாற்றின் நீளம் சுமார் 2900 கி.மீ. இதில் 900 கி.மீ. மட்டுமே இந்தியாவில் பாய்கிறது.

பிரம்மபுத்திரா ஆறு அருணாச்சலப் பிரதேசத்திலுள்ள **திகாங்** என்ற மலை இடுக்கின் வழியாக இந்தியாவிற்குள் நுழைகிறது. திஸ்டா, மனாஸ், பராக், சுபன்ஸ்ரீ ஆகியவை இவ்வாற்றின் சில முக்கிய துணையாறுகளாகும். வங்களாதேசத்தில் ஜமுனா எனவும் கங்கை ஆற்றுடன் இணைந்த போது மேக்னா எனவும் அழைக்கப்படுகிறது.

**இமயமலையில் தோன்றும் ஆறுகளின் சிறப்பு இயல்புகள்**

1) நீளமானவை மற்றும் அகலமானவை
2) வற்றாத நதிகள்
3) நீர்மின் உற்பத்தி செய்ய இயலாத நிலை
4) ஆற்றின் மத்திய மற்றும் கீழ்நிலைப்பகுதிகள் போக்குவரத்திற்கு ஏற்றது.

## தீபகற்ப இந்திய ஆறுகள்

தென் இந்தியாவில் பாயும் ஆறுகள் தீபகற்ப ஆறுகள் எனப்படுகின்றன. பெரும்பாலான ஆறுகள் மேற்குத்தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகின்றன. இவை பருவகால ஆறுகள் அல்லது வற்றும் ஆறுகள் எனப்படும். நீரின் அளவு மழைப் பொழிவிற்கு ஏற்றாற்போல் மாறுபடுகிறது. இவ்வாறுகள் செங்குத்து சரிவுடன் கூடிய பள்ளத்தாக்கு வழியே பாய்கிறது. தீபகற்ப ஆறுகளை அவைபாயும் திசையின் அடிப்படையில் இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை

1) **கிழக்கு நோக்கி பாயும் ஆறுகள்**
2) **மேற்கு நோக்கி பாயும் ஆறுகள்**

## கிழக்கு நேக்கி பாயும் ஆறுகள்

**அ. மகாநதி**

இந்நதி சத்தீஸ்கார் மாநிலத்திலுள்ள ராய்ப்பூர் மாவட்டத்திலுள்ள சிகாவிற்கு அருகில் உற்பத்தியாகி ஒடிசா மாநிலத்தின் வழியாக சுமார் 851 கி.மீ நீளத்திற்குப் பாய்கிறது. சீநாத், டெலன், சந்தூர், சித்ரட்லா, கெங்குட்டி மற்றும் நன் ஆகியவை இதன் முக்கிய துணையாறுகளாகும். மகாநதி பல கிளையாறுகளாகப் பிரிந்து டெல்டாவை உருவாக்குகிறது. இந்நதி வங்காள விரிகுடாவில் கலக்கிறது.

**ஆ. கோதாவரி**

தீபகற்ப இந்தியாவில் பாயும் மிக நீளமான ஆறான (1465 கி.மீ) கோதாவரி, மகாராஷ்ட்ரா மாநிலம் நாசிக் மாவட்டத்தில் அமைந்துள்ள மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகிறது. இந்நதி **விருத்தகங்கா** எனவும் அழைக்கப்படுகிறது. இது 3.13 இலட்சம் சதுர.கி.மீ பரப்பளவு வடிநிலத்தைக் கொண்டது. இது ஆந்திரப்பிரதேசம் வழியாக பாய்ந்து வங்காள விரிகுடாவில் கலக்கிறது. பூர்ணா, பென்கங்கா, பிரனிதா, இந்திராவதி, தால் மற்றும் சாலாமி போன்றவை இவற்றின் துணையாறுகள் ஆகும். இந்நதி ராஜமுந்திரிக்கு அருகில் கவுதமி மற்றும் வசிஸ்தா என இரண்டு கிளைகளாகப் பிரிந்து பெரிய டெல்டாவை உருவாக்குகிறது. கோதாவரி டெல்டா பகுதியில் நன்னீர் ஏரியான கொல்லேறு ஏரி அமைந்துள்ளது.

**இ. கிருஷ்ணா**

மகாராஷ்ட்டிரா மாநிலத்தில் உள்ள மேற்கு தொடர்ச்சி மலையில் மகா பலேஷ்வர் என்ற பகுதியில் ஊற்றாக உருவாகி சுமார் 1400 கி.மீ நீளம் வரையும் 2.58 இலட்சம் ச.கி.மீ பரப்பளவு வடிநிலத்தைக் கொண்டிருக்கிறது. இது தீபகற்ப ஆறுகளில் இரண்டாவது பெரிய நதியாகும். கொய்னா, பீமா, முசி, துங்கபத்ரா மற்றும் பெடவாறு போன்றவை இவ்வாற்றின் முக்கிய துணையாறுகளாகும். இந்நதி ஆந்திரப்பிரதேசத்தின் வழியாக பாய்ந்து ஹம்சலாதேவி என்ற இடத்தில் வங்காள விரிகுடாவில் கலக்கிறது.

**ஈ. காவிரி**

காவிரி ஆறு கர்நாடக மாநிலத்தில் குடகு மலையிலுள்ள தலைக்காவிரியில் உற்பத்தியாகி சுமார் 800 கி.மீ நீளத்துக்கு பாய்கிறது. இது தென் இந்தியாவின் கங்கை என்றும் அழைக்கப்படுகிறது. கர்நாடகாவில் இரண்டாக பிரிந்து சிவசமுத்திரம் மற்றும் ஸ்ரீரங்கபட்டினம் ஆகிய புனித ஆற்றுத் தீவுகளை உருவாக்குகிறது. பின்பு தமிழ்நாட்டில் நுழைந்து தொடர்ச்சியான மற்றும் குறுகலான மலையிடுக்குகள் வழியாக ஒகேனக்கல் நீர்

வீழ்ச்சியாக பாய்கிறது. பின்பு திருச்சிராப்பள்ளிக்கு முன் ஸ்ரீரங்கம் அருகே கொள்ளிடம், மற்றும் காவிரி என இரண்டு பிரிவுகளாக பிரிந்து இறுதியில் பூம்புகார் என்ற இடத்தில் வங்கக் கடலில் கலக்கிறது.

### மேற்கு நோக்கி பாயும் ஆறுகள்

**அ. நர்மதை**

மத்தியப் பிரதேசத்தில் உள்ள அமர்கண்டாக் பீடபூமியில் 1057 மீ உயரத்தில் உற்பத்தியாகி 1312 கி.மீ நீளத்தையும் 98796 ச.கி.மீ பரப்பளவு வடிநிலத்தையும் கொண்டது. இது 27 கி.மீ நீளத்திற்கு ஒரு நீண்ட கழிமுகத்தை உருவாக்கி காம்பே வளைகுடா வழியாக அரபிக் கடலில் கலக்கிறது. இது மேற்கு நோக்கி பாயும் ஆறுகளிலேயே நீளமானதாகும். பர்னா, ஹலுன், ஹெரன், பஞ்சர், தூதி, சக்கார், டவா, மற்றும் கோலர் ஆகியவை இதன் முதன்மையான துணையாறுகள் ஆகும்.

**ஆ. தபதி**

தபதி ஆறு தீபகற்ப இந்தியாவின் முக்கிய ஆறுகளில் ஒன்றாகும். இந்நதி 724 கி.மீ நீளத்தையும் 65145 ச.கி.மீ பரப்பளவு வடிநிலத்தை கொண்டது. இந்நதி மத்திய பிரதேசத்தில் உள்ள பெட்டூல் மாவட்டத்தில் கடல் மட்டத்திலிருந்து 752 மீ உயரத்தில் முல்டாய் என்ற இடத்திலிருந்து உற்பத்தியாகிறது. பின்பு காம்பே வளைகுடா வழியாக அரபிக்கடலில் கலக்கிறது. தீபகற்ப இந்திய ஆறுகளில் நர்மதை, தபதி மற்றும் மாஹி ஆகிய மூன்று ஆறுகள் மட்டுமே கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி பாய்கின்றன. வாகி, கோமை, அருணாவதி, அனெர், நீசு, புரெ, பஞ்சரா மற்றும் போரி ஆகியன தபதி ஆற்றின் துணை ஆறுகள் ஆகும்.

எந்த ஆற்றில் ஜெர்சப்பா (ஜோக்) நீர்வீழ்ச்சி உள்ளது?

**தென்னிந்திய ஆறுகளின் சிறப்பியல்புகள்**

1) மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகின்றன.
2) குறுகலான மற்றும் நீளம் குறைந்தவை.
3) வற்றும் ஆறுகள்.
4) நீர் (புனல்) மின்சாரம் உற்பத்திக்கு ஏற்றது.
5) நீர்வழி போக்குவரத்திற்குப் பயன்படாதவை.

### பாடச்சுருக்கம்

- இந்தியா 6 இயற்கைப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை வடக்கு மலைகள், வடபெரும் சமவெளிகள், தீபகற்ப பீடபூமிகள், பாலைவனம், கடற்கரை சமவெளிகள் மற்றும் தீவுகள்
- வடக்கு மலைகள் மூன்று பிரிவுகளை உள்ளடக்கியது. அவை டிரான்ஸ் இமயமலை, இமயமலை, பூர்வாஞ்சல் அல்லது கிழக்கு இமயமலைகள்
- வடபெரும் சமவெளிகள், இராஜஸ்தான் சமவெளி, பஞ்சாப் – ஹரியானா சமவெளி, கங்கை சமவெளி, பிரம்மபுத்திரா சமவெளி என நான்கு பிரிவுகளாக உள்ளன
- தீபகற்ப பீடபூமி இரு பிரிவுகளை உள்ளடக்கியது.1) மத்திய உயர்நிலம் 2) தக்காண பீடபூமி
- அந்தமான் நிக்கோபர் தீவுகள் மற்றும் இலட்சத் தீவுகள் இந்தியாவிலுள்ள இரண்டு பெரிய தீவுக் கூட்டங்கள்
- இந்தியாவின் வடிகாலமைப்பு வடஇந்திய ஆறுகள் (இமயமலை ஆறுகள்) மற்றும் தீபகற்ப ஆறுகள் என இரு பிரிவுகளாக பிரிக்கப்படுகின்றன.
- நர்மதை, தபதி, மாஹி மற்றும் சபர்மதி ஆறுகள் அரபிக்கடலில் கலக்கின்றன.
- மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா மற்றும் காவிரி ஆறுகள் கிழக்கு நோக்கி பாய்ந்து வங்காள விரிகுடாவில் கலக்கின்றன.



10th_Geography_Unit_1_TM.indd 150 11-04-2020 11:42:36

## பயிற்சி

7NAS8M

### I சரியான விடையைத் தேர்வு செய்க

1. இந்தியாவின் வடக்கு தெற்கு பரவல்.
   அ) 2500 கி.மீ ஆ) 2933 கி.மீ
   இ) 3214 கி.மீ ஈ) 2814 கி.மீ
2. பீகாரின் துயரம் என்று அழைக்கப்படும் ஆறு
   அ) நர்மதா ஆ) கோதாவரி
   இ) கோசி ஈ) தாமோதர்
3. மூன்று பக்கம் நீரால் சூழப்பட்ட பகுதி ____________ என அழைக்கப்படுகிறது.
   அ) கடற்கரை ஆ) தீபகற்பம்
   இ) தீவு ஈ) நீர்ச்சந்தி
4. பாக் நீர்சந்தி மற்றும் மன்னார் வளைகுடா ________________ ஐ இந்தியாவிடமிருந்து பிரிக்கிறது.
   அ) கோவா ஆ) மேற்கு வங்காளம்
   இ) இலங்கை ஈ) மாலத்தீவு
5. தென்னிந்தியாவின் மிக உயரமான சிகரம் ____________.
   அ) ஊட்டி ஆ) ஆனை முடி
   இ) கொடைக்கானல் ஈ) ஜின்டா கடா
6. பழைய வண்டல் படிவுகளால் உருவான சமவெளி ____________.
   அ) பாபர் அ) தராய்
   இ) பாங்கர் ஈ) காதர்
7. பழவேற்காடு ஏரி ________________ மாநிலங்களுக்கிடையே அமைந்துள்ளது.
   அ) மேற்கு வங்காளம் மற்றும் ஒடிசா
   ஆ) கர்நாடகா மற்றும் கேரளா
   இ) ஒடிசா மற்றும் ஆந்திரப் பிரதேசம்
   ஈ) தமிழ்நாடு மற்றும் ஆந்திரப் பிரதேசம்

### II பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| 1. | சாங்போ | – | கங்கை ஆற்றின் துணை ஆறு |
| 2. | யமுனை | – | இந்தியாவின் உயர்ந்த சிகரம் |
| 3. | புதிய வண்டல் படிவுகள் | – | பிரம்மபுத்திரா |
| 4. | காட்வின் ஆஸ்டின் (K2) | – | தென்கிழக்கு கடற்கரைச் சமவெளி |
| 5. | சோழ மண்டலக்கடற்கரை | – | காதர் |

### III காரணம் கூறுக

1. இமயமலைகள் மடிப்புமலைகள் என அழைக்கப்படுகின்றன.
2. வட இந்திய ஆறுகள் வற்றாத ஆறுகள்
3. தென்னிந்திய நதிகள் கிழக்கு நோக்கிப் பாயும் நதிகள்
4. மேற்கு நோக்கிப் பாயும் நதிகள் டெல்டாவை உருவாக்குவதில்லை

### IV வேறுபடுத்துக

1. இமயமலை ஆறுகள் மற்றும் தீபகற்ப ஆறுகள்
2. மேற்குத் தொடர்ச்சி மலைகள் மற்றும் கிழக்கு தொடர்ச்சி மலைகள்
3. மேற்கு கடற்கரைச் சமவெளி மற்றும் கிழக்கு கடற்கரைச் சமவெளி

### V சுருக்கமாக விடையளி

1. இந்தியாவின் அண்டை நாடுகளின் பெயர்களைக் கூறுக.
2. இந்திய திட்டநேரத்தின் முக்கியத்துவம் பற்றி கூறுக.
3. தக்காண பீடபூமி – குறிப்பு வரைக.
4. இந்தியாவின் மேற்கு நோக்கி பாயும் ஆறுகளைப் பற்றி கூறுக.
5. இலட்சத்தீவுக் கூட்டங்கள் பற்றி விவரி.

### VI ஒரு பத்தியில் விடையளிக்கவும்

1. இமயமலையின் உட்பிரிவுகளையும் அதன் முக்கியத்துவம் பற்றியும் விவரி.
2. தீபகற்ப ஆறுகளைப் பற்றி விவரி.
3. கங்கை ஆற்று வடிநிலம் குறித்து விரிவாக எழுதுக.

### VII வரைபடப் பயிற்சி

கொடுக்கப்பட்டுள்ள இடங்களை இந்திய வரைபடத்தில் குறிக்கவும்.

1. மலைத் தொடர்கள்: காரகோரம், லடாக், ஜஸ்கர், ஆரவல்லி, மேற்கு தொடர்ச்சி மலை, கிழக்கு தொடர்ச்சி மலை.
2. ஆறுகள்: சிந்து, கங்கை, பிரம்மபுத்திரா, நர்மதை, தபதி, மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா மற்றும் காவிரி.
3. பீடபூமிகள்: மாளவபீடபூமி, சோட்டா நாகபுரிபீடபூமி, தக்காண பீடபூமி.

### VIII செய்முறைப் பயிற்சி

1. நிலவரைபடத்தில் தீபகற்ப பீடபூமியை உற்று நோக்கி முக்கிய பீடபூமி பகுதிகளைக் குறிக்கவும்.
2. தீபகற்ப இந்தியாவில் கிழக்கு நோக்கி பாயும் ஆறுகளையும், மேற்கு நோக்கி பாயும் ஆறுகளையும் அட்டவணைப்படுத்தவும்.
3. மேற்கு வங்கத்திலிருந்து கடற்கரை வழியாக குஜராத்திற்கு பயணம் செய்யும் போது நீங்கள் கடந்து சென்ற மாநிலங்களின் பெயர்களைக் கண்டுபிடிக்கவும்.
4. நில வரைபடப் புத்தகத்தைக் கொண்டு கங்கை ஆறு பாயும் மாநிலங்களைக் இந்திய நில வரைபடத்தில் குறிக்கவும்.
5. இந்தியாவில் உள்ள முக்கிய ஆறுகளின் பிறப்பிடம், நீளம், வடிநிலம், பரப்பளவு மற்றும் அவற்றின் துணையாறுகள் ஆகியவற்றை அட்டவணைப்படுத்தவும்.

### மேற்கோள் நூல்கள்


1. Husain, M. (2015). Geography of India (6th Edition). McGraw Hill Education, New Delhi.
2. Siddhartha, K. and Mukherjee, S. (2013). Geography through Maps (11th Edition). Kisalaya Publications Pvt. Ltd., New Delhi.
3. Singh, G. (1976). A Geography of India. Atma Ram & Sons Publications, New Delhi.
4. Singh, S. and Saroha, J. (2014). Geography of India (1st Edition). Access Publishing India Pvt. Ltd., New Delhi.


### இணையதள வளங்கள்


1. http://www.nplindia.in/
2. http://india-wris.nrsc.gov.in/
3. http://ncert.nic.in/ncerts/l/iess102.pdf
4. http://www.scert.kerala.gov.in/images/text_books/chapter%204.pdf




10th_Geography_Unit_1_TM.indd 152 11-04-2020 11:42:36

www.tntextbooks.in

# அலகு – 2

# இந்தியா – காலநிலை மற்றும் இயற்கைத் தாவரங்கள்



## கற்றலின் நோக்கங்கள்

- இந்தியக் காலநிலையைக் கட்டுப்படுத்தும் காரணிகளை விவரித்தல்
- இந்திய பருவகாலங்களின் பண்புகளை புரிந்துகொள்ளுதல்
- இந்தியாவின் மழைப்பரவலைத் தெரிந்துகொள்ளுதல்
- இந்தியாவின் பல்வேறு இயற்கைத் தாவரவகைகள் மற்றும் வன உயிரினங்கள் பற்றி கற்றறிதல்

ZV7IUP

## அறிமுகம்

நாம் கோடைக்காலத்தில் அதிகமாக தண்ணீரைப் பருகுகிறோம் ஆனால் குளிர் காலத்தில் அதே அளவு தண்ணீரைப் பருகுவதில்லை. வட இந்தியாவில் கோடைக்காலத்தில் மென்மையான பருத்தியாலான ஆடைகளையும் குளிர்காலத்தில் கம்பளி ஆடைகளையும் அணிகிறோம். தென்னிந்திய மக்கள் குளிர்காலத்தில் கம்பளி ஆடைகளை அணியாதது ஏன்? ஏனெனில், வட மற்றும் தென்னிந்தியாவில் தட்பவெப்பநிலை மாறுபடுவதே இதற்கு காரணமாகும்.

**உங்களுக்குத் தெரியுமா?**

சமச்சீர் காலநிலை என்பது 'பிரிட்டிஷ் காலநிலை' என்றும் அழைக்கப்படுகிறது.இக்காலநிலை அதிகவெப்பமுடையதாகவோ அல்லது மிகக்குளிருடையதாகவோ இருக்காது.

## 2.1 இந்திய காலநிலையை பாதிக்கும் காரணிகள்

**அட்சங்கள் கடல் மட்டத்திலிருந்து உயரம், கடலிலிருந்து அமைந்துள்ள தொலைவு, பருவக்காற்று, நிலத்தோற்றம், ஜெட் காற்றுகள் போன்றவை இந்திய காலநிலையை பாதிக்கும் காரணிகளாகும்.**

### அட்சங்கள்

இந்தியா $8^{\circ}4'$ வட அட்சம் முதல் $37^{\circ}6'$ வட அட்சம் வரை அமைந்துள்ளது. $23^{\circ}30'$ வட அட்சமான கடகரேகை நாட்டை இரு சமபாகங்களாக பிரிக்கிறது. கடகரேகைக்கு தெற்கே அமைந்துள்ள பகுதிகளில் ஆண்டு முழுவதும் அதிகவெப்பமும் மிக குளிரற்ற சூழலும் நிலவுகிறது. கடகரேகைக்கு வடக்கே உள்ள பகுதிகள் மித வெப்ப காலநிலையைக் கொண்டுள்ளது.

### உயரம்

புவிப்பரப்பிலிருந்து உயரே செல்லச் செல்ல வளிமண்டலத்தில் ஒவ்வொரு 1000 மீட்டர் உயரத்திற்கும் 6.50C என்ற அளவில் வெப்பநிலை குறைகிறது. இதற்கு "வெப்ப குறைவு விகிதம்" என்று பெயர். எனவே சமவெளிப் பகுதிகளைக் காட்டிலும் மலைப்பகுதிகள் குளிராக இருக்கும். உதகை தென்னிந்தியாவின் இதர மலை வாழிடங்கள் மற்றும் இமயமலையில் அமைந்துள்ள முசெளரி, சிம்லா போன்ற பகுதிகள் சமவெளிகளைவிட மிகவும் குளிராக உள்ளது.

கடல் மட்டத்திலிருந்து 6.7மீ உயரத்தில் அமைந்துள்ள சென்னையின் வெப்பநிலை $35^{\circ}C$ஆக இருக்கும்பொழுது 2240மீ உயரமுள்ள உதகை வெப்பநிலையைக் கண்டறிக.



10th_Geography_Unit_2_TM.indd 153 24-03-2020 12:33:36

### கடலிலிருந்து அமைந்துள்ள தொலைவு

இந்தியாவின் பெரும்பகுதி குறிப்பாக தீபகற்ப இந்தியா கடலிலிருந்து வெகுதொலைவில் இல்லை. இதன் காரணமாக இப்பகுதி முழுவதும் நிலவும் காலநிலை கடல் சார் ஆதிக்கத்தை கொண்டுள்ளது. இப்பகுதியில் குளிர்காலம் குளிரற்று காணப்பட்டு வருடம் முழுவதும் சீரான வெப்பநிலையைக் கொண்டுள்ளது.

கடல்களின் ஆதிக்கமின்மை காரணமாக மத்திய மற்றும் வட இந்திய பகுதிகள் வெப்பநிலையில் பருவகால மாறுபாடுகளைக் கொண்டுள்ளன. இங்கு கோடையில் கடும் வெப்பமும் மற்றும் குளிர் காலத்தில் கடும் குளிரும் நிலவுகிறது. கொச்சி, கடற்கரை பகுதியில் அமைந்திருப்பதால் இதன் வருடாந்திர சராசரி வெப்பம் 30°C அளவுக்கு மிகாமல் உள்ளது. மாறாக கடற்கரையிலிருந்து வெகு தொலைவில் அமைந்துள்ள புதுடில்லியின் வருடாந்திர சராசரி வெப்பம் 40°C க்கும் அதிகமாக உள்ளது. கடற்கரை பகுதியில் காற்றில் ஈரப்பதம் மிகுந்து இருப்பதால் இவை அதிக மழைத்தரும் திறனைக் கொண்டுள்ளது. இதனால் கடற்கரைக்கு அருகிலுள்ள கொல்கத்தாவில் மழைப்பொழிவு 119 செ.மீ ஆகவும் உள் பகுதியில் அமைந்திருக்கும் பிகானிரில் (இராஜஸ்தான்) 24 செ.மீ க்கு குறைவான மழைப்பொழிவே பதிவாகின்றது.

### பருவக்கால காற்று

இந்தியாவின் காலநிலையைப் பாதிக்கும் மிக முக்கிய காரணி பருவக்கால காற்றாகும். இவை பருவங்களுக்கேற்ப மாறி வீசும் காற்றுகளாகும். இந்தியா ஒரு ஆண்டின் கணிசமான காலத்தில் பருவக்காற்றுகளின் தாக்கத்திற்கு உள்ளாகிறது. இந்தியாவில் சூரியனின் செங்குத்துக் கதிர்கள் ஜூன் மாத மத்தியில் விழுகின்றபொழுதிலும் கோடைக்காலம் மே மாத இறுதியில் முடிவடைகிறது. ஏனெனில் தென் மேற்கு பருவக்காற்று தொடக்கத்தின் காரணமாக வெப்பநிலை குறைந்து இந்தியாவின் பல பகுதிகளுக்கு மிதமானது முதல் கனமழை வரை பொழிகிறது. இதேபோல் தென்கிழக்கு இந்தியாவின் காலநிலையும் வடகிழக்கு பருவக்காற்றின் ஆதிக்கத்திற்கு உட்படுகிறது.

> **உங்களுக்குத் தெரியுமா?**
>
> வானிலை என்பது ஒரு குறிப்பிட்ட இடத்தில் உள்ள வளிமண்டலத்தின் தன்மையைக் குறிப்பதாகும்.
>
> காலநிலை என்பது ஒரு குறிப்பிட்ட பகுதியின் சுமார் 30–35 ஆண்டு சராசரி வானிலையைக் குறிப்பதாகும்.

### நிலத்தோற்றம்

இந்தியாவின் நிலத்தோற்றம், காலநிலையின் முக்கிய கூறுகளான வெப்பநிலை, வளிமண்டல அழுத்தம், காற்றின் திசை மற்றும் மழையளவை பெருமளவில் பாதிக்கின்றது. இமயமலை மத்திய ஆசியாவிலிருந்து வீசும் கடும் குளிர்க்காற்றை தடுத்து, இந்திய துணைக் கண்டத்தை வெப்பப் பகுதியாக வைத்திருக்கிறது. இதனால் குளிர் காலத்திலும் வடஇந்தியா வெப்ப மண்டல காலநிலையைக் கொண்டுள்ளது. தென்மேற்கு பருவக்காற்று காலங்களில் மேற்கு தொடர்ச்சி மலைகளின் மேற்கு சரிவுப்பகுதி கன மழையைப் பெறுகிறது. மாறாக மகாராஷ்ட்ரா, கர்நாடகா, தெலங்கானா, ஆந்திரப்பிரதேசம் மற்றும் தமிழ்நாட்டின் பெரும் பகுதிகள் மேற்கு தொடர்ச்சி மலைகளின் மழைமறைவுப் பகுதி அல்லது காற்று மோதாப்பக்கத்தில் அமைந்திருப்பதால் மிகக்குறைந்த அளவு மழையைப் பெறுகின்றன. இப்பருவத்தில் மேற்கு கடற்கரையில் அமைந்துள்ள மங்களூர் 280 செ.மீ மழைப்பொழிவையும், மழைமறைவுப் பகுதியில் அமைந்துள்ள பெங்களூரு 50 செ.மீ மழைப்பொழிவையும் பெறுகின்றன.

### ஜெட் காற்றோட்டங்கள்

வளிமண்டலத்தின் உயர் அடுக்குகளில் குறுகிய பகுதிகளில் வேகமாக நகரும் காற்றுகள் "ஜெட்காற்றுகள்" என்கிறோம். ஜெட் காற்றோட்ட கோட்பாட்டின் படி, துணை அயன மேலை காற்றோட்டம் வடபெரும் சமவெளிகளிலிருந்து திபெத்திய பீடபூமியை நோக்கி இடம்பெயர்வதால் தென்மேற்கு பருவக்காற்று உருவாகின்றது. கீழை ஜெட் காற்றோட்டங்கள் தென்மேற்கு மற்றும் பின்னடையும் பருவக்காற்று காலங்களில் வெப்பமண்டல தாழ்வழுத்தங்களை உருவாக்குகின்றன.

## 2. 2 பருவக்காற்று

"மான்சூன்" என்ற சொல் "மௌசிம்" என்ற அரபு சொல்லிருந்து பெறப்பட்டது. இதன் பொருள் பருவகாலம் ஆகும். பருவ காலம் என்ற சொல் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் அரபு மாலுமிகளால் இந்தியப்பெருங்கடல் கடற்கரைப் பகுதிகளில் குறிப்பாக அரபிக்கடலில் பருவங்களுக்கேற்ப மாறி வீசும் காற்றுகளை குறிப்பிடுவதற்கு பயன்படுத்தப்பட்டது. இக்காற்று கோடைக்காலத்தில் தென்மேற்கு திசையிலிருந்து வடகிழக்கு நோக்கியும், குளிர்காலத்தில் வடகிழக்கு திசையிலிருந்து தென்மேற்கு நோக்கியும் வீசுகிறது.

L9R626



10th_Geography_Unit_2_TM.indd 154
24-03-2020 12:33:36

பருவக்காற்றின் தோற்றம் குறித்து வானிலை வல்லுநர்கள் பல கருத்துக்களை உருவாக்கி உள்ளனர். இவற்றில் இயங்கு கோட்பாட்டின்படி, வடகோள உச்ச கோடையில் சூரியனின் செங்குத்துக்கதிர் கடக ரேகையின்மீது விழுகின்றது. இதனால் அனைத்து வளி அழுத்த மற்றும் காற்று மண்டலங்கள் வடக்கு நோக்கி இடம்பெயர்கின்றன. இச்சமயத்தில் வெப்ப மண்டல இணைப்பு பகுதி (ITCZ) வடக்கு நோக்கி நகர்வதால் இந்தியாவின் பெரும் பகுதி தென் கிழக்கு வியாபாரக் காற்றின் ஆதிக்கத்திற்கு உள்ளாகின்றன. இக்காற்று பூமத்தியரேகையைக் கடக்கும் போது புவி சுழற்சியால் ஏற்படும் விசையின் காரணமாக வடகிழக்கு நோக்கி வீசுகிறது. இது தென்மேற்கிலிருந்து வீசுவதால் தென்மேற்கு பருவக்காற்றாக மாறுகிறது.

குளிர்பருவத்தில் வளியழுத்த மற்றும் காற்று மண்டலங்கள் தெற்குநோக்கி நகர்வதன்மூலம் வடகிழக்கு பருவக்காற்று உருவாகின்றது. இவ்வாறு பருவங்களுக்கேற்றவாறு தங்களது திசைகளை மாற்றிக்கொண்டு வீசும் கோள் காற்றுகளைப் பருவக்காற்று என்கிறோம்.

### பருவக்காலங்கள்

வானிலை நிபுணர்கள் இந்திய காலநிலையில் நான்கு பருவங்களை அடையாளம் கண்டுள்ளனர். அவை.

1. குளிர்காலம்: ஜனவரி முதல் பிப்ரவரி வரை
2. கோடைக்காலம்: மார்ச் முதல் மே வரை
3. தென்மேற்கு பருவக்காற்று காலம் அல்லது மழைக்காலம்: ஜுன் முதல் செப்டம்பர் வரை
4. வடகிழக்கு பருவக்காற்று காலம்: அக்டோபர் முதல் டிசம்பர் வரை

### 1. குளிர்காலம்

இக்காலத்தில் சூரியனின் செங்குத்து கதிர்கள் இந்தியாவிலிருந்து வெகுதொலைவிலுள்ள மகரரேகையின் மீது செங்குத்தாக விழுகிறது. இதனால் இந்தியப் பகுதி சாய்வான சூரியக்கதிர்களைப் பெறுகிறது. இதுவே குறைந்த வெப்பத்திற்கு காரணமாக உள்ளது. தெளிவான வானம், சிறந்த வானிலை, மென்மையான வடக்கு காற்றுகள், குறைந்த ஈரப்பதம் மற்றும் மிகுந்த தினசரி பகல்நேர வெப்ப வேறுபாடுகள் ஆகியன இப்பருவத்தின் பண்புகளாகும். இப்பருவத்தில் வட இந்தியாவில் ஓர் உயர் அழுத்தம் உருவாகி காற்று வடமேற்கிலிருந்து சிந்து–கங்கை பள்ளத்தாக்குகள் வழியாக வீசுகிறது. தென்னிந்தியாவில் காற்றின் திசையானது கிழக்கிலிருந்து மேற்காக உள்ளது.

மேற்கு இமயமலை, தமிழ்நாடு, கேரளா ஆகிய பகுதிகள் இப்பருவத்தில் மழையைப் பெறுகின்றன. இக்காலத்தில் மத்தியத் தரைக்கடல் பகுதியில் உருவாகும் மேற்கத்திய இடையூறுடன் தாழ்வழுத்தங்கள் வட இந்தியாவில் மழையைத் தருகின்றன. இக்காற்றை இந்தியாவிற்கு கொண்டுவருவதில் ஜெட் காற்றோட்டம் முக்கிய பங்கு வகிக்கிறது. இக்காற்றானது பஞ்சாப், ஹரியானா, இமாச்சலப் பிரதேசத்தில் மழைப் பொழிவையும், ஜம்மு காஷ்மீரின் மலைப் பகுதிகளில் பனிப் பொழிவையும் தருகிறது. இம்மழை குளிர்கால கோதுமை பயிரிடலுக்கு மிகவும் பயனளிக்கிறது.

### 2. கோடைக்காலம்

இப்பருவத்தில் சூரியனின் செங்குத்துக் கதிர்கள் இந்திய தீபகற்பத்தின் மீது விழுகிறது. எனவே வெப்பநிலை தெற்கிலிருந்து வடக்கு நோக்கி அதிகரிக்கிறது. கோடைக்காலத்தின் முற்பகுதியில் நாடு முழுவதும் வெப்பமான வறண்ட வானிலை நிலவுகிறது. கோடைக்காலத்தின் மத்தியிலும், இறுதியிலும் நிலப்பகுதி இடியுடன் கூடிய ஆலங்கட்டி மழையின் ஆதிக்கத்திற்கு உட்படுகிறது.

இப்பருவத்தில் இந்தியா முழுவதும் வெப்பம் அதிகரிக்கின்றது. ஏப்ரல் மாதத்தில் தென் இந்திய உட்பகுதிகளில் தின சராசரி வெப்பநிலை $30^{\circ}C$ – $35^{\circ}C$ ஆக பதிவாகிறது. மத்திய இந்திய நிலப்பகுதியின் பல பகுதிகளில் பகல் நேர உச்ச வெப்பநிலை $40^{\circ}C$ ஆக உள்ளது.

வளிமண்டல அழுத்த நிலையின் வேறுபாட்டால் அரபிக்கடல் மற்றும் வங்கக் கடல் பகுதிகளில் காற்றானது தென் மேற்கிலிருந்து வடகிழக்கு நோக்கி வீசுகிறது. இக்காற்றுகள் மே மாதத்தில் மேற்கு கடற்கரை பகுதிகளுக்கு முன் பருவகால மழையைத் தருகின்றன. "**மாஞ்சாரல்**" (Mango shower) என்ற இடியுடன் கூடிய மழையானது கேரளா மற்றும் கர்நாடக கடற்கரை பகுதிகளில் விளையும் "**மாங்காய்கள்**" விரைவில் முதிர்வதற்கு உதவுகிறது.

ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் வடமேற்கு திசையிலிருந்து வீசும் தலக்காற்று நார்வெஸ்டர் அல்லது கால்பைசாகி என்று அழைக்கப்படுகிறது. இக்காற்று கிழக்கு மற்றும் வடகிழக்கு பகுதிகளான பீகார், மேற்கு வங்காளம் மற்றும் அசாம் மாநிலங்களுக்கு இடியுடன் கூடிய குறுகியக் கால மழையைத் தருகிறது

### 3. தென்மேற்கு பருவக்காற்று காலம் (மழைக்காலம்)


இந்திய காலநிலையின் முக்கிய அம்சமாக தென்மேற்கு பருவக்காற்று விளங்குகிறது.


பருவக்காற்று பொதுவாக ஜுன் முதல் வாரத்தில் இந்தியாவின் தென் பகுதியில் தொடங்கி கொங்கணக் கடற்கரை பகுதிக்கு ஜுன் இரண்டாவது வாரத்திலும் ஜுலை 15இல் அனைத்து இந்தியப் பகுதிகளுக்கும் முன்னேறுகிறது.



10th_Geography_Unit_2_TM.indd 155 24-03-2020 12:33:36

www.tntextbooks.in




உலகளாவிய காலநிலை நிகழ்வான "எல்நினோ" தென்மேற்கு பருவக்காற்றுக் காலத்தில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

தென்மேற்கு பருவக்காற்று தொடங்குவதற்கு முன் வட இந்தியாவின் வெப்பநிலையானது 46°C வரை உயருகிறது. இப்பருவக்காற்றின் இடி மற்றும் மின்னலுடன் கூடிய துவக்கம் (தென் இந்தியாவில்)'பருவமழை வெடிப்பு' எனப்படுகிறது. இக்காற்று இந்தியாவின் தென் முனையை அடையும்பொழுது இரண்டு கிளைகளாகப் பிரிக்கிறது. இதன் ஒரு கிளை அரபிக்கடல் வழியாகவும் மற்றொரு கிளை வங்காள விரிகுடா வழியாகவும் வீசுகிறது.

தென்மேற்கு பருவக்காற்றின் அரபிக்கடல் கிளை மேற்கு தொடர்ச்சி மலையின் மேற்குச் சரிவுகளில் மோதி பலத்த மழைப் பொழிவை தருகிறது. இக்கிளையானது வடக்கு நோக்கி நகர்ந்து இமயமலையால் தடுக்கப்பட்டு வட இந்தியா முழுவதும் கனமழையைத் தோற்றுவிக்கிறது. ஆரவல்லி மலைத் தொடர் இக்காற்று வீசும் திசைக்கு இணையாக அமைந்துள்ளதால் இராஜஸ்தான் மற்றும் வட இந்தியாவின் மேற்கு பகுதிக்கு மழைப்பொழிவை தருவதில்லை.

வங்காள விரிகுடா கிளை, வடகிழக்கு இந்தியா மற்றும் மியான்மரை நோக்கி வீசுகிறது. இது காசி, காரோ, ஜெயந்தியா குன்றுகளால் தடுக்கப்பட்டு **மேகாலயாவில் உள்ள மௌசின்ராமில் (mawsynram) மிக கனமழையைத் தருகிறது.** பிறகு இக்காற்று கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி நகரும்போது மழைப் பொழிவின் அளவு குறைந்து கொண்டே செல்கிறது.

**இந்தியாவின் ஒட்டு மொத்த மழைப்பொழிவில் 75 சதவீத மழைப் பொழிவானது இப்பருவக்காற்று காலத்தில் கிடைக்கிறது.**

### 4. வடகிழக்கு பருவக்காற்று காலம்

செப்டம்பர் மாத இறுதியில் அழுத்த மண்டலமானது புவியில் தெற்கு நோக்கி நகர ஆரம்பிப்பதால் தென்மேற்கு பருவக்காற்று பின்னடையும் பருவக்காற்றாக நிலப்பகுதியிலிருந்து வங்காளவிரிகுடா நோக்கி வீசுகிறது. பூமி சுழல்வதால் ஏற்படும் விசையின் (கொரியாலிஸ் விசை) காரணமாக காற்றின் திசை மாற்றப்பட்டு வடகிழக்கிலிருந்து வீசுகிறது. எனவே இக்காற்று வடகிழக்கு பருவக்காற்று என அழைக்கப்படுகிறது. இப்பருவக்காலம் இந்திய துணைக்கண்ட பகுதியில் வட கீழைக் காற்றுத் தொகுதி தோன்றுவதற்கு காரணமாக உள்ளது எனலாம்.

இப்பருவகாற்றின் மூலம் கேரளா, ஆந்திரா தமிழ்நாடு மற்றும் தென் கர்நாடகாவின் உட்பகுதிகள் நல்ல மழைப்பொழிவைப் பெறுகின்றன. இப்பகுதிகள் மொத்த மழைப்பொழிவில் சுமார் 35 சதவீதத்தைப் பெறுகின்றன. வங்கக்கடலில் உருவாகும் புயலால் தமிழ்நாட்டின் பல பகுதிகளும் ஆந்திரா மற்றும் கர்நாடகாவின் சில பகுதிகளும் மழையைப் பெறுகின்றன .

கடற்கரைப் பிரதேசங்களில் கனமழையுடன் கூடிய பலத்த புயல் காற்று, பெரும்



10th_Geography_Unit_2_TM.indd 156 24-03-2020 12:33:37

உயிர்சேதத்தையும், பொருட்சேதத்தையும் ஏற்படுத்துகிறது. இப்பருவத்தில் நாடு முழுவதும் பகல் நேர வெப்பநிலை வீழ்ச்சியடைகிறது.

**உங்களுக்குத் தெரியுமா?**

உலகில் மிக அதிக அளவு மழை பெறும் (1141 செ.மீ) பகுதியான மௌசின்ராம் (Mawsynram) மேகாலயாவில் அமைந்துள்ளது.

## 2. 3 மழைப் பரவல்

இந்தியாவில் ஆண்டு சராசரி மழையளவு 118 செ.மீ இருப்பினும் நாட்டின் மழைவீழ்ச்சியின் பரவல் சீரற்று காணப்படுகிறது.

**மேற்கு கடற்கரை, அசாம், மேகாலயாவின் தென்பகுதி, திரிபுரா, நாகலாந்து, அருணாச்சலப்பிரதேசம் போன்ற பகுதிகள் 200 செ.மீட்டருக்கும் அதிகமான மழைப்பொழிவையும் பெறுகின்றன.** இராஜஸ்தான் மாநிலம் முழுவதும், பஞ்சாப், ஹரியானா, உத்திரப்பிரதேச மாநிலத்தின் மேற்கு மற்றும் தென்மேற்கு பகுதிகள், மத்தியப் பிரதேசத்தின் மேற்கு பகுதி மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலையின் கிழக்கு பகுதி மற்றும் தக்காணப் பீடபூமி பகுதி மற்றும் தமிழக கடற்கரையின் ஒரு குறுகியப்பகுதி போன்றவை 100 செ.மீட்டருக்கும் குறைவான மழைப்பொழிவைப் பெறுகின்றன. மற்ற பகுதிகள் 100 முதல் 200 செ.மீ வரையிலான மழைப்பொழிவைப் பெறுகின்றன.

## 2. 4 இயற்கைத் தாவரங்கள்

**இயற்கைத் தாவரம் என்பது நேரடியாகவோ மறைமுகமாகவோ மனித உதவியில்லாமல் இயற்கையாக வளர்ந்துள்ள தாவர இனத்தை குறிக்கிறது.** இவை இயற்கையான சூழலில் காணப்படுகின்றன. ஒரு பகுதியில் இயல்பாகவே நீண்ட காலமாக மனிதர்களின் தலையீடு இன்றி இயற்கையாக வளரும் மரங்கள், புதர்கள், செடிகள், கொடிகள் போன்ற அனைத்து தாவர உயிரினங்களையும் இயற்கைத் தாவரங்கள் என்கிறோம்.

காலநிலை, மண் வகைகள், மழைப்பொழிவு மற்றும் நிலத்தோற்றங்கள் ஆகியவை இயற்கைத் தாவரங்கள் பரவல் மற்றும் வளர்ச்சியைக் கட்டுப்படுத்துகின்றன.

மேற்கண்ட காரணிகளின் அடிப்படையில் இந்தியாவின் இயற்கைத் தாவரங்கள் பின்வருமாறு வகைப்படுத்தப்படுகின்றன.

### அயனமண்டல பசுமை மாறாக் காடுகள்

ஆண்டு மழைப்பொழிவு 200 செ.மீட்டருக்கு மேலும் ஆண்டு வெப்பநிலை 22°Cக்கு அதிகமாகவும், சராசரி ஆண்டு ஈரப்பதம் 70 சதவீதத்திற்கு மேலும் உள்ள பகுதிகளில் இவ்வகைக்காடுகள் காணப்படுகிறன. **மேற்கு தொடர்ச்சி மலை,** கர்நாடகா, மகாராஷ்ட்ரா, அந்தமான் நிக்கோபர் தீவுகள், கேரளா, அசாம், மேற்கு வங்காளம், நாகலாந்து, திரிபுரா, மிசோரம், மணிப்பூர் மற்றும் மேகாலயா ஆகிய பகுதிகளில் இவ்வகைக் காடுகள் காணப்படுகிறன. **இரப்பர், எபனி, ரோஸ் மரம், தென்னை, மூங்கில், சின்கோனா, சிடார்** போன்ற மரங்கள் இங்கு காணப்படுகின்றன. போக்குவரத்து வசதியின்மை காரணமாக இவை வியாபார ரீதியாக பெருமளவில் பயன்படுத்தப்படுவதில்லை.


### அயன மண்டல இலையுதிர்க் காடுகள்

இவ்வகை காடுகள் ஆண்டு சராசரி மழைப்பொழிவு அளவு சுமார் 100 செ.மீ முதல் 200 செ.மீ வரை உள்ள பகுதிகளில் காணப்படுகின்றன. இதனை பருவக்காலக்காடுகள் என்றும் அழைக்கலாம். இப்பகுதியில் ஆண்டு சராசரி வெப்பநிலை 27°C ஆகவும் மற்றும் சராசரி ஒப்பு ஈரப்பதம் 60 முதல் 70 சதவீதமாகவும் உள்ளது. இக்காடுகளில் உள்ள மரங்கள் வசந்த காலத்திலும் கோடைக்காலத்தின் முற்பகுதியிலும் வறட்சியின் காரணமாக இலைகளை உதிர்த்து விடுகின்றன. இமயமலைக்கு அருகில் அமைந்துள்ள பஞ்சாப் முதல் அசாம் வரையிலான பகுதிகள், வடசமவெளிகள், பஞ்சாப், ஹரியானா, ஆந்திரப் பிரதேசம், பீகார், மேற்கு வங்காளம், மத்திய இந்தியா, ஜார்கண்ட், மத்தியப்பிரதேசம், சத்தீஸ்கர், தென் இந்தியா, மகாராஷ்ட்ரா, கர்நாடகா, தெலங்கானா, ஆந்திரப்பிரதேசம், கேரளா, தமிழ்நாடு போன்ற பகுதிகளில் இக்காடுகள் காணப்படுகின்றன. இங்கு தேக்கு மற்றும் சால் மிக முக்கிய மரங்களாகும். இதைத் தவிர **சந்தனமரம், ரோஸ்மரம், குசம், மாகு, பாலாங், ஆம்லா, மூங்கில், சிசம் மற்றும் படாக் ஆகியவை பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த மரங்களாகும்.** இக்காடுகள் நறுமண திரவியங்கள், வார்னீஷ், சந்தன எண்ணெய் மற்றும் வாசனை திரவியங்களை அளிக்கின்றன.

### அயனமண்டல வறண்டக் காடுகள்

ஆண்டு மழைப்பொழிவு 50 செ.மீ முதல் 100 செ.மீ வரை உள்ள பகுதிகளில் அயனமண்டல வறண்ட காடுகள் காணப்படுகின்றன. அயனமண்டல வறண்ட காடுகள் ஒரு இடைநிலை வகைக் காடாகும்.

www.tntextbooks.in




கிழக்கு இராஜஸ்தான், ஹரியானா, பஞ்சாப், உத்திரப்பிரதேசத்தின் மேற்குப்பகுதி, மத்தியப்பிரதேசம், மகாராஷ்ட்ராவின் கிழக்குப்பகுதி, தெலங்கானா, மேற்கு கர்நாடகா மற்றும் தமிழ்நாட்டின் கிழக்கு பகுதிகளில் இவ்வகைக் காடுகள் காணப்படுகின்றன. **இலுப்பை (mahua), ஆலமரம், ஆவாராம் பூ மரம் (Amaldas), பலா, மஞ்சக் கடம்பு (Haldu), கருவேலம் (Babool) மற்றும் மூங்கில் ஆகிய முக்கிய மரவகைகளாகும்.**

**பாலைவன மற்றும் அரைப் பாலைவனத் தாவரங்கள்:** இக்காடுகளை "முட்புதர் காடுகள்" என்றும் அழைப்பர். இவை ஆண்டு சராசரி மழைப்பொழிவு 50 செ.மீட்டருக்கு குறைவாகவும், அதிக வெப்பமும் மற்றும் குறைவான ஈரப்பதமும் கொண்ட பகுதிகளில் காணப்படுகின்றன. இவ்வகைக் காடுகள் வடமேற்கு இந்தியப் பகுதிகளான மேற்கு இராஜஸ்தான், தென்மேற்கு ஹரியானா, வடக்கு குஜராத் மற்றும் தென்மேற்கு பஞ்சாப் ஆகிய பகுதிகளிலும், தக்காண பீடபூமியின் கர்நாடகா, மகராஷ்ட்டிரா மற்றும் ஆந்திரப்பிரதேசத்தின் வறண்ட பகுதிகளிலும் காணப்படுகின்றன. **கருவேலம் (Babool), சீமை கருவேல மரம் (Kikar), ஈச்சமரம் போன்ற மரங்கள் இக்காடுகளில் வளர்கின்றன.**

### அல்பைன்/இமயமலைக் காடுகள்

உயரம் மற்றும் மழையளவின் அடிப்படையில் இக்காடுகள் வகைப்படுத்தப்படுகின்றன.



10th_Geography_Unit_2_TM.indd 158 24-03-2020 12:33:37

i. வடகிழக்கு இந்திய மாநிலங்களில் உள்ள கிழக்கு இமயமலைச் சரிவுகளில் 1200–2400 மீ உயரம் உள்ள பகுதிகளில் காணப்படும் இக்காடுகளில் சால், ஓக், லாரஸ், அமுரா, செஸ்ட்நெட், சின்னமன் போன்ற மரங்கள் வளர்கின்றன. 2400–3600 மீ உயரங்களில் **ஓக், பிர்ச், சில்வர், பெர், பைன், ஸ்புரூஸ், ஜுனிப்பர் போன்ற மரங்கள் காணப்படுகின்றன.**

II. இமாச்சலப்பிரதேசம், உத்ரகாண்ட் போன்ற மாநிலங்களில் மிதமான மழைப் பொழிவு உள்ள பகுதிகளில் சுமார் 900 மீட்டர் உயரமுள்ள பகுதிகளில் அரை பாலைவனத் தாவரங்களான சிறு புதர் செடிகள், சிறு மரங்கள் போன்றவை வளருகின்றன. சுமார் 900 – 1800 மீ உயரம் உள்ள மலைகளில் சிர்பைன் எனப்படும் மரங்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. 1800 முதல் 3000 மீ உயரமுள்ள பகுதிகளில் மித வெப்ப மண்டல ஊசியிலைக் காடுகள் பரவியுள்ளன.

### அல்பைன் காடுகள்

சுமார் 2400 மீட்டருக்கு மேல் உள்ள இமயமலைகளின் உயரமான பகுதிகளில் இவ்வகைக் காடுகள் காணப்படுகின்றன. இவ்வகைக்காடுகள் ஊசியிலை மரங்களைக் கொண்டுள்ளன. **ஓக், சில்வர் பிர், பைன் மற்றும் ஜுனிபர் மரங்கள் இக்காட்டின் முக்கிய மரவகைகளாகும். கிழக்கு இமயமலைப் பகுதியில் இவ்வகையான காடுகள் பரந்த அளவில் உள்ளன.**

### அலையாத்திக் காடுகள்

இக்காடுகள் டெல்டாக்கள், பொங்கு முகங்கள் மற்றும் கடற்கழிமுகப் பகுதிகளில் காணப்படுகின்றன. இவை ஓதங்களின் ஆதிக்கத்திற்கு உள்ளாவதால் சதுப்புநிலக்காடுகள் மற்றும் டெல்டா காடுகள் எனவும் அழைக்கப்படுகின்றன. கங்கை–பிரம்மப்புத்திரா டெல்டா பகுதிகளில் உலகில் மிகப் பெரிய சதுப்பு நிலக் காடுகள் உள்ளன. மகாநதி, கோதாவரி மற்றும் கிருஷ்ணா நதிகளின் டெல்டா பகுதிகளிலும் இவ்வகை ஓதக்காடுகள் காணப்படுகின்றன. இவை "மாங்குரோவ் காடுகள்" என்றும் அழைக்கப்படுகின்றன.

## 2.5 வன உயிரினங்கள்

இயற்கைச் சூழ்நிலை அல்லது காடுகளை வாழிடமாகக் கொண்டு வாழும் விலங்குகள் வன உயிரினங்கள் எனப்படுகின்றன. வன உயிரினங்கள் இருபிரிவுகளை உள்ளடக்கியது. அவை முதுகெலும்புள்ளவை (மீன், இருவாழ்விகள், ஊர்வன, பறவைகள், பாலூட்டிகள்) மற்றும் முதுகெலும்பில்லாதவை (தேனீ, பட்டாம் பூச்சி, அந்திப்பூச்சி போன்றவை). இந்தியா அதிக வன உயிரினங்களையும், வன உயிரின வகைகளையும் கொண்ட நாடு. உலகிலுள்ள 1.5 மில்லியன் வகையான வன விலங்கு உயிரினங்களில் இந்தியாவில் மட்டும் 81,251க்கும் மேற்பட்ட வகையான வன விலங்கினங்கள் உள்ளன.

புலி, சிங்கம், சிறுத்தை, பனி சிறுத்தை, மலைப்பாம்பு, நரி, ஓநாய், கரடி, முதலை, காண்டாமிருகம், நீர்யானை, ஒட்டகம், வரிக்குதிரை, காட்டுநாய், குரங்கு, பாம்பு, மான் வகை, காட்டு எருமை வகை, வலிமைமிக்க யானை வகை போன்ற வனவிலங்குகளின் வாழிடமாக இந்தியா திகழ்கிறது. வேட்டையாடுதல், காடழிப்பு மற்றும் இதர மனித குறுக்கீடுகளினால் வன விலங்குகளின் வாழிடங்கள் அழிக்கப்பட்டு பல உயிரினங்கள் அழிவின் விளிம்பில் உள்ளன.

### இந்திய வனவிலங்கு வாரியம் 1952 (IBWL)

1952ஆம் ஆண்டு வன விலங்குகள் பாதுகாப்பு மற்றும் மேலாண்மைக் குறித்த பரிந்துரைகளை அரசாங்கத்திற்கு வழங்க நிறுவப்பட்ட அமைப்பு இதுவாகும்.

வனவிலங்குகளைப் பாதுகாக்கவும், வேட்டையாடுதல், கடத்துதல் மற்றும் சட்டவிரோத வணிகம் ஆகியவற்றைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடனும் இந்திய அரசு 1972இல் வன விலங்கு பாதுகாப்புச் சட்டத்தை இயற்றியது.


இந்திய வனவிலங்கின் செழுமைத் தன்மையையும், பன்மையையும் பாதுகாக்க 102 **தேசிய பூங்காக்கள் மற்றும் 515 வனவிலங்குகள் சரணாலயங்கள் உருவாக்கப்பட்டன.**

### உயிர்க்கோள பெட்டகம் அல்லது காப்பகங்கள்

**உயிர்க்கோள பெட்டகம் என்பது நிலம் மற்றும் கடலோர சுற்றுச் சூழலைப் பாதுகாக்க ஏற்படுத்தப்பட்ட ஒன்று.** இந்திய அரசாங்கம் 18 உயிர்க்கோள காப்பகங்களை ஏற்படுத்தியுள்ளது. இவற்றின் பணி இயற்கை வாழ்விடத்தின் பெரும் பகுதிகளைப் பாதுகாத்தல், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தேசிய பூங்காக்களைப் பாதுகாத்தல் இவைகளின் பொருளாதார பயன்பாட்டு அண்மைப் பகுதிகளைப் பாதுகாத்தல் போன்றவற்றை உள்ளடக்கியது.

உங்களுக்குத் தெரியுமா?

புலிகள் பாதுகாப்பு திட்டம் 1973இல் தொடங்கப்பட்டது. புலிகளை பாதுகாக்கவும் அதன் எண்ணிக்கையை அதிகரிக்கும் நோக்கத்தோடும் புலிகள் பாதுகாப்பகங்கள் தொடங்கப்பட்டன.



இந்தியா - உயிர்க்கோள காப்பகங்கள், வனவிலங்கு சரணாலயம்

### இந்தியாவின் உயிர்க்கோள காப்பகங்கள்

இந்தியாவில் உள்ள 18 உயிர்க்கோள காப்பகங்களில் 11 காப்பகங்கள் (மன்னார் வளைகுடா, நந்தா தேவி, நீலகிரி, நோக்ரேக், பச்மாரி, சிம்லிபால், சுந்தரவனம், அகத்திய மலை,பெரிய நிக்கோபார், கஞ்சன்ஜங்கா மற்றும் அமர்கண்டக்) யுனெஸ்கோவின் (UNESCO) மனித மற்றும் உயிர்க்கோள காப்பக திட்டத்தின் கீழ் செயல்படுகின்றன.



10th_Geography_Unit_2_TM.indd 160 24-03-2020 12:33:39

www.tntextbooks.in

## பாடச்சுருக்கம்

- இந்திய காலநிலை அயனமண்டல பருவக்காற்றுக் காலநிலை என வரையறுக்கப்படுகிறது.
- இந்தியாவில் நான்கு பருவக்காலங்கள் உள்ளன. அவை குளிர்காலம், கோடைக்காலம், தென்மேற்கு பருவக்காற்று காலம் மற்றும் வடகிழக்கு பருவக்காற்று காலம்.
- மனிதனின் நேரடி அல்லது மறைமுகத் தலையீடின்றி இயற்கைச் சூழலில் வளரும் தாவர இனத்தை "இயற்கைத் தாவரங்கள்" என்கிறோம்.
- இயற்கைத் தாவரங்கள், அயனமண்டல பசுமை மாறாக் காடுகள், அயனமண்டல இலையுதிர்க்காடுகள், அயனமண்டல வறண்ட காடுகள், பாலை மற்றும் அரைபாலைவனக் காடுகள், மலைக் காடுகள், ஆல்பைன் காடுகள் மற்றும் சதுப்புநிலக்காடுகள் என வகைப்படுத்தப்படுகின்றன.
- உயிர்க்கோள காப்பகங்கள் என்பது நிலம் மற்றும் கடலோரப் பகுதிகளில் பாதுகாக்கப்பட்ட சுற்றுச்சூழல் மண்டலங்களாகும்.

## பயிற்சி

EGMWN8

### I சரியான விடையைத் தேர்வு செய்க

1. மேற்கத்திய இடையூறுகளால் மழைப்பொழிவைப் பெறும் பகுதி ________
   அ) தமிழ்நாடு ஆ) கேரளா
   இ) பஞ்சாப் ஈ) மத்தியப் பிரதேசம்
2. கேரளா மற்றும் கர்நாடக கடற்கரைப் பகுதிகளில் விளையும் மாங்காய்கள் விரைவில் முதிர்வதற்கு ________ காற்றுகள் உதவுகின்றன.
   அ) லூ ஆ) நார்வெஸ்டர்ஸ்
   இ) மாஞ்சாரல் ஈ) ஜெட் காற்றோட்டம்
3. ஒரே அளவு மழைபெறும் இடங்களை இணைக்கும் கோடு ________ ஆகும்.
   அ) சமவெப்ப கோடுகள்
   ஆ) சம மழைக்கோடுகள்
   இ) சம அழுத்தக் கோடுகள்
   ஈ) அட்சக் கோடுகள்
4. இந்தியாவின் காலநிலை ________ ஆக பெயரிடப்பட்டுள்ளது.
   அ) அயன மண்டல ஈரக் காலநிலை
   ஆ) நிலநடுக்கோட்டுக் காலநிலை
   இ) அயனமண்டல பருவக்காற்றுக் காலநிலை
   ஈ) மித அயனமண்டலக் காலநிலை
5. பருவக்காற்று காடுகள் இவ்வாறு அழைக்கப்படுகின்றன.
   அ) அயன மண்டல பசுமை மாறாக் காடுகள்
   ஆ) இலையுதிர்க் காடுகள்
   இ) மாங்குரோவ் காடுகள்
   ஈ) மலைக் காடுகள்
6. சேஷாசலம் உயிர்க்கோள பெட்டகம் அமைந்துள்ள மாநிலம் ________
   அ) தமிழ்நாடு ஆ) ஆந்திரப் பிரதேசம்
   இ) மத்தியப் பிரதேசம் ஈ) கர்நாடகா
7. யுனெஸ்கோவின் (UNESCO) உயிர்க்கோளப் பாதுகாப்பு பெட்டகத்தின் ஒரு அங்கமாக இல்லாதது ________.
   அ) நீலகிரி ஆ) அகத்திய மலை
   இ) பெரிய நிக்கோபார் ஈ) கட்ச்

### II பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| 1. | சுந்தரவனம் | – | பாலை மற்றும் அரைப்பாலைவனத் தாவரங்கள் |
| 2. | உயிர்பன்மைச் சிறப்பு பகுதிகள் | – | அக்டோபர், டிசம்பர் |
| 3. | வடகிழக்குப் பருவக் காற்று | – | கடற்கரைக் காடுகள் |
| 4. | அயன மண்டல முட்புதர் காடுகள் | – | மேற்கு வங்காளம் |
| 5. | கடலோரக் காடுகள் | – | இமயமலைகள் |

### III கீழ்க்காணும் வாக்கியங்களைக் கருத்தில் கொண்டு கொடுக்கப்பட்டுள்ளவற்றில் சரியான விடையைத் தேர்வு செய்யவும்

1. கூற்று: இமய மலையானது ஒரு காலநிலை அரணாகச் செயல்படுகிறது.

   காரணம்: இமயமலை மத்திய ஆசியாவிலிருந்து வீசும் குளிர்க்காற்றை தடுத்து இந்தியத் துணைக்கண்டத்தை மிதவெப்பமாக வைத்திருக்கிறது.



10th_Geography_Unit_2_TM.indd 161 24-03-2020 12:33:39

அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, கூற்றுக்கான காரணம் சரி.

ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, கூற்றுக்கான காரணம் தவறு.

இ) கூற்று சரி காரணம் தவறு.

ஈ) கூற்று தவறு காரணம் சரி.

### IV பொருந்தாத விடையைத் தேர்வு செய்க

1. ஓதக்காடுகள் இதனைச் சுற்றி காணப்படுகிறது.

   அ) பாலைவனம்
   
   ஆ) கங்கை பிரம்மபுத்ரா டெல்டா
   
   இ) கோதாவரி டெல்டா
   
   ஈ) மகாநதி டெல்டா

2. இந்தியாவின் காலநிலையைப் பாதிக்கும் காரணிகள்

   அ) அட்ச பரவல்
   
   ஆ) உயரம்
   
   இ) கடலிலிருந்து அமைந்துள்ள தூரம்
   
   ஈ) மண்

### V சுருக்கமாக விடையளிக்கவும்

1. காலநிலையை பாதிக்கும் காரணிகளை பட்டியலிடுக.
2. "வெப்ப குறைவு விகிதம்" என்றால் என்ன?
3. "ஜெட் காற்றோட்டங்கள்"' என்றால் என்ன?
4. பருவக் காற்று குறித்து ஒரு சிறு குறிப்பு எழுதுக.
5. இந்தியாவின் நான்கு பருவக் காலங்களைக் குறிப்பிடுக..
6. 'பருவமழை வெடிப்பு' என்றால் என்ன?
7. அதிக மழைப்பெறும் பகுதிகளைக் குறிப்பிடுக.
8. இந்தியாவில் சதுப்புநிலக் காடுகள் காணப்படும் இடங்களைக் குறிப்பிடுக.
9. இந்தியாவில் உள்ள உயிர்க்கோள காப்பகங்கள் ஏதேனும் ஐந்தினை எழுதுக.

### VI வேறுபடுத்துக

1. வானிலை மற்றும் காலநிலை.
2. அயன மண்டல பசுமை மாறாக் காடுகள் மற்றும் இலையுதிர்க் காடுகள்.
3. வடகிழக்கு பருவக் காற்று மற்றும் தென்மேற்கு பருவக்காற்று.

### VII காரணம் கண்டறிக

1. மேற்கு கடற்கரைச் சமவெளி குறுகலானது.
2. இந்தியா அயன மண்டலப் பருவக்காற்றுக் காலைநிலையைப் பெற்றுள்ளது.
3. மலைப்பகுதிகள் சமவெளிகளை விட குளிரானவை.

### VIII விரிவான விடையளிக்கவும்

1. தென்மேற்கு பருவக் காற்று குறித்து எழுதுக.
2. இந்திய காடுகள் பற்றி விவரிக்கவும்.

### IX வரைபடப் பயிற்சி

இந்திய நிலவரைபடத்தில் கீழ்க்கண்ட இடங்களைக் குறிக்கவும்.

1. தென்மேற்கு பருவக்காற்று வீசும் திசை.
2. வடகிழக்கு பருவக்காற்று வீசும் திசை.
3. அதிக மழை பெறும் பகுதிகள்.
4. மலைக் காடுகள்.
5. பன்னா உயிர்க்கோள பெட்டகம்.
6. அகத்தியர் மலை உயிர்க்கோளப் பெட்டகம்.

## மேற்கோள் நூல்கள்


1. Attri, S.D. and A.Tyagi, 2010. “Climate Profile of India”, India Meteorological Department, Ministry of Earth Sciences, Govt. of India, New Delhi.
2. Singh, S. and J.Saroha, 2014. “Geography of India”, Access Publishing India Pvt. Ltd. New Delhi.
3. Hussain, M. 2008. “Geography of India” Tata McGraw-Hill Publishing House Company Ltd. New Delhi.
4. Govt. of India, 2014. “India’s fifth National report to the Convention on Biological Diversity” Ministry of Environment and Forests.


**இணையச் செயல்பாடு**

### இந்தியா – காலநிலை மற்றும் இயற்கைத் தாவரங்கள்

**செயல்முறை**

- கீழ்காணும் உரலி / விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தி இச்செயல்பாட்டிற்கான இணையப் பக்கத்திற்குச் செல்லவும்.
- சுட்டியை பயன்படுத்தி இணைய பக்கத்தின் கீழே செல்லவும். பின்பு ‘Explore’ யை சொடுக்கவும்.
- பின்பு இடது பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள ‘ Climate’ சென்று ‘ Annual Rainfall’ யை தேர்ந்தெடுக்கவும்.

B373_10_SOCIAL_TM

உரலி: https://bhuvan-app1.nrsc.gov.in/mhrd_ncert/



10th_Geography_Unit_2_TM.indd 162 24-03-2020 12:33:39

# அலகு – 3

# இந்தியா – வேளாண்மை



## கற்றலின் நோக்கங்கள்

- இந்திய மண் வகைகளின் தன்மை மற்றும் பரவலைப் புரிந்துகொள்ளல்
- நீர்ப்பாசனம் மற்றும் பல்நோக்கு திட்டங்களின் முக்கியத்துவத்தை தெரிந்துகொள்ளல்
- இந்திய வேளாண்மை வகைகள் மற்றும் அதன் முக்கியத்துவத்தை கற்றறிதல்
- இந்திய கால்நடை மற்றும் மீன் வளங்களைப் புரிந்துகொள்ளல்
- இந்தியா வேளாண்மை எதிர்கொள்ளும் பிரச்சனைகள் பற்றி புரிந்துகொள்ளல்

T34AGR

## அறிமுகம்

வளங்களில் மண்வளம் மிக முக்கிய வளமாகக் கருதப்படுகிறது. இந்திய நாட்டின் பரப்பளவு கொண்ட மற்ற நாடுகளைக் காட்டிலும், இந்தியாவின் வேறுபட்ட இயற்கைச் சூழல் அதிக எண்ணிக்கையிலான மண் வகைகளுக்கு காரணமாக உள்ளது. (வளமான மண் வகைகள், வேளாண்மையை ஊக்கப்படுத்துவதன் மூலம் அதிக மக்கட் தொகைக்கு ஆதரவாக உள்ளது).

## 3.1 மண்


மண் என்பது கனிமங்களின் கூட்டுப் பொருள்கள், மக்கிய தாவரங்கள், விலங்கினப் பொருள்கள், காற்று மற்றும் நீர் ஆகியவற்றை உள்ளடக்கியது. இது புவியின் மேற்பரப்பில் காணப்படும் ஒரு அடுக்காகும். மண்துகள்கள், களிமண், மணல் மற்றும் மண்மண்டி படிவு (Silt) என மூன்று வகைகளாகப் பிரிக்கப்படுகிறது. பல்வேறு காலநிலைச் சூழலில் பாறைகள் சிதைவடைவதால் மண் உருவாகிறது. சில மண்வகைகள் தேயுருதல் காரணிகளால் அரிக்கப்பட்டு பின் படியவைக்கப்பட்டு உருவாகின்றன. மண்ணானது இடத்திற்கு இடம் வேறுபடும்.

### மண்ணின் வகைகள்

1953ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட **இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம்** இந்தியாவில் காணப்படும் மண்வகைகளை 8 பிரிவுகளாக வகைப்படுத்தியுள்ளது. அவை

1. **வண்டல் மண்**
2. **கரிசல் மண்**
3. **செம்மண்**
4. **சரளை மண்**
5. **காடு மற்றும் மலை மண்**
6. **வறண்ட பாலை மண்**
7. **உப்பு மற்றும் காரமண்**
8. **களிமண் மற்றும் சதுப்பு நில மண்**

இந்தியா - மண் வகைகள்



| மண் வகைகள் | மண்ணின் பண்புகள் | பரவல் | வளரும் பயிர்கள் |
|---|---|---|---|
| **வண்டல் மண்** | **காதர்:** வெளிர் நிறமுடைய மணற்பாங்கான மண்.<br>**பாங்கர்:** சுண்ணாம்பு மற்றும் களிமண் பாங்கான பழைய வண்டல் படிவுகள், அடர் நிறம் உடையது.<br>**உருவாக்கம்:** சிற்றோடைகள் மற்றும் ஆறுகளின் வேகம் குறையும் பொழுது படிய வைப்பதினால் உருவாகின்றன.<br>**வேதியியல் பண்புகள்:** பொட்டாசியம், பாஸ்போரிக் அமிலம், சுண்ணாம்பு மற்றும் கார்பன் கலவைகள் அதிகமாக காணப்படுகின்றன. நைட்ரஜன் குறைவாக உள்ளது.<br>**மண்ணின் தன்மைகள்:** வண்டல், மண்மண்டி (Silt) களிமண் போன்ற கலவைகளுடன் மண்ணடுக்கு காணப்படுகிறது | கங்கை மற்றும் பிரம்மபுத்திரா ஆற்றுப் பள்ளத்தாக்குகள், உத்தரப்பிரதேசம், உத்தரகாண்ட் , பஞ்சாப், ஹரியானா, மேற்கு வங்காளம் மற்றும் பீகார் மாநிலங்களில் உள்ள சமவெளிப் பகுதிகள், கிழக்கு கடற்கரையில் அமைந்துள்ள ஆற்று முகத்துவாரப் பகுதி | நெல், கோதுமை, கரும்பு மற்றும் எண்ணெய் வித்துக்கள் |
| **கரிசல் மண்** | **உருவாக்கம்**: தக்காணப் பகுதியில் உள்ள பசால்ட் பாறைகளில் இருந்து உருவானது.<br>**நிறம்:** டைட்டானியம் மற்றும் இரும்பு தாதுக்களால் கருப்பு நிறமாக உள்ளது.<br>**வேதியியல் பண்புகள்:** கால்சியம், மக்னீசியம், கார்போனேட்டுகள், அதிக அளவிலான இரும்பு, அலுமினியம், சுண்ணாம்பு மற்றும் மாங்கனீசு ஆகியன காணப்படுகின்றன. நைட்ரஜன்,பாஸ்போரிக் அமிலம், மற்றும், இலை மக்குகள் குறைவாக உள்ளன .<br>**மண்ணின் தன்மைகள்:** ஈரமாக இருக்கும் போது சேறாகவும், ஈரப்பதத்தை நீண்ட நேரம் தக்க வைத்துக் கொள்ளும் தன்மையும் உடையது. | மகாராஷ்டிரா மற்றும் மாளவப் பீடபூமி கத்தியவார் தீபகற்பம், தெலங்கானா, ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள ராயல்சீமா மற்றும் கர்நாடக மாநிலத்தின் வடபகுதி | பருத்தி, தினை வகைகள், புகையிலை மற்றும் கரும்பு |
| **செம்மண்** | **உருவாக்கம்:** பழமையான படிக பாறைகளான கிரானைட், நைஸ் போன்ற பாறைகள் சிதைவடைவதால் உருவாகின்றன.<br>**வேதியியல் பண்புகள்:** இரும்பு மற்றும் மக்னீசியம் அதிகமாக காணப்படுகிறது. நைட்ரஜன், இலைமட்குகள், பாஸ்போரிக் அமிலம் மற்றும் சுண்ணாம்பு சத்துக்கள் குறைவாக காணப்படுகின்றன.<br>**மண்ணின் தன்மைகள்:** மென்துகள்கள் குறிப்பிடப்பட்டுள்ள உப்புக்கரைசல், வெண்களிப் பாறைத்தாதுக்கள், சிறு வெடிப்புகளுடன் கூடிய செம்மண் படிவு. | தக்காண பீடபூமியின் கிழக்குப் பகுதி, தென் மாநிலங்களான கேரளா, தமிழ்நாடு, கர்நாடகா மற்றும் சோட்டா நாகபுரி பீடபூமி, ஜார்க்கண்ட் | கோதுமை, நெல், பருத்தி, கரும்பு மற்றும் பருப்பு வகைகள் |
| **சரளை மண்** | **உருவாக்கம்:** வெப்பம் மற்றும் குளிர் அடுத்தடுத்து நிகழும் போது மண்சுவரல் (leaching ) காரணமாக உருவாகிறது.<br>**வேதியியல் பண்புகள்;** இரும்பு மற்றும் அலுமினியத்தின் நீரேற்ற ஆக்சைடுகளால் உருவானது.<br>**மண்ணின் தன்மை:** உயரமான மலைப் பகுதிகளில் அதிகமான அமிலத்தன்மையுடனும் தாழ்வான பகுதிகளில் குறைந்த அளவும் உள்ளது.பொதுவாக இது ஈரப்பதத்தை தக்கவைத்துக் கொள்வதில்லை. ஆனால் களிமண் கலந்த வண்டல் படிவுகளைக் கொண்ட சமவெளிப் பகுதிகளில் ஈரப்பதத்தை தக்கவைத்துக் கொள்கிறது. | அசாம் குன்றுகள்,கேரளா மற்றும் கர்நாடகாவில் உள்ள மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரப் பகுதிகள், ஒடிசா மற்றும் கிழக்கு தொடர்ச்சி மலைகள் | காபி, இரப்பர், முந்திரி மற்றும் மரவள்ளிக் கிழங்கு |



10th_Geography_Unit_3_TM.indd 164 11-04-2020 11:47:05

| மண் வகைகள் | மண்ணின் பண்புகள் | பரவல் | வளரும் பயிர்கள் |
|---|---|---|---|
| **காடு மற்றும் மலை மண்** | <u>உருவாக்கம்:</u> பனிமழை வெப்பநிலை வேறுபாடுகளால் பௌதீக சிதைவின் காரணமாக உருவாகின்றது. காலநிலைக்கு ஏற்ப இடத்திற்கு இடம் மாறுபடுகிறது<br><br><u>வேதியியல் பண்புகள்:</u> பொட்டாஷ், பாஸ்பரஸ் மற்றும் சுண்ணாம்புச் சத்துக்கள் குறைவாகக் காணப்படுகிறது.<br><br><u>தன்மை:</u>மென்மையான மணல் மற்றும் பாறை துகள்கள் கலந்து காணப்படுகிறது. இம் மண்ணின் தன்மை தாய்பாறைக் கேற்ப மாறுபடுகிறது. அதிக இலை மட்குச் சத்துகள் உடையது மெதுவாக மட்குகளால் சிதைவுறுவதால் காரத்தன்மை கொண்டதாக உள்ளது. | ஜம்மு–காஷ்மீர், லடாக் பகுதிகள் இமாச்சலப் பிரதேசம், உத்தரகாண்ட், சிக்கிம் போன்ற மாநிலங்களில் உள்ள ஊசியிலைக் காடுகளின் பகுதிகள், மேற்கு தொடர்ச்சி மலைகள் மற்றும் கிழக்கு தொடர்ச்சி மலைகள் | காபி, தேயிலை, நெல், மக்காச் சோளம், உருளைக் கிழங்கு, பார்லி, வெப்ப மண்டல பழவகைகள் மற்றும், பல்வேறு வகையான வாசனைப் பொருள்கள் |
| **வறண்ட பாலை மண்** | <u>உருவாக்கம்:</u> வறண்ட கால நிலை, அதிக வெப்பம் காரணமாக ஆவியாதல் அதிகமாக இருப்பதால் மேல் மண் வறண்டு காணப்படுகிறது. தாவரங்கள் இல்லாமையால் இலை மட்குச் சத்து குறைவாகக் காணப்படுகிறது.<br><br><u>வேதியியல் பண்புகள்:</u> அதிக அளவிலான உப்பு, அமிலத்தன்மை, பாஸ்பேட், பல்வேறு அளவுகளில் உள்ள கால்சியம் கார்பனேட், உயிர்சத்துக்கள் மற்றும் நைட்ரஜன் குறைவாகவும் காணப்படுகிறது.<br><br><u>தன்மை:</u> வெளிர்நிறம் குறைந்த இலை மட்கு சத்து புரைத்தன்மையுடையது, குறைந்த ஈரப்பதம் உடையது. | இராஜஸ்தான், குஜராத்தின் வட பகுதி, பஞ்சாப் மாநிலத்தின் தென் பகுதி | நீர் பாசன வசதியுடன் தினை வகைகள், பார்லி, பருத்தி, சோளம், பருப்பு வகைகள் பயிரிடப் படுகின்றன. |
| **உப்பு மற்றும் கார மண்** | <u>உருவாக்கம்:</u> வடிகாலமைப்பு இல்லாமையால் நீர்பிடிப்புக் காரணமாக தீங்கு விளைவிக்கக் கூடிய உப்புகள் நுண்புழை நுழைவு காரணமாக மண்ணின் கீழ் அடுக்கிலிருந்து மேற்பரப்பிற்கு கடத்தப்படுகிறது. இதனால் இம்மண், உப்பு மற்றும் காரத் தன்மையுடன் காணப்படுகிறது.<br><br><u>வேதியியல் பண்புகள்:</u> சோடியம், மக்னீசியம், கால்சியம் மற்றும் சல்பூரிக் அமிலம் காணப்படுகிறது.<br><br><u>தன்மை:</u> சிதைக்கப்படாத பாறைகள் மற்றும் சிதைவுற்ற கனிமங்களை உடையது. | ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம், பீகார், உத்தரப்பிரதேசம், ஹரியானா, பஞ்சாப், இராஜஸ்தான் மற்றும் மகாராஷ்டிரா மாநிலங்களின் வறண்ட பகுதிகள் | அதிக காரத்தன்மை காரணமாக இங்கு பயிர்கள் வளர்வதற்கு ஏற்ற சூழ்நிலை இல்லை. |
| **களிமண் மற்றும் சதுப்பு நில மண்** | <u>உருவாக்கம்:</u> உயிரினப் பொருட்களிலிருந்து ஈர காலநிலை உள்ள பகுதிகளில் இம்மண் காணப்படுகிறது. இவ்வகை மண் கருமை நிறம் மற்றும் அதிககாரத் தன்மையுடையது.அதிக மழையளவு, அதிக ஈரப்பதம் கொண்ட பகுதிகளில் காணப்படுகிறது.<br><br><u>வேதியியல் பண்புகள்:</u> பொட்டாஷ் மற்றும் பாஸ்பேட், சத்துகள் குறைவாகவும், காணப்படுகிறது.<br><br><u>தன்மை:</u> ஈரத்தன்மையுடன் இலை மட்கைக் கொண்டும் கருமை நிறத்திலும் உள்ளது. | கேரளாவில் கோட்டயம் மற்றும் ஆலப்புழை மாவட்டங்கள், ஒடிசா தமிழ்நாடு கடற்கரைப் பகுதிகள், மேற்கு வங்கத்தில் உள்ள சுந்தரவனப் பகுதிகள், பீகார், உத்தரகாண்ட் மாநிலத்தில் அல்மோரா மாவட்டம். | நெல், சணல் |



10th_Geography_Unit_3_TM.indd 165 11-04-2020 11:47:05

**மண் சீரழிவு:** இந்தியாவில் மண் சீரழிவு என்பது ஒரு முக்கிய பிரச்சனையாக உள்ளது. இந்திய தொலை நுண்ணுணர்வு (IIRS), 2015ஆம் ஆண்டு அறிக்கையின் படி 147 மில்லியன் ஹெக்டேர் நிலப்பரப்பு மண் அரிப்பால் பாதிப்படைந்துள்ளது.


**இந்திய மண் வகைகள் எதிர்கொள்ளும் சவால்கள்:**

1. மண் அரிப்பு (தாள் அரிப்பு, நீரோட்ட மண்ணரிப்பு, நீர் பள்ள மண்ணரிப்பு, பள்ளத்தாக்கு மண்ணரிப்பு).
2. மண் சீரழிவு 3. நீர் தேங்குதல் 4. உவர்ப்பு மற்றும் காரத்தன்மை 5. உப்பு படிவுகள் ஆகியனவாகும்.

**மண் வளப்பாதுகாப்பும் மண்வள மேலாண்மையும்:**

1. காடுகள் உருவாக்கம்
2. அணைகள் மற்றும் குறுக்கணைகள் கட்டுதல்.
3. அதிக மேய்ச்சலைத் தடுத்தல்
4. மேம்பட்ட பயிர்ச்சாகுபடி முறைகளைப் பின்பற்றல்

சம உயரம் உழுதல், பயிற்சுழற்சி முறை, கரைகள் கட்டுதல், படிக்கட்டு வேளாண்மை, பட்டை பயிரிடல், காற்றெதிர் திசையில் மரங்கள் நடல், நிலைத்த வேளாண் நுட்பத்தையும் மண் மேலாண்மைக்கு உகந்த பாதுகாப்பு முறைகளையும் பின்பற்றுதல்.






10th_Geography_Unit_3_TM.indd 166 11-04-2020 11:47:05

www.tntextbooks.in

## 3.2 நீர்ப்பாசனம்


வேளாண் பயிர்களுக்கு செயற்கை முறையில் நீரைக் கொண்டு செல்லும் முறை நீர்ப்பாசனம் என்று அழைக்கப்படுகிறது. இந்தியா அதிக வெப்பத்தையும் சீரற்ற பருவகால மழைப்பொழிவையும் கொண்டிருப்பதால், வறண்ட காலங்களிலும் வேளாண் நடவடிக்கைகளை மேற்கொள்ள நீர்ப்பாசனம் அத்தியாவசியமான ஒன்றாக உள்ளது. .

### நீர்ப்பாசன ஆதாரங்கள் (அ) மூலங்கள்

நிலத்தோற்றம், மண், மழைப் பொழிவு, நிலநீர் மற்றும் நிலத்தடி நீர் இருப்பு ஆற்றின் இயல்பு (வற்றும் ஆறு, வற்றாத ஆறு) பயிர்களின் தேவைகள் போன்றவற்றின் அடிப்படையில் பல்வேறு வகையான நீர்ப்பாசன வகைகள் பயன்பாட்டில் உள்ளன.

பாசன மூலங்களாவன:

- கால்வாய் பாசனம்
- கிணற்றுப் பாசனம் மற்றும்
- ஏரிப் பாசனம்




**நீர்ப்பாசனத்தின் பரப்பளவு**

### அ. கால்வாய் பாசனம்

கால்வாய் பாசனம் இந்தியாவின் இரண்டாவது மற்றும் முக்கியமான நீர்ப்பாசன ஆதாரமாகும்.

தாழ்வான மற்றும் சமமான நிலப்பகுதி, பருமன் மிகுந்த வளமான மண், வற்றாத நீர் மூலங்கள் மற்றும் அதிக நீர்பிடிப்புக் கொண்ட பகுதிகளில் கால்வாய் பாசனம் முக்கிய ஆதாரமாக உள்ளது.

கால்வாய்ப் பாசனத்தை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம்.

#### 1. வெள்ளப் பெருக்கு கால்வாய்

இவ்வகை கால்வாய்களில் ஆற்றிலிருந்து நேரடியாக எவ்வித தடுப்பணைகளும் இன்றி தண்ணீர் கால்வாய் மூலம் எடுக்கப்படுகிறது. இவ்வகை கால்வாய்கள் வெள்ளக் காலங்களில் தண்ணீரை திசை திருப்பப் பயன்படுவதோடு மழைக்காலங்களில் மட்டுமே பயன்பாட்டில் இருக்கும்.

#### 2. வற்றாத கால்வாய்

இவ்வகை கால்வாய்கள் வற்றாத நதிகளின் குறுக்கே அணைகளை கட்டி நீரின் போக்கை சீர்படுத்தி பயன்பாட்டிற்கு கொண்டு வருதலாகும். கால்வாய் பாசனத்தில் 60 சதவிகிதம் வட இந்திய பெரும் சமவெளிகளில் காணப்படுகின்றன.

### ஆ) கிணற்றுப் பாசனம்

கிணறு என்பது புவியில் செங்குத்தாக தோண்டப்பட்ட பள்ளம் அல்லது ஆழ்துளை மூலம் நிலத்தடி நீரை புவியின் மேற்பரப்பிற்கு கொண்டுவருதல் ஆகும். இது நாட்டின் மலிவான மற்றும் நம்பகமான நீர்ப்பான ஆதாரமாக உள்ளது. மழைப்பொழிவு குறைவான பகுதிகளிலும் கால்வாய் மற்றும் ஏரிப்பாசனம் இல்லாத பகுதிகளிலும் கிணற்றுப் பாசனம் அவசியமாகிறது.

கிணறுகள் இரண்டு வகைப்படும் அவை:

1. திறந்தவெளிக் கிணறுகள்
2. ஆழ்துளைக் கிணறுகள்

#### 1. திறந்த வெளிக் கிணறுகள்

நிலத்தடி நீர் போதுமான அளவிற்கு இருக்கக் கூடிய பகுதிகளில் இவ்வகைப் பாசனம் காணப்படுகின்றது. இப்பாசனம் கங்கை சமவெளி, மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா, காவிரி, நர்மதை மற்றும் தபதி ஆற்றுப் பள்ளத்தாக்குப் பகுதிகளில் அதிகம் காணப்படுகிறது.

#### 2. ஆழ்த்துளைக் கிணறு

ஆழ்த்துளைக் கிணற்று பாசனம் நிலத்தடி நீர் மட்டம் குறைவாக உள்ள பகுதிகள், மின் மிகை பகுதிகள் மற்றும் மென்பாறைகள் கொண்ட பகுதிகளில் மேற்கொள்ளப்படுகிறது. குஜராத், மகாராஷ்டிரா, பஞ்சாப், மத்தியப்பிரதேசம் மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் இப்பாசனம் அதிகளவில் காணப்படுகிறது.

### இ) ஏரிப்பாசனம்

**ஏரி என்பது புவியின் மேற்பகுதியில் இயற்கையாக அல்லது மனிதனால் உருவாக்கப்பட்ட ஒரு தாழ்வான நீர் தேங்கும் பகுதியாகும்.** பொதுவாக இவை ஆற்றின் குறுக்கே ஏற்படுத்தப்பட்டு ஏரியைச் சுற்றிலும் கரைகள் கட்டப்படுகின்றன. இங்கு நீரைச் சேகரித்து வேளாண்மை மற்றும் இதர தேவைகளுக்கும் பயன்படுத்தப்படுகிறது. ஏரிப்பாசனம் இந்தியாவின் மிகப் பழமையான பாசன முறையாகும்.


10th_Geography_Unit_3_TM.indd 167 11-04-2020 11:47:05

www.tntextbooks.in

இப்பாசனமுறை ஏரிகள் மற்றும் குளங்களையும் உள்ளடக்கியது.

தீபகற்ப இந்தியாவில் ஏரிப்பாசனம் சிறந்து விளங்க கீழ்க்கண்ட காரணிகள் முக்கியமானவைகளாகும்.

1) கடினமானப் பாறைகளும் சமமற்ற நிலத்தோற்றம் உள்ள பகுதிகளில் கால்வாய்கள், மற்றும் கிணறுகள் தோண்டுவதற்கு கடினமாக உள்ளது.
2) இயற்கையாக உருவான பள்ளங்கள் நீர்தேக்கங்களாக பயன்படுகின்றன.
3) இப்பகுதியில் வற்றாத ஆறுகள் இல்லாமை.
4) நீர்புகாப் பாறைகளில் நீர் கசிவு ஏற்படாது.
5) குறைவான மக்கள் தொகைப் பரவலும் குறைவான வேளாண் நிலங்களும் உள்ளது.

### நவீன நீர்ப்பாசன முறைகள்:

இந்தியாவில் பல நவீன நீர்ப்பாசன முறைகள் பயன்பாட்டில் உள்ளன. அவற்றில் முதன்மையானவை, **சொட்டு நீர்ப்பாசனம், தெளிப்பு முறை பாசனம்** மற்றும் **மையச்சுழல் நீர்ப்பாசனம்** ஆகியனவாகும்.

### சொட்டு நீர்ப்பாசனம்

இவ்வகை நீர்ப்பாசனம் இஸ்ரேல் நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. இம்முறையில் நீரானது குழாய்களில் உள்ள துவாரங்கள் வழியாக நீர் துளிகளாக பயிர்களுக்கு அளிக்கப்படுகிறது. இந்நீர்ப்பாசனத்தின் மூலம் சுமார் 70 சதவிகித நீர் சேமிக்கப்படுகிறது.

### தெளிப்பு நீர்ப்பாசனம்

இது மிகவும் எளிமையான மற்றும் சுலபமான நீர்ப்பாசன வகையாகும். இம்முறையில் குழாயில் போடப்பட்டுள்ள நுண் துளைகள் வழியாக பயிர்களுக்கு நீர் பாய்ச்சப்படுகிறது. இவ்வகை பாசனத்தை சமனற்ற நிலப்பகுதிகளிலும் பயன்படுத்தலாம்.

### வேகத் தெளிப்பு நீர்ப்பாசனம்

இவ்வகை நீர்ப்பானத்தில் நீரானது குறுகிய குழாய் மூலமாக வேகமாக செலுத்தப்படுகிறது. 4 மீட்டர் உயரம் வரை உள்ள பயிர் வகைகளுக்கும் இவற்றின் மூலம் நீர் பாசனம் செய்யலாம். கரும்பு மற்றும் சோளப் பயிர்களுக்கும் பாசனம் உதவிகரமாக உள்ளது.

### மையத் தெளிப்பு நீர்ப்பாசனம்

இவை வட்டச் சக்கர நீர்ப்பாசனம் என்றும் அழைக்கப்படுகிறது. இவற்றிற்கான உபகரணத்தின் மையப்பகுதியில் உள்ள கருவி சுழன்று அவற்றைச் சுற்றியுள்ள பயிர்களுக்கு நீர்ப் பாசனத்தை அளிக்கிறது.

### பல்நோக்கு ஆற்றுப் பள்ளத்தாக்குத் திட்டம்

இது ஒரு அறிவியல் முறையிலான நீர்வள மேலாண்மை திட்டமாகும். ஆற்றின் குறுக்கே பல்வேறு நோக்கங்களுக்காக அணைகளைக் கட்டுவதால் இவை பல்நோக்கு ஆற்றுப் பள்ளத்தாக்குத் திட்டங்கள் என்று அழைக்கப்படுகிறது. நீர்ப்பாசனம், நீர்மின் உற்பத்தி, குடிநீர் மற்றும் தொழிற்சாலைக்கு நீர் வழங்குதல், வெள்ளத்தடுப்பு, மீன்வள மேம்பாடு, நீர் வழிப் போக்குவரத்து போன்றவை இதன் பல்வேறு நோக்கங்களாகும். நீர் மின் சக்தி மற்றும் நீர்ப்பாசனம் ஆகியவை பெரும்பாலான பல்நோக்கு ஆற்றுப் பள்ளத்தாக்குத் திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும்.

WVSFM3

உங்களுக்குத் தெரியுமா?

**பிரதான் மந்திரி கிருஷி சிஞ்சாயி யோஜனா** – (PMKY)

குறைந்த அளவு நீரில் அதிக மகசூலை பெறுதல் மற்றும் தண்ணீர் பயன்பாட்டை மேம்படுத்த ஏற்படுத்தப்பட்ட திட்டம் ஆகும்.

## 3.3 வேளாண்மை

வேளாண்மை என்பது குறிப்பிடப்பட்ட பயிர்களை உற்பத்தி செய்யும் மற்றும் கால்நடைகளை வளர்த்தும் மக்களுக்கு உணவையும் கால்நடைகளுக்கு தீவனத்தையும், நார் மற்றும் தேவையான இதர பொருள்களையும் வழங்குவதாகும்.

### வேளாண்மையை நிர்ணயிக்கும் காரணிகள்


இந்திய வேளாண்மையை பல காரணிகள் நிர்ணயிக்கின்றன. அவற்றில் சில முக்கியக் காரணிகளாவன.

1) இயற்கைக் காரணிகள் : நிலத்தோற்றம், காலநிலை மற்றும் மண்
2) அமைப்பு சார் காரணிகள் : வேளாண் நிலத்தின் அளவு, நில உரிமை முறை மற்றும் நிலச்சீர்திருத்தங்கள்
3) உட்கட்டமைப்பு காரணிகள் : நீர்ப்பாசனம், மின்சாரம், போக்குவரத்து, வரவு, சந்தை, காப்பீடு மற்றும் சேமிப்பு வசதிகள்,
4) தொழில்நுட்பக் காரணிகள் : வீரிய விதைகள், இரசாயன உரங்கள், பூச்சிக்கொல்லிகள் மற்றும் இயந்திரங்கள் .



10th_Geography_Unit_3_TM.indd 168 11-04-2020 11:47:06

## இந்தியா – பல்நோக்கு ஆற்றுப் பள்ளத்தாக்குத் திட்டம்






10th_Geography_Unit_3_TM.indd 169
11-04-2020 11:47:06

| பல்நோக்கு திட்டத்தின் பெயர் | ஆறுகள் | பயனடையும் மாநிலங்கள் |
|---|---|---|
| தாமோதர் பள்ளத்தாக்குத் திட்டம் | தாமோதர் | மேற்கு வங்காளம், ஜார்கண்ட் |
| பக்ரா நங்கல் திட்டம் (உலகின் பெரிய புவி ஈர்ப்பு அணை) | சட்லஜ் | பஞ்சாப், ஹரியானா, இராஜஸ்தான் |
| ஹிராகுட் திட்டம் (உலகின் மிக நீளமான அணை) | மகாநதி | ஒடிசா |
| கோசி திட்டம் | கோசி | பீகார் மற்றும் நேபாளம் |
| துங்கபத்ரா திட்டம் | துங்கபத்ரா | ஆந்திரப் பிரதேசம் மற்றும் கர்நாடகா |
| தெகிரி அணை | பாகீரதி | உத்தரகாண்ட் |
| சம்பல் பள்ளத்தாக்குத் திட்டம் | சம்பல் | இராஜஸ்தான் மற்றும் மத்தியப்பிரதேசம் |
| நாகார்ஜுன சாகர் திட்டம் | கிருஷ்ணா | ஆந்திரப் பிரதேசம் |
| சர்தார் சரோவர் திட்டம் | நர்மதை | மத்தியப்பிரதேசம், மகாராஷ்டிரா, இராஜஸ்தான் |
| இந்திரா காந்தி கால்வாய்த் திட்டம் | சட்லஜ் | இராஜஸ்தான், பஞ்சாப், ஹரியானா |
| மேட்டூர் அணை | காவிரி | தமிழ்நாடு |

## வேளாண்மையின் வகைகள்

### அ) தன்னிறைவு வேளாண்மை

இந்தியாவில் கணிசமான அளவு விவசாயிகள் தன்னிறைவு வேளாண்மை முறையை பின்பற்றுகிறார்கள். பெரும்பாலும் குடும்ப உறுப்பினர்களின் உதவியுடன் சாகுபடி செய்யப்பட்டு நிலத்தின் மொத்த விளைச்சலின் பெரும் பகுதி குடும்ப உறுப்பினர்களால் நுகரப்பட்டு மீதம் உள்ளவை அருகில் உள்ள சந்தையில் விற்பனை செய்யப்படுகிறது. உணவுப் பயிர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டாலும் கரும்பு, எண்ணெய் வித்துக்கள், பருத்தி, சணல் மற்றும் புகையிலை ஆகியவை சிறிய அளவில் பயிரிடப்படுகின்றன. பாரம்பரிய விவசாய முறையாதலால் குறைவான உற்பத்தியை அளிக்கிறது.

### ஆ) இடப்பெயர்வு வேளாண்மை

இவ்வகை வேளாண்மை பழங்குடி இன மக்களால் காடுகளில் ஒரு சிறிய பகுதியிலுள்ள மரங்களை அகற்றி சாகுபடி செய்யப்படுகிறது. இரண்டு அல்லது மூன்றாண்டுகள் சாகுபடிக்குப் பிறகு, மண்ணின் வளம் குறைவதால் அவ்விடத்தைக் கைவிட்டு மக்கள் வேறொரு புதிய இடத்திற்குச் செல்வர். இவ்வாறாக இது தொடர்ச்சியாக நடைபெறும் சில உணவுபயிர்களும், காய்வகை பயிர்களும் மனித உழைப்பின் மூலம் பயிரிடப்படுகிறது. இவை 'வெட்டுதல்' மற்றும் 'எரித்தல்' வேளாண்மை என்றும் அழைக்கப்படுகிறது.

| இந்தியாவில் உள்ள இடப்பெயர்வு வேளாண்மையின் பல்வேறு பெயர்கள் | |
|---|---|
| பெயர் | மாநிலம் |
| ஜூம் | அசாம் |
| பொன்னம் | கேரளா |
| பொடு | ஆந்திரப்பிரதேசம் மற்றும் ஒடிசா |
| பீவார், மாசன், பென்டா, பீரா | மத்தியப்பிரதேசம் |

### இ) தீவிர வேளாண்மை

தீவிர வேளாண்மை எனப்படுவது இயந்திரங்கள் மற்றும் பல்வேறு நவீன யுக்திகள் மூலம் உற்பத்தியை அதிகப்படுத்துவதாகும். சிறிய நிலத்தில் பூச்சிக் கொல்லிகள்,களைக்கொல்லிகள் மற்றும் இரசாயன உரங்களை அதிகமாக பயன்படுத்தி அதிகபட்ச விளைச்சலை பெறுவது இதன் நோக்கமாகும்.

### ஈ) வறண்ட நில வேளாண்மை

நீர் பாசன வசதி இல்லாத வறண்ட பகுதிகளில் இவ்வகையான வேளாண்முறை பின்பற்றப்பட்டு வருகிறது. இந்தப் பகுதிகளில் பயிரிடப்படும் பயிர்கள் வறட்சியை தாங்கக் கூடியவை. பாசன வசதி உதவியுடன் பயிரிடப்படும் பயிர்களும் இவ்வேளாண்மையின் கீழ் பயிரிடப்படுகின்றன. இத்தகைய சூழ்நிலையில் விளைச்சல் பொதுவாக குறைவாகவே இருக்கும். பெரும்பாலான பகுதிகளில் ஓர் ஆண்டிற்கு ஒரு பயிர் மட்டுமே பயிரிடப்படுகின்றது.


### உ) கலப்பு வேளாண்மை

கலப்பு வேளாண்மை என்பது பயிரிடுதலுடன் கால்நடை வளர்ப்பு, கோழி வளர்ப்பு, மீன் வளர்ப்பு,



10th_Geography_Unit_3_TM.indd 170 11-04-2020 11:47:06

தேனீ வளர்ப்பு போன்றவற்றை உள்ளடக்கியதாகும். விவசாயிகளின் பல தேவைகளை இது பூர்த்தி செய்கிறது.




கலப்பின விவசாயம்

**ஊ) படிக்கட்டு முறை வேளாண்மை**

இவ்வேளாண்மை முறையானது மலைப்பிரதேசங்களில் பின்பற்றப்படுகிறது. இப்பகுதி நிலங்கள் இயற்கையாகவே சரிவு அமைப்பை கொண்டவை. மலைச்சரிவுப் பகுதிகள் சமப்படுத்தப்பட்டு நிலம் நிலையான வேளாண் பகுதிகள் போலவே பயன்படுத்தப்படுகிறது. ஏனெனில் சமமான நிலப்பகுதி குறைவாக இப்பகுதிகளில் உள்ளது. படிக்கட்டு நிலங்கள் சிறிய சமமான நிலப்பகுதிகளாக உருவாக்கப்படுகின்றன. மலைச் சரிவுகளில் உள்ள படிக்கட்டுமுறை அமைப்பு மண் அரிப்பை தடுக்கிறது.

## 3.4 இந்தியாவின் முக்கியப் பயிர்கள்

இந்தியாவின் சாகுபடியாகும் முக்கியப் பயிர்களை நான்கு பிரிவுகளாக பிரிக்கலாம்.

1. உணவுப் பயிர்கள் – நெல், கோதுமை, மக்காச்சோளம், தினைப்பயிர்கள், பருப்பு இன்னும் பிற.
2. வாணிபப் பயிர்கள் – கரும்பு, புகையிலை, பருத்தி, சணல், எண்ணெய் வித்துக்கள்
3. தோட்டப்பயிர்கள் – தேயிலை, காபி, இரப்பர்
4. தோட்டக்கலைப் பயிர்கள் – பழங்கள், மலர்கள், மற்றும் காய்கறிகள்

**1. உணவுப்பயிர்கள்**

அதிக மக்கள் தொகை காரணமாக இந்திய வேளாண்மை பெரும்பாலும் உணவுப் பயிர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கிறது. உணவுப் பயிர்களில் தானியங்கள் மற்றும் பருப்பு வகைகள் அடங்கும்.

**நெல்**

நெல் இந்தியாவின் பூர்வீகப் பயிராகும். உலகளவில் நெல் உற்பத்தியில் சீனாவிற்கு அடுத்தபடியாக இந்தியா இரண்டாம் இடத்தை வகிக்கிறது. இது அயனமண்டலப் பயிராகும். 24°C சராசரி வெப்பநிலையும், 150 செ.மீ ஆண்டு மழையளவும் உள்ள பகுதிகளில் பயிரிடப்படுகிறது. வளமான களிமண் அல்லது வண்டல் மண் நெல் சாகுபடிக்கு ஏற்றது. நெல் பயிரிட அதிகமான தொழிலாளர்கள் தேவைப்படுகிறார்கள்.



நெல் சாகுபடி


இந்தியாவில் நெல் மூன்று முறைகளில் பயிரிடப்படுகிறது.


1. விதைத் தூவல் முறை
2. ஏர் உழுதல் (அ) துளையிடும் முறை
3. நாற்று நடுதல் முறை

| இந்திய வேளாண் பருவகாலங்கள் | | |
|---|---|---|
| வேளாண்பருவம் | முக்கியப்பயிர்கள் | |
| | வடமாநிலங்கள் | தென்மாநிலங்கள் |
| **காரிஃப் பருவம் (ஜூன்–செப்டம்பர்)** | நெல், பருத்தி, மக்காச் சோளம், சோளம், கம்பு, உளுந்து | நெல், கேழ்வரகு, மக்காச்சோளம், கம்பு, நிலக்கடலை |
| **ராபி பருவம் (அக்டோபர்–மார்ச்)** | கோதுமை, பருப்பு, ஆலிவிதைகள், கடுகு, பார்லி | நெல், மக்காச்சோளம், கேழ்வரகு, நிலக்கடலை, கம்பு |
| **சையத் பருவம் (ஏப்ரல்–ஜூன்)** | காய்கறிகள், பழங்கள், தினைப் பயிர்கள் | நெல், காய்கறிகள், தீவனப் பயிர்கள் |



10th_Geography_Unit_3_TM.indd 171 11-04-2020 11:47:07




அதிக விளைச்சல் தரும் விதைகள் (CR **தான் 205, A.R. தான் 306,** CRR 451, போன்றவை) அதிகரித்ததன் காரணமாக பல பழமையான நெல் வகைகள் மறைந்து போயின. மேற்கு வங்காளம், (முதல் மாநிலம்) உத்தரப்பிரதேசம், பஞ்சாப், தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம், பீகார், சத்தீஸ்கர், ஒடிசா, அசாம் மற்றும் ஹரியானா ஆகிய மாநிலங்கள் 2016ஆம் ஆண்டு நிலவரப்படி அரிசி உற்பத்தியில் முதல் 10 இடங்களில் உள்ளன.

## கோதுமை:

நெற் பயிருக்கு அடுத்தாற் போல் இரண்டாவது முக்கிய உணவுப் பயிராக விளங்குவது கோதுமை ஆகும். நாட்டின் பயிர் சாகுபடி பரப்பில் 24 சதவிகிதமும், மொத்த உணவுப் பயிர் உற்பத்தியில் 34 சதவிகித பங்கையும் கோதுமை வகிக்கிறது. இப்பயிர் விதைக்கும் பருவத்தில் 10–15°C வெப்பமும், முதிரும் பருவத்தில் 20–25°C வெப்பநிலையும் தேவைப்படுகிறது. சுமார் 85 சதவிகிதத்திற்கும் மேலான கோதுமை உற்பத்தி உத்தரப்பிரதேசம், பஞ்சாப், ஹரியானா, இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம் ஆகிய ஐந்து மாநிலங்களிலிருந்து கிடைக்கிறது. இதைத் தவிர மகாராஷ்டிரா மற்றும் குஜராத் மாநிலங்களின் கரிசல் மண் பிரதேசமும் கோதுமை உற்பத்தியில் ஒரு முக்கிய பங்களிப்பினை அளிக்கிறது.

## சோளம்:

நம் நாட்டின் மூன்றாவது முக்கிய உணவுப்பயிர் சோளம் ஆகும். இது ஆப்பிரிக்காவை பூர்விகமாகக் கொண்ட பயிராகும். இப்பயிர் வறட்சியான காலநிலையிலும் நன்கு வளரக் கூடியது. இத்தானியத்தில் கார்போ–ஹைட்ரேட், புரதச்சத்து, தாதுக்கள் மற்றும் வைட்டமின்கள் நிறைந்துள்ளன. இது பெரும்பாலான ஏழை மக்களுக்கு மலிவான உணவாக விளங்குகிறது. இது நாட்டின் பல பகுதிகளில் கால்நடை தீவனமாகவும் பயன்படுத்தப்படுகிறது. தீபகற்ப இந்தியாவின் ஒரு முக்கியப்பயிராகவும் இது விளங்குகிறது. மகாராஷ்டிரா, கர்நாடகா மற்றும் மத்தியப்பிரதேசம் போன்ற மாநிலங்கள் இவற்றின் முதன்மையான உற்பத்தியாளர்களாகும்.

## கம்பு:

கம்பு ஆப்பிரிக்காவை பூர்வீகமாகக் கொண்ட ஒரு பயிராகும். இது ஏழை மக்களின் ஒரு முக்கிய உணவுப் பயிராகும். கம்பு பயிரின் தண்டுப்பகுதி கால்நடைகளுக்கு தீவனமாகவும் வீட்டுக்கு கூறை வேய்வதற்கும் பயன்படுத்தப்படுகிறது. இது வறண்ட பகுதிகளில் நன்கு வளரக்கூடியது. இந்தியாவில் இராஜஸ்தான் முதன்மை உற்பத்தியாளராகவும் அதைத் தொடர்ந்து உத்தரப்பிரதேசம், ஹரியானா, குஜராத் மற்றும் மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்கள் அதிக உற்பத்தியை தருபவைகளாகவும் உள்ளன.

## வாற்கோதுமை (பார்லி):

பார்லி நம் நாட்டின் முக்கியமான தானியப் பயிர்களுள் ஒன்றாகும். இது ஏழைகளின் முக்கிய உணவாக மட்டும் இல்லாமல் பார்லி நீர், மதுபானங்கள் தயாரிப்பதற்கும் பயன்படுத்தப்படுகிறது. இராஜஸ்தான் மற்றும் உத்தரப்பிரதேசம் ஆகிய மாநிலங்கள் இரண்டும் இவற்றின் முதன்மை உற்பத்தியாளர்கள் ஆகும்.

## பருப்பு வகைகள்:

பருப்பு வகைகள் அவரை இனத்தைச் சார்ந்த பல பயிர்களை உள்ளடக்கியதும் தாவர புரதச்சத்து

செறிந்ததும் ஆகும். இவை மனிதர்களுக்கு உணவாகவும், கால்நடைகளுக்கு தீவனமாகவும் பயன்படுகிறது. இவை வளிமண்டல நைட்ரஜனை கிரகித்து மண் வளத்தை அதிகரிக்கின்றது. எனவே இப்பயிர்கள் பயிர்சுழற்சி பயிரிடல் முறையில் வழக்கமாக பயிரிடப்படுகிறது. உலகில் அதிக பருப்பு உற்பத்தியை செய்யும் நாடு இந்தியாவாகும்.

### 2. வாணிபப்பயிர்கள்

வணிக நோக்கத்திற்காக பயிரிடப்படும் பயிர்களை வாணிபப்பயிர்கள் என அழைக்கிறோம். வாணிபப்பயிர்கள் கரும்பு, புகையிலை, இழைப்பயிர்கள் (பருத்தி மற்றும் சணல்) மற்றும் எண்ணெய் வித்துக்களை உள்ளடக்கியதாகும்.

#### கரும்பு:


இந்தியா கரும்பில் உலகின் இரண்டாவது பெரிய உற்பத்தியாளராகும். இப்பயிர் சர்க்கரை தொழிற்சாலைக்கு மூலப்பொருளை அளிக்கிறது. இது நம் நாட்டின் இரண்டாவது பெரிய தொழிற்சாலை பிரிவாகும். சர்க்கரை உற்பத்தியை தவிர வெல்லம், நாட்டுச்சர்க்கரை, சாராய தொழிற்சாலைக்கான கரும்புச்சாறு மற்றும் காகித தொழிற்சாலைக்கு தேவையான கரும்பு சக்கைகளையும் அளிக்கிறது. சர்க்கரை உற்பத்தியில் **நம் நாடு கியூபா மற்றும் பிரேசிலுக்கு அடுத்த படியாக மூன்றாவது இடத்தில் உள்ளது.** இந்தியாவில் **உத்தரப்பிரதேசம்** இதன் முதன்மை உற்பத்தியாளராகும். அதனைத் தொடர்ந்து மகாராஷ்டிரா, கர்நாடகா, தமிழ்நாடு மற்றும் குஜராத் ஆகியவை கரும்பு அதிகம் உற்பத்தி செய்யும் பிற மாநிலங்களாகும்.

#### பருத்தி:

இது இந்தியாவின் மிகப் பெரிய தொழிற்சாலை பிரிவுக்கு மூலப் பொருள்களை அளிக்கிறது. **பருத்தி உற்பத்தியில் சீனாவிற்கு அடுத்தபடியாக இரண்டாவது இடத்தில் இந்தியா உள்ளது.** குஜராத், மகாராஷ்டிரா, ஆந்திரப்பிரதேசம் மற்றும் பஞ்சாப் ஆகிய நான்கு மாநிலங்கள் மொத்த பருத்தி உற்பத்தியில் 79% பங்களிப்பை வழங்குகின்றன.

#### சணல்:

சணல் ஒரு வெப்பமண்டல இழைப்பயிராகும். இது வண்டல் மண்ணில் நன்கு வளரும். இது சணல் தொழிற்சாலைக்கு மூலப்பொருளை அளிக்கிறது. கோணிப்பைகள், கம்பளங்கள், கயிறு, நூலிழைகள், போர்வைகள், துணிகள், தார்பாலின், திரைச்சீலைகள் போன்ற பொருள்கள் தயாரிக்க சணல் நார் பயன்படுத்தப்படுகிறது. சணல் பயிரிடுவதிலும் உற்பத்தியிலும் மேற்கு வங்காள மாநிலம் முதலிடம் வகிக்கிறது. பீகார், அசாம் மற்றும் மேகாலயா சணல் பயிரிடும் மற்ற மாநிலங்களாகும்.




#### எண்ணெய் வித்துக்கள்:

இந்தியர்களின் உணவில் கொழுப்பு சத்தை அதிகம் அளிப்பது எண்ணெய் வித்துக்கள் ஆகும். நிலக்கடலை, கடுகு, எள், ஆளி விதை, சூரியகாந்தி, ஆமணக்கு, பருத்தி விதைகள், நைஜர் விதைகள் போன்றவை முக்கியமான எண்ணெய் வித்துக்கள் ஆகும். இவற்றின் எண்ணெய் மற்றும் பிண்ணாக்குகள், மசகு எண்ணெய், வார்னிஷ், மருந்துப் பொருள்கள், வாசனைப்பொருள்கள், மெழுகு, சோப்பு, உரம், கால்நடைத்தீவனம் போன்றவை தயாரிக்கப் பயன்படுகின்றன.

**இந்தியாவில் குஜராத் மாநிலம் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியில் முதலிடத்தில் உள்ளது.** நிலக்கடலை உற்பத்தியில் சீனாவுக்கு அடுத்தபடியாக உலகில் இரண்டாவது இடத்தை இந்தியா வகிக்கிறது.

### 3. தோட்டப்பயிர்கள்:

தோட்டப்பயிர்கள் ஏற்றுமதி செய்யும் நோக்கத்துடன் பயிரிடப்படுகிறது. இவை மலைச்சரிவுகளில் பெரிய எஸ்டேட் பண்ணைகளில் பயிரிடப்படுகிறது. தேயிலை, காபி, இரப்பர் மற்றும் வாசனைப் பொருள்கள் ஆகியவை இந்தியாவின் முக்கியத் தோட்டப்பயிர்களாகும்.

#### தேயிலை:

தேயிலை அயன மண்டல மற்றும் உபஅயன மண்டல காலநிலைகளில் வளரும் ஒரு பசுமையான தாவரமாகும். தேயிலை பயிரிட அதிக தொழிலாளர்களும், மிதமான நிழலும்,



10th_Geography_Unit_3_TM.indd 173 11-04-2020 11:47:07

அதிக மழையளவும் தேவை. ஆனால் வேர்களில் தண்ணீர் தேங்காமல் இருக்க வேண்டும். இந்தியாவில் பயிரிடப்படும் இரண்டு முக்கிய தேயிலை வகைகள்:

1. **பூகி (BOHEA) – பிறப்பிடம் சீனா**
2. **அசாமிகா (ASSAMICA) – பிறப்பிடம் இந்தியா**

இவ்விரண்டின் கலப்பின் மூலம் பலவீரியமுள்ள தேயிலை பயிர்கள் உருவாக்கப்பட்டுள்ளன. உலகத்தேயிலை உற்பத்தியில் சீனாவிற்கு அடுத்தபடியாக இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது. இந்தியாவில் தேயிலை உற்பத்தி செய்யும் முதன்மை மாநிலம் அசாம் ஆகும். தமிழ்நாடு, கேரளா மற்றும் மேற்கு வங்காளம் தேயிலை பயிரிடும் மற்ற மாநிலங்களாகும்.

### காபி:

இவை நிழல்களில் நன்றாக வளரக்கூடியது. கடல் மட்டத்திலிருந்து சுமார் 1000 மீ முதல் 1500 மீ உயரம் கொண்ட மலைச் சரிவுகளில் நன்றாக வளர்கிறது.

காபியில் இரண்டு முக்கிய வகைகள் உள்ளன. அவை:

1. **அராபிகா – தரம் மிக்கதும், இந்தியாவில் அதிகம் பயிரிடப்படுவதுமாகும்.**
2. **ரொபஸ்டா – தரம் குறைந்த வகை**

உலக காபி உற்பத்தியில் இந்தியா 7வது இடத்தை வகிக்கிறது. இந்தியாவில் காபி உற்பத்தியில் கர்நாடகம் முதன்மையான உற்பத்தியாளராக திகழ்கிறது. இம்மாநிலம் இந்திய உற்பத்தியில் 71%, உலக உற்பத்தியில் 2.5% அளிக்கிறது. (ஆதாரம்: இந்திய காபி வாரியம், 2018).

### இரப்பர்:

1902ஆம் ஆண்டு கேரளாவில் முதன் முதலில் இரப்பர் தோட்டம் உருவாக்கப்பட்டது. வெப்ப ஈரப்பத அயனமண்டலகாலநிலை இரப்பர் பயிரிட ஏற்றதாகும். (வெப்பநிலை 20°C க்கும் அதிகம், மழைப்பொழிவு 300 செ.மீக்கு மேல்) பெரும்பாலான இரப்பர் தோட்டங்கள் சிறு நில உடைமையாளர்களிடம் உள்ளன. கேரளா, தமிழ்நாடு, கர்நாடகா மற்றும் அந்தமான் நிக்கோபர் தீவுகள் இரப்பர் உற்பத்தியில் முக்கியமான பகுதிகளாகும்.

### நறுமணப் பயிர்கள்:

பழங்காலம் தொட்டே நறுமணப் பொருட்களுக்கு இந்தியா உலக புகழ் பெற்றதாகும். இந்நறுமணப் பொருள்கள் பெரும்பாலும் உணவிற்கு சுவையூட்டியாகவும், மருந்துப்பொருள்கள் மற்றும் சாயங்கள் தயாரிக்கவும் பயன்படுகிறது. மிளகு, மிளகாய், மஞ்சள், இஞ்சி, ஏலக்காய், இலவங்கம், பட்டை மற்றும் பாக்கு போன்ற நறுமணப் பொருள்கள் இந்தியாவில் பயிரிடப்படுகின்றன. கேரளா நறுமணப் பொருள்களை உற்பத்தி செய்யும் இந்தியாவின் முதன்மையான மாநிலம் ஆகும்.

### 4. தோட்டக்கலை பயிர்கள்

**தோட்டக் கலைப் பயிர்கள் என்பது பழங்கள், மலர்கள் மற்றும் காய்வகைப் பயிர்களைக் குறிக்கிறது.** உடல்நலத்திற்குத் தேவையான தாது சத்துகள், வைட்டமின்கள், நார்சத்துக்கள், பழங்கள் மற்றும் காய்வகைகள் அதிகம் உள்ளதால் இவை மனிதர்களின் அன்றாட உணவில் ஒரு முக்கியப் பங்கை வகிக்கிறது. பழங்கள் மற்றும் காய்வகைகள் உற்பத்தியில் இந்தியா இரண்டாம் இடம் வகிக்கிறது.

## 3.5 கால்நடைகள்

கால்நடைகள் இந்தியாவின் விவசாயத்தோடு ஒருங்கிணைந்த கூறுகள் ஆகும். கால்நடைகளின் பல்வேறு வகைப் பயன்பாடுகள் காரணமாக இவை சமூக மற்றும் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகக் கருதப்படுகின்றன. இவை சமூக, கலாச்சாரப் பாதுகாப்பிற்கும் தன் பங்களிப்பை தருகின்றது. ஊட்டச்சத்து நிறைந்த உணவுகளை அளிப்பதன் மூலம் இவை உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பை மேம்படுத்துகிறது. வேளாண்மை பொய்க்கும் பொழுது வேலைவாய்ப்பையும், வருவாயையும் அளிக்கின்றன. நிலத்தை உழுவதற்கும், பயிர்களுக்கு உரம் அளிப்பவையாகவும் இவை விளங்குகின்றன.

### மாடுகள்

இந்தியாவில் மொத்த கால்நடைகளில் மாடுகள் 37.3 சதவிகிதமாகும். உலக அளவில் பிரேசிலுக்கு அடுத்தபடியாக இந்தியா மாடுகள் எண்ணிக்கையில் இரண்டாவது இடத்தை வகிக்கிறது. இந்தியாவில் உள்ள மாடுகள் பல்வேறு இனங்களைச் சார்ந்ததாகும். இவை

1. **பால் இனம்**
2. **இழுவை இனம் மற்றும்**
3. **கலப்பு அல்லது பொது இனம்.**

### வெள்ளாடுகள்

**ஏழை மக்களின் பசு என்றழைக்கப்படும் வெள்ளாடுகள், பால், இறைச்சி, தோல் மற்றும் உரோமம் போன்றவற்றை அளிக்கின்றன.** இது நாட்டின் இறைச்சிக்கு முக்கிய ஆதாரமாக உள்ளது.

### எருமைகள்

இந்தியாவில் பால் உற்பத்தியின் ஒரு முக்கிய ஆதாரமாக எருமைகள் உள்ளன. உத்தரப்பிரதேசம்



10th_Geography_Unit_3_TM.indd 174 11-04-2020 11:47:07

அதிகப்படியான எருமைகளையும் (28.2%). அதனைத் தொடர்ந்து இராஜஸ்தான் (9.6%) மற்றும் ஆந்திரப்பிரதேசம் (7.9%) முறையே இரண்டாம் மற்றும் மூன்றாம் இடத்தை வகிக்கின்றன.

இந்தியாவின் முதல் கால்நடை கணக்கெடுப்பு 1919இல் மிகக் குறைந்த பால் பண்ணை கால்நடைகளுடன் எடுக்கப்பட்டது.

உங்களுக்குத் தெரியுமா?

தமிழ்நாட்டில் கால்நடை கணக்கெடுப்பு எவ்வாறு மேற்கொள்ளப்படுகிறது?

தமிழ்நாடு அரசு மாநில அளவிலான கால்நடை கணக்கெடுப்பை கால்நடை வளர்ப்புத் துறை உதவியுடன் மேற்கொள்கிறது. மாவட்ட அளவிலான கணக்கெடுப்பு மண்டல இணை இயக்குநர் மூலம் மேற்கொள்ளப்படுகிறது. இக்கணக்கெடுப்புகள் மத்திய அரசின் 1. வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சகம், கால்நடை வளர்ப்பு, பால் பண்ணை, மீன்வளத் துறை போன்றவற்றின் வழிகாட்டுதலின் படி மேற்கொள்ளப்படுகிறது.

### பால் பொருள்கள், இறைச்சி மற்றும் ரோம உற்பத்தி

மாநில மற்றும் யூனியன் பிரதேச கால்நடை வளர்ப்புத் துறை 2016–17ஆம் கணக்கெடுப்பின்படி, நம் நாட்டின் மொத்த பால் உற்பத்தியில் உத்தரப்பிரதேசம், இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம் முதன்மை மாநிலங்களாகத் திகழ்கின்றன.

இறைச்சியைப் பொறுத்தவரை உத்தரப்பிரதேசம் முதன்மை மாநிலமாக விளங்குகிறது. அதனைத் தொடர்ந்து நாட்டின் இறைச்சி உற்பத்தியில் மகாராஷ்டிரா, மேற்கு வங்காளம் ஆகியவை உள்ளன. நம் நாட்டின் மொத்த ரோம உற்பத்தியில் இராஜஸ்தான் மாநிலம் முதல் இடத்தையும், அதனைத் தொடர்ந்து கர்நாடகம் இரண்டாம் இடத்தையும்வகிக்கின்றது.

## 3.6 மீன் வளர்ப்பு

இந்தியாவில் மீன் வளர்ப்பு ஒரு முக்கியப் பொருளாதார நடவடிக்கையாகும். இத்துறை வளர்ந்து வரும் துறையாகவும் பல்வேறு வளங்களைக் கொண்டதாகவும் உள்ளது. மீன் பிடி தொழிலானது இந்தியாவின் கடலோர மாநிலங்களில் ஒரு முக்கிய தொழிலாக 14 மில்லியன் மக்கள் தொகைக்கும் அதிகமானோருக்கு வேலை வாய்ப்பை அளிக்கிறது. உலக மீன் உற்பத்தியில் 3 சதவிகிதத்துடன் சீனாவிற்கு அடுத்த படியாக இந்தியா இரண்டாம் இடத்தில் உள்ளது. மீன் பிடி தொழில் உணவு உற்பத்தியை அதிகரித்தல், வேலைவாய்ப்பை உருவாக்கல், ஊட்டச்சத்து அளித்தல், அன்னிய செலாவாணி ஈட்டல் போன்ற பல வழிகளில் உதவி புரிகிறது.

இந்தியாவில்மீன்பிடி தொழில்இருவகைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

1) கடல் மீன் பிடிப்பு
2) உள்நாட்டு (அ) நன்னீர் மீன்பிடிப்பு



மீன்பிடித்தல்

### 1. கடல் மீன் பிடிப்பு

கடற்கரைப்பகுதி, கடற்கரையை ஒட்டியபகுதி மற்றும் ஆழ்கடல் முக்கியமாக கண்டத்திட்டு பகுதிகளில் மீன் பிடித்தல் நடைபெறுகிறது. **கேரளா கடல்மீன் உற்பத்தியில் முதன்மையானதாக உள்ளது.**

### 2. உள்நாட்டு மீன் பிடிப்பு

நீர்த்தேக்கங்களான ஆறுகள், ஏரிகள், கால்வாய்கள், குளங்கள் மற்றும் கண்மாய்கள் போன்ற நீர் நிலைகளில் நடைபெறும் நன்னீர் மீன்பிடிப்பு இவற்றில் அடங்கும். நாட்டின் மொத்த மீன் உற்பத்தியில் சுமார் 50 சதவிகிதம் உள்நாட்டு மீன் பிடித்தல் மூலம் கிடைக்கிறது. இந்தியாவில் ஆந்திரப்பிரதேசம் உள்நாட்டு மீன் பிடித்தலில் முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது.

இந்தியாவில் மீனவர்களால் பிடிக்கப்படும் முக்கியமான மீன் வகைகள் கெளுத்தி, ஹெர்கிங்ஸ், கானாங் கெளுத்தி, பெர்சல், ஈல்மீன் முல்லட்டை மீன் போன்றவையாகும்.

## 3.7 இந்திய விவசாயிகள் எதிர் கொள்ளும் முக்கிய சவால்கள்

### சிறிய மற்றும் குறு நில உடமை

இந்தியாவில் மக்கள் அடர்த்தி மிகுந்த மற்றும் தீவிர பயிர் சாகுபடி செய்யும் மாநிலங்களில் சிறிய

மற்றும் துண்டாக்கப்பட்ட நில உடமையாளர்கள் அதிகம் உள்ளனர்.

### அதிக செலவின உள்ளீடுகள்

அதிக விலையின் காரணமாக நல்ல தரமான விதைகள் சிறு–குறு விவசாயிகளுக்கு எட்டாக் கனியாக உள்ளது.

### வளமற்ற மண்

இந்திய மண் பல்லாயிரம் ஆண்டுகளாக தொடர்ந்து வளம் கூட்டல் மற்றும் புதுப்பித்தல் செயல்பாடியின்றி வேளாண்மைக்கு உட்படுத்தபட்டிருப்பதால் மண்ணின் வளம் குன்றி அதன் உற்பத்தித் திறன் பாதிக்கப்பட்டுள்ளது.

### நீர்ப்பாசன பற்றாக்குறை

இந்தியாவில் மூன்றில் ஒரு பங்கு வேளாண் நிலப்பகுதியே பாசன வசதியை பெற்றிருக்கின்றது.

### இயந்திரமயமாக்க பற்றாக்குறை

நாட்டின் பல பகுதிகளில் வேளாண்மை பெரிய அளவில் இயந்திரமயமாக்கப்பட்டிருப்பினும் பெரும்பாலான பகுதிகளில் மனிதர்களைக் கொண்டு எளிய மற்றும் பழமையான கருவிகள் மூலமே வேளாண்மை செய்யப்படுகிறது.


### மண் அரிப்பு

காற்று மற்றும் நீரின் மூலமான மண் அரிப்பில் பெரும் நிலப் பரப்பு பாதிக்கப்பட்டுள்ளது.

### வேளாண் சந்தை

தரமான உள்கட்டமைப்பு வசதிகள் இன்மையால் விவசாயிகள் உள்ளூர் வியாபாரிகளிடமும், தரகர்களிடமும் விவசாயப் பொருள்களைக் குறைந்த விலைக்கு விற்பனை செய்கிறார்கள். மேலும் விவசாயப் பொருள்களின் விலையில் அதிகமாக ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றன.

விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள்: தற்போதைய சூழ்நிலை




### சேமிப்பு கிடங்கு வசதியில்லாமை

கிராமப்புற பகுதிகள் விவசாய சேமிப்பு கிடங்கு வசதியற்றோ அல்லது முழுமை பெறா நிலையிலோ காணப்படுகிறது. இத்தகைய சூழலில் விவசாயிகள் அறுவடை முடிந்தவுடன் வேளாண் உற்பத்தி பொருள்களை சந்தையில் விற்கும் கட்டாய நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள்.

### போக்குவரத்து வசதியின்மை

இந்திய வேளாண்மையின் முக்கிய சவால்களில் ஒன்று மலிவான மற்றும் போதுமான போக்குவரத்து வசதியின்மையாகும்.

### மூலதனப் பற்றாக்குறை

வேளாண்மை அதிக மூலதனம் தேவைப்படும் தொழில்களில் ஒன்றாகும். மேம்படுத்தப்பட்ட பண்ணை இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாங்க மூலதனம் முக்கிய பங்கு வகிக்கிறது.

**இந்தியாவின் முக்கிய வேளாண் புரட்சிகள்**

| புரட்சிகள் | உற்பத்திகள் |
|---|---|
| மஞ்சள் புரட்சி | எண்ணெய் வித்துக்கள் (குறிப்பாக கடுகு மற்றும் சூரிய காந்தி) |
| நீலப் புரட்சி | மீன்கள் உற்பத்தி |
| பழுப்புப் புரட்சி | தோல், கோக்கோ, மரபுசாரா உற்பத்தி |
| தங்க நூலிழைப் புரட்சி | சணல் உற்பத்தி |
| பொன் புரட்சி | பழங்கள், தேன் மற்றும் தோட்டக்கலைப் பயிர் |
| சாம்பல் புரட்சி | உரங்கள் |
| இளஞ்சிவப்புப் புரட்சி | வெங்காயம், மருந்து பொருள்கள், இறால் உற்பத்தி |
| பசுமைப் புரட்சி | அனைத்து வேளாண் உற்பத்தி |
| வெள்ளிப் புரட்சி | முட்டை மற்றும் கோழிகள் |
| வெள்ளி இழைப் புரட்சி | பருத்தி |
| சிவப்புப் புரட்சி | இறைச்சி உற்பத்தி, தக்காளி உற்பத்தி |
| வட்டப் புரட்சி | உருளைக்கிழங்கு |
| வெண்மைப் புரட்சி | பால் உற்பத்தி |



10th_Geography_Unit_3_TM.indd 176
11-04-2020 11:47:08

## பாடச்சுருக்கம்

- புவியின் மேற்பரப்பில் காணப்படும் நுண்ணிய துகள்களே மண் எனப்படும்.
- கால்வாய் பாசனம், கிணற்றுப் பாசனம், ஏரிப்பாசனம் ஆகியன முக்கிய நீர்ப் பாசன ஆதாரங்களாகும்.
- காரிஃப், ராபி மற்றும் சையத் போன்றவை இந்தியாவின் முக்கிய வேளாண் பயிர் பருவங்களாகும்.
- உணவுப்பயிர், வாணிபப்பயிர் மற்றும் தோட்டப் பயிர்கள் இந்தியாவின் முக்கிய பயிர்வகைப் பிரிவுகளாகும்.
- இந்தியாவில் நடைபெறும் மீன் பிடித்தல் இரண்டு வகைப்படும். அவை உள்நாட்டு மீன் பிடிப்பு மற்றும் கடல் மீன் பிடிப்பு.

## பயிற்சி

Q3P795

### I சரியான விடையைத் தேர்வு செய்க

1. ____________ மண்ணில் இரும்பு ஆக்ஸைடு அதிகமாக காணப்படுகிறது
   அ) வண்டல் ஆ) கரிசல்
   இ) செம்மண் ஈ) உவர் மண்
2. எந்த நிறுவனம் இந்தியாவில் உள்ள மண் வகைகளை 8 பெரும் பிரிவுகளாகப் பிரித்துள்ளது?
   அ) இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனம்
   ஆ) இந்திய வானியல் துறை
   இ) இந்திய மண் அறிவியல் நிறுவனம்
   ஈ) இந்திய மண் ஆய்வு நிறுவனம்
3. ஆறுகளின் மூலம் உருவாகும் மண்
   அ) செம்மண் ஆ) கரிசல் மண்
   இ) பாலைமண் ஈ) வண்டல் மண்
4. இந்தியாவின் உயரமான புவிஈர்ப்பு அணை
   அ) ஹிராகுட் அணை
   ஆ) பக்ராநங்கல் அணை
   இ) மேட்டூர் அணை
   ஈ) நாகர்ஜூனா சாகர் அணை
5. ____________ என்பது ஒரு வாணிபப்பயிர்
   அ) பருத்தி ஆ) கோதுமை
   இ) அரிசி ஈ) மக்காச் சோளம்
6. கரிசல் மண் ____________ எனவும் அழைக்கப்படுகிறது.
   அ) வறண்ட மண் ஆ) உவர் மண்
   இ) மலை மண் ஈ) பருத்தி மண்
7. உலகிலேயே மிக நீளமான அணை ____________
   அ) மேட்டூர் அணை
   ஆ) கோசி அணை
   இ) ஹிராகுட் அணை
   ஈ) பக்ராநங்கல் அணை
8. இந்தியாவில் தங்க இழைப் பயிர் என அழைக்கப்படுவது ____________
   அ) பருத்தி ஆ) கோதுமை
   இ) சணல் ஈ) புகையிலை

### II சரியான கூற்றைக் கண்டுபிடிக்கவும்

1. கூற்று : பழங்கள் காய்வகைகள் மற்றும் பூக்கள் பயிரிடலில் ஈடுபடுவது தோட்டக்கலைத் துறையாகும்.
   காரணம்: உலகளவில் இந்தியா மா, வாழை மற்றும் சிட்ரஸ் பழவகை உற்பத்தியில் முதலிடத்தில் உள்ளது.
   அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்.
   ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் அல்ல
   இ) கூற்று சரி, காரணம் தவறு
   ஈ) கூற்று தவறு, காரணம் சரி
2. கூற்று : வண்டல் மண் ஆறுகளின் மூலம் அரிக்கப்பட்டு படியவைக்கப்பட்ட, மக்கிய பொருட்களால் ஆன ஒன்று.
   காரணம் : நெல் மற்றும் கோதுமை வண்டல் மண்ணில் நன்கு வளரும்
   அ) கூற்று மற்றும் காரணம் இரண்டு சரி, கூற்று காரணத்திற்கான சரியான விளக்கம்
   ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, கூற்றுக்கான காரணம் சரியான விளக்கமல்ல
   இ) கூற்று சரி, காரணம் தவறு
   ஈ) கூற்று தவறு, காரணம் சரி.

### III பொருந்தாததைத் தேர்ந்தெடுக்கவும்

1. அ) கோதுமை ஆ) நெல்
   இ) தினை வகைகள் ஈ) காபி
2. அ) காதர் ஆ) பாங்கர்
   இ) வண்டல் மண் ஈ) கரிசல் மண்
3. அ) வெள்ளப் பெருக்கு கால்வாய்
   ஆ) வற்றாத கால்வாய்
   இ) ஏரிப்பாசனம்
   ஈ) கால்வாய்



10th_Geography_Unit_3_TM.indd 177 11-04-2020 11:47:08

www.tntextbooks.in

## IV பொருத்துக

| | | |
|---|---|---|
| 1. இந்தியாவின் சர்க்கரை கிண்ணம் | – | மகாநதி |
| 2. காபி | – | தங்கப் புரட்சி |
| 3. டெகிரி அணை | – | கர்நாடகா |
| 4. ஹிராகுட் | – | உத்தரப்பிரதேசம் மற்றும் பீகார் |
| 5. தோட்டக் கலை | – | இந்தியாவின் உயரமான அணை |

## V சுருக்கமாக விடையளி

1. 'மண்' – வரையறு
2. இந்தியாவில் காணப்படும் மண்வகைகளின் பெயர்களைப் பட்டியலிடுக.
3. கரிசல் மண்ணின் ஏதேனும் இரண்டு பண்புகளை எழுதுக.
4. 'வேளாண்மை'–வரையறு.
5. இந்தியாவின் வேளாண்மை முறைகளை குறிப்பிடுக.
6. இந்திய வேளாண் பருவங்களைக் குறிப்பிடுக.
7. இந்தியாவின் தோட்டப் பயிர்களைக் குறிப்பிடுக.
8. கால்நடைகள் என்றால் என்ன?
9. இந்தியாவில் மீன்வளர்ப்பு பிரிவுகளைப் பற்றி ஒரு சுருக்கமான குறிப்பு தருக.

## VI காரணம் கூறுக

1. வேளாண்மை இந்தியாவின் முதுகெலும்பு.
2. மழைநீர் சேமிப்பு அவசியம்.

## VII வேறுபடுத்துக

1. ராபி பருவம் மற்றும் காரிப் பருவம்
2. வெள்ளப் பெருக்கு கால்வாய் மற்றும் வற்றாத கால்வாய்
3. கடல் மீன்பிடிப்பு மற்றும் உள்நாட்டு மீன் பிடிப்பு
4. வண்டல் மண் மற்றும் கரிசல் மண்

## VIII பத்தியளவில் விடையளி

1. இந்திய மண் வகைகள் ஏதேனும் ஐந்தினைக் குறிப்பிட்டு, மண்ணின் பண்புகள் மற்றும் பரவல் பற்றி விவரி.
2. பல்நோக்குத் திட்டம் என்றால் என்ன? ஏதேனும் இரண்டு இந்திய பல்நோக்கு திட்டங்கள் பற்றி எழுதுக
3. தீவிர வேளாண்மை மற்றும் தோட்ட வேளாண்மையின் பண்புகளை வெளிக் கொணர்க.
4. நெல் மற்றும் கோதுமை பயிரிடுவதற்கு ஏற்ற புவியியல் சூழல்கள் பற்றி விவரி.

## IX உயர் சிந்தனை வினாக்கள்

1. வேளாண்மை இல்லாத உலகை கற்பனை செய்து பார்க்க முடியுமா?
2. தென்னிந்தியாவில் நிலவும் நீர் பங்கீட்டு பிரச்சனைக்கு ஏதேனும் தீர்வை உங்களால் கொடுக்க முடியுமா?

## X நிலவரைபட பயிற்சி

1. வண்டல் மண் அதிகம் காணப்படும் பகுதிகளைக் குறிப்பிடுக.
2. கரிசல் மண் காணப்படும் பகுதிகளைக் குறிக்கவும்.
3. ஹிராகுட் அணை, மேட்டூர் அணை மற்றும் தாமோதர் அணைகளின் அமைவிடங்களைக் குறிக்கவும்.
4. சணல் விளையும் பகுதிகளைக் குறிக்கவும்.
5. காபி மற்றும் தேயிலை விளையும் பகுதிகள் ஏதேனும் மூன்றை குறிக்கவும்.
6. பாலை மண் காணப்படும் பகுதிகளைக் குறிக்கவும்.
7. தூத்துக்குடி, சென்னை, கொச்சின், மும்பை மற்றும் மசூலிப்பட்டினம் மீன் பிடித்தல் மையங்களைக் கண்டறிக.
8. காவிரி மற்றும் கோதாவரி டெல்டா பகுதிகளைக் குறிக்கவும்.

## மேற்கோள் நூல்கள்


1. Singh, G. (1976). A Geography of India. Atma Ram & Sons Publications, New Delhi.
2. Siddhartha, K. and Mukherjee, S. (2013). Geography through Maps (11th Edition). Kisalaya Publications Pvt. Ltd., New Delhi.
3. Husain, M. (2015). Geography of India (6th Edition). McGraw Hill Education, New Delhi.
4. Sharma, T.C. and Coutinho, O. (1978). Economic and Commercial Geography India (2nd Edition). Vikas Publishing House Pvt. Ltd., New Delhi.
5. Mamoria, C.B. (1980). Economic and Commercial Geography of India. Shiva Lal Agarwala & Company, Agra.


## இணையதள வளங்கள்


1. https://extension.psu.edu/introduction-to-soils-managing-soils
2. http://mospi.nic.in/statistical-year-book-india/2017/181
3. http://www.india-wris.nrsc.gov.in/wrpinfo/index.php?title=Multi_Purpose_Projects
4. http://dahd.nic.in/sites/default/filess/Volume%20I.pdf




10th_Geography_Unit_3_TM.indd 178
11-04-2020 11:47:08

# அலகு – 4

# இந்தியா – வளங்கள் மற்றும் தொழிலகங்கள்



## கற்றலின் நோக்கங்கள்

- வளங்கள் மற்றும் அதன் வகைகளைப் பற்றி அறிந்துகொள்ளல்
- புதுப்பிக்கத்தக்க மற்றும் புதுப்பிக்க இயலா வளங்களைப் பற்றி புரிந்துகொள்ளல்
- இந்தியாவில் உள்ள தொழிலகங்களின் வகைகள் மற்றும் பரவல்களை அடையாளம் காணுதல்
- இந்திய தொழிலகங்களின் பிரச்சனைகளைப் பகுப்பாய்வு செய்தல்

BH8TFL

## அறிமுகம்

இயற்கையிலிருந்து பெறப்பட்டு உயிரினங்களால் பயன்படுத்தப்படும் அனைத்து வளங்களும் 'இயற்கை வளம்' என்று அழைக்கப்படுகிறது. காற்று, நீர், மண், தாதுக்கள், புதைப்படிம எரிபொருள், தாவரங்கள், வன விலங்குகள் போன்றவை இயற்கை வளங்களில் அடங்கும். பல இயற்கை வளங்கள் மூலப்பொருள்களாக பயன்படுகின்றன. இயற்கை வளங்கள் எந்த ஒரு பிரதேசத்தின் பொருளாதார வளர்ச்சியிலும் முக்கிய பங்கு வகிக்கின்றன. பல்வேறு காரணிகளின் அடிப்படையில் இயற்கை வளங்கள் வகைப்படுத்தப்படுகின்றன. தொடர்ந்து கிடைக்கும் தன்மையின் அடிப்படையில் வளங்கள் இரண்டு வகைகளாக வகைப்படுத்தப்படுகின்றன.

புதுப்பிக்கக்கூடிய வளங்கள் பயன்பாட்டிற்கு பிறகு இயற்கை முறையில் மீட்டுருவாக்கம் செய்து கொள்கின்றன. சூரிய சக்தி, காற்று சக்தி, உயிரின கழிவு வாயு வளிமம், ஓதசக்தி, அலைசக்தி போன்றவை புதுப்பிக்கக்கூடிய வளங்கள் ஆகும். பயன்பாட்டிற்கு பிறகு மீண்டும் மீட்டுருவாக்கம் செய்ய இயலா வளங்கள் புதுப்பிக்க இயலா வளங்கள் ஆகும். நிலக்கரி, பெட்ரோலியம், இயற்கை வாயு போன்றவை இவ்வகையைச் சார்ந்தவை.

## 4. 1 கனிம வளங்கள்

ஒரு குறிப்பிட்ட வேதியியல் மற்றும் இயற்பியல் பண்புகளைக் கொண்ட உயிருள்ள மற்றும் உயிரற்ற இயற்கை மூலங்கள் கனிமங்கள் ஆகும். புவியிலிருந்து கனிமங்களை அகழ்ந்தெடுக்கும் முறைக்கு சுரங்கத் தொழில் என்று பெயர். ஆழம் குறைந்த புவியோட்டிற்கு அருகில் உள்ள சுரங்கங்கள் திறந்தவெளிச் சுரங்கங்கள் என்றும் ஆழமாக உள்ள சுரங்கங்கள் ஆழ்ச் சுரங்கங்கள் என்றும் அழைக்கப்படுகின்றன.

உங்களுக்குத் தெரியுமா?

இந்தியாவில் உள்ள கனிமங்கள் மற்றும் அதனோடு தொடர்புடைய அமைப்புகள் :


1. இந்திய நிலவியல் களஆய்வு நிறுவனத்தின் தலைமையிடம் – கொல்கத்தா
2. இந்தியச் சுரங்கப் பணியகம் – நாக்பூர்
3. இரும்பு சாரா தொழில் நுட்ப மேம்பாட்டு மையம் – ஹைதராபாத்
4. இந்தியாவில் உள்ள சுரங்கங்கள் மற்றும் கனிமங்களின் நிர்வாகத்திற்கான பொறுப்பு சுரங்கப்பணி அமைச்சகத்திடம் உள்ளது. (மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறைச் சட்டம், 1957)

### கனிமங்களின் வகைகள்

வேதியியல் மற்றும் இயற்பியல் பண்புகளின் அடிப்படையில் கனிமங்கள் இரண்டு பெரும் பிரிவுகளாக வகைப்படுத்தப்படுகின்றன. அவை அ. உலோகக் கனிமங்கள் ஆ. அலோகக் கனிமங்கள்

### அ. உலோகக் கனிமங்கள்

உலோகக் கனிமங்கள் என்பது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உலோகங்களைக் கொண்டிருக்கும். உலோகக் கனிமங்கள் அரிதாகவும் இயற்கையான அடர்ந்த தாது



படிவங்களாகவும் காணப்படுகின்றன. உலோகப் படிவுகளில் இரும்பு, மாங்கனீசு, தாமிரம், பாக்சைட், நிக்கல், துத்தநாகம், காரியம், தங்கம் போன்ற மதிப்பு மிக்க உலோகங்கள் காணப்படுகின்றன.

### 1. இரும்புத்தாது

இரும்புத்தாது புவியின் மேலோட்டில் அதிகம் பரவி காணப்படும் ஒன்றாகும். இவை தனித்த நிலையில் அரிதாகக் காணப்படுகிறது. இது தீப்பாறைகள் மற்றும் உருமாறியப் பாறைகளின் கலவையாக காணப்படுகிறது.

இந்தியாவில் காணப்படும் இரும்புத்தாது வளங்கள் ஹேமடைட் வகையையும், மேக்னடைட் வகையையும் சார்ந்தவை.

பொதுவாக இரும்புத்தாது கீழ்க்கண்ட வடிவங்களில் காணப்படுகிறது.

| இரும்புத் தாது படிவு | இரும்பின் அளவு |
|---|---|
| மேக்னடைட் | 72.4% |
| ஹேமடைட் | 69.9% |
| கோதைட் | 62.9% |
| லைமனைட் | 55% |
| சிடரைட் | 48.2% |

நாட்டின் மொத்த இரும்புத்தாது உற்பத்தியில் ஜார்கண்ட் மாநிலம் 25% உற்பத்தி செய்து முதன்மையான உற்பத்தியாளராகத் திகழ்கிறது. ஹசாரிபாக் மற்றும் ராஞ்சி மாவட்டங்கள் இம்மாநிலத்தின் முக்கிய உற்பத்தியாளர்களாகும். ஒடிசா மாநிலம் 21 சதவிகித உற்பத்தியுடன் இரண்டாம் நிலையில் உள்ளது. சுந்தர்கார், மயூர்பஞ்ச், சம்பல்பூர் மற்றும் கீயோஞ்சர் மாவட்டங்கள் இதன் முக்கிய உற்பத்தி மாவட்டங்களாகும்.

சத்தீஸ்கர் மாநிலத்தின் மேக்னடைட் உற்பத்தி 18 சதவிகிதமாகும். ராஜ்கார் மற்றும் பிலாஸ்பூர் மாவட்டங்கள் இதன் முக்கிய உற்பத்தியாளராகும். கர்நாடக மாநிலத்தின் 20 சதவிகித மேக்னடைட் உற்பத்தி சித்திரதுர்கா, சிக்மங்களூர், சிமோகா மற்றும் தார்வார் மாவட்டங்கள் உற்பத்தி செய்கின்றன. ஆந்திரப்பிரதேசம் மற்றும் தமிழ்நாடு ஒவ்வொன்றும் சுமார் 5 சதவிகித உற்பத்தியைச் செய்கின்றன. ஆந்திரப்பிரதேசத்தில் கர்னூல், குண்டூர், கடப்பா மற்றும் அனந்தபூர் மாவட்டங்களும் தமிழ்நாட்டில் சேலம், நாமக்கல், திருவண்ணாமலை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களும் குறிப்பிடத்தக்க அளவு இரும்புத்தாது உற்பத்தி செய்கின்றன.

**இந்திய இரும்பு எஃகு ஆணையம் (SAIL)**

இந்தியாவில் இரும்பு எஃகு தொழிற்சாலைகள் திட்டமிடல் மற்றும் வளர்ச்சிக்கு இது முக்கிய பங்காற்றுகிறது.

### 2. மாங்கனீசு

மாங்கனீசு ஒரு வெளிர் சாம்பல் நிறமுடைய மிகவும் கடினமான ஆனால் எளிதில் உடையும் தன்மையுடையதாகும். மாங்கனீசு எப்பொழுதும் இரும்பு, லேட்ரைட் மற்றும் பிற தாதுக்களுடன் கலந்து காணப்படும். இது இரும்பு எஃகு மற்றும் உலோகக் கலவை உற்பத்திக்கு அடிப்படையான மூலப்பொருள் ஆகும். ஒரு டன் இரும்பு எஃகு உற்பத்தி செய்வதற்கு 10 கிலோ மாங்கனீசு தேவைப்படுகிறது. வெளுக்கும் தூள், பூச்சிக்கொல்லிகள், வண்ணப்பூச்சிகள், மின்கலன்கள் போன்றவைத் தயாரிப்பதற்கு மாங்கனீசு பயன்படுகின்றது.

நாக்பூரை தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வரும் இந்திய மாங்கனீசு தாது நிறுவனம் (Manganese ore India Ltd) 50 சதவிகித மாங்கனீசை உற்பத்திச் செய்து, உலகச் சந்தை மதிப்பீட்டில் முதன்மையானதாக திகழ்கிறது.

மாங்கனீசு படிவுகள் பெரும்பாலும் உருமாறிய பாறைகளில் காணப்படுகிறது. அதிக மாங்கனீசு படிவுகள் ஒடிசா, கர்நாடகா, மத்தியப்பிரதேசம், மகாராஷ்டிரா, கோவா, ஆந்திரப்பிரதேசம் மற்றும் ஜார்கண்ட் போன்ற மாநிலங்களில் காணப்படுகிறது. இராஜஸ்தான், குஜராத், தெலங்கானா, மேற்கு வங்காளம் போன்ற மாநிலங்கள் இணைந்து இந்திய மாங்கனிசு உற்பத்தியில் 2 சதவிகிதத்தை அளிக்கின்றன. உலக அளவில் மாங்கனிசு உற்பத்தியில் இந்தியா ஐந்தாவது பெரிய நாடு ஆகும்.

### 3. தாமிரம்

தாமிரம் வரலாற்றிற்கு முந்தைய காலத்திலேயே மனிதனால் கண்டுபிடிக்கப்பட்ட முதல் உலோகமாகும். இதை மனிதர்கள் பல்வேறு வகைகளில் பயன்படுத்துகின்றனர். இவை நெகிழும் தன்மையுடையதால் இவற்றை பல்வேறு வடிவமுடைய பொருள்களாக உருவாக்க முடியும். தாமிரத்தை துத்தநாகத்துடன் கலந்து பித்தளையையும், தகரத்துடன் சேர்த்து

வெண்கலமும் உருவாக்கப்படுகின்றது. தாமிரமானது, சமையல் பாத்திரங்கள் மற்றும் பொதுப் பயன்பாட்டிற்கான பல பொருள்களின் உற்பத்திக்கும் பயன்படுத்தப்படுகிறது. தற்காலத்தில் தாமிரமானது பல்வேறு வகைப்பட்ட மின்சாரக்கம்பிகள், மின்சாதனங்கள், கம்பி வடங்கள் போன்றவற்றின் உற்பத்திக்கு அதிகம் பயன்படுத்தப்படுகிறது.

இந்துஸ்தான் தாமிர நிறுவனம் இந்திய அரசால் நிர்வகிக்கப்படும் இந்திய சுரங்கத்துறை அமைச்சகத்தின் கீழ் இயங்கக்கூடிய பொதுத்துறை நிறுவனமாகும்.

தாமிரப்படிவு அதிகமுள்ள மாநிலம் இராஜஸ்தான் ஆகும். இதைத் தொடர்ந்து ஜார்க்கண்ட் மற்றும் மத்தியப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் குறிப்பிடத்தக்க அளவு காணப்படுகிறது. ஆந்திரப்பிரதேசம், குஜாராத், ஹரியானா, மகாராஷ்டிரா, மேகாலயா, நாகலாந்து, ஒடிசா, சிக்கிம், தமிழ்நாடு, தெலங்கானா, உத்ரகாண்ட் மற்றும் மேற்குவங்காளம் மாநிலங்கள் சேர்ந்து 7.9 சதவிகித தாமிர இருப்பைப் பெற்றுள்ளன.

### 4. பாக்சைட்

அலுமினியம் பாக்சைட் தாதுவிலிருந்து பெறப்படுகிறது. இத்தாது நீரேற்ற அலுமினிய ஆக்சைட் உள்ள பாறைகளில் காணப்படுகிறது. சரளை மண் காணப்படும் பகுதிகளில் புவியின் மேற்பரப்பில் படிவுகளாக பாக்சைட் தாது பரவிக் காணப்படுகிறது. குறைந்த எடை மற்றும் கடினத்தன்மைக் கொண்ட பண்புகளால் அலுமினியமானது விமானக் கட்டுமானங்களிலும் தானியங்கி இயந்திரங்களிலும் அதிகம் பயன்படுத்தப்படுகிறது. சிமெண்ட் மற்றும் இரசாயனத் தொழிற்சாலைகளிலும் பயன்படுத்தப்படுகிறது. பாக்சைட் தாதுக்கள் ஒடிசா மாநிலத்திலும், குஜராத்திலும் (ஜீனாகத், அம்ரேலி, பாபு நகர் மாவட்டங்கள்) ஜார்கண்ட் மாநிலத்திலும் (ராஞ்சி,

NALCO என்று அழைக்கப்படும் தேசிய அலுமினிய நிறுவனம் 1981இல் தொடங்கப்பட்டது. இதன் மையங்கள் ஒடிசா மாநிலத்தில் அஞ்சுல், டாமன், சோடி போன்ற இடங்களில் உள்ளன. இது இந்திய சுரங்கத்துறை அமைச்சகத்தின் கீழ் 1981ஆம் ஆண்டு பொதுத்துறை நிறுவனமாக உருவாக்கப்பட்டது.

குமிளா மாவட்டங்கள்) மகாராஷ்டிரா மாநிலத்திலும் (சிந்துர்க், இரத்தனகிரி மாவட்டங்கள்) சத்திஸ்கர் மாநிலத்திலும் (பல்லார்பூர், துர்க் மாவட்டங்கள்) தமிழ்நாட்டிலும் காணப்படுகின்றன.

உங்களுக்குத் தெரியுமா?

பாக்சைட் என்பது அலுமினியத்தின் ஒருவகையான ஆக்சைடு ஆகும். இது பிரெஞ்சு வார்த்தையான லீ பாக்ஸ் என்ற வார்த்தையில் இருந்து பெறப்பட்டது.

### ஆ. அலோகக் கனிமங்கள்

இவ்வகைக் கனிமங்களில் உலோகத் தன்மை இருப்பதில்லை. மைக்கா, சுண்ணாம்பு, ஜிப்சம், நைட்ரேட், பொட்டாஷ் டோலமைட், நிலக்கரி, பெட்ரோலியம் முதலியன அலோகக் கனிமங்களாகும்.

#### மைக்கா

பண்டைய காலத்தில் மைக்கா ஆயுர்வேத மருத்துவத்தில் பயன்படுத்தப்பட்டது. மின்தொழிலக வளர்ச்சியால் மைக்கா மிகவும் முக்கியத்துவம் பெற்றுள்ளது. அப்ராக் வகை ஒரு நல்ல தரமான மைக்காவாகும்.

மைக்கா ஒளி புகும் தன்மையுடையது, எளிதில் மிக மெல்லிய பட்டைகளாக பிரித்தெடுக்கக்கூடியவை, நிறமற்றவை, நெகிழும் தன்மையுடையவை. மேலும் குறைந்த மின் இழப்பையும், அதிகமின் அழுத்தத்தை தாங்கக்கூடிய திறன் பெற்றதால் மின் காப்பான்கள் (Insulators) தயாரிக்கப் பயன்படுத்தப்படுகிறது. இவை மின் கடத்தா தன்மையுடயவை ஆதலால் மின் சாதனங்கள் தயாரிப்பில் பெரிதும் பயன்படுத்தப்படுகிறது. மேலும் மசகு எண்ணெய், மருந்துகள், வர்ணப்பூச்சுதல் மற்றும் மெருகு எண்ணெய் போன்ற தயாரிப்புகளிலும் பயன்படுத்தப்படுகின்றன.

ஆந்திரப்பிரதேசம், இராஜஸ்தான், ஒடிசா, ஜார்கண்ட் ஆகியன முக்கிய மைக்கா உற்பத்தியாளர்களாகும்.

#### சுண்ணாம்புக்கல்

கால்சியம் கார்போனேட் கொண்ட பாறைகளிலோ அல்லது கால்சியம் மற்றும் மெக்னீசியம் அல்லது இரண்டும் கலந்த பாறைகளிலோ சுண்ணாம்புக்கல் காணப்படுகிறது. சுண்ணாம்புக்கல், சிறிய அளவிலான சிலிக்கா, அலுமினா, இரும்பு ஆக்ஸைடு, பாஸ்பரஸ் மற்றும் கந்தகம் ஆகியவற்றைக் கொண்டுள்ளன.

சோடா சாம்பல், எரிசோடா, வெளுக்கும் தூள் (bleaching powder), காகிதம், சிமெண்ட்,

இரும்பு எஃகு உற்பத்தி, கண்ணாடி மற்றும் உரங்கள் தயாரிப்பு தொழிற்சாலைகளில் சுண்ணம்புக்கல் பயன்படுகிறது. இதன் முக்கிய உற்பத்தியாளர்கள் கர்நாடகா, ஆந்திரப்பிரதேசம், தெலங்கானா, இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம், தமிழ்நாடு, மேகாலயா, குஜராத், சத்தீஸ்கர் மற்றும் ஆகிய மாநிலங்கள் ஆகும்.

### ஜிப்சம்

ஜிப்சம் என்பது கால்சியம் சல்ஃபேட்டின் நீர்மக் கனிமமாகும். இது சுண்ணாம்புப்பாறை, மணற்பாறை, மாக்கல் போன்ற படிவுப்பாறைகளில் ஒளிப்புகும், வெண்ணிறமான தாதுவாக காணப்படுகிறது. இது சிமெண்ட், உரங்கள், சுவர்ப்பட்டிகள், பாரிஸ் சாந்து (plaster of paris) போன்றவற்றின் உற்பத்திற்கு மூலப்பொருளாகவும், மண் வளமூட்டியாகவும் பயன்படுகிறது. இராஜஸ்தான், தமிழ்நாடு, குஜராத், இமாச்சலப்பிரதேசம், கர்நாடகம், உத்தரகாண்ட், ஆந்திரப்பிரதேசம் மற்றும் மத்தியப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் ஜிப்சம் காணப்படுகின்றன.

## 4.2 ஆற்றல் வளங்கள்

4P5K2N

மின்சாரம் உற்பத்தி செய்ய பயன்படும் வளங்களை எரிசக்தி வளங்கள் என்று அழைக்கின்றோம். மின்சாரம் நம் வாழ்க்கையில் ஒரு முக்கிய அங்கம் ஆகும். தினசரி வாழ்க்கையில் நம்மால் மின்சார பயன்பாடு இன்றி இருக்க முடியாது. இது அனைத்து பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் தொழில்துறை வளர்ச்சிக்கு மூலாதாரமாக உள்ளது. ஏற்கனவே குறிப்பிட்டுள்ளது போல் ஆற்றல் வளங்கள் புதுப்பிக்கக்கூடிய வளம் மற்றும் புதுப்பிக்க இயலாத வளங்கள் என வகைப்படுத்தப்படுள்ளன.

### புதுபிக்க இயலா வளங்கள்:

#### 1. நிலக்கரி

நிலக்கரி என்பது எளிதில் எரியக்கூடிய உயிரின படிமங்கள் கொண்ட ஒரு நீரக கனிமம் ஆகும். இது படிவுப் பாறைகளில் கிடைக்கிறது. ஒரு நாட்டின் தொழிற்சாலை வளர்ச்சிக்கு மிக இன்றியமையாததாக இருப்பதால் இது கருப்பு தங்கம் (Black gold) என அழைக்கப்படுகிறது. கரிம அளவின் அடிப்படையில் நிலக்கரி கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தப்படுகிறது.

| | |
|---|---|
| **ஆந்தரசைட்** | : 80 முதல் 90% |
| **பிட்டுமினஸ்** | : 60 முதல் 80% |
| **பழுப்பு நிலக்கரி** | : 40 முதல் 60% |
| **மரக்கரி** | : 40 %த்திற்கும் குறைவு. |

பல்வேறு வகையான பயன்பாடுகளின் காரணமாக நிலக்கரி இந்தியாவின் மிக முக்கியமான ஆற்றல் மூலமாக விளங்குகிறது. இதை வாயுவாகவும், எண்ணெயாகவும் மற்றும் அனல் மின்சக்தியாகவும் மாற்ற இயலும். மேலும் இரசாயனங்கள், சாயங்கள், உரங்கள், வர்ணப்பூசுதல் மற்றும் வெடிமருந்துகள் போன்ற பொருள்கள் தயாரிப்பிற்கும் மூலப் பொருளாக பயன்படுகின்றன.

இந்தியாவில் காணப்படும் நிலக்கரி வயல்கள், கோண்டுவானா தொடர் பறைகளோடு தொடர்புடையவை. இவை தீபகற்ப இந்தியப் பகுதிகளில் அதிகம் காணப்படுகின்றன. நாட்டின் மொத்த நிலக்கரி படிவுகளில் 90 சதவிகிதத்தை ஜார்கண்ட், ஒடிசா, மேற்கு வங்காளம் மற்றும் மத்தியப்பிரதேச மாநிலங்கள் கொண்டுள்ளன. (2% நிலக்கரி மூன்றாம் நிலையைச் சார்ந்தது. அசாம் மற்றும் ஜம்மு–காஷ்மீரில் இவ்வகை அதிகமாகக் காணப்படுகிறது).

ஜார்கண்ட் மாநிலம் இந்தியாவில் அதிக நிலக்கரி உற்பத்தியைச் செய்கிறது. சத்தீஸ்கர், மேற்கு வங்காளம், மத்தியப்பிரதேசம், ஆந்திரப்பிரதேசம் மற்றும் மகராஷ்டிரா மாநிலங்கள் நிலக்கரி உற்பத்தியில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

தென் மற்றும் மேற்கு தீபகற்ப இந்தியப் பகுதிகளில் குறிப்பாக தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் கேரளா மாநிலங்களில் பழுப்பு நிலக்கரி படிவுகள் காணப்படுகின்றன.

இந்திய நிலக்கரி அமைச்சகமானது, நிலக்கரி அகழாய்வு மற்றும் உற்பத்தி மேம்பாட்டு கொள்கைகளை முடிவு செய்கிறது. இந்திய நிலக்கரி நிறுவனம் (CIL), இந்திய தேசிய பழுப்பு நிலக்கரி நிறுவனம் (NLCIL) மற்றும் சிங்கரேனி கோலாரிஸ் நிலக்கரி நிறுவனம் (SCCL) ஆகியன இவ்வமைச்சகத்தின் பொதுத்துறை நிறுவனங்களாகும்.

இந்திய அரசால் நிர்வகிக்கப்படும் இந்திய நிலக்கரி நிறுவனம் மேற்கு வங்காளத்திலுள்ள கொல்கத்தாவை தலைமையிடமாகக் கொண்டு செயல்படுகிறது. இது உலக அளவில் அதிக நிலக்கரி உற்பத்தி செய்யும் நிறுவனம் ஆகும்.

#### 2. பெட்ரோலியம் / கச்சா எண்ணெய்

பெட்ரோலியம் என்ற சொல் "பெட்ரோ" (பாறை) மற்றும் ஒலியம் (எண்ணெய்) என்ற இரு இலத்தின் சொற்களிலிருந்து பெறப்பட்டது. எனவே பெட்ரோலியம் என்பது புவியிலுள்ள

பாறைப்படிவுகளில் பெறப்படும் எண்ணெய் ஆகும். இது தாது எண்ணெய் என்றும் அழைக்கப்படுகிறது. 90–95 சதவிகிதம் நீரக கரிமமும், மீதமுள்ள 5–10 சதவிகிதம் ஆக்ஸிஜன், ஹைட்ரஜன், கந்தகம் மற்றும் கரிம உலோகங்களையும் கொண்ட எளிதில் எரியக்கூடிய ஒரு திரவமாகும்.

பெட்ரோலியமானது எரிசக்தி உற்பத்திக்கும், வாகனங்கள், வானூர்திகள், கப்பல்கள் மற்றும் இரயில்களுக்கு எரிபொருளாகவும் பயன்படுகிறது. மசகு எண்ணெய், மண்ணெண்ணெய், களிம்புகள், தார், சோப்பு, டெர்லின், மெழுகு ஆகியன இதன் உப உற்பத்தி பொருள்கள் ஆகும். இந்தியாவில் கச்சா எண்ணெயானது கடற்கரைப் பகுதிகளிலும், உள்நாட்டுப் பகுதிகளிலும் கிடைக்கின்றது.



**இந்தியா – எண்ணெய் சுத்திகரிப்பு**

**பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம் (MOP & NG)**

இது இந்திய அரசாங்கத்தின் கீழ் இயங்கும் ஒரு அமைச்சகமாகும். இவ்வமைச்சகம் ஆய்வு செய்தல், உற்பத்தி, சுத்திகரித்தல், விநியோகம், ஏற்றுமதி, இறக்குமதி, எண்ணெய் பாதுகாப்பு, இயற்கை எரிவாயு மற்றும் பெட்ரோலிய உற்பத்திப் பொருள் போன்றவற்றிற்கு பொறுப்பு ஏற்கிறது.

### இ. இயற்கை எரிவாயு


இயற்கை எரிவாயு பொதுவாக பெட்ரோலிய பகுதிகளுடன் இணைந்து காணப்படுகிறது. இது இயற்கையாக உருவாகும் ஒரு நீர்ம கரிம வாயுவாகும். இவற்றின் பெரும்பகுதி மீத்தேன் வாயுவும் பல்வேறு அளவுகளில் உள்ள மதுக்கரியம் (alkaline) சிறிய சதவிகிதத்திலான கார்பன்– டை– ஆக்ஸைடு, நைட்ரஜன் மற்றும் நைட்ரஜன் சல்பைடு கலந்த கலவைகளால் ஆனது. இது ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் அழிந்து புதையுண்ட தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் அதிக வெப்பம் மற்றும் அழுத்தம் காரணமாக மட்குவதன் மூலம் உண்டாக்கூடிய ஒரு வாயு. இது வெப்பப்படுத்தலுக்கும்,

| மேற்கு கடற்கரைக்கு அருகில் உள்ள எண்ணெய் வயல்கள் | கிழக்கு கடற்கரைக்கு அருகில் உள்ள எண்ணெய் வயல்கள் |
|---|---|
| 1. மும்பை ஹை எண்ணெய் வயல் (65% மிகப்பெரியது) | பிரம்மபுத்திரா பள்ளத்தாக்கு, (திப்ருகார், சில்சாகர், மாவட்டங்கள் அசாம்) |
| 2. குஜராத் கடற்கரை ( 2வது பெரியது ) | திக்பாய் எண்ணெய் வயல் (நாட்டின் மிகப் பழமையான எண்ணெய் வயல்) |
| 3. பேஸ்ஸைம் எண்ணெய் வயல் மும்பை ஹையின் தென்பகுதி | நாகர்காட்டியா எண்ணெய் வயல் (திக்பாய்க்கு தென்மேற்கு பகுதி) |
| 4. அலியாபெத்–எண்ணெய் வயல் (பவ் நகரின் தென்பகுதி) | மோரான் ஹக்ரிஜன் – எண்ணெய் வயல் (நாகர்காட்டியாவின் தென்மேற்கு பகுதி) |
| 5. அங்கலேஸ்வர் | ருத்ரசாகர்–லாவா எண்ணெய் வயல்கள் (அசாம் மாநிலத்தில் சிப்சாகர் மாவட்டம்) |
| 6. காம்பே– லூனி பகுதிகள் | சர்மா பள்ளத்தாக்கு– (பதர்பூர், மாசிம்பூர், பதாரியா) |
| 7. அகமதாபாத்– கலோல் பகுதி | அந்தமான் நிகோபாரின் உட்பகுதிகள், மன்னார் வளைகுடா, பலேஷ்வர் கடற்கரை, ஹரியானா, பஞ்சாப் மற்றும் உத்தரப்பிரதேசம் |



10th_Geography_Unit_4_TM.indd 184 11-04-2020 11:55:23

www.tntextbooks.in




சமையலுக்கும் மின் உற்பத்திக்கும் ஆதாரமாக விளங்குகிறது. மேலும் வாகனங்களுக்கு எரிபொருளாகவும், நெகிழிகள் உற்பத்தி, வியாபார முக்கியத்துவம் வாய்ந்த கரிம இரசாயனப் பொருள்கள் தயாரிப்பதற்கும் பயன்படுகிறது.

**கெயில் நிறுவனம்** (GAIL): இந்திய இயற்கை எரிவாயு நிறுவனமானது மாநில அரசாங்கத்தால் நிர்வகிக்கப்படும் ஒரு நிறுவனமாகும். இது இயற்கை எரிவாயு உற்பத்தி மற்றும் விநியோகம் செய்யும் நிறுவனங்களுள் ஒரு மிகப்பெரிய நிறுவனமாகும். இதன் தலைமையகம் புதுடெல்லியில் உள்ளது.

வட இந்தியப் பகுதிகள் அதிக அளவிலான மூன்றாம் நிலைப் பாறைகள் மற்றும் வண்டல் படிவுகளைக் கொண்டுள்ளது. ஒரு காலத்தில் ஆழம் குறைந்த,கடலுக்குஅடியில்இருந்தபடிவுப்பாறைகள், எண்ணெய் மற்றும் இயற்கை வாயுப் படிவுகளாக உருவாகின. அதிக அளவிலான இயற்கை எரிவாயு மும்பை ஹை மற்றும் பேஸ்ஸைம் எண்ணெய் வயல் பகுதிகளில் காணப்படுகிறது.

அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயு (CNG) (அதிக அழுத்தத்துடன் அடைக்கப்பட்ட மீத்தேன்) என்பது பெட்ரோல், டீசல் மற்றும் திரவ பெட்ரோலிய எரிவாயு ஆகியவற்றிற்கு பதிலாக பயன்படுத்தக்கூடிய ஒரு எரிபொருளாகும். இது காற்றை விட இலகுவானதாகவும், அதிகவேகமாக பரவும் தன்மைக் கொண்டதால் விரைவில் மறைந்து விடுகிறது. இதனால் மற்ற எரிபொருள்களை விட ஆபத்து குறைவானதாகும். விவசாயக் கழிவுகளிலிருந்து எடுக்கப்படும் உயிரிவாயு, புதுடெல்லி, அகமதாபாத், மும்பை, பூனா, கொல்கத்தா, லக்னோ, கான்பூர், வாராணாசி போன்ற நகரங்களில் வாகனங்களுக்கு பயன்படுத்தப்படுவது அதிகரித்து வருகிறது.



10th_Geography_Unit_4_TM.indd 185 11-04-2020 11:55:24

குஜராத், அசாம், தமிழ்நாடு (நெய்பள்ளத்தூர் மற்றும் மங்கமடம் (தஞ்சாவூர்), திரிபுரா, இராஜஸ்தான், அருணாச்சலப் பிரதேசம், பஞ்சாப், மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில் இயற்கை எரிவாயு கண்டறியப்பட்டுள்ளது.

## மரபுசார் ஆற்றல் வளங்கள்


### அ) அனல் மின்சக்தி

உயிரினப் படிமங்களான நிலக்கரி, பெட்ரோலியம், டீசல் மற்றும் இயற்கை எரிவாயு போன்றவற்றிலிருந்து அனல் மின்சக்தி தயாரிக்கப்படுகிறது. தேசிய அனல்மின் நிறுவனம் (NTPC) 1975ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. தற்சமயம் தேசிய அனல்மின் நிறுவனத்தின் கீழ் 13 நிலக்கரி சார் அனல்மின் திட்டங்களும் 7 இயற்கை எரிவாயு திரவ எரிபொருள் சார்ந்த அனல்மின் திட்டங்களும் அசாம், பீகார், ஜார்கண்ட், சத்தீஸ்கர், மிசோரம் மற்றும் மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில் செயல்பட்டு வருகிறது. நெய்வேலி, மேட்டூர், தூத்துக்குடி மற்றும் எண்ணூர் ஆகியன தமிழ்நாட்டின் முக்கிய அனல்மின் நிலையங்களாகும்.

### ஆ) அணுசக்தி

அணுக்கரு பிளவு அல்லது இணையும் போது வெளிப்படும் ஆற்றலைப் பயன்படுத்தி அணுமின்சாரம் தயாரிக்கப்படுகிறது. யுரேனியம் மற்றும் தோரியம் தாதுக்களிலிருந்து அணுசக்தி பெறப்படுகிறது. இந்தியாவின் முதல் அணுமின் நிலையம் 1969ஆம் அண்டு மும்பைக்கு அருகில் உள்ள தாராப்பூரில் நிறுவப்பட்டது. பின்னர் இராஜஸ்தான் மாநிலத்தில் கோட்டாவிற்கு அருகில் உள்ள (100 மெகாவாட்) இரவத் பட்டா (335 மெகாவாட்) என்னுமிடத்தில் அணுமின்நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டன.

இந்திய அணு மின்சக்தி நிறுவனம் (NPCIL) இந்தியாவின் ஒரு பொதுத்துறை நிறுவனமாகும். இது மகாராஷ்ட்டிரா மாநிலத்தில் உள்ள மும்பையைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் அரசு நிறுவனமாகும். இந்நிறுவனம் அணு மின்சக்தி உற்பத்திக்கான பொறுப்பை வகிக்கிறது.



www.tntextbooks.in

தமிழ்நாட்டில் கல்பாக்கம் (440 மெகாவாட்) மற்றும் கூடங்குளம் (2,000 மெகாவாட்), உத்தரப்பிரதேசத்தில் நரோரா (235 மெகாவாட்), கர்நாடகாவில் கைகா (235 மெகாவாட்), குஜராத்தில் காக்கரபாரா (235 மெகாவாட்) ஆகிய இடங்களில் அணுமின் நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

## புதுப்பிக்கக்கூடிய வளங்கள்

### அ) நீர்மின்சக்தி

நீர்மின்சக்தி ஓடும் நீரிலிருந்து பெறப்படுகிறது. இம்மின்சக்தி மாசற்ற மற்றும் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த மின் ஆற்றலாக கருதப்படுகிறது. நீர் மின்சக்தி உலக மின்தேவையில் 7 சதவிகிதத்தைப் பூர்த்தி செய்கிறது. புதுப்பிக்கக்கூடிய வளத்திலிருந்து பெறப்படுவதால் மற்ற மின்சார ஆற்றல்களோடு ஒப்பிடுகையில் குறைந்த உற்பத்திச் செலவை உடையதாகவுள்ளது. இது தேவைக்கு ஏற்ப உற்பத்தியை உடனடியாக அதிகரிக்கவோ அல்லது குறைக்கவோ கூடிய தன்மையுடையது.

இந்தியாவானது நீர்மின்சக்தி உற்பத்தி செய்வதற்கான மிக அதிக திறனை பெற்றுள்ள ஒரு மிகச் சிறந்த ஒரு நாடாக உள்ளது.

உங்களுக்குத் தெரியுமா?

இந்தியாவின் முதல் நீர்மின் நிலையம் 1897ஆம் ஆண்டு டார்ஜிலிங்கில் நிறுவப்பட்டது. இந்திய தேசிய நீர் மின்சக்தி நிறுவனம் ஃபரிதாபாத்தில் அமைந்துள்ளது.

### ஆ) சூரியஆற்றல்/சக்தி

சூரியஆற்றல் சூரிய ஒளியை நேரடியாகவோ மின்அழுத்திக் கொண்டோ அல்லது செறிவூட்டம் கொண்ட சூரிய ஆற்றல் மூலம் மின்னாற்றலாக மாற்றப்படுதலாகும். செறிவூட்டல் முறையில் பெரிய பரப்பளவில் உண்டாகும் சூரிய ஒளிக்கற்றைகள் வில்லைகள் அல்லது கண்ணாடிகள் கொண்டு சிறிய ஒளிக்கற்றையாக ஒரு கலத்தின் மீது குவிக்கப்படுகிறது. மின்அழுத்திகள், ஒளிமின் விளைவு செயல்பாட்டின் மூலம் சூரிய ஒளியை மின்சாரமாக மாற்றுகின்றன.

இந்தியாவின் சூரிய சக்தி நிறுவனம் புதுடெல்லியை தலைமை இடமாக கொண்டு உள்ளது.

மின்விநியோகம், சந்தைப்படுத்துதல், வீடுகள், நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகளுக்குத் தேவையான பல்வேறு வகையான வெப்ப ஆற்றலை வழங்குதல் போன்றவை சூரிய வெப்ப ஆற்றல் திட்டத்தின் முக்கிய பல்நோக்கங்கள் ஆகும். இதனை மரபுசாரா எரிசக்தி வள அமைச்சகம் (MNES) செயல்படுத்தி வருகிறது. சூரியஆற்றலானது நீர் கொதிகலன்கள், குளிர் சாதனப்பெட்டிகள், உலர்ப்பான்கள், தெருவிளக்குகள், சமையல், நீரேற்றுதல், மின்சார உற்பத்தி, மின்அழுத்திகள், அழகு நிலையங்கள் போன்றவற்றிற்கு பயன்படுகிறது. ஆந்திரப்பிரதேசம், குஜராத், இராஜஸ்தான், மகாராஷ்டிரம், மத்தியப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் அதிக அளவு மின்சாரம் சூரிய ஒளியிலிருந்து உற்பத்தி செய்யப்படுகின்றன.

### இ) காற்று சக்தி

காற்று வீச்சு அல்லது உந்துதலால் ஏற்படும் ஆற்றலை காற்று விசைச்சுற்று கலன்களின் உதவியோடு மின்னாற்றலாக மாற்றப்பட்டு காற்றாலை மின்சாரம் பெறப்படுகிறது. இது ஒரு மலிவான மற்றும் மாசற்ற ஆற்றல் வளமாகும். காற்றாலை மின்சாரமானது நீர் ஏற்றுவதற்கும், கப்பல்களை இயக்குவதற்கும் பயன்படுத்தப்படுகிறது. காற்று சக்தியானது மிக அதிகமாக கிடைக்கக்கூடிய, புதுப்பிக்கத்தக்க, அனைத்துப் பகுதிகளிலும் பரவி இருக்கின்ற, சுத்தமான, மாசற்ற புவிமண்டலத்தை வெப்பமயமாக்கும் வாயுக்களை வெளிப்படுத்தாத ஒரு வளமாகும். காற்றாலை நிறுவுவதற்கு குறைவான இடமே போதுமானது.

உங்களுக்குத் தெரியுமா?

இந்தியாவிலேயே அதிக அளவு காற்றாலைகளைக் கொண்டுள்ள மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள முப்பந்தல் – பெருங்குடிப்பகுதி உலகிலேயே அதிக காற்றாலைகளைக் கொண்ட பெரிய காற்றாலை பண்ணை ஆகும்.

இந்தியாவில் காற்றாலை மின் உற்பத்தி 1986ஆம் ஆண்டு முதன் முதலில் குஜராத்தில் உள்ள கடற்கரைப்பகுதியான ஓகா, மகாராஷ்டிரா கடற்கரைப்பகுதியான இரத்தினகிரி, தமிழ்நாட்டிலுள்ள கடற்கரைப்பகுதியான தூத்துக்குடியில் 55 கிலோவாட் உற்பத்தி திறனுடன் நிறுவப்பட்ட காற்றாலைகள் மூலம் வளர்ச்சியடைய ஆரம்பித்தது. கடந்த சில வருடங்களாக இதன் உற்பத்தி திறன் குறிப்பிடத்தக்க அளவில் உயர்ந்துள்ளது. இந்தியா உலக அளவில் அதிக காற்றாலைத் திறன் கொண்ட நாடுகளில் நான்காவது இடத்தில் உள்ளது.



10th_Geography_Unit_4_TM.indd 187 11-04-2020 11:55:28

**தேசிய காற்றாற்றல் நிறுவனம் (NIEW)**

சென்னையிலுள்ள இந்நிறுவனம் 1998இல் ஒரு தன்னாட்சி நிறுவனமாக புதிய மற்றும் புதுப்பிக்கக்கூடிய ஆற்றல் வளங்கள் அமைச்சக நிர்வாகத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்டது. இதன் பணிகளானது காற்று வள மதிப்பிடு ஆய்வு மற்றும் சான்றளித்தல் ஆகும்.

नीवे NIWE
(ISO 9001:2008)

### ஈ) உயிரி சக்தி:

விலங்குகளின் கழிவுகள், சமையல் கழிவுகள், ஆகாய தாமரை கழிவுகள், வேளாண்கழிவுகள் மற்றும் நகரக் கழிவுகள் போன்ற உயிரின கழிவுகளிலிருந்து உயிரி சக்தி பெறப்படுகிறது. இது மாசற்ற மற்றும் மலிவான ஒரு எரிசக்தி வளமாகும். உயிரி எரிசக்தி பெரும்பாலும் வீட்டு உபயோகங்களுக்கு பயன்படுத்தப்படுகிறது.

### உ) ஓத மற்றும் அலை சக்தி

கடல் ஓதங்கள் மற்றும் கடல் அலைகள் என இரண்டு வள ஆதாரங்களிலிருந்து மின்ஆற்றல் பெறப்படுகிறது. காம்பே வளைகுடா ஓத சக்தி உற்பத்திக்கு மிக உகந்த இடமாக உள்ளது. இவற்றிற்கு அடுத்தாற்போல் கட்ச் வளைகுடா பகுதி (1000 MW), சுந்தரவனப்பகுதி (100 MW) ஆகியன இதர குறிப்பிடதக்க திறன் பெற்ற பகுதிகளாகும்.

150 KW உற்பத்தி திறன் கொண்ட அலை சக்தி ஆலை, திருவனந்தபுரத்திற்கு அருகில் உள்ள **விழிஞ்சம்** என்ற பகுதியில் நிறுவப்பட்டுள்ளது. இதே போன்று மற்றொரு ஆலை அந்தமான் நிக்கோபார் தீவுகளுக்கு அருகில் நிறுவப்பட்டுள்ளது.

## 4.3 தொழிற்சாலைகள்

மூலப்பொருள்கள் இயந்திரங்களின் மூலம் உற்பத்தி பொருள்களாக மாற்றப்படும் இடங்களுக்கு தொழிலகங்கள் என்று பெயர். இத்துறை மதிப்புக் கூட்டுத்துறை என்றும் அழைக்கப்படுகிறது. மூலப்பொருள்களின் ஆதாரங்களின் அடிப்படையில் தொழிலகங்கள் 1. வேளாண் சார்ந்த தொழிலகங்கள் 2. காடுகள் சார்ந்த தொழிலகங்கள் மற்றும் 3. கனிமம் சார்ந்த தொழிலகங்கள் என வகைப்படுத்தப்படுகின்றன.

### வேளாண் சார்ந்த தொழிலகங்கள்

இத்தொழிலகங்கள் வேளாண் துறையிலிருந்து மூலப்பொருள்களை பெறுகின்றன.வேளாண் சார்ந்த தொழிலகங்களைப் பற்றி இங்கு காண்போம்.

உங்களுக்குத் தெரியுமா?

**இந்தியாவின் முதல் பருத்தி நெசவாலை 1818ஆம் அண்டு, கொல்கத்தாவிற்கு அருகில் உள்ள போர்ட் க்ளாஸ்டர் என்னும் இடத்தில் தொடங்கப்பட்டது.**

### அ) பருத்தி நெசவாலைகள்

நெசவாலைகள் என்பது பருத்தி, சணல், கம்பளி, பட்டு மற்றும் செயற்கை இழை ஆகியனவற்றை உள்ளடக்கியதாகும். இந்தியா இத்துறையில் உலகின் இரண்டாம் இடத்தில் உள்ளது.

பாரம்பரிய தொழில்களான கைத்தறி, கைவினைப்பொருள்கள், சிறிய விசைத்தறிகள் போன்றவை லட்சக்கணக்கிலான கிராமப்புற மற்றும் புறநகர் மக்களுக்கு வேலைவாய்ப்பினை அளிக்கும் ஆதாரங்களாக உள்ளன.

கைத்தறி


தற்போது இந்தியா பருத்தி உற்பத்தியில் உலகின் மூன்றாவது பெரிய நாடாகவும் தறிகள், நூற்பு கருவிகளின் எண்ணிக்கையில் முதன்மையான நாடாகவும் உள்ளது. தற்போது பருத்தி நெசவாலைகள் இந்தியாவின் மிக பெரிய நவீன தொழிலக பிரிவாக உள்ளது.

பருத்தி இழையிலிருந்து, விதைகளை பிரித்தெடுக்கும் முறைக்கு ஜின்னிங் என்று பெயர்.

மும்பை மற்றும் அதன் புறநகர் பகுதியில் பருத்தியாலைகள் செறிந்து காணப்படுவதால் மும்பை, இந்தியாவின் "மான்செஸ்டர்" என்று அழைக்கப்படுகிறது. மகாராஷ்டிரா மாநிலத்தில் காணப்படும் கரிசல் மண், ஈரப்பத காலநிலை, மும்பைத் துறைமுகம், எளிதில் கிடைக்கும் நீர்மின்சக்தி, சந்தை வசதி, சிறந்த போக்குவரத்து வசதி ஆகியன மும்பையில் அதிக அளவு பருத்தி நெசவாலைகள் இருப்பதற்கு காரணங்களாக அமைகிறது.

மகாராஷ்டிரம், குஜராத், மேற்கு வங்காளம், உத்தரப்பிரதேசம் மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் பருத்தி நெசவாலைகள் செறிந்து காணப்படுகின்றது. தமிழ்நாட்டில் உள்ள கோயம்புத்தூரில் அதிக எண்ணிக்கையிலான பருத்தி நெசவாலைகள் உள்ளன. இதனால் கோயம்புத்தூர் 'தென்னிந்தியாவின் மான்செஸ்டர்' என்று அழைக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் உள்ள 435 நெசவாலைகளில் 200 நெசவாலைகள் கோயம்புத்தூர் பகுதியில் அமைந்துள்ளன. ஈரோடு, திருப்பூர், கரூர், சென்னை, திருநெல்வேலி,

www.tntextbooks.in




மதுரை, தூத்துக்குடி, சேலம் மற்றும் விருதுநகர் ஆகியன மாநிலத்தின் பிற முக்கிய நெசவாலை நகரங்களாகும்.

### ஆ) சணல் ஆலைகள்

சணல் என்பது குறைவான விலையில் கிடைக்கக்கூடிய இழைநார். இது சிப்பங்கள் மற்றும் சாக்கு பைகள் தயாரிக்கப் பயன்படுகிறது. தற்காலத்தில் சணலானது பருத்தி மற்றும் ரோமத்துடன் சேர்த்து நெசவு செய்யப்படுகிறது. பருத்தி நெசவாலைகளுக்கு அடுத்தாற்போல் சணல் ஆலைகள் இந்தியாவின் இரண்டாவது பெரிய நெசவாலைத் துறையாக உள்ளது. இயற்கையான சணல் என்பது புதுப்பிக்கக் கூடிய எளிதில் மட்கக்கூடிய, சுற்றுச்சூழலுக்கும் உகந்ததாகவும் உள்ளதால் இது **தங்க இழைப்பயிர்** என்றும் அழைக்கப்படுகிறது.

தேசிய சணல் வாரியத்தின் தலைமையகம் கொல்கத்தாவில் அமைந்துள்ளது.

NATIONAL JUTE BOARD

இந்தியாவின் முதல் சணல் ஆலை, ஆங்கிலேயேரான ஜார்ஜ் ஆக்லாண்டு என்பவரால் 1854ஆம் ஆண்டு கொல்கத்தாவிற்கு அருகில் உள்ள ரிஷ்ரா என்னுமிடத்தில் தொடங்கப்பட்டது. இந்தியா உற்பத்தியில் முதலிடத்திலும், சணல் பொருள்கள் உற்பத்தியில் வங்காளதேசத்திற்கு அடுத்தாதாக இரண்டாமிடத்திலும் உள்ளது. சணல் பைகள், கூடார துணிகள், சிப்பப்பைகள், தரைவிரிப்பு, திரைச்சீலைகள், கயிறுகள், துணிகள், கால்மிதியடிகள் போன்றவை தயாரிக்க சணல் பயன்படுத்தப்படுகிறது. தற்சமயம் ரோமத்துடன் கலந்து நெகிழிலான அறைக்கலன்கள் காப்பிடப்பட்ட உறைகள் போன்றவை தயாரிக்கப்படுகின்றன.

மேலும் இவை பருத்தியுடன் கலந்து போர்வைகள் மற்றும் கம்பளங்கள் தயாரிக்கப்படுகின்றன. சணல் உற்பத்திபகுதிகள் மேற்கு வங்காளத்தில் உள்ள ஹூக்ளி ஆற்றங்கரை நெடுகிலும் அமைந்துள்ளது. டிட்டகார், ஜகட்டட், பட்ஜ்–பட்ஜ், ஹவுரா மற்றும் பத்ரேஸ்வர் முதன்மை சணல் பொருள்கள் உற்பத்தி மையங்களாகும்.

மத்திய பட்டு ஆராய்ச்சி தொழில் நுட்ப நிறுவனம் (CSTRI )

பட்டு வளர்ப்பு மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த ஆராய்ச்சிக்கென நிறுவப்பட்ட ஒரு நிறுவனமாகும். இந்நிறுவனம் பெங்களூருவைத் தலைமையிடமாகக் கொண்டு இந்திய அரசாங்கத்தின் மத்திய பட்டு வளர்ப்பு வாரியத்தால் 1983ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

ஆந்திரப்பிரதேசம் , பீகார், அசாம், உத்தரப் பிரதேசம், சத்தீஸ்கர் மற்றும் ஒடிசா சணல்கள் உற்பத்தி செய்கின்ற பிற மாநிலங்களாகும்.

### இ) பட்டு நெசவாலைகள்

பழங்காலம் தொட்டே இந்தியா பட்டு உற்பத்திக்குப் பெயர் பெற்றது. கச்சா பட்டு உற்பத்தியில் இந்தியா சீனாவிற்கு அடுத்தபடியாக இரண்டாம் நிலையில் உள்ளது.

கர்நாடக மாநிலம் பட்டு உற்பத்தியில் இந்தியாவில் முதன்மை மாநிலமாக உள்ளது. மேற்கு வங்காளம், ஜம்மு காஷ்மீர், பீஹார், ஜார்க்கண்ட், சத்தீஸ்கர், உத்தரப் பிரதேசம், பஞ்சாப், அசாம் மற்றும் தமிழ்நாடு ஆகியன குறிப்பிடத்தக்க பட்டு உற்பத்தியாளர்கள் ஆகும்.

உங்களுக்குத் தெரியுமா?

இந்திய வர்த்தகத் துறை அமைச்சகத்தின் கீழ் நவம்பர் 20, 1975இல் தொடங்கப்பட்ட கைத்தறி வளர்ச்சி ஆணையர் அலுவலகம் தற்போது இந்திய ஜவுளி துறை அமைச்சகத்தின் கீழ் புதுதில்லியில் உள்ள உத்யோக் பவனை தலைமையிடமாக கொண்டு செயல்பட்டு வருகிறது.

### ஈ) சர்க்கரை தொழிற்சாலை

கரும்பு, சர்க்கரை–கிழங்குகள் அல்லது சர்க்கரைப் பொருள்கள் அடங்கிய பயிர்களிலிருந்து சர்க்கரை தயாரிக்கப்படுகிறது. இந்தியாவில் சர்க்கரை பெரும்பாலும் கரும்பில் இருந்து எடுக்கப்படுகிறது. பருத்தி நெசவுக்கு அடுத்து இரண்டாவது பெரிய வேளாண் சார்ந்த தொழிற்சாலைகள் இதுவாகும். உலக கரும்பு உற்பத்தியில் பிரேசிலுக்கு அடுத்தபடியாக இந்தியா இரண்டாம் இடம் வகிக்கிறது. கரும்பு எளிதில் எடை இழக்கும் தன்மையுடையதாகும். போக்குவரத்திற்கு அதிக எடை கொண்டதாகவும் உள்ளதால் இத்தொழிற் சாலைகள் கரும்பு பயிரிடும் பகுதிகளுக்கு அருகாமையில் அமைந்துள்ளன.

நாட்டின் மொத்த சர்க்கரை உற்பத்தியில் உத்தரப்பிரதேசம் 50 சதவிகிதத்தை கொண்டு முதலிடம் வகிக்கிறது. மகாராஷ்டிரா, கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம், தமிழ்நாடு, பீகார், பஞ்சாப், குஜராத், ஹரியானா மற்றும் மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் 90 சதவிகித சர்க்கரை ஆலைகளையும், உற்பத்தி செய்யும் மாநிலங்களாகவும் உள்ளன.

## வன வளம் சார்ந்த தொழிற்சாலைகள்

காடுகள், காகித தொழிற்சாலைகளுக்குத் தேவையான மூலப்பொருள்கள், அரக்கு, விளையாட்டு பொருள்கள், ஒட்டுப் பலகை (Plywood) போன்ற பொருள்களைத் தருகின்றன.

### அ) காகிதத் தொழிற்சாலைகள்

காகித தாள்கள், காகித அட்டைப் பெட்டிகள், மெல்லிழைதாள்கள், காகிதப் பைகள், எழுது பொருள்கள், உறைகள் மற்றும் அச்சிடப்பட்ட காகித பொருள்களான புத்தகங்கள், பத்திரிகைகள் மற்றும் நாளேடுகள் ஆகிய பொருள்கள் காகிதத் தொழிற்சாலை மூலம் உற்பத்தி செய்யப்படுகின்றன.



**இந்தியா – காகித ஆலை**

உயர்தர அச்சு தாள்கள் மற்றும் செய்தித்தாள் உற்பத்திக்கு மென் மரங்கள் மூலப் பொருள்களாக பயன்படுகின்றன. காகித பயன்கள் கல்வி மற்றும் கல்வி சார்ந்த பயன்பாட்டிற்கும் சமுதாயத்தின் ஒட்டுமொத்த நல வாழ்வினை அளவிடும் கருவியாக உள்ளது.

இந்தியாவில் ராயல் பெங்கால் காகிதத் தொழிற்சாலை கொல்கத்தாவிற்கு அருகில்

உங்களுக்குத் தெரியுமா?

இந்தியாவின் முதல் காகிதத் தொழிற்சாலை 1812ஆம் ஆண்டு மேற்கு வங்கத்தில் உள்ள **செராம்பூர்** என்னுமிடத்தில் தொடங்கப்பட்டது.



10th_Geography_Unit_4_TM.indd 190 11-04-2020 11:55:29

www.tntextbooks.in

உள்ள பாலிகஞ்ச் என்னும் இடத்தில் 1867ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. மரக்கூழ், மூங்கில், சலாய் மற்றும் சவாய் புற்கள், உபயோகப்படுத்தப்பட்ட காகிதங்கள், கரும்பு சக்கை போன்றவை காகிதத் தொழிற்சாலைக்கு தேவையான மூலப்பொருள்களாகும். மேற்கு வங்காளம் இந்தியாவில் காகிதஉற்பத்தி செய்யும் முக்கிய மாநிலமாகும். மத்தியப்பிரதேசம், ஒடிசா, தமிழ்நாடு போன்றவை காகித உற்பத்தியில் குறிப்பிடத்தக்க மாநிலங்களாகும்.

**உங்களுக்குத் தெரியுமா?**

தேசிய செய்திகள் மற்றும் காகித ஆலைகள் (NEPA) மத்தியப்பிரதேச மாநில பர்கான்பூர் மாவட்டத்தில் உள்ள நேபாநகர் என்னும் இடத்தில் அமைந்துள்ளது

## கனிமம் சார் தொழிற்சாலைகள்

இத் தொழிற்சாலைகள் உலோக மற்றும் உலோக மற்ற மூலப்பொருள்களைப் பயன்படுத்துகின்றன. இரும்பு எஃகு தொழிற்சாலை ஒரு முக்கியமான கனிமம் சார் தொழிற்சாலை ஆகும்.

### அ) இரும்பு எஃகு தொழிற்சாலைகள்

இரும்பு எஃகு தொழிற்சாலைகள் இதன் உற்பத்தி பொருள்களை மற்ற தொழிலகங்களுக்கு தேவையான மூலப்பொருளை அளிப்பதனால் அடிப்படையான உலோக தொழிற்சாலை என அழைக்கப்படுகிறது. பொறியியல், கனரக இயந்திரங்கள், இயந்திரக் கருவிகள், வாகனங்கள், இரயில் இன்ஜின்கள் மற்றும் இரயில்வே உபகரணங்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் இரும்பை முதன்மை மூலப்பொருள்களாகப் பயன்படுத்துகின்றன. ஒரு நாட்டின் தொழில் வளர்ச்சி இரும்பு எஃகு உற்பத்தியின் அளவைக் கொண்டு தீர்மானிக்கப்படுகிறது.

டாட்டா இரும்பு எஃகு தொழிற்சாலை, 1907ஆம் ஆண்டு "சாக்சி" என்றழைக்கப்பட்ட ஜாம்ஷெட்பூரில் தொடங்கப்பட்ட முதல் நவீன தொழிற்சாலையாகும். ஜார்க்கண்ட், மேற்கு வங்காளம், ஒடிசா, ஆகிய மாநிலங்களில் செறிந்து காணப்படுகின்றன. ஜாரியா ராணிகஞ்ச், பொகாரோ, கரன்புரா ஆகிய நிலக்கரி வயல்களும் மற்றும் மயூர்பஞ்ச், இயோன்ஜர் மற்றும் புரேனா ஆகிய இரும்பு தாது சுரங்கங்களும் ஒன்றுக்கொன்று அருகாமையில் அமைந்திருப்பது இதன் காரணமாகும். இத்தொழிற்சாலைக்குத் தேவையான டோலமைட், மாங்கனீஷ் மற்றும் சிலிகான் போன்ற தாது படிவுகள் போதுமான அளவில் கிடைக்கின்றன.

**உங்களுக்குத் தெரியுமா?**

இரும்பு மற்றும் எஃகு உற்பத்தி தொழிற்சாலை முதன் முதலில் 1830இல் தமிழ்நாட்டில் போர்டோ நாவோவில் அமைக்கப்பட்டது.

## வாகனத் தானியங்கி தொழிலகங்கள்

இந்தியா, உள்நாட்டு வாகன சந்தையின் தேவையை பூர்த்தி செய்வதோடு மட்டுமல்லாமல் உலகளாவிய வாகனச் சந்தையிலும் ஒரு முக்கிய பங்காற்றும் வகையில் வாகன உற்பத்தியில் முன்னேறி வருகிறது. இந்தியாவில் மிக வேகமாக வளர்ந்து வரும் தொழிலகங்களில் இதுவும் ஒன்றாகும்.


| வ. எண் | தொழிலகங்களின் பெயர்கள் | இடம் மற்றும் மாநிலம் | நிறுவப்பட்ட ஆண்டு | உற்பத்தி பொருள்கள் |
|---|---|---|---|---|
| 1 | டாட்டா இரும்பு எஃகு நிறுவனம் (TISCO) | ஜாம்ஷெட்பூர் –ஜார்க்கண்ட் | 1911 | தேனிரும்பு |
| 2 | இந்தியா இரும்பு எஃகு நிறுவனம் (IISCO) | பர்ன்பூர்,ஹிராப்பூர், குல்டி–மேற்கு வங்காளம் | 1972 | தேனிரும்பு, கட்சா எஃகு |
| 3 | விஸ்வேஸ்வரய்யா இரும்பு எஃகு நிறுவனம்(VISL) | பத்ராவதி, கர்நாடகா | 1923 | கலப்பு தேனிரும்பு மற்றும் கடல் பாசி எஃகு |
| 4 | இந்துஸ்தான் எஃகு நிறுவனம் ரஷ்யா தொழில்நுட்ப உதவியுடன். (HSL) | பிலாய்–சத்தீஸ்கர் | 1957 | ரயில்வே மற்றும் கப்பல் கட்டும் உபகரணங்கள் |
| 5 | இந்துஸ்தான் எஃகு நிறுவனம் ஜெர்மனியின் தொழில்நுட்ப உதவியுடன் (HSL) | ரூர்கேலா– ஒடிசா | 1965 | வெப்ப மற்றும் குளிர்ந்த உருளை தகடுகள் மின்முலாம் பூசப்பட்ட தகடுகள் மற்றும் மின்சாதன தகடுகள் |



10th_Geography_Unit_4_TM.indd 191 11-04-2020 11:55:29

| | | | | |
|---|---|---|---|---|
| 6 | இந்துஸ்தான் எஃகு நிறுவனம் இங்கிலாந்தின் தொழில்நுட்ப உதவியுடன் (HSL) | துர்காபூர்–மேற்கு வங்காளம் | 1959 | உலோக கலவை, கட்டுமானபொருள்கள், இரயில்வே உபகரணங்கள் |
| 7 | இந்துஸ்தான் எஃகு நிறுவனம் ரஷ்யாவின் தொழில்நுட்ப உதவியுடன் (HSL) | பொகாரோ–ஜார்க்கண்ட் | 1972 | இரும்பு கழிவு மற்றும் இரும்பு உலோகம். |
| 8 | சேலம் எஃகு ஆலை | சேலம்–தமிழ்நாடு | 1982 | துருப்பிடிக்காத இரும்பு |
| 9 | விஜய நகர் எஃகு ஆலை | டோர்நகல்–கர்நாடகா | 1994 | நீண்ட மற்றும் பட்டை எஃகுகள் |
| 10 | விசாகப்பட்டினம் எஃகு ஆலை(VSP) | விசாகப்பட்டினம்–ஆந்திரப்பிரதேசம். | 1981 | வெப்ப உலோகம் |

**இந்தியாவில் மின்சாரம் மற்றும் மின்னணு, மென்பொருள், மோட்டார் வாகனத் தொழிலகங்கள்**



இந்தியாவின் முதல் வாகனத் தொழிலகம் மும்பைக்கு அருகில் உள்ள குர்லா என்னும் இடத்தில் 1947இல் பிரீமியர் வாகன நிறுவனம் என்ற பெயரில் தொடங்கப்பட்டது. இதை தொடர்ந்து 1948இல் கொல்கத்தாவிற்கு அருகில் உள்ள உத்தர்பாரா என்னும் இடத்தில் இந்துஸ்தான் மோட்டார் நிறுவனம் தொடங்கப்பட்டது. தற்போது இந்தியா வாகன உற்பத்தியில் ஏழாவது பெரிய நாடாக விளங்குகிறது. இந்நிறுவனமானது இரு சக்கர வாகனங்கள், மகிழுந்துகள், ஜீப், மூன்று சக்கர வாகனங்கள் வர்த்தக ரீதியிலான வாகனங்கள் போன்றவற்றை உற்பத்தி செய்கிறது. மும்பை, சென்னை, ஜாம்ஷெட்பூர், ஜபல்பூர், கொல்கத்தா, பூனா, புது தில்லி, கான்பூர், பெங்களூரு, சதாரா, லக்னோ மற்றும் மைசூர் நகரங்கள் முக்கிய உற்பத்தி மையங்களாக உள்ளன.

பிரதான வாகனத் தொழிற்சாலைகளும் அதனை சார்ந்த தொழிற்சாலைகளும் சென்னையை சுற்றியுள்ள பகுதிகளில் இருப்பதால் சென்னை ஆசியாவின் டெட்ராய்ட் என்று அழைக்கப்படுகிறது.

டாடா மோட்டார்ஸ், மாருதி சுசுகி, மஹிந்திரா & மஹிந்திரா, இந்துஸ்தான் மோட்டார்ஸ் போன்ற நிறுவனங்கள் மக்கள் பயணிக்கும் பெரிய கார்களை தயாரிக்கும் இந்திய நிறுவனங்களாகும். இந்தியாவில் நிறுவப்பட்டுள்ள பன்னாட்டு நிறுவனங்களான மெர்சிடிஸ், பென்ஸ், ஃபியட் ஜெனரல் மோட்டார்ஸ், டொயோட்டா மற்றும் சமீபத்தில் இந்தியாவில் நுழைந்துள்ள பிஎம்டபிள்யூ, ஆடி, வோக்ஸ்வேகன்,வால்வோ ஆகியன இந்திய வாகன தயாரிப்பை மேலும் சிறப்புற செய்துள்ளது.

டாடா மோட்டார்ஸ், அசோக் லைலேண்ட், இஷர் மோட்டார்ஸ், மஹிந்திரா & மஹிந்திரா மற்றும் ஃபோர்டு மோட்டார்ஸ் ஆகிய இந்திய நிறுவனங்கள் வர்த்தக ரீதியிலான வாகனங்களை உற்பத்தி செய்கின்றன. MAN, ITEC, மெஸ்சிடர்ஸ்–பென்ஸ், ஸ்கேனியா மற்றும் ஹூண்டாய் போன்ற பன்னாட்டு நிறுவனங்களும் வர்த்தக ரீதியிலான வாகனங்களை உற்பத்தி செய்கின்றன. இரு சக்கர வாகனங்கள் உற்பத்தியில் இந்திய நிறுவனங்களான ஹீரோ, பஜாஜ் ஆட்டோ மற்றும் டிவிஎஸ் நிறுவனங்கள் முன்னணியில் உள்ளன.

உங்களுக்குத் தெரியுமா?

**இந்தியாவில் உற்பத்தி செய்யும் திட்டம்** (Make in india programme) இதன் முக்கிய நோக்கம் உலக வரைப்படத்தில் இந்தியாவை ஒரு சிறந்த தொழிலக உற்பத்தி மையமாக காண்பிப்பதாகும்.

## மின்னியல் மற்றும் மின்னணுவியல் தொழிலகங்கள்:

கனரக மின்னியல் தொழிலகங்களானது, மின்சார உற்பத்திக்கு தேவையான உபகரணங்கள், மின்மாற்றிகள், நீராவி கொதிகலன்கள், நீர்மின் சக்தி தொழிலகங்களுக்கு தேவைப்படும் விசைகடத்திகள், அனல் மின் உற்பத்தி தொழிலகங்களுக்கு தேவையான கொதிகலன்கள், ஜெனரேட்டர்கள், மின்மாற்றிகள் ஸ்விட்ச் கியர்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்கின்றன. இந்தியாவில் கனரக மின்சாதன தொழிலகங்களில் மிக முக்கியமானது பாரத மிகு மின் (BHEL) நிறுவனமாகும். இந்நிறுவனம் ஹரிதுவார், போபால், ஹைதராபாத், ஜம்மு, பெங்களூரு, ஜான்சி மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் கிளைகளைக் கொண்டுள்ளது.

இந்நிறுவனமானது தொலைக்காட்சிப் பெட்டிகள், வானொலிப் பெட்டிகள், மற்றும் தொலைபேசி இணைப்பகங்கள், செல்லுலார் தந்தி, கணினிகள் மற்றும் அஞ்சல், இரயில்வே பாதுகாப்பு, வானிலையியல் போன்ற துறைகளுக்கும் தேவையான பல்வேறு சாதனங்களை உற்பத்திச் செய்கிறது.

இந்தியாவில் அதிக மின்னணு சாதனங்களை உற்பத்தி செய்யும் நகரம் பெங்களூருவாகும். எனவே **பெங்களூரு "இந்தியாவின் மின்னியல் தலைநகரம்"** என்று அழைக்கப்படுகிறது. ஹைதராபாத், புதுதில்லி, மும்பை, சென்னை, கொல்கத்தா, கான்பூர், பூனா, லக்னோ, ஜெய்ப்பூர் மற்றும் கோயம்புத்தூர் இதர முக்கிய மின்னியல் உற்பத்தி மையங்களாகும்.

## மென்பொருள் தொழிலகம்

இந்தியா உலகில் உள்ள மிகச்சிறந்த சில மென்பொருள் நிறுவனங்களின் தாயகமாக உள்ளது. இந்திய மென்பொருள் தொழிலகங்களானது தகவல் தொழில்நுட்பம் மற்றும் வணிகம் சார்ந்த தீர்வுகள் அளிப்பதில் உலக பிரசித்தி பெற்றவைகளாக உள்ளன. இந்திய பொருளாதார வளர்ச்சியில் ஒரு மிகப்பெரிய வெற்றியை இந்திய மென்பொருள் தொழிலகங்கள் அடைந்துள்ளன.

டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் இந்தியாவின் முதல் மென்பொருள் தொழிலகம் ஆகும். இது 1970ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இத்துடன் எல் & டி, இன்போடெக், ஜ–பிளக்ஸ், அசெஞர், காக்னிசன்ட், கேலக்ஸி–இ–சொல்யுசன்ஸ், இந்தியா பிரைவேட் லிமிடெட், ஜ.டி.சி, இன்போடெக் போன்றவைகளும் இந்தியாவின் முக்கியமான மென்பொருள் தொழிலகங்களாகும். தற்சமயம், இந்தியா முழுவதும் 500 க்கும் மேற்பட்ட மென்பொருள் தொழிலகங்கள் உள்ளன.

இந்நிறுவனங்கள் உலகின் சுமார் 95 நாடுகளுக்கு மென்பொருள் ஏற்றுமதி சேவையை செய்கிறது.

சென்னை, கோயம்புத்தூர், திருவனந்தபுரம், பெங்களூரு, மைசூரு, ஹைதராபாத், விசாகப்பட்டினம், மும்பை, பூனா, இந்தூர், காந்திநகர், ஜெய்ப்பூர், நொய்டா, மொகாலி மற்றும் ஸ்ரீநகர் இந்தியாவின் முக்கிய மென்பொருள் மையங்களாகும்.

### இந்தியத் தொழிலகங்கள் எதிர்கொள்ளும் முக்கிய சவால்கள்

இந்தியத் தொழிலகங்கள் பல சவால்களை எதிர்கொண்டுள்ளன. அவற்றில் சில முக்கிய பிரச்சினைகள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

- மின் பற்றாக்குறை மற்றும் சீரற்ற மின் வினியோகம்
- தொழிலகங்கள் நிறுவுவதற்கு ஏற்ற பரந்த நிலப்பரப்பு இல்லாமை
- கடன் பெருவதில் உள்ள நடைமுறை சிக்கல்கள்.
- கடனுக்கான அதிக வட்டி விகிதம்.
- மலிவான ஊதியத்திற்கு வேலையாட்கள் கிடைக்காமை.
- ஊழியர்களுக்கான தொழில்நுட்ப மற்றும் தொழில் முறை பயிற்சிகள் இல்லாமை.
- தொழிற்பேட்டைகளுக்கருகில் வசிப்பதற்கு ஏற்ற சூழல் இல்லாமை.

**இந்தியத் தொழிற்சாலைகளின் சவால்கள்**




## பாடச்சுருக்கம்

- இயற்கை வளம்: பூமியிலிருந்து இயற்கையாக பெறக்கூடிய மூலப்பொருள்கள்
- புதுப்பிக்கக்கூடிய வளம்: மீண்டும் மீண்டும் பயன்படுத்தக்கூடிய வளங்கள்
- புதுப்பிக்க இயலாத வளம்: ஒரு முறை பயன்படுத்தினால் மீண்டும் புதுப்பிக்க இயலாது.
- வேளாண் தொழிலகங்கள்: வேளாண் பொருள்களை மூலப்பொருள்களாகக்கொண்டு செயல்படும் தொழிலகங்கள்
- கனிம வளத்தொழிலகங்கள்: கனிமங்களை அடிப்படையாகக்கொண்டு செயல்படும் தொழிலகங்கள்
- வனத்தொழிற்சாலைகள்: வனத்தில் உள்ள பொருள்களைக்கொண்டு செயல்படும் தொழிலகங்கள்

## பயிற்சி

WW2BNQ

### I சரியான விடையைத் தேர்வு செய்க

1. மாங்கனீசு இவற்றில் பயன்படுத்தப்படுகிறது.
   அ) சேமிப்பு மின்கலன்கள்
   ஆ) எஃகு தயாரிப்பு
   இ) செம்பு உருக்குதல்
   ஈ) பெட்ரோலிய சுத்திகரிப்பு

2. ஆந்த்ரசைட் நிலக்கரி ____________ கார்பன் அளவை கொண்டுள்ளது.
   அ) 80% – 95% ஆ) 70% க்கு மேல்
   இ) 60% – 70% ஈ) 50% க்கும் குறைவு

3. பெட்ரோலியத்தில் உள்ள முக்கிய கனிமங்கள் ஹைட்ரஜன் மற்றும் ____________
   அ) ஆக்ஸிஜன் ஆ) நீர்
   இ) கார்பன் ஈ) நைட்ரஜன்

4. தென்னிந்தியாவின் மான்செஸ்டர் என்று அழைக்கப்படும் நகரம்.
   அ) சேலம் ஆ) சென்னை
   இ) மதுரை ஈ) கோயம்புத்தூர்

www.tntextbooks.in

5. இந்தியாவில் முதல் அணுமின் நிலையம் நிறுவப்பட்ட மாநிலம்

அ) குஜராத் ஆ) இராஜஸ்தான்

இ) மகாராஷ்டிரம் ஈ) தமிழ்நாடு

6. மிக அதிகமாக கிடைக்ககூடிய ஆற்றல் வளம்.

அ) உயிரி சக்தி ஆ) சூரியன்

இ) நிலக்கரி ஈ) எண்ணெய்

7. புகழ் பெற்ற சிந்திரி உரத் தொழிலகம் அமைந்துள்ள மாநிலம்

அ) ஜார்க்கண்ட் ஆ) பீகார்

இ) இராஜஸ்தான் ஈ) அசாம்

8. சோட்டா நாகபுரி பீடபூமி பகுதியின் பொருளாதார வளர்ச்சிக்கு கருவாக இருப்பது

அ) போக்குவரத்து ஆ) கனிமப்படிவுகள்

இ) பெரும் தேவை ஈ) மின்சக்தி சக்தி கிடைப்பது

## II பொருத்துக

| | | |
|---|---|---|
| அ) பாக்சைட் | – | சிமெண்ட் |
| ஆ) ஜிப்சம் | – | வானூர்தி |
| இ) கருப்பு தங்கம் | – | மின்சாதனப் பொருள்கள் |
| ஈ) இரும்பு தாது | – | நிலக்கரி |
| உ) மைக்கா | – | மேக்னடைட் |

## III சுருக்கமாக விடையளி

1. வளத்தை வரையறுத்து அதன் வகைகளை குறிப்பிடுக.
2. கனிமங்கள் மற்றும் அதன் வகைகள் யாவை?
3. மெக்னீசியத்தின் பயன்களை குறிப்பிடுக.
4. இயற்கை எரிவாயு என்றால் என்ன?
5. நிலக்கரியின் வகைகளை அதன் கரிம அளவுகளுடன் குறிப்பிடுக.
6. இந்தியாவில் சணல் உற்பத்தி செய்யும் முக்கிய பகுதிகளைக் குறிப்பிடுக.
7. இந்தியாவின் முக்கிய எண்ணெய் உற்பத்தி பகுதிகளைக் குறிப்பிடுக.

## IV வேறுபடுத்துக

1. புதுப்பிக்க இயலும் மற்றும் புதுப்பிக்க இயலா வளங்கள்.
2. உலோகம் மற்றும் அலோக கனிமங்கள்
3. வேளாண் சார்ந்த மற்றும் கனிமம் சார்ந்த தொழிலகங்கள்
4. சணல் ஆலைகள் மற்றும் சர்க்கரை ஆலைகள்
5. மரபு சார் மற்றும் மரபு சாரா எரிசக்தி

## V ஒரு பத்தியில் விடையளி

1. இந்தியாவில் உள்ள பருத்தி நெசவாலைகளின் பரவல் பற்றி எழுதுக.
2. இந்தியத் தொழிலகங்கள் எதிர்கொள்ளும் முக்கிய சவால்கள் பற்றி எழுதுக.

## VI இந்திய வரைப்படத்தில் கீழ்க்காண்பவற்றை குறிக்கவும்

1. இரும்பு தாது உற்பத்தி மையங்கள்
2. பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு மையங்கள்
3. நிலக்கரி சுரங்கங்கள்
4. பருத்தி விளையும் பகுதிகள்
5. இரும்பு எஃகு தொழிலகங்கள்

## மேற்கோள் நூல்கள்


1. Singh,S. and J.Saroha – Geography of India, New Delhi, Access Publishing Inida Pvt Ltd.
2. Tiwar R.C. – Geography of India, Allahabad, Prayag Pustak Bhawan.
3. Government of India, Ministry of mines, Coal, Textiles, Steel, Petroleum and Natural gas – Annual report 2017 -18
4. Economic and Commercial Geography, Professor S.A.Ghazi
5. Development of industries in India, from Independence till today


### இணையச் செயல்பாடு

## இந்தியா வளங்கள் மற்றும் தொழிலகங்கள்

**செயல்முறை**

- கீழ்காணும் உரலி / விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தி இச்செயல்பாட்டிற்கான இணையப் பக்கத்திற்க்குச் செல்லவும்.
- சுட்டியை பயன்படுத்தி இணைய பக்கத்தின் கீழே செல்லவும். பின்பு 'Explore' யை சொடுக்கவும்.
- பின்பு மேலே கொடுக்கப்பட்டுள்ள 'Thematic Serious 2' சென்று 'Mineral' யை தேர்ந்தெடுக்கவும்.

**உரலி:** https://bhuvan-app1.nrsc.gov.in/mhrd_ncert/

B373_10_SOCIAL_TM

www.tntextbooks.in

# அலகு – 5

# இந்தியா – மக்கள் தொகை, போக்குவரத்து, தகவல் தொடர்பு மற்றும் வணிகம்



## கற்றலின் நோக்கங்கள்

- இந்தியாவின் மக்கள்தொகை வளர்ச்சி மற்றும் பரவலை புரிந்துகொள்ளல்
- இந்தியாவின் மனிதவள மேம்பாடு பற்றி தெரிந்துகொள்ளல்
- இந்தியாவின் போக்குவரத்து அமைப்புகள் பற்றி கற்றறிதல்
- இந்தியாவின் தகவல்தொடர்பு அமைப்புகள் பற்றி புரிந்துகொள்ளல்
- இந்தியாவின் வணிகத்தின் தன்மையை மதிப்பீடு செய்தல்

IAKXV7

## அறிமுகம்

மக்கள் தொகையைப் பற்றி கற்றல் என்பது ஒரு பிரதேச புவியியலைப் படிப்பதில் உள்ள முக்கிய அம்சங்களில் ஒன்றாகும். மக்கள் தொகை பல கூறுகளை உள்ளடக்கியது. இதில் மிக அடிப்படையானது, அதன் எண்ணிக்கை, கலவை, பரவல் மற்றும் அடர்த்தி ஆகும். எனவே மக்கள் தொகைக்கூறுகள் பற்றி படித்தல் அவசியமான ஒன்று. இந்த அம்சங்களைப் பற்றிய ஆய்வு நாட்டின் மனித சக்தியைப் பற்றி வெளிப்படுத்துவதாக அமைகிறது.

## 5.1 மக்கள் தொகை

ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் ஒரு நாட்டில் வசிக்கின்ற மொத்த மக்களின் எண்ணிக்கையே ஒரு நாட்டின் மக்கள் தொகை என்று அழைக்கப்படுகிறது. சீனாவிற்கு அடுத்தப்படியாக உலகின் இரண்டாவது அதிக மக்கள்தொகை கொண்ட நாடாக இந்தியா உள்ளது. உலகின் மொத்த நிலப்பரப்பில் இந்தியா 2.4 சதவிகிதத்தை மட்டுமே கொண்டுள்ளது. ஆனால் உலக மக்கள் தொகையில் சுமார் 17.5 சதவிகிதத்தை கொண்டுள்ளது. இந்திய மக்கள் தொகை விகிதம் அதன் பரப்பு விகிதத்தை விட மிக அதிகமாக உள்ளதை இது காட்டுகிறது. உலகில் உள்ள ஆறு நபர்களில் ஒருவர் இந்தியராக உள்ளார்.

### மக்கள் தொகை கணக்கெடுப்பு

மக்கள் தொகை கணக்கெடுப்பு என்பது ஒரு நாட்டின் வரையறுக்கப்பட்ட பகுதி அல்லது முழுபகுதியில் ஒரு குறிப்பிட்ட காலத்தில் உள்ள மக்களின் பொருளாதார மற்றும் சமூக புள்ளி விவரங்களை சேகரித்து, தொகுத்து மற்றும் பகுப்பாய்வு செய்து மக்களியல் பற்றிய விவரங்களை அளித்தல் ஆகும். இந்த கணக்கெடுப்பு பத்து வருடங்களுக்கு ஒருமுறை நடத்தப்படுகிறது. மக்கள் தொகை கணக்கெடுப்பின் மூலம் சேகரிக்கப்பட்ட தரவுகள், நிர்வாகம், திட்டமிடல், கொள்கைகள் உருவாக்குதல், அரசாங்கத்தின் பல்வேறு திட்ட மேலாண்மை மற்றும் மதிப்பீடு செய்தலுக்கு பயன்படுத்தப்படுகிறது.

**உங்களுக்குத் தெரியுமா?**

இந்தியாவின் முதல் மக்கள் தொகை கணக்கெடுப்பு 1872ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது. முழுமையான முதல் மக்கள் தொகை கணக்கெடுப்பு 1881ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது. நாட்டின் 15 வது மக்கள் தொகை கணக்கெடுப்பு 2011ஆம்ஆண்டு நடைபெற்றது.

### மக்கள் தொகை அடர்த்தி மற்றும் பரவல்

'மக்கள் தொகை பரவல்' என்பது புவியின் மேற்பரப்பில் மக்கள் எவ்விடைவெளியில் உள்ளார்கள் என்பதைக் குறிக்கிறது. இந்திய மக்கள்



10th_Geography_Unit_5_TM.indd 196 11-04-2020 11:56:22

www.tntextbooks.in

தொகை பரவல் ஆனது வளங்களின் பரவலுக்கேற்ப சீரற்று காணப்படுகிறது. தொழில் மையங்கள் மற்றும் செழிப்பான வேளாண் பிரதேசங்கள் மக்கள் தொகை செறிவுமிக்கதாக காணப்படுகிறது. அதே சமயம் மலைப்பிரதேசங்கள் வறண்ட நிலப்பகுதிகள், வனப்பகுதிகள், தொலைதூரப் பகுதிகள் போன்ற பகுதிகளில் மக்கள் தொகைக் குறைவாகவும், மக்களற்றும் காணப்படுகிறது. நிலப்பரப்பு, காலநிலை, மண், நீர் பரப்புகள், கனிம வளங்கள், தொழிலகங்கள், போக்குவரத்து மற்றும் நகரமயமாக்கல் ஆகியவை நாட்டின் மக்கள் தொகை பரவலைப் பாதிக்கும் முக்கிய காரணிகளாகும்.

199.5 மில்லியன் மக்கள்தொகையைக் கொண்ட உத்தரப்பிரதேச மாநிலம் இந்தியாவில் அதிக மக்கள்தொகை மாநிலமாகும். இதனைத் தொடர்ந்து மகாராஷ்டிரா, பீகார், மேற்கு வங்காளம் மற்றும் ஒருங்கிணைந்த ஆந்திரப்பிரதேசம் மற்றும் தெலங்கானா ஆகிய ஐந்து மாநிலங்கள் நாட்டின் மக்கள் தொகையில் பாதியைக் கொண்டுள்ளன. இந்தியாவில் மிகக்குறைந்த மக்கள் தொகை கொண்ட மாநிலம் சிக்கிம் ஆகும். புதுடெல்லி 16.75 மில்லியன் மக்கள்தொகையுடன் யூனியன் பிரதேசங்களிடையே முதலிடம் வகிக்கிறது.

நாட்டின் மக்கள்தொகை பரவல் சீரற்று காணப்படுவதற்கு பௌதீக, சமூக–பொருளாதார மற்றும் வரலாற்று காரணிகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. பௌதீக காரணிகள் என்பது நிலத்தோற்றம், காலநிலை, நீர், இயற்கைத் தாவரங்கள், கனிமங்கள் மற்றும் ஆற்றல் வளங்களை உள்ளடக்கியது. மதம், கலாச்சாரம், அரசியல் பிரச்சினைகள், பொருளாதாரம், மனித குடியிருப்புகள், போக்குவரத்து வலைப்பின்னல், தொழில்மயமாக்கல், நகரமயமாதல், வேலை வாய்ப்புகள் போன்றவை முக்கிய சமூக பொருளாதாரக் காரணிகளாகும்.

### மக்கள் தொகை அடர்த்தி

இது சராசரியாக ஒரு சதுர கிலோ மீட்டர் பரப்பளவில்வசிக்கும்மக்களின்எண்ணிக்கையைக் குறிப்பிடுகிறது. 2011ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்தியாவின் சராசரி மக்கள் அடர்த்தி ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 382 ஆகும். உலகின் மக்களடர்த்தி மிகுந்த பத்து நாடுகளில் இந்தியாவும் ஒன்று. இந்தியாவில் மிக அதிக மக்களடர்த்தியைக் கொண்ட மாநிலமாக பீகாரும் மிக குறைந்த மக்கள் அடர்த்தியைக் கொண்ட மாநிலமாக அருணாச்சலப் பிரதேசமும் உள்ளது.


யூனியன் பிரதேசங்களில் புதுடெல்லி அதிக மக்களடர்த்தியைக் கொண்டதாகவும், அந்தமான் நிக்கோபார் தீவுகள் குறைந்த மக்களடர்த்தியைக் கொண்டதாகவும் உள்ளன.

### மக்கள் தொகை வளர்ச்சி மற்றும் மாற்றம்

#### மக்கள் தொகை மாற்றம்

மக்கள் தொகை மாற்றம் என்பது ஒரு குறிப்பிட்ட காலப் பகுதியிலிருந்து மற்றொரு காலப்பகுதிக்கு இடைப்பட்ட காலத்தில் மக்கள் தொகை அதிகரிப்பதையோ அல்லது குறைவதையோ குறிப்பிடுவதாகும். பிறப்பு விகிதம், இறப்பு விகிதம் மற்றும் இடப்பெயர்வு ஆகியவை மக்கள் தொகை வளர்ச்சியைத் தீர்மானிக்கிறது. மேலும் இவை மூன்றும் மக்கள் தொகையில் மாற்றத்தை ஏற்படுத்துகின்றன. பிறப்பு விகிதம் என்பது ஒரு வருடத்தில் 1000 மக்கள் எண்ணிக்கையில் உயிருடன் பிறந்த குழந்தைகளின் எண்ணிக்கையாகும். இறப்பு விகிதம் எனப்படுவது ஓர் ஆண்டில் 1000 மக்கள் தொகையில் இறந்தவர்களின் எண்ணிக்கையைக் குறிப்பதாகும்.

கீழ்க்கண்ட கோட்டுப்படம் 1901ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரையான பத்தாண்டுகள் மக்கள் தொகை வளர்ச்சி விகிதத்தைக் காண்பிக்கிறது.






10th_Geography_Unit_5_TM.indd 197 11-04-2020 11:56:22

இந்தியாவில் இறப்பு விகிதத்தின் விரைவான சரிவு மக்கள் தொகையின் துரித வளர்ச்சிக்கு முக்கிய காரணமாகும்.

## 5.2 இடப் பெயர்வு

இடப்பெயர்வு என்பது ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு மக்கள் இடம் பெயர்ந்து செல்வதாகும். இது உள்நாட்டு இடப்பெயர்வு (ஒரு நாட்டின் எல்லைக்குள்) மற்றும் சர்வதேச இடப்பெயர்வு (நாடுகளுக்கு இடையே) என இருவகைப்படும். உள்நாட்டு இடப்பெயர்வு நாட்டின் மக்கள் தொகையில் மாற்றத்தை ஏற்படுத்தாது. ஆனால் ஒரு நாட்டின் மக்கள் தொகை பரவல் மாற்றத்திற்குக் காரணமாக அமைகிறது. இடப்பெயர்வானது மக்கள் தொகை பரவல் மற்றும் கலவையின் மாற்றத்தை ஏற்படுத்தும் காரணியாக அமைகிறது. இந்தியாவில் இடப்பெயர்வு கிராமப்புறத்திலிருந்து நகர்புறத்தை நோக்கி பெருந்திரளாக காணப்படுகிறது. கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பின்மை மற்றும் தகுதிக்கேற்ப வேலையின்மை ஆகியவை இடப்பெயர்வுக்கு உந்து காரணிகளாக உள்ளன. நகர்புற பகுதிகளில் தொழில்துறை வளர்ச்சியின் காரணமாக அதிக வேலைவாய்ப்பு மற்றும் அதிக ஊதியம் புலம்பெயர்தலுக்கு இழுகாரணிகளாக உள்ளன.

### மக்கள் தொகைக் கலவை

மக்கள் தொகைக் கலவை என்பது பல்வேறு பண்புகளான வயது, பாலினம், திருமணநிலை, சாதி, மதம், மொழி, கல்வி, தொழில் போன்றவற்றை உள்ளடக்கியது. மக்கள் தொகை கலவை பற்றி கற்பது சமூக–பொருளாதார மற்றும் மக்கள் தொகையின் அமைப்பை அறிய உதவுகிறது.

### வயதுக் கலவை

வயதுக் கலவை என்பது ஒரு நாட்டின் மக்கள் தொகையில் உள்ள பல்வேறு வயது பிரிவினர் எண்ணிக்கையை குறிக்கிறது. நாட்டின் மக்கள் தொகை வயதின் அடிப்படையில் மூன்று பிரிவுகளாக பிரிக்கப்படுகிறது. இந்தியாவில் 15 வயதிற்கும் குறைவானவர்கள் 29.5 சதவிகிதமும், 60 வயதிற்கு மேற்பட்டவர்கள் 8 சதவிகிதமும் உள்ளனர். ஆதலால் சார்ந்துள்ள மக்கள் தொகை மொத்த மக்கள் தொகையில் 37.5 சதவிகிதமாக உள்ளது. மீதமுள்ள 62.5 சதவிகிதம் உழைக்கும் மக்கள் தொகையாக உள்ளது.

### பாலின விகிதம்

பாலின விகிதம் என்பது மக்கள் தொகையில் ஆயிரம் ஆண்களுக்கு உள்ள பெண்களின் எண்ணிக்கையை குறிப்பதாகும்.

**உயர்சிந்தனை வினா**

நம் நாட்டில் பாலின விகிதம் எப்பொழுதும் பெண்களுக்கு சாதகமாக இருப்பதில்லை ஏன்?

2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்தியாவின் பாலின விகிதம் 1000 ஆண்களுக்கு 940 பெண்களாக உள்ளது. இது மக்கள் தொகையில் பெண்களின் எண்ணிக்கை ஆண்களை விட குறைவாக இருப்பதைக் காட்டுகிறது. கேரள. கேரளாவில் 1084 பெண்களும், புதுச்சேரியில் 1038 பெண்களும் உள்ளனர். ஆனால் யூனியன் பிரதேசமான டையூ டாமனில் குறைந்த பாலின விகிதம் (618) பதிவாகியுள்ளது.

### எழுத்தறிவு விகிதம்

மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 7 வயதிற்கு அதிகமான ஒருவர் ஏதாவதொரு மொழியைப் புரிந்துகொண்டு எழுதப் படிக்க தெரிந்தால் அவர் எழுத்தாறிவு பெற்றவர் ஆவார். இது மக்களின் தரத்தை அறியும் முக்கிய அளவு கோலாகும். மொத்த மக்கள் தொகையில் எழுத்தறிவு பெற்ற மக்களின் எண்ணிக்கையே எழுத்தறிவு விகிதம் எனப்படும். இந்தியாவில் கல்வியறிவு வளர்ச்சியில் தொடர்ச்சியான முன்னேற்றம் காணப்படுகின்றது. 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி இந்திய மக்கள் தொகையின் எழுத்தறிவு விகிதம் 74.04% ஆகும். இவற்றில் ஆண்களின் எழுத்தறிவு விகிதம் 82.14% ஆகவும் மற்றும் பெண்களின் எழுத்தறிவு விகிதம் 65.46% ஆகவும் உள்ளது. இது ஆண் மற்றும் பெண் எழுத்தறிவு விகிதத்தில் பெரும் வித்தியாசம் இருப்பதைக் காட்டுகிறது (16.68%). கேரள மாநிலம் எழுத்தறிவில் 93.9% பெற்று இந்தியாவின் முதல் மாநிலமாகவும், இலட்சத்தீவுகள் 92.28% இரண்டாவதாகவும் உள்ளது. குறைந்த எழுத்தறிவு பெற்ற மாநிலமாக பீகார் (63.82%) உள்ளது.

### தொழில்சார் கட்டமைப்பு

மக்கள் தொகை கணக்கெடுப்பின் மூலம் பெறப்படும் தகவலின் அடிப்படையில் பொருளாதார நடவடிக்கையில் பங்கு பெறுபவர்களை தொழிலாளர்கள் என்கிறோம். தொழிலாளர்கள் மூன்று பிரிவுகளாக பிரிக்கப்படுகின்றனர். அவை முதன்மை தொழிலாளர்கள், பகுதி நேர தொழிலாளர்கள் மற்றும் தொழிலாளர் அல்லாதோர். மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி ஒரு ஆண்டின் பெரும் பகுதி நாட்களில் பணியாற்றுபவர்கள் முதன்மைத் தொழிலாளர்கள் எனப்படுவர் (குறைந்த பட்சம் வருடத்தில் 6 மாதம் அல்லது 183 நாட்கள்). ஒரு ஆண்டில் 6 மாதங்களுக்குக் குறைவாக



10th_Geography_Unit_5_TM.indd 198 11-04-2020 11:56:22

வேலை செய்பவர்கள் பகுதி நேரத் தொழிலாளர்கள் எனப்படுவர். வேலை செய்யாத மக்கள் தொழிலாளர் அல்லாதோர் எனப்படுவர்.

### மக்கள் தொகை இயக்கவியல்

மக்கள் தொகை இயக்கவியல் என்பது மக்கள் தொகை அளவு மற்றும் அதன் பண்பு மாற்றங்கள் தொடர்பான காரணிகள் குறித்து கற்கும் ஒரு துறையாகும். எதிர் நோக்கும் மக்கள் தொகை மாற்றங்கள் பற்றி படிப்பது மக்கள் தொகை ஆய்வின் ஒரு முக்கிய அம்சமாகும்.

### அதிக மக்கள் தொகையால் ஏற்படும் பிரச்சனைகள்

இந்திய நாட்டில் அதிகரித்து வரும் மக்கள் தொகையானது சமூகம், பொருளாதாரம், கலாச்சாரம், அரசியல் மற்றும் சுற்றுச்சூழலில் பெரும் சவால்களை ஏற்படுத்துகின்றன. மக்கள் தொகை பிரச்சனையானது இடம் மற்றும் காலத்திற்கு ஏற்ப மாறுபடுகிறது. மக்கள் தொகை அதிகரிப்பால் மக்கள் நெருக்கடி, வேலைவாய்ப்பின்மை மற்றும் திறனுக்கேற்ற வேலைவாய்ப்பின்மை, குறைந்த வாழ்க்கை தரம், ஊட்டச்சத்தின்மை, இயற்கை மற்றும் வேளாண் வளங்களை தவறாக நிர்வகித்தல் ஆரோக்கியமற்ற சுற்றுச் சூழல் போன்ற பெரும் பிரச்சனைகளை ஏற்படுத்துகின்றன.

## 5.3 நகரமயமாக்கம்

கிராமப்புற சமுதாயம் நகர்புற சமுதாயமாக மாற்றமடைவதையே நகரமயமாக்கம் என்கிறோம்.

BHHPH9

### இந்திய நகரமயமாக்கம்

நகர்புற மக்கள் தொகை சதவிகிதத்தின் அடிப்படையிலேயே நகரமயமாக்கம் அளவிடப்படுகிறது.

இந்தியாவில் கோவா மாநிலம் மிகுந்த நகரமயமாக்கப்பட்ட பகுதியாக உள்ளது. இமாச்சல பிரதேசம் குறைந்த நகரமயமாக்கப்பட்ட பகுதியாக உள்ளது. யூனியன் பிரதேசங்களுக்கிடையில் புதுடெல்லி மற்றும் சண்டிகர் மிகுந்த நகரமயமாக்கப்பட்ட பகுதிகளாக உள்ளன. மாநிலங்களுள் மிகுந்த நகரமயமாக்கப்பட்ட மாநிலங்களில் இரண்டாவதாக தமிழ்நாடும் அதைத்தொடர்ந்து கேரளா மற்றும் மகராஷ்டிராவும் உள்ளன.

### நகரமயமாக்களின் தாக்கங்கள்


நகரமயமாக்கலும் மக்கள் தொகை அடர்த்தியும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புடையவை. கிராமத்திலிருந்து நகரங்களுக்கு இடப்பெயர்தல் நகர்பகுதிகளில் மக்கள் தொகை வெடிப்பிற்கு வழிவகுக்கிறது. மும்பை, கொல்கத்தா, புதுடெல்லி போன்ற பெருநகரங்கள் தங்கள் கொள்ளளவை விட அதிகமான மக்கள் தொகையுடன் காணப்படுகின்றன.

இந்தியாவில் நகரமயமாக்கலால் ஏற்படும் பிரச்சனைகள்:

- நகர விரிவாக்கத்தை ஏற்படுத்துகிறது.
- நகர்புறங்களில் மக்கள் நெருக்கடியை தோற்றுவிக்கிறது.
- நகர்புறங்களில் குடியிருப்புகளின் பற்றாக்குறையை உருவாக்குகிறது.
- குடிசைப் பகுதிகள் தோன்ற காரணமாக உள்ளது.
- போக்குவரத்து நெரிசலை அதிகப்படுத்துகிறது.
- குடிநீர் பற்றாக்குறையை ஏற்படுத்துகின்றது.
- வடிகால் பிரச்சனைகள் உண்டாகின்றன.
- திடக்கழிவு மேலாண்மையை சிக்கலாக்கிறது.
- குற்றங்கள் அதிகரிக்க காரணமாகின்றன.

## 5.4 போக்குவரத்து

போக்குவரத்து என்பது பயணிகள் மற்றும் சரக்குகளை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எடுத்துச் செல்வதாகும். போக்குவரத்து அமைப்பு ஒரு நாட்டின் உயிர் நாடியாக கருதப்படுகிறது. பண்டைய காலத்தில் மனிதன் கால்நடையாகவோ அல்லது விலங்குகளையோ போக்குவரத்திற்கு பயன்படுத்தி வந்தான். சக்கரம் கண்டுபிடிக்கப்பட்டதன் மூலம் போக்குவரத்து எளிமையாக்கப்பட்டது மற்றும் படிப்படியாக பல்வேறுபட்ட போக்குவரத்து முறைகள் உருவாயின. உலகின் பிரதான மூன்று போக்குவரத்து வகைகள் பின்வருமாறு:






10th_Geography_Unit_5_TM.indd 199 11-04-2020 11:56:22

## சாலை வழி

சாலை வழி குறுகிய மற்றும் நீண்ட தூரத்திற்கு பயணிகள் மற்றும் சரக்குகளை கொண்டு செல்வதில் முக்கிய பங்கு வகிக்கிறது. இது குறுகிய, மத்திய மற்றும் தொலைதூர சேவைகளுக்கு பொருத்தமானதாக உள்ளது. சாலைகளை அமைப்பது மற்றும் பராமரிப்பு செய்வது மற்ற போக்குவரத்து முறைகளை ஒப்பிடும் பொழுது மலிவானதாகும். சாலைப் போக்குவரத்து அமைப்பு மூலம் பண்ணைகள், தொழிற்சாலைகள் மற்றும் சந்தைகள் ஆகியவற்றிக்கிடையில் எளிதில் தொடர்பை ஏற்படுத்த முடியும். இது சமுதாயத்தின் அனைத்து பிரிவு மக்களாலும் பயன்படுத்தக் கூடிய மலிவான போக்குவரத்தாகும்.

இந்தியாவில் சாலைகள் அமைப்பதற்கு மிக எளிதாக இருக்கும் வட இந்திய பெரும் சமவெளிகளில் அடர்த்தியான சாலை அமைப்பு காணப்படுகிறது. மலைப்பாங்கான பகுதிகளில் சாலைகள் அமைக்க கடினமாக உள்ளது. கேரளாவில் சாலைகளின் அடர்த்தி மிக அதிகமாகவும் ஜம்மு–காஷ்மீர், லடாக் பகுதிகளில் மிகக் குறைவாகவும் உள்ளது.

சாலை அமைத்தல் மற்றும் பராமரிப்பு நோக்கத்திற்காக இந்திய சாலைகள், தேசிய நெடுஞ்சாலைகள் (NH), மாநில நெடுஞ்சாலைகள் (SH) மாவட்ட சாலைகள், கிராமப்புறச்சாலைகள், எல்லையோர சாலைகள் மற்றும் பன்னாட்டு நெடுஞ்சாலைகள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

## இந்திய சாலைகளின் வகைகள்

### அ. தேசிய நெடுஞ்சாலைகள் (NH)

தேசிய நெடுஞ்சாலைகள் இந்திய சாலைப் போக்குவரத்தின் மிகமுக்கியமான அமைப்பாகும். இத்தேசிய நெடுஞ்சாலைகள் வடக்கு–தெற்கு, கிழக்கு–மேற்காக நாட்டின் எல்லைகளையும், மாநிலங்களின் தலைநகரங்கள், முக்கியத் துறைமுகங்கள், இரயில் நிலையங்கள், முக்கிய சுற்றுலா மையங்கள், தொழில் மையங்கள் ஆகியவற்றை இணைக்கின்றன. இந்தியாவின் தேசிய நெடுஞ்சாலைகளை மேம்படுத்துவதற்கும் பராமரிப்பதற்கும் இந்திய அரசின் தரைவழி மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகம் பொறுப்பாகும். **இந்தியாவில் மிக நீளமான தேசிய நெடுஞ்சாலை NH 44 ஆகும்.** இது உத்தரப்பிரதேசத்தில் உள்ள **வாரணாசியிலிருந்து தமிழ்நாட்டில் உள்ள கன்னியாகுமரி** வரை 2,369 கி.மீ நீளத்தைக் கொண்டதாகும். குறைவான நீளமுடைய தேசிய நெடுஞ்சாலை NH 47 A ஆகும். இது எர்ணாகுளத்திலிருந்து 6 கி.மீ தொலைவைக் கொண்ட கொச்சின் துறைமுகத்தை (வில்லிங்டன் தீவு) இணைக்கிறது.

**உங்களுக்குத் தெரியுமா?**

ஷெர்சா சூர் தன்னுடைய பேரரசை பலப்படுத்தவும் ஒருங்கிணைக்கவும் சாஹி (ராயல்) சாலையை சிந்து பள்ளத்தாக்கிலிருந்து மேற்கு வங்காளத்தில் உள்ள சோனார் பள்ளத்தாக்கு வரை அமைத்தார். கொல்கத்தாவிலிருந்து பெஷாவர் வரை உள்ள இச்சாலை ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் கிராண்ட் ட்ரங்க்சாலை என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. தற்போது இச்சாலை அமிர்தரசிலிருந்து கொல்கத்தாவரை நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.

இந்திய நிலவரைபடத்தில் முக்கிய தேசிய நெடுஞ்சாலைகளைக் குறிக்கவும்



### ஆ. மாநில நெடுஞ்சாலைகள்

மாநில நெடுஞ்சாலைகள் பொதுவாக மாநிலத்திலுள்ள முக்கிய மாநகரங்கள், நகரங்கள் மற்றும் மாவட்ட தலைநகரங்களை, மாநில தலைநகரத்துடனும் தேசிய நெடுஞ்சாலைகளுடனும் அண்டை மாநில நெடுஞ்சாலைகளுடனும் இணைக்கின்றன. இந்தச் சாலைகள் மாநில பொதுப்பணித்துறையினால் அமைக்கப்பட்டு பராமரிக்கப்படுகிறது.

### இ. மாவட்டச் சாலைகள்

மாவட்டச் சாலைகளானது மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் தேசிய நெடுஞ்சாலைகளுடன் மாவட்ட மற்றும் வட்டார தலைமை இடங்களை இணைக்கிறது. மாவட்ட சாலைகள் மாநிலத்தின் பொதுப் பணித்துறையால் அமைக்கப்பட்டு பராமரிக்கப்படுகிறது.

### ஈ. ஊரகப் பகுதி சாலைகள் (கிராமச் சாலைகள்)

இச்சாலைகள் கிராமப்புறங்களை இணைப்பதில் முக்கிய பாங்காற்றுகின்றது. இது பல்வேறு கிராமங்களை அதன் அருகில் உள்ள நகரங்களுடன் இணைக்கிறது. இவைகளை கிராம பஞ்சாயத்துகளால் பராமரிக்கப்படுகின்றன.



10th_Geography_Unit_5_TM.indd 200 11-04-2020 11:56:23

# இந்தியா – சாலைகள்


வ
மே
கி
தெ
அரபிக் கடல்
வங்காள விரிகுடா
இந்தியப் பெருங்கடல்
இலங்கை
தங்க நாற்கரச் சாலை
கிழக்கு - மேற்கு இணைப்புச் சாலை
வடக்கு - தெற்கு இணைப்புச் சாலை
45 தேசிய நெடுஞ்சாலை எண்
முக்கியச் சாலை
ஸ்ரீநகர்
கிஸ்ட்வார்
மணாலி
அமிர்தசரஸ்
சிம்லா
சண்டிகர்
ஜோஷிமாத்
புது டில்லி
பிகானர்
ஜெய்சால்மர்
ஜெய்பூர்
ஆக்ரா
பரேலி
லக்னோ
கோரக்பூர்
கான்பூர்
குவாலியர்
சிவ்புரி
அலகாபாத்
வாரணாசி
பாட்னா
உதய்பூர்
அகமதாபாத்
போர்பந்தர்
வதோதரா
போபால்
ராஞ்சி
தன்பாத்
கொல்கத்தா
துலே
நாசிக்
எல்லோரா
நாக்பூர்
ராய்பூர்
சம்பல்பூர்
கட்டாக்
புவனேஸ்வர்
பாலேஷ்வர்
பாரதீப்
மும்பை
புனே
சோலாப்பூர்
ஹைதராபாத்
ஜகதால்பூர்
விசாகப்பட்டினம்
விஜயவாடா
பெல்காம்
பனாஜி
மங்களூரு
பெங்களூரு
சென்னை
இராணிபேட்டை
கிருஷ்ணகிரி
சேலம்
கண்ணூர்
புதுச்சேரி (பாண்டிச்சேரி)
காரைக்கால் (பாண்டிச்சேரி)
திருச்சூர்
திண்டுக்கல்
மதுரை
இராமேஸ்வரம்
திருநெல்வேலி
தூத்துக்குடி
திருவனந்தபுரம்
கன்னியாகுமரி
கவரத்தி
இலட்சத் தீவுகள் (இந்தியா)
அந்தமான் தீவுகள் (இந்தியா)
நிக்கோபார் தீவுகள்
போர்ட் ப்ளேர்
இந்திரா முனை
சிலிகுரி
கேங்டாக்
திஸ்பூர்
ஷில்லாங்
இட்டாநகர்
ஜீரோ
நாகோன்
கொஹிமா
இம்பால்
அகர்தலா
ஐசால்
அளவையில் இல்லை

### உ. எல்லைப்புறச் சாலைகள்

எல்லைப்புறச் சாலைகள் நாட்டின் எல்லைப்பகுதிகளில் அமைந்துள்ள முக்கியத்துவம் வாய்ந்த ஒரு சாலை வகைகளாகும். இவைகள் எல்லைப்புறச் சாலைகள் நிறுவனத்தால் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. இவ்வமைப்பு 1960இல் நிறுவப்பட்டது. இச்சாலைகள் வடக்கு மற்றும் வடகிழக்கு எல்லைப் பகுதிகளில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். எல்லைப்புறச் சாலை நிறுவனம் உலகிலேயே உயரமான எல்லைப்புறச் சாலையை லடாக்கில் உள்ள லேவில் இருந்து சண்டிகர் வரை அமைக்கப்பட்டுள்ளது. இச்சாலை கடல் மட்டத்திலிருந்து சராசரியாக 4,270 மீட்டர் உயரத்தில் உள்ளது.

### ஊ. தங்க நாற்கரச் சாலைகள்

இது 5,846 கி.மீ நீளத்தையும் 4 முதல் 6 வழிகளைக் கொண்டதாகவும் உள்ளது. இது வடக்கு தெற்காக இந்தியாவின் நான்கு பெரு நகரங்களான புதுடெல்லி – கொல்கத்தா – சென்னை – மும்பை – புதுடெல்லி ஆகியவைகளை இணைக்கிறது. இத்திட்டம் 1999ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

**உயர்சிந்தனை வினா**

தங்க நாற்கரச் சாலையின் சிறப்பம்சங்கள் மற்றும் பயன்களைக் கூறுக.

### எ. வட – தென் மற்றும் கிழக்கு – மேற்கு பகுதிகளை இணைக்கும் சாலைகள்

வட – தென் பகுதிகளை இணைக்கும் சாலைகளின் நோக்கம் ஜம்மு–காஷ்மீரில் உள்ள ஸ்ரீநகரையும் தமிழ்நாட்டில் உள்ள கன்னியாகுமரியையும் 4,076 கி.மீ நீளத்தைக் கொண்ட சாலை மூலம் இணைப்பதாகும். (கொச்சின், சேலம் உள்பட) கிழக்கு–மேற்கு பகுதிகளை இணைக்கும் சாலைகள் அசாம் மாநிலத்தில் சில்சரையும் குஜராத்தில் உள்ள துறைமுக நகரான போர்பந்தரையும் இணைக்கும் வகையில் 3,640 கி.மீ நீளத்திற்கு அமைக்கப்பட்டுள்ளது. இந்த இரண்டு சாலைகளும் ஜான்சியில் சந்திக்கின்றன.

### ஏ. விரைவுச் சாலைகள்

விரைவுச் சாலைகள் என்பன நன்கு மேம்படுத்தப்பட்ட தரமான பல்வழிப் பாதைகளைக் கொண்ட அதிவேக போக்குவரத்திற்கான சாலைகள் ஆகும். முக்கியமான சில விரைவுச் சாலைகள் 1) **மும்பை – பூனா விரைவுச் சாலை** 2) **கொல்கத்தா – டம்டம் விமான நிலைய விரைவுச்சாலை** 3) **துர்காப்பூர் – கொல்கத்தா விரைவுச்சாலை** 4) **புதுடெல்லி மற்றும் ஆக்ரா** இடையேயான யமுனா விரைவுச்சாலை.



மும்பை – பூனா விரைவுச் சாலை

### ஐ. பன்னாட்டு நெடுஞ்சாலைகள்

இந்தியா அதன் அண்டை நாடுகளுடன் இணக்கமான உறவை மேம்படுத்தும் நோக்கத்துடன் இணைக்கப்பட்டுள்ள சாலைகள் பன்னாட்டு நெடுஞ்சாலைகள் ஆகும். இச்சாலைகள் ஆசிய மற்றும் பசிபிக் பகுதிகளுக்கான பொருளாதார மற்றும் சமூக ஆணையம் (ESCHP) உடன்படிக்கையின் கீழ் உலக வங்கி நிதியுதவியின் மூலம் அமைக்கப்பட்டுள்ளன. இச்சாலைகள் **பாகிஸ்தான், நேபாளம், பூடான், வங்கதேசம்** மற்றும் **மியான்மர்** ஆகிய அண்டை நாடுகளை இந்திய தேசிய நெடுஞ்சாலைகளுடன் இணைக்கின்றன.

## இரயில் போக்குவரத்து

இந்திய இரயில்வே அமைப்பு நாட்டினுடைய உள்நாட்டு போக்குவரத்திற்கான முக்கிய உயிர் நாடியாக அமைந்துள்ளது. மிக அதிக அளவிலான பயணிகள் மற்றும் சரக்கு போக்குவரத்தின் தேவையை பூர்த்தி செய்வதன் மூலம் பொருளாதார வளர்ச்சிக்கான பங்களிப்பை இரயில்வே அளித்துவருகிறது. மேலும் இந்திய தரைவழிப் போக்குவரத்து அமைப்பின் முதுகெலும்பாக கருதப்படுகிறது. இது மக்களை ஒன்றிணைப்பதன் மூலம் தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்கிறது. வணிகம், சுற்றுலா, கல்வி போன்றவற்றையும் ஊக்குவிக்கிறது. வேளாண்துறையில் எளிதில் அழுகக்கூடிய பொருள்களை வர்த்தகம் செய்ய விரைவான போக்குவரத்தை அளித்து உதவி புரிகிறது. மூலப்பொருள்களைத் தொழிற்சாலைக்கும் தயாரிக்கப்பட்ட தொழிலக பொருள்களைச் சந்தைகளுக்கும் கொண்டு செல்லும் இரயில்வேயின் பணி மதிப்பிட முடியாத ஒன்று. இந்திய இரயில் போக்குவரத்து அமைப்பு ஆசியாவில் மிகப் பெரியதும் உலக அளவில் இரண்டாவது பெரியதும் ஆகும்.

www.tntextbooks.in

இரயில்களின் இயக்கம் மற்றும் மேலாண்மைக்காக, இந்திய இரயில்வே துறை 17 இரயில்வே மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை.

| வ. எண். | மண்டலங்கள் | தலைமையிடம் |
|---|---|---|
| 1 | வடக்கு இரயில்வே | புதுடெல்லி |
| 2 | வடமேற்கு இரயில்வே | ஜெய்ப்பூர் |
| 3 | வட மத்திய இரயில்வே | அலகாபாத் |
| 4 | வடகிழக்கு இரயில்வே | கொரக்பூர் |
| 5 | வடகிழக்கு எல்லை இரயில்வே | கௌகாத்தி |
| 6 | கிழக்கு இரயில்வே | கொல்கத்தா |
| 7 | கிழக்கு கடற்கரை இரயில்வே | புவனேஸ்வர் |
| 8 | கிழக்கு மத்திய இரயில்வே | ஹசிப்பூர் |
| 9 | மேற்கு மத்திய இரயில்வே | ஜபல்பூர் |
| 10 | மத்திய இரயில்வே | மும்பை (சத்ரபதி சிவாஜி முனையம்) |
| 11 | மேற்கு இரயில்வே. | மும்பை (சர்ச்கேட்) |
| 12 | தெற்கு இரயில்வே | சென்னை |
| 13 | தென் மத்திய இரயில்வே | செகந்தராபாத் |
| 14 | தென் கிழக்கு இரயில்வே | கொல்கத்தா |
| 15 | தென்மேற்கு இரயில்வே | ஹுப்ளி |
| 16 | தென் கிழக்கு மத்திய இரயில்வே | பிலாஸ்பூர் |
| 17 | கொங்கன் இரயில்வே | நவி மும்பை |

இந்திய இரயில்வே துறை இருப்புப்பாதையின் அகலத்தை அடிப்படையாகக் கொண்டு நான்கு வகைகளாகப் பிரிக்கப்படுகிறது. அவை

1. அகலப்பாதை (1.676 மீ அகலம்)
2. மீட்டர் பாதை (1.00 மீ அகலம்)
3. குறுகிய பாதை (0.762 மீ. அகலம்) மற்றும்
4. குறுகிய தூக்குப் பாதை (0.610. அகலம்) ஆகியவையாகும்.

இந்தியாவின் முதல் புறநகர் இரயில் போக்குவரத்து மும்பையில் 1925இல் தொடங்கப்பட்டது. காத்திமன் (GATHIMAN) அதிவிரைவு வண்டி இந்தியாவின் மிக அதிகவேக இரயில்வண்டி ஆகும். இந்த இரயில்வண்டி புதுடெல்லியையும் ஆக்ராவையும் இணைக்கிறது.

### அ. இந்திய மெட்ரோ இரயில் போக்குவரத்து

இந்தியாவில் 8 பெரு நகரங்களில் மெட்ரோ இரயில்சேவை வழங்கப்படுகிறது. அவைகள் கொல்கத்தா (மேற்கு வங்காளம்) சென்னை (தமிழ்நாடு) புதுடெல்லி, பெங்களூரு (கர்நாடகா) குர்கயோன் (ஹரியானா) மும்பை (மகாராஷ்டிரா) ஜெய்ப்பூர் (இராஜஸ்தான்) மற்றும் கொச்சி (கேரளா) ஆகும். இந்தியாவில் இந்த இரயில் சேவை முதன் முதலில் கொல்கத்தாவில் தொடங்கப்பட்டது. இது அதிக மக்களை விரைவாக ஏற்றிச் செல்லும் அமைப்பாகக் கருதப்படுகிறது. MRTS செப்டம்பர் 2018இன்படி இந்தியாவில் 507 கி.மீ நீள மெட்ரோ இருப்பு பாதைகள் 381 இரயில் நிலையங்களுடன் இயங்கிவருகிறது.

மேகாலயா மாநிலத்தில் இரயில் போக்குவரத்து இல்லை.

## குழாய் வழிபோக்குவரத்து

எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு வயல்களையும், எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்களையும் அதன் சந்தை பகுதிகளோடு இணைப்பதற்கு எளிதான மற்றும் சிறந்த போக்குவரத்தாக குழாய் போக்குவரத்து செயல்பட்டு வருகிறது. முன்னதாக இவை நகரங்களுக்கும் தொழிற்சாலைகளுக்கும் தண்ணீர் வழங்குவதற்கு பயன்படுத்தப்பட்டது. தற்பொழுது திடப் பொருள்களும் குழம்பாக்குதல் மூலம் குழாய் வழியே கொண்டு செல்லப்படுகிறது. குழாய் போக்குவரத்து அமைப்பதற்கு ஆரம்பகால செலவுகள் அதிகம். ஆனால் பின்னர் இதனை பராமரிப்பதற்கான செலவு மிகவும் குறைவு. இவற்றை கடினமான நிலப்பகுதிகளிலும், நீருக்கு அடியிலும் அமைக்க இயலும். இது தடங்கலற்ற, குறைந்த செலவுடைய, காலதாமதமற்ற மற்றும் ஆவியாதல் மூலம் ஏற்படும் இழப்பின்மை போன்றவற்றை உறுதி செய்கிறது. மேல் அசாமில் உள்ள எண்ணெய் வயலில் இருந்து கான்பூர் வரையிலும், குஜராத்தில் உள்ள சலாயா பகுதியிலிருந்து பஞ்சாபிலுள்ள ஜலந்தர்



10th_Geography_Unit_5_TM.indd 203 11-04-2020 11:56:25

# இந்தியா – இருப்புப்பாதைகள்



வரையிலும், குஜராத்தில் உள்ள ஹஜிராவிலிருந்து உத்தரப்பிரதேசத்தில் உள்ள ஜெகதீஷ்பூர் வரை செல்லும் குழாய் போக்குவரத்துகள் இந்தியாவின் முக்கிய குழாய் போக்குவரத்து அமைப்புகளாகும்.

## நீர்வழிப் போக்குவரத்து

நீர்வழிப் போக்குவரத்து இந்தியாவில் பயணிகள் மற்றும் சரக்குகள் போக்குவரத்திற்கு முக்கியமான ஒன்றாகும். இது பழமையான மற்றும் மலிவான ஒரு போக்குவரத்து முறையாகும். கனமான மற்றும் அதிக அளவிலான சரக்குகளை ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு எடுத்துச் செல்ல மிகவும் ஏற்றது நீர்வழிப் போக்குவரத்தாகும். இது சுற்றுச் சூழல் பாதுகாப்பு மற்றும் குறைந்த எரிபொருள் செலவின போக்குவரத்து முறையாகும். நீர்வழிப் போக்குவரத்து இரண்டு வகைகளாகப் பிரிக்கப்படுகிறது. அவை

1. **உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து**
2. **கடல் வழிப்போக்குவரத்து**

### 1. உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து

இந்திய உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து ஆறுகள், கால்வாய்கள், ஏரிகள் மற்றும் காயல்களைக் கொண்ட மிகப்பெரிய வலைப்பின்னல் அமைப்புடன் நடைபெற்றுவருகிறது. நீர்வழிப் போக்குவரத்து நீரின்ஆழம், அகலம் மற்றும் தொடர் நீரோட்டத்தைப் பொறுத்து அமைகிறது. உள்நாட்டு போக்குவரத்து வளர்ச்சி, பராமரிப்பு மற்றும் ஒழுங்குபடுத்துவதற்காக 1986இல் உள்நாட்டு நீர் வழிப்போக்குவரத்து ஆணையம் தொடங்கப்பட்டது.

இந்தியாவின் முக்கிய தேசிய நீர்வழிப் போக்குவரத்துகள்

### 1. தேசிய நீர்வழிப்போக்குவரத்து எண்.1

இது ஹால்தியா மற்றும் அலகாபாத் இடையே 1620 கி.மீ நீளத்தை கொண்டு, கங்கை–பாகிரதி – ஹுக்ளி ஆறுகளுடன் இணைந்து செயல்படுகிறது.

### 2. தேசிய நீர்வழிப்போக்குவரத்து எண். 2

இது பிரம்மபுத்ரா ஆற்றில் துபிரி மற்றும் காடியாவிற்கு இடையே சுமார் 891 கி.மீ நீளத்தைக் கொண்டுள்ளது.

### 3. தேசிய நீர்வழிப்போக்குவரத்து எண். 3

இந்த நீர்வழி கேரளா மாநிலத்தின் கொல்லம் மற்றும் கோட்டபுரம் இடையே உள்ளது. 24 மணி நேரமும் செயல்பட்டு 205 கி.மீ தொலைவிற்கு போக்குவரத்து வசதியை அளிக்கக்கூடிய இந்தியாவின் முதல் தேசிய நீர்வழி போக்குவரத்து இதுவாகும்.

### 2. கடல் வழிப் போக்குவரத்து

கடல்வழி போக்குவரத்து இந்தியப் பொருளாதாரத்தில் முக்கிய பங்கை வகிக்கிறது. இந்திய வெளிநாட்டு வர்த்தகத்தில் சுமார் 95 சதவிகித அளவுக்கு 70 சதவிகித மதிப்புள்ள சரக்குகள் கடல்வழிப்போக்குவரத்து மூலமாக நடைபெறுகிறது. இந்தியாவின் கனரக பொருள்கள் மற்றும் அதிக அளவிலான சரக்குகளை கையாளுவதில் கப்பல் போக்குவரத்து முக்கிய பங்காற்றுகிறது. இது மிகவும் சிக்கனமான போக்குவரத்து மட்டுமல்லாமல் சுற்றுச்சூழலுக்கும் ஏற்ற ஒன்றாகும். கடல் மற்றும் பெருங்கடல் வழிகள் பெரும்பாலும் சர்வதேச வணிகத்திற்காக பயன்படுத்தப்படுகின்றன. இவ்வழிகள் துறைமுகங்கள் மூலம் இணைக்கப்படுகின்றன. இந்தியாவில் 13 பெரிய துறைமுகங்களும், 200 நடுத்தர மற்றும் சிறிய துறைமுகங்களும் உள்ளன. பெரிய துறைமுகங்களை மத்திய அரசாங்கமும் சிறிய மற்றும் நடுத்தர துறைமுகங்களை அந்தந்த மாநில அரசுகளும் நிர்வாகம் செய்கின்றன. கிழக்கு இந்திய கடற்கரையில் அமைந்துள்ள முக்கிய துறைமுகங்கள் கொல்கத்தா, ஹால்தியா, பாரதீப், விசாகப்பட்டினம், சென்னை, எண்ணூர் மற்றும் தூத்துக்குடி ஆகும். மேற்கு இந்திய கடற்கரையில் அமைந்துள்ள முக்கிய துறைமுகங்கள் காண்டலா, மும்பை, நவசேவா(ஜவகர்லால் நேரு துறைமுகம்), மர்மகோவா, நியூமங்களூரு மற்றும் கொச்சின் ஆகும்.

இந்தியாவில் நான்கு முக்கிய கப்பல் கட்டும் தளங்கள்

1. இந்துஸ்தான் கப்பல் கட்டும் தளம் – விசாகப்பட்டினம்
2. கார்டன் ரீச் கப்பல் கட்டும் தொழிற்சாலை – கொல்கத்தா
3. மசாகான் கப்பல் கட்டும் தொழிற்சாலை – மும்பை
4. கொச்சி கப்பல் கட்டும் தளம் – கொச்சி

இந்தியா கப்பல் கட்டும் தொழிலில் ஆசியாவில் இரண்டாவது இடத்தையும் உலக அளவில் 16வது இடத்தையும் பெற்றுள்ளது.

## வான்வழி போக்குவரத்து

வான்வழிப் போக்குவரத்து விரைவான, பயணசெலவு மிகுந்த, நவீன மற்றும் வசதியான போக்குவரத்தாகும். விமான போக்குவரத்து தேசிய, பிராந்திய மற்றும் சர்வதேச அளவிலான இணைப்பு வசதியை வழங்குகிறது. உயர்ந்த மலைகள், பாலைவனங்கள் மற்றும் அடர்ந்த காடுகள் மற்றும் கடினமான நிலப்பரப்புகள் போன்ற பகுதிகளை எளிதில் இணைக்கவல்லது.



10th_Geography_Unit_5_TM.indd 205 11-04-2020 11:56:25

www.tntextbooks.in

இப்போக்குவரத்து பயணிகள், சரக்குகள், அஞ்சல்கள் ஆகியவற்றைக் கொண்டு செல்கின்றன. அவசரகால நேரங்கள், இயற்கை மற்றும் செயற்கை பேரிடர்களான வெள்ளம், பஞ்சம், தொற்றுநோய்கள், போர்கள் போன்ற நிகழ்வுகளின்போதும் வான்வழிப்போக்குவரத்து முக்கிய பங்காற்றுகிறது. முதல் இந்திய விமானப் போக்குவரத்து பிப்ரவரி 1918இல் ஹென்றி பிக்யூர் என்பவரால் அலகாபாத்திலிருந்து நைனிக் என்ற இடத்திற்கு கடிதங்கள் கொண்டு செல்லப்பட்டதன் மூலம் ஆரம்பமானது. 1953ஆம் ஆண்டு நாட்டில் செயல்பட்டு வந்த 8 பல்வேறு விமான நிறுவனங்கள் ஒன்றிணைக்கப்பட்டு அவைகள் தேசியமயமாக்கப்பட்டன.

உங்களுக்குத் தெரியுமா?

இந்தியாவின் தேசிய நெடுஞ்சாலை ஆணையம் (NHAI) 1995இல் நிறுவப்பட்டது. இது தரைவழி போக்குவரத்து அமைச்சகத்தின் கீழ் இயங்கும் தன்னாட்சி பெற்ற அமைப்பாகும்.

உள்நாட்டு வான் வழிப்போக்குவரத்து ஒரு நாட்டினுடைய எல்லைக்குள்ளும் சர்வதேச வான்வழிபோக்குவரத்து உலகின் முக்கிய நகரங்களையும் இணைக்கிறது. இந்திய அரசாங்கம் ஏர் இந்தியா என்ற விமான சேவையை வழங்குகிறது. இந்தியன் ஏர்லைன்ஸ் உள்நாட்டு போக்குவரத்து சேவையையும், ஏர் இந்தியா நிறுவனம் வெளிநாட்டு போக்குவரத்து சேவையையும் வழங்குகின்றன. இந்தியாவில் தற்பொழுது 19 சர்வதேச விமான நிலையங்கள் உள்ளன.

**உயர்சிந்தனை வினா**

வடகிழக்கு இந்திய மாநிலங்களில் விமானப் பயணம் ஏன் விரும்பத்தக்கதாக உள்ளது?

### பவன் – ஹான்ஸ் வானுலங்கு ஊர்தி (ஹெலிகாப்டர்) நிறுவனம்

பவன் ஹான்ஸ் வானுலங்கு ஊர்தி நிறுவனம் (ஹலிகாப்டர்) பெட்ரோலிய நிறுவனங்களான ONGC எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு நிறுவனம் மற்றும் கடல்சார்ந்த பணிகளுக்கு வானுலங்கு சேவையை அளிக்கிறது. இது புதுடெல்லியை தலைமையிடமாகக் கொண்ட பொதுத்துறை நிறுவனமாகும். இது மும்பையின் மேற்கு வில்பார்லேவில் உள்ள ஜூகு விமான நிலையத்தைத் தளமாகக் கொண்டு இயங்குகிறது. பவன் ஹான்ஸ் நிறுவனம் ஒரு மினி – ரத்னா – I பிரிவின் கீழ் இயங்கும் ஒரு பொதுத்துறை நிறுவனமாகும். இந்நிறுவனம் பல்வேறு இந்திய மாநில அரசுகளுக்கு குறிப்பாக வட கிழக்கு இந்திய மாநிலங்களுக்கு இடையில் உள்ள தீவுகளுக்குச் சேவையை அளிக்கிறது. இது அந்தமான் நிக்கோபர் தீவுகளுக்கும் இலட்சத்தீவுகளுக்கும் பயணப் படகுச் சேவையையும் வழங்குகிறது.

### இந்திய விமான நிலைய பொறுப்பு ஆணையம் (AAI)

இந்திய விமான நிலையப் பொறுப்பு ஆணையம் 1995இல் ஆரம்பிக்கப்பட்டது. இது இந்திய விமான நிலையங்களுக்கு பாதுகாப்பை அளிக்கிறது. இந்திய குடிமை விமான போக்குவரத்து அமைச்சகத்தின் கீழ் இயங்கும் இந்திய விமான நிலைய பொறுப்பு ஆணையம், பராமரித்தல், மேம்படுத்துதல், மற்றும் நிர்வாகம் ஆகிய பணிகளை மேற்கொள்கிறது.

## 5.5 தகவல் தொடர்பு

தகவல்கள், எண்ணங்கள் மற்றும் கருத்துக்களின் பரிமாற்றத்தையே தகவல் தொடர்பு என்கிறோம். தகவல் தொடர்பு துறையில் தொழில்நுட்பம் வியக்கத்தக்க வகையில் உள்ளது.

தகவல் தொடர்புகள் இரு பிரிவுகளாக வகைப்படுத்தப்படுகின்றன.

1. **தனிமனித தகவல் தொடர்பு**
2. **பொதுத்தகவல் தொடர்பு**

### தனிமனித தகவல் தொடர்பு

தனி நபர்களுக்கிடையேயான தகவல் பரிமாற்றம் தனிமனித தகவல் தொடர்பு என அழைக்கப்படுகிறது. இது அஞ்சல் சேவை, தந்தி, தொலைப்பேசி, கைப்பேசி, குறுந்தகவல் பிரதிகள், இணையதளம் மற்றும் மின் அஞ்சல் போன்றவைகளை உள்ளடக்கியது. தனி மனித தகவல் தொடர்பு அமைப்பு பயனாளிகளுடன் நேரடி தொடர்பை ஏற்படுத்துகிறது. உலக அளவில் மிகப்பெரிய வலைப்பின்னல் அமைப்பு கொண்ட இந்திய அஞ்சல் துறை 1,55,000 அஞ்சல் நிலையங்களைக் கொண்டுள்ளது. இவற்றில் 1,39,000றக்கும் மேற்பட்ட தபால் நிலையங்கள் கிராமப் புறங்களில் அமைந்துள்ளன. இந்திய அஞ்சல் சேவை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக 1857ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

இந்தியாவின் முதல் அஞ்சல் வில்லை 1852 ஆம் ஆண்டு கராச்சியில் வெளியிடப்பட்டது. அஞ்சல்களை சேகரித்தல் மற்றும் விநியோகம் செய்வது இந்திய அஞ்சல் துறையின் முக்கிய பணியாகும். இத்துறை விரைவு அஞ்சல் சேவையை 1975இல் அறிமுகம்



10th_Geography_Unit_5_TM.indd 206 11-04-2020 11:56:25

# இந்தியா வான்வழி மற்றும் கடல்வழித்தடங்கள்




சர்வதேச வான் வழித்தடம்

உள்நாட்டு வான் வழித்தடம்

சர்வதேச விமான நிலையம்

உள்நாட்டு விமான நிலையம்




கடல் வழித்தடம்

முக்கிய துறைமுகங்கள்

சிறு துறைமுகங்கள்

www.tntextbooks.in

செய்தது. 1972ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட அஞ்சல் குறியீட்டு எண்ணை அடிப்படையாகக் கொண்டு விரைவு தபால் சேவை செயல்படுகிறது. பண அஞ்சல், மின்னனு பண அஞ்சல், விரைவு தபால், விரைவு சிப்பஅஞ்சல், வணிக அஞ்சல், ஊடக அஞ்சல், செயற்கைக் கோள் வழி அஞ்சல், சில்லறை அஞ்சல், வாழ்த்து அட்டைகள், தகவல் அஞ்சல், துரித சேவை மற்றும் விரைவான கடவுச்சீட்டு சேவைகளை அஞ்சல்துறை வழங்கி வருகிறது.

ஆசியாவிலேயே மிகப்பெரிய தொலைதொடர்பு வலைப்பின்னல் அமைப்பை கொண்டுள்ள நாடுகளுள் இந்தியாவும் ஒன்று. நகர்ப்புற பகுதிகள் மட்டும் அல்லாமல் கிராமப்புறப் பகுதிகளிலும் STD (உள்நாட்டு சந்தாதாரர் அழைப்பு) தொலைப்பேசி வசதி செய்யப்பட்டுள்ளது.

வெளி நாட்டில் உள்ளவர்களோடு தொடர்பு கொள்ள ISD முறை (சர்வதேச சந்தாதாரர் அழைப்பு) பயன்படுத்தப்படுகிறது. உள்நாட்டு சந்தாதாரர் அழைப்பிற்கு நாடு முழுவதும் ஒரு சீரான அழைப்பு கட்டணமுறை நடைமுறையில் உள்ளது. தொலைப்பேசி என்பது வாய்மொழி தகவல்பரிமாற்ற முறையாகும். வணிக வளர்ச்சிக்கு இது மிகவும் உதவிக்கரமாக உள்ளது. இது உடனடி தகவல் தொடர்பை வழங்குவதால் மக்களால் முன்னுரிமை அளிக்கப்படும் துறையாக விளங்குகிறது. கைபேசி, பிரதி அஞ்சல் மற்றும் இணையதளம் போன்றவை நாட்டில் பயன்படுத்தப்படும் மற்ற தனி மனித தகவல் தொடர்பு சாதனங்களாகும்.

## பொதுத் தகவல் தொடர்பு அமைப்பு

பொதுத் தகவல் தொடர்பு என்பது ஒரே நேரத்தில் லட்சக்கணக்கான மக்கள் தகவல்களை பெறுவதாகும். இது கல்வி மற்றும் பொழுதுபோக்கு அம்சங்களை வழங்கும் சிறந்தவழியாகும். பல்வேறு தேசியக் கொள்கைகள் மற்றும் திட்டங்களைப் பற்றி மக்கள் மத்தியில் விழிப்புணர்வை உருவாக்க பொதுத் தகவல் தொடர்பு பயன்படுகிறது. பொதுத் தகவல் தொடர்பு அமைப்பானது அச்சு ஊடகங்கள் மற்றும் மின்னனு ஊடகங்கள் என்னும் இரண்டு முறைகளில் மக்களுக்கு தகவல்களை வழங்குகிறது.

### மின்னனு ஊடகங்கள்

இந்திய வானொலி ஒளிபரப்பு சேவை, மும்பை வானொலி சங்கம் மூலமாக 1923ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. அன்றிலிருந்து மக்களின் சமூக கலாச்சார வாழ்க்கை முறை மாற்றங்களுக்கு காரணமாக விளங்கி மக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. இது 1936ஆம் ஆண்டு அகில இந்திய வானொலி என்றும் 1957ஆம் ஆண்டு முதல் "ஆகாச வாணி" எனவும் பெயர் மாற்றம் செய்து அழைக்கப்பட்டு வருகிறது. இது கல்வி, செய்திகள் மற்றும் பொழுதுபோக்கு தொடர்பான பல்வேறு நிகழ்ச்சிகளை ஒளிபரப்புகிறது. சட்டமன்ற மற்றும் பாராளுமன்ற கூட்டத்தொடர் நிகழ்வுகள் மற்றும் சிறப்பு விழாக்கள் தொடர்பான நிகழ்வுகளையும் சிறப்பு செய்திகளாக ஒளிபரப்புகிறது.

### தொலைக்காட்சி

தொலைக்காட்சி ஒளிபரப்பு ஊடகம் மக்களுக்கு மிகவும் பயனுள்ள பல்வேறு தகவல்களை ஒளி–ஒலி காட்சி மூலமாக வழங்கும் சிறந்த ஊடகமாக உருவெடுத்துள்ளது. இந்தியாவில் தொலைக்காட்சி வலையமைப்பு "தூர்தர்ஷன்" என அழைக்கப்படுகிறது. இது பொதுவான தேசிய திட்ட சேவைகளை வழங்க தொடங்கிய பின்பு இச்சேவை பின்தங்கிய மற்றும் தொலைதூர கிராமப்புறங்களுக்கு விரிவடைய செய்யப்பட்டது.


### இணையம்

இணையம் என்பது வலையமைப்பு நெறிமுறைகளை பயன்படுத்தும் கணினி மூலம் இணைக்கப்பட்ட உலகளாவிய ஒரு தகவல் பரிமாற்ற வலையமைப்பு ஆகும். செய்தி உருவாக்கம், எண்ணங்கள், வேலைவாய்ப்பு மற்றும் இதர செய்திகளை நேரடியாக பகிர்ந்து கொள்ள பயன்படும் ஒரு சமூக ஊடகமாகவும் பயன்படுகிறது.

### செய்தித்தாள் ஊடகம்

செய்தித்தாள் எல்லோராலும் பயன்படுத்தப்படும் சக்தி வாய்ந்த அச்சு ஊடகத்தின் கீழ்வரும் ஒரு தகவல் தொடர்பு சாதனமாகும். இந்தியாவில் உள்ளூர், தேசிய மற்றும் சர்வதேச அளவில் செய்திகளை அளிக்கக்கூடிய பல செய்திதாள்கள் உள்ளன.

## செயற்கைக்கோள் தகவல் தொடர்பு






10th_Geography_Unit_5_TM.indd 208 11-04-2020 11:56:26

செயற்கைக்கோளானது தொடர்ச்சியாக மிகப்பெரும் பரப்பிலான பதிமம் மற்றும் தகவல்களை அளிப்பதன் மூலம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தகவல் தொடர்பு சாதனமாக இந்தியாவில் விளங்குகிறது. செயற்கைக்கோள் பதிமங்களைப் பயன்படுத்தி வானிலை ஆய்வு, வானிலை முன் அறிவிப்பு, இயற்கை பேரழிவு கண்காணிப்பு, எல்லை பகுதி கண்காணிப்பு போன்ற முக்கிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. 1969ஆம் ஆண்டு இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையம் நிறுவப்பட்ட பின்னர் தொலைத்தொடர்பு பரிமாற்றத்தில் செயற்கைக் கோள்கள் ஒரு புதிய சகாப்தத்தை ஏற்படுத்தியுள்ளன.

இந்தியாவில் செயற்கைக்கோள் தகவல் தொடர்பு அமைப்பு இரண்டு பிரிவுகளைக் கொண்டது.

1. இந்திய தேசிய செயற்கைக்கோள் அமைப்பு (INSAT)
2. இந்திய தொலையுணர்வு செயற்கைகோள் அமைப்பு (IRS)

1983இல் நிறுவப்பட்ட இந்திய தேசிய செயற்கைக்கோள் அமைப்பு தொலைத்தொடர்பு, வானியல் ஆய்வு மற்றும் பல்வேறு திட்டங்களை உள்ளடக்கிய ஒரு பல்நோக்கு திட்ட அமைப்பாக உள்ளது.

இன்சாட் வரிசை செயற்கைக்கோள், கைபேசி, தொலைப்பேசி, வானொலி மற்றும் தொலைக்காட்சிகளுக்கு சமிக்கைகளை அனுப்ப பயன்படுகிறது. மேலும் இது வானிலையை கண்டறியவும், இராணுவ பயன்பாட்டிற்கும் பயன்படுத்தப்படுகிறது.

இன்சாட் வரிசை, ஜி–சாட் வரிசை, கல்பனா 1, ஹேம்சாட், எஜுசாட் (Edusat) போன்றவை தகவல் தொடர்பிற்காக பயன்படுத்தப்படும் முக்கிய செயற்கைக்கோள்களாகும். டிசம்பர் 19, 2018ஆம் ஆண்டு ஏவப்பட்ட ஜிசாட் 7A தகவல் தொடர்புக்காக சமீப காலத்தில் ஏவப்பட்ட ஒரு செயற்கைக்கோள் ஆகும். ஆகஸ்ட் 30, 1983ஆம் ஆண்டு ஏவப்பட்ட இன்சாட் 1B தகவல் தொடர்பிற்காக ஏவப்பட்ட முதல் இன்சாட் வரிசை செயற்கைக்கோள் ஆகும்.

## 5.6 வணிகம்

வணிகம் என்பது ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியை நிர்ணயிக்கும் ஒரு முக்கிய காரணியாகும். வணிகம் என்பது பொருள்கள் மற்றும் சேவைகளை வாங்குவதும் விற்பதும் அல்லது பரிமாற்றம் செய்து கொள்ளும் செயலாகும். பழங்காலத்தில் வணிகமுறையானது பண்டமாற்று முறை என்று அழைக்கப்பட்டது. (ஒரு பொருளுக்கு ஈடாக மற்றொரு பொருள் பரிமாற்றம் செய்யப்பட்டது) பின்னர் பொருள்களை வாங்குவதற்கும் விற்பதற்கும் பணம் அளவுகோளாக எடுத்துக் கொள்ளப்பட்டது. ஏற்றுமதி மற்றும் இறக்குமதி மதிப்பிற்கு இடையே உள்ள வேறுபாடு வணிகச் சமநிலை (Blance of Trade) எனப்படும். ஏற்றுமதியாகும் பொருள்களின் மதிப்பு இறக்குமதியாகும் பொருள்களின் மதிப்பை விட அதிகமாக இருந்தால் அதனை சாதகமான வணிகச் சமநிலை என்றும் இதற்கு எதிர் மாறான நிலையை பாதகமான வணிகச் சமநிலை எனவும் அழைக்கிறோம்.

### வணிக வகைகள்

பொதுவாக வணிகம் இருவகைப்படும் அவை

1. உள்நாட்டு வணிகம்
2. பன்னாட்டு வணிகம்

ஒரு நாட்டின் எல்லைக்குள் நடைபெறும் வணிகம் உள்நாட்டு வணிகம் (Internal trade) எனவும் உள்ளூர் வணிகம் (Local Trade) எனவும் அழைக்கப்படுகிறது. உள்நாட்டு வணிகத்தில் நிலவழி போக்குவரத்து முக்கிய பங்காற்றுகிறது. (குறிப்பாக சாலை மற்றும் இரயில் வழி) இவ்வணிக முறையில் உள்நாட்டு நாணயம் பயன்படுத்தப்படுகிறது. இவ்வணிகமுறை நாட்டின் பிரதேச சமச்சீர் வளர்ச்சியை மேம்படுத்துகிறது.

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளுக்கிடையே நடைபெறும் வணிகம் பன்னாட்டு வணிகம் அல்லது அயல்நாட்டு வணிகம் என அழைக்கப்படுகிறது. ஏற்றுமதி மற்றும் இறக்குமதி ஆகியன பன்னாட்டு வணிகத்தின் இரு கூறுகள் ஆகும். பொருள்கள் மற்றும் சேவைகள் அந்நிய நாடுகளுக்கு விற்பது ஏற்றுமதி எனப்படும். அந்நிய நாடுகளிலிருந்து பொருள்களையும், சேவைகளையும் பெறுவது இறக்குமதி எனப்படும்.

பன்னாட்டு வணிகத்தில் நீர்வழி மற்றும் வான்வழி போக்குவரத்து முக்கிய பங்கு வகிக்கிறது. இதில் அந்நிய நாட்டு பணம் பயன்படுத்தப்படுகிறது. வணிகம் இரண்டு நாடுகளுக்கு இடையே நடைபெற்றால் அவை இருத்தரப்பு வணிகம் (Bilateral Trade) என்றும், வணிகம் இரண்டிற்கும் மேற்பட்ட நாடுகளுக்கிடையே நடை பெற்றால் அது பல்தரப்பு வணிகம்( Multilateral Trade) என்றும் அழைக்கப்படுகிறது.

### ஏற்றுமதி பொருள்கள்

காபி, தேயிலை, கடல்சார் பொருள்கள், தாதுக்கள், கனிமங்கள், தோல் பொருள்கள், நவரத்தின கற்கள் மற்றும் ஆபரணங்கள், விளையாட்டு சாமான்கள், இரசாயனம் மற்றும் இரசாயனம் சார்ந்த பொருள்கள், நெகிழிகள், இரப்பர்

**செயல்பாடு**

இந்தியாவுடன் வர்த்தகம் செய்யும் நாடுகளைக் கண்டறிக.

பொருள்கள், கல்வேலைபாட்டு பொருள்கள், சாந்துப் பொருள்கள், சிமெண்ட் ஆஸ்பெஸ்ட்டாஸ், மைக்கா, கண்ணாடி பொருள்கள், உலோகக்கலவைகள், மருந்துகள், அறுவை சிகிச்சை உபகரணங்கள், மின்சாதன பொருள்கள், இயந்திரங்கள், அலுவலக பயன்பாட்டுப் பொருள்கள், ஆடைகள் , கைவினைப் பொருள்கள் போன்றவை இந்தியாவின் முக்கிய ஏற்றுமதி பொருள்களாகும்.

### இறக்குமதி பொருள்கள்

பெட்ரோலிய பொருள்கள், முத்துக்கள், விலையுயர்ந்த மற்றும் மிக விலையுயர்ந்த கற்கள், தங்கம் மற்றும் தொலைத்தொடர்பு சாதனங்கள் போன்றவை இந்தியாவின் முக்கிய இறக்குமதி பொருள்களாகும்.

### பாடச்சுருக்கம்

- ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு நாட்டில் வாழக்கூடிய மக்களின் மொத்த எண்ணிக்கை மக்கள் தொகை ஆகும்.
- மக்கள் தொகை வளர்ச்சியானது பிறப்பு விகிதம், இறப்பு விகிதம் மற்றும் மக்களின் இடப் பெயர்தலால் நிர்ணயிக்கப்படுகிறது.
- கிராமப்புற சமூகம் நகர்புற சமூகமாக மாறும் நிலை நகரமயமாக்கம் எனப்படுகிறது.
- தகவல்தொடர்பானது தனிநபர் மற்றும் பொது தகவல் தொடர்பு என இரண்டாக வகைப்படுத்தப்படுகிறது.
- வணிகம் என்பது பொருள்கள் மற்றும் சேவைகளின் பரிமாற்றமாகும். இது உள்நாட்டு வணிகம் மற்றும் பன்னாட்டு வணிகம் என இருவகைப்படும். ஏற்றுமதி மற்றும் இறக்குமதி சர்வதேச வணிகத்தின் முக்கிய கூறுகள் ஆகும்.

## பயிற்சி

Q3Y3AS

### I சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக

1. மக்கள் தொகையின் பல்வேறு அம்சங்கள் பற்றிய அறிவியல் பூர்வமான படிப்பு ________
   அ) வரைபடவியல் ஆ) மக்களியல்
   இ) மானுடவியல் ஈ) கல்வெட்டியல்
2. ________ போக்குவரத்து நேரடியாக உற்பத்தியாளரையும் நுகர்வோரையும் இணைக்கிறது.
   அ) இரயில்வே ஆ) சாலை
   இ) வான்வழி ஈ) நீர்வழி
3. இந்தியாவில் தங்க நாற்கரச் சாலையின் நீளம்
   அ) 5846 கி.மீ ஆ) 5942 கி.மீ
   இ) 5630 கி.மீ ஈ) 5800 கி.மீ
4. தேசிய தொலையுணர்வு மையம் அமைந்துள்ள இடம் ________
   அ) பெங்களுரு ஆ) சென்னை
   இ) புது டெல்லி ஈ) ஹைதராபாத்
5. எளிதில் செல்லமுடியாத பகுதிகளுக்கு பயன்படும் போக்குவரத்து
   அ) சாலைப்போக்குவரத்து
   ஆ) இரயில் போக்குவரத்து
   இ) வான்வழிப் போக்குவரத்து
   ஈ) நீர்வழிப் போக்குவரத்து
6. கீழ்க்கண்டவற்றில் எவை வானுலங்கு ஊர்தியுடன் (ஹெலிகாப்டர்) தொடர்புடையது?
   அ) ஏர் இந்தியா
   ஆ) இந்தியன் ஏர்லைன்ஸ்
   இ) வாயுதூத்
   ஈ) பவன்ஹான்ஸ்
7. இந்தியாவின் முக்கிய இறக்குமதி பொருள்
   அ) சிமெண்ட் ஆ) ஆபரணங்கள்
   இ) தேயிலை ஈ) பெட்ரோலியம்

### II பொருத்துக

1. எல்லைபுறச் சாலை – செயற்கைக்கோள் தகவல் தொடர்பு
2. INSAT (இன்சாட்) – நகரமயமாக்கலின் தாக்கம்
3. மேசகான் கப்பல்கட்டும் தளம் – 1990
4. புறநகரப் பரவல் – மும்பை
5. கொங்கண் இரயில்வே – 1960 ஹைதராபாத்

### III குறுகிய விடையளி

1. இடம்பெயர்வு என்றால் என்ன? அதன் வகைகளைக் குறிப்பிடுக.



10th_Geography_Unit_5_TM.indd 210 11-04-2020 11:56:26

www.tntextbooks.in

2. இரயில் போக்குவரத்தின் நன்மைகள் ஏதேனும் நான்கினை எழுதுக.
3. நம் நாட்டின் குழாய் போக்குவரத்து அமைப்பு பற்றி ஒரு குறிப்பு எழுதுக .
4. இந்தியாவின் முக்கிய உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்துகளைக் குறிப்பிடுக.
5. தகவல் தொடர்பு என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?
6. பன்னாட்டு வணிகம் – வரையறு.
7. சாலைப் போக்குவரத்தின் சாதக அம்சங்களை குறிப்பிடுக.

## IV வேறுபடுத்துக

1. மக்களடர்த்தி மற்றும் மக்கள்தொகை வளர்ச்சி
2. தனி நபர் தகவல் தொடர்பு மற்றும் பொதுத் தகவல் தொடர்பு
3. அச்சு ஊடகம் மற்றும் மின்னணு ஊடகம்
4. சாலை வழிபோக்குவரத்து மற்றும் இரயில் வழிபோக்குவரத்து
5. நீர்வழிப்போக்குவரத்து மற்றும் வான்வழிப் போக்குவரத்து
6. உள்நாட்டு வணிகம் மற்றும் பன்னாட்டு வணிகம்.

## V ஒரு பத்தியில் விடையளிக்கவும்

1. நகரமயமாக்கம் என்றால் என்ன? அதன் சிக்கல்கள் யாவை?
2. இந்தியாவில் செயற்கைக்கோள் தகவல் தொடர்பின் முக்கியத்துவத்தை விளக்குக.
3. இந்தியாவின் சாலைகளை வகைப்படுத்தி விளக்குக.

## VI இந்திய புறவெளி நிலவரை படத்தில் கீழ்க்கண்ட இடங்களைக் குறிக்கவும்

1. தேசிய நெடுஞ்சாலை எண். 44 (NH44)
2. இந்தியாவின் முக்கியத் துறைமுகங்கள்.
3. இந்தியாவின் முக்கிய பன்னாட்டு விமான நிலையங்கள்.
4. மக்களடர்த்தி மிகுந்த இந்திய மாநிலங்கள்.
5. இந்தியாவின் அதிக கல்வியறிவு பெற்ற மாநிலம்.
6. இந்திய இரயில்வே மண்டலங்கள்.

## மேற்கோள் நூல்கள்


1. D.R.Khullar (2014) India, A comprehensive Geography.
2. Surender Singh and Jitender Saroha (2014) Geography of India, New Delhi: Access publishing
3. Census of India (2011) Provisional Population Totals, “Urban Agglomerations and Cities”.


## இணையதள வளங்கள்

1. www.Commerce,gov.in
2. www.konkan Railway.com
3. www.Community.data.gov.in



10th_Geography_Unit_5_TM.indd 211 11-04-2020 11:56:27

# அலகு – 6

# தமிழ்நாடு – இயற்கைப் பிரிவுகள்



## கற்றலின் நோக்கங்கள்

H11DR8


- நமது மாநிலத்தின் உருவாக்கம் பற்றிய வரலாற்றைத் தெரிந்துகொள்ளல்
- தமிழ்நாட்டின் இயற்கைப் பிரிவுகள் பற்றி கற்றறிதல்
- தமிழ்நாட்டின் காலநிலை, மண் வகைகள் மற்றும் இயற்கை தாவரங்களின் தன்மைகளைப் புரிந்துகொள்ளல்
- மாணவர்கள் தாங்கள் வசிக்கும் இடத்தில் சுற்றுச்சூழல் மற்றும் புவியியல் கூறுகள் பற்றி அறிந்துகொள்ளல்
- தமிழ்நாட்டில் நிகழும் பேரிடர்கள் மற்றும் அதன் தாக்கங்கள் குறித்து விழிப்புணர்வு பெறுதல்

## அறிமுகம்

புவியில் சிறந்த குடிமகனாக விளங்குவதற்கான முதல் படி, தான் வசிக்கும் பகுதியைப் பற்றி கற்றறிவதேயாகும். நாம் உள்ளூர் சூழலைப் பற்றி கற்பதன் நோக்கம், நம்முடைய சுற்றுச்சூழலில் வாழ்க்கை முறையைப் புரிந்து கொள்வதாகும். முதல் 5 பாடங்களில் நம் நாட்டின் பல்வேறு புவியியல் தன்மைகளைப் பற்றி கற்றறிந்தீர்கள். இப்பாடத்திலும் பின்வரும் பாடத்திலும் தமிழ்நாட்டின் புவியியலைப் பற்றி அறிந்து கொள்ளலாம். தமிழ்மொழி பிறப்பியல், மாநில உருவாக்க வரலாறு, அமைவிடம், பரப்பளவு, இயற்கைப் பிரிவுகள், ஆறுகள், காலநிலை, மண் வகைகள் மற்றும் இயற்கை தாவரங்கள் பற்றி இப்பாடத்தில் காண்போம்.

இதன் நேர்த்தியான நில அமைப்பு மற்றும் காலநிலை நம் மாநிலத்தை இந்தியாவில் தனித்துவம் கொண்டதாக உருவாக்கியுள்ளது. இது வெப்ப மண்டல கடற்கரைகள், நீர்வீழ்ச்சிகள்,

**இந்தியாவில் தமிழ்நாட்டின் அமைவிடம்**




**உங்களுக்குத் தெரியுமா?**

1956ஆம் ஆண்டு மாநில மறுசீரமைப்புச் சட்டத்தின் படி, மொழியியல் அடிப்படையில் மாநிலங்கள் மறுசீரமைப்பு செய்யப்பட்டுள்ளன.

- இந்தியாவில் மொழி அடிப்படையில் தோற்றுவிக்கப்பட்ட முதல் மாநிலம் எது?
- தமிழக தலைநகரத்தின் பெயர் மாற்றம் செய்யப்பட்டது ஏன் ?

மலைகள், காடுகள், பல்வகை தாவரங்கள் மற்றும் விலங்கினங்களைக் கொண்டது.

## 6.1 அமைவிடம் மற்றும் பரப்பளவு

இந்தியாவின் 28 மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று. இது இந்தியாவின் தென்பகுதியில் அமைந்துள்ளது. இதன் நிலப்பரப்பு 8°4′ வட அட்சம் முதல் 13°35′ வட அட்சம் வரையிலும், 76°18′ கிழக்கு தீர்க்கம் முதல் 80°20′ கிழக்கு தீர்க்கம் வரையிலும் பரவியுள்ளது.

தமிழ்நாட்டின் கடைக்கோடிப் பகுதிகளாக

- கிழக்கில் கோடியக்கரையும்
- மேற்கில் ஆனைமலையும்
- வடக்கில் பழவேற்காடு ஏரியும்
- தெற்கில் குமரிமுனையும் அமைந்துள்ளன.

தமிழகத்தின் பரப்பளவு 1,30,058 சதுர கிலோமீட்டர்களாகும். இது இந்தியாவின் பதினோராவது பெரிய மாநிலமாகும். இந்தியப் பரப்பில் சுமார் 4 சதவிகிதத்தினைக் கொண்டுள்ளது.

### எல்லைகளும் அதன் அண்டை மாநிலங்களும்

கிழக்கே வங்காள விரிகுடாவும், மேற்கே கேரளாவும், வடக்கே ஆந்திரப்பிரதேசமும், வடமேற்கே கர்நாடகாவும், தெற்கே இந்தியப் பெருங்கடலும் தமிழ்நாட்டின் எல்லைகளாக அமைந்துள்ளன. மன்னார் வளைகுடா மற்றும் பாக் நீர்ச்சந்தி தமிழ்நாட்டையும் இந்தியாவின் தென்கிழக்கில் உள்ள இலங்கையையும் பிரிக்கின்றன. குஜராத்திற்கு அடுத்தபடியாக தமிழ்நாடு 940 கிலோ மீட்டர் நீளமுடன் இந்தியாவின் மூன்றாவது நீளமான கடற்கரையைக் கொண்டுள்ளது.

### அரசியல் பிரிவுகள்

தமிழ்நாடு உருவான காலகட்டத்தில் 13 மாவட்டங்கள் மட்டுமே இருந்தன என்பதை முன்பே அறிந்தோம். அதன்பிறகு நிர்வாக வசதிக்காக மாநிலம் பல முறை மறுசீரமைப்பு செய்யப்பட்டது. தமிழ்நாட்டில் தற்போது புதியதாக உருவாக்கப்பட்டுள்ள மாவட்டங்களான கள்ளக்குறிச்சி, தென்காசி, செங்கல்பட்டு, ராணிப்பேட்டை மற்றும் திருப்பத்தூர் ஆகியவற்றுடன் 37 மாவட்டங்கள் உள்ளன. பின்வரும் அட்டவணையில் மாநில நிர்வாக பிரிவுகள் கொடுக்கப்பட்டுள்ளன.

**செயல்பாடுகள்**

- நில வரைபட உதவியுடன் தமிழகக் கடலோர மாவட்டங்களைக் கண்டறிக.
- ஆந்திரப்பிரதேசம், கர்நாடகம் மற்றும் கேரளா மாநிலங்களுடன் எல்லைகளைப் பகிர்ந்து கொள்ளும் தமிழக மாவட்டங்களைத் தனித்தனியே பட்டியலிடுக.

| நிர்வாக பிரிவுகள் | எண்ணிக்கை |
|---|---|
| மாவட்டங்கள் | 37 (32+5) |
| வருவாய்க் கோட்டங்கள் | 76 |
| வட்டங்கள் | 226 |
| பிர்காக்கள் | 1,127 |
| வருவாய் கிராமங்கள் | 16,564 |
| மாநகராட்சிகள் | 15 |
| நகராட்சிகள் | 125 |
| ஊராட்சி ஒன்றியங்கள் | 385 |
| பேரூராட்சிகள் | 561 |
| கிராம ஊராட்சிகள் | 12,618 |
| மக்களவைத் தொகுதிகள் | 39 |
| சட்டமன்றத் தொகுதிகள் | 234 |

### இயற்கை அமைப்பு

தமிழ்நாட்டின் முக்கிய இயற்கை அமைப்புகளையும் அதன் சிறப்பு அம்சங்களையும் இப்பாடத்தில் காணலாம்.

தீபகற்ப பீடபூமி எனப்படும் தக்காண பீடபூமியில் தமிழ்நாடு அமைந்துள்ளது. இப்பகுதி கிரெட்டேசியஸ் காலத்தில் 135 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு பிரிந்து சென்ற கோண்ட்வானா நிலப்பகுதியிலிருந்து உருவான ஒரு பகுதியாகும். தமிழ்நாடானது நிலத்தோற்றத்தின் அடிப்படையில் மேற்கு தொடர்ச்சி மலை, கிழக்கு தொடர்ச்சி மலை, பீடபூமிகள், கடற்கரைச் சமவெளிகள் மற்றும் உள்நாட்டு சமவெளிகள் என ஐந்து பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்படுகிறது.

## 6.2 மேற்கு தொடர்ச்சி மலை

மேற்கு தொடர்ச்சி மலை வடக்கே நீலகிரி முதல் தெற்கே கன்னியாகுமரி மாவட்ட சுவாமிதோப்பில் உள்ள மருதமலை வரை நீண்டுள்ளது. இம்மலைத்தொடரின் உயரம் 2,000 மீட்டர் முதல் 3,000 மீட்டர் வரை வேறுபட்டுள்ளது. இது 2,500 சதுர கிலோ மீட்டர் பரப்பளவை உடையது. இம்மலைத்தொடர் தொடர்ச்சியாக இருந்தாலும் சில கணவாய்கள் காணப்படுகின்றன.



10th_Geography_Unit_6.indd 213 24-03-2020 12:35:51

# தமிழ்நாடு – அரசியல்







சென்னை, நீலகிரி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களைத் தவிர மற்ற மாவட்டங்கள் பல்வேறு காலகட்டங்களில் பிரித்தமைக்கப்பட்டன.

உமது பள்ளி எந்த அட்ச மற்றும் தீர்க்கரேகைக்கு இடையே அமைந்துள்ளது ?



10th_Geography_Unit_6.indd 214 24-03-2020 12:35:52

பாலக்காட்டு கணவாய், செங்கோட்டைக் கணவாய், ஆரல்வாய்மொழி கணவாய் மற்றும் அச்சன்கோவில் கணவாய் ஆகியன இத்தொடரின் முக்கிய கணவாய்களாகும். நீலகிரி, ஆனைமலை, பழனிமலை, ஏலக்காய் மலை, வருசநாடு, ஆண்டிப்பட்டி மற்றும் அகத்தியர் மலைகள் மேற்கு தொடர்ச்சி மலையில் அமைந்துள்ள முக்கிய மலைகளாகும்.

## நீலகிரி மலை

நீலகிரி மலை தமிழ்நாட்டின் வடமேற்குப் பகுதியில் அமைந்துள்ளது. இம்மலையில் 2,000 மீட்டருக்கு மேல் உயரம் கொண்ட 24 சிகரங்கள் காணப்படுகின்றன. இம்மலையின் உயரமான சிகரம் தொட்டபெட்டா (2,637 மீட்டர்) ஆகும். முக்குருத்தி 2,554 மீட்டர் உயரம் கொண்ட மற்றுமொரு சிகரமாகும். ஊட்டி, குன்னூர் ஆகியவை இம்மலையில் அமைந்துள்ள முக்கிய மலை வாழிடங்களாகும். 2,700 க்கும் அதிகமான பூக்கும் தாவர வகைகள் மற்றும் மாநில விலங்கான நீலகிரி வரையாடு இங்கு காணப்படுகின்றன.



தொட்டபெட்டா

## ஆனைமலை

ஆனைமலை தமிழ்நாடு மற்றும் கேரள மாநில எல்லைப்பகுதியில் பாலக்காட்டு கணவாய்க்கு தெற்கே அமைந்துள்ளது. ஆனைமலை புலிகள் காப்பகம், ஆழியாறு பாதுகாக்கப்பட்ட காடுகள், வால்பாறை மலைவாழிடம், காடம்பாறை நீர்மின் நிலையம் போன்றவை இம்மலைப்பகுதியில் அமைந்துள்ளன. ஆழியாறு மற்றும் திருமூர்த்தி அணைகள் இம்மலையின் அடிவாரத்தில் கட்டப்பட்டுள்ளன .

## பழனி மலை

பழனி மலை, மேற்கு தொடர்ச்சி மலையின் கிழக்குப் பகுதியாகும். மற்றவை திண்டுக்கல் மாவட்டத்தில் அமைந்துள்ளன. பழனி மலையின் மிக உயரமான சிகரம் வந்தராவ் (2,533 மீ) ஆகும். வேம்பாடிசோலை (2,505 மீ) இதன் இரண்டாவது உயர்ந்த சிகரமாகும். மலைவாழிடமான கொடைக்கானல் (2,150 மீ) பழனிமலையின் தென் மத்தியப் பகுதியில் அமைந்துள்ளது.



பழனி மலை

## ஏலக்காய் மலை

தமிழ்நாட்டின் தென்மேற்கு பகுதியில் அமைந்துள்ள இம்மலைகள் ஏலமலைக் குன்றுகள் எனவும் அழைக்கப்படுகின்றன. இங்கு அதிகமான ஏலக்காய் பயிரிடப்படுவதால் இப்பெயர் பெற்றது. மிளகு மற்றும் காபி ஆகியன இம்மலைப்பகுதியில் பயிரிடப்படும் முக்கிய பயிர்களாகும். இவை வடமேற்கில் ஆனைமலையோடும் வடகிழக்கில் பழனி மலையோடும், தென்கிழக்கில் ஆண்டிப்பட்டி மற்றும் வருசநாடு குன்றுகளோடும் இணைகின்றன.

| மேற்கு தொடர்ச்சி மலையிலுள்ள சிகரங்கள் | உயரம் (மீட்டரில்) |
|---|---|
| தொட்டபெட்டா | 2,637 |
| முக்குருத்தி | 2,554 |
| வேம்படி சோலை | 2,505 |
| பெருமாள் மலை | 2,234 |
| கோட்டை மலை | 2,019 |
| பகாசுரா | 1,918 |

## வருசநாடு மற்றும் ஆண்டிப்பட்டி மலைக்குன்றுகள்

மேற்கு தொடர்ச்சி மலையின் கிழக்கு நோக்கிய நீட்சி வருசநாடு மற்றும் ஆண்டிப்பட்டி குன்றுகள் ஆகும். மேகமலை, கழுகுமலை, குரங்கனி மலை, சுருளி மற்றும் கும்பக்கரை நீர்வீழ்ச்சிகள் ஆகியவை இம்மலைகளில் காணப்படுகின்றன. இம்மலையின் தெற்கு சரிவுகளில் ஸ்ரீவில்லிபுத்தூர் 'மலை அணில் சரணாலயம்' விருதுநகர் மாவட்டத்தில் அமைந்துள்ளது. வைகை மற்றும் அதன் துணை ஆறுகள் இப்பகுதியில் உருவாகின்றன.

## பொதிகை மலை

இம்மலையின் பெரும்பகுதி திருநெல்வேலி மாவட்டத்திலும் இதன் தென்சரிவு கன்னியாகுமரி மாவட்டத்திலும் அமைந்துள்ளது. சிவஜோதி பர்வத், அகத்தியர் மலைகள் மற்றும் தெற்கு கைலாயம் என பல்வேறு பெயர்களில் இவை அழைக்கப்படுகிறது.



10th_Geography_Unit_6.indd 215 24-03-2020 12:35:52

மேற்கு தொடர்ச்சி மலை உயிர்ப்பன்மை செறிந்த ஒன்றாகத் திகழ்கிறது. இப்பகுதி வளமான பசுமை மாறாக் காடுகள், நீர்வீழ்ச்சிகள் மற்றும் பழமையான கோயில்கள் ஆகியவற்றுக்கு புகழ்பெற்றதாகும். களக்காடு–முண்டந்துறை 'புலிகள் காப்பகம்' இப்பகுதியில் அமைந்துள்ளது.

### மகேந்திரகிரி மலைக்குன்றுகள்

இம் மலைத்தொடர் கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களின் எல்லை பகுதிகளாகவும் மேற்கு தொடர்ச்சி மலையின் தென்பகுதியாகவும் அமைந்துள்ளது. இதன் சராசரி உயரம் 1,645 மீ ஆகும்.

## 6.3 கிழக்கு தொடர்ச்சி மலை

மேற்கு தொடர்ச்சி மலையைப் போலன்றி கிழக்கு தொடர்ச்சி மலையானது ஒருதொடர்ச்சியற்ற குன்றுகளாகும். இம்மலையானது பல இடங்களில் வங்காள கடலில் கலக்கும் ஆறுகளால் பிரிக்கப்பட்டுள்ளது. இம்மலையின் உயரம் 1,100 மீட்டர் முதல் 1,600 மீட்டர் வரை மாறுபடுகிறது. இக்குன்றுகள் பீடபூமியை சமவெளியிலிருந்து பிரிக்கின்றன. ஜவ்வாது, சேர்வராயன், கல்வராயன், கொல்லி மலை மற்றும் பச்சை மலை ஆகியவை தமிழ்நாட்டிலுள்ள கிழக்கு தொடர்ச்சி மலையின் முக்கிய குன்றுகளாகும். இவைகள் மாநிலத்தின் வட மாவட்டங்களில் அமைந்துள்ளன

### ஜவ்வாது மலை

கிழக்கு தொடர்ச்சி மலையின் நீட்சியான இம்மலைகள் திருவண்ணாமலை மற்றும் வேலூர் மாவட்டங்களில் பரவியுள்ளன. இம்மலை இவ்விரண்டு மாவட்டங்களையும் பிரிக்கிறது. சுமார் 1,100 முதல் 1,150 மீட்டர் உயரம் கொண்ட பல்வேறு சிகரங்கள் இம்மலைத்தொடரில் அமைந்துள்ளன. இம்மலையின் மிக உயரமான சிகரம் மேல்பட்டு ஆகும். ஜவ்வாது மலையின் பல பகுதிகள் நீல நிற சாம்பல் கிரானைட் பாறைகளால் உருவானது. பல்வேறு பழ மரங்கள், மருத்துவ மூலிகைகள் மற்றும் சந்தன மரங்கள் போன்றவற்றிற்கு இப்பகுதி பெயர் பெற்றது. சட்டவிரோத மரம் வெட்டுதலால் தற்பொழுது இப்பகுதியின் சந்தன மரங்கள் அழிந்துவிட்டன.

### கல்வராயன் மலை

"கல்வராயன்" என்ற சொல் தற்போதுள்ள பழங்குடியினரின் பண்டைய கால பெயரான 'கரலர்' என்ற சொல்லிலிருந்து பெறப்பட்டது. தமிழ்நாட்டிலுள்ள கிழக்கு தொடர்ச்சி மலைகளில் ஒரு முக்கிய மலை கல்வராயன் மலையாகும். இம்மலை ஜவ்வாது மற்றும் சேர்வராயன் மலைகளுடன் இணைந்து காவிரி மற்றும் பாலாறு ஆகியவற்றின் ஆற்று வடிநிலப் பகுதியைப் பிரிக்கிறது. இம்மலைத் தொடரின் உயரம் 600 மீ முதல் 1,220 மீ வரை காணப்படுகிறது.

### 6.3.3 சேர்வராயன் மலை

1,200 முதல் 1,620 மீட்டர் வரையிலான உயரம் கொண்ட சேர்வராயன் மலைத் தொடர் சேலம் நகருக்கு அருகே அமைந்துள்ளது. இம்மலைத்தொடரின் பெயரானது உள்ளூர் தெய்வமான 'சேர்வராயன்' என்ற பெயரில் இருந்து வந்ததாகும். இவற்றில் அமைந்துள்ள 1,620 மீட்டர் உயரம் கொண்ட 'சோலைக்கரடு' என்பது கிழக்குத் தொடர்ச்சி மலையின் தென் பகுதியில் அமைந்துள்ள உயரமான சிகரமாகும். 'ஏழைகளின் ஊட்டி' என்று அழைக்கப்படும் ஏற்காடு மலைவாழிடம் இம்மலைத் தொடரில் அமைந்துள்ளது. இங்குள்ள சேர்வராயன் கோவில் இப்பகுதியின் உயரமான பகுதி ஆகும் (1,623 மீட்டர்).

| கிழக்கு தொடர்ச்சி மலையிலுள்ள சிகரங்கள் | உயரம் (மீட்டரில்) |
|---|---|
| சேர்வராயன் மலை | 1,623 |
| பழமலை | 1,500 |
| உருகமலை | 1,486 |
| குட்டிராயன் | 1,395 |
| முகனூர் | 1,279 |
| வலசமலை | 1,034 |

மலைகளின் உயரம் கடல் மட்டத்திலிருந்து அளக்கப்படுவது ஏன்? ஏன் நிலப்பகுதியில் இருந்து அளவிடப்படவில்லை?

### கொல்லி மலை

கொல்லி மலை நாமக்கல் மாவட்டத்தில் அமைந்துள்ள ஒரு சிறிய மலைத்தொடராகும். இது சுமார் 2,800 சதுர கிலோமீட்டர் பரப்பளவைக் கொண்டது. 1,300 மீட்டர் வரை உயரம் கொண்ட இம்மலைத் தொடரானது, தென்னிந்தியாவின் கிழக்கு கடற்கரைக்கு இணையாகச் செல்கிறது. அரப்பளீஸ்வரர் கோவில் இந்த மலைத்தொடரில் அமைந்துள்ள முக்கியமான புனிதத் தலமாகும். கிழக்குத் தொடர்ச்சி மலைகளின் பிற பகுதிகளை ஒப்பிடுகையில் இங்கு பசுமைமாறா காடுகள் அல்லது சோலை காடுகள் அதிகம் காணப்படுகின்றன. பல காபி தோட்டங்கள், பழங்கள், பூக்கள் மற்றும் சவுக்குப் பண்ணைகள் இம்மலைப் பகுதியில் காணப்படுகின்றன.

### பச்சை மலை

திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர் மற்றும் சேலம் மாவட்டங்களில் உயரம் குறைந்த குன்றுத் தொடராக இது காணப்படுகின்றது. தமிழ் மொழியில் 'பச்சை' என்பது பசுமையைக் குறிக்கிறது. இம்மலைகளில் காணப்படும் தாவரங்கள் மற்ற பகுதியை விட பசுமையாக காணப்படுவதால் இது பச்சைமலை என அழைக்கப்படுகிறது. இம்மலைகளில் பலாப்பழம் ஒரு குறிப்பிடத்தக்க வேளாண் பருவ விளைபொருளாக உள்ளது.

### தமிழ்நாட்டில் அமைந்துள்ள முக்கிய மலைகள்

| மாவட்டங்கள் | மலைகள் |
|---|---|
| கோயம்புத்தூர் | மருதமலை, வெள்ளியங்கிரி மற்றும் ஆனைமலை |
| தர்மபுரி | தீர்த்த மலை, சித்தேரி மற்றும் வத்தல் மலை |
| திண்டுக்கல் | பழனிமலை மற்றும் கொடைக்கானல் |
| ஈரோடு | சென்னிமலை மற்றும் சிவன் மலை |
| வேலூர் | ஜவ்வாது, ஏலகிரி மற்றும் இரத்தினமலை |
| நாமக்கல் | கொல்லிமலை |
| சேலம் | சேர்வராயன், கஞ்சமலை மற்றும் சுண்ணாம்புக் குன்றுகள் |
| கள்ளக்குறிச்சி | கல்வராயன் |
| விழுப்புரம் | செஞ்சிமலை |
| பெரம்பலூர் | பச்சை மலை |
| கன்னியாகுமரி | மருதுவாழ் மலை |
| திருநெல்வேலி | மகேந்திரகிரி மற்றும் அகத்திய மலை |
| நீலகிரி | நீலகிரி மலை |

## 6.4 பீடபூமிகள்

தமிழ்நாட்டிலுள்ள பீடபூமி மேற்கு தொடர்ச்சி மலைகள் மற்றும் கிழக்கு தொடர்ச்சி மலைகளுக்கு இடையே அமைந்துள்ளது. ஏறக்குறைய முக்கோண வடிவத்தில் சுமார் 60,000 சதுர கிலோமீட்டர் பரப்பளவைக் கொண்டுள்ளது.

தமிழ்நாட்டின் வடமேற்கு பகுதியில் அமைந்திருக்கும் பாரமஹால் பீடபூமியானது மைசூர் பீடபூமியின் ஒரு பகுதியாகும். இதன் உயரம் சுமார் 350 மீட்டர் முதல் 710 மீட்டர் வரை காணப்படுகிறது. இந்தப் பீடபூமியில் தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள் அமைந்துள்ளன.

கோயம்புத்தூர் பீடபூமியானது நீலகிரி மற்றும் தர்மபுரி மாவட்டங்களுக்கு இடையே அமைந்துள்ளது. இதன் உயரம் 150 மீட்டர் முதல் 450 மீட்டர் வரை மாறுபடுகிறது. இப்பீடபூமி சேலம், கோயம்புத்தூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களை உள்ளடக்கியுள்ளது. மோயர் ஆறு இப்பீடபூமியை மைசூர் பீடபூமியில் இருந்து பிரிக்கிறது.

மேற்கு தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகும் பவானி, நொய்யல் மற்றும் அமராவதி ஆறுகள் இப்பீடபூமியில் பள்ளத்தாக்குகளை உருவாக்கி உள்ளன. நீலகிரி பகுதிகளில் பல மலையிடை பீடபூமிகள் காணப்படுகின்றன. சிகூர் பீடபூமி அவற்றில் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

மதுரை பீடபூமி, மதுரை மாவட்டத்தில் காணப்படுகிறது. இது மேற்கு தொடர்ச்சி மலையின் அடிவாரம் வரை நீண்டுள்ளது. வைகை மற்றும் தாமிரபரணி வடிநிலப் பகுதிகள் இப்பகுதியில் அமைந்துள்ளன.

## 6.5 சமவெளிகள்

தமிழ்நாட்டில் காணப்படும் சமவெளிகளை இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை:

1. உள்நாட்டு சமவெளிகள்
2. கடற்கரை சமவெளிகள்

பாலாறு, பெண்ணையாறு, காவிரி மற்றும் தாமிரபரணி ஆகிய ஆறுகள் உள்நாட்டு சமவெளிகளை உருவாக்கியுள்ளது. காவிரியாற்றுச் சமவெளி தமிழ்நாட்டிலுள்ள வளமான சமவெளிகளுள் ஒன்றாகும். காவிரி சமவெளியானது சேலம், ஈரோடு, கரூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் பரவியுள்ளது.

தமிழ்நாட்டின் கடற்கரைச் சமவெளியானது கோரமண்டல் அல்லது சோழமண்டல சமவெளி (சோழர்கள் நிலம்) எனவும் அழைக்கப்படுகிறது. இச்சமவெளி சென்னை முதல் கன்னியாகுமரி வரை நீண்டுள்ளது. இச்சமவெளி கிழக்கு நோக்கிப் பாய்ந்து வங்காள விரிகுடாவில் கலக்கும் ஆறுகளால் உருவாக்கப்பட்டுள்ளது. சில இடங்களில் இவை 80 கிலோ மீட்டருக்கும் அதிகமான அகலத்துடன் காணப்படுகிறது.

# தமிழ்நாட்டின் இயற்கையமைப்பு






10th_Geography_Unit_6.indd 218 24-03-2020 12:35:52

இது ஒரு உயரமான கடற்கரை என்றாலும் சில பகுதிகள் கடலில் மூழ்கி உள்ளன. இராமநாதபுரம் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் கடற்கரையோரங்களில் உருவாக்கப்பட்ட மணல் குன்றுகள் 'தேரி' என்று அழைக்கப்படுகிறது. கிழக்குக் கடற்கரைச் சமவெளிப் பகுதியில் உள்ள மன்னார்வளைகுடாவில் பவளப்பாறைகள் காணப்படுகின்றன.

### கடற்கரைகள்

வங்காள விரிகுடாக் கடலையொட்டிய சோழமண்டலக் கடற்கரை பல அழகான மற்றும் சிறப்புவாய்ந்த கடற்கரைகளைக் கொண்டுள்ளது. தமிழ்நாட்டில் தங்க மணல் கடற்கரை பகுதியில் பனை மரங்களும், சவுக்குத் தோப்புகளும் பரவலாகக் காணப்படுகின்றன. சென்னையின் மெரினா மற்றும் எலியட் கடற்கரைகளும் கோவளம் (காஞ்சிபுரம்) மற்றும் வெள்ளி கடற்கரை (கடலூர்) ஆகியவை புகழ்பெற்ற தமிழக கடற்கரைகளாகும்.

## 6.6 வடிகாலமைப்பு

ஆறுகள் தமிழ்நாட்டின் உயிர்நாடிகளாகும். தமிழ்நாட்டில் பல ஆறுகள் காணப்பட்டாலும் காவிரி, பாலாறு, பெண்ணை, வைகை மற்றும் தாமிரபரணி போன்ற ஆறுகள் குறிப்பிடத்தக்கவை ஆகும். தமிழ்நாட்டின் பெரும்பாலான ஆறுகள் மேற்கு தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகி கிழக்கு நோக்கி பாய்ந்து வங்காள விரிகுடாவில் கலக்கின்றன. தாமிரபரணி ஆற்றைத் தவிர மற்ற ஆறுகள் அனைத்தும் வற்றும் ஆறுகளாகும். தாமிரபரணி தென்மேற்கு மற்றும் வடகிழக்கு ஆகிய இரு பருவமழை காலங்களிலும் மழைபெறுவதால் வற்றாத ஆறாக உள்ளது.

### காவிரி

காவிரி ஆறு கர்நாடகா மாநிலத்தில் கூர்க் மாவட்டத்திலுள்ள மேற்கு தொடர்ச்சி மலையில் பிரம்மகிரி குன்றுகளில் தலைக்காவிரி என்னும் இடத்தில் உற்பத்தியாகி 850 கிலோ மீட்டர் நீளத்திற்கு பாய்கிறது. இதில் சுமார் 416 கிலோ மீட்டர் நீளத்திற்கு தமிழ்நாட்டில் பாய்கிறது. இது கர்நாடகா மற்றும் தமிழ்நாடு ஆகியவற்றிற்கு இடையே சுமார் 64 கிலோ மீட்டர் தூரத்திற்கு எல்லையாக உள்ளது. தர்மபுரி மாவட்டத்தில் ஒகேனக்கல் என்னும் இடத்தில் நீர்வீழ்ச்சியை உருவாக்குகிறது. ஸ்டான்லி நீர்த்தேக்கம் என்று அழைக்கப்படும் மேட்டூர் அணை சேலம் மாவட்டத்தில் இவ்வாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது. மேட்டூர் நீர்த்தேக்கத்தில் இருந்து சுமார் 45 கிலோமீட்டர் தொலைவில் பவானி ஆறு இதன் துணையாறாக வலதுகரையில் காவிரியுடன் இணைகிறது. பின்னர் கிழக்கு நோக்கிப் பாய்ந்து தமிழ்நாட்டின் சமவெளிப்பகுதிக்குள் நுழைகிறது. கரூரில் இருந்து 10 கி.மீ தொலைவிலுள்ள திருமுக்கூடல் என்னும் இடத்தில் வலதுகரையில் மேலும் இரண்டு துணை ஆறுகளான அமராவதி மற்றும் நொய்யல் ஆறுகள் இணைகின்றன. இப்பகுதியில் ஆற்றின் அகலம் அதிகமாக இருப்பதால், இது "அகன்ற காவிரி' என அழைக்கப்படுகிறது.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் இந்த ஆறு இரண்டு கிளைகளாகப் பிரிகிறது. வடகிளை கொலேருன் அல்லது கொள்ளிடம் என்றும் தென்கிளை காவிரியாகவும் தொடர்கிறது. இவ்விடத்திலிருந்து காவிரி டெல்டா சமவெளி தொடங்குகிறது. சுமார் 16 கிலோமீட்டர் தொலைவிற்கு பாய்ந்த பின் மீண்டும் இவ்விரு கிளைகள் இணைந்து '**ஸ்ரீரங்கம் தீவை**' உருவாக்குகின்றன. 'கிராண்ட் அணைகட்' என்றழைக்கப்படும் கல்லணை காவிரியாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது. இந்த ஆறு கல்லணையைக் கடந்த பின் பல கிளைகளாகப் பிரிந்து டெல்டா பகுதி முழுவதற்கும் ஒரு வலைப்பின்னல் அமைப்பை உருவாக்கி உள்ளது. காவிரி டெல்டா பகுதிகளில் கிளை ஆறுகளால் உண்டாகியுள்ள இவ்வலைப்பின்னல் அமைப்பு '**தென்னிந்தியாவின் தோட்டம்**' என்று அழைக்கப்படுகிறது. பின்னர் கடலூருக்கு தெற்கே வங்க கடலில் கலக்கிறது.

உங்களுக்குத் தெரியுமா?

பாம்பன், முயல் தீவு, குருசடை, நல்லதண்ணி தீவு, புள்ளி வாசல், ஸ்ரீரங்கம், உப்புதண்ணித் தீவு, தீவுத்திடல், காட்டுப்பள்ளித் தீவு, குவிப்பில் தீவு மற்றும் விவேகானந்தர் நினைவுப் பாறை ஆகியன தமிழ்நாட்டில் உள்ள முக்கிய தீவுகள் ஆகும்.

### பாலாறு

பாலாறு கர்நாடகாவின் கோலார் மாவட்டத்தில் தலகவரா கிராமத்திற்கு அப்பால் உற்பத்தி ஆகிறது. இது சுமார் 17,871 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் பாய்கிறது. இதில் 57% தமிழகத்திலும் மீதிமுள்ள பகுதிகள் கர்நாடகா மற்றும் ஆந்திரப் பிரதேசத்திலும் உள்ளன.

பொன்னி, கவுண்டினியா நதி, மலட்டாறு, செய்யாறு மற்றும் கிளியாறு ஆகியன பாலாற்றின் துணை ஆறுகளாகும். இவ்வாற்றின் மொத்த நீளம் 348 கிலோமீட்டர் ஆகும். இதில் 222 கி.மீ. தொலைவு தமிழ்நாட்டில் பாய்கிறது. இது வேலூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்கள் வழியாகப்பாய்ந்து, கூவத்தூருக்கு அருகே வங்காள விரிகுடாவில் கலக்கிறது.

### தென்பெண்ணையாறு / தென்பொருணையாறு

இது கிழக்கு கர்நாடகாவின் நந்தி துர்கா மலைகளின் கிழக்கு சரிவுகளிலிருந்து உருவாகிறது. இதன் வடிநிலப்பரப்பு சுமார் 16,019 சதுர கிலோ மீட்டர் ஆகும். இதில் 77% தமிழ்நாட்டில் உள்ளது. கிருஷ்ணகிரி, தர்மபுரி, வேலூர், திருவண்ணாமலை, கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்கள் வழியாக தென்கிழக்கு திசையில் சுமார் 247 கிலோ மீட்டர் நீளத்திற்கு இந்நதி பாய்கிறது. கெடிலம் மற்றும் பெண்ணையாறு என இரண்டு கிளைகளாக திருக்கோவிலூர் அணைக்கட்டிற்கு அருகில் பிரிகிறது.

கெடிலம் ஆறு கடலூருக்கு அருகிலும் பெண்ணையாறு புதுச்சேரி யூனியன் பிரதேசத்திற்கு அருகிலும் வங்கக் கடலில் கலக்கின்றன. சின்னாறு, மார்க்கண்ட நதி, வாணியாறு மற்றும் பாம்பன் ஆறு ஆகியன முக்கிய துணை ஆறுகளாகும். இந்த ஆறு உற்பத்தியாகும் இடங்களில் கனமழை காரணமாக திடீர், குறுகியகால வெள்ளப்பெருக்கினை ஏற்படுத்துகிறது. இது தமிழ்நாட்டின் முக்கிய நீர்ப்பாசன ஆதாரமாக உள்ளது. ஆற்றின் குறுக்கே கிருஷ்ணகிரி மற்றும் சாத்தனூர் நீர்த்தேக்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. பெண்ணையாறு இந்து சமய மக்களால் புனித நதியாகக் கருதப்படுகிறது. மேலும் தமிழ் மாதமான தை மாதத்தில் இந்த ஆற்றுப் பகுதியில் (ஜனவரி, பிப்ரவரி) பல்வேறு விழாக்கள் கொண்டாடப்படுகின்றன.

### வைகை

வைகையாறு தமிழ்நாட்டின் மேற்கு தொடர்ச்சி மலையிலுள்ள வருச நாட்டு குன்றுகளின் கிழக்குச் சரிவில் உற்பத்தியாகிறது. இதன் வடிநிலம் சுமார் 7,741ச.கி.மீ பரப்பளவைக் கொண்டது.

இப்பரப்பளவு முழுவதும் தமிழகத்தில் அமைந்துள்ளது. இது மதுரை, சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களின் வழியாகப் பாய்கிறது. இதன் மொத்த நீளம் சுமார் 258 கிலோ மீட்டராகும். இவ்வாற்றின் நீரானது இராமநாதபுரத்தின் பெரிய ஏரி மற்றும் பல சிறிய ஏரிகளில் நிரப்பப்பட்டு பின் ஏரிகளிலிருந்து வெளியேறும் உபரி நீரானது இராமநாதபுரம் அருகில் உள்ள பாக் நீர்ச்சந்தியில் கலக்கிறது.

### தாமிரபரணி

தாமிரபரணி எனும் பெயர் தாமிரம் (காப்பர்) மற்றும் வருணி (சிற்றோடைகள்) என்பதிலிருந்து பெறப்பட்டது. இவ்வாறுகளில் கரைந்திருக்கும் செம்மண் துகள்கள் காரணமாக இந்நதியின் நீரானது செந்நிறத் தோற்றத்துடன் காணப்படுகிறது.

தாமிரபரணி, அம்பாசமுத்திரம் வட்டம் பாபநாசத்திலுள்ள மேற்கு தொடர்ச்சி மலையின் பொதிகை மலை முகடுகளில் தோன்றுகிறது. இவ்வாற்றின் தோற்றம் அகத்திய முனிவரோடு தொடர்புடையதாகக் கருதப்படுகிறது. திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களின் வழியே பாய்ந்து இறுதியில் வங்கக் கடலில் கலக்கிறது. காரையாறு, சேர்வலாறு, மணிமுத்தாறு, கடனா நதி, பச்சையாறு, சிற்றாறு மற்றும் இராமநதி ஆகியன இதன் முக்கிய துணை ஆறுகளாகும். இது தென்னிந்தியாவின் ஒரே வற்றாத நதியாகும்.




### தமிழ்நாட்டின் முக்கிய நீர்விழ்ச்சிகள்

| மாவட்டங்கள் | நீர்விழ்ச்சிகள் |
|---|---|
| தர்மபுரி | ஒகேனக்கல் |
| திருநெல்வேலி | கல்யாண தீர்த்தம் மற்றும் குற்றாலம் |
| தேனி | கும்பக்கரை மற்றும் சுருளி |
| நாமக்கல் | ஆகாய கங்கை |
| நீலகிரி | கேத்தரின், பைக்காரா |
| சேலம் | கிள்ளியூர் |
| விருதுநகர் | ஐயனார் |
| கோயம்புத்தூர் | வைதேகி, செங்குபதி, சிறுவாணி மற்றும் கோவை குற்றாலம் |
| திருப்பூர் | திருமூர்த்தி |
| மதுரை | குட்லாடம்பட்டி |
| கன்னியாகுமரி | திருப்பரப்பு, காளிகேசம், உலக்கை மற்றும் வட்டப்பாறை |

## 6.7 காலநிலை

கடகரேகை இந்தியாவை இரு சமபாகங்களாகப் பிரிப்பதையும், தமிழ்நாடு கடகரேகைக்கு தெற்கேயும் பூமத்தியரேகைக்கு அருகாமையிலும் அமைந்துள்ளது என்பதையும் ஏற்கனவே கற்றுள்ளீர்கள். சூரியனின் செங்குத்து கதிர்களினால் வெப்பநிலையானது ஆண்டு முழுவதும் அதிக அளவில் காணப்படுகிறது. தமிழகம் வெப்பமண்டல காலநிலை மண்டலத்தில் அமைந்திருந்தாலும் கிழக்கு கடற்கரைப்பகுதி வெப்பமண்டல கடல் காலநிலையைப் பெறுகிறது. இந்தியப் பெருங்கடல் மற்றும் வங்கக்கடல் இரண்டும் கடற்கரையோர காலநிலையில் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன.

கிழக்கு கடற்கரை பகுதியில் வெப்பமண்டலக் கடல் ஆதிக்க காலநிலையும் அதேவேளையில் மாநிலத்தின் மேற்குப் பகுதியில் மலைப்பாங்கான காலநிலையும் நிலவுகிறது. ஆனால் தமிழகத்தின் மத்திய பகுதிகள் குறைந்த உயரமும் கடலிலிருந்து விலகியும் இருப்பதால் அதிக வெப்பநிலை மற்றும் வறண்ட காலநிலை நிலவுகிறது. சூரியனின் செங்குத்துக் கதிர்களின் இடப்பெயர்வால் தமிழகத்தில் பல்வேறு பருவகாலங்கள் உருவாகின்றன. அவை:

**தமிழ்நாட்டின் பருவக்காலங்கள்**

| பருவக்காலம் | காலம் |
|---|---|
| குளிர்காலம் | ஜனவரி – பிப்ரவரி |
| கோடைக் காலம் | மார்ச் – மே |
| தென்மேற்கு பருவக்காற்று காலம் | ஜூன் – செப்டம்பர் |
| வடகிழக்கு பருவக்காற்று காலம் | அக்டோபர் – டிசம்பர் |

### குளிர்காலம்

ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில் சூரியனின் செங்குத்துக்கதிர்கள் பூமத்திய ரேகைக்கும் மகர ரேகைக்கும் இடையே விழுகிறது. இக்காலத்தில் தமிழ்நாடு உள்பட இந்தியா முழுவதும் சாய்வான சூரியக்கதிர்களைப் பெறுகின்றன. ஆதலால் இம்மாதங்களில் காலநிலை சற்று குளிராகக் காணப்படுகிறது. தமிழகத்தில் குளிர்கால வெப்பநிலையானது 15°C முதல் 25°C வரை மாறுபடுகிறது. இருந்தபோதிலும் மலைவாழிடங்களில் குளிர்கால வெப்பநிலையானது சில நேரங்களில் 5°C க்கும் குறைவாக உள்ளது. நீலகிரியில் சில பள்ளத்தாக்குகளில் வெப்பம் 0°C ஆகவும் பதிவாகிறது.

இக்குறைந்த வெப்பநிலை அடர் மூடுபனி மற்றும் மூடுபனி உருவாகக் காரணமாகிறது. இப்பருவத்தில் வறண்ட வானிலையே நிலவுகிறது

### கோடைக்காலம்

சூரியனின் வடக்கு நோக்கிய நகர்வு மார்ச், ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் நிகழ்வதால் சூரியனின் செங்குத்துக் கதிரானது தென்னிந்தியாவில் விழுகிறது. ஆகையால் பூமத்திய ரேகையிலிருந்து வெப்பநிலையானது படிப்படியாக அதிகரிக்கிறது. தமிழகம், கடகரேகைக்கு தென்பகுதியில் அமைந்திருப்பதால் அதிக வெப்பநிலையைப் பெறுகின்றது. பொதுவாக வெப்பநிலையானது 30°C லிருந்து 40°C வரை வேறுபடுகிறது. இப்பருவத்தில் குறிப்பாக மே மாதத்தில் தமிழகத்தின் தென்பகுதி முன் பருவமழை மூலமும், வெப்பச்சலனம் மூலமும் மழையைப் பெறுகிறது.

1. அக்னி நட்சத்திரம் என்றால் என்ன?
2. தமிழகத்தை குறைந்த, மிதமான மற்றும் அதிக மழைபெறும் மாவட்டங்களாகப் பிரிக்கவும்.

### தென்மேற்கு பருவக்காற்று காலம்

மார்ச் முதல் மே மாதம் வரை சூரியனின் செங்குத்து கதிர்களால் வட இந்திய நிலப்பரப்பு அதிக வெப்பத்தைப் பெறுகிறது. இதனால் வட இந்திய பகுதிகளில் குறைந்த அழுத்தம் உருவாகுகிறது.

இச்சமயத்தில் காற்றானது அதிக காற்றழுத்தம் உள்ள இந்தியப் பெருங்கடலிலிருந்து வடக்கு நோக்கி வீசுகிறது. இது தென்மேற்கு பருவக்காற்று உருவாக காரணமாகிறது. இப்பருவத்தில் அரபிக் கடலிலிருந்து வீசும் தென்மேற்கு பருவக்காற்றின் மழைமறைவுப் பிரதேசத்தில் தமிழ்நாடு அமைந்துள்ளதால் மிகக் குறைவான மழைப்பொழிவையேப் பெறுகிறது .

இப்பருவத்தின் மழைப் பதிவு மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி குறைகிறது. கோயம்புத்தூர் பீடபூமி சராசரியாக 50 செ.மீ மழையைப் பெறுகிறது. எனினும் தென்மாவட்டங்களான கன்னியாகுமரி, திருநெல்வேலி மற்றும் நீலகிரி மாவட்டங்கள் 50 முதல் 100 செ.மீ வரை மழையைப் பெறுகின்றன. மாநிலத்தின் கிழக்குப் பகுதிகள் மிகக் குறைவான மழைஅளவைப் பெறுகின்றன.

### வடகிழக்கு பருவக்காற்று காலம்

வடகிழக்கு பருவக்காற்று அக்டோபர் முதல் டிசம்பர் மாதத்தின் முதல் பாதி வரை நீடிக்கிறது. மத்திய ஆசியா மற்றும் வட இந்திய பகுதிகளில்



10th_Geography_Unit_6.indd 221 24-03-2020 12:35:54

உருவாகும்அதிகஅழுத்தம்,வடகிழக்குபருவக்காற்று உருவாக காரணமாகிறது. இப்பருவத்தில் சூரியன் கடகரேகையிலிருந்து மகர ரேகைக்குச் செல்வதால் வெப்பநிலை மற்றும் காற்றழுத்தத்தில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்துகிறது. இதனால் வட இந்தியாவிலிருந்து வங்கக் கடலை நோக்கி காற்று வீசுகிறது. இக்காற்று கொரியாலிஸ் விசை காரணமாக (பூமியின் சுழற்சியால் ஏற்படும் விசை) திசை விலக்கப்பட்டு வடகிழக்கு திசையிலிருந்து வீசுகிறது. ஆகையால் இக்காற்று வடகிழக்கு பருவக் காற்று என்று அழைக்கப்படுகிறது. வடகிழக்கு பருவக் காற்றானது திரும்பிவரும் தென் மேற்கு பருவக் காற்றின் ஒரு பகுதியாதலால் இக்காற்றைப் 'பின்னடையும் பருவக்காற்று' என்றும் அழைப்பர். இப்பருவம் தமிழ்நாட்டின் மழைக்காலமாகும். தமிழ்நாட்டின் வருடாந்திர மழையளவில் 48% இப்பருவத்தில் கிடைக்கிறது. இப்பருவத்தில் கடற்கரை மாவட்டங்கள் 60 சதவீதமும் உள்மாவட்டங்கள் 40 முதல் 50 சதவீதம் வரையிலான வருடாந்திர மழையையும் பெறுகின்றன.

பொதுவாக இப்பருவத்தில் வெப்ப மண்டல சூறாவளிகள் உருவாகின்றன. வங்கக் கடலில் உருவாகின்ற சூறாவளிகள் தமிழ்நாட்டின் கிழக்கு கடற்கரைப் பகுதிகளில் மிக கனத்த மழையைத் தோற்றுவிக்கின்றன. தமிழ்நாட்டின் 50 சதவிகித மழை வெப்ப மண்டல சூறாவளி மூலம் கிடைக்கிறது இப்பருவத்தில் கிழக்கு கடற்கரைப் பகுதிகள் 100 முதல் 200 செ.மீ. வரை மழையைப் பெறுகின்றன. மத்திய மற்றும் வடமேற்கு தமிழகம் 50 முதல் 100 செ.மீ வரை மழையைப் பெறுகின்றன. இச்சூறாவளி காற்றுகள் சில நேரங்களில் பயிர்கள், உயிர் மற்றும் உடமைகளுக்கு பெருத்த சேதத்தை ஏற்படுத்துகின்றன.

உங்களுக்குத் தெரியுமா?

வால்பாறைக்கு அருகிலுள்ள சின்னக்கல்லார் தமிழ்நாட்டின் மிக அதிக மழை பெறும் பகுதியாகவும், இந்தியாவின் மூன்றாவது அதிக மழை பெறும் பகுதியாகவும் உள்ளது.

## 6.8 தமிழ்நாட்டின் மண் வகைகள்

தமிழ்நாட்டில் காணப்படும் மண்வகைகளை அதன் தன்மைகளைக் கொண்டு ஐந்து பிரிவுகளாக வகைப்படுத்தலாம். அவை 1. வண்டல் மண் 2. கரிசல் மண் 3. செம்மண் 4. சரளை மண் மற்றும் 5. உவர் மண்.

### வண்டல் மண்

வண்டல் மண் ஆறுகளால் படிய வைக்கப்படும் நுண் படிவுகளால் உருவாகின்றன.

தமிழ்நாட்டின் ஆற்றுப் பள்ளத்தாக்குகள் மற்றும் கடற்கரையோரப் பகுதிகளில் இம்மண் காணப்படுகிறது. தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், விழுப்புரம், கடலூர், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் இவ்வகை மண் அதிகம் காணப்படுகிறது. சில உள் மாவட்டங்களின் ஆற்றுப் பள்ளத்தாக்குப் பகுதிகளில் சிறிய அளவில் இவை காணப்படுகிறது.

### கரிசல் மண்

தீப்பாறைகள் சிதைவடைவதன்மூலம் கரிசல் மண் உருவாகிறது. இது ரீகர் மண் (Regur soil) என்றும் அழைக்கப்படுகிறது. இம்மண்ணில் பருத்தி நன்கு வளர்வதால் பருத்தி மண் என்றும் அழைக்கப்படுகிறது. கோயம்புத்தூர், மதுரை, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் கரிசல் மண் பெருமளவில் காணப்படுகிறது.

### செம்மண்

தமிழ்நாட்டின் மொத்த பரப்பளவில் சுமார் மூன்றில் இரண்டு பங்கு செம்மண் பரவியுள்ளது. இவை குறிப்பாக மாநிலத்தின் மத்திய மாவட்டங்களில் காணப்படுகின்றன. இம்மண் சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் அதிகம் காணப்படுகின்றது.

### சரளை மண்

சரளை மண்ணானது அதில் கரைந்துள்ள சத்துக்கள் அடித்து செல்லப்படுவதால் உருவாகிறது. இவை ஒரு வளமற்ற மண்ணாகும். காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களின் சில பகுதிகளிலும், நீலகிரி மலையின் சில பகுதிகளிலும் இம்மண் காணப்படுகின்றது.

### உவர் மண்

தமிழ்நாட்டின் சோழமண்டலக் கடற்கரை பகுதிகளில் மட்டுமே இம்மண் காணப்படுகிறது. வேதாரண்யப் பகுதியில் குறிப்பிடத்தக்க அளவில் உவர் மண் காணப்படுகிறது. டிசம்பர் 26, 2004 இல் ஏற்பட்ட சுனாமி அலைகள் அதிக அளவு மணல் படிவுகளை தமிழக கடற்கரைப் பகுதிகளில் படிய வைத்துள்ளன. இதனால் கடற்கரையில் சிலபகுதிகள் பயிரிட உகந்ததாக இல்லை.

## 6.9 மண் அரிப்பு

மண் ஒரு புதுப்பிக்க இயலாத வளமாகும். மண் அரிப்பு ஒரு முறை ஏற்படின் அவற்றை புதுப்பிப்பது எளிதான செயல் அல்ல. காடுகள்



10th_Geography_Unit_6.indd 222 24-03-2020 12:35:54

அழிப்பு, அதிக மேய்ப்பு, நகரமயமாக்கம், அதிக மழைப்பொழிவு ஆகியன மண் அரிப்பின் முக்கிய காரணங்களாகும். மண் அரிப்பு மண்வளத்தை குறைத்து, விளைச்சலைக் குறைக்கிறது. எனவே மண்வளத்தை பாதுகாக்க அதிக கவனம் செலுத்துவது அவசியமாகும்.

## 6.10 இயற்கைத் தாவரங்கள்

இயற்கைத் தாவரம் என்பது புவியில் இயற்கையாக வளரும் தாவரங்களின் தொகுப்பாகும். நிலத்தோற்றம், மண்ணின் தன்மை, வெப்பநிலை மற்றும் மழைப்பொழிவு ஆகியவை இயற்கைத் தாவரங்களின் பரவலை கட்டுப்படுத்தும் முக்கிய காரணிகளாகும்.

1988 தேசிய வனக்கொள்கையின்படி, புவிப்பரப்பில் குறைந்தபட்சம் மூன்றில் ஒரு பகுதி காடுகளால் சூழப்பட்டு இருக்க வேண்டும். தமிழ்நாட்டில் மொத்த காடுகளின் பரப்பளவு இவற்றைவிட மிக குறைவாகும். 2017ஆம் ஆண்டு மாநில வன அறிக்கையின்படி, தமிழ்நாட்டில் உள்ள காடுகளின் பரப்பளவு 26.281 ச.கி. மீட்டர்களாகும். இது மொத்த பரப்பளவில் 20.21 சதவீதமாகும். இந்தியாவில் உள்ள காடுகளில் தமிழகத்தின் பங்களிப்பு 2.99 சதவீதமாகும். ஈரப்பத பசுமைமாறா காடுகளிலிருந்து புதர் காடுகள் வரை தமிழ்நாட்டின் காடுகள் வேறுபடுகின்றன. .

### காடுகளின் வகைகள்

தமிழகத்தில் உள்ள காடுகள் கீழ்க்கண்டவாறு ஐந்து வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன .

### வெப்பமண்டல பசுமைமாறாக் காடுகள்

இவ்வகைக்காடுகள் அதிக மழைபெறும் பகுதிகளில் காணப்படுகின்றன. இவை அடர்ந்த மற்றும் மரக்கிளை அடுக்குகள் கொண்டதாக காணப்படுகின்றன. திருநெல்வேலி, கன்னியாகுமரி, நீலகிரி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் உள்ள மேற்கு தொடர்ச்சி மலையின் சரிவுகளில் இவை காணப்படுகிறது. இலவங்க மரம், மலபார், கருங்காலி மரம், பனாசமரம், ஜாவாபிளம், ஜமுன், பலா மருது, அயனி, கிராப் மிர்ட்டல் போன்றவை இக்காடுகளில் காணப்படும் முக்கிய மர வகைகளாகும். அரை பசுமைமாறா வகைக் காடுகளானது உப அயனமண்டலக் காலநிலை நிலவும் கிழக்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளில் காணப்படுகிறது. சேர்வராயன் மலை, கொல்லி மலை, பச்சை மலை ஆகியன இவ்வகை காடுகள் காணப்படும் முக்கிய பகுதிகள் ஆகும். இந்திய மகோகனி, குரங்கு தேக்கு, உல்லி காசியா, பலா மற்றும் மா மரங்கள் ஆகியன இப்பகுதியில் காணப்படும் முக்கிய மரங்களாகும் .

### மித வெப்ப மண்டல மலைக்காடுகள்

இவ்வகை காடுகள் ஆனைமலை, நீலகிரி மற்றும் பழனி மலைகளில் சுமார் 1,000 மீட்டர் உயரமான பகுதிகளிலும் பள்ளத்தாக்குகளிலும் காணப்படுகின்றன. இவ்வகை காடுகள் சோலாஸ் (sholas) எனவும் அழைக்கப்படுகிறது. இவ்வகை காடுகளில் மரங்கள் பொதுவாக குறைந்த உயரத்துடன் பசுமையாகக் காணப்படுகின்றன. பொதுவாக நீலகிரி, சாம்பா, வெள்ளைலிட்சா, ரோஸ்ஆப்பிள் போன்ற மரங்கள் இக்காடுகளில் பரவலாகக் காணப்படுகின்றன.

### வெப்பமண்டல இலையுதிர்க்காடுகள்

இவ்வகைக்காடுகள் பசுமைமாறாக்காடுகள் மற்றும் அரை பசுமைமாறா காடுகளின் விளிம்புப்பகுதிகளில் காணப்படுகின்றன. இக்காடுகளில் உள்ள மரங்கள் கோடை பருவங்களில் தங்களது இலைகளை உதிர்த்து விடுகின்றன. இக்காடுகளில் உள்ள மரங்கள் 30 மீட்டர் உயரம் வரை வளரக்கூடியன. பருத்திப் பட்டு மரம், இலவம், கடம்பா, டாகத் தேக்கு, வாகை, வெக்காளி மரம் மற்றும் சிரஸ் போன்றவை இங்கு காணப்படும் முக்கிய மர வகைகளாகும். மூங்கில்களும், இக்காடுகளில் காணப்படுகிறது. இக்காடுகளில் காணப்படும் சில மரவகைகள் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்தவையாகும்.

### மாங்குரோவ் காடுகள்

இவ்வகைக்காடுகள் கடலோரப்பகுதிகள், ஆற்றின் டெல்டா பகுதிகள், தீவுகளின் கடைப்பகுதிகள், மற்றும் ஆற்று முகத்துவாரங்களில் காணப்படுகின்றன. பொதுவாக இத்தாவரங்கள்

பிச்சாவரம் சதுப்பு நிலக்காடு கடலூர் மாவட்டத்தில் சிதம்பரத்திற்கு அருகே அமைந்துள்ளது. இது 1,100 ஹெக்டேர் பரப்பளவுடன் (11 சதுர கிலோமீட்டர்) உலகின் இரண்டாவது மிகப் பெரிய சதுப்பு நிலக்காடாக உள்ளது. வங்க கடலிலிருந்து மணல் திட்டுகளால் இக்காடுகள் பிரிக்கப்பட்டுள்ளன. இது அவிசீனியா மற்றும் ரைசோபோரா போன்ற தாவர இனங்களைக் கொண்டது.





10th_Geography_Unit_6.indd 223 24-03-2020 12:35:55

பசுமையானதாகவும் மிதமான உயரம் உடையதாகவும் தோல் போன்ற இலைகளுடனும் காணப்படுகின்றன. இவ்வகை தாவரங்கள் உவர் நிலங்கள் மற்றும் உவர் நீரில் வாழும் தன்மையுடையன. ஆசிய மாங்குரோவ், வெள்ளை மாங்குரோவ், காட்டுமல்லி இந்தியன் ப்ரிவெட் மரங்கள் போன்றவை இங்கு வளரும் குறிப்பிடத்தக்க மரங்களாகும். பிச்சாவரம், வேதாரண்யம், முத்துப்பேட்டை, சத்திரம் மற்றும் தூத்துக்குடி ஆகிய பகுதிகளில் குறிப்பிடத்தக்க அளவில் இக்காடுகள் அமைந்துள்ளன.

**கடல் பாதுகாப்பு மேலாண்மையில்,** சதுப்புநிலத் தாவரங்களின் பங்கு: கடல் அலைகள் மற்றும் புயலால் ஏற்படும் பாதிப்பிலிருந்து கடற்கரைப் பகுதிகளைப் பாதுகாக்கின்றது. மேலும் பவளப்பாறைகளையும், கடலோர புல்வெளிகளையும் மணல் படிவுகளால் மூழ்கடிக்கப்படாமல் பாதுகாக்கின்றது.

### வெப்பமண்டல முட்புதர்க்காடுகள்

தமிழ்நாட்டில் மிகக்குறைவான மழை பெரும்பகுதிகளில் இவ்வகைக் காடுகள் காணப்படுகின்றன. இக்காடுகள் சமவெளியில் இருந்து 400 மீட்டர் உயரத்திற்கு மேல் உள்ள பகுதிகளில் காணப்படுகின்றன. பனை, வேம்பு, கருவேலம், வெள்ளைக்கருவேலம், சீமைகருவேலம் ஆகியவை இவற்றில் பொதுவாக காணப்படும் மரங்களாகும். இவற்றில் புதர்செடிகளும் அதிகமாக காணப்படும். தர்மபுரி, இராமநாதபுரம், விருதுநகர் மற்றும் பிற மாவட்டங்களின் சில பகுதிகளில் இவ்வகைக் காடுகள் காணப்படுகின்றன.

**தமிழ்நாட்டில் அதிகக்காடுகளைக் (பரப்பளவு) கொண்ட மாவட்டங்கள்**

| மாவட்டம் | பரப்பளவு (சதுர கிலோமீட்டர்) |
|---|---|
| தர்மபுரி | 3,280 |
| கோயம்புத்தூர் | 2,627 |
| ஈரோடு | 2,427 |
| வேலூர் | 1,857 |
| நீலகிரி | 1,583 |
| திண்டுக்கல் | 1,662 |

## 6.11 வன உயிரினங்கள்

காடுகளில் வாழும் விலங்குகள் மற்றும் பறவைகளை வனவிலங்குகள் என்கிறோம். பல்வேறு வகையான வன விலங்குகள், பறவைகள் மற்றும் ஊர்வன ஆகியன தமிழ்நாட்டில் உள்ளன. யானைகள், காட்டு எருமைகள், புலிகள், மான்கள் மற்றும் குரங்குகளுக்கு இக்காடுகள் ஒரு சிறந்த அடைக்கலமாக உள்ளன.

வனவிலங்குகளைப் பாதுகாக்க பல்வேறு வனவிலங்குகள் சரணாலயங்கள் மற்றும் தேசிய பூங்காக்கள் மாநிலத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

| வ. எண் | தமிழ்நாட்டிலுள்ள உயிர்க்கோளப் பெட்டகங்கள் |
|---|---|
| 1 | நீலகிரி உயிர்க்கோளப் பெட்டகம் |
| 2 | மன்னார் வளைகுடா உயிர்க்கோளப் பெட்டகம் |
| 3 | அகத்தியர் மலை உயிர்க்கோளப் பெட்டகம் |

மாறுபட்ட காலநிலைகள், நில அமைப்புகள் மற்றும் பல்வேறு வளங்கள் ஆகியவற்றைக் கொண்ட மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. இதனால் இந்தியாவில் தமிழ்நாடு தனித்துவம் பெற்ற மாநிலமாக திகழ்கிறது. இருக்கின்ற வளங்களை சிக்கனமாகப் பயன்படுத்தினால், இந்திய மாநிலங்களில் தமிழ்நாடு முதன்மையானதாகத் திகழும். எனவே இவ்விலக்கை அடைய முயற்சி செய்வது ஒவ்வொரு குடிமகனின் கடமையாகும்.

## 6.12 இயற்கைப் பேரிடர்கள்

உயிர்களுக்கும் உடமைகளுக்கும் இயற்கையினால் ஏற்படும் பேரழிவுதான் பேரிடர் எனப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் அபாய நேர்வு குறைப்பு அமைப்பின் (UNDRR), கூற்றுப்படி அபாய குறைப்பு (Disaster Risk Reduction) என்பது பேரிடருக்கான காரணங்களை முறையாக கண்டறிந்து பேரிடரின்போது அதன் தாக்கங்களைக் குறைப்பதாகும். இது இடர் உண்டாகும் இடங்களைத் தவிர்த்தல், மக்களின் உயிர் மற்றும் உடைமைகளின் பாதிப்பினைக் குறைப்பது, நில மேலாண்மை, சூழ்நிலை மேலாண்மை, எதிர் விளைவுகள் குறித்தத் தயார்நிலை மற்றும் எச்சரிக்கை ஆகியவற்றை உள்ளடக்கியது.

தமிழ்நாட்டில் நிகழும் பல்வேறு பேரிடர்கள் பற்றியும், பேரிடரின் போது மற்றும் பேரிடருக்கு முன்னும் பின்னும் தேவையான நடவடிக்கைகள் பற்றி காண்போம்.



10th_Geography_Unit_6.indd 224 24-03-2020 12:35:55

www.tntextbooks.in

# தமிழ்நாடு
# வனவிலங்கு மற்றும் பறவைகள் சரணாலயங்கள்






10th_Geography_Unit_6.indd 225 24-03-2020 12:35:59

### நிலச்சரிவு

மலைகள் அல்லது குன்றுகளின் ஒரு பகுதியோ அல்லது பாறைகளோ சரிந்து வீழ்தல் நிலச்சரிவு எனப்படுகிறது. நீரானது, நிலச்சரிவுக்கு ஒரு முக்கிய காரணியாகும். தமிழ்நாட்டில் நீலகிரி மலைப்பகுதி நிலச்சரிவினால் அதிகம் பாதிக்கப்படும் பகுதியாகவும், பெரும் அச்சுறுத்தலுக்குள்ளாகும் பகுதியாகவும் கண்டறியப்பட்டுள்ளது. கோயம்புத்தூர் மற்றும் திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள பழனி மலையில் அமைந்துள்ள கொடைக்கானல் நிலச்சரிவுக்கு உள்ளாகும் மற்ற பகுதிகளாகும்.

#### அபாய நேர்வு குறைப்பு நடவடிக்கைகள் நிலச்சரிவுக்கு முன்

விழிப்புணர்வு ஏற்படுத்துதல், எச்சரிக்கை மற்றும் தயார் நிலையில் இருத்தல், அன்றாட செய்திகளை கவனித்தல், வெளியேறுவதற்கான திட்டம், வழக்கத்திற்கு மாறான சிதைந்த பொருட்கள், உடைந்த மரங்கள் மற்றும் கூழாங்கற்களின் நகர்வுகளைக் கவனித்தல் ஆகியன முக்கிய செயல்பாடுகள் ஆகும். நிலச்சரிவு அறிகுறிகள் தென்பட்டால் அப்பகுதியை விட்டு பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுதல் வேண்டும்.



நிலச்சரிவு

#### நிலச்சரிவுக்குப் பின்

நிலச்சரிவு நிகழ்ந்த இடத்திற்கு அப்பால் இருத்தல் வேண்டும். உள்ளூர் வானொலி, தொலைக்காட்சி நிலையங்களில் அன்றைய செய்திகளைக் கேட்டல், நிலச்சரிவுக்கு பின் வெள்ளப்பெருக்கு ஏற்பட வாய்ப்பு இருப்பதால் வெள்ளம், கழிவுகளின் நகர்வு ஆகியவற்றைக் கவனித்தல், நேரடியாக நிலச்சரிவு பகுதியினுள் செல்லாமல் காயம்பட்ட மற்றும் சரிவில் சிக்கியவர்களை மீட்டல் ஆகியன நிலச்சரிவுக்குப் பின் கடைபிடிக்க வேண்டிய செயல்களாகும்.

### வெள்ளப்பெருக்கு



வெள்ளப்பெருக்கு

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவக்காற்று காலங்களில் வெள்ளப்பெருக்கு என்பது பொதுவாக காணப்படும் ஒரு நிகழ்வாகும்.

#### அபாய நேர்வு குறைப்பு நடவடிக்கைகள் வெள்ளப்பெருக்கிற்கு முன்

சேவை மையங்கள் மற்றும் வெளியேறும் வழிகளைத் தெரிந்து வைத்திருத்தல், அவசரகால தொலைபேசி எண்களையும், செய்திகளையும் தெரிந்து வைத்திருத்தல், முக்கிய பொருட்களை மடித்தும் சுருட்டியும் உயரமான பகுதிகளில் வைத்தல்.

#### வெள்ளப்பெருக்கின் போது

குழந்தைகள் மற்றும் வயதானவர்களை வேகமாகவும், பாதுகாப்பாகவும், வீடுகளிலிருந்து உயரமான பகுதிகளுக்கு வெளியேற்றுவதை உறுதிசெய்தல், அனைத்து மின்சார சாதனங்கள் மற்றும் எரிவாயு சாதனங்களை அணைத்து வைத்தல், தாமதமின்றி வெளியேறுதல், நீரின் வழியாக வாகனங்களைச் செலுத்தாமலும், மின் கம்பிகள், மின் திறன் செலுத்தும் மின் வடக்கம்பிகள், வெள்ளம் ஆகியவற்றிலிருந்து தொலைவில் இருக்க வேண்டும்.

#### வெள்ளப்பெருக்கிற்குப் பின்

மீண்டும் வீடுகளுக்குச் செல்வதை உறுதி செய்தல், வீட்டிற்குள் நுழையும் முன் அனைத்து மின்சார உபகரணங்களையும் அணைத்து, மீண்டும் அவற்றை உபயோகப்படுத்தும் முன் சரியாக உள்ளனவா? என உறுதி செய்ய வேண்டும். பழுதுபட்ட பொருட்களை அப்புறப்படுத்துவதற்கு முன் அதற்கேற்ற உடையினை அணிவது அவசியம் ஆகும்.

### புயல்கள்

வடகிழக்கு பருவக்காற்று காலங்களில் வங்கக்கடலில் உருவாகும் வெப்பமண்டல சூறாவளிகள் தமிழக கடற்கரையைத் தாக்குகின்றன. வெள்ளப்பெருக்கு, உயிர் சேதம்



10th_Geography_Unit_6.indd 226 24-03-2020 12:35:59

மற்றும் பொருட்சேதம் ஆகியவை மாநிலத்தில் தொடர்ச்சியாக நடைபெறும் நிகழ்வாகும். புயல் தாக்கும் தீவிரத்தின் அடிப்படையில் தமிழ்நாடு மிக அதிக, அதிக, மிதமான மற்றும் குறைந்த புயல் மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.



புயல்

### அபாய நேர்வு குறைப்பு நடவடிக்கைகள்

#### புயலுக்கு முன்

வதந்திகளை நம்பாமல் அமைதியாகவும் பதற்றமடையாமலும் இருத்தல், அலைபேசிகள் மின்னூட்டம் செய்யப்பட்டதை உறுதிசெய்து, குறுஞ்செய்திகளைப் பெறுதல், வானொலி மற்றும் காணொளி பெட்டிகள் மூலம் அவ்வப்போதைய வானிலை நிலைமைகளைக் கேட்டுத் தெரிந்து கொள்ளல், முக்கிய மற்றும் விலைமதிப்புள்ள பொருட்கள் மற்றும் ஆவணங்களை நீர் புகா கொள்கலன்களில் பாதுகாப்பாக வைத்திருத்தல், அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய அவசரகால மூட்டைத்தொகுப்பை தயார் நிலையில் வைத்திருத்தல், குடியிருப்பு பாதுகாப்பாக இருப்பதையும், சரி செய்வதையும் உறுதிசெய்தல், கூர்மையானப் பொருட்கள் வெளிப்பகுதிகளில் இல்லாமல், கால்நடைகள் செல்ல மற்றும் கால்நடை பாதுகாப்பிற்காக அவற்றை அவிழ்த்து விடுதல் வேண்டும். மீனவர்கள் கூடுதலான மின்சாதனங்களுடன் (பேட்டரிகள்) ஒரு வானொலிப்பெட்டியை வைத்திருத்தல் வேண்டும். இக்காலங்களில் கடலுக்குச் செல்வதை தவிர்த்து, படகுகளைப் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும்.

#### புயலின்போது

வயதானவர்கள், குழந்தைகள் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் வீட்டில் பாதுகாப்பாக இருக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தல், அனைத்து மின் சாதன பொருட்களையும் மின் இணைப்பிலிருந்து துண்டித்தல், காலியான அறைகளில் தங்குதல், நகரக் கூடிய பொருட்களைப் பாதுகாப்பாக வைத்திருத்தல், அருகில் வசிப்பவர்களுக்கு உதவி செய்தல் ஆகியன புயலின்போது மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளாகும்.

#### புயலுக்குப் பின்னர்

புயல் நிவாரண மையங்களுக்கு மாற்றப்பட்டால் மறு அறிவுரைகள் வரும் வரை அங்கேயே தங்கி இருத்தல் வேண்டும். புயலுக்குப்பின் மின்சார கம்பிகளைத் தொடுவதையும், மின்சாரத்தை பயன்படுத்துவதையும் அறவே தவிர்த்தல் வேண்டும். புயலுக்குப்பின் பாம்பு, பூச்சிகளிடமிருந்து எச்சரிக்கையாக இருத்தல் வேண்டும். கட்டடங்களுக்கு அருகில் உள்ள கழிவுகளையும், விலங்குகளின் இறந்த உடல்களையும், அப்புறப்படுத்த வேண்டும். இழப்பின் உண்மையான மதிப்பினையும், அளவினையும் உரிய அதிகாரிகளிடம் தெரியப்படுத்த வேண்டும்.

### வறட்சி



வறட்சி

தமிழ்நாடு ஒரு நீர்ப் பற்றாக்குறை உள்ள மாநிலமாகும். இது குறிப்பிட்ட பருவத்தில் அல்லது நிரந்தரமாக காணப்படும் ஒன்று. நமது மாநிலம் நீர் தேவைக்குப் பருவ மழையையே பெரிதும் நம்பியுள்ளது. இப்பருவமழை பொய்ப்பு வறட்சியின் பேரழிவிற்கு வழிவகுக்கிறது.

நீர் பற்றாக்குறையைக் கையாளுவதற்கு அல்லது சரி செய்வதற்கு மழை நீர் சேகரிப்பு, நீர்வளப் பாதுகாப்பு முறைகளைத் தீவிர முறையில் பின்பற்ற வேண்டும்.

#### நீர் சேகரிப்பதற்கான சில வழிமுறைகள்

நீர் மாசுபடுதலைத் தடுத்தல், நீர் மறுசுழற்சி, சிக்கனமான நிலத்தடி நீர் பயன்பாடு, மக்கள் தொகை கட்டுப்பாடு, மரபுவழி நீர்வளங்களைப் புதுப்பித்தல், நவீன நீர்ப்பாசன முறைகளைப் பயன்படுத்தல், காடுகளின் பரப்பளவை அதிகரித்தல், பயிரிடும் முறைகளை மாற்றுதல், வெள்ளப்பெருக்கு மேலாண்மை, புவி வெப்ப நீர் பயன்பாடு ஆகியன நீர்வளத்தை பாதுகாக்கும் சில வழிமுறைகள் ஆகும்.



10th_Geography_Unit_6.indd 227 24-03-2020 12:36:00

### தீ விபத்து

தமிழ்நாடு ஒரு வெப்ப மண்டலத்தில் உள்ள மாநிலம். கோடைக்காலத்தில் அதிக வெப்பம் காரணமாக, இலையுதிர் மற்றும் முட்புதர் காடுகளில் அவ்வப்பொழுது காட்டுத் தீ ஏற்படுகிறது.

A7X5DA



காட்டுத்தீ

### அபாய நேர்வு குறைப்பு நடவடிக்கைகள்

#### தீ விபத்திற்கு முன்

எளிதில் தீப்பற்றக்கூடிய தாவரங்கள் மற்றும் பொருட்களிலிருந்து போதுமான இடைவெளி விட்டு (30 அடி தூரம்) குடியிருப்புகளை ஏற்படுத்துதல், உள்ளூர் கட்டட மற்றும் தீ விதிமுறைகளைப் பின்பற்றுதல், மரங்கள் மற்றும் செடிகளின் உயரத்தைக் கட்டுப்படுத்தி வைத்திருத்தல், தீப்பிடிக்காத தர நிர்ணயம் செய்து அனுமதிக்கப்பட்ட பொருட்களைப் பயன்படுத்துதல், குடும்ப உறுப்பினர்களுடன் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேறும் பல்வேறு வழிமுறைகளைத் திட்டமிடல் ஆகியன முக்கியமாக மேற்கொள்ள வேண்டியவையாகும்.

#### தீ விபத்தின் போது

வானொலி, தொலைக்காட்சி மற்றும் செய்தித்தாள்களின் மூலம் அவ்வப்போதைய செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ளுதல், வாளிகளில் போதுமான நீரை நிரப்பி வைத்திருத்தல், புகைமூட்டம் இருக்கும் பட்சத்தில் அறையில் வெளிச்சத்தை ஏற்படுத்துதல், எரிவாயு இணைப்பினை துண்டித்தல் மற்றும் மின் சாதனங்களை மின் துண்டிப்பு செய்தல், அனைத்து குடும்ப உறுப்பினர்களும் அவ்விடத்தில் இருந்து வெளியேற வழிவகை செய்தல் போன்றவையாகும்.

#### தீ விபத்திற்குப் பின்

மீண்டும் குடியிருப்புகளுக்கு திரும்பும் முன் தீயணைப்பு அதிகாரிகளின் உதவியோடு சரிபார்த்துக் கொள்ளுதல், தீயினால் எரிந்த பகுதிகளில் மீண்டும் தீ ஜுவாலைகள் தோன்ற வாய்ப்பு உள்ளதால், அப்பகுதிகளில் நுழையும் முன் போதுமான எச்சரிக்கைகளைக் கையாளுதல், அறைகளில் தீ உள்ள பகுதிகள், கூரைப் பகுதிகள், அதன் விளிம்பு பகுதிகள் மற்றும் வெளிப்பகுதிகள் ஆகியவற்றில் தீப்பொறிகள் உள்ளனவா எனச் சோதித்து அறிதல் வேண்டும்.

### சுனாமி

இந்தியாவில் சுனாமி என்பது பொதுவானதாக இல்லை என்றாலும், 2004ஆம் ஆண்டு சுனாமி நிகழ்வு இந்தியாவையும், தமிழ்நாட்டையும் எச்சரித்திருக்கிறது.



சுனாமி

### அபாய நேர்வு குறைப்பு நடவடிக்கைகள்

#### சுனாமிக்கு முன்

கடல் பகுதிகளுக்கு அருகாமையில் வசித்தால் சுனாமி அலையின் தாக்கங்களையும், உள்ளூர் எச்சரிக்கை தொடர்பான நடவடிக்கைகளையும் தெரிந்து வைத்திருத்தல், அவசர குடியிருப்பு மேம்பாட்டுக்கான திட்டங்களை வகுத்தல், அருகாமையில் உள்ள உயரமான நிலப்பகுதி மற்றும் அதனை எவ்வாறு அடைவது என்பதை தெரிந்து வைத்திருத்தல் வேண்டும்.

#### சுனாமியின்போது

தயாராக வைத்திருக்கும் உடமைகளுடன் உடனடியாக வெளியேறுதல், ஆபத்தான பகுதிகளுக்குச் செல்லாமல் இருத்தல், உடனடியாக அருகில் உள்ள உயரமான பகுதிக்குச் செல்லுதல், கட்டடங்களின் உயரமான மாடிகளில் அல்லது உயரமான மரங்களில் ஏறிக் கொள்ளுதல், மற்றும் மிதக்கும் பொருட்களைப் பற்றிக்கொள்ளுதல். மேலும் கடலோர பகுதிகளுக்கு சென்று சுனாமி அலைகளைப் பார்வையிடுவதைத் தவிர்த்தல், மற்றும் உள்ளூர் வானொலியின் அவசர கால நடவடிக்கைகள் பற்றிய செய்திகளைக் கேட்டறிதல் போன்றவை சுனாமியின்போது பின்பற்ற வேண்டிய நடவடிக்கைகளாகும்.

#### சுனாமிக்குப் பின்

தொடர்ந்து வானொலி செய்திகளைக் கேட்டல், உரிய அதிகாரிகளிடம் இருந்து அவ்விடத்திலிருந்து



10th_Geography_Unit_6.indd 228 24-03-2020 12:36:00

செல்வதற்கான அறிவிப்பு வரும்வரை வெளியேற்றப்பட்ட இடங்களுக்கு செல்லாதிருத்தல், காயங்களைப் பற்றி சுயபரிசோதனை செய்து முதல் உதவி பெறுதல் மற்றும் மற்றவர்களுக்கு உதவி செய்தல் ஆகியன சுனாமிக்குப் பின் பின்பற்றப்பட வேண்டிய முக்கிய நடவடிக்கைகளாகும்.

### நில அதிர்வு

இந்திய நாடு ஒரு பரந்து விரிந்த நாடு. பொதுவாக வட இந்திய மற்றும் மத்திய இந்தியப்பகுதி அதிக அபாய தன்மை உள்ள மண்டலமாக உள்ளது. மிதமான அபாய தன்மை உள்ள மண்டலமாக தமிழ்நாடு உள்ளது.

**அபாய நேர்வு குறைப்பு நடவடிக்கைகள்**
**நில அதிர்வின் போது**

நில அதிர்வு முழுவதும் முடியும் வரை, கனமான மேசை அல்லது மரத்தாலான பலகைகளினால் ஆன பொருட்களின் கால்களைப் பிடித்துக்கொண்டு அதற்கு அடியில் அமர்ந்திருக்க வேண்டும்.

**நில அதிர்விற்குப் பின்**

நில அதிர்வு நின்றவுடன் மிக எச்சரிக்கையுடன் செயல்படுதல் வேண்டும். நிலஅதிர்வினால் பாலங்கள், பாதைகள் போன்றவை பாதிப்படைந்திருக்க வாய்ப்பு உள்ளதால் அவற்றை கடப்பதைத் தவிர்த்தல் வேண்டும்.

**மாநிலத்தின் பேரிடர் மேலாண்மை ஆணையத்துடன் கீழ்கண்ட மீட்புப் படைகள் மற்றும் அமைப்புகள் இணைந்து செயல்படுகின்றன.**

**மாநில / யூனியன் பிரதேச அமைப்புகள்**

1. மாநிலப் பேரிடர் மேலாண்மை ஆணையம் (தலைவர் – முதலமைச்சர்)
2. நிவாரண / பேரிடர் மேலாண்மை துறை
3. காவல்துறை
4. வனத்துறை
5. தீ மற்றும் குடிமையியல் பாதுகாப்பு சேவைகள்
6. சுகாதார சேவைகள்
7. போக்குவரத்துத்துறை
8. பொதுப்பணித்துறை
9. கால்நடைத்துறை
10. உணவு மற்றும் வட்ட வழங்கல் துறை

**மாவட்ட அமைப்புகள் கீழ்க்கண்டவாறு**

1. மாவட்ட நீதிபதி (தலைவர் – மாவட்ட ஆட்சியர்)
2. வருவாய்த்துறை
3. குடிமை பணி நிர்வாகம்
4. உள்ளூர் காவல்துறை
5. குடிமை பாதுகாப்பு
6. தீயணைப்பு மற்றும் அவசர சேவைகள்
7. ஊர்க் காவல் படை (உள்ளூர், சமூகம், அரசு சாரா அமைப்பு, தன்னார்வ நிறுவனங்கள்)

**பாடச்சுருக்கம்**

- இயற்கை புவியியல் என்பது பல்வேறு இயற்கை அம்சங்களான நிலத்தோற்றம், வடிகாலமைப்பு, காலநிலை, மண் மற்றும் இயற்கை தாவரங்களைப் பற்றிய புவியியலின் ஒரு பகுதியாகும்.
- தமிழ்நாட்டின் இயற்கை பிரிவுகளை மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை மலைகள் (மேற்கு மற்றும் கிழக்கு தொடர்ச்சி மலைகள்), பீடபூமிகள் (பாரமஹால், கோயம்புத்தூர் மற்றும் மதுரை), சமவெளிகள் (உள்நாட்டுச் சமவெளி மற்றும் கடற்கரைச் சமவெளி).
- காவிரி, பாலாறு, தென்பெண்ணை ஆறு மற்றும் தாமிரபரணி ஆகியன தமிழ்நாட்டின் முக்கிய ஆறுகளாகும்.
- தமிழ்நாட்டில் காணப்படும் மண் வகைகள் அதன் பண்புகளின் அடிப்படையில் 5 பிரிவுகளாகப் பிரிக்கப்படுகிறது. அவை வண்டல், கரிசல், சிவப்பு, சரளை மற்றும் உவர் மண்ணாகும்.
- தமிழ்நாட்டின் பரப்பில் 20.21 சதவிதத்தினை காடுகள் கொண்டுள்ளது. பசுமை மாறாக்காடுகள், இலையுதிர் காடுகள், சதுப்புநிலக் காடுகள், முட்புதர்க் காடுகள் மற்றும் வெப்பமண்டல மலைக் காடுகள் ஆகியன முக்கிய காடுகளாகும்.
- பேரிடர் அபாய நேர்வு குறைப்பு என்பது முறையான நடவடிக்கைகளின் மூலம் அபாயத்தின் தன்மையைக் குறைப்பதாகும்.
- நிலஅதிர்வு, எரிமலை, நிலச்சரிவு, சூறாவளி, வறட்சி மற்றும் காட்டுத்தீ ஆகியன இயற்கைப் பேரிடர்களாகும்.

## பயிற்சி

NTDI6T

### I சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

1. தமிழ்நாட்டின் அட்சப் பரவல் __________ முதல் __________ வரை உள்ளது.
   அ) 8°4´ வ முதல் 13° 35´ வ வரை
   ஆ) 8° 5´ தெ முதல் 13° 35´ தெ வரை
   இ) 8° 0´ வ முதல் 13° 05´ வ வரை
   ஈ) 8° 0´ தெ முதல் 13° 05´ தெ வரை
2. தமிழ்நாட்டின் தீர்க்க பரவல் __________ முதல் __________ வரை உள்ளது .
   அ) 76°18´ கி முதல் 80°20´ கி வரை
   ஆ) 76°18´ மே முதல் 80°20´ மே வரை
   இ) 10°20´ கி முதல் 86°18´ கி வரை
   ஈ) 10°20´ மே முதல் 86°18´ மே வரை
3. தமிழ்நாட்டில் உள்ள மிக உயரமான சிகரம் __________ ஆகும்.
   அ) ஆனைமுடி ஆ) தொட்டபெட்டா
   இ) மகேந்திரகிரி ஈ) சேர்வராயன்
4. கீழ்க்கண்டவற்றில் தமிழ்நாட்டின் மேற்கு தொடர்ச்சி மலையில் அமையாத கணவாய் எது ?
   அ) பாலக்காடு ஆ) செங்கோட்டை
   இ) போர்காட் ஈ) அச்சன்கோவில்
5. கீழ்க்கண்டவற்றில் அரபிக் கடலில் கலக்கும் ஆறு எது?
   அ) பெரியார் ஆ) காவிரி
   இ) சிற்றார் ஈ) பவானி
6. தமிழ்நாட்டில் அதிக பரப்பளவில் மாங்குரோவ் காடுகள் காணப்படும் மாவட்டம் எது?
   அ) இராமநாதபுரம் ஆ) நாகப்பட்டினம்
   இ) கடலூர் ஈ) தேனி
7. பின்னடையும் பருவக்காற்று __________ லிருந்து ஈரப்பதத்தை எடுத்துக் கொள்கிறது.
   அ) அரபிக்கடல் ஆ) வங்கக் கடல்
   இ) இந்தியப் பெருங்கடல் ஈ) தைமுர்க்கடல்
8. கீழ்க்கண்டவற்றுள் மண் அரிப்பினால் அதிக அளவு பாதிக்கப்பட்ட மாவட்டம் __________
   அ) தேனி ஆ) மதுரை
   இ) தஞ்சாவூர் ஈ) இராமநாதபுரம்
9. தமிழ்நாட்டில் அதிக பரப்பளவில் காடுகளைக் கொண்ட மாவட்டம் __________
   அ) தர்மபுரி ஆ) வேலூர்
   இ) திண்டுக்கல் ஈ) ஈரோடு

### II கோடிட்ட இடங்களை நிரப்புக

1. நீலகிரி மற்றும் தர்மபுரி மாவட்டங்களுக்கிடையே காணப்படும் பீடபூமி __________ ஆகும்.
2. கிழக்கு தொடர்ச்சி மலையின் தென் பகுதியில் உள்ள உயரமான சிகரம் __________ ஆகும்.
3. ஆற்றுத் தீவான ஸ்ரீரங்கம் __________ மற்றும் __________ ஆறுகளுக்கு இடையே அமைந்துள்ளது.
4. __________ தமிழ்நாட்டின் மாநில விலங்கு ஆகும்.

### III பொருத்துக

| | | |
|---|---|---|
| 1. குளிர்காலம் | – | முன் பருவ மழை |
| 2. கோடைக்காலம் | – | ஜூன் – செப்டம்பர் |
| 3. தென்மேற்கு பருவக்காற்று | – | மார்ச் – மே |
| 4. வடகிழக்கு பருவக்காற்று | – | டிசம்பர் – பிப்ரவரி |
| 5. மாஞ்சாரல் | – | அக்டோபர் –நவம்பர் |

### IV கூற்று வகை வினா

1. **கூற்று:** தமிழ்நாடு தென்மேற்கு பருவகாற்று காலங்களில் அதிக மழையைப் பெறுவதில்லை.
   **காரணம்:** இது மேற்கு தொடர்ச்சி மலையின் மழை மறைவுப் பிரதேசத்தில் அமைந்துள்ளது
   அ) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது
   ஆ) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை
   இ) கூற்று சரி. ஆனால் காரணம் தவறு
   ஈ) காரணம் சரி. ஆனால் கூற்று தவறு

### V சுருக்கமாக விடையளிக்கவும்

1. தமிழ்நாட்டின் எல்லைகளைக் குறிப்பிடுக
2. 'தேரி' – என்றால் என்ன?
3. கடற்கரைச்சமவெளி எவ்வாறு உருவாகிறது?
4. தமிழ்நாட்டின் முக்கிய தீவுகளைக் குறிப்பிடுக.
5. தாமிரபரணி ஆற்றின் துணை ஆறுகளின் பெயர்களை எழுதுக
6. பேரிடர் அபாய நேர்வு – வரையறு.
7. புயலின்போது வானிலை மையம் மீனவர்களை எவ்வாறு எச்சரிக்கிறது.?

### VI வேறுபடுத்துக.

1. தாமிரபரணி மற்றும் காவிரி



10th_Geography_Unit_6.indd 230 24-03-2020 12:36:00

www.tntextbooks.in

### VII கீழ்கண்டவற்றிக்கு காரணம் கூறுக

1. கிழக்குத் தொடர்ச்சி மலைகள் தொடர்ச்சியற்று காணப்படுகிறது.
2. தென்மேற்கு பருவக்காற்று காலத்தில் தமிழ்நாடு மிகக்குறைந்த மழையைப் பெறுகிறது.
3. கடலூர் ஒரு பல்வழி பேரழிவு மண்டலம்.

### VIII பத்தி அளவில் விடையளிக்கவும்

1. தமிழ்நாட்டின் பீடபூமி நிலதோற்றத்தின் தன்மையை விவரிக்கவும்.
2. காவிரி ஆறு குறித்து தொகுத்து எழுதுக.
3. தமிழ்நாட்டின் கோடை மற்றும் குளிர் பருவங்களின் பண்புகளை விவரிக்கவும்
4. தமிழ்நாட்டில் உள்ள மண் வகைகளின், பரவல் பற்றி விளக்குக.
5. புயலுக்கு முன்னரும் பின்னரும் மேற்கொள்ள வேண்டிய அபாய நேர்வு குறைப்பு நடவடிக்கைகளை எழுதுக

### IX நில வரைபடப் பயிற்சி

1. தமிழ்நாட்டில் உள்ள ஆறுகள், மண் பரவல் மற்றும் காடுகளின் வகைகளை வரைபடத்தில் குறிக்கவும்.

### மேற்கோள் நூல்கள்


1. *Geography of Tamil Nadu* by Kumarasamy (2018), Varthamana Publication, T. Nagar, Chennai
2. Kumaraswamy, S.V. (2014). Geography of Tamil Nadu (Tamil Version), Sakthi Abirami Pathipagam, Coimbatore.
3. Statistical Hand Book of Tamil Nadu (2016). Department of Economics and Statistics, Government of Tamil Nadu, Chennai.
4. Mathew, M. (2018). Manorama Yearbook – 2018 (English Version), Manorama Company Ltd., Kottayam.


### இணையதள வளங்கள்

1. http://www.tn.gov.in/ta/Tamil Nadustate
2. https://www.forests.tn.gov.in
3. http://www.india-wris.nrsc.gov.in/wrpinfo/index.php?title=Major_Rivers_Flowing_in_Tamil_Nadu
4. http://www.environment.tn.nic.in/
5. http://agritech.tnau.ac.in/

### இணையச் செயல்பாடு

#### பேரிடர் மேலாண்மை

படி – 1 URL அல்லது QR குறியீட்டினைப் பயன்படுத்தி இச்செயல்பாட்டிற்கான இணையப்பக்கத்திற்கு செல்க

படி – 2 வலைப்பக்கத்தின் மேலே சென்று மொழிவடிவத்தை தமிழாக மாற்றவும். பின்னர் நடுப்பக்க மெனுவில் 'Media and Public Awareness' க்குச் சென்று 'Infographics' என்பதைத் தேர்ந்தெடுக்கவும்

படி – 3 தமிழக அரசின் பேரிடர் மேலாண்மையால் வெளியிடப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் காண பதிவிறக்கம் (Download) செய்யவும்.

உரலி: https://tnsdma.tn.gov.in/

B373_10_SOCIAL_TM



10th_Geography_Unit_6.indd 231 24-03-2020 12:36:00

# அலகு – 7

# தமிழ்நாடு – மானுடப் புவியியல்



## கற்றலின் நோக்கங்கள்

- தமிழ்நாட்டின் வேளாண் காரணிகள், முக்கியப் பயிர்கள் மற்றும் அதன் பரவலைப் புரிந்துகொள்ளல்
- தமிழ்நாட்டின் நீர் வளங்களைப் பற்றி தெரிந்துகொள்ளல்
- தமிழ்நாட்டின் கனிம மற்றும் தொழிலக வளங்கள் பற்றி கற்றறிதல்
- தமிழ்நாட்டின் மக்கள் தொகை மற்றும் அதன் கூறுகள் பற்றி பகுப்பாய்வு செய்தல்
- தமிழ்நாட்டின் – மனிதனால் உருவாக்கப்பட்ட பேரிடரைப் பற்றி தெரிந்துகொள்ளல்

3ETVZC

## அறிமுகம்

மானுடப் புவியியல் என்பது மனித சமுதாயம் வளர்ச்சி பெற்ற வழிமுறைகள் மற்றும் இயற்கை சூழலுடனான செயல்பாடுகள் குறித்துக் கற்றறிதல் ஆகும். தமிழ்நாட்டில் காணப்படும் பல்வேறு வளப்பரவல்கள், பண்புகள் மற்றும் பயன்பாடுகள் பற்றி இப்பாடப்பகுதி விளக்குகிறது. புவியானது, பல்வேறு வகையான இயற்கை வளங்களாகிய நிலப்பகுதிகள், ஆறுகள், மண்வகைகள், இயற்கை தாவரங்கள், நீர் மற்றும் வன வளங்கள் ஆகியவற்றை வழங்கியுள்ளது என்பதை முன்னரே கற்றுள்ளோம். மேற்கண்டவற்றை பயன்படுத்தினால் மட்டுமே அவை சார் வளங்கள் ஆகும். மனிதர்கள் தங்கள் அறிவு கூர்மை மற்றும் திறன்களால் பல வளங்களைப் பயன்படுத்துகின்றனர். எனவே புவியில் காணப்படும் வளங்களில் மனித வளமே மிகச் சிறந்த வளமாகும். மனிதர்கள் தங்களது திறன்கள் மூலம் இயற்கை வளங்களைப் பயன்படுத்தக் கூடிய பொருள்களாக மாற்றுகின்றனர்.

## 7.1 வேளாண்மை

"அக்ரிகல்சர்" என்ற சொல் இலத்தீன் வார்த்தைகளான "அகர்" மற்றும் "கல்சரா" என்பதிலிருந்து பெறப்பட்டது. இதன் பொருள் நிலம் மற்றும் வளர்த்தல் என்பதாகும். வேளாண்மை என்பது விவசாய நடைமுறைகளான பயிர்கள் சாகுபடி, கால்நடை வளர்த்தல், பறவைகள் வளர்த்தல், காடுகள் வளர்த்தல், மீன்பிடித்தல் மற்றும் அதனோடு தொடர்புடைய நடவடிக்கைகளை உள்ளடக்கியதாகும். தமிழ்நாட்டின் முக்கியமான தொழில் வேளாண்மையாகும். இந்தியா சுதந்திரமடைந்ததிலிருந்து 65%க்கும் மேற்பட்ட மக்கள் வாழ்வாதாரத்திற்கு வேளாண் துறையைச் சார்ந்துள்ளனர். மாநிலத்தின் பொருளாதாரத்தில் வேளாண்மையே பிரதானமாக இருந்து வருகிறது. வேளாண்மை, கிராமப்புற மக்களுக்கு பெருமளவில் வேலை வாய்ப்பை அளிக்கிறது. வேளாண்மைக்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் இடையே ஒரு வலுவான தொடர்பு உள்ளது. நெல், தினைவகைகள் மற்றும் பருப்பு வகைகள் மாநிலத்தின் முக்கிய உணவுப் பயிர்களாகும். கரும்பு, பருத்தி, சூரியகாந்தி, தென்னை, முந்திரி, மிளகாய், எள், நிலக்கடலை, தேயிலை, காபி, ஏலக்காய் மற்றும் இரப்பர் ஆகியவை முக்கிய வணிகப் பயிர்களாகும்.

## 7.2. வேளாண்மையைத் தீர்மானிக்கும் புவியியல் காரணிகள்

நிலத்தோற்றம், காலநிலை, மண் மற்றும் நீர்ப்பாசனம் ஆகியவை வேளாண்மை வளர்ச்சியை தீர்மானிக்கும் முக்கிய புவியியல் காரணிகளாகும்.

### நிலத்தோற்றம்

தமிழ்நாடானது மலைகள், பீடபூமிகள் மற்றும் சமவெளிகள் ஆகிய பல்வேறுபட்ட நில அமைப்புகளைக் கொண்டுள்ளது. மேற்கண்டவற்றுள் சமவெளிகள் வேளாண் உற்பத்திக்கு ஏற்ற வளமான வண்டல் மண்ணைக் கொண்டுள்ளதால் சமவெளிப் பகுதிகள் வேளாண் தொழிலுக்கு ஏற்றதாக உள்ளது. எ.கா. வண்டல் மண் நிறைந்துள்ள காவிரி சமவெளி தமிழ்நாட்டின் குறிப்பிடத்தக்க வேளாண் பகுதியாகும். பீடபூமி, வேளாண்மைக்கு ஓரளவிற்கு ஏற்றதாகவும், மலைப் பிரதேசங்களில் வேளாண் நடவடிக்கைகள் மிகக்குறைந்த அளவிலும் உள்ளன.

### காலநிலை

தமிழ்நாடு பூமத்தியரேகைக்கு அருகிலும், வெப்ப மண்டலத்திலும் அமைந்துள்ளதால் வெப்ப மண்டலக் காலநிலையைப் பெறுகிறது. ஆகையால் தமிழ்நாட்டின் வெப்பநிலை ஆண்டு முழுவதும் அதிகமாக உள்ளது. எனவே வெப்பமண்டலப் பயிர்கள் மட்டுமே பயிரிடப்படுகின்றன. நீர், வேளாண்மையைக் கட்டுப்படுத்தும் முக்கியக் காரணியாகும். வடகிழக்கு பருவக்காற்று தமிழ்நாட்டிற்கான முக்கிய நீர் ஆதாரமாக உள்ளதால், பயிரிடப்படும் முக்கிய காலம் இப்பருவத்தில் தொடங்குகிறது. இப்பருவத்தில் பெறும் மழையின் அளவு மற்றும் நீர்ப்பாசன வசதி போன்றவை வேளாண்மையை மிக அதிக அளவில் பாதிக்கிறது.

### மண்

வேளாண்மையின் மிக முக்கியமான கூறுகளுள் ஒன்று மண் ஆகும். இது பயிர்கள் மற்றும் தாவரங்களின் வளர்ச்சிக்குத்தேவையான கனிமசத்துக்கள் மற்றும் ஊட்டச்சத்துக்களை அளிக்கிறது. ஆற்றுப்பள்ளத்தாக்குகள் மற்றும் கடற்கரைச் சமவெளிப் பகுதிகளில் வளமான வண்டல் மண் நிறைந்துள்ளதால் இப்பகுதிகள் மாநில வேளாண் உற்பத்தியில் முக்கிய பங்காற்றுகின்றன.

### நீர்ப்பாசனம்

மாநிலத்தின் பருவமழை சமச்சீரற்ற நிலையில் உள்ளது. மேலும் இவை பருவகாலத்தில் மட்டுமே பொழிகிறது. எனவே மாநிலத்தில் பயிர் சாகுபடி சிறப்பாக நடைபெற நீர்ப்பாசனம் மிகவும் இன்றியமையாததாகும். வறண்ட காலங்களில் மானாவாரிப் பயிர்கள் பயிரிடப்படுகிறது.

## 7.3. தமிழ்நாட்டின் வேளாண் பருவகாலங்கள்

வெப்பநிலை மற்றும் மண்ணின் ஈரப்பதத்தை அடிப்படையாகக் கொண்டு விவசாயிகள் பருவகாலத்திற்கு ஏற்ற பல்வேறு வகையான பயிர்களைப் பயிரிடுகிறார்கள். மாநிலத்தின் வேளாண் பருவகாலங்கள் பின்வருமாறு:

| பருவம் | விதைக்கும் காலம் | அறுவடை காலம் | முக்கிய பயிர்கள் |
|---|---|---|---|
| சொர்ணவாரி (சித்திரைப் பட்டம்) | ஏப்ரல் – மே | ஆகஸ்டு – செப்டம்பர் | பருத்தி மற்றும் தினை வகைகள் |
| சம்பா (ஆடிபட்டம்) | ஜூலை – ஆகஸ்டு | ஜனவரி – பிப்ரவரி | நெல் மற்றும் கரும்பு |
| நவரை | நவம்பர் – டிசம்பர் | பிப்ரவரி – மார்ச் | பழங்கள், காய்கறிகள், வெள்ளரி, தர்பூசணி |

## 7.4. தமிழ்நாட்டின் முக்கிய பயிர்களின் பரவல்

### நெல்

தமிழ்நாட்டின் முக்கியமான உணவுப்பயிர் நெல் ஆகும். பொன்னி மற்றும் கிச்சடி சம்பா தமிழகத்தில் பயிரிடப்படும் முக்கிய நெல் வகைகளாகும். இப்பயிர்



நெல் பயிர் சாகுபடி

**தமிழ்நாட்டின் வேளாண் முறைகளின் வகைகள் மற்றும் பகுதிகள்**

| வேளாண் வகை | பயிரிடப்படும் பகுதிகள் |
|---|---|
| தீவிர தன்னிறைவு வேளாண்மை | தமிழ்நாட்டில் சில பகுதிகள் தவிர்த்து அனைத்து பகுதிகளிலும் பின்பற்றப்படுகிறது |
| தோட்ட வேளாண்மை | மேற்கு மற்றும் கிழக்கு தொடர்ச்சி மலைச்சரிவுகள் |
| கலப்பு வேளாண்மை | காவிரி மற்றும் தென்பெண்ணை ஆற்றுப்படுகைகள் |



10th_Geography_Unit_7_TM.indd 233 11-04-2020 12:00:39

தமிழகம் முழுவதும் பயிரிடப்பட்டாலும் தஞ்சாவூர், திருவாரூர், திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் அதிகளவில் பயிரிடப்படுகிறது. நெல் உற்பத்தி செய்யும் இந்திய மாநிலங்களில் தமிழகம் மூன்றாம் இடத்தை வகிக்கிறது. தமிழ்நாட்டில் காவிரி டெல்டா பகுதி அதிக நெல் உற்பத்தி செய்யும் பகுதியாகும். (பிரிக்கப்படாத தஞ்சாவூர்) எனவே இப்பகுதி தமிழ்நாட்டின் "**நெற்களஞ்சியம்**" என்றழைக்கப்படுகிறது.

**உங்களுக்குத் தெரியுமா?**

தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்தின் (TANU) கீழ் செயல்பட்டுவரும் தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிறுவனம் (TRRI) நெல் ஆராய்ச்சியை மேற்கொள்ளும் ஓர் இந்திய நிறுவனமாகும். இது தஞ்சாவூர் மாவட்டத்தில் ஆடுதுறை என்னுமிடத்தில் 1985ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தொடங்கப்பட்டது. இந்நிறுவனம் இப்பகுதியிலுள்ள கல்லூரிகள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு நெல் சாகுபடி மற்றும் உற்பத்தி முறை குறித்த ஆராய்ச்சிகளுக்கு தேவையான உதவிகளைச் செய்து வருகிறது.

## தினை வகைகள்

தமிழ்நாட்டின் மக்கள் தொகையில் ஏறக்குறைய மூன்றில் ஒரு பங்கு பகுதியினரின் முக்கியமான உணவு தினை வகைளாகும். சோளம், கேழ்வரகு மற்றும் கம்பு ஆகியன முக்கிய தினைப் பயிர்களாகும். இவ்வகை பயிர்கள் வறண்ட பிரதேசங்களில் மட்டுமல்லாமல் கடற்கரைச் சமவெளிகளிலும் விளைகின்றன. கோயம்புத்தூர் பீடபூமியிலும், கம்பம் பள்ளத்தாக்கிலும் சோளம் பயிரிடப்படுகின்றன. கோயம்புத்தூர், தர்மபுரி, வேலூர் மற்றும் கடலூர் மாவட்டங்களில் கேழ்வரகு பயிரிடப்படுகிறது. இராமநாதபுரம், திருநெல்வேலி, கரூர், பெரம்பலூர் மற்றும் சேலம் மாவட்டங்களில் கம்பு பயிரிடப்படுகிறது.

இந்தியா, 2018ஆம் ஆண்டை தினைப்பயிர்களின் தேசிய ஆண்டாக அனுசரித்தது. உலக உணவு மற்றும் வேளாண்மைக் கழகம் (FAO), 2023ஆம் ஆண்டை சர்வதேச தினைப்பயிர்கள் ஆண்டாக அனுசரிக்கத் தீர்மானித்துள்ளது.

## பருப்பு வகைகள்

பருப்பு வகைகள் புரதச்சத்தின் முக்கிய ஆதாரமாக உள்ளன. கொண்டைக்கடலை, உளுந்து, பச்சைப்பயறு, துவரம்பருப்பு, தட்டைப்பயறு மற்றும் கொள்ளு ஆகியன தமிழ்நாட்டில் விளையும் முக்கிய பருப்பு வகைகளாகும். பருப்பு வகைகள் காலநிலைக்கு ஏற்றாற் போல் பரவலாகப் பயிரிடப்படுகின்றன. வறண்ட நிலப்பகுதிகளில் நீர்ப்பாசன வசதியுடனோ அல்லது நீர்பாசனமின்றியோ பயிரிடப்படுகின்றன. மிதமான குளிர்காலநிலை மற்றும் குறைந்த மழைப்பொழிவு இங்கு பயிரிட உகந்த சூழல்களாகும். பருப்பு வகைகள் கால்நடைகளுக்கு மிகச்சிறந்த தீவனமாக உள்ளன. சென்னை, நீலகிரி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களைத் தவிர்த்து மற்ற மாவட்டங்களில் பருப்பு வகைகள் பயிரிடப்படுகின்றன. கோயம்புத்தூர் மாவட்டம் கொண்டக்கடலை உற்பத்தியில் மாநிலத்தில் முதன்நிலை வகிக்கிறது. வேலூர் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் துவரம் பருப்பு கூடுதலாக உற்பத்தி செய்யப்படுகின்றன. திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்கள் அதிக அளவில் பச்சைப் பயறு மற்றும் உளுந்து ஆகியவற்றை உற்பத்தி செய்கின்றன. தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் கொள்ளுப் பயிர் கூடுதலாக பயிரிடப்படுகிறது.

## எண்ணெய் வித்துக்கள்


நிலக்கடலை, எள், ஆமணக்கு, தென்னை, சூரியகாந்தி மற்றும் கடுகு ஆகியன தமிழ்நாட்டில் பயிரிடப்படும் முக்கிய எண்ணெய் வித்துக்கள் ஆகும். உணவுப் பயன்பாட்டிற்கு மட்டுமல்லாமல் தொழிலகங்களில் மசகு எண்ணெய், மெருகு எண்ணெய் பொருள்கள், சோப்பு, மெழுகுவர்த்தி, அழகுசாதனப் பொருள்கள் மற்றும் மருந்து பொருள்கள் ஆகியவற்றின் உற்பத்திக்கும் இவைப் பயன்படுகின்றன. நிலக்கடலை மாநிலத்தின் முக்கிய எண்ணெய் வித்துப் பயிராகும். வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம், சேலம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் நிலக்கடலை உற்பத்தியானது செறிந்து காணப்படுகிறது. தர்மபுரி, கடலூர், பெரம்பலூர், மதுரை, ஈரோடு,

### இரண்டாவது பசுமைப்புரட்சி (இயற்கை வேளாண்மை அல்லது கரிம வேளாண்மை):


இயற்கை வேளாண்மையில் செயற்கை உரங்கள், பூச்சிகொல்லிகள், தாவர வளர்ச்சி சீராக்கிகள் (செயற்கை இரசாயனம்) கால்நடை தீவனக் கலப்புகள் பயன்படுத்துவதில்லை. இவ்வகை விவசாயம், பயிர் சுழற்சி, பயிர் கழிவுகள், விலங்குகளின் கழிவுகள், விவசாயம் அல்லாத கரிம கழிவுகள், உயிரியல் பூச்சிக்கொல்லிகள் ஆகியனவற்றை மண்வளப் பாதுகாப்பிற்கு நம்பியுள்ளனர். குறைவான விவசாயிகளே இம்முறையினைப் பின்பற்றுகின்றனர்.



10th_Geography_Unit_7_TM.indd 234 11-04-2020 12:00:39




குறிப்புகள்






10th_Geography_Unit_7_TM.indd 235 11-04-2020 12:00:39

இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் இவை சிறிய அளவில் பயிரிடப்படுகிறது. கோயம்புத்தூர், தஞ்சாவூர் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் தென்னை மரங்கள் அதிகம் காணப்படுகின்றன.

### கரும்பு

கரும்பு தமிழ்நாட்டின் முக்கியமான வாணிபப் பயிராகும். இது ஓராண்டு பயிராகும். இதற்கு அதிக வெப்பநிலை மற்றும் அதிகமழைப் பொழிவும் தேவைப்படுகிறது. இது வெப்பமண்டல பிரதேசங்களில் நன்கு வளரக்கூடியவை. திருவள்ளூர், காஞ்சிபுரம், வேலூர், கடலூர், திருநெல்வேலி, கோயம்புத்தூர் மற்றும் ஈரோடு ஆகியன கரும்பு பயிரிடும் மாவட்டங்களாகும்.

### பருத்தி

பருத்தி ஓர் இழைப்பயிர் மற்றும் வாணிபப் பயிராகும். கரிசல்மண், நீண்ட பனிப்பொழிவற்ற காலம், மிதவெப்பம் மற்றும் ஈரப்பத வானிலை ஆகியவை பருத்தி பயிரிடுவதற்கு உகந்தவையாகும். பருத்தி வளரும் காலத்தில் ஈரப்பத காலநிலையும், அறுவடை காலத்தில் வறண்ட காலநிலையும் பயிருக்கு ஏற்றதாகும். கோயம்புத்தூர் பீடபூமி பகுதியிலும், வைகை மற்றும் வைப்பாறு ஆற்றுவடிநிலப் பகுதிகளிலும் பருத்தி பயிரிடப்படுகின்றது. மதுரை, இராமநாதபுரம், விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி, சேலம் மற்றும் தர்மபுரி ஆகிய மாவட்டங்களிலும் இவைப் பயிரிடப்படுகின்றது.

### தோட்டப்பயிர்கள்

தேயிலை, காபி, இரப்பர், மற்றும் முந்திரி ஆகியன மாநிலத்தின் முக்கிய தோட்டப் பயிர்களாகும். இந்தியாவில் அசாம் மாநிலத்திற்கு

> இயற்கை வேளாண்மையை மேம்படுத்தும் நோக்கத்தோடு மத்திய அரசானது தேசிய இயற்கை கரிம வேளாண்மைத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. விழிப்புணர்வு ஏற்படுத்துதல், இயற்கை உரங்களை மேம்படுத்துதல், பயிற்சியளித்தல் போன்றவற்றை இத்திட்டம் செயல்படுத்துகிறது. மேலும் கரிமப் பொருள்களை மறுசுழற்சி செய்யவும், தொழிற்கூடங்கள், உயிரிஉரங்கள், உயிரி பூச்சிகொல்லிகள் உற்பத்தி செய்யவும் தொழிற்கூடங்களுக்கு மாநிலத்தில் நிதி உதவி அளித்தல், தரமேம்பாட்டு வளர்ச்சி மற்றும் அதனை நடைமுறைப்படுத்தும் குழுமத்தின் மனிதவளத்தை மேம்படுத்துதல் போன்றவை இத்திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்படுகிறது.

> டான் டீ (TANTEA) இந்நிறுவனம் இந்தியாவில் கருப்பு வகை தேயிலை உற்பத்தியிலும், கலப்பு வகை தேயிலை உற்பத்தியிலும் முன்னனி வகிக்கும் நிறுவனங்களுள் ஒன்றாகும்.(தமிழ்நாடு தேயிலை தோட்டக் கழகம்) இந்நிறுவனத்தின் தேயிலை பயிரிடும் பரப்பு ஏறத்தாழ 4,500 ஹெக்டேர் ஆகும்.

அடுத்தபடியாக தமிழ்நாடு தேயிலை பயிரிடும் பரப்பு மற்றும் உற்பத்தியில் இரண்டாமிடம் வகிக்கிறது. நீலகிரி மலைகள் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள மலைகளில் தேயிலை தோட்டங்கள் காணப்படுகின்றன. மேற்கு தொடர்ச்சி மலைகள் மற்றும் கிழக்கு தொடர்ச்சி மலைகளில் காபி பயிரிடப்படுகின்றது. நீலகிரி மலைகள் மற்றும் சேலம் மாவட்டத்தில் உள்ள ஏற்காடு மலைச்சவுகளில் காபி குறிப்பிடத்தகுந்த அளவில் பயிரிடப்படுகிறது. திண்டுக்கல், மதுரை மற்றும் தேனி மாவட்டங்களிலுள்ள மலைச் சரிவுகளிலும் காபி பயிரிடப்படுகின்றது. காபி உற்பத்தியில் கர்நாடகா மாநிலத்திற்கு அடுத்து தமிழ்நாடு இரண்டாமிடம் வகிக்கிறது. இரப்பர் தோட்டங்கள் கன்னியாகுமரியில் அதிகமாகக் காணப்படுகிறது. தமிழ்நாட்டிலுள்ள, மேற்கு தொடர்ச்சி மலை மற்றும் கிழக்கு தொடர்ச்சிமலைகளின் சரிவுகளில் மிதவெப்பம் மற்றும் ஈரமான காலநிலை உள்ள பகுதிகளில் மிளகு விளைகின்றது. கடலூர் மாவட்டத்தில் பெரும் பகுதிகளில் முந்திரி பயிரிடப்படுகின்றது.

## 7.5 கால்நடை வளர்ப்பு

கால்நடை வளர்ப்பு என்பது ஊரக மக்களின் சமூக பொருளாதாரத்தின் ஓர் ஒருங்கிணைந்த அங்கமாகும்.

### வெள்ளாடுகள்

இந்தியாவில் வெள்ளாடுகள் '**ஏழை மக்களின் பசு**' என்றழைக்கப்படுகிறது. இது ஒரு புன்செய் வேளாண் அமைப்பின் மிக முக்கிய அங்கமாகும். கால்நடை வகைகளான பசு மற்றும் எருமை வளர்ப்பிற்கு ஏற்பில்லா இடங்களான நில விளிம்புப் பகுதிகள் மற்றும் மேடு பள்ளங்கள் நிறைந்த நிலத்தோற்றப் பகுதிகளில் வெள்ளாடு

> தமிழ்நாடு பால் வளர்ச்சி கழகம் என்ற அமைப்பானது தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம் என்ற புதிய அமைப்பாக பதிவு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இது பிரபலமாக ஆவின் என்று அழைக்கப்படுகிறது



10th_Geography_Unit_7_TM.indd 236 11-04-2020 12:00:39

www.tntextbooks.in

வளர்ப்பு ஒரு மாற்றாக உள்ளது. மிகக் குறைந்த முதலீட்டில் அதிக இலாபம் ஈட்டப்படுவதால் சிறு மற்றும் குறு விவசாயிகள் வெள்ளாடு வளர்ப்பினை மேற்கொள்கின்றனர்.

### செம்மறியாடு

செம்மறியாடுகள், கம்பளி, இறைச்சி, பால், தோல் மற்றும் உரம் போன்ற பல்வேறு பயனுள்ள பொருள்களை அளிப்பதால் தமிழ்நாட்டின் மலைப்பகுதிகள், வறண்ட மற்றும் அரை வறண்ட பகுதிகளில் உள்ள ஊரகப் பொருளாதாரத்தில் இவை முக்கிய பங்காற்றுகிறது. செம்மறியாடுகள் மற்றும் அவற்றின் உரோமம் அதன் உடைமையாளர்களுக்கு முக்கியப் வருவாய் ஆதாரமாக உள்ளன.

### மீன் பிடித்தல்

தமிழ்நாடு ஒரு கடற்கரை மாநிலமாதலால் மீன்பிடித்தல் இங்கு முக்கியமான தொழில்களில் ஒன்றாகும். உள்நாட்டு மீன் பிடித்தல் என்பது பரந்த அளவில் காணப்படும் நீர்த்தேக்கங்கள் மற்றும் ஆறுகளில் கணிசமான அளவு நடைபெறுகின்றது.

### கடல் மீன் பிடிப்பு

தமிழ்நாட்டு கடற்கரையின் நீளம் 1,076 கிலோமீட்டராகும். ஏறத்தாழ 41,412 சதுர கிலோமீட்டர் பரப்பளவு 'கண்டத்திட்டு' உள்ளதால் கடற்கரை மீன்பிடிப்புக்கு சாதகமாக உள்ளது. தமிழ்நாடு 'கடல் மீன்' உற்பத்தியில் முதன்மையான மாநிலங்களுள் ஒன்றாக உள்ளது. மீன்பிடித்தலுக்கு பெரிய மற்றும் இயந்திரப் படகுகள் பயன்படுத்தப்படுகின்றன.

பெருங்கடல் அல்லது கடற்கரையில் இருந்து சில கிலோமீட்டர் தூரம் வரை மீன்பிடித்தல் 'கடலோர மீன்பிடிப்பு' என அழைக்கப்படுகிறது. கடற்கரையில் இருந்து பொதுவாக 20 முதல் 30 மைல்கள் தூரம் வரையிலும், 100 அல்லது 1000க்கும் மேற்பட்ட அடிகள் ஆழத்தில் மீன்பிடித்தல் நடக்கிறது. இது 'ஆழ்கடல் மீன்பிடிப்பு' என அழைக்கப்படுகிறது. சுறா, பறவை மீன், சங்கு மீன், கெளுத்தி, வெள்ளி வயிறு மீன் போன்ற மீன் வகைகள் மற்றும் நண்டு வகைகள் இங்குப் பிடிக்கப்படுகின்றன. சென்னை, கன்னியாகுமரி, திருநெல்வேலி, நாகப்பட்டினம் மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்கள் மாநிலத்தின் கடல் மீன் உற்பத்தியில் ஏறத்தாழ 40% சதவிகிதம் பங்களிப்பைத் தருகின்றன. கடற்கரையின் அமைவிடம் இப்பகுதிகளில் மீன் பிடித்தலுக்கு சாதகமாக உள்ளன.

### உள்நாட்டு மீன்பிடிப்பு

ஏரிகள், ஆறுகள், குளங்கள், கழிமுகங்கள், காயல்கள் மற்றும் சதுப்புநிலப்பகுதி போன்ற நீர் நிலைகளில் உள்நாட்டு மீன் பிடித்தல் நடைபெறுகிறது. சிப்பிகள் மற்றும் இறால்கள் மீன் பண்ணைகளில் வளர்க்கப்படுகின்றன. கட்டுமரம், டீசல் படகுகள் மற்றும் மீன் வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடித்தல் நடைபெறுகிறது. மீன்பிடித்தலை மேம்படுத்துவதற்காக தமிழ்நாடு மீன் வளத்துறை பல திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. மாநில உள்நாட்டு மீன் உற்பத்தியில் வேலூர் மாவட்டம் 10 சதவிகித உற்பத்தியுடன் முன்னிலையில் உள்ளது. கடலூர், சிவகங்கை மற்றும் விருதுநகர் மாவட்டங்கள் தலா 9 சதவிகிதம் உள்நாட்டு மீன் உற்பத்தி செய்து மாநிலத்தில் இரண்டாம் இடத்தில் உள்ளன. மாநிலப் பொருளாதாரத்தில் மீன் பிடித் துறையானது 1.25% சதவிகிதம் பங்களிப்பைச் செய்கிறது.

## 7.6 நீர் வளம்

மனித குலத்திற்கும் புவியில் வாழும் இலட்சக்கணக்கான உயிரினங்களுக்கும் நீர் இயற்கையின் ஒரு விலைமதிப்பற்ற பரிசாகும்.

### தமிழ்நாட்டின் நீர் வளங்கள்

H1A9SV

இந்தியப் பரப்பளவில் 4 சதவிகிதத்தையும் மக்கள் தொகையில் 6 சதவிகிதத்தையும் கொண்டுள்ள தமிழ்நாடு, இந்திய நீர் வளத்தில் 2.5 சதவிகிதத்தை மட்டுமே பெற்றுள்ளது. தமிழ்நாட்டின் மேற்பரப்பு நீரில் 95 சதவிகிதத்திற்கு அதிகமாகவும் மற்றும் நிலத்தடி நீரில் 80 சதவிகிதத்திற்கு அதிகமாகவும் ஏற்கனவே பயன்பாட்டிலிருந்து வருகிறது.

#### தமிழ்நாட்டில் உள்ள நீர்வள ஆதாரங்கள்

| மேற்பரப்பு நீர்வள ஆதாரங்கள் | எண்ணிக்கை |
|---|---|
| ஆற்று வடிநிலம் | 17 |
| நீர்த்தேக்கங்கள் | 81 |
| ஏரிகள் | 41,127 |
| ஆழ்துளை கிணறுகள் மற்றும் மற்ற கிணறுகள் | 4,98,644 |
| திறந்தவெளி கிணறுகள் | 15,06,919 |
| மொத்தம் | 20,46,788 மி.க.மீ |

(ஆதாரம்–2017 தமிழ்நாடு புள்ளியியல் கையேடு)

### தமிழ்நாட்டின் பல்நோக்கு ஆற்றுப் பள்ளத்தாக்குத் திட்டங்கள்:

பல்நோக்கு ஆற்றுப் பள்ளத்தாக்கு திட்டங்கள், அடிப்படையில் வேளாண் நீர்ப்பாசன மேம்பாட்டிற்காகவும் மற்றும் நீர் மின்சக்தி உற்பத்திக்காகவும் மேற்கொள்ளப்படுகின்றன. இருப்பினும் இவை வேறு பல நோக்கங்களுக்காகவும் பயன்படுத்தப்படுகின்றன.



10th_Geography_Unit_7_TM.indd 237 11-04-2020 12:00:39

### மேட்டூர் அணை

காவிரி ஆறு சமவெளியில் நுழையும் இடத்திற்கு முன்னுள்ள மலையிடுக்குப் பகுதியில் மேட்டூர் அணை கட்டப்பட்டுள்ளது. இது இந்தியாவின் மிகப் பழமையான அணைகளில் ஒன்றாகும். இது சேலம், ஈரோடு, கரூர், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களிலுள்ள விளை நிலத்திற்கு நீர்ப்பாசன வசதியை அளிக்கிறது.



**மேட்டூர் அணை**

### பவானி சாகர் அணை

ஈரோடு மாவட்டத்தில் அமைந்துள்ள பவானி சாகர் அணை, கோயம்புத்தூர் நகரிலிருந்து ஏறத்தாழ 80 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. இது பவானி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது. இந்த அணை நாட்டின் மண்–கல் கலவையால் கட்டப்பட்ட மிகப்பெரிய அணைகளுள் ஒன்றாகும்.

### அமராவதி அணை

அமராவதி அணை, திருப்பூர் மாவட்டத்தில் உடுமலைப் பேட்டையில் இருந்து ஏறத்தாழ 25 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. இவ்வணை காவிரியின் துணையாறான அமராவதி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது. இவ்வணை நீர்ப்பாசனம் மற்றும் வெள்ளக் கட்டுப்பாட்டை முதன்மை நோக்கமாகக் கொண்டது. அண்மையில் ஒரு சிறிய நீர் மின் நிலையமும் இங்கு நிறுவப்பட்டுள்ளது.

### கிருஷ்ணகிரி அணை

கிருஷ்ணகிரி அணை, கிருஷ்ணகிரியிலிருந்து 7 கி.மீ தொலைவில் தர்மபுரிக்கு செல்லும் வழியில் அமைந்துள்ளது.

### சாத்தனூர் அணை

சாத்தனூர் அணை செங்கம் தாலுகாவில் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது. இது சென்னகேசவ மலையின் நடுவே அமைந்துள்ளது. தண்டராம்பட்டு மற்றும் திருவண்ணாமலை ஒன்றியங்கள் இதன்மூலம் நீர்ப்பாசன வசதியைப் பெறுகின்றன.

இங்கு பெரிய முதலைப்பண்ணையும் வண்ணமீன் பண்ணையும் அமைந்துள்ளன. சுற்றுலா பயணிகளுக்காக அணையின் உள்ளே பூங்காக்கள் பராமரிக்கப்பட்டு வருகிறது. இங்குள்ள பூங்காக்கள் திரைப்படப் படப்பிடிப்புக்குப் பயன்படுத்தப்படுகின்றன.

### முல்லைப்பெரியாறு அணை

முல்லைப்பெரியாறு அணை 1895ஆம் ஆண்டு ஆங்கிலேய நிர்வாகத்தால் கட்டப்பட்டது. கேரளாவில், தேக்கடி மலையில் உருவாகும் பெரியாறு ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் நிரந்தரமாக வறட்சிக்குள்ளாகும் சில வேளாண் நிலங்களுக்கு நீர்ப்பாசனம் அளிப்பதற்காக இது கட்டப்பட்டது.

### வைகை அணை

ஆண்டிப்பட்டிக்கு அருகே வைகை ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது. 111 அடி உயரம் கொண்ட இவ்வணையில் 71 அடி உயரம் மட்டுமே நீரை சேமிக்க முடியும். இவ்வணை மதுரையிலிருந்து 70 கி.மீ தூரத்திலும் ஆண்டிப்பட்டியிலிருந்து 7 கி.மீ தூரத்திலும் அமைந்துள்ளது. இவ்வணை 1959 ஆம் ஆண்டு ஜனவரி 21ஆம் நாள் திறக்கப்பட்டது.

### மணிமுத்தாறு அணை

திருநெல்வேலி நகரிலிருந்து ஏறத்தாழ 47கி.மீ தொலைவில் மணிமுத்தாறு அணை கட்டப்பட்டுள்ளது.

### பாபநாசம் அணை

திருநெல்வேலியிலிருந்து 49கி.மீ தொலைவில் அமைந்துள்ள பாபநாசம் அணை 'கரையார் அணை' என்றும் அழைக்கப்படுகிறது. திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் உள்ள நிலங்கள் இதன் மூலம் பாசன வசதியைப் பெறுகின்றன.


### பரம்பிக்குளம் ஆழியாறு திட்டம்

இது தமிழ்நாடு மற்றும் கேரளா மாநிலங்களின் கூட்டு முயற்சியால் உருவாக்கப்பட்டது. பரம்பிக்குளம் மற்றும் ஆழியாறு பகுதியில் உள்ள ஏழு ஆறுகளின் நீரினைப் பெற்று அங்குள்ள ஏழு நீர்த்தேக்கங்களையும் ஒன்றோடொன்று இணைக்கும் எதிர்கால நோக்கத்தின் விளைவாக உருவானத் திட்டமாகும்.

பரப்பலாறு திட்டம் ஒட்டஞ்சத்திரம் அருகே அமைந்துள்ளது. இதன் நீர் கொள்ளளவுத் திறன் 167 மில்லியன் கன அடிகளாகும். பழனி தாலுகாவில் அமைந்துள்ள இவ்வணை மதுரையிலிருந்து 75 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது.

### நீர்வள மேலாண்மை

நீர்வள மேலாண்மை என்பது திட்டமிடல், செயல்படுத்துதல், நீர்வளத்தைப் பெருக்குதல், விநியோகித்தல் மற்றும் நீர்வளங்களின் உகந்த பயன்பாட்டை நிர்வகிப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்வதாகும். தமிழ்நாட்டில் மக்கள் தொகை அதிகரிப்பு, பொருளாதார வளர்ச்சி மற்றும் தனிநபரின் நுகர்வு காரணமாக நீரின் தேவை மிகவும் அதிகரித்துள்ளது. மக்களின் நீர்ப் பயன்பாடு, தொழில் துறைக்கான தேவைகள் மற்றும் இதர தேவைகளுக்கான பயன்பாடு குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்து வருகின்றது. மாநிலமானது நீர் தேவைக்கு பருவமழையைப் பெரிதும் சார்ந்துள்ளது. பருவ மழை பொய்ப்பதால் கடுமையான நீர் பற்றாக்குறை ஏற்பட்டு, வறட்சிக்கு வழி வகுக்கின்றது. எனவே நீர் சேமிப்பது நமக்கும் வருங்கால சந்ததியினருக்கும் பயனுள்ளதாக அமையும்.




## 7.7 தமிழ்நாட்டின் கனிம வளங்கள்

வெர்மிகுலைட், மேக்னடைட், டுனைட், ரூட்டைல், செம்மணிக்கல், மாலிப்படினம் மற்றும் இல்மனைட் ஆகிய வளங்களில் தமிழ்நாடு முன்னணி உற்பத்தியாளராக உள்ளது. பழுப்பு நிலக்கரி 55.3%, வெர்மிகுலைட் 75%, டுனைட் 59%, செம்மணிக்கல் 59%, மாலிப்டீனம் 52% மற்றும் டைட்டானியம் 30% தாதுக்கள் நாட்டின் மொத்த உற்பத்தியில் தமிழ்நாட்டின் பங்களிப்பாகும்.

மாநிலத்தில் காணப்படும் முக்கியமான தாதுக்கள் பின்வருமாறு: நெய்வேலி, மிகப்பெரிய பழுப்பு நிலக்கரி வளங்களைக் கொண்டுள்ளது. இராமநாதபுரம் பகுதிகளில் நிலக்கரி படிமங்கள் காணப்படுகின்றன. காவிரி வடிநிலப் பகுதியில் எண்ணெய் மற்றும் இயற்கைவாயு படிவுகள் காணப்படுகின்றன.

சேலம் மாவட்டத்தில் உள்ள கஞ்சமலையிலும் திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள கல்வராயன் மலையிலும் இரும்புத்தாது படிவுகள் காணப்படுகின்றன. சேலம் அருகே மேக்னசைட் தாது கிடைக்கின்றது. சேர்வராயன் குன்றுகள், கோத்தகிரி, உதகமண்டலம், பழனிமலை மற்றும் கொல்லிமலைப் பகுதிகளில் பாக்சைட் தாதுகள் காணப்படுகின்றன. திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் ஜிப்சம் கிடைக்கிறது. கன்னியாகுமரி கடற்கரை மணல் பரப்புகளில் இல்மனைட் மற்றும் ரூட்டைல் காணப்படுகிறது. கோயம்புத்தூர், கடலூர், திண்டுக்கல், காஞ்சிபுரம், கரூர், மதுரை, நாகப்பட்டினம், நாமக்கல், பெரம்பலூர், இராமநாதபுரம், சேலம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் சுண்ணாம்பு கிடைக்கிறது. கோயம்புத்தூர், தர்மபுரி, கரூர், நாமக்கல், நீலகிரி, சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் வேலூர் மாவட்டங்களில் மேக்னசைட் கிடைக்கிறது. பெல்ட்ஸ்பார்க், படிகக்கல், தாமிரம் மற்றும் காரீயம் ஆகியவை மாநிலத்தின் சில பகுதிகளில் காணப்படுகின்றன.

## 7.8 தொழிலகங்கள்


மூலப்பொருள்களை இயந்திரங்களின் மூலம் உற்பத்திப் பொருள்களாகவோ அல்லது பயன்படுத்தக்கூடிய பொருள்களாகவோ மாற்றப்படும் இடமே தொழிலகங்களாகும். பருத்தி நெசவாலை, சர்க்கரை ஆலை, காகித ஆலை, தோல் தொழிலகம், சிமெண்ட் ஆலை, மின்சாதனப் பொருள்கள் உற்பத்தி ஆலை, வாகன உதிரிபாகங்கள், தகவல் தொழில்நுட்பம் மற்றும் சுற்றுலாத் துறை ஆகியன தமிழ்நாட்டின் முக்கிய தொழிலகங்கள் ஆகும்.

VLQMLE

### பருத்தி நெசவாலைகள்

பருத்தி நெசவாலைகள் தமிழ்நாட்டின் பாரம்பரியமிக்க நன்கு வளர்ந்த ஒரு தொழிலகமாகும். பருத்தி நெசவாலைகள் கோயம்புத்தூர், திருப்பூர், சேலம், பல்லடம், கரூர், திண்டுக்கல், விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி, மதுரை மற்றும் ஈரோடு ஆகிய பகுதிகளில் செறிந்து காணப்படுகின்றன.

தமிழ்நாட்டில் உள்ள ஈரோடு கைத்தறி, விசைத்தறி மற்றும் ஆயத்த ஆடைகளின் விற்பனைக்கு புகழ்பெற்றது. கோயம்புத்தூர் 'தமிழ்நாட்டின் மான்செஸ்டர்' என்று அழைக்கப்படுகிறது. கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு மாவட்டங்கள் நெசவுத்தொழில் மூலம் மாநில பொருளாதாரத்திற்கு முக்கிய பங்களிப்பை அளிக்கின்றன. எனவே இப்பகுதி **'தமிழ்நாட்டின் ஜவுளி பள்ளத்தாக்கு'** எனக் குறிப்பிடப்படுகிறது. கரூர் **'தமிழ்நாட்டின் நெசவுத்தலைநகரம்'** என்றழைக்கப்படுகிறது.



**பருத்தி நெசவாலை**

## பட்டு நெசவுஆலைகள்

நாட்டின் பட்டு உற்பத்தியில் தமிழ்நாடு நான்காவது இடத்தை வகிக்கிறது. 'காஞ்சிபுரம் பட்டு' என்பது அதன் தனித்தன்மை, தரம் மற்றும் பாரம்பரிய மதிப்பு ஆகியவற்றால் உலகம் முழுவதும் அறியப்படுகிறது. காஞ்சிபுரம், ஆரணி, கும்பகோணம், சேலம், கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகியவை தமிழ்நாட்டின் முக்கிய பட்டு நெசவு மையங்களாகும். இராமநாதபுரத்தின் சில பகுதிகளில் செயற்கைப் பட்டு துணிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

## தோல் பதனிடும் தொழிலகங்கள்

இந்தியாவில், தோல் பதனிடும் தொழிலகங்களில் தமிழ்நாடு 60% உற்பத்தியையும் காலணிகள், தோல் ஆடைகள், மற்றும் தோல் உபபொருள்கள் உற்பத்தியில் 38% பங்களிப்பையும் அளிக்கிறது. வேலூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள இராணிப்பேட்டை, ஆம்பூர் மற்றும் வாணியம்பாடி நகரங்களில் நூற்றுக்கணக்கான தோல் பதனிடும் தொழிலகங்கள் அமைந்துள்ளன. அறிவியல் மற்றும் தொழில் ஆராய்ச்சி நிறுவனம் (CSIR) கீழ் மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் ஆய்வகம் (CLRI), சென்னையில் அமைந்துள்ளது.

## காகித தொழிலகம்

கரூர் மாவட்டம் காகிதபுரத்தில் தமிழக அரசு நிறுவனமான தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் (TNPL) அமைந்துள்ளன. இது செய்தித்தாள், அச்சுக் காகிதம் மற்றும் எழுதப் பயன்படும் காகிதம் ஆகியவற்றை உற்பத்தி செய்கின்றது.

### புவியியல் குறியீடு (GI Tag)

புவியியல் குறியீடு என்பது ஒரு குறிப்பிட்ட புவியியல் பிரதேசத்தில் தயாரிக்கப்படும் பொருள்களின் மீது பயன்படுத்தப்படும் குறிப்பாகும். இது உற்பத்தி செய்யும் உரிமையாளர்களுக்கு உரிமைகள் மற்றும் பாதுகாப்பை வழங்குகிறது.

**சில முக்கியப் புவியியல் குறியீடுகள்:**

| இடம் | உற்பத்திப் பொருள்கள் |
|---|---|
| ஆரணி | பட்டு |
| காஞ்சிபுரம் | பட்டு |
| கோயம்புத்தூர் | மாவு அரைக்கும் இயந்திரம், கோரா பட்டு சேலை |
| தஞ்சாவூர் | ஓவியங்கள், கலைநயம் மிக்க தட்டுகள், தலையாட்டி பொம்மைகள், வீணை |
| நாகர்கோவில் | கோயில் நகைகள் |
| ஈரோடு | மஞ்சள் |
| சேலம் | வெண்பட்டு ( சேலம் பட்டு ) |
| பவானி | போர்வைகள் |
| மதுரை | சுங்கடி சேலை |
| சுவாமிமலை | வெண்கலச் சிலைகள் |
| நாச்சியார்கோவில் | குத்துவிளக்கு |
| பத்தமடை | பாய் |
| நீலகிரி | பாரம்பரிய பூ தையல் |
| மகாபலிபுரம் | சிற்பங்கள் |
| சிறுமலை | மலை வாழை |
| ஏத்தோமொழி | தேங்காய் |

தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் உலகளவில் திறன்படைத்த ஆலைகளில் ஒன்றாகும். இவ்வாலை கரும்புச்சக்கை மற்றும் மரக்கூழிலிருந்து பலவகையான காகிதங்களை சிறந்த தரத்துடன் உற்பத்தி செய்கின்றன.

புக்காதுரை, பவானிசாகர், பள்ளிபாளையம், பரமத்தி வேலூர், கோயம்புத்தூர், உடுமலைப்பேட்டை, தொப்பம்பட்டி, நிலக்கோட்டை மற்றும் சேரன்மாதேவி ஆகிய இடங்களில் காகித ஆலைகள் உள்ளன.

## சிமெண்ட் தொழிலகம்

சிமெண்ட் தொழிலகம் பொருளாதார மந்த நிலையிலும் உற்பத்தி மற்றும் நுகர்வில் தொடர்ந்து வளர்ச்சி அடைந்து வந்துள்ளது. இந்தியா மிகப்பெரிய சிமெண்டு உற்பத்தி செய்யும் நாடுகளில் ஒன்றாகவும், 181 மில்லியன் டன்கள் வருடாந்திர உற்பத்தியுடன் உலகில் இரண்டாவது இடத்தை வகிக்கும் நாடாகவும் உள்ளது. தமிழ்நாட்டின்



10th_Geography_Unit_7_TM.indd 240 11-04-2020 12:00:41

முக்கிய சிமெண்ட் உற்பத்தியாளர்களில், தமிழ்நாடு சிமெண்ட் கழகமும் (TANCEM) ஒன்றாக உள்ளது. அரியலூர் மற்றும் ஆலங்குளம் ஆகிய இடங்களில் சிமெண்ட் உற்பத்தி ஆலைகள் இயங்குகின்றன. ஆலங்குளத்தில் உள்ள கல்நார் சிமெண்ட் அட்டை அலகும், விருத்தாசலத்தில் உள்ள கற்கலன் குழாய் அலகு ஆகியன மாநிலத்தின் மற்ற அலகுகளாகும். சங்கர் சிமெண்ட், ஜூவாரி சிமெண்ட், அல்ட்ராடெக் சிமெண்ட், மதராஸ் சிமெண்ட் மற்றும் டால்மியா சிமெண்ட் ஆகியன தமிழ்நாட்டின் முக்கிய தனியார் சிமெண்ட் உற்பத்தி நிறுவனங்களாகும்.

## 7.9 தகவல் தொழில்நுட்பம்

தேசிய மென்பொருள் மற்றும் சேவைகள் நிறுவன கூட்டமைப்பின்படி (NAASCOM) இந்தியாவின் மொத்த மென்பொருள் ஏற்றுமதியில் தென் மாநிலங்கள் தொடர்ந்து மேலானப் பங்களிப்பை செய்து வருகின்றன. தமிழ்நாடு மற்றும் ஆந்திரப்பிரதேச மாநிலங்கள் இணைந்து இந்தியாவின் மொத்த மென்பொருள் ஏற்றுமதியில் 59.6%ஐ செய்கின்றன. நாட்டின் மென்பொருள் ஏற்றுமதியில் கர்நாடகாவுக்கு அடுத்ததாக தமிழ்நாடு இரண்டாவது பெரிய ஏற்றுமதி செய்யும் மாநிலமாக உள்ளது.

### சிறப்புப் பொருளாதார மண்டலம்

சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் சர்வதேச அளவில் மிகச்சிறந்த பகுதிகளாகவும் ஏற்றுமதியை ஊக்குவிக்கக்கூடிய சூழலைப் பெற்றதாகவும் உள்ளது. இம்மண்டலம் பல உற்பத்திப் பொருள்களை அளிப்பதுடன் பல்வேறு சேவைகளையும் அளிக்கிறது. நாங்குநேரி, எண்ணூர், ஓசூர் மற்றும் பெரம்பலூரில் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் அமைந்துள்ளன. தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலங்களான – டைடல் பூங்கா–2, டைடல் பூங்கா–3 மற்றும் உயிரி மருந்தகம் போன்றவை சென்னையிலும் டைடல் பூங்கா–4 கோயம்புத்தூரிலும் அமைந்துள்ளன.

**தமிழ்நாட்டில் உள்ள முக்கிய தகவல் தொழில்நுட்ப பூங்காக்கள்**

டைடல் பூங்கா, அசெண்டாஸ், தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகளுக்கான மகேந்திரா உலக நகரம், சிறப்பு பொருளாதார மண்டலம்–டைடல் பூங்கா II மற்றும் டைடல் பூங்கா III, கோயம்புத்தூர் சிறப்பு பொருளாதார மண்டலம்–டைடல் பூங்கா ஆகியனவாகும்.

### பொறியியல் உற்பத்தி தொழிலகங்கள்

உற்பத்தித் தொழில் என்பது மாநிலப் பொருளாதாரத்தின் துடிப்பான துறைகளில் ஒன்றாகும். இது பொறியியல் உற்பத்தி தொழில்துறையில் ஒரு குறிப்பிடத்தக்க பங்களிப்பை அளிக்கிறது. வாகனங்கள் மற்றும் இதரபாகங்கள் உற்பத்தி, வாகன உற்பத்தி, மூல உலோகம் மற்றும் உலோகக் கலவைத் தொழில்கள், உலோகப் பொருள்கள் மற்றும் பழுதுபார்க்கும் கருவிகள் ஆகியவற்றை உற்பத்தி செய்கின்றன.

### வாகனத் தொழிலகங்கள்

இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் வாகனத் தொழில்களில் 21% பயணிகள் மகிழுந்து, 33% வணிக வாகனங்கள் மற்றும் 35% வாகன உதிரிபாகங்கள் ஆகியன தமிழ்நாட்டின் அதிகமான பங்களிப்பாகும். போர்டு, ஹூண்டாய், எச் எம் மிட்சுபிவி, அசோக் லைலாண்ட் மற்றும் வேளாண் கருவிகள் நிறுவனம் (TAFE) (இழுவை இயந்திரம்) (Tractor), ஆகியவற்றின் உற்பத்திக் தளங்கள் தமிழ்நாட்டில் அமைந்துள்ளன.

### கைத்தறி மற்றும் விசைத்தறி

கைத்தறித் துறையானது மாநிலத்தில் மிகப்பெரிய குடிசைத் தொழிலாகும். இது கிராமப்புற மக்களுக்கு வாழ்வாதாரத்தையும் ஏற்றுமதி வருவாயையும் அளிக்கின்றன. நெசவாளர் சங்கங்கள், 'பள்ளிக் குழந்தைகளுக்கு விலையில்லா சீருடையும், விலையில்லா வேட்டி மற்றும் சேலை' திட்டத்திற்கு தேவையான துணிகளையும் உற்பத்தி செய்கின்றன.


### சர்க்கரைத் தொழிலகம்

தமிழ்நாட்டில் சர்க்கரைத் தொழிலகம் ஒரு வேளாண்சார்ந்த தொழிலகமாகும். கிராமப்புற பகுதிகள் மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கியப் பங்கினை வகிக்கிறது. சர்க்கரைத் தொழிலகங்கள் பல ஆயிரம் மக்களுக்கு நேரடி வேலைவாய்ப்பையும், கரும்பு பயிர்சாகுபடி, அறுவடை, போக்குவரத்து மற்றும் இதரப் பணிகளில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் மற்றும் வேளாண் தொழிலாளர்கள் போன்ற பல இலட்சம் மக்களுக்கு மறைமுக வேலை வாய்ப்பையும் வழங்குகின்றன.

### சுற்றுலாத்துறை

சுற்றுலாத்துறை ஒரு தொழிலகமாகக் கருதப்படுகிறது. ஏனெனில் இதில் ஏராளமான மக்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்குவதில் முக்கியப்பங்கு வகிக்கின்றன. சமீப காலங்களில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு முன்னணித் தலங்களில்

ஒன்றாக தமிழகம் உருவாகிக் கொண்டிருக்கிறது. தமிழகத்தில் சுற்றுலாத்துறை, தமிழ்நாடு சுற்றுலா மேம்பாட்டுக் கழகத்தால் (TTDC) ஊக்குவிக்கப்படுகிறது. பழங்கால நினைவுச் சின்னங்கள், புனிதத்தலங்கள், மலைவாழிடங்கள், பலவகையான இயற்கை நிலத்தோற்றங்கள், நீண்ட கடற்கரை, கலாச்சாரம் மற்றும் பாரம்பரியம் ஆகியவற்றுடன் தமிழ்நாடு சுற்றுலாப் பயணிகளுக்கு மிகச் சிறந்த மாநிலமாக உள்ளது.




## 7.10 மக்கள் தொகை

ஒரு நாட்டின் வரையறுக்கப்பட்ட பகுதியில் வாழும் மக்களின் எண்ணிக்கையே மக்கள் தொகை எனப்படுகிறது. மக்கள்தொகைப் பண்புகள் பற்றிய புள்ளிவிவர ஆய்வுகள் 'மக்கட்தொகையியல்' என அழைக்கப்படுகின்றது.

A871EX

### அதிக மக்கள் தொகையைக் கொண்ட பகுதிகள்

கோவை, சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், தர்மபுரி, சேலம், மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகியவை தமிழ்நாட்டில் அதிக மக்கள் தொகையைக் கொண்ட மாவட்டங்களாகும். இம்மாவட்டங்களில் அதிக அளவிலான மக்கள் தொகை இருப்பதற்குக் காரணம் விவசாயம் மற்றும் தொழில்துறை மேம்பாடு ஆகும்.

### மிதமான மக்கள் தொகையைக் கொண்ட பகுதிகள்

திருவண்ணாமலை, கடலூர், திருச்சி மற்றும் தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்கள் 30 – 35 இலட்சம் மக்கள்தொகையைப் பெற்றுள்ளன. வேலூர், திண்டுக்கல், விருதுநகர் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்கள் ஒவ்வொன்றும் 15 – 20 இலட்சம் மக்கள்தொகையைக் கொண்டுள்ளன. விவசாயம், சிறியஅளவிலான தொழில்கள் தவிர கடலோரப் பகுதிகளில் மீன்பிடித்தல் ஆகியவை இம்மாவட்டங்களின் முக்கியத் தொழில்களாகும்.

### குறைவான மக்கள் தொகையைக் கொண்ட பகுதிகள்

கடலோர மாவட்டங்களான நாகப்பட்டினம், திருவாரூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை ஆகியவை 15 இலட்சத்திற்கும் குறைவான மக்கள் தொகையைப் பெற்றுள்ளன. நீலகிரி மாவட்டம் 10 இலட்சத்திற்கும் குறைவான மக்கள்தொகையைக் கொண்டுள்ளது.

### மக்களடர்த்தி

இந்தியாவின் மக்களடர்த்தியில் நமது மாநிலம் 12வது இடத்தில் உள்ளது. 2011ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி தேசிய சராசரி மக்களடர்த்தி 382 ஆகும். சென்னை ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 26,903 மக்களடர்த்தி கொண்ட மாவட்டமாகும். இதையடுத்து கன்னியாகுமரி, திருவள்ளூர், காஞ்சிபுரம், மதுரை, கோயம்புத்தூர், கடலூர், தஞ்சாவூர், நாகப்பட்டினம், சேலம், வேலூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்கள் அதிக மக்களடர்த்தி கொண்ட மாவட்டங்களாகும். நீலகிரி மாவட்டத்தில் குறைந்த அளவு மக்களடர்த்தி (288ச.கி.மீ) பதிவாகியுள்ளது. மற்ற மாவட்டங்கள் மிதமான மக்களடர்த்தியைக் கொண்டுள்ளன.

### மதங்கள்

இந்து, கிறித்தவம் மற்றும் இஸ்லாம் நமது மாநிலத்தின் முக்கிய மதங்களாகும். நமது மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையில் இந்துக்கள் அதிகமாகவும் அதனைத் தொடர்ந்து கிறித்தவர்கள், இஸ்லாமியர்கள், சமணர்கள், சீக்கிய மதத்தினர் மற்றும் புத்த மதத்தினரும் பிற மதங்களைச் சார்ந்தவர்களும் உள்ளனர்.

### பாலின விகிதம்

பாலின விகிதம் என்பது 1,000 ஆண்களுக்கு இணையாக உள்ள பெண்களின் எண்ணிக்கையைக் குறிக்கிறது. பாலின விகிதம் அதிகம் கொண்ட மாவட்டங்களாக நீலகிரியும் (1,041) அதைத் தொடர்ந்து தஞ்சாவூர் மாவட்டமும் (1,031) காணப்படுகின்றன. குறைவான பாலின விகிதம்



10th_Geography_Unit_7_TM.indd 242 11-04-2020 12:00:41

கொண்ட மாவட்டங்களாகத் தர்மபுரியும் (946) அதனைத் தொடர்ந்து சேலமும் (954) உள்ளன.

### கல்வியறிவு விகிதம்

கன்னியாகுமரி மாவட்டம் அதிக அளவில் கல்வியறிவு விகிதம் கொண்ட மாவட்டமாகவும், தர்மபுரி மாவட்டம் மிகக் குறைந்த கல்வியறிவு கொண்ட மாவட்டமாகவும் உள்ளது. மேலும் அதிக கல்வியறிவு கொண்ட மாவட்டங்களாக சென்னை, தூத்துக்குடி, நீலகிரி மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்கள் உள்ளன.

## 7.11 போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்பு

### சாலைகளின் வகைகள்

மாநிலத்தின் மொத்த சாலைகளின் நீளம் 1,67,000 கிலோமீட்டர் ஆகும். இதில் 60,628 கிலோமீட்டர் மாநில நெடுஞ்சாலை துறை மூலம் பராமரிக்கப்படுகிறது. பொதுத்துறை மற்றும் தனியார்துறை கூட்டணி இயக்கத் திட்டத்தின் கீழ் (PPP) மொத்த சாலைத் திட்டங்களில் 20% பங்களிப்புடன் இந்தியாவில் இரண்டாவது இடத்தில் உள்ளது.

SMBJDS

### இரயில்வே போக்குவரத்து

தெற்கு இரயில்வேயின் தலைமையகம் சென்னையில் அமைந்துள்ளது. தற்போது தெற்கு இரயில்வேயின் வலைப்பின்னல் இந்தியாவின் தென் தீபகற்பப் பகுதிகளான தமிழ்நாடு, கேரளா, புதுச்சேரி, கர்நாடகா மற்றும் ஆந்திரப் பிரதேசத்தின் சில பகுதிகளுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. சென்னையில் புறநகர் இரயில் போக்குவரத்து மற்றும் பறக்கும் தொடருந்துத் திட்டம் ஆகியவை நன்கு வளர்ச்சியடைந்துள்ளன. மெட்ரோ இரயில்வே அமைப்பு, மே 2017 முதல் பாதாள இரயில் இயக்கத்துடன் இப்போக்குவரத்தை விரிவாக்கம் செய்து வருகிறது.

### வான்வழி போக்குவரத்து

தமிழ்நாட்டில் 4 முக்கிய சர்வதேச விமான நிலையங்கள் உள்ளன. சென்னை சர்வதேச விமானநிலையமானது மும்பை மற்றும் புது டெல்லிக்கு அடுத்ததாக இந்தியாவின் மூன்றாவது பெரிய விமான நிலையமாக உள்ளது. கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகியன நாட்டில் பிற சர்வதேச விமானநிலையங்கள் ஆகும். தூத்துக்குடி மற்றும் சேலம் ஆகியவை உள்நாட்டு விமானநிலையங்கள் ஆகும்.

உங்களுக்குத் தெரியுமா?

தமிழ்நாட்டின் மிக நீளமான தேசிய நெடுஞ்சாலை எண் 44–ஐ உடையதாகும். இது ஓசூரிலிருந்து தர்மபுரி , சேலம், கரூர், திண்டுக்கல், மதுரை, திருநெல்வேலி வழியாக கன்னியாகுமரி வரை 627.2 கிலோமீட்டர் தூரம் செல்கிறது. தமிழ்நாட்டின் மிகக் குறைவான நீளங்கொண்ட தேசிய நெடுஞ்சாலை எண்785–ஐக் கொண்டதாகும். இது மதுரையிலிருந்து துவரங்குறிச்சி வரை செல்கிறது. இதன் நீளம் 38 கிலோ மீட்டர் ஆகும்.

### நீர்வழி போக்குவரத்து

சென்னை, எண்ணூர் மற்றும் தூத்துக்குடி ஆகியவை தமிழ்நாட்டின் மூன்று முக்கிய துறைமுகங்களாகும். நாகப்பட்டினத்தில் இடைநிலை துறைமுகமும் பிற பகுதிகளில் 15 சிறிய துறைமுகங்களும் இம்மாநிலத்தில் உள்ளன. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சிறு துறைமுகங்களும் தமிழ்நாட்டின் கடல்சார் வாரியத்தால் நிர்வகிக்கப்படுகிறது. சென்னை துறைமுகம் செயற்கைத் துறைமுகமாகும். இது சரக்குப் பெட்டகங்களைக் கையாளும் நாட்டின் துறைமுகங்களில் இரண்டாவது பெரிய துறைமுகமாகும்.

## 7.12 தகவல் தொடர்பு

தகவல் தொடர்பு என்பது இலத்தீன் வார்த்தையான 'கம்யூனிகேர்' என்பதிலிருந்து பெறப்பட்டது. இது 'பகிர்தல்' எனப் பொருள்படும். தகவல்கள், எண்ணங்கள் மற்றும் எண்ணங்களின் பரிமாற்றத்தை தகவல் தொடர்பு என்கிறோம்.


தகவல் தொடர்புகள் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றன. அவை:


1. தனிமனித தகவல் தொடர்பு
2. பொதுத்தகவல் தொடர்பு

**தமிழ்நாட்டின் அஞ்சலக மாவட்டங்கள் மற்றும் தலைமையகம்**

| மண்டலம் / மாவட்டங்கள் | தலைமையகம் |
|---|---|
| சென்னை | சென்னை |
| மேற்கு மண்டலம் | கோயம்புத்தூர் |
| மத்திய மண்டலம் | திருச்சிராப்பள்ளி |
| தெற்கு மண்டலம் | மதுரை |

# தமிழ் நாடு – போக்குவரத்து







10th_Geography_Unit_7_TM.indd 244
11-04-2020 12:00:42

## தமிழ் நாடு – போக்குவரத்து



## 7.13 வணிகம்

ஏற்றுமதி மற்றும் இறக்குமதி ஆகியவை வணிகத்தின் இரு கூறுகளாகும். ஏற்றுமதி என்பது பொருள்கள் மற்றும் சேவைகளை வெளிநாட்டுப் பணத்திற்கு விற்பதாகும் இந்தியாவின் ஏற்றுமதியில் தமிழகத்தின் பங்களிப்பு 12.2 சதவிகிதம் ஆகும். இறக்குமதி என்பது பண்டங்கள் மற்றும் சேவைகளை வெளிநாட்டு உற்பத்தியாளர்களிடமிருந்து வாங்குவதாகும். தமிழ்நாடு பல பொருள்களை வெளியில் இருந்து இறக்குமதி செய்கிறது. ஏற்றுமதி மற்றும் இறக்குமதி மதிப்பிற்கு இடையேயான வேறுபாடு 'வர்த்தக சமநிலை' என அழைக்கப்படுகிறது.

## 7.14 தமிழ்நாட்டின் இறக்குமதிகள்

இயந்திரக் கருவிகளான போக்குவரத்து சாதனங்கள், இயந்திர உபகரணங்கள், மின்சாதனமல்லா இயந்திரங்கள், மின்சாதன பொருள்கள், மருந்துப் பொருள்கள், பெட்ரோலியம், உரங்கள் மற்றும் செய்தித்தாள் ஆகியவை முக்கிய இறக்குமதிகளாகும். நாட்டின் வணிகத்தில் தமிழ்நாட்டின் முக்கிய துறைமுகங்கள் 10.94% பங்களிப்பைச் செய்கின்றன.

| தமிழ்நாட்டின் முக்கிய ஏற்றுமதிகள் | |
|---|---|
| வேளாண் பொருள்கள் | புகையிலை, தானியங்கள், பருத்தி, கரும்பு, நெல், நிலக்கடலை, வாசனைப் பொருள்கள் மற்றும் காய்கறிகள் |
| தோல் பொருள்கள் | சிறுதோல் பைகள், பணப்பைகள், கைப்பைகள், இடுப்பு கச்சை, காலணிகள் மற்றும் கையுறைகள் |
| இரத்தின கற்கள் மற்றும் நகைகள் | விலை மதிப்பு மிக்க கற்கள், முத்துக்கள், தங்க நகைகள், கலை மற்றும் அலங்காரம் பொருள்கள். |
| இரசாயன மற்றும் இரசாயனம் சார்ந்த பொருள்கள் | காகிதம், இரசாயனங்கள், இரப்பர் மற்றும் கண்ணாடி |

மேலே விவாதிக்கப்பட்ட கருத்துகளின் மூலம் தமிழகமானது பரப்பு, மக்கள்தொகை, வளம் மற்றும் பொருளாதார வளர்ச்சியின் அடிப்படையில் ஒரு முக்கிய மாநிலம் என்பது தெளிவாகிறது. இம்மாநிலத்தில் மக்கள் பாதுகாப்பாக உள்ளனர். தமிழக அரசால் அவ்வப்போது அறிமுகப்படுத்தப்படும் திட்டங்களின் மூலம் இம்மாநிலமானது அனைத்து துறைகளிலும் ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்து வருகிறது.

### பாடச்சுருக்கம்

- மானுடவியல் என்பது மனிதர்களின் செயல்பாடுகள் எவ்வாறு இயற்கையின் தாக்கத்திற்கு உள்ளாகின்றன அல்லது கட்டுப்படுத்தப்படுகின்றன என்பது பற்றிய புவியியலின் ஒரு பகுதியாகும்
- அயனமண்டலப் பயிர்களான நெல், தினை வகைகள், பருப்பு வகைகள், எண்ணெய் வித்துக்கள் மற்றும் தோட்டப் பயிர்களான தேயிலை, காபி, முந்திரி, இரப்பர் ஆகியன தமிழ்நாட்டின் முக்கியப் பயிர் வகைகளாகும்.
- தமிழ்நாடானது இந்தியாவின் 55.3 சதவிகிதம் பழுப்பு நிலக்கரி, 75% வெர்மிகுலைட், 69% டுனைட், 59% கார்நெட், 52% மாலிப்டீனம் மற்றும் 30% டைட்டானியம் ஆகிய தாதுக்களைக் கொண்டுள்ளது.

## பயிற்சி

E1V6K9

### I சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

1. தென்னிந்தியாவின் நெற்களஞ்சியம் என்று அழைக்கப்படும் டெல்டா ________

அ) காவிரி டெல்டா  ஆ) மகாநதி டெல்டா

இ) கோதாவரி டெல்டா  ஈ) கிருஷ்ணா டெல்டா

2. தமிழ்நாட்டு மக்களின் இரண்டாவது முக்கிய உணவுப் பயிர் ________

அ) பருப்பு வகைகள்

ஆ) சிறுதானியங்கள்

இ) எண்ணெய் வித்துக்கள்

ஈ) நெல்

3. தமிழ்நாட்டின் மிகப் பெரிய நீர்மின்சக்தி திட்டம் ________

அ) மேட்டூர்  ஆ) பாபநாசம்

இ) சாத்தனூர்  ஈ) துங்கபத்ரா



10th_Geography_Unit_7_TM.indd 246 11-04-2020 12:00:43

4. தமிழ்நாட்டிலுள்ள பெரிய மற்றும் சிறிய துறைமுகங்களின் எண்ணிக்கை ________

அ) 3 மற்றும் 15 ஆ) 4 மற்றும் 16
இ) 3 மற்றும் 16 ஈ) 4 மற்றும் 15

## II கோடிட்ட இடங்களை நிரப்புக

1. தமிழ்நாட்டின் பொருளாதாரத்தில் வேளாண்மை துறையின் பங்கு ________ சதவிகிதத்தை வகிக்கிறது.
2. சாத்தனூர் அணை ________ ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது.
3. மும்பை மற்றும் டில்லியை அடுத்த இந்தியாவின் மூன்றாவது பெரிய விமான நிலையம் ________ ஆகும்.
4. இறக்குமதி மற்றும் ஏற்றுமதி மதிப்புகளுக்கு இடையிலுள்ள வேறுபாடு ________ என அழைக்கப்படுகிறது.

## III பொருத்துக

1. பாக்சைட் – சேலம்
2 ஜிப்சம் – சேர்வராயன் மலை
3. இரும்பு – கோயம்புத்தூர்
4. சுண்ணாம்புக்கல் – திருச்சிராப்பள்ளி

## IV சரியான கூற்றினை கண்டுபிடி

1. **கூற்று:** கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் ஈரோடு மண்டலம் தமிழ்நாட்டின் ஜவுளி பள்ளத்தாக்கு என அழைக்கப்படுகிறது.

**காரணம்:** இவைகள் நெசவாலைகள் மூலம் நாட்டின் பொருளாதாரத்திற்கு முக்கிய பங்களிப்பை அளிக்கின்றன.

அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. காரணம், கூற்றுக்கான சரியான விளக்கம் ஆகும்.

ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி ஆனால் காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல.

இ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு.

ஈ) கூற்று தவறு ஆனால் காரணம் சரி.

2. **கூற்று:** நீலகிரி தமிழ்நாட்டின் குறைந்த மக்கள்தொகை கொண்ட மாவட்டம்.

**காரணம்:** இது தமிழ்நாட்டின் மேற்கு பகுதியில் அமைந்துள்ளது.

அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி காரணம் கூற்றை விளக்குகிறது.

ஆ) கூற்று மற்றும் காரணம் சரி ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் அல்ல.

இ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு.

ஈ) கூற்று தவறு ஆனால் காரணம் சரி.

## V சுருக்கமாக விடையளிக்கவும்

1. தமிழ்நாட்டின் வேளாண் பருவக்காலங்களை எழுதுக.
2. கோயம்புத்தூர் ஏன் தமிழ்நாட்டின் 'மான்செஸ்டர்' என அழைக்கப்படுகிறது?
3. தமிழ்நாட்டின் முக்கிய பல்நோக்குத் திட்டங்களின் பெயர்களை எழுதுக.
4. பறக்கும் தொடருந்துத் திட்டம் (MRTS) என்றால் என்ன?
5. தமிழ்நாட்டின் விமான நிலையங்கள் மற்றும் துறைமுகங்களைப் பட்டியலிடுக.

## VI வேறுபடுத்துக.

1. கடல் மீன்பிடித்தல் மற்றும் உள்நாட்டு மீன் பிடித்தல்.
2. உணவுப் பயிர்கள் மற்றும் வாணிபப் பயிர்கள்.
3. மேற்பரப்பு நீர் மற்றும் நிலத்தடி நீர்.

## VII கீழ்க்கண்டவற்றிக்குக் காரணம் கூறுக

1. விவசாயிகள் இரசாயன வேளாண்மையிலிருந்து கரிம (இயற்கை) வேளாண்மைக்கு மாறுகிறார்கள்.
2. கிராமங்களைவிட பெருநகரங்களில் மக்கள் தொகை நெருக்கம் அதிகம்.
3. தமிழ்நாட்டின் 'நெசவாலைத் தலைநகர்' என கரூர் அழைக்கப்படுகிறது.

## VIII பத்தி அளவில் விடையளிக்கவும்

1. தமிழ்நாட்டின் தோட்ட வேளாண்மை பற்றி விளக்குக.
2. தமிழ்நாட்டின் நீர் ஆதாரங்களைப் பற்றி எழுதவும்.
3. தமிழ்நாட்டின் கனிம பரவலை விவரி.
4. தமிழ்நாட்டில் அடர்த்தியான மக்கள்தொகை கொண்ட பகுதிகள் மற்றும் அதற்கான காரணங்களை எழுதுக.
5. தமிழ்நாட்டின் பல்வேறு போக்குவரத்து முறைகளை விவரி.
6. சாலைப் பாதுகாப்பு விதிகள் பற்றி எழுதவும்.

## IX நில வரைபடப் பயிற்சி

1. முக்கிய பயிர் விளையும் பகுதிகள், தாதுக்கள், விமான நிலையங்கள் மற்றும் துறைமுகங்களைத் தமிழ்நாடு வரைபடத்தில் குறிக்கவும்.



10th_Geography_Unit_7_TM.indd 247 11-04-2020 12:00:43

## மேற்கோள் நூல்கள்

1. *Geography of Tamil Nadu* by Kumarasamy (2018), Varthamana Publication, T. Nagar, Chennai
2. Kumaraswamy, S.V. (2014). Geography of Tamil Nadu (Tamil Version), Sakthi Abirami Pathipagam, Coimbatore.
3. Statistical Hand Book of Tamil Nadu (2016). Department of Economics and Statistics, Government of Tamil Nadu, Chennai.
4. Mathew, M. (2018). Manorama Yearbook – 2018 (English Version), Manorama Company Ltd., Kottayam.

## இணையதள வளங்கள்

1. http://www.tn.gov.in/ta/Tamil Nadustate
2. http://www.environment.tn.nic.in/
3. http://agritech.tnau.ac.in/
4. http://www.fisheries.tn.gov.in/
5. https://www.census2011.co.in/census/state/tamil+nadu.html

## A-Z கலைச்சொற்கள்

**காயல்கள் அல்லது உப்பங்கழிகள்** (Back waters) : ஆற்றின் முகத்துவாரத்தில் ஆற்றுநீர் கடல் அலைகளால் தடுக்கப்பட்டு கடலில் கலக்காமல் தேங்கி இருப்பது.

**கிளை ஆறு** (Distributary): முதன்மை ஆறானது அதன் கடைப்பகுதியில் பல கிளைகளாகப் பிரிந்து கடலில் கலப்பது.

**ஆற்றிடைச் சமவெளி** (Doab): இரு ஆறுகளுக்கு இடைப்பட்ட வளமான சமவெளி.

**கழிமுகம்** (Estuary): ஆறு அதன் கடைப்பகுதியில் பல கிளைகளாகப் பிரியாமல் ஒரே ஆறாக கடலில் கலக்கும் பகுதி.

**வற்றாத ஆறுகள்** (Perennial Rivers): ஆறுகள் ஆண்டு முழுவதும் நீரோட்டத்துடனும் நிலையான நீர் பிடிப்பு பகுதியையும் கொண்டிருப்பது.

**கணவாய்** (Pass): இரு மலைத்தொடர்களின் ஊடாகசெல்லும் குறுகிய பாதை.

**தீபகற்பம்** (Peninsula): மூன்று புறங்களிலும் நீரால் சூழப்பட்ட நிலப்பகுதி.

**துணைக்கண்டம்** (Subcontinent): ஒரு கண்டத்திற்குரிய அனைத்து பண்புகளையும் கொண்டுள்ள மிகபரந்த நிலப்பரப்பு துணைக்கண்டம் என அழைக்கப்படுகிறது.

**திட்ட நேரம்** (Standard Time): ஒரு நாட்டின் மைய தீர்க்கத்தின் தலநேரத்தை திட்ட நேரம் என்கிறோம்.

**துணையாறு** (Tributary): ஒரு சிற்றோடை அல்லது ஆறானது முதன்மை ஆற்றுடன் ஒன்று சேர்வது.

**காலநிலை** (Climate): ஒரு பகுதியின் நீண்ட கால வானிலை சராசரியே காலநிலையாகும்.

**வானிலையியல்** (Meteorology): வானிலையின் பல்வேறு கூறுகளைப் பற்றி, குறிப்பாக வானிலை முன்னறிவிப்பு பற்றிய ஒரு அறிவியல் பிரிவு .

**பருவக் காலங்கள்** (Season): ஒரு வருடத்தின் நன்கு வரையறுக்கப்பட்ட நான்கு பருவங்கள் (வசந்தகாலம்,கோடைக்காலம், இலையுதிர்க் காலம் மற்றும் குளிர்க்காலம்)

**வானிலை** (Weather): ஓர் இடத்தின் குறுகிய கால வளிமண்டலத்தின் நிலையைக் குறிப்பது.(வெப்பம், மேகமூட்டம், வறட்சி, சூரிய ஒளி, காற்று மற்றும் மழை)

**வன உயிரினங்கள்** (Wildlife): ஓர் இடத்தின் வனவிலங்கினங்கள் மற்றும் இயற்கை தாவரங்களின் தொகுப்பு.

**மண்** (Soil): மண் என்பது கனிமங்களின் கூட்டுப் பொருள்கள், மட்கிய தாவரங்கள், விலங்கினப் பொருள்கள், காற்று மற்றும் நீர் ஆகியவற்றை உள்ளடக்கிய புவியின் மேற்பரப்பில் காணப்படும் ஒரு அடுக்காகும்.

**காதர்** (Khadar): ஆற்றுச் சமவெளியில் காணப்படும் புதிய வண்டல் மண்

**பாங்கர்** (Bhangar): வண்டல் சமவெளியில் 30மீட்டருக்கு மேல் உள்ள உயர் பகுதிகளில் காணப்படும் பழைய வண்டல் மண்.

**மண் அரிப்பு** (Soil erosion): புவிப்பரப்பின் மேல் அடுக்கு மண் அகற்றப்படுதல்.

**மண்வளப் பாதுகாப்பு** (SoilConservation): மண்ணரிப்பை தடுத்து, மண் வளத்தை பேணிக் காத்தல்.

**நீர்ப்பாசனம்** (Irrigation): செயற்கை முறையில் தாவரங்களுக்கு நீர் பாய்ச்சுதல்.

**பல்நோக்குத் திட்டம்** (Multi purpose project): பல்வேறு நோக்கங்களுக்காக ஆற்றின் குறுக்கே அணை கட்டுதல்.

**வேளாண்மை** (Agriculture): பயிரிடல் மற்றும் அவை சார்ந்த கால்நடை வளர்ப்பு.

**உயிரி எரிசக்தி** (Biogas): தாவரங்கள் மற்றும் விலங்கின கழிவுகளில் இருந்து உற்பத்தி செய்யப்படும் மீத்தேன் மற்றும் கார்பன்– டை– ஆக்சைடையே உயிரி எரிசக்தி என்கிறோம்.

**புதைப்படிவ எரிபொருள்கள்** (Fossil fuel): இயற்கையில் கிடைக்கும் கரிம அல்லது நீரக கரிம பொருள்களான நிலக்கரி, பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு ஆகும்.

**தாது** (Ore): புவியின் மேலோட்டில் படிந்துள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கனிமக் கலவை தாதுக்களாகும்.

**சூரிய சக்தி** (Solar Power): சூரிய வெப்பக் கதிர்வீச்சை மின் சக்தியாக மாற்றுதல்.

**அனல் மின் நிலையம்** (Thermal power station): பெட்ரோலியம் மற்றும் நிலக்கரியை எரித்து மின் உற்பத்தி செய்யும் நிலையங்கள் ஆகும்.

**பண்டமாற்று முறை** (Barter): இரண்டு நபர்கள் அல்லது குழுக்களுக்கிடையே நேரடியாக பொருள்களை பரிமாறிக்கொள்வது. இவ்வணிகத்தில் பணம் பங்கு பெறுவதில்லை.

**அந்நியச் செலாவணி** (Foreign Exchange): அந்நியச் செலாவணி என்பது இரு நாடுகளுக்கு இடையேயான பண பரிவர்த்தனையில், அந்நாடுகளின் தேசிய மதிப்பு முறை கையாளப்படுகிறது. இவற்றில் நாணயம், தங்கம் போன்றவை நேரடியாக பரிமாறிக் கொள்ளப்படுவதில்லை.

**கப்பல்துறை** (Harbour): கடற்கரைக்கு அருகில் அமைந்துள்ள விரிவான, ஆழமான நீர் பரப்பு கொண்ட கப்பல்கள் மற்றும் படகுகள் பாதுகாப்பாக நங்கூரமிடக் கூடிய ஒரு இடமாகும். இவை சரக்குகள் ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக்கு பயன்படுத்தப்படுகிறது.

**துறைமுகம்** (port): ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்வதற்காக சரக்குகளை ஏற்றவும், இறக்கவும், சேமித்து வைக்கவும் வசதி கொண்ட கப்பல்துறையின் விரிவாக்கப் பகுதி.

**விரிகுடா (Bay):** பரந்த கடல் நீரின் ஒரு பகுதி, குறுகிய ஒரு வளைவான நிலப்பகுதிக்குள் உட்புகுதலால் மூன்று புறங்களிலும் நீரால் சூழப்பட்ட பகுதி.

**கடற்கரை (Beach):** மணல் அல்லது கூழாங்கற்களாலான, கடற்கரையை ஒட்டிய பகுதி

**உயிரி வாயு (Bio–Gas):** தாவர மற்றும் விலங்குகளின் கழிவுகளில் இருந்து உற்பத்தி செய்யப்படும் மீத்தேன் மற்றும் கார்பன் டை ஆக்சைடு.

**வணிகப் பயிர்கள் (Commercial Crops):** இலாப நோக்கோடு, விற்பனைக்காகப் பயிரிடப்படும் வேளாண் பயிர்கள்.

**புயல் / சூறாவளி (Cyclone):** சூறாவளி அல்லது புயல் என்பது ஒரு தீவிர, குறைந்த காற்றழுத்தத் தாழ்வுப்பகுதியைச் சுற்றி உருவாகும் பெரும் காற்றுத் தொகுதி.

**அணைகள் (Dams):** அணைகள் என்பன, நீரைத் தேக்கி, நீர்த்தேக்கங்களை உருவாக்கி, அதன் மூலம், நீர் மின்சக்தி உற்பத்தி, நீரளிப்பு மற்றும் இதரப் பயன்பாடுகளுக்காக ஆற்றின் குறுக்கே கட்டப்படுபவை.

**டெல்டா (Delta):** ஆற்றின் முகத்துவாரத்தில் காணப்படும் முக்கோண வடிவிலான வண்டல் படிவுகள்.

**மக்களடர்த்தி (Density of Population):** ஒரு சதுர கிலோமீட்டர் பரப்பளவில் வாழும் மக்களின் எண்ணிக்கை.

**வறட்சி (Drought):** வறட்சி என்பது ஒரு குறிப்பிட்ட பகுதியில், சராசரி மழையளவிற்கும் குறைவான மழைப்பொழிவினால் உண்டாகும் நீர் பற்றாக் குறையினால் ஏற்படும் இயற்கைப் பேரிடராகும்.

**மூழ்குதல் (Drowning):** நீரில் மூழ்குதலால், சுவாசிக்க முடியாமல் உயிர் இழப்பு ஏற்படுதல்.

**பொருளாதார நடவடிக்கைகள் (Economic activities):** ஒரு சமுதாயத்தில் அனைத்து நிலைகளிலும் நடைபெறும் உற்பத்தி, பகிர்வு மற்றும் நுகர்தல் போன்ற நடவடிக்கைகள்.

**தனிச்சிறப்பு உயிரிகள் (Endemism):** தீவுகள் மற்றும் ஒரு நாட்டின் வரையறுக்கப்பட்ட புவியியல் நிலப்பகுதியில் மட்டுமே காணப்படும் உயிரின வகைகளின் சூழல்.

**ஏற்றுமதி (Exports):** பொருள்கள் மற்றும் சேவைகளை வெளிநாடுகளுக்கு விற்பது.

**வெள்ளப்பெருக்கு (Floods):** ஆற்றில் இருந்து அதிக அளவிலான நீர் பெருக்கெடுத்துப் பரவுதல்.

**இறக்குமதி (Import):** பொருள்கள் மற்றும் சேவைகளை வெளிநாடுகளில் இருந்து வாங்குவது.

**நிலச்சரிவு (Land slide):** மலைச்சரிவுகளில், பெரும் அளவிலான பாறைகள் மற்றும் மண் ஆகியவற்றின் திடீர் சரிவு.

**கல்வியறிவு பெற்றோர் (Literates):** மக்களில் எழுதப் படிக்கத் தெரிந்தோர்.

**கசிதல்/ஊடுருவுதல் (Leaching):** மழைக் காலங்களில், வழிந்தோடும் நீரினால் மண்ணிலுள்ள கரையும் தன்மையுள்ள தாதுக்கள் கரைக்கப்பட்டு, அடித்துச் செல்லப்படுவதால் மண் செழிப்பற்றதாக உருவாகும் நிலை.

**அட்சம் (Latitude):** புவி மாதிரியில் கிழக்கு மேற்காக வரையப்பட்ட கற்பனைக்கோடுகள்.

**தீர்க்கம் (Longitude):** வடக்கு தெற்காக கற்பனையாக வரையப்பட்ட செங்குத்துக் கோடுகள்.

**சதுப்புநிலத் தாவரங்கள் (Mangroves):** அயன மற்றும் உப அயன கடற்கரைப் பகுதிகளில், உள்ள உள்நிலப்பகுதியில் உவர் நீரில் வாழக்கூடிய பசுமைமாறா தாவரங்கள்.

**மான்செஸ்டர் (Manchester):** பருத்தி மற்றும் லினன் துணிகளினால் ஆன விரிப்புகள், தலையணை உறைகள், மேசை விரிப்புகள்

ஆகியவற்றின் தயாரிப்புக்கு பெயர்பெற்ற இங்கிலாந்தின் தென்மேற்குப் பகுதியில் அமைந்துள்ள ஒரு பெரிய நகரம்.

**வானிலையியல்** (Meteorology): வானிலைக் கூறுகளைப் பற்றிய அறிவியல் பூர்வமான படிப்பு.

**கலப்பு விவசாயம்** (Mixed Farming): ஒரு சிறு நிலப்பகுதியில், பயிர் சாகுபடி மற்றும் கால்நடை வளர்த்தல் ஆகிய இரண்டையும் ஒரே சமயத்தில் மேற்கொள்வது.

**மான்சூன்** (Monsoon): பருவக்காலம்

**இயற்கை வளங்கள்** (Natural Resources): பொருளாதார வளர்ச்சிக்குப் பயன்படும் இயற்கையில் உருவாகும் அனைத்து பொருள்களும் இயற்கை வளங்கள் எனப்படும்.

**திறந்தவெளிக் காடுகள்** (Open Forest): 10 முதல் 40 சதவிகித தாவர அடர்த்தியைக் கொண்டுள்ள நிலப்பகுதி மற்றும் காடுகளால் சூழப்பட்ட பகுதி.

**தோட்டப்பயிர்கள்** (Plantation Agriculture): ஒரு பெரிய நிலப்பரப்பில், அறிவியல் முறைப்படி, ஒரே பயிரை அதிக அளவில் பயிரிடுவது. இது அதிக முதலீடு கொண்ட விவசாய முறை. தேயிலை, காபி மற்றும் ரப்பர் ஆகியவை முக்கிய தோட்டப்பயிர்கள்.

**பீடபூமி** (Plateau): சமவெளிப் பகுதியில் இருந்து சற்றே உயரமான மேட்டுநிலம்.

**மக்கள்தொகை** (Population): ஒரு நாடு, பகுதி அல்லது ஓர் இடத்தில் வசிக்கும் அனைத்து மக்களின் கூட்டுத்தொகை.

**மக்கள்தொகை கணக்கெடுப்பு** (Population Census): ஒரு குறிப்பிட்ட கால இடைவெளியில் அங்குள்ள மக்களின் பொருளாதார, சமூக கூறுகளுடன் எண்ணிக்கை குறித்தான அதிகாரப்பூர்வமானக் கணக்கெடுப்பு.

**பாதுகாக்கப்பட்ட காடுகள்** (Protected Forests): இந்திய வனச்சட்டம் மற்றும் மாநில வனச் சட்டங்களின் மூலம் பாதுகாக்கப்பட வேண்டிய பகுதிகளாகக் கண்டறியப்பட்டு பாதுகாக்கப்படும் காடுகள். இக்காடுகளில் அனுமதிக்கப்பட்ட செயல்பாடுகளைத் தவிர மற்ற அனைத்து செயல்பாடுகளுக்கும் தடை செய்யப்பட்ட பகுதி.

**மண்டலங்கள் / பகுதிகள்** (Regions): வரையறுக்கப்பட்ட பண்புகளைக் கொண்ட ஆனால் எப்பொழுதும் குறிப்பிட்ட எல்லைகளைக் கொண்டிராத உலகின் அல்லது ஒரு நாட்டின் ஒரு பகுதி.

**ஒதுக்கப்பட்ட காடுகள்** (Reserved Forests): இந்திய வனச்சட்டம் மற்றும் மாநில வனச் சட்டங்களின் மூலம் முழுவதுமாகப் பாதுகாக்கப்பட்ட காடுகளின் பகுதிகள். இக்காட்டுப்பகுதிகளில்அனுமதியற்றஅனைத்து செயல்பாடுகளும் தடைசெய்யப்பட்டுள்ளன.

**நீர்த்தேக்கங்கள்** (Resrvoirs): இயற்கை அல்லது செயற்கையாக உருவாக்கப்பட்ட நீரின் ஆதாரமாக உள்ள பெரிய ஏரிகள் அல்லது அணைகள்.

**படிவுப்பாறைகள்** (Sedimentary Rocks): படிவுகள் இறுகுவதால் உருவாகும் பாறைகள்.

**பாலின விகிதம்** (Sex Ratio): 1000 ஆண்களுக்கு, பெண்களின் விகிதாசாரம்.

**கூட்டநெரிசல்** (Stempede): ஒரு பெரிய அளவிலான விலங்கு கூட்டம் அல்லது மனித கூட்டம், கட்டுப்பாடற்ற நிலையில் ஒரே சமயத்தில், ஒரே திசையை நோக்கி ஓடுவதால் கூட்ட நெரிசலில் ஏற்படும் உயிரிழப்பு மற்றும் உடல் ஊனம் ஏற்படும் நிலை.

**நீர்சந்தி** (Strait): இரண்டு கடல்கள் அல்லது இரண்டு பெரிய நீர்ப்பரப்பினை இணைக்கும் ஒரு குறுகிய நீர்ப்பகுதி.

**தீவிர தன்னிறைவு வேளாண்மை** (Subsistence Intenensive Farming): குடும்பத் தேவைக்காக மட்டும் ஒரு சிறிய நிலப்பரப்பில் உற்பத்தி செய்யும் சாகுபடி. இது குறைந்த அளவே வணிகத்திற்கு செல்கிறது.

**வரையறுக்கப்படாத காடுகள்** (Unclassed Forest): வரையறுக்கப்பட்ட அல்லது ஒதுக்கப்பட்ட காடுகளுக்குட்படாத ஆனால் காடுகளாகக் கண்டறியப்பட்டப் பகுதிகள்.

**ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் பன்னாட்டு நிறுவனத்தின் உலக பண்பாட்டுத்தலம்** (UNESCO World Heritage Site): புவிக்கோளில் உள்ள உயிரின வளங்களின் சுற்றுச்சூழல் பாதுகாக்கப்பட வேண்டியவை, அவைகளைப் பற்றிய ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் கண்காணிக்கப்பட வேண்டிய இடங்கள்.



10th_Geography_Unit_7_TM.indd 251 11-04-2020 12:00:44

www.tntextbooks.in

# அலகு – 4

# இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை



## கற்றலின் நோக்கங்கள்

- இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையின் அடிப்படைக் கோட்பாடுகளை அறிந்துகொள்ளுதல்
- அணிசேரா இயக்கத்தின் பொருள் மற்றும் முக்கியத்துவத்தை விளக்குதல்
- நமது வெளியுறவுக் கொள்கையின்படி நிலைகளை ஆய்ந்தறிதல்
- வெளியுறவுக் கொள்கையின் முக்கியத்துவத்தை விளக்குதல்
- உள்நாட்டு கொள்கை மற்றும் வெளியுறவு கொள்கை ஆகியவற்றிற்கு இடையேயான வேறுபாட்டினை அறிதல்

78RX7B

## அறிமுகம்

வெளியுறவுக் கொள்கை என்பது ஒரு நாடு வெளியுறவு விவகாரங்களின் மூலம் தேசிய நலனைப் பாதுகாக்கவும் மேம்படுத்தவும் இருதரப்பு மற்றும் பலதரப்பு உறவுகளைப் பேணவும் வடிவமைக்கப்பட்ட கொள்கை ஆகும். இது நாட்டு மக்களின் சிறந்த நலன்கள், நாட்டின் பரப்பு மற்றும் பொருளாதாரம் ஆகியவற்றைப் பாதுகாக்க முயல்கிறது. வெளியுறவுக் கொள்கை என்பது நாட்டின் பாரம்பரிய மதிப்புகள், ஒட்டுமொத்த தேசியக் கொள்கை, எதிர்பார்ப்பு மற்றும் சுய கருத்து ஆகியவற்றின் நேரடி பிரதிபலிப்பாகும். நாடுகள் ஒன்றையொன்று சார்ந்துள்ளன. சர்வதேச உறவுகளில் ஒன்றையொன்று சார்ந்திருப்பது தவிர்க்க இயலாததாகும். வெளியுறவுக் கொள்கையின் முக்கிய அம்சங்கள்: உடன்படிக்கைகள், நிர்வாக ஒப்பந்தங்கள், தூதுவர்களை நியமித்தல், வெளிநாட்டு உதவி, சர்வதேச வணிகம் மற்றும் ஆயுதப் படைகள் ஆகியவைகள் ஆகும்.

வெளியுறவு அமைச்சகம் எனப்படும் இந்திய வெளிவிவகார அமைச்சரவை இந்திய அரசின் ஒரு அங்கமாக இருந்து நாட்டின் வெளியுறவுகளைப் பொறுப்பேற்று நடத்துகிறது. 1986ஆம் ஆண்டு புது டெல்லியில் நிறுவப்பட்ட இந்திய வெளிநாட்டுச் சேவை பயிற்சி நிறுவனம் இந்திய வெளியுறவுச் சேவை அதிகாரிகளுக்கு (IFS) பயிற்சி அளிக்கிறது.

**இந்திய அரசியலமைப்புச் சட்டம் 1950 சட்டப்பிரிவு 51**

அரசு நெறிமுறையுறுத்தும் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கைகள்

அரசு முயற்சி செய்ய வேண்டியவைகள்:

- சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துதல்
- நாடுகளிடையே நியாயமான மற்றும் கௌரவமான உறவுகளைப் பேணுதல்
- சர்வதேச சட்டம் மற்றும் சர்வதேச அமைப்புகளை மதித்தல்
- சர்வதேசப் பிரச்சனைகளை நடுவர் மன்றம் மூலம் தீர்க்க ஊக்குவித்தல்

## 4.1 நமது வெளியுறவுக் கொள்கையின் முக்கிய நோக்கங்கள்

- தேசியப் பாதுகாப்பு
- தேசிய வளமை
- நட்பு நாடுகளின் எண்ணிக்கையை அதிகரித்தல்

- உலக அமைதி அடைதல் மற்றும் ஒவ்வொரு நாட்டுடனும் அமைதியுடன் சேர்ந்திருத்தல்
- பொருளாதார வளர்ச்சி

## 4.2 பஞ்சசீலம்

(சமஸ்கிருதச் சொற்களான பாஞ்ச் = ஐந்து, சீலம் = நற்பண்புகள் ஆகியவற்றில் இருந்து பெறப்பட்டது)

இந்தியா (பிரதமர் – ஜவகர்லால் நேரு) மற்றும் சீனா (பிரதமர் – சூ–யென்–லாய்) ஆகிய நாடுகளுக்கிடையே அமைதியுடன் இணங்கியிருத்தலுக்கான 5 கொள்கைகள் (பஞ்சசீலம்), 1954 ஏப்ரல் மாதம் 28ஆம் நாள் கையெழுத்தானது. இரு அரசாங்கங்களும் பின்வரும் கோட்பாடுகளின் அடிப்படையில் ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டன.




இந்தக் கொள்கைகள் இந்தோனேசியாவில் 1955ஆம் ஆண்டு நடைபெற்ற ஆப்பிரிக்க–ஆசிய மாநாட்டில் கையெழுத்தான பாண்டுங் பிரகடனத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

## 4.3 வெளியுறவுக் கொள்கையினை நிர்ணயிக்கும் அடிப்படைக் காரணிகள்

- நாட்டின் புவியியல் அமைப்பு மற்றும் பரப்பளவு
- நாட்டின் வரலாறு, பாரம்பரியம் மற்றும் தத்துவம் அடிப்படையிலானவை
- இயற்கை வளங்கள்
- பொருளாதார வளர்ச்சியின் அவசியம்
- அரசியல் நிலைத்தன்மை மற்றும் அரசாங்க அமைப்பு
- அமைதிக்கான அவசியம், ஆயுதக் குறைப்பு, அணு ஆயுதப் பெருக்கத்தடை
- இராணுவ வலிமை
- சர்வதேச சூழ்நிலை

### 1950 மற்றும் 1960களில் வெளியுறவுக் கொள்கைகள்

நாடு சுதந்திரம் அடைந்தது முதல் 1950 மற்றும் 1960களில் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கைகள், நாட்டின் முதல் பிரதமரான ஜவகர்லால் நேரு வழிகாட்டுதலின்படி முக்கியக் குறிக்கோள்களைக் கொண்டதாக அமைந்திருந்தன. நீண்டகாலமாக காலனியாதிக்கத்தில் இருந்து சுதந்திரம்பெற்ற நாடுகள் பொருளாதார மேம்பாடு தொடர்பாகக் கடுமையான சூழ்நிலையை எதிர்கொண்டன. எனவே சோவியத் சோஷலிச குடியரசுகளின் ஒன்றியம் (USSR) அல்லது அமெரிக்க ஐக்கிய நாடுகள் (USA) ஆகியவற்றின் ஏதேனும் ஒரு முகாம்களில் சேர்வது அவசியமாயிற்று. நாட்டின் முதல் பிரதமரான நேரு, அமெரிக்கா மற்றும் சோவியத் ரஷ்யா ஆகிய வல்லரசு நாடுகள் ஆப்பிரிக்கா, ஆசியாவில் புதிதாகத் தோன்றிய நாடுகளில் தங்களது செல்வாக்கைச் செலுத்துவதை எதிர்த்தார். எனவே பனிப்போர் நிலவும் இரு துருவ உலகமான அமெரிக்கா மற்றும் சோவியத் ரஷ்யா வல்லரசுகளுடன் சேராமல் அணிசேரா இயக்கம் என்ற வழியைத் தேர்ந்தெடுத்ததோடு சர்வதேச விவகாரங்களில் மூன்றாவது அணியை உருவாக்க முயன்றார்.

*"பரந்த அளவில் அணிசேராமை என்பது இராணுவக் கூட்டணியில் இணைத்துக் கொள்ளாதது அல்ல. அதாவது பிரச்சனைகளை முடிந்தவரை இராணுவக் கண்ணோட்டத்தில் பார்க்காமல், அது சில நேரங்களில் மட்டும் ஏற்பட்டாலும் சுதந்திரமாக மற்றும் அனைத்து நாடுகளுடனும் நட்பு ரீதியிலான உறவைப் பராமரித்தல்"*

– ஜவகர்லால் நேரு

## 4.4 அணிசேரா இயக்கம் (The Non Aligned Movement) 1961

'அணிசேரா இயக்கம்' என்ற சொல் 1953இல் ஐ.நா. சபையில் உரையாற்றிய வி. கிருஷ்ண மேனன் என்பவரால் உருவாக்கப்பட்டது. அணிசேராமை என்பது இந்திய வெளியுறவுக் கொள்கையின் முக்கிய அம்சமாக விளங்குகிறது. இதன் நோக்கம் இராணுவக் கூட்டணியில் சேராமல் வெளிநாட்டு விவகாரங்களில் தேசிய சுதந்திரத்தைப் பராமரித்தலாகும். அணிசேரா இயக்கமானது 120 உறுப்பு நாடுகளையும் 17 நாடுகளைப் பார்வையாளராகவும் 10 சர்வதேச நிறுவனங்களையும் கொண்டுள்ளது. இது ஒரு அரசியல் இயக்கத்திலிருந்து பொருளாதார இயக்கமாக மாற்றம் கொண்டுள்ளது.



10th_Civics_TM_Unit_4.indd 286 24-03-2020 12:41:43

**அணிசேரா இயக்கத்தின் நிறுவனத் தலைவர்கள்:** இந்தியாவின் ஜவகர்லால் நேரு, யுகோஸ்லாவியாவின் டிட்டோ, எகிப்தின் நாசர், இந்தோனேசியாவின் சுகர்னோ மற்றும் கானாவின் குவாமே நிக்ரூமா ஆகியோராவர்.

## பனிப்போர் காலத்தில் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை

இந்தியா அணிசேரா இயக்கத்தில் இருந்த போதும் சோவியத் யூனியனுடன் 1971ஆம் ஆண்டில் இந்திய – சோவியத் ஒப்பந்தத்தின் (20 ஆண்டு கால ஒப்பந்தமான அமைதி, நட்புறவு மற்றும் ஒத்துழைப்பு) மூலம் இணைந்தது. பின்னர் இந்தியா இராணுவ நவீனமயமாக்கலை மேற்கொண்டது. சீனா 1964ஆம் ஆண்டு லாப் நார் (Lop Nor) என்னுமிடத்தில் மேற்கொண்ட அணு சோதனைக்குப் பதிலடியாக இந்தியா தனது முதல் பூமிக்கடியிலான அணு சோதனைத் திட்டத்தினை 1974இல் பொக்ரானில் நடத்தியது. (நிலத்தடி அணு வெடிப்புத் திட்டம் / Subterranean Nuclear Explosions Project).



முதல் அணு சோதனை–பொக்ரான் (ராஜஸ்தான்)

மாறிவரும் உலகச் சூழ்நிலைகள் வெளியுறவுக் கொள்கை விவரங்களைத் தீர்மானிக்கின்றன. பேரழிவை ஏற்படுத்திய இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் இந்தியா அரசியல் விடுதலை பெற்றது. மேலும் தீவிர வறுமை, எழுத்தறிவின்மை, குழப்பமான சமூக–பொருளாதார நிலைகளிலிருந்து இந்தியா தன்னை மீட்டெடுக்க வேண்டியிருந்தது. இதனால் நமது புதிய நாடு இராணுவக் கூட்டு மற்றும் ஒப்பந்தத்தில் ஈடுபட இயலவில்லை. இராணுவக் கூட்டினைத் தவிர்ப்பது என்பது அப்போது ஒரு விருப்பமாக மட்டுமின்றி ஒரு தேவையாகவும் இருந்தது. தற்போது அணிசேராமை என்பது நடுநிலைமையாக இருப்பது என்பது பொருள் அல்ல; பிரச்சனைகளுக்கு முடிவுகளை நாடுகள் சுதந்திரமாகத் தீர்மானிப்பதாகும். அணிசேராமை என்பது இராணுவ வலிமை இல்லாது இருத்தல் என்று பொருள் அல்ல. மோதல்கள் மற்றும் பதட்டங்களைக் குறைப்பதை உறுதிசெய்வது எனப் பொருள்படுவதாகும்.

கூட்டுசேராமையை விலக்கினாலும் கூட இந்தியா அதிக அளவில் தனது இராணுவ அமைப்பைப் பலப்படுத்தவும் ஒரு அணுசக்தி நாடாகவும் ஆகமுடிந்தது. வெளியுறவுக் கொள்கைகளை நிர்வகிப்பதில் ஏற்படும் குறைகளும் தவறுகளும் அவ்வப்போது சரி செய்யப்பட்டாலும் இந்தியாவின் அடிப்படைக் கொள்கையான அணிசேராமை இன்னும் நடைமுறையில் உள்ளது.

## புதிய மாற்றங்கள்–1990 மற்றும் இருபதாம் நூற்றாண்டு

1990களில் சோவியத் யூனியனின் வீழ்ச்சியுடன் மேற்கத்திய நாடுகளின் ஆதரவோடு ஒரு புதிய உலகளாவிய பொருளாதார கொள்கை (தாராளமயமாக்கல், தனியார்மயமாக்கல் மற்றும் உலகமயமாக்கல்) எழுச்சி பெற்றது. இந்தியா உலகப் பொருளாதார மன்றத்துடன் (GATT) ஓர் ஒப்பந்தத்தில் சேர்ந்ததோடு இருதரப்பு, முத்தரப்பு, பலதரப்பு ஒப்பந்தங்களிலும் இணைந்துள்ளது. இந்தியாவின் அணு ஆயுத சோதனைகள் மேற்கத்திய நாடுகளில் இருந்து அச்சுறுத்தும் எதிர் விளைவுகளை ஏற்படுத்தின.

இந்திய வெளியுறவுக் கொள்கை பின்வரும் பல்வேறு வகைகளில் மாற்றம் கொண்டது.

- சீனாவுடனான நட்புறவு – கிழக்கு நோக்கு கொள்கை (1992)
- பொக்ரானில் (ராஜஸ்தான்) நடைபெற்ற இரண்டாவது அணு சோதனை (1998)
- இஸ்ரேலிடமிருந்து பாதுகாப்புத் தளவாடங்களைக் கொள்முதல் செய்தலுக்கான உறவு
- அரபு நாடுகள் மற்றும் ஈரானுடன் எரிசக்தி ஆற்றல் வள தூதரக உறவு
- அமெரிக்காவின் அணு ஏவுகணைப் பாதுகாப்பு திட்டத்தை ஏற்றுக் கொள்ளுதல்
- சர்வதேச அணுசக்தி நிறுவனத்தில் ஈரானுக்கு எதிராக இந்தியாவின் வாக்களிப்பு

## 21ஆம் நூற்றாண்டில் மீண்டெழும் இந்தியா

இந்திய வெளியுறவுக் கொள்கையின் முதன்மையான பணி இந்தியாவில் உள்நாட்டில் மாற்றங்களை ஏற்படுத்துவதாகும்.

உலகின் தீவிரமான பொருளாதார நடவடிக்கைகளுக்காக இந்தியா தனது கொள்கைகளைச் சரி செய்துள்ளது. இது நமது மூலதனங்களுக்கான உள் முதலீட்டை அதிகரித்தல், தொழில்நுட்ப யோசனை, வளர்ச்சிக்கான கருத்துகள் மற்றும் புதிய கண்டுபிடிப்புகள் உலகின் முன்னணி பொருளாதாரங்களுள் ஒன்றாக மறுவெழுச்சி அடைதல் ஆகியவற்றிற்கேற்ப வடிவமைத்துள்ளது.

இந்தியா தற்போதைய உலகளாவிய விவகாரங்களில் ஈடுபட்டு தனது சர்வதேச கொள்கைகள் முக்கிய இடத்தைப் பெற முனைவதோடு உலக அளவில் தனது இருப்பை உணரச்செய்கிறது. இந்தியா G–20, IBSA, BRICS போன்ற புதிய உலகக் குழுக்களில் இணைந்துள்ளதானது உலகளாவிய விவகாரங்களில் பெரிய பங்கை வகிக்க இந்தியாவிற்கு அதிக வாய்ப்பை வழங்குகிறது.

உலகப் பாதுகாப்புக் குறித்த அக்கறை இந்தியாவின் இராணுவ நவீனமயமாக்கல், கடல்சார் பாதுகாப்பு மற்றும் அணுசக்திக் கொள்கைகளில் பிரதிபலிக்கின்றன.

இந்தியா உலகளவில் முடிவெடுக்கும் மற்றும் நிர்வாகத்தில் ஒரு முக்கியக் குரலாகவும் வளர்ந்து வரும் உலகளாவிய கட்டமைப்பில் ஒரு பாலமாகவும் சமநிலைப்படுத்தும் மிகப்பெரிய சக்தியாகவும் உருவெடுத்துள்ளது. இந்தியா மிகப்பெரிய பொருளாதார சவால்களை எதிர் கொண்டாலும் பொருளாதாரம், அரசியல் மற்றும் போர்த்திறன் சார்ந்த துறைகளில் கொள்கை வகுப்பாளர்களின் முடிவுகள் இந்தியாவை வலிமை வாய்ந்த சக்தியாக உருக்கொள்ளச் செய்துள்ளன. இத்தகைய சவால்கள் பொருளாதார வளர்ச்சியை நீட்டிக்கச் செய்தல், வளம் மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல் போன்றவைகளிலும் இராணுவத்தன்மை அல்லாத பிரச்சனைகளான காலநிலை மாற்றம், எரிசக்தி ஆற்றல் பாதுகாப்பு, அரிதான வளங்களுக்குப் போட்டி, உணவு மற்றும் நீர் பாதுகாப்பு, தொற்று நோய்கள் மற்றும் இடம்பெயர்தல் போன்ற விவகாரங்களிலும் மிகப்பெரிய வளர்ச்சி மாற்றங்களை அடைந்துள்ளது. இந்த சவால்கள் எண்ணற்றவையாகவும் கடினமானவையாகவும் இருந்த போதிலும் அவை இந்தியாவின் கொள்கை அமைப்புகளுக்கு எட்டாதவை அல்ல.

## 4.5 இந்திய வெளியுறவுக் கொள்கையின் அடிப்படைக் கருத்துக்கள்

- தேசிய நலனைப் பேணுதல்
- உலக அமைதியை எய்துதல்
- ஆயுதக் குறைப்பு
- பிற நாடுகளுடன் நல்லுறவை வளர்த்தல்
- அமைதியான வழிகளில் பிரச்சனைகளைத் தீர்த்தல்
- அணி சேராக் கொள்கையின்படி சுதந்திரமான சிந்தனை மற்றும் செயல்பாடு
- சர்வதேச விவகாரங்களில் சமத்துவம்
- காலனியாதிக்கம், ஏகாதிபத்தியம், இனப்பாகுபாடு ஆகியவற்றிற்கு எதிரான நிலைப்பாடு

### படை வலிமை குறைப்புக் கொள்கை

சுதந்திரம் அடைந்ததிலிருந்து உலகளவில் ஆயுதப் பெருக்கத் தடை இந்தியாவின் அணு கொள்கையில் மேலோங்கிய ஒரு கருத்தாகவே இருந்து வருகிறது. இதனால் ஐ.நா.வின் படை வலிமைக் குறைப்புத் திட்டங்களுக்கு இந்தியா ஆதரவளித்தது. 1974 மற்றும் 1998 அணு சோதனைகள் போர்த்திறமை சார்ந்த நடவடிக்கைகளுக்காகவே செய்யப்பட்டவையாகும்.

இந்தியாவின் அணுக்கொள்கையின் இரண்டு மையக் கருத்துகள்:

- முதலில் பயன்படுத்துவதில்லை
- குறைந்தபட்ச நம்பகமான தற்காப்புத் திறன்

அணு ஆயுதத்தைப் போர்த்தாக்குதலுக்குப் பயன்படுத்துவது இல்லை என்பதோடு அணு ஆயுதமற்ற எந்த ஒரு நாட்டிற்கு எதிராகவும் பயன்படுத்துவதுமில்லை என இந்தியா தீர்மானித்துள்ளது.

இந்திய–அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தம் இந்திய வெளியுறவுக் கொள்கையில் ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றமாகும்.


## 4.6 சார்க் – தெற்காசிய நாடுகளின் பிராந்தியக் கூட்டமைப்பு (SAARC – South Asian Association for Regional Cooperation)

KU8AZU

சார்க் நாடுகளின் கூட்டமைப்பு என்பது தெற்காசியாவில் அமைந்துள்ள எட்டு நாடுகளின் ஒரு பொருளாதார மற்றும் புவிசார் அரசியல் அமைப்பாகும். சார்க் (SAARC) நாடுகளின் கொள்கை நோக்கமானது நலம்சார் பொருளாதாரத்தை ஊக்குவித்தல், தெற்காசிய நாடுகளிடையே கூட்டுத்தன்னிறைவு மற்றும் இப்பிராந்தியத்தில் சமூக–பண்பாட்டுமேம்பாட்டினைவிரைவுபடுத்துதல் ஆகியவையாகும். சார்க் அமைப்பின் பேரிடர் மேலாண்மை மையம் புதுடெல்லியில் அமைக்கப்பட்டுள்ளது. இம்மையம் தெற்காசியாவில் பேரிடர் குறைப்பு மற்றும் மேலாண்மைக்கான வல்லுனர்களைக் கொண்ட அமைப்பாகும். இஸ்ரோ (ISRO) அமைப்பு சார்க் பிராந்தியத்திற்கான "செய்தித் தொடர்பு மற்றும் வானிலை ஆய்விற்காக" சார்க் செயற்கைக்கோளைச் செலுத்தி உள்ளது.



10th_Civics_TM_Unit_4.indd 288 24-03-2020 12:41:43




சார்க் அமைப்பின் உறுப்பு நாடுகள்: ஆப்கானிஸ்தான், வங்காளதேசம், பூடான், இந்தியா, நேபாளம், மாலத்தீவு, பாகிஸ்தான் மற்றும் இலங்கை.

**வெளியுறவுக்கொள்கை** என்பது மற்ற நாடுகளுடன் உறவைப் பேணுவதற்காக ஒரு நாட்டால் கவனமாக வடிவமைக்கப்பட்ட உத்திகளின் கலவையாகும்.
**இராஜதந்திரம்** என்பது ஓர் அரசின் வெளியுறவுக் கொள்கையைச் சூழலுக்குத் தகுந்தாற்போல் செயல்படுத்துவதற்கான கருவி ஆகும்.

## 4.7 இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையில் தற்காலச் சூழல் மாற்றம் மற்றும் தொடர்ச்சி

### அ. ஒருங்கிணைந்த அண்டை நாடுகளுக்கு முன்னுரிமை: முதலில் அண்டை நாடுகள் கொள்கை

வரலாறு மற்றும் கலாச்சார ஒற்றுமைத் தன்மைகளை மையமாகக்கொண்ட அண்டை நாடுகள் என்ற கருத்து இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையாக எப்பொழுதும் இருந்து வருகிறது. இந்தியப் பெருங்கடலில் அமைந்துள்ள மாலத்தீவு உள்ளிட்ட நாடுகளுக்கும் அரசியல் மற்றும் இராஜதந்திர முன்னுரிமையை இந்தியா அளித்து வருகிறது. இந்திய வெளியுறவுக் கொள்கை இந்த அண்டை நாடுகளை மையம் கொண்டது என்பது பல்வேறு வகையான வளர்ச்சி இலக்குகளை இந்தியா அடைவதற்கு அமைதியான சுற்றுப்புறம் அவசியம் என்ற தெளிவான புரிதலை ஏற்படுத்தியுள்ளது. இந்தியா தனது அண்டை நாடுகளுக்குத் தேவைப்படும் ஆதரவினை வளஆதாரங்கள், கருவிகள் மற்றும் பயிற்சியாக அளித்து வருகிறது. பொருள்கள், மக்கள், ஆற்றல், மூலதனம் மற்றும் தகவல்கள் எளிதாகச் செல்வதை மேம்படுத்துவதற்காக மிகப்பெரிய இணைப்பும் ஒருங்கிணைப்பும் அளிக்கப்படுகிறது.

### ஆ. அரசதந்திரம் மற்றும் வளர்ச்சியை இணைத்தல்

இந்தியாவின் உள்நாட்டு முக்கிய வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்குச் சர்வதேச ஒத்துழைப்பைப் பெறுவது, இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையின் நோக்கங்களில் ஒன்றாக விளங்குகிறது. இது தொழில்நுட்ப உதவி கிடைப்பதை மேம்படுத்துதல், மூலதனத்தைப் பெறுதல், சந்தையினைப் பெறுதல் மற்றும் இயற்கை வளங்களைப் பாதுகாத்தல் ஆகியவற்றை உள்ளடக்கியது.

### இ. "கிழக்கே நோக்கு" என்பதிலிருந்து "கிழக்குச் செயல்பாடு" என்ற கொள்கைக்குப் படிப்படியான மாற்றம்

வடகிழக்கு இந்தியாவிலிருந்து, தென்கிழக்கு ஆசியா தொடங்குகிறது. இந்தியாவிற்கும் தென்கிழக்காசிய நாடுகளின் கூட்டமைப்பில் உள்ள நாடுகளுக்கும் (ASEAN) பாலமாக மியான்மர் உள்ளது. இதன் நோக்கம் ஆசியாவின் ஒருங்கிணைந்த பகுதியாக இருப்பதோடு, இந்தோ – பசிபிக் பகுதியில் நிலையான மற்றும் பல்முனை சமநிலையை உறுதிப்படுத்துவதாகும். இக்கொள்கை ஆசியா மற்றும் கிழக்காசிய நாடுகளிடையே ஆக்கபூர்வமான பங்கினை வலியுறுத்துகிறது. நமது கிழக்குக் கொள்கையின் மூன்று முக்கியக்கூறுகள்: வலிமையான நிலப்பரப்பு இணைப்பு, வணிகம் மற்றும் பாதுகாப்பு தொடர்பானவை ஆகியனவாகும்.

### ஈ. பொருளாதார வளர்ச்சி

தற்போது இந்தியாவின் அரசியல் நகர்வுகளில் தவிர்க்கவியலாத பொருளாதாரக் காரணிகள் செல்வாக்குச் செலுத்தி வருகின்றன. பல்வேறு நாடுகள் இந்தியாவுடன் சிறந்த நட்புறவைக் கொள்ள விழைகின்றன. விரைவான, சமமான மற்றும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சி இந்தியாவின் முதன்மைக் குறிக்கோளாக உள்ளது. நாடு சர்வதேச பங்களிப்பை மேம்படுத்துவதன் மூலம் அமைதி மற்றும் பாதுகாப்பை உறுதி செய்கிறது. இதனை அடைவதற்குத் தேவையானவை பொருளாதார வளர்ச்சி, சந்தை, மூலதனம், தொழில்நுட்பம், மரபுப்பிணைப்பு, பணியாளர்திறன், நியாயமான உலகளாவிய நிர்வாகம் மற்றும் ஒரு நிலையான நியாயமான வளர்ச்சிக்கு உகந்த சூழல் ஆகியனவாகும்.



10th_Civics_TM_Unit_4.indd 289 24-03-2020 12:41:44

### உள்நாட்டுக் கொள்கை மற்றும் வெளியுறவுக் கொள்கைக்கு இடையேயான வேறுபாடுகள்

| உள்நாட்டுக் கொள்கை | வெளியுறவுக் கொள்கை |
|---|---|
| ■ உள்நாட்டுக் கொள்கை என்பது ஒரு நாடு தனது நாட்டிற்குள்ளான விவகாரங்கள் தொடர்பாகக் கொண்டுள்ள கொள்கையாகும். | ■ வெளியுறவுக் கொள்கை என்பது ஒரு நாடு பிற நாடுகளுடன் கொண்டுள்ள விவகாரங்கள் தொடர்பானதாகும். |
| ■ இது உள்விவகாரங்கள், சமூக நலம், சுகாதாரம், கல்வி, குடியியல் உரிமைகள், பொருளாதார விவகாரங்கள் மற்றும் சமூகப் பிரச்சனைகள் ஆகியவற்றை மையமாகக் கொண்ட சட்டங்களை உள்ளடக்கியது. | ■ வணிகம், அரச தந்திரம், தடுப்பு நடவடிக்கைகள், பாதுகாப்பு, உளவுத் துறை மற்றும் உலகளாவிய சூழல் ஆகிய வகைகளைக் கொண்டதாகும். |

**உ. வழிகாட்டும் சக்தியாக இந்தியா**

ஜி–20 நாடுகள், கிழக்காசிய உச்சிமாநாடு, பிரிக்ஸ் (BRICS) ஆகியவற்றில் உறுப்புநாடாக இந்தியா இருப்பதும் வேகமாக வளர்ந்து வரும் மிகப்பெரிய பொருளாதாரம் கொண்ட ஒரு நாடாக இருப்பதும் அதன் நிலைக்கு ஒரு சான்றாகும். ஐ.நா. சபையின் பாதுகாப்புச் சபையில் ஒரு நிரந்தர உறுப்பு நாடாக இருக்க இந்தியா விரும்புகிறது. இந்தியா தற்போது தனது அதிகரித்துவரும் நலனை உலகின் பல பகுதிகளில் ஆழப்பதித்து வருகிறது. மேலும் ஆற்றல் வளம், முக்கிய இயற்கை வளங்களைப் பாதுகாத்தல், அவசியமான கப்பல் வழித்தடங்களைத் திறத்தல் மற்றும் பராமரித்தல், முதலீடுகளை எதிர்நோக்கல், கடல்கடந்த வணிக வாய்ப்புகள் மற்றும் வணிக நுழைவினைப் பெறுதல் போன்ற பல்வேறு காரணிகளால் முன்னேற்றம் கண்டு வருகிறது.

## முடிவுரை

தற்போது இந்தியா உலகின் பெரும்பான்மையான நாடுகளுடன் தூதரக உறவுகளைக் கொண்டுள்ளது. மேலும் உலகின் இரண்டாவது மிகப்பெரிய மக்கள்தொகை கொண்ட நாடு, மிகப்பெரிய மக்களாட்சி நாடு மற்றும் வேகமாக வளர்ந்துவரும் நாடுகளில் ஒன்றாகவும் விளங்கி வருகிறது. இந்தியா எந்தவொரு மிகப்பெரிய இராணுவக் கூட்டணியில் இல்லை என்றாலும் பெரிய நாடுகளுடன் போர்த்திறன் சார்ந்த ஒரு ஆழமான உறவைக் கொண்டுள்ளது. தீவிரவாதத்திற்கு எதிரான நமது பொதுவான போராட்டம் என்பது குறிப்பிடத்தக்க பலமாகும். இந்தியா தனது பாதுகாப்பு மற்றும் சமூகப் பொருளாதார முன்னேற்றங்களை அடைய எதிர்பார்க்கும் அதேவேளையில் அனைத்து நாட்டு மக்களுக்கும் அமைதி, சுதந்திரம், முன்னேற்றம் மற்றும் நீதி ஆகியவற்றையும் வேண்டுகிறது. இவ்வாறு **சர்வதேச விவகாரங்களில் நிரந்தர நண்பனும் இல்லை: நிரந்தர பகைவனும் இல்லை; நலன்கள் மட்டுமே நிரந்தரமானவை** என்ற வெளியுறவுக் கொள்கையை இந்தியா பின்பற்றுகிறது. புதிய வகை சவால்கள் புதிய உண்மைகளுக்கேற்ப அமைத்துக்கொள்ள வலியுறுத்துகிறது. அப்போதும்கூட அதன் வெளியுறவுக் கொள்கையின் அடிப்படைக் கட்டமைப்பு மாறாமல் உள்ளது.

**பாடச் சுருக்கம்**

- ஒரு அரசாங்கத்தின் வெளியுறவுக் கொள்கையானது பிறநாடுகள் நோக்கி மேற்கொள்ளப்பட்ட கொள்கையின் முன்முயற்சிகளைப் பற்றியது ஆகும்.
- இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையை நிறைவேற்றும் பொறுப்பு இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகத்தைச் சார்ந்தது.
- ஓர் இலக்கு சார்ந்த வெளியுறவுக் கொள்கையானது பிற நாடுகளுடன் மேம்பட்ட உறவினை அடைவதற்கான திறனைக் கொண்டுள்ளது.
- இந்தியா சுதந்திரத்துக்குப் பிறகு காமன்வெல்த் நாடுகளில் இணைந்து பிற நாடுகளின் சுதந்திர இயக்கத்தை வலுவாக ஆதரித்தது.
- இந்தியா பனிப்போரின் போது எந்த ஒரு கூட்டணியிலும் (ரஷ்யா – அமெரிக்கா) இணைத்துக் கொள்ளாமல் அணிசேராக் கொள்கையைக் கடைபிடித்தது.
- உலக வல்லரசு நாடுகளுடனும் அண்டை நாடுகளுடனும் உறவை மேம்படுத்துவதில் இந்தியா தற்போது கவனம் செலுத்துகிறது.



10th_Civics_TM_Unit_4.indd 290 24-03-2020 12:41:44

## A-Z கலைச்சொற்கள்

| | | |
|---|---|---|
| வெளியுறவு | External affairs | matters having with international relations |
| பலதரப்பு | multilateral | involving more than two countries |
| கொள்முதல் | procurement | process of buying |
| பன்மைக்கோட்பாடு | pluralism | the practice of holding more than one benefice at a time |
| பெருங்கொள்ளை நோய் | pandamics | an epidemic disease |
| பண்பாடு | ethos | the characteristic spirit of culture |

## பயிற்சி

ZFNNTD

### I சரியான விடையைத் தேர்வு செய்யவும்

1. இந்தியாவின் அயலுறவுக் கொள்கையை வடிவமைப்பதில் எந்த அமைச்சர் முக்கிய பங்கு வகிக்கிறார்?
   அ) பாதுகாப்பு அமைச்சர்
   ஆ) பிரதம அமைச்சர்
   இ) வெளிவிவகாரங்கள் அமைச்சர்
   ஈ) உள்துறை அமைச்சர்

2. எந்த இரு நாடுகளுக்கிடையே பஞ்சசீல ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது?
   அ) இந்தியா மற்றும் நேபாளம்
   ஆ) இந்தியா மற்றும் பாகிஸ்தான்
   இ) இந்தியா மற்றும் சீனா
   ஈ) இந்தியா மற்றும் ஸ்ரீலங்கா

3. இந்திய வெளியுறவுக் கொள்கையை ஏற்றுக்கொண்டு வழிநடத்தும் இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு எது?
   அ) சட்டப்பிரிவு 50
   ஆ) சட்டப்பிரிவு 51
   இ) சட்டப்பிரிவு 52
   ஈ) சட்டப்பிரிவு 53

4. இன ஒதுக்கல் கொள்கை என்பது
   அ) ஒரு சர்வதேச சங்கம்
   ஆ) இராஜதந்திரம்
   இ) ஒரு இனப் பாகுபாட்டுக் கொள்கை
   ஈ) மேற்கூறியவைகளில் எதுவுமில்லை

5. 1954இல் இந்தியா மற்றும் சீனாவால் கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தம் இது தொடர்பானது.
   அ) வியாபாரம் மற்றும் வணிகம்
   ஆ) சாதாரண உறவுகளை மீட்டெடுப்பது
   இ) கலாச்சார பரிமாற்றங்கள்
   ஈ) ஐந்து கொள்கைகளுடன் இணைந்திருத்தல்

6. நமது வெளியுறவுக் கொள்கையுடன் தொடர்பு இல்லாதது எது?
   அ) உலக ஒத்துழைப்பு
   ஆ) உலக அமைதி
   இ) இனச் சமத்துவம்
   ஈ) காலனித்துவம்

7. கீழ்க்கண்டவைகளில் அணிசேரா இயக்கத்தில் நிறுவன உறுப்பினர் அல்லாத நாடு எது?
   அ) யுகோஸ்லாவியா
   ஆ) இந்தோனேசியா
   இ) எகிப்து
   ஈ) பாகிஸ்தான்

8. பொருந்தாத ஒன்றினைக் கண்டுபிடி
   அ) சமூக நலம்
   ஆ) சுகாதாரம்
   இ) ராஜதந்திரம்
   ஈ) உள்நாட்டு விவகாரங்கள்

9. அணிசேராமை என்பதன் பொருள்
   அ) நடுநிலைமை வகிப்பது
   ஆ) தன்னிச்சையாகப் பிரச்சனைகளுக்கு முடிவு எடுக்கும் சுதந்திரம்
   இ) இராணுவமயமின்மை
   ஈ) மேற்கூறியவற்றில் எதுவும் இல்லை

10. இராணுவம் சாராத பிரச்சனைகள் என்பது
   அ) ஆற்றல் பாதுகாப்பு
   ஆ) நீர் பாதுகாப்பு
   இ) தொற்றுநோய்கள்
   ஈ) இவை அனைத்தும்

### II கோடிட்ட இடங்களை நிரப்புக

1. இந்தியா தனது முதல் அணு சோதனையை நடத்திய இடம் ________________.
2. தற்போது நமது வெளியுறவுக் கொள்கையானது



10th_Civics_TM_Unit_4.indd 291 24-03-2020 12:41:44

உள்நாட்டு வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான ________________ உருவாக்குவதற்கான வழிமுறையாகச் செயல்படுகிறது.

3. ______________________ என்பது ஓர் அரசின் வெளியுறவுக் கொள்கையை செயல்படுத்துவதற்கான கருவி ஆகும்.

4. இரு வல்லரசுகளின் பனிப்போரினை எதிர்கொள்ள இந்தியா பின்பற்றிய கொள்கை ________________.

5. நமது மரபு மற்றும் தேசிய நெறிமுறைகள் ________________ நடைமுறைப்படுத்துவதாகும்.

## III பின்வரும் கூற்றினைப் படித்து பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்கவும்

1. பின்வருவனவற்றைக் காலவரிசைப்படுத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளிலிருந்து சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.
   (i) பஞ்சசீலம்
   (ii) சீனாவின் அணுவெடிப்புச் சோதனை
   (iii) 20 ஆண்டுகள் ஒப்பந்தம்
   (iv) இந்தியாவின் முதல் அணுவெடிப்புச் சோதனை
   அ) (i), (iii), (iv), (ii) ஆ) (i), (ii), (iii), (iv)
   இ) (i), (ii), (iv), (iii) ஈ) (i), (iii), (ii), (iv)

2. பின்வருவனவற்றில் அணிசேரா இயக்கத்துடன் தொடர்பு இல்லாதது எது?
   (i) அணிசேரா இயக்கம் என்ற சொல் வி.கிருஷ்ணமேனன் என்பவரால் உருவாக்கப்பட்டது.
   (ii) இதன் நோக்கம் இராணுவக் கூட்டமைப்பில் சேர்ந்து வெளி விவகாரங்களில் தேசிய சுதந்திரத்தைப் பராமரித்தல் ஆகும்.
   (iii) தற்போது இது 120 உறுப்பு நாடுகளைக் கொண்டுள்ளது.
   (iv) இது பொருளாதார இயக்கமாக மாற்றமடைந்துள்ளது.
   அ) (i) மற்றும் (ii) ஆ) (iii) மற்றும் (iv)
   இ) (ii) மட்டும் ஈ) (iv) மட்டும்

3. கீழ்க்காணும் ஒவ்வொரு கூற்றுக்கும் எதிராக சரியா/தவறா என எழுதுக
   அ) பனிப்போரின் போது சர்வதேச விவகாரங்களில் இந்தியா மூன்றாவது அணியை உருவாக்க முயற்சித்தது.
   ஆ) இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையை நிறைவேற்றும் பொறுப்பு இந்திய உள்துறை அமைச்சகத்தைச் சார்ந்தது.
   இ) இந்தியாவின் அணுசக்தி சோதனை பூமிக்கடியிலான அணு சோதனை திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டது.

4. **கூற்று:** 1971இல் இந்தோ – சோவியத் ஒப்பந்தத்தின் மூலம் இந்தியா சோவியத் யூனியனுடன் இணைந்தது.
   **காரணம்:** இது 1962இன் பேரழிவுகரமான சீனப் போருக்குப் பின் தொடங்கியது.
   அ) கூற்று சரி மற்றும் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்.
   ஆ) கூற்று சரி ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல
   இ) கூற்று சரி காரணம் தவறு
   ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு

5. **கூற்று:** இந்தியா உலகின் பெரும்பான்மையான நாடுகளுடன் தூதரக உறவுகளைக் கொண்டுள்ளது.
   **காரணம்:** உலகின் இரண்டாவது அதிக அளவிலான மக்கள் தொகையைக் கொண்ட நாடு இந்தியா ஆகும்.
   அ) கூற்று சரி மற்றும் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்
   ஆ) கூற்று சரி ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல
   இ) கூற்று தவறு காரணம் சரி
   ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு

6. இந்தியா சுதந்திரத்திற்குப் பின்னர் இராணுவ முகாம்களில் இணைவதைத் தவிர்ப்பது அவசியமாக இருந்தது. ஏனெனில், இந்தியா இதனை / இவைகளை மீட்க வேண்டி இருந்தது
   அ) கடுமையான வறுமை
   ஆ) எழுத்தறிவின்மை
   இ) குழப்பமான சமூக பொருளாதார நிலைமைகள்
   ஈ) மேற்கூறிய அனைத்தும்

## IV பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| 1. | இந்தியப் பெருங்கடலில் அமைந்துள்ளது | – | 1955 |
| 2. | தென் கிழக்காசிய நாடுகள் கூட்டமைப்பின் பாலம் | – | 1954 |
| 3. | பஞ்சசீலம் | – | மாலத்தீவு |
| 4. | ஆப்பிரிக்க – ஆசிய மாநாடு | – | வெளியுறவுக் கொள்கை |
| 5. | உலக அமைதி | – | மியான்மர் |



10th_Civics_TM_Unit_4.indd 292 24-03-2020 12:41:44

www.tntextbooks.in

## V சுருக்கமாக விடையளிக்கவும்

1. வெளியுறவுக் கொள்கை என்றால் என்ன?
2. இந்தியாவின் அணுசக்தி கொள்கையை விவரி.
3. வேறுபடுத்துக: உள்நாட்டுக் கொள்கை மற்றும் வெளிநாட்டுக் கொள்கை
4. பஞ்சசீல கொள்கைகளில் ஏதேனும் நான்கினைப் பட்டியலிடுக.
5. இந்தியா அணிசேராக் கொள்கையைத் தேர்ந்தெடுத்ததற்கான காரணம் என்ன?
6. சார்க் உறுப்பு நாடுகளைப் பட்டியலிடுக.
7. அணிசேரா இயக்கத்தின் நிறுவனத் தலைவர்கள் யாவர்?
8. வெளியுறவுக் கொள்கையின் முக்கிய அம்சங்களைக் குறிப்பிடுக.

## VI விரிவாக விடையளிக்கவும்

1. அணிசேரா இயக்கம் பற்றி விரிவான குறிப்பு எழுதுக.
2. வெளியுறவுக் கொள்கையை நிர்ணயிக்கும் அடிப்படைக் காரணிகள் எவை?
3. அண்டைநாடுகளுடன் நட்புறவினைப் பேண இந்தியா பின்பற்றும் வெளியுறவுக் கொள்கையின் ஏதேனும் இரு கொள்கைகளை விவரி

## VII செயல்பாடு

1. நீங்கள் முடிவு எடுப்பவராக இருந்தால் தக்க வைத்துக்கொள்ள விரும்பும் அல்லது மாற்றம் செய்ய விரும்பும் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையின் ஏதேனும் இரண்டு அம்சங்களை அடையாளம் காணவும்.

## மேற்கோள் நூல்கள்


1. Mahendra Kumar, Theoretical Aspects of International Policies, Agra, Shivalal Agarwala & company 1984
2. Prakash Chandra, Theories of International Relations: Aman publishing
3. S. Ganguly, India's Foreign Policy, Oxford University Press
4. Dutt V.P., *India's Foreign Policy in a changing world*, Vikas Publishing House Pvt. Ltd., Noida (2009)
5. Dixit J.N., *India's Foreign Policy and its Neighbours*, Gyan Publishing House, Delhi (2001)
6. Khanna V.N., and Leslie K Kumar., *Foreign Policy of India*, Vikas Publishing House Pvt. Ltd., (2018), Noida
7. Muhkund Dubey., *India's Foreign Policy*, Orient Black Swan Pvt. Ltd., New Delhi (2015)
8. Shah, S.k., *India's Foreign Policy (Past, Present and Ties with the world)*, Vij Books India Pvt. Ltd., New Delhi (2017)


## இணையதள வளங்கள்

1. https://www.mea.gov.in/
2. https://mnoal.org/
3. http://www.saarc-sec.org/

## இணையச் செயல்பாடு

### இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை

படி – 1 URL அல்லது QR குறியீட்டினைப் பயன்படுத்தி இச்செயல்பாட்டிற்கான இணையப்பக்கத்திற்குச் செல்க

படி – 2 மெனுவின் வலது பக்கத்தில் உள்ள 'Useful Links' என்பதைச் சொடுக்கிய பின்னர் 'India Missions Abroad' என்பதைத் தேர்ந்தெடுக்கவும் .

படி – 3 உலக நாடுகளில் அமைந்திருக்கும் இந்திய தூதரக விவரங்களை அறிய தோன்றும் உலக வரைபடத்தில் ஏதாவது ஒரு நாட்டின் மீது சொடுக்கவும் (ரஷ்யா)

B373_10_SOCIAL_TM

உரலி: https://mea.gov.in/index.htm



10th_Civics_TM_Unit_4.indd 293 24-03-2020 12:41:44


www.tntextbooks.in

# குடிமையியல்

10th_Civics_Unit 1_TM.indd 252 24-03-2020 12:38:15

# அலகு – 1

# இந்திய அரசியலமைப்பு




## கற்றலின் நோக்கங்கள்

- இந்திய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டதை அறிதல்
- இந்திய அரசியலமைப்பின் சிறப்புக் கூறுகளை அறிதல்
- அடிப்படை உரிமைகள் மற்றும் கடமைகளைப் புரிதல்
- அரசு நெறிமுறையுறுத்தும் கோட்பாடுகளை அறிதல்
- மத்திய, மாநில அரசுகளின் உறவுகள் மற்றும் அவசரநிலை பற்றிப் புரிதல்

M4IZ36

## அறிமுகம்

ஒரு நாட்டின் நிர்வாகமானது எந்த அடிப்படைக் கொள்கைகளைச் சார்ந்து அமைந்துள்ளது என்பதை பிரதிபலிக்கும் அடிப்படைச் சட்டமே அரசியலமைப்பு என்பதாகும். அது ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு அச்சாணி ஆகும். அரசியலமைப்பு என்ற கொள்கை முதன்முதலில் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் (U.S.A.) தோன்றியது.

## 1.1 அரசியலமைப்பின் அவசியம்

அனைத்து மக்களாட்சி நாடுகளும் தங்களை நிர்வகித்துக் கொள்ள ஓர் அரசியலமைப்புச் சட்டத்தை பெற்றுள்ளன. ஒரு நாட்டின் குடிமக்கள் வாழவிரும்பும் வகையில் சில அடிப்படைக் கொள்கைகளை அரசியலமைப்பு வகுத்துக் கொடுக்கிறது. நமது சமூகத்தின் அடிப்படை தன்மையை அரசியலமைப்பு நமக்குத் தெரிவிக்கிறது.

## 1.2 இந்திய அரசியலமைப்பு உருவாக்கம்

1946ஆம் ஆண்டு, அமைச்சரவை தூதுக்குழு திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட, இந்திய அரசியல் நிர்ணய சபையால் இந்திய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டது. இச்சபையில் 292 மாகாணப் பிரதிநிதிகள், 93 சுதேச அரசுகளின் நியமன உறுப்பினர்கள், பலுச்சிஸ்தானின் சார்பில் ஒருவர் (1) மற்றும் மாகாண முதன்மை ஆணையர்கள் சார்பில் மூவர் (3) என மொத்தம் 389 உறுப்பினர்கள் இருந்தனர். அரசியல் நிர்ணய சபையின் முதல் கூட்டம், 1946ஆம் ஆண்டு டிசம்பர் 9ஆம் நாள் நடைபெற்றது. இச்சபையின் தற்காலிக தலைவராக மூத்த உறுப்பினர் டாக்டர். சச்சிதானந்த சின்கா அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்திய அரசியலமைப்பை உருவாக்க கூட்டத்தொடர் நடந்துகொண்டிருக்கும் போதே அவர் இறந்ததைத் தொடர்ந்து, டாக்டர். இராஜேந்திர பிரசாத் இந்திய அரசியலமைப்பு நிர்ணய சபையின் தலைவராகவும், H.C. முகர்ஜி மற்றும் V.T. கிருஷ்ணமாச்சாரி இருவரும் துணைத் தலைவர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இக்கூட்டத் தொடர் 11 அமர்வுகளாக 166 நாட்கள் நடைபெற்றது. இக்கூட்டத்தின் போது 2473 திருத்தங்கள் முன்வைக்கப்பட்டன. அவற்றுள் சில ஏற்கப்பட்டன. அரசியல் நிர்ணய சபை பல்வேறு குழுக்களின் மூலம் இந்திய அரசியலமைப்பு சட்டத்தை உருவாக்கும் பணியை மேற்கொண்டது. இந்திய அரசியலமைப்பு சட்ட வரைவுக் குழுத் தலைவர் டாக்டர். B.R. அம்பேத்கர் தலைமையின் கீழ் இந்திய அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்டது. எனவே அவர் "இந்திய அரசியலமைப்பின் தந்தை" என அறியப்படுகிறார்.



டாக்டர். B.R. அம்பேத்கர்



10th_Civics_Unit 1_TM.indd 253 24-03-2020 12:38:16

www.tntextbooks.in

இந்திய அரசியலமைப்புச் சட்டம் எழுதப்பட்ட பின்னர், பொதுமக்கள், பத்திரிக்கைகள், மாகாண சட்டமன்றங்கள் மற்றும் பலரால் விவாதிக்கப்பட்டது. இறுதியாக முகவுரை, 22 பாகங்கள், 395 சட்டப்பிரிவுகள் மற்றும் 8 அட்டவணைகளைக் கொண்ட இந்திய அரசியலமைப்பு, 1949ஆம் ஆண்டு நவம்பர் 26ஆம் நாள் ஏற்றுக்கொள்ளப்பட்டது. 1950ஆம் ஆண்டு ஜனவரி 26ஆம் நாள் இந்திய அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்தது. இந்த நாளே ஒவ்வொரு ஆண்டும் இந்திய குடியரசு தினமாகக் கொண்டாடப்படுகிறது.

TWM8G4

**உங்களுக்குத் தெரியுமா?**

பிரேம் பெஹாரி நரேன் ரைஜடா என்பவரால் இந்திய அரசியலமைப்புச் சட்டம் இத்தாலிய பாணியில், அவரது கைப்பட எழுதப்பட்டது.

## 1.3 இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் சிறப்புக் கூறுகள்

- உலகிலுள்ள எழுதப்பட்ட, அனைத்து அரசியலமைப்புகளை விடவும் மிகவும் நீளமானது.
- இதன் பெரும்பாலான கருத்துகள் பல்வேறு நாடுகளின் அரசியலமைப்புகளிலிருந்து பெறப்பட்டவை.
- இது நெகிழாத்தன்மை கொண்டதாகவும், நெகிழும் தன்மை கொண்டதாகவும் உள்ளது.
- கூட்டாட்சி முறை அரசாங்கத்தை (மத்திய, மாநில அரசுகள்) ஏற்படுத்துகிறது.
- இந்தியாவைச் சமயச்சார்பற்ற நாடாக்குகிறது.
- சுதந்திரமான நீதித்துறையை வழங்குகிறது.
- உலகளாவிய வயது வந்தோர் வாக்குரிமையை அறிமுகப்படுத்தியதோடு 18 வயது நிரம்பிய குடிமக்கள் அனைவருக்கும் எந்த வித பாகுபாடுமின்றி வாக்குரிமையை வழங்குகிறது.

## 1.4 முகவுரை

'முகவுரை' (Preamble) என்ற சொல் அரசியலமைப்பிற்கு அறிமுகம் அல்லது முன்னுரை என்பதைக் குறிக்கிறது. இது அரசியலமைப்பின் அடிப்படைக் கொள்கைகள், நோக்கங்கள் மற்றும் இலட்சியங்களை உள்ளடக்கியது. இது பெரும் மதிப்புடன் "அரசியலமைப்பின் திறவுகோல்" என குறிப்பிடப்படுகிறது.

1947ஆம் ஆண்டு ஜனவரி 22ஆம் நாள் இந்திய அரசியல் நிர்ணய சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஜவகர்லால் நேருவின் 'குறிக்கோள் தீர்மானத்தின்' அடிப்படையில் இந்திய அரசியலமைப்பின் முகவுரை அமைந்துள்ளது. முகவுரையானது 1976ஆம் ஆண்டு 42வது அரசியலமைப்பு சட்டத் திருத்தத்தின்படி திருத்தப்பட்டது. அதன்படி, சமதர்மம், சமயச்சார்பின்மை, ஒருமைப்பாடு போன்ற மூன்று புதிய சொற்கள் சேர்க்கப்பட்டன. 'இந்திய மக்களாகிய நாம்' என்ற சொற்களுடன் இந்திய அரசியலமைப்பின் முகவுரை தொடங்குகிறது. இதிலிருந்து, இந்திய மக்களே இந்திய அரசியலமைப்பின் ஆதாரம் என நாம் அறியலாம். இந்தியா ஒரு இறையாண்மைமிக்க, சமதர்ம, சமயச்சார்பற்ற, ஜனநாயக, குடியரசு என நமது அரசியலமைப்பின் முகவுரை கூறுகிறது. இந்திய குடிமக்கள் அனைவருக்கும் சமூக, பொருளாதார, அரசியல் நீதி என அனைத்திலும் பாதுகாப்பு வழங்குவதே இதன் நோக்கமாகும்.

**உங்களுக்குத் தெரியுமா?**

1789ஆம் ஆண்டு பிரெஞ்சு புரட்சியின் போது சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியன முக்கிய முழக்கங்களாயின. இந்திய அரசியலமைப்பின் முகவுரையில் இவற்றிற்கு முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது.

## 1.5 குடியுரிமை

'சிட்டிசன்' (Citizen) எனும் சொல் 'சிவிஸ்' (Civis) எனும் இலத்தீன் சொல்லில் இருந்து பெறப்பட்டதாகும். இதன் பொருள் ஒரு 'நகர அரசில் வசிப்பவர்' என்பதாகும். இந்திய அரசியலமைப்பு, இந்தியா முழுவதும் ஒரே மாதிரியான ஒற்றை குடியுரிமையை வழங்குகிறது. இந்திய அரசியலமைப்பின் பகுதி II சட்டப்பிரிவுகள் 5 லிருந்து 11 வரை குடியுரிமையைப் பற்றி விளக்குகின்றன.

### குடியுரிமைச் சட்டம் (1955)

இந்திய அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்தபின்பு, 1955ல் இயற்றப்பட்ட குடியுரிமைச்சட்டம், குடியுரிமை பெறுதல் மற்றும் குடியுரிமை இழத்தல் ஆகியன பற்றி விளக்குகிறது. இச்சட்டம் அரசியலமைப்பு சட்ட திருத்தத்தால் எட்டு முறை திருத்தப்பட்டுள்ளது.

### குடியுரிமை பெறுதல்

குடியுரிமைச் சட்டம் 1955ன் படி ஒருவர் கீழ்க்காணும் ஏதேனும் ஒரு முறையில் குடியுரிமை பெறமுடியும்.

1. **பிறப்பின் மூலம்:** 1950ஆம் ஆண்டு ஜனவரி 26 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ இந்தியாவில்



10th_Civics_Unit 1_TM.indd 254 24-03-2020 12:38:16

பிறந்த அனைவரும் இந்தியக் குடிமக்களாகக் கருதப்படுவர்.

**2. வம்சாவளி மூலம்:** 1950ஆம் ஆண்டு ஜனவரி 26 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ வெளிநாட்டில் பிறந்த ஒருவரின் தந்தை (அவர் பிறந்த போது) இந்தியக் குடிமகனாக இருக்கும் பட்சத்தில் வெளிநாட்டில் பிறந்த அவர், வம்சாவளி மூலம் இந்தியக் குடியுரிமை பெறமுடியும்.

**3. பதிவின் மூலம்:** ஒருவர் இந்தியக் குடியுரிமை கோரி, பொருத்தமான அங்கீகாரத்துடன் பதிவு செய்வதன் மூலம் இந்தியக் குடியுரிமை பெறலாம்.

**4. இயல்புரிமை மூலம்:** ஒரு வெளிநாட்டவர், இந்திய அரசிற்கு, இயல்புரிமை கோரி விண்ணப்பிப்பதன் மூலம் இந்தியக் குடியுரிமை பெறலாம்.

**5. பிரதேச (நாடுகள்) இணைவின் மூலம்:** பிற நாடுகள் / பகுதிகள் இந்தியாவுடன் இணையும் போது இந்திய அரசு அவ்வாறு இணையும் நாடுகளின் மக்களைத் தமது குடிமக்களாகக் கருதி அவர்களுக்குக் குடியுரிமை வழங்கலாம்.

### குடியுரிமையை இழத்தல்

குடியுரிமைச் சட்டம் 1955ன் படி, ஒருவர் தன் குடியுரிமையை, சட்டத்தின் மூலமாக பெறப்பட்டதாகவோ (அ) அரசியலமைப்பின் கீழ் முன்னுரிமையால் பெறப்பட்டதாகவோ இருக்கும்பட்சத்தில் பெற்ற குடியுரிமையைத் துறத்தல், முடிவுறச் செய்தல், இழத்தல் என்ற பின்வரும் மூன்று வழிகளில் இழப்பார்.

1. ஒரு குடிமகன் தாமாக முன்வந்து தனது குடியுரிமையை துறத்தல்.
2. வேறு ஒரு நாட்டில் குடியுரிமை பெறும்போது தாமாகவே இந்தியக் குடியுரிமை முடிவுக்கு வந்துவிடுதல்.
3. இயல்புரிமையின் மூலம் குடியுரிமை பெற்ற ஒரு குடிமகன், மோசடி செய்து குடியுரிமை பெற்றவர், தவறான பிரதிநிதித்துவம் தந்தவர் (அ) உண்மைகளை மறைத்தவர் (அ) எதிரி நாட்டுடன் வாணிகம் செய்தவர் அல்லது இரண்டாண்டு காலத்திற்கு சிறை தண்டனை பெற்றவர் என்பதை மத்திய அரசு கண்டறிந்து அவர் குற்றம் புரிந்தவர் என்று திருப்திப்படும் பட்சத்தில் மத்திய அரசு, அவரது குடியுரிமையை இழக்கச் செய்யும்.

## 1.6 அடிப்படை உரிமை

இந்திய அரசியலமைப்புச் சட்டம் பகுதி (III) 12ல்இருந்து35வரையுள்ளசட்டப்பிரிவுகள்அடிப்படை உரிமைகள் பற்றி கூறுகின்றன. அரசியலமைப்பை உருவாக்கியவர்கள் இந்த அடிப்படை உரிமைகளை அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசியலமைப்பிலுள்ள அடிப்படை உரிமைகளின் தாக்கத்தால் உருவாக்கினார்கள். முதலில் இந்திய அரசியலமைப்பு ஏழு அடிப்படை உரிமைகளை வழங்கியது. ஆனால், தற்போது ஆறு அடிப்படை உரிமைகள் மட்டுமே உள்ளன. இந்திய அரசியலமைப்பின் பகுதி (III) 'இந்தியாவின் மகாசாசனம்' என அழைக்கப்படுகிறது. இந்தியாவில் வசிக்கும் மக்கள் அனைவருக்கும் அடிப்படை உரிமைகள் பொதுவானது. ஆனால் இந்திய குடிமக்களுக்கு மட்டுமேயான சில அடிப்படை உரிமைகளும் உள்ளன.

### அரசியலமைப்புக்குட்பட்டு தீர்வு காணும் உரிமை (சட்டப்பிரிவு – 32)

நீதிமன்ற முத்திரையுடன், நீதிமன்றத்தால் வெளியிடப்படும் கட்டளை அல்லது ஆணை நீதிப்பேராணை எனப்படும். இது சில சட்டங்களை நிறைவேற்றாமல் தடைசெய்ய, நீதிமன்றத்தால் வெளியிடப்படும் ஆணையாகும். உச்ச நீதிமன்றம் மற்றும் உயர்நீதி மன்றங்கள் இரண்டுமே ஐந்து வகையான நீதிப்பேராணைகளை வெளியிட அதிகாரம் பெற்றுள்ளன. இது போன்ற ஆணைகளை வெளியிட்டு மக்களின் உரிமைகளைக் காப்பதினால் உச்சநீதிமன்றம் 'அரசியலமைப்பின் பாதுகாவலன்' என அழைக்கப்படுகிறது. டாக்டர். B.R. அம்பேத்கரின் கூற்றுப்படி அரசியலமைப்பு சட்டப்பிரிவு 32, இந்திய அரசியலமைப்பின் 'இதயம் மற்றும் ஆன்மா' ஆகும்.

**அ) ஆட்கொணர்வு நீதிப்பேராணை (Habeas Corpus)**

சட்டத்திற்கு புறம்பாக ஒருவர் கைது செய்யப்படுவதிலிருந்து இது பாதுகாக்கிறது.

**ஆ) கட்டளையுறுத்தும் நீதிப்பேராணை (Mandamus)**

மனுதாரர் சட்ட உதவியுடன் தனது மனுதொடர்பான பணியினைச் சம்மந்தப்பட்ட துறையிலிருந்து நிறைவேற்றிக் கொள்ள முடியும்

**இ) தடையுறுத்தும் நீதிப்பேராணை (Prohibition)**

ஒரு கீழ்நீதிமன்றம் தனது, சட்ட எல்லையைத் தாண்டி செயல்படுவதைத் தடுக்கிறது.

**ஈ) ஆவணக் கேட்பு பேராணை (Certiorari)**

உயர்நீதிமன்றம், ஆவணங்களை நியாயமான பரிசீலனைக்கு தனக்கோ அல்லது உரிய அதிகாரிக்கோ அனுப்பச் செய்ய கீழ்நீதிமன்றங்களுக்கு இடும் ஆணை ஆகும்.

**உ) தகுதிமுறை வினவும் நீதிப்பேராணை (Quo–Warranto)**

இப்பேராணை சட்டத்திற்குப் புறம்பாக, தகாத முறையில் அரசு அலுவலகத்தைக் கைப்பற்றுவதை தடை செய்கிறது.

### I. சமத்துவ உரிமை



பிரிவு 14 – சட்டத்தின் முன் அனைவரும் சமம்.

பிரிவு 15 – மதம், இனம், சாதி, பாலினம் மற்றும் பிறப்பிடம் இவற்றின் அடிப்படையில் பாகுபடுத்துவதைத் தடைசெய்தல்.

பிரிவு 16 – பொது வேலைவாய்ப்புகளில் சமவாய்ப்பளித்தல்.

பிரிவு 17 – தீண்டாமையை ஒழித்தல்.

பிரிவு 18 – இராணுவ மற்றும் கல்விசார் பட்டங்களைத் தவிர மற்ற பட்டங்களை நீக்குதல்.

### III. சுரண்டலுக்கெதிரான உரிமை



பிரிவு 23 – கட்டாய வேலை, கொத்தடிமை முறை மற்றும் மனிதத்தன்மையற்ற வியாபாரத்தைத் தடுத்தல்.

பிரிவு 24 – தொழிற்சாலைகள் மற்றும் ஆபத்தான இடங்களில் குழந்தைத் தொழிலாளர் முறையைத் தடுத்தல்.

### V. கல்வி, கலாச்சார உரிமை



பிரிவு 29 – சிறுபான்மையினரின் எழுத்து, மொழி, மற்றும் கலாச்சாரப் பாதுகாப்பு.

பிரிவு 30 – சிறுபான்மையினரின் கல்வி நிறுவனங்களை நிறுவி, நிர்வகிக்கும் உரிமை.

**உங்களுக்குத் தெரியுமா?**

1978ஆம் ஆண்டு, 44ஆவது அரசியலமைப்புச் சட்டத் திருத்தப்படி, அடிப்படை உரிமைகள் பட்டியலிலிருந்து சொத்துரிமை (பிரிவு 31) நீக்கப்பட்டது.

இது இந்திய அரசியலமைப்புச் சட்டம் பகுதி XII, பிரிவு 300 A வின் கீழ் ஒரு சட்ட உரிமையாக வைக்கப்பட்டுள்ளது.

### II. சுதந்திர உரிமை



பிரிவு 19 – பேச்சுரிமை, கருத்து தெரிவிக்கும் உரிமை, அமைதியான முறையில் கூட்டம் கூடுவதற்கு உரிமை, சங்கங்கள், அமைப்புகள் தொடங்க உரிமை, இந்திய நாட்டிற்குள் விரும்பிய இடத்தில் வசிக்கும் மற்றும் தொழில் செய்யும் உரிமை.

பிரிவு 20 – குற்றஞ்சாட்டப்பட்ட நபர்களுக்கான உரிமை மற்றும் தண்டனைகளிலிருந்து பாதுகாப்பு பெறும் உரிமை.

பிரிவு 21 – வாழ்க்கை மற்றும் தனிப்பட்ட சுதந்திரத்திற்குப் பாதுகாப்பு பெறும் உரிமை.

பிரிவு 21 A – தொடக்கக்கல்வி பெறும் உரிமை.

பிரிவு 22 – சில வழக்குகளில் கைது செய்து, தடுப்புக் காவலில் வைப்பதற்கெதிரான பாதுகாப்பு உரிமை

### IV. சமயச்சார்பு உரிமை



பிரிவு 25 – எந்த ஒரு சமயத்தினை ஏற்கவும், பின்பற்றவும், பரப்பவும் உரிமை.

பிரிவு 26 – சமய விவகாரங்களை நிர்வகிக்கும் உரிமை.

பிரிவு 27 – எந்தவொரு மதத்தையும் பரப்புவதற்காக வரி செலுத்துவதற்கெதிரான சுதந்திரம்.

பிரிவு 28 – மதம் சார்ந்த கல்வி நிறுவனங்களில் நடைபெறும் வழிபாடு மற்றும் அறிவுரை நிகழ்வுகளில் கலந்துகொள்ளாமலிருக்க உரிமை

### VI. அரசியலமைப்புக்குட்பட்டு தீர்வு காணும் உரிமை



பிரிவு 32 – தனிப்பட்டவரின், அடிப்படை உரிமைகள் பாதிக்கப்படும் போது, நீதிமன்றத்தை அணுகி உரிமையைப் பெறுதல்.



இந்த அஞ்சல் வில்லைகள் எந்த அடிப்படை உரிமைகள் மீறுதலைக் குறிப்பிடுகின்றன?

### அடிப்படை உரிமைகளை நிறுத்தி வைத்தல்

இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 352ன் கீழ் குடியரசுத்தலைவரால் அவசரநிலை அறிவிக்கப்படும் பொழுது, இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 19ன் கீழ் உத்திரவாதம் அளிக்கப்பட்ட சுதந்திரம் தாமாகவே நிறுத்தப்படுகிறது. மற்ற அடிப்படை உரிமைகளையும் குடியரசுத்தலைவர் சில குறிப்பிட்ட ஆணைகளைப் பிறப்பிப்பதின் மூலம் தடை செய்யலாம். குடியரசுத்தலைவரின் இந்த ஆணைகள் நாடாளுமன்றத்தால் கட்டாயம் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

## 1.7 அரசு நெறிமுறையுறுத்தும் கோட்பாடுகள்

அரசு நெறிமுறையுறுத்தும் கோட்பாடுகள், இந்திய அரசியலமைப்புச் சட்டம் பகுதி IV சட்டப்பிரிவு 36ல் இருந்து 51 வரை தரப்பட்டுள்ளது. அரசியலமைப்புச் சட்டம், வழிகாட்டும் நெறிமுறைகளுக்காகத் தனியாக வகைபாட்டினையும் கொண்டிருக்கவில்லை. இருப்பினும் பொருளடக்கம் மற்றும் வழிகாட்டுதல் அடிப்படையில் அவை மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அதாவது சமதர்ம, காந்திய மற்றும் தாராள–அறிவுசார்ந்தவை என்று பிரிக்கப்பட்டுள்ளன. இந்த கொள்கைகளை, நீதிமன்றத்தால் வலுக்கட்டாயமாகச் செயற்படுத்த முடியாது. ஆனால் இவை ஒரு நாட்டினை நிர்வகிக்க அவசியமானவை. சமுதாய நலனை மக்களுக்குத் தருவதே இதன் நோக்கமாகும். இந்திய அரசியலமைப்பின் 'புதுமையான சிறப்பம்சம்' என டாக்டர். B.R. அம்பேத்கர் இதனை விவரிக்கிறார்.

### அடிப்படை உரிமைகளுக்கும் அரசு நெறிமுறையுறுத்தும் கோட்பாடுகளுக்கும் இடையேயான வேறுபாடுகள்

| அடிப்படை உரிமைகள் | அரசு நெறிமுறையுறுத்தும் கோட்பாடுகள் |
|---|---|
| இவை அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசியலமைப்பிலிருந்து பெறப்பட்டவை . | இவை அயர்லாந்து நாட்டின் அரசியலமைப்பிலிருந்து பெறப்பட்டவை . |
| அரசாங்கத்தால் கூட இந்த உரிமையை சுருக்கவோ, நீக்கவோ முடியாது. | இவை அரசுக்கு வெறும் அறிவுறுத்தல்களே ஆகும். |
| இவற்றை நீதிமன்ற சட்டத்தால் செயற்படுத்த முடியும். | எந்த நீதிமன்றத்தாலும் கட்டாயப்படுத்த முடியாது |
| இவை சட்ட ஒப்புதலைப் பெற்றவை. | இவை தார்மீக மற்றும் அரசியல் ஒப்புதலைப் பெற்றவை. |
| இந்த உரிமைகள் நாட்டின் அரசியல் ஜனநாயகத்தை வலுப்படுத்துகின்றன . | இந்தக் கொள்கைகளைச் செயற்படுத்தும் பொழுது, சமுதாய மற்றும் பொருளாதார ஜனநாயகம் உறுதியாகிறது. |

2002ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட, 86வது அரசியலமைப்புச் சட்டத்திருத்தத்தின்படி, இந்திய அரசியலமைப்பின் பிரிவு 45 திருத்தப்பட்டு, பிரிவு 21A வின் கீழ் தொடக்கக்கல்வி, அடிப்படை உரிமையாகச் சேர்க்கப்பட்டுள்ளது. இந்தத் திருத்தம், மாநில அரசுகள் முன்பருவ மழலையர் கல்வியை (Early Childhood Care and Education – ECCE) 6 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு வழங்க அறிவுறுத்துகிறது.

## 1.8 அடிப்படைக் கடமைகள்

இந்திய அரசியலமைப்பில் அடிப்படைக் கடமைகள் என்பவை முன்னாள் சோவியத் யூனியன் (USSR) அரசியலமைப்பின் தாக்கத்தால் சேர்க்கப்பட்டதாகும். 1976ஆம் ஆண்டு, அமைக்கப்பட்ட சர்தார் ஸ்வரன் சிங் கமிட்டி அரசியலமைப்புச் சட்ட திருத்தம் செய்ய பரிந்துரைத்தது. அதன்படி 1976ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட 42வது அரசியல் அமைப்புச் சட்டதிருத்தம் நமது அரசியலமைப்பில் குடிமக்களின் பொறுப்புகள் சிலவற்றைச் சேர்த்தது. இவ்வாறு சேர்க்கப்பட்ட பொறுப்புகளே குடிமக்களின் கடமைகள் என்றழைக்கப்பட்டன. மேலும் இந்தச் சட்டத்திருத்தம், அரசியலமைப்பின் பகுதி IV A என்ற ஒரு புதிய பகுதியைச் சேர்த்தது. இந்தப் புதிய பகுதி 51 A என்ற ஒரேயொரு பிரிவை மட்டும் கொண்டது. இது குடிமக்களின் பத்து அடிப்படைக் கடமைகளை விளக்கும் குறிப்பிட்ட சட்டத் தொகுப்பாக உள்ளது.

### அடிப்படைக் கடமைகளின் பட்டியல்

அ) ஒவ்வொரு இந்தியக் குடிமகனும் அரசியலமைப்பு, அதன் கொள்கைகள், நிறுவனங்கள், தேசியகீதம்,





10th_Civics_Unit 1_TM.indd 257 24-03-2020 12:38:17

தேசியக்கொடி, தேசிய சின்னங்கள் ஆகியவற்றை மதித்தல்.

ஆ) சுதந்திர போராட்டத்திற்குத் தூண்டுகோலாக அமைந்த உயரிய நோக்கங்களைப் போற்றி வளர்த்தல்.

இ) இந்தியாவின் இறையாண்மை, ஒற்றுமை, ஒருமைப்பாடு இவற்றைப் பேணிப் பாதுகாத்தல்.

ஈ) தேசப் பாதுகாப்பிற்காகத் தேவைப்படும் பொழுது தேசப்பணியாற்ற தயாராயிருத்தல்.

உ) சமய, மொழி மற்றும் பிராந்திய அல்லது பகுதி சார்ந்த வேறுபாடுகளை மறந்து, பெண்களைத் தரக்குறைவாக நடத்தும் பழக்கத்தை நிராகரித்து, பெண்களின் கண்ணியத்தைக் காக்கும் எண்ணங்களை மேம்படுத்தி, இந்திய மக்கள் அனைவரிடையேயும் சகோதரத்துவத்தை வளர்த்தல்.

ஊ) நமது உயர்ந்த, பாரம்பரிய கலப்பு கலாச்சாரத்தை மதித்து பாதுகாத்தல்.

எ) காடுகள், ஏரிகள், ஆறுகள், வனவிலங்குகள் மற்றும் உயிரினங்கள் அடங்கிய இயற்கை சுற்றுச்சூழலைப் பாதுகாத்து, மேம்படுத்தி அவை வாழும் சூழலை ஏற்படுத்துதல்.

ஏ) அறிவியல் கோட்பாடு, மனிதநேயம், ஆராய்ச்சி மனப்பான்மை மற்றும் சீர்திருத்தம் ஆகியவற்றை வளர்த்தல்.

ஐ) வன்முறையைக் கைவிட்டு பொது சொத்துக்களைப் பாதுகாத்தல்.

ஒ) தனிப்பட்ட மற்றும் கூட்டுசெயல்பாடுகள் என அனைத்து செயல்பாடுகளிலும் சிறந்தவற்றை நோக்கி செயல்பட்டு, தேசத்தின் நிலையான, உயர்ந்த முயற்சி மற்றும் சாதனைக்காக உழைத்தல்.

ஓ) 6 முதல் 14 வயது வரையுள்ள குழந்தைகள் அனைவருக்கும் கல்வி பெறும் வாய்ப்பினை வழங்குதல். (86வது அரசியலமைப்பு திருத்தச் சட்டம் 2002இன் படி 51A (k) கீழ் 11வது அடிப்படை கடமை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த பிரிவின் கீழ் அனைத்து இந்திய குடிமக்கள் அல்லது பெற்றோர்கள் 6 முதல் 14 வயதுள்ள தங்கள் குழந்தைகள் அனைவருக்கும் கல்வி பெறும் வாய்ப்பினை ஏற்படுத்தி தர வேண்டும்).

## 1.9 மத்திய–மாநில உறவுகள்

### சட்டமன்ற உறவுகள்

மத்திய நாடாளுமன்றம், இந்தியா முழுவதற்கும் அல்லது இந்தியாவின் எந்த பகுதிக்கும் சட்டமியற்றும் அதிகாரம் பெற்றுள்ளது. இது இந்தியாவின் மாநிலங்களுக்கு மட்டுமின்றி யூனியன் பிரதேசங்களுக்கும் பொருந்தும். இந்திய அரசியலமைப்பின் ஏழாவது அட்டவணை, மத்திய–மாநில அரசுகளுக்கிடையேயான அதிகாரப் பகிர்வினைப் பற்றி கூறுகிறது. அவை மத்திய பட்டியல், மாநில பட்டியல், பொதுப்பட்டியல் என மூன்று பட்டியல்கள் முறையே 97, 66, 47 என்று அதிகாரத்தை வழங்கியுள்ளது. மத்திய அரசுக்கு சொந்தமான பட்டியலில், சட்டமியற்றும் பிரத்யேக அதிகாரத்தை நாடாளுமன்றம் பெற்றுள்ளது. மாநில அரசுக்குச் சொந்தமான பட்டியலில் சட்டமியற்றும் பிரத்யேக அதிகாரத்தை மாநில சட்டமன்றம் பெற்றுள்ளது. நாடாளுமன்றம் மற்றும் மாநில சட்டமன்றங்கள் பொதுப்பட்டியலில் உள்ள துறைகளின் மீது சட்டமியற்ற அதிகாரம் கொண்டுள்ளன. ஆனால், மத்திய அரசுக்கும், மாநில அரசுக்குமிடையே பொதுப்பட்டியலில் உள்ள துறைகள் குறித்து சட்டமியற்றும் பொழுது முரண்பாடு ஏற்பட்டால், மத்திய அரசு இயற்றும் சட்டமே இறுதியானது.

> **உங்களுக்குத் தெரியுமா?**
>
> தற்போது அதிகாரப் பகிர்வு என்பது மத்திய அரசு பட்டியலில் 100 துறைகள், மாநில அரசு பட்டியலில் 61 துறைகள், மற்றும் இரண்டுக்கும் பொதுவான பொதுப்பட்டியலில் 52 துறைகள் என்றும் மாற்றப்பட்டுள்ளது. 1976ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட 42 வது அரசியலமைப்பு சட்டத்திருத்தம் மாநிலப்பட்டியலில் இருந்து 5 துறைகளை, பொதுப் பட்டியலுக்கு மாற்றியது. அவை,கல்வி,காடுகள்,எடைகள்மற்றும்அளவுகள், பறவைகள் மற்றும் வனவிலங்குகள் பாதுகாப்பு, மற்றும் உச்சநீதிமன்றம், உயர்நீதிமன்ற அமைப்புகளைத் தவிர பிற நீதிமன்றங்களின் நீதி நிர்வாகம் ஆகியனவாகும்.

### நிர்வாக உறவுகள்

ஒரு மாநில அரசின் நிர்வாக அதிகாரம் அதன் சொந்த மாநிலத்தில் மட்டுமே உள்ளது மற்றும் அம்மாநிலத்தில் மட்டுமே தனக்கான சட்டமியற்றும் தகுதியையும் பெற்றுள்ளது. அதே வேளையில், மத்திய அரசும், பிரத்தியோக நிர்வாக அதிகாரம் பெற்றுள்ளது. அவை, அ) நாடாளுமன்றம் தொடர்பான விஷயங்களில் சட்டங்களை இயற்ற சிறப்பு அதிகாரம், ஆ) மாநில அரசுகள் செய்து கொள்ளும் உடன்படிக்கை (அ) ஒப்பந்தங்களை அங்கீகரிப்பது ஆகியனவாகும்.

### நிதி உறவுகள்

இந்திய அரசியலமைப்பு சட்டம் பகுதி XII சட்டப்பிரிவு 268ல் இருந்து 293 வரை



10th_Civics_Unit 1_TM.indd 258 24-03-2020 12:38:17

> **உங்களுக்குத் தெரியுமா?**
> 1969இல் மத்திய–மாநில அரசுகளின் உறவுகள் குறித்து முழுவதும் ஆராய தமிழக அரசு டாக்டர்.P.V.இராஜமன்னார் தலைமையின் கீழ் மூவர் குழு ஒன்றை நியமித்தது.

உள்ள பிரிவுகள் மத்திய–மாநில அரசுகளின் நிதிசார்ந்த உறவுகளைப் பற்றி விளக்குகிறது. மத்திய–மாநில அரசுகள், அரசியலமைப்புச் சட்டத்தின் மூலம், பலவகையான வரிகளை விதிக்கும் அதிகாரங்களைப் பெற்றுள்ளன. இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 280ன் கீழ் குடியரசுத்தலைவரால் நியமனம் செய்யப்பட்ட நிதிக்குழு பரிந்துரையின் அடிப்படையில், மத்திய அரசால் சில வரிகள் விதிக்கப்பட்டு, வசூலிக்கப்பட்டு, மத்திய அரசாலும், மாநில அரசாலும் பிரித்துக்கொள்ளப்படுகின்றன.

## 1.10 அலுவலக மொழிகள்

அரசியலமைப்பு சட்டப் பகுதி XVIIஇல் 343 லிருந்து 351 வரையுள்ள சட்டப்பிரிவுகள் அலுவலக மொழிகள் பற்றி விவரிக்கின்றன.

தொடக்கத்தில் 14 மொழிகள் அரசியலமைப்பின் 8வது அட்டவணையில் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. தற்போது 22 மொழிகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

> **செயல்பாடு**
> அரசியலமைப்பின் எட்டாவது அட்டவணையில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட மொழிகளை பட்டியலிடுக.

> **உங்களுக்குத் தெரியுமா?**
> 2004ஆம் ஆண்டு இந்திய அரசு "செம்மொழிகள்" எனும் புதிய வகைப்பாட்டினை ஏற்படுத்த தீர்மானித்தது. அதன்படி 6 மொழிகள் செம்மொழி தகுதியை பெற்றுள்ளன. அவை, தமிழ்(2004), சமஸ்கிருதம் (2005), தெலுங்கு(2008), கன்னடம்(2008), மலையாளம் (2013) மற்றும் ஒடியா(2014).

## 1.11 அவசரகால ஏற்பாடுகள்

### தேசிய அவசரநிலை (சட்டப்பிரிவு 352)

போர், வெளிநாட்டினர் ஆக்கிரமிப்பு, அல்லது ஆயுதமேந்திய கிளர்ச்சி அல்லது உடனடி ஆபத்து அல்லது அச்சுறுத்தல் காரணமாக இந்தியாவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டால், குடியரசுத்தலைவர், அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 352ன் கீழ் அவசரநிலையை அறிவிக்கலாம். போர் அல்லது வெளிநாட்டினர் ஆக்கிரமிப்பின் காரணமாக அவசரநிலை அறிவிக்கப்படும் பொழுது அது 'வெளிப்புற அவசரநிலை' எனப்படுகிறது. ஆயுதமேந்திய கிளர்ச்சிக் காரணமாக அவசர நிலை அறிவிக்கப்படும்பொழுது அது 'உள்நாட்டு அவசர நிலை' எனப்படுகிறது. இந்த வகையான அவசரநிலைகள் 1962, 1971, 1975 ஆகிய ஆண்டுகளில் அறிவிக்கப்பட்டன.

### மாநில அவசரநிலை (சட்டப்பிரிவு 356)

ஒரு மாநிலத்தில், மாநில அரசால் கட்டுப்படுத்த முடியாத சூழல் ஏற்படும்பொழுது அரசியலமைப்பின் விதிகளுக்கேற்ப ஆளுநர் அறிக்கை அளிக்கும் பொழுது, குடியரசுத்தலைவர் அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 356ன் கீழ் அவசரநிலையை அறிவிக்கலாம்.இந்தஅவசரநிலை,சட்டப்பிரிவு352ன் படி நடைமுறையில் இருந்தாலும் அல்லது தேர்தல் ஆணையம் சட்டமன்றத் தேர்தலை நடத்த உகந்த சூழல் இல்லை என்று சான்றளித்தாலும் மட்டுமே ஓராண்டைத் தாண்டியும் தொடரமுடியும். அதிகபட்சம் அவசரநிலையின் காலம் 3 ஆண்டுகள் இருக்கமுடியும். மாநிலமானது, குடியரசுத்தலைவர் சார்பாக ஆளுநரால் ஆளப்படுகிறது. இந்தியாவில் முதன்முறையாக 1951இல் பஞ்சாப் மாநிலத்தில் குடியரசுத்தலைவர் ஆட்சி நடைமுறைப் படுத்தப்பட்டது.

### நிதி சார்ந்த அவசரநிலை (சட்டப்பிரிவு 360)

நிதிநிலைத் தன்மை, இந்தியாவின் கடன் தன்மை மற்றும் இந்தியாவின் பகுதிகள் ஆபத்தில் இருந்தால் அரசியலமைப்பு சட்டப்பிரிவு 360ன் கீழ் குடியரசுத்தலைவர் நிதிசார்ந்த அவசரநிலையைப் பிறப்பிக்கலாம். இந்த வகையான அவசர நிலையில் மத்திய–மாநில அரசு ஊழியர் எந்த வகுப்பினராயினும் அவர்களது ஊதியம், படிகள் மற்றும் உச்சநீதிமன்ற, உயர்நீதிமன்ற நீதிபதிகள் உட்பட அனைவரது ஊதியமும் குடியரசுத்தலைவரின் ஓர் ஆணையின் மூலம் குறைக்கப்படும். இந்த வகையான அவசரநிலை இந்தியாவில் இதுவரை அறிவிக்கப்படவில்லை.

## 1.12 அரசியலமைப்புச் சட்டத்திருத்தம்

'அமெண்ட்மெண்ட்' (Amendment) எனும் சொல் மாற்றம், மேம்படுத்துதல், மற்றும் சிறு மாறுதல் என்பதைக் குறிக்கிறது. அரசியலமைப்பின் சட்டம் பகுதி XXல் 368வது சட்டப்பிரிவு, அரசியலமைப்பினை சட்ட திருத்தம் செய்வதில் பின்பற்றப்படும் முறைகள் மற்றும்

www.tntextbooks.in

திருத்தம் செய்வதில் நாடாளுமன்றத்தின் அதிகாரங்கள் பற்றி தெரிவிக்கிறது.

### அரசியலமைப்புச் சட்டத்திருத்தம் செய்வதில் பின்பற்றப்படும் வழிமுறைகள்

நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும், அரசியலமைப்புச் சட்டத்திருத்த மசோதா அறிமுகப்படுத்தப்பட வேண்டும். நாடாளுமன்றத்தின் ஒவ்வொரு அவையிலும், அவையின் ஒட்டுமொத்த உறுப்பினர்களில் பெரும்பான்மையான உறுப்பினர்கள் மற்றும் அவைக்கு வந்து, வாக்களித்தவர்களில் 3 ல் 2 பங்குக்கு குறையாமல் மசோதாவிற்கு ஆதரவாக வாக்களித்தால் மட்டுமே, குடியரசுத்தலைவரின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட வேண்டும். குடியரசுத்தலைவர் ஒப்புதல் அளித்தபின் மசோதா திருத்தப்பட்டச் சொற்களுடன் அரசியலமைப்பில் ஏற்றுக்கொள்ளப்படும். நாடாளுமன்றத்தால் மட்டுமே அரசியலமைப்பு சட்டத் திருத்தத்தைக் கொண்டுவரமுடியும். மாநில சட்ட மன்றத்தால் அரசியலமைப்பில் எந்தவொரு சட்டத்திருத்தத்தையும் கொண்டுவர முடியாது.

### அரசியலமைப்பு சட்ட திருத்தத்தின் வகைகள்

அரசியலமைப்பின் 368வது சட்டப்பிரிவு மூன்று வகைகளில் அரசியலமைப்புச் சட்டத்திருத்தங்களைச் செய்ய வழிவகுக்கிறது.

1. நாடாளுமன்றத்தின் சாதாரண அறுதிப் பெரும்பான்மை மூலம் திருத்தப்படுதல்.
2. நாடாளுமன்றத்தின் சிறப்பு அறுதிப் பெரும்பான்மை மூலம் திருத்தப்படுதல்.
3. நாடாளுமன்றத்தின் சிறப்பு அறுதிப் பெரும்பான்மையுடன் பாதிக்கும் மேற்பட்ட மாநில சட்டமன்றங்களின் ஒப்புதலைப் பெறுவதன் மூலம் திருத்தப்படுதல்.

**உங்களுக்குத் தெரியுமா?**

அரசியலமைப்பின் 42வது சட்டத்திருத்தம் 'குறு அரசியலமைப்பு' என அறியப்படுகிறது.

## 1.13 அரசியலமைப்பு சீர்திருத்தக் குழுக்கள்

அரசியலமைப்பு செயல்பாடு குறித்து ஆய்வு செய்ய 2000ஆம் ஆண்டில் இந்திய அரசு ஒரு தீர்மானத்தின் படி திரு M.N. வெங்கடாசலய்யா தலைமையில் அரசியலமைப்புச் சட்ட செயல்பாட்டிற்கான தேசிய சீராய்வு ஆணையம் ஒன்றை அமைத்தது.

அரசின் பல்வேறு நிலைகள், அவற்றிற்கிடையேயான தொடர்பு மற்றும் பங்களிப்புகள் குறித்துப் புதிய நோக்கத்தோடு ஆராய ஏப்ரல் 2007ஆம் ஆண்டு மூன்று உறுப்பினர்களைக் கொண்ட M.M. பூஞ்சி தலைமையில் அப்போதைய அரசு ஓர் ஆணையத்தை அமைத்தது.

### பாடச்சுருக்கம்

- அமைச்சரவை திட்டக்குழு 1946ன் கீழ் அமைக்கப்பட்ட அரசியல் நிர்ணய சபையால் இந்திய அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்டது.
- இந்தியா ஒரு இறையாண்மை மிக்க, சமதர்ம, சமயச்சார்பற்ற, ஜனநாயக, குடியரசு என இந்திய அரசியலமைப்பின் முகவுரை கூறுகிறது.
- 'சிட்டிசன்' என்ற சொல் 'சிவிஸ்' என்ற இலத்தின் சொல்லிலிருந்து பெறப்பட்டது. இதன் பொருள் ஒரு நகர அரசில் வசிப்பவர் என்பதாகும்.
- டாக்டர். B.R. அம்பேத்கரின் கூற்றுப்படி 32வது சட்டப்பிரிவு 'அரசியலமைப்பின் இதயம் மற்றும் ஆன்மா' ஆகும்.
- 2004ல் இந்திய அரசு மொழிகளை வகைப்படுத்த முடிவு செய்து புதிய வகைகளாக செம்மொழிகளை அறிவித்தது.



10th_Civics_Unit 1_TM.indd 260 24-03-2020 12:38:17

## கலைச்சொற்கள்

| | | |
|---|---|---|
| முகவுரை | **Preamble** | the introduction to the constitution of India |
| சமயச் சார்பற்ற அரசு | **Secular state** | a state which protects all religions equally |
| பாகுபாடு | **Discrimination** | unfair treatment of a person or group |
| நீதிப்பேராணை | **Writ** | written command of court |
| இறையாண்மை | **Sovereignty** | supreme power or authority |
| பாரம்பரியம் | **Heritage** | something handed down from one's ancestors |
| தன்னாட்சி | **Autonomy** | independence in one's thoughts or actions |
| பிரகடனம் | **Proclamation** | an announcement |

## பயிற்சி

8I3L9M

### I சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்

1. கீழ்காணும் வரிசையில் 'முகவுரை' பற்றிய சரியான தொடர் எது?
   அ) குடியரசு, ஜனநாயக, சமயச் சார்பற்ற, சமதர்ம, இறையாண்மை.
   ஆ) இறையாண்மை, சமதர்ம, சமயச் சார்பற்ற, குடியரசு, ஜனநாயக.
   இ) இறையாண்மை, குடியரசு, சமயச் சார்பற்ற, சமதர்ம, ஜனநாயக.
   ஈ) இறையாண்மை, சமதர்ம, சமயச் சார்பற்ற, ஜனநாயக, குடியரசு.

2. இந்திய அரசியலமைப்பின் முகவுரை எத்தனை முறை திருத்தப்பட்டது?
   அ) ஒரு முறை ஆ) இரு முறை
   இ) மூன்று முறை ஈ) எப்பொழும் இல்லை

3. ஒரு வெளிநாட்டவர், கீழ்க்காணும் எதன் மூலம் இந்திய குடியுரிமை பெறமுடியும்?
   அ) வம்சாவளி ஆ) பதிவு
   இ) இயல்புரிமை ஈ) மேற்கண்ட அனைத்தும்.

4. மாறுபட்ட ஒன்றைக் கண்டுபிடி.
   அ) சமத்துவ உரிமை
   ஆ) சுரண்டலுக்கெதிரான உரிமை
   இ) சொத்துரிமை
   ஈ) கல்வி மற்றும் கலாச்சார உரிமை

5. கீழ்க்காண்பவற்றில் ஒன்று, அடிப்படை உரிமையைப் பயன்படுத்துவதற்கு உதாரணம் இல்லை.
   அ) கர்நாடகாவிலிருந்து, கேரளா பண்ணைகளில் வேலையாட்கள் பணிசெய்தல்
   ஆ) கிறித்துவ சமயக்குழு, தொடர்ச்சியாக, பள்ளிகளை அமைத்தல்
   இ) ஆண், பெண் இருபாலரும் அரசுப்பணிகளுக்கு சம ஊதியம் பெறுதல்
   ஈ) பெற்றோர்களின் பூர்வீக சொத்துகள் அவர்களது பிள்ளைகளுக்குச் செல்லுதல்

6. பின்வருவனவற்றுள் எந்த உரிமை டாக்டர். B.R. அம்பேத்கர் அவர்களால் 'இந்திய அரசியலமைப்பின் இதயம் மற்றும் ஆன்மா' என விவரிக்கப்பட்டது?
   அ) சமய உரிமை
   ஆ) சமத்துவ உரிமை
   இ) அரசியலமைப்புக்குட்பட்டு தீர்வு காணும் உரிமை
   ஈ) சொத்துரிமை

7. அடிப்படை உரிமைகள் எவ்வாறு நிறுத்திவைக்கப்பட முடியும்?
   அ) உச்சநீதி மன்றம் விரும்பினால்
   ஆ) பிரதம மந்திரியின் ஆணையினால்
   இ) தேசிய அவசரநிலையின் போது குடியரசு தலைவரின் ஆணையினால்
   ஈ) மேற்கண்ட அனைத்தும்



10th_Civics_Unit 1_TM.indd 261 24-03-2020 12:38:17

8. நமது அடிப்படை கடமைகளை ___________ இடமிருந்து பெற்றோம்.
   அ) அமெரிக்க அரசியலமைப்பு
   ஆ) கனடா அரசியலமைப்பு
   இ) ரஷ்யா அரசியலமைப்பு
   ஈ) ஐரிஷ் அரசியலமைப்பு

9. எந்த பிரிவின் கீழ் நிதிநிலை அவசரநிலையை அறிவிக்க முடியும்?
   அ) சட்டப்பிரிவு 352 ஆ) சட்டப்பிரிவு 356
   இ) சட்டப்பிரிவு 360 ஈ) சட்டப்பிரிவு 368

10. எந்தக் குழுக்கள் / கமிஷன்கள் மத்திய–மாநில உறவுகள் பற்றி பரிந்துரை செய்தன?
   1. சர்க்காரியா குழு
   2. ராஜமன்னார் குழு
   3. M.N. வெங்கடாசலையா குழு
   கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளிலிருந்து சரியான விடையைத் தேர்ந்தெடு
   அ) 1, 2 & 3 ஆ) 1 & 2
   இ) 1 & 3 ஈ) 2 & 3

## II கோடிட்ட இடத்தை நிரப்புக

1. முதன் முதலில் அரசியலமைப்பு எனும் கொள்கை ___________ ல் தோன்றியது.
2. அரசியல் நிர்ணய சபையின் தற்காலிக தலைவராக ______ தேர்ந்தெடுக்கப்பட்டார்.
3. இந்திய அரசியலமைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்ட நாள் மற்றும் ஆண்டு ___________
4. ___________ பேராணைகள் சட்டப்பிரிவு 32இல் குறிப்பிடப்படுகின்றன.
5. இந்திய குடிமக்களுக்கு அடிப்படை கடமைகள் ___________ பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ளன.

## III பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| 1. | குடியுரிமைச் சட்டம் | – | ஜவகர்லால் நேரு |
| 2. | முகவுரை | – | 42வது அரசியலமைப்புச் சட்டத்திருத்தம் |
| 3. | குறு அரசியலமைப்பு | – | 1955 |
| 4. | செம்மொழி | – | 1962 |
| 5. | தேசிய அவசரநிலை | – | தமிழ் |

## IV குறுகிய விடை தருக

1. அரசியலமைப்பு என்றால் என்ன?
2. குடியுரிமை என்பதன் பொருள் என்ன?
3. இந்திய அரசியலமைப்பால் வழங்கப்படும் அடிப்படை உரிமைகளை பட்டியலிடுக.
4. நீதிப்பேராணை (Writ) என்றால் என்ன?
5. இந்தியாவின் செம்மொழிகள் எவை?
6. தேசிய அவசரநிலை என்றால் என்ன?
7. மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு இடையேயான உறவுகளை மூன்று தலைப்புகளில் பட்டியலிடுக.

## V விரிவான விடை தருக

1. இந்திய அரசியலமைப்பின் சிறப்புக் கூறுகளை விளக்குக.
2. அடிப்படை உரிமைகளைக் குறிப்பிடுக.
3. அரசியலமைப்புக்குட்பட்டு தீர்வு காணும் உரிமை பற்றி எழுதுக.
4. அடிப்படை உரிமைகளுக்கும், அரசு நெறிமுறையுறுத்தும் கோட்பாடுகளுக்கும் இடையேயான வேறுபாடுகளைக் குறிப்பிடுக.

## VI மாணவர் செயல்பாடு

1. இந்திய அரசியலமைப்பு நிர்ணய சபையின் உறுப்பினர்கள் மற்றும் அவர்களது சமூக பின்புலத்தைப் பற்றிய தகவல்களைச் சேகரி.
2. அரசியலமைப்பு வரைவுக்குழுவின் உறுப்பினர்களது படங்கள் மற்றும் அவர்களது சமூக பின்புலத்தைப் பற்றிய தகவல்களைச் சேகரி.

## மேற்கோள் நூல்கள்


1. D.D. Basu - Introduction of the Constitution of India, S.C. Sarkar & Sons (Private) Ltd, 1982.
2. PM Bakshi - The Constitution of India, Universal Law Publishing - an imprint of LexisNexis, 2018.


## இணையதள வளங்கள்

1. https://www.india.org/
2. https://www.constitution.org/cons/india/p03.html

# அலகு – 2

## நடுவண் அரசு




### கற்றலின் நோக்கங்கள்


- குடியரசுத் தலைவர் மற்றும் துணைக் குடியரசுத் தலைவர் ஆகியோரின் அதிகாரங்களைப் பற்றி அறிதல்
- பிரதம அமைச்சர் மற்றும் அமைச்சரவை பற்றி அறிதல்
- மக்களவை மற்றும் மாநிலங்களவை பற்றி புரிந்துகொள்ளுதல்
- உச்ச நீதிமன்றம் பற்றி அறிதல்

TWW4HR

### அறிமுகம்

இந்திய நாட்டின் உயர்ந்த அரசாங்க அமைப்பு நடுவண் அரசு ஆகும். இதன் தலைமையகம் புதுதில்லியில் அமைந்துள்ளது. இந்திய அரசியலமைப்பின் பகுதி Vஇல் 52 முதல் 78 வரையிலான சட்டப்பிரிவுகள் நடுவண் அரசின் நிர்வாகம் பற்றி குறிப்பிடுகின்றன. இந்திய அரசியலமைப்பை உருவாக்கியவர்கள் இந்தியாவின் பரந்த மற்றும் பன்முகத் தன்மையைக் கருத்தில் கொண்டு இந்தியாவிற்கு கூட்டாட்சி முறையிலான அரசை வழங்கியுள்ளனர்.


நடுவண் அரசு மூன்று அங்கங்களைக் கொண்டது. அவை நிர்வாகம், சட்டமன்றம், நீதித்துறை ஆகியனவாகும். நடுவண் நிர்வாகம்



என்பது குடியரசுத் தலைவர், துணைக் குடியரசுத் தலைவர், பிரதம அமைச்சரைத் தலைவராகக் கொண்ட அமைச்சரவைக் குழு மற்றும் இந்திய அரசின் தலைமை வழக்குரைஞர் ஆகியோரை உள்ளடக்கியது ஆகும். நடுவண் சட்டமன்றமானது நாடாளுமன்றம் என்றழைக்கப்படுகிறது. இது இரண்டு அவைகளைக் கொண்டது. அவை மாநிலங்களவை (ராஜ்ய சபா) மற்றும் மக்களவை (லோக் சபா) ஆகியனவாகும். நடுவண் நீதித்துறை உச்சநீதிமன்றத்தைக் கொண்டுள்ளது.

## 2.1 இந்தியக் குடியரசுத் தலைவர்

நடுவண் அரசின் நிர்வாகத் தலைவர் குடியரசுத் தலைவர் ஆவார். அவர் பெயரளவில் நிர்வாக அதிகாரம் பெற்றவர் ஆவார். அவர் இந்தியாவின் முதல் குடிமகன் ஆவார். அவர் முப்படைகளின் தலைமை தளபதியாகச் செயல்படுகிறார். அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 53ன் படி குடியரசுத் தலைவர் நேரடியாகவோ அல்லது அவருடைய சார்நிலை அலுவலர்கள் மூலமாகவோ நடுவண் அரசின் நிர்வாக அதிகாரங்களை அரசியலமைப்பின்படி செயல்படுத்துகிறார்.



டாக்டர். ராஜேந்திர பிரசாத்
(முதல் குடியரசுத் தலைவர்)

### தேர்தலில் போட்டியிடுவதற்கான தகுதிகள்

- இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும்.
- 35 வயது பூர்த்தி அடைந்தவராக இருத்தல் வேண்டும்.
- நடுவண் அரசிலோ, மாநில அரசிலோ அல்லது உள்ளாட்சி அமைப்புகளிலோ ஊதியம் பெறும் பதவியில் இருத்தல் கூடாது.
- மக்களவை உறுப்பினராவதற்கான தகுதியினைப் பெற்றிருத்தல் வேண்டும்.
- அவரின் பெயரைக் குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் வாக்காளர் குழுமத்திலுள்ள பத்து வாக்காளர்கள் முன்மொழியவும் மேலும் பத்து வாக்காளர்கள் வழிமொழியவும் வேண்டும்.

குடியரசுத் தலைவர் பாராளுமன்ற உறுப்பினராகவோ அல்லது சட்டமன்ற உறுப்பினராகவோ பதவி வகிக்கக் கூடாது. ஒருவேளை பதவி வகிக்கும் பட்சத்தில் குடியரசுத் தலைவராக அவர் பதவி ஏற்கும் நாளில் அப்பதவி காலியானதாகக் கருதப்படும்.

**உங்களுக்குத் தெரியுமா?**

புதுதில்லியில் உள்ள ராஷ்டிரபதி பவன் – குடியரசுத் தலைவரின் இல்லம் ஆகும். அவருடைய இல்லம் மற்றும் அலுவலகம் இரண்டும் ஒரே கட்டடத்தில் அமைந்துள்ளன. இருந்த போதிலும் அவருக்கு இருப்பிடத்துடன் கூடிய அலுவலகங்கள் மேலும் இரண்டு இடங்களில் உள்ளன. அங்கு வருடத்திற்கு ஒரு முறை சென்று தன்னுடைய அலுவலக பணிகளை அவர் மேற்கொள்கிறார். அவைகள் சிம்லாவில் உள்ள ரிட்ரீட் கட்டடம் (The Retreat Building) மற்றும் ஹைதராபாத்தில் உள்ள ராஷ்டிரபதி நிலையம் ஆகும். இவைகளில் ஒன்று வடக்கிலும் மற்றொன்று தெற்கிலும் அமைந்துள்ளது. இது நாட்டின் ஒற்றுமையையும், மக்களின் பல்வேறுபட்ட கலாச்சாரத்தின் ஒற்றுமையையும் பறைசாற்றுகின்றது.

### குடியரசுத் தலைவருக்கானத் தேர்தல்

குடியரசுத் தலைவர், ஒற்றை மாற்று வாக்கு மூலம் விகிதாச்சார பிரதிநிதித்துவத்தின் படி வாக்காளர் குழுமத்தால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

வாக்காளர் குழுமம் என்பது மாநிலங்களவை மற்றும் மக்களவையின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், அனைத்து மாநில சட்டமன்ற உறுப்பினர்கள், தேசிய தலைநகர் டெல்லி மற்றும் புதுச்சேரியின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் ஆகியோரை உள்ளடக்கியதாகும். குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவருக்கு உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி பதவியேற்பு உறுதிமொழி செய்து வைக்கிறார். குடியரசுத் தலைவரின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகளாகும். அவர் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட தகுதி உடையவர் ஆவார்.

### குடியரசுத் தலைவரின் அதிகாரங்கள்

#### நிர்வாக அதிகாரங்கள்

அரசியலமைப்பு சட்டப்பிரிவு 77ன் படி நடுவண் அரசின் ஒவ்வொரு நிர்வாக நடவடிக்கையும் குடியரசுத் தலைவரின் பெயராலேயே மேற்கொள்ளப்பட வேண்டும்.

பிரதம அமைச்சரையும், மற்ற அமைச்சர்களையும் குடியரசுத் தலைவர் நியமிக்கிறார். அவர் பிரதம அமைச்சரின் ஆலோசனைப்படி அமைச்சரவை உறுப்பினர்களுக்கு துறைகளை ஒதுக்கீடு செய்கிறார். இந்தியாவின் மிக முக்கிய பதவிகளான மாநில ஆளுநர்கள், உச்ச நீதிமன்ற மற்றும் உயர் நீதிமன்ற தலைமை நீதிபதிகள், இதர நீதிபதிகள், இந்திய அரசின் தலைமை வழக்குரைஞர், தலைமைக் கணக்கு

தணிக்கையாளர், இந்தியத் தலைமை தேர்தல் ஆணையர் மற்றும் இரண்டு தேர்தல் ஆணையர்கள், நடுவண் அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர் மற்றும் இதர உறுப்பினர்கள், மற்ற நாடுகளுக்கான தூதர்கள் மற்றும் உயர் ஆணையர்கள் ஆகியோரை குடியரசுத் தலைவர் நியமனம் செய்கிறார்.

### சட்டமன்ற அதிகாரங்கள்

பொதுத் தேர்தலுக்குப் பின்னர் நாடாளுமன்றத்தின் புதிய கூட்டத்தொடரை இவர் உரையாற்றி துவக்கி வைக்கிறார். மேலும் ஒவ்வொரு ஆண்டின் நாடாளுமன்றத்தின் முதல் கூட்டம் இவருடைய உரையுடன் துவங்குகிறது. குடியரசுத் தலைவர் ஆண்டுக்கு இரண்டுமுறை நாடாளுமன்றத்தைக் கூட்டுகிறார்.

அவர் நாடாளுமன்றத்தின் எந்தவொரு அவையிலும் ஒரு சட்ட மசோதா நிலுவையில் இருந்தாலும் அது குறித்து செய்தி அனுப்பலாம். குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்ற பின்னரே அனைத்து மசோதாக்களும் சட்டமாகின்றன. நிதி மசோதாவைக் குடியரசுத் தலைவரின் ஒப்புதல் இன்றி நாடாளுமன்றத்தில் அறிமுகம் செய்யமுடியாது. நாடாளுமன்றத்தின் இரு அவைகளையோ அல்லது ஏதேனும் ஒரு அவையின் கூட்டத்தையோ குடியரசுத்தலைவர் முடிவுக்குக் கொண்டுவரலாம். மக்களவையின் ஐந்து ஆண்டுகாலம் முடியும் முன்னரே அதனைக் கலைக்கும் அதிகாரமும் இவருக்கு உண்டு.

கலை, இலக்கியம், அறிவியல், விளையாட்டு, மற்றும் சமூகப் பணி ஆகிய துறைகளில் சிறந்து விளங்கும் 12 நபர்களைக் குடியரசுத் தலைவர் மாநிலங்களவைக்கு நியமிக்கிறார். மேலும் ஆங்கிலோ–இந்தியர் சமூகத்தைச் சேர்ந்த 2 நபர்களை மக்களவையில் போதுமான பிரதிநிதித்துவம் இல்லை என்று கருதும்பட்சத்தில் குடியரசுத் தலைவர் நியமிக்கிறார்.

### நிதி அதிகாரங்கள்

நடுவண் அரசின் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தினைக் குடியரசுத் தலைவரின் அனுமதி பெற்ற பின்னரே நடுவண் நிதி அமைச்சர் மக்களவையில் சமர்ப்பிக்கிறார். இந்திய அரசியலமைப்புச் சட்டம் இந்திய அவசரகால நிதியினைக் குடியரசுத் தலைவரிடம் அளித்துள்ளது. அவரின் பரிந்துரை இன்றி எந்தவொரு மானியக் கோரிக்கையையும் கொண்டுவர முடியாது. இந்தியாவின் அவசர நிதியிலிருந்து அரசின் எதிர்பாராத செலவினங்களை மேற்கொள்ளும் அதிகாரம் அவருக்கு மட்டுமே உண்டு. ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளுக்கும் ஒரு நிதிக்குழுவினை அமைக்கிறார்.

### நீதி அதிகாரங்கள்

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 72–வது சட்டப்பிரிவு நீதிமன்றத்தால் தண்டனை பெற்ற ஒருவரின் தண்டனையைக் குறைக்கவும், ஒத்திவைக்கவும், தண்டனையிலிருந்து விடுவிக்கவும், மன்னிப்பு வழங்கவும் குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் வழங்கியுள்ளது.

### இராணுவ அதிகாரங்கள்

நடுவண் அரசின் பாதுகாப்புப் படையின் தலைமைத் தளபதி என்ற அதிகாரத்தைச் சட்டப்பிரிவு 53(2) குடியரசுத் தலைவருக்கு வழங்கியுள்ளது. அவர் சட்டத்தின்படி இராணுவத்தை வழிநடத்துகிறார்.

### இராஜதந்திர அதிகாரங்கள்

வெளிநாடுகளுக்கான இந்திய தூதர்களைக் குடியரசுத் தலைவர் நியமிப்பதோடு மட்டுமல்லாமல் அவர் இந்தியாவுக்கான வெளிநாட்டுத் தூதர்களையும் வரவேற்கிறார். வெளிநாடுகளுக்கான அனைத்து உடன்படிக்கைகளும் ஒப்பந்தங்களும் குடியரசுத் தலைவரின் பெயராலேயே நடைபெறுகின்றன.

### நெருக்கடி நிலை அதிகாரங்கள்

நெருக்கடி நிலையை அறிவிக்கும் அதிகாரம் 352வது சட்டப்பிரிவிலும், மாநில அரசை கலைக்கும் அதிகாரம் 356வது சட்டப்பிரிவிலும், நிதி நெருக்கடியை அறிவிக்கும் அதிகாரம் 360வது சட்டப்பிரிவிலும் உள்ளது.

> கேரளா மற்றும் பஞ்சாப் மாநிலங்களில் அதிகபட்சமாக 9 முறை குடியரசுத் தலைவர் ஆட்சி நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

### குடியரசுத் தலைவர் நீக்கம்

குடியரசுத் தலைவர் தன்னுடைய பணித்துறப்பு கடிதத்தினை துணைக் குடியரசுத் தலைவரிடம் வழங்கலாம். அவர் சட்டப்பிரிவு 61இ ன் படி அரசியலமைப்பை மீறிய குற்றச்சாட்டு நிரூபிக்கப்படுவதன் மூலம் பதவி நீக்கம் செய்யப்படலாம். இவருக்கு எதிரான இக்குற்றச்சாட்டு நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் தீர்மானமாக கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட வேண்டும். மேலும் அவைக்கு வருகை புரிந்தவர்களில் நான்கில் ஒரு பங்கிற்குக் குறையாமல் ஆதரவு தெரிவிக்க வேண்டும். குடியரசுத் தலைவர் தனது பதவிக்காலம் முடிந்தாலும் அவருக்குப் பின் ஒருவர் பதவியேற்கும் வரை அப்பதவியில் தொடரலாம்.



10th_Civics_Unit 2_TM.indd 265 24-03-2020 12:39:24

## 2.2 துணைக் குடியரசுத் தலைவர்



டாக்டர். ராதாகிருஷ்ணன் (முதல் துணைக் குடியரசுத் தலைவர்)

63வது பிரிவின் படி நாட்டின் இரண்டாவது உயர்ந்த பதவியைத் துணைக் குடியரசுத் தலைவர் வகிக்கிறார். அலுவலகமுன்னுரிமையின் படி குடியரசுத் தலைவருக்கு அடுத்த தர நிலையில் இவர் உள்ளார். இப்பதவி அமெரிக்க துணைக் குடியரசுத் தலைவரின் பதவியைப் போன்றது. நாட்டின் அரசாங்க நடவடிக்கைகள் தொடர்ச்சியாக நடைபெற இப்பதவி உருவாக்கப்பட்டுள்ளது.

### தேர்தலில் போட்டியிடுவதற்கான தகுதிகள்

- இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும்.
- 35 வயது பூர்த்தி அடைந்தவராக இருத்தல் வேண்டும்.
- நடுவண் அரசிலோ, மாநில அரசிலோ அல்லது உள்ளாட்சி அமைப்புகளிலோ ஊதியம் பெறும் பதவியில் இருத்தல் கூடாது.
- மாநிலங்களவை உறுப்பினராவதற்கான மற்ற தகுதிகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

### தேர்தல் மற்றும் பதவிக்காலம்

சட்டப்பிரிவு 66(1)இன் படி துணைக் குடியரசுத் தலைவர் மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படாமல் குடியரசுத் தலைவர் போல மறைமுகத் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறார். துணைக் குடியரசுத் தலைவரின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள். பதவிக்காலம் முடியும் முன்னரே பணித்துறப்பு, இறத்தல், பணிநீக்கம் ஆகிய காரணங்களால் அவரது பதவி முடிவுக்கு வரலாம். அவர் மீண்டும் துணைக் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கும் தகுதி உடையவராவார். மேலும் புதிய துணைக் குடியரசு தலைவர் தேர்ந்தெடுக்கப்படும் வரை மாநிலங்களவையின் துணைத் தலைவர் துணைக் குடியரசுத் தலைவரின் பணிகளைச் செய்வார்.

FBFQP8

உங்களுக்குத் தெரியுமா?

குடியரசுத் தலைவர் மற்றும் துணைக் குடியரசுத் தலைவர் பதவிகள் ஒரே சமயத்தில் காலியாக இருக்கும் பட்சத்தில் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி குடியரசுத் தலைவரின் பணிகளைச் செயலாற்றுவார். 1969ஆம் ஆண்டு இத்தகைய ஒரு நிகழ்வின் போது உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி M.ஹிதயதுல்லா குடியரசுத் தலைவராக நியமிக்கப்பட்டார்.

### துணைக் குடியரசுத் தலைவர் பதவி நீக்கம்

மக்களவையின் ஒப்புதலுடன், மாநிலங்களவையில் பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் மூலம் துணைக் குடியரசுத் தலைவரைப் பதவியிலிருந்து நீக்கலாம். இத்தகைய தீர்மானம் கொண்டு வர குறைந்தபட்சம் 14 நாட்களுக்கு முன்னரே துணைக் குடியரசுத் தலைவருக்கு ஒரு அறிவிப்பை வழங்க வேண்டும்.

### துணைக் குடியரசுத் தலைவரின் செயல்பாடுகள்

துணைக் குடியரசுத் தலைவர் மாநிலங்களவையின் தலைவராகச் செயல்படுகிறார்.

- மாநிலங்களவையின் நடவடிக்கைகளை முறைப்படுத்துகிறார்.
- மாநிலங்களவையின் மரபு ஒழுங்கு முறைகளைத் தீர்மானிக்கிறார்.
- மாநிலங்களவையின் தீர்மானம் அல்லது கேள்விகளை அனுமதிப்பதை முடிவு செய்கிறார்.
- மிகப் பெரிய பிரச்சனையின்போது அவையின் நடவடிக்கைகளை அவர் ஒத்திவைக்கவும் அல்லது முடிவுக்குக் கொண்டு வரவும் செய்கிறார்.
- குடியரசுத் தலைவர் உடல்நலக் குறைவால் தனது கடமைகளை ஆற்ற இயலாத போதும் அல்லது நாட்டில் இல்லாத போதும் துணைக் குடியரசுத் தலைவர், அதிகபட்சமாக ஆறு மாத காலத்திற்கு அவரின் பணிகளைக் கவனிப்பார்

**முடிவு வாக்கு (Casting vote)**

மாநிலங்களவையில் சட்ட மசோதாவின் மீது நடைபெற்ற வாக்கெடுப்பு சமநிலையில் இருக்கும் பட்சத்தில் அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 100இன் படி துணைக் குடியரசுத் தலைவர் வாக்கு அளிக்கலாம். இது சட்ட மசோதாவின் ஒப்புதலுக்கு ஒரு வாக்கு மட்டுமே தேவை என்ற நிலையைக் குறிக்கிறது. அவருடைய முடிவுக்கு எதிர்ப்பு தெரிவிக்க எவருக்கும் உரிமை இல்லை.

## 2.3 பிரதம அமைச்சர்

அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 74(1) குடியரசுத் தலைவருக்கு உதவிடவும், அறிவுரை வழங்கிடவும் பிரதம அமைச்சரைத் தலைவராகக் கொண்ட ஒரு




10th_Civics_Unit 2_TM.indd 266 24-03-2020 12:39:24

நடுவண் அமைச்சரவைக் குழு இருக்கும் எனக் குறிப்பிடுகிறது.

இந்தியாவின் பிரதம அமைச்சர் பதவியானது வெஸ்மின்ஸ்டர் அரசியலமைப்பு ஜனநாயக முறையில் இருந்து ஏற்றுக் கொள்ளப்பட்டது. (இங்கிலாந்தின் நாடாளுமன்றம் வெஸ்ட்மின்ஸ்டர் அரண்மையில் அமைந்துள்ளதால் அவர்களின் நாடாளுமன்ற முறை வெஸ்ட்மினிஸ்டர் முறை என்றழைக்கப்படுகிறது).

மக்களவையின் பெரும்பான்மைக் கட்சியின் தலைவரை பிரதம அமைச்சராகக் குடியரசுத் தலைவர் நியமிக்கிறார். மற்ற அமைச்சர்களை பிரதம அமைச்சரின் ஆலோசனையின்படி குடியரசுத் தலைவர் நியமிக்கிறார். மக்களவையில் எந்த ஒரு கட்சிக்கும் தனிப்பெரும்பான்மை பலம் இல்லையெனில் குடியரசுத் தலைவர் எந்தக்கட்சி அமைச்சரவையை அமைக்க முடியுமோ அக்கட்சியின் தலைவரை அவர் அழைத்து அரசு அமைக்கக் கூறலாம். குடியரசுத் தலைவர் அமைச்சர்களுக்குப் பதவிப் பிரமாணமும், இரகசியக்காப்புப் பிரமாணமும் செய்து வைக்கின்றார். நாடாளுமன்ற உறுப்பினராக இல்லாதவர் கூட அமைச்சராக நியமிக்கப்படலாம். ஆனால் அவர் 6 மாதங்களுக்குள் நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும். அமைச்சர்கள் தனிப்பட்ட முறையிலும், ஒட்டு மொத்தமாகவும் மக்களவைக்கு பொறுப்புடையவர்களாவர்.



ஜவகர்லால் நேரு
(முதல் பிரதம அமைச்சர்)

### பிரதம அமைச்சரின் செயல்பாடுகளும், கடமைகளும்

அரசியலமைப்பு சட்டப்பிரிவு 78 பிரதம அமைச்சரின் கடமைகளைப் பற்றிக் குறிப்பிடுகிறது.

- பிரதம அமைச்சர் அமைச்சர்களின் நிலையை அறிந்து அவர்களுக்கு அரசின் பல்வேறு துறைகளை ஒதுக்கீடு செய்கிறார்.
- தான் தலைமை வகிக்கும், அமைச்சரவைக் கூட்டத்தின் தேதி, நிகழ்ச்சி நிரல் (Agenda) குறித்து முடிவு செய்வார்.
- காபினெட் அமைச்சரவை கூட்டம் நடைபெறாத பொழுது பிரதம அமைச்சர் தனது மூத்த சகாக்கள் இருவர் அல்லது மூவரை இயல்பாகக் கலந்தாலோசிக்கலாம்.
- பிரதம அமைச்சர் பல்வேறு துறைகளின் பணிகளை மேற்பார்வையிடுகிறார்.
- நடுவண் அரசின் விவகாரங்கள் மற்றும் சட்டத்திற்கான முன்மொழிவுகள் போன்ற அமைச்சரவையின் அனைத்து முடிவுகளையும் குடியரசுத் தலைவருடன் விவாதிக்கிறார்.
- பிரதம அமைச்சர் என்பவர் குடியரசுத் தலைவருக்கும், அமைச்சரவைக்கும் இடையே பாலமாக செயல்படுகிறார்.
- பிரதம அமைச்சர் நாட்டின் உண்மையான தலைவராவார். அவர் நாட்டின் முக்கிய செய்தித் தொடர்பாளராகவும் செயல்படுகிறார்.
- சர்வதேச மாநாடுகளான காமன்வெல்த், அணிசேரா நாடுகளின் உச்சி மாநாடு, சார்க் நாடுகளின் மாநாடு ஆகியவற்றில் இந்திய நாட்டின் பிரதிநிதியாகப் பிரதமர் பங்கு கொள்கிறார்.

### அமைச்சரவைக் குழு

தேர்தலுக்குப் பின்னர் பிரதம அமைச்சரின் ஆலோசனையின்படி குடியரசுத் தலைவர் அமைச்சரவையை நியமிக்கிறார். ஒட்டு மொத்த மக்களவை உறுப்பினர்களில் 15% மட்டுமே அமைச்சரவை உறுப்பினர்களாக (பிரதம அமைச்சர் உட்பட) இருத்தல் வேண்டும் என இந்திய அரசியலமைப்புச் சட்டம் வரையறுத்துள்ளது.

### நடுவண் அமைச்சர்களின் வகைகள்

நடுவண் அமைச்சர்கள் மூன்று தரநிலைகளில் வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.

1. காபினெட் (அ) ஆட்சிக்குழு அமைச்சர்கள்
2. இராசாங்க அமைச்சர்கள்
3. இணை அமைச்சர்கள்

#### காபினெட் அமைச்சர்கள்

நிர்வாகத்தின் மையக் கருவை உருவாக்கும் மூத்த அமைச்சர்களின் முறைசாரா அமைப்பே காபினெட் ஆகும். காபினெட் அரசாங்கத்தின் பாதுகாப்பு, நிதி, வெளியுறவுக் கொள்கைகள், உள்துறை ஆகியவற்றின் முக்கிய முடிவுகளை எடுக்கிறது.

#### இராசாங்க அமைச்சர்கள்

அமைச்சரவை குழுவின் இரண்டாவது வகையினரே இராசாங்க அமைச்சர்கள் ஆவர். அவர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட துறைகளின் பொறுப்பு அமைச்சராக செயல்படுகின்றனர். ஆனால் அழைப்பு விடுத்தால் மட்டுமே இவர்கள் அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்து கொள்வர்.

#### இணை அமைச்சர்கள்

அமைச்சரவையில் மூன்றாவதாக, இணை அமைச்சர்கள் உள்ளனர். காபினெட் அமைச்சர்கள் (அ) இராசாங்க அமைச்சர்களுக்கு ஒப்படைக்கப்பட்ட கடமைகளைச் செயலாற்றுவதில் இவர்கள் உதவி புரிகின்றனர்.

## 2.4 இந்திய நாடாளுமன்றம்

நடுவண் அரசின் சட்டம் இயற்றும் அங்கமாக நாடாளுமன்றம் திகழ்கிறது. இந்திய நாடாளுமன்றம் மூன்று பகுதிகளைக் கொண்டது. அவைகள் 1. குடியரசுத் தலைவர் 2. ராஜ்ய சபா (மாநிலங்களவை) 3. லோக்சபா (மக்களவை). நாடாளுமன்றமானது மாநிலங்களவை என்னும் மேலவையையும் மக்களவை என்னும் கீழவையையும் கொண்டுள்ளதால் இது ஈரவை சட்டமன்றம் என்றும் அழைக்கப்படுகிறது.



நாடாளுமன்றம்

### மாநிலங்களவை

ராஜ்யசபா என்றழைக்கப்படும் மாநிலங்களவை 250 உறுப்பினர்களைக் கொண்டது. இதில் 238 உறுப்பினர்கள், மாநில சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் யூனியன் பிரதேச சட்டமன்ற உறுப்பினர்களால் மறைமுகத் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

இலக்கியம், அறிவியல், விளையாட்டு, கலை மற்றும் சமூக சேவை ஆகிய துறைகளில் சிறந்த அறிவு அல்லது செயல்முறை அனுபவம் கொண்ட 12 உறுப்பினர்களைக், குடியரசுத் தலைவர் நியமனம் செய்கிறார்.

#### மாநிலங்களவை உறுப்பினராவதற்கானத் தகுதிகள்

- இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும்.
- 30 வயது பூர்த்தி அடைந்தவராக இருத்தல் வேண்டும்.
- அரசாங்கத்தில் ஊதியம் பெறும் பதவியில் இருத்தல் கூடாது.
- மனநிலை சரியில்லாதவராகவோ அல்லது பெற்றகடனைத்திருப்பித்தரமுடியாதவராகவோ இருத்தல் கூடாது.
- மக்களவையிலோ (அ) எந்தவொரு சட்டமன்றத்திலோ உறுப்பினராக இருத்தல் கூடாது.

#### மாநிலங்களவை உறுப்பினரின் பதவிக் காலம்

மாநிலங்களவை ஒரு நிரந்தர அவை ஆகும். அதனைக் கலைக்க முடியாது. மாநிலங்களவை உறுப்பினர்களின் பதவிக்காலம் 6 ஆண்டுகளாகும். அதன் உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் ஒவ்வொரு இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு ஓய்வு பெறுகின்றனர். அதனால் ஏற்படும் காலியிடங்கள் புதிய உறுப்பினர்களால் நிரப்பப்படுகின்றன.

துணைக் குடியரசுத் தலைவர் பதவி வழி மாநிலங்களவையின் தலைவராகச் செயல்படுகிறார். மாநிலங்களவையின் துணைத் தலைவர் அதன் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

#### தேர்தல்

தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில சட்டமன்ற உறுப்பினர்களால் (MLA's) ஒற்றை மாற்று வாக்கு மூலம் விகிதாச்சார பிரதிநிதித்துவ முறையில் மாநிலங்களவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இந்த தேர்தல் முறை மறைமுக தேர்தல் எனப்படும். இவர்கள் மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படுவதில்லை.

உங்களுக்குத் தெரியுமா?

**நிதி மசோதா**

நிதி மசோதாவினை திருத்தம் செய்யவோ அல்லது நிராகரிக்கவோ மாநிலங்களவைக்கு அதிகாரம் இல்லை. மக்களவையில் மட்டுமே நிதி மசோதாவினை அறிமுகப்படுத்த முடியும். இம்மசோதா மாநிலங்களவையின் ஒப்புதலுடன் சட்டமாக மாறும். மாநிலங்களவை 14 நாட்களுக்குள் ஒப்புதல் அளிக்கவில்லையெனில், ஒப்புதல் பெறாமலேயே சட்டமாகிவிடும். மாநிலங்களவையின் சட்டத் திருத்தத்திற்கான முன்மொழிவுகளை மக்களவை கருத்தில் கொள்ள வேண்டியதில்லை. எந்த முன்மொழிவுகளையும் மக்களவை நிராகரிக்கலாம்.

### மக்களவை

மக்களவையானது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட இந்திய நாடாளுமன்றத்தின் புகழ்மிக்க அவை ஆகும். மக்களவைக்கு அதிகபட்சமாக தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்கள் 552. அவற்றில் 530 உறுப்பினர்கள் பல்வேறு மாநிலங்களிலிருந்தும், 13 உறுப்பினர்கள் யூனியன் பிரதேசங்களில் இருந்தும் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். ஆங்கிலோ–இந்தியன் சமூகத்திலிருந்து 2 உறுப்பினர்களைக் குடியரசுத் தலைவர் நியமிக்கிறார். தற்சமயம் மக்களவை 545 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

#### மக்களவை உறுப்பினராவதற்கான தகுதிகள்

- இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும்.
- 25 வயதிற்கு குறைவுடையவராய் இருத்தல் கூடாது.



10th_Civics_Unit 2_TM.indd 268 24-03-2020 12:39:24

- அவரது பெயர் நாட்டின் ஏதாவது ஒரு பகுதியின் வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றிருத்தல் வேண்டும்.
- நடுவண் அரசு, மாநில அரசு அலுவலகங்களில் ஊதியம் பெறும் பதவியில் இருத்தல் கூடாது.
- மனநிலை சரியில்லாதவராகவோ அல்லது பெற்ற கடனை திருப்பி செலுத்த இயலாதவராகவோ இருத்தல் கூடாது.

**மக்களவை உறுப்பினர்களின் பதவிக்காலம்**

பொதுவாக, மக்களவை தன்னுடைய முதல் கூட்டத்திலிருந்து ஐந்து ஆண்டுகள் செயல்படும். அதன் காலம் முடிவதற்கு முன் பிரதம அமைச்சரின் ஆலோசனையின்பேரில் குடியரசுத் தலைவர் மக்களவையைக் கலைக்கலாம். இந்திய அரசியலமைப்பின் நெருக்கடி நிலை சட்டத்தின்படி மக்களவையின் நம்பிக்கை வாக்கெடுப்பில் எந்தவொரு கட்சிக்கோ (அ) கூட்டணிக்கோ பெரும்பான்மை இல்லாத பட்சத்தில் குடியரசுத் தலைவர் மக்களவையைக் கலைக்கலாம்.

**மக்களவை தேர்தல்**

மக்கள் தொகையின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட நாடாளுமன்ற தொகுதிகளில் உள்ள மக்களால் நேரடியாக மக்களவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். மக்களவைத் தேர்தலுக்கான ஏற்பாடுகள், மேற்பார்வையிடுதல், நடத்துதல் ஆகிய பணிகளை இந்தியத் தேர்தல் ஆணையம் செய்கிறது.

மக்களவை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதில் 'வயது வந்தோர் வாக்குரிமை' பின்பற்றப்படுகிறது. வாக்காளர்களாகப் பதிவு செய்யப்பட்ட 18 வயது நிரம்பிய இந்தியக் குடிமக்கள் அனைவரும் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க தகுதியுடையவர் ஆவர்.




உலகளாவிய வயது வந்தோர் வாக்குரிமை

**மக்களவையின் செயல்பாடுகள்**

- அனைத்து மசோதாக்களையும் மக்களவையில் அறிமுகப்படுத்தவும், நிறைவேற்றவும் முடியும் (நிதி மசோதா உள்பட).
- குடியரசுத் தலைவர், உச்சநீதிமன்ற நீதிபதிகள் போன்றவர்களின் பதவி நீக்க விவகாரங்களில் பங்கேற்க மாநிலங்களவையைப் போலவே மக்களவையும் அதிகாரம் பெற்றுள்ளது.
- அரசியலமைப்புச் சட்டத்திருத்தத்திற்கான எந்தவொரு மசோதாவை நிறைவேற்றுவதிலும் மாநிலங்களவையைப் போலவே மக்களவையும் சமமான அதிகாரம் பெற்றுள்ளது.
- மக்களவை உறுப்பினர்கள், குடியரசுத் தலைவர், துணைக் குடியரசுத் தலைவர் ஆகியோரைத் தேர்ந்தெடுக்கும் அதிகாரம் பெற்றுள்ளனர்.
- நம்பிக்கையில்லாத் தீர்மானம் லோக்சபாவில் மட்டுமே அறிமுகப்படுத்த முடியும்.

தமிழகத்திலிருந்து நாடாளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்கள்.

- மாநிலங்களவை – 18 உறுப்பினர்கள்
- மக்களவை – 39 உறுப்பினர்கள்

**சபாநாயகர்**

மக்களவையைத் தலைமை ஏற்று நடத்துபவர் சபாநாயகர் ஆவார். அவர் மக்களவை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார். நாடாளுமன்ற மக்களாட்சியில் சபாநாயகரின் பதவி ஒரு முக்கிய இடத்தை வகிக்கிறது. மக்களவை கலைக்கப்பட்டாலும் புதிய சபாநாயகர் தேர்ந்தெடுக்கும் வரை அவர் பதவியில் நீடிப்பார். நாடாளுமன்ற இரு அவைகளின் கூட்டு கூட்டத்திற்குத் தலைமை வகிப்பார். அவர் ஒரு மசோதாவை நிதி மசோதாவா அல்லது சாதாரண மசோதாவா என தீர்மானிக்கும் அதிகாரம் பெற்றுள்ளார். சபாநாயகர் பதவி காலியாக இருக்கும் போதும் அல்லது வருகை புரியாத போதும் துணை சபாநாயகர் மக்களவைக்குத் தலைமை வகிப்பார்.

| நாடாளுமன்றக் கூட்டத் தொடர் | |
|---|---|
| பட்ஜெட் கூட்டத் தொடர் | பிப்ரவரி முதல் மே வரை |
| மழைக் (பருவ) காலக் கூட்டத் தொடர் | ஜூலை முதல் செப்டம்பர் வரை |
| குளிர் காலக் கூட்டத் தொடர் | நவம்பர் மற்றும் டிசம்பர் |

**நாடாளுமன்றத்தின் அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகள்**

- இந்திய நாடாளுமன்றம் சட்டமியற்றுதல், நிர்வாகத்தினை மேற்பார்வையிடுதல், வரவு–செலவு திட்டத்தினை நிறைவேற்றுதல்,



10th_Civics_Unit 2_TM.indd 269 24-03-2020 12:39:25

பொதுமக்கள் குறைகளைப் போக்குதல், மேலும் வளர்ச்சித் திட்டங்கள், சர்வதேச உறவுகள், உள்நாட்டுக் கொள்கைகள் போன்றவைகளை விவாதித்தல் என பல பணிகளைச் செய்கிறது.

- நாடாளுமன்றம் குடியரசுத் தலைவர் மீதான அரசியல் குற்றச்சாட்டுகளை (Impeachment) விசாரிக்கவும், உச்சநீதிமன்ற, உயர்நீதிமன்ற நீதிபதிகள், தலைமை தேர்தல் ஆணையர், இந்தியத் தலைமைக் கணக்கு தணிக்கையாளர் ஆகியோரை அரசியலமைப்புச் சட்ட விதிமுறைகளின்படி பதவி நீக்கம் செய்யவும் அதிகாரம் பெற்றுள்ளது.
- மாநிலங்களின் எல்லைகளை மாற்றி அமைத்திட நாடாளுமன்றதிற்கே அதிகாரம் உண்டு.

## 2.5 இந்திய அரசின் தலைமை வழக்குரைஞர்

இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 76 இந்திய அரசின் தலைமை வழக்குரைஞரை நியமிக்க வழிவகை செய்கிறது. இவர் நாட்டின் உயர்ந்த சட்ட அதிகாரி ஆவார். இவர் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுகிறார். உச்ச நீதிமன்ற நீதிபதியாகத் தேவையான தகுதிகளை இவரும் கொண்டிருக்க வேண்டும். எந்த நேரத்திலும் குடியரசுத் தலைவரால் அவர் பதவியிலிருந்து அகற்றப்படலாம் அல்லது அவர் குடியரசுத் தலைவருக்குப் பதவி விலகல் கடிதத்தை அளித்து பதவி விலகலாம்.

### இந்திய அரசின் தலைமை வழக்குரைஞரின் அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகள்

இவர் குடியரசுத் தலைவரால் குறிப்பிடப்பட்ட சட்ட விவகாரங்கள் மீது இந்திய அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குவார். இந்தியாவில் உள்ள அனைத்து நீதிமன்றங்களிலும் வழக்காடும் உரிமை இவருக்கு உண்டு. நாடாளுமன்ற இரு அவைகளின் செயல்முறைகளிலும் பேசுவதற்கும், பங்கு கொள்ளுவதற்கும் இவருக்கு உரிமை உண்டு. நாடாளுமன்றத்தின் இரு அவையின் கூட்டத்திலோ அல்லது எந்தவொரு கூட்டுக் குழு கூட்டத்திலோ வாக்கு அளிக்கும் உரிமை இன்றி உறுப்பினராக இவர் இடம் பெறுவார். நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு கிடைக்கக்கூடிய அனைத்து சலுகைகளையும், சட்ட விலக்களிப்புகளையும் இவரும் பெறுகிறார்.

## 2.6 நீதித்துறை

நடுவண் அரசாங்கத்தின் மூன்றாவது அங்கம் நீதித்துறை ஆகும். குடிமக்களின் உரிமைகளையும் சுதந்திரத்தையும் பாதுகாப்பதில் நீதித்துறை முக்கிய பங்கு வகிக்கிறது.

### உச்சநீதிமன்றம்

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பாதுகாவலன் உச்சநீதிமன்றம் ஆகும். நடுவண், மாநில அரசுகளின் சட்டமன்ற, நிர்வாகப் பிரிவுகளிலிருந்து நீதித்துறை தன்னாட்சி பெற்று விளங்குகிறது. ஒருங்கிணைந்த நீதித்துறை என்பது நாடு முழுவதும் நீதித்துறையானது ஒற்றை அதிகாரப் படிநிலையைக் கொண்டுள்ளதாகும். குடிமக்களின் உரிமைகளையும், சுதந்திரத்தையும் பாதுகாப்பதில் நீதித்துறை முக்கிய பங்கு வகிக்கிறது



உச்சநீதிமன்றம்




**புதுதில்லியில் அமைந்துள்ள இந்திய உச்சநீதிமன்றம் 1950 ஜனவரி 28ஆம் நாள் துவங்கப்பட்டது. இது 1935ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட கூட்டாட்சி நீதிமன்றத்தைத் தொடர்ந்து உருவாக்கப்பட்டது.**

### உச்ச நீதிமன்றத்தின் அமைப்பு

1950ஆம் ஆண்டு அரசியலமைப்பின் தொடக்கத்தில் ஒரு தலைமை நீதிபதி உட்பட 8 நீதிபதிகளை உச்ச நீதிமன்றம் கொண்டிருந்தது. தற்சமயம் உச்ச நீதிமன்றம் ஒரு தலைமை நீதிபதி உட்பட 34 நீதிபதிகளைக் கொண்டுள்ளது.

### நீதிபதிகள் நியமனம்

இந்திய உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியைக் குடியரசுத் தலைவர் நியமிக்கிறார். மற்ற நீதிபதிகளைத் தலைமை நீதிபதியைத் தலைவராகக் கொண்ட மூத்த நீதிபதிகள் குழுவின் (Collegium) ஆலோசனையுடன் குடியரசுத் தலைவர் நியமிக்கிறார்.

### உச்சநீதிமன்ற நீதிபதிக்கான தகுதிகள்

- அவர் இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும் அவர் ஐந்து ஆண்டுகள் உயர் நீதிமன்ற நீதிபதியாக பணிபுரிந்திருத்தல் வேண்டும்.



10th_Civics_Unit 2_TM.indd 270 24-03-2020 12:39:25

- அவர் பத்து ஆண்டுகள் உயர் நீதிமன்றத்தில் வழக்குரைஞராக செயலாற்றியிருத்தல் வேண்டும்.
- குடியரசுத் தலைவர் பார்வையில் சிறப்பு மிக்க சட்ட வல்லுநராய் இருத்தல் வேண்டும்.

தற்காலிக அடிப்படையில் (ad–hoc basis) உச்ச நீதிமன்ற நீதிபதிகளை நியமிக்க அரசியலமைப்புச் சட்டம் வழிவகை செய்கிறது. உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி உட்பட இதர நீதிபதிகள் 65 வயது வரை பதவியில் நீடிப்பர்.

உச்ச நீதிமன்ற நீதிபதிகள் தங்கள் பதவிக்காலம் முடிவதற்கு முன்பாக குடியரசுத் தலைவரிடம் பதவி விலகல் கடிதத்தை அளித்து பதவி விலகலாம் அல்லது பெருங்குற்றத்தின் மூலம் உண்டான கண்டனத் தீர்மானத்தின் மூலம் உச்ச நீதிமன்ற நீதிபதிகளைப் பதவியிலிருந்து நீக்கும் அதிகாரத்தினை நாடாளுமன்றம் பெற்றுள்ளது. உச்ச நீதிமன்றத்தின் நிரந்தர தலைமையிடம் புதுதில்லியில் உள்ளது. எனினும் இந்தியக் குடியரசுத் தலைவரின் இசைவு பெற்று இந்தியத் தலைமை நீதிபதியின் முடிவின்படி வேறு எந்த மாநிலத்திலும் அல்லது எந்த ஒரு இடத்திலும் இந்நீதிமன்ற அமர்வு அமையலாம்.

## உச்ச நீதிமன்றத்தின் அதிகாரங்களும், பணிகளும்

### (அ) தனக்கேயுரிய நீதி வரையறை

உச்ச நீதிமன்றத்திற்கு நேரடியாக வரும் வழக்குகள் தனக்கேயுரிய நீதி வரையறைக்கு உட்பட்டவை ஆகும். அவைகள்

1. இந்திய அரசிற்கும் ஒரு மாநிலம் அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களுக்கு இடையிலான சிக்கல்கள்
2. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களுக்கிடையிலான சிக்கல்கள்
3. அடிப்படை உரிமைகளை நடைமுறைப் படுத்துவது தொடர்பாக எழும் சிக்கல்கள் ஆகியன உச்ச நீதிமன்றத்தின் தனக்கேயுரிய நீதி வரையறைக்குட்பட்டதாகும்.

அடிப்படை உரிமைகளை நடைமுறைப்படுத்திட நீதிப்பேராணைகளை உச்சநீதிமன்றம் வழங்குகிறது.

### (ஆ) மேல்முறையீட்டு நீதிவரையறை

உச்ச நீதிமன்றமே நாட்டின் இறுதி மேல்முறையீட்டு நீதிமன்றமாகும். மாநில உயர் நீதிமன்றங்கள் உரிமையியல், குற்றவியல் (Civil and Criminal) அரசியலமைப்பு வழக்குகள் மீதான தீர்ப்புகளுக்கு எதிரான மேல்முறையீட்டு வழக்குகளை உச்ச நீதிமன்றம் விசாரிக்கின்றது. அப்படிப்பட்ட வழக்குகளைத் தீர்க்க அரசியலமைப்புச் சட்டப்படி மேலும் சட்டவிளக்கம் தேவையென உயர் நீதிமன்றம் சான்றிதழ் அளித்தால் மட்டுமே அவ்வழக்குகளை உச்ச நீதிமன்றத்தின் முன் கொண்டு செல்ல முடியும்.

### (இ) ஆலோசனை நீதிவரையறை

பொது முக்கியத்துவம் வாய்ந்த எந்தவொரு சட்டம் அல்லது உண்மை மீதான உச்ச நீதிமன்றத்தின் கருத்தினைப் பெற அரசியலமைப்புச் சட்டம் குடியரசுத் தலைவருக்கு அதிகாரத்தினை வழங்குகிறது.

### (ஈ) இதர நீதிவரையறை

- உச்ச நீதிமன்றம் பிறப்பிக்கும் ஆணை இந்தியாவின் அனைத்துப் பகுதியிலுள்ள நீதிமன்றங்களையும் கட்டுப்படுத்தும்.
- குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்று நீதிமன்றத்தின் பொதுவான செயல்முறைகள், வழிமுறைகளை ஒழுங்குபடுத்தும் விதிகளை உருவாக்க உச்சநீதிமன்றத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

### (உ) நீதிப்புனராய்வு

ஒரு சட்டத்தினை அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணானது என அறிவிக்கும் அதிகாரம் உச்சநீதிமன்றத்திடம் உள்ளது இது நீதிப்புனராய்வு (நீதிமன்ற மறுஆய்வு அதிகாரம்) எனப்படும். பின்வரும் தனிப்பட்ட நீதிமன்ற மறுஆய்வு அதிகாரங்களை உச்சநீதிமன்றம் பெற்றுள்ளது. அவை

1. நடுவண் அரசு, மற்றும், மாநிலங்களுக்கிடையிலான பிரச்சனைகள்.
2. அரசியலமைப்புச் சட்டத்தில் ஏற்படும் சந்தேகங்கள், கருத்து வேற்றுமைகளை விளக்கி தெளிவுபடுத்துதல்.
3. அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்தல்.
4. மாநில சட்டமன்றங்கள் இயற்றும் சட்டங்கள் அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணானது என அறிவிக்கும் அதிகாரம் போன்றவைகளை உச்ச நீதிமன்றம் பெற்றுள்ளது.



10th_Civics_Unit 2_TM.indd 271 24-03-2020 12:39:25

## பாடச்சுருக்கம்

- நடுவண் அரசாங்கம் மூன்று அங்கங்களைக் கொண்டது. அவைகள் நிர்வாகம், சட்டமன்றம், நீதித்துறை ஆகியன.
- குடியரசுத் தலைவர், பிரதம அமைச்சர் மற்றும் இதர அமைச்சர்களையும் நியமிக்கிறார்.
- இந்திய நாடாளுமன்றம் மூன்று பகுதிகளைக் கொண்டது. அவைகள், குடியரசுத் தலைவர், மாநிலங்களவை (ராஜ்ய சபா) மற்றும் மக்களவை (லோக் சபா).
- இந்திய அரசின் தலைமை வழக்குரைஞர் நாட்டின் உயர்ந்த சட்ட அதிகாரி ஆவார். அவர் குடியரசுத் தலைவரால் நியமனம் செய்யப்படுகிறார்.
- இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பாதுகாவலனாக உச்ச நீதிமன்றம் விளங்குகிறது.
- உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியை குடியரசுத் தலைவர் நியமிக்கிறார்.

## கலைச்சொற்கள்

| | | |
|---|---|---|
| முடிவுக்கு கொண்டு வருதல் | **Terminate** | bring to an untimely end. |
| எதிர்பாரா செலவு நிதி | **Contingency fund** | an amount of money that can be used to pay for problems that might happen. |
| பொதுமன்னிப்பு | **Pardon** | absolving the convict of all guilt and punishment. |
| தண்டனை குறைப்பு | **Remission** | quantitative reduction of punishment without affecting Nature of punishment. |
| முன்னுரிமை | **Precedence** | priority of importance. |
| பதவியின் நிமித்தமாக | **Ex-officio** | because of an office. |

## மதிப்பீடு

8ICHBA

### I சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்

1. நடுவண் அரசின் அரசியலமைப்புத் தலைவர் __________ ஆவார்.
   அ) குடியரசுத் தலைவர்
   ஆ) தலைமை நீதிபதி
   இ) பிரதம அமைச்சர்
   ஈ) அமைச்சர்கள் குழு

2. ஒரு மசோதாவை நிதிமசோதாவா அல்லது இதர மசோதாவா என தீர்மானிக்கும் அதிகாரம் பெற்றவர்.
   அ) குடியரசுத் தலைவர்
   ஆ) இந்திய அரசின் தலைமை வழக்குரைஞர்
   இ) நாடாளுமன்ற விவகார அமைச்சர்
   ஈ) லோக் சபாவின் சபாநாயகர்

3. அமைச்சர்கள் குழு ஒட்டுமொத்தமாக இதற்குப் பொறுப்புடையவர்களாவர்.
   அ) குடியரசுத் தலைவர் ஆ) மக்களவை
   இ) பிரதம அமைச்சர் ஈ) மாநிலங்களவை

4. லோக்சபா தேர்தலில் போட்டியிட தேவையான குறைந்தபட்ச வயது __________
   அ) 18 வயது ஆ) 21 வயது
   இ) 25 வயது ஈ) 30 வயது

5. இந்திய மாநிலங்களின் எல்லைகளை மாற்றியமைக்கும் அதிகாரம் பெற்றவர் / பெற்ற அமைப்பு.
   அ) குடியரசுத் தலைவர் ஆ) பிரதம அமைச்சர்
   இ) மாநில அரசாங்கம் ஈ) நாடாளுமன்றம்



10th_Civics_Unit 2_TM.indd 272 24-03-2020 12:39:25

www.tntextbooks.in

6. கீழ்க்காணும் எந்த விதியின் அடிப்படையில் குடியரசுத் தலைவர் நிதி நெருக்கடி நிலையினை அறிவிக்கிறார்?

அ) சட்டப்பிரிவு 352 ஆ) சட்டப்பிரிவு 360

இ) சட்டப்பிரிவு 356 ஈ) சட்டப்பிரிவு 365

7. உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி மற்றும் மற்ற நீதிபதிகளை நியமிப்பவர்.

அ) குடியரசுத் தலைவர்

ஆ) இந்திய அரசின் தலைமை வழக்குரைஞர்

இ) ஆளுநர்

ஈ) பிரதம அமைச்சர்

## II கோடிட்ட இடங்களை நிரப்புக

1. ____________ மசோதா குடியரசுத் தலைவரின் ஒப்புதல் இன்றி நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்த முடியாது.

2. ____________ நாட்டின் உண்மையான தலைவராகவும், நாட்டின் முக்கியச் செய்தி தொடர்பாளராகவும் செயல்படுகிறார்.

3. ____________ அலுவல் வழியில் மாநிலங்களவையின் தலைவர் ஆவார்.

4. நாடாளுமன்ற இரு அவைகளிலும் உரையாற்றவும், கூட்டத்தொடரில் பங்கு கொள்ளவும் உரிமை பெற்றவர் ____________

5. உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி மற்றும் மற்ற நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயது ____________

6. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பாதுகாவலன் ____________ ஆகும்.

7. தற்சமயம், உச்ச நீதிமன்றத்தில் தலைமை நீதிபதி உட்பட நீதிபதிகளின் எண்ணிக்கை ____________

## III சரியான கூற்றினை தேர்ந்தெடுக்கவும்

1. (i) மாநிலங்களவையின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 250.

(ii) இலக்கியம், அறிவியல், கலை, சமூக சேவை ஆகிய துறைகளில் சிறந்த அறிவு மற்றும் அனுபவம் பெற்ற 12 நபர்களை மாநிலங்களவைக்கு குடியரசுத் தலைவர் நியமிக்கிறார்.

(iii) மாநிலங்களவை உறுப்பினராவதற்கு 30 வயதுக்குக் குறைவாக இருத்தல் கூடாது.

(iv) மாநிலங்களவை உறுப்பினர்கள் நேரடியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

அ) ii & iv சரியானவை

ஆ) iii & iv சரியானவை

இ) i & iv சரியானவை

ஈ) i, ii & iii சரியானவை

2. (i) உச்ச நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் மற்ற நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயது 62.

(ii) நடுவண் அரசின் மூன்றாவது அங்கம் நீதிதுறை ஆகும்.

(iii) அடிப்படை உரிமைகள் தொடர்பான வழக்குகள் உச்ச நீதிமன்றத்தின் மேல்முறையீட்டு அதிகாரங்களுக்கு உட்பட்டது.

(iv) உச்ச நீதிமன்றம் பிறப்பிக்கும் ஆணை இந்தியாவின் அனைத்துப் பகுதியிலுள்ள நீதிமன்றங்களையும் கட்டுப்படுத்தும்.

அ) ii & iv சரியானவை

ஆ) iii & iv சரியானவை

இ) i & iv சரியானவை

ஈ) i & ii சரியானவை

## IV பொருத்துக

1. சட்டப்பிரிவு 53 – மாநில நெருக்கடிநிலை
2. சட்டப்பிரிவு 63 – உள்நாட்டு நெருக்கடிநிலை
3. சட்டப்பிரிவு 356 – குடியரசுத் தலைவரின் நிர்வாக அதிகாரங்கள்
4. சட்டப்பிரிவு 76 – துணைக் குடியரசுத் தலைவரின் அலுவலகம்
5. சட்டப்பிரிவு 352 – இந்திய அரசின் தலைமை வழக்குரைஞர் அலுவலகம்

## V கீழ்க்காணும் வினாக்களுக்கு சுருக்கமாக விடையளி

1. இந்தியக் குடியரசுத் தலைவர் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகிறார்?
2. நடுவண் அரசின் அமைச்சர்கள் தரநிலைகளின் படிஎவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளனர்?
3. உச்சநீதிமன்ற நீதிபதி ஆவதற்கான தகுதிகள் யாவை?
4. நிதி மசோதா குறிப்பு வரைக.
5. இந்திய அரசின் தலைமை வழக்குரைஞரின் சிறப்பு அதிகாரங்கள் இரண்டினைப் பட்டியலிடுக.

## VI விரிவான விடையளி

1. இந்தியக் குடியரசுத் தலைவரின் சட்டமன்ற மற்றும் நீதி அதிகாரங்களை விவரி.
2. இந்திய உச்ச நீதிமன்றத்தின் நீதிவரையறைகள் ஏதேனும் மூன்றினை விளக்குக.



10th_Civics_Unit 2_TM.indd 273 24-03-2020 12:39:25

www.tntextbooks.in

3. இந்தியப் பிரதம அமைச்சரின் பணிகள் மற்றும் கடமைகள் யாவை?

4. நாடாளுமன்றத்தின் அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகளை திறனாய்வு செய்க.

## VII செயல்திட்டம் மற்றும் செயல்பாடு

1. மாதிரி நாடாளுமன்றத்தை உன்னுடைய வகுப்பறையில் ஏற்பாடு செய். குடியரசுத் தலைவர், பிரதம அமைச்சர், அமைச்சர்களின் பங்கு பற்றி விவரி.

2. இந்தியக் குடியரசுத் தலைவருக்கும், அமெரிக்க ஐக்கிய நாடுகளின் குடியரசுத் தலைவருக்கும் இடையேயான ஒற்றுமைகளையும், வேற்றுமைகளையும் வெளிக்கொணர்க.

3. இந்தியக் குடியரசுத் தலைவர்கள் மற்றும் பிரதமர்களின் பட்டியலை தயார் செய்க.

## மேற்கோள் நூல்கள்


1. D.D. Basu - Introduction of the Constitution of India, S.C. Sarkar & Sons (Private) Ltd, 1982.
2. PM Bakshi - The Constitution of India, Universal Law Publishing - an imprint of LexisNexis, 2018.
3. Subhash Kashyap - Our Constitution, National Book Trust, India, 2011.


## இணையதள வளங்கள்

1. https://www.india.org/
2. https://presidentofindia.nic.in/
3. http://vicepresidentofindia.nic.in/
4. http://www.pmindia.gov.in/en/
5. https://www.sci.gov.in/

### இணையச் செயல்பாடு

**நடுவண் அரசு**

**செயல்முறை**

- கீழ்காணும் உரலி / விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தி இச்செயல்பாட்டிற்கான இணையப் பக்கத்திற்குச் செல்லவும்.
- படி 2: தற்போதுள்ள ஆளும் குழுக்களைப் பார்வையிடவும், மக்களவை மற்றும் ராஜ்ய சபை குறித்து அறிந்து கொள்ளவும் கீழே கொடுக்கப்பட்டுள்ள Who's மெனு வை சொடுக்கவும். உதாரணமாக, ஜனாதிபதியின் விவரங்களைக் காண இடத்துபக்கம் உள்ள President – ஐ சொடுக்கவும்.
- படி 3: அதேபோல் தற்போதைய ஆளும் குழுக்களின் அனைத்து விவரங்களையும் நீங்கள் பார்க்கலாம். நிகழ்வுகளைப் பற்றி விளக்கமாக தெரிந்துகொள்ள திரையில் தோன்றும் வரைபடத்தில் எதேனும் ஒரு இடத்தினை தேர்ந்தெடுக்கவும் .

**உரலி:** https://www.india.gov.in/my-government/whos-who

B373_10_SOCIAL_TM



10th_Civics_Unit 2_TM.indd 274 24-03-2020 12:39:25

# அலகு – 3

# மாநில அரசு



## கற்றலின் நோக்கங்கள்

- மாநில அரசின் அமைப்புப் பற்றிய அறிவினைப்பெறுதல்
- ஆளுநர், முதலமைச்சர், அமைச்சர்கள் மற்றும் சபாநாயகர் ஆகியோரின் அதிகாரங்கள் மற்றும் பணிகளைப் புரிந்துகொள்ளுதல்
- மாநில சட்டமன்றம் பற்றி அறிதல்
- மாநிலத்தின் நீதித்துறை மற்றும் அதன் செயல்பாடுகளைப் புரிந்துகொள்ளுதல்

M4SV4T


## அறிமுகம்

இந்திய அரசியலமைப்பு நடுவண், மாநில அரசுகளுக்கான தனித்தனி நிர்வாக முறைகளைக் கொண்ட கூட்டாட்சி அரசாங்கத்தை வழங்குகிறது. இக்கூட்டாட்சியில், தேசியத் தலைநகரான டெல்லியுடன் 9 யூனியன் பிரதேசங்கள் மற்றும் 28 மாநிலங்கள் உள்ளன. நடுவண்–மாநில அரசுகளுக்கான ஒரு சீரான நிர்வாக அமைப்பினை ஏற்படுத்த அரசியலமைப்பு வழிவகுக்கிறது. அரசியலமைப்பின் பகுதி VIஇல் 152 முதல் 237 வரையிலான சட்டப்பிரிவுகள் அனைத்து மாநிலங்களுக்கான சீரான அமைப்பினைப் பற்றி குறிப்பிடுகிறது. நடுவண் அரசைப் போன்று மாநில அரசுகளும் நிர்வாகத்துறை, சட்டமன்றம், நீதித்துறை என்ற மூன்று பிரிவுகளின் கீழ் இயங்குகின்றன.

## 3.1 நிர்வாகத் துறை

### ஆளுநர்

மாநில நிர்வாகத்தின் அரசியலமைப்புத் தலைவர் ஆளுநர் ஆவார். மாநில ஆளுநரின் பெயரில் மாநில நிர்வாகம் செயல்படுகிறது. பொதுவாக ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஓர் ஆளுநர் இருக்கிறார். ஆனால் நிர்வாகச் சூழலின் காரணமாக



ஒரு மாநிலத்தின் ஆளுநர் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களின் ஆளுநராகவும் நியமிக்கப்படலாம்.

அரசியலமைப்பு சட்டப்பிரிவு 154 மாநில ஆளுநரின் நிர்வாக அதிகாரத்தைப் பற்றி கூறுகிறது.

### ஆளுநர் நியமனம்

மாநில ஆளுநர், குடியரசுத் தலைவரால் நியமனம் செய்யப்படுகிறார். வழக்கமாக, அவரது பதவிக்காலம் 5 ஆண்டுகள். ஆனால் குடியரசுத் தலைவரின் விருப்பத்தின் பேரில் அவரது பதவிக்காலம் நீட்டிக்கப்படலாம். பொதுவாக, ஒருவர் தனது சொந்த மாநிலத்தின் ஆளுநராக நியமிக்கப்படமாட்டார். மேலும், அவர் குடியரசுத் தலைவரால் ஒரு மாநிலத்திலிருந்து வேறொரு மாநிலத்திற்கு மாற்றப்படலாம். குடியரசுத் தலைவருக்குத் தனது பணித்துறப்பு கடிதத்தைக் கொடுப்பதன் மூலம் ஆளுநர் எந்நேரத்திலும் பதவி விலகலாம்.

மாநில சட்டமன்றமோ அல்லது உயர் நீதிமன்றமோ ஆளுநரின் பணி நீக்கத்தில் பங்கு பெற முடியாது. ஒருவர் எத்தனை முறை வேண்டுமானாலும் ஆளுநராக நியமிக்கப்படலாம். ஒருவரை ஒரு மாநில ஆளுநராக நியமனம் செய்யப்படுவதில் இரண்டு மரபுகள் பின்பற்றப்படுகின்றன. அவை: ஆளுநராக நியமிக்கப்படும் ஒருவர் தான் எந்த மாநிலத்திற்கு ஆளுநராக நியமிக்கப்பட உள்ளாரோ அந்த மாநிலத்தில் வசிப்பவராக இருத்தல் கூடாது. மேலும் ஆளுநராக நியமிக்கப்படும் ஒருவரை நடுவண் அரசு, மாநில அரசுடன் கலந்தாலோசித்து அவரது பெயரை முன்மொழிய வேண்டும்.

அரசியலமைப்பு சட்டப்பிரிவு 158 (3A)இன் படி ஒருவர், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களின் ஆளுநராக நியமிக்கப்படும் பொழுது, குடியரசுத் தலைவர் ஓர் ஆணையின் மூலம், ஆளுநரின் ஊதியம் மற்றும் படிகளை சம்பந்தப்பட்ட மாநிலங்கள் பகிர்ந்து வழங்க தீர்மானிக்கலாம்.

### ஆளுநராவதற்கான தகுதிகள்

இந்திய அரசியலமைப்பின் 157 மற்றும் 158வது சட்டப்பிரிவுகள் ஆளுநர் பதவிக்குத் தேவையான பின்வரும் தகுதிகளைக் கூறுகின்றன.

QXH1A5

- அவர் இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும்.
- 35 வயது நிரம்பியவராக இருத்தல் வேண்டும்.
- நாடாளுமன்ற உறுப்பினராகவோ அல்லது சட்டமன்ற உறுப்பினராகவோ இருத்தல் கூடாது. அவ்வாறு இருப்பின் அவர் ஆளுநராக பதவியேற்கும் பொழுது தாமாகவே அப்பதவி காலியாகிவிடும்.
- மேலும் அவர், இலாபம் தரும் எந்த தொழிலிலும் ஈடுபடக்கூடாது.

### ஆளுநரின் அதிகாரங்கள் மற்றும் பணிகள்

ஆளுநர், மாநில நிர்வாகத்தின் தலைவராக செயல்படுவது மட்டுமல்லாமல் ஏராளமான அதிகாரங்கள் பெற்றவராகவும் திகழ்கிறார். சட்டப்பிரிவு 163இன் படி, முதலமைச்சரின் தலைமையிலான அமைச்சரவையின் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலின்படி ஆளுநர் குறிப்பிட்ட சில நிகழ்வுகளைத் தவிர மற்ற அதிகாரங்களைச் செயல்படுத்துகிறார்.

#### நிர்வாக அதிகாரங்கள்

- மாநில சட்டமன்றத் தேர்தலில் பெரும்பான்மை பெறும் கட்சியின் தலைவரை முதலமைச்சராக ஆளுநர் நியமனம் செய்கிறார்.
- முதலமைச்சரின் பரிந்துரையின் பேரில் அமைச்சரவையின் மற்ற உறுப்பினர்களை நியமனம் செய்கிறார்.
- அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்களை நியமனம் செய்கிறார்.
- மாநில தலைமை தேர்தல் அதிகாரியை நியமனம் செய்து, அவரது பணிக்காலம், பணியின் தன்மையைத் தீர்மானிக்கிறார்.
- ஆளுநர், மாநிலப் பல்கலைக்கழகங்களின் வேந்தராக செயல்படுவதுடன், துணை வேந்தர்களையும் நியமனம் செய்கிறார்.
- குடியரசுத் தலைவரின் அவசரநிலை பிரகடனம் செய்யப்படும் பொழுது, குடியரசுத் தலைவரின் பெயரில் இவரே மாநிலத்தை நேரடியாக ஆட்சி செய்கிறார்.

#### சட்டமன்ற அதிகாரங்கள்

ஆளுநர் மாநில சட்டமன்றத்தின் ஓர் ஒருங்கிணைந்த பகுதியாவார். ஆனால், அவர் சட்டமன்றத்தின் உறுப்பினராக இல்லை. ஆளுநர் பின்வரும் சட்டமன்ற அதிகாரங்களைப் பெற்றுள்ளார்.

- ஆளுநர் சட்டமன்ற கூட்டத்தைக் கூட்டவும் ஒத்திவைக்கவும் சட்டமன்றத்தைக் கலைக்கவும் உரிமைப் பெற்றுள்ளார்.
- தேர்தல் முடிந்து சட்டசபை அமைந்த முதல் கூட்டத் தொடரிலும் மற்றும் ஒவ்வொரு ஆண்டு முதல் கூட்டத்திலும் உரையாற்றுகின்றார்.
- நிலுவையிலுள்ள மசோதா குறித்து சட்டமன்ற அவைகளுக்கு ஆளுநர் செய்தி அனுப்பலாம்.



10th_Civics_Unit 3_TM.indd 276 24-03-2020 12:39:59

- சபாநாயகர் மற்றும் துணை சபாநாயகர் பணியிடம் காலியாக இருக்கும்பொழுது சட்டமன்றத்தை தலைமை ஏற்று நடத்த எந்த சட்டமன்ற உறுப்பினரை வேண்டுமானாலும் ஆளுநர் நியமனம் செய்யலாம்.
- ஆங்கிலோ–இந்தியன் வகுப்பினரிலிருந்து ஓர் உறுப்பினரை மாநில சட்டமன்றத்திற்கு நியமனம் செய்யலாம்.
- கலை, இலக்கியம், அறிவியல், கூட்டுறவு இயக்கம் மற்றும் சமூக சேவை போன்றவற்றில் சிறந்து விளங்கும் நபர்களைத் தேர்ந்தெடுத்து மாநில சட்டமேலவையின் 6இல் 1 பங்கு இடங்களுக்கு அவர்களை நியமனம் செய்கிறார்.
- மாநில சட்டமன்றத்தால் நிறைவேற்றப்படும் ஒவ்வொரு மசோதாவும் ஆளுநர் கையொப்பமிட்ட பின்னர் மட்டுமே சட்டமாகும். ஆனால், சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட ஒரு மசோதா ஆளுநர் ஒப்புதலுக்காக அனுப்பப்படும் பொழுது ஆளுநர் கையொப்பமிடலாம் அல்லது நிறுத்தி வைக்கலாம் அல்லது மீண்டும் மறு பரிசீலனைக்காக சட்டமன்றத்திற்கே திருப்பி அனுப்பலாம்.
- அரசியலமைப்பு சட்டப்பிரிவு 213இன் கீழ் ஆளுநர் மாநில சட்டமன்றம் நடைபெறாத பொழுது அவசர சட்டத்தைப் பிறப்பிக்கலாம். ஆனால் அந்த அவசரச்சட்டம், 6 மாதத்திற்குள் மாநில சட்டமன்றத்தால் அங்கீகரிக்கப்பட வேண்டும். அவசரச்சட்டத்தை எந்நேரத்திலும் ஆளுநர் திரும்பப் பெறலாம்.
- மாநிலத்தின் ஆண்டு நிதிநிலை அறிக்கை, அரசுப்பணியாளர் தேர்வாணையக் குழுவின் அறிக்கை, அரசின் தணிக்கைக்குழு அறிக்கைகளைசட்டமன்றத்தில்சமர்ப்பிக்கின்றார்.

**நிதி அதிகாரங்கள்**

- மாநிலத்தின் ஆண்டு வரவு–செலவு திட்டத்தினை தயார் செய்து சட்டமன்றத்தில் அறிமுகம் செய்யும் கடமையை ஆளுநருக்கு அரசியலமைப்பு வழங்குகிறது. தேவைப்பட்டால், துணை வரவு செலவு திட்டத்தையும் அறிமுகம் செய்யலாம்.
- ஆளுநரின் முன் அனுமதியுடன்தான் பண மசோதாவை சட்டமன்றத்தில் அறிமுகப்படுத்த முடியும்.
- அரசின் எதிர்பாராச் செலவினங்களுக்காக ஆளுநர் அவசர நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்ய முடியும்.
- பஞ்சாயத்துகள் மற்றும் நகராட்சிகளின் நிதிநிலையை ஆய்வு செய்ய ஒவ்வொரு ஐந்தாண்டிற்கு ஒருமுறை நிதி ஆணையம் ஒன்றை அமைக்கிறார்.

**நீதித்துறை அதிகாரங்கள்**

- மாநில அரசின் தலைமை வழக்குரைஞரை நியமனம் செய்கிறார்.
- உயர் நீதிமன்றத்தின் ஆலோசனையின் பேரில் மாவட்ட நீதிபதிகளின் நியமனம் மற்றும் பதவி உயர்வு போன்ற பணிகளை மேற்கொள்கிறார்.
- ஆளுநரின் ஆலோசனையின் பேரில் குடியரசுத் தலைவர் உயர் நீதிமன்ற தலைமைநீதிபதியை நியமனம் செய்கிறார்.
- குற்றவாளிகளின் கருணை மனு அடிப்படையில் குற்றவாளிகளை மன்னிக்கலாம் அல்லது குற்றவாளிகளின் தண்டனையைக் குறைக்கலாம் அல்லது நிறுத்தி வைக்கலாம். (மரண தண்டனையைப் பெற்ற குற்றவாளியைத் தவிர)

**விருப்புரிமை அதிகாரங்கள்**

- குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்காக ஆளுநர் ஒரு மசோதாவை நிறுத்தி வைக்க முடியும்.
- மாநில சட்டமன்ற பொதுத் தேர்தலில் எந்த கட்சியும் அறுதி பெரும்பான்மையைப் பெறாத போது, ஆளுநர் எந்தக் கட்சி தலைவரையும் ஆட்சி அமைக்க அழைக்கலாம்.
- சட்டமன்றத்தில் நம்பிக்கை வாக்கெடுப்பின் பொழுது பெரும்பான்மையை நிரூபிக்க முடியாமல் போனால் அமைச்சரவையை ஆளுநர் கலைக்க முடியும்.

**அவசரகால அதிகாரங்கள்**

மாநில அரசு அரசியலமைப்பு விதிகளுக்கேற்ப செயல்படவில்லை என்று ஆளுநர் உறுதியாக நம்பினால் அரசியலமைப்பு சட்டப்பிரிவு 356இன் கீழ் மாநில அரசை கலைக்க குடியரசுத் தலைவருக்கு பரிந்துரை செய்யலாம். மாநில அரசு கலைக்கப்பட்டவுடன், மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி நடைமுறைக்கு வரும். ஆளுநர் குடியரசுத் தலைவரின் பிரதிநிதியாக மாநிலத்தை நிர்வாகம் செய்கிறார்.

### ஆளுநரின் சிறப்புரிமைகள்

சட்டப்பிரிவு 361 (1) ஆளுநருக்கான கீழ்க்காணும் சிறப்புரிமைகளை வழங்குகின்றது.

- தனது பணிகள் மற்றும் அதிகாரத்தைச் செய்ய வேண்டும் என எண்ணுவதிலும் செயல்படுத்துவதிலும் எந்த நீதிமன்றத்திற்கும் பதில் அளிக்க வேண்டிய அவசியமில்லை.
- ஆளுநரின் பதவி காலத்தில் அவர் மீது குற்றச்சாட்டுகளைச் சுமத்தவோ அல்லது அவரை கைது செய்யவோ எந்த நீதிமன்றமும் உத்தரவு பிறப்பிக்க முடியாது.

## 3.2 முதலமைச்சர்

அரசியலமைப்பால் அமைக்கப்பட்ட நாடாளுமன்ற முறையில் அமைந்த அரசில், ஆளுநர், மாநிலத்தின் பெயரளவு நிர்வாகியாகவும் முதலமைச்சர் உண்மையான நிர்வாகியாகவும் உள்ளனர். வேறு வகையில் கூற வேண்டுமாயின் ஆளுநர் என்பவர் மாநிலத்தின் அரசின் தலைவர் முதலமைச்சர் என்பவர் அரசாங்கத்தின் தலைவர் ஆவார்.

### முதலமைச்சரின் நியமனம்

முதலமைச்சர் மாநில ஆளுநரால் நியமனம் செய்யப்படுகிறார். முதலமைச்சரின் பதவிக்காலம் நிர்ணயிக்கப்பட்ட ஒன்றல்ல. சட்டமன்ற உறுப்பினர்களின் பெரும்பான்மை ஆதரவு எவ்வளவு காலத்திற்கு தொடர்கிறதோ அதுவரை அவர் முதலமைச்சராக நீடிக்கலாம். சட்டமன்றத்தில் எப்பொழுது அவர் பெரும்பான்மையை இழக்கிறாரோ அப்பொழுது தனது பதவியை இராஜினாமா செய்கிறார். சட்டமன்றத்தில் மற்ற உறுப்பினர்களின் பதவிக்காலம் போலவே முதலமைச்சரின் பதவிக்காலமும் 5 ஆண்டுகள் ஆகும்.

### முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் பணிகள்

**அமைச்சரவை தொடர்பானவை**

- முதலமைச்சரின் பரிந்துரையின் பேரில் ஆளுநர் அமைச்சர்களை நியமிக்கிறார்.
- அமைச்சர்களுக்குத் துறைகளை ஒதுக்கீடு செய்கிறார்.
- தனது அமைச்சரவையை மாற்றியமைக்கிறார்.
- அமைச்சரவைக் கூட்டத்தைத் தலைமை ஏற்று நடத்தி முடிவுகளை எடுக்கிறார்.
- அமைச்சர்கள் அனைவரையும் கட்டுப்படுத்தி, வழிநடத்தி, இயக்கி, அவர்களது நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கிறார்.

**ஆளுநர் தொடர்பானவை**

கீழ்க்காணும் அலுவலர்களின் நியமனங்கள் தொடர்பாக ஆளுநருக்கு ஆலோசனை வழங்குகிறார்.

- மாநில அரசு வழக்குரைஞர்
- மாநில தேர்தல் ஆணையர்
- அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள்
- மாநில திட்டக்குழுத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள்
- மாநில நிதிக்குழுத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள்

**சட்டமன்றம் தொடர்பானவை**

- சட்டமன்ற கூட்டத்தொடரை ஆரம்பிக்கவும் ஒத்திவைக்கவும் ஆளுநருக்கு முதலமைச்சர் ஆலோசனை வழங்குகிறார்.
- சட்டமன்றத்தில் அரசின் கொள்கைகளை அறிவிக்கிறார்.
- சட்டமன்றத்தில் மசோதாக்களை அறிமுகப்படுத்துகிறார்.
- எந்நேரத்திலும் சட்டமன்றத்தைக் கலைக்க ஆளுநருக்குப் பரிந்துரை செய்கிறார்.

### அமைச்சரவை

அமைச்சரவை மாநில சட்டமன்றத்திற்குக் கூட்டாகப் பொறுப்பானது. அமைச்சரவைக் குழுவின் அமைச்சர்கள் அனைவரும் சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்க வேண்டும். சட்டமன்ற உறுப்பினர் அல்லாத ஒருவர் அமைச்சராக பதவியேற்றால் 6 மாத காலத்திற்குள் அவர் சட்டமன்ற உறுப்பினராக வேண்டும். சட்டமன்றத்தில் நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டால் மாநில அமைச்சரவை இராஜினாமா செய்ய வேண்டும்.

அரசியலமைப்பு சட்டப்பிரிவு 163 ஆளுநருக்கு ஆலோசனைகள் வழங்க அமைச்சரவையை உருவாக்க வழிவகை செய்திருக்கிறது. சட்டப்பிரிவு 163(1)இன் படி, முதலமைச்சரை தலைவராகக் கொண்ட அமைச்சரவை ஆளுநருக்கு தேவைப்படும் பொழுது உதவி செய்யவும் ஆலோசனை வழங்கவும் வேண்டும்.

**அமைச்சர்களுடனான மற்ற விதிகள்**

சட்டப்பிரிவு 164(1), ஆளுநரால் முதலமைச்சர் நியமிக்கப்படுவதைக் கூறுகிறது. முதலமைச்சர் உட்பட மொத்த அமைச்சர்களின் எண்ணிக்கை மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் 15 விழுக்காட்டை தாண்டக்கூடாது என சட்டப்பிரிவு 164 (1A) கூறுகிறது.

**அமைச்சரவையின் அதிகாரங்கள் மற்றும் பணிகள்**

- மாநில அரசிற்கான கொள்கைகளை உருவாக்கி அவற்றை திறம்பட நடைமுறைப்படுத்துகிறது.
- சட்டமன்ற நிகழ்ச்சிகளை முடிவு செய்து அனைத்து முக்கியமான மசோதாக்களுக்கும் ஆதரவளிக்கிறது.
- நிதிக்கொள்கையைக் கட்டுப்படுத்துவதுடன் மாநில பொது நலனுக்கான வரிக்கொள்கையை முடிவு செய்கிறது.
- முக்கியமான துறைத் தலைவர்களின் நியமனங்களைச் செய்கிறது.
- மற்ற மாநிலங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி பிரச்சினைகளைத் தீர்க்க முயற்சி மேற்கொள்கிறது.
- மாநிலத்திற்கான செலவுகளைச் சமாளிக்க திட்ட அறிக்கையை உருவாக்குகிறது.
- ஒரு மசோதா சட்டமன்றத்தில் அறிமுகப்படுத்தப்படும் போது அது சாதாரண



10th_Civics_Unit 3_TM.indd 278 24-03-2020 12:39:59

மசோதாவா அல்லது நிதி மசோதாவா என்று தீர்மானிக்கிறது.

- அமைச்சரவையின் ஒவ்வொரு அமைச்சரின் பணிகளைக் கட்டுப்படுத்தி, கண்காணித்து ஒருங்கிணைக்கின்றது.
- ஆண்டு வரவு–செலவு திட்டம் (Budget) அமைச்சரவையால் இறுதி செய்யப்படுகிறது.

## 3.3 மாநில சட்டமன்றம்

இந்திய அரசியலமைப்பு ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு சட்டமன்றம் ஏற்பட வழி வகை செய்கிறது.பெரும்பாலானமாநிலங்கள்ஓரவையைக் கொண்ட சட்டமன்றங்களை மட்டும் பெற்றுள்ளன. சில மாநிலங்கள் ஈரவை சட்டமன்றங்களைக் கொண்டுள்ளன. (எடுத்துக்காட்டு: பீகார், கர்நாடகா, மகாராஷ்டிரா, உத்தரப்பிரதேசம், ஆந்திரப்பிரதேசம், தெலுங்கானா). கீழவையானது மாநில மக்களின் பிரதிநிதிகளைக் கொண்டது. மேலவையானது ஆசிரியர்கள், பட்டதாரிகள், மற்றும் உள்ளாட்சி உறுப்பினர்கள் ஆகியோர்களைப் பிரதிநிதிகளாகக் கொண்டது.

தமிழகத்தில் சட்டமன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையின் படி (234 உறுப்பினர்கள்) அமைச்சர்களின் எண்ணிக்கை 36 வரை இருக்கலாம். அதாவது 234இல் 15 விழுக்காடு.

### சட்டமன்றப் பேரவை (கீழவை)

மாநில சட்டமன்றம் பிரபலமான ஓர் அவை ஆகும். இதுவே மாநில அதிகாரத்தின் உண்மையான அதிகார மையமாகும். இது வயது வந்தோர் வாக்குரிமையின் அடிப்படையில் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டது. சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை, மக்கள் தொகையைப் பொறுத்து மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடுகிறது. இருப்பினும், சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகபட்சம் 500க்கு மிகாமலும் குறைந்த பட்சம் 60க்கு குறையாமலும் இருக்க வேண்டும்.



தமிழக சட்டமன்றம்

சட்டமன்றத்தின் பதவிக்காலம் 5 ஆண்டுகள் ஆகும். இருப்பினும் 5 ஆண்டுகள் முடியும் முன்னரே சட்டமன்றம் கலைக்கப்படலாம்.

சட்ட மேலவை உறுப்பினர்களின் எண்ணிக்கை அம்மாநில சட்டமன்ற கீழவையின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் 3இல் ஒரு பங்குக்கு மிகாமல் இருக்க வேண்டும். ஆனால் மேலவை உறுப்பினர்களின் எண்ணிக்கை 40க்கு குறையாமல் இருக்க வேண்டும்

### சட்டமன்றத்தின் அமைப்பு

தமிழக சட்டமன்றம் 235 உறுப்பினர்களைக் கொண்டது. இவர்களில் 234 உறுப்பினர்கள் வயது வந்தோர் வாக்குரிமையின் அடிப்படையில் மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஆங்கிலோ–இந்தியன் வகுப்பினரில் ஒருவர் ஆளுநரால் நியமனம் செய்யப்படுகிறார்.

### அமைச்சரவை மற்றும் அமைச்சரவைக் குழுக்கள்

அமைச்சரவை (Cabinet) என்ற சிறிய அமைப்பானது அமைச்சரவையின் உட்கரு ஆகும். இது காபினெட் அமைச்சர்களை மட்டும் உள்ளடக்கியது. இதுவே மாநில அரசின் உண்மையான அதிகார மையமாக விளங்குகிறது.

அமைச்சரவை குழுக்கள் எனப்படும் வெவ்வேறு குழுக்கள் மூலம் காபினெட் செயலாற்றுகிறது. அவற்றில் இரண்டு வகைகள் உள்ளன. அவை: ஒன்று நிரந்தரமானது மற்றொன்று தற்காலிகமானது ஆகும்.

### சபாநாயகர்

சட்டமன்ற உறுப்பினர்களிடையே சபாநாயகர் மற்றும் துணை சபாநாயகர் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். சட்டமன்றம் ஒரு தீர்மானத்தின் மூலம் 14 நாட்கள் அறிவிப்பு கொடுத்த பிறகு சபாநாயகரைப் பதவி நீக்கம் செய்யலாம். அதற்கு முன் சபாநாயகரைப் பதவி நீக்கம் செய்யும் தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு நடக்கும் நேரத்தில் அவைக்கு வந்த பெரும்பாலான உறுப்பினர்கள் வாக்களித்து தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும். சட்டமன்றம் கலைக்கப்படும்பொழுது சபாநாயகர் தமது பதவியை இழக்க மாட்டார். மேலும், புதிய சட்ட மன்றத்தின் முதல் கூட்டம் வரை தனது பதவியைத் தொடர்கிறார். சபாநாயகர் இல்லாதபோது அவரது பணியைத் துணை சபாநாயகர் மேற்கொள்கிறார்.

### சட்டமன்ற மேலவை (சட்ட மேலவை)

சட்டமேலவை (விதான் பரிஷத்) இந்திய மாநில சட்டமன்றங்களில் ஓர் அங்கமாக செயல்படுகிறது. இந்தியாவின் 28 மாநிலங்களில் 6 மாநிலங்களில் சட்டமேலவை உள்ளது. ஈரவை சட்டமன்றத்தில் மறைமுகத்



10th_Civics_Unit 3_TM.indd 279 24-03-2020 12:39:59

www.tntextbooks.in

தேர்தலால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் சட்ட மேலவையில் செயலாற்றுகின்றனர். சட்ட மேலவை ஒரு நிரந்தர அவையாகும். ஏனென்றால், இதனை கலைக்க முடியாது. சட்ட மேலவை உறுப்பினர்களின் பதவி காலம் 6 ஆண்டுகள் ஆகும். அதன் ஒவ்வொரு இரண்டாண்டிற்கும் மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள் ஓய்வு பெறுவர். ஒருவர் சட்ட மேலவை உறுப்பினராவதற்கு அவர் இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும். 30 வயது நிரம்பியவராக இருத்தல் வேண்டும். தெளிவான மனநிலை உடையவராக இருத்தல் வேண்டும். எந்த மாநிலத்தில் போட்டியிடுகிறாரோ அம்மாநில வாக்காளர் பட்டியலில் அவரது பெயர் இடம் பெற்றிருத்தல் வேண்டும்.

உங்களுக்குத் தெரியுமா?

1986இல் இயற்றப்பட்ட தமிழ்நாடு சட்ட மேலவை (நீக்கம்) மசோதா மூலம் தமிழ்நாட்டில் சட்ட மேலவை நீக்கப்பட்டது. இச்சட்டம் 1986 நவம்பர் முதல் நாளன்று நடைமுறைக்கு வந்தது.

**சட்ட மேலவைக்கான தேர்தல்**

- மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள் உள்ளாட்சி அமைப்புகளால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
- பன்னிரெண்டில் ஒரு பங்கு (1/12) உறுப்பினர்கள் பட்டதாரிகளால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
- பன்னிரெண்டில் ஒரு பங்கு (1/12) உறுப்பினர்கள் பட்டதாரி ஆசிரியர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
- மூன்றில் ஒரு பங்கு (1/3) உறுப்பினர்கள் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
- ஆறில் ஒரு பங்கு உறுப்பினர்கள் (1/6) கலை, இலக்கியம், அறிவியல், சமூக சேவை, மற்றும் கூட்டுறவு இயக்கம் இவற்றில் சிறந்து விளங்குபவர்களை ஆளுநர் நேரடியாக நியமனம் செய்கிறார்.

**தலைவர்**

மேலவைத் தலைவர் (Chair person) மேலவை கூட்டத்தைத் தலைமையேற்று நடத்துகிறார். மேலவை உறுப்பினர்களிடையே தலைவர் மற்றும் துணைத் தலைவர் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். தலைவர் இல்லாதபோது துணைத்தலைவர் கூட்டத்தைத் தலைமையேற்று நடத்துகிறார்.

**சட்டமேலவை உருவாக்கம் அல்லது நீக்கம்**

சட்ட மேலவை உருவாக்கம் அல்லது நீக்கம் பற்றி சட்டப்பிரிவு 169 விவரிக்கிறது. இப்பிரிவின் படி, சட்டமன்றத்தின் மொத்த உறுப்பினர்களில் மூன்றில் 2 பங்கு (2/3) உறுப்பினர்கள் வாக்களித்து தீர்மானத்தை நிறைவேற்றி சட்டமேலவையை உருவாக்கவோ அல்லது நீக்கவோ நாடாளுமன்றத்தைக் கேட்டுக் கொண்டால் நாடாளுமன்றம் ஒரு சட்டத்தின் மூலம் மேலவையை உருவாக்கும் அல்லது நீக்கும்.

## 3.4 சட்டமன்றத்தின் செயல்பாடுகள்

### சட்டமன்ற அதிகாரங்கள்

அரசியலமைப்பின்படி மாநிலப் பட்டியலிலுள்ள அனைத்துத் துறைகள் மீதும் சட்டமன்றம் சட்டத்தை நிறைவேற்றலாம். பொதுப்பட்டியலிலும் சட்டமன்றம் சட்டம் இயற்றலாம். ஆனால் அதே சட்டத்தை நடுவண் அரசு இயற்றும்பொழுது மாநில அரசின் சட்டம் செயலற்றதாகி விடும். மத்திய நாடாளுமன்ற நடைமுறையைப் போன்றே மாநில சட்டமன்றத்தின் மசோதாவும் சட்டமாக நிறைவேற்றுகிறது.

### நிதி அதிகாரங்கள்

சட்டமன்றம் மாநிலத்தின் நிதி நிலையைக் கட்டுப்படுத்துகிறது. சட்டமன்றக் கீழவையானது மேலவையைக் காட்டிலும் பண நடவடிக்கைகளில் அதிக அதிகாரத்தைப் பெற்றுள்ளது. பண மசோதா கீழவையில் மட்டுமே அறிமுகப்படுத்த முடியும். சட்டமன்றக் கீழவையின் அனுமதியின்றி புதிய வரிகளை விதிக்க முடியாது.

### நிர்வாகத் துறையின் மீது கட்டுப்பாடுகள்

அமைச்சரவையானது சட்டமன்றத்திற்குப் பொறுப்பானது. சட்டமன்ற உறுப்பினர்களின் கேள்விகளுக்கு அமைச்சர்கள் பதிலளிக்க வேண்டும். அமைச்சரவைக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டால் அமைச்சர்கள் பதவி நீக்கம் செய்யப்படுவர்.

## 3.5 மாநில நீதித்துறை

### உயர் நீதிமன்றங்கள்

1862இல் உயர் நீதிமன்றங்கள் கொல்கத்தா, மும்பை மற்றும் சென்னையில் தோற்றுவிக்கப்பட்டன. காலப்போக்கில் பிரிட்டிஷ் இந்தியாவின் ஒவ்வோர் மாகாணமும் ஓர் உயர் நீதிமன்றத்தைக் கொண்டிருந்தது. 1950க்குப் பிறகு தோற்றுவிக்கப்பட்ட உயர் நீதிமன்றங்கள் அண்டை மாநிலங்களுக்கும் உயர் நீதிமன்றமாக விளங்கியது. மாநில அளவில் உயர் நீதிமன்றங்களே மிக உயர்ந்த நீதிமன்றங்களாகும்.

இந்திய அரசியலமைப்புச் சட்டம் ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஓர் உயர் நீதிமன்றத்தைத்



10th_Civics_Unit 3_TM.indd 280 24-03-2020 12:40:00



மெட்ராஸ் உயர் நீதிமன்றம்

தோற்றுவிக்க வழிவகுக்கிறது. ஆனால் 1956ஆம் ஆண்டு ஏழாவது திருத்தச்சட்டம், இரண்டு மற்றும் இரண்டிற்கு மேற்பட்ட மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களுக்கென்று ஒரு பொதுவான உயர் நீதிமன்றத்தை நிறுவ நாடாளுமன்றத்திற்கு அங்கீகாரம் வழங்கியது.

எடுத்துக்காட்டாக பஞ்சாப், ஹரியானா மற்றும் யூனியன் பிரதேசமான சண்டிகர் ஆகிய பகுதிகளுக்குச் சண்டிகரிலுள்ள உயர் நீதிமன்றம் பொது நீதிமன்றமாக உள்ளது. இதேபோன்று கவுகாத்தியிலுள்ள உயர் நீதிமன்றம் நான்கு வடகிழக்கு மாநிலங்களான அஸ்ஸாம், நாகலாந்து, மிசோரம், அருணாச்சலப்பிரதேசம் போன்றவைகளுக்கு பொது நீதிமன்றமாக உள்ளது. இந்த நீதிமன்றத்தின் கிளைகள் இட்டா நகர், கொஹிமா, அய்ஸ்வால் ஆகிய இடங்களில் அமைந்துள்ளன. டெல்லி ஒரு மாநிலமாக இல்லாத போதும் தனக்கென்று சொந்தமாக ஓர் உயர் நீதிமன்றத்தைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு நீதிமன்றமும் தலைமை நீதிபதி மற்றும் பல நீதிபதிகளைக் கொண்டுள்ளது. உயர் நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை மாநிலத்திற்கு மாநிலம் மாறுபடும். உயர் நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை குடியரசுத் தலைவரால் தீர்மானிக்கப்படுகிறது. தற்போது இந்தியாவில் 28 மாநிலங்கள் (2019 ஜனவரியில் தோற்றுவிக்கப்பட்டு அமராவதியில் இயங்கும் ஆந்திரப்பிரதேசத்தின் புதிய உயர் நீதிமன்றத்தையும் சேர்த்து) மற்றும் 9 யூனியன் பிரதேசங்களுக்கும் சேர்த்து 25 உயர் நீதிமன்றங்கள் செயல்படுகின்றன.

## உயர் நீதிமன்ற நீதி வரையறை மற்றும் அதிகாரங்கள்

### தனக்கேயுரிய நீதிவரையறை

சென்னை, மும்பை, கொல்கத்தா நீதிமன்றங்கள் தங்களுக்கான நீதிவரையறை அதிகாரங்களுடன் மேல்முறையீட்டு வழக்குகளை விசாரிக்கும் அதிகாரங்களையும் பெற்றுள்ளன. அதே வேளையில் மற்ற நீதிமன்றங்கள் பெரும்பாலும் மேல்முறையீட்டு வழக்குகளை விசாரிக்கும் அதிகாரங்களை மட்டுமே பெற்றுள்ளன.

**உங்களுக்குத் தெரியுமா?**

1862ஆம் ஆண்டு ஜுன் 26ஆம் நாளில் விக்டோரியா மகாராணி வழங்கிய காப்புரிமை கடிதத்தின் மூலம் சென்னை, மும்பை, கொல்கத்தா ஆகிய மாகாணங்களில் உயர் நீதிமன்றங்கள் தோற்றுவிக்கப்பட்டன. இவற்றில் மெட்ராஸ் உயர் நீதிமன்ற வளாகம் உலகிலேயே இலண்டனுக்கு அடுத்து இரண்டாவது பெரிய நீதித்துறை வளாகமாகும்.

முக்கியத்துவம் வாய்ந்த வழக்குகள், உயில், திருமணம் சார்ந்த வழக்குகள் மற்றும் நீதிமன்ற அவமதிப்பு வழக்குகள் ஆகியவற்றை மட்டும் நேரடியாக விசாரிக்கும் அதிகாரங்களை இவை பெற்றுள்ளன. மாகாண நீதிமன்றங்கள் தன் எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் ₹2000 மற்றும் அதற்கு மேற்பட்ட தொகை மதிப்புடைய குற்றவியல் வழக்குகளை தனக்கே உரிய நீதிவரையறையை பயன்படுத்தி மாகாண நீதிபதிகள் விசாரிக்க முடியும்.

### மேல்முறையீட்டு நீதிவரையறை

உயர் நீதிமன்றங்கள் தங்களிடம் வரும் மேல்முறையீட்டு வழக்குகளையும் கீழ் நீதிமன்றங்களிலிருந்து வரும் மேல்முறையீட்டு வழக்குகளையும் (உரிமையியல், குற்றவியல்) விசாரிக்கின்றன.

நாட்டின் இராணுவ தீர்ப்பாயங்களின் கீழ்வரும் ஆயுதம் சார்ந்த வழக்குகளை விசாரிக்க இவைகளுக்கு அதிகாரம் இல்லை.

### பேராணை அதிகாரங்கள்

இந்திய அரசியலமைப்பு சட்டப்பிரிவு 226, அடிப்படை உரிமைகளுக்காக மட்டுமின்றி மற்ற நோக்கங்களுக்காகவும் பேராணைகளை வெளியிடும் அதிகாரங்களை உயர் நீதிமன்றங்களுக்கு வழங்குகிறது.

சட்டப்பிரிவு 32இன் கீழ் உச்ச நீதிமன்றம் வழங்கும் நீதிப்பேராணைகள், ஆணைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் போன்றே உயர் நீதிமன்றமும் அவைகளை வழங்க அதிகாரம் பெற்றுள்ளது.

இந்த சட்டப்பிரிவுகளின் கீழ் நீதிப்பேராணைகளை வெளியிட உயர் நீதிமன்றங்களுக்கு வழங்கிய அதிகாரம் பெரியதாகும். அடிப்படை உரிமைகள் மீறப்பட்டால் மட்டுமே உச்ச நீதிமன்றம் இவைகளை வெளியிடுகிறது. உயர் நீதிமன்றம் இது போன்ற வழக்குகளில் மட்டுமின்றி சாதாரண சட்டமீறலுக்கும் நீதிப்பேராணைகளை (ஆட்கொணர்வு நீதிப் பேராணை, கட்டளையுறுத்தும் நீதிப்பேராணை, தடையுறுத்தும் நீதிப்பேராணை, தகுதி வினவும் நீதிப்பேராணை, ஆவணக் கேட்பு பேராணை),

வெளியிட முடியும்.

**மேற்பார்வை அதிகாரம்**

இராணுவ நீதிமன்றங்களைத் தவிர மற்ற அனைத்து சார்பு நீதிமன்றங்கள், தீர்ப்பாயங்களின் பணிகளை மேற்பார்வையிடும் அதிகாரத்தை உயர் நீதிமன்றம் பெற்றுள்ளது.

- கீழ் நீதிமன்றங்களில் கொடுக்கப்பட்ட அதிகாரங்களை திரும்ப பெறும் அதிகாரம்.
- பொதுச் சட்டங்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட படிவங்கள் மூலம் பயிற்சி மற்றும் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்த ஓர் ஆணையை வெளியிடச் செய்தல்.
- பரிந்துரைக்கப்பட்ட முறைகளில் கீழ் நீதிமன்றங்கள் புத்தகங்கள், பதவிகள், கணக்குகளைப் பராமரித்தல்.
- ஷெரிப், எழுத்தர்கள், அலுவலர்கள் மற்றும் சட்ட வல்லுநர்கள் ஆகியோருக்கான கட்டணத்தைச் செலுத்துதல் போன்றவை குறித்துத் தீர்மானித்தல்.

**ஆவணங்களின் பாதுகாப்புப் பெட்டகம்**

உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட அனைத்து முடிவுகள் மற்றும் தீர்ப்புகள் அச்சடிக்கப்பட்டு சான்றாதாரமாக பாதுகாக்கப்படுகின்றன. எதிர்காலத்தில் எழும் கேள்விகளுக்கு தீர்வாக கடந்த கால தீர்ப்புகள் உதவுகின்றன. இதனால் உயர் நீதிமன்றம் பதிவேடுகளின் நீதிமன்றமாக செயல்படுகிறது.



**மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தில் சம நீதி கண்ட சோழன் சிலை**

## பாடச்சுருக்கம்

- மாநில நிர்வாகத்தின் அரசியலமைப்பு தலைவர் ஆளுநர் ஆவார்.
- ஆளுநரால் முதலமைச்சர் நியமிக்கப்படுகிறார்.
- மாநில சட்டமன்றத்திற்கு அமைச்சரவை கூட்டுப் பொறுப்பானது.
- சட்டமன்றம் மாநிலத்தின் உண்மையான அதிகார மையமாகும்.
- தற்போது 28 மாநிலங்கள் மற்றும் 9 யூனியன் பிரதேசங்களுக்கு 25 உயர் நீதிமன்றங்கள் உள்ளன.

## கலைச்சொற்கள்

| | | |
|---|---|---|
| அரசியலமைப்பு | **Constitution** | it has been defined as the fundamental law of a State. |
| அமைச்சரவை | **Cabinet** | it is an inner body within the Council of Ministers which is responsible for formulating the policy of the Government. |
| சட்டமன்றம் | **Legislature** | the group of people in a country or part of a country who have the power to make and change laws |
| தீர்ப்பாயம் | **Tribunal** | a special court chosen, especially by the government, to examine particular problem |
| தீர்மானம் | **Resolution** | an official decision that is made after a group or organisation has voted |

www.tntextbooks.in

## மதிப்பீடு

### I சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்

1. மாநில ஆளுநரை நியமிப்பவர்
   அ) பிரதமர்
   ஆ) முதலமைச்சர்
   இ) குடியரசுத் தலைவர்
   ஈ) தலைமை நீதிபதி

2. மாநில சபாநாயகர் ஒரு ____________
   அ) மாநிலத் தலைவர்
   ஆ) அரசின் தலைவர்
   இ) குடியரசுத் தலைவரின் முகவர்
   ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

3. கீழ்க்காணும் எந்த ஒன்று ஆளுநரின் அதிகாரமல்ல
   அ) சட்டமன்றம் ஆ) நிர்வாகம்
   இ) நீதித்துறை ஈ) தூதரகம்

4. ஆங்கிலோ–இந்தியன் வகுப்பினரிலிருந்து ஒரு பிரதிநிதியை சட்டமன்றத்திற்கு யார் நியமிக்கிறார்?
   அ) குடியரசுத் தலைவர்
   ஆ) ஆளுநர்
   இ) முதலமைச்சர்
   ஈ) சட்டமன்ற சபாநாயகர்

5. ஆளுநர் யாரை நியமனம் செய்வதில்லை?
   அ) முதலமைச்சர்
   ஆ) அரசுப் பணியாளர் தேர்வாணயத்தின் தலைவர்
   இ) மாநில தலைமை வழக்குரைஞர்
   ஈ) உயர் நீதிமன்ற நீதிபதிகள்

6. அமைச்சரவையின் தலைவர்
   அ) முதலமைச்சர் ஆ) ஆளுநர்
   இ) சபாநாயகர் ஈ) பிரதம அமைச்சர்

7. மேலவை உறுப்பினராவதற்கு குறைந்த பட்ச வயது
   அ) 25 வயது ஆ) 21 வயது
   இ) 30 வயது ஈ) 35 வயது

8. கீழ்க்காணும் மாநிலங்களில் எந்த ஒன்று ஈரவை சட்டமன்றத்தைப் பெற்றிருக்கவில்லை?
   அ) ஆந்திரப் பிரதேசம்
   ஆ) தெலுங்கானா
   இ) தமிழ்நாடு
   ஈ) உத்தரப் பிரதேசம்

9. இந்தியாவில் முதன்முதலில் உயர் நீதிமன்றங்கள் தொடங்கப்பட்ட இடங்கள்
   அ) கொல்கத்தா, மும்பை, சென்னை
   ஆ) டெல்லி மற்றும் கொல்கத்தா
   இ) டெல்லி, கொல்கத்தா, சென்னை
   ஈ) கொல்கத்தா, சென்னை, டெல்லி

10. கீழ்க்காணும் எந்த மாநிலங்கள் பொதுவான உயர் நீதிமன்றத்தைப் பெற்றுள்ளன?
   அ) தமிழ்நாடு மற்றும் ஆந்திரப்பிரதேசம்
   ஆ) கேரளா மற்றும் தெலுங்கானா
   இ) பஞ்சாப் மற்றும் ஹரியானா
   ஈ) மகாராஷ்டிரா மற்றும் குஜராத்

### II கோடிட்ட இடத்தை நிரப்புக

1. ஆளுநர் தனது இராஜினாமா கடிதத்தை ____________ இடம் கொடுக்கிறார்.
2. சட்டமன்ற உறுப்பினர்கள் (MLAs) ____________ ஆல் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
3. ____________ மாநிலங்களில் உள்ள பல்கலைக் கழகங்களின் வேந்தராக செயல்படுகிறார்.
4. அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழுத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் ____________ ஆல் மட்டுமே பணிநீக்கம் செய்ய முடியும்.

### III பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| 1. | ஆளுநர் | – | அரசாங்கத்தின் தலைவர் |
| 2. | முதலமைச்சர் | – | மாநில அரசின் தலைவர் |
| 3. | அமைச்சரவை | – | தீர்ப்பாயங்கள் |
| 4. | மேலவை உறுப்பினர் | – | சட்டமன்றத்திற்குப் பொறுப்பானவர்கள் |
| 5. | ஆயுதப் படையினர் | – | மானியங்களுக்கு வாக்களிக்க முடியாது |

### IV சரியான கூற்றினைத் தேர்வு செய்க.

1. **கூற்று:** மாநில சட்டமன்றத்திற்கு சட்ட அதிகார வரம்பு உண்டு

   **காரணம்:** குடியரசுத் தலைவரின் ஒப்புதலுடன் மட்டுமே மாநிலப் பட்டியலிலுள்ள சில மசோதாக்களைச் சட்டமன்றத்தில் அறிமுகம் செய்யலாம்.



10th_Civics_Unit 3_TM.indd 283 24-03-2020 12:40:01

www.tntextbooks.in

அ) கூற்று தவறு ஆனால் காரணம் சரி

ஆ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு

இ) கூற்று மற்றும் காரணம் சரி மேலும் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்

ஈ) கூற்று மற்றும் காரணம் சரி மேலும் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல

## V சுருக்கமாக விடையளி

1. மாநில ஆளுநரின் முக்கியத்துவம் யாது?
2. ஆளுநராக நியமிக்கப்படுவதற்கான தகுதிகள் யாவை?
3. உயர் நீதிமன்றத்தின் தனக்கே உரிய நீதிவரையறை அதிகாரங்கள் யாவை?
4. உயர் நீதிமன்றத்தின் மேல்முறையீட்டு அதிகாரங்கள் பற்றி நீவிர் புரிந்து கொண்டதென்ன?

## VI விரிவான விடையளி

1. முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை விவரி.
2. ஆளுநரின் சட்டமன்ற அதிகாரங்களை விவரி.
3. அமைச்சரவையின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை ஆய்க.

## VII செயல்திட்டம் மற்றும் செயல்பாடு

1. மாநில அரசாங்கத்தின் நிர்வாக முறையை விளக்கும் ஒரு விளக்கப்படம் (Flow chart) தயார் செய்க.
2. அண்டை மாநிலங்களின் முதலமைச்சர்கள், ஆளுநர்கள் பெயர்ப் பட்டியலோடு தமிழ்நாட்டின் முதலமைச்சர், ஆளுநர், அமைச்சர்களின் பெயரினைப் பட்டியலிடுக.

## மேற்கோள் நூல்கள்


1. D.D. Basu - Introduction of the Constitution of India, S.C. Sarkar & Sons (Private) Ltd, 1982.
2. Subhash Kashyap - Our Constitution, National Book Trust, India, 2011.


## இணையதள வளங்கள்

1. www.tnrajbhavan.gov.in
2. www.tn.gov.in
3. www.hcmadras.tn.nic.in

## இணையச் செயல்பாடு

### மாநில அரசு

**செயல்முறை**

- கீழ்காணும் உரலி / விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தி இச்செயல்பாட்டிற்கான இணையப் பக்கத்திற்குச் செல்லவும்.
- மாநிலத்தின் அதிகாரப்பூர்வ வலைத்தளத்தையும் அதன் செயல்பாட்டையும் பார்வையிட இந்திய வரைபடத்தின் ஏதேனும் ஒரு மாநிலத்தை சொடுக்கச் செய்யவும்.
- எடுத்துக்காட்டாக, தமிழ்நாடு மாநிலத்தில் சொடுக்கவும். அதில் தமிழ்நாட்டின் அதிகாரப்பூர்வ வலைதளத்தை காணலாம்.
- அதேபோல் பிறமாநிலங்களின் விவரங்களை நீங்கள் பார்க்கலாம்.நிகழ்வுகளைப் பற்றி விளக்கமாக தெரிந்துகொள்ள திரையில் தோன்றும் வரைபடத்தில் எதேனும் ஒரு இடத்தினை தேர்ந்தெடுக்கவும் .

**உரலி:** https://www.mea.gov.in/india-at-glance.htm

B373_10_SOCIAL_TM



10th_Civics_Unit 3_TM.indd 284 24-03-2020 12:40:01

www.tntextbooks.in

# அலகு – 5

# இந்தியாவின் சர்வதேச உறவுகள்



## கற்றலின் நோக்கங்கள்

- நமது அண்டை நாடுகளுடனான கொள்கைகள் குறித்துப் புரிந்துகொள்ளுதல்
- வளர்ந்த நாடுகள் குறித்த இந்தியாவின் கொள்கையின் முக்கியத்துவத்தை அறிந்துகொள்ளுதல்
- சர்வதேச நிறுவனங்களுடனான இந்தியாவின் உறவுகள் பற்றிய அறிவைப்பெறுதல்
- பிரிக்ஸ் (BRICS) மற்றும் ஒபெக் (OPEC) நிறுவனங்களின் சாதனைகளை அறிதல்
- உலக நாடுகளிடையே இந்தியாவின் உன்னத நிலை குறித்த மதிப்பினை உள்வாங்குதல்

E252LW


*"ஒரு மோசமான அண்டை நாடு ஒரு துரதிர்ஷ்டம்; அதுவே ஒரு நல்ல நாடாக அமையுமேயானால் அதைவிட ஆசீர்வாதம் வேறு இல்லை".*

– ஹெசாய்ட்

## அறிமுகம்

சுதந்திர இந்தியா தொடர்ந்து உலக அமைதியையும் சர்வதேச ஒற்றுமையையும் நிலைநிறுத்த ஊக்கமளிக்கிறது. இந்தியா வெளிப்படையாக இராணுவக் கூட்டணியைக் கைவிட்டாலும், அமைதி மற்றும் பொருளாதார வளர்ச்சிக்காக மற்ற நாடுகளுடன் ஒத்துழைப்பதிலும் ஒருங்கிணைப்பதிலும் மிகவும் ஈடுபாட்டுடன் செயல்படுகிறது. இந்தியாவின் முதல் பிரதமர் ஜவகர்லால் நேரு கூறியது போல *"நாம் ஒருவரை முற்றிலும் சார்ந்தோ அல்லது தனித்தோ இருக்க முடியாது. ஆனால் இவ்வுலகில் ஒருவரை ஒருவர் சார்ந்து வாழ்கிறோம்"*.

இந்தியா தனது தேவைகள் மற்றும் விருப்பங்களுக்கு ஏற்ற வகையில் அமைதியான வளமான அண்டை நாடுகளுடனான உறவை விரும்புகிறது. இந்தியா எப்பொழுதும் அமைதியை விரும்பும் நாடாக இருப்பதோடு மட்டுமல்லாமல் உலக அமைதிக்குத் தொடர்ந்து கடுமையாகப் போராடி வருகிறது. ஒரு நாடு வளர்ச்சியில் போதிய அளவு முன்னேற்றம் அடைவதற்குச் சர்வதேச உறவுகளைப் பராமரிப்பது என்பது முக்கியமான ஒரு பகுதி ஆகும். இந்தியா அதிக மக்கள் தொகை கொண்ட நாடாக இருந்தாலும் ஏராளமான அண்டை நாடுகளுடன் சூழப்பட்டிருப்பதால் அந்நாடுகளுடன் நட்புறவு மற்றும் நல்ல உறவினைப் பராமரித்து வருகிறது.






10th_Civics_Unit_5_TM_new.indd 294 24-03-2020 12:42:12

## 5.1 இந்தியாவும் அதன் அண்டை நாடுகளும்

அண்டை நாட்டுறவைப் பொருத்த வரையில் இந்தியா ஒரு உன்னத நிலையைக் கொண்டுள்ளது. இந்திய துணைக்கண்டத்தில் கடந்த 5000 ஆண்டுகளாக நிலவி வந்த ஒரே மாதிரியான பண்பாட்டின் ஒரு பகுதியாக அண்டை நாடுகள் விளங்குகின்றன.

- மிகப்பரந்த இந்தியாவின் வடமேற்கில் பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான்
- வடக்கில் சீனா, நேபாளம், பூடான்
- கிழக்கில் வங்காளதேசம்
- தூரக்கிழக்கில் மியான்மர்
- தென்கிழக்கில் இலங்கை, தென்மேற்கில் மாலத்தீவு போன்ற இந்தியாவிற்கு மிக அருகில் அமைந்துள்ள இரு நாடுகளும் இந்திய பெருங்கடலால் பிரிக்கப்பட்டுள்ளன. இந்தியா இந்த அண்டை நாடுகளுடன் வரலாற்று ரீதியாகவும், சமய, பொருளாதார, இன மற்றும் மொழியின் அடிப்படையிலும் நல்லுறவைப் பேணுகிறது. அண்டை நாடுகளுடனான இந்தியாவின் உறவுகளைப் பற்றி அறிந்து கொள்வோம்.

சீனாவும் ரஷ்யாவும் அதிக எண்ணிக்கையிலான அண்டை நாடுகளுடன் தனது எல்லையைப் பகிர்ந்து கொள்கின்றன.

### இந்தியாவும் ஆப்கானிஸ்தானும்

இந்தியா, ஆப்கானிஸ்தான் உறவு போர்த்திறம் சார்ந்த பங்களிப்பு ஒப்பந்தம் (Strategic Partnership Agreement) மூலம் வலிமை பெற்றுள்ளது. இந்த ஒப்பந்தம் ஆப்கானிஸ்தானின் உள்கட்டமைப்பை மறுசீரமைக்கவும், நிறுவனங்கள், வேளாண்மை, நீர், கல்வி, சுகாதாரம் மற்றும் வரியில்லாமல் இந்திய சந்தையை எளிதாக அடைதல் போன்ற துறைகளில் ஒத்துழைப்பை நல்கவும் வழிகோலுகிறது. ஹீரட் மாகாணத்திலுள்ள சல்மா அணையைக் கட்ட ஆப்கானிஸ்தானிற்கு இந்தியா உதவியது. ஆப்கானிஸ்தானின் பாதுகாப்புப் படையில் பணிபுரிந்து உயிரிழந்த வீரர்களின் குழந்தைகள் 500 பேருக்கு இந்தியா மற்றும் ஆப்கானிஸ்தானில் உள்ள பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயில்வதற்கான உதவித்தொகையை இந்தியா அறிவித்துள்ளது. மேலும் ஆப்கானிஸ்தானின் பொது சுகாதாரம் மற்றும் சிறு தொழில் நிறுவனங்களின் மேம்பாட்டிற்காக இந்தியா ஆதரவு அளித்து வருகிறது. ஆப்கானிஸ்தானில் முதலீடு செய்வதில் முன்னணியில் இந்தியா இருப்பதோடு, பொதுத்துறை மற்றும் தனியார் துறையைச் சேர்ந்த இந்திய நிறுவனங்கள் ஆப்கானிஸ்தானில் சுரங்கத் தொழிலில் அதிக அளவில் முதலீடு செய்யத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இந்தியா தனது விளையாட்டுத் திறமையைப் பறைசாற்றும் விதமாக காந்தகார் சர்வதேச கிரிக்கெட் மைதானத்தைக் கட்டியுள்ளது. இந்தியாவின் மகளிர் சுய வேலை வாய்ப்புச் சங்கம் நிலையான வாழ்வாதாரம் மற்றும் தன்னம்பிக்கை பெறுவதற்குமான பயிற்சியை ஆப்கானிஸ்தானில் அளிக்கிறது. இந்தியா இவ்விதமாக ஆப்கானிஸ்தானின் வளர்ச்சிக்கு நிதி உதவி மற்றும் கடனுதவி அளித்துப் பங்காற்றி வருகிறது.

சிந்துவெளி நாகரிக காலம் முதல் இந்தியாவும் ஆப்கானிஸ்தானும் பன்முகத்தன்மையையும் மிக ஆழமான நட்புறவையும் கொண்டிருந்தன. கனிஷ்கருடைய ஆட்சியின் போது ஏராளமான இந்திய சமய பரப்புக் குழுக்கள் சீனா, மத்திய ஆசியா மற்றும் ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளுக்குத் தங்கள் மதத்தைப் பரப்பச் சென்றனர்.

பலுசிஸ்தான் (தற்காலத்திய பாகிஸ்தானின் எல்லைப்புற மாகாணம்) பகுதியைச் சார்ந்த கான் அப்துல் கபார்கான் இந்திய விடுதலைப் போராட்ட இயக்கத்தின் முக்கியத் தலைவரும் இந்திய தேசிய காங்கிரசின் தீவிர ஆதரவாளரும் ஆவார்.


### இந்தியாவும் வங்காளதேசமும்

வங்காளதேசத்தின் (முந்தைய கிழக்கு பாகிஸ்தான்) சுதந்திரத்தை அங்கீகரித்த முதல் நாடு இந்தியா ஆகும். இந்தியாவும் வங்காளதேசமும் 4,096.7 கி.மீ நீளம் கொண்ட மிக நீண்ட நிலப்பரப்பை எல்லையாகப் பகிர்ந்து கொள்கின்றன. அகர்தலாவிற்கும் (இந்தியா) அகவுராவிற்கும் (வங்காளதேசம்) இடையேயான ரயில் போக்குவரத்து இணைப்பிற்கான முன்மொழிவை செயல்படுத்த இந்தியா திட்டமிட்டுள்ளது. இந்தியாவின் பகுதிகளான கொல்கத்தாவில் இருந்து அகர்தலாவிற்கு டாக்கா வழியாக செல்வதற்கான சாலை வழியினை BBIN– MVA (வங்காளதேசம், பூடான், இந்தியா, நேபாளம் மோட்டார் வாகன ஒப்பந்தம்) ஒப்பந்தத்தின் கீழ் அமைக்க இந்தியாவிற்கு வங்காளதேசம் அனுமதி வழங்கியுள்ளது. கங்கை நீரைப் பகிர்ந்து கொள்ள 1977இல் கையெழுத்தான பராக்கா ஒப்பந்தம் ஒரு வரலாற்று ஒப்பந்தமாகும். இந்தியாவிற்கும் வங்காளதேசத்திற்கும் பொதுவானதாக உள்ள 54 நதிகளிலிருந்து அதிகபட்ச நலனைப் பெறுவதற்காக இரு நாட்டுக் கூட்டு நதி ஆணையம் செயல்படுகிறது. இந்திய அரசாங்கம் 'வங்காளதேசத்திற்கான உதவி' என்ற



10th_Civics_Unit_5_TM_new.indd 295 24-03-2020 12:42:13

www.tntextbooks.in




திட்டத்தின் கீழ் கட்டடங்கள் கட்டவும், ஆய்வுக்கூடங்கள், மருந்தகங்கள் மற்றும் ஆழ்குழாய் கிணறுகள் அமைக்கவும் மானியம் வழங்கி உதவுகிறது. மேலும் இந்திய பண்பாட்டு உறவுகளுக்கான குழுவின் (ICCR) மூலம் வங்காளதேச மாணவர்களுக்கு ஆண்டுதோறும் உதவித்தொகை அளிக்கப்படுவதோடு டாக்கா பல்கலைக்கழகத்தில் 'தாகூர் இருக்கை' ஏற்படுத்தவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. (மேற்குவங்காளம்) சிலிகுரி–பர்பதிபூர் (வங்காளதேசம்) ஆகிய இடங்களுக்கிடையே 130 கிலோ மீட்டர் நீளம் கொண்ட நட்புறவுக் குழாய் போக்குவரத்தை அமைக்கும் பணியை இரு நாடுகளும் இணைந்து தொடங்கி வைத்தன.

இந்தியாவிற்குச் சொந்தமான டீன்பிகா (Teen Bigha) என்ற பகுதி மேற்கு வங்காளம் மற்றும் வங்காளதேசத்திற்கு இடையேயான எல்லையில் உள்ளது. குறுகலான இப்பாதை 2011ஆம் ஆண்டு வங்காளதேசத்திற்குக் குத்தகைக்கு விடப்பட்டது.

## இந்தியாவும் பூடானும்

பூடான் இமயமலையில் உள்ள ஒரு சிறிய முடியாட்சி நாடு ஆகும். 'இடி மின்னல் நிலம்' என்று அறியப்படும் இது உலகின் ஏழ்மையான நாடுகளில் ஒன்றாகும். இந்தியா மற்றும் பூடான் இடையேயான இராஜதந்திர உறவுகள் 1968ஆம் ஆண்டில் இந்திய பிரதிநிதி ஒருவரைத் திம்புவில் நியமித்ததிலிருந்து தொடங்கியது. பூடான் நிலங்களால் சூழப்பட்ட நாடாகும். அதனால் கடல் சார்ந்த தொடர்புகளுக்கு இந்தியாவையே பெரிதும் சார்ந்துள்ளது. பூடானின் பொருளாதார மேம்பாட்டிற்கு இந்தியா முதன்மைப் பங்காற்றுகிறது. இந்தியா 'பாரத் முதல் பூடான் வரை' (B2B) என்று அறியப்படும் இருதரப்பு வணிக உறவினை அறிவித்தது. பூடான் மாணவர்கள் புகழ் பெற்ற நிறுவனங்களில் உயர் கல்வி பெறுவதற்கு இந்தியா உதவித்தொகை அளிப்பதோடு பூடானில் ஒரு டிஜிட்டல் நூலகம் அமைத்திடவும் உதவியுள்ளது. மதிப்புமிக்க நேரு–வாங்சுக் கல்வி உதவித்தொகையானது தகுதியும் திறமையும் கொண்ட பூடான் நாட்டினருக்கு, தேர்ந்தெடுக்கப்பட்ட முதன்மையான இந்திய கல்வி நிறுவனங்களில் கல்வி பயில வாய்ப்பு அளிக்கிறது. இந்தியா மற்றும் பூடான் இடையே இரு தரப்பு ஒத்துழைப்பிற்கு நீர்மின்சக்தித் துறை ஒரு முக்கிய எடுத்துக்காட்டாக விளங்குகிறது. இதுவரை இந்திய அரசாங்கம் மூன்று நீர்மின்சக்தி (சுக்கா, குரிச்சி, தலா) திட்டங்களைப் பூடானில் அமைத்துள்ளது. பூடான் நாட்டில் தொலைத் தொடர்பு வசதியை ஏற்படுத்தவும் மருத்துவமனைகள், சாலைகள் மற்றும் பாலங்கள் ஆகியவற்றைக் கட்டுவதற்கும் அந்நாட்டின் அடிப்படைக் கட்டமைப்பை மேம்படுத்தவும் இந்தியா உதவியுள்ளது.

குரு பத்மசம்பவா எனும் புத்த துறவி இந்தியாவிலிருந்து பூடானுக்குச் சென்றார். அங்கு தனது செல்வாக்கை ஏற்படுத்தி புத்த சமயத்தைப் பரப்பியதன் மூலம் இரு நாட்டு மக்களிடையே பாரம்பரியத்தை உறுதிப்படுத்தினார்.

## இந்தியாவும் சீனாவும்

புவியியல் அமைப்பு, மக்கள்தொகை, திறன் கொண்ட மனித ஆற்றல் மற்றும் நாகரிகத் தொன்மை ஆகியவற்றின் அடிப்படையில் இந்தியாவுடன் ஒப்பிடுவதற்குத் தகுதி வாய்ந்த நாடு சீனா மட்டுமே. உலகில் உள்ள உற்பத்தி மண்டலங்களில் ஒன்றாக இருக்கும் சீனா, இந்தியாவிற்கு மிக முக்கியமான நாடாகும். இந்தியாவும் சீனாவும் உலக வர்த்தக நிறுவனம், சர்வதேச காலநிலை மாற்றம் குறித்த பேச்சுவார்த்தைகள், உலகவங்கி சீர்திருத்தம் ஆகியவற்றில் ஒத்த கருத்தைக் கொண்டுள்ளன. சீனாவால் துவங்கி வைக்கப்பட்ட ஷாங்காய் ஒத்துழைப்புக் கூட்டமைப்பில் (Shanghai Cooperation) இந்தியாவிற்குப் பார்வையாளர் தகுதியை வழங்கியுள்ளது. அதேபோன்று சார்க் (SARRC) அமைப்பில் பார்வையாளர் தகுதி சீனாவிற்கு வழங்கப்பட்டுள்ளது. இருநாடுகளும் பல்வேறு மாறுபட்ட துறைகளில் பேச்சுவார்த்தை நடத்திட வழிகளை ஏற்படுத்தியுள்ளன. இருதரப்பு வணிகம் மகத்தான வளர்ச்சியைக் கண்டுள்ளது. இந்தியாவும் சீனாவும் கல்வி பரிமாற்றத் திட்டத்தில் கையெழுத்திட்டுள்ளன. அதன்படி இரு நாடுகளிலும் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் உயர் கல்வி பயில தலா 25 மாணவர்களுக்குக் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது.



10th_Civics_Unit_5_TM_new.indd 296 24-03-2020 12:42:13

**மக்மகான் எல்லைக் கோடு** – இந்தியா, சீனா மற்றும் பூடானின் கிழக்குப் பகுதி ஆகிய பகுதிகளுக்கு இடையேயான எல்லைக்கோடு ஆகும். இது 1914ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் இந்தியா, திபெத் மற்றும் சீனா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. பிரிட்டிஷ் இந்தியாவின் சார்பில் இந்தியாவிற்கான செயலாளர் ஆர்தர் ஹென்றி மக்மகான் இக்கூட்டத்தில் கலந்து கொண்டார்.

## இந்தியாவும் மாலத்தீவும்


மாலத்தீவு இந்தியப் பெருங்கடலில் இலட்சத்தீவுகளுக்குத் தெற்கில் அமைந்துள்ளது. இதன் அமைவிட முக்கியத்துவத்தினாலும் அருகாமையில் அமைந்திருப்பதாலும் மாலத்தீவினுடனான உறவு இந்தியாவிற்கு மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. இந்தியாவும் மாலத்தீவும் இனம், மொழி, பண்பாடு, சமயம் மற்றும் வணிகத் தொடர்பு ஆகிய பல பரிமாணத் தொடர்புகளைப் பழங்காலத்திலிருந்தே சுமுகமாகப் பேணி வருகின்றன. இரு நாடுகளுக்கிடையே வணிகம் மற்றும் சுற்றுலா மேம்பட்டு இருக்கின்றன. இந்தியப் பெருங்கடல் பகுதியில் ஒருங்கிணைந்த ரோந்து மற்றும் வான்வழி கண்காணிப்புத் தகவல் பரிமாற்றம் ஆகியவற்றின் மூலம் கடல்சார் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான ஒத்துழைப்பை நல்க இரு நாடுகளும் ஒப்புக் கொண்டுள்ளன.

## இந்தியாவும் மியான்மரும்

இந்தியா தன் இரண்டாவது மிக நீளமான எல்லையை மியான்மர் நாட்டோடு பகிர்ந்து கொண்டுள்ளது (1989ஆம் ஆண்டு வரை பர்மா என அறியப்பட்டது). இந்தியாவின் நான்கு வடகிழக்கு மாநிலங்களான அருணாச்சலப் பிரதேசம், நாகாலாந்து, மணிப்பூர், மிசோரம் ஆகியவை மியான்மர் நாட்டுடன் தங்கள் எல்லையைப் பகிர்ந்து கொள்கின்றன. இந்தியா, தென் கிழக்காசியாவிற்குள் செல்வதற்கான நுழைவு வாயிலாக மியான்மர் இருக்கிறது. கொல்கத்தாவை மியான்மரில் உள்ள சிட்வேயுடன் இணைப்பதற்காகச் சாலை – நதி – துறைமுகம் – சரக்குப் போக்குவரத்துத் திட்டமான கலடன் பன்முக மாதிரி போக்குவரத்துத் திட்டத்தினை (Kaladan Multi Model Transit Transport) இந்தியா உருவாக்கி வருகிறது. தென்கடலில் பொருளாதார மண்டலத்தை உருவாக்குவதற்காகக் கொல்கத்தா நகரை ஹோசிமின் உடன் இணைக்கும் நோக்கம் கொண்ட ஒரு திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. மியான்மர், கம்போடியா, வியட்நாம் வழியே சாலைப் போக்குவரத்தையும் கொண்ட இத்திட்டத்தின் ஒரு பகுதியாகக் கவுகாத்தியுடன் மாண்டலேவை இணைக்கும் முதற்கட்டப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. நமது எரிபொருள் தேவைகளான பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு ஆகியவற்றில் முக்கியப் பங்குதாரராக மியான்மர் உள்ளது. சில இந்திய நிறுவனங்களான எஸ்சார் (ESSAR), கெயில் (GAIL), ஓஎன்ஜிசி (ONGC), விதேஷ் லிமிடெட் (Videsh Ltd.,) ஆகிய நிறுவனங்கள் மியான்மரின் எரிசக்தித்துறையில் முதலீடு செய்துள்ளன.

## இந்தியாவும் நேபாளமும்

இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையிலான இயற்கையாக அமைந்த இடைப்படு நாடு நேபாளம்







10th_Civics_Unit_5_TM_new.indd 297 24-03-2020 12:42:14

www.tntextbooks.in

ஆகும். நேபாளம் நிலப்பகுதிகள் சூழப்பட்ட நாடாக இருப்பதால் பொருளாதார உதவிக்கும் வழித்தடங்களுக்கும் இந்தியாவையே சார்ந்துள்ளது. இந்தியாவின் ஐந்து மாநிலங்களான சிக்கிம், மேற்கு வங்காளம், பீகார், உத்தரப்பிரதேசம், உத்தரகாண்ட் ஆகியவை நேபாள எல்லையைப் பகிர்ந்து கொள்கின்றன. இரு நாட்டின் எல்லை மாவட்டங்களில் வசிக்கும் மக்கள் தங்களிடையே ஆழமான பண்பாட்டுப் பிணைப்பினைக் கொண்டுள்ளனர். நேபாளத்தின் பெரிய முதலீட்டாளராக இந்தியா திகழ்கிறது.

அடிப்படைக் கட்டமைப்பு, நீர்ப்பாசனம், சுகாதாரம், ஆற்றல் திட்டங்கள் மற்றும் சமூக மேம்பாட்டுத் திட்டங்கள் ஆகியவற்றை மையமாகக் கொண்ட மேம்பாட்டிற்கு இந்தியா உதவுவதோடு, நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளையும் அளித்து வருகிறது. இந்தியாவையும் காத்மண்டுவையும் இணைப்பதற்கான 204 கிலோ மீட்டர் நீளமுள்ள மகேந்திர ராஜ் மார்க் (Mahendra Raj Marg) என்னும் இணைப்பை இந்தியா கட்டியுள்ளது. நேபாளம் மிக வேகமாக ஓடும் ஆறுகளைத் தன்னகத்தே கொண்டுள்ளதால் நீர் மின்சக்தி நிலையங்களை நிறுவுவதற்கு அதன் நிலப்பரப்பு ஏற்றதாக உள்ளது. 18 ஆண்டுகளாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஒப்பந்தமான 5600 மெகாவாட் பஞ்சேஷ்வர் திட்டப்பணிகளை இந்தியா மேற்கொண்டு உள்ளது. இந்தியா மற்றும் நேபாள மக்கள் ஆன்மீக பயணங்களுக்காக இரு நாடுகளுக்கும் சென்று வருகின்றனர். நேபாளத்தில் பசுபதி, ஜனக்பூர் ஆகிய பாரம்பரியமிக்க மையங்கள் உள்ளன. அதே போல இந்தியாவில் வாரணாசி மற்றும் நான்கு தாம்ஸ் (Four Dhaams – பத்ரிநாத், பூரி, துவாரகை மற்றும் இராமேஸ்வரம்) ஆகிய முக்கியமான புனிதத் தலங்களும் உள்ளன. நேபாள மொழியை, இந்தியா அரசியலமைப்பின் எட்டாவது அட்டவணையில் சேர்த்துள்ளது, இரு நாடுகளுக்கும் இடையேயான நட்புப் பிணைப்பை மேலும் அதிகரிக்கச் செய்துள்ளது.




சாரதா ஆற்றின் குறுக்கே ஒரு கூட்டு மின்சக்தித் திட்டம் கட்டப்பட்டு வருகிறது. இத்திட்டம் முறையே மின்சார உற்பத்தி, நீர்ப்பாசன வசதிகள் ஆகியவை இந்தியா மற்றும் நேபாளத்திற்கு உதவும் வகையில் அமைக்கப்பட்டு வருகிறது. சுற்றுச்சூழல் நோக்கில் இந்தியா, நேபாளம் எல்லையோரம் பல்வேறு எண்ணிக்கையிலான புலிகள் பாதுகாப்பு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்திய மற்றும் நேபாள அரசு இரட்டை நகரங்களான காத்மண்டு–வாரணாசி, லும்பினி – புத்தகயா மற்றும் ஜனக்பூர் – அயோத்தி ஆகிய மூன்று சகோதரி நகர் ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளன.

## இந்தியாவும் பாகிஸ்தானும்

1947ஆம் ஆண்டு இந்திய–பாகிஸ்தான் பிரிவினைக்குப் பின்னர் பல்வேறு முக்கிய விவகாரங்களில் இரு நாடுகளுக்கும் இடையே வேறுபாடு காரணமாக நெருடலான உறவு இருந்து வருகிறது. பாகிஸ்தானுடனான உறவில் தீவிரவாதமே தொடர்ந்து நமது முக்கியக் கவலையாக உள்ளது. இந்தியாவுடனான உறவுகளைப் பராமரிப்பதில் பாகிஸ்தான் விரோத மனப்பான்மையுடனே இருந்து வருகின்றது. ஆனால் இந்தியா, உறவுகளை மேம்படுத்தவும் நிலைநிறுத்தவும் தீவிரமாக முயன்று வருகிறது. எல்லை தாண்டிய துப்பாக்கிச் சண்டை மற்றும் தீவிரவாதிகள் தாக்குதல் ஆகியவை காஷ்மீர் மக்களின் உயிர்களைக் பலி கொண்டது. மேலும் அம்மக்கள் ஏழ்மை நிலை மற்றும் மனித உரிமை மீறல் ஆகியவற்றால் அவதியுறுகின்றனர். இந்தியா பாகிஸ்தானிடையே காஷ்மீர் முக்கிய விவகாரமாக இருந்து வருவதோடு இரு நாடுகளும் வெளிப்படையாகவே மோதிக்கொள்ளும் நிலையினை பல்வேறு சமயங்களில் ஏற்படுத்தியுள்ளது.

**கட்டுப்பாடுக் கோடு**

1949ஆம் ஆண்டு தீர்மானிக்கப்பட்ட போர் நிறுத்தக் கோடு 1972ஆம் ஆண்டிற்குப் பின்னர் எல்லைக் கட்டுப்பாடுக் கோடு என அழைக்கப்பட்டது. இது 1972ஆம் ஆண்டின் சிம்லா ஒப்பந்தத்தின் கீழ் இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையே ஏற்றுக்கொள்ளப்பட்ட எல்லையாகும். இக்கோடு பிரிவினை செய்யப்பட்டபோது ராட்க்ளிஃப் கோடு (RadCliffe Line) என்று அழைக்கப்பட்டது. (ராட்க்ளிஃப் என்பவர் எல்லை ஆணையத்தின் தலைவராக இருந்தார்) இக்கோடு தற்போது கட்டுப்பாடுக் கோடு என அழைக்கப்படுகிறது.



10th_Civics_Unit_5_TM_new.indd 298 24-03-2020 12:42:14

எல்லை தாண்டிய பயங்கரவாதம் மிகப்பெரிய அச்சுறுத்தல் ஆகும். சிம்லா ஒப்பந்தம் மற்றும் லாகூர் பிரகடனம் ஆகியவற்றின் மூலம் இரு நாடுகளுக்குமிடையேயான உறவை மேம்படுத்தவும் நேர்மறையான மாற்றங்களைக் கொண்டு வரவும் இந்தியா முயன்றுள்ளது.


### இந்தியாவும் இலங்கையும்

இந்திய நாடு பண்பாடு, கலாச்சார, வரலாறு மற்றும் சமய உறவுகளை இலங்கையுடன் கொண்டுள்ளது. பாக் ஜலசந்தியால் பிரிக்கப்பட்டுள்ள இந்தியாவும் இலங்கையும் சிறந்த வணிக உறவுகளைத் தங்களுக்குள் ஏற்படுத்திக் கொள்வதோடு இருதரப்பு ஒப்பந்தங்கள் மட்டுமல்லாமல் சார்க் அமைப்பின் மூலமும் மேம்பாட்டிற்கு ஒருங்கிணைந்து செயலாற்றி வருகின்றன. இந்தியா மற்றும் இலங்கை உறவு நட்பு ரீதியாக அமைந்திருக்கிறது எனினும் தமிழ் இனப்பிரச்சினை தொடர்பான காலகட்டத்தில் சிறிது காலத்திற்கு மட்டும் உறவில் பின்னடைவு ஏற்பட்டது. இரு நாடுகளும் மரபுரீதியாக ஒன்றுக்கொன்று நெருங்கிய நிலையில் இருந்து வருகின்றன. இலங்கையில் முதலீடு செய்துள்ள நாடுகளில் இந்தியா முன்னணியில் இருப்பதோடு, பெட்ரோலியம், சில்லறை வணிகம், தகவல் தொழில்நுட்பம், ரியல் எஸ்டேட், தொலைத் தொடர்புகள் மற்றும் சுற்றுலா போன்ற பல்வேறு துறைகளில் இந்தியா முதலீடு செய்துள்ளது. இலங்கையின் முதலீடுகள் இந்தியாவில் சரக்கு சேவை மற்றும் தளவாடத்துறை ஆகியவற்றைத் தவிர பிராண்டிக்ஸ் (Brandix) (விசாகப்பட்டினத்தில் உள்ள ஆடை நகரம்) எம்.ஏ.எஸ். ஹோல்டிங்ஸ் (MAS Holdings), ஜான் கீல்ஸ் (John Keels), ஹேலேஸ் (Hayleys) போன்றவற்றிலும் செய்துள்ளது. இந்தியா தகுதியுள்ள இலங்கை மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகையை ஆண்டுதோறும் அளித்து வருகிறது. இந்தியாவின் நாளந்தா பல்கலைக்கழகத் திட்டத்தில் இலங்கை ஒரு பங்குதாரர் ஆகும்.

அசோகர் புத்த மதத்தைப் பரப்புவதற்காக அவரது மகன்மகிந்தாவையும்மகள்சங்கமித்திரையையும் இலங்கைக்கு அனுப்பினார். சோழ அரசர்களான முதலாம் இராஜராஜன் மற்றும் முதலாம் இராஜேந்திரன் ஆகியோர் இலங்கையின் வடபகுதியைக் கைப்பற்றினர்.

## 5.2 வளர்ச்சியடைந்த நாடுகளுடனான இந்தியாவின் உறவுகள்

ஒரு வளர்ந்த நாடு என்பது இறையாண்மை கொண்ட நாடாகும். இது மிகவும் வளர்ந்த பொருளாதாரம் மற்றும் குறைந்த தொழில்மயமான




தேசத்துடன் ஒப்பிடும்போது மேம்பட்ட தொழில்நுட்ப உள்கட்டமைப்பைக் கொண்டுள்ளதும் ஆகும். இந்தியா வல்லரசு நாடுகளுடன் மிக கவனத்துடன் தன்னைச் சமநிலைப்படுத்தி உள்நாட்டு வளர்ச்சிக்கான அதிகப் பலனைப் பெறுவதற்கு முயன்று வருகிறது.

#### அ. அமெரிக்க ஐக்கிய நாடுகள்

அமெரிக்காவும் இந்தியாவும் புதிய தலைமுறை இராணுவக் கூட்டாண்மைக்கு வழிவகுக்கும் தகவல் தொடர்பு, இணக்கத்தன்மை மற்றும் பாதுகாப்பு ஒப்பந்தத்தில் (Communication Compatibility and Security Agreement – COMCASA) கையெழுத்திட்டுள்ளன. இந்த ஒப்பந்தம் 10 ஆண்டுகள் காலவரையறை கொண்டதாகும். இதன்படி அமெரிக்க ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு உபகரணங்களில் பயன்படுத்தப்படும் தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தைப் பெறுவதற்கான வழிவகை ஏற்படுவதோடு, இரு நாடுகளின் இராணுவங்களுக்கிடையே நிகழ்நேரத் தகவல் பகிர்வுக்கும் அனுமதியளிக்கிறது.

#### ஆ. ஐரோப்பிய நாடுகள்

அனைத்து விவகாரங்களிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் இருந்து வருவதோடு குறிப்பாகப் பாதுகாப்பு, பயங்கரவாத எதிர்ப்பு, அணுசக்தி ஆற்றல், விண்வெளி ஆகிய துறைகளில் ஒத்துழைப்பு மற்றும் பரிமாற்றம் அதிகரித்து வருகிறது. பிரான்ஸ் நாட்டின் விண்வெளி ஏவுதளங்கள் இந்தியாவின் இஸ்ரோ (ISRO) அமைப்பினால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. பிரான்ஸ் நாடு இந்தியாவில் உள்ள சண்டிகர், நாக்பூர் மற்றும் பாண்டிச்சேரி போன்ற நகரங்களை திறன்மிகு நகரங்களாக மேம்படுத்த இந்தியாவோடு கூட்டாக ஒத்துழைக்கிறது. இந்தியாவும் பிரான்சும் சர்வதேச சூரியசக்தி கூட்டணியை (International Solar Alliance) அறிமுகப்படுத்தி கடகரேகை மற்றும் மகரரேகை ஆகியவற்றிற்கு இடையே உள்ள நாடுகளைச் சூரிய ஆற்றலுக்கான ஒத்துழைப்பில் ஒன்று சேர்க்கின்றன.

### இ. ஆஸ்திரேலியா

இந்தியாவும் ஆஸ்திரேலியாவும் நம்பிக்கைக்குரிய திட்டங்களைப் பல ஆண்டுகளாக மெதுவாகவும் படிப்படியாகவும் ஏற்படுத்தி வருகின்றன. ஆஸ்திரேலியாவும் இந்தியாவும் ஒருங்கிணைந்து இந்திய ஆஸ்திரேலிய கடற்படை பயிற்சி (AUSINDEX) ஒத்திகையின் மூலம் கடல்சார் ஒத்துழைப்பை மேம்படுத்த உறுதி பூண்டுள்ளன.

### ஈ. ஜப்பான்

ஜப்பான் நாட்டின் ஷிங்கன்சென் (Shinkansen) முறையை இந்தியாவில் அறிமுகப்படுத்த முடிவு செய்தது. இது பாதுகாப்பு மற்றும் துல்லியத் தன்மை கொண்ட உயர்தர அதிவேக ரயில் அமைப்பு ஆகும். டெல்லி மெட்ரோ ரயில் ஜப்பானிய ஒத்துழைப்பில் உருவான வெற்றிகரமான எடுத்துக்காட்டுகளில் ஒன்றாகும். மும்பை, அகமதாபாத் இடையேயான அதிவேக ரயில் போக்குவரத்து (MAHSR) இருநாட்டு ஒத்துழைப்பின் மற்றுமொரு முயற்சியாகும்.

ஜப்பானிய அரசாங்கம் இந்தியக் குடிமக்களுக்கு இந்திய ரயில்வே துறையில் பணிபுரியும் வகையில் ஜப்பானியப் பல்கலைக்கழகத்தில் முதுகலைப் பட்டப்படிப்பைப் படிக்க ஆண்டுதோறும் 20 இடங்களை வழங்கி வருகிறது.

உற்பத்தித் துறையில் உற்பத்தி மற்றும் திறன் இந்தியா (Make in India, Skill India) திட்டங்களில் பங்களிக்கவும் ஜப்பானிய உற்பத்தித் திறன்களை வழங்கி இந்தியாவின் உற்பத்தித் தொழில்துறை தரத்தை மேம்படுத்தவும் 30,000 இந்திய மக்களுக்குப் பயிற்சி வழங்க ஜப்பான் இந்தியா உற்பத்தி நிறுவனம் (Japan India Institute of Manufacturing) அறிவித்துள்ளது.

2017ஆம் ஆண்டு குஜராத், கர்நாடகம், இராஜஸ்தான் மற்றும் தமிழ்நாடு ஆகிய 4 மாநிலங்களில் ஜப்பான் – இந்தியா உற்பத்தி நிறுவனம் (JIM) ஏற்படுத்தப்பட்டுள்ளது. இரண்டு ஜப்பானிய மானியம் மூலமான படிப்புகள் (Japanese Endowed Courses) ஆந்திரப்பிரதேச பொறியியல் கல்லூரிகளில் தொடங்கப்பட்டுள்ளன.

தகவல் தொழில்நுட்பங்கள் தொடர்பான (இணையதள பொருள்கள், செயற்கை நுண்ணறிவு, பெருமளவு தரவு பகுப்பாய்வு) மூன்று இந்திய – ஜப்பான் கூட்டு ஆய்வகங்களை நிறுவுவது சமீபத்திய முயற்சிகளில் அடங்கும்.

## 5.3 இந்தியாவும் மேற்கு ஆசியாவும்

மேற்கு ஆசியா என்பது எகிப்து, அரேபிய தீபகற்பம், துருக்கி மற்றும் ஈரான் ஆகிய நாடுகளை உள்ளடக்கியது ஆகும். இந்தியாவும் மேற்கு ஆசிய நாடுகளும் வரலாற்றுக்கு முந்திய காலத்திலிருந்தே உறவுகளைக் கொண்டிருக்கின்றன. சிந்துவெளி மற்றும் மெசபடோமியா நகரங்களுக்கு இடையே வணிக உறவு ஏற்படுத்தப்பட்டிருந்தது.






10th_Civics_Unit_5_TM_new.indd 300 24-03-2020 12:42:16

மேற்கு ஆசியா பொருளாதார அடிப்படையில் குறிப்பிடத்தக்க பகுதியாக இந்தியாவிற்கு மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. நிலத்தால் சூழப்பட்ட, எண்ணெய் வளமிக்க மத்திய ஆசியாவிற்கு ஒரு நுழைவு வாயிலாக அமைந்துள்ளது.

புதிய நூற்றாண்டு தொடங்கியதிலிருந்து இந்தியா மற்றும் வளைகுடா ஒத்துழைப்பு கவுன்சில் (Gulf Cooperation Council) இடையிலான உறவில் அசாதாரணமான திருப்பம் ஏற்பட்டுள்ளது.

சபஹார் ஒப்பந்தம் எனப்படும் முக்கூட்டு ஒப்பந்தம் இந்தியா, ஆப்கானிஸ்தான் மற்றும் ஈரான் ஆகிய நாடுகளுக்கு இடையே ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி சபஹார் துறைமுகத்தைப் பயன்படுத்தி மூன்று நாடுகளிலும் போக்குவரத்து வழிதடங்கள் ஏற்படுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்துறைமுகம் பாகிஸ்தானைத் தவிர்த்து ஆப்கானிஸ்தான் மற்றும் ஆசியா ஆகிய சந்தைகளை இந்தியா அணுக ஒரு நுழைவு வாயிலாக இருக்கும்.

உலகின் மிகப் பழமையான கடல் வர்த்தக பாதைகளில் ஒன்று சுமேரியாவில் இருந்து பஹ்ரைன் வழியாக மெலுக்கா என்று அழைக்கப்பட்ட சிந்துவெளி நாகரிகம் வரை அமைக்கப்பட்டிருந்தது.

*பிரபல அறிஞரான எம் எஸ் அக்வானி, "இடைக்காலத்தில் இந்தியர்களின் மருத்துவம் கணிதம் மற்றும் வானியல் திறமைகளை அரேபிய மற்றும் ஈரானிய அறிஞர்கள் பெரிதும் மதித்ததோடு, இறுதியில் அவர்களது அறிவுசார் பாரம்பரியத்தின் பகுதியாகவும் ஆனது" என்றும் குறிப்பிடுகிறார்.*

## 5.4 இந்தியா மற்றும் சர்வதேச அமைப்புகள்

இந்தியா ஒரு வலிமை வாய்ந்த வல்லரசாகும். வளர்ந்து வரும் உலகளாவிய செல்வாக்கை அனைத்து நாடுகளிலும் பெற்றுள்ளது. புதிதாக தொழில்மயமாக்கப்பட்ட நாடாக இருப்பதால் பல்வேறு நாடுகளுடன் ஒத்துழைக்கும் சிறந்த வரலாற்றைக் கொண்டுள்ளது. பல்வேறு சர்வதேச அமைப்புகளில் முக்கியத்துவம் வாய்ந்த உறுப்பினராக இந்தியா செயல்படுவதோடு, அவற்றில் சிலவற்றின் நிறுவன உறுப்பினராகவும் இருந்து வருகிறது. இந்தியா முறைப்படி அமைக்கப்பட்ட அமைப்புகளான ஐ.நா.சபை, அணிசேரா இயக்கம், சார்க், ஜி–20 மற்றும் காமன்வெல்த் போன்றவைகளில் உறுப்பினராக உள்ளது.

இராணுவ மோதல்களை முடிவுக்குக் கொண்டு வருவது மற்றும் நாடுகளிடையே அமைதி மற்றும் முன்னேற்றத்தை ஏற்படுத்துவது போன்ற ஐ.நா. சபை எடுக்கும் அனைத்து முயற்சிகளிலும் இந்தியா உதவுகிறது.

### பிரிக்ஸ் (BRICS)

பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென்னாப்பிரிக்கா ஆகிய நாடுகள் பிராந்திய அளவில் மற்றும் சர்வதேச அளவில் வளர்ந்து வரும் பொருளாதார, அரசியல் சக்திகள் ஆகும். பிரிக்ஸ் அமைப்பின் தலைமையகம் சீனாவின் ஷாங்காய் நகரில் அமைந்துள்ளது. உலகின் வடபகுதியில் உள்ள நாடுகளின் சவால்களை எதிர்கொள்ளும் விதமாகத் தென்பகுதியில் உள்ள நாடுகளுக்கு நல்வாய்ப்பினை ஏற்படுத்தியுள்ளது. இந்தியா, இக்கூட்டமைப்பில் ஒரு தீவிர உறுப்பினராக இருப்பதோடு உலகளவில் தன்னை வடிவமைக்கவும் இது வழிவகுக்கிறது.

### பிரிக்ஸ் கூட்டமைப்பு உருவாவதற்கான காரணம்

உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்திற்கு ஒரு மாற்றாகவும், அமெரிக்க மேலாதிக்கத்திற்குப் போட்டியாகவும், உறுப்பு நாடுகளிடையே பொருளாதார வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றவும், பிரிக்ஸ் நாடுகள் கூட்டமைப்பு தோற்றுவிக்கப்பட்டது.

### பிரிக்ஸின் நோக்கங்கள்

- பிராந்திய வளர்ச்சியை அடைவது
- வளர்ந்த மற்றும் வளரும் நாடுகள் இடையே பாலமாக செயல்படுவது
- மனித மேம்பாட்டிற்கு மிகப்பரந்த அளவில் பங்களிப்பு செய்தல்
- அதிக சமத்துவம் மற்றும் நியாயமான உலகத்தை ஏற்படுத்துதல்
- வணிக ஒத்துழைப்பை அதிகரிக்க பிரிக்ஸ் நாடுகளுக்கிடையே உள்நாட்டு நாணயங்கள் மூலம் வணிகம் மேற்கொள்வதை ஊக்குவித்தல் மற்றும் நடப்பு சர்வதேச சிக்கல்களை எதிர்கொள்ளுதல்
- உறுப்பு நாடுகளிடையே தகவல் தொழில்நுட்பங்களைப் பரிமாறிக் கொள்வதை ஊக்குவித்தல், உறுப்பு நாடுகளில் வேலைவாய்ப்பு, வறுமை ஒழிப்பு பொருளாதார மாற்றங்கள் போன்றவற்றை உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துதல்.



10th_Civics_Unit_5_TM_new.indd 301 24-03-2020 12:42:16

இந்தியா பொருளாதாரத் துறையில் தீவிரமாகச் செயல்பட்டு வருவது கீழ்க்காணும் பல்வேறு பொருளாதார கூட்டமைப்புகளின் ஒரு பகுதியாக இந்தியா இருப்பதிலிருந்தே நன்கு புலனாகிறது.

| உலகளாவிய குழுக்களின் பெயர்கள் | உறுப்பினர் நாடுகள் | குறிக்கோள்கள் |
|---|---|---|
| ஐ.பி.எஸ்.எ (IBSA) | இந்தியா, பிரேசில், தென் ஆப்பிரிக்கா | வேளாண், கல்வி, ஆற்றல், வர்த்தகம், கலாச்சாரம் மற்றும் பாதுகாப்பில் கவனம் செலுத்துவது. |
| பி.சி.ஐ.எம் (BCIM) | வங்காளதேசம், சீனா, இந்தியா, மியான்மர் | இயற்கைப் பேரழிவுகள் மற்றும் தரவு மீறல்கள் போன்ற அச்சுறுத்தல்களை சமாளிக்கவும் வணிக நலனை பாதுகாக்கவும் |
| எம்.ஜி.சி (MGC) (மீகாங்– கங்கா ஒத்துழைப்பு) | இந்தியா, கம்போடியா, லாவோஸ் மக்கள் ஜனநாயக குடியரசு, மியான்மர், தாய்லாந்து, வியட்நாம் | கங்கா–மீகாங் தாழ்நிலத்தில் தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவது |
| பிம்ஸ்டெக் (BIMSTEC) வங்காள விரிகுடா பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார கூட்டுறவிற்கான முயற்சி | வங்காளதேசம், இந்தியா, மியான்மர், இலங்கை, தாய்லாந்து, பூடான் மற்றும் நேபாளம் | தொழில்நுட்ப பொருளாதார ஒத்துழைப்பு, சர்வதேச வர்த்தகம் மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடு ஆகியவற்றை வலுப்படுத்தவும் மேம்படுத்தவும் |
| ஆர்.சி.இ.பி (RCEP) ஒருங்கிணைந்த வர்த்தக மண்டலம் | ஆஸ்திரேலியா, புருனே, கம்போடியா, சீனா, இந்தியா, இந்தோனேசியா, ஜப்பான், கொரியா, லாவோஸ், மலேசியா மியான்மர், நியூசிலாந்து சிங்கப்பூர், பிலிப்பைன்ஸ், தாய்லாந்து, வியட்நாம் | பொருள்கள் வர்த்தகம், சேவை வர்த்தகம், முதலீடுகள், தொழில்நுட்ப ஒத்துழைப்பு, தீர்வு மற்றும் பல பிரச்சனைகளுக்கு உயர் தரமான மற்றும் பரஸ்பர நன்மை பயக்கும் வகையிலான ஒப்பந்தத்தை ஏற்படுத்துவது |
| ஈ.எ.எஸ் (EAS) கிழக்கு ஆசிய உச்சிமாநாடு | 10 ஆசிய நாடுகள் மற்றும் ஐக்கிய அமெரிக்கா, சீனா, இந்தியா, ஜப்பான், உள்பட முக்கிய எட்டு நாடுகள் | அமைதி மற்றும் நிலைத்தன்மையை ஊக்குவிப்பது |
| ஜி.சி.சி (GCC) வளைகுடா ஒத்துழைப்பு கவுன்சில் | பஹ்ரைன், குவைத், ஓமன், கத்தார், சவுதி அரேபியா, ஐக்கிய அரபு நாடுகள், இந்தியா | பொதுவான நோக்கங்கள் மற்றும் ஒத்த அரசியல் மற்றும் கலாச்சார அடையாளங்களின் அடிப்படையில் ஒற்றுமையை அடைவது |
| பி.பி.ஐ.என் (BBIN) | வங்காளதேசம், பூடான், இந்தியா, நேபாளம் | எரிசக்தி ஆற்றலுக்காக |
| ஷாங்காய் ஒத்துழைப்பு நிறுவனம் (SCO) | இந்தியா, கஜகஸ்தான், கிர்கிஸ்தான், பாகிஸ்தான், ரஷ்யா, தஜிகிஸ்தான் மற்றும் உஸ்பெகிஸ்தான் | பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பது, எல்லை பிரச்சினைகளைத் தீர்ப்பது, நுண்ணறிவு பகிர்வு மற்றும் பயங்கரவாதத்தை எதிர்கொள்வது |



10th_Civics_Unit_5_TM_new.indd 302 24-03-2020 12:42:16

### பிரிக்ஸ் நிதி கட்டமைப்பு

புதிய மேம்பாட்டு வங்கி (NDB) என்பது பல துறை வளர்ச்சி வங்கி ஆகும். அடிப்படைக் கட்டமைப்புத் திட்டங்களுக்குக் கடன் வழங்குவதே இதன் முதன்மைச் செயலாகும். தேசிய அளவில் ஏற்படுத்தப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களான சமூக சுற்றுச்சூழல் மற்றும் நீடித்த பொருளாதாரத் திட்டங்களுக்குப் பங்களிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வளங்களை மேம்படுத்தும் திட்டங்களுக்கு இது முன்னுரிமை வழங்குகிறது.

அவசரகால நிதி ஒதுக்கீடு ஏற்பாடு (CRA) நாணய விவகாரங்கள் உள்ளிட்ட உலக அளவிலான பண நெருக்கடியில் இருந்து பாதுகாத்திட அடிப்படைத் திட்டம் வழங்க வகை செய்கிறது.

### பிரிக்ஸ் பணம் செலுத்தும் திட்டம்

2015ஆம் ஆண்டு நடைபெற்ற பிரிக்ஸ் மாநாட்டில் பிரிக்ஸ் நாடுகளின் அமைச்சர்கள் பணம் செலுத்தும் முறை தொடர்பான ஆலோசனைகளைத் தொடங்கினர். இது உலகளாவிய வங்கிகளுக்கு இடையேயான நிதி, செய்திப் பரிமாற்ற அமைப்பிற்கு (SWIFT – Society for Worldwide Interbank Financial Telecommunication System) மாற்றாக இருக்கும்.


பிரிக்ஸ் (BRICS) என்ற சொல் ஜிம் ஓ' நீல் (Jim O'Neill) என்ற பிரபலமான பிரிட்டிஷ் பொருளாதார நிபுணரால் உருவாக்கப்பட்டது. பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா ஆகிய நாடுகள் 2050ஆம் ஆண்டு வாக்கில் ஆறு தொழில்மயமாக்கப்பட்ட நாடுகளைவிட டாலர் மதிப்பில் பெரிய நாடுகளாக உருவாகும் என்றும் கடந்த 300 ஆண்டுகளின் அதிகாரப் போக்கு முற்றிலும் மாறுபடும் என்றும் அவர் கணித்தார்.

### உறுப்பு நாடுகளிடையே ஒத்துழைப்பை அதிகரிக்கும் காரணிகள்

முதலாவதாக வளரும் நாடுகளிடையே தற்போதைய சூழ்நிலையைப் பிரதிபலிக்கும் ஒரு பொருளாதார ஒழுங்கை உருவாக்குவதற்கு பிரிக்ஸ் அமைப்பு முயற்சிகளைத் தூண்டும். இது தொடர்பாக மாற்றங்களை வரையறுப்பதற்கான புதிய வளர்ச்சி வங்கி (NDB) மற்றும் அவசர ஒதுக்கீடு ஏற்பாடு (CRA) ஆகியவற்றின் யோசனையானது பொருளாதாரம் மற்றும் அரசியலில் மிகுந்தத் தாக்கத்தை ஏற்படுத்தும்.

இரண்டாவதாக உலக நிர்வாகத்தில் பிரிக்ஸ் நாடுகளின் மாற்று யோசனை இதர நாடுகளின் ஆதரவை ஈர்க்கும்.

மூன்றாவதாக மற்ற துறைகளுடனான பிரிக்ஸ் தொடர்புகளின் விரிவாக்கம் அதை மேலும் வலுவான கூட்டாண்மையாக உருவாக்கும்.



www.tntextbooks.in

### பெட்ரோலியம் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் கூட்டமைப்பு (OPEC)

பெட்ரோலிய ஏற்றுமதி நாடுகளின் கூட்டமைப்பு (எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகள்) ஈராக்கில் பாக்தாத் நகரில் நிறுவப்பட்ட அரசுகளுக்கிடையேயான ஓர் அமைப்பாகும். இதன் தலைமையகம் ஆஸ்திரியாவின் வியன்னா நகரில் உள்ளது. ஒபெக் நிறுவன உறுப்பினர்கள் ஈரான், ஈராக், குவைத், சவுதி அரேபியா மற்றும் வெனிசுலா ஆகிய நாடுகள் ஆகும்.

இவ்வமைப்பில் மூன்று வகையான உறுப்பினர்கள் முறையே நிறுவன உறுப்பினர்கள், குழு உறுப்பினர்கள், இணை உறுப்பினர்கள் உள்ளனர். தற்போது இவ்வமைப்பில் 15 உறுப்பினர்கள் உள்ளனர். (தென் அமெரிக்காவில் 2, மத்திய கிழக்கில் 6, ஆப்பிரிக்காவில் 7). கச்சா எண்ணெய் ஏற்றுமதி செய்யும் மற்றும் அமைப்பின் நோக்கங்களைப் பகிர்ந்து கொள்ளும் எந்த ஒரு நாடும் ஒபெக் அமைப்பில் உறுப்பினராகலாம்.

#### பெட்ரோலியம் ஏற்றுமதி செய்யும் நாடுகள் அமைப்பின் திட்டம்

- அதன் உறுப்பு நாடுகளுக்குள் எண்ணெய் கொள்கைகளை ஒருங்கிணைத்தல்
- எண்ணெய் சந்தையை நிலைநிறுத்த உதவுதல்
- பெட்ரோலிய உற்பத்தியாளர்களுக்கு நியாயமான நிலையான வருவாய் கிடைப்பதை உறுதி செய்தல்
- எண்ணெய் நுகர்வு செய்யும் நாடுகளுக்குத் திறமையான, சிக்கனமான, வழக்கமான, விநியோகத்தை அளித்தல்
- பெட்ரோலியத் தொழிலில் முதலீடு செய்பவர்களுக்கு மூலதனத்திற்கு நியாயமான வருவாய் கிடைக்கச் செய்தல்

**OPEC இலச்சினை**

இது 1969ஆம் ஆண்டில் நடைபெற்ற ஒரு சர்வதேச வடிவமைப்புப் போட்டியின் மூலம் இச்சின்னமானது தேர்ந்தெடுக்கப்பட்டது. ஆஸ்திரிய வடிவமைப்பாளர் ஸ்வோபோடா இதை வடிவமைத்து போட்டியில் வென்றார். இது இந்த அமைப்பினுடைய பெயரின் வெவ்வேறு எழுத்துக்களை (OPEC) ஒரு வட்டமான வடிவமைப்பில் காணலாம்.

#### ஒபெக் எவ்வாறு பிற நாடுகளுக்கு உதவி செய்கின்றன?

பெட்ரோலிய ஏற்றுமதி செய்யும் நாடுகளின் சர்வதேச மேம்பாட்டு நிதி (OPID) என்பது குறைந்த வட்டி வீதத்தில் கடன் அளிக்கும் நிதி நிறுவனம் ஆகும். இது சமூக மற்றும் மனிதாபிமானத் திட்டங்களுக்கு மானியங்களை வழங்குகிறது.

புத்தகங்கள், அறிக்கைகள், வரைபடங்கள், பெட்ரோலிய எரிசக்தி மற்றும் எண்ணெய் சந்தை தொடர்பான மாநாட்டு நடவடிக்கைகள் உள்பட 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொகுதிகளைக் கொண்ட ஒரு தகவல் மையத்தை ஒபெக் கொண்டுள்ளது. இத்தகவல் மையம் பொதுமக்களாலும் பெரும்பாலும் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் மாணவர்களாலும் அடிக்கடி பயன்படுத்தப்பட்டு வருகிறது.

#### ஒபெக் நாடுகளுடனான இந்தியாவின் உறவு

கச்சா எண்ணெய் அதிக அளவில் நுகர்வு செய்யும் நாடுகளில் இந்தியாவும் ஒன்று. இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியில் பெட்ரோலியம் ஏற்றுமதி செய்யும் நாடுகள் தங்களுடைய ஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ளன. 86 சதவிகித கச்சா எண்ணெய், 70 சதவிகித இயற்கை எரிவாயு, 95 சதவிகித சமையல் எரிவாயு ஆகியவற்றை இந்தியா ஒபெக் நாடுகளில் இருந்து இறக்குமதி செய்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக அதிக எண்ணெய் தேவையினால் இந்தியா ஒரு சிறந்த பங்காளராக ஒபெக் நாடுகளால் அடையாளம் காணப்படுகிறது.

இந்தியாவில் போதுமான எண்ணெய் வள இருப்பு இல்லை. இதனால் எண்ணெய்யை இந்தியா உற்பத்தி செய்ய முடியாது. அதனால் இந்தியா விவசாயம் மற்றும் தொழில்துறை உற்பத்தியில் வலுவான கவனம் செலுத்துகிறது.

### முடிவுரை

இந்தியா பொருளாதாரம் மற்றும் வணிக ஒத்துழைப்பு தவிர ஒரு நட்பான நீடிக்கப்பட்ட உறவினை தனது அண்டை நாடுகளுடன் ஏற்படுத்திக் கொள்ள விரும்புகிறது. மேலும் கல்வி, சுகாதாரம், தீவிரவாத எதிர்ப்பு, பேரிடர் மேலாண்மை, குடிமக்களுக்கான வேலைவாய்ப்பு, குற்றங்களைக் கட்டுப்படுத்தல், தொழில்நுட்ப மேம்பாடு உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைக்க விரும்புகிறது.



10th_Civics_Unit_5_TM_new.indd 304 24-03-2020 12:42:17

## பாடச்சுருக்கம்

- இந்தியா எப்பொழுதும் அமைதியை விரும்பும் நாடாக இருப்பதோடு உலக அமைதிக்குத் தொடர்ந்து கடுமையாகப் போராடி வருகிறது.
- இந்தியா அதன் அனைத்து அண்டை நாடுகளுடன் வரலாற்று ரீதியாகவும், சமூக–பொருளாதார, இனம் மற்றும் மொழியியல் உறவுகளைக் கொண்டுள்ளது.
- பொது சுகாதாரம், சிறு அளவிலான தொழில்கள், தொலைத்தொடர்பு, கல்வி போன்றவற்றை மேம்படுத்துவதற்கும் மற்றும் சாலைகள், பாலங்கள் அமைப்பதற்கும் அண்டை நாடுகளுக்கு உதவுகிறது.
- ஆய்வகக் கட்டடங்கள், மருந்தகங்கள், ஆழ்குழாய் கிணறுகள் போன்றவைகளை அமைத்திட அண்டை நாடுகளுக்குப் பெரும் நிதி உதவி செய்கிறது.
- இந்தியா தன் அண்டை நாடுகளின் வளர்ச்சிக்குப் பண உதவி மற்றும் நிதி உதவி ஆகியவற்றை தன் பங்களிப்பாக முன்கூட்டியே செய்கிறது.
- இந்தியா வல்லரசுகளுடன் நல்ல உறவைக் கொண்டுள்ளது. மேலும் தன் உள்நாட்டு வளர்ச்சிக்கான அதிகபட்ச நலனைப் பெற முயன்று வருகிறது.
- ஐ.நா. சபையின் அனைத்து முயற்சிகளிலும் இந்தியா தன் ஒத்துழைப்பை நல்குகிறது.
- பிரிக்ஸ் (BRICS) கூட்டமைப்பில் இந்தியா ஒரு தீவிர உறுப்பினராக இருப்பதால் உலக அளவில் தன்னை வடிவமைக்கவும் இது வழிகோலுகிறது.

## A-Z கலைச்சொற்கள்

| | | |
|---|---|---|
| ஒரினத்தைச் சேர்ந்த | **homogenous** | of the same kind/alike |
| இருதரப்பு வர்த்தகம் | **bilateral trade** | trading between two countries |
| நீர் மின்சார திட்டம் | **hydroelectric project** | producing electricity by using the power of fast moving water |
| உள்கட்டமைப்பு | **infrastructure** | the basis organisational facilities |
| தொன்மை | **antiquity** | the ancient past |
| இரண்டாகப் பிரித்தல் | **bifurcation** | to divide into two parts |
| கண்காணிப்பு | **surveillance** | Close observation |

## பயிற்சி

791T8Y

### I சரியான விடையைத் தேர்வு செய்யவும்

1. மக்மகான் எல்லைக்கோடு எந்த இரு நாடுகளுக்கும் இடையே உள்ள எல்லை ஆகும்?
   அ) பர்மா – இந்தியா
   ஆ) இந்தியா – நேபாளம்
   இ) இந்தியா – சீனா
   ஈ) இந்தியா – பூடான்
2. இந்தியா பின்வருவனவற்றுள் எந்த அமைப்பில் உறுப்பினராக இல்லை?
   1) ஜி 20
   2) ஏசியான் (ASEAN)
   3) சார்க் (SAARC)
   4) பிரிக்ஸ் (BRICS)
   அ) 2 மட்டும் ஆ) 2 மற்றும் 4
   இ) 2, 4 மற்றும் 1 ஈ) 1, 2 மற்றும் 3
3. ஒபெக் (OPEC) என்பது
   அ) சர்வதேச காப்பீட்டு நிறுவனம்
   ஆ) ஒரு சர்வதேச விளையாட்டுக் கழகம்
   இ) எண்ணெய் ஏற்றுமதி நிறுவனங்களின் அமைப்பு
   ஈ) ஒரு சர்வதேச நிறுவனம்
4. இந்தியா தனது மிக நீண்ட நில எல்லையை எந்த நாட்டோடு பகிர்ந்து கொள்கிறது?
   அ) வங்காளதேசம் ஆ) மியான்மர்
   இ) ஆப்கானிஸ்தான் ஈ) சீனா



10th_Civics_Unit_5_TM_new.indd 305 24-03-2020 12:42:17

5. பின்வருவனவற்றைப் பொருத்தி கீழே கொடுக்கப்பட்ட குறியீடுகளிலிருந்து சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்

i) சல்மா அணை – 1. வங்காளதேசம்
ii) பராக்கா ஒப்பந்தம் – 2. நேபாளம்
iii) சுக்கா நீர்மின்சக்தி திட்டம் – 3. ஆப்கானிஸ்தான்
iv) சாரதா கூட்டு மின்சக்தித் திட்டம் – 4. பூடான்

அ) 3 1 4 2 ஆ) 3 1 2 4
இ) 3 4 1 2 ஈ) 4 3 2 1

6. எத்தனை நாடுகள் இந்தியாவுடன் தன் எல்லையைப் பகிர்ந்து கொள்கின்றன?
அ) 5 ஆ) 6
இ) 7 ஈ) 8

7. எந்த இரண்டு தீவுநாடுகள் இந்தியாவின் அண்டை நாடுகள் ஆகும் ?
அ) இலங்கை மற்றும் அந்தமான் தீவுகள்
ஆ) மாலத்தீவு மற்றும் லட்சத் தீவுகள்
இ) மாலத்தீவு மற்றும் நிக்கோபார் தீவு
ஈ) இலங்கை மற்றும் மாலத்தீவு

8. எந்த இந்திய மாநிலம் மூன்று நாடுகளால் சூழப்பட்டுள்ளது?
அ) அருணாச்சலப்பிரதேசம்
ஆ) மேகாலயா
இ) மிசோரம்
ஈ) சிக்கிம்

9. எத்தனை மாநிலங்கள் நேபாளத்துடன் தங்கள் எல்லையைப் பகிர்ந்து கொள்கின்றன?
அ) ஐந்து ஆ) நான்கு
இ) மூன்று ஈ) இரண்டு

10. சுதந்திரமடைந்த பாகிஸ்தானுக்கான எல்லைகளை வகுத்தவர்
அ) மவுண்ட்பேட்டன் பிரபு
ஆ) சர் சிறில் ராட்க்ளிஃப்
இ) கிளமன்ட் அட்லி
ஈ) மேற்கூறிய ஒருவருமில்லை

## II கோடிட்ட இடங்களை நிரப்புக

1. இமயமலையில் உள்ள ஒரு சிறிய முடியாட்சி நாடு ______________ ஆகும்.
2. இந்தியா, தென்கிழக்காசியாவிற்குள் செல்வதற்கான ஒரு நுழைவு வாயிலாக ______________ இருக்கிறது.
3. இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையிலான இடைப்படு நாடு ______________ ஆகும்.
4. இந்தியாவிற்குச் சொந்தமான ______________ என்ற பகுதி மேற்கு வங்காளம் – வங்காளதேச எல்லையில் அமைந்துள்ளது.
5. இடிமின்னல் நிலம் என்று அறியப்படும் நாடு ______________ ஆகும்.
6. இந்தியாவும் இலங்கையும் ______________ ஆல் பிரிக்கப்படுகின்றன.

## III சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்

1. இந்தியா மற்றும் மியான்மரின் கலடன் போக்குவரத்துத் திட்டம் பின் வரும் போக்குவரத்து முறைகளில் எந்த முறையில் அமைக்கப்பட்டுள்ளது?

1. சாலை 2. ரயில் வழி
3. கப்பல் 4. உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து

கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைப் பயன்படுத்தி சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.
அ) 1, 2 மற்றும் 3
ஆ) 1, 3 மற்றும் 4
இ) 2, 3 மற்றும் 4
ஈ) 1, 2, 3 மற்றும் 4

2. **கூற்று:** இந்தியாவும் பிரான்சும் சர்வதேச சூரியசக்திக் கூட்டணியைத் (International Solar Alliance) தொடங்கியுள்ளன.
**காரணம்:** இது கடகரேகை மற்றும் மகரரேகை ஆகியவற்றுக்கு இடையேயான நாடுகளைச் சூரிய ஆற்றலுக்கான ஒத்துழைப்பில் ஒன்றிணைப்பதற்காகும்.
அ) கூற்று சரி. காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமாகும்.
ஆ) கூற்று சரி. காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமல்ல.
இ) கூற்று தவறு; காரணம் சரி
ஈ) கூற்று, காரணம் இரண்டும் தவறு

3. பின்வரும் கூற்றுகளில் எது/எவை உண்மையானவை?
1. இந்திய பண்பாட்டு உறவுகளுக்கான குழு, டாக்கா பல்கலைக்கழகத்தில் 'தாகூர் இருக்கை' ஏற்படுத்த வழிவகை செய்துள்ளது.
2. மேற்கத்திய நாடுகளுக்கான இந்தியாவின் நுழைவு வாயில் மியான்மர் ஆகும்.
3. நேபாளம், பூடான் ஆகியவை நிலப்பகுதிகளால் சூழப்பட்ட நாடுகளாகும்.
4. இந்தியாவின் நாளந்தா பல்கலைக்கழகத் திட்டத்தின் ஒரு பங்குதாரர் நாடு இலங்கையாகும்.
அ) 1, 2 மற்றும் 3
ஆ) 2, 3 மற்றும் 4
இ) 1, 3 மற்றும் 4
ஈ) 1, 2 மற்றும் 4



10th_Civics_Unit_5_TM_new.indd 306 24-03-2020 12:42:17

4. **கூற்று:** இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியில் ஒபெக் (OPEC) ஆர்வம் காட்டியுள்ளது.

   **காரணம்:** தேவையான எண்ணெய் வளங்கள் இல்லாததால் இந்தியா விவசாயம் மற்றும் தொழில்துறை உற்பத்தியில் கவனம் செலுத்துகிறது.

   அ) கூற்று சரி. காரணம் கூற்றை விளக்குகிறது
   ஆ) கூற்று தவறு. காரணம் சரி
   இ) கூற்று காரணம் இரண்டும் சரி
   ஈ) கூற்று காரணம் இரண்டும் தவறு

## IV பொருத்துக

| | | |
|---|---|---|
| 1. | பிராண்டிக்ஸ் (Brandix) | - வியன்னா |
| 2. | தகவல்தொடர்பு இணக்கத்தன்மை மற்றும் பாதுகாப்பு ஒப்பந்தம் (COMCASA) | - ஜப்பான் |
| 3. | ஷிங்கன்சென் | - ஷாங்காய் |
| 4. | பிரிக்ஸ் (BRICS) | - அமெரிக்க ஐக்கிய நாடுகள் |
| 5. | ஒபெக் (OPEC) | - விசாகப்பட்டினத்தின் ஆடை நகரம் |

## V சுருக்கமாக விடையளிக்கவும்

1. இந்தியாவின் அண்டை நாடுகளின் பெயர்களை எழுதுக.
2. போர்த்திறம் சார்ந்த பங்களிப்பு ஒப்பந்தம் (SPA) பற்றிய சிறு குறிப்பு வரைக.
3. பிரிக்ஸ் (BRICS) உறுப்பு நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
4. கலடன் பன்முக மாதிரி போக்குவரத்துத் திட்டம் பற்றி நீவிர் அறிவது யாது?
5. சாபஹார் ஒப்பந்தத்தின் முக்கியத்துவத்தை மதிப்பிடுக.
6. இந்தியா உறுப்பினராக உள்ள ஏதேனும் ஐந்து உலகளாவிய குழுக்களைப் பட்டியலிடுக.
7. ஜப்பான் இந்தியா உற்பத்தி நிறுவனத்தின் (JIM) பங்கு என்ன?

## VI விரிவாக விடையளிக்கவும்

1. இந்தியா மற்றும் சர்வதேச அமைப்புகள் குறித்தும் இந்தியா உறுப்பினராக உள்ள ஏதேனும் மூன்று உலகளாவிய குழுக்கள் பற்றிய சிறப்பு அம்சங்கள் குறித்தும் எழுதுக.
2. பிரிக்ஸ்(BRICS)கூட்டமைப்புஉருவானதற்கான காரணம் மற்றும் அதன் நோக்கங்களை எழுதுக.
3. பெட்ரோலியம் ஏற்றுமதி செய்யும் நாடுகள் அமைப்பின் (OPEC) திட்டம் குறித்தும் அவ்வமைப்பு எவ்வாறு பிற நாடுகளுக்கு உதவி செய்கின்றன என்பது குறித்தும் குறிப்பிடுக.

## VII செயல்பாடுகள்

1. உலக நாடுகளுடனான இந்தியாவின் உறவு குறித்துச் செய்தித்தாள்களில் இருந்து தகவல்களைச் சேகரிக்க மாணவர்களிடம் கூறலாம்.
2. இந்தியா அதன் அண்டை நாடுகளுடன் கொண்டுள்ள சமீபத்தியத் திட்டங்கள் குறித்து படங்களுடன் ஒரு ஆல்பம் தயாரிக்க குழுத் திட்டமாக மாணவர்களிடம் கொடுக்கலாம்.

## மேற்கோள் நூல்கள்


1. V.K. Malhotra, *International Relations*, Calcutta: Anmol publication
2. Prakash Chandra, *International Relations* New Delhi: Vikas Publishing
3. Prakash Chandra, *Theories of International Relations*: Aman publishing
4. Baldev Raj Nayar and Thazha Varkey Paul, *India in the world order: Searching for major-power status*, Cambridge University Press (2003)
5. Deep Datta Ray, *The making of modern Indian Diplomacy; A critique of Eurocentrism*, Oxford University Press, India (2015)
6. Jon C.W. Pevehouse, Joshna S. Goldstein, *International Relations*, Pearson Education, Noida (2017)
7. Rajendra M. Abhyankar., *Indian Diplomacy*, Oxford University Press, India (2018)


## இணையதள வளங்கள்


1. https://en.wikipedia.org/wiki/Foreign_relations_of_India#Europe
2. https://www.un.org/en/
3. https://mnoal.org/
4. https://brics.ibge.gov.br/

www.tntextbooks.in

# பொருளியல்

10th_Economics_TM_Unit_1 GDP AND ITS GROWTH.indd 308 24-03-2020 12:42:48

www.tntextbooks.in

# அலகு – 1

# மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் அதன் வளர்ச்சி: ஓர் அறிமுகம்



## கற்றலின் நோக்கங்கள்

- மொத்த உள்நாட்டு உற்பத்தியை பற்றி தெரிந்துகொள்ளுதல்
- நாட்டு வருமானத்தின் பல்வேறு நடவடிக்கைகளை புரிந்துகொள்ளுதல்
- மொத்த உள்நாட்டு உற்பத்தியின் அமைப்பை புரிந்துகொள்ளுதல்
- மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பல்வேறு துறைகளின் பங்களிப்பை தெரிந்துகொள்ளுதல்
- பொருளாதார வளர்ச்சி, முன்னேற்றம் மற்றும் அதன் வேறுபாடுகள் பற்றி அறிந்துகொள்ளுதல்
- மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் வேலைவாய்ப்பு அடிப்படையில் வளர்ச்சி பாதைப் பற்றி தெரிந்துகொள்ளுதல்
- மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் பொருளாதார கொள்கைகளின் வளர்ச்சிப் பற்றி புரிந்துகொள்ளுதல்

5IXE3N

## அறிமுகம்

இந்தியா எவ்வாறு செயல்படுகிறது என்பதனை GDP விளக்குகிறது அதனால், GDP என்றால் என்ன என்பதைப் பற்றி முதலில் நீங்கள் புரிந்துக் கொள்ள வேண்டும்.

ஒரு ஹோட்டலில் என்ன நடக்கிறது என்பதை கற்பனை செய்க. இரண்டு இட்லி மற்றும் ஒரு கோப்பை தேனீருக்கு நீங்கள் உத்தரவு இடுகிறீர்கள். இட்லி மற்றும் தேனீரை யாரோ ஒருவர் உற்பத்தி செய்யலாம் மற்றும் யாராவது கூட அதை உங்களுக்கு சேவையாக செய்யலாம்.

வெளிப்படையாக இட்லி மற்றும் தேனீர் உற்பத்தி செய்யப்பட்டு இருக்கிறது. அவைகளை நீங்கள் தொடக்கூடியவை, பார்க்கக்கூடியவை மற்றும் தொட்டு உணரக்கூடியவைகளாகும் . தொடக்கூடிய பொருள்களை "பண்டங்கள்" என்று பொருளியல் அறிஞர்கள் அழைக்கின்றனர். இந்த பண்டங்கள் இலவசம் அல்ல, ஏனெனில் அதற்கு பணம் செலுத்த வேண்டும்.

தொடக்கூடிய பொருள்களை, பண்டங்கள் என்று அழைத்தாலும், சமையல்காரர்கள் செய்து முடித்த வேலை மற்றும் அந்த உணவைப் பரிமாறும்




மக்கள், சமையல் மற்றும் சேவை நடவடிக்கைகளை பண்டங்கள் போல் யாரும் தொட்டு உணரக் கூடியது அல்ல. ஆனால், நீங்கள் உணவினை உண்டு அனுபவிக்கலாம்.பொருளியல் வல்லுநர்கள் இந்த நடவடிக்கையை "பணிகள்" என்று அழைக்கின்றனர்.

ஒவ்வொரு நாளும் ஹோட்டலில் என்ன நடக்கிறதோ அதே போல் நாடு முழுவதும் நடக்கிறது. பண்டங்கள் மற்றும் பணிகள் உற்பத்தி செய்யப்பட்டு அதனை நாம் பணம் செலுத்தி பெறுகின்றோம். இவற்றையே மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) அளவிடுகிறது.

### GDPயின் வரையறை / இலக்கணம்

**ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற அனைத்து பண்டங்கள் மற்றும் பணிகளின் அங்காடி மதிப்பை மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) என்கிறோம்.**

$$GDP = C + I + G + (X - M)$$

C – நுகர்வோர்  I – முதலீட்டாளர்

G – அரசு செலவுகள்  (X–M) ஏற்றுமதி – இறக்குமதி.

இந்த வரையறையில் ஒவ்வொரு பகுதியும் முக்கியமானதாகும்.

**பண்டங்கள் மற்றும் பணிகள்:** பண்டங்கள் என்பது தொடக் கூடிய பொருளும், பணிகள் என்பது தொட்டு உணர முடியாதததுமான நடவடிக்கைகள் என்று இப்போது உங்களுக்கு தெரியும்.

**அங்காடி மதிப்பு:** அங்காடியில் விற்கக் கூடிய பண்டங்கள் மற்றும் பணிகளின் விலை.

### இறுதி நிலை பண்டங்கள் மற்றும் பணிகள்

"இறுதி நிலை பண்டங்கள் மற்றும் பணிகள்" என்பது நுகர்வுக்காக அல்லது பயன்பாட்டுக்காக உள்ள பண்டங்கள் மற்றும் பணிகள் ஆகும். எந்த பண்டங்கள் மற்றும் பணிகள் மற்றொரு பண்ட பணிகளை உற்பத்தி செய்ய பயன்படுகிறதோ மற்றும் மற்ற பண்ட பணிகளை உற்பத்தி செய்ய ஒரு பகுதியாகிறதோ அதை "இடை நிலை பண்டங்கள்" என்று டைலர் கோவன் மற்றும் அலெக்ஸ் டாபர்ராக் போன்ற பொருளியல் வல்லுநர்கள் கூறுகின்றனர்.

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இறுதிநிலை பண்டங்கள் மட்டும் சேர்க்கப்படுகிறது. மொத்த உள்நாட்டு உற்பத்தி கணக்கிட இடைநிலை பண்டங்களை கணக்கில் எடுப்பதில்லை. ஏனெனில் அவற்றின் மதிப்பு இறுதிநிலை பண்டத்தில் சேர்க்கப்படுகிறது. ஆகவே இடை நிலை பண்டத்தின் மதிப்பை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சேர்த்தால், அதன் விளைவு "இரு முறை கணக்கிடுதல்" எனப்படுகிறது.

எடுத்துக்காட்டாக, ஹோட்டலில் வாங்கும் ஒரு கோப்பை தேனீர்(Tea) இறுதிநிலை பண்டமாகும். ஏனெனில் இது நுகரப்படக்கூடியது. வேறு எந்த பொருளின் பகுதியாக இருக்காது. ஆகவே ஒரு கோப்பை தேனீரின் அங்காடி மதிப்பு இறுதிப் பண்டமாக இருப்பதால் அதை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சேர்த்துள்ளனர். தேனீரில் கலக்கப்பட்ட சர்க்கரை ஒரு இடைநிலை பண்டம். இது தேனீர் உற்பத்தி செய்யப் பயன்படுத்தப்பட்டு தேனீரின் ஒரு பகுதியாக இருக்கிறது. ஒருகோப்பை தேனீரின் விலை ₹ 10/– என்றால் அதில் சர்க்கரையின் மதிப்பு ₹ 2/–. ஆகவே ஒரு கோப்பை தேனீரின் விலையில், ஒரு தேக்கரண்டி சர்க்கரையின் விலை ₹ 2/– சேர்க்கப்பட்டுள்ளது. சர்க்கரையின் மதிப்பை GDPயில் கூட்டினால் ஒரு தேக்கரண்டி சர்க்கரை, மீண்டும் ஒரு கோப்பை தேனீர் என இரு முறை கணக்கிடப்படும். இதை "இரு முறை கணக்கிடுதல்" என்பர். இதை தவிர்ப்பதற்கு இடைநிலை பண்டமான சர்க்கரையை GDPயில் சேர்ப்பதில்லை.

## 1.1 நாட்டு வருமானம்

நாட்டு வருமானம் என்பது ஒரு நாட்டில் ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பாகும். பொதுவாக நாட்டு வருமானம் மொத்த நாட்டு உற்பத்தி (GNP) அல்லது நாட்டு வருமான ஈவு எனப்படுகிறது.

### நாட்டு வருமானத்தை அளவிட தொடர்புடைய பல்வேறு கருத்துக்கள்

#### 1. மொத்த நாட்டு உற்பத்தி (GNP)

மொத்த நாட்டு உற்பத்தி என்பது அந்த நாட்டு மக்களால் ஒரு வருடத்தில் (ஈட்டிய வருமானம்) உற்பத்தி செய்யப்பட்ட வெளியீடுகளின் (பண்டங்கள் + பணிகள்) மதிப்பைக் குறிக்கும். வெளிநாட்டு முதலீடு மூலம் ஈட்டிய இலாபமும் இதில் அடங்கும்.

$$GNP = C + I + G + (X - M) + NFIA$$

C – நுகர்வோர்
I – முதலீட்டாளர்
G – அரசு செலவுகள்
X – M– ஏற்றுமதி – இறக்குமதி
NFIA – வெளிநாட்டிலிருந்து ஈட்டப்பட்ட நிகர வருமானம்.

#### 2. மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP)

ஒரு ஆண்டில் நாட்டின் புவியியல் எல்லைக்குள் உள்ள உற்பத்தி காரணிகளினால் உற்பத்தி செய்யப்பட்ட வெளியீடு (பண்டங்கள் + பணிகள்) களின் மொத்த மதிப்பே மொத்த உள்நாட்டு உற்பத்தியாகும்.

#### 3. நிகர நாட்டு உற்பத்தி (NNP)

மொத்த நாட்டு உற்பத்தியிலிருந்து மூலதன தேய்மானத்தின் மதிப்பை நீக்கிய பின் கிடைக்கும் பண மதிப்பு நிகர நாட்டு உற்பத்தியாகும்.



10th_Economics_TM_Unit_1 GDP AND ITS GROWTH.indd 310 24-03-2020 12:42:48

நிகர நாட்டு உற்பத்தி (NNP) = மொத்த நாட்டு உற்பத்தி (GNP) – தேய்மானம்.

### 4. நிகர உள்நாட்டு உற்பத்தி (NDP)

நிகர உள்நாட்டு உற்பத்தி என்பது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் ஒரு பகுதியாகும். மொத்த உள்நாட்டு உற்பத்தியிலிருந்து தேய்மானத்தைக் (தேய்மான செலவின் அளவு) கழித்து பின் கிடைப்பது நிகர உள்நாட்டு உற்பத்தியாகும்.

நிகர உள்நாட்டு உற்பத்தி (NDP) = மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) – தேய்மானம்.

### 5. தலா வருமானம் (PCI)

தலா வருமானம் என்பது மக்களின் வாழ்க்கைத் தரத்தை உணர்த்தும் ஒரு கருவியாகும். நாட்டு வருமானத்தை மக்கள் தொகையில் வகுப்பதன் மூலம் தலா வருமானம் பெறப்படுகிறது.

$$\text{தலா வருமானம்} = \frac{\text{நாட்டு வருமானம்}}{\text{மக்கள் தொகை}}$$



1867–68இல் முதன் முதலாக தாதாபாய் நௌரோஜி "*வறுமையும் பிரிட்டனுக்கொவ்வாத இந்திய ஆட்சியும்*" *(Poverty and Un – British Rule in India)* என்ற தனது புத்தகத்தில் தனி நபர் வருமானத்தைப் பற்றி கூறியுள்ளார்.

### 6. தனிப்பட்ட வருமானம் (PI)

நேர்முக வரிவிதிப்பிற்கு முன் தனி நபர்கள் மற்றும் ஒரு நாட்டின் குடும்பங்களின் மூலம் அனைத்து ஆதாரங்களிலிருந்து பெறப்படுகின்ற மொத்த பண வருமானத்தை தனிப்பட்ட வருமானம் எனலாம்.

### 7. செலவிடத் தகுதியான வருமானம் (DI)

தனி நபர்கள் மற்றும் குடும்பங்களின் உண்மையான வருமானத்தில் நுகர்வுக்கு செலவிடப்படுகின்ற வருமானத்தை செலவிடத் தகுதியான வருமானம் எனப்படுகிறது.

இதனை இவ்வாறு அழைக்கலாம்.

DPI = தனிப்பட்ட வருமானம் – நேர்முகவரி

(நுகர்வு முறையில் DI = நுகர்வுச் செலவு + சேமிப்பு)

## 1.2 மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP)

### நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டது

இந்தியாவில் உற்பத்தி செய்யப்படுகின்ற பண்டங்கள் மற்றும் பணிகளின் அங்காடி மதிப்பே இந்தியாவின் GDP என அழைக்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக காஷ்மீர் இந்தியாவில் உள்ளதால், காஷ்மீரில் உற்பத்தி செய்யப்பட்ட ஆப்பிளின் அங்காடி மதிப்பு GDPயில் சேர்க்கப்பட்டுள்ளது. கலிபோர்னியாவில் உற்பத்தி செய்யப்பட்ட ஆப்பிளின் அங்காடி மதிப்பு, இந்தியாவின் அங்காடியில் விற்பனை செய்தாலும், அதை GDPயில் சேர்ப்பதில்லை, ஏனெனில் கலிபோர்னியா அமெரிக்காவில் உள்ளது.

### ஒரு காலக்கட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்டது

ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டம் மற்றும் பணிகளின் அங்காடி மதிப்பே, ஒரு நாட்டின் GDP யாகும். முந்தைய காலங்களில் உற்பத்தி செய்யப்பட்ட பண்ட பணிகளை சேர்த்துக் கொள்வதில்லை.

உங்களுக்குத் தெரியுமா?

1934ஆம் ஆண்டில் சைமன் குஸ்நட் என்பவரால் GDPயின் நவீன கருத்து முதன் முதலில் உருவாக்கப்பட்டது.

### மொத்த உள்நாட்டு உற்பத்தியின் கணக்கீட்டு முறைகள்

#### 1. செலவின முறை

இந்த முறையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி என்பது ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு நாட்டில் உற்பத்தி செய்த அனைத்து இறுதிப் பண்ட பணிகளுக்கு மேற்கொள்ளும் செலவுகளின் கூட்டுத் தொகையேயாகும்.

$$Y = C + I + G + (X - M)$$


#### 2. வருமான முறை

பண்டங்கள் மற்றும் பணிகளை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ள ஆண்கள் மற்றும் பெண்களின் வருமானத்தை கணக்கிட்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியை இந்த முறை கூறுகிறது. வருமான முறையில் GDPஐ கணக்கிடும்போது

வருமானம் = கூலி + வாரம் + வட்டி + லாபம்.

#### 3. மதிப்பு கூட்டு முறை

"இறுதிப்பண்டம்" என்பது ஹோட்டலில் ஒரு கோப்பை தேனீர் (Tea) உங்களுக்கு வழங்கப்படுவதாகும். அதை தயாரிக்க பயன்படுத்தப்படும் டீதூள், பால் மற்றும் சர்க்கரை "இடைநிலை பண்டங்கள்" ஆகும். ஒரு கோப்பை தேனீர் இறுதிப் பண்டமாக மாறுவதற்கு இவைகள் ஒரு பகுதியாக அமைகிறது. ஒரு கோப்பை தேனீர் தயாரிக்க பயன்படுத்திய ஒவ்வொரு இடைநிலை பண்டத்தின் மதிப்பைக் கூட்டினால், தேனீரின் சந்தை மதிப்பை அளவிடலாம். உற்பத்தியில் பயன்படுத்தப்பட்ட அனைத்து இடைநிலை




பண்டங்களின் மதிப்பை சேர்க்கும்பொழுது, பொருளாதாரத்தில் உற்பத்தி செய்யப்பட்ட இறுதிப் பண்டங்களின் மொத்த மதிப்பு கிடைக்கிறது .

மதிப்புக் கூட்டு முறை

டீதூள் + பால் + சர்க்கரை = தேனீர்


இடைநிலை பண்டங்களின் மொத்த மதிப்பு = இறுதிப் பண்டத்தின் மொத்த மதிப்பு


## மொத்த உள்நாட்டு உற்பத்தியின் முக்கியத்துவம்

1. பொருளாதார வளர்ச்சி பற்றிய ஆய்வு பற்றி அறிந்துகொள்ளப் பயன்படுகிறது..
2. பணவீக்கம் மற்றும் பணவாட்டத்தின் சிக்கல்கள் பற்றி அறிய உதவுகிறது.
3. உலகின் வளர்ந்த நாடுகளுடன் ஒப்பீடு செய்வதற்கு பயன்படுகிறது.
4. வாங்கும் திறனை மதிப்பீடு செய்வதற்கு உதவுகிறது.
5. பொதுத் துறை பற்றி அனைவரும் தெரிந்துகொள்ள பயன்படுகின்றது.
6. பொருளாதார திட்டமிட வழிக்காட்டியாகவும் பயன்படுகிறது.

## மொத்த உள்நாட்டு உற்பத்தியின் குறைபாடுகள்

### 1. GDPயில் பல முக்கிய பண்டங்கள் மற்றும் பணிகள் சேர்க்கப்படவில்லை





சந்தையில் விற்கப்படும் பண்டங்கள் மற்றும் பணிகளின் மதிப்பு மட்டுமே மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அடங்கும். பெற்றோர்கள் அவர்களுடைய குழந்தைகளுக்கு செய்யும் பணிகள் / சேவைகள் மிக முக்கியமானது. ஆனால், அதை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சேர்க்கப்படுவதில்லை. ஏனெனில், அது சந்தையில் விற்பனை செய்யப்படவில்லை. இது போலவே, சுத்தமான காற்று, ஆரோக்கியமான வாழ்க்கைக்கு முக்கியமானது. இதற்கு சந்தை மதிப்பு இல்லை. ஆகவே, இவை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வரம்புக்கு வருவதில்லை.

### 2. GDP அளவை மட்டும் அளவிடுகிறது; தரத்தை அல்ல

1970களில் பள்ளிகள் மற்றும் வங்கிகளில் பந்துமுனை பேனாக்கள் பயன்படுத்த அனுமதிக்கவில்லை. ஏனென்றால், இந்தியாவில் கிடைக்கக்கூடிய மிக தரமற்ற பொருளாக இருந்தது. அதன் பின்னர், இந்தியாவில் தயாரிக்கப்பட்ட பந்துமுனை பேனாக்களின் தரம் மேம்படுத்தப்பட்டதால், அவற்றின் உற்பத்தியும் குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்தது. எனவே, பண்டத்தினுடைய தரம் என்பது மிக முக்கியமானதாகும். ஆனால், அது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பின்பற்றப்படுவதில்லை.

### 3. GDP யில் நாட்டு வருமான பகிர்ந்தளிப்பு பற்றி கூறவில்லை

ஒரு நாட்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி விரைவாக வளரலாம். ஆனால் வருமானம் சமனற்ற நிலையில் பகிர்ந்தளிக்கப்படுகிறது. இதனால் ஒரு சிறிய சதவீத மக்களே பயன் அடைகிறார்கள்.

### 4. GDP மக்கள் வாழும் வாழ்க்கை முறையைப் பற்றி கூறவில்லை

GDP, மிகவும் குறைந்த சுகாதார நிலை, மக்கள் ஜனநாயகமற்ற அரசியல் அமைப்பு, தற்கொலை விகிதம் ஆகியவற்றை கருத்தில் கொள்ளாமல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உயர்மட்ட தனிநபர் வருமானத்துடன் கைகோர்த்து செல்கிறது.

உங்களுக்குத் தெரியுமா?

**GDPயின் மதிப்பீடு**

புள்ளியியல் துறை அமைச்சரவையின் கீழேயுள்ள மத்திய புள்ளியியல் அமைப்பு (CSO), GDP சம்பந்தப்பட்ட ஆவணங்களை பாதுகாக்கிறது. தொழிற்துறையின் உற்பத்தியை ஆண்டு கணக்கெடுப்பு நடத்தி தொழில்துறை உற்பத்தி குறியீடு (IIP), நுகர்வோர் விலை குறியீடு (CPI) போன்ற குறியீடுகளை வெளியிடுகிறது.

## 1.3 மொத்த உள்நாட்டு உற்பத்தியின் இயைபு

இந்திய பொருளாதாரம் பரவலாக மூன்று துறைகளாகப் பிரிக்கப்படுகிறது.



10th_Economics_TM_Unit_1 GDP AND ITS GROWTH.indd 312 24-03-2020 12:42:49

### 1. முதன்மைத் துறை (வேளாண்துறை)


காடுகள்

வேளாண்மைத் துறையை முதன்மைத் துறை எனவும் அழைக்கலாம். இதில் வேளாண் சார்ந்த நடவடிக்கைகள் மற்றும் விவசாய நடவடிக்கைகள் அடங்கும். எ.கா. கால்நடை பண்ணைகள், மீன் பிடித்தல், சுரங்கங்கள், காடுகள் வளர்த்தல், நிலக்கரி போன்ற மூலப் பொருள்களை உற்பத்தி செய்தல்.

### 2. இரண்டாம் துறை (தொழில்துறை)


தொழிற்சாலை

தொழில்துறையை இரண்டாம் துறை எனவும் அழைக்கலாம். மூலப்பொருள்களை மாற்றியமைப்பதன் மூலம் பண்டங்கள் மற்றும் பணிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. எ.கா. இரும்பு மற்றும் எஃகு தொழில், ஜவுளித் தொழில், சணல், சர்க்கரை, சிமெண்ட், காகிதம், பெட்ரோலியம், ஆட்டோமொபைல்ஸ் மற்றும் பிற சிறுதொழில்கள் ஆகும்.

### 3. மூன்றாம் துறை (பணிகள் துறை)

பணிகள் துறையை மூன்றாம் துறை எனவும் அழைக்கலாம். அவைகள் அரசு, அறிவியல் ஆராய்ச்சி, போக்குவரத்து, வர்த்தகம், தபால் மற்றும் தந்தி, வங்கி, கல்வி, பொழுதுபோக்கு, சுகாதாரம் மற்றும் தகவல் தொழில் நுட்பம் போன்றவைகளாகும். 20 ஆம் நூற்றாண்டில் பொருளாதார நிபுணர்கள் பாரம்பரிய மூன்றாம் நிலை பணிகளை "நான்காம் நிலை" மற்றும் "ஐந்தாம் நிலை" பணிகள் துறைகளிலிருந்து மேலும் வேறுபடுத்திட முடியும் என்றனர்.


தபால் மற்றும் தந்தி

## 1.4 இந்தியாவில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வெவ்வேறு துறைகளின் பங்களிப்பு


இந்தியாவில் பணிகள் துறை மிகப்பெரிய துறையாகும். நடப்பு விலையில் மொத்த மதிப்பு கூடுதலில் (GVA) பணிகள் துறைகள் 2018–2019ல் 92.26 லட்சம் கோடி என மதிப்பிடப்பட்டுள்ளன.

விவசாய பண்டங்களின் உற்பத்தியில் இந்தியா இரண்டாவது பெரிய நாடாகும். உலகின் மொத்த விவசாய பொருள்களின் வெளியீட்டில் 7.39% இந்தியாவினால் வெளியிடப்படுகிறது.

உலகில் இந்தியா தொழில்துறையில் எட்டாவது இடத்திலும், பணிகள் துறையில் ஆறாவது இடத்திலும் உள்ளது.


**இந்தியாவில் GDPயின் துறை வாரியான பங்களிப்பு அட்டவணை.**

| ஆண்டு | விவசாயம் % | தொழில்கள் | பணிகள் % |
|---|---|---|---|
| 1950-51 | 51.81 | 14.16 | 33.25 |
| 1960-61 | 42.56 | 19.30 | 38.25 |
| 1970-71 | 41.95 | 20.48 | 37.22 |
| 1980-81 | 35.39 | 24.29 | 39.92 |
| 1990-91 | 29.02 | 26.49 | 44.18 |
| 2000-01 | 23.02 | 26.00 | 50.98 |
| 2010-11 | 18.21 | 27.16 | 54.64 |
| 2011-12 | 17.86 | 27.22 | 54.91 |
| 2012-13 | 17.52 | 26.21 | 56.27 |
| 2013-14 | 18.20 | 24.77 | 57.03 |
| 2015-16 | 17.07 | 29.08 | 52.05 |
| 2016-17 | 17.09 | 29.03 | 52.08 |
| 2017-18 | 17.01 | 29.01 | 53.09 |
| ஆதாரம்: Central Statistics Organisation | | | |




ஆதாரம் : Statisticstimes.com

குறிப்பு: 2018–2019 ஆம் ஆண்டில் இந்தியாவில் GDPயில் துறை வாரியான பங்களிப்பை காட்டும் வரைபடம்.




ஆதாரம்: Statistics times.com



10th_Economics_TM_Unit_1 GDP AND ITS GROWTH.indd 314 24-03-2020 12:42:50



இந்தியாவில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வெவ்வேறு துறைகளின் பங்களிப்பு

இந்திய பொருளாதாரத்தில் விவசாய துறையின் பங்களிப்பு, உலக சராசரி 6.4% விட அதிகமாக உள்ளது. ஆனால்,தொழில்துறை மற்றும் பணிகள் துறைகளின் பங்களிப்பு, உலக சராசரியை விட 30% தொழில் துறையிலும் மற்றும் 63% பணிகள் துறையிலும் குறைவாகவுள்ளன.

**மொத்த மதிப்பு கூடுதல்**

பொருளாதாரத்தில் ஒரு பகுதி, தொழில் அல்லது துறையில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகளின் மதிப்பே மொத்த மதிப்பு கூடுதல் (GVA) ஆகும். GVA = GDP + மானியம் – வரிகள் (நேர்முக வரி, விற்பனை வரி).

## 1.5 பொருளாதார வளர்ச்சி மற்றும் முன்னேற்றம்



பொருளியல் அறிஞர் அமர்த்தியா சென் கருத்துப்படி, பொருளாதார வளர்ச்சி என்பது பொருளாதார முன்னேற்றத்தின் ஓர் அம்சமாகும். 'பொருளாதார வளர்ச்சி மனிதனின் பொருள்சார் தேவைக்கு மட்டும் கவனம் செலுத்துகிறது. ஆனால், ஐக்கிய நாடுகளின் பார்வையில், பொருளாதார வளர்ச்சி என்பது வாழ்க்கை தரம் உயர்தல் அல்லது ஒட்டுமொத்த வளர்ச்சியில் கவனம் செலுத்துதலாகும்".

ஒரு பொருளாதாரத்தில் அல்லது நாட்டின் உற்பத்தியில் அதன் குறிப்பிட்ட காலப் பகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட உற்பத்தி உயர்வு பணமதிப்பினால் அளவிடப்பட்ட அளவு கோல் ஆகும். மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP), மொத்த தேசிய உற்பத்தி (GNP) ஆகிய இரண்டும் பொருளாதார வளர்ச்சியை கணக்கிடும் முக்கிய அளவுகோல், மேலும் ஒரு பொருளாதாரத்தின் உண்மையான அளவை கணக்கிட இது உதவுகிறது.

### பொருளாதார முன்னேற்றம்

ஒரு பொருளாதாரத்தின் பரந்த முறையில் தெளிவான உருவத்தை பொருளாதார முன்னேற்றம் காண்பிக்கிறது. உற்பத்தி நிலையை அல்லது பொருளாதாரத்தின் வெளியீட்டை அதிகப்படுத்துவது, மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவது ஆகியவை இதில் அடங்கும். இது உற்பத்தி அளவு அதிகரிப்பதை மட்டுமில்லாமல், சமூக பொருளாதார காரணிகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளது. தொழில் நுட்ப மேம்பாடு, தொழிலாளர் சீர்திருத்தம், வாழ்க்கைத் தரத்தை அதிகப்படுத்துவது, பொருளாதார அமைப்புகளில் மாற்றத்தை ஏற்படுத்துவது ஆகிய தரமான அளவுகளை அளப்பதே பொருளாதார முன்னேற்றமாகும்.

ஒரு பொருளாதாரத்தின் உண்மையான முன்னேற்றத்தை அளப்பதற்கு மனிதவள மேம்பாடு குறியீடு (HDI) சரியானதாகும்.

## 1.6 வளர்ச்சி பாதையில் GDP மற்றும் வேலைவாய்ப்பு


XQU5PQ

இந்தியா தன் வளர்ச்சி பாதையில் முதலாவதாக நெருக்கமான வர்த்தகக் கொள்கையை எடுத்துக் கொண்டது. இது உள்நாட்டு தொழில்களுக்கு ஒரு உந்துதலையும், வெளிநாட்டு பொருள்களையும், நிறுவனங்களையும் சார்ந்திருத்தலைக் குறைக்கும் நிலையையும் ஏற்படுத்தியது. இந்தியா எல்லைகளைத் திறந்த வர்த்தகத்தை ஏற்க முடிவு செய்து, அதன் பொருளாதாரம் தாராளமயமாக்கப்பட்டு, வெளிநாட்டு நிறுவனங்களை இந்திய பொருளாதாரத்திற்குள் அனுமதிப்பதன் மூலம் 1991 ஆம் ஆண்டு வரை இந்த பார்வை தொடர்ந்து.

ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் வேலை வாய்ப்பு உருவாக்கத்திற்கு ஒரு உந்துதல் வழங்கப்பட்டது. இவை அதிகரித்து வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப, வேலைவாய்ப்பினை அதிகரித்து அதன் மூலம் வேலை வாய்ப்பு பற்றாக்குறையை நீக்குதல் ஆகியவற்றை மேற்கொண்டது.

வறுமை ஒழிப்பு மற்றும் கிராமப்புற வளர்ச்சி ஆகியவை இந்திய வளர்ச்சிப் பாதையின் ஒரு பகுதியாகும்.

பொதுத் துறைக்கு குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. தனியார் நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகள் கடுமையான ஒழுங்குமுறை மற்றும் தரநிலைக்கு



10th_Economics_TM_Unit_1 GDP AND ITS GROWTH.indd 315 24-03-2020 12:42:51

**பொருளாதார வளர்ச்சிக்கும் பொருளாதார முன்னேற்றத்திற்கும் உள்ள வேறுபாடு**

| பொருளாதார வளர்ச்சி பொருளாதார முன்னேற்றம் ஒப்பீடு | பொருளாதார வளர்ச்சி | பொருளாதார முன்னேற்றம் |
|---|---|---|
| **கருத்து** | பொருளாதார வளர்ச்சி ஒரு குறுகிய கருத்து | பொருளாதார முன்னேற்றம் ஒரு "பரந்த கருத்து" |
| **வரையறை / பொருள்** | ஒரு குறிப்பிட்டகாலத்தில் பொருளாதாரத்தில் வெளியீட்டின் நேர்மறை அளவு மாற்றத்தைக் கொடுக்கும். | இது பொருளாதாரத்தில் வெளியீட்டின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, HDIயின் குறியீட்டின் முன்னேற்றம் வாழ்க்கைத் தரத்தில் உயர்வு, தொழில் நுட்ப முன்னேற்றம் மற்றும் ஒரு நாட்டின் ஒட்டு மொத்த மகிழ்ச்சி குறியீட்டைக் குறிக்கிறது. |
| **அணுகுமுறை இயல்பு** | அளவின் இயல்பு | தரத்தின் இயல்பு |
| **நோக்கம்** | GDP, GNP, FDI, FII, போன்ற அளவுகள் அதிகரிக்கும் | வாழ்க்கை எதிர்பார்ப்பு விகிதம், குழந்தை எழுத்தறிவு விகிதம் மற்றும் வறுமை விகிதத்தில் முன்னேற்றம். |
| **கால வரம்பு** | இயற்கையில் குறுகிய காலத்தை உடையது | இயற்கையில் நீண்ட காலத்தை உடையது |
| **பொருந்தும் தன்மை** | வளர்ந்த நாடுகள் | வளர்ந்து வருகின்ற நாடுகள் |
| **அளவீட்டு நுட்பங்கள்** | நாட்டு வருமானத்தை அதிகரித்தல் | உண்மையான நாட்டு வருமானத்தை அதிகரித்தல் அதாவது, தனிநபர் வருமானம் போன்றவை |
| **நிகழ்வின் அதிர்வெண்** | ஒரு குறிப்பிட்ட காலம் | தொடர்ச்சியான செயல்முறை |
| **அரசாங்க உதவி** | இது ஒரு தானியங்கி செயல்முறையாகும். எனவே, அரசாங்க உதவி/ ஆதரவு அல்லது தலையீடு தேவைப்படாது | அரசாங்க தலையீட்டை மிகவும் நம்பியுள்ளது. இது பரந்த கொள்கை மாற்றங்களை உள்ளடக்கியுள்ளது. எனவே, அரசாங்கத் தலையீடு இல்லாமல் அது சாத்தியமே இல்லை. |

உட்பட்டவை ஆயின. அரசாங்கமானது மக்களின் ஒரே பாதுகாப்பாளராகவும் சமூக நலத்திற்காகவும் செயல்படும் என்றும் நம்பப்பட்டது.

இந்தியாவில் கடந்த இரண்டு சகாப்தங்களாக GDP யின் நிலையான அதிக வளர்ச்சியால் தனிநபர் வருமானம் அதிகரித்தும், முழு வறுமை குறைந்தும் காணப்படுகின்றன. 12 ஆண்டுகளில் தனிநபர் வருமானம் இரண்டு மடங்காக உயர்ந்துள்ளது. இந்தியா தனி நபர் வருமானத்தில் நடுத்தர வருவாய் நாடுகளின் பிரிவில் இடம் பிடித்துள்ளது.

பிறப்பின் போது எதிர்ப்பார்க்கப்பட்ட ஆயுட்காலம் 65 ஆண்டுகள் மற்றும் 5 வயதுக்குட்பட்ட 44% குழந்தைகள் ஊட்டச்சத்து குறைபாடுடன் உள்ளனர். 15 வயதும் அதற்கு மேலும் உள்ள மக்கள் தொகையில் 63 % பேர் கல்வியறிவு பெற்றவர்களாக உள்ளனர். இது ஒப்பீட்டளவில் குறைந்த நடுத்தர வருவாய் நாடுகளில் 71% ஆகும்.

மற்ற பிற நாடுகளை விட, இந்தியா வெவ்வேறான வளர்ச்சி பாதையை பின்பற்றுகிறது.


### இந்திய முன்னேற்றத்தை ஆதாரிக்கும் காரணிகள்

இந்தியாவில் 35 வயதிற்கு உட்பட்ட உழைக்கும் வயதில் வேகமாக வளரும் மக்கள் தொகையில் 700 மில்லியன் பேர் உள்ளனர். அடுத்த இருபது ஆண்டுகளில் இந்தியாவின் வளர்ச்சிக்கான மக்கள் தொகை குறைவாக உள்ளது. இந்தியாவில் மக்கள் தொகை மாற்றத்தில், கடந்த இரண்டு சகாப்தங்களாக உழைக்கும் வயது மக்களின் பங்கு 58% லிருந்து 64% ஆக உயர்ந்துள்ளது.



10th_Economics_TM_Unit_1 GDP AND ITS GROWTH.indd 316 24-03-2020 12:42:51

### மனித மேம்பாட்டுக் குறியீடு (HDI)



மனித மேம்பாட்டுக் குறியீடு என்பது 1990ம் ஆண்டு பாகிஸ்தானின் முகஹப் – உல் ஹக் என்ற பொருளியல் அறிஞரால் அறிமுகப்படுத்தப்பட்டது. பிறப்பின் போது வாழ்நாள் எதிர்பார்ப்பு, வயது வந்தோரின் கல்வியறிவு மற்றும் வாழ்க்கைத் தரம், GDPயின் மடக்கை செயல்பாடு என கணக்கிடப்பட்டு, வாங்கும் சக்தி சமநிலைக்கு (PPP) சரி செய்யப்படுகிறது.

UNDPயில் வெளியிடப்பட்ட சமீபத்தில் மனித வளர்ச்சி மதிப்பீடுகளில் இந்தியா 189 நாடுகளில் 130 வது இடத்திற்கு உயர்ந்துள்ளது என வெளியிட்டுள்ளது. 1990 – 2017 ன் இடைப்பட்ட காலத்தில் இந்தியாவின் HDI யின் மதிப்பு 0.427 லிருந்து 0.640 ஆக உயர்ந்தது. இது கிட்டத்திட்ட 50 சதவீதம் அதிகரித்து, மில்லியன் மக்களின் வறுமையை போக்கி நாட்டின் குறிப்பிடத்தக்க குறியீடாக உள்ளது.

இந்தியா கடுமையான சட்ட முறையையும், அதிகமான ஆங்கில மொழி பேசுபவர்களையும் கொண்டுள்ளது. மேலும், தகவல் தொழில் நுட்பத்தில் நிபுணத்துவம் வாய்ந்ததாக இருப்பதால் நிறுவனங்களிடமிருந்து உள்நோக்கி முதலீடுகளை ஈர்க்கிறது.

இந்தியாவின் பொருளாதாரம் தொழில்நுட்ப வளர்ச்சியில் மிகவும் முன்னேறிய மற்றும் கவர்ச்சிகரமான வெற்றியை உருவாக்கியுள்ளது. எடுத்துக்காட்டாக, உலகளாவிய மென்பொருள் வணிகங்களுக்கான ஒரு மையமாக பெங்களூரின் விரைவான தோற்றம் சாட்சியாக உள்ளது.

## 1.7 GDPயின் வளர்ச்சி மற்றும் பொருளாதார கொள்கைகள்

பொருளாதார வளர்ச்சி மற்றும் பொருளாதார முன்னேற்றத்தை அதிகரிப்பதற்கு சுதந்திரம் பெற்றதிலிருந்து இந்திய அரசு பல பொருளாதார கொள்கைகளை உருவாக்கியுள்ளது. முக்கியமான பொருளாதார கொள்கைகள் பின்வருமாறு:

### 1. வேளாண் கொள்கை

உள்நாட்டு வேளாண்மை மற்றும் வெளிநாட்டு வேளாண்மை இறக்குமதி பொருள்கள் பற்றிய அரசின் முடிவுகளையும், நடவடிக்கைகளையும் பற்றியது வேளாண் கொள்கையாகும். சில பரவலான கருப்பொருள்கள், இடர் மேலாண்மை மற்றும் சரிசெய்தல், பொருளாதார நிலைத் தன்மை, இயற்கை வளங்கள், சுற்றுச்சூழல் நிலைத் தன்மையின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, உள்நாட்டு பொருள்களுக்கான சந்தை அணுகல் ஆகியவை வேளாண் கொள்கையில் அடங்கும்.

சில வேளாண் கொள்கைகள்:– விலைக் கொள்கை நில சீர்திருத்த கொள்கை, பசுமைப் புரட்சி, பாசனக் கொள்கை, உணவுக் கொள்கை, விவசாய தொழிலாளர் கொள்கை மற்றும் கூட்டுறவு கொள்கை போன்றவைகளாகும்.

### மொத்த தேசிய மகிழ்ச்சி (GNH)

'GNH' என்ற வார்த்தையை 1972ல் உருவாக்கியவர் ஜிகமே சிங்கயே வாங்ஹக் என்ற பூட்டான் அரசர். அவர் பம்பாய் விமான நிலையத்தில் நிதிகாலங்கள் (Financial Times) என்ற பத்திரிக்கைக்கு பிரிட்டிஷ் பத்திரிக்கையாளரின் நேர்காணலில் GNP ஐ விட GNH மிக முக்கியம் என்றார்.

2011ல் ஐக்கிய நாடுகள் சபை "வளர்ச்சிக்கான ஒரு முழுமையான அணுகுமுறைக்கு – மகிழ்ச்சி" என்ற தீர்மானத்தை நிறைவேற்றியது. உறுப்பு நாடுகள் பூடானை ஒரு எடுத்துக்காட்டாக பின்பற்றி மகிழ்ச்சியையும், நல்வழியையும் மகிழ்ச்சி என அழைத்தனர். ("அடிப்படை மனித குறிக்கோள்").

GNHயின் 4 தூண்கள்

1. நிலையான மற்றும் சமமான சமூக பொருளாதார வளர்ச்சி
2. சுற்றுச்சூழல் பாதுகாப்பு
3. கலாச்சாரத்தை பாதுகாப்பதும் மேம்படுத்துவதும்
4. நல்ல ஆட்சித் திறன்

உளவியல் நலன், உடல் நலம், நேரப் பயன்பாடு, கல்வி, கலாச்சார பன்முகத் தன்மை, நல்ல ஆட்சித் திறன், சமூகத்தின் உயர்வு, சுற்றுச் சூழல் பன்முகத் தன்மை, வாழ்க்கைத் தரம் ஆகியவை GNH இன் 9 களங்களாகக் கருதப்படுகிறது.



10th_Economics_TM_Unit_1 GDP AND ITS GROWTH.indd 317 24-03-2020 12:42:51

## 2. தொழில்துறை கொள்கை

தொழில்துறை முன்னேற்றம் எந்த ஒரு பொருளாதாரத்திற்கும் முக்கியமான அம்சமாகும். இது வேலை வாய்ப்பை உருவாக்குகிறது. ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டை ஊக்குவிக்கிறது. இதனால் நவீனமயமாக்கலுக்கு வழிவகுக்கப்பட்டு இறுதியில் பொருளாதாரம் தன்னிறைவு அடைகிறது. உண்மையில், தொழில் துறைவளர்ச்சி, விவசாயத்துறை (புதிய பண்ணை தொழில் நுட்பம்) மற்றும் பணிகள் துறை போன்ற துறைகளை ஊக்குவிக்கின்றன. இது பொருளாதார வர்த்தக வளர்ச்சிக்கு முக்கிய பங்கு வகிக்கிறது.

1948லிருந்து பல தொழில்துறை கொள்கைகள் பெரிய அளவிலான தொழிற்சாலைகளுக்காக ஏற்படுத்தப்பட்டது. எடுத்துக்காட்டாக, சில தொழில் துறை கொள்கைகள்: ஜவுளித் தொழில் கொள்கை சர்க்கரை தொழில் கொள்கை, தொழில் துறை வளர்ச்சி விலைக் கொள்கை, சிறு தொழில் தொழிற்கொள்கை மற்றும் தொழில் துறை தொழிலாளர் கொள்கை போன்றவைகளாகும்.

## 3. புதிய பொருளாதாரக் கொள்கை

1990களின் ஆரம்பத்தில் இந்தியாவின் பொருளாதாரம் கணிசமான கொள்கை மாற்றங்களுக்கு உட்பட்டது. இந்த புதிய பொருளாதார சீர்திருத்தம் பொதுவாக, LPG அல்லது தாராளமயமாக்கல், தனியார் மயமாக்கல் மற்றும் உலகமயமாக்கல் என அழைக்கப்படுகிறது. இந்த பொருளாதார சீர்திருத்தங்கள், நாட்டின் ஒட்டு மொத்த பொருளாதார வளர்ச்சியை ஒரு குறிப்பிடத் தக்க வகையில் முன்னேற்றமடையச் செய்தது.

### பாடச்சுருக்கம்

- ஓர் ஆண்டில் ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பே மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP)
- இந்திய பொருளாதாரத்தை மூன்று துறைகளாக வகைப்படுத்தலாம். அவை வேளாண்துறை தொழில்கள் துறை மற்றும் பணிகள் துறை.
- தேய்மானம் : அதிக பயன்பாட்டின் காரணமாக பொருள்கள் தேய்மானம் அடைதல் அல்லது பழமையாதல் போன்றவைகளால் சொத்தின் பணமதிப்பு குறைதலாகும்.
- வருமானம் : ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் சம்பாதித்த அல்லது சம்பாதிக்காத பணம் அல்லது பிற வருவாய்களாகும்.
- மொத்த மதிப்பு கூடுதல் (GVA): ஒரு பொருளாதாரத்தில் தொழில் அல்லது சேவைத் துறையில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகளின் மதிப்பாகும்.

### A-Z கலைச்சொற்கள்

| | | |
|---|---|---|
| தேய்மானம் | **Depreciation** | மதிப்பு இழக்கும் முறை |
| இடைநிலை | **Intermediate** | இரண்டு சார்பு விஷயங்களின் இடையே இருப்பு |
| சந்தை விலை | **Market Price** | ஒரு பொருளை வாங்க கொடுக்கும் விலை |
| இறுதி பொருள்கள் | **Final Goods** | எந்த பண்டங்கள் உற்பத்தி செய்யப்பட்டு நுகர்வோருக்கு விருப்பம் அல்லது தேவை திருப்தியளிக்கிதோ அதை நுகர்வு பண்டம் அல்லது இறுதி நிலை பண்டம் என்பர். |
| கலவை | **Composition** | ஏதாவது பொருள்களின் தன்மை அல்லது அமைப்பின் தன்மை ஒரு முழு அல்லது கலவையை உருவாக்கிய வழி. |
| பங்களிப்பு | **Contribution** | பொதுவான நிதிக்கு பரிசு அல்லது கட்டணம் செலுத்துதல் அல்லது சேகரித்தல். |
| தடுமாற்றத்தினை | **Staggering** | தொடர்ந்து இருப்பது அல்லது நிச்சயமற்ற அல்லது ஆபத்தான முறையில் தொடர. |



10th_Economics_TM_Unit_1 GDP AND ITS GROWTH.indd 318 24-03-2020 12:42:51

## பயிற்சி

QXQWBS

### I சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்

1. GNP யின் சமம்
   அ) பணவீக்கத்திற்காக சரிசெய்யப்பட்ட NNP
   ஆ) பணவீக்கத்திற்காக சரிசெய்யப்பட்ட GDP
   இ) GDP மற்றும் வெளிநாட்டில் ஈட்டப்பட்ட நிகர சொத்து வருமானம்
   ஈ) NNP மற்றும் வெளிநாட்டில் ஈட்டப்பட்ட நிகர சொத்து வருமானம்
2. நாட்டு வருமானம் அளவிடுவது
   அ) பணத்தின் மொத்தமதிப்பு
   ஆ) உற்பத்தியாளர் பண்டத்தின் மொத்த மதிப்பு
   இ) நுகர்வு பண்டத்தின் மொத்த மதிப்பு
   ஈ) பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பு
3. முதன்மை துறை இதனை உள்ளடக்கியது
   அ) வேளாண்மை ஆ) தானியங்கிகள்
   இ) வர்த்தகம் ஈ) வங்கி
4. _________ முறையில் ஒவ்வொரு இடைநிலை பண்டத்தின் மதிப்பை கூட்டும்போது, இறுதி பண்டத்தின் மதிப்பை கணக்கிடலாம்.
   அ) செலவு முறை
   ஆ) மதிப்பு கூட்டு முறை
   இ) வருமான முறை
   ஈ) நாட்டு வருமானம்
5. GDP யில் எந்த துறை மூலம் அதிகமான வேலைவாய்ப்பு ஏற்படுகிறது?
   அ) வேளாண் துறை
   ஆ) தொழில்துறை
   இ) பணிகள் துறை
   ஈ) மேற்கண்ட எதுவுமில்லை
6. பணிகள் துறையில் நடப்பு விலையில் மொத்த மதிப்பு கூடுதல் 2018 – 19இல் _________ லட்சம் கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது.
   அ) 91.06 ஆ) 92.26
   இ) 80.07 ஈ) 98.29
7. வேளாண் பண்டங்களின் உற்பத்தியில் இந்தியா _________ அதிகமாக உற்பத்தியாளர் ஆகும்.
   அ) 1 வது ஆ) 3 வது
   இ) 4 வது ஈ) 2வது
8. இந்தியாவில் பிறப்பின் போது எதிர்பார்க்கப்பட்ட ஆயுட்காலம் _________ ஆண்டுகள் ஆகும்.
   அ) 65 ஆ) 60 இ) 70 ஈ) 55
9. கீழ்கண்டவற்றுள் எது வர்த்தக கொள்கை?
   அ) நீர்பாசன கொள்கை
   ஆ) இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கொள்கை
   இ) நில சீர்திருத்தக் கொள்கை
   ஈ) கூலிக் கொள்கை
10. இந்திய பொருளாதாரம் என்பது
   அ) வளர்ந்து வரும் பொருளாதாரம்
   ஆ) தோன்றும் பொருளாதாரம்
   இ) இணை பொருளாதாரம்
   ஈ) அனைத்தும் சரி

### II கோடிட்ட இடங்களை நிரப்புக

1. இந்தியாவில் _________ துறை முதன்மை துறையாகும்.
2. _________ மக்களின் வாழ்க்கைத் தரத்தை உணர்த்தும் ஒரு கருவியாகும்
3. இரண்டாம் துறையை வேறுவிதமான _________ துறை என அழைக்கலாம்.

### III பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| 1. | மின்சாரம் / எரிவாயு மற்றும் நீர் | – | நாட்டு வருமானம் / மக்கள் தொகை |
| 2. | விலைக் கொள்கை | – | மொத்த உள்நாட்டு உற்பத்தி |
| 3. | GST | – | தொழில் துறை |
| 4. | தலா வருமானம் | – | வேளாண்மை |
| 5. | C+I+G+(X–M) | – | பண்டம் மற்றும் பணிகள் மீதானவரி |

### IV கீழ்கண்ட வினாக்களுக்கு குறுகிய விடையளி

1. நாட்டு வருமானம் – வரையறு.
2. மொத்த உள்நாட்டு உற்பத்தி என்றால் என்ன?
3. GDPயின் முக்கியத்துவத்தை எழுதுக
4. தனி நபர் வருமானம் என்றால் என்ன?
5. மதிப்பு கூட்டுமுறையை எடுத்துக்காட்டுடன் வரையறு
6. இந்தியாவின் பொருளாதாரக் கொள்கைகளின் பெயர்களை எழுதுக.
7. சிறு குறிப்பு வரைக.
   1) மொத்த தேசிய மகிழ்ச்சி (GNH)
   2) மனித மேம்பாட்டுக் குறியீடு (HDI)

## V கீழ்க்கண்ட வினாக்களுக்கு விரிவான விடையளி

1. நாட்டு வருமானத்தை கணக்கிடுவதற்கு தொடர்புடைய பல்வேறு கருத்துக்களை விவரி.
2. GDPஐ கணக்கிடும் முறைகள் யாவை? அவைகளை விவரி.
3. இந்தியாவில் GDP யில் பல்வேறு துறைகளின் பங்கினை விவரி.
4. பொருளாதார வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் இடையேயுள்ள ஏதேனும் ஐந்து வேறுபாடுகளைக் கூறுக.
5. கீழ்க்காணும் பொருளாதார கொள்கைகளை விவரி.
   1) வேளாண் கொள்கை
   2) தொழிற் கொள்கை
   3) புதிய பொருளாதர கொள்கை

## VI செய்முறைகள் மற்றும் செயல்பாடுகள்

1. தமிழ்நாட்டின் GDP புள்ளி விவரங்களை சேகரித்து கர்நாடக மற்றும் கேரளா மாநிலங்களுடன் ஒப்பிடுக.
2. தமிழ்நாட்டின் வேலை வாய்ப்பு வளர்ச்சிப் பற்றிய புள்ளி விவரங்களை சேகரிக்கக் கூறுதல்.

## மேற்கோள் நூல்கள்


1. Sankaran *Indian Economy(problems, policies,and development).*
2. Ramesh singh *Indian economy* (10th Edition).
3. *Ministry of statistics and implementation planning commission. Government of India.*


## இணையதள வளங்கள்

1. http://en.wikipedia.org
2. http://www.statisticstimes.com

# இணையச் செயல்பாடு

## மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் அதன் வளர்ச்சி : ஓர் அறிமுகம்

### செயல்முறை

- கீழ்காணும் உரலி / விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தி இச்செயல்பாட்டிற்கான இணையப் பக்கத்திற்க்குச் செல்லவும்.
- வலது பக்கம் கொடுக்கப்பட்டுள்ள 'Real GDP Growth' உள்ளே சென்று ' India' வை சொடுக்கி இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி பற்றி தெரிந்துகொள்ளலாம்.

**உரலி:** https://www.imf.org/external/datamapper/datasets/WEO/1

B373_10_SOCIAL_TM



10th_Economics_TM_Unit_1 GDP AND ITS GROWTH.indd 320 24-03-2020 12:42:51

# அலகு – 2

# உலகமயமாதல் மற்றும் வர்த்தகம்



## கற்றலின் நோக்கங்கள்

CCAII9

- உலகமயமாதலின் பொருள் மற்றும் வரலாறு பற்றி அறிந்துகொள்ளுதல்
- பன்னாட்டு நிறுவனங்களின் (MNC) பரிமாண வளர்ச்சியை புரிந்துகொள்ளுதல்
- தென்னிந்திய வரலாற்று முன்னோக்கில், வர்த்தகம் மற்றும் வணிகர்கள் பற்றி அறிந்துகொள்ளுதல்
- நியாயமான வர்த்தக நடைமுறைகள் மற்றும் உலக வர்த்தக அமைப்பைப் பற்றி அறிந்துகொள்ளுதல்
- உலக மயமாதலின் தாக்கத்தையும், சவால்களையும் புரிந்துகொள்ளுதல்

## அறிமுகம்

நவீன நாட்களில் அரசியல்வாதிகள், பொருளியல் வல்லுநர்கள் மற்றும் தொழிலதிபர்களிடையே அதிகமாக பேசக்கூடிய கருத்துக்களாக தாராளமயமாக்கல், தனியார்மயமாக்கல் மற்றும் உலகமயமாக்கல் (LPG) இருக்கின்றன. நமது அரசாங்கம் 1991ஆம் ஆண்டு இவற்றை நடைமுறைப்படுத்தியது.

## 2.1 உலகமயமாக்கல்


உலகமயமாக்கல் என்பது உலக பொருளாதாரத்துவ நாடுகளை ஒருங்கிணைப்பதாகும். அடிப்படையில் உலகமயமாக்கல், சர்வதேசமயமாக்கல் மற்றும் தாராளமயமாக்கல் செயல்முறையை குறிக்கிறது.



**உலகமயமாதல்**

## 2.2 உலகமயமாக்கலின் வரலாறு

உலகமயமாக்கல் என்ற சொல் பேராசிரியர் தியோடோர் லெவிட் என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டது. உலகமயமாக்கல் வரலாற்று பின்னணியில் மூன்று நிலைகளில் விவாதிக்கப்பட்டது.





### தொன்மையான உலகமயமாக்கல்

சுமேரிய மற்றும் சிந்து சமவெளி நாகரிகத்தின் இடையேயான வர்த்தக உறவுகள் உலகமயமாக்கல் என்ற ஒரு வடிவத்தை மூன்றாம் நூற்றாண்டுகளிலேயே உருவாக்கியது என்று ஆண்ட்ரே குந்தர் ஃபிராங்க் வாதிட்டார். உலகமயமாக்கப்பட்ட பொருளாதாரம் மற்றும் கலாச்சாரத்தின் ஆரம்ப வடிவத்தை தொன்மையான உலகமயமாக்கல் என்று கிரேக்க (Hellenistic Period) காலத்தின் போது அழைக்கப்பட்டது. ரோம் பேரரசுக்கும் பார்த்தியன் பேரரசுக்கும் மற்றும் ஹான் வம்சத்துக்கும் இடையேயான வர்த்தக தொடர்பே உலகமயமாக்கலின் ஆரம்ப வடிவம்.



10th_Economics_TM_Unit_2 GLOBALISATION.indd 321 11-04-2020 12:03:07




இந்த பேரரசுகளுக்கு இடையேயான வணிக உறவுகள் பட்டு சாலையின் (Silk Route) வளர்ச்சியை ஊக்கப்படுத்தியது.

இஸ்லாமிய காலம் கூட உலகமயமாக்கலில் ஒரு முக்கிய ஆரம்பகட்டமாக இருந்து வந்தது. மங்கோலிய பேரரசின் வருகை, மத்திய கிழக்கு மற்றும் சீனாவின் வர்த்தக மையங்களுக்கு உறுதியற்றதாக இருந்தாலும் பட்டு சாலை வழியாக பயணிக்க வசதியாக இருந்தது. இந்த நவீனத்திற்கு முந்தைய கால கட்டத்தில் நடந்த உலக பரிமாற்றம் சில நேரங்களில் தொன்மையான உலகமயமாக்கல் என்றழைக்கப்படுகிறது.

## இடைப்பட்ட உலகமயமாக்கல்

உலகமயமாக்கலின் அடுத்த கட்டம் இடைப்பட்ட உலகமயமாக்கல் ஆகும். 16 மற்றும் 17ஆம் நூற்றாண்டுகளில், ஐரோப்பிய பேரரசுகளின் எழுச்சியால் முதலில் போர்ச்சுகீசியர்கள், ஸ்பானியர்கள், டச்சுக்காரர்கள் மற்றும் ஆங்கிலேயர்கள் கடல் வழி வாணிபம் மேற்கொண்டனர். உலகமயமாக்கல், 17ஆம் நூற்றாண்டில், பிரிட்டிஷ் கிழக்கிந்திய நிறுவனம் (1600) தனியார் வணிக நிறுவனம் போன்று உருவாக்கப்பட்டது. அதுவே முதல் பன்னாட்டு நிறுவனம் என அழைக்கப்பட்டது. மேலும், முதல் டச்சு கிழக்கிந்திய நிறுவனம் (1602) உருவாக்கப்பட்டு வாணிபம் நடைபெற்றது.

## நவீன உலகமயமாக்கல்

19ஆம் நூற்றாண்டில் உலகமயமாக்கல் நவீன வடிவத்தை நெருங்கியது. 19 மற்றும் 20ஆம் நூற்றாண்டுகளுக்கு இடையே நடைபெற்ற உலகமயமாக்கல் குறிப்பிடத்தக்க வேறுபாடுகளை கொண்டிருந்தன. அவை, அந்த நூற்றாண்டுகளில் நடைபெற்ற உலகளாவிய வர்த்தக பொருளாதாரத்தில் மூலதனம் மற்றும் முதலீடு செய்யப்பட்டதும், 20ஆம் நூற்றாண்டில் வணிக உற்பத்தியில் அதிக பங்கினை பெற்றிருந்ததுடன், சேவைகள், வர்த்தகம் மற்றும் பன்னாட்டு நிறுவனங்களின் உற்பத்தி வணிகத்தில் எழுச்சியுற்றிருந்ததும் ஆகும்.

## 2.3 வரலாற்றுப் பார்வையில் தென் இந்தியாவில் வர்த்தகம் மற்றும் வணிகர்கள்

வர்த்தக நடவடிக்கைகளை ஒழுங்கமைக்கவும், விரிவுபடுத்தவும் வணிகர்கள் தென்னிந்திய வர்த்தகக் குழுக்களை உருவாக்கினர்கள். இந்திய

கலாச்சாரத்தை மற்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் வழிகளாக வர்த்தகக் குழுக்கள் இருந்தன.

### ஆரம்பகால வர்த்தகர்கள்

கி.பி. (பொ.ஆ.) 1053இல் கலிங்க வர்த்தகர்கள் (ஒடிசா) சிவப்பு வண்ண கல் அலங்கார பொருள்களை வர்த்தகத்திற்கு கொண்டு வந்தனர். மேலும், ஆரம்ப நாட்களில் பருத்தி ஆடைகளை தென்கிழக்கு ஆசியாவிற்கு கொண்டு வந்து வர்த்தகம் செய்தனர்.

### ஐரோப்பிய வணிகர்கள்

இந்த காலத்தில் இந்தியாவிற்கு பல்வேறு ஐரோப்பிய நிறுவனங்கள் வருவதற்கு வர்த்தக நடவடிக்கைகள் காரணமாக இருந்தது. வாஸ்கோ-டா-காமாவால் ஐரோப்பாவிலிருந்து இந்தியாவிற்கு நன்னம்பிக்கை முனை வழியாக புதிய கடல் பாதை கண்டுபிடிக்கப்பட்டது. அது நாகரிக உலகத்தின் மீது பல விளைவுகளை ஏற்படுத்தியது..

### போர்ச்சுகீசியர்கள்

வாஸ்கோ-டா-காமாவின் தலைமையின் கீழ் போர்ச்சுகீசியர்கள் மே 1498இல் கள்ளிக்கோட்டைக்கு வாணிபத்திற்காக வந்தனர். வாஸ்கோ-டா-காமாவால் போர்ச்சுக்கல்லுக்கு கொண்டு வந்த பொருள்களின் லாபமானது, இந்தியா முழுவதும் பயணம் செய்த செலவைவிட 60 மடங்காகும். மேலும் 1502இல், வாஸ்கோ-டா-காமாவின் இரண்டாவது பயணம் இந்தியாவில் கள்ளிக்கோட்டை, கொச்சின் மற்றும் கண்ணனூர் ஆகிய இடங்களில் வர்த்தக நிறுவனங்கள் நிறுவுவதற்கு வழிவகுத்தது. ஆரம்பத்தில் இந்தியாவில் போர்ச்சுகீசியர்களின் தலைநகரமாக கொச்சின் இருந்தது.

### டச்சுக்காரர்கள்

1596இல் இருந்து டச்சுக்காரர்கள் பல பயணங்கள் மேற்கொண்டு, டச்சு கிழக்கு இந்திய நிறுவனத்தை 1602இல் உருவாக்கினர். அட்மிரல் வான் டெர் ஹகேன் என்பவரால் டச்சு நிறுவனம் மசூலிப்பட்டினம், பெத்தபோலி (நிஜாம்பட்டினம்), தேவனாம்பட்டினம் ஆகிய இடங்களில் நிறுவப்பட்டது. 1610ஆம் ஆண்டில் சந்திரகிரி ராஜாவுடன் பேச்சுவார்த்தை நடத்தி பழவேற்காடு என்னுமிடத்தில் மற்றொரு தொழிற்சாலையை நிறுவினர். இண்டிகோ மற்றும் வங்க கச்சா பட்டு போன்ற இதர பொருள்கள் டச்சுக்காரர்களால் ஏற்றுமதி செய்யப்பட்டது. இந்தியாவில் டச்சுக்காரர்களின் தலைமையிடமாக பழவேற்காடு இருந்தது.

### ஆங்கிலேயர்கள்

டிசம்பர் 31, 1600 அன்று, கிழக்கிந்திய கம்பெனி நிறுவனம் துவங்குவதற்கு எலிசபெத் ராணியால் பட்டயம் வழங்கப்பட்டது. தென் கிழக்கு கடற்கரையில், ஆங்கிலேயர்கள் 1611இல் மசூலிப்பட்டினத்திலும், 1626இல் பழவேற்காடு அருகிலும் நிறுவினார்கள். கோல்கொண்டாவின் சுல்தான், ஆங்கிலேயர்களுக்கு "கோல்டன் ஃபயர்மேன்" என்ற பட்டத்தை வழங்கி, 1632ல் அவர்களை தங்கள் "ராஜ்ய துறைமுகங்களில்" இலவசமாக வர்த்தகம் செய்யவும் அனுமதி வழங்கினார். 1639ஆம் ஆண்டில் ஆங்கிலேயர்களால் சென்னையில் ஒரு வலுவான நிறுவனம் கட்டப்பட்டது. பின்பு அது செயின்ட் ஜார்ஜ் கோட்டை என அழைக்கப்பட்டது. சோழமண்டல கடற்கரையிலுள்ள மசூலிப்பட்டினம் விரைவில் ஆங்கில குடியேற்றத்தின் தலைமையகமாக மாறியது.

### டேனிஷ்காரர்கள்

டேனிஷ்காரர்கள், 1616ஆம் ஆண்டில் இந்தியாவிற்கு வருகை புரிந்து டேனிஷ் கிழக்கு இந்திய நிறுவனம் ஒன்றை உருவாக்கினர். 1620ஆம் ஆண்டில் இந்தியாவில் டேனிஷ் குடியேற்றங்களால் டிராங்குபார் (தரங்கம்பாடி, தமிழ்நாடு) தலைமையிடமாக நிறுவப்பட்டது.

### பிரெஞ்சுக்காரர்கள்

இந்தியாவில் பிரெஞ்சுக்காரர்கள் 1668ஆம் ஆண்டில் கோல்கொண்டாவின் சுல்தானிடம் அனுமதி பெற்று, முதல் பிரெஞ்சு தொழிற்சாலையை நிறுவினர். 1693ஆம் ஆண்டு டச்சுக்காரர்கள் பாண்டிச்சேரியை கைப்பற்றி மீண்டும் பிரெஞ்சுக்காரர்களிடமே ஒப்படைத்தனர். 1701இல் பாண்டிச்சேரி பிரெஞ்சுக்காரர்களின் தலைமையிடமாக மாறியது.

## 2.4 இந்தியாவில் உலகமயமாக்கல்

இந்தியாவில் 1980-81க்கு பிறகு 1990-91களில் நடைபெற்ற வளைகுடா போரின் காரணமாக எண்ணெய் விலை அதிகரிப்பு மற்றும் மேற்கு ஆசியாவின் போர்க்குணம் ஆகியவற்றின் காரணமாக கடுமையான அயல்நாட்டு வாணிபச் செலுத்து சமநிலையில் ஏற்பட்ட சிக்கல்கள் குறிப்பிடத்தக்கது

புதிய அரசு ஜூன் 1991இல் பொறுப்பு ஏற்றவுடன் இந்தியா அயல்நாட்டு செலுத்து சமநிலையில் முன் எப்போதும் இல்லாத நெருக்கடியை சந்தித்தது.

சில சர்வதேச நிறுவனங்களால் இந்தியாவின் கடன் மதிப்பீடு குறைந்ததுடன், இங்கிருந்து அதிகமான மூலதனமும் வெளியே சென்றது.

www.tntextbooks.in

இந்தியா சர்வதேச சந்தையில் தனது கடன் தரும் தகுதியை இழந்ததால், இங்கிலாந்து வங்கியில் (Bank of England) 40டன் தங்கத்தை அடமானம் வைத்தது. இந்த சூழ்நிலையில், ஜூலை 1991இல் அரசாங்கம் தனது வரவு செலவுத் திட்டத்தை தாராளமயமாக்கல், தனியார்மயமாக்கல் மற்றும் உலகமயமாக்கல் (LPG) ஆகியவற்றின் தொடர்ச்சியான கொள்கை மாற்றங்களுடன் வழங்கியது. இந்த கொள்கைகள் இந்தியாவில் 1994ஆம் ஆண்டில் "டங்கல் வரைவை" கையெழுத்திட்ட போது பலப்படுத்தப்பட்டது.

**உலகமயமாக்கல் சார்ந்த சீர்திருத்தங்கள் (இந்தியாவில் புதிய பொருளாதாரக் கொள்கை)**

1. சில தொழிற்சாலைகளைத் தவிர, தொழில் உரிமம் பெறுவதை நீக்கியது.
2. பொதுத்துறை நிறுவனத்திற்காக ஒதுக்கப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டது.
3. இந்தியாவின் பொருள்களின் ஏற்றுமதி பரிமாற்றத்தில் நிலையான பணத்தின் மாற்று வீதத்தை சரி செய்தது.
4. வெளிநாட்டு தனியார் துறை நடப்பு கணக்கில் இறக்குமதி வரியை குறைப்பதன் மூலம் வர்த்தகத்தில் ரூபாய் மாற்றத்தை உருவாக்கியது.
5. அயல்நாட்டு செலவாணி ஒழுங்குமுறை பொருத்தமாக திருத்தப்பட்டது.
6. இந்திய ரிசர்வ் வங்கியால் வழங்கப்பட்ட சட்ட ரீதியான நீர்மை விகிதம்(SLR) அதிகரிக்கப்பட்டது.

## 2.5 பன்னாட்டு நிறுவனம் (MNC) Multi National Corporation

பன்னாட்டு நிறுவனம் என்பது நாட்டில் பண்டங்களையும் அல்லது பணிகளையும் உற்பத்தி செய்யும் அல்லது கட்டுப்படுத்தும் ஒரு பெருநிறுவனமாகும்.

### MNC யின் பரிமாண வளர்ச்சி

கிழக்கிந்திய நிறுவனம், ஒரு வர்த்தக நிறுவனமாக இந்தியாவிற்கு வந்தது. அதன் பிறகு அரசியல் ரீதியாக நாடெங்கிலும் பரவலாக ஆதிக்கம் செலுத்தியது. 1920களில் பன்னாட்டு நிறுவனங்கள் முதலில் பிரித்தெடுக்கப்பட்ட தொழில்களில் அல்லது தொழில் நடத்தும் நாடுகளின் மூலப்பொருள்களை கட்டுப்படுத்தி மெதுவாக இந்தியாவினுள் நுழைந்தன. 1950களுக்கு பிறகு உற்பத்தி மற்றும் பணிகள் துறையிலும் ஈடுபட்டது. தற்போது, இந்தியாவில் நான்கு பெரிய ஏற்றுமதி நாடுகளான அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் மற்றும் ஜெர்மனி போன்ற நாடுகளுக்கு சொந்தமான பன்னாட்டு நிறுவனங்கள் பெரும்பான்மையாக உள்ளது. இவற்றில் அதிகமானது அமெரிக்காவினுடையது ஆகும். இந்தியாவிலுள்ள 15 பெரிய பன்னாட்டு நிறுவனங்களில், 11 அமெரிக்காவை சேர்ந்ததாகும்.

### இந்தியாவில் பன்னாட்டு நிறுவனங்களின் வளர்ச்சி

இந்திய தொழிற்துறையில் பன்னாட்டு நிறுவனம் ஒரு பொதுவான வடிவத்துடன், இந்திய தொழிலதிபர்களின் ஒத்துழைப்புடன் நுழைந்தது. 1980களில் தாராளமயமாக்களின் போக்குகள் வெளிநாட்டு ஒத்துழைப்புக்கு கணிசமான பங்கினை அளித்தன. 1948 – 1988ஆம் ஆண்டுகளுக்கு இடையில் கையெழுத்தான 12,760 மொத்த வெளிநாட்டு ஒத்துழைப்பு ஒப்பந்தங்களில் இருந்து இது தெளிவாகிறது. 1991இல் அறிவிக்கப்பட்ட தாராளமயமாக்கப்பட்ட வெளிநாட்டு முதலீட்டுக் கொள்கையினால் (FIP) வெளிநாட்டு ஒத்துழைப்புகள் அதிகரித்து வெளிநாட்டு நேரடி முதலீடும் (FDI) அதிகரித்துள்ளது.



மென்பொருள் பன்னாட்டு நிறுவனம்

### MNC யின் வளர்ச்சிக்கான காரணங்கள்:

**1. சந்தை நிலப்பரப்பின் விரிவாக்கம்**

பெரிய அளவிலான நிறுவனங்கள் விரிவடைந்து வருவதால், அந்த நிறுவனம் உள்ள நாட்டின் புவியியல் எல்லைகளுக்கு அப்பால் அதன் செயல்பாடுகளை மேலும் விரிவாக்குகிறது.

**2. சந்தைப்படுத்தும் மேன்மை**

ஒரு பன்னாட்டு நிறுவனம், தேசிய நிறுவனங்களின் மீது சந்தைப்படுத்தும் மேன்மையைக் கொண்டுள்ளது. இது சந்தை மதிப்பினைப் பெற்று, அதன் தயாரிப்புகளை விற்பனை செய்வதில் குறைவான சிரமங்களை எதிர் கொள்கிறது. மேலும் பயனுள்ள விளம்பர மற்றும் விற்பனை ஊக்குவிப்பு தொழில்நுட்பங்களை ஏற்றுக் கொள்கிறது.



10th_Economics_TM_Unit_2 GLOBALISATION.indd 324 11-04-2020 12:03:07

| வெளிநாட்டிலுள்ள இந்தியாவின் பன்னாட்டு நிறுவனங்கள் | | | |
|---|---|---|---|
| **நிறுவனம்** | **தலைமையகம்** | **தொழிலின் வகை** | **நிறுவனம் இயங்கும் நாடுகள்** |
| ஹீரோ மோட்டோகார்ப் | புதுடில்லி | ஆட்டோமொபைல் | கொலம்பியா, பங்களாதேஷ், ஆப்பிரிக்கா |
| பஜாஜ் | பூனா | ஆட்டோமொபைல் | ஐக்கிய அரபு நாடுகள், பங்களாதேஷ் |
| டி.வி.எஸ்(TVS) | சென்னை | ஆட்டோமொபைல் | பிரேசில், சிலி, கொலம்பியா, மெக்ஸிகோ, பெரு |
| பாரத ஸ்டேட் வங்கி | மும்பை | வங்கி | ஆஸ்திரேலியா, பங்களாதேஷ், பெல்ஜியம் |
| பாரத் ஏர்டெல் | புதுடில்லி | தகவல் தொடர்பு | தெற்கு ஆசியா, ஆப்பிரிக்கா |

**3. நிதி மேன்மை**

இதில் நிதி வளங்களும், உயர்நிதி பயன்பாடுகளும் உள்ளன. இதனால், வெளிப்புற மூலதன சந்தைகளை எளிதில் அணுகமுடியும் மற்றும் அதன் சர்வதேச புகழ் காரணமாக வளங்களை அதிகரிக்கவும் முடியும்.

| 2018இல் இந்தியாவின் மிகப் பெரிய பன்னாட்டு நிறுவனங்கள் | |
|---|---|
| சோனி கார்ப்பரேசன் | நெட்டில் |
| ஹவுலக் பேக்கார்டு (HP) | பிராக்டர் & கேம்பில் |
| டாட்டா குழுமம் | சிட்டி குழுமம் |
| மைக்ரோ சாப்ட் கார்ப்பரேசன் | பெப்சி நிறுவனம் |
| ஐ.பி.எம் | கோகோ – கோலா நிறுவனம் |

**4. தொழில்நுட்ப மேன்மை**

பின்தங்கிய நாடுகளில் பன்னாட்டு நிறுவனங்கள் பங்கேற்க, ஊக்கமளித்ததற்கான முக்கிய காரணம் இந்த நிறுவனங்கள் தொழில் வளர்ச்சியில் தொழில்நுட்ப மேம்பாட்டுடன் காணப்படுவதேயாகும்.

**5. பண்டங்களின் கண்டுபிடிப்புகள்**

பன்னாட்டு நிறுவனங்கள், புதிய தயாரிப்புகள் மற்றும் ஏற்கனவே உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை மேம்பட்ட வடிவமைப்புகளாக உருவாக்குவதற்கான பணியில் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளன.

### MNC யின் நன்மைகள்

1. பன்னாட்டு நிறுவனங்கள் குறைந்த விலையில் பொருள்களை தரமாகவும் மற்றும் பரிவர்த்தனை செலவு இல்லாமலும் உற்பத்தி செய்கிறது .
2. பன்னாட்டு நிறுவனங்கள் விலைகளை குறைப்பதால் உலகளாவிய நுகர்வோரின் வாங்கும் சக்தி அதிகரிக்கிறது.
3. பன்னாட்டு நிறுவனங்கள் வரி மாறுபாட்டை பயன்படுத்திக் கொள்ளமுடியும்.
4. பன்னாட்டு நிறுவனங்கள் உள்ளூர் பொருளாதாரத்தில் வேலைவாய்ப்பினை ஊக்குவிக்கின்றன.

### பன்னாட்டு நிறுவனங்களின் தீமைகள்

1. பன்னாட்டு நிறுவனங்கள் முற்றுரிமையை (சில தயாரிப்புகளுக்கு) வளர்ப்பதற்கான ஒரு வழியாகும்.
2. பன்னாட்டு நிறுவனங்கள் சுற்றுசூழலில் தீங்கினை உருவாக்க வாய்ப்புள்ளது.
3. ஒரு நாட்டின் பொருளாதாரத்தில் பன்னாட்டு நிறுவனத்தின் அறிமுகம் சிறிய உள்ளூர் வணிக வீழ்ச்சிக்கு வழிவகுக்கும்.
4. பன்னாட்டு நிறுவனங்கள் ஒழுக்க நெறிமுறைகளை மீறுவதோடு, தார்மீக சட்டங்களை அவர்கள் குற்றம் சாட்டி, மூலதனத்துடன் தங்கள் வணிக செயல்பாட்டினை திருப்பிக் கொள்வதற்கும் முனைவர்.

## 2.6 நியாயமான வர்த்தக நடைமுறைகள் மற்றும் உலக வர்த்தக அமைப்பு (WTO)

நியாயமான வர்த்தகமானது, சிறிய விவசாயிகளை உலகளாவிய சந்தை இடத்தில் ஒரு சுறுசுறுப்பான பகுதியாக வைத்திருப்பதோடு நுகர்வோருக்கு அதிகாரம் அளிக்கவும், கொள்முதல் செய்யவும், அவர்களின் மதிப்பை ஆதரிக்கவும் நோக்கமாகக் கொள்ளும் ஒரு வழி முறையாகும். அவைகள்,



10th_Economics_TM_Unit_2 GLOBALISATION.indd 325 11-04-2020 12:03:08

- சிறிய அளவிலான விவசாயிகள், பண்ணை தொழிலாளர்கள் மற்றும் கைவினைஞர்களின் வருமானத்தை உயர்த்துவது மற்றும் உறுதிப்படுத்துவது.
- பொருள்கள் உற்பத்தி மற்றும் விற்பனையுடன் தொடர்புடைய பொருளாதார இலாபங்கள், வாய்ப்புகள் மற்றும் இடர்பாடுகளை சமமாக்குதல்.
- உற்பத்தியாளர் குழுக்களின் நிறுவன மற்றும் வர்த்தக திறன்களை அதிகரித்தல்.
- தொழிலாளர் உரிமைகளை மேம்படுத்துதல் மற்றும் தொழிலாளர்களை சரியான முறையில் ஒருங்கிணைக்க ஏற்பாடு செய்தல்.
- பாதுகாப்பான மற்றும் நிலையான விவசாய முறைகள் மற்றும் பணி நிலைமைகளை ஊக்குவித்தல்.

நியாயமான வணிகம் என்பது விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களுக்கு சிறந்த விலை, சிறந்த வேலைவாய்ப்பளித்தல் மற்றும் வர்த்தகம் தொடர்பான நியாயமான விதிமுறைகளை அளிப்பதாகும்.

### நியாயமான வர்த்தக அமைப்பின் கோட்பாடுகள்

- பொருளாதார ரீதியில் பின்தங்கிய உற்பத்தியாளர்களுக்கான வாய்ப்புகளை உருவாக்குதல்.
- வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வு.
- நியாயமான வர்த்தக/ நடைமுறைகள் மற்றும் நியாயமான விலையில் கொடுப்பது.
- குழந்தை தொழிலாளர் மற்றும் கட்டாயத் தொழிலாளர் இல்லை என்பதை உறுதிப்படுத்துகிறது.
- பாகுபாடின்மை பாலின சமத்துவம் சமபங்கு மற்றும் கூட்டமைப்பு சுதந்திரம் ஆகியவற்றுக்கு அர்ப்பணித்தல்.
- திறனை வளர்த்தல் மற்றும் நியாயமான அமைப்பினை மேம்படுத்துதல்.
- சுற்றுசூழலுக்கு மதிப்பளித்தல் ஆகியனவாகும்.

### சுங்கவரி, வாணிபம் குறித்த பொது உடன்பாடு: GATT(காட்) (General Agreement of Trade and Tariff):

1947இல் 23 நாடுகள் காட் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. காட்டின் நிறுவன உறுப்பினர்களில் இந்தியாவும் ஒன்றாக இருந்தது. இதன் இயக்குநர் ஜெனரல் ஆர்தர் டங்கல் கொண்டு வந்த இறுதி சட்ட/ ஒப்பந்த வரைவு "டங்கல் வரைவு" என்று அழைக்கப்பட்டது. காட்டின் (GATT) முக்கிய நோக்கம், அர்த்தமுள்ள விதிமுறைகளை பின்பற்றி பலவிதமான கட்டணங்களையும், ஒதுக்கீடுகளையும், மானியங்களையும் குறைப்பதன் மூலம் சர்வதேச வர்த்தகத்தை அதிகரிப்பது ஆகும்.

**காட்டின் (GATT) சுற்றுகள்**

- I வது ஜெனிவா (சுவிசர்லாந்து) – 1947
- II வது அன்னிசி (பிரான்ஸ்) – 1949
- III வது டார்க்குவே (இங்கிலாந்து) – 1950–51
- IV, V மற்றும் VI ஜெனிவா (சுவிட்சர்லாந்து) – 1956, 1960–61, 1964–67
- VII வது டோக்கியோ (ஜப்பான்) – 1973–79
- 1986–1994இல் VIII வது மற்றும் இறுதிச் சுற்று பன்டாடெல் எஸ் டீ (உருகுவே). இதை "உருகுவே சுற்று" என அழைத்தனர்.

### உலக வர்த்தக அமைப்பு (WTO):

1994ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் உலக வர்த்தக அமைப்பை (WTO) அமைப்பதற்கு காட் உறுப்பு நாடுகள் உருகுவே சுற்றின் போது இறுதி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. இந்த ஒப்பந்தத்தை அமல்படுத்திட 104 உறுப்பினர்களால் கையெழுத்திடப்பட்டது. WTO உடன்படிக்கை ஜனவரி 1, 1995 முதல் நடைமுறைக்கு வந்தது.



உலக வர்த்தக அமைப்பு (WTO)

**உலக வர்த்தக அமைப்பு**
**(World Trade Organisation)**

**தலைமையகம்** : ஜெனிவா, சுவிட்சர்லாந்து

**நோக்கம்** : வணிகத்தினை கட்டுப்படுத்தல், அயல்நாட்டு வாணிபம்

**உறுப்பினர்கள்**: தலைமை இயக்குநர், துணை தலைமை இயக்குநர்–4 மற்றும் 80 உறுப்பு நாடுகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 600 அலுவலக ஊழியர்கள்

### உலக வர்த்தக அமைப்பின் குறிக்கோள்கள்:

- அயல் நாட்டு வாணிபத்திற்கான விதிகள் அமைத்தல் மற்றும் செயல்படுத்தல்.



10th_Economics_TM_Unit_2 GLOBALISATION.indd 326 11-04-2020 12:03:08

- வர்த்தக தாராளமயமாக்கலுக்கான பேச்சு வார்த்தை மற்றும் கண்காணிப்பதற்கான ஒரு மன்றத்தை வழங்குதல்.
- வர்த்தக தகராறுகளைக் கையாளுதல்.
- நிலையான முன்னேற்றம் மற்றும் சுற்றுச்சூழல் ஆகிய இரண்டையும் ஒன்றிணைத்து அறிமுகம் செய்தல்.
- உலக வர்த்தகத்தில் வளர்ந்துவரும் நாடுகளின் ஒரு சிறந்த வளர்ச்சிக்கு பாதுகாப்பாக இருத்தல்.
- முடிவெடுக்கும் செயல்களின் வெளிப்படைத் தன்மையை அதிகரித்தல்.
- முழு வேலை வாய்ப்பை உறுதிப்படுத்துதல் மற்றும் பயனுள்ள தேவையை அதிகரித்தல்.

### அறிவுசார் சொத்துரிமை தொடர்பான வர்த்தக உரிமைகள் (TRIPs–Trade Related aspects of Intellectual Property Rights)

அறிவுசார் பண்டங்களின் உரிமைகள் என்பது "ஒரு வணிக மதிப்புடன் கூடிய தகவல்" என வரையறுக்கலாம். TRIPs ன் கீழ், பண்டங்கள் அல்லது செயல்முறைகள், அனைத்து துறைகளின் தொழில் நுட்பங்களில், எந்தவொரு கண்டுபிடிப்புக்கும் காப்புரிமை வழங்குகிறது. TRIPs ஒப்பந்தத்தில் ஏழு பகுதிகள் அறிவார்ந்த சொத்து உரிமைகளை உள்ளடக்கியுள்ளது.

## 2.7 உலகமயமாக்கலின் தாக்கமும் மற்றும் சவால்களும்

### நேர்மறைத் தாக்கம்

- ஒரு சிறந்த பொருளாதாரம், மூலதன சந்தையின் விரைவான வளர்ச்சியை அறிமுகப்படுத்துகிறது.
- வாழ்க்கைத் தரம் அதிகரித்துள்ளது.
- உலகமயமாக்கல் வர்த்தகத்தை வேகமாக அதிகரித்து, அதிக மக்களுக்கு வேலை வாய்ப்புகள் அளிக்கப்படுகிறது.
- புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் புதிய அறிவியல் ஆராய்ச்சி முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டது.
- உலகமயமாக்கல் ஒரு நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்கும்
- இது பண்டங்களை தடையற்றதாகவும் தாராளமாக அதிகரிக்கவும், வெளிநாட்டு நேரடி முதலீடுகளை (FDI) அதிகரிக்கவும் உதவுகிறது.

### எதிர்மறைத் தாக்கம்

- நாடுகளுக்கிடையே மிக அதிகமான மூலதனமானது நியாயமற்ற மற்றும் ஒழுக்கமற்ற விநியோகிப்பாளர்களை அறிமுகப்படுத்துகிறது.
- தேசிய ஒருமைப்பாட்டை இழந்து வருவதோடு, மிக அதிகமான வர்த்தக பரிமாற்றம் இருப்பதால், சுதந்திரமான உள்நாட்டுக் கொள்கைகள் இழக்கப்படுகின்றன என்பது அச்சத்திற்குரியதாகும்.
- முக்கிய உள்கட்டமைப்பும் மற்றும் வளங்களை பிரித்தெடுத்தலும் ஒரு பொருளாதாரத்தின் விரைவான வளர்ச்சிக்கு தேவை என்றாலும், இது எதிர்மறை சுற்றுச்சூழல் மற்றும் சமூக செலவுகளை அதிகரிக்கும்.
- அந்நிய செலாவணியை பெறுவதற்காக, இயற்கை வளங்கள் மிக அதிகமாக விரைவாக சுரண்டப்படுகிறது.
- சுற்றுச்சூழல் பற்றிய தரங்களும், கட்டுப்பாடுகளும் தளர்த்தப்பட்டுள்ளன.

### உலகமயமாக்கலின் சவால்கள்

- உலகமயமாக்கலில் நன்மைகள் அனைத்து நாடுகளுக்கும் தானாக கிடைப்பதில்லை.
- வளர்ந்து வரும் உலகில் உலகமயமாக்கல், உறுதியற்ற தன்மைக்கு வழிவகுக்கும் என்பது அச்சத்திற்குரியதாகும்.
- உலகமயமாக்கலினால் உலகளாவிய போட்டி அதிகரித்த தொழில்துறை உலகில், ஊதியங்கள், தொழிலாளர் உரிமைகள், வேலைவாய்ப்பு நடைமுறைகள் ஆகியவற்றை அடிமட்டத்திற்கு கொண்டு செல்ல இது வழிவகுக்கும்.
- இது உலகளாவிய சமத்துவமின்மைக்கு வழிவகுக்கிறது.
- உலகமயமாக்கலால் குழந்தை தொழிலாளர் முறை மற்றும் அடிமைத்தனம் போன்ற நடவடிக்கைகள் அதிகரித்துள்ளது.
- மக்கள் அதிகமாக துரித உணவுகளை உட்கொள்கிறார்கள். இதனால் உடல்நலக் குறைவு மற்றும் நோய் பரவுதலுக்கு இது வழிவகுக்கிறது.
- உலகமயமாக்கல் சுற்றுச்சூழல் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

**அந்நிய செலாவணி கட்டுப்பாட்டுச்சட்டம் 1974 (Foreign Exchange Regulation Act) :** இந்த சட்டம் இந்தியாவில் பன்னாட்டு நிறுவனங்களின் செயல்பாட்டை நேரடியாக குறிப்பிடுகிறது.
**அந்நிய செலாவணி மேலாண்மைச் சட்டம் 1999 (Foreign Exchange Management Act):** இது பாராளுமன்றத்தால் 1999ல் ஏற்றுக்கொள்ளப்பட்டது. "கட்டுப்பாட்டுக்கு" மாறாக "நிர்வாகத்தை" FEMAவின் கீழ் வலியுறுத்தியது.

## பாடச்சுருக்கம்

- உலகமயமாக்கல் என்பது ஒரு நாட்டை உலக பொருளாதாரத்துடன் ஒருங்கிணைப்பதாகும்.
- உலகமயமாக்களின் மூன்று நிலைகள்:
  தொன்மையான உலகமயமாக்கல், இடைப்பட்ட உலகமயமாக்கல், நவீன உலகமயமாக்கல்
- LPG – தாராளமயமாக்கல் (Liberalization), தனியார்மயமாக்கல் (Privatization) மற்றும் உலகமயமாக்கல் (Globalization).
- பன்னாட்டு நிறுவனமானது அதன் சொந்த நாட்டிற்கும் வெளியே குறைந்தபட்சம் வேறு ஒரு நாட்டில் பண்டங்களையும் அல்லது பணிகளையும் உற்பத்தி செய்யும் அல்லது கட்டுப்படுத்தும் ஒரு பெருநிறுவனமாகும்.
- பன்னாட்டு நிறுவனங்களை சர்வதேச நிறுவனங்கள் அல்லது பன்னாட்டு அமைப்பு என்றும் அழைக்கலாம்.
- 1947இல் 23 நாடுகள் காட் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. காட்டின் (GATT) நிறுவன உறுப்பினர்களில் இந்தியாவும் ஒன்றாக இருந்தது.

## A-Z கலைச்சொற்கள்

| | | |
|---|---|---|
| உலகமயமாக்கல் | **globalization** | பண்டங்கள் மற்றும் பணிகள் சர்வதேச சந்தையில் எந்த தடையும் ஏற்படாமல் பல்வேறு பொருளாதாரங்களை ஒருங்கிணைப்பதாகும். |
| தொன்மையான | **archaic** | கலை அல்லது கலாச்சாரத்தின் ஆரம்ப காலத்தில் குறிப்பாக கிமு(பொ.ஆ.மு) 7ஆம் – 6ஆம் நூற்றாண்டுகள் |
| பரிணாம வளர்ச்சி | **evolution** | ஏதாவது ஒரு படிப்படியான வளர்ச்சி |
| அடமானம் வைக்கப்பட்ட | **mortgaged** | எதிர்கால ஆபத்து அல்லது உடனடி பயன்பாட்டு தடைகளை அம்பலப்படுத்துகிறது. |
| உடனடியாக (திடீர்) | **spurt** | உடனடியாக வெளியேறுதல் வேண்டும் |
| சீரழிவான | **detrimental** | தீங்கு விளைவிக்கக்கூடிய |
| வெற்றிகரமான | **thriving** | வளமான மற்றும் வளர்ந்து வரும், மலர்ச்சியடையும் |

## பயிற்சி

J5MMXU

### I சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்

1. உலக வர்த்தக அமைப்பின் (WTO) தலைவர் யார்?
   அ) அமைச்சரவை
   ஆ) தலைமை இயக்குநர்
   இ) துணை தலைமை இயக்குநர்
   ஈ) இவற்றில் எதுவுமில்லை
2. இந்தியாவில் காலனியாதிக்க வருகை
   அ) போர்ச்சுகீசியர், டச்சு, ஆங்கிலேயர், டேனிஷ், பிரெஞ்சு
   ஆ) டச்சு, ஆங்கிலேயர், டேனிஷ், பிரெஞ்சு
   இ) போர்ச்சுகீசியர், டேனிஷ், டச்சு, பிரெஞ்சு, ஆங்கிலேயர்
   ஈ) டேனிஷ், போர்ச்சுகீசியர், பிரெஞ்சு, ஆங்கிலேயர், டச்சு
3. காட் (GATT)–இன் முதல் சுற்று நடைபெற்ற இடம்
   அ) டோக்கியோ ஆ) உருகுவே
   இ) டார்குவே ஈ) ஜெனீவா
4. இந்தியா எப்போது டங்கல் திட்டத்தில் கையெழுத்திட்டது?
   அ) 1984 ஆ) 1976 இ) 1950 ஈ) 1994
5. 1632இல் ஆங்கிலேயர்களுக்கு "கோல்டன் ஃபயர்மான்" வழங்கியவர் யார்?
   அ) ஜஹாங்கீர்
   ஆ) கோல்கொண்டா சுல்தான்
   இ) அக்பர்
   ஈ) ஔரங்கசீப்



10th_Economics_TM_Unit_2 GLOBALISATION.indd 328 11-04-2020 12:03:08

6. வெளிநாட்டு முதலீட்டுக் கொள்கை (FIP) அறிவித்த ஆண்டு
   அ) ஜூன் 1991
   ஆ) ஜூலை 1991
   இ) ஜூலை–ஆகஸ்ட் 1991
   ஈ) ஆகஸ்ட் 1991
7. இந்திய அரசாங்கத்தால் 1991இல் __________ ஐ அறிமுகப்படுத்தப்பட்டது.
   அ) உலகமயமாக்கல்
   ஆ) உலக வர்த்த அமைப்பு
   இ) புதிய பொருளாதார கொள்கை
   ஈ) இவற்றில் எதுவுமில்லை

### II கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. ஒரு நல்ல பொருளாதாரம் __________ன் விரைவான வளர்ச்சிக்காக அறிமுகப்படுத்தப்படுகிறது.
2. உலக வர்த்தக அமைப்பு ஒப்பந்தம் __________ ஆம் ஆண்டு அமுலுக்கு வந்தது.
3. __________ ஆல் உலகமயமாக்கல் என்ற பதம் கண்டுபிடிக்கப்பட்டது.

### III பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| 1. | இந்தியாவில் பன்னாட்டு நிறுவனம் | – | 1947 |
| 2. | பன்னாட்டு நிதி நிறுவனம் (MNC) | – | அயல்நாட்டு வாணிபத்தை செயல்படுத்தல் |
| 3. | சுங்கவரி, வாணிபம் குறித்த பொது உடன்பாடு (GATT) | – | உற்பத்தி செலவு குறைத்தல் |
| 4. | 8வது உருகுவே சுற்று | – | இன்ஃபோசிஸ் |
| 5. | உலக வர்த்தக அமைப்பு (WTO) | – | 1986 |

### IV கீழ்கண்ட வினாக்களுக்கு குறுகிய விடையளி

1. உலகமயமாக்கல் என்றால் என்ன?
2. உலகமயமாக்கலின் வகைகளை எழுதுக.
3. பன்னாட்டு நிறுவனங்கள் பற்றி சிறுகுறிப்பு எழுதுக.
4. உலகமயமாக்கலை சார்ந்த சீர்திருத்தங்கள் ஏதேனும் இரண்டினை எழுதுக?
5. நியாயமான வர்த்தகம் என்றால் என்ன?
6. "நியாயமான வர்த்தக நடைமுறைகளின்" ஏதாவது இரு கோட்பாடுகளை எழுதுக.
7. "உலக வர்த்தக அமைப்பின்" முக்கிய நோக்கம் யாது?
8. உலகமயமாக்கலின் நேர்மறையான தாக்கங்கள் இரண்டினை எழுதுக.

### V கீழ்கண்ட வினாக்களுக்கு விரிவான விடையளி

1. பன்னாட்டு நிறுவனங்களின் (MNC) நன்மைகள் மற்றும் தீமைகளை சுருக்கமாக எழுதுக.
2. 'உலக வர்த்தக அமைப்பு' பற்றி எழுதுக.
3. உலகமயமாக்கலின் சவால்களை எழுதுக.

### VI செய்முறைகள் மற்றும் செயல்பாடுகள்

1. ஆசிரியர் மற்றும் மாணவர்கள் உலகமயமாக்கல் பற்றி விவாதித்தல்.
2. உலகமயமாக்கல் பற்றிய படங்களை மாணவர்கள் சேகரித்து படத் தொகுப்பினை உருவாக்குதல்

   (தென்னிந்திய வர்த்தகம், வர்த்தகர்கள் படங்கள், பட்டு வழி வரைபடம், நறுமணப் பொருள்கள் வழி வரைபடம் மற்றும் கலிங்க வர்த்தக வரைபடம் முதலியன)
3. மாணவர்கள் இந்தியாவிலுள்ள பல்வேறு பன்னாட்டு நிறுவனங்களில் படங்கள் மற்றும் விவரங்களை சேகரித்தல்.

### மேற்கோள் நூல்கள்


1. Dr. S. Shankaran [2007], "Indian Economy" [Problem, Policies and Development]
2. Dutt "Indian Economy"
3. History of Tamil Nadu [Social and Culture]
4. S.K. Misra and V.K. Puri "Indian Economy"


### இணையதள வளங்கள்

www.gateway for india.com

http://en.wikipedia.org

http://www.investopedia.com



10th_Economics_TM_Unit_2 GLOBALISATION.indd 329 11-04-2020 12:03:08

# அலகு – 3

# உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து



## கற்றலின் நோக்கங்கள்

- உணவு பாதுகாப்பின் வரையறை, பொருள் பற்றி படித்தல்
- உணவு தானியங்கள் கிடைத்தல் மற்றும் அணுகுதல் பற்றி அறிந்து கொள்ளுதல்
- வாங்கும் திறன் மற்றும் விவசாயக் கொள்கை பற்றி புரிந்து கொள்ளுதல்
- வறுமையின் பல பரிமாணத்தன்மை பற்றிய அறிவைப் பெறுதல்
- தமிழ்நாட்டில் ஊட்டச்சத்து, சுகாதார நிலை மற்றும் கொள்கைகள் பற்றி படித்தல்

PN6C7T

## அறிமுகம்

மக்கள் வாழ்க்கையையும் வளர்ச்சியையும் பராமரிப்பதற்காக சாப்பிடும் மற்றும் அருந்தும் எந்தவொரு பொருளும் உணவு என வரையறுக்கப்படுகிறது. உணவு பாதுகாப்பு என்பது ஒரு நபர் போதுமான அளவு சாப்பிடுவதையும் சுறுசுறுப்பாக இருப்பதையும் ஆரோக்கியமான வாழ்க்கை நடத்துவதையும் குறிக்கும்.

## 3.1 உணவு பாதுகாப்பு

ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண் அமைப்பு உணவு பாதுகாப்பினைப் பின்வருமாறு வரையறுக்கிறது.

"எல்லா மக்களும், எல்லா நேரங்களிலும், போதுமான, பாதுகாப்பான மற்றும் சத்தான உணவுக்கான உடல், சமூக மற்றும் பொருளாதார அணுகுமுறையை கொண்டிருக்கும் போது, அவர்களின் உணவுத் தேவைகளையும், சுறுசுறுப்பான மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கைக்கான உணவு விருப்பங்களையும் பூர்த்தி செய்வதில் உணவு பாதுகாப்பு இருக்கிறது." (FAO, 2009).

இந்த விரிவான வரையறை உணவு சத்துமிக்கதாக இருக்க வேண்டியதன் அவசியத்தை உணர்த்துவதோடு, அது பாதுகாப்புமிக்க ஊட்டச்சத்தினைப் பெற வேறு சில அம்சங்கள் தேவைப்படுவதையும் உணர்த்துகின்றன.

பிரபல விவசாய விஞ்ஞானி முனைவர் எம்.எஸ். சுவாமிநாதனின் கருத்துப்படி, "சரிவிகித உணவு, பாதுகாப்பான குடிநீர், சுற்றுச்சூழல், சுகாதாரம், ஆரம்ப சுகாதார பராமரிப்பு மற்றும் ஆரம்பக் கல்வி ஆகியவற்றிற்கான உடல், பொருளாதார மற்றும் சமூக அணுகல்" என்பது ஊட்டச்சத்து பாதுகாப்பாகும்.

### உணவின் அடிப்படைக் கூறுகள் மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு

உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பின் மூன்று அடிப்படைக் கூறுகள் : கிடைத்தல், அணுகல் மற்றும் உறிஞ்சுதல் ஆகும்.

1. உணவு கிடைத்தல் என்பது விரும்பிய அளவுகளில் உணவு இருப்பு இருப்பதாகும். இது உள்நாட்டு உற்பத்தி, இருப்பு மற்றும் இறக்குமதியில் மாற்றங்கள் பற்றிய ஒரு செயல்பாடாகும்.
2. உணவுக்கான அணுகல் என்பது முதன்மையாக வாங்கும் திறன் பற்றிய கூற்றாகும். எனவே, இது ஈட்டுதலுக்கான திறன்கள் மற்றும் வேலைவாய்ப்புகளுடன் நெருக்கமாக இணைக்கப்பட்டுள்ளது. திறன்களும், வாய்ப்புகளும் ஒருவரின் சொத்துக்கள் மற்றும் கல்வியுடன் தொடர்புடையது.
3. உணவினை உறிஞ்சுதல் என்பது உட்கொள்ளும் உணவை உயிரியல் ரீதியாகப் பயன்படுத்துவதற்கான திறன் ஆகும்.

www.tntextbooks.in

## 3.2 உணவு தானியங்களின் கிடைத்தல் மற்றும் அணுகல்

ஒரு நாட்டில் உள்ள மக்களுக்கான உணவுபாதுகாப்பு என்பது கிடைக்கும் உணவின் அளவைப் பொறுத்தது மட்டுமல்லாமல், உணவுப் பொருள்களை வாங்க / அணுக மற்றும் ஆரோக்கியமான சூழலில் வாழ்வதற்கான மக்களின் திறனையும் சார்ந்துள்ளது. பிற வளர்ச்சியைப் போலவே, மக்களின் உணவு பாதுகாப்பும் ஒரு நாட்டின் ஒட்டு மொத்த வளர்ச்சி செயல்முறையுடன் தொடர்புடையது. சுதந்திரத்திற்கு பிறகு, இந்தியா ஒரு திட்டமிட்ட வளர்ச்சியினை பின்பற்ற முடிவு செய்தது.



**உணவு தானியங்கள்**

விவசாயத்தில் ஆரம்பத்தில் கவனம் செலுத்திய பின்னர், தொழில்மயமாக்கலுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது. இந்தியாவில் ஏற்பட்ட தொடர்ச்சியான வறட்சி, உணவு தானியங்களின் இறக்குமதியைச் சார்ந்திருக்க தள்ளப்பட்டது. இருப்பினும், அப்பொழுது இருந்த அந்நிய செலாவணி இருப்பானது, திறந்த சந்தைக் கொள்முதல் மற்றும் தானியங்களின் இறக்குமதிக்கு அனுமதிக்கவில்லை. பணக்கார நாடுகளிலிருந்து உணவு தானியங்களை சலுகை விலையில் இந்தியா கோர வேண்டியிருந்தது. 1960 களின் முற்பகுதியில் அமெரிக்கா தனது பொது சட்டம் 480 (P.L. 480) திட்டத்தின் மூலம் இந்தியாவுக்கு உதவி வழங்கியது.

அதிக மக்கள் தொகையைக் கொண்ட வளர்ந்து வரும் ஒரு நாடு புரட்சிக்கு சாத்தியமான தேர்வாளராக கருதப்பட்டது. எனவே அமெரிக்க நிர்வாகம் மற்றும் ஃபோர்டு அறக்கட்டளை போன்ற மனிதநேய அமைப்புகள் உணவு உற்பத்தியை அதிகரிக்க கோதுமை மற்றும் அரிசியின் உயர் ரக விளைச்சல் வகைகளுக்கான (High Yielding Varieties) திட்டத்தை வகுத்து அறிமுகப்படுத்தியது. இந்தத் திட்டம் நீர்ப்பாசனம் இருக்கும் இடத்தில், தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டது. திட்டங்களின் முடிவுகள் உறுதி செய்யப்பட்டதால், அதிக எண்ணிக்கையிலான மாவட்டங்களை உள்ளடக்கும் வகையில் இந்த திட்டம் நீட்டிக்கப்பட்டது.

இவ்வாறு, பசுமைப்புரட்சியானது நாட்டில் தோன்றி உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவு பெற வழிவகுத்தது. உயர் ரக விதைகளான (HYV) அரிசி மற்றும் கோதுமை போன்ற உணவு தானியங்கள் பயிரிடப்பட்ட பகுதியில் உற்பத்தியை அதிகரித்தது. மேலும் முக்கிய தானிய பயிர்களின் விளைச்சலும் அதிகரித்தது. 1950களின் முற்பகுதியில் உணவு தானியங்களின் உற்பத்திப் பரப்பளவு 98 மில்லியன் ஹெக்டேர்களுக்கும் அதிகமாக இருந்தது. ஆனால் நாடு 54 மில்லியன் டன் உணவு தானியங்களை மட்டுமே உற்பத்தி செய்து கொண்டிருந்தது. அப்போது சராசரியாக ஒரு ஹெக்டேருக்கு 547 கிலோ உணவு தானியங்கள் கிடைத்தன. உணவு நிலையை சீர் செய்ய ஏறத்தாழ 65 ஆண்டுகள் ஆனது. பின் உணவு தானிய சாகுபடியின் பரப்பளவு 122 மில்லியன் ஹெக்டேராக வளர்ந்து, உற்பத்தி ஐந்து மடங்காக அதிகரித்தது. சுதந்திர காலத்திற்கும் தற்போதைக்கும் இடையில் உணவுதானியங்களின் விளைச்சல் நான்கு மடங்காக அதிகரித்துள்ளது.

உணவு தானிய உற்பத்தியில் இந்த வளர்ச்சியானது ஒரு தொகுப்பாக செயல்படுத்தப்பட்ட HYV திட்டத்தால் சாத்தியமானது. மேலும் இத்திட்டம் ஏற்புத்தன்மையுடைய உரங்கள், அதிக விளைச்சல் தரும் நெல் மற்றும் கோதுமை வகைகளை அறிமுகப்படுத்துவதைத் தவிர, மானிய விலையில் ரசாயன உரங்கள் கிடைப்பதை உறுதி செய்தது. கூட்டுறவு வங்கிகள் மற்றும் கூட்டுறவு சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு மலிவான பண்ணைக் கடன் வழங்கப்பட்டது.

பயிர்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை (Minimum Support Price) பருவ காலத்தின் தொடக்கத்தில் அறிவிக்கப்பட்டு, அறுவடை செய்யப்பட்ட தானியங்களை இந்திய உணவுக் கழகம் மூலம் அரசு கொள்முதல் செய்கிறது. இந்திய உணவுக் கழகம் மிகப் பெரிய சேமிப்புக் கிடங்கினை அமைத்து அறுவடை காலத்தில் உணவு தானியங்களைப் பெற்று இருப்பில் வைத்து அதனை ஆண்டு முழுவதும் வழங்குகிறது.

உணவு தானிய உற்பத்தியின் விரைவான அதிகரிப்புடன் பால், கோழி மற்றும் மீன் உற்பத்தியில் பொருத்தமான தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தியதன் விளைவாக, சுதந்திரம் 2000களின் நடுப்பகுதி ஆகியவற்றின் இடைப் பட்ட காலத்தில் நாட்டில் பால் உற்பத்தி 8 மடங்கு, முட்டை உற்பத்தி 40 மடங்கு மற்றும் மீன் உற்பத்தி 13 மடங்கு அதிகரித்துள்ளது. இருப்பினும், இந்தியா பருப்பு வகைகள் மற்றும் எண்ணெய் வித்துக்களின்



10th_Economics_TM_Unit_3.indd 331 24-03-2020 12:43:53


உற்பத்தியில் தன்னிறைவு பெறுவதில் வெற்றி பெறவில்லை. எனவே, இந்தியா மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய இறக்குமதியை நம்பியுள்ளது.

**குறைந்தபட்ச ஆதரவு விலை (Minimum Support Price)**

குறைந்தபட்ச ஆதரவு விலை என்பது அந்த பயிரின் சாகுபடியில் பல்வேறு செலவுகளை கருத்தில் கொண்டு ஒரு குறிப்பிட்ட பயிருக்கு ஒரு விலை, நிபுணர் குழுவால் நிர்ணயிக்கப்படுகிறது. குறைந்தபட்ச ஆதரவு விலை அறிவித்த பின்னர், இந்த பயிர்கள் பரவலாக வளர்க்கப்படும் இடங்களில் அரசு கொள்முதல் மையங்களைத் திறக்கும். எனினும், அந்த விவசாயிகள் தங்கள் பயிர், விளை பொருள்களுக்கு நல்ல விலையைப் பெற்றால் திறந்தவெளி சந்தையில் விற்கஇயலும். மறுபுறம், திறந்தவெளி சந்தையில் விலை குறைந்தபட்ச ஆதரவு விலையை விட குறைவாக இருந்தால், விவசாயிகள் தங்கள் விளைபொருள்களை குறைந்தபட்ச ஆதரவு விலைக்கு விற்பதன் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட விலையைப் (MSP) பெறுவார்கள்.

## பொது வழங்கல் முறை (Public Distribution System)

தமிழ்நாடு "உலகளாவிய பொது வழங்கல் முறை"யை (Universal PDS) ஏற்றுக் கொண்டது. ஆனால் இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்களில் "இலக்கு பொது வழங்கல் முறை" (Targeted PDS) செயல்பாட்டில் இருந்தது. உலகளாவிய பொது வழங்கல் முறையின் கீழ் குடும்ப வழங்கல் அட்டை பெற்றிருப்பவர்கள் அனைவருக்கும் பொது வழங்கல் முறை மூலம் உணவுப் பொருள்கள் வழங்கப்படுகிறது. ஆனால், இலக்கு பொது வழங்கல் முறையில் பயனாளிகள் சில அளவுகோல்களின் அடிப்படையில் அடையாளம் காணப்பட்டு உரிமைகள் வழங்கப்படுகிறது, மத்திய மற்றும் மாநில அரசாங்கங்கள் பொது வழங்கல் முறை மூலம் வழங்கப்படும் பொருள்களுக்கு மானியம் அளிக்கின்றன. மானியத்தின் நிலை மற்றும்



பொது வழங்கல் முறை

அளவு மாநிலங்களுக்கு இடையே வேறுபடுகிறது. மேலும் தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம் (National Food Security Act) இந்திய நாடாளுமன்றத்தால் 2013இல் நிறைவேற்றப்பட்டது. இச்சட்டம் 50% நகர்ப்புற குடும்பங்களையும் மற்றும் 75% கிராமப்புற குடும்பங்களையும் உள்ளடக்கியதாகும். இந்த குடும்பங்கள் ஒரு குறிப்பிட்ட அளவுகோலின் அடிப்படையில் அடையாளம் காணப்பட்டு முன்னுரிமைக் குடும்பங்கள் (Priority Households) என அழைக்கப்படுகின்றன. இந்த முன்னுரிமை குடும்பங்களுக்கு தற்பொழுது பொது வழங்கல் முறை மூலம் வழங்கப்படும் உணவுப் பொருள்களை பெறும் உரிமை உண்டு. மத்திய அரசினால் அரிசி கிலோவிற்கு ₹3 என்ற விகிதத்திலும், கோதுமை கிலோவிற்கு ₹2 என்ற விகிதத்திலும், தினை கிலோவிற்கு ₹1 என்ற விகிதத்திலும் NFSA கீழ் வழங்கப்படுகிறது. தமிழ்நாடு தொடர்ந்து உலகளாவிய பொது வழங்கல் முறையைக் கொண்டுள்ளது மற்றும் அனைத்து அட்டைதாரர்களுக்கும் இலவசமாக அரிசியை வழங்குகிறது.

**தமிழ்நாட்டில் தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம்**

இந்தியாவில் தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம் துவங்கி மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர், இச்சட்டம் தமிழ்நாட்டில் நவம்பர் 1, 2016 அன்று துவங்கப்பட்டது.

## உணவு பாதுகாப்பில் நுகர்வோர் கூட்டுறவின் பங்கு

பொதுவாக மக்களுக்கு குறைவான விலையில் தரமான பொருள்களை வழங்குவதில் நுகர்வோர் கூட்டுறவு முக்கிய பங்கு வகிக்கிறது. இந்தியாவில் மூன்று அடுக்கு அமைப்புகளில் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவை, முதன்மை நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள், மத்திய நுகர்வோர் கூட்டுறவு கடைகள் மற்றும் மாநில அளவிலான நுகர்வோர் கூட்டமைப்புகள் ஆகும். கிராமப்புறங்களில் நுகர்வோர் பொருள்களை வழங்குவதில் 50,000க்கும் மேற்பட்ட கிராம அளவிலான சங்கங்கள் ஈடுபட்டுள்ளன. இந்தியாவில் உணவு பாதுகாப்பில் இந்த திட்டம் முக்கியப் பங்கினை வகிக்கிறது. உதாரணமாக, தமிழ்நாட்டில் இயங்கும் அனைத்து நியாய விலைக் கடைகளில், சுமார் 94% கூட்டுறவு நிறுவனங்களால் நடத்தப்படுகின்றன.

பற்றாக்குறைப் பகுதிகளில் வழங்குவதற்காக தாங்கியிருப்பு செய்யப்படுகிறது. இதன்மூலம் உணவு தானியங்கள், சமூகத்தின் ஏழ்மையான பிரிவினருக்கு சந்தை விலையை விட குறைந்த

விலையில் விற்பனை செய்யப்படுகிறது. அவ்விலை வெளியீட்டு விலை என்று அழைக்கப்படுகிறது. பாதகமான வானிலை அல்லது பேரழிவுக் காலங்களில் உணவு பற்றாக்குறைப் பிரச்சினையை தீர்க்க இது உதவுகிறது.

**தாங்கியிருப்பு (Buffer Stock)**



தாங்கியிருப்பு என்பது உணவு தானியங்களான கோதுமை மற்றும் அரிசி, இந்திய உணவுக் கழகத்தின் (Food Corporation of India) மூலம் அரசாங்கத்தால் வாங்கப்படுகிறது. உபரி உற்பத்தி இருக்கும் மாநிலங்களில் விவசாயிகளிடமிருந்து கோதுமை மற்றும் அரிசியை FCI வாங்குகிறது. விவசாயிகளுக்கு அவர்களின் பயிர்களுக்கு முன்பே அறிவிக்கப்பட்ட விலை வழங்கப்படுகிறது. இந்தவிலைகுறைந்தபட்சஆதரவுவிலை(Minimum Support Price) என்று அழைக்கப்படுகிறது. இந்த பயிர்களின் உற்பத்தியை உயர்த்துவதற்காக விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை வழங்குவதற்காக விதைப்பு பருவத்திற்கு முன்னர் ஒவ்வொரு ஆண்டும் குறைந்தபட்ச ஆதரவு விலை (MSP) அரசாங்கத்தால் அறிவிக்கப்படுகிறது. கொள்முதல் செய்யப்பட்ட உணவு தானியங்கள் களஞ்சியங்களில் சேமிக்கப்படுகின்றன.

## 3.3 வாங்கும் திறன்

வாங்கும் திறன் என்பது ஒரு அலகு பணம் மூலம் வாங்கக் கூடிய பொருள்கள் அல்லது சேவைகளின் அளவின் அடிப்படையில் வெளிப்படுத்தப்படும் நாணயத்தின் மதிப்பு ஆகும். விலை ஏறும் போது வாங்கும் திறன் குறைகிறது. விலை குறையும் போது வாங்கும் திறன் அதிகரிகிறது.

### வாங்கும் திறனைப் பாதிக்கும் காரணிகள்

**1. அதிக மக்கள் தொகை**

இந்தியாவில் மக்கள் தொகை வளர்ச்சி விகிதம் 1000க்கு 1.7 ஆக உள்ளது. அதிக மக்கள் தொகை அதிக தேவைக்கு வழிவகுக்கிறது. ஆனால் அளிப்பு தேவைக்கு சமமாக இல்லை. எனவே சாதாரண விலை நிலை அதிகமாக இருக்கும். எனவே இது குறிப்பாக கிராமப்புற மக்களின் வாங்கும் சக்தியை பாதிக்கிறது.

**2. அத்தியாவசிய பொருள்களின் விலை அதிகரித்தல்**

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நிலையான வளர்ச்சியும், இந்தியப் பொருளாதாரத்தில் வளர்ச்சி வாய்ப்புகளும் இருந்த போதிலும், அத்தியாவசிய பொருள்களின் விலையில் நிலையான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. விலைகளின் தொடர்ச்சியான உயர்வானது வாங்கும் சக்தியை சுரண்டி, ஏழை மக்களை மோசமாகப் பாதிக்கிறது.

**3. பொருள்களுக்கான தேவை**

பொருள்களுக்கான தேவை அதிகரிக்கும் போது, பொருள்களின் விலையும் அதிகரிக்கிறது. அதனால் வாங்கும் சக்தி பாதிக்கப்படுகிறது.

**4. பொருள்களின் விலை நாணய மதிப்பை பாதிக்கிறது**

விலை அதிகரிக்கும் போது, வாங்கும் திறன் குறைந்து இறுதியாக நாணயத்தின் மதிப்பு குறைகிறது.


**5. பொருள்களின் உற்பத்தி மற்றும் அளிப்பு**

பொருள்களின் உற்பத்தி மற்றும் அளிப்பு குறையும் பொழுது, பொருள்களின் விலை அதிகரிக்கிறது. ஆகையால் வாங்கும் திறன் பாதிக்கப்படுகிறது.

**வாங்கும் சக்தி சமநிலை (Purchasing Power Parity)**

வாங்கும் சக்தி சமநிலை (PPP) என்பது வாங்கும் சக்தி தொடர்பான ஒரு கருத்தாகும். இது ஒரு பொருளாதாரக் கோட்பாடாகும். ஒரு பொருளின் விலையுடன் சரி செய்யப்பட வேண்டிய தொகையை மதிப்பிடுகிறது.

நாடுகளின் வருமான நிலைகள் மற்றும் வாழ்க்கைச் செலவு தொடர்பான பிற தொடர்புடைய பொருளாதாரத் தரவு அல்லது பணவீக்கம் மற்றும் பணவாட்டத்தின் சாத்தியமான விகிதங்களை ஒப்பிடுவதற்கு வாங்கும் சக்தி சமநிலையை பயன்படுத்தலாம். சமீபத்தில் வாங்கும் சக்தி சமநிலையின் அடிப்படையில் இந்தியா மூன்றாவது பெரிய பொருளாதாரமாக மாறியுள்ளது. சீனா மிகப்பெரிய பொருளாதாரமாக மாறி, அமெரிக்காவை இரண்டாவது இடத்திற்கு தள்ளியுள்ளது.



**6. வறுமை மற்றும் சமத்துவமின்மை**

இந்திய பொருளாதாரத்தில் ஒரு மிகப் பெரிய ஏற்றதாழ்வு உள்ளது. 10% இந்தியர்களுக்கு சொந்தமான வருமானம் மற்றும் சொத்துக்களின் விகிதம் அதிகரித்து வருகிறது. இது சமுதாயத்தில் வறுமை நிலையை அதிகரிக்க வழிவகுக்கிறது. வறுமையாலும் மற்றும் செல்வத்தின் சமமற்ற வழங்குதலாலும் பொதுவாக வாங்கும் திறன் பாதிக்கப்படுகிறது.

## 3.4 இந்தியாவின் விவசாயக்கொள்கை

விவசாயப் பொருள்களின் ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட புதிய விவசாயக் கொள்கை 2018இல் மத்திய அரசால் அறிவிக்கப்பட்டது. இந்தக் கொள்கை பெரும்பாலான கரிம மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாடுகளை நீக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளதாக அறிவித்தது.

ஒரு நாட்டின் விவசாயக் கொள்கையானது பெரும்பாலும் விவசாய உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை உயர்த்துவதற்கும், ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குள் விவசாயிகளின் வருமான நிலை மற்றும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் அரசாங்கத்தால் வடிவமைக்கப்பட்டதாகும். இந்தக் கொள்கை விவசாயத்துறையின் அனைத்து வட்டங்களிலும், விரிவான வளர்ச்சிக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது .

இந்தியாவின் விவசாயக் கொள்கையின் முக்கியமான குறிக்கோள்கள் பின்வருமாறு.

**1. உள்ளீடுகளின் உற்பத்தித்திறனை உயர்த்துதல்**

இந்தியாவின் விவசாயக் கொள்கையின் முக்கிய நோக்கமானது வீரியவித்து விதைகள், உரங்கள், பூச்சிக்கொல்லிகள், நீர்ப்பாசன திட்டங்கள் போன்ற உள்ளீடுகளின் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதாகும்.

**2. ஒரு ஹெக்டேருக்கு மதிப்பு கூட்டப்பட்டவை**

வேளாண் கொள்கையானது பொதுவாக வேளாண்மையின் உற்பத்தித்திறனை உயர்த்துவதன் மூலமும், குறிப்பாக சிறிய மற்றும் ஓரளவு வைத்திருக்கும் உற்பத்தித்திறனை அதிகரிப்பதன் மூலமும் ஒரு ஹெக்டேருக்கு மதிப்பு கூட்டப்பட்டதை அதிகரிப்பதாகும்.

**3. ஏழை விவசாயிகளின் நலன்களைப் பாதுகாத்தல்**

ஏழை விவசாயிகளுக்கு நிறுவன கடன் ஆதரவை விரிவுபடுத்துதல், நில சீர்திருத்தங்கள் செய்தல், இடைத்தரகர்களை ஒழித்தல் போன்றவற்றின் மூலம் ஏழை மற்றும் குறு விவசாயிகளின் நலனைப் பாதுகாப்பதே விவசாயக் கொள்கையாகும்.

**4. விவசாயத் துறையை நவீனமயமாக்குதல்**

விவசாய நடவடிக்கைகளில் நவீன தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துதல் மற்றும் உயர் ரக விதைகள் (HYV) விதைகள், உரங்கள் போன்ற மேம்பட்ட விவசாய உள்ளீடுகளைப் பயன்படுத்துதல் ஆகியவை அடங்கும்.

**5. சுற்றுச்சூழல் சீரழிவு**

இந்தியாவின் விவசாயக் கொள்கை இந்திய விவசாயத்தின் அடித்தளத்தின் சுற்றுச்சூழல் சீரழிவை சரி செய்யும் மற்றொரு நோக்கத்தையும் கொண்டுள்ளது.

**6. அதிகாரத்துவ தடைகளை நீக்குதல்**

விவசாயிகளின் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் சுய உதவி நிறுவனங்கள் மீதான அதிகாரத்துவ தடைகளை நீக்குவதற்கு இந்த கொள்கை மற்றொரு குறிக்கோளை அமைத்துள்ளது, இதனால் அவர்கள் சுதந்திரமாகச் செயல்பட முடியும்.

## 3.5 வறுமையின் பல பரிமாணத்தின் இயல்பு (Multi-dimensional Nature of Poverty)

பல பரிமாண வறுமை குறியீடு (MPI) ஆனது ஐக்கியநாடுகளின்மேம்பாட்டுத்திட்டம்(UunitedNations Development Programme) மற்றும் ஆக்ஸ்போர்டு வறுமை மற்றும் மனித மேம்பாட்டு முனைவு (Oxford Poverty and Human Development Initiative) ஆகியவற்றால் 2010ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. பல பரிமாண வறுமை குறியீட்டின் அடிப்படை தத்துவமும், முக்கியத்துவமும் என்னவென்றால், வறுமை என்பது ஒற்றை பரிமாணமல்ல, அது பல பரிமாணங்களைக் கொண்டது என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டது.


உடல் நலம், கல்வி, வாழ்க்கைத் தரம், வருமானம், அதிகாரமளித்தல், பணியின் தரம் மற்றும் வன்முறையினால் அச்சுறுத்தப்படுதல் போன்ற ஏழை மக்களின் அனுபவத்தை இழக்கும் பல காரணிகளால் பல பரிமாண வறுமை உருவாகிறது.

### தமிழ்நாட்டின் பல பரிமாண வறுமை குறியீடு (MPT) அறிக்கை–2018

கடந்த பத்து ஆண்டுகளாக, வறுமைக் குறைப்பில் தமிழகம் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளது. தமிழ்நாட்டில் உள்ள மாவட்டங்கள் மூன்று வகைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவை உயர் வறுமை மாவட்டங்கள் (வறுமை கோட்டிற்கு கீழ் வாழும்



10th_Economics_TM_Unit_3.indd 334 24-03-2020 12:43:53




பல–பரிமாண வறுமை குறியீடு

மக்கள் தொகையில் 40% க்கும் அதிகமானோர்), மிதமான ஏழை மாவட்டங்கள் (30% முதல் 40% வரை) மற்றும் குறைந்த அளவிலான வறுமை மாவட்டங்கள் (30%க்கும் குறைவு) ஆகும்.

1994க்குப் பிறகு, தமிழ்நாட்டின் கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் வறுமை படிப்படியாகக் குறைந்துள்ளது, மற்றும் இந்தியாவில் அதன் மக்கள் தொகையுடன் ஒப்பிடும் போது சிறிய ஏழ்மைப் பங்கினைக் கொண்டுள்ளது. 2005க்குப் பிறகு, இந்தியாவில் பல மாநிலங்களை விட வறுமைக் குறைப்பு தமிழ்நாட்டில் வேகமாக உள்ளது. 2014–2017 வரையிலான காலங்களில் வறுமை ஒழிப்புத் திட்டங்களில் தமிழ்நாடு முன்னிலை வகிக்கிறது. தற்போது, இந்திய அரசு வறுமையை ஒழிக்க பல கொள்கைகளையும், திட்டங்களையும் செயல்படுத்துகிறது.

### தமிழ்நாட்டின் அதிக மற்றும் குறைவான MPI மாவட்டங்கள்

| முதல் ஐந்து மாவட்டங்கள் | கடைசி ஐந்து மாவட்டங்கள் |
|---|---|
| காஞ்சிபுரம் | தர்மபுரி |
| சென்னை | பெரம்பலூர் |
| கடலூர் | இராமநாதபுரம் |
| கோயம்புத்தூர் | விருதுநகர் |
| நாகப்பட்டினம் | அரியலூர் |

இந்த கொள்கைகள் மற்றும் திட்டங்கள் தொடர்ந்து இருந்தால் மாநிலத்தின் வறுமையை முற்றிலுமாக ஒழிக்கலாம். எதிர்காலத்தில் தமிழ்நாடு இந்தியாவின் ஒரு மாதிரி மாநிலமாக மாற வாய்ப்புள்ளது.

## 3.6 ஊட்டச்சத்து மற்றும் சுகாதார நிலை

### ஊட்டச்சத்தின் நிலை

B2PYEA

உணவு பாதுகாப்பில் ஊட்டச்சத்தும் பாதுகாப்பும் அடங்கும் என்பதை நாம் முன்னரே குறிப்பிட்டோம். நமது நாடு உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைந்திருந்தாலும், மக்களின் ஊட்டச்சத்து நிலையில் முன்னேற்றங்களை அடையவில்லை. 2015–2016 ஆம் ஆண்டில், 27% கிராமப்புறப் பெண்களும் மற்றும் 16% நகர்ப்புற பெண்களும் (15–49 வயதுக்குட்பட்டவர்கள்) ஊட்டச்சத்து குறைபாடு உடையவர்கள் அல்லது நீண்டகால ஆற்றல் குறைபாடு உடையவர்கள் என தேசிய குடும்ப சுகாதார கணக்கெடுப்பின் மூலம் கண்டறியப்பட்டது.



எடை குறைந்த குழந்தை



10th_Economics_TM_Unit_3.indd 335 24-03-2020 12:43:53

இந்தியாவில் கிராமப்புற மற்றும் நகர்ப்புற (15–49 வயது) வயதுக் குழுவில் பாதிக்கும் மேற்பட்ட பெண்கள் இரத்த சோகைக்கு ஆளானார்கள். 2015–2016 ஆம் ஆண்டில் குழந்தைகளைப் பொறுத்தவரை கிராமப்புறங்களில் 60% மற்றும் நகர்ப்புற குழந்தைகள் (6–59 மாதங்கள்) 56% இரத்த சோகை உடையவர்கள் எனக் கருதப்பட்டனர். கிராமப்புறங்களில் சுமார் 41% மற்றும் நகர்ப்புற 31% குழந்தைகள் வளர்ச்சி குன்றியிருக்கின்றனர். அதாவது அவர்களின் வயதுக்கு ஏற்ப தேவையான உயரத்தை கொண்டிருக்கவில்லை. ஊட்டச்சத்தின் குறைபாட்டினால் மற்றொருக் குறியீடாக குழந்தைகளிடையே வயது தொடர்பான எடையை விட "எடை குறைவாக" உள்ளனர். இந்தியாவில் 2015–2016 ஆம் ஆண்டில் சுமார் 20% குழந்தைகள் (6–59 மாத வயதுக்குட்பட்டவர்கள்) எடை குறைவாக இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

## தமிழ் நாட்டில் ஊட்டச்சத்து மற்றும் ஆரோக்கியத்தின் நிலை

மனித ஆரோக்கியத்திலும், நலவாழ்விலும் ஊட்டச்சத்து முக்கியப் பங்கு வகிக்கிறது. தேசிய அளவில் அதிக பொருளதார வளர்ச்சி இருந்த போதிலும், ஊட்டச்சத்து அளவுகள் போன்ற மனித வளர்ச்சி குறிகாட்டிகளில் மேம்பாடுகள் ஏற்றுக்கொள்ள முடியாத அளவிற்கு மெதுவாகவே உள்ளன. ஏராளமான இந்திய குழந்தைகள் வளர்ச்சி குன்றியிருக்கிறார்கள். கணிசமான எண்ணிக்கையிலான இந்திய குழந்தைகள் மற்றும் பெண்கள் எடை குறைவாகவும், இரத்த சோகை மற்றும் நுண்ணூட்டச் சத்து குறைபாடுகளாலும் பாதிக்கப்படுகின்றனர். இந்தப் பிரச்சனைகளை நீக்குவதற்காக மத்திய மற்றும் மாநில அரசுகள் பல்வேறு சுகாதார மற்றும் ஊட்டச்சத்துத் திட்டங்களான ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டு சேவைகள் (Integrated Child Development Services), மதிய உணவுத் திட்டம், குழந்தைகள் சுகாதார திட்டங்கள் (Reproductive and Child Health Programmes), மற்றும் தேசிய கிராமப்புற சுகாதாரப் பணி (National Rural Health Mission) போன்ற பல திட்டங்களில் கவனம் செலுத்தி வருகின்றன. எவ்வாறாயினும், நாட்டின் ஊட்டச்சத்து குறைவான நிகழ்வுகளைத் தணிக்க இந்த முயற்சிகளைத் திறம்பட செயல்படுவது அவசியமாகும்.

ஆறு வயதிற்குட்பட்ட குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் இளம் பருவப் பெண்கள் ஆகியோரின் உடல்நலம் மற்றும் ஊட்டச்சத்து நிலைகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்களைக் கொண்டுவருவதில் தமிழகம் ஒரு முன்னோடி பங்கைக் கொண்டுள்ளது. ஊட்டச்சத்து மற்றும் ஆரோக்கியத்திற்கான தமிழக அரசின் அடுத்தடுத்த வரவுசெலவுத்திட்ட செலவினங்கள் நாட்டிலேயே மிக அதிகமாகும். ICDS திட்டம் மற்றும் தமிழ்நாட்டில் உள்ள புரட்சி தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம் ஆகியவற்றின் செயல்திறன் நாட்டின் மிகச் சிறந்த ஒன்றாகக் கருதப்படுகின்றன.

ஊட்டச்சத்துக் குறைபாடு இல்லாத தமிழ்நாடு' என்ற தமிழ்நாட்டின் கொள்கை, ஊட்டச்சத்துக் குறைபாட்டை அகற்றுவதற்காக மாநிலத்தின் நீண்டகால பல துறைக் கொள்கைகளை செயல்படுத்துகிறது. "தமிழ்நாட்டில் அனைத்து, 434 குழந்தைகள் மேம்பாட்டுத் தொகுதிகளில் (385 கிராமப்புற, 47 நகர்ப்புற மற்றும் 2 பழங்குடியினர்) 54,439 குழந்தை மையங்கள் (49,499 அங்கன்வாடி மையங்கள் மற்றும் 4,940 சிறு அங்கன்வாடி மையங்கள்) மூலம் ICDS செயல்படுத்தப்படுகிறது.

அணுகப்படாத பகுதிகளுக்கு நிலையான விரிவாக்கம், ஓரங்கட்டப்பட்ட குழுக்களின் பாதுகாப்பு, மேம்பட்ட ஒதுக்கீடுகள் மற்றும் சேவைகளின் விரிவாக்கம் ஆகியவற்றுடன், ICDS இப்போது உலகின் மிகப்பெரிய திட்டங்களில் ஒன்றாக கருதப்படுகிறது.



**ICDS திட்டம்**

புரட்சி தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம் குழந்தைகளிடையே ஊட்டச்சத்துக் குறைபாட்டை எதிர்த்துப் போராடுவதற்கும், தொடக்கப்பள்ளி சேர்க்கையை அதிகரிப்பதற்கும், இடைநிற்றல் விகிதங்களைக் குறைப்பதற்கும் நாட்டின் மிகப்பெரிய மதிய உணவுத் திட்டமாகக் கருதப்படுகிறது. நாட்டின் பிற மாநிலங்கள், தமிழகத்தின் முன்னோடி முயற்சிகளின் படி மதிய உணவுத் திட்டங்களை வடிவமைத்துள்ளன.

**தமிழ்நாட்டில் செயல்படும் முக்கியமான திட்டங்கள்**

1. டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நலத் திட்டத்தின் (Dr. Muthulakshmi Reddy Maternity Benefit Scheme) கீழ், ஏழை கர்ப்பிணிப் பெண்களுக்கு ₹12,000/– நிதியுதவி வழங்கப்படுகிறது.
2. முதலமைச்சரின் விரிவான சுகாதார காப்பீடு திட்டம் (Chief Minister's Comprehensive Health Insurance Scheme) 2011–12 ஆம் ஆண்டில் இந்த திட்டம் தொடங்கப்பட்டது. இதன் நோக்கம் அனைவருக்கும் உடல் நலம் வழங்கும் நோக்கில் அரசாங்கத்தால் இலவச மருத்துவ மற்றும் அறுவை சிகிச்சை வழங்குவதாகும்
3. தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்டங்கள் (Tamil Nadu Health Systems Projects) இலவசமாக ஆம்புலன்ஸ் சேவைகளை அறிமுகப்படுத்தியுள்ளது. (108 அவசர ஆம்புலன்ஸ் சேவை).
4. 'பள்ளி சுகாதார திட்டம்' (School Health Programme) விரிவான சுகாதார சேவையை அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் படிக்கும் அனைத்து மாணவர்களுக்கும் வழங்குவதை வலியுறுத்துகிறது.
5. தேசிய தொழுநோய் ஒழிப்பு திட்டத்தின் (National Leprosy Eradication Programme) மூலம் அனைத்து தொழுநோயாளிகளையும் கண்டறிந்து தொடர்ச்சியான சிகிச்சையை வழங்குவதை நோக்கமாக கொண்டு மாநிலத்தில் செயல்படுத்தப்படுகிறது.



**பள்ளி சுகாதார திட்டம்**

**தமிழ்நாட்டில் சில ஊட்டச்சத்து திட்டங்கள்**



1. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் ஊட்டச்சத்து உணவுத்திட்டம்.
2. ஆரம்பக் கல்விக்கு தேசிய ஊட்டச்சத்து ஆதரவு திட்டம்.
3. பொது ICDS திட்டங்கள் மற்றும் உலக வங்கி உதவியுடன் ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டு சேவைகள் (General ICDS Projects and World Bank Assisted Integrated Child Development Services).
4. பிரதம மந்திரி கிராமோதயா யோஜனா திட்டம்.
5. தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டம்.
6. மதிய உணவுத் திட்டம்.

## பாடச்சுருக்கம்

- உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பின் மூன்று அடிப்படை கூறுகளை உள்ளடக்குவதற்காக இந்த சொல் விரிவுபடுத்தப்பட்டது. அவை கிடைத்தல், அணுகல் மற்றும் உறிஞ்சுதல்.
- பசுமைப் புரட்சி உணவு தானியங்களில் தன்னிறைவு பெற வழி வகுத்தது.
- தேசிய உணவுப் பாதுகாப்பு சட்டம் இந்திய பாராளுமன்றத்தால் 2013இல் நிறைவேற்றப்பட்டது.
- விவசாய பொருள்களின் ஏற்றுமதி அடிப்படையில் புதிய வேளாண் கொள்கையை 2018இல் மத்திய அரசால் அறிவிக்கப்பட்டது.
- மனிதவள மேம்பாட்டில் சுகாதாரத்திற்கு முக்கிய பங்கு உண்டு.

## A-Z கலைச் சொற்கள்

| | | |
|---|---|---|
| அடையத்தகுந்த | **Availability** | that which can be used, attainable |
| அணுகுமுறை | **Accessibility** | right to enter |
| தாங்கும் திறன் | **Affordability** | ability to be afforded |

| | | |
|---|---|---|
| போதுமான | **Sufficient** | enough |
| பொருள்கள் வாங்கும் திறன் | **Purchasing power** | the financial ability to buy produce |
| உற்பத்தி செய்யும் ஆற்றல் | **Productivity** | power of producing |
| மதிப்புக்கு குறைவு | **Degradation** | to reduce to a lower rank |
| ஒரு பரிமாணம் | **Unidimensional** | having one direction |
| ஊட்டச்சத்தின்மை | **Malnourished** | lack of proper nutrition |

## பயிற்சி

49LQ1C

### I சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக

1. ________________ என்பது விரும்பிய அளவுகளில் உணவு இருப்பு இருப்பது, உள்நாட்டு உற்பத்தியில் இருப்பில் மாற்றங்கள் மற்றும் இறக்குமதி பற்றிய ஒரு செயல்பாடாகும்.

   அ) உணவு கிடைத்தல்

   ஆ) உணவுக்கான அணுகல்

   இ) உணவின் முழு ஈடுபாடு

   ஈ) இவை ஏதுமில்லை

2. தாங்கியிருப்பு என்பது உணவுப் பங்கு தானியங்கள் அதாவது கோதுமை மற்றும் அரிசியை ________________ மூலம் அரசாங்கம் கொள்முதல் செய்கிறது.

   அ) FCI     ஆ) நுகர்வோர் கூட்டுறவு

   இ) ICICI     ஈ) IFCI

3. எது சரியானது?

   i) HYV – அதிக விளைச்சல் தரும் வகைகள்

   ii) MSP – குறைந்தபட்ச ஆதரவு விலை

   iii) PDS – பொது விநியோக முறை

   iv) FCI – இந்திய உணவுக் கழகம்

   அ) i மற்றும் ii சரியானவை

   ஆ) iii மற்றும் iv சரியானவை

   இ) ii மற்றும் iii சரியானவை

   ஈ) மேற்கூறிய அனைத்தும் சரி.

4. நீட்டிக்கப்பட்ட உதவி பொதுச் சட்டம் 480 ஐ கொண்டு வந்த நாடு ________________.

   அ) அமெரிக்கா     ஆ) இந்தியா

   இ) சிங்கப்பூர்     ஈ) இங்கிலாந்து

5. ________________ இந்தியாவில் தோன்றியதால் உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவு பெற வழி வகுத்தது.

   அ) நீலப் புரட்சி     ஆ) வெள்ளைப் புரட்சி

   இ) பசுமைப் புரட்சி     ஈ) சாம்பல் புரட்சி

6. உலகளாவிய பொது வழங்கல் முறையை ஏற்றுக் கொண்ட ஒரே மாநிலம் ________________.

   அ) கேரளா     ஆ) ஆந்திரபிரதேசம்

   இ) தமிழ்நாடு     ஈ) கர்நாடகா

7. ________________ என்பது உடல் நலம் மற்றும் வளர்ச்சிக்குத் தேவையான உணவை வழங்கும் அல்லது பெறும் செயல்முறையாகும்.

   அ) ஆரோக்கியம்     ஆ) ஊட்டச்சத்து

   இ) சுகாதாரம்     ஈ) பாதுகாப்பு

### II கோடிட்ட இடங்களை நிரப்புக

1. ________________ ஊட்டச்சத்து குறைபாட்டின் முக்கியமான குறியீடாகும்.
2. ________________ ஆம் ஆண்டில் தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம் இந்திய நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டது.
3. பொதுவான மக்களுக்கு பொறுப்பான விலையில் தரமான பொருள்களை வழங்குவதில் ________________ முக்கியப் பங்கு வகிக்கிறது.

### III பின்வருவனவற்றைப் பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| 1. | நுகர்வோர் கூட்டுறவு | – | மானிய விகிதங்கள் |
| 2. | பொது விநியோக முறை | – | 2013 |
| 3. | UNDP | – | குறைந்த ஏழ்மை உள்ள பகுதி |
| 4. | தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் | – | தரமான பொருள்களை வழங்குதல் |
| 5. | கேரளா | – | ஐக்கிய நாடுகள் சபை வளர்ச்சித் திட்டம் |



10th_Economics_TM_Unit_3.indd 338 24-03-2020 12:43:54

### IV சரியான கூற்றை தேர்வு செய்க

1. **கூற்று:** விலை குறைந்தால் வாங்கும் சக்தி அதிகரிக்கிறது மற்றும் இது நேர்மாறானது.
   **காரணம்:** பொருள்களின் உற்பத்தி குறைந்து, விலை அதிகரிப்பதால் வாங்கும் திறன் பாதிக்கப்படுகிறது.
   அ) கூற்று சரியானது, காரணம் தவறானது
   ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறானது
   இ) கூற்று சரியானது, ஆனால் காரணம் சரியான விளக்கம் அல்ல
   ஈ) கூற்று சரியானது, காரணம் கூற்றின் சரியான விளக்கம்

### V குறுகிய விடையளிக்கவும்

1. FAO வின்படி உணவு பாதுகாப்பை வரையறு.
2. உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பின் மூன்று அடிப்படைக் கூறுகள் யாவை?
3. பசுமைப்புரட்சியில் இந்திய உணவுக் கழகத்தின் (FCI) யின் பங்கு என்ன?
4. பசுமைப் புரட்சியின் விளைவுகள் என்ன?
5. தமிழ்நாட்டிலுள்ள சில ஊட்டச்சத்து திட்டங்களின் பெயரை எழுதுக.

### VI கீழ்க்கண்ட வினாக்களுக்கு விரிவான விடையளி

1. பசுமைப் புரட்சி ஏன் தோன்றியது என்பதைப் பற்றி விவரி.
2. குறைந்த பட்ச ஆதரவு விலையை விளக்குக.
3. பொது விநியோக முறையை விவரிக்கவும்.
4. வாங்கும் திறனைப் பாதிக்கும் காரணிகள் யாவை? அவற்றை விளக்குக.
5. புதிய வேளாண் கொள்கைக்கான முக்கிய குறிக்கோள்கள் யாவை?

### VII செய்முறைகள் மற்றும் செயல்பாடு

1. அருகிலுள்ள "உழவர் சந்தையை" பார்வையிட்டு சந்தை செயல்பாடுகளின் தகவல்களை சேகரிக்கவும்.
2. உங்கள் இடத்தின் அருகிலுள்ள சுகாதார மையத்தின் செயல்பாடு பற்றி தகவல்கள் சேகரிக்கவும்.

## மேற்கோள் நூல்கள்


1. Dr.S. சங்கரன் – இந்திய பொருளாதாரம், இந்தியா.
2. Ministry of Agriculture & Farmers Welfare. 3. Annual report 2016–17.
3. Nutrition & Food Security. UN India.
4. *Pratiyogita Darpan*–Indian Economy.
5. Economic Survey 2017–18.
6. *The Gazette of India*–"The National Food Security Act 2013".


## இணையதள வளங்கள்

1. www.agricoop.nic.in
2. www.fci.gov.in
3. www.statistics.com

## இணையச் செயல்பாடு

### உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து

**படி – 1** URL அல்லது QR குறியீட்டினைப் பயன்படுத்தி இச்செயல்பாட்டிற்கான இணையப் பக்கத்திற்கு செல்க

**படி – 2** மெனுவின் இடது பக்கத்தில் உள்ள 'Minimum Support Price of Paddy, Wheat and Coarse grain' என்பதை சொடுக்கவும்

**படி – 3** தோன்றும் புள்ளி விவரத்தொகுப்பினை ஒவ்வொன்றாகத் தேர்ந்தெடுத்து அதற்கான விளக்கத்தைப் பார்க்கவும்.

உரலி: http://fci.gov.in/procurements.php?view=51

B373_10_SOCIAL_TM

# அலகு – 4

# அரசாங்கமும் வரிகளும்




## கற்றலின் நோக்கங்கள்

- வளர்ச்சிக் கொள்கைகள் மற்றும் அரசாங்கத்தின் பங்கு பற்றி புரிந்துகொள்ளுதல்
- வரி மற்றும் அதன் வகைகளைப் பற்றிய அறிவைப்பெறுதல்
- வரி எவ்வாறு விதிக்கப்படுகிறது என்பதைப் பற்றிப்படித்தல்
- கருப்பு பணத்திற்கும், வரி ஏய்ப்பிற்கும் உள்ள நோக்கத்திற்கான அறிவைப்பெறுதல்
- வரிக்கும், மற்ற கட்டணத்திற்கும் உள்ள வேறுபாட்டை தெரிந்துகொள்ளுதல்
- வரிகளும் மற்றும் அவற்றின் முன்னேற்றம் பற்றியும் புரிந்துகொள்ளுதல்

HV33TV

## அறிமுகம்

ஒரு நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றம் அடையச் செய்வதற்கு அரசாங்கத்தால் வரி விதிக்கப்படுகிறது. அரசின் வருமானம் நேர்முக மற்றும் மறைமுக வரிகளைச் சார்ந்து உள்ளது. நேர்முக வரியானது தனி நபரின் வருமானத்திலும், மறைமுக வரியானது பண்டங்கள் மற்றும் பணிகள் மீதும் விதிக்கப்படுகின்றன. இதன் மூலம் அரசாங்கம் அதன் "நிதி ஆதாரங்களை" திரட்டுகிறது.

## 4.1 வளர்ச்சிக் கொள்கைகளில் அரசாங்கத்தின் பங்கு

### 1. பாதுகாப்பு (அ) இராணுவம்

எதிரிகளிடமிருந்து மக்களைப் பாதுகாப்பது இராணுவத்தின் அத்தியாவசியப் பணியாகக் கருதப்படுகிறது. பாதுகாப்புப் படைகளை உருவாக்குவதற்கும், பராமரிப்பதற்கும் மத்திய அரசாங்கமே பொறுப்பாகும்.

### 2. அயல்நாட்டுக் கொள்கை

இன்றைய உலகில் நாம் அனைத்து உலக நாடுகளுடனும் நட்பான உறவைப் பராமரித்தல் அவசியமானதாகும். ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்வதன் மூலமும், மூலதனம் மற்றும் உழைப்பைப் பரிமாற்றம் செய்வதன் மூலமும் நாம் நல்ல பொருளாதார உறவினை பராமரிக்க முடியும். இந்த சேவையை மத்திய அரசாங்கம் வழங்குகிறது.

### 3. அவ்வப்போது தேர்தல்களை நடத்துதல்

இந்தியா ஒரு ஜனநாயக நாடு. நாம் நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்றத்திற்குப் பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கின்றோம். இதேபோல், மாநில அரசுகள் உள்ளாட்சி மன்றங்களுக்குத் தேர்தலை மாநிலத்திற்குள் நடத்துகிறது.

### 4. சட்டம் மற்றும் ஒழுங்கு

நடுவண் மற்றும் மாநில அரசுகள் நமது உரிமைகள், சொத்துக்களைப் பாதுகாப்பதற்கும், நமது பொருளாதாரம் மற்றும் சமூகத்தை ஒழுங்குபடுத்துவதற்கும் ஏராளமான சட்டங்களை இயற்றுகின்றன. பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காக நீதிமன்றங்களை அமைத்துள்ளன. மேலும், அந்தந்த மாநிலங்களில் காவல் துறையை நிர்வகிக்கும் பொறுப்பை மாநில அரசுகள் ஏற்றுக் கொள்கின்றன.

### 5. பொது நிர்வாகம் மற்றும் பொதுப்பண்டங்களை வழங்குதல்

அரசாங்கம் பொதுவாக பல்வேறு துறைகள் மூலம் பொருளாதாரத்தையும் சமூகத்தையும் நிர்வகிக்கிறது. வருவாய் துறை, பள்ளிகள், மருத்துவமனைகள், கிராம வளர்ச்சி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி போன்றவைகள் எடுத்துக்காட்டுகளாகும். உள்ளூர் அரசாங்கங்கள், உள்ளூர் சாலைகள், வடிகால், குடிநீர், குப்பை சேகரிப்பு மற்றும் அகற்றல் போன்ற பொதுப்பணிகளை வழங்குகின்றன.

### 6. வருமான மறுபகிர்வு மற்றும் வறுமை ஒழிப்பு

முன்னதாக குறிப்பிடப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளுக்கு நிதியளிக்க அரசாங்கங்கள்



10th_Economics_TM_Unit_4.indd 340 24-03-2020 12:44:26

பல்வேறான வரிகளை வசூலிக்கின்றன. அதிக வருமானம் உடையவர்கள் ஏழைகளை விட அரசாங்கத்திற்கு அதிகவரி செலுத்தக்கூடிய வகையில் வரி வசூலிக்கப்படுகிறது. சில அடிப்படைத் தேவைகளான உணவு, தங்குமிடம், உடை, கல்வி, சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் மாத வருமானம் போன்றவற்றினை ஏழைகளுக்கு வழங்குவதற்காக அரசாங்கம் பணத்தைச் செலவிடுகின்றது. மேலும், வறுமையைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளையும் செயல்படுத்துகிறது.

**7. பொருளாதாரத்தை ஒழுங்குபடுத்துதல்**

நடுவண் அரசு, பணத்தின் அளிப்பு, வட்டி வீதம், பணவீக்கம் மற்றும் அந்நிய செலாவணி ஆகியவற்றை இந்திய மைய வங்கி மூலம் கட்டுப்படுத்துகிறது. இதன் விகிதங்களில் அதிக ஏற்ற இறக்கங்களை களைவதே மையவங்கியின் முக்கிய நோக்கமாகும். இந்திய பங்குமற்றும் பரிவர்த்தனைவாரியம் (SEBI) மற்றும் இந்திய போட்டி ஆணையம் (CCI) போன்ற பல்வேறு முகவர்கள் மூலமாகவும் மத்திய அரசு பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்துகிறது. இந்தியாவில் உள்ள அனைத்து அரசாங்க நிறுவனங்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள் மலிவுவிலையில் அத்தியாவசியமான பொருட்கள் மற்றும் சேவைகளை மக்களுக்கு வழங்குகின்றன.

## 4.2 வரி




"வரி" என்ற சொல் "வரிவிதிப்பு" என்பதிலிருந்து உருவானது. இதன் பொருள் மதிப்பீடு என்பதாகும்.

வரி விதிப்பு என்பது அரசாங்கம் தனது செலவினங்களுக்காகப் பொது மக்களிடமும், பெரு நிறுவனங்களிடமும் வரிகளை விதித்து வருவாயை உருவாக்கும் ஒரு வழிமுறையாகும். அரசு இயந்திரங்களின் செயல்பாட்டிற்காக வரியின் மூலம் நிதி திரட்டுவது வரிவிதிப்பின் முக்கிய நோக்கமாகும். வரிவிதிப்பு முறை "நல அரசு" என்ற கருத்தை மையமாகக் கொண்டு செயல்படுகிறது. வரிகள் என்பது எந்த வித எதிர்பார்ப்பும் இன்றி நேரடியாக அரசாங்கத்திற்கு செலுத்துகின்ற கட்டாய கட்டணமேயாகும்.

### வரி அமைப்பு

ஒவ்வொரு வகையான வரியும் சில நன்மைகள் மற்றும் தீமைகளைப் பெற்றுள்ளன. நாம் கொண்டுள்ள வரி அமைப்பு, பல்வேறு வகையான வரிகளின் தொகுப்பாகும். ஆடம் ஸ்மித் முதல் பல பொருளாதார வல்லுநர்கள் வரி விதிப்புக் கொள்கைகளைக் கொடுத்துள்ளனர். அவைகளில் பொதுவான வகைகளை இங்கு நினைவு கூறுவது முக்கியமானதாகும்.

**1. சமத்துவ விதி**

வரி ஒரு கட்டாயக் கட்டணம் என்பதால், வரி முறையை வடிவமைப்பதில் சமத்துவம் என்பது முதன்மை என்பதை அனைத்து பொருளாதார வல்லுநர்களும் ஒப்புக்கொள்கிறார்கள். பணக்காரர்கள் ஏழைகளை விட அரசாங்கத்திற்கு அதிக வரி வருவாயை செலுத்தவேண்டும், ஏனென்றால் ஏழைகளை விட பணக்காரர்களுக்கு அதிக வரி செலுத்தும் திறன் உள்ளது.

**2. உறுதி விதி**

ஒவ்வொரு வரி செலுத்துவோரும் ஒரு வருடத்தில் எவ்வளவு வரித்தொகையை அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டும் என்பதைக் கணக்கிட ஒவ்வொரு அரசாங்கமும் வரி முறையை முன் கூட்டியே அறிவிக்க வேண்டும்.

**3. சிக்கன மற்றும் வசதி விதி**

வரி எளிமையானதாக இருந்தால், வரி வசூலிப்பதற்கான செலவு (வரி செலுத்துவோர் செலவு + வரி வசூலிப்போர் செலவு) மிகக் குறைவாக இருக்கும். மேலும், ஒரு நபருக்கு வரி செலுத்தப் போதுமான பணம் கிடைக்கும் நேரத்தில் வரி வசூலிக்கப்பட வேண்டும். இது வசதிக்கான வரி என்று அழைக்கப்படுகிறது. ஒரு வசதியான வரி, வரி வசூலிக்கும் செலவை குறைக்கிறது.

**4. உற்பத்தித் திறன் மற்றும் நெகிழ்ச்சி வரி**

அரசாங்கம் போதுமான வரி வருவாயைப் பெறக்கூடிய வரிகளை தேர்வு செய்ய வேண்டும். நிறைய வரிகளுக்குப் பதிலாக அதிக வரி வருவாயைப் பெறக் கூடிய சில வரிகளைத் தேர்வு செய்ய வேண்டும். இது உற்பத்தித் திறன் வரியாகும். மக்கள் தங்கள் வருமானத்திலிருந்து வரி செலுத்துகிறார்கள். எனவே, மக்கள் வருமானம் அதிகரித்தால் தானாகவே அதிக வரி வருவாயை செலுத்தும் வகையில் வரி அமைப்பு வடிவமைக்கப்பட வேண்டும். இது நெகிழ்ச்சி வரி எனப்படுகிறது.



10th_Economics_TM_Unit_4.indd 341 24-03-2020 12:44:26

www.tntextbooks.in

பேராசிரியர் செலிக்மேன் கருத்துப்படி, "வரி என்பது ஒரு குடிமகன் அரசுக்கு கட்டாயமாக செலுத்தும் செலுத்துகையாகும். அரசிடமிருந்து எந்தவித நேரடி நன்மையும் எதிர்பார்க்காமல் கட்டாயமாகச் செலுத்த வேண்டியதே வரி" என வரையறை கூறுகிறார்.

### வரிகள் ஏன் விதிக்கப்படுகிறது?

வரலாற்று காலத்திலிருந்தே நாடுகளும் அதற்கு இணையாக செயல்படும் அரசுகளும் வரிவிதிப்பின் மூலம் பெற்ற நிதியிலிருந்தே பல செயல்களை நிறைவேற்றியிருக்கின்றது. அவைகளில் சில பொருளாதார உள்கட்டமைப்புச் செலவுகள், (போக்குவரத்து, துப்புரவு, பொது பாதுகாப்பு, கல்வி, உடல்நலம்) இராணுவம், அறிவியல் ஆராய்ச்சி, கலாச்சாரம், கலைகள், பொதுப்பணிகள், பொதுக் காப்பீடுகள் மற்றும் அரசாங்க செயல்பாடுகள் போன்றவைகளாகும். வரிகளை உயர்த்துவதற்கான அரசாங்கத்தின் திறன் 'நிதித் திறன்' என்று கூறப்படுகிறது.

செலவானது, வரி வருவாயைவிட அதிகமாக இருக்கும்போது ஒரு அரசாங்கம் கடனை திரட்டுகிறது. வரிகளின் ஒரு பகுதி கடந்த காலப் பணிகளுக்கான கடன்களுக்குப் பயன்படுத்தப்படலாம். அரசாங்கம் மக்களின் நலனிற்கும் பொது சேவைகளுக்கும் வரிகளைப் பயன்படுத்தலாம்.

இந்த சேவைகளில் கல்வி முறைகள், முதியோருக்கான ஓய்வூதியம், வேலையின்மை சலுகைகள் மற்றும் பொது போக்குவரத்து ஆகியவை அடங்கும். ஆற்றல், நீர் மற்றும் கழிவு மேலாண்மை ஆகியவை மக்களுக்கான பயன்பாடுகளாகும்.

> **உங்களுக்குத் தெரியுமா?**
> இந்தியாவில் வரி விதிப்பின் வேர்கள் மனு ஸ்மிருதி மற்றும் அர்த்தசாஸ்திர காலத்திலிருந்தே பின்பற்றப்பட்டது. தற்கால இந்திய வரி முறையானது பண்டைய கால வரி முறையை அடிப்படையாகக் கொண்டது.

## 4.3 வரிகளின் வகைகள்

### நேர்முக வரிகள்

நேர்முக வரி என்பது ஒரு தனிநபர் அல்லது நிறுவனத்தின் மீது நேரடியாக விதிக்கப்படுவதாகும். இவ்வரியை மற்றவர் மீது மாற்ற முடியாது. பேராசிரியர் ஜே.எஸ். மில்லின் கருத்துப்படி, நேர்முக வரி என்பது "யார் மீது வரி விதிக்கப்பட்டதோ அவரே அவ்வரியை செலுத்துவதாகும். வரி செலுத்துபவரே வரிச்சுமையை ஏற்க வேண்டும்". சில நேர்முக வரிகள்: வருமான வரி, சொத்து வரி மற்றும் நிறுவன வரி ஆகியனவாகும்.

> **உங்களுக்குத் தெரியுமா?**
> இந்தியாவில் முதன்முதலாக வருமானவரி 1860ஆம் ஆண்டு சர் ஜேம்ஸ் வில்சன் என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டது. 1857ஆம் ஆண்டு கலகத்தின் மூலம் ஏற்பட்ட இழப்புகளை ஈடுகட்ட அரசாங்கத்தின் மூலம் போடப்பட்ட ஆணையே வரி விதிப்பாகும்.

### வருமான வரி

வருமான வரி இந்தியாவில் விதிக்கப்படுகின்ற நேர்முக வரி முறையில் மிக முக்கியமான வரியாகும். இவ்வரி தனிநபர் பெறுகின்ற வருமானத்தின் அடிப்படையில் விதிக்கப்படுகின்றது. இவ்வரி வசூலிக்கப்படும் விகிதம் வருமான அளவைப் பொறுத்து மாறுபடக்கூடியதாகும்.

> வருமான வரி வலைத்தளத்தின் மூலம் நடப்பு ஆண்டிற்கான வருமான வரி அறிக்கையினை மாணவர்களை அறிந்து கொள்ளக் கூறுதல்.

### நிறுவனவரி

இந்த வரி தங்கள் பங்குதாரர்களிடமிருந்து தனி நிறுவனங்களாக இருக்கும் நிறுவனங்களுக்கு விதிக்கப்படுகிறது. இது இந்தியாவில் அமைந்துள்ள சிறப்பு உரிமைகளில், மூலதன சொத்துக்களின் விற்பனையிலிருந்து வரும் வட்டி இலாபங்கள், தொழில் நுட்ப சேவைகள் மற்றும் ஈவுத் தொகைகளுக்கான கட்டணம் போன்றவற்றிலிருந்து வசூலிக்கப்படுகிறது. இந்த வரி வெளிநாட்டு நிறுவனங்கள் பெரும் வருமானத்தின் மீது விதிக்கப்படுகிறது.

| வருமானம் | இந்திய நிறுவனங்கள் | அயல்நாட்டு நிறுவனங்கள் |
|---|---|---|
| ₹ 50 கோடிக்குள் | 25% | 40% |
| ₹ 50 கோடிக்கு மேல் | 30% | 40% |

### சொத்து வரி (அ) செல்வ வரி

சொத்து வரி (அ) செல்வ வரி என்பது தனது சொத்திலிருந்து பெறப்பட்ட நன்மைகளுக்காக சொத்தின் உரிமையாளருக்கு விதிக்கப்படுகின்ற வரியாகும். ஒவ்வொரு ஆண்டும் சொத்தின் நடப்பு சந்தை மதிப்பின் அடிப்படையில் விதிக்கப்படுகிறது. இவ்வரி தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களின் மீது விதிக்கப்படும் வரியாகும்.



10th_Economics_TM_Unit_4.indd 342 24-03-2020 12:44:26

இந்தியாவில் அரசாங்கத்தினால் மூன்று அடுக்குகள் வரி வசூலிக்கப்படுகிறது. நடுவண் அரசால்எளிதில்வசூலிக்கக்கூடியவரிகள்உள்ளன. இந்தியாவில் கிட்டத்தட்ட அனைத்து நேரடி வரிகளும் நடுவண் அரசால் வசூலிக்கப்படுகின்றன. பொருள்கள் மற்றும் சேவைகளுக்கான வரி நடுவண் மற்றும் மாநில அரசாங்கங்களால் வசூலிக்கப்படுகிறது. சொத்துக்களுக்கான வரி உள்ளூர் அரசாங்கங்களால் வசூலிக்கப்படுகிறது.

இந்தியாவில் நேரடி வரிகளை விட மறைமுக வரி மூலம் அதிக வரி வருவாய் வசூலிக்கப்படுகின்றது. இந்தியாவின் முக்கிய மறைமுக வரி சுங்க வரி மற்றும் பண்டங்கள் மற்றும் பணிகள் வரி (GST) ஆகும்.

### மறைமுக வரிகள்

ஒருவர் மீது விதிக்கப்பட்ட வரிச்சுமை மற்றொருவருக்கு மாற்றப்பட்டால் அது "மறைமுகவரி" எனப்படும். வரி விதிக்கப்பட்டவர் ஒருவர், வரி சுமையை சுமப்பவர் வேறு ஒருவராவார். ஆகையால், மறைமுகவரியில் வரியைச் செலுத்துபவர் வரி சுமையை சுமப்பவர் அல்லர்.

சில மறைமுக வரிகளாவன: முத்திரைத் தாள் வரி, பொழுதுபோக்கு வரி, சுங்கத் தீர்வை மற்றும் பண்டங்கள் மற்றும் பணிகள் (GST) மீதான வரிகளாகும்.

**முத்திரைத்தாள் வரி**

முத்திரைத்தாள் வரி என்பது அரசாங்க ஆவணங்களான திருமண பதிவு அல்லது சொத்து தொடர்பான ஆவணங்கள் மற்றும் சில ஒப்பந்தப் பத்திரங்கள் போன்றவைகள் மீது விதிக்கப்படுவதாகும்.

**பொழுதுபோக்கு வரி**

எந்தவொரு பொழுதுபோக்கு மூலங்களாக இருந்தாலும், அதன் மீது அரசாங்கத்தால் விதிக்கப்படுகின்ற வரி பொழுதுபோக்கு வரியாகும். உதாரணமாக திரைப்படங்கள் பார்ப்பதற்காக விதிக்கப்படுகின்ற கட்டணம், பொழுது போக்கு பூங்காக்கள், கண்காட்சிகள், விளையாட்டு அரங்கம், விளையாட்டு நிகழ்ச்சிகள் ஆகியவற்றைப் பார்ப்பதற்காக விதிக்கப்படுகின்ற வரி போன்றவையாகும்.

**சுங்கத் தீர்வை (அல்லது) கலால் வரி**

சுங்கத் தீர்வை என்பது விற்பனையை விட, உற்பத்தியின் இயக்கத்தில் உள்ள எந்தவொரு உற்பத்திப் பொருட்களின் மீதும் விதிக்கப்படும் வரியாகும். இவ்வரி பொதுவாக விற்பனை வரி போன்ற மறைமுக வரிகளுக்கு கூடுதலாக விதிக்கப்படுகிறது.

### பண்டங்கள் மற்றும் பணிகள் வரி (GST – Goods and Service Tax)

பண்டங்கள் மற்றும் பணிகள் வரி என்பது மறைமுக வரிகளில் ஒன்றாகும். இவ்வரி இந்தியப் பாராளுமன்றத்தில் மார்ச் 29, 2017ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது. மேலும் ஜூலை 1, 2017 முதல் அமுல்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இதன் குறிக்கோள் "ஒரு நாடு–ஒரு அங்காடி–ஒரு வரி" என்பதாகும். இது மதிப்பு கூட்டப்பட்ட வரி (VAT) போன்று 'பல முனை வரி' இல்லாமல் இது 'ஒரு முனை வரி' ஆகும்.

#### பண்டங்கள் மற்றும் பணிகள் வரியின் அமைப்பு (GST)

**மாநில பண்டங்கள் மற்றும் பணிகள் வரி (SGST): (மாநிலத்திற்குள்)**

மதிப்புக் கூட்டு வரி (VAT) / விற்பனை வரி, கொள்முதல் வரி, பொழுதுபோக்கு வரி, ஆடம்பர வரி, பரிசுச்சீட்டு வரி, மற்றும் மாநில கூடுதல் கட்டணம் மற்றும் வரிகள்.

**மத்திய பண்டங்கள் மற்றும் பணிகள் வரி (CGST): (மாநிலத்திற்குள்)**

மத்திய சுங்கத்தீர்வை, சேவை வரி, ஈடுசெய்வரி, கூடுதல் ஆயத்தீர்வை, கூடுதல் கட்டணம், கல்வி கட்டணம் (இடைநிலைக் கல்வி மற்றும் மேல்நிலைக் கல்வி வரி).

**ஒருங்கிணைந்த பண்டங்கள் மற்றும் பணிகள் வரி (IGST): (மாநிலங்களுக்கு இடையே)**

நான்கு முக்கிய GST விகிதங்கள் உள்ளன. (5%, 12%, 18% மற்றும் 28%) காய்கறிகள் மற்றும் உணவு தானியங்கள் போன்ற வாழ்க்கைக்குத் தேவையான அத்தியாவசிய தேவைகளுக்கான அனைத்து பண்டங்களுக்கும் இந்த வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுகின்றன.

உங்களுக்குத் தெரியுமா?

1954ஆம் ஆண்டு முதன்முதலில் பண்டங்கள் மற்றும் பணிகள் வரியை அமல்படுத்திய நாடு பிரான்ஸ் ஆகும்.

## 4.4 வரி எவ்வாறு விதிக்கப்படுகிறது?

வளர்வீத வரி விதிப்பு முறை, விகித வரி விதிப்பு முறை மற்றும் தேய்வுவீத வரி விதிப்பு முறை என அரசாங்கம் வரிகளை விதிக்கின்றன.

**வளர்வீத வரி விதிப்பு முறை**

வளர்வீத வரி விதிப்பு முறையில் வரியின் அடிப்படைத்தளம்அதிகரிக்கும்போது(பெருக்கப்படும்) வரி விகிதமும் (பெருகி) அதிகரிக்கிறது. ஒரு



10th_Economics_TM_Unit_4.indd 343 24-03-2020 12:44:26

வளர்வீத வரியைப் பொறுத்த வரையில் வருமானம் அதிகரிக்கும் போது, வரி விகிதமும் அதிகரிக்கிறது.

**எடுத்துக்காட்டு**

| வரி அடிப்படை | வரி விகிதம் | வரி அளவு |
|---|---|---|
| ₹10,000 | 10% | ₹1000 |
| ₹20,000 | 15% | ₹3000 |
| ₹30,000 | 25% | ₹7500 |

**விகித வரி விதிப்பு முறை அல்லது விகிதாச்சார வரி விதிப்பு முறை**

ஒரு நிலையான அளவில் பண்டங்கள் மற்றும் பணிகளுக்கு விதிக்கப்படும் வரி, விகித வரி விதிப்பு முறை எனப்படுகிறது. அனைத்து வரி செலுத்துவோரும், தங்கள் வருமானத்தில் அதே விகிதத்தில் பங்களிப்பு செய்கின்றனர்.

**எடுத்துக்காட்டு**

| வரி அடிப்படை | வரி விகிதம் | வரி அளவு |
|---|---|---|
| ₹10,000 | 10% | ₹1000 |
| ₹20,000 | 10% | ₹2000 |
| ₹30,000 | 10% | ₹3000 |

### தேய்வுவீத வரி விதிப்பு முறை

இது அதிக வருமானம் ஈட்டுபவர்களை விட, குறைந்த வருமானம் ஈட்டுபவர்களிடம் அதிகவரி விகிதம் விதிப்பதைக் குறிக்கிறது. இது வளர்வீத வரி விதிப்பு முறைக்கு நேர் எதிர் மாறானதாகும்.

| வளர்வீத வரி விதிப்பு | விகித வரி விதிப்பு | தேய்வுவீத வரி விதிப்பு |
|---|---|---|
| வருமான அதிகரிப்பு | வருமான அதிகரிப்பு | வருமான மாற்றம் |
| வரியும் அதிகரிக்கும் | வரி குறையும் | எப்போதும் ஒரே வரி |
| எ.கா. வருமான வரி | எ.கா. நிறுவன வரி | எ.கா. விற்பனை வரி |

## 4.5 கருப்பு பணம் (Black Money)

**கருப்பு பணம்**

கருப்பு பணம் என்பது, கருப்பு சந்தையில் ஈட்டப்பட்ட வருமானம் மற்றும் செலுத்தப்படாத வரிப் பணமாகும். வரி நிர்வாகியிடமிருந்து மறைக்கப்பட்ட, கணக்கிடப்படாத பணம் "கருப்பு பணம்" என்று அழைக்கப்படுகிறது.

WGIGME

### கருப்பு பணத்திற்கான காரணங்கள்

கருப்பு பணத்திற்கு பல காரணங்கள் அடையாளம் காணப்படுகின்றன. அவை

1. பண்டங்கள் பற்றாக்குறை
2. உரிமம் பெறும் முறை
3. தொழில் துறையின் பங்கு
4. கடத்தல்
5. வரியின் அமைப்பு

## 4.6 வரி ஏய்ப்பு (Tax Evasion)

தனிநபர்கள், நிறுவனங்கள் மற்றும் அறக்கட்டளைகள் ஆகியவை சட்ட விரோதமாக வரி செலுத்தாமல் இருப்பது வரி ஏய்ப்பு எனப்படும். வரி ஏய்ப்பு நடவடிக்கைகளில் சேர்க்கப்பட்டுள்ளவை

- வருமானத்தை குறைத்து மதிப்பிடுதல்
- விலக்குகள் அல்லது செலவுகளை உயர்த்துவது.
- மறைக்கப்பட்ட பணம்.
- கடல் கடந்த கணக்குகளில் விவரங்களை மறைத்தல்.

### வரி ஏய்ப்பும், அபராதமும்

1. ஒரு நபர் வரி ஏய்ப்பு செயலை முழுமையாகச் செய்தால், அவர் மோசமான குற்றச்சாட்டுகளை சந்திக்க நேரிடும். வரி ஏய்ப்பு அபாரதங்களில் ஐந்து ஆண்டுகள் வரை சிறைத் தண்டனையும், அதிக அளவு அபராதமும் அடங்கும்.
2. பிரதிவாதிகள், வழக்கு விசாரணைக்கான செலவுகளைச் செலுத்த உத்தரவிடப்படலாம்.
3. வரிஏய்ப்பிற்கான அபராதம், குற்றத்தின் தன்மை, மற்றும் அதன் தீவிரத்தினைப் பொறுத்து கடுமையானதாக இருக்கும்.

## 4.7 வரிகளும் முன்னேற்றமும்

பொருளாதாரத்தை முன்னேற்றுவதில் வரி விதிப்பின் பங்கு பின்வருமாறு.

**1. வளங்களைத் திரட்டுதல்**

வரிவிதிப்பு அரசாங்கத்திற்கு கணிசமான அளவிற்கு வருவாய் திரட்டுவதற்கு உதவுகிறது. குறிப்பாக நேர்முக வரிகளான தனிநபர் வருமானவரி, நிறுவனவரி மற்றும் மறைமுக வரிகளான ஆயத்தீர்வை, சுங்கவரி ஆகியவற்றின் மூலமாக வரி வருவாய் திரட்டப்படுகிறது.

**2. வருமான ஏற்றதாழ்வுகளை குறைத்தல்**

வரியின் மூலம் சமத்துவமுறையை உருவாக்கலாம். குறிப்பாக, நேர்முக வரியில்

வளர்வீத வரி முறை பின்பற்றப்படுகிறது. அதேபோல சில மறைமுக வரியான ஆடம்பரப் பண்டங்களின் மீது விதிக்கப்படும் வரி வளர்வீத வரியின் தன்மையுடையதாகும்.

**3. சமூக நலன்**

வரி விதிப்பு சமூக நலனை உருவாக்குகிறது. சில விரும்பத்தகாத பொருட்களான மதுபானங்கள் போன்ற பொருட்களின் மீது அதிகமாக வரி விதிப்பதன் மூலம் சமூக நலன் பாதுகாக்கப்படுகிறது.

**4. அந்நியச் செலாவணி**

வரிவிதிப்பு ஏற்றுமதியை ஊக்குவிப்பதுடன் இறக்குமதியைத் தடுக்கிறது. பொதுவாக, வளரும் நாடுகள் மற்றும் வளர்ந்த நாடுகளும் ஏற்றுமதி பொருட்களுக்கு வரிகளை விதிப்பதில்லை.

**5. வட்டார முன்னேற்றம்**

வட்டார வளர்ச்சியில் வரி விதிப்பு முக்கியப் பங்கினை வகிக்கிறது. பின் தங்கிய பகுதிகளில் தொழில் நிறுவனங்கள் அமைப்பதற்காக வரிச் சலுகையையும், வரி விலக்குகளையும் அளிப்பதன் மூலம், அப்பகுதிகளில் தொழிற்சாலைகளை அமைப்பதற்கு வணிக நிறுவனங்களைத் தூண்டுகிறது.

**6. பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தல்**

வரி என்பது பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தும் கருவிகளுள் ஒன்றாக பயன்படுத்தப்படுகிறது. அரசாங்கம் பண்டங்கள் மீதான வரி விகிதத்தை குறைப்பதன் மூலம் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த முடியும்.

**வரிக்கும் கட்டணத்திற்கும் உள்ள வேறுபாடுகள்**

| வரி (Tax) | கட்டணம் (Payment) |
|---|---|
| வரி என்பது எந்தவித பிரதிபலனும் எதிர்பார்க்காமல் அரசாங்கத்திற்கு கட்டாயமாக செலுத்துகின்ற செலுத்துகையாகும். | கட்டணம் என்பது பணிகளை பயன்படுத்துவதற்காக செலுத்துவதாகும். |
| பொதுவாக அரசாங்கத்தின் வருமான இனங்களில் ஒன்றாக வரி மேலோங்கியுள்ளது. | கட்டணம் என்பது ஒரு குறிப்பிட்ட நன்மைகளுக்கான தனிச் சலுகைகளைப் பெற்றிருந்தாலும், பொது நல ஒழுங்கு முறையின் சிறப்பான முதன்மை நோக்கமாகும். |
| வரி என்பது கட்டாய செலுத்துகை ஆகும். | கட்டணம் (Fee) என்பது தன்னார்வமாக செலுத்துவதாகும் |
| ஒரு தனிப்பட்ட நபரின் மீது வரி விதிக்கப்பட்டால், அதனை அவர் செலுத்த வேண்டும். இல்லையெனில் அவர் தண்டிக்கப்படுவார். | மாறாக, பணிகளை பெற விருப்பமில்லை எனில் கட்டணம் செலுத்தத் தேவையில்லை. |
| வரி செலுத்துபவர்கள் நேரடியாக எவ்வித சலுகைகளையும் எதிர்பார்க்க முடியாது. **உதாரணம்:** வருமான வரி, அன்பளிப்பு வரி, சொத்து வரி மற்றும் மதிப்புக் கூட்டு வரி (VAT). | கட்டணம் செலுத்துவதன் மூலம் நுகர்வோர்கள், நேரடியாக சலுகைகளைப் பெறுகின்றனர். **உதாரணம்:** முத்திரை வரி, ஓட்டுநர் உரிமக் கட்டணம், அரசாங்க பதிவுக் கட்டணம். |

**பாடச்சுருக்கம்**

- நேர்முக வரி என்பது மத்திய அரசுக்கு அல்லது மாநில அரசுக்கு அல்லது உள்ளாட்சி அமைப்புகளுக்கு நேரடியாகச் செலுத்தும் வரியாகும். இதில் வருமான வரி, சொத்துவரி ஆகியன அடங்கும்.
- வருமான வரி தனி நபர்கள் மற்றும் தொழில் செய்பவர்களால் ஈட்டப்பட்ட மற்றும் ஈட்டப்படாத வருமானங்களின் அடிப்படையில் விதிக்கப்படுகிறது.
- உள்ளூர் வரி என்பது உள்ளாட்சி அமைப்பு அல்லது அரசின் மூலம் ஒரு நகரம் அல்லது ஒரு நாட்டின் எல்லைக்குள் விதிக்கப்படுகின்ற வரியாகும்.



10th_Economics_TM_Unit_4.indd 345 24-03-2020 12:44:27

## A-Z கலைச்சொற்கள்

| | | |
|---|---|---|
| வரி (விதிக்கப்பட்ட) | **Levied** | To impose taxes |
| ஏற்ற இறக்கம் | **Fluctuation** | To change |
| செலவை ஈடுகட்ட | **Defray** | Meet the expenses |
| கொள்கை மொழிவோர் | **Proponents** | Person who advocates theory |
| வளர்வீத வரி | **Progressive Tax** | Happening or developing gradually or in stages |
| குறைவீத வரி | **Regressive Tax** | Taking a proportionally greater amount from those on lower incomes. |
| ஒரேவீத வரி | **Proportionate Tax** | (of a variable quantity) having a constant ratio to another quantity. |
| ஏய்ப்பு | **Evasion** | The action of evading something |

## பயிற்சி

B2YUFX

### I சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக

1. இந்தியாவிலுள்ள மூன்று நிலைகளான அரசுகள்

அ) மைய, மாநில மற்றும் உள்ளாட்சி

ஆ) மைய, மாநில மற்றும் கிராம

இ) மைய, நகராட்சி மற்றும் பஞ்சாயத்து

ஈ) ஏதுமில்லை

2. இந்தியாவில் உள்ள வரிகள்

அ) நேர்முக வரிகள்

ஆ) மறைமுக வரிகள்

இ) இரண்டும் (அ) மற்றும் (ஆ)

ஈ) ஏதுமில்லை

3. வளர்ச்சிக் கொள்கையில் அரசாங்கத்தின் பங்கு எது ?

அ) பாதுகாப்பு

ஆ) வெளிநாட்டுக் கொள்கை

இ) பொருளாதாரத்தை கட்டுப்படுத்தல்

ஈ) மேற்கூறிய அனைத்தும்

4. இந்தியாவில் தனி நபர்களின் மேல் விதிக்கப்படுகின்ற பொதுவான மற்றும் மிக முக்கியமான வரி

அ) சேவை வரி ஆ) கலால் வரி

இ) விற்பனை வரி ஈ) மத்திய விற்பனை வரி

5. ஒரு நாடு, ஒரே மாதிரியான வரி என்பதை எந்த வரி உறுதிப்படுத்துகிறது?

அ) மதிப்புக் கூட்டு வரி (VAT)

ஆ) வருமான வரி

இ) பண்டங்கள் மற்றும் பணிகள் வரி

ஈ) விற்பனை வரி

6. இந்தியாவில் வருமான வரிச்சட்டம் முதன் முதலில் ________ ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.

அ) 1860 ஆ) 1870 இ) 1880 ஈ) 1850

7. சொத்து உரிமையிலிருந்து பெறப்பட்ட நன்மைகளுக்கு ________ வரி விதிக்கப்படுகிறது.

அ) வருமான வரி ஆ) சொத்து வரி

இ) நிறுவன வரி ஈ) கலால் வரி

8. கருப்பு பணத்திற்கான காரணங்கள் என கண்டறியப்பட்ட அடையாளம் எவை?

அ) பண்டங்களின் பற்றாக்குறை

ஆ) அதிக வரி விகிதம்

இ) கடத்தல்

ஈ) மேற்கூறிய அனைத்தும்

### II கோடிட்ட இடங்களை நிரப்புக

1. ________ மாநிலங்களின் பொருளாதார வளர்ச்சிக்காக அரசாங்கத்தால் விதிக்கப்படுகிறது.

2. "வரி" என்ற வார்த்தை ________ சொல்லிலிருந்து பெறப்பட்டது.



10th_Economics_TM_Unit_4.indd 346 24-03-2020 12:44:27

3. ______________ வரியில் வரியின் சுமையை மற்றவர்களுக்கு மாற்ற முடியாது.
4. பண்டங்கள் மற்றும் பணிகள் வரி ______________ ஆண்டு முதல் நடைமுறைக்கு வந்தது.
5. வரி நிர்வாகியிடமிருந்து மறைக்கப்பட்ட, கணக்கிடப்படாத பணம் ______________ என்று அழைக்கப்படுகிறது.

### III சரியான கூற்றை தேர்ந்தெடுக்கவும்

1. GST பற்றி கீழ்க்கண்ட கூற்றுகளில் எது சரியானது?
   i) GST 'ஒரு முனைவரி'
   ii) இது மத்திய மற்றும் மாநில அரசாங்கங்களால் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு விதிக்கப்படும் அனைத்து நேரடி வரிகளையும் மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது
   iii) இது ஜூலை 1, 2017 முதல் நாடு முழுவதும் அமுல்படுத்தப்பட்டது.
   iv) இது இந்தியாவில் வரி கட்டமைப்பை ஒன்றிணைக்கும்.
   அ) (i) மற்றும் (ii) சரி
   ஆ) (ii), (iii) மற்றும் (iv) சரி
   இ) (i), (iii) மற்றும் (iv) சரி
   ஈ) மேற்கூறிய அனைத்தும் சரியானவை.

### IV பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| 1. | வருமான வரி | – | மதிப்புக் கூட்டு வரி |
| 2. | ஆயத்தீர்வை | – | ஜூலை 1, 2017 |
| 3. | VAT | – | கடத்துதல் |
| 4. | GST | – | நேர்முக வரி |
| 5. | கருப்பு பணம் | – | மறைமுக வரி |

### V கீழ்க்கண்ட வினாக்களுக்கு குறுகிய விடையளி

1. வரி வரையறுக்க.
2. அரசுக்கு ஏன் வரி செலுத்த வேண்டும்?
3. வரிகளின் வகைகள் யாவை? எடுத்துக்காட்டு தருக.
4. பண்டங்கள் மற்றும் பணிகள் வரி – சிறு குறிப்பு வரைக.
5. வளர்வீத வரி என்றால் என்ன?
6. கருப்பு பணம் என்பதன் பொருள் என்ன?
7. வரி ஏய்ப்பு என்றால் என்ன?
8. வரிக்கும் கட்டணத்திற்கும் உள்ள வேறுபாடுகள் ஏதேனும் இரண்டை பட்டியலிடுக.

### VI கீழ்க்கண்ட வினாக்களுக்கு விரிவான விடையளி

1. சில நேர்முக மற்றும் மறைமுக வரிகளை விளக்குக.
2. GST யின் அமைப்பை எழுதுக.
3. கருப்பு பணம் என்றால் என்ன? அதற்கான காரணங்களை எழுதுக.

### VII செய்முறைகள் மற்றும் செயல்பாடுகள்

1. உள்ளூரில் விதிக்கப்படும் வரிகளைப் பற்றிய விவரங்களை சேகரிக்கவும். (குடிநீர், மின்சாரம் மற்றும் வீட்டுவரிகள் போன்றவைகள்).
2. மாணவர்கள் சில புத்தகங்களை அங்காடிகளில் வாங்கும்படி கூறுதல். ஆசிரியர் மற்றும் மாணவர்கள் அப்புத்தகங்களின் அதிகபட்ச சில்லரை விலையையும், வாங்கும் விலை அல்லது GST பற்றி அறிதல்.

## மேற்கோள் நூல்கள்


1. நிதியியல் பொருளாதாரம் – சங்கரன்
2. பொது நிதியியல் – H.L. பாட்டியா
3. வரிவிதிப்பும் வரிச் சட்டங்களும் – T சிவகுமார்
4. இந்திய பொதுநிதியியல் பிரச்சனைகள் – D.K. ஸ்ரீ வஸ்தவா


## இணையதள வளங்கள்

1. உலக வங்கி அறிக்கை 2018
2. www.GST.in



10th_Economics_TM_Unit_4.indd 347 24-03-2020 12:44:27

# அலகு – 5

# தமிழ்நாட்டில் தொழில்துறை தொகுப்புகள்



## கற்றலின் நோக்கங்கள்

- தமிழ்நாட்டின் தொழில்துறை தொகுப்புகள் முன்னேற்றத்தின் வரலாற்றை அறிந்து கொள்ளுதல்
- தமிழ்நாடு அரசின் கொள்கைகள் மற்றும் தொழில்துறை மேம்பாட்டு முகமைகளை அறிந்துகொள்ளுதல்
- அரசின் கொள்கைகளின் தாக்கத்தைப் புரிந்துகொள்ளுதல்
- தொழில் முனைவோரின் பங்கினைப் பற்றி அறிந்துகொள்ளுதல்

PNF89G

## அறிமுகம்

பொதுவாக மூலப்பொருள்களை எளிதில் பயன்படுத்தக்கூடிய பொருள்களாக மாற்றுவதில் ஈடுபட்டுள்ள எந்த ஒரு மனித நடவடிக்கையையும் நிறைவேற்றுமிடம் **"தொழிற்சாலை"** என்று அழைக்கப்படுகிறது. நுகர்வோருக்கும் மற்ற உற்பத்தியாளர்களுக்கும் தேவைப்படும் பொருள்களை நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்திப் பெருமளவில் உற்பத்திச் செய்வது தொழில்மயமாதல் எனப்படும். தமிழ்நாட்டில் தொழில்மயமாதலின் தன்மை, தொழில் தொகுப்புகளின் முக்கியத்துவம் மற்றும் தமிழ்நாட்டில் தொழில் தொகுப்புகள் எவ்வாறு முன்னேறின என்பதையும் தொழில்களை மேம்படுத்துவதில் அரசு எடுக்கும் முயற்சிகளையும் அதன் பங்கினைப் பற்றியும் இப்பாடப்பகுதியில் நாம் அறிந்து கொள்வோம்.

## 5.1 தொழில்மயமாதலின் முக்கியத்துவம்

தொழிற்சாலைகளின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்ளும் முன் நாம் ஏன் வேளாண்மையின் வளர்ச்சியுடன் அதன் பொருளாதார வருவாய் மற்றும் வேலை வாய்ப்பு குறைகிறது என்பதனைப் புரிந்து கொள்ள வேண்டும். முதலாவதாக உணவுத் தேவையுடன் வருமானத் தேவையும் நிலையானதாக உள்ளது. எனவே, ஒரு நாட்டின் பொருளாதாரம் வளர்ந்து, வருமானம் அதிகரிக்கும் பொழுது நுகர்வோர் வேளாண்மை உற்பத்திப் பொருள்களுக்கு தங்கள் வருமானத்தில் ஒரு சிறு பகுதியை மட்டும் செலவிடுகிறார்கள்.

இரண்டாவதாக, நுகரப்படும் உணவும் பொருளாதார விரிவால் பல மாற்றங்களுக்கு உட்படுகிறது. உணவுப் பொருள்கள் நீண்ட தூரத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டுப் பதப்படுத்தி முத்திரையிடப்படுகிறது. இதன் விளைவாக நுகர்வோர்கள் வாங்கும் விலையைவிட விவசாயிகள் பெறும் விலை குறைவாக உள்ளது.

மூன்றாவதாக, நிலத்தின் இறுதிநிலை உற்பத்தித்திறன் குறைந்து கொண்டே வருவதால் வேளாண் பணிகளுக்கு தொழிலாளர்களை ஈர்த்துக்கொள்வதில் சில வரையறைகளை பின்பற்ற நேரிடுகிறது. பெருமளவிலான மக்கள் தங்கள் வாழ்வாதாரத்திற்கு வேளாண்மையை நம்பியிருப்பதாலும், கூலியை அதிகரிக்க வாய்ப்பில்லாததாலும் வறுமையின் அளவு தொடர்ந்து அதிகரிக்கிறது.

இந்த அனைத்து காரணிகளின் விளைவாக வேளாண்துறையில் இருந்து விலகி, பொருளாதாரமானது உற்பத்தி மற்றும் வேலை வாய்ப்பின் அடிப்படையில் ஒரு தேவையை ஏற்படுத்துகிறது.

### தொழில்மயமாதல் ஒரு பொருளாதார வளர்ச்சிக்கு என்னென்ன நன்மைகளைத் தருகிறது?

முன்னர் கூறியதுபோல் ஒரு பொருளாதாரத்தில் பிற உற்பத்தியாளர்களுக்குத் தேவையான உள்ளீடுகளை உருவாக்குவது அவசியம். வேளாண்



10th_Economics_TM_Unit_5.indd 348 24-03-2020 12:45:01

உற்பத்தித்திறன் அதிகரிக்க உரங்கள் மற்றும் டிராக்டர்கள் போன்ற தொழில்களுக்கு உள்ளீடுகள் தேவைப்படுகிறது.

இரண்டாவதாக, உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோர் பண்டங்கள் ஆகிய இரண்டிற்கும் இடையே ஒரு சந்தை நிலவுகிறது. அதே போல் வங்கி, போக்குவரத்து மற்றும் வர்த்தகம் போன்ற பணிகள் தொழிற்சாலைகளின் உற்பத்தியைச் சார்ந்தே உள்ளது.

மூன்றாவதாக, நவீன உற்பத்தி முறைகளை பயன்படுத்துவதன் மூலம் தொழில்கள் சிறந்த உற்பத்தித்திறனை அளிக்கின்றன. இதனால் உற்பத்தி செய்யப்படும் அனைத்து பண்டங்களின் உற்பத்தி செலவும் குறைகிறது. இதன் காரணமாக மலிவான விலையில் பண்டங்களை வாங்கிட உதவும் மற்றும் அதிகளவு உற்பத்தித் தேவையை உருவாக்கவும் உதவுகிறது.

நான்காவதாக, அத்தகையப் பண்டங்களின் உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் தொழில்மயமாதல் வேளாண்மையில் ஈடுபடும் அதிக உழைப்பாளர் சக்தியை ஈர்க்க உதவுகிறது. எனவே வேலைவாய்ப்பை உருவாக்குவது "தொழில் மயமாதலின்" ஒரு முக்கிய நோக்கமாகும்.

ஐந்தாவதாக, தொழில்மயமாதலுக்கு நன்மை தருவது "தொழில்நுட்ப மாற்றமே" ஆகும். நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதன் மூலம் தொழில்மயமாதலின் முறைகளையும் அதன் வளர்ச்சியையும் அறிந்து கொள்ள முடிகிறது. அவற்றின் விளைவாக உழைப்பாளர்களின் உற்பத்தித்திறன் அதாவது, உழைப்பாளரின் உள்ளீடு அதிகரித்தது. இதனால் தொழிலாளர்கள் அதிக வருமானம் ஈட்ட உதவுகிறது.

ஆறாவதாக, வருமானம் அதிகரிப்பு பண்டங்கள் மற்றும் பணிகளின் தேவைக்கு வழி வகுக்கிறது.

## 5.2 தொழிற்சாலைகளின் வகைகள்

தொழிற்சாலைகளை கீழ்க்கண்ட வகைகளில் வகைப்படுத்தலாம்.

**அ. பயனர்கள்**

வெளியீடுகளை இறுதி நுகர்வோர் பயன்படுத்தினால் அது "நுகர்வோர் பண்டங்கள் துறை" என்றும் வெளியீடுகள் மற்றொரு உற்பத்தியாளரால் பயன்படுத்தப்பட்டால் அது "மூலதன பண்டங்கள் துறை" என்றும் அழைக்கப்படுகிறது. சிமெண்ட் மற்றும் எஃகு போன்ற பிற தொழில்களுக்கு மூலப்பொருள்களை தயாரிக்கும் தொழிற்சாலைகள் உள்ளன. இத்தகைய தொழில்கள் அடிப்படை பண்டங்கள் தொழில்கள் என்று அழைக்கப்படுகின்றன.

**ஆ. பயன்படுத்தப்படும் உள்ளீடுகளின் வகை**

வேளாண் பதப்படுத்துதல், நெசவுத்துறை, ரப்பர் உற்பத்தி, தோல் பொருள்கள் போன்ற மூலப் பொருள்களை பயன்படுத்தும் அடிப்படையில் தொழிற்சாலைகளை வகைப்படுத்துகின்றனர்.

**இ. நிறுவன உரிமையாளர்கள்**

தொழிற்சாலைகளானது தனியாருக்கு சொந்தமானதாகவும், பொது உரிமையாளர் (மத்திய அல்லது மாநில அரசாங்கத்தால்) தனியார் மற்றும் பொதுத்துறை (கூட்டுறவாக) இரண்டிற்கும் சொந்தமானதாகவும் அல்லது கூட்டுறவுக்கு சொந்தமானதாகவும் உள்ளன.

**ஈ) அளவு**

நிறுவனங்கள் அவற்றின் உற்பத்தி, விற்பனை, முதலீடு அல்லது வேலைவாய்ப்பு அவற்றின் அளவின் அடிப்படையில் பெரியதாகவோ, சிறியதாகவோ அல்லது நடுத்தரமாகவோ இருக்கலாம். சிறிய நிறுவனங்களை விட அளவில் சிறியதாக இருக்கும் மிகச்சிறிய நிறுவனங்களும் உள்ளன.

சிறிய நிறுவனங்கள் இரண்டு காரணங்களால் முக்கியமானதாகக் கருதப்படுகிறது, முதலாவதாக, இது பெரிய அளவிலான துறையை விட அதிக வேலைவாய்ப்பை உருவாக்குகிறது என்று நம்பப்படுகிறது. பெரிய நிறுவனங்களானது மிகவும் மேம்படுத்தப்பட்ட மற்றும் தானியங்கி தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதால் அது போதுமான அளவு வேலைவாய்ப்பை உருவாக்குவதில்லை. இரண்டாவதாக, சிறிய அளவிலான துறை குறைந்த எண்ணிக்கையிலான சலுகைப் பெற்றப் பின்னணியில் இருந்து ஏராளமான தொழில் முனைவோரை வெளிப்படுத்துகிறது.

உலகின் பல்வேறு பகுதிகளில் தொழில்மயமாதல் அனுபவங்களின் அடிப்படையில் ஒரு துறையில் நிபுணத்துவம் வாய்ந்த சிறிய நிறுவனங்கள் புவியியல் ரீதியாக குறிப்பிட்ட இடங்களில் குவிந்து உற்பத்தி மற்றும் கற்றலின் மூலம் பெரிய நிறுவனங்களின் திறன் இல்லாவிட்டாலும் அதற்கு ஈடு கொடுக்கும் அளவில் உள்ளதென நம்பப்படுகிறது. இத்தகைய சிறிய நிறுவனங்களின் தொகுப்புகளே "தொழில்துறை தொகுப்புகள்" என்று அழைக்கப்படுகின்றன.

## 5.3 தொழில் தொகுப்புகள் (Industrial Clusters)

தொழில் தொகுப்புகள் என்பது பொதுவான சந்தைகள் தொழில்நுட்பங்கள் மற்றும் திறன்களுக்கான தேவைகளை பகிர்ந்துகொள்ள வரையறுக்கப்பட்ட புவியியல் பகுதியில் உள்ள



10th_Economics_TM_Unit_5.indd 349 24-03-2020 12:45:01

நிறுவனங்களின் தொகுப்புகளாகும். இங்கிலாந்தில் உலோகம் மற்றும் நெசவு தொழிலில் ஈடுபட்ட சிறிய நிறுவனங்களின் செயல்பாடுகளின் தொகுப்பினை புரிந்துகொள்ள 1920களில் புகழ்பெற்ற பொருளாதார அறிஞரான ஆல்ஃபிரட் மார்ஷல் அவர்கள் முயற்சி செய்துகொண்டிருந்த பொழுது தொழில் தொகுப்பு அல்லது மாவட்டங்களின் நன்மைகளை முதன்முதலில் கண்டறிந்தார். 1980களில் இத்தாலியில் சிறிய நிறுவனங்கள் வெற்றி பெற்ற பின்னர்தான் மார்ஷலின் "தொழில்துறை மாவட்டம்" (Industrial District) என்ற கருத்து பிரபலமாக்கப்பட்டது. இந்தியா போன்ற வளர்ந்துவரும் நாடுகளில் கொள்கை வகுப்பாளர்கள் தங்களுடைய நாட்டில் இது போன்ற பல சிறிய நிறுவனங்களின் தொழில் தொகுப்பினை உணர்ந்ததால் அவற்றினை ஊக்குவிக்கத் தொடங்கினர்.

வெற்றிகரமான தொழில் தொகுப்புகளின் முக்கிய பண்புகள் பின்வருமாறு:

- சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் புவியியல் பகுதிகளுக்கு அருகாமையில் இருத்தல்.
- துறை சார்ந்த சிறப்பு கவனம்.
- நிறுவனங்களுக்கு இடையே நெருக்கமான அல்லது பரஸ்பர முறையில் இணைந்திருத்தல்.
- புத்தாக்கத்தினால் நிறுவனங்களுக்கு இடையேயான போட்டி.
- நம்பிக்கையை எளிதாக்கும் ஒரு சமூக கலாச்சார அடையாளம்
- பல்வேறு திறமையான தொழிலாளர்கள்
- சுய உதவி குழுக்கள் செயல்படுதல்
- வட்டார மற்றும் நகராட்சிகளுக்கு அரசின் ஆதரவு.

போன்றவற்றால் நிறுவனங்கள் ஒருவருக்கு ஒருவர் பரஸ்பரமாக ஒத்துழைத்து போட்டியிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதே வேளையில் பரஸ்பர ஒத்துழைப்பின் மூலம் அவர்கள் தங்கள் திறனை விரிவுபடுத்த முடியும். போட்டியின் மூலம் அவர்கள் மிகவும் திறமையானவர்களாக மாற கட்டாயப்படுத்தப்படுகிறார்கள்.

### தொழில்தொகுப்பு எவ்வாறு தோன்றுகிறது?

தொழில் தொகுப்பு தோன்றுவதற்கு பல்வேறு காரணிகள் உள்ளன. ஒரு சில தொழில் தொகுப்புகள் தோன்றிய இடங்களில் கைவினைஞர்கள் குடியேறி நெடுங்காலமாக அங்கு தங்கி இருந்ததாகவும் வரலாறு கூறுகிறது. கைத்தறி நெசவுத்தொழில் வளர்ச்சி இதற்கு ஒரு சிறந்த உதாரணமாகும். சில துறைகளில், ஒரு பெரிய நிறுவனம் நிறுவப்படும்போது, அதன் உள்ளீடு மற்றும் பணிகளின் தேவைகளை கவனித்துக் கொள்வதற்காக தொழில் தொகுப்பு நிறுவனங்கள் தோன்றகூடும். சில நேரங்களில், ஒரு வட்டாரத்திலிருந்து மூலப்பொருள்களைப் பயன்படுத்தி உற்பத்தியை ஊக்குவிக்க அரசாங்கங்கள் முடிவு செய்யலாம், இது தொழில் தொகுப்பு தோன்றுவதற்கு வழிவகுக்கும்.

## 5.4 தமிழ்நாட்டின் தொழில்மயமாதலின் முன்னேற்றம் பற்றிய வரலாறு

தமிழ்நாட்டில் காலனித்துவ முன்காலத்தில் நெசவு, கப்பல் கட்டுமானம், இரும்பு மற்றும் எஃகு தயாரித்தல், மட்பாண்டங்கள் தயாரித்தல் போன்ற தொழில்துறை நடவடிக்கைகளில் ஈடுபட்டதற்கான ஏராளமான சான்றுகள் உள்ளன. தமிழ்நாடு பரந்துவிரிந்த கடற்கரையைக் கொண்டுள்ளதால், பல நூற்றாண்டுகளாக தென் கிழக்கு மற்றும் மேற்கு ஆசியாவுடன் வர்த்தகத்தில் ஈடுபட்டது. தொழிற்புரட்சிக்குப் பிறகு இங்கிலாந்தில் இருந்து உற்பத்தி செய்யப்பட்ட இயந்திரங்களின் இறக்குமதியின் காரணமாகப் போட்டி நிலவி கைத்தறி நெசவுத்தொழில் வீழ்ச்சிக்கு காலனித்துவ கொள்கைகளும் பங்களித்தன. இருந்தபோதிலும் சில தொழில்கள் காலனித்துவக் காலத்தில் வளர்ந்தன.

### காலனித்துவ காலத்தில் தொழில்மயமாதல்

காலனித்துவ காலத்தில் தொழில்மயமாதலில் இரண்டு காரணிகள் பெரும்பங்கு வகித்தது. முதலாவதாக, மேற்கு மற்றும் தெற்கு தமிழ்நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்ட பருத்தி சாகுபடி அதிகளவு நெசவுத்தொழில் தோன்றுவதற்குக் காரணமாக இருந்தது.

இரண்டாவதாக, இந்த காலகட்டத்தில் வாணிபத்தின் வளர்ச்சியானது சென்னை மற்றும் தூத்துக்குடி துறைமுக வட்டாரங்களின் அருகாமையில் தொழிற்சாலைகள் உருவாக காரணமாகவும் இருந்தது. மேலும், காலனித்துவ காலத்தில் சிவகாசியில் தீப்பெட்டி தொழிற்சாலைகள் நிறுவப்பட்டு பின்னர் பட்டாசு உற்பத்தி மற்றும் அச்சுத் தொழிலுக்கு முக்கிய மையமாக மாறியது. துறைமுகம் சார்ந்த தொழில்களும் இதே காலகட்டத்தில் இப்பகுதியின் வளர்ச்சிக்குக் காரணமாகவும் இருந்தது. தோல் உற்பத்தித் தொழிலானது திண்டுக்கல், வேலூர், ஆம்பூர் ஆகிய பகுதியில் நடைபெற்றது.

தமிழ்நாட்டின் மேற்குப் பகுதியில் நெசவுத் தொழில் நுட்பத்தின் வளர்ச்சியானது, இயந்திரங்களின் தேவையையும் அதற்கான தொழிற்சாலைகளையும் நிறுவ காரணமாகவும் இருந்தது. இந்த நெசவு இயந்திரத் தொழிற்சாலைகளுக்கான இயந்திர



10th_Economics_TM_Unit_5.indd 350 24-03-2020 12:45:01

உதிரிபாகங்கள், பழுது பார்த்தல் மற்றும் உற்பத்தி செய்வதற்கான சிறிய அளவிலான தொழிற்சாலைகள் அதிக அளவில் வளர்ச்சி அடைந்தன. 1930களில் தமிழகத்தின் மேற்குப் பகுதியில் நீர் மின் சக்தியில் இருந்து மின்சார உற்பத்தி மற்றொரு முக்கிய தொழில் வளர்ச்சி ஆகும். நிலத்தடிநீரை உறிஞ்சுவதற்கு பயன்படுத்தப்படும் எண்ணெய் இயந்திரங்களுக்கு அனுமதிக்கப்பட்ட மின்சாரம் கிடைத்தமையால், வேளாண்மைத் தொழில் விரிவடைந்ததுடன் எண்ணெய் இயந்திரங்களின் தேவையும் அதிகரித்தது. இதன் காரணமாக, இதனை சார்ந்த எண்ணெய் இயந்திர உதிரிபாகங்கள் பழுதுபார்க்கும் தொழிற்சாலைகள் அதிகளவில் உருவாயின. இதனால் உலோகத் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டு வேளாண்மை சார்ந்த இயந்திரங்கள் தயாரிக்கப்பட்டன.

### சுதந்திரத்திற்குப் பின் 1990களின் முற்பகுதியில்

தொழில்வளர்ச்சியானது சுதந்திரத்திற்குப் பிறகு நடுவண் மற்றும் மாநில அரசுகளால் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் பல பெரிய நிறுவனங்கள் நிறுவப்பட்டன. சென்னையில் ரயில் பெட்டிகள் தயாரிக்கப்படும் தொழிற்சாலையும் திருச்சிராப்பள்ளியில் கொதிகலன் மற்றும் விசையாழிகள்தயாரிப்பதற்காகபாரதகனரக மின்சாதன நிறுவனத்தை (Bharat Heavy Electricals Limited (BHEL) மத்திய அரசு நிறுவியது. BHEL நிறுவனம் அதனுடைய உள்ளீட்டுப் பொருள்கள், தேவைகள் தொடர்பாக பல சிறிய நிறுவனங்களின் தொழில் தொகுப்புகளின் தோற்றத்திற்கு வழிவகை செய்தது. சென்னை புறநகரில் உள்ள ஆவடியில் போர் தளவாடங்கள் தயாரிக்க கனரக வாகனத் தொழிற்சாலை அமைக்கப்பட்டது. ஸ்டாண்டர்ட் மோட்டார்ஸ் நிறுவனமும் சென்னையில் மகிழுந்துகளை உற்பத்திச் செய்யத் தொடங்கியது. அசோக் மோட்டார்ஸ் (பின்னர் அசோக் லேலண்ட்) ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் இணைந்து சென்னை வட்டாரத்தில் வாகனத்தொழில்துறை தொகுப்புகள் வளர்ச்சிக்கு உதவியது. மேலும் இது வாகன உதிரி பாகங்களின் நகரமாக மாறியது. 1950களில் இப்பகுதியில் உள்ள பெரிய நிறுவனங்களுக்கு வாகன கூறுகளை வழங்குவதற்கு சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கு உதவியாக ஆவடியில் தொழில் தோட்டங்கள் நிறுவப்பட்டது. மாநிலத்தில் அதிக நீர் மின்சக்தி திட்டங்கள் மூலம் மின்மயமாதலை பரவலாக அதிகரிக்க வலியுறுத்தப்பட்டது. இந்த அனைத்து நடவடிக்கைகளிலும் அரசு பெரும் பங்கு வகித்தது. 1973ஆம் ஆண்டில் எஃகு உற்பத்தி செய்வதற்காக சேலத்தில் இரும்பு எஃகு ஆலை அமைக்கப்பட்டது.

1970 மற்றும் 1980களில் கோயம்புத்தூர் பகுதியில் விசைத்தறி நெசவுத் தொழில் தொகுப்புகள் அதேபோல் திருப்பூரில் பின்னலாடைத் தொழில் தொகுப்புகள் விரிவாக்கம் மற்றும் கரூரில் வீட்டு அலங்காரப் பொருள்கள் தொழில் தொகுப்புகள் இக்காலகட்டத்தில் உருவாகியது. மாநில அரசின் மூலம் பல்வேறு பகுதிகளில் தொழில்துறை தோட்டங்கள் அமைக்கப்பட்டு அதன் மூலம் சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் ஊக்கப்படுத்தப்பட்டது. மாநிலத்தில் பின்தங்கிய வட்டாரங்களில் தொழில்துறைகளை மேம்படுத்துவதற்கு இத்தகைய கொள்கை முயற்சிகளை பயன்படுத்தி வெற்றி பெறச் செய்வதற்கு ஒரு உதாரணமாக தமிழகத்தில் ஓசூரில் விரிவாக்கப்பட்ட தொழில் தோட்டங்களை சான்றாகக் கூறலாம்.

### தமிழ்நாட்டில் தொழில்மயமாதல் – தாராளமயமாதல் கட்டம்

1990களில் பொருளாதார சீர்திருத்தங்களுக்கு பிந்தைய காலகட்டம் தொழில்மயமாதலின் இறுதி கட்டம் ஆகும். இந்த சீர்திருத்தங்கள் மாநில அரசாங்கங்கள் வளங்களை திரட்டுவதற்கு பொறுப்பேற்கச் செய்தன. மேலும் அவை தொழில்மயமாதலுக்கு தனியார் முதலீடுகளை ஈர்ப்பதற்காக ஒருவருக்கொருவர் போட்டியிட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. மலிவான நிலம், வரிச்சலுகைகள் மற்றும் மானியங்கள் போன்ற சலுகைகள், முதலீட்டாளர்களை கவர்ந்திழுத்தன. வர்த்தக தாராளமயமாக்கல் மற்றும் நாணய மதிப்பிறக்கம் ஆகியவை ஏற்றுமதி சந்தைகளைத் திறக்க உதவியன. இது இரண்டு பெரிய முன்னேற்றங்களுக்கு வழிவகுத்தது.

தமிழகத்தில் மிக நீண்ட காலமாக இருந்த முக்கிய தொழில்கள் சர்க்கரை, உரங்கள், சிமெண்ட், விவசாயக் கருவிகள், இரும்பு மற்றும் எஃகு ரசாயனங்கள், மின்மாற்றிகள் மற்றும் காகிதங்கள் போன்றவைகளாகும்.

இந்தக் காரணிகளின் விளைவாக தற்போது இந்தியாவின் அனைத்து மாநிலங்களையும்விட தமிழ்நாடு அதிக தொழிற்சாலைகளைக் கொண்டுள்ளது. மேலும் உற்பத்தித் துறையில் பணிபுரியும் தொழிலாளர்களின் மிகப் பெரிய பங்கினையும் பெற்றுள்ளது. முக்கியமாக மகாராஷ்டிரா மற்றும் குஜராத் போன்ற முன்னேறிய மாநிலங்களுடன் ஒப்பிடும்போது இது அதிக உழைப்பு மிகுந்ததாகும். வாகன தொழில்கள், தானியங்கி கூறுகள், இலகுரக மற்றும் கனரக பொறியியல், இயந்திரங்கள், பருத்தி, ஜவுளி, ரப்பர், உணவுப் பொருள்கள், போக்குவரத்து உபகரணங்கள், இரசாயனங்கள் மற்றும் தோல் பொருள்கள் போன்றவைகள் முக்கியத்



10th_Economics_TM_Unit_5.indd 351 24-03-2020 12:45:01

www.tntextbooks.in

தொழில்களாகும். மற்ற மாநிலங்களைப் போல் அல்லாமல் தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் (13 மாவட்டங்களில் 27 தொழில் தொகுப்புகள்) தொழில்துறைகள் பரவியிருக்கின்றன. மேலும் அவற்றுள் பல தொழில்கள் ஏற்றுமதி சார்ந்தவையாகும். மாநிலத்தின் சாலைகள், ரயில் போக்குவரத்து, வான்வழிப் போக்குவரத்து மற்றும் முக்கிய துறைமுகங்கள் அனைத்தும் போக்குவரத்து இணைப்பினால் நன்கு வளர்ச்சி அடைந்து காணப்படுகிறது.

## 5.5 தமிழ்நாட்டின் முக்கிய தொழில்துறை தொகுப்புகள் மற்றும் அவற்றின் சிறப்புகள்

### தானியங்கி தொகுப்புகள்

சென்னை பெரிய அளவிலான வாகனத் தொழில்துறை தளமாக இருப்பதால் "ஆசியாவின் டெட்ராய்ட்" என்று அழைக்கப்படுகிறது. சென்னையானது மிக அதிகமான தானியங்கி தொழிலை ஒருங்கிணைக்கும் மற்றும் உதிரிபாகங்கள் செய்யும் தலைமை இடமாகத் திகழ்கிறது. சில உள்நாட்டு நிறுவனங்களான TVS, TI சைக்கிளஸ், அசோக் லேலண்ட் மற்றும் ஸ்டாண்டர்ட் மோட்டார்ஸ் ஆகியன இதற்கு முன்னர் இருந்தன. பொருளாதார சீர்த்திருத்தத்திற்கு பின்னர் ஹூன்டாய், ஃபோர்டு, டைம்லர்பென்ஸ் மற்றும் ரெனால்ட் – நிசான் போன்ற பல பன்னாட்டு நிறுவனங்கள் (Multi National Companies – MNC) இப்பகுதியில் தொழிற்சாலைகளைத் திறந்துள்ளன. எனவே வெளிநாடுகளிலிருந்து பல உதிரி பாகங்கள் உற்பத்தி செய்யும் உற்பத்தியாளரின் கவனங்கள் இங்கே ஈர்க்கப்பட்டுள்ளது. பல உள்நாட்டு நிறுவனங்களும் சேர்ந்து அனைத்து நிறுவனங்களுக்கான உதிரி பாகங்களின் உற்பத்தித் தேவையைப் பூர்த்தி செய்கின்றன.

ஒசூர் மற்றொரு தானியங்கி தொகுப்பாகும். இங்கு TVS மற்றும் அசோக் லேலண்ட் போன்ற நிறுவனங்கள் தங்கள் தொழிற்சாலைகளை இயக்கி வருகின்றன. கோயம்புத்தூர் பகுதி ஒரு தானியங்கிகளின் தொகுப்பாக வளர்ந்து வருகிறது.

### வாகன மற்றும் பேருந்து கட்டுமானத் தொழில் தொகுப்புகள்

தமிழகத்தின் மேற்கு பகுதியில் உள்ள நாமக்கல் மற்றும் திருச்செங்கோடு பகுதிகள் சுமை தூக்கும் வாகன முழுபாக கட்டமைப்பிற்கான தொழிற்சாலைகளுக்குப் பெயர் பெற்ற இடங்களாகும். 50க்கும் மேற்பட்ட அலகுகளைக் கொண்டு கரூர் மற்றொரு முக்கிய மையமாகத் திகழ்கிறது. பல தொழில் முனைவோர்கள் பெரிய அளவிலான வாகனக் கட்டுமானத் துறையில் பணி புரிந்து தற்போது தங்கள் சொந்த அலகுகளை அமைக்க முன்வந்துள்ளனர்.

49VL2Z

### நெசவுத் தொழில் தொகுப்புகள்

இந்தியாவில் மிகப்பெரிய நெசவுத் தொழில் துறைகளுக்கு தமிழ்நாடு தாயகமாக விளங்குகிறது. காலனித்துவ காலத்திலிருந்து பருத்தி நெசவுத் தொழில் வளர்ச்சியின் காரணமாக கோயம்புத்தூர் "தென்னிந்தியாவின் மான்செஸ்டர்" என அழைக்கப்படுகிறது. தற்போது நெசவு ஆலைகளில் பெரும்பாலானவை கோயம்புத்தூரைச் சுற்றியுள்ளன. நமது நாட்டின் மிகப் பெரிய பருத்தி நெசவு தொழில் உற்பத்தியில் தமிழகம் பெரும்பங்கு வகிக்கிறது.



**நெசவுத் தொழிற்சாலை**


ஈரோடு மற்றும் சேலம் பகுதியிலும் அதிகளவிலான மின்தறி அலகுகள் இருப்பதால் மின்விசைத்தறித் தொழில் மிகவும் பரவலாக உள்ளது.

திருப்பூரானது பின்னலாடை தயாரிக்கும் ஏராளமான நிறுவனங்களின் தொகுப்புகளுக்கு புகழ்பெற்ற இடமாகும். இது நாட்டின் பருத்தி பின்னலாடை ஏற்றுமதியில் கிட்டத்தட்ட 80% பங்கினைக் கொண்டுள்ளது. 1980களின் பிற்பகுதியிலிருந்து மூன்று இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கியுள்ளது. இது உள்நாட்டுச் சந்தையில் ஒரு மிகப்பெரிய உற்பத்தியாளராகத் திகழ்கிறது. இந்த மிகப்பெரிய வெற்றியின் காரணமாக உலகச் சந்தையில் உலகின் தெற்கு அரைக் கோளத்தில் ஒரு சக்தி வாய்ந்த தொகுப்பாக இந்த இடம் உள்ளது. ஆரம்பத்தில் உள்ளூர் தொழில்முனைவோரால் பெரும்பாலான நிறுவனங்கள் தொடங்கப்பட்டன. தற்போது இந்தியாவின் மிகப்பெரிய முன்னணி பின்னலாடை ஏற்றுமதியாளர்கள் இங்கு தங்கள் தொழிற்சாலைகளை அமைத்துள்ளனர்.

> தெற்கு அரைக்கோளத்தில் உள்ள நாடுகள் உலகளாவிய தெற்கு நாடுகள் (Global South) என்று அழைக்கப்படுகின்றன.



10th_Economics_TM_Unit_5.indd 352 24-03-2020 12:45:01




வாகனக் கட்டுமானத் தொழிலமைப்பைத் தவிர மேசைத்துணி, திரைச்சீலைகள், படுக்கை விரிப்புகள் மற்றும் துண்டுகள் போன்ற வீட்டு அலங்கார பொருள்களை ஏற்றுமதி செய்யும் முக்கிய மையமாக கரூர் உள்ளது. மேலும் பவானி மற்றும் குமாரபாளையம் உள்நாட்டு மற்றும் உலகளாவிய சந்தைகளுக்கு தரை விரிப்புகளை உற்பத்திச் செய்யும் முக்கிய மையங்களாகத் திகழ்கின்றன.

இத்தகைய நவீன தொகுப்புகளைத் தவிர பட்டு மற்றும் கைத்தறிப் புடவைகளுக்கு பிரபலமான மதுரை மற்றும் காஞ்சிபுரம் போன்ற பாரம்பரிய கைவினைத் தொகுப்புகளும் உள்ளன.

**தோல் மற்றும் தோல் பொருள்களின் தொகுப்பு**

இந்தியாவின் 60% தோல் பதனிடும் உற்பத்தித்திறனையும் 38% தோல் காலணிகள் மற்றும் தோல் உதிரி பாகங்கள் அதனைச் சார்ந்த பொருள்களின் உற்பத்தியையும் தமிழ்நாடு பெற்றிருக்கிறது. வேலூர் அதனைச் சுற்றியுள்ள ராணிப்பேட்டை, ஆம்பூர், வாணியம்பாடி ஆகிய நகரங்கள் நூற்றுக்கணக்கான தோல் உற்பத்தி மற்றும் பதனிடும் வசதியைக் கொண்டுள்ளது. தோல் பொருள்கள் ஏற்றுமதியில் இந்தியாவிலேயே முதன்மை மாவட்டமாக வேலூர் திகழ்கிறது. சென்னையிலும் பல தோல் சார்ந்த உற்பத்தி மற்றும் ஏற்றுமதி தொழிற்சாலை நிறுவனங்கள் உள்ளன. திண்டுக்கல் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் தோல் பதனிடுதல் மற்றும் உற்பத்தித் தொழிற்சாலைகளின் தொகுப்பு காணப்படுகிறது. தோல் உற்பத்தித் தொழிற்சாலையும் வேலைவாய்ப்பை அளிப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

**பட்டாசு, தீப்பெட்டி மற்றும் அச்சிடுதல் தொகுப்பு**

தீப்பெட்டி உற்பத்தித் தொழிற்சாலையில் புகழ்பெற்று விளங்கும் சிவகாசி பகுதியானது தற்பொழுது பட்டாசு மற்றும் அச்சிடும் தொழிலில் நாட்டின் சிறந்த நகரமாகத் திகழ்கிறது. இந்தியா 90% பட்டாசு உற்பத்தி 80% பாதுகாப்பான தீப்பெட்டி உற்பத்தி மற்றும் 60% அச்சுப்பணி தேர்வுகளுக்கு முக்கிய பங்காக இதனையே சார்ந்துள்ளது. அச்சிடும் தொழிற்சாலை ஒவ்வொன்றும் அவற்றின் பணிகளில் தனித்துவம் பெற்று மேலோங்கி விளங்குகிறது. காலனித்துவ காலத்தில்

தொடங்கப்பட்ட இத்தொழிலானது தற்பொழுது அதிகளவில் வேலை வாய்ப்பை அளிக்கிறது.



பட்டாசு தொழிற்சாலை

**மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப தொகுப்புகள்**

1990களில் ஏற்பட்ட பொருளாதார சீர்திருத்தத்திற்குப் பின் வந்த நோக்கியா, ஃபாக்ஸ்கான், மோட்டோரோலா, சோனி எரிக்ஸன், சாம்சங் மற்றும் டெல் போன்ற வன்பொருள் மற்றும் மின்னணு பொருள் தயாரிப்பு நிறுவனங்கள் கைபேசி கருவிகள், சுழல் பலகைகள், நுகர்வோர் மின் சாதனப் பொருள் தயாரிப்பில் ஈடுபட ஆரம்பித்தன. இந்நிறுவனங்கள் சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகளில் நிறுவனங்களை நிறுவின.

**குறிப்பிட்ட சில தகவல்தொழில்நுட்ப பொருளாதார மண்டலங்கள்**

வளர்ச்சியை மேலும் அதிகப்படுத்தும் பொருட்டு சென்னை வட்டார பகுதிகளைத் தவிர, இரண்டடுக்கு (Tier–II) நகரங்களான கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, ஓசூர் மற்றும் சேலம் ஆகியவை தகவல் தொழிற்நுட்ப முதலீட்டிற்கான இடங்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இதனை எளிதாக்குவதற்காக ELCOT நிறுவனம் பின்வரும், எட்டு இடங்களில் ELCOSEZs (IT குறிப்பிட்ட பொருளாதார சிறப்பு மண்டலங்கள்) நிறுவியுள்ளது.

- சென்னை – சோழிங்கநல்லூர்
- கோயம்புத்தூர் – விளாங்குறிச்சி
- மதுரை – இலந்தை குளம்
- மதுரை – வடபாலஞ்சி, கிண்ணிமங்கலம்
- திருச்சிராப்பள்ளி – நாவல்பட்டு

மாநிலத்தின் அலகுகளை அமைக்க விரும்பும் நிறுவனங்கலுக்கு ELCOSEZs மூலம் வசதிகள் வழங்கப்படுகிறது. புதிய இடங்களில் ELCOSEZs அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள், தேவை மற்றும் நம்பகத் தன்மையின் அடிப்படையில் வழங்கப்படுகிறது. (வரைபட தகவல் தொழில்நுட்பக் கொள்கை – 2018–19)

- திருநெல்வேலி – கங்கைகொண்டான்
- சேலம் – ஜாகீர் அம்மாபாளையம்
- ஓசூர் – விஸ்வநாதபுரம்

## 5.6 தமிழ்நாட்டில் தொழிற்சாலை விரிவாக்கத்திற்கு உதவும் கொள்கைக் காரணிகள்

கொள்கைக் காரணிகளை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம்.

**கல்வி**

திறமை வாய்ந்த மனித வளங்கள் தொழிற்சாலைக்குத் தேவைப்படுகிறது. நமது மாநிலமானது தொடக்கக் கல்விக்காக அதிகமான கவனம் செலுத்துவது மட்டுமல்லாமல், படித்தவர்களின், எண்ணிக்கையை அதிகரிப்பது மட்டுமல்லாமல் அடிப்படை எண் கணித திறன்களை வளர்ப்பதிலும் கவனம் செலுத்துகிறது. இது நாட்டில் மிக அதிகப்படியான தொழில்நுட்ப வல்லுநர்களைத் தருவதிலும் பெயர் பெற்ற இடமாகும். இந்தியாவில் அதிக அளவில் பொறியியல் கல்லூரிகள், பல்தொழில்நுட்ப கல்லூரிகள் மற்றும் தொழில் பயிற்சி மையங்கள் போன்றவைகளின் புகலிடமாக தமிழகம் உள்ளது.

**உள்கட்டமைப்பு**

மாநிலங்களில் உள்ள சிறிய நகரங்கள் மற்றும் கிராமங்களில் தொழில்மயமாதல் பரவுதலுக்கு மின்சார விநியோகம் சிறப்பான பங்கினை வகிக்கிறது. மின்சார விநியோகம் மட்டுமல்லாது, தமிழ்நாடானது மிகச் சிறந்த போக்குவரத்து உள்கட்டமைப்புக்குப் பெயர் போனது ஆகும். குறிப்பாக கிராமப்புறங்கள் சிறு சாலை வசதிகளால் அருகிலுள்ள சிறு நகரங்களுடனும், பெரு நகரங்களுடனும் சிறப்பான முறையில் இணைக்கப்பட்டுள்ளது. பொது மற்றும் தனியார் போக்குவரத்துத் துறைகள் ஒருங்கிணைந்து கிராமப்புற மற்றும் நகர்புறங்களின் இணைப்பை எளிதாக்கியுள்ளது, சிறு உற்பத்தியாளர்களை சந்தைகளோடு இணைத்து அவர்களுக்கு நற்பலனைக் கொடுக்கிறது.

**தொழில்துறை ஊக்குவிப்பு**

கல்வி, போக்குவரத்து மற்றும் ஆற்றல் வாய்ந்த உள்கட்டமைப்புகளுக்கு முதலீடு செய்வது மட்டுமல்லாமல், சிறந்த தொழிற்பிரிவுக்கான தொழிற்சாலைவிரிவாக்கங்களைசிறந்தபகுதிகளில் ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பொருளாதார சீர்திருத்தத்திற்கு பின் குறிப்பிட்ட காரணிகளான தானியங்கி, தானியங்கிக் கருவிகள், உயிரி தொழில்நுட்பம், செய்தி மற்றும்



10th_Economics_TM_Unit_5.indd 354 24-03-2020 12:45:03

www.tntextbooks.in

செய்தித் தொடர்புக்கான பிரிவுகள் ஆகியவை சிறந்த முறையில் நடைமுறைபடுத்தப்பட்டுள்ளது. எனவே பெரிய, சிறிய மற்றும் நடுத்தர பிரிவில் மேம்படுத்த உதவும் உள்கட்டமைப்புகளை நாடு முழுவதும் பல இடங்களில் தொழில்துறை மேம்பாட்டு முகமைகளை அரசு நிறுவியுள்ளது.

### தமிழகத்தில் தொழில் விரிவாக்கத்திற்கு திறவுகோலாக செயல்படும் முகமைகள்

**தமிழ்நாடு அரசு தொழில் முன்னேற்றக் கழகம்** (SIPCOT – State Industries Promotion Corporation of Tamil Nadu) 1971இல் தொழில் முன்னேற்றத்திற்காக நிறுவப்பட்டு. தொழிற் தோட்டங்களை அமைத்துள்ளது.



**தமிழ்நாடு அரசு தொழில் முன்னேற்றக் கழகம்**

**தமிழ்நாடு மாநில சிறுதொழில் வளர்ச்சிக் கழகம்** (TANSIDCO – Tamil Nadu Small Industries Development Corporation) 1970இல் தமிழக அரசால் நம் மாநிலத்தில் சிறுதொழில் முன்னேற்றத்திற்காக நிறுவப்பட்ட ஒரு அரசு நிறுவனமாகும். சிறு தொழிற்பிரிவின் புதிய நிறுவனங்களுக்கு மானியம் மற்றும் தொழிற் நுட்ப உதவிகளையும் இந்த நிறுவனம் வழங்குகிறது.

**தமிழ்நாடு தொழில்துறை மேம்பாட்டு கழகம்** (TIDCO – Tamil Nadu Industrial Development Corporation) நம் மாநிலத்தில் தொழில் தோட்டங்களை நிறுவுவதற்கும் தொழிற்சாலைகளை மேம்படுத்துவதற்கும் உதவும் மற்றுமொரு அரசு நிறுவனமாகும்.

**தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் – வரையறுக்கப்பட்டது** (TIIC – Tamil Nadu Industrial Investment Corporation Ltd) புதிய தொழில் பிரிவுகளை நிறுவுவதற்கும் தற்போதுள்ள தொழில் பிரிவுகளை பெருக்குவதற்கும் குறைந்த அளவிலான நிதி உதவியைச் செய்கிறது.

**தமிழ்நாடு சிறுதொழில் கழகம் – வரையறுக்கப்பட்டது** (TANSI – Tamil Nadu Small Industries Corporation Ltd) சிறுநிறுவனங்களுக்காக நிறுவப்பட்ட முதல் தொழில்துறை நிறுவனமாகும்.

### சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் (Special Economic Zones–SEZs)

நாட்டில் ஏற்றுமதிக்கு இடையூறு இல்லாத சூழலை கருத்தில் கொண்டு சிறப்புப் பொருளாதார மண்டலங்களை அமைப்பதற்கான ஒரு கொள்கை ஏப்ரல் 2000ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.

**அதன்படி, பின்வரும் இடங்களில் ஏற்றுமதி செயலாக்க மண்டலங்களை அரசு அமைத்துள்ளது.**

| | | |
|---|---|---|
| நாங்குநேரி SEZ | – | பல் நோக்கு உற்பத்தி SEZ திருநெல்வேலி |
| எண்ணூர் SEZ | – | அனல் மின் திட்டம், வயலூர் |
| கோயம்புத்தூர் SEZ | – | தகவல் தொழிற்நுட்ப பூங்காக்கள் |
| ஒசூர் SEZ | – | தானியங்கி பொறியியல், மின்னணுவியல், விண்வெளி மற்றும் பாதுகாப்பு |
| பெரம்பலூர் SEZ | – | பல்நோக்கு உற்பத்தி SEZ |
| தானியங்கி நகரம் (Auto city) SEZ | – | தானியங்கிகள்/ தானியங்கி உதிரி பாகங்கள், திருவள்ளூர் |
| இந்தியா–சிங்கப்பூர் SEZ | – | IT/ITEs, மின்னணு வன்பொருள், தளவாடங்கள் மற்றும் கிடங்குகள் – திருவள்ளூர் மாவட்டங்கள் |
| உயிரி–மருந்துகள் SEZ | – | மருத்துவ ஆராய்ச்சி அமைப்பு, விஷக்கட்டுப்பாட்டு மையம், மைய மீள் உருவாக்க மருத்துவம், மருத்துவ ஆராய்ச்சி |

### மெட்ராஸ் ஏற்றுமதி செயலாக்க மையம் (Madras Export Processing Zone – MEPZ)

மெட்ராஸ் ஏற்றுமதி செயலாக்க மையம் சென்னையில் ஒரு சிறப்புப் பொருளாதார மையமாகும். மத்திய அரசு அமைத்த நாட்டின் ஏழு ஏற்றுமதி செயலாக்க மண்டலங்களில் இதுவும் ஒன்றாகும். இது அந்நிய நேரடி முதலீட்டினை ஊக்குவிப்பதற்கும் அந்நிய செலாவணியை ஈட்டுவதற்கும், வட்டாரப் பகுதிகளில் அதிக வேலை வாய்ப்புக்களை உருவாக்குவதற்கும் 1984ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. MEPZ தலைமையகம் சென்னையை அடுத்த தாம்பரம் GST சாலையில் அமைந்துள்ளது.



10th_Economics_TM_Unit_5.indd 355 24-03-2020 12:45:03

### தொழில்மயமாதலின் பிரச்சனைகள்

தமிழகம், நமது நாட்டின் சிறந்த தொழில்மயமான மாநிலமாக இருந்த போதிலும் சில பிரச்சனைகளை சந்திக்க வேண்டியுள்ளது. வேதிப்பொருள்கள், நெசவுத் துறை மற்றும் தோல் தொகுப்புகள் மூலம் வரும் திரவக் கழிவுகள் நமது சுகாதாரத்தை கெடுக்கிறது. இந்த திரவக் கழிவுகள் சேரும் நீர் நிலைகளை மட்டுமல்லாமல் அதையொட்டியுள்ள விவசாய நிறுவனங்களையும் மாசுபடுத்துகிறது. உலகளாவிய அளவில் போட்டிப் போடுவதற்காக முதன்மையான தொழில் நுட்பங்களை பயன்படுத்துவதால் நிலையான வேலை வாய்ப்புக்கான குறை ஏற்படுகிறது. பணியாளர்களின் தரமானது, இன்றைய காலகட்டத்தில் தற்காலிகமாக பணியமர்த்தப் படுவதால் குறைகிறது.

**ஸ்டார்ட் அப் இந்தியா திட்டம் ( ஜனவரி 16, 2016)**

ஸ்டார்ட் அப் இந்தியா திட்டம் என்பது இந்திய அரசின் ஒரு முன் முயற்சித் திட்டமாகும். இதன் முதன்மையான நோக்கம் தொழில் தொடங்குவதற்கான தொடக்க முயற்சிகளை ஏற்படுத்துதல், வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் மற்றும் வளங்களை உருவாக்குதல் ஆகும்.

**ஸ்டாண்ட் அப் இந்தியா திட்டம் (ஏப்ரல் 5, 2016)**

ஸ்டாண்ட் அப் இந்தியா திட்டம் என்பது பச்சைப் புல்வெளி(Greenfield Enterprise) நிறுவனம் அமைப்பதற்காக குறைந்தபட்சம் 10 லட்சத்துக்கும், 1 கோடிக்கும் இடையில், ஒரு பட்டியல் சாதியினர் (SC) அல்லது பட்டியல் பழங்குடியினர் (ST) மற்றும் ஒரு வங்கிக் கிளைக்கு ஒரு பெண் கடன் பெறுபவர் என கடன் வழங்கி வங்கிக்கடன்களை எளிதாக்குவதே இத்திட்டமாகும்.

## 5.7 தொழில் முனைவோர்

ஒரு "தொழில் முனைவோர்" என்பவர் புதிய சிந்தனைகளுக்கும், வணிக செயல்முறைகளுக்கும் புத்தாக்கம் புனைபவர் ஆவார். இவர்களிடம் சிறந்த நிர்வாகத் திறன்கள், வலிமையான குழுவை அமைக்கும் திறமைகளும் மற்றும் தேவையான தலைமைக்கான பண்புகளும் இருக்கும்.

**தொழில் முனைவு**

தொழில் முனைவோர் தங்கள் தொழிலை பெருக்குவதற்கான செயல்முறைகளே தொழில் முனைவு எனப்படும். இவை ஒன்றை உருவாக்குவதற்கும் மேலும் பெரிதுபடுத்துவதற்குமான திறன் ஆகும்.

### தொழில் முனைவோரின் பங்கு

நாட்டின் பொருளாதார வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தில் தொழில் முனைவோரின் பங்கு மிக முக்கிய மானதாகும்.

1. தொழில்முனைவோர் கிராமப்புறமற்றும்பின்தங்கிய தொழிற்சாலைகளை முன்னேற்றுவதுடன், நாட்டில் பல்வேறு பகுதிகளில் நிலவும் வட்டார ஏற்றதாழ்வுகளை நீக்குகிறார்கள்.
2. இவர்கள் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) மற்றும் தலா வருமானம் உயர்வதற்கு உதவி புரிகிறார்கள்.
3. குடிமக்களின் அசையா சேமிப்புகள் மற்றும் நாட்டின் ஏற்றுமதி வியாபாரம் மூலமாக மூலதனத்தைச் செயல்பட வைக்கிறார்கள்.
4. தொழில்முனைவோர் கைவினைஞர்கள், தொழில்நுட்பத் தகுதி வாய்ந்த நபர்கள் மற்றும் தொழில் வல்லுநர்களுக்கு பெரிய அளவிலான வேலைவாய்ப்பை வழங்குகிறார்கள். இலாபத்தினை அதிகரிக்க முயற்சிக்கின்றனர்.
5. தொழில்முனைவோர், குறைந்த விலையில் சிறந்த தரமான பொருள்களைப் பெற மக்களுக்கு உதவுகின்றனர், இதன் விளைவாக அவர்களின் வாழ்க்கைத் தரம் மேம்படுகிறது.

### பாடச்சுருக்கம்

- தொழில்துறை தொகுப்புகள் என்பது பொதுவான சந்தைகள் தொழில்நுட்பங்கள் மற்றும் திறன்களுக்கான தேவைகளை பகிர்ந்துகொள்ள, வரையறுக்கப்பட்ட புவியியல் பகுதியில் உள்ள நிறுவனங்களின் தொகுப்புகளாகும்.
- தொழில் தொகுப்பு தோன்றுவதற்கு பல்வேறு காரணிகள் உள்ளன. ஒரு சில தொழில் தொகுப்புகள் தோன்றிய இடங்களில் கைவினைஞர்கள் குடியேறி நெடுங்காலமாக அங்கு தங்கி இருந்ததாகவும் வரலாறு கூறுகிறது.
- கோயம்புத்தூர் பகுதியில் ஜவுளி இயந்திரங்கள் மற்றும் மின்சார மோட்டார்கள் மற்றும் நிலத்தடி நீரை உறிஞ்சுவதற்கான குழாய்கள் மற்றும் வேளாண் இயந்திரங்கள் பன்முகத் தன்மையின் வளர்ச்சியைக் கண்டது.
- சென்னை பெரிய அளவிலான வாகனத் தொழில்துறைத் தளமாக இருப்பதால் "ஆசியாவின் டெட்ராய்ட்" என்று அழைக்கப்படுகிறது.



10th_Economics_TM_Unit_5.indd 356 24-03-2020 12:45:03

www.tntextbooks.in

## A-Z கலைச் சொற்கள்

| | | |
|---|---|---|
| திரட்சிகள் | agglomerations | a mass or collection of things |
| தொழில் உற்பத்தி தொகுப்புகள் | Industrial Clusters | Relating to or characterised by industry. |
| தோற்றம் | Emergence | the process of coming into existence |
| பரவல் | diffusion | the spreading of something more widely |
| கைவினை சார்ந்த | Artisanal | relating to or characteristic of an artisan |

## பயிற்சி

LP151U

### I சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக

1. ஆசியாவின் டெட்ராய்ட் என அழைக்கப்படுவது ________.
   அ) தூத்துக்குடி ஆ) கோயம்புத்தூர்
   இ) சென்னை ஈ) மதுரை
2. குழாய்கள் மற்றும் நீரிறைக்கும் இயந்திரம் பெருமளவில் உற்பத்தி செய்யப்படுவது ______.
   அ) சேலம் ஆ) கோயம்புத்தூர்
   இ) சென்னை ஈ) தருமபுரி
3. ________ என்பது ஒரு நாட்டின் வளர்ச்சியில் முக்கிய அம்சமாகும்.
   அ) வேளாண்மை ஆ) தொழில்
   இ) இரயில்வே ஈ) மேற்கண்ட எதுவுமில்லை
4. திருப்பூர் ________ தொழிலுக்குப் பெயர்பெற்றது.
   அ) தோல் பதனிடுதல்
   ஆ) பூட்டு தயாரித்தல்
   இ) பின்னலாடை தயாரித்தல்
   ஈ) வேளாண் பதப்படுத்துதல்
5. ________ இல் ஒரு வெற்றிகரமான தொழில்துறை தொகுப்பு முற்றிலும் தமிழ்நாட்டால் உருவாக்கப்பட்டது.
   அ) ஒசூர் ஆ) திண்டுக்கல்
   இ) கோவில்பட்டி ஈ) திருநெல்வேலி

### II கோடிட்ட இடங்களை நிரப்புக

1. நூற்றுக்கணக்கான தோல் மற்றும் தோல் பதனிடும் வசதிகள் தமிழ்நாட்டில் ________ மாவட்டத்தைச் சுற்றி அமைந்துள்ளன.
2. சிறப்புப் பொருளாதார மண்டலக் கொள்கைகள் ________ ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.
3. ________ என்பவர் புத்தாக்க சிந்தனைகள் மற்றும் வணிக செயல்முறைகளின் புத்தாக்கம்புனைபவர் ஆவார்.

### III தவறான ஒன்றினை தேர்வு செய்க

1. பின்வருவனவற்றில் தோல் தொழிற்சாலைகள் இல்லாதது எது?.
   அ) ராணிப்பேட்டை ஆ) தர்மபுரி
   இ) ஆம்பூர் ஈ) வாணியம்பாடி
2. பின்வருவனவற்றில் எது தொழில்துறை வளர்ச்சி நிறுவனம் அல்ல?.
   அ) TIDCO ஆ) SIDCO
   இ) MEPG ஈ) SIPCOT

### IV பின்வருவனவற்றைப் பொருத்துக

| | | |
|---|---|---|
| 1. தொழில்முனைவோர் | – | ஏற்றுமதி செயலாக்க மண்டலம் |
| 2. MEPZ | – | கோயம்புத்தூர் |
| 3. இந்திய ஒழுங்குமுறை தொழிற்சாலை | – | அமைப்பாளர் |
| 4. TNPL | – | அரவங்காடு |
| 5. தென்னிந்தியாவின் மான்செஸ்டர் | – | கரூர் |

### V கீழ்க்கண்ட வினாக்களுக்கு குறுகிய விடையளி

1. விவசாயத்துறையில் ஊதியங்கள் ஏன் குறைவாக உள்ளன?
2. தொழில்துறை தொகுப்பு என்றால் என்ன?
3. தொழில் தொகுப்புகள் உருவாவதற்கான வழிகள் யாவை?.
4. தமிழ்நாட்டில் உள்ள மூன்று தொழில்துறை வளர்ச்சி மேம்பாட்டு நிறுவனங்களையும் அவற்றின் பங்கினையும் குறிப்பிடுக.
5. தற்போது தமிழ்நாட்டில் தொழில்மயமாதலின் சிக்கல்கள் யாவை?.
6. தொழில்முனைவோர் என்பவர் யாவர்?
7. தொழில்முனைவு என்றால் என்ன?

### VI கீழ்க்கண்ட வினாக்களுக்கு விரிவான விடையளி

1. வெற்றிகரமான தொழில்துறை தொகுப்புகளின் முக்கிய பண்புகள் யாவை?
2. தமிழ்நாட்டில் நெசவுத் தொழில் தொகுப்பு பற்றி எழுதுக?
3. தொழில்மயமாதலுக்கு தமிழ்நாடு அரசு ஏற்றுக்கொண்ட கொள்கைகளின் வகைகள் பற்றி விரிவாக எழுதுக.
4. தொழில்முனைவோரின் பங்கினைப் பற்றி விளக்குக.

### VII களஆய்வு

1. இணைய வழி ஆராய்ச்சியின் அடிப்படையில் தமிழ்நாட்டில் ஒரு தொழில் தொகுப்பினை தேர்ந்தெடுத்து அதனைப் பற்றிய குறிப்புகளை எழுதுக.

### VIII செய்முறைகள் மற்றும் செயல்பாடு

1. உங்கள் கூர்ந்து நோக்குதலின் அடிப்படையில் உங்கள் பள்ளி / வீட்டிற்கு அருகிலுள்ள ஒரு தொழில் தொகுப்பினை அல்லது ஒரு நிறுவனத்தைப் பற்றி ஒரு குறிப்பை எழுதுக.

### IX வாழ்க்கைத் திறன்கள்

1. ஆசிரியரும் மாணவர்களும் தொழில்முனைவோர் மற்றும் அவர்களின் செயல்பாடுகள் பற்றி விவாதித்து, 'நீங்கள் ஒரு தொழில் முனைவோரைப் போல இருந்தால்' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதுங்கள்.

### மேற்கோள் நூல்கள்


1. *Role of Entrepreneurship in economic development*, D.K.Sinha
2. *The Productivity Analysis of Industrial Clusters in India - Department of Industries & Commerce* (Government of Tamil Nadu)
3. State Industrial Profile - Tamil Nadu
4. Indian Industrial Clusters - Keshab Das
5. தமிழ்நாட்டு பொருளாதாரம் Dr. N. ராஜலட்சுமி


### இணையதள வளங்கள்

1. www.tn.gov.in
2. www.msmedi-chennai.gov.in
3. www.data.gov.in

## இணையச் செயல்பாடு

### தமிழ்நாட்டில் தொழில்துறை தொகுப்புகள்

படி – 1 URL அல்லது QR குறியீட்டினைப் பயன்படுத்தி இச்செயல்பாட்டிற்கான இணையப்பக்கத்திற்கு செல்க

படி – 2 மெனுவின் இடது பக்கத்தில் உள்ள 'Industrial area' என்பதை சொடுக்கவும்

படி – 3 தோன்றும் வரைபடத்தில் ஒவ்வொன்றாக தேர்ந்தெடுத்து அதற்கான விளக்கத்தைப் பார்க்கவும்

உரலி:

https://portal.sipcot.in/pages/sipcotmap

B373_10_SOCIAL_TM

# பத்தாம் வகுப்பு – சமூக அறிவியல்
# பாடநூல் ஆசிரியர்கள் மற்றும் மேலாய்வாளர் குழுவினர்

## வரலாறு

### பாடக்குழுத் தலைவர்

**முனைவர்.கா.அ. மணிக்குமார்,** மேனாள் பேராசிரியர்
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி

### பாடக்குழு இணைத் தலைவர்

**முனைவர். ஆ. இரா. வேங்கடாசலபதி,** பேராசிரியர்
சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனம் சென்னை

### பாடநூல் ஆசிரியர்கள்

**முனைவர் சீ. ஆனந்த கிருஷ்ணன்,** இணைப் பேராசிரியர்
ஏ.எம்.ஜெயின் கல்லூரி, சென்னை

**முனைவர்.கா.அ. மணிக்குமார்,** மேனாள் பேராசிரியர்
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி

**முனைவர்.கனகலதா முகுந்த்,** மேனாள் பேராசிரியர்
பொருளாதாரம் மற்றும் சமூக ஆய்வுகள் மையம், ஐதராபாத்

**ம.அமுதா,** விரிவுரையாளர்
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், கோத்தகிரி, நீலகிரி மாவட்டம்

**முனைவர்.மாவேந்தர் சிங்,** உதவிப் பேராசிரியர்
எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழகம், அமராவதி, ஆந்திரப்பிரதேசம்

**முனைவர்.வெங்கட ராமானுஜம்,** இணைப் பேராசிரியர்
சென்னை கிறித்துவக் கல்லூரி, தாம்பரம், சென்னை

**முனைவர்.ஜீவானந்தம்,** உதவிப் பேராசிரியர்
மத்திய பல்லைக்கழகம், சிக்கிம்

**முனைவர் க.சுரேஷ்,** பட்டதாரி ஆசிரியர்
குமார ராஜா முத்தையா மேல்நிலைப் பள்ளி, அடையாறு, சென்னை

### பாடப்பொருள் மீளாய்வாளர்கள்

**முனைவர் தே. ச. சரவணன்,** துணை இயக்குநர்
தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், சென்னை

**முனைவர் அ. தென்னரசு,** இணைப் பேராசிரியர் & துறைத் தலைவர்
அரசு கலைக் கல்லூரி, சேலம்

**முனைவர் கோ. ஜெயக்குமார்,** இணைப் பேராசிரியர்
பெரியார் ஈ.வே.ரா. கல்லூரி, திருச்சிராப்பள்ளி

**முனைவர் ஜெ. முருகன்,** உதவிப் பேராசிரியர்
அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி, ஆத்தூர், சேலம் மாவட்டம்

**சு. கோமதிமாணிக்கம்,** பட்டதாரி ஆசிரியர்
அ. மே. நி பள்ளி, பழைய பெருங்களத்தூர் சென்னை

**பெ. பாலமுருகன்,** முதுகலை ஆசிரியர்
அ.ஆ.மே.நி. பள்ளி, தம்மம்பட்டி, சேலம் மாவட்டம்

**வி. வேல்முருகன்,** பட்டதாரி ஆசிரியர்
அ. மே. நி பள்ளி, வெள்ளாளகுண்டம், சேலம் மாவட்டம்

**அ. ஜாபர் அலி,** முதுகலை ஆசிரியர்
அ. மே. நி பள்ளி, கீரிப்பட்டி, சேலம் மாவட்டம்

**க. வேலு,** பட்டதாரி ஆசிரியர்
அ. ம. மே. நி. பள்ளி, தலைவாசல், சேலம் மாவட்டம்

**கை. செல்வகுமார்,** பட்டதாரி ஆசிரியர்
அரசு உயர்நிலைப் பள்ளி, குண்ணத்தூர், திருவண்ணாமலை மாவட்டம்

**இரா. இரமாகுமாரி,** பட்டதாரி ஆசிரியர்
ஹோலி ஏஞ்சல்ஸ் மகளிர் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, அழகாபுரம், சேலம்

**பா. லதா,** பட்டதாரி ஆசிரியர்
ஹோலி ஏஞ்சல்ஸ் மகளிர் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, அழகாபுரம், சேலம்

**ப. வேதபுரீசன்,** முதுகலை ஆசிரியர்
அரசு மேல்நிலைப் பள்ளி, ஆழியூர், நாகப்பட்டிணம் மாவட்டம்

### தமிழாக்கம்

**முனைவர் S. இரவிச்சந்திரன்,** இணைப் பேராசிரியர் (ஓய்வு)
ராஜுஸ் கல்லூரி, ராஜபாளையம், விருதுநகர் மாவட்டம்

**வினோத் வின்செண்ட் ராஜேஷ்,** உதவிப் பேராசிரியர்
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி, திருநெல்வேலி

**இரா. இராஜ்குமார் பாலசுப்பிரமணியன்**
நாடாளுமன்ற மொழிபெயர்ப்பாளர் (தமிழ்) புதுதில்லி

**முனைவர் தே. ச. சரவணன்,** துணை இயக்குநர்
தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், சென்னை

### பாட ஆலோசகர் மற்றும் வல்லுநர்

**முனைவர் பொன். குமார்,** இணை இயக்குநர் (பாடத்திட்டம்)
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை

### பாட ஒருங்கிணைப்பாளர்கள்

**த. சீனிவாசன்,** முதல்வர்
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், கிருஷ்ணகிரி

**பெ. சுரேஷ்,** முதுகலை ஆசிரியர் (வரலாறு)
அ. ம. மே. நி. பள்ளி, ஆத்தூர், சேலம் மாவட்டம்

## புவியியல்

### பாட வல்லுநர்

**வி. தமிழரசன்,** இணைப் பேராசிரியர் & துறைத் தலைவர்
அரசு கலைக் கல்லூரி, கரூர்

### மேலாய்வாளர்

**முனைவர் பெ. அருள்,** இணைப்பேராசிரியர்
அரசு கலைக் கல்லூரி, சேலம்

### பாடநூல் ஆசிரியர்கள்

**முனைவர். கு. ருத்ரவேல் மூர்த்தி,** கௌரவ விரிவுரையாளர்
அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி, நாமக்கல் மாவட்டம்

**முனைவர். சு. செந்தில் குமார்,** கௌரவ விரிவுரையாளர்
அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி, நாமக்கல் மாவட்டம்

**த. ஸ்ரீஜனனி,** முதுகலை ஆசிரியர்
அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, பாப்பிரெட்டிபட்டி, தருமபுரி மாவட்டம்

**சி. செல்வம்,** பட்டதாரி ஆசிரியர்
சுப்பிரமணிய சாஸ்திரியார் மேல்நிலைப் பள்ளி, ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

**க.கோ. ஜோதி,** பட்டதாரி ஆசிரியர்
அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, விரிஞ்சிபுரம், வேலூர் மாவட்டம்

**டே. ஜெய்சன்,** பட்டதாரி ஆசிரியர்
மால்கோ வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, மேட்டூர் அணை, சேலம் மாவட்டம்

**வீ. ஜெயச்சந்திரன்,** பட்டதாரி ஆசிரியர்
அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, தம்மம்பட்டி சேலம் மாவட்டம்

**சீ. சங்கர்,** பட்டதாரி ஆசிரியர்
அரசு மேல்நிலைப் பள்ளி, காட்டுக்கோட்டை, சேலம் மாவட்டம்

**சு. சுடர் ஒளி,** பட்டதாரி ஆசிரியர்
சின்மயா வித்யாலயா பி.ஏ.சி. இராமசாமி ராஜா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி
இராஜபாளையம், விருதுநகர் மாவட்டம்

### தமிழாக்கம்

**இரா. எழில்மோகன்,** பட்டதாரி ஆசிரியர்
அ.ம.உ.நி. பள்ளி, ஏத்தாப்பூர், சேலம் மாவட்டம்

**வ. இரவிக்குமார்,** பட்டதாரி ஆசிரியர்
அ. மே. நி. பள்ளி, தாண்டவராயபுரம், சேலம் மாவட்டம்

**சி. ஐயந்துரை,** பட்டதாரி ஆசிரியர்
அ. உ. நி. பள்ளி, டி.பெருமாபாளையம், சேலம் மாவட்டம்



X_ Social science Authors List TM.indd 359 11-04-2020 12:09:07

## குடிமையியல்

### பாட வல்லுநர்

**முனைவர் எம். கலியபெருமாள்,** மேனாள் இணைப் பேராசிரியர் & துறைத் தலைவர்
அரசியல் அறிவியல்துறை, மாநிலக் கல்லூரி சென்னை

### மேலாய்வாளர்

**முனைவர் A. கருணானந்தம்,** துறைத் தலைவர் (ஓய்வு)
விவேகானந்தா கல்லூரி, சென்னை

### பாடநூல் ஆசிரியர்கள்

**தே. சுகந்தி,** பட்டதாரி ஆசிரியர்
அரசு கள்ளர் உயர்நிலைப் பள்ளி, அன்னஞ்சி, தேனி மாவட்டம்

**சு. கோமதிமாணிக்கம்,** பட்டதாரி ஆசிரியர்
அ. மே. நி பள்ளி, பழைய பெருங்களத்தூர், சென்னை

**பெ. பாலமுருகன்,** முதுகலை ஆசிரியர்
அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, தம்மம்பட்டி, சேலம் மாவட்டம்

**வி. வேல்முருகன்,** பட்டதாரி ஆசிரியர்
அ. மே. நி பள்ளி, வெள்ளாளகுண்டம், சேலம் மாவட்டம்

**அ. ஜாபர் அலி,** முதுகலை ஆசிரியர்
அ. மே. நி பள்ளி, கீரிப்பட்டி, சேலம் மாவட்டம்

**க. வேலு,** பட்டதாரி ஆசிரியர்
அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, தலைவாசல், சேலம் மாவட்டம்

### தமிழாக்கம்

**ல. சிவக்குமார்,** உதவி தலைமை ஆசிரியர் (பட்டதாரி)
அ.ம.மே.நி. பள்ளி, ஆத்தூர், சேலம் மாவட்டம்

**கே.எஸ். சுப்ரமணியன்,** பட்டதாரி ஆசிரியர்
அரசு மேல்நிலைப் பள்ளி, காட்டுக்கோட்டை, சேலம் மாவட்டம்

**அ. மேரி ரோஸ்லின் நிர்மலா,** பட்டதாரி ஆசிரியர்
அ.ம.மே.நி. பள்ளி, ஆத்தூர், சேலம் மாவட்டம்

## பொருளியல்

### பாட வல்லுநர்

**முனைவர். இரா. சுப்ரமணியன்,** மேனாள் பேராசிரியர்
சௌடேஸ்வரி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சேலம்

### மேலாய்வாளர்

**முனைவர் J. ஜெயரஞ்சன்,** இயக்குநர்
மாற்று வளர்ச்சி நிறுவனம், சென்னை

### பாடநூல் ஆசிரியர்கள்

**இல. கௌசல்யாதேவி,** முதுகலை ஆசிரியர்
அ. மே. நி பள்ளி, தொப்பூர், தருமபுரி மாவட்டம்

**கு. சுரேஷ்,** முதுகலை ஆசிரியர்
அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, பென்னாகரம், தருமபுரி மாவட்டம்

**முனைவர் மா. குமார்,** முதுகலை ஆசிரியர்
பெருந்தலைவர் காமராசர் நினைவு, அ.மே.நி. பள்ளி, மாதநாயக்கன்பட்டி,சேலம்

**சூ. சீனிவாசன்,** முதுகலை ஆசிரியர்
அரசு மேல்நிலைப் பள்ளி, பொ.துருஞ்சிப்பட்டி, தருமபுரி மாவட்டம்

**மா. இராஜேஸ்வரி,** முதுகலை ஆசிரியர்
அரசு மேல்நிலைப் பள்ளி, கும்பினிபேட்டை, வேலூர் மாவட்டம்

**து. வாணி,** முதுகலை ஆசிரியர்
மால்கோ வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, மேட்டூர் அணை, சேலம் மாவட்டம்

### தமிழாக்கம்

**பி. சுந்தரவடிவேலு,** முதுகலை ஆசிரியர் (ஓய்வு)
அ.ஆ.மே.நி. பள்ளி, ஆத்தூர், சேலம் மாவட்டம்

### ICT ஒருங்கிணைப்பாளர்

**து. நாகராஜ்,** பட்டதாரி ஆசிரியர்
அ. மே. நி பள்ளி, ராப்பூசல், புதுக்கோட்டை

**ஆர். வெங்கடேசன்**
ஊ.ஒ.தொ.பள்ளி, வெள்ளியானை, கரூர் மாவட்டம்

### விரைவுக்குறியீடு மேலாண்மைக்குழு

**இரா. ஜெகநாதன்,** இடைநிலை ஆசிரியர்
ஊ.ஒ.ந.நி.பள்ளி, கணேசபுரம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்

**சூ.ஆல்பர்ட் வளவன் பாபு,** பட்டதாரி ஆசிரியர்
அ.உ.நி.பள்ளி, பெருமாள் கோவில் பரமக்குடி, இராமநாதபுரம்.

**ம. முருகேசன்,** பட்டதாரி ஆசிரியர்
ஊ.ஒ.ந.நி. பள்ளி, பெத்தவலங்கோட்டகம், முத்துப்பேட்டை, திருவாரூர் மாவட்டம்

**வ.பத்மாவதி,** பட்டதாரி ஆசிரியர்
அ.உ.நி. பள்ளி, வெற்றியூர், திருமானூர், அரியலூர் மாவட்டம்

**ஆ.தேவி ஜெஸிந்தா,** பட்டதாரி ஆசிரியர்
அ.உ.நி.பள்ளி, என்.எம்.கோவில், வேலூர் மாவட்டம்

### தட்டச்சர்

**இரா. மோகனாம்பாள்**
வேளச்சேரி, சென்னை

### கலை மற்றும் வடிவமைப்புக் குழு

#### பக்கவடிவமைப்பாளர்

**காமாட்சி பாலன் ஆறுமுகம்**
**ச. அசோக் குமார்**
**அ. அடிசன் ராஜ்**
**பேச்சிமுத்து கைலாசம்**
**சி. அடைக்கல ஸ்டீபன்**
**ர. பாலசுப்ரமணி**
**மா. செல்வகுமார்**
**வே. ஸ்ரீதர்**
**சி. பிரசாந்த்**
**சந்தியாகு ஸ்டீபன்**
**பக்கிரிசாமி அண்ணாதுரை**

#### விளக்கப்படம்

**R. முத்து குமார்**
**V. வினோத்**
**B. ரவி குமார்**

#### தர கட்டுப்பாடு

**கி. ஜெரால்டு வில்சன்**
**ராஜேஷ் தங்கப்பன்**

#### அட்டை வடிவமைப்பு

**கதிர் ஆறுமுகம்**

#### ஒருங்கிணைப்பாளர்

**ரமேஷ் முனிசாமி**

இந்நூல் 80 ஜி.எஸ்.எம் எலிகண்ட் மேப்லித்தோ தாளில்
அச்சிடப்பட்டுள்ளது
ஆப்செட் முறையில் அச்சிட்டோர்:

www.tntextbooks.in

# குறிப்பு



X_ Social science Authors List TM.indd 361 11-04-2020 12:09:07

www.tntextbooks.in

# குறிப்பு



X_ Social science Authors List TM.indd 362 11-04-2020 12:09:07